இந்தியாவில் கூட்டுறவு

(Co-operation in India)



ஆசிரியர்:

கு. ஆளுடையபிள்ளை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—August, 1974

T.N.T.B.S. (C.P.) No. 582

CO-OPERATION IN INDIA

K. ALUDIAPILLAI

Price Rs. **10-30**

" Published by the Tamilnedu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi."

Printed by :

Annai Anjuga Achagam,
67, Gaudiyamutt Road
Madras-14.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினுன்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P. U. C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்ருன '**இந்தியாவில் கூட்டுறவு**' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **582** ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **617** நூல்கள் வெளி வந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின் உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

பாரதத்தின் அடிப்படைத் தூண்களாக ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து, பள்ளிக்கூடம், கூட்டுறவுச் சங்கம் அமைய வேண்டுவது மிகவும் இன்றியமையாதது என மறைந்த பாரதப் பிரதமர் ஓயாது வற்புறுத்தி வந்தார். இந்த அடித்தள அமைப்பின் மீது அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும் புதியதொரு பாரதம் உருவாக வேண்டுமென அவர் கனவு கண்டார். கூட்டுறவு இயக்கம் இந்தியா முழுதும் பரவி மக்களின் நல்வாழ்வுக்கு வழிசெய்ய வேண்டுமென்பதே தமது விருப்பம் என்று கூறி வந்தார். அவர் கண்ட கனவு நனவாகி வருகிறது. நாட்டின் மூலைமுடுக்குகள் எங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன. அளவிலும், பரப்பிலும் மாபெரும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தரத்திலும், சேவையிலும் முன்னேற்றம் காண பலப்பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில ஆண்டுகளில் இந்தியக் கூட்டுறவு இயக்கம் உலக இயக்கத்தின் முன்னணியில் நிற்கக்கூடும்.

கூட்டுறவு இயக்கத்தினிடம் ஒரு காந்த சக்தியுள்ளது. அச் சக்தி எல்லோரையும் அன்பு நெறியால் ஈர்க்கும் தன்மை பெற்றது. கடந்த ஏழு ஆண்டுகளாகக் கூட்டுறவு இயக்கத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் நல்வாய்ப்பு ஆசிரியருக்குக் கிட்டியது. அனைத்து நாட்டுக் கூட்டுறவாளர்களையும், பெருங் கூட்டுறவுத் தலைவர்களையும் அடிக்கடி கண்டு பேசி பழகும் வாய்ப்பும், இப்பெரும் நாட்டில் பல கட்டங்களிலுள்ள பல்வகைக் கூட்டுறவு நிலையங்களைப் பற்றிப் படித்தறியும் வாய்ப்பும், கண்டறியும் வாய்ப்பும் ஏற்பட்டது. இதன் பயனாகக் கூட்டுறவின் தனித் தன்மையும், எக்காலத்துக்கும் எந்நாட்டிற்கும் பொருந்தும் அடிப்படைத் தத்துவங்களும் மேலும் சிறப்பாக உணரப்பெற்றது.

கூட்டுறவைப்பற்றிய உண்மை நிலையை மக்கள் அறிந்து கொண்டு அவர்கள் இவ்வியக்கத்தில் மேலும் சிறப்பாக ஈடுபட வேண்டுமென்பதே இந்நூலின் குறிக்கோள்.

ஆசிரியர்

பொருளடக்கம்

1. கூட்டுறவின் இலக்கணம்

மனித சமுதாயத்தின் பல்வேறு பண்புகளில் மிகவும் அடிப்படையானதாகக் காணப்படுவது கூடிவாழ்தலேயாகும். வீட்டளவிலும் சரி, நாட்டளவிலும் சரி, உலகளவிலும் சரி கூடி வாழ்வது இன்றியமையாதது என்பது நன்கு உணரப்படுகிறது. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற பழமொழி நம் நாட்டில் தொன்று தொட்டு வழக்கிலிருந்து வருகிறது. மக்கள் கூடி வாழ்ந்து நன்மையடைய மேற்கொள்ளும் முயற்சியினையே கூட்டுறவு முயற்சி என்று பொதுவாகப் பேசுகின்றனர். தனக்குத் துன்பம் நேரும்போதும், இன்னல் விளையும்போதும் அவற்றைச் சமாளிக்க மனிதன் தன்னைச் சுற்றியுள்ள பிறருடைய உதவியை நாடுகிறான். மேலும், தனியொரு மனிதனால் செய்து முடிக்க இயலாத செயல்களைக் கூட்டுறவு முயற்சியால் செய்து முடிக்க இயலும் என்றும் உணர்ந்துள்ளான். இந்தச் சூழ்நிலையில் கூட்டுறவு என்னும் பண்பு வளர்ந்தோங்கி நிற்பதில் வியப்பேதுமில்லை.

இயற்கையாகவே மனிதன் கூடி வாழும் பண்புள்ளவனாகக் காணப்படுவது, போட்டியிட்டுக்கொண்டு ஒருவரையொருவர் தாக்கி நிற்கும் உலகில், வலிமையுள்ளவர்களே வாழ முடியும் என்ற தத்துவம் முழுமையாக ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்பதைப் புலப்படுத்துகிறது. ஆக்கப் பணிகளுக்கு அருமையானதொரு கருவியாக விளங்குவது கூட்டுறவு. போட்டியைத் தவிர்த்து உயர்ந்த குறிக்கோளுடன் எல்லோருக்கும் நலன் தரும் வகையில் செயல்படுவது கூட்டுறவு. பண்டைக்கால தத்துவப் பேரறிஞர்கள் முதல் இக்காலச் சீரிய சிந்தனையாளர்கள் உட்பட அனைவரும் கூட்டுறவின் சிறப்பையும் மேன்மையையும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவில் பற்பல நூற்றாண்டுகளாகச் சமுதாய அமைப்பும் செயற்பாடும் கூட்டுறவு அடிப்படையில் இருந்து வந்துள்ளன.

இன்றுங்கூட நமது கிராமங்களில் மக்கள் கூட்டுறவு முயற்சி வழியேதான் கிராமப் பொதுப் பணிகளைச் செய்து முடிக்கின்றனர். நாட்டு மக்கள் நலம் பெறவும், நாகரிகம் சிறந்து ஓங்கவும், வாழ்வு வளமடையவும், சமுதாயம் செழித்துச் சிறக்கவும் கூட்டுறவு இன்றியமையாதது என்று அனைவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

இன்றைய உலகில் கூட்டுறவு என்னும் சொல் ஒரு கலைச் சொல்லாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இச் சொல் ஒருவகைப் பொருளாதார அமைப்பைக் குறிக்கப் பயன்படுகின்றது. மேலை நாடுகளில், குறிப்பாக இங்கிலாந்தில் உருவாகிய தொழிற் புரட்சி முதலாளித்துவத்திற்கு அடிகோலியது. இதன் பயனாக ஒரு சிலரிடம் செல்வங் குவிந்தது; மிகப் பலர் வறுமையில் உழன்று வாடினர். ஏழை எளியோர், பாட்டாளி மக்கள் ஆகியோரை வாட்டி, வதைத்து, சுரண்டி முதலாளிகள் தம் வாழ்வை வளப்படுத்திக் கொண்டனர். இந்த அநீதியை எதிர்க்கவும், நியாயமற்ற நேர்மையற்ற முறைகளை ஒழிக்கவும் கூட்டுறவு என்னும் புதிய தத்துவம் உருவாக்கப்பெற்றது. சுருங்கக் கூறின், முதலாளித்துவ முறையிலுள்ள கேடுகளை நீக்கக் கூட்டுறவு முறை மேற்கொள்ளப்பட்டது. படிப்படியாகக் கூட்டுறவு ஒரு பொருளாதார அமைப்பு என்ற முறையில் உலகெங்கும் பரவலாயிற்று. இன்று எவ்வகை அரசியல் கோட்பாடுள்ள நாடுகளிலும், எவ்வகைச் சமயச் சார்புள்ள நாடுகளிலும் கூட்டுறவு பரவி மிகப் பெரியதோர் இயக்கமாக வளர்ந்துள்ளது இதன் வலிமைக்குச் சான்றாக விளங்குகின்றது.

பொருளாதார, சமுதாய, தொழில்நுட்ப வளர்ச்சியில் கூட்டுறவு முறை வழியாகப் பெறக்கூடிய நன்மைகள் எண்ணிலடங்கா. நிலவளம் பெருக்க, நீர்வளம் வழங்க, சேமிப்பை வளர்க்க, தொழில் துறையை மேம்படுத்த, மனைவளம் ஓங்க, பால்வளம் பொங்க, விளைபொருள்களைச் சந்தையிலிட, நுகர்வுப் பண்டங்களைச் சீராகப் பகிர்ந்தளிக்க, குடிசைத் தொழில்கள் உய்ய, கைவினைப் பொருட்கள் விற்பனை பெருக— என்பவை போன்ற பலப்பல துறைகளில் பலப்பல பணிகள் கூட்டுறவுத் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வளவு ஆழ்ந்தும் அகன்றும் வளர்ந்துள்ள கூட்டுறவு, மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட கூட்டுறவு, தன்னாட்சி அடிப்படையில் மக்களாட்சி முறையில் குடிமக்கள் பயிற்சிபெற அடிகோலியுள்ள கூட்டுறவு வலிமை வாய்ந்த மாபெரும் உலக இயக்கமாக வளர்ந்து நிற்பதில் வியப்பேதுமில்லை,

கூட்டுறவின் இலக்கணம்

கூட்டுறவு என்ற சொல் எதனைக் குறிக்கின்றது என்பதைத் துல்லியமாக ஓர் இலக்கண வாயிலாகக் கூறுவது அவ்வளவு எளிதன்று. பலப்பல சூழ்நிலைகளில் உருவாகி வளர்ந்த கூட்டுறவு இயக்கம் பலப்பல கோணங்களிலிருந்து ஆராயப்படும்போது அதற்கு ஒரே முறையான இலக்கணம் வகுக்கப்படாதது புரிந்து கொள்ளத் தக்கதே. சில நாடுகளில் அரசினரின் உதவி பெற்று, அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுக் கூட்டுறவுகள் இயங்கி வருகின்றன. சில நாடுகளில் அரசின் திட்டங்களைச் செயலாற்றும் கருவியாகக் கூட்டுறவு பயன்படுத்தப்படுகிறது. சில நாடுகளில் அது அரசு உருவாக்கிய அமைப்பாகவும், சில நாடுகளில் தன்னியலான (voluntary) அமைப்பாகவும் காணப்படுகிறது. இங்ஙனம் பல்வேறு நிலைகளில் செயலாற்றி வரும் கூட்டுறவு இயக்கம் புகழ்பெற்ற அறிஞர்களால் எவ்வண்ணம் விளக்கப் பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

'தன்னலமற்ற மனப்பாங்குடன், கூடி வியாபாரம் செய்யும் பொருட்டு, உறுப்பினர் என்ற பொறுப்புகளை ஏற்றுத் தாம் எந்த அளவுக்குச் சங்கத்தைப் பயன்படுத்துகிறாரோ அந்த அளவுக்கேற்ப ஆதாயத்தில் பங்கு பெற ஒப்பும் வலிவற்ற மக்களிடையே உருவாகும் சங்கமே கூட்டுறவுச் சங்கம் எனப்படும்' என்று திரு. சி. ஆர். ஃபே (C. R. Fay) குறிப்பிடுகிறார். இந்த இலக்கணம் இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கம் துவங்கிய நிலையில் தரப்பட்டது. அந்த நேரத்தில், திரு. ஃபே மனத்தில் ராக்டேல் (Rochdale) நெசவாளிகள் துவக்கிய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் அவர், வியாபாரம் செய்வதையும், இலாபத்தில் உறுப்பினருக்குக் கிடைக்கக்கூடிய பங்கு அவர் சங்கத்தை எந்த அளவுக்குப் பயன் படுத்திக் கொள்ளுகிறாரோ அந்த அளவில் அமைவதையும் தாம் வகுத்துள்ள இலக்கணத்தில் குறிப்பிட்டுள்ளார். ராக்டேல் நெசவாளிகள் ஏழ்மை நிலையிலிருந்ததும், அவர்கள் தன்னல மற்ற மனப்பாங்குடன் செயலாற்ற முனைந்ததும், நுகர்வோர் பண்டங்களில் வியாபாரம் செய்து வந்ததும் நினைவிற் கொள்ளத் தக்கது. ராக்டேல் முன்னோடிகளின் தத்துவப்படி சங்கம் வியாபாரத்தில் அடையும் இலாபம் அதன் உறுப்பினர்களுக்குச் சேரவேண்டும்; உறுப்பினர்கள் சங்கத்தில் எவ்வளவு பண்டங்களை வாங்கினார்களோ அந்த அடிப்படையில் சங்கம் பெறும் ஆதாயம் பிரித்து வழங்கப்படும். இந்த இலக்கணம் வியாபார நடவடிக்கையொன்றை மட்டுமே குறிப்பிடுகின்ற காரணத்தால்

மிகவும் குறுகிய பரப்புள்ளதாகக் காணப்படுகின்றது. மற்றும், கூட்டுறவு இயக்கத்தின் தன்னியல்பான தன்மையைப் பற்றி இதில் குறிப்பேதும் காணப்படவில்லை. இதற்குக் காரணம் அக்காலத்தில் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்தவர்கள் தம் விருப்பத்தால் உந்தப்பட்டுச் சேர்ந்தார்களேயன்றி வற்புறுத்தலுக்கு ஏதும் ஆளாகவில்லை. மற்றும், பற்பல எதிர்ப்புகளுக்கும், ஏச்சுகளுக்குமிடையே கூட்டுறவுச் சங்கமொன்றை அமைத்த ராக்டேல் கிராமத்து நெசவாளிகள் கருத்து ஒற்றுமையாலும் பொருளாதாரத் தேவையாலும் ஒன்று கூடியதால் வற்புறுத்தலின் பேரில் ஒருவர் உறுப்பினராகச் சேருவது என்ற நினைப்பு கனவிலும் கருதப்படாததாயிருந்திருக்க வேண்டும்.

எந்த ஒரு நிறுவனத்தில், எல்லோரும் சரிசமமாகப் பங்கேற்று அதனைக் கட்டுப்படுத்தும் உரிமை கொண்டு தன்னியல்பான முறையில் இயக்கம் காணப்படுகிறதோ அது கூட்டுறவாகும் என ஹோலியோக் (Holyoake) என்னும் அறிஞர் கூறியுள்ளார். இவர் காலத்தில் முதலாளித்துவ முறையின் சீர்கேடுகள் தலை தூக்கி நின்றன. வறுமைப்பிடியில் சிக்கித் தவித்த மக்களுக்குத் தேவைப்பட்டது நியாயமான வாய்ப்பும், இடைநிலையரின் பிடியிலிருந்தும் முதலாளிகளின் சுரண்டலிலிருந்தும் விடுபடும் வாய்ப்புமே யாகும். மனிதப் பண்பைவிட பணவலிமை பெரிதாகக் கருதப்பட்ட காலம் அது. அந்தச் சூழ்நிலையில் எளியோருக்கு உய்வு தரக் கூட்டுறவு முறையொன்றே கைகொடுத்து உதவக்கூடும் என்ற நம்பிக்கையில் ஹோலியோக் இவ்வாறு கூறிப் போந்தார்.

அமைப்பின் வழி தன்னுதவியைச் செயலுரமிக்கதாகச் செய்வதே கூட்டுறவு என சர் ஹோரசு பிளன்கெட் கூறியுள்ளார். கூட்டுறவுத் தத்துவங்களையும் செயல் முறைகளையும் 'மேம்பட்ட பண்ணை, மேம்பட்ட தொழில், மேம்பட்ட வாழ்வு' (Better Farming, Better Business and Better Living) என்று சுருக்கமாக விளக்கியுள்ளார். கூட்டுறவு என்பது ஒரு தொழில் முயற்சியென்பதும், இதில் தன்னுதவி பெரும் பங்கு பெறுகிறது என்பதும் இவ்விலக்கணத்தில் வலியுறுத்தப்படுகிறது. தன்னுதவி என்னும் தத்துவம் அளவுக்கு மிகுதியாக வற்புறுத்தப்பட்டுள்ளது என்று சிலர் இவ்விலக்கணத்தைக் குறை கூறுகின்றனர்.

மக்கள் தம்முடைய பொருளாதார நலனை மேம்படுத்திக் கொள்ளும்பொருட்டு, சமத்துவ அடிப்படையில் தம் விருப்பப்படி மனிதப் பண்போடு ஒன்று சேர்ந்து செயற்படும் அமைப்பே

கூட்டுறவு என்று திரு. கால்வர்ட் இலக்கணமளித்துள்ளார். இந்த இலக்கணம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் திரு. கால்வர்ட் மனிதப் பண்பிற்குச் சிறப்பான ஓர் இடத்தைத் தம் இலக்கணத்தில் அளித்துள்ளதே. தம் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது தன்னைச் சார்ந்த சமுதாயத்தினருக்கும் கூட்டுறவு உதவ வல்லது என்ற உண்மையை இவ்விலக்கணம் எடுத்துரைக்கவில்லை. மற்றும் பொருளாதாரத்தைச் சாராத பிற நலன்களையும் கூட்டுறவின் மூலம் பெறலாம் என்ற செய்தியை இவ்விலக்கணம் குறிப்பிடத் தவறிவிட்டது.

பேராசிரியர் பால் லாம்பர்ட், 'மக்களாட்சிமுறை விதிகளுக்குட்பட்டு, தனது உறுப்பினர்களுக்கும் சமுதாயம் முழுமைக்கும் சேவை செய்யும்பொருட்டு, பயன்படுத்துவோர் ஒன்றுசேர்ந்து உருவாக்கி, இயக்கி வரும் தொழிலமைப்பே கூட்டுறவுச் சங்கம்' என்று கூறியுள்ளார். இந்த இலக்கணம் பல வகைகளில் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கூட்டுறவு ஒரு தொழில் முயற்சியென்பதையும், அது பயன்படுத்துவோர்களின் சங்கமென்பதையும், அது மக்களாட்சிமுறை அடிப்படையில் நிறுவப்பெற்று நிருவகிக்கப்பட்டு வருகிறதென்பதையும், மற்றும் அது தன் உறுப்பினர்களுக்கும் சமுதாயம் முழுவதற்கும் தொண்டு செய்யும் பாங்கு உடையதென்பதையும் இவ்விலக்கணம் வலியுறுத்துகின்றது. உறுப்பினர்களுக்கு மட்டும்தான் கூட்டுறவு தொண்டு செய்யக்கூடும் என்ற குறுகிய நோக்கு, சமுதாயம் முழுமைக்கும் பயன் பரவும்வகையில் கூட்டுறவுத் தொண்டு செய்யக்கூடும் என்ற பரந்த நோக்காக மலர்ந்தது பேராசிரியர் லாம்பர்ட் இலக்கணத்தில்தான்.

அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியத் (International Co-operative Alliance)தின் முன்னாள் இயக்குநர் திரு. வாட்கின்சு என்பார் 'ஒற்றுமை, பொருளாதாரம், மக்களாட்சிமுறை, நியாயம், தன் செயலுரிமை என்ற தத்துவங்களின் அடிப்படையில் அமைக்கப் பெற்ற சமுதாய அமைப்பே கூட்டுறவு' என்று விளக்கியுள்ளார்.

கூட்டுறவுத் திட்டக் குழு (Co-operative Planning Committee) கூட்டுறவு என்ற சொல்லுக்கு அளித்துள்ள இலக்கணத்தைக் காண்போம். 'தமது பொருளாதார நலனை மேம்படுத்தும் பொருட்டு, சமத்துவ அடிப்படையில் தம் விருப்பத்தின் பேரில் நபர்கள் ஒன்றுசேர்ந்து செயல்படும் ஒரு வகை அமைப்பே கூட்டுறவு.'

சர் மால்கம் டார்லிங் கூட்டுறவை மிக உயர்ந்த தத்துவ மாகக் கருதினர். மற்றும் அதை ஒரு பற்றுக்கோளாகவும், பற்றுறுதியாகவும் கருதினர். அவர் கூறியதாவது, 'கூட்டுறவு ஓர் அமைப்பு முறைக்கும் மேலானது. அது மனத்தையும் இதயத் தையும் தொடும் மெய்ப்பொருளாகும். அது தொழில் செய்ய உதவும் சமயநெறியாகும். தன்னிறைவு, தொண்டு ஆகிய பண்புகள் கொண்ட நல்வாழ்வுக் கோட்பாடாகும்.' இந்த விளக்கம் கூட்டுறவை மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள ஒரு வாழ்க்கை வழியெனப் போற்றுகிறது. இதுகாறும் பிற அறிஞர்கள் கூறிய வற்றையும் சர் டார்லிங் கூறியுள்ளதையும் உற்றுநோக்கில், சர் டார்லிங் கூட்டுறவை எவ்வளவு சீரிய, சிறந்த, உயர்ந்த மெய்ப் பொருளாகவும் வாழ்க்கைத் தத்துவமாகவும் உயர்த்தியுள்ளார் என்பது புலனுகிறது.

மாக்லகன் குழுவினர் (Maclagan Committee) கூட்டுறவை விளக்கிப் பேசுகையில் கூறியதாவது : 'செல்வந்தர்கள் அல்லது செல்வாக்கு மிகுதியுள்ள நபர்கள் மட்டுமே பெறக்கூடிய பொருள் சார் நலன்களை, தனிப்பட்ட செல்வாக்கற்ற மனிதன் பிறருடன் ஒன்றுசேர்ந்து ஒழுக்க வளர்ச்சி, ஒருவருக்கொருவர் ஆதரவு என்ற பண்புகள்வழி பெறவும், அதன்வழி தன் இயல்பான திறனை முழு அளவிற்கு வளர்த்துக்கொள்ளக் கூடும் என்ற தத்துவமே கூட்டுறவு.' இந்த விளக்கம், தனிப்பட்ட எளிய, செல்வாக்கற்ற ஒரு மனிதன் கூட்டுறவைக் கைகோளாகக் கொண்டு எங்ஙனம் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தெளிவாக்கு கிறது.

இந்தியக் கூட்டுறவாளர்களில் தலைசிறந்த ஒரு பெரியாராகக் கருதப்படும் திரு. வி. எல். மேத்தா கூட்டுறவைப் பற்றி பின்வரு மாறு விவரித்துள்ளார் : 'பொதுவான தேவைகள் கொண்ட தனி நபர்கள், அவற்றை நிறைவு செய்துகொள்ளும்பொருட்டுத் தம் விருப்பப்படி சங்கங்களைத் தோற்றுவிக்க உதவும் பெரும் இயக்கமே கூட்டுறவு எனப்படும்.'

'கூட்டுறவு தன்னுதவியும், ஒருவருக்கொருவர் உதவியுமாகும். தாமே தம்மைக் காத்துக்கொள்ளும் வலிமையற்ற, பணவசதியற்ற நபர்கள் ஒன்றுசேர்ந்து, ஆதாயம் தேடும் நோக்கமின்றி, தமது பணவசதிக் குறைவால் உண்டான இயலாமையைக் கடந்து தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ள உதவும் கூட்டுத் தொழில் முயற்சியே கூட்டுறவு எனப்படும்.' மேற்கண்டவாறு டாக்டர் கைலாசநாத் கட்ஜு கூறியுள்ளார்.

டாக்டர் எலீனர் ஹியூ என்னும் நூலாசிரியர் 'ஒருவருக் கொருவர் நன்மைக்காக, தாமே விரும்பி, கூட்டு முயற்சிக்காக மேற்கொள்ளும் சங்க அமைப்பே கூட்டுறவு' என்று கூறியுள்ளார்.

பல நாடுகளில் இயற்றப்பெற்ற கூட்டுறவுச் சட்டங்களில் கூட்டுறவு, கூட்டுறவுச் சங்கம் போன்ற சொற்கள் விளக்கப் பட்டுள்ளன. இந்தியக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1912 'கூட்டுறவுச் சங்கம் என்பது கூட்டுறவுத் தத்துவங்களின்படி தமது உறுப்பினர்களின் பொருளாதார நலனை மேம்படுத்தும் ஒரு சங்க மாகும்' என்று மொழிந்துள்ளது.

ஜப்பானியச் சட்டம் 1921-ன்படி கூட்டுறவுச் சங்கமென்பது சட்டமுறையாக வாழ்வு பெற்றுள்ள ஒரு சங்கமாகும்; தமது தொழில்களையும், பொருளாதார நிலையினையும் வளர்த்து மேம் படுத்தும்பொருட்டு, ஒருவருக்கொருவர் சார்புடைமை என்ற தத்துவப்படி, எளிய நிலையிலுள்ள மக்கள் தோற்றுவிக்கும் இச் சங்கமே கூட்டுறவுச் சங்கம் எனப்படும்.

ஆஸ்திரியச் சட்டப்படி, தனது தொழில் அல்லது வியா பாரத்தை மேம்படுத்தும்பொருட்டுப் பொதுவான செய்கை அல்லது நாணய வசதிகள் மூலம் வரையறையில்லா எண்ணிக்கை கொண்ட நபர்கள் ஏற்படுத்தியுள்ள சங்கமே கூட்டுறவுச் சங்கமாகும்.

பிரிட்டிஷ் கொலம்பியா விவசாயச் சங்கச் சட்டப்படி, ஒரு சங்கம் கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது என்று கருதப்படக் கீழ்க்காணும் கூறுகள் அதற்குள்ளனவா என்று ஆராயப்படும். சட்டமுறையாக உச்ச அளவு என்று நிருணயிக்கப் பட்ட விகிதத்திற்கு மிகாமல் முதல்மீது இலாப ஈவு செலுத்தப் பட்ட பின்னர், அச் சங்கத்தின் உறுப்பினர்களான உற்பத்தி யாளர்களுக்கு மீதியுள்ள இலாபம் அவர்கள் அளித்த விளை பொருளின் மதிப்பைப் பொறுத்த விகிதத்தில் பங்காகத் தரப்படும் எனச் சங்கத்தின் அமைப்பும் துணைவிதிகளும் வகுத்திருக்கப் படவேண்டும்.

உறுப்பினர் தமது சமுதாயப் பொருளாதார நலன்களை மேம்படுத்திக்கொள்ளும்பொருட்டு முறையானதொரு திட்டப் படி கூட்டாகச் செயல்படும் சங்கமே கூட்டுறவுச் சங்கம் எனப்படும் என்று ருமானியச் சட்டத் தொகுப்புக் கூறுகிறது. மற்றும் இச் சங்கத்தின் முதல் மாறுந்தன்மையது; வரையறை

யற்ற உறுப்பினர்கள் இதில் எச்சமயமும் சேரலாம் அல்லது இதிலிருந்து விலகலாம்.

ஜெர்மானியச் சட்டம் பிற நாட்டுச் சட்டங்களைவிட விரிவானதோர் இலக்கணத்தைத் தருகின்றது. பொதுவான தொழில் நிறுவனமொன்றின் மூலம் உறுப்பினர்களின் வாணிக நலன்களை மேம்படுத்துவதையும், தடையற்ற உறுப்பினர் நிலையினை (open membership)யும் வற்புறுத்தும் இவ்விலக்கணம், உறுப்பினர் தமது பொருள்சார் (material), ஒழுக்க நலன்களுக்குப் பயன் தரும் வகையில், கூட்டாகச் சேர்ந்து சமமான உரிமைகள் கடமைகள் என்ற அடிப்படையில் சங்கம் ஒன்றை அமைத்து, தமக்குத் தேவைப்படும் பொருளாதாரப் பணிகளை அதன்வழி நிறைவு செய்துகொண்டு, தமது பொறுப்பிலேயே இலாப நட்டங்களை ஏற்று நடத்தும் நபர்களின் சங்கமே கூட்டுறவுச் சங்கம் என்று பேசுகிறது. சங்கத்தில் வேறுபடும் எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களிருப்பதும், அவர்களிடையே பொதுவான பொருளாதாரத் தேவைகளிருப்பதும் இவ்விலக்கணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதுகாறும் கண்ட இலக்கணங்களை ஆராய்ந்து நோக்கின் கூட்டுறவின் அடிப்படைக் கூறுகள் யாவையென்பது விளங்கும். அவற்றைக் காண்போம்.

1. கூட்டுறவு மனிதர்கள் சேர்ந்து அமைக்கும் ஒரு சங்கமாகும். கூட்டுப் பங்குக் கம்பெனி போன்ற அமைப்பில் முதல் திரட்டுவதே முக்கிய நோக்காக விளங்குகிறது. ஆனால், கூட்டுறவில் முதல் சேர்ப்பதைவிட மனிதர் சேர்ப்பே முக்கிய இடம் பெறுகிறது. அதாவது, மனிதப் பண்பிற்கு முதலிடம் தருவது கூட்டுறவு; முதலுக்கு முதலிடம் தருவது பிற வாணிக அமைப்புகள். கூட்டுறவுச் சங்கத்துக்கும் தொழில் நடத்த முதல் அவசியம் தேவைப்படுகிறது. ஆனால், மனிதன் அளிக்கும் முதலைக் காட்டிலும், அம் முதலை அளிக்கும் மனிதனுக்கே சிறப்பானதோர் இடம் கூட்டுறவில் அளிக்கப்படுகிறது. பொருளாதாரக் கூட்டுறவில் சிறப்பாகக் கருதப்படுவது மனிதனேயன்றிப் பணமன்று. மனிதனை மனிதனாக மதிக்கும் மாண்புள்ள பெருமை கூட்டுறவைச் சாரும்.

2. கூட்டுறவு தன் விருப்பார்ந்த (voluntary) ஓர் அமைப்பாகும். கூட்டுறவில் நபர்கள் தாமே விரும்பிச் சேருகின்றனர். ஒருவர் விருப்பத்திற்கு மாறாக அவரை வற்புறுத்தி அல்லது

அச்சுறுத்தி கூட்டுறவில் உறுப்பினராக்குவது என்ற பேச்சுக்கு இடம் கிடையாது. கூட்டுறவின் நன்மைகளை அறிந்து உணர்ந்து அதன்பால் ஈர்க்கப்பட்டுத் தானே வலிய முன்வந்து ஒருவர் உறுப்பினராவது கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்புக் கூறுகளில் ஒன்றாகும். வலுக்கட்டாயமும் கூட்டுறவும் ஒன்றுக்கொன்று பொருந்தாத கருத்துகளாகும்.

3. கூட்டுறவு என்பது வெறும் சங்கம் மட்டுமன்று ; அது ஒரு செயற் பொறுப்பு (undertaking) மாகும். ஏதேனும் ஒரு தொழில், பணி, வினை அல்லது முயற்சியினை அது மேற்கொள்ளுகிறது. அது ஓர் அற நிலையமோ (Charitable organisation) அல்லது கொடையாண்மை (Philanthropic) சங்கமோ அன்று. உறுப்பினர்கள் தம் செலவில் தம் பொறுப்பில் கூட்டுறவு முறையில் தொழில் நடத்துகின்றனர்.

4. கூட்டுறவு ஒரு மக்களாட்சிமுறை அமைப்பு (democratic organisation) எனத் திகழ்கின்றது. மக்களாட்சிமுறை அடிப்படை என்பது ஒருவருக்கு ஒரு வாக்கு (one man one vote) என்னும் நிலை கடைப்பிடிக்கப்படுவதாகும். ஓர் உறுப்பினர் எத்தனைப் பங்குகள் வைத்திருந்தாலும் அவருக்கு ஒரே வாக்கு மட்டுமே உண்டு.

5. கூட்டுறவு, தொண்டு மனப்பான்மையைப் பெரிதாகக் கொண்டு செயல்படும் ஓர் அமைப்பு. இலாப நோக்கிற்குக் கூட்டுறவில் முக்கிய இடம் தருவதில்லை. உறுப்பினர்களுக்குச் சிக்கனமான முறையில் சீரிய தொண்டு புரிவதே கூட்டுறவின் நோக்கமென்றால் அது மிகையாகாது.

6. தன்னுதவியும் ஒருவருக்கொருவர் உதவியும் (self-help and mutual help) கூட்டுறவு நடவடிக்கைகளின் அடித்தளமாக அமைகின்றன. ஆகவே, இது மனித சமுதாயத்தில் நல்லொழுக்கப் பண்புகளை வளர்க்க ஒரு நற்கருவியாகவும் பயன்படுகின்றது. இது காரணமாகத்தான் கூட்டுறவு முறை ஓர் இயக்கமென்றும், ஒரு சமுதாய—பொருளாதார இயக்கமென்றும் பேசப்படுகின்றது. அமைதிவழி புரட்சிகரமான மாறுதல்களை உருவாக்கும் வல்லமை கூட்டுறவுக்கு உண்டு.

7. சமத்துவம் (equality) என்னும் பண்பு கூட்டுறவில் ஒளிவிட்டு மிளிர்கின்றது. இன, சமய, அரசியல், சமூகநிலை போன்ற வேறுபாடுகள் ஏதுமின்றி எல்லோரும் சமமான உரிமை, கடமைகள் உள்ளவர்களாக இருப்பது கூட்டுறவில்தான். சமமான

நிலையிலுள்ளவர்களிடையேதானே உண்மையான கூட்டுறவு மலரும்.

8. கூட்டுறவுப் பொருளாதாரத்தில் நாம் காணக் கிடக்கும் மற்றொரு சிறப்புக் கூறு இலாபத்தை உறுப்பினர் பகிரும் முறையாகும். இலாபம் என்ற சொல்லைவிட 'மிகை' என்ற சொல் பொருத்தமானதாகும். மிகைத் தொகையைப் பங்குகள் வைத்திருப்பதன் அடிப்படையில் பகிராமல், அச் சங்கத்துடன் உறுப்பினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் அளவை அடிப் படையாகக் கொண்டு பகிர்வு செய்யப்படும் பாங்கு கூட்டுறவுக்கே உண்டான தனிச் சிறப்பாகும்.

கூட்டுறவின் நன்மை

எளிய நிலையிலுள்ள மக்கள், சமுதாயத்தில் செல்வாக்கு இல்லாத நபர்கள், பொருளாதார வலிமையற்ற மனிதர்கள் முதலானோருக்கு நல்ல செல்வமும், செல்வாக்குமுள்ள மக்களுக்கு மட்டுமே கிட்டக்கூடிய நன்மைகளைக் கிடைக்க வகை செய்வது கூட்டுறவு. பெருமளவு உற்பத்தியின்வழி பெறக்கூடிய நலன்களைச் சிறு மனிதர்களும் பெற வழி காட்டுவது கூட்டுறவு. கூடித் தொழில் செய்வதால் உறுப்பினர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படுகின்றது. உழைப்பால் உயரும் பண்பினைக் கூட்டுறவு தெளிவாகக் காட்டுகிறது.

பொருளாதாரத் துறையில் கூட்டுறவு பலப்பல நன்மைகளை நல்கியுள்ளது. நீர்ப்பாசனத் திட்டங்கள், நிலப் பண்பாடு, நுகர்வோர் பண்டங்களை வழங்கல், விளைபொருளைப் பதப்படுத்தல், சந்தையிடுகை, உரம், பூச்சிக் கொல்லி மருந்து முதலியவற்றைக் கொள்முதல் செய்தல், வேளாண்மை, மீன் வளர்ப்பு, கைத் தொழில் போன்ற துறைகளில் உற்பத்தி முறையைப் புதுமைப் படுத்தல், வீடு கட்டுதல், சிறு தொழில்களை வளர்த்தல், கடன் வசதிகளைச் சீரான முறையில் ஏற்பாடு செய்தல் போன்ற சில செயற்பாடுகள் கூட்டுறவு மூலம் வளர்ந்து வந்துள்ளதை உலகு அறியும். சர்வாதீனம் (monopoly) என்னும் முற்றுரிமை மேலோங்கி, செல்வம் சிலரிடம் மட்டும் குவிந்து காணப்படும் நிலையில் கூட்டுறவு சர்வாதீனத்தின் தீமைகளை ஒடுக்கும் கருவியாகச் செயல்படுகிறது.

கூட்டுறவு பொருளாதாரத் துறையில் மட்டும்தான் நலன்களையளிக்க வல்லது என்று எண்ணுவது சரியன்று; அது சமூக

நலன்கள் பலவற்றையும் அளிக்கின்றது. தனது உறுப்பினர்களின் வாழ்வு முழுமைபெற, வளம்பெற, மகிழ்ச்சி பொங்கக் கூட்டுறவு உதவுகிறது. மனிதனிடமுள்ள மிகச் சிறந்த பண்புகளை வெளிப்படுத்தி அவனை உயர்ந்த நிலையில் வாழ வகை செய்யவும் கூட்டுறவு பயன்படுகிறது. அமைதியான முறையில் சமுதாயப் புரட்சியை உண்டாக்கிப் புதியதொரு சமுதாயத்தைச் சமைக்குந் திறன் கூட்டுறவுக்கு மட்டுமே உண்டு. இங்ஙனம் உருவாக்கப் படும் சமுதாயத்தில் மனிதர் ஒருவரையொருவர் சுரண்டுவதில்லை; ஒவ்வொருவரும் பிறரை மதித்து, சமத்துவ அடிப்படையில் தனிமனிதனின் மாண்பும் சமூகத்தின் சீர்மையும் ஒன்றுபட்டு எங்கும் நல்வாழ்வு பெருகும்.

மக்களாட்சி முறையின் கல்விக்கூடமாகவும், பொறுப் பேற்றல் பொறுத்திருத்தல் போன்ற பண்புகளின் பயிற்சி சாலை யாகவும், பெருமிதமும் பின்னிப் பிணைந்த குடும்பம் போன்ற உணர்வும் பெருகிடவும் உதவுமோர் அமைப்பாகவும் கூட்டுறவு மிளிர்கிறது. வியாபாரத்தில் நேர்மை, நாணயம், தரம், ஒழுங்கு போன்ற தன்மைகள் கூட்டுறவில் எதிர்நோக்கப்படுவது இயல்பே. பிறர் மகிழ்ச்சியாக வாழ்ந்தால்தான் தனக்கு மகிழ்வு கிட்டும் என்ற உண்மையுணர்வைக் கூட்டுறவு வலியுறுத்துகிறது. தான் என்ற குறுகிய நோக்கை மறைத்துச் சமூகப் பொது நலம் என்ற பரந்த நோக்கைக் கற்பிப்பது கூட்டுறவு.

கூட்டுறவும் கல்வியும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. கல்வியால் கூட்டுறவு உருவாகிறது; கூட்டுறவு கல்வியை வளர்க் கிறது. தமது பொருளாதார நிலையை உறுப்பினர்கள் எங்ஙனம் மேம்படுத்திக் கொள்ளலாம் என்று கூட்டுறவு காட்டுகின்றது. தன் னியல்பாகவும் உண்மையாகவும் உழைத்தால் உயர்வது திண்ணம் என்பதனையும் கூட்டுறவு அறிவுறுத்துகின்றது. அனைத்துலகக் கூட்டுறவு ஒன்றிய அலுவலர் திரு. வீராமன் (Mr. Weeraman) கூட்டுறவைப் பற்றிக் கூறியுள்ளது கூர்ந்து நோக்கத்தக்கது. மனிதரனைவரும் சமம், ஒருவரையொருவர் சுரண்டுவதற்கிட மில்லை என்ற அறத்தின்பாற்பட்ட கூட்டுறவு இயக்கத்தின் உயர்ந்த நோக்கங்களும் கோட்பாடுகளும் உலகிலுள்ள எல்லாப் பெருஞ்சமய அறவுரைகளுக்கும் பொருந்துவனவாயுள்ளன. மனிதனுடைய பொருள்சார் நலத்தையும், ஒழுக்கத்தையும் ஒன்றுசேர உயர்த்தவல்ல செயற்பாடு கொண்டது கூட்டுறவு. தனி மனிதனின் விடுதலையுரிமையைப் பெரிதும் மதிக்கும் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறத் தேவைப்படுவது உளமார்ந்த பற்றுக்கோளன்றி புரட்சியல்ல. கூட்டுறவு தீமையற்றதொரு

புரட்சியை உருவாக்குகிறது. கூட்டுறவில், தேவை நிலையிலிருக்கும் மனிதர் ஒருவரையொருவர் சுரண்டலைத் தவிர்த்து, அவர்கள் ஒன்றுசேர்ந்து தம் நலனுக்கும் சமுதாய நலனுக்கும் பாடுபடுகின்றனர்; தாம் மூலதனம் போட்டிருப்பதால் அதற்கேற்ப உரிமை கொண்டாடலாம் என்றல்லாது, தாமனைவரும் ஒரே வகையான பொருளாதாரத் தேவைகளையுடைய மனிதர்கள் என்ற சமத்துவ அடிப்படையில் ஒன்றுகூடி, மக்களாட்சி முறையில் தமது சங்கத்தினை நடத்தி வருகின்றனர்; முதலாளிகளும், இடைநிலையரும் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக உற்பத்தியாளரும், நுகர்வோரும் அதைக் கட்டுப்படுத்துகின்றனர்; முதல் இலாபம் ஈட்டும் நிலை ஒழிந்து கூலி ஈட்டும் நிலையை அடைகிறது—நியாயமானதெனக் கருதப்படும் விகித அளவிற்கு மட்டும் முதல் வட்டியை ஈட்டும்; சங்கத்தின் மிகைத் தொகையை (surplus) வாடிக்கையராகிய உறுப்பினர்கள் தாம் சங்கத்துடன் நடவடிக்கைகள் மேற்கொண்ட விகிதத்தில் பெறும் உரிமைக்கு ஏற்பாடிருப்பதால் இலாபம் விலக்கப்படுகிறது. 'என்னுடைய கை பிற மனிதரின் சட்டைப் பையிலிருக்கலாகாது, பிற மனிதரும் என் சட்டைப் பையில் கை வைத்திருக்கலாகாது' என்ற ஒரு தன்மையுள்ள சமுதாயத்தைக் கூட்டுறவு உருவாக்க முயலுகிறது.

கூட்டுறவும் பொருளாதாரத் திட்டங்களும்

மக்களாட்சி முறையில் திட்டமிட்டு வளர்ச்சி மேற்கொள்ள கூட்டுறவு சிறந்த ஒரு சாதனமாகக் காணப்படுகிறது. மக்களால், தம் தேவைகளை நிறைவு செய்துகொள்ளும்பொருட்டு உருவாக்கப்படுவது கூட்டுறவு. எனவே, திட்டமொன்றைக் கூட்டுறவுச் சங்கத்தின்வழி நிறைவேற்றுதல் எளிதாகின்றது. சங்க உறுப்பினர்களுக்குத் திட்டத்தின் நோக்கம், பயன் முதலியவற்றை விளக்கவும், அவர்கள் உதவியைக் கொண்டே அதை நிறைவேற்றவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

திட்டமிட்டு வளர்ச்சியடைவது என்பது கிராம அளவிலிருந்து நாட்டளவுவரை எல்லா நிலைகளிலுமுள்ள மக்களும் பயன் பெறும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். கிராம அளவில் கிராமச் சங்கங்கள், மாவட்ட அளவில் மாவட்டச் சங்கங்கள், மாநில அளவில் மாநிலச் சங்கங்கள், நாட்டளவில் தேசீய சங்கங்கள் என அடித்தளத்தில் பிரதம சங்கங்களும் மேல் தளங்களில் கூட்டிணைப்புச் சங்கங்களும் அமையப்பெற்று எல்லா அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்படும் சிறப்புக் கூட்டுறவு

ஒன்றுக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்பாகும். இங்ஙனம் இணைந்த அமைப்பின் வாயிலாகத் திட்டங்களை நிறைவேற்றுவது எளிது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

இத் தருணத்தில், ஆறும் இந்தியக் கூட்டுறவு மாநாட்டில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நிகழ்த்திய துவக்க உரையில் குறிப்பிட்ட கருத்தை நினைவு கூர்வது பொருத்தமாகும். கூட்டுறவு இயக்கத்தின் நோக்கத்தினையும், திண்மையினையும் பிரதிபலிக்கும் வகையில் அதன் மாநில, தேசிய அங்கங்கள் செயல்பட வேண்டும். பொருளாதாரத் துறையில்—குறிப்பாக வேளாண்மை, தொழில், நுகர்வோர் துறைகளில் விரைவான முன்னேற்றம் காண வகுக்கப்படும் தேசிய திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட செயல் திறன் மிக்க தரமான அமைப்புகளைக் கூட்டுறவு இயக்கம் உருவாக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்திற்கு மிகப் பெரிய வாய்ப்புகள் உள்ளன. இவற்றை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

2. கூட்டுறவுத் தத்துவ விளக்கம்

கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோளை அடைய இன்றியமையாது விளங்கும் செய்முறைகளையே கூட்டுறவுத் தத்துவங்களென்று கூறுவர். கூட்டுறவுச் செயற்பாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய கருத்துகளே கூட்டுறவுத் தத்துவங்களாகும். கூட்டுறவு இயக்கத்திற்கு அடிப்படையாக, வழிகாட்டி போன்று விளங்கும் கோட்பாடுகள்தாம் கூட்டுறவுத் தத்துவங்களாகும் என்று அறிஞர் கருதுகின்றனர். ஜியார்ஜ் டேவிடவிக் என்ற கானடா நாட்டைச் சேர்ந்த பெருங் கூட்டுறவாளர், கூட்டுறவு அமைப்புகளின் வாழ்வினையும் செயல்முறையினையும் அணைத்துச் செல்லும் விதிகளே கூட்டுறவுத் தத்துவங்கள் என்று கூறுகிறார். பேராசிரியர் டி. ஜி. கார்வே, 'கூட்டுறவு இயக்கத்தின் இலக்கு அல்லது குறிக்கோளை அடையவும் கூட்டுறவு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து நடாத்தி வரவும் உறுதுணையாக அமைந்துள்ள வழிமுறையே கூட்டுறவுத் தத்துவமாகும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுறவுத் தத்துவங்கள் அவ்வியக்கத்தின் மிகச் சீரிய குறிக்கோள்களைக் குறிக்கின்றன. இத் தத்துவங்களையொட்டியே கூட்டுறவு அமைப்புகள் செயல்பட வேண்டும். இந்தத் தத்துவங்கள்தாம் கூட்டுறவுப் பொருளாதார அமைப்பைப் பிறவகை பொருளாதார அமைப்புகளினின்று வேறுபடுத்திக் காட்டுகின்றன.

கூட்டுறவுத் தத்துவங்களென்பன யாவை? இவை எங்ஙனம் உருவாகி வந்தன? இன்றைய உலகில், கூட்டுறவுத் தத்துவங்களென்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளவை யாவை என்பன போன்ற வினாக்களுக்கு இந்த அத்தியாயத்தில் விடை காண்போம்.

கூட்டுறவுக் கருத்துகள் வளர்ந்த வரலாற்றினை ஆராய்வோர் கூட்டுறவுகளை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பதுண்டு. ஒன்று

ராக்டேல் முறை (Rochdale System), இரண்டாவது ரய்பீசன் முறை (Raiffeisen System), மூன்றாவது ஷுல்சு-டெலீட்ஷ் முறை (Schulze-Delitzch System) யாகும். முதல்முறை நுகர்வோர் தேவைகளை நிறைவு செய்யவும், இரண்டாவது முறை விவசாயி களின் தேவைகளை நிறைவு செய்யவும், மூன்றாவது முறை கைவினைஞர், வியாபாரிகள் போன்றோர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் பயன்பட்டு வந்தன.

முதலாவதாக ராக்டேல் தத்துவங்கள் என்னவென்று காண்போம் :

1. தன்விருப்ப, தடையற்ற உறுப்பினர் நிலை (Voluntary and open membership).

2. ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற மக்களாட்சி முறையில் செயலாட்சி செய்தல்.

3. வாடிக்கையாதரவு (Patronage)க்குத் தகுந்த விகிதத்தில் மிகைத் (surplus) தொகையினைப் பகிர்தல்.

4. முதல் மீது வரம்புக்குட்பட்ட வட்டி.

5. அரசியல், சமயம் ஆகியன குறித்து நடுநிலை வகித்தல்.

6, ரொக்க வியாபாரம்.

7. கல்வி வளர்ச்சி.

இனி ரய்பீசன் தத்துவங்கள் யாவை என்று காண்போம் :

1. தன்னுதவி (Self-help) கூட்டுறவின் தன்னுரிமை பாது காக்கப்பட்டால் அரசு உதவியை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதில்லை.

2. வரையறுக்கப்பட்ட ஆட்சி எல்லை.

3. மிகைத் தொகை முழுவதையும் பிரித்தளிக்க முடியாத சேம ஒதுக்கீட்டில் சேர்த்தல்.

4. பங்குகள் எடுத்துக்கொள்ளாமலேயே உறுப்பினர் நிலை.

5. உறுப்பினர் பொறுப்பு வரையறையின்றி இருத்தல்.

6. உறுப்பினர்களோடு மட்டும் தொழில் நடத்தல்.

7. குழு உறுப்பினர் தம் விருப்ப அடிப்படையில் செய லாற்றல்.

ஷுல்சு—டெலீட்சு தத்துவங்களைக் கீழே காண்போம் :

1. தன்னுதவி—வெளியார் உதவி எதனையும் நாடுவதில்லை.

2. ஆட்சி எல்லை பெரும்பரப்பாக இருத்தல்.

3. மிகைத் தொகையை நடவடிக்கைகளின் விகிதத்தில் உறுப்பினர்கள் பகிர்ந்து கொள்ளல்.

4. நிறைய பங்குகளை எடுத்துக்கொள்வதைத் தூண்டும் வகையில் பங்குகள் மீது மிகுந்த வட்டி அளித்தல்.

5. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்.

6. தொழிலில் சிறப்புத் தேர்ச்சி.

7. சேமநிதிக்கு மிகைத் தொகையில் 10% ஒதுக்குவது.

மேற்கண்ட மூன்று முறைகளிலும் கூறப்பட்டுள்ள தத்துவங்களைக் கூர்ந்து நோக்கின் அவற்றிடையேயுள்ள சில பொதுக் கூறுகள் புலப்படும். தம்மிடையே பொதுவான தேவைகளும் நலன்களும் உள்ள மனிதர்கள் தாமே விரும்பி ஒன்று சேரும் சங்கமே கூட்டுறவு என்பதும், பொதுவான தொழில் முயற்சியை மேற்கொண்டு தமது பொருளாதார, சமூக நிலையை மேம்படுத்திக் கொள்ளுகின்றனர் என்பதும், ஒருவருக்கு ஒரு வாக்கு என்னும் மக்களாட்சி முறையில் கூட்டுறவுகள் நிருவகிக்கப்படுகின்றன என்பதும், கூட்டுறவுகள் அரசியல், சமயப் பிடிப்புகளிலிருந்து நீங்கிய தன்னுரிமை பெற்ற அமைப்புகளென்பதும், கல்வி, ஒழுக்கம் போன்ற பண்புகளின் உறைவிடமாகக் கூட்டுறவு திகழ்கின்றது என்பதும் தெரியவருகின்றன. மேற்கண்ட தத்துவங்களில் சில மாறுபாடுகள் இருப்பதையும் காணலாம். ராக்டேல் முறைப்படி ரொக்க வியாபாரம் மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ராக்டேல் கூட்டுறவு நுகர்வோர் நலனுக்கு ஏற்படுத்தப்பட்டதாகையால் நுகர்வோர் நலனைப் பாதுகாக்க ரொக்க வியாபாரம் என்ற தத்துவம் வலியுறுத்தப்பட்டது. ஆனால், ரய்பீசன் ஷுல்சு—டெலிட்சு துவக்கிய கூட்டுறவுகள் கடன் வழங்கும் சங்கங்களாக இருந்தமையால் அவற்றில் ரொக்க வியாபாரத்தைப் பற்றிப் பேச வாய்ப்பில்லை.

எந்த வகைத் தொழிலை மேற்கொண்டிருந்தாலும் எல்லாக் கூட்டுறவுகளுக்கும் அடிப்படைத் தத்துவங்கள் ஒரே தன்மையனவாக அமைந்திருப்பது கருத்தை ஈர்க்கும் பெருஞ் சிறப்புக் கொண்ட செய்தியாகும். இதனால் கூட்டுறவுகள் அனைத்திற்கும் அடிப்படைக் கூறுகள் ஒன்றே என்பதும் ஒருமித்ததோர் அமைப்பின் ஒரு பகுதியாக ஒவ்வொரு கூட்டுறவும் மிளிர்கின்றது என்பதும் அறியக் கிடக்கின்றது. மற்றும், ஓர் அமைப்பிற்குக் கூட்டுறவு என்ற பண்பு ஏற்படக் காரணமாக இருப்பது அதன் உறுப்பினர்களின் சமூக நிலையோ அல்லது மேற்கொள்ளப்பட்ட தொழில்

வகையோ அல்ல. ஆனால், அது கூட்டுறவுத் தத்துவங்களைக் கடைப்பிடித்து வருகின்றதா என்பதுதான்.

நெடுங்காலமாக உலகெங்கும் கூட்டுறவுத் தத்துவங்கள் என்று அறியப்பட்டன ராக்டேல் தத்துவங்களே. இங்கிலாந்து நாட்டில், 1844ஆம் ஆண்டு, ராக்டேல் (Rochdale) என்ற ஊரில் 28 கம்பளி நெசவாளர்கள் சேர்ந்து துவங்கிய நுகர்வோர் பண்ட சாலையே ராக்டேல் சங்கம் என்று அறியப்படுகின்றது. உணவுப் பண்டங்கள் போன்ற வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள் களின் விலையை மிகப் பெருமளவுக்கு உயர்த்தி மக்களைப் பெரும் துன்ப நிலைக்கு ஆளாக்கிய வியாபாரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு £28 முதலுடன் இச் சங்கம் துவக்கப்பெற்றது. உள்ளத்தில் உரம், பொது அறிவு, தன் னம்பிக்கை, பொறுமை, தன்னுதவியில் அசையா நம்பிக்கை போன்ற பண்புகளுடன் பண்டசாலையை வெற்றிகரமாக நடத்திக் கூட்டுறவு முறைக்கு வித்திட்ட காரணத்தால் இந்த நெசவாளர்கள் கூட்டுறவு அகராதியில் நிலையான இடம் பெற்றது மட்டுமன்றி 'ராக்டேல் முன்னோடிகள்' (Rochdale Pioneers) என்ற சிறப்புப் பெயரையும் பெற்றனர். ராக்டேல் முன்னோடிகள் தமது பண்ட சாலையை நடத்தி வருவதில் கடைப்பிடித்த விதிகளும், நோக்கங் களும் பின்னர் ராக்டேல் தத்துவங்கள் என்று அறியப்பெற்றன. இத் தத்துவங்கள் உலகெங்கும் பரவியுள்ள கூட்டுறவு இயக்கத் திற்கு உயிர் மூச்சாக, உள்ளக் கிளர்ச்சியூட்டுவதாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. ராக்டேல் தத்துவங்கள் என்று அறியக் கிடப்பன (1) மக்களாட்சி முறையில் நிருவாகம், (2) தடையற்ற உறுப்பினர்நிலை, (3) முதல் மீது வரம்புக்கு மிகாத வட்டி, (4) வாடிக்கையாதரவை யொட்டி ஆதாயப் பங்கு (dividend), (5) ரொக்க வியாபாரம், (6) அரசியல், சமயச் சார்பற்றிருத்தல், (7) கல்வி வளர்ச்சி.

ராக்டேல் கிராமத்தில் உருப்பெற்ற கூட்டுறவு இயக்கம் பலப்பல நாடுகளில் பலப்பல உருவங்கள் கொண்டு வளர லாயிற்று. கருத்தளவிலும், செய்முறையிலும் பலப்பல மாற்றங்கள் நிகழ்ந்தன. அரசியல் துறையில், ரஷியா நாட்டில் சோஷலிச அமைப்பு ஏற்படுத்தப்பட்டதையொட்டி உலகெங்கணுமுள்ள கூட்டுறவாளர்களிடையே கருத்து வேற்றுமைகள் எழுந்தன. தொழில்நுட்ப அறிவியல் துறையிலே ஏற்பட்ட வளர்ச்சி கூட்டுறவுத் துறையின் அமைப்பு, செயற்பாடு ஆகியவற்றை மாற்றத் துவங்கியது. இந்தச் சூழ்நிலையில், 1934ஆம் ஆண்டில் அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியம் (International Co-operative

Alliance) கூட்டுறவுத் தத்துவங்களை ஆராய்ந்து அவற்றை முறைப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இப் பணியை மேற்கொள்ள அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றிப்புச் சிறப்புக் குழுவொன்றை அமைத்தது. இக் குழு ராக்டேல் தத்துவங்களை இரு கூறுகளாகப் பிரித்தன. ஒன்று இன்றியமையாத தத்துவங்கள், மற்றது இன்றியமையாததல்லா தத்துவங்கள்.

அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியத்தின் தத்துவ விளக்க அறிக்கை 1937இல் வெளிவந்தது. இவ்வறிக்கைப்படி தடையற்ற உறுப்பினர்நிலை, மக்களாட்சிமுறை நிருவாகம், முதல் மீது வரம்புக்கு மிகாத வட்டி, நடவடிக்கைகளின் விகிதத்திற்கேற்ப ஆதாயப் பங்கு ஆகிய இன்றியமையாராக்டேல் தத்துவங்களெனக் கருதப்பட்டன. அவ்வளவு முக்கியமற்றதாகக் கருதப்பட்ட தத்துவங்கள் அரசியல், சமயச்சார்பற்றநிலை, ரொக்க வியாபாரம், கல்வி என்ற மூன்றுமாகும். கூட்டுறவுத் தத்துவங்களை இன்றியமையாதன, இன்றியமையாதனவல்லாதன என்று பிரித்துப் பேசுவதைப் பலர் விரும்பவில்லை. மற்றும் இத் தத்துவங்களின் பொருளைக் குழுவின் அறிக்கை விளக்கவில்லை. கூட்டுறவுத் துறையில் ஈடுபட்ட நிருவாகர், கூட்டுறவாளர் போன்றோருக்குத் தத்துவ விளக்கத்தில் ஐயமேதும் ஏற்பட்டால் இவ்வறிக்கையின் துணைகொண்டு ஐயந்தீர்த்துக்கொள்ளும் வகையில் அறிக்கை அமையவில்லை. எடுத்துக்காட்டாக, தடையற்ற உறுப்பினர்நிலை என்பதற்கு வரையறை ஏதும் கிடையாதா? தடையற்றது என்றிருந்தாலும் கட்டாயமாக உறுப்பினராக்குவதும் கூட்டுறவுப் பண்பும் பொருத்தமிக்கவையா? முதல்மீது வட்டி அவசியம் செலுத்தப்பட வேண்டுமா? ஆதாயம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமா? ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற நிலை எல்லாவகையான சூழ்நிலைகளுக்கும் பொருந்துமா? என்பன போன்ற வினாக்களுக்கு இவ்வறிக்கை தக்க விடை தரவில்லை. முக்கியமல்லாதது என்று குழு குறிப்பிட்ட தத்துவங்களைப்பற்றியும் தக்க விளக்கங்களேதுமில்லை. இத் தத்துவங்களைத் தேவைக்கேற்றவாறு மாற்றிக் கொள்ளலாமா அல்லது கைவிட்டுவிடலாமா என்பன போன்ற செய்திகள் குறித்துப் பேச்சே இல்லை. இந்த ஒரு சூழ்நிலையில், பல்வேறு நாடுகளில் செயல்பட்டு வரும் கூட்டுறவு இயக்கங்கள் தத்தம் விருப்பப்படி தத்துவங்களை மாற்றியமைத்துக்கொண்டன.

விரைவாக மாறிவரும் சமுதாயச் சூழ்நிலைகளில், 1937ஆம் ஆண்டறிக்கை காலத்திற்கு உகந்ததாகத் தோன்றவில்லை. தொழில் நுட்ப அறிவியல் துறையிலும், நிருவாகத் துறையிலும் பலப்பல மாறுதல்கள் நிகழ்ந்து வந்தன. 1937ஆம் ஆண்டறிக்கை

யில் காணப்பட்ட தத்துவங்கள் தெளிவாக விளக்கப்படாத காரணத்தினுலும், இடைக்காலத்தில் பல்வேறு மாறுதல்கள் நிகழ்ந்திருந்த காரணத்தினுலும் கூட்டுறவுத் தத்துவங்கள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டுமெனக் கருதப்பட்டது.

அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியம் (International Co-operative Alliance—ICA) 1964ஆம் ஆண்டில், தற்கால நிலைக்கேற்ற அடிப்படைக் கூட்டுறவுத் தத்துவங்களை முறைப் படுத்தித் தரக்கோரி ஐவர் கொண்ட ஒரு குழுவை நியமித்தது. 1937இல் அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றிய மாநாட்டில் அளிக்கப்பட்ட இலக்கணப்படி ராக்டேல் தத்துவங்கள் இன்றைய நாளில் எந்த அளவுக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்றும் கடைப்பிடிக்கப்படாமலிருந்தால் அதற்கான காரணங்கள் என்னவென்றும் காணும்படி இக் குழு பணிக்கப்பட்டது. இன்றைய பொருளாதார, சமூக, அரசியல் நிலையில், கூட்டுறவு இயக்கத்தின் பல துறைகள் தமது நோக்கங்களை நிறைவு செய்து வளர ராக்டேல் தத்துவங்கள் போதுமானதா அல்லது அவை மாற்றியமைக்கப்பட வேண்டுமா என்று ஆராய்ந்து தக்க வாசகத் தைப் பரிந்துரை செய்யுமாறும் இக் குழு கேட்டுக் கொள்ளப் பட்டது.

1964இல் அமைக்கப்பட்ட ஐவர் குழுவிற்குப் பேராசிரியர் டி. ஜி. கார்வே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக் குழு தனது அறிக்கையை 1966இல் அளித்தது. இக் குழுவின் அறிக்கை 1937ஆம் ஆண்டறிக்கையிலிருந்து சில முக்கிய செய்திகளில் வேறுபட்டிருந்தது. தத்துவங்களில் சிலவற்றை முக்கியமானவை யென்றும் மற்றுஞ் சிலவற்றை முக்கியமற்றவை என்றும் குழு பிரித்துப் பேசவில்லை. மற்றும் தத்துவங்களைச் சூத்திரங்கள் போன்று மிகச் சுருக்கமாக வரைந்து தெளிவு, விளக்கம் ஆகியவை இல்லாமல் செய்துவிடவில்லை. ஒவ்வொரு தத்துவத்தையும் எடுத்துரைக்கும்போது அதனுடைய உட்கருத்தையும் விளக்கத் தையும் தேவையான அளவுக்கு எடுத்துரைத்தது.

இனி, 1966ஆம் ஆண்டறிக்கையின் முக்கிய பரிந்துரை களையும் முடிவுகளையும் காண்போம். தற்காலத்திலும் எதிர்காலத் திலும் கூட்டுறவுச் செயற்பாடு செம்மையாக அமையக் கீழ்க் கண்டவை இன்றியமையாதவையாகும் :

1. உறுப்பினர் நிலையால் உண்டாகும் பொறுப்புகளை ஏற்க ஒப்பி, கூட்டுறவுச் சங்கத்தின் பணிகளைப் பயன்படுத்திக்கொள் ளக்கூடும் எல்லா நபர்களும், போலியான தடை அல்லது சமூக,

அரசியல் அல்லது சமய வேறுபாடுகளின்றி, தம் விருப்பமாகச் சேரும் உறுப்பினர்நிலை இருத்தல் வேண்டும்.

2. கூட்டுறவுச் சங்கங்கள் மக்களாட்சிமுறை அமைப்புகளாகும். அவற்றின் அலுவல்களை நிருவகிப்போர் அதன் உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்புடையவர்களாக இருப்பதுடன் உறுப்பினர்கள் ஒப்பியவாறு அவர்கள் நியமிக்க அல்லது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பிரதம சங்கங்களின் உறுப்பினர்கள் வாக்களிப்பதில் சம உரிமை (ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு) பெற்றிருப்பதுடன் தங்கள் சங்கங்களைப் பாதிக்கும் முடிவுகளை எடுப்பதில் பங்கு பெறவேண்டும். பிரதம சங்கமல்லாத பிற சங்கங்களின் நிருவாகம் மக்களாட்சிமுறை அடிப்படையில் தக்கதோர் உருவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. பங்கு முதல்மீது வட்டி ஏதும் தரப்படுமேயாகில் அது வரம்புக்குட்பட்ட ஒரு விகிதமாகவே இருக்கவேண்டும்.

4. சங்கத்தின் நடவடிக்கைகளால் உண்டாகும் மிகைத் தொகை (surplus) அல்லது சேமிப்புத் தொகை ஏதும் அதன் உறுப்பினர்களுக்கே உரியதாகும். பிற உறுப்பினர்களுக்கு நட்டமேற்படும் வகையில் ஓர் உறுப்பினர் ஆதாயம் பெறுவதைத் தவிர்க்கும் வழியில் மேற்கூறிய தொகை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இதனை உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு நிருணயிக்கலாம் :

(அ) குறிப்பிட்ட அக் கூட்டுறவின் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்குதல்;

(ஆ) பொதுப்பணிகளுக்கு ஒதுக்குதல்; அல்லது

(இ) சங்கத்துடன் உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விகித அடிப்படையில் அவர்களிடையே பகிர்ந்தளித்தல்.

5. பொருளாதார, மக்களாட்சி முறையினைச் சார்ந்த கூட்டுறவுத் தத்துவங்கள், தொழில்துறை நுட்பம் ஆகியன பற்றிய கல்வியைத் தம் உறுப்பினர், அலுவலர், ஊழியர், பிற பொது மக்கள் ஆகியோருக்கு அளிக்க எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்பாடு செய்யவேண்டும்.

கூட்டுறவுகளிடையே ஒன்றுக்கொன்று கூட்டுறவு வளர்ச்சிக்கு உகந்ததாக இருப்பதால் இதனையும் ஒரு தத்துவமாகக் குழு சேர்த்துக்கொண்டது.

6. தம்முடைய உறுப்பினர்கள், தம் சமூகம் ஆகியவற்றிற்கு நல்ல சேவையினைச் செய்ய எல்லாக் கூட்டுறவு அமைப்புகளும் பிற அனைத்து நாட்டு, நாட்டளவு, உள்நாட்டுக் கூட்டுறவுகளுடன் எப்படியெல்லாம் முடியுமோ அப்படியெல்லாம் முழு மூச்சுடன் ஒத்துழைக்கவேண்டும்.

மேற்கண்ட கூற்றுகளைச் சமைத்துத் தந்த குழு சில கருத்துக் குறிப்புகளையும் சேர்த்துத் தந்திருக்கிறது. முதலாவதாக, இத் தத்துவங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புற்றிருப்பது தற்செயலாகவோ அல்லது மனம் போன போக்கிலோ அன்று. அவை பிரித்துப் பேச முடியாத ஒரு முழுமைத் தொகுதியாக அமைந்துள்ளன. அவை ஒன்றையொன்று ஆதரிப்பதாகவும் உறுதிப்படுத்துவதாகவும் உள்ளன. எந்த நோக்கங்கள், ஆட்சி எல்லை உள்ள கூட்டுறவுகளும் தாம் கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்தவை என்றுகூறிக் கொண்டால் இத் தத்துவங்கள் அனைத்தையும் கடைப்பிடிக்கவேண்டும்; கடைப்பிடிக்கவும் முடியும். இரண்டாவதாக, கூட்டுறவுகளின் தனி நபர் உறுப்பினர்கள் தமக்குள்ளும் தம் சங்கங்களுடனும் தொடர்பு கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகளாக இத் தத்துவங்கள் துவக்கத்திலிருந்த போதிலும், இவை பிரதம சங்கங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதன்று. தனி நபர்களல்லாத, கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு என்ற உருவிலுள்ள இரண்டாம் கட்டத்திலுள்ள நிலையங்களும் தேவைப்பட்ட திருத்தங்களுடன் இத் தத்துவங்களைப் பற்றுறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும். மூன்றாவதாக, 1937இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆனால் இக் குழுவினர் இருத்திக் கொள்ளாத தத்துவங்களைப் பயனற்றன என்று கருதக் கூடாது அல்லது வேண்டாதன என்று எறிந்துவிடலாகாது. தமது நிதிநிலை அல்லது தமது உறுப்பினர்களிடையேயான ஒற்றுமைக் குலைவதைத் தாங்க முடியாத, அண்மையில் நிறுவப் பெற்ற அனுபவமில்லாதக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக்கூட இத் தத்துவங்கள் பொருந்திவருவனவல்ல என்று கொள்ளக்கூடாது. நம் காலத்தில் இத் தத்துவங்கள் உலக முழுமைக்கும் ஏற்புடைத்தாக இல்லையென்ற காரணத்தால் அவை இனி என்றும் பொருத்தமற்றவையென்று கொள்ளலாகாது.

கூட்டுறவுத் தத்துவங்களின் விளக்கம்

உறுப்பினர் நிலை (Membership)

கூட்டுறவுச் சங்கமொன்றில் உறுப்பினராக எவரும் சேர தடையேதுமில்லாதிருப்பதும், தம் விருப்ப அடிப்படையும்

(Open, voluntary) இரு பெரும் பண்புகளாகக் கருதப்படுகின்றன. அதாவது புறத்தூண்டுதலோ, கட்டாயப்படுத்தலோ இல்லாமல் தாமே விரும்பியே கூட்டுறவில் உறுப்பினர் சேருகின்றனர். உறுப்பினராகச் சேருவதும் உறுப்பினர் நிலையிலிருந்து விலகிக் கொள்ளுவதும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. தம் விருப்பத்தின் பேரில் ஒருவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேருவது சங்கத்தின் மிகவும் அடிப்படையான ஒரு தன்மையாகக் கருதப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களனைத்தும் 'சேரவாரும் செகத்தீரே' என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது இன்றியமையாதது. அதாவது சேர விரும்புவோர் அனைவரையும் சேர்த்துக் கொள்ளும் வகையில் உறுப்பினர் சேர்ப்புக் கொள்கை அமையவேண்டும். பொதுவான பொருளாதாரத் தேவைகள் உள்ள எவரும் சங்கத்தில் சேர வாய்ப்பிருக்கவேண்டும். செயற்கையான தடையேதும் விதிக்கப்படலாகாது. சாதி, மத, இன, நிற, வகுப்பு வேறுபாடுகளுக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம் கிடையாது. அதனைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவர் அனைவருக்கும் உறுப்பினராகும் வாய்ப்பு இருத்தல் அவசியம். சங்கம் ஒரு சிலருக்கு மட்டுமே உரியது என்ற நிலை இருத்தலாகாது. தடையற்ற உறுப்பினர் நிலை மிக முக்கியமானதொரு தத்துவமாகக் கருதப்படுவதன் காரணம், இத் தத்துவத்தைக் கடைப்பிடிக்காத நிலையில் சங்கத்தின் கூட்டுறவுத் தன்மை போய் அது ஓர் இலாபம் ஈட்டும் நிறுவனமாகத் தோற்றமளிக்கும் என்பதாம்.

தடையற்ற உறுப்பினர் நிலை என்றால் உறுப்பினர்களைச் சேர்ப்பது குறித்து விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் இருத்தலாகாது என்பதல்ல. சங்கத்தின் செயற்பாட்டிற்கு உகந்ததாக இல்லாத நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவரை அல்லது சங்கத்தில் சேர்ந்து கொண்டு உள்ளிருந்து கொண்டே அதனைக் கெடுக்கும் பணியில் ஈடுபடுபவரை உறுப்பினராகச் சேர்க்க மறுக்கலாம். தீய ஒழுக்கமுள்ளவர்கள், ஊன்றிய நலமிகள் (Vested interests), ஒருமித்த தன்மையற்றவர்கள் போன்றவர்களைத் தடையேதுமின்றிச் சேர்த்துக்கொண்டால் அவர்கள் கூட்டுறவை அழித்துவிடக்கூடும். தன்னலங்கருதி புனிதமான கூட்டுறவைச் சமூக விரோதிகள் மாசுபடுத்தக்கூடும். தடையற்ற உறுப்பினர் நிலை என்பது எவரும் எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் சேர உரிமை கோரலாம் என்பதல்ல, குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காகத் துவக்கப்பட்ட ஒரு சங்கம் அந்த நோக்கங்களைப்

பகிரும் மக்களுக்கு உறுப்பினர் நிலையினைத் தடையின்றித் தருதல் வேண்டும் என்பதே தடையற்ற உறுப்பினர் நிலை என்ற சொற்றொடரின் கருத்தாகும். மிர்தா குழுவினரும் (Mirdha Committee on Co-operation) தம்முடைய அறிக்கை (1965)யில் இத் தத்துவத்தைத் தீர ஆராய்ந்து மேற்கண்ட கருத்தைத் தந்தது. தமது உறுப்பினர்களுக்குத் தேவைப்பட்ட பொருள்கள் அல்லது பணிகளைக் கடன் பேரில் வழங்கியுதவ துவக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அச் சங்கம் அளிக்கக்கூடிய பொருள்கள் அல்லது பணிகளை வேண்டும், அச் சங்கத்தின் ஆட்சி எல்லைக்குள் வசித்து வரும் மக்களில் எவர் வேண்டுமானாலும் உறுப்பினராகச் சேர வழிவகை இருத்தல்வேண்டும். இப் பொதுவிதிக்குச் சில விலக்குகளும் உண்டு. எடுத்துக்காட்டாக, முன்கூறிய கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தில், வட்டித் தொழில் மேற்கொண்டுள்ள ஒரு நபர் அச் சங்க ஆட்சி எல்லையில் குடியிருப்பினும் அதில் உறுப்பினராகச் சேர்க்கப்படலாகாது. காரணம் அவருடைய தொழில் நலனும் சங்கத்தின் நலனும் ஒன்றுக்கொன்று முரணானவை. கூட்டுறவின் பல பிரிவுகளில் திட்டமிட்டு வளர்ச்சி காண அரசு பல்வகை உதவிகளையளித்துப் புதிய சங்கங்களைத் துவக்க ஊக்குவிக்கின்றது. இச் சங்கங்கள் செவ்வனே செயல்பட குறிப்பிட்ட எண்ணிக்கையளவு உறுப்பினர்களை மட்டுமே சேர்ப்பது உகந்ததாக இருக்கிறது. இந் நிலையில் தடையற்ற உறுப்பினர் நிலை என்ற தத்துவத்தின் அடிப்படையில் எல்லோரையும் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுவது இயலாத செயலாகும். சங்கம் தக்க அளவும் வளமும் பெற்றுச் செயலாற்ற குறிப்பிட்ட எண்ணிக்கையளவுக்கு மட்டுமே உறுப்பினர் சேர்த்துக்கொள்ளப் படுதல் வேண்டும்.

உறுப்பினராகச் சேருவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விதிகள் இருப்பது போன்று உறுப்பினர் நிலையிலிருந்து விலகிக் கொள்ளுவதிலும் சில விதி முறைகள் உள்ளன. தான் உறுப்பினராக இருந்து வந்த காலத்தில் சங்கத்துக்கு ஏற்பட்ட பொறுப்பு அல்லது நட்டங்களிலிருந்து உறுப்பினர் நிலையிலிருந்து விலகுவதன் வழி தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது. சங்க விதிகளில், விலகிய ஓர் உறுப்பினரின் பொறுப்பு அவர் விலகிய நாளிலிருந்து மேலும் சில காலத்திற்குத் தொடர்ந்து நீடிக்கும் என்று கண்டிருந்தால் அது 'தடையற்ற உறுப்பினர் நிலை' (Open membership) என்ற தத்துவத்திற்கு முரணாகாது.

சுருங்கக்கூறின், தடையற்ற உறுப்பினர் நிலை என்ற தத்துவம், கூட்டுறவின் உயர்ந்த பண்புகளையும் தனக்கு அதனால் கிடைக்கக்

கூடிய பொருளாதார நலன்களையும் கருத்தில்கொண்டு தாமே விரும்பி கூட்டுறவில் உறுப்பினராகச் சேரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. சில கூட்டுறவுகளில் தெரிந்தெடுப்புப் பண்புடைய உறுப்பினர் நிலை (Selective membership) கடைப் பிடிக்கப்பட்டு வருவது மேற்கூறிய தத்துவத்திற்கு முரணாகா அமையாது. எடுத்துக்காட்டாக, குறைந்தது செலுத்த வேண்டிய பங்கு முதல், நுழைவுக் கட்டணம், வசிக்குமிடம், செய்யும் தொழில், வயது போன்ற காரணிகள்; வேறுபாடுடைய விலைக் கொள்கை; குறைந்த அளவு சேர்ப்பிக்கவேண்டிய பொருளின் அளவு (Minimum delivery quota) போன்ற விதிகள் சிலவகைக் கூட்டுறவுகள் திறனுகச் செயலாற்ற அவசியம் தேவைப்படுகின்றன. இவ் விதிகளைத் தடையற்ற உறுப்பினர் நிலைக்கு முரணானவை யாகக் கொள்ளுதல்கூடாது. சில சங்கங்களில், குறிப்பாக வீடு கட்டும் சங்கங்கள், நீரேற்றுப்பாசன சங்கங்கள் போன்றவற்றில், குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேலாக உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள இயலாது. சங்கம் அளிக்கும் சேவையைப் பயன் படுத்திக்கொள்ள இயலாத அல்லது விரும்பாத உறுப்பினர் தொடர்ந்து உறுப்பினராக இருக்கக் கோர நியாயமில்லை.

மக்களாட்சிமுறை நிருவாகம் (Democratic Administration)

கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கம் தன் உறுப்பினர்களின் நலனை மேம்படுத்துவதாகும். உறுப்பினர்களுக்கு நன்மைபயப்பது எது என்பதை நிருணயிக்கவேண்டியது உறுப்பினர்களேயாகும். எனவே, கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிகரமான செயற் பாட்டிற்கு உறுப்பினர்களின் தேவையை யறிந்து அவர்களைக் கலந்தாலோசித்துச் சங்கம் நடைபெறவேண்டும். சங்கத்தை நிருவகிப்போர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும், உறுப்பினரின் நம்பிக் கைக்குப் பாத்திரமானவர்களாக இருத்தலும் இன்றியமையாதது. நிருவாகத்தினர், சங்கத்தின் நடப்புப் பற்றி அவ்வப்போது உறுப்பினர்களுக்கு அறிக்கை அளிக்கவேண்டும். உறுப்பினர்கள் நிருவாக அதிகாரிகளின் நடவடிக்கைகளை ஆராய்ந்து அவர் களுக்குச் சரியல்லவென்று தோன்றினல் அவற்றைக் கண்டிக்கவும் செய்யலாம்; மிகவும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் இருப்பவர் களுக்குப் பதிலாக வேறு அதிகாரிகளை நியமிக்கவும் செய்யலாம். இதைத்தான் பொதுவாகக் கூட்டுறவுகள் மக்களாட்சி முறையில் நிருவகிக்கப்படுகின்றன என்று கூறுகின்றனர்.

மனிதப் பண்பு மேலோங்கி நிற்கும் கூட்டுறவு முறையிலே சங்கம் மனிதர்கள்கொண்ட ஓர் அமைப்பாகக் கருதப்படுகிறது. கம்பெனி வகை அமைப்போ மூலதனத்தைச் சிறப்புக் கூறுகக் கொண்ட அமைப்பாகக் கருதப்படுகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களனைவரும் சமுதாயப்படி நிலை (status)யிலுள்ளவர் களாகக் கருதப்படுகின்றனர். அவர்களிடையே ஏற்றத் தாழ்வு, பாமரர்—பணக்காரர் என்ற வேறுபாடு கிடையாது. சங்க நடவடிக்கைகள் குறித்த செய்திகளைப் பற்றி முடிவெடுப்பது, தம் கருத்துகளைத் தெரிவிப்பது ஆகிய போன்ற நிகழ்ச்சிகளில் உறுப்பினரனைவருக்கும் ஒத்த வாய்ப்பு உண்டு. ஓர் உறுப் பினருக்கு ஒரு வாக்கு என்ற விதி மேற்கூறிய நிருவாக முறைக்கு ஆணிவேராக அமைகிறது: பிரமத கூட்டுறவுச் சங்கங்களில் ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற விதி தவறுது கடைப்பிடிக்கப் படவேண்டுமென்பதை 1966ஆம் ஆண்டறிக்கை அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியம் வற்புறுத்தியுள்ளது.

மிகப்பெரிய சங்கமாக வளர்ந்து பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களைக்கொண்ட கூட்டுறவுகளில் மேற்கூறிய மக்க ளாட்சி முறையை நடைமுறையில் கடைப்பிடிப்பது எளிதன்று. ஆகவே, மாபெரும் சங்கங்களில் பிரதிநிதித்துவப் பேரவை (Representative General body) அமைக்கப்பட்டு அது பேரவையின் செயற்கடமைகளை மேற்கொள்ளுகிறது. தனி நபர் உறுப்பினர்கள் நேரடியாக நிருவாகக் குழுவினரை நியமிப்பதில்லை; உறுப் பினர்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துப் பிரதிநிதிகள் நிருவாகக் குழுவினரைத் தேர்ந்தெடுக்கின்றனர். இதனுல் உறுப்பினர் களுக்கும் நிருவாகத்தினருக்குமிடையே நெருக்கம் குறைந்து ஒருவரைப்பற்றி ஒருவர் அறிந்திருக்கும் வாய்ப்பும் குறைந்து போகின்றது. இருப்பினும், நேரடியாக மக்களாட்சி முறை கடைப்பிடிக்க இயலாவிடத்து மறைமுகமாக மக்களாட்சி முறை மேற்கொள்ளப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டிணைப்பாகவும், ஒன்றியங்க ளாகவும் செயல்படும் இரண்டாம் நிலையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலும் மக்களாட்சி முறை நிருவாகம் மேற்கொள்ளப்பட வேண்டும். இரண்டாம் நிலை சங்க உறுப்பினர்களனைவருக்கும் சம உரிமைகளுண்டு. இங்கும் உறுப்பினர்களுக்குத் தலைக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் வாக்குரிமை வழங்குவது நியாயமே. ஆனுல், சில உறுப்பினர் சங்கங்கள் சிறியனவாகவும் சில பெரியன வாகவும் இருக்கலாம். அந் நிலையில் உறுப்பினர் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கையையொட்டி வாக்குரிமை நிருணயிக்கப்

படுவதுமுண்டு. சில சங்கங்களில் உறுப்பினர் சங்கங்கள் கொடுத்துள்ள மூலதனத்தின் அடிப்படையில் வாக்குரிமை அமைவதுண்டு. இஃதும் உறுப்பினர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட முறையின் பிறிதோர் வடிவமேயாகும். ஏனெனின், மூலதனத்தினளவு உறுப்பினர் எண்ணிக்கையின் அடிப்படையில் அமைகின்றது. மற்றுஞ்சில சங்கங்களில்—குறிப்பாக உற்பத்தியாளர் சங்கங்களில், சங்கங்கள் எந்த அளவுக்குத் தமது உற்பத்திப் பொருளை மேல் நிலையிலுள்ள சங்கத்திற்கு விற்றன அல்லது அதன்வழி சந்தையிடுகை செய்தன என்று கணக்கிட்டு அந்த அடிப்படையில் வாக்குரிமை நிருணயிக்கப்படுதலுமுண்டு. எந்த அடிப்படையில் வாக்குரிமை அமைந்தாலும், எவ்வளவு பெரிய கூட்டுறவுக்கும் வரம்பற்ற வாக்குரிமை அளிக்கப்படுவதில்லை.

வளர்ச்சியுற்றுவரும் பல நாடுகளில் கூட்டுறவுச் சங்கங்களை நிருவாகம் செய்யத் தேவைப்படும் திறன் சங்க உறுப்பினர்களுக்குப் போதிய அளவுக்கு இல்லை என்று பட்டால், அச் சங்கங்களின் நிருவாகத்தினர் வெளியார் உதவியை நாடவேண்டி வருகிறது. அங்ஙனம் செய்யாவிடில் கூட்டுறவு வளர்ச்சி தடைப்படும். வெளியுதவி, பெரும்பாலும் அரசாங்கம் அல்லது கூட்டுறவுத் தத்துவங்கள்மீது பரிவுகொண்ட நபர்கள், நிலையங்கள் அளித்து வரக்கூடும். கூட்டுறவு இயக்கம் விரைவாக, உறுதியாக வளர அரசாங்கத்தின் நிதியுதவி கணிசமான அளவிற்குத் தேவைப்படுகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. மூலதனத்தில் பெருமளவு பங்கு எடுத்தல், கடன்கள் வழங்குதல், கடன்களுக்குப் பொறுப்புறுதியளித்தல் போன்ற வழிகளில் அரசாங்கம் கூட்டுறவுகளுக்கு உதவி வழங்கினுல், அவ்வுதவி சரிவர பயன்படுத்தப் பட்டதா என்று கண்டறிய உதவிபெறும் சங்க நிருவாகக் குழுவில் அரசின் பிரதிநிதிகள் இடம்பெற கோரிக்கை எழலாம். அரசினரின் பிரதிநிதி, தேவைப்பட்ட காலத்திற்குமேல் ஒரு நாள்கூட நிருவாகக் குழுவில் இடம்பெறவேண்டுவதில்லை. தம்முடைய சங்கத்தின் நடப்புப் பற்றிய முடிவுகளை உறுப்பினர்களே, வெளியார் தலையீடின்றி, எடுப்பது மிகவும் இன்றியமையாதது. தன்னுட்சி உரிமை (Autonomy) என்பது மக்களாட்சி முறையின் இயல்பான விளைவு. விரைவாக மாறிவரும் உலக மக்களாட்சி முறையில் அதில் பற்றுள்ளவர்கள் காலத்திற்கேற்ற விரைவுடன் செயல்படவேண்டும்.

முதல்மீது வட்டி (Interest on Capital)

கூட்டுறவில் முதல் முதன்மையானதாகக் கருதப்படுவதில்லை. மனிதனுக்கு, மனிதப் பண்புக்கு மட்டுமே முதலிடமுண்டு.

எனினும், முதல் இல்லாது தொழில் ஏதும் நடத்த இயலாது. பிறவகைத் தொழிலமைப்புகளில் முதல் தலைமை நிலைமை வகிக்கின்றது. ஆனால், கூட்டுறவு நிலையங்களில் முதல் ஒரு பணியாளைப் போன்று கருதப்படுகின்றது. சமுதாயத்தில் காணப்படும் பலவகை அநீதிகளுக்கு முதல் காரணமாக அமைகின்றது எனக் கருதப்படுவதால், அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து அதை மனிதனின் பணியாளாகப் பாவிப்பதே சரி என்று கூட்டுறவாளர் எண்ணுகின்றனர். துவக்க காலத்தில் கூட்டுறவுச் சங்கத்தில் எடுத்துக்கொள்ளப்படும் பங்குகள்மீது வட்டியேதும் அளிக்காதிருப்பதே சாலச்சிறந்தது என்று முன்னோடிகள் கருதினர். ஆனால், வட்டி ஏதும் தராவிடில் முதல்தொகையை ஈர்ப்பது அரிது என்பது விரைவில் புலனாயிற்று. முதல், உற்பத்திக்குத் தேவைப்படும் இன்றியமையாத கருவிகளுள் ஒன்று; பிற உற்பத்திக்காரணிகளுக்குத் தக்க ஊதியம் அளிப்பது போன்று முதலுக்கும் நியாயமான ஊதியம் தரப்படவேண்டும். இச் செய்தியைப் பற்றிப் பேசுகையில் பேராசிரியர் டி. ஜி. கார்வே 'உறுப்பினர் அல்லது உறுப்பினரல்லாத பிறரிடமிருந்து ஒரு கூட்டுறவு முதல் திரட்டினால் அதன்மீது நியாயமான ஒரு வட்டியை அளிப்பது நியாயமானது; இதனால் கூட்டுறவுப் பண்பு ஏதும் விட்டுக்கொடுக்கப்பட்டதாக ஆகாது' என்று குறிப்பிட்டுள்ளார். முதல் மேலும் மேலும் தேவைப்படும் இன்றைய நிலையில், கூட்டுறவுகள் தமக்குத் தேவைப்படும் நிதியை இதுபோன்ற இயல்பான முறையில் திரட்டுவதை மேற்கொள்ளவேண்டும்.

இலாப நோக்கின்றிச் செயல்படுவது கூட்டுறவு நிலையங்களின் சிறப்புக் கூறுகளில் ஒன்றாகும், வரம்புக்குட்பட்ட ஒரு வட்டி விகிதத்தை முதல் மீது அளிப்பது இலாப நோக்கின்றிச் செயல்படும் தன்மையைப் பாதுகாப்பதாகும். இலாப நோக்குள்ள பிற அமைப்புகளில் முதலைப் பயன்படுத்தி எவ்வளவு மிகுதியான இலாபம் ஈட்ட முடியுமோ அவ்வளவு ஈட்டுவது நோக்கமாக இருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. மற்றும், இலாப அளவையொட்டி முதல் மீது, வரையறையேதுமின்றி ஆதாயப் பங்கு (dividend) வழங்கப்படுதலையும் கூட்டுறவல்லாத பிறவகைத் தொழிலமைப்புகளில் காணலாம். ஆனால், கூட்டுறவில் முதலின் ஆதிக்கம் குறைந்து அதன் சேவைத் தன்மையே பெரிதாகக் கருதப்படுகிறது. அது வரம்பிற்குட்பட்ட ஒரே அளவு 'கூலி' பெற்றுக்கொண்டு மனநிறைவு அடையவேண்டும். கூட்டுறவாளர்களில் பெரும்பாலோர் வரையறைக்குட்பட்ட வட்டியென்றாலும் அவ் வட்டி அவசியம் முதல் மீது செலுத்தப்படவேண்டுமென்று கருதுகின்றனர், ஆனால். முதல் மீது கட்டாயம்

வட்டி செலுத்தப்படவேண்டும் என்ற ஒரு கூட்டுறவுத் தத்துவ மேதுமில்லை. அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியக் (1966) குழு இது பற்றிக் கூறியுள்ளது. 'வட்டி கட்டாயம் செலுத்தப்பட வேண்டுமென்ற கூட்டுறவுத் தத்துவம் ஏதுமில்லை; பங்கு முதல் மீது வட்டியேதும் செலுத்தப்படுமேயானால் அவ் விகிதம் வரம்பிற் குட்பட்ட நிலையான விகிதமாக இருத்தல்வேண்டும் என்பதே தத்துவம்.'

மிர்தா குழுவினர் (1965), முதல் மீது வரம்புக்குட்பட்ட வட்டி என்னும் தத்துவத்தை விளக்கிப் பேசுகையில், இத் தத்துவம் கூட்டுறவுக் கருத்தியற் கொள்கையின் அடிப்படைக் கூறு ஒன்றினை விளக்குவதாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர். பொருளாதார நடப்பில் வரும் ஆற்றல்மிக்க உட்கூறாக விளக்கும் இலாப நோக்கத்தைத் தவிர்த்து, முதல் உடைமையால் ஏற்படக் கூடிய ஏற்றத் தாழ்வுகளைச் சமநிலைப்படுத்த முயல்வது கூட்டுறவு இயக்கமாகும். முதல் மீது தரப்படும் ஆதாயம் குறிப்பிட்ட ஒரு நிலையான அளவுக்கு மேற்படாமல் வைத்திருப் பதன் நோக்கம், மிகுதித் தொகையனைத்தும் சங்கத்திடம் தங்கிவிடுவதால் சங்கத்தின் பேரவை செய்யும் முடிவுப்படி அதைப் பகிர்ந்தளிக்கலாம். வாடிக்கையாதரவுக்குத் தக்க விகிதத்தில் பணம் மீட்டடை (refund) செய்ய வகை செய்து, பொருளாதாரச் சமத்துவத்தை வளர்க்க முதல்மீது வரம்புக்குட் பட்ட வட்டி என்னும் தத்துவம் உதவுகிறது. முதல்மீது அளிக்கப்படும் ஆதாயம் வரம்பேதுமின்றியிருப்பின், கம்பெனி அமைப்புகளில் பங்குநருக்குப் பங்கு முதல் அடிப்படையில் ஆதாயம் வழங்கப்படுவது போன்று கூட்டுறவு நிலையங்களிலும் வழங்கப்படும்; ஈட்டப்பெற்ற மிகுதித் தொகைக்கும் சங்கத்தைப் பயன்படுத்திய அளவுக்கும் தொடர்பேதுமில்லாது போகும். சுருங்கக் கூறின், முதல்மீது நியாயமான விகிதத்திற்கு மேற் படாத வட்டி வழங்கப்படுவது நல்லதொரு கூட்டுறவுத் தத்துவ மாகும்.

மிகைத்தொகைப் பகிர்வுமுறை (Distribution of Surplus)

ராக்டேல் முன்னோடிகள் கண்டுபிடித்த சிறப்பான தனித் தன்மை வாய்ந்த தத்துவம் மிகைத் தொகையை உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கை அடிப்படையில் பகிர்ந்தளிப்பதாகும். ராக்டேல் கூட்டுறவு முறையின் சாரமென இத் தத்துவம் கருதப் படுகிறது. இதனைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப்பெரும்

கண்டுபிடிப்பு என்று அந் நாளைய இங்கிலாந்து பிரதமர் வில்லியம் கிளாட்ஸ்டன் கூறினர்.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் மிகைத்தொகை முதலாளிகளுக்குப் போய்ச் சேருகிறது; சமதரும அமைப்பில் மிகைத்தொகை யனைத்தும் நாட்டிற்கே சொந்தம் என்று கருதப் படுகிறது. கூட்டுறவுக் கருத்துப் போக்கின்படி, சங்க நடவடிக்கை களால் மிகைத்தொகை ஈட்டப்பட்டால் அது அச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கே உரியதாகும். முதலுக்கு முதன்மையிடம் தராது மனிதப் பண்பிற்கே கூட்டுறவு முக்கியத்துவம் தருவதை இந்தத் தத்துவமும் விளக்குகின்றது. கூட்டுறவின் நடப்பில் உறுப்பினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் மிகைத்தொகைப் பகிர்ந்தளிக்கப்படுகிறது, தனி நபர் தனது சங்கத்தின் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்வதை ஊக்குவிக் கின்றது. முதலின் உரிமையாளர் ஒரு சிலருக்கே ஆதாயம் போய்ச் சேருவது தவிர்க்கப்பட்டு, பெரும் எண்ணிக்கை உறுப்பினர்களுக்கு அது கிடைப்பது செல்வம் பரவலாகப் பகிர்ந்தளிக்கும் கொள்கைக்குச் சாதமாக அமைகிறது.

கூட்டுறவுச் சங்கமென்பது தாமே விரும்பி உறுப்பினர்களாகச் சேர்ந்த நபர்களின் ஓர் அமைப்பு; அது தன்னுடைய உறுப்பினர் கட்குச் சேவை செய்யும் பொருட்டே இயங்கி வருகின்றது. உறுப்பினர்கள் சங்கத்திடம் பற்றுறுதி கொண்டிருக்கவேண்டும்; சங்கம் உறுப்பினர்களிடம் பற்றுறுதிகொண்டு திகழவேண்டும். இதற்கெல்லாம் உறுதுணையாக விளங்குவதே வாடிக்கையாதரவு மீட்டடை (Patronage refund) என்ற தத்துவமாகும்.

மிகைத்தொகையை எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதில் இருவகைக் கருத்துகள் நிலவிவருகின்றன. உறுப்பினர்கள் வாங்கியுள்ள பொருள்களின் மொத்த மதிப்பையொட்டி இலாபம் பகிர்வு செய்யப்பட்டால், மிகுந்த அளவு வருமானம் ஈட்டும் பகுதியினரே நலம் பெறுவர். ஆகையால் இம் முறையைச் சோவி யத் கூட்டுறவாளர்கள் ஏற்கவில்லை. சோவியத் நாட்டில் மிகைத் தொகையைப் பங்குவிகித அடிப்படையில் பகிர்வு செய்கின்றனர்; அந் நாட்டில், ஒரு நபர் ஒரு பங்குமட்டுமே எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதும் நினைவிலிருத்தத்தக்கது. இதன் காரண மாகப் பெருமளவு வருமானமுள்ள பிரிவைச் சேர்ந்தவராயினுஞ் சரி, சிறு வருமானமுள்ள பிரிவைச் சேர்ந்தவராயினுஞ்சரி. உறுப்பினரனைவரும் ஒரே அளவு ஆதாயப் பங்கு பெறுகின்றனர்.

அமெரிக்க நாட்டுக் கூட்டுறவாளர்கள், கூட்டுறவுச் சங்கத்தில் மிகுந்து நிற்கும் தொகையைச் சேமிப்பு என்று கூறுகின்றனர். கூட்டுறவுச் சங்கம் அளிக்கும் எச் சேவையும் அச் சேவைக்காகும் செலவை மட்டுமே ஈடுகட்டும் வகையில் அமைவதால், பொதுவாகக் கூட்டுறவு நடவடிக்கை எதனிலும் மிகைத்தொகை நிற்பது அரிது. எனினும், மிகுதியாக நிற்கும் தொகையை உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கையளவு விகிதத்தில் பகிர்ந்து மேற்கொள்ளும் முறையே அங்குக் காணப்படுகிறது.

மிகைத்தொகையை எங்ஙனம் பகிர்வது என்பது பற்றிய முடிவை உறுப்பினர்கள் எடுப்பர். ஓர் உறுப்பினருக்கு ஏற்படக் கூடிய நட்டத்தால் பிறிதோர் உறுப்பினர் ஆதாயம் பெறும் வகையில் மிகைத்தொகைப் பகிர்ந்தளிக்கப்படலாகாது. கூட்டுறவின் தொழில் வளர்ச்சிக்கு வகைசெய்தல், பொதுவான பணிகளுக்கு வகைசெய்தல், சங்கத்துடன் உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் விகிதத்தில் பகிர்ந்து கொள்ளல் என்பன போன்ற வழிகளில் மிகைத் தொகையைப் பயன்படுத்த உறுப்பினர்கள் முடிவுசெய்யலாம்.

கூட்டுறவுக் கல்வி (Co-operative Education)

கூட்டுறவுத் துறையில் பெருந்தலைவர்களாக இருந்தவர்கள் கல்வித் துறையிலும் புகழ் பெற்றவர்களாக இருந்து வந்ததில் வியப்பேதுமில்லை. பொருளாதார முறையைக் கூட்டுறவுத் தத்துவங்களின் அடிப்படையில் அமைப்பதற்குப் பெருமுயற்சி தேவைப்படுகிறது. கூட்டுறவு முறையை மேற்கொள்ள விரும்புவோர் புதிய கருத்துகளை ஏற்றுக்கொள்ளும் பண்புடையவர்களாக இருத்தல்வேண்டும். மற்றும் கூட்டுறவு முறையில் பொதிந்து கிடக்கும் உயர்ந்த பண்புநலன்களைக் கடைப்பிடிக்க புதியதொரு உளப்பாங்கும் பண்பாடுமிக்க நடத்தையும் தன்னடக்கமும் உறுப்பினர்களிடையே பெரிதும் தேவைப்படுகிறது. ஒழுங்கு, கட்டுப்பாடு, பொதுநலனைப் பெரிதாகக் கருதி தன்னலத்தை அடக்கும் பாங்கு போன்ற குணநலன்கள் உறுப்பினர்களிடையே வளரவேண்டும். இவற்றிற்கு உறுதுணையாக விளங்குவது உறுப்பினர் கல்வி. எந்த ஒரு கூட்டுறவு நிலையமும் வாழ, தழைத்து வளரத் தன் உறுப்பினர்களுக்குத் தக்க முறையில் கல்விபெற ஏற்பாடு செய்வது அவசியம். கல்வி என்பது பள்ளிகளில் கற்பிக்கப்படும் கல்வியை மட்டும் சுட்டாது; வேறு பல நிலைகளில் பெறும் அறிவினை வளர்க்கும், செய்திறனைச் சீர்படுத்தும், மனப்பாங்கை விரிவுபடுத்தும் அனுபவங்களும் கல்வி என்ற சொல்லில் அடங்கும்.

கூட்டுறவுக் கல்வி வளர்ச்சி ஒரு முக்கியக் கூட்டுறவு தத்துவமாக ராக்டேல் முன்னோடிகள் காலத்திலிருந்து கருதப் பட்டு வருகிறது. மிகைத்தொகையில் இரண்டரை விழுக்காடு (2½%) கல்விக்காக ஒதுக்கப்படவேண்டுமென்று 1853ஆம் ஆண்டில் செய்த ராக்டேல் சங்க விதிகள் கூறுகின்றன. கூட்டுறவு இயக்கம் உறுதியாக வளர்ந்து வெற்றியுடன் இயங்க உறுப்பினர்கள் அறிவாற்றல் மிக்கவர்களாக இருத்தல் அவசியம். உறுப்பினர்களை அறிவாற்றல் மிக்கவர்களாக ஆக்கும் திறன் கூட்டுறவுக் கல்விக்கே உண்டு. உண்மையிலேயே ஓர் அமைப்புக் கூட்டுறவாக இருக்க, அதன் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுறவுத் தத்துவங்களை நன்கு அறிந்திருத்தல் அவசியம். இதை நன்குணர்ந்த பேராசிரியர் டி. ஜி. கார்வே கூறியுள்ளதாவது: ‘கூட்டுறவுத் தொடர்ந்து வாழ விரும்பும் எந்தக் கூட்டுறவாளரும், கூட்டுறவு நிலையமும், கூட்டுறவுக் கல்வியின் எந்தப் பகுதியையும் புறக்கணிக்கலாகாது மக்களனைவருக்கும் கூட்டுறவின் பொருளைப் பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் கல்வி; உறுப்பினர்களுக்குச் சங்கத்திற்கேற்ற கூட்டுறவு–தொழில் செயல்முறை பற்றிய கல்வி; கூட்டுறவு நிறுவனங்களிலுள்ள நிருவாகர், மேலாளர், பிற பணியருக்குத் தத்தம் தொழிலைச் சார்ந்த நுண்நயத் திறம் பற்றிய கல்வி. ஒவ்வொரு கூட்டுறவும் இத்தனை வகைக் கல்விக்கும் ஏற்பாடு செய்யமுடியும் என்பதில்லை. ஆனால், எல்லாக் கூட்டுறவுகளும் இவ்வகைக் கல்வி புகட்டுவதில் ஈடுபாடு கொள்ளவேண்டும்; தக்க நிதிவசதியினையும் பிற வசதிகளையும் செய்து தரவும் வேண்டும்.’

மிர்தா குழுவினரும் கல்வி வளர்ச்சியைக் கூட்டுறவு இயக்கத்தின் ஓர் அடிப்படைத் தத்துவமெனக் கருதினர். ஒவ்வொரு சங்கமும் கல்வி வளர்ச்சிக்கு நிதிவழங்குதல் மட்டு மின்றிக் கூட்டுறவுக் கருத்துகளைப் பரப்ப செயல் திறனுள்ள திட்டத்தை மேற்கொள்ளவேண்டும்; கிராமப்புறங்கள் பொது எழுத்தறிவு பரப்புவதிலும் அக்கறை காட்டவேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளனர்.

அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியத்தின் 1937ஆம் ஆண்டுக் குழு (Committee of ICA, 1937) கல்வி வளர்ச்சியை இரண்டாம் நிலையிலுள்ள தத்துவமாகக் கருதியது. ஆனால், 1966 ஆம் ஆண்டுக் குழு கூட்டுறவுக் கல்வி வளர்ச்சிக்கு அதற்குரித்தான சிறப்புமிக்க முதல் இடத்தை நல்கி, கல்வியை ஒரு முதன் நிலை தத்துவமாக ஏற்றுக்கொண்டது. கூட்டுறவில் தொடர்புள்ள எல்லோரும் கல்வியிலும், மறுகல்வி (re-education)

யிலும் பெரும் பங்கேற்கவேண்டும் என்று குழுவினர் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த வரையில் அதன்மீது அனைத்து அதிகாரங்களையும் செலுத்தும் உரிமையுள்ளவர்கள் அதன் உறுப்பினர்களாவர். அவ்வுறுப்பினர்களின் நலனைப் பெருக்கவே கூட்டுறவு அமைக்கப்பெறுகிறது. ஆகவே, உறுப்பினர்கள் கூட்டுறவுக் கல்வி பெற்றிருத்தல் மிகவும் இன்றியமையாததாகின்றது. அடுத்து நிருவாகத்தில் பதவி வகிக்கும் நபர்கள் இவர்களில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருப்பின் தொழில் நுணுக்கம் பற்றிய அறிவு தரும் கல்வியும், வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிறப்புத் தேர்ச்சிப் பெற்றவர்களாக இருப்பின் நுண்கலைப் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் தொழில்முறைப் பயிற்சியும் பெறுவது அவசியம். மூன்றாவதாக, இயக்கத்திற்கு வெளியிலுள்ள பொதுமக்கள் கூட்டுறவின் நோக்கம், அமைப்பு, செயல்முறை, சாதனை, எதிர்காலத் திட்டங்கள் போன்ற செய்திகள் குறித்து உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள கல்வி ஏற்பாடுகள் தேவை. கூட்டுறவுக் கருத்துகளைப் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ள நடத்தப்படும் போர் பொருளாதாரக் களத்தில் மட்டுமல்லாது அறிவுக் களத்திலும் அமையவேண்டும்.

கல்வி என்ற தத்துவத்தைக் கொண்டுதான் பிற கூட்டுறவுத் தத்துவங்களைக் கடைப்பிடிக்க முடியும். கூட்டுறவுத் தத்துவங்கள் வெறும் வாய்பாடு அல்லது சூத்திரமாகாது; விதிமுறைகள் கொண்ட ஏடும் ஆகாது; அவற்றை உள்ள முறையிலேயே விளக்கிச் சொல்லுவதும் எளிதல்ல. இத் தத்துவங்கள் கூட்டுறவின் உயிர் நாடியாகும். இந்த உயிர்நாடியை ஒவ்வொரு புதிய தலைமுறையினருக்கும் அளிக்கையும் அது புதுமையும் எழுச்சியும் பெற வேண்டும். கூட்டுறவுக் கல்வி என்ற சுடரை ஒவ்வொரு தலைமுறையினரும் உன்னிப்பாக, உறுதியாகப் பாதுகாத்து, ஒளி மிளிரச் செய்தால்தான் இயக்கம் எழுச்சியும் புதுமையும் பெற்று விளங்கும்.

கூட்டுறவுகளிடையே கூட்டுறவு
(Co-operation Among Co-operatives)

கூட்டுறவு நிலையங்களுக்கிடையே கூட்டுறவு என்ற ஒரு புதிய தத்துவத்தை அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியப்பின் 1966ஆம் ஆண்டுக் குழு சமைத்துத் தந்துள்ளது. இத் தத்துவத்தின் கருத்து எந்த ஒரு கூட்டுறவு நிலையமும், பிற அனைத்து நாட்டு, நாட்டளவு, உள்ளூர் கூட்டுறவு நிலையங்களுடன் எவ்வகைகளிலெல்லாம் கூடிச்

செயல்பட முடியுமோ அவ் வகைகளில் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்பதாகும். இத் தத்துவத்தை ஒருவருக்கொருவர் நிலை அல்லது பரஸ்பரத்தன்மை (Mutuality) என்றும், வளர்ச்சித் தத்துவங்கள் (Principles of Growth) என்றும் கூறுவதுண்டு.

தற்கால உலகில் பொருளாதாரத் துறையில் காணக்கிடப்பது பெருந்தொழில் நிலையங்களும் பேரளவு உற்பத்தியுமாகும். வளர்ந்துவரும் தொழில்நுட்ப, அறிவியல் முன்னேற்றங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முதலாளிகளும் அரசினரும் உலகெங்கும் மாபெரும் நிறுவனங்களை ஏற்படுத்தி வருகின்றனர். பெரும் நிறுவனங்கள் கூடி இணைந்து மாபெரும் நிறுவனங்கள் உருவாகின்றன. நாட்டளவு கூட்டுருக்கள் மேலும் வளர்ந்து பல நாட்டுக் கூட்டுருக்கள் (Multi-National Corporation) என்ற புதிய அமைப்புகள் தோன்றி வருவதையும் காண்கின்றோம். பிற தொழிலமைப்புகளில் காணப்படும் இவ் வளர்ச்சி கூட்டுறவு அமைப்புகளிலும் ஏற்பட ஏதுவாகக் 'கூட்டுறவுகளிடையே கூட்டுறவு' என்னும் தத்துவம் உருவாக்கப் பெற்றுள்ளது. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு,' 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற கொள்கைக் குரல் எழுப்பப்பட்ட போதிலும் கூட்டுறவு நிலையங்களிடையே கூட்டுறவை உள்ளூர் அளவில்கூட காண்பது அரிதாக உள்ளது. உள்ளூர்க் கூட்டுறவு கள் மாநில, நாட்டளவு கூட்டுறவுகளுடன் கூடிச் செயல் படுவதும் குறைவாக உள்ளது. தனியார் துறையிலும் பொதுத் துறையிலுமுள்ள நன்கு செயலாற்றிவரும் நிறுவனங்களுடன் கூட்டுறவு நிறுவனங்கள் போட்டியிடவேண்டுமானால் அவை திறம்பட இயங்கவேண்டும். திறம்பட இயங்க உலகிலுள்ள கூட்டுறவுகளனைத்தும் ஒன்றுபட்டுச் செயல்படுதல் அவசியம்.

கூட்டுறவு நிறுவனங்கள் அளவிலும், நோக்கத்திலும், வளர்ச் சித் திறனிலும் சிறியதாக அல்லது குறுகியதாக இல்லாமல் பிற துறைகளில் காணப்படும் நிறுவனங்கள் போன்று பெருகி வளர வகை செய்வது இத் தத்துவம். கூட்டுறவுத் துறை பொருளா தாரம் உறுதியுடன் வளர இத் தத்துவம் வழிவகுக்கின்றது. தன்னுரிமை, தன்னாட்சி என்ற பெயரில் பிற கூட்டுறவுகளுடன் இணைந்து செயல்படாத சில சங்கங்களுக்கு அறிவுரை வழங்குவது போன்று இத் தத்துவம் அமைந்துள்ளது. டாக்டர் A. F. லேய்ட்லா, கூட்டுறவுகளிடையே கூட்டுறவு என்ற புதுத் தத்து வத்தைக் கூட்டுறவின் வளர்ச்சிக்கு ஆதாரமாகக் கருதுகிறார். உலகக் கூட்டுறவாளர்களில் ஒருவரான செல்வி மார்கரெட் டிக்பி (Miss. Margaret Digby), 'தற்கால உலகில் காணப்படும்

பொருளாதார நிருவாக நிலையைப் புரிந்துகொண்டதையே கூட்டுறவுகளிடையே இணைந்து செயல்படும் பாங்கு வளரவேண்டு மென்ற கூக்குரல் தெளிவுபடுத்துகின்றது' என்று குறிப்பிட்டுள் ளார். பொருளாதாரத் துறையில் கூட்டுறவு தனது பங்கை பெருக்கிக் கொள்ள, அல்லது தனக்குள்ள பங்கை இருத்திக் கொள்ளவும்கூட, கூட்டுறவுகள் தமக்கிடையே இணைந்து செயல் படுதல் மிகவும் வேண்டற்பாலது. கூட்டுறவுத் தத்துவப்பட்டிய லில் இப் புதிய தத்துவத்தைத் தக்க தருணத்திலே அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றிப்புச் சேர்த்துள்ளது என்றே கூற வேண்டும்.

பேராசிரியர் டி. ஜி. கார்வே கூட்டுறவுத் தத்துவங்களைத் திருத்திச் சமைத்ததை ஐந்தாம் இந்தியக் கூட்டுறவு மாநாட்டில் குறிப்பிட்டுப் பேசுகையில் 'கூட்டுறவுக் கட்டொருமைப்பாடு' (Co-operative solidarity), கூட்டுறவுகளிடையே கூட்டுறவு ஏன் புதியதொரு தத்துவமாகச் சேர்க்கப்பட்டது என்று விளக்கினர். கூட்டுறவுகள் துவக்க நிலையில் பற்பல இன்னல்களால் அவதியுறும் போது அனைவரையும் வருக வருக என்றழைத்து உறுப்பினர்களைச் சேர்த்து வளர்ச்சிப் பாதையில் செல்ல முயலுகின்றன. சிறிது காலங்கழித்து நிலை திடமானபின் தாம் தனித்தியங்க விரும்பு கின்றன. பிற கூட்டுறவுகளுடன் ஒத்துழைப்பதில் அக்கறை காட்டுவதில்லை. இந்த நிலை வளர்ச்சியுற்ற நாடுகளிலும், வளர்ந்து வரும் நாடுகளிலும் காணப்படுகின்றன. அனைத்து நாட்டு அளவில் கூட்டுருக்கள் உருவாகிக் கடும் போட்டியில் இறங்கும்போது தனித்தியங்கும் சிறு கூட்டுறவு நிறுவனங்கள் எங்ஙனம் அவற்றை எதிர்த்து நிற்க இயலும்? எனவே கூட்டுறவு கள் வளர, வாழ ஒன்றுபட்டு ஒன்றுக்கொன்று பேரளவு உதவிக் கொள்ளவேண்டும். இந்தக் கூற்று நாட்டளவிலுள்ள கூட்டுறவு இயக்கத்திற்கும், நாட்டிற்குள் உள்ள கூட்டுறவுகளுக்கும், அனைத்து நாடுகளிலுள்ள கூட்டுறவுகளுக்கும், சாலப் பொருந்தும். உலகிலுள்ள கூட்டுறவாளர்களனைவரும் ஒன்றுகூடி, கூட்டுறவின் வளர்ச்சிக்கும் திறமைக்கும் பாடுபட தம்மை அர்ப்பணித்துக் கொள்ளத் தவறினல் வேறு சக்திகள் கூட்டுறவை அழித்து அகற்றிவிடும். ஆகவே, அனைவரும் எவ்வித தயக்கமுமின்றிக் கூட்டுறவுகளிடையே கூட்டுறவு என்ற தத்துவத்தை முழு மனத் துடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மேற்கண்ட தத்துவங்களே அனைத்து நாட்டளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, 1966 ஆம் ஆண்டு அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியத்தின் 'கூட்டுறவுத் தத்துவங்களைத் திருத்தியமைக்கும்

குழு'வினர் தந்தக் கூட்டுறவுத் தத்துவங்களாகும். இவையன்றி, உலகில் பல நாடுகளில் மேலும் பல கூட்டுறவுத் தத்துவங்களேயும் கடைப்பிடித்தும் ஏற்றுக்கொண்டும் கூட்டுறவு இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அத் தத்துவங்களேச் சுருக்கமாகக் காண்போம்.

அரசியல்—சமயச் சார்பின்மை
(Political and Religious Neutrality)

உறுப்பினர்களின் பொருளாதார நலன்களே மேம்படுத்தும் பொருட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கப்பெறுகின்றன. அவர்களுக்குச் சங்கம் ஓர் அரசியல் அல்லது சமய மேடையாகப் பயன்பட அது துவங்கப்படுவதில்லே. கூட்டுறவு ஒரு பொருளாதார அமைப்பு. அரசியல் அல்லது சமய நம்பிக்கை அடிப்படையில் உறுப்பினர்களுக்கிடையே வேறுபாடுகள் காட்டப்படக்கூடாது. அந்த அடிப்படையில் எவரும் உறுப்பினராகச் சேரத் தடையேதுமிருப்பதுங்கூடாது. உறுப்பினர் தமது அரசியல் அல்லது சமய நம்பிக்கை பற்றிக் குறிப்பிட்ட கொள்கையை ஒப்பவேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. சங்கம் அரசியல், சமயக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டது. சங்க உறுப்பினர்கள் அவரவர் விருப்பப்படி எந்த அரசியல் கட்சியையோ அல்லது சமயத்தையோ சார்ந்தவராக இருக்கலாம்.

கூட்டுறவு இயக்கத்தில்—நாட்டளவிலும் அனேத்து நாட்டளவிலும் சார்பின்மை என்றதத்துவம் எப்படிப் புரிந்து கொள்ளப்படுதல்வேண்டுமென 1937ஆம் ஆண்டுக் குழு விளக்கியது. அரசியல், சமயம், இனம், நாட்டினம் (Nationality) ஆகியவை குறித்துச் சார்பற்ற நிலேயைக்கொண்டது இக் கூட்டுறவு என அதன் விதிகளிலும், ஆவணங்களிலும் ஐயந்திரிபற அறிவிக்க வேண்டும், கூட்டுறவு அரசியல் சார்பற்றது என்ற காரணத்தால் கூட்டுறவாளர்கள் சட்டமன்றங்களில் கூட்டுறவு இயக்கத்தின் நலன்களேப் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள் என்று கொள்வது தவறு; குறிப்பிட்ட ஒரு சாரார் அல்லது கட்சியோடு சாராது தனித்தியங்கும் கூட்டுறவு இயக்கத்தைக் காத்துப் போராட எவரும் தயக்கமின்றி முன்வரலாம். இவ்வளவு சிறப்பு வாய்ந்த 'சார்பின்மை' என்ற தத்துவத்தை 1937இல் பாரிசு நகரில் கூடிய அனேத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியம் முக்கியமற்ற ஒரு தத்துவமென்று முடிவு செய்தது. இதற்குக் காரணம் அன்றிருந்த சூழ்நிலேயில் பாசிச (Fascism) ஆட்சிக்குட்பட்ட ஐரோப்பிய நாடுகளில் உண்மையான

கூட்டுறவுகள் ஒடுக்கப்பட்டுஅரசியல் சார்புள்ள கூட்டுறவுகள் தோன்றி வந்தன; மற்றும் பொதுவுடைமை ஆணைப் பேராட்களின் (delegates) விடா முயற்சியால் பல மேலைநாட்டு ஆணைப் பேராட்களும் இதை முக்கியமற்றத் (Non-essential) தத்துவமாகக் கருதவேண்டுமென்ற போக்கை ஆதரித்தனர்.

முக்கியமற்றது என்று கருதப்பட்ட சார்பின்மை தத்துவம் நடைமுறையில் முக்கியமானதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரிட்டனில் அரசியல் சார்பின்மை என்ற தத்துவம் 1917இல் கைவிடப்பட்டு, கூட்டுறவு இயக்கம் அக் காலத்து அரசினரால் நியாயமான முறையில் நடத்தப்படாத காரணத்தால், சட்டமன்றத்திற்கு நேரடியாகப் பிரதிநிதிகளை அனுப்பி இயக்கத்தைக் காத்துக்கொள்ளுவது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. கூட்டுறவுக் கட்சி (Co-operative Party) என்ற புதியதொரு கட்சி துவங்கப்பெற்றது. இக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொழிற் கட்சி (Labour Party)யைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் சேர்ந்து செயல்பட்டனர். ஆனால், கனடா போன்ற நாடுகளில் கூட்டுறவு இயக்கம் சார்பின்மை என்ற பண்புடன் இருத்தல்வேண்டும் என்று கருதப்படுகின்றது.

அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியத்தின் 1966ஆம் ஆண்டுக் குழு சார்பின்மையை ஒரு தத்துவமெனக் கருதவில்லை. கூட்டுறவாளர்கள் அரசியல் பிரச்சினைகளிலிருந்து விலகி நிற்றல் பொது நன்மைக்காக ஒன்று சேர்ந்து செயல்படும் ஆக்க நோக்குள்ளவர்கள் என்ற பண்பை வலியுறுத்துவதாக அமையவேண்டும். சில சூழ்நிலைகளில் சார்பின்மை என்பது முறையான சரியான கொள்கையாகக் காணப்படலாம். கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிக்கு அடிப்படையாக அமையும் நோக்கம் கூட்டுறவாளர்களிடையேயான ஒற்றுமையாம். பிரதம சங்கங்கள், இரண்டாம் அடுக்கில் உள்ள சங்கங்கள், அனைத்து நாட்டுச் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் சூழ்நிலைக்குத் தக்கவாறு, இடம் நேரம் காலத்தையொட்டி அரசியல் பிரச்சினைகளை அணுகலாம். தாம் கூட்டுறவையொட்டி மேற்கொள்ளும் பணிகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தக் கூட்டு அல்லது நிகழ்ச்சியிலிருந்து விலகி நிற்கும் உரிமை கூட்டுறவாளர்களுக்குண்டு. கூட்டுறவு இயக்கத்தைப் பாதிக்காத அரசியல், மற்றும் பிற பிரச்சினைகளிலிருந்து கூட்டுறவுகள் விலகி நிற்கவேண்டும்.

ஒருவருக்கொருவர் உதவி வழி தன்னுதவி
(Self - Help Through mutual Help)

ஒருவர் எல்லோருக்கும், எல்லோரும் ஒருவருக்கும் (Each for all and all for Each) என்ற பொன்மொழி இந்தியக் கூட்டுறவு ஒன்றியம் பரப்பிவந்த செய்தியாகும். கூட்டுறவில் ஒவ்வொரு உறுப்பினரும் உழைப்பை நல்கவேண்டும். கூட்டுறவின் அடிப் படையே தன்னுதவி. பிறருடன் கைகோர்த்துச் செயல்படும் பண்பு கூட்டுறவில் பெரிதும் வற்புறுத்தப்படுகிறது. எனவேதான் பேராசிரியர் டி. ஜி. கார்வே 'தன்னுதவியும் பரஸ்பர உதவியும் கூட்டுறவின் சாரமாகும். இவையன்றி உண்மையான கூட்டுற வில்லை' என்று குறிப்பிட்டுள்ளார். அரசு அல்லது வேறு பிறரிடம் உதவி எதிர்நோக்கி, தாம் வாளா இருக்கும் மக்களுக்குக் கூட்டுறவு செய்யக்கூடியது ஏதுமில்லை. மற்றவரின் அறக்கொடைகளுக்குக் காத்திராது தன் உய்வைத் தானே முயன்று தேடிக்கொள்ளும் பண்பு கூட்டுறவாளரிடம் இருப்பது அவசியம்.

தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி என்றெல்லாம் பேசும் போது வெளியுதவியை அறவே விலக்கிவிடுவது என்று பொருள் கொள்ளுதல் தவறு. சமுதாயத்திலே பொருள் வலிமையற்ற மக்கள் தமது நிலையை மேம்படுத்திக்கொள்ள தம் வளங்களைத் திரட்டி ஒருவருக்கொருவர் நன்மைக்குப் பாடுபடுவதே கூட்டுறவு. தனி ஓர் ஆள் செய்யமுடியாததைப் பலர் சேர்ந்து செய்து முடிப் பதே கூட்டுறவின் நோக்கம். தற்காலிகமாக வெளியுதவி ஏற்றுக் கொள்ளுவதில் தவறேதுமில்லை; இருப்பினும், உறுப்பினர்களின் சொந்த முயற்சியானது வெளியுதவியைவிட பன்மடங்குப் பெரிதாக, முதலிடம் பெறுவதாக அமைதல்வேண்டும். தன்கையே தனக்குதவி என்ற அடிப்படைப் பண்பினைக் கைவிடக்கூடாது.

ரொக்க வியாபாரம் (Cash Trading)

ராக்டேல் முன்னோடிகள் (Pioneers) ரொக்கத்திற்கு மட்டுமே வியாபாரம் செய்வதை ஒரு தத்துவமாகக் கருதினர். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, குறைந்த முதல் தொகையைக் கொண்டு கடனுக்குச் சரக்கு விற்க ஆரம்பித்தால் தொழில் நடத்தச் சங்கத்திற்குப் போதிய பணம் கிடைக்காது. ஆகவே, நிதிவசதி குறைந்து நிற்கும். இரண்டாவதாக, கடன் பட்டிருப்பது ஒரு கேடான நிலையெனக் கருதப்பட்டது. கடன்பட்ட மனிதன் தன் விருப்பப்படிச் செயலாற்றும் ஆற்றலற்றவன். பாட்டாளி மக்கள் தன்னுரிமைபெற்று வாழ, கடன்படாமல்

வாழ்க்கை நடத்துவது அவசியம். மூன்ருவதாக, வருவாய்க்குள் செலவை அடக்கவேண்டியநிலை, இத் தத்துவத்தைக் கடைப்பிடிப் பவர்களுக்குத் தானே உருவாகிவிடுகிறது. இதனுல் செலவு குறைந்து, விலையும் குறைந்து வியாபாரத்தில் நட்டநிலை ஏற்படு வதும் தவிர்க்கப்படுகிறது.

ரொக்க நடவடிக்கை என்ற தத்துவம் நுகர்வோர் சங்கங் களுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனுல், கடன் வழங்கும் வங்கிகளும், நாணயச் சங்கங்களும் பெருவாரியாகச் செயல்பட்டு வரும் இன்றைய நிலையில் இத் தத்துவம் பொருந்தி வருவதாகத் தோன்றவில்லை. எனவேதான் 1937ஆம் ஆண்டுக் குழு இதனை முக்கியமற்ற தத்துவமென்று கூறுபடுத்தியது. இது நல்லதொரு வாணிகக் கொள்கை இதைக் கடைப்பிடிப்பது நன்று. இன்றும் சுவீடன், சுவிட்சர்லாந்து, பின்லாந்து போன்ற நாடுகளிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுகள் ரொக்க நடவடிக்கைகளையே மேற் கொள்ளுகின்றன.

சிக்கனம் (Thrift)

பயனற்றச் செலவுகளைத் தவிர்த்து, வரவு செலவுகளை உன்னிப் பாகக் கண்காணித்துச் செட்டாக இருந்து சேமிக்கும் பண்பைச் சிக்கனம் என்று கூறுவர். சிக்கனப் பண்பு இல்லாதோர் தமக்குத் தாமே உதவிக்கொள்ள இயலாது, பிறருக்கும் உதவ முடியாது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதல் திரட்ட உறுப்பினர்கள் சிக்கனப் பண்பைக் கடைப்பிடிக்கவேண்டும். தன்னுதவியின் அடிப்படை சிக்கனமே. தமிழ் நாட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முகப்புரை (Preamble)யில் கூட 'சிக்கனம், தன்னுதவி, பரஸ்பர உதவி ஆகிய பண்புகளை உறுப்பினர்களிடையே வளர்க்கக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது, நடத்திவருவது...' என்று கூறப்பட்டிருப்பது இத் தத்துவத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

நேர்மை நெறி (Equity)

நியாயமும் நேர்மை நெறியும் கூட்டுறவுத் தத்துவங்களில் மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. பிற பொருளாதார அமைப்புகளில் நேர்மை நெறியற்ற முறையில் உழைப்பின் பலன் ஒரு சிலருக்கே சேர்ந்து வந்தது. அம்முறை மாறி ஒவ்வொரு படியிலும் கட்டத்திலும் நியாயமும் நேர்மை நெறியும் நிலவக் கூட்டுறவு அருமருந்தென விளங்கியது. உழைப்புக்கு

நியாயமான ஊதியம், முதலுக்கு நியாயமான வட்டி வாடிக்கை யாதரவுக்கு ஏற்ப ஆதாயப் பங்கு என்று ஒவ்வொரு நிலையிலும் கூட்டுறவில் நேர்மை நெறி இடம்பெறுவதைக் காண்கிறோம்.

வெளிப்படை நிலை (Publicity)

கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் அனைத்து ஒளிவு மறை வின்றி வெளிப்படையாக மேற்கொள்ளப்படுகின்றன. உறுப்பின ரனைவருக்கும் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படவேண்டும். சங்க நடப்புப் பற்றிப் பேரவையில் முழுச் செய்தியும் கலந்துரையாடப்படுதல்வேண்டும். சங்கத்தின் கணக்கு வழக்குகளை உறுப்பினர்கள் விரும்பியபோது பார்வையிட ஏற்பாடுகள் இருத்தல்வேண்டும். முக்கியமானதொரு முடிவெடுக்கு முன்னர் உறுப்பினர்கள் அதற்கு வேண்டிய பின்னணிச் செய்திகளை அறிந்திருப்பது அவசியம். கூட்டுறவு மக்களாட்சி முறையில் செயல்படுவதால் அதன் வெற்றிக்கு அறிவாற்றல் கொண்ட உறுப்பினர்கள் தேவை. உறுப்பினர்கள் அறியாதோரா யிருப்பின் மக்களாட்சிப் பெயரளவில் மட்டுமே இருந்துவரும்.

இத் தத்துவத்துடன் ஒன்றிய மற்றொரு தத்துவம் செய்தி பரப்புதல் ஆகும். கூட்டுறவு, மக்களிடையே செல்வாக்குப் பெற, அதன் கருத்துகள் பொதுமக்களை ஈர்க்க, கூட்டுறவு பற்றிய விளம்பரம் செய்திபரப்பு மிகவும் தேவைப்படுகிறது. குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளிலே இந்தத் தத்துவம் மிகவும் முக்கியமான தாகச் செயற்படுத்தப்படுதல்வேண்டும்.

கூட்டுறவு இயக்கம் துவங்கியபோது, ஊதியம் பெறாது சங்கத்திற்குச் சேவை செய்வது ஒரு தத்துவமாகக் கருதப்பட்டது. சிறிய அளவு சங்கங்களுக்கு இதுபோதுமானதாக இருந்தது. ஊதியம் பெறாது சேவை செய்ய, இயக்கத்திற்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் பலர் இருந்த காலம் அது. இன்றைய நாளில் வியாபாரம், தொழில் முதலிய சிக்கல்கள், நுட்பங்கள் மிகுந்த துறைகளாய் வளர்ந்துள்ளன. முழு நேரமும் இவற்றைக் கவனித்து வர ஊதியம் பெறு அலுவலரால் முடியாத நிலை எங்கும் ஏற்பட்டுவிட்டது. மற்றும் சங்கங்களும் அளவில் பெரியனவாக வளர்ந்துவிட்டன. இவற்றின் காரணமாகத் தக்க துறைகளில் தேர்ச்சி பெற்ற முழுநேர நிருவாக அலுவலர்களை நல்ல ஊதியங்கொடுத்து அமர்த்தி அவர்களிடம் சங்க நிரு வாகத்தை ஒப்படைப்பது இன்று நாம் காணும் நிலை.

இங்கிலாந்தில், வாணிகத்தில் நேர்மை நெறி (honesty)யினைக் கடைப்பிடித்தல் ஒரு முக்கியத் தத்துவமாகப் பேசப்பட்டு வந்தது.

நுகர்வோர் நலனைப் பாதுகாக்க இத் தத்துவம் இன்றியமையாத தாகக் கருதப்பட்டு வந்தது. தரமான பொருள், நியாயவிலை, திறமையான சேவை என்ற பண்புகளின் இருப்பிடமாய்க் கூட்டுறவுகள் திகழவேண்டும். வாணிகத்தில் நேர்மை நெறி என்ற தத்துவம் எக் காலத்திற்கும் பொருந்தும் கூட்டுறவுத் தத்துவமென வற்புறுத்தப்பட்டது.

இங்கிலாந்தில் அமைக்கப்பெற்ற கூட்டுறவுத் தற்சார்புக் குழு (Co-operative Independent Commission), உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்களின் சுயாட்சித் தன்மை பாதுகாக்கப்படவேண்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திற்று. கூட்டுறவுகள் கூட்டாக இணைந்து பெரிய அமைப்பாகச் செயல்படும் இக் காலத்தில் மத்திய நிறுவனங்களின் முக்கியத்துவம் மிகுந்து நிற்கின்றது. ஆனால், உள்ளூர்ச் சங்கத்தைப் பொறுத்தமட்டில், உள்ளூர் மக்கள் அது தங்களுடைய சங்கம், தங்கள் ஆதரவில் வளரும் சங்கம், தங்களால் நிருவாகம் செய்யப்படும் சங்கம் என்று உணரும் வகையில் சுயாட்சிமுறை செயல்படவேண்டும். ஏதோ கண்ணுக்குப் புலப்படாத, தொலைவிலுள்ள, தங்களுக்குத் தொடர் பில்லாத ஒரு சங்கத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளுவதாக உள்ளூர் உறுப்பினர்கள் எண்ணுமளவுக்கு மைய ஆட்சி கூட்டுறவில் இருப்பது நல்லதல்ல. எனவே, ‘எங்கள் சங்கம்’ என்று உறுப்பினர்கள் சொல்லிலும் செயலிலும் உணர்விலும் கருத ஏதுவாக, உள்ளூர்ப் பெயருடன் உள்ளூர் மக்கள் நிருவாகத்தில் பங்கேற்று அவர்களுடைய மேலான ஆதரவை நம்பி நிற்கும் நிலை ஒவ்வொரு சங்கத்திலும் காணப்படவேண்டும்.

இன்றைய உலகில் நாம் காணக்கிடக்கும் பொருளாதார அமைப்புகளில் கூட்டுறவு சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருப்பதை யாவரும் அறிவர். தனியார்த் துறை, பொதுத் துறை எனப்படும் அரசு துறை, கூட்டுத் துறை (Joint Sector) எனப்படும் தனியாரும் அரசும் சேர்ந்த துறை ஆகிய துறைகளுடன் சேர்த்து எண்ணப்படுவது கூட்டுறவுத் துறை. கூட்டுறவுத் துறையை இதர மூன்று துறைகளுடன் ஒப்பு நோக்கும்போது அது பலவகைகளில் உயர்ந்து நிற்பது புலனாகும். மற்றும் மற்றத் துறைகளை நோக்குமிடத்துக் கூட்டுறவுத் துறை சிறப்பான தனித் தன்மைகளைக் கொண்டிருப்பதும் தெளிவாகத் தெரியும்.

கூட்டுறவும் முதலாளித்துவமும்

முதலாளித்துவம் தனியார்த் துறைத் தொழில் முயற்சியைக் குறிக்கும். முதல்போட்டு வாணிகம் செய்வது இலாபம் ஈட்டும்

நோக்கத்துடன் என்று முதலாளித்துவத்தில் கருதப்படுகிறது. அரசாங்கத் தலையீடு இல்லாமை, சந்தையிலுள்ள போட்டி நிலையையொட்டி விலை, தொழில் நடப்பு அமைதல், உற்பத்திச் சாதனங்கள் தனியார் வசமிருத்தல், முதலாளி—தொழிலாளி ஆகியோரிடையே இனவேற்றுமை, விருப்பப்படித் தொழிலை நடத்தும் உரிமை போன்ற சிறப்புக் கூறுகள் முதலாளித்துவத்தில் காணப்படுகின்றன.

சில செய்திகளில் கூட்டுறவும் முதலாளித்துவமும் ஒரே தன்மையுள்ளனவாகக் காணப்படுகின்றன. தனி நபர் சொத்துரிமை, தொழில் மேற்கொள்ளும் உரிமை, முதலைக்கொண்டு தொழில் நடத்துதல், முழுநேர ஊழியர்களை அமர்த்தித் தொழிலை நடத்துதல், அரசாங்கத் தலையீட்டை எதிர்த்தல் போன்ற கூறுகள் முதலாளித்துவ முறைக்கும் கூட்டுறவு முறைக்கும் பொதுவாக அமைகின்றன. இந்த ஒற்றுமை காரணமாகவே 'கூட்டுறவுத் தனியார் தொழிலில் ஒரு சிறந்தவகை'யினதாகப் பேசப் பட்டுள்ளது. முதலாளித்துவ முறையின் மிகச் சிறந்த பண்புகளைக் கொண்டுள்ளது கூட்டுறவுமுறை என்றுங் கூறுகின்றனர். முதலாளித்துவத்திற்கும் கூட்டுறவிற்கும் முரண்பாடு ஏதும் கிடையாது. முதலாளித்துவ அமைப்பிற்குள் கூட்டுறவு உருவாக்கப்படலாம் என்று அமெரிக்கக் கூட்டுறவாளர்கள் கருதுகின்றனர்.

மேற்கண்ட கருத்துகள் ஒருபுறமிருக்க, முதலாளித்துவமும் கூட்டுறவும் இரு துருவங்கள் போன்றன என்று பலர் கருதுகின்றனர். கூட்டுறவின் வரலாற்றை உற்று நோக்குங்கால், முதலாளித்துவத்தின் தீமைகளையும் கேடுகளையும் களைந்தெடுக்கவே கூட்டுறவு முறை மேற்கொள்ளப்பட்டது என்பது விளங்கும். வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமையை வளர்த்தல், பூசல்களை ஒழித்து அமைதியைக் காத்தல், தன்னலத்தை ஒதுக்கிப் பொதுநலத்தைப் பேணல் போன்ற பண்புகள் கூட்டுறவை முதலாளித்துவத்தினின்று பிரித்துக்காட்டுகின்றது. ஏழை எளியோரை நசுக்க முயல்வது முதலாளித்துவம்; அவர்களுக்கு வலிமை தந்து முன்னேற வாய்ப்பளிப்பது கூட்டுறவு. இங்கிலாந்து நாட்டுக் கூட்டுறவின் வரலாற்று ஆசிரியர் ஜார்ஜ் ஹோலியோக் (George Holyoake) என்பார் கூறுகிறார்; 'கூட்டுறவு எவருடைய சொத்துமீதும் நாட்டம் கொள்வதில்லை, கொள்ளையடிப்பதில்லை, சமுதாயத்தில் அமைதியைக் குலைப்பதில்லை, அரசியல் அறிஞர்களுக்குத் தொல்லை கொடுப்பதில்லை, இரகசியச் சங்கங்களுடன் சேருவதில்லை, தனது நலனைப் பாதுகாக்கத் தொழிற் சங்கங்கள் அதற்குத் தேவைப்பட

வில்லை, வன்முறையினைச் சிந்தித்தும் பார்ப்பதில்லை, ஒழுங்கு நிலையைக் குலைத்துக் கவிழ்ப்பதில்லை.'

முதல் போட்டவர்கள் இலாபம் ஈட்டுங் குறிக்கோளையே முக்கியமானதாகக் கருதி சமுதாயத்தைச் சுரண்டி வாழத் தயங்கார். 'வல்லவனே வாழ்வான்' என்ற சித்தாந்தத்தில் நம்பிக்கையுள்ள முதலாளிகள் போட்டி மனப்பான்மையுடன் செயல்படுகின்றனர். இதனால் சமுதாயத்தில் பல மோதல்கள் ஏற்படுகின்றன. இவற்றையெல்லாம் நோக்கியே பேரறிஞர் பெர்னார்டு ஷா 'முதலாளித்துவத்துக்கு மனச் சான்று கிடையாது. அதனுடைய பேரவா இலாபம் பெறுவதொன்றே. பொன்தான் அதனுடைய இறைவன்' என்று கூறினார் போலும். மனிதனை மனிதன் பண வலிமையைக்கொண்டு சுரண்டுவதைத் தவிர்க்கக் கூட்டுறவு உதவுகிறது. மூலதனம் போடுபவர்கள் ஒன்றுசேர்ந்து அமைப்பது முதலாளித்துவ அமைப்பு. சமத்துவ அடிப்படையில் பரஸ்பர உதவிக்காகச் சிறு அளவிலே மூலதனம் செலுத்தி மனிதர்கள் மனிதப் பண்பிற்கு முதலிடம் தந்து ஏற்படுத்தும் அமைப்புக் கூட்டுறவு அமைப்பு. முதலாளித்துவத்தில் நேர்மை நெறி, ஒழுக்கம் முதலிய பண்புகள் காணப்படுவது அரிது. கூட்டுறவு நேர்மை நெறி, நல்லொழுக்கம், ஆன்மீக முன்னேற்றம் முதலிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே, கூட்டுறவை முதலாளித்துவத்தின் ஒரு துணை நெறி என்று கருதுவது தவறு. நியாயம், ஒழுங்கு, அமைதி போன்ற பண்புகளை அடிப்படையாகக்கொண்டு, மனிதர் ஒருவரையொருவர் புரிந்து செயல்பட வழிவகுப்பது கூட்டுறவு.

முதல் ஒன்று சேருவதால் உண்டாவது முதலாளித்துவ அமைப்பு; மனிதர்கள் ஒன்று சேருவதால் உண்டாவது கூட்டுறவு அமைப்பு.

முதலாளித்துவ அமைப்பில் முதலிடம் பெறுவது முதல்; கூட்டுறவு அமைப்பில் முதலுக்கு இரண்டாந்தர இடமே அளிக்கப் படுகிறது.

இலாபம் ஈட்டுவதே முதலாளித்துவத்தின் முக்கிய நோக்கம்; உறுப்பினர்களுக்குச் சேவை செய்வதே கூட்டுறவின் முக்கிய நோக்கம்.

பங்குநர்களில் ஒரு சிலரே நிறுவனத்தை நடத்திவருவதில் பெரும் பங்கு ஏற்பது முதலாளித்துவ அமைப்பில் காணக்கிடக்

கின்றது; சமத்துவ அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினரும் பங்கேற்றுப் பாடுபடுவது கூட்டுறவின் சிறப்பு.

ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்பது கூட்டுறவு முறையில் கையாளப்படும் வாக்குரிமை முறை; முதலாளித்துவ முறையில் பங்குகள் எத்தனைக் கொண்டுள்ளனரோ அதற்கு ஏற்ற அளவு வாக்குகள் அளிக்கும் உரிமையுண்டு.

கூட்டுறவில் மனிதர் பணத்தினைத் தமது பணியாள் போன்று நடத்துகின்றனர்; முதலாளித்துவத்தில் பணம் மனிதனை ஆட்சி செய்கின்றது.

செல்வம் ஒரு சிலரிடம் குவியவும், சமூகத்தில் ஏற்றத் தாழ்வு மிகவும் முதலாளித்துவம் வழி செய்கிறது; கூட்டுறவு ஏற்றத் தாழ்வுகளை அகற்றிப் பொருளாதாரச் சமத்துவத்தை வளர்க்க முயலுகிறது.

பண வலிமையுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து எளியோரைச் சுரண்டுவது முதலாளித்துவ அமைப்பு; வலிமை பெற்று வளர வலிவற்ற மக்கள் ஒன்றுகூடி அமைப்பது கூட்டுறவு; எளிய மக்கள் உய்ய, வளமுடன் வாழ வாய்ப்பளிப்பது கூட்டுறவு.

கூட்டுறவும் பொதுத்துறையும்

சமதருமக் கோட்பாடு (Socialism), பொதுவுடைமை தத்துவம் (Communism) என்ற அரசியற் கோட்பாடுகள் மேற்கொள்ளப்படும் நாடுகளில், பொதுத்துறை (Public Sector) எனப்படும் அரசு துறை பொருளாதாரச் சேவைகள் அனைத்தையும் செய்துவருகின்றன. உற்பத்திச் சாதனங்கள், வழங்கல் துறை (Distribution System) ஆகிய அரசுடைமையாகத் திகழ்கின்றன. தனியார்த் துறைக்கு இடம் தரப்படுவதில்லை. இலாபம் அரசுக்கே சேரும். சமுதாயநலப் பணிகள், வேலைவாய்ப்பு அளிக்கும் பொறுப்பு ஆகிய எல்லாம் அரசாங்கத்தைச் சாரும்.

முதலாளித்துவத்தின் தீமைகளை அகற்ற சமதருமக்கோட்பாடும், கூட்டுறவும் உருவாகின. இலாப நோக்கை அகற்றி மக்கள் நல்வாழ்வில் அக்கறை காட்டுவதாக இவ்விரு முறைகளும் அமைந்துள்ளதும் குறிப்பிடத் தக்கது. தனி நபர் நலனைவிடச் சமுதாய நலனே இரு முறைகளிலும் பெரிதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறன. மனிதப் பண்புடன், உடன்பிறந்தோர் போன்ற நிலையில் அனைவரும் வைத்து எண்ணப்பட்டு, சமநிலை (Equality), தன்

செயலுரிமை ((Liberty), நியாயம் (Equity) என்ற தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டு விளங்குவன கூட்டுறவும் சமதருமமும். கூட்டுறவும் சமதருமமும் ஒரே தன்மையான தத்துவங்கள் போன்று காணப்பட்ட காரணத்தால் அவையிரண்டும் ஒன்றே என்று கருதப்பட்டது. சில சமதருமவாதிகள் தமது கருத்திற் கிசைந்த அமைப்பு மாபெரும் கூட்டுறவு அமைப்பே என்று கூறினர்.

கூட்டுறவு, சமதரும அல்லது பொதுவுடைமை தத்துவங்கள் ஒன்றுபோல் காணப்படினும், உண்மையில் அவை வேறுபாடுகள் பல உள்ள தத்துவங்களாகும். தனி நபர் சொத்து என்பதே இருக்கக் கூடாது என்பது சமதருமத் தத்துவம். முதலாளி களிடமிருந்து முதல் பறிக்கப்படவேண்டுமென்றும் சமதரும வாதிகள் கூறுகின்றனர். கூட்டுறவு முறையில் தனிநபர் சொத்துக்கு இடமுண்டு. மற்றும் கூட்டுறவில், முதல் கெடுதல் ஏதும் செய்யும் ஆற்றலில்லாமல் மனிதனின் பணியாளாகச் செயல்படுகிறது. கூட்டுறவு தனி மனிதனின் உரிமைகளை மதித்துச் செயல்படுகிறது. பொதுவுடைமை அல்லது சமதருமத் தத்துவத்தில் நாடு எல்லாவற்றிற்கும் உயர்ந்ததாகக் கருதப் படுகிறது. தனி மனிதன் நாட்டின் நலனுக்காக வாழவேண்டும் என்பது அத் தத்துவத்தின் அடிப்படைக் கொள்கை.

கூட்டுறவு, அரசியல்சார்பற்ற நெறியாகும். கூட்டுறவின் தத்துவங்களை ஆராய்ந்தபோது, அது அரசு, சமயச்சார்பற்ற இயக்கம் என்று கண்டோம். சமதரும அல்லது பொதுவுடைமை ஓர் அரசியல் தத்துவம்.

தன்னுதவியை நம்பிக் கூட்டுறவு இயக்கம் இயங்குகிறது. பெரும்பாலும் வெளியுதவி பெறுது இயங்கிவரும் நோக்கம் கூட்டுறவில் காணப்பட்டாலும், சில நேரத்தில் அரசினர் உதவியை ஏற்றுக்கொள்ளும் நிலை வருவதுண்டு. அப்படி ஏற்றுக் கொண்டாலும் தன் அகநிருவாகத்தில் அரசு தலையிடுவதைக் கூட்டுறவு ஏற்காது. பொதுவுடைமையில் அரசே எல்லாப் பொரு ளாதார நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதால் நிருவாகம் அரசின்வசம் இருக்கிறது. வன்முறை, வேலை நிறுத்தம்போன்ற செயல்களைக் கடைப்பிடித்துப் பொதுவுடைமையின் நோக்கத்தை அடைய முயல்வதுண்டு. அமைதி, ஒழுங்கு ஆகிய பண்புகள் கூட்டுறவில் முக்கிய இடம்பெறுகின்றன.

பொதுவுடைமை நாட்டனைத்துக்கும் நலந்தேடும் பண்பு வாய்ந்தது; கூட்டுறவு உறுப்பினர்களின் நலனிலும் அவர்களுக்குச் சேவை செய்வதிலும் ஈடுபாடு கொண்டுள்ளது.

தாமே விரும்பி மக்கள் உறுப்பினராகச் சேருவது கூட்டுறவு முறை; பொதுவுடைமையில் கட்டாயத்திற்கு இடமுண்டு.

பாட்டாளி மக்களின் நிலை வளம்பெறுவது பொதுவுடைமையின் பெருநோக்கம்; உறுப்பினருக்குள்ள தேவைகளை நிறைவு செய்வது கூட்டுறவின் நோக்கமாகும்.

பொதுவுடைமையில் இலாபம் அரசினைச்சாரும்; கூட்டுறவில் உறுப்பினர்களுக்கு ஆதரவு விகித அளவில் ஆதாயம் பிரித்து வழங்கப்படுகிறது.

அரசு அலுவலர் பொதுவுடைமை நாட்டிலுள்ள நிறுவனங்களை நிருவாகம் செய்கின்றனர். கூட்டுறவில் உறுப்பினரால் தேர்ந்தெடுக்கப்பட்டோரிடம் நிருவாகம் ஒப்படைக்கப்படுகிறது.

கூட்டுறவு—இடைநிலை வழி

உலகில் காணக்கிடக்கும் முரணான இரு கருத்துக் கோட்பாடுகள் முதலாளித்துவமும் பொதுவுடைமையுமாகும். முதலாளித்துவத்தின் ஆதிக்கத்தில் செல்வம் ஒரு சிலரிடம் மட்டுமே குவிந்து மக்கள் பலவித தீமைகளுக்கு ஆளாயினர். பொதுவுடைமையில் தனிநபர் உரிமைகள் நசுக்கப்பட்டு அரசின் ஆதிக்கம் மட்டுமே ஓங்கி நிற்கின்றது. இவ்விரண்டு கோட்பாடுகளுக்கும் இடைநிலையில் நிற்பது கூட்டுறவு முறையாகும். இரு துருவங்களாகக் காணப்படும் முதலாளித்துவ—பொதுவுடைமை தத்துவங்களை இணைத்து அவற்றிலுள்ள நல்ல பண்புகளை மட்டுமே தன்னுள் அடக்கி நிற்பது கூட்டுறவு. தனிநபர் உரிமைகளை மதித்து அதே நேரத்தில், மெலியோரை வலியோர் வருத்துதலை நீக்கி நேர்மைநெறி, நியாய உணர்வு ஆகிய பண்புகளை வளர்ப்பது கூட்டுறவு. பிற பொருளாதார முறைகளில் காணப்படும் குறைபாடுகளைக் களைந்து நற்பண்புகளை ஏற்றுக்கொண்டிருப்பது கூட்டுறவு. எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க இடைநிலை முறை கூட்டுறவு. பொருளாதாரத் துறையில் தக்க முயற்சிகளை மேற்கொண்டு சமுதாயத்தில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த முனைவது கூட்டுறவு. போட்டிப்போட்டுக்கொண்டு அல்லது போர்த் தொடுத்துக்கொண்டு வாழ்வில் முன்னேறுவதைவிட ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு முன்னேறுவது எளிது என்பது கூட்டுறவின் சித்தாந்தமாகும்.

வளர்ச்சி பெற்றுவரும் நாடுகளின் பொருளாதார அமைப்பைத் திருத்திப் புதுப்பிக்கக் கூட்டுறவு தக்கதொரு சாதனமாகக் கருதப்

படுகிறது. ஆறும் இந்தியக் கூட்டுறவு மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி 'கூட்டுறவு இயக்கம்போன்று மாபெரும் ஆற்றலடங்கிய சமுதாய நோக்குள்ள ஒரு கருவியை நான் அறியேன்' என்று குறிப்பிட்டார். மக்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக்கொள்ள அது உதவுகிறது. மக்களின் தனித்தன்மையினையும், முயற்சியினையும் தடைப்படுத்தாது அரசு அவர்களுக்கு ஆதரவும் வகை துறைவளமும் வழங்க வாய்ப்பளிக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அமைதியான முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது எளிதாயுள்ளது.

கூட்டுறவும் கூட்டுத் துறையும்
(Co-operation and Joint Sector)

அண்மைக் காலத்தில் பல நாடுகளில் அரசினரும் தொழிலதிபர்களும் கூட்டாகச் சேர்ந்து தொழில்களை அமைத்து நடத்தி வருவதைக் காண்கிறோம். தனியார் துறையிலுள்ள தொழில் நுட்பங்களையும் நிருவாகத் திறனையும் நன்கு பயன்படுத்தி அதே நேரத்தில் அரசினரும் தொழில் வளர்ச்சியில் நேரடியாகப் பங்கேற்க, குறிப்பிட்ட விகிதத்தில் தனியாரும் அரசினரும் முதல் போட்டு நடத்தி வரும் தொழில்களைக் கூட்டுத்துறை என்கின்றனர்: அரசினர்-தனியார் ஆகியோரிடையே ஏற்படும் கூட்டுறவால் உருவாகும் அமைப்புக் கூட்டுத் துறையாகும். இத் துறையில் முதலாளித்துவமும் பொதுவுடைமையும் சேர்ந்து செயல்படுவதைக் காண்கிறோம். இருப்பினும் இருவருக்கும் தொழிலில் முழு ஈடுபாடு இருக்குமோ என்பது ஐயப்படக்கூடிய செய்தியே. கூட்டுறவில் ஒரே தன்மையான தேவைகளைக்கொண்ட மக்கள் பொதுவான ஒரு நோக்கத்தை அடைய ஒன்றுசேர்வதால் அவர்களுக்குள்ள ஈடுபாடு உயர்ந்த அளவிலிருக்கும் என்பதில் ஐயமில்லை. மற்றும் நடைமுறையில் கூட்டுத் துறையில் பல சிக்கல்கள் எழக்கூடும். காரணம் தனியார் துறையும் அரசு துறையும் வெவ்வேறு அடிப்படை நோக்கங்கள் கொண்டனவாகும். ஆனல், கூட்டுறவு ஓர் ஒழுங்கமைதி பெற்ற அமைப்பாகும். கருத்தொருமித்த மக்கள் உறுப்பினர்களாக அமைவதாலும், மக்களாட்சி முறை நிருவாகம் கடைப்பிடிக்கப்படுவதாலும் சிக்கல்களுக்கு இடமேது மில்லை.

அறியாமை காரணமாகவும், செய்திகளை முழுமையாகத் தெரிந்துகொள்ளாத காரணமாகவும் மக்கள் கூட்டுறவு அமைப்புகளை வேறு பலவகை அமைப்புகளுடன் தொடர்பு

படுத்திக் குழப்பமடைகின்றனர். இது குறித்துச் சில செய்திகள் காண்போம்.

கூட்டுறவும் அறநிலையங்களும்
(Co-operation and Charitable Organisations)

வாழ்வில் வளம்பெறாது வறியராக வாடும் மக்களுக்கு உதவும் நோக்கம் கூட்டுறவுக்குமுண்டு. அறநிலையங்களுக்குமுண்டு. ஆனால், கூட்டுறவில், உதவி வேண்டுவோர் ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுகின்றனர். அறநிலையங்களில் உதவியளிப்பவர் வேறு, உதவி பெறுவோர் வேறு என்ற நிலை காணப்படுகிறது. அறநிலைய ஆதரவில் வாழ்வோர் என்றும் பிறரை நாடி வாழவேண்டியிருக்கிறது. கூட்டுறவில் மக்கள் தாமே தம்மைப் பேணிக்கொள்ளும் பண்பினைப் பெறுகின்றனர். கூட்டுறவில் உறுப்பினர் பரஸ்பரம் உதவிக்கொள்ளுகின்றனர். அறநிலையம் இரக்கமுள்ள கொடையாளிகளின் உதவியை நம்பி நிற்கின்றன. கூட்டுறவு தன்மான உணர்வை வளர்க்கின்றது. அறம் தன்மானத்தை அழிக்கின்றது. வறுமையிலிருந்து விடுபட கூட்டுறவு உதவுகின்றது. அறம் வறுமையை அகற்றக் கூடியதல்ல. கூட்டுறவு முயற்சி, அறத்தை எதிர்நோக்கி நிற்பதை அவசியமற்றதாகச் செய்துவிடுகிறது. எனவே, கூட்டுறவு ஓர் அறநிலையமோ அல்லது தரும அமைப்போ ஆகாது.

கூட்டுறவும் தொழிற் சங்கமும்
(Co-operation and Trade Unions)

குறிப்பிட்ட ஒரு தொழில் அல்லது நிறுவனத்தில் பணிபுரியும் நபர்கள் தாமே விரும்பி ஒன்றுசேர்ந்து தம்முடைய நலன்களைக் காக்க, மேம்படுத்த ஏற்படுத்தும் சங்கமே தொழிற் சங்கம் எனப்படுகிறது. பொதுவான பொருளாதாரத் தேவைகள் உள்ள நபர்கள் தாமே விரும்பி ஒன்று சேர்ந்து தம்முடைய நலன்களைக் காக்க, மேம்படுத்த ஏற்படுத்தும் சங்கமே கூட்டுறவுச் சங்கம் ஆகும். இவ்விருவகை சங்கங்களிலும் தலைவர்கள் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கூட்டுறவுச் சங்கம் ஏதேனும் தொழில் அல்லது வியாபாரத்தில் ஈடுபடுகிறது. தொழிற் சங்கம் அவ்வாறு ஈடுபடுவதில்லை. தமது முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த, போராட தொழிற் சங்கம் பயன்படுத்தப்படுகிறது. முதலாளி தம்மைவிட வலிமையான நிலையில் இருப்பதைத் தொழிற் சங்கம் ஒப்புக்கொள்ளுகிறது. மற்றும்,

தொழிற் சங்கங்கள் முதலாளியிடம் எதிர்ப்புணர்ச்சி காட்டுகின்றன. கூட்டுறவு எல்லோரையும் சமமாகக் கருதும் பாங்கு கொண்டது. யார் மீதும் வெறுப்புணர்ச்சி கொள்ளாது அமைதி வழியை நாடுவது கூட்டுறவு. கூட்டுறவு நெறி அன்பு நெறியெனக் கூறின் அது மிகையாகாது.

கூட்டுறவும் கூட்டுப்பங்குக் கம்பெனிகளும்
(Co-operation and Joint Stock Companies)

வாணிகம் நடத்தவே கூட்டுப்பங்குக் கம்பெனி (நிறுமம்) நிறுவப்படுகிறது. கூட்டுறவுச் சங்கமும் தொழில் நடத்தும் பொருட்டு நிறுவப்படுகிறது. இருப்பினும் இவ்விரு அமைப்புகளும் நோக்கங்களிலும் செயல்முறைகளிலும் வேறுபடுகின்றன. கம்பெனி அமைப்பில் பணமே முதன்மையாகக் கருதப்படுகிறது. தொழில் மிகுதியாகப் பணம் முதலீடு செய்தவர்கள் வசம் அதன் நிருவாகம் அடங்கியிருக்கும். கூட்டுறவு அமைப்பில் மனிதருக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. எல்லா உறுப்பினர்களுக்கும் சமமான வாக்குரிமை அளிக்கப்படுகிறது. கம்பெனி அமைப்பில் உறுப்பினர் தாம் போட்ட முதல்மீது கிடைக்கும் ஆதாயப் பங்குமீதே கண்ணுக இருப்பர். ஆதாயப்பங்கு முதல் பணத்திற்கு ஏற்றவாறு அமையும். கூட்டுறவில் அதன் உறுப்பினர்கள் நலனே முக்கியமாகக் கருதப்படுகிறது. வியாபாரம் செய்து கிடைக்கும் மிகுதித் தொகையை, உறுப்பினர்கள் எந்த அளவில் சங்கத்தைப் பயன்படுத்தினரோ அதற்குத் தக்கவிகிதத்தில், பகிர்ந்து கொடுப்பர். கூட்டுறவின் பெருநோக்கு அருமையான பண்பாடுகொண்ட மனிதர்களை உருவாக்குவதேயன்றி வளமார்ந்த பண்டங்களை உற்பத்தி செய்வதல்ல.

கூட்டுறவும் தொழிற்கூட்டும்
(Co-operation and Industrial Combinations)

பெரிய தொழில் நிலையங்கள், முற்றுரிமை பெறும் பொருட்டு, ஒன்ருகக் கூட்டுச் சேர்ந்து மேலும் வலிமைபெற்றுச் சிறு தொழில் நிலையங்களை ஒழித்துக்கட்ட தொழிற்கூட்டு ஏற்படுத்தப்படுகிறது. ஆனல், கூட்டுறவு நிலையங்கள் வலிவற்ற மக்களின் சேர்க்கையாகும். கூட்டுறவு நசிக்கும் போட்டியைத் தவிர்க்கிறது. வலியோர் மெலியோரைச் சுரண்டுவதைத் தவிர்த்துத் தனது உறுப்பினர்களுக்குத் தேவையான சேவையினைச் செய்ய கூட்டுறவு செயல்படுகிறது. சி. ஆர். ஃபே (C. R. Fay) என்னுங் கூட்டுற

வாளர் 'தொழிற்கூட்டு ஒரு தாக்காற்றல் (Force); கூட்டுறவு ஒரு கருத்துப்போக்கு (Idea)' என்று கூறியுள்ளார்.

கூட்டுறவு அமைப்பின் சிறப்பு

முரண்ணை அரசியல் தத்துவங்களுக்கிடையில், ஒரு தராசு போன்று அத் தத்துவங்களின் நற்கூறுகளைக்கொண்டு உருவாகி நிற்பது கூட்டுறவு. தனிநபர் நலனையும், சமுதாய நலனையும் மேம்படுத்தி வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவல்லது கூட்டுறவு. தொழில் நடத்தும் ஓர் அமைப்பாக இருந்தும் கூட்டுறவு மனித இன நலனைப் புறக்கணிப்பதில்லை. எளியோரை வாழ்விக்க வந்த வரப்பிரசாதமாகக் கூட்டுறவு கருதப்படுகின்றது. எனவே, கூட்டுறவுச் சிந்தனையாளர் சிலர், பொருளாதாரத்துறை முழுதும் கூட்டுறவு முறையில் அமைக்கப்பெற்றக் கூட்டுறவுக் குடியரசு (Co-operative republic) உருவாக வேண்டுமென்று கூறிவந்தனர்.

3. கூட்டுறவு இயக்கத்தின் துவக்கமும் வளர்ச்சியும்

தொன்மை மிகுந்த நம் இந்திய நாட்டில் கூட்டுறவு பல நூற்றாண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பொருளாதார நடவடிக்கைகள் சிறந்த முறையில் நடைபெற்று வந்ததையும் வாணிகம் தழைத்தோங்கி நின்றதையும் இந்திய வரலாற்று ஆசிரியர்கள் முற்கால நிலையைப்பற்றிப் பேசும்போது குறிப்பிட்டுள்ளனர். பொருளாதார நடவடிக்கைகள் சீரானமுறையில் நடைபெற பிற மக்களோடுகூடி அமைப்பொன்று ஏற்படுத்திக் குறிப்பிட்ட நோக்கங்களை அடைய முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். நமது கிராம சமுதாயம் தொன்றுதொட்டு இயங்கி வந்துள்ள வகையினைக் கூர்ந்து நோக்கின், அது கூட்டுறவு வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு விளங்கியது புலப்படும். இந்துக் கூட்டுக் குடும்பமுறை (Hindu Joint Family System) கூட்டுறவு வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. கிராம மக்கள் ஒருமித்து வேளாண்மை செய்தல், மிகுதி விளை பொருளைச் சந்தையிடல், பொது நீர்நிலைகளிலிருந்து பாசனம் செய்தல், பொது மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகளை மேய்த்தல், விவசாயக் கருவிகளைக் கிராமக் கருமாரிடம் செய்துகொள்ளல்—பழுதுபார்த்தல், பொதுத் தோட்டங்களைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகள் மக்கள் உண்மையான கூட்டுறவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர் என்பதைப் புலப்படுத்துகிறது. இன்றும் கிராமங்களில் பல நடவடிக்கைகள் கூட்டுறவு முறையில் நடைபெறுவதை நாம் காண்கின்றோம். ஆனால், கூட்டுறவு என்ற சொல்லுக்கு நாம் தற்காலத்தில் தரும் இலக்கணம், விளக்கம் ஆகிய மேற்கத்திய நாடுகளின் பாணியில் அமைந்துள்ளன. இன்று நாடெங்கும் பரவி விளங்கும் கூட்டுறவு இயக்கம் பொதுவாக உலகில் காணப்படும் பாணியையொட்டியே அமைந்துள்ளது. இந்திய நாட்டில் இயக்கம் வளர்ந்தவிதத்தினை இனிக் காண்போம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் இந்திய நாட்டில் ஏற்பட்டிருந்த அவலநிலையே கூட்டுறவு இன்று நாம் காணும் பாணியில் தோன்றக் காரணமாக இருந்தது என்று கூறுவது மிகையாகாது. மேலைநாடுகளில் தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளின் எதிரொலி இந்தியாவிலும் கேட்கத் துவங்கியது. அயல்நாடுகளில் இயந்திரங்களைக்கொண்டு செய்யப்பட்ட சரக்குகள் இந்தியாவில் மலிவான விலைக்கு விற்கப்படலாயின. இதன் காரணமாகக் கிராமக் கைத்தொழில்கள் நலிந்து, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி, நாட்டின் பொருளாதாரம் சீர்குலைய லாயிற்று. கைத்தொழில்களைக் கைவிட்ட மக்கள் வேளாண்மையில் ஈடுபடலாயினர். மரபுரிமை இறங்குரிமைச் சட்டங்கள் காரணமாகவும், மக்கள் பெருக்கத்தின் காரணமாகவும் விளைநிலம் மேலும் மேலும் சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுப் பயிர்த்தொழில் செய்வது ஆதாயமற்றதாகப் போயிற்று. முதலாளித்துவ முறை உற்பத்தி பண வலிமைகொண்ட முதலாளிகளை ஈர்க்கலாயிற்று. விவசாய விளைபொருள்களின் விலை உயர்ந்த போதிலும் அதன் நன்மையைச் சிறு விவசாயிகள் பெறக்கூடாமல் இடைநிலையர் (Middlemen) பலர் வாணிகத்துறையில் தோன்றினர். இவையன்றிப் புதிய கடன்நிவாரணச் சட்டங்களும் விதிகளும் கடன் வாங்கியவர்களுக்குச் சாதகமாக இயற்றப்பட்ட காரணத்தால், கடன் கொடுப்போர் நிலங்களை அடைமானம் பெற்றுக்கொண்டு தமது உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளலாயினர். நாளடைவில், அடைமானம் செய்துகொடுத்த தம் நிலங்களைச் சிறு விவசாயிகள் கடனைத்தீர்க்க முடியாத காரணத்தால் கடன் கொடுப்போருக்கும் விற்றுவிட நேரிட்டது. இதனால் சிறுநிலக் கிழார்கள் சிறுகச்சிறுக குத்தகைதார்களாக மாறிவிட்டனர். நிலவரியைச் செலுத்த வட்டித் தொழிலரிடம் கடன்பெற்ற சிறு விவசாயிகள், மிக உயரிய வட்டிவீதம் செலுத்தவேண்டியிருந்தது. சிலர் தமது விளைபொருளை வட்டித் தொழிலர் கேட்கும் மிகக் குறைவான விலைக்கு அவரிடம் விற்றுக் கடனை அடைக்கவேண்டியிருந்தது. வறுமைச் சுழலில் உழன்றுகொண்டிருந்த சிறு விவசாயிகளுக்கு மேலும் வறுமைநிலை ஏற்பட்டது. சுருங்கக் கூறின், விவசாயிகள் வறுமை, அறியாமை, வட்டித் தொழிலரின் கொடுமை, கடன்சுமை ஆகியவற்றிற்கிடையே அகப்பட்டுக் கொண்டு செய்வதறியாது கிடந்தனர். ஏமாற்றமும் சோர்வும் மிகுந்து, விதியை நொந்து வாழ்ந்து வந்தனர். இதற்கிடையில் இயற்கையின் கொடுமையால் பருவ மழை தவறிவிட்டால் பட்டினியும் பஞ்சமும் தலைவிரித்தாடும் கோலத்தைக் காணவும் வேண்டுமோ?

இந்தச் சூழ்நிலையில் அந் நாளைய அரசு, வட்டித் தொழிலரின் ஆதிக்கத்தைக் குறைத்து, குறைந்த வட்டிக்கு விவசாய உற்பத்திக்குத் தாமே கடன் கொடுத்து உதவ சில சட்டங்களை இயற்றிற்று. நிலச்சீர்திருத்தக் கடன்கள் சட்டம் 1883ஆம் ஆண்டிலும், விவசாயிகள் கடன்கள் சட்டம் 1884ஆம் ஆண்டிலும் இயற்றப் பெற்றன. கடனைத் தீர்க்கமுடியாத நிலையில் அடைமானம் வைத்திருந்த நிலத்தை வட்டித் தொழிலருக்கு விற்றுவிடுவதைத் தடை செய்து 1879ஆம் ஆண்டில் தக்காண விவசாயிகள் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டது.

அந் நாளைய சென்னை அரசாங்கம் சர் பிரட்ரிக் நிக்கல்சன் என்னும் அதிகாரியை ஐரோப்பாவிற்கு அனுப்பி அங்குக் கூட்டுறவு இயக்கம் நடந்துவரும் முறையினைக் கண்டுவருமாறு பணித்தது. அந்த அடிப்படையில், நம் நாட்டில் விவசாய வங்கிகள் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பையும் ஆராய்ந்து பரிந்துரைகள் செய்யுமாறும் அவரைப் பணித்தது. அவர் 1897இல் தமது அறிக்கையைச் சென்னை அரசுக்குப் பணிந்தளித்தார். இதற்கிடையில் நாட்டில் சில பகுதிகளில் கடன் வழங்கு நிலையங்கள் துவங்கப்பெற்றன. ஐக்கிய மாகாணங்களில் கூட்டுறவுச் சங்கங்களும், சென்னை மாகாணத்தில் நிதிகளும் (Nidhis) இயங்கி வந்தன. நிக்கல்சன், அக் காலத்தில் பிரஷ்யா (Prussia) நாட்டில் இயங்கிவந்த வரையறுப் பொறுப்புக் (unlimited liability) கொண்ட கூட்டுறவு நாணயச் சங்கங்கள் போன்ற சங்கங்கள் இந்தியாவில் நிறுவப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தார். அவரது அறிக்கையில் இறுதியில் 'ரய்பீசனைக் கண்டுபிடி' (Find Raiffeisen) என்ற செய்தியை இந்தியாவுக்கு விடுத்தார். 1901ஆம் ஆண்டு இந்தியப் பஞ்சக் குழு (Indian Famine Commission) வினர் நிக்கல்சனின் பரிந்துரைகளை ஏற்றுப் பரஸ்பர நாணயச் சங்கங்கள் (Mutual Credit Associations) நிறுவப்படலாமென்று பரிந்துரைத்தனர்.

இந்திய அரசு 1901ஆம் ஆண்டு சர் எட்வர்ட் லா (Sir Edward Law) தலைமையில் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்குவது பற்றி ஆராய ஒரு குழுவை நியமித்தது. இக் குழுவினரும் ரய்பீசன் வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தியாவில் துவங்கப் படலாமென்று பரிந்துரைத்தனர். இதே நேரத்தில் இந்திய நாட்டு நிர்வாகப் பணி (Indian Civil Service)யினைச் சேர்ந்த உள்ளார்வமிக்க சில அலுவலர்கள் தத்தம் ஆட்சி எல்லைக்குள் சில கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திட முனைந்தனர். வங்காளத்தில் திரு. மாக்லகன் என்பார் இதற்கான முன்னோடிப் பணிகளை நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் செய்து வந்தார். இங்ஙனமாகப்

பலர் மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் காரணமாக 1904ஆம் ஆண்டுக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் சட்டம் (Co-operative Credit Societies Act) இயற்றப்பெற்றது. இச் சட்டம் இயற்று முன் சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப், வங்காளம் முதலிய இடங்களில் துவங்கப்பெற்ற சங்கங்கள், பொதுச் சங்கங்கள் பதிவுச் சட்டம் (General Societies Registration Act, 1860) அல்லது இந்தியக் கம்பெனிகள் சட்டம் (Indian Companies Act, 1882) ஆகியவற்றின்கீழ் பதிவு செய் யப்பட்டிருந்தன.

இங்கிலாந்திலுள்ள தோழமைச் சங்கங்கள் சட்டத் (Friendly Societies Act)தைத் தழுவி இந்தியக் கூட்டுறவு நாணயச் சங்கங் கள் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டத்தை இயற்ற இந்திய அரசு கொண்டு வந்த தீர்மானத்தில், கூட்டுறவுச் சங்கங்களைப் பொதுச் சட்ட செயலாட்சியிலிருந்து விடுவித்து அவற்றின் அமைப்பு, நோக்கங்களுக்குத் தக்க விதிகளமைந்த சட்டம் கொண்டு வருவது தேவைப்படுகிறது என்று மொழியப்பட்டது. அச் சங்கங்களைத் துவக்க ஊக்கந்தரவும், இயக்க உதவி புரியவும் சில சிறப்பு வசதிகளும் சலுகைகளும் அளிப்பது விரும்பத்தக்க தெனக் கருதப்பட்டது. இச் சலுகைகளையும் வசதிகளையும் ஊக வணிகர் (Speculators), முதலாளிகள் (Capitalists) தவறான முறையில் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர்க்க தக்க முன்னெச் சரிக்கையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அவசிய மெனக் கருதப்பட்டது. இச் சட்டம் எழுத்தறிவற்ற விவசாயி களுக்கு நன்மை செய்யும்பொருட்டு இயற்றப்பட்டதால், தத்தம் ஆட்சி எல்லைக்குத் தேவைப்படும் விதிகளை வகுத்துக் கூட்டுறவுகளை வளர்க்கவும் கட்டுப்படுத்தவும் மாகாண அரசாங்கங்களுக்கு வேண்டிய வாய்ப்புத் தரப்பட்டது. சிறிய அளவு பணந் தேவைப் படும் எளிய மக்களுக்கு உதவும்பொருட்டு இயற்றப்பட்ட இச் சட்டம் சிறிய, எளிய சட்டமாக அமைந்தது. இச் சட்டம் பிரதம நாணயச் சங்கங்கள் அமைப்பதற்கு மட்டுமே வகை செய்தது. அகன்றதொரு கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்த இச் சட்டம் அன்றைய நிலையில் நினைக்கவுமில்லை.

முதல் கட்டம் (1904—1911)

கூட்டுறவு நாணயச் சங்கங்கள் சட்டம் இயற்றப்பெற்ற ஆண்டிலிருந்து இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முதல் கட்டம் துவங்கியது எனலாம். இச் சட்டத்தின் முக்கிய அம்சங் களைக் காண்போம்:

1. ஒரே கிராமம் அல்லது நகரைச் சேர்ந்த பத்து நபர்கள் கூடி தம்மிடையே சிக்கனம், தன்னுதவி ஆகிய பண்புகளை வளர்க்கும் பொருட்டுக் கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்து கொள்ளலாம்.

2. சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து வைப்புத்தொகை பெறுவதன் வழியும், உறுப்பினரல்லாதாரிடமிருந்தும், அரசினரிடமிருந்தும் பிற கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் கடன் வாங்கியும் நிதி திரட்டுவதும் அங்ஙனம் திரட்டிய நிதியை உறுப்பினர்களுக்குக் கடனுகை அளிப்பதும் அல்லது பதிவாளரின் சிறப்பு அனுமதிபெற்றுப் பிற கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதுமாகும்.

3. ஒவ்வொரு மாகாணத்திலும் அரசாங்க அலுவலர் ஒருவர் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் பதிவாளர் என்ற பதவிக்கு நியமிக்கப்பட்டார். அம் மாகாணத்திலுள்ள கூட்டுறவு நாணயச் சங்கங்களின் அமைப்பு அவரது கட்டுப்பாட்டிற்குள் அடங்கும்.

4. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், செயல்திறம் பற்றிப் பொதுமக்களுக்கு நம்பிக்கை உண்டுபண்ண சட்டமுறையாகப் பதிவாளர் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் ஆண்டுத் தணிக்கை செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டது.

5. சங்கங்கள் கிராமச் சங்கங்கள் என்றும் நகரச் சங்கங்களென்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டன. உறுப்பினர்களில் ஐந்தில் நான்கு பகுதி விவசாயிகளாக இருப்பின் சங்கம் கிராமச் சங்கமென்றும், ஐந்தில் நான்கு பகுதி விவசாயிகளல்லாதோராக இருந்தால் சங்கம் நகரச் சங்கமென்றும் பாகுபடுத்தப்பட்டது.

6. கிராமச் சங்கங்களில் உறுப்பினரின் பொறுப்பு வரையறுது இருத்தல்வேண்டும். நகரச் சங்கங்களில் உறுப்பினர் பொறுப்பு வரையறுத்ததாக அல்லது வரையறுததாக இருக்கலாம்.

7. சங்கத்தின் ஆட்சி எல்லை மிகச் சிறிய பரப்பாக இருந்தது. சில சங்கங்களில் உறுப்பினர் குறிப்பிட்ட வகுப்பு, இனம் அல்லது குடியினராக இருக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருந்தது.

8. அசையாச் சொத்துகளின் பிணையத்தின்மீது அல்லது உறுப்பினர்களின் சொந்த பிணையத்தின்பேரில் கடன் வழங்கப்படலாம்.

9. கிராமச் சங்கம் பெறும் இலாபத்தை ஆதாயப் பங்காக வழங்க அனுமதிக்கப்படவில்லை. ஆதாயம் ஆண்டு இறுதியில் காப்பு நிதி (Reserve Fund)க்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். இந் நிதி துணை விதிகளில் குறிப்பிட்ட அளவுக்குமேல் வளர்ந்த பின்னர், உறுப்பினர்களுக்கு நல்லூதியம் (bonus) வழங்கப் படலாம்.

10. நிகர இலாபத்தில் கால்பகுதியைச் சட்டமுறை காப்பு நிதியொன்றுக்கு ஒதுக்கிய பின்னரே நகரச் சங்கங்கள் தமது இலாபத்தைப் பிரித்து வழங்கலாம்.

11. பங்குமுதல் மீது குறிப்பிட்ட அளவு வட்டி, ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற தத்துவங்கள் சட்டத்தில் இடம்பெற்றன.

12. வருமான வரி, பத்திரப் பதிவுக்கான முத்திரை வரி ஆகியவற்றிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்கப் பட்டது. மற்றும், உறுப்பினர் பிறருக்குச் செலுத்தவேண்டிய கடன்களுக்கு அவருடைய பங்குகளைப் பற்றுகை செய்வது விலக்களிக்கப்பட்டது.

13. சங்கங்களுக்குச் சட்டமுறையான ஒரு நபர் என்ற தகுதி அளிக்கப்பட்டது.

14. இச் சட்டத்தின்கீழ் கிராம, நகரக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மட்டுமே அமைக்க ஏற்பாடிருந்தது.

அட்டவணை 1

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி 1906—07 முதல் 1910—11 வரை

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆயிரத்தில்	நடைமுறை முதல் (ரூ. இலட்சத்தில்)
1906–07	843	90·84	23·72
1907–08	1,357	149·16	44·14
1908–09	1,963	180·34	82·32
1909–10	3,428	224·40	124·68
1910–11	5,321	305·06	203·05

கூட்டுறவுச் சங்கங்கள் 1904 முதல் 1911வரை வளர்ந்த வண்ணத்தினை அட்டவணை 1 தெளிவாக்குகிறது. 1911ஆம் ஆண்டு இறுதியில் 8,000-க்கும் மேற்பட்ட சங்கங்கள் எல்லா மாகாணங்

களிலும் அமைக்கப்பெற்றிருந்தன. 1904ஆம் ஆண்டுச் சட்டம் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குப் போதுமானதாகத் தோன்றவில்லை. அனுபவவாயிலாகவும் அச் சட்டத்தின் குறைபாடுகள் தெரியவந்தன. கடன் வழங்குவது தவிர பிற நோக்கங்கள் கொண்ட சங்கங்களைத் துவக்க சட்டம் இடந்தரவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் கிராமச் சங்கங்கள் என்றும், நகரச் சங்கங்கள் என்றும் பிரிக்கப்பட்டிருந்தது நடைமுறைக்கு ஒவ்வாததாகக் காணப்பட்டது. மற்றும், மத்தியக் கூட்டுறவுச் சங்கங்கள்—பிரதம சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கக்கூடிய மத்திய வங்கிகள் அல்லது சங்கங்களின் இணைப்புச் சங்கம் ஏற்படுத்தச் சட்டத்தில் இடமில்லாதிருந்தது. இக் குறைகளைப் போக்க புதியதொரு சட்டம் தேவைப்பட்டது.

இரண்டாம் கட்டம் (1912 முதல் 1919 வரை)

கூட்டுறவு இயக்கத்தில் இரண்டாம் கட்டமாகக் கருதப்படுவது 1912ஆம் ஆண்டு முதல் 1919 வரையுள்ள எட்டாண்டுக் காலமாகும். 1912ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (Co-operative Societies Act II of 1912) முந்தையச் சட்டத்தின் குறைபாடுகளை ஓரளவுக்கு நிறைவு செய்தது. 1904ஆம் ஆண்டுச் சட்டத்திற்கிருந்த எளிமையும், நெகிழ்வும் 1912ஆம் ஆண்டுச் சட்டத்திற்குமிருந்தது. 1912ஆம் ஆண்டுச் சட்டத்தின் சிறப்பான கூறுகளை இனிக் காண்போம் :

1. நாணயச் சங்கங்கள் மட்டுமல்லாமல், கூட்டுறவுத் தத்துவங்களின்படி உறுப்பினர்களின் பொருளாதார நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் கூடிய சங்கம் அல்லது அவ்வகைச் சங்கம் நன்முறையில் செயலாற்ற வகைசெய்யும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்படும் சங்கம் ஆகிய புதிய சட்டத்தின்படி பதிவு செய்யப்படலாம்.

2. மாகாண அரசாங்கம் வேறுவகையில் ஆணையிட்டிருந்தாலன்றி (i) மத்தியச் சங்கங்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக இருத்தல்வேண்டும் (ii) கிராம நாணயச் சங்கங்களின் பொறுப்பு வரையறாததாகவே இருத்தல்வேண்டும்.

3. பதிவாளரின் அனுமதியுடன் பதிவுபெற்ற எச் சங்கமும் ஆண்டு நிகர இலாபத்தில் கால்பகுதி காப்புநிதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் மீதமுள்ளதில் 10% வரை பலதரப்பட்ட அற நோக்கங்களுக்கு வழங்கலாம்.

4. சங்கங்களின் விதிகள், துணைவிதிகள் வகுப்பதில் மாகாண அரசாங்கங்களுக்குப் பெருமளவு உரிமையளிக்கப்பட்டுள்ளது.

5. குறைந்தது வயதுவந்த பத்து நபர்கள் சேர்ந்து சங்கமொன்றை உருவாக்கலாம்.

6. வரையறுப் பொறுப்புள்ள சங்கத்தில் ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்குமட்டுமே உண்டு; வரையறுத்த பொறுப்புள்ள சங்கத்தில் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளில் கண்டுள்ளபடி ஓர் உறுப்பினருக்கு வாக்குகள் நிருணயிக்கப்படும்.

7. வரையறுத்த பொறுப்புள்ள சங்கத்தில் எந்த ஓர் உறுப்பினரும் மொத்தப் பங்கு முதலில் 20%-க்கு மேல் வைத்திருக்கலாகாது; அல்லது ரூ. 1,000-க்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கலாகாது.

8. உறுப்பினர் சங்கத்திற்குச் செலுத்தவேண்டிய கடன் அல்லது நிலுவைத் தொகைக்கு, அவரது பயிர், கால்நடை, விவசாயக் கருவிகள் போன்றனமீது சங்கத்திற்கும் பிறகடனாளர்களுக்கும் முதன்மையான கோருரிமை (Prior claim) அளிக்கப்பட்டது.

9. சங்கத்திலிருந்து விலகியதிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை முன்னாள் உறுப்பினரின் பொறுப்பு நீடிக்கும்; இறந்துபட்ட உறுப்பினரின் சொத்தின்மீது இறந்ததிலிருந்து ஓராண்டுவரை பொறுப்பு நீடிக்கும்.

10. உறுப்பினரல்லாதோரிடமிருந்தும் வைப்புகளையும், கடன்களையும் பெற சங்கங்கள் அனுமதிக்கப்பட்டன.

11. சங்கங்களின் நிதிகளை முதலீடு செய்வதில் பல கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன.

12. சங்கத்தின் அமைப்பு, நடப்பு, நிதிநிலை குறித்து விசாரணை நடத்த பதிவாளருக்கு விரிவான அதிகாரம் அளிக்கப்பட்டது.

13. கடனாளர் (Creditor) வேண்டிக்கொண்டால் பதிவாளர் சங்கத்தை ஆய்வு செய்யலாம்.

14. சங்கத்தைக் கலைக்கவும் அதன் நடவடிக்கைகளை இறுதியாக முடிவு கட்டவும் பதிவாளருக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

15. இச் சட்டம் அமுலுக்கு வருமுன் கூட்டுறவு என்ற சொல்லைத் தன் பெயரில் ஒரு பகுதியாகக்கொண்டு செயலாற்றி

வந்தாலன்றி இச் சட்டத்தின்படி கூட்டுறவு என்ற சொல்லை எந்த வாணிக நிறுவனமும் பயன்படுத்தக்கூடாது.

16. சங்கங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டு மென்பதில்லை; மாகாண அரசாங்கம் வருமானவரி, முத்திரைவழி, பதிவுக்கட்டணம் போன்றவற்றிலிருந்து சங்கங்களுக்கு விலக் களிக்கலாம்.

17. ஆண்டுத் தணிக்கை போன்ற பல சட்டப் பிரிவுகள் இச் சட்டத்திலும் இருத்திக் கொள்ளப்பட்டன.

18. கூட்டுறவுச் சங்கங்களில் எடுத்துள்ள பங்குகள் பற்றுகை (Attachment)யிலிருந்து விலக்களிப்பட்டன.

கடன்சார்பற்ற கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க 1912ஆம் ஆண்டுச் சட்டம் வழிசெய்தது. மற்றும், பிரதம சங்கங்களுக்குக் கடன் வசதியளிக்க வரையறுத்த பொறுப்புகொண்ட மத்திய நிதி வழங்கு முகமைகள் (Central Financing Agencies) அமைக்கப் பட சட்டம் இடமளித்தது. சங்கங்களைக் கிராம, நகர சங்கங்கள் என்று பாகுபடுத்தியது கைவிடப்பட்டது. சங்கங்கள் வரை யறுத்த, வரையறுச் சங்கங்களெனப் பாகுபடுத்தப்பட்டன.

புதிய சட்டம் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பேருக்க மளித்தது. 1911–12இல் நான்கு இலட்சம் உறுப்பினர்களையும் 8,177 சங்கங்களையும் கொண்டிருந்த இயக்கம், 1914–15 இல் ஐந்து இலட்சம் உறுப்பினர்கள் 12,000-க்கு மேற்பட்ட சங்கங்கள் கொண்டு விளங்கியது. விளைபொருள்களை விற்பனை செய்ய, உரம், விவசாயக் கருவிகள் முதலியன வாங்கப் புதுவகை சங்கங்கள் நிறுவப்பெற்று இயங்கிவந்தன. இயக்கம் சரியான முறையில் திடமாக வளர்ந்து வருகிறதா என்று உறுதி செய்துகொள்ள அரசு விரும்பியது. இயக்கத்திற்கு மேலும் ஆதரவும், சலுகை களும் தருமுன் இயக்கத்தின் வளர்ச்சியை மதிப்பீடு செய்ய சர் மாக்லகன் தலைமையில் 1914இல் ஒரு குழுவை அரசு நியமித் தது. இக் குழு 1915இல் தனது அறிக்கையைப் பணிந்தளித்தது.

மாக்லகன் குழுவின் அறிக்கை கூட்டுறவு இயக்கத்தின் வரலாற் றில் முக்கிய இடம்பெறுகின்றது. அக் குழுவின் முக்கிய பரிந் துரைகளைக் காண்போம்:

1. உறுப்பினர்களுக்கு மட்டுமே கடனளிக்கப்படவேண்டும். எக் காரணங்கொண்டும் உறுப்பினரல்லாதாருக்குக் கடன் வழங் கப்படலாகாது.

2. உற்பத்தி நோக்கங்களுக்கு மட்டுமே கடன் வழங்கப் படுதல்வேண்டும். எந்த நோக்கத்திற்கு கடன் வழங்கப் பட்டதோ அந்த நோக்கத்திற்கு அது பயன்படுத்தப்படுகிறதா என்று கண்காணிக்கப்பட வேண்டும்.

3. சங்கத்தின் செயல்எல்லை சிறிய பரப்பினதாக இருத்தல் வேண்டும். கூட்டுறவின் முக்கிய தன்மையெனக் கருதப்படும் உறுப்பினரிடையேயான நெருங்கிய தொடர்பு, ஒருவரை யொருவர் நன்கு அறிந்திருத்தல், சமுதாயத்துடன் ஒன்றியிருக்கும் திறம் ஆகிய நடைமுறையில் கடைப்பிடிக்க சிறியபரப்பு ஆட்சி எல்லையுள்ள சங்கத்தில் மட்டுமே முடியும். சங்கத்தின் செயல் எல்லையின் பரப்புப் பெரியதாக அமைந்தால் மேற்கண்ட தன்மை களுடன் அது செயல்படுவது அரிது.

4. சங்கங்களில் அலுவல் வகிப்போர் (Office-bearer) எவ் வகையிலும் ஊதியம் பெறாது சேவை செய்யவேண்டும்.

5. கூட்டுறவு நாணய நடவடிக்கைகளுக்கு வாய்மை (Honesty) அடிப்படைக்கூறாக அமைதல்வேண்டும்.

6. தடையற்ற உறுப்பினர்நிலை நிலவவேண்டும். ஆனால், சங்கத்திற்கு இழுக்கு விளைவிக்கக்கூடிய விரும்பத்தகாத, நல்லொழுக்கமற்ற, நேர்மை நோக்கமற்ற நபர்களை உறுப்பினர் களாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

7. கூட்டுறவுத் தத்துவங்களைத் தெளிவாக அறிந்து உணர்ந்த உறுப்பினர்களால்தான் சங்கத்தைச் சிறப்பாக நடத்த முடியுமாகையால் ஒவ்வோர் உறுப்பினரும் கூட்டுறவுத் தத்து வங்களை நன்கு அறிந்திருத்தல் அவசியம்.

8. சங்கம் ஊகவாணிக நோக்குடன் செயல்படக்கூடாது.

9. ஊகவாணிக (Speculative) நோக்கங்களுக்குக் கடன் வழங்கப்படலாகாது.

10. உறுப்பினர்களிடையே சிக்கனம், சேமிப்பு என்ற பண்புகளை வற்புறுத்திச் சங்கமே தனக்குத் தேவைப்படும் முதல் திரட்டிக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

11. அதனுடைய அடிப்படைத் தன்மையையும் நோக்கத்தை யும் இழக்குமளவுக்குக் கூட்டுறவுக் கடன் மிகமிக மலிவானதாக வும், கிடைத்தற்கு மிக எளியதாகவும் இருத்தலாகாது.

12. அவசரப்பட்டும் அதிவேகமாகவும் சங்கங்களை நிறுவுதல் கூடாது. பயன்பெறக்கூடியவர்களே விரும்பிச் சங்கங்களை

அமைப்பதே முறையாகும். மேலிடத்தில் விரும்புகின்ற காரணத்தால் அமைக்கப்படுகின்றது என்ற நிலை நல்லதல்ல.

13. குறித்த காலத்தில் தேவைப்பட்டோர்க்குக் கடன் வழங்குதல் எவ்வளவு முக்கியமானதோ அதேபோன்று ஒழுங்காக, காலக் கிரமப்படி சங்கத்திற்கு வரவேண்டிய தொகைகளை வசூல் செய்வதும் மிகவும் முக்கியமானதாகும்.

14. விற்பனை, கொள்முதல் போன்ற கடன் சார்பற்ற நடவடிக்கைகளுக்குச் சங்கங்கள் அமைக்கப்படுவதை ஊக்குவிக்க வேண்டும்.

15. எல்லாச் சங்கங்களும் காப்பு நிதி ஏற்படுத்தவேண்டும்.

16. குறிப்பிட்ட நோக்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் அதற்குப் பயன்படுத்தப்படவில்லையாயின் கடனை உடனே திருப்பிக் கட்டி விடும்படிச் சங்கம் கோரவேண்டும்.

17. கால முறைப்படி தணிக்கை செய்தும், அவ்வப்போது ஆய்வு (Inspection) நடத்தியும் தீய அல்லது தவறான முறை நிருவாகம் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளுவதன் வழி மக்களிடையே இயக்கத்தின்மீது நம்பிக்கையூட்டவேண்டும்.

18. பொதுவாக ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற நியதி இருக்கவேண்டும். சங்க உறுப்பினர் பொறுப்பு வரையறுக்கப்படாததாக இருக்கவேண்டும்.

மாக்லகன் குழுவின் பரிந்துரைகள் மிகவும் சிறந்தவையாகக் கருதப்பட்ட போதிலும் அவற்றில் சிலவே அமுலாக்கப்பட்டன. 1918-19ஆம் ஆண்டு இறுதியில் கடன் சார்புற்ற சங்கங்கள் 28,977, கடன் சார்பற்ற சங்கங்கள் 1,971 இருந்தன. இவற்றில் 12,29,000 உறுப்பினர்களிருந்தனர். இச் சங்கங்களின் மொத்த நடைமுறை முதல் ரூ. 10.26 கோடியாக இருந்தது.

மூன்றும் கட்டம் (1919—29)

மாக்லகன் குழுவின் பரிந்துரைகளைப் பெருமளவில் செயல்படுத்து முன்னர் இந்திய அரசியல் வரலாற்றில் முக்கிய ஒரு திருப்பம் உண்டாயிற்று. 1919ஆம் ஆண்டில் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் எனப்படும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் சட்டம் இயற்றப்பெற்றது. இச் சட்டப்படி, கூட்டுறவு, மாகாண அரசாங்கம் ஏற்று நடத்தவேண்டிய துறையாயிற்று. இதே நேரத்தில் முதல் உலகப் போர் முடிவுற்றுப் பொருளாதார வீக்கமும் உயர்ந்துசெல்லும் விலைவாசியும்

நாட்டில் தலைதூக்கி நின்றன. இந்தச் சூழ்நிலை கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்தது.

மாகாண அரசாங்கங்கள் கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டின. 1912ஆம் ஆண்டு இயற்றப்பெற்ற மத்தியச் சட்டம் போதுமானதாக இல்லையென்று கருதி மாகாண அரசினர் தமக்குத் தேவைப்பட்ட முறையில் சட்டமியற்ற முற்பட்டனர். முதன் முதலில் பம்பாய் மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1925ஆம் ஆண்டு இயற்றப்பெற்றது.

பல மாகாணங்களில் கூட்டுறவு விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. மத்திய மாகாணங்கள்—பீரார் மாகாணத்தில் கிங் குழு (King Committee) 1922ஆம் ஆண்டிலும், ஐக்கிய மாகாணங்களில் ஒக்டன் குழு (Oakden Committee) 1925ஆம் ஆண்டிலும், சென்னை மாகாணத்தில் டௌன்செண்ட் குழு (Townsend Committee) 1928ஆம் ஆண்டிலும் அமைக்கப்பட்டன. 1927இல் விவசாயத்தின்மீதான அரசுக் குழு (Royal Commission on Agriculture) வேளாண்மை வளர்ச்சிக்குக் கூட்டுறவுகள் அமைப்பதுபற்றிப் பல யோசனைகளை அளித்தன. 'கூட்டுறவு இயக்கம் தோற்குமேயாயின், கிராமப்புற இந்தியாவின் பெரு நம்பிக்கை தோற்றுப்போகும்' என்று இக் குழு குறிப்பிட்டது.

நான்காம் கட்டம் (1930—1940)

திட்டமிடாது வளர்ந்து வந்த கூட்டுறவு இயக்கம் 1929 இறுதியில் துவங்கிய பொருளாதார மந்தத் (Depression) தினல் பெரிதும் பாதிக்கப்பட்டது. விவசாய விளைபொருள்களின் விலை மிகவும் குறைந்துசென்று விவசாயிகளின் வருமானத்தைக் குறைத்தது. இதனல் தவணைகடந்த பாக்கி மிகுந்து கூட்டுறவுச் சங்கங்கள் அளித்த கடன்கள் திரும்பி வராமல் நின்றன. இவற்றின் விளைவாக மத்திய வங்கிகளும், மத்திய நிதிவழங்கு முகமைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

இத்தருணத்தில் இந்திய அரசினர் மைய வங்கிய விசாரணைக் குழு (Central Banking Enquiry Committee) வினை 1931ஆம் ஆண்டில் அமைத்து, கூட்டுறவு இயக்கத்தின் அன்றைய நிலையை ஆய்ந்து அது மேலும் சிறந்து வளர்வதற்கான வழிவகைகளை வகுத்துக் கூறுமாறு பணித்தனர். இக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் 1934ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வு வங்கி (Reserve Bank of India) நிறுவப்பெற்றது. இந் நிகழ்ச்சி, இந்தியப் பொருளாதாரத்

துறையிலும் கூட்டுறவு இயக்கத்திலும் மிகப்பெரும் சிறப்புவாய்ந்த தொன்றாகக் கருதப்படுகிறது. ரிசர்வு வங்கியில் விவசாயக் கடன் பிரிவு (Agricultural Credit Department) ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இப் பிரிவு கூட்டுறவுத்துறையின் ஒழுங்கான, சீரான வளர்ச்சிக்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிய செய்திகளையும், புள்ளிவிவரங் களையும் இப் பிரிவு திரட்டி, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிவசதி யளிக்குமுன் அவற்றின் நிலைமையைத் திருத்துமாறு மாகாண அரசாங்கங்களுக்கு அறிவுறுத்தும் பொறுப்பையும் இப் பிரிவு மேற் கொண்டது.

இதற்கிடையே பல மாகாண அரசாங்கங்கள் கூட்டுறவுச் சட்டங்கள் இயற்றலாயின. 1932இல் சென்னை, 1935இல் பீகார், ஒரிசா, 1937இல் குடகு (Coorg), 1940இல் வங்காளம் ஆகிய அரசுகள் 1912ஆம் ஆண்டு மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தை யொட்டி கூட்டுறவுச் சங்கங்களின் சட்டமியற்றின. இச் சட்டங்கள் பதிவாளருக்குப் பெருமளவு அதிகாரங்களை வழங்கின.

1929ஆம் ஆண்டில் தலைதூக்கிய பொருளாதார மந்தநிலையே கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குக் குந்தகமாக அமைந்தது என்று கூறுவது பொருந்தாது என்று சிலர் கருதுகின்றனர். அளவுக்குமீறி கடனளித்தல், கடன் கோருபவரின் திருப்பிச் செலுத்தும் திறன் (Repaying Capacity) நோக்காது கடனளித்தல், கிராமச் சங்கங்களின் நடவடிக்கைகள்மீது கண்காணிப்பு இல்லாமை, பொய்க் கணக்கு, கூட்டுறவுத் தத்துவங்களைக் கடைப் பிடிக்காமை போன்ற பலப்பல காரணங்களால் இயக்கத்தின் வளர்ச்சிக் குன்றி நின்றது. 1935-36 முதல் மீண்டும் கூட்டுறவு இயக்கம் வளரத் துவங்கியது. பல மாகாண அரசாங்கங்கள் அளித்த நிதியுதவியினால் மந்தநிலையிலிருந்து விடுபட்டுக் கூட்டுறவு இயக்கம் மீண்டும் தலையெடுக்கலாயிற்று.

ஐந்தாம் கட்டம் (1941—1947)

ரிசர்வு வங்கியின் விவசாயக் கடன் பிரிவு முழு மூச்சுடன் செயல்படத் துவங்கிற்றோ என்னவோ அதற்குள் இரண்டாம் உலகப் போர் துவங்கிவிட்டது. போரினால் ஏற்பட்ட விளைவுகள் பல விவசாய விளைபொருள்களின் விலை உயர்ந்துவிட்டது. பணத் தின் மதிப்புக் குறைந்து வந்தது. மக்கள் கைகளில் பணநடமாட்டம் மிகுந்தது. இவற்றின் காரணமாகத் தவணைகடந்த கடன்கள் விரைவாக வசூலிக்கப்பட்டன; கூட்டுறவின் நிதிநிலைமையில்

சற்று முன்னேற்றம் தெரிந்தது. நன்கு நிருவகிக்கப்பட்ட கூட்டுறவுகள் கணிசமான தொகைகளை வைப்புக்களாக ஈர்த்தன. புதிய கடன்கள் கோருவது குறைந்துவிட்டது. இதனால் வங்கிகளிடம் மிகுதிப் பணம் தேங்கி நிற்கலாயிற்று.

கடன் சார்பற்ற (non-credit) துறையிலும் கூட்டுறவு இயக்கம் நல்லதொரு முன்னேற்றம் கண்டது. வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களை மக்களிடையே ஒழுங்காகப் பங்கீடு செய்ய கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் பல அமைக்கப்பெற்றன. நியாயமான விலைக்குக் கட்டுப்பாட்டு முறைக்குள் அடங்கியிருந்த பண்டங்களை விற்பனை செய்ய கூட்டுறவுப் பண்டசாலை தக்கதொரு சாதனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. விற்பனை, கொள்முதல்; குடிசைத் தொழில், வீட்டுவசதிபோன்ற பலப்பல துறைகளில் புதிய வகையான கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

இந்திய அரசு 1944ஆம் ஆண்டு பேராசிரியர் டி. ஆர். காட்கில் தலைமையில் விவசாய நிதியக் குழு (Agricultural Finance Committee) என்னும் குழுவினை அமைத்து விவசாய, கால்நடை வளர்ச்சிக்குக் குறுகியகால, நீண்டகாலக் கடன்களை வழங்கவும், கடன் சுமையைக் குறைக்கவும் வழி வகைகளைக் கூறுமாறு பணித்தது. கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி இக் குழு குறிப்பிட்டுப் பேசுகையில், ‘கிராமப் பொருளாதாரப் பிரச்சினைகளை—அதிலும் குறிப்பாக விவசாயக் கடன் பிரச்சினைகளைப் பொருத்தமட்டில், கூட்டுறவு இயக்கத்தைப் பரப்புவதொன்றே நிலையான, சிறந்த தீர்வு முடிவாகும்’ என்று கூறியது.

கூட்டுறவு வளர்ச்சிக்குத் தக்கதொரு திட்டத்தைத் தயாரிப்பது மிகவும் அவசியமென 1944ஆம் ஆண்டில் கூடிய பதினான்காம் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்கள் மாநாடு பரிந்துரைத்தது. இதன் பேரில் 1945ஆம் ஆண்டு கூட்டுறவுத் திட்டக்குழு (Co-operative Planning Committee) என்ற குழுவை இந்திய அரசு நியமியத்தது. இக் குழுவின் தலைவர் திரு. ஆர். ஜி. சரய்யா (R. G. Saraiya)

கூட்டுறவுத் திட்டக் குழு கூட்டுறவு இயக்கம் அளவாகவே வளர்ந்துள்ள காரணங்கள், அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கை, மக்களின் அறியாமை, மிகச் சிறிய பிரதம சங்கங்கள், ஊதியம் பெறு அலுவலரின் பணியை மிகப் பெரிதும் எதிர்நோக்கி இருந்ததாலுண்டான திறமையற்ற நிருவாகம் என்று கூறிற்று. கூட்டுறவு, விவசாயிகளின் பொருளாதாரத் தேவைகளனைத்தையும் நிறைவு செய்வது மட்டுமல்லாமல் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகவும் அமையவேண்டும். அடுத்த 10

ஆண்டுகளில் குறைந்தது நாட்டிலுள்ள கிராமங்களில் 50 விழுக்காடும், கிராம மக்கள் தொகையில் 30 விழுக்காடும் கூட்டுறவுச் சங்கங்களால் உள்ளடக்கப்படவேண்டும். எந்தக் கூட்டுறவுச் சட்டத்தில் எவ்வாறு கண்டிருந்தாலும், ஒரு கிராம நாணயச் சங்கத்தில் குறைந்தது 50 உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். கொள்முதல், விற்பனை செய்யும் சந்தையிடுகைச் (marketing) சங்கங்கள் அமைத்து உறுப்பினர்களின் விளை பொருள்களை வாங்கல், விற்றலின் மூலம் சந்தையில் காணப்படும் தீய ஒழுங்கற்ற ஏமாற்று நடவடிக்கைகளை அறவே ஒழிக்க வேண்டும். இதுபோன்ற நல்ல பல பரிந்துரைகளைச் சரய்யா குழு அளித்தது.

பிரிட்டிஷார் 1947 ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியாவுக்கு அரசியல் விடுதலையளித்துச் சென்ற சமயம் நாட்டின் கூட்டுறவு இயக்கம் எந்த நிலையிலிருந்தது என்பதை நோக்குவோம். ஜூன் 1947இல் 91 இலட்சம் உறுப்பினர்கள் கொண்டு 1.39 இலட்சம் சங்கங்கள் செயல்பட்டுவந்தன. இச் சங்கங்களின் மொத்த நடைமுறை முதல் ரூ. 156 கோடியாக இருந்தது. மொத்தச் சங்கங்களில் 73 விழுக்காடு பிரதம நாணயச் சங்கங்களாயிருந்தன. சந்தையிடுகைச் சங்கங்கள் (Marketing Societies) 7,600 செயல் பட்டு வந்தும் அவை விற்ற சரக்கின் மதிப்பு ரூ. 3 கோடியாக மட்டுமே இருந்தது. இதிலும் பெரும்பாலும் பங்கீட்டு ஏற் பாட்டையொட்டி உணவுதானியங்கள், துணி போன்ற இன்றி யமையாப் பொருள்கள் வழங்கியது பெரும்பகுதியாகும். போர்க் காலத்தில் ஏற்பட்ட பற்றாக்குறை நிலையில் கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் ஏறத்தாழ நல்லமுறையில் செயல்பட்டன. போர்க் காலம் முடிந்து கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டபின் இக் கூட்டுறவுகள் தனியார்துறை வியாபாரிகளுடன் போட்டிப்போட்டு உய்வ தரிது என்று உணர்ந்தன. கூட்டுறவு நகர வங்கிகள் ஓரளவுக்கு நல்லமுறையிலேயே இயங்கிவந்தன. இதற்குக் காரணம் அவை மக்கள் தேவையையொட்டி அமைக்கப்பட்டதேயாகும். பிற துறைகளில் கூட்டுறவு முன்னேற்றம் காணவில்லையென்றே கூறலாம்.

சுருங்கக் கூறின் நம்நாடு விடுதலையடையுமுன் கூட்டுறவு திட்டமிட்டு வளரவில்லை; வளர்ச்சியும் ஒரு சீராக இல்லை; இயக்கம் அரசினர் தூண்டுதலின் பேரில் அமைக்கப்பட்டாலும் அரசினரிடம் அதிகமான நிதியுதவி பெறவில்லை; இயக்கத்திலுள்ள சங்கங்கள் பெரும்பாலும் கடன்வழங்கும் சங்கங்களாகவும், ஓரளவு நுகர்வோர் சங்கங்களாகவு மிருந்தன.

4. சுதந்திர இந்தியாவில் இயக்கத்தின் வளர்ச்சி

இந்தியா விடுதலைபெற்றது முதல் கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்தில் ஒரு புதிய கட்டம் துவங்கியது. அரசு, கூட்டுறவு இயக்கத்தை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தலாயிற்று. நாட்டுப் பிரிவினையால் அல்லலுற்ற அகதி களுக்கு மறுவாழ்வளிக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப் பட்டன. அச் சங்கங்களுக்கு அரசு ஊக்கமளித்தது. இரண்டாம் போர் முடிவுற்றதும் வேலையிழந்த இராணுவத்தினருக்கு மறுவாழ் வளிக்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் கைகொடுத்து உதவின.

மக்கள் நல்வாழ்வினையே தமது குறிக்கோளாகக்கொண்டு அரசாங்கம் இயங்கிவரலாயிற்று. சமதரும சமுதாயத்தை உருவாக்க, திட்டமிட்டப் பொருளாதாரம் அவசியம் என்று உணரப்பட்டது. நாட்டில் பொருளாதார, சமுதாய மக்களாட்சி உண்மையிலேயே நிலவ மக்களாட்சிமுறையில் திட்டங்கள் வகுக்கப்பெற்று நிறைவேற்றப்படவேண்டு மென்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். மக்களாட்சிமுறை பொருளாதாரத் திட்டங் களைத் தீட்டுவதில் கூட்டுறவுச் சங்கம் சிறந்ததோர் சாதனமாக விளங்குகிறது. மக்களிடையே திட்டத்திற்கு ஆதரவு திரட்டி அதை நிறைவேற்றுவதிலும் அவர்கள் அக்கறை காட்டும்வகையில் அவர்களிடையே செய்தியைப் பரப்பக்கூடிய உள்ளூர் நிலையம் கூட்டுறவுச் சங்கமே எனக் கூட்டுறவுத் திட்டக் குழு கூறியுள்ளது.

நாட்டிலுள்ள இயற்கை வளங்களையும் ஆள் திறனையும் நல்ல முறையில் பயன்படுத்தி, செல்வம் ஒரு சிலரிடம் மட்டும் குவிந்து கிடக்காது பரவலாக மக்களிடையே பகிரப்படுவதற்குப் பொரு ளாதாரத் திட்டங்களை வகுப்பது மிகவும் அவசியம் என்று உணரப் பட்டது. 1950ஆம் ஆண்டு இந்திய அரசு திட்டக் குழுவினை அமைத்தது. இக் குழு ஏப்ரல் 1951 முதல் மார்ச்சு 1956 முடிய

உள்ள ஐந்தாண்டுகளுக்கு ஒரு திட்டம் தீட்டியது. இதுவே முதல் ஐந்தாண்டுத் திட்டம் எனப் பெயர்பெற்றது. உற்பத்திப் பெருக்கம், முழு வேலைவாய்ப்பு, பொருளாதாரச் சமத்துவம், சமுதாய நீதி ஆகிய அடிப்படைக் குறிக்கோள்களை அடைய முதல் ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது.

திட்டமிட்டப் பொருளாதாரத்தில் கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பங்கு ஏற்கவல்லன என்று திட்டக் குழு உறுதியாக நம்பியது. மக்களாட்சியில் திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குக் கூட்டுறவு அமைப்பு மிகவும் இன்றியமையாதது என்று திட்டக் குழு கூறியது. பரஸ்பர உதவி, தன்னுதவி, சிக்கனம் ஆகிய பண்புகளை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவு அமைப்பு, மக்களாட்சி முறை வாழ்க்கையில் தேவைப்படும் தன்னம்பிக்கையை வளர்க்கிறது. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் தமக்குள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதன்வழியும், தமது அனுபவத்தையும் அறிவையும் ஒன்று திரட்டுவதன்வழியும், தனிப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பது மட்டுமல்லாமல் நாட்டில் நல்ல குடிமக்களாகவும் திகழ்வர் என்று முதல் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை கூறியது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவுகளுக்கு இடப் பட்ட பணிகளைக் காண்போம்.

சமூக நோக்கு, பரஸ்பர நன்மை, தொடங்குநிலை முயற்சி ஆகிய ஒன்றுகூடிய, மக்களாட்சிமுறை திட்டத்தை வகுக்க உகந்த, கருவியாகக் கூட்டுறவு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தனது உறுப்பினர்களின் பல்வகைத் தேவைகளை நிறைவு செய்யும்வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமையவேண்டும்.

1955–56 ஆண்டுக்குள் இந்தியாவிலுள்ள கிராமங்களில் 50%, கிராமமக்கள் தொகையில் 30% கூட்டுறவின் பரப்பிற்குள் சேர்க்கப்படவேண்டும்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் விவசாய உற்பத்திக்கு வழங்கப்படும் கடன் ரூ. 130 கோடி—ரூ. 100 கோடி குறுகிய காலக் கடன், ரூ. 25 கோடி மத்திய காலக் கடன், ரூ. 5 கோடி நீண்ட காலக் கடன்—ஆக உயரவேண்டும்.

கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை அமைக்க அரசாங்கம் ஊக்கமளிக்கவேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிவோர் தக்க பயற்சி பெற்றவர்களாக இருப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

கூட்டுறவுச் சந்தையிடுகையின் இன்றியமையாப் பணி பெரிதும் வற்புறுத்தப்பட்டது.

கிராமக் கூட்டுறவுகள் கிராமப் பஞ்சாயத்துடன் நெருங்கி இணைந்து செயல்படுவது அவசியம்.

அட்டவணை

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவு வளர்ச்சி

	1950-51	1955-56
1. பிரதம விவசாய நாணயச் சங்கங்களின் எண்ணிக்கை	1,15,462	1,59,939
2. உறுப்பினர் (இலட்சத்தில்)	51.54	77.91
3. சங்கமொன்றுக்குச் சராசரி உறுப்பினர் எண்ணிக்கை	45	49
4. கிராம மக்கள் தொகை உள்ளடங்கு சதவீதம்	10.3	15.6
5. வழங்கிய கடன் (ரூ. கோடியில்)	22.9	50.16
6. ஓர் உறுப்பினருக்குச் சராசரி கடன் (ரூ.)	45	64
7. ஒரு சங்கத்தின் சராசரி பங்கு முதல் (ரூ.)	727	1,051
8. சராசரி நடை முறைமுதல் (ரூ.)	3,547	4,946
9. ஒரு சங்கத்தின் சராசரி வைப்பு (ரூ.)	391	441
10. கொடுக்கவேண்டியதில் தவணை கடந்த பாக்கி (சதவீதம்)	21.0	25.0

முதல் திட்டத்தில் நிருணயித்த குறியீடுகளைக் கூட்டுறவு இயக்கம் அடைய முடியவில்லையென்பதை மேற்காணும் அட்டவணை விளக்கும். இதற்குப் பல காரணங்களுண்டு. நிருணயிக்கப்பட்ட குறியீடுகளை அடைவது பெரும்பாலும் கூட்டுறவு இயக்கத்திற்கே விடப்பட்டது. மாநில அரசுகள் குறியீடுகளை அடைய என்ன உதவிகள் செய்யும் என்று தெளிவாகக் கூறப்படவில்லை. கூட்டுறவு அமைப்பினுள் காணப்பட்ட குறைவான உறுப்பினர் எண்ணிக்கை, நலிந்த மூலதனம், சிறிதளவு கடன்

நடவடிக்கைகள், பெருமளவு தவணை கடந்த பாக்கி, சிக்கனம்—சேமிப்பு மேற்கொள்ளாமை போன்ற பல குறைபாடுகளும் இந்த நிலைமைக்குக் காரணமாக இருந்தன. கடன் நடவடிக்கைகள் சந்தையிடுகை நடவடிக்கைகளுடன் இணைக்கப்படாமலிருந்தன.

அகில இந்திய கிராமக் கடன் விசாரணைக் குழு (The All-India Rural Credit Survey Committee)

ஆகஸ்டு 1951இல் இந்திய ரிசர்வு வங்கி அகில இந்திய கிராமக் கடன் விசாரணைக் குழுவினை திரு. ஏ. டி. கோர்வாலா தலைமையில் நியமித்தது. ரிசர்வு வங்கி, இந்திய அரசு, மாநில அரசுகள் ஆகிய கிராமக்கடன் குறித்து ஒருங்கிணைந்ததோர் கொள்கையை உருவாக்கத் தேவைப்படும் புள்ளிவிவரங்களை இக்குழு சேகரித்துத் தருமென்று எதிர்பார்க்கப் பட்டது. இக் குழு டிசம்பர் 1954இல் தனது அறிக்கையைவெளியிட்டது. இவ் வறிக்கை நாட்டின் கூட்டுறவு இயக்க வரலாற்றில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்று கூறுவது மிகை யாகாது.

ஐம்பது ஆண்டுகளாகக் கூட்டுறவு இயக்கம் மக்களிடையே பரவியிருந்தபோதிலும் விவசாயிகளின் மொத்தக் கடன் தேவை களில் 3·1 விழுக்காட்டளவு மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டன. பெரும்பான்மையளவு கடன் தேவைகளை வட்டித் தொழிலரும், பெருநிலக்கிழார்—வட்டித் தொழிலரும், வியாபாரிகளும் நிறைவு செய்து வந்தனர் என்ற உண்மையைக் குழு உலகறிய எடுத்துரைத்தது. மற்றும் கூட்டுறவுக் கடன்களில் பெரும்பகுதி பெருநிலக்கிழார்களுக்கே சென்றது; சிறிய எளிய விவசாயிகள் கூட்டுறவினால் அடைந்த பயன் குறைவானதே என் றும் குழு கண்டது. இக் குழு 'கூட்டுறவு தோல்வி கண்டுள்ளது. ஆனால் கூட்டுறவு அவசியம் வெற்றி காணவேண்டும்' என்று றிற்று.

கிராமக் கடன் விசாரணைக் குழு பல அரிய யோசனைகளைத் தந்தது. அவற்றில் முக்கியமானவற்றைக் காண்போம்.

1. அரசு பங்கேற்றல் (State partnership) கூட்டுறவுகளுக்குப் பல வசதிகளையும், சலுகைகளையும் அரசு அளித்துவிட்டால் போதாது. கிராம வளர்ச்சி என்ற பெருங் குறிக்கோளையடைய, அரசு கூட்டுறவுகளுடன் கூட்டாளியாகிச் செயலில் தீவிரமாக முனையவேண்டும். கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்குத் தடையாக உள்ள ஊன்றிய நலமிகள் (vested interests) பிடி ஒரு பக்கம், திடமான நகரப் பொருளாதாரம் மற்றொரு பக்கம், என இருக்கும்

நிலையில், இரு ஆற்றல்களுக்குமிடையே சமப்படுத்தும் ஓர் ஆற்றலாக அரசின் பங்கேற்பு அமையும். அரசு பங்கேற்பது கூட்டுறவு நிலையங்கள்மீது மக்களுக்கு நம்பிக்கையை யூட்டவல்ல நிகழ்ச்சியுமாகும். இயக்கம் எந்த முறையில் நடந்து வருகிறது என்பதை அறிய அரசுக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அரசு, கூட்டுறவுகளின் பங்கு முதலில் பங்கு ஏற்பதன்வழி, அவற்றின் கடன் பெறுந்திறனை (borrowing power) மிகுதிப்படுத்தும். அரசு மூலதனத்தில் பங்கேற்பது என்பது அரசின் கட்டுப்பாடு மிகுதியாவது என்று பொருள்படாது. உச்சநிலையில், அரசு நேரடியாகக் கூட்டுறவு நிலையத்தின் பங்கு முதலுக்குப் பணம் வழங்கும் மாவட்ட நிலையில், உச்சநிலை கூட்டுறவு இதற்கென அரசிடம் பெற்ற தொகையினைக் கொண்டு மாவட்டக் கூட்டுறவுகளில் பங்கேற்கும். இதே போன்று மாவட்டநிலை கூட்டுறவுகள் இதற்கென அளிக்கப்பட்ட தொகையினைக்கொண்டு பிரதம கூட்டுறவுகளின் பங்கு முதலில் பங்கு எடுக்கும். சந்தையிடுகை, பக்குவப்படுத்தும் சங்கங்களில் அரசு எல்லா நிலைகளிலும் நேரடியாகப் பங்கு முதல் எடுத்துக் கொள்ளலாம். அரசின் பங்கேற்பு இயக்கத்தை வலுப்படுத்தும்.

மேற்கூறிய வண்ணம் கூட்டுறவுக் கடன் நிலையங்களில் மாநில அரசுகள் பங்குமுதல் எடுக்க நிதிவசதிக்கு என்ன செய்வது என்ற வினாவுக்கு விடையளிக்குமுகத்தான், விசாரணைக் குழு, புதியதொரு நிதியை ரிசர்வு வங்கி அமைக்கவேண்டுமென்று பரிந்துரை செய்தது. இந் நிதியே தேசீய விவசாயக் கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதி [National Agricultural Credit (Long Term Operations) Fund] என்பதாகும். இந் நிதியிலிருந்து (i) கூட்டுறவுக் கடன் நிலையங்களில் மாநில அரசுகள் பங்குகள் வாங்கவும், (ii) விவசாய நோக்கங்களுக்கு நடுத்தரகாலக் கடனளிக்கவும், (iii) மத்திய நில அடைமான (தற்போது நிலவள) வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்கள் (debentures) வாங்கவும், அவ் வங்கிகளுக்குக் கடனளிக்கவும் கடன் தரப்படவேண்டும்.

விசாரணைக் குழு விவசாயத்திற்கு அளிக்கப்படும் கடன் பயிர்க் கடனாக (Crop loan) இருக்கவேண்டுமென்று வற்புறுத்தியது. இதுகாறும் தக்க பிணையத்தின்மீது கடன் அளிப்பது ஒரு முக்கியக் கூறாகக் கருதப்பட்டது. இனி விளைவிக்கப் போகும் பயிரைப் பிணையாக ஏற்றுக்கொண்டு, குறிப்பிட்ட பயிரை விளைவிக்க இவ்வளவு விகிதப்படி கடனளிக்கப்படும் என்று கடனளவை நிருணயிக்கவேண்டும். கடனில் பெரும்பகுதி பொருளாக—உரம், விதை, பூச்சி மருந்து போன்று-தரப்படவேண்டும். தக்க தவணைகளில் தக்க பருவத்தில் கடன் தரப்பட

வேண்டும். தக்க மேற்பார்வை, முறைப்படி திரும்ப வசூலித்தல் ஆகியவற்றிற்கு முறையான ஏற்பாடுவேண்டும். நீண்டகாலக் கடன் உற்பத்தி நோக்கங்களுக்கு மட்டுமே அளிக்கப்படவேண்டும்.

பிரதம சங்கங்கள் பெரிய அளவினதாக இருத்தல்வேண்டும். உறுப்பினர் பொறுப்பு வரையறுத்ததாக இருக்கவேண்டும். இச் சங்கங்கள் தமது ஆட்சி எல்லேக்குள் குறிப்பிட்ட சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களேக் கொண்டிருக்கவேண்டும்.

விசாரணைக் குழுவின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்று கடனேச் சந்தையிடுகையுடன் ஒருங்கிணைத்தலாகும். அதாவது விவசாயக் கடன் சங்கங்களும் சந்தையிடுகைச் சங்கங்களும் இணைந்து செயல்படுதலாகும். விவசாயத்திற்கு அளிக்கப்படும் கடனைத் தீர்க்க, விளைபொருளேச் சந்தையிடுகை சங்கமூலமாக விற்பனை செய்வது ஒரு முக்கிய நிபந்தனையாக விதிக்கப்படவேண்டும். இந்த நிபந்தனைக்கு உட்படும் உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் வழங்கவேண்டும்.

கிராமப்புறங்களில் வங்கிய வசதிகள், பணமனுப்புகை வசதிகள் பரவவும், கூட்டுறவு வங்கிகளின் தேவைகளை அனுசரித்துச் செயல்படவும் அரசு பங்கேற்ற கிராமப்புறங்களில் கிளைகளுள்ள இந்திய அரசினர் வங்கி நிறுவப்பட வேண்டுமென்று விசாரணைக் குழு பரிந்துரைத்தது.

முன்னர்க் குறித்த தேசிய விவசாயக் கடன் (நீண்டகால நடவடிக்கை) நிதி தவிர, மற்றொரு நிதியினேயும் ரிசர்வு வங்கி நிறுவவேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டது. அதுவே தேசிய விவசாயக் கடன் (நிலைபேறுக்க) நிதி [National Agricultural Credit (Stabilization) Fund] எனப்படுவதாகும். வறட்சி, பஞ்சம் போன்ற இயற்கையின் கொடுமைகளால் ஏற்படும் நிலேயைச் சமாளிக்கக் குறுகியகாலக் கடன்களை மத்தியகாலக் கடன்களாக மாற்றித்தர மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு மத்தியகாலக் கடன்கள் அளிக்க இந் நிதி ஏற்படுத்தப்படவேண்டு மென்று பரிந்துரைக்கப்பட்டது.

இந்திய அரசு கீழ்க்காணும் மூன்று நிதிகளை அமைக்கவேண்டு மென்றும் குழு பரிந்துரைத்தது. அவையாவன: தேசியப் பண்டக வளர்ச்சி நிதி (National Warehousing Development Fund), தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிதி (National Co-operative Development Fund), தேசிய விவசாயக் கடன் (சுமைத்தணிவு, பொறுப்புறுதி)

நிதி [National Agricultural Credit (Relief and Guarantee) Fund] கூட்டுறவுச் சந்தையிடுகை (Marketing) வளம்பெற நாடெங்கிலும் கிடங்குகளும், பண்டகங்களும் கட்டப்படுவது மிகவும் இன்றியமையாதது. இதைக் கவனிக்கவும் அனைத்திந்திய, மாநில மட்டத்தில் பண்டகங்களை நிறுவவும் தேசீயப் பண்டக வளர்ச்சி நிதி உதவும். கூட்டுறவுச் சந்தையிடுகை, பதப்படுத்து (Marketing, processing) சங்கங்களின் பங்கு முதலுக்குத் தொகை வழங்க மாநில அரசுகளுக்குக் கடன் அளிக்கும்பொருட்டுத் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி நிதி நிறுவப்படவேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது. கூட்டுறவுக் கடன் அமைப்பை நிலைகுலையச் செய்யும் நிகழ்ச்சியேதுமேற்பட்டால் பாதிக்கப்பட்ட நிலையங்களின் துன்பத்தைக் குறைக்கவும், ரிசர்வு வங்கி அரசாங்க உத்தரவாதத்தின் பேரில்கொடுத்த கடன்கள் திரும்பித் தரப்படா நிலையில் உத்தரவாதப் படி அரசு தனது பொறுப்பை நிறைவேற்றுவதனுல் ஏற்படும் சுமையைத் தணிக்கவும் தேசீய விவசாயக் கடன் (சுமைத் தணிவு, ஒப்புறுதி) நிதி உதவுமென எதிர்பார்க்கப்பட்டது.

கூட்டுறவுச் சீரமைப்பும் வளர்ச்சியும் உண்மையிலே உருப்பெற, பயிற்சிபெற்ற கூட்டுறவு அலுவலரின் சீரிய உழைப்பும் அயராத பணியும் தேவையென்பதை நன்குணர்ந்த விசாரணைக் குழு எல்லாமட்டங்களிலும் கூட்டுறவு ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்க மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் குழு அமைக்கப்படவேண்டுமென்று பரிந்துரைத்தது.

கிராமக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகளில் பெரும்பான்மையானவை மத்திய அரசினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இம்பீரியல் வங்கியின் நிருவாகத்தை அரசு ஏற்று, பெரும்பான்மை பங்குமுதலை அரசு தன்வசம் எடுத்துக்கொண்டதால் அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட இந்திய ஸ்டேட் வங்கி (State Bank Of India) 1955இல் நிறுவப்பட்டது. முன்னர்க் கண்ட தேசீய நிதிகளை ரிசர்வு வங்கி ஏற்படுத்த வகைசெய்யும்பொருட்டு ரிசர்வு வங்கிச் சட்டம் திருத்தப்பெற்றது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1956-61) கூட்டுறவுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்திலிருந்து, விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் செயலாற்றப்படவேண்டுமென அரசினருக்கிருந்த ஆர்வத்தை அறிந்து கொள்ளலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 7.11 கோடி இரண்டாவது திட்டத்தில் ரூ. 47 கோடியாக உயர்ந்தது. கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்குக் கீழ்க்கண்ட குறியீடுகள் நிருணயிக்கப்பட்டன:

1. பெரிய சங்கங்கள் நிறுவப்படவேண்டுவது: 10,400

2. குறுகிய காலக்கடன் அளிக்கப்படவேண்டுவது:
ரூ. 150 கோடி

3. அளிக்கப்படவேண்டிய மத்திய காலக் கடன்: ரூ. 50 கோடி

4. அளிக்கப்படவேண்டிய நீண்ட காலக் கடன்: ரூ. 25 கோடி

5. துவக்கவேண்டிய பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள் 1,800

6. அமைக்கவேண்டிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள். 35

7. அமைக்கவேண்டிய கூட்டுறவு பஞ்சுவிதை நீக்கும் ஆலை 48

8. பிற பக்குவப்படுத்தும் ஆலைகள் 118

9. மத்திய, மாநிலப் பண்டகக் கூட்டுருக்கள்
அமைக்கவேண்டிய பண்டகங்கள் 350

10. சந்தையிடுகைச் சங்கங்கள் கட்டவேண்டிய
கிடங்குகள் 1,500

11. கிராமத்திலுள்ள பெரிய அளவு சங்கங்கள் கட்ட
வேண்டிய கிடங்குகள் 4,000

இரண்டாம் திட்டத்தில் கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்குப் பெருந்திட்டங்கள் மாநில அரசுகளால் தீட்டப்பட்டன. கூட்டுறவுப் பண்ணை அமைத்து நிலச்சீர்திருத்தம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கிராம, சிறு தொழில்கள் வளர உற்பத்தியாளர் கூட்டுறவுகள், சந்தையிடுகை, அளிப்பு (Marketing, Supply) கூட்டுறவுகள் ஏற்படுத்தத் திட்டத்தில் வகை செய்யப்பட்டது. அடுத்த பதினைந்து ஆண்டுகளில் வாணிகத் துறையில் பாதி, கடனளித்தல் உட்பட, கூட்டுறவு அடிப்படையில் நடத்தப் படவேண்டுமென்ற பெரு நோக்கு இருந்தது.

விவசாயக் கடன், சந்தையிடுகை, பக்குவப்படுத்தல், கிராமப் புறங்களில் கூட்டுறவு உற்பத்தி, கைவினைஞர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு, கட்டடக் கூட்டுறவு ஆகிய துறைகள் கூட்டுறவுக்கென ஒதுக்கப்படுதல் வேண்டுமென்ற கருத்து நிலவிவந்தது. கூட்டுறவு முறையில் சமுதாய அமைப்பும், கிராம நிருவாகமும் அமைவதும் குறிக்கோளாக இருந்தன.

அட்டவணை

இரண்டாம் திட்டகாலத்தில் கூட்டுறவு இயக்க வளர்ச்சி

		1955-56	1960-61
1.	சங்கங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	2.40	3.32
2.	பிரதம சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை (இலட்சத்தில்)	176	342
3.	பங்கு முதல் (ரூ. கோடியில்)	77	221
4.	நடை முறை முதல் (ரூ. கோடியில்)	469	1312
5.	பிரதம சங்கங்கள் வழங்கிய கடன் ரூ. கோடியில்)	50	203
6.	கூட்டுறவுக்குள் அடங்கிய கிராமங்களின் விழுக்காடு	—	75
7.	பிரதம நாணயச் சங்கங்கள் தம்முள்ளடங்கிய கிராம மக்கள் தொகை விழுக்காடு	12	24
8.	உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்ட சராசரி கடன் தொகை ரூ.	64	119
9.	சங்கமொன்றுக்குச் சராசரி உறுப்பினர்	49	80
10.	சங்கமொன்றுக்குச் செலுத்திய முதல் சராசரி ரூ.	1,051	2,722
11.	சங்கமொன்றுக்குச் சராசரி வைப்புத் தொகை ரூ.	441	688
12.	சங்கமொன்றுக்குச் சராசரி நடைமுறை முதல் ரூ.	4,946	12,913

கூட்டுறவும் சமுதாய வளர்ச்சியும்

சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் கூட்டுறவு மிகவும் சிறப்பானதோர் இடம் பெற்றுள்ளது. மக்கள் முயற்சியால், மக்கள் பெருமளவில் பங்கேற்றுப் பொருளாதாரச் சமூக மேம்பாட்டிற்கு வழிவகுப்பது சமுதாய வளர்ச்சித் திட்டம். தமக்குத்தாமே உதவிக் கொள்ள கிராம மக்களுக்கு உதவியளித்து மக்கள் மக்களாக வாழ வழிவகுப்பது சமுதாய வளர்ச்சித் திட்டம். கூட்டுறவும் சமுதாய வளர்ச்சித் திட்டமும் ஒரே அடிப்படை நோக்கங்கொண்டுள. இவையிரண்டும் ஒன்றிச் செயல்படவேண்டியதன் அவசியம் 1954இல் நடைபெற்ற மூன்றும் வளர்ச்சி ஆணையர் மாநாட்டில்

எடுத்துரைக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது குறிப்பிட்ட மக்கள் தொகைகொண்ட ஒரு பரப்பிற்குள் ளடங்கிய சில கிராமங்களுக்கும் ஒரு பலநோக்குக் கூட்டுறவு (Multi-Purpose Co-operative) அமைக்கப்படவேண்டும்; அதற்கு மேல் கட்டத்தில் சந்தையிடுகைச் சங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்று மாநாடு பரிந்துரைத்தது. இதையொட்டி பல சங்கங்கள் அமைக்கப்பட்டன. பின்னர் வட்டார (Block) அளவில் கூட்டுறவு இயக்கம் வளர, ஒவ்வொரு வட்டாரத்திலும் கிடங்கு வசதியுடன் கூடிய சந்தையிடுகைச் சங்கம் இருக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. வாய்ப்புள்ள வட்டாரங்களில் கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்தவேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டாரத்திலும் பால்பண்ணை, கோழிப்பண்ணை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, செங்கல் தயாரிப்பு, எண்ணெய் தயாரிப்பு, வெல்லம் பழுப்புச் சர்க்கரை தயாரிப்பு, கயிறு—பாய் தயாரிப்பு, போன்ற கிராமக் கைத்தொழில்களில் ஏதேனும் இரண்டினைக் கூட்டுறவு உற்பத்தி, சந்தையிடுகைச் சங்கங்களை அமைத்து வளர்க்கவேண்டுமென்று பரிந்துரைக்கப் பட்டது.

தேசீய வளர்ச்சி மன்றம் (National Development Council) கூட்டுறவு இயக்க விவசாய உற்பத்திப் பெருக்கத்திலும், கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும் ஆற்றிவரும் அருந் தொண்டினை ஆராய்ந்து, அதை மக்கள் இயக்கமாக, மேலும் சிறந்தமுறையில் செயலாற்ற சில யோசனைகளைத் தந்தது. கிராமச் சமுதாயத்தில் பிரதம உறுப்பாகக் கூட்டுறவுகள் அமைக்கப்பட வேண்டும்; கிராம அளவில் சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்குக் கிராமப் பஞ்சாயத்தும் கிராமக் கூட்டுறவும் முழுப்பொறுப்பு ஏற்கவேண்டும். கிராமக் கூட்டுறவில் எல்லாக் குடும்பங்களும் இடம்பெறவேண்டும். கிராமத்திற்குத் தேவையான விதை, தழை இலைஉரம் போன்றவைகளை உற்பத்தி செய்ய நிலையான ஏற்பாடுகள் இருக்கவேண்டும். கிராமச் சங்கங்கள் ஒன்றியங்கள் வழி இணைக்கப்பெறவேண்டும். சங்கங்கள் சந்தையிடுகைச் சங்கங் களோடு ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். தக்காவிக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வழியாகத் தரப்படவேண்டும். கிராமத் தலைவர்கள், பள்ளி ஆசிரியர்கள், கூட்டுறவில் செயலாளர்களாகப் பணியாற்றக் கூடிய கிராம இளைஞர்கள் முதலியோர்க்குப் பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுவது அவசியம். ஊதியம் பெருது உழைக்கும் அலுவல் பற்றற்ற ஊழியர்களைக் கூட்டுறவின்பால் ஈர்த்து இயக்கத்தை உயிர்த் துடிப்புள்ள ஆற்றல் மிக்கதாகச் செய்யும் வகையில் மாநிலங்கள் செயல்படவேண்டும். தேசீய

வளர்ச்சி மன்றத்தின் தீர்மானங்களில் சில விசாரணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஒவ்வாதிருந்தன. விசாரணைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தீட்டப்பட்ட இரண்டாம் திட்ட முயற்சிகளில் சில கைவிடப்பட்டன. முக்கியமாக, கூட்டுறவு இயக்கத்தில் அரசு பங்கேற்பது அல்லது தலையிடுவது என்ற கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டது தவறானது என்று பிரதமர் நேரு மூன்றாம் இந்தியக் கூட்டுறவு மாநாட்டைத் துவக்கி வைக்கும்போது குறிப்பிட்டது பலருக்கு அதிர்ச்சியைத் தந்தது. முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் குறிப்பிட்ட ஒரு திட்டப்படி சீரமைப்புச் செயல்படுத்தப்பட்டு வருகையில் திடுமெனக் கொள்கையை மாற்றுதல் திட்டக் குறியீடுகளை எட்டுவதைக் கடினமாக்கும். மேலும், விவசாயிகளுக்குக் கூட்டுறவு அமைப்பின் வழி நன்மை கிடைப்பதில் மேலும் தாமதமுண்டாகும் என்று பலர் கருதினர்.

கூட்டுறவுச் சட்டக் குழு
(Committee on Co-operative Law)

1912ஆம் ஆண்டு மத்தியச் சட்டத்தைத் தழுவி பெரும்பாலான மாகாணங்களில் கூட்டுறவுச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்த போதிலும், விரைவாக வளர்ந்துவரும் கூட்டுறவு இயக்கத்தின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யும்வகையில் இவற்றிலொன்றுகூட இல்லை. புதிய சூழ்நிலைகளுக்கேற்ற, சீரான, தெளிவான கூட்டுறவுச் சட்டம் வகுக்கப்படவேண்டுமென முதலாம் அகில இந்தியக் கூட்டுறவு மாநாடும் (பம்பாய்), பின்னர் 1955இல் நடைபெற்ற இரண்டாம் அகில இந்தியக் கூட்டுறவு மாநாடும் (பாட்னா) வற்புறுத்தின. இதற்கிடையே கிராமக் கடன் விசாரணைக் குழுவினரின் அறிக்கையும் வெளிவந்தது. அவ்வறிக்கையின் பரிந்துரைகளைச் செயல்படுத்தத் தேவைப்படும் சட்டத் திருத்தங்களையும், பொதுவாகக் கூட்டுறவு வளர்ச்சிக்குப் பொருந்தும் வகையில் கூட்டுறவுச் சட்டம் அமையவேண்டிய பாங்கையும் ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்கக்கோரி திரு. எஸ். டி. ராஜா தலைமையில் 1956ஆம் ஆண்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக் குழு 1957இல் தனது அறிக்கையை இந்திய அரசிற்குப் பணிந்தளித்தது. கூட்டுறவு இயக்கம் நாட்டின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் உரிய பங்கேற்றுச் சமதரும சமுதாயத்தை அடைய உதவும் வகையில் செயலாற்ற சட்ட விதிகள் அமைக்கப்பட வேண்டுவதை இக் குழு கருத்தில் கொண்டு பதிவாளரின் அதிகாரங்கள் உதவி அலுவலர்களிடையே அளிப்படைவு செய்யப்படவேண்டுமென்று பரிந்துரைத்தது. கூட்டுறவுச் சங்கங்களின்

பங்கு முதலில் மாநில அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கு எடுத்துக் கொள்ள மாதிரி மசோதாவில் பிரிவுகள் சேர்க்கப் பட்டன.

கூட்டுறவுக் கடன்மீதான குழு (Committee on Co-operative Credit)

தேசீய வளர்ச்சி மன்றத்தின் தீர்மானங்களுக்கு ஓர் உரு கொடுக்கவும், 1959இல் மைசூரில் நடந்த மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டில் கருதியவாறும் கூட்டுறவுகள் வழி பெருமளவில் விவசாயக்கடன் அளிப்பது குறித்துத் தீர ஆராய்ந் தது உறுதியான பரிந்துரைகளைச் செய்ய திரு. வைகுந்தலால் மேத்தா தலைமையில் 1959இல் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழு 1960இல் தனது பணியினை முடித்தது. வி. எல். மேத்தா குழு என்று கூறப்படும் இக் குழுவின் அறிக்கை பலவகைகளில் பெருஞ் சிறப்பு வாய்ந்ததாகும். கிராமக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகளையடுத்து மிக முக்கிய பரிந்துரைகளாக ஏற்றுச் செயல்படுத்தப்பட்டது. இக் குழுவின் பரிந்துரைகளேயாகும். எனவே இக் குழுவின் முக்கியப் பரிந்துரைகளைக் காண்போம் :

1. கிராமச் சமுதாயத்தை அடிப்படை அமைப்பாக மேற் கொண்டு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவேண்டும். சங்கங்களை வளமுற்றதாக அமைப்பதில் ஆர்வம் காட்டுகிற நேரத்தில் அதன் கூட்டுறவுத் தன்மை இழந்து போகாமல் காக்க வேண்டும். உறுப்பினர்களிடையே நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். சராசரி ஒரு சங்கம் 3,000 மக்கள் தொகைக்கு மிகாத 600 கிராமக் குடும்பங்கள் அல்லது 500 விவசாயக் குடும்பங்களுக்குச் சேவை செய்வதாக அமையவேண்டும். சங்கத்தின் அலுவலகத்திலிருந்து 3 அல்லது 4 கல் தொலைவுக்கு மிகாத பரப்பினைமட்டும் தனது செயல் எல்லையில் சங்கம் கொண்டிருக்கவேண்டும். ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற பொதுவிதியைக் கடைப்பிடித்தல் நன்று; மிகச் சிறிய கிராமமாக இருப்பின் மூன்று அல்லது நான்கு கல் தொலைவுக்குள் உள்ள சில கிராமங்களைச் சேர்த்து அவற்றிக்கு ஒரு சங்கம் அமைக்கலாம்.

2. அரசு, சங்கம் திரட்டும் பங்கு முதலுக்கு ஈடான தொகை யளவுக்கு சங்கங்களில் பங்கு முதல் போடலாம். இத் தொகை ரூ 1,000 முதல் ரூ. 10,000 வரை இருக்கலாமெனினும், பொது வாக ஒரு சங்கத்திற்கு ரூ. 2,000க்கு மேற்படாது அரசு பங்கு முதல் வழங்கலாம்.

3. அரசு திட்டத்தின் கீழ்த்தன்னிறைவுச் சங்கங்கள் (viable societies) அனைத்திற்கும் உதவித்தொகை (subsidy)

ரூ. 1,200 ஐந்தாண்டுகளுக்கு மிகாத காலத்திற்குக் கொடுக்கப்பட வேண்டும்.

4. கடனைத் திருப்பிச் செலுத்துந் திறனைக் (repaying Capacity) கணக்கிட்டுக் கடன்கள் வழங்கப்படவேண்டும். முடிந்தவரை, கடன் பொருளாக—விதை, உரம், கருவிகள் போன்ற பொருளாகத் தரப்படவேண்டும். தாம் வாங்கும் கடனளவில் ஒரு விகிதத்தைப் பங்கு முதலாக உறுப்பினர் எடுத்துக்கொள்ள வேண்டும். தான் செலுத்திய பங்கு முதலைப்போன்று 8 அல்லது 10 மடங்குக்கு மிகாமல் மட்டுமே தனிநபர் கடன் பெறலாம். ரூ. 200-க்குக் குறைவாகக் கடன் தேவைப்படுவோர் பங்கு முதலைத் தவணைகளில் கட்ட அனுமதிக்கப்படலாம்.

5. பொதுவாக ரூ. 500—க்குக் குறைவான கடன்களுக்குப் பிணையாக அடைமானம் கோரத் தேவையில்லை. ரூ. 500 முதல் ரூ. 1,000 வரையுள்ள கடன்களுக்குக் கடன் வாங்குபவரின் நிலத்தின் மீது பற்றுப்பொறுப்பு பெற்றுக்கொள்ளலாம். ரூ. 1000க்கு மேற்பட்ட கடன்களுக்கு அடைமானம் பெற்றுக் கொள்ளுவது விரும்பத்தக்கது.

6. நீண்ட காலக் கடன் நிலச் சீர்திருத்த நோக்கத்திற்குத் தரப்படுவதை வசதிப்படுத்த, நிலத்தின் தற்போதைய மதிப்பைக் கணக்கெடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, சீர்திருத்தம் நிகழ்ந்த பின் இருக்கக்கூடிய மதிப்பைக் கணக்கில் கொள்ளவேண்டும்.

7. சங்கங்கள் தமது அகவளத்தைப் பெருக்கிக் கொள்ள வைப்புத் தொகை திரட்டவேண்டும்.

8. விவசாயத் தேவைகளுக்கு ரிசர்வ் வங்கி கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கும் குறுகியகால, நீண்டகாலக் கடன் வரம்பு மேலும் தாராளமாக உயர்த்தப்படவேண்டும்.

9. தக்காவிக் கடன் என்று வழங்கப்படக் கூடிய நிதியினைக் கூட்டுறவு அமைப்புப் பயன்படுத்தும்வகையில் அதனிடம் அளிக்க வேண்டும்.

10. வைப்பாளர்களின் நன்னம்பிக்கையைப்பெற சங்கங்களின் நிருவாகம் மிகவும் செம்மையாக அமையவேண்டும்.

11. நிலம் சொந்தமாக இல்லாத குத்தகைதாரர், சிறு விவசாயிகள், ஆதாயநிலைக்குக் குறைவான நிலையில் விவசாயம்

செய்வோர் ஆகியோருக்கு அவர்களின் உற்பத்தித் தேவைகளுக்குக் கடனளிக்கச் சங்கங்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். இதனால் சங்கங்களுக்கு ஏற்படக்கூடிய நட்டத்தை ஈடுசெய்ய அரசு 'சிறப்பு வராக்கடன் காப்பு' (Special Bad Debt Reserve) என்ற ஒரு நிதிக்கு மானியம் அளிக்கவேண்டும்.

12. மேற்பார்வை, தணிக்கை ஆகிய ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்தவேண்டும்.

13. கிடங்குகள் கட்டும் திட்டம் இன்னும் தீவிரமாகச் செயல்படுத்தப்படவேண்டும். கடன், சந்தையிடுகை ஆகியவற்றை இணைத்துச் செயல்பட மேலும் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

கூட்டுறவுப் பண்ணை (Co-operative Farming)

கூட்டுறவுத் துறையில் மிகவும் காரசாரமான பேச்சுக்கு இலக்காக அமைந்த முயற்சி கூட்டுறவுப் பண்ணை முறையென்றால் அது மிகையாகாது. இந்தியத் தேசியக் காங்கிரசு தனது 1959ஆம் ஆண்டு மாநாட்டில், பஞ்சாயத்து—கூட்டுறவு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு புதியதொரு வேளாண்மை அமைப்பை உருவாக்கக் கூட்டுறவுப் பண்ணையே சிறந்த கருவியெனக் கருதி இக் கருவியைக்கொண்டு புதியதொரு சமுதாயம் சமைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியது. மிகச் சிறிய துண்டு நிலங்களைப் பயிர்செய்து வருவோருக்கு முழுநாள் பயிர் வேலையோ அல்லது அதைச்சார்ந்த வேலையோ கிடைக்குமாறு விவசாயத்தைச் சீரமைக்க ஏற்பட்ட திட்டமே கூட்டுறவுப் பண்ணையாகும். 1959இல் நாடாளுமன்றம் இயற்றியதோர் தீர்மானம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நாடு முழுவதும் சேவை கூட்டுறவுகள் (Service Co-operatives) ஏற்படுத்தப்படவேண்டுமென்று பரிந்துரைத்தது. இதையொட்டி அந் நாள் மைசூர் மாநில முதலமைச்சர் திரு. எஸ். நிஜலிங்கப்பா தலைமையில் ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டது. இதுகாறும் கண்ட அனுபவத்தின் பேரில் கூட்டுறவுப் பண்ணைபற்றிய திட்டமொன்று உருவாக்க உதவும்படி இக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. இக் குழுவின் அறிக்கை 1960இல் வெளியிடப்பட்டது. உற்பத்தித் திட்டத்தை அனுசரித்துக் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படவேண்டும். கூட்டுறவு மத்திய வங்கிகள் இச் சங்கங்களுக்கு நீண்டகாலக் கடன் வழங்கவேண்டும். அரசு நிலங்கள், உபரிநிலங்கள் ஒதுக்கலில் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களுக்கு

முதலிடம் தரவேண்டும். இச் சங்கங்களுக்கு அறிவுரையளித்து உதவி நல்க ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தனி அலுவலரும் தணிக்கையரும் நியமிக்கப்படவேண்டும். கூட்டுறவு வளர்ச்சிமிக்க வளர்ச்சி வட்டாரங்களில் மாவட்டத்திற்கு ஒன்ருக 320 முன்னேடிச் சங்கங்கள் அமைக்கப்படவேண்டு மென்று பரிந்துரைக்கப்பட்டது.

மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டம் (1961—66)

பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கியமானதோர் இடம் மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் தரப்பட்டது. கூட்டுறவு வளர்ச்சிக்குத் திட்ட காலத்தில் ரூ. 80 கோடி ஒதுக்கப்பட்டது. மூன்ரும் திட்டத்தின் முக்கிய நோக்கங்களைக் காண்போம்:

விவசாய மக்கள் தொகையில் 60% மூன்ருவது திட்ட இறுதிக்குள் விவசாய நாணயச் சங்கங்களில் இடம் பெறவேண்டும். எல்லாக் கிராமங்களுக்கும் விவசாய நாணயச் சங்கத்தின் பலன் கிட்டவேண்டும்.

விவசாயம் மட்டுமல்லாது, நடுத்தர சிறு தொழில்கள், வியாபாரம், வழங்கல் ஆகிய துறைகளிலும் கூட்டுறவு அமைப்புகள் எற்படவேண்டும். மேலும் 33,000 சேவைக் கூட்டுறவுகள் ஏற்படுத்தப்படவேண்டும். நாணயச் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 17 மில்லியனிலிருந்து 37 மில்லியனுக உயர வேண்டும்.

ஏறத்தாழ 60,000 சேவைக் கூட்டுறவுகளை வலுவூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உறுப்பினர்கள் அளிக்கும் தொகைக்குச் சமமாக ஆனல் ரூ. 5,000-க்கு மிகாது அரசு பங்கு முதல் ஒவ்வொரு பிரதம சங்கத்திலும் எடுத்துக்கொள்ளலாம். சிறப்பு வராக்கடன் காப்பு நிதிக்கு அரசு மானியம் வழங்கவேண்டும். நிருவாக உதவித் தொகையாகச் சங்கமொன்றுக்கு ரூ. 900 வீதம் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு அரசு அளிக்கவேண்டும்.

குறுகியகால, மத்தியகாலக் கடன் ரூ. 530 கோடியளவும் நீண்டகாலக் கடன் ரூ. 150 கோடியளவும் மூன்ரும் திட்ட இறுதியாண்டில் அடையவேண்டிய குறியீடுகளாக மேற்கொள்ளப்பட்டன.

கூட்டுறவுக் கடன், சந்தையிடுகை ஆகியவற்றைப் பிணைப்பதும், சந்தையிடுகை, பதப்படுத்தல் ஆகியவற்றை வளர்ப்பதும் அவசியமென வற்புறுத்தப்பட்டது.

கூட்டுறவுப் பண்டசாலைகளை நாடெங்கும் அமைத்து இன்றியமையாப் பொருள்களை அவற்றின் மூலம் வழங்கவேண்டும். கூட்டுறவுப் பண்ணைகள் பல அமைக்கப்படவேண்டும். சுருங்கக் கூறின், கிராமப் பொருளாதாரமே கூட்டுறவு அடிப்படையில் சீரமைக்கப்படுவதே மூன்றும் திட்டத்தின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

மூன்றும் திட்டகாலத்தில் கூடுதலான விவசாயச் சங்கங்களை ஏற்படுத்துவது மட்டுமன்றி, 600 புது சந்தையிடுகைச் சங்கங்களையும் ஏற்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. நாட்டிலுள்ள 2,500 மண்டிகளில் மேற்கண்ட புதிய சந்தையிடுகைச் சங்கங்களை நிறுவுவதுடன்கூட, அவ்விடங்களிலிருந்த 1,670 கிடங்குகளோடு மேலும் 990 கிடங்குகள் கட்டவேண்டுமென்றும் கிராமப்புறங்களிலிருந்து 4,100 கிடங்குகள் எண்ணிக்கைக்கு மேலும் 9,200 கிடங்குகள் சேர்க்கப்பட வேண்டுமென்றும் திட்டமிடப்பட்டது. முன்னரே இயங்கிவரும் 30 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுடன் மேலும் 25 ஆலைகள் துவக்கவும் திட்டமிடப்பட்டது. பருத்தி, அரிசி, சணல், எண்ணெய், வேர்க்கடலை, பழங்கள் போன்றவற்றைப் பக்குவப்படுத்த 783 கூட்டுறவு பக்குவப்படுத்தும் (Processing) சங்கங்கள் துவக்கப்பட திட்டமிடப்பட்டது.

நுகர்வோர் கூட்டுறவுகளை வலுப்படுத்த ஒரு திட்டமும் வகுக்கப்பட்டது. 1959-60இல் ரூ. 2·4 கோடி செலுத்திய முதல் கொண்ட 7,168 பிரதம நுகர்வோர் கூட்டுறவுகள் 14 இலட்சம் உறுப்பினர்களுடன் செயல்பட்டுவந்தன. இவற்றில் மூன்றிலொரு பகுதியே இலாபத்தில் நடந்து வந்தன. 2,200 சில்லறை விற்பனை கூட்டுறவுகளுக்கும், 50 மொத்த விற்பனை கூட்டுறவுகளுக்கும் திட்டத்தின்கீழ் உதவியளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

திட்டமிடப்பட்ட குறியீடுகளை அடைய இந்திய அரசும் பிற தொடர்புள்ள அமைப்புகளும், பல குழுக்களையும், செயற்குழுக்களையும் அமைத்துக் கூட்டுறவு இயக்க நடவடிக்கைகள் சீரான முறையில் இயங்கிவர தமது பரிந்துரைகளை அளிக்குமாறு பணித்தன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

கூட்டுறவுப் பயிற்சிமீதான ஆய்வுக் குழு (Study Team on Co-operative Training)

கூட்டுறவு இயக்கம் சிறப்பாக வளர்ந்து தழைக்கக் கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும் சிறந்த, சீரான முறையில் அமையவேண்டும். திட்ட காலத்தில் கூட்டுறவுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிகளைச் செவ்வனே செய்து முடிக்க, கூட்டுறவுக் கல்வியறிவு நிரம்பப் பெற்ற நிருவாகத்தினரும், தக்க பயிற்சியுடைய முழு நேர அலுவலரும் பெருமளவில் தேவைப்பட்டனர். தற்போதுள்ள கூட்டுறவுக் கல்வி, பயிற்சி ஏற்பாடுகள் போதுமா என்று ஆராய்ந்து, திட்ட காலத்தில் கூட்டுறவு வளர்ச்சிக்குத் தேவையான கல்வி, பயிற்சி ஏற்பாடுகளைப் பரிந்துரைக்குமாறு வேண்டி திரு. எஸ். டி. மிஸ்ரா தலைமையில் 1960இல் இந்திய அரசு ஆய்வுக் குழு ஒன்றினை அமைத்தது. இக் குழுவின் அறிக்கை 1961இல் அளிக்கப்பட்டது. கூட்டுறவுப் பயிற்சியைப்பற்றிய இக் குழுவின் பரிந்துரைகள் அத் துறையில் புதியதொரு சகாப்தம் உருவாகக் காரணமாக அமைந்தது. இக் குழுவின் முக்கிய பரிந்துரைகளைக் காண்போம்:

1. கூட்டுறவுக் கல்வி, பயிற்சிபற்றிய பொறுப்பைக் கூட்டுறவு இயக்கமே ஏற்கவேண்டும்.

2. கல்வி, பயிற்சி ஆகியவற்றிற்குத் தேவைப்படும் நிதியினைப் பெற எல்லாக் கூட்டுறவுகளும் தமது நிகர இலாபத்தில் ஒரு விழுக்காட்டிற்குக் குறையாத தொகையை மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களுக்குச் செலுத்தவேண்டும்.

3. பள்ளிக்கூட, கல்லூரி நிலைகளில் கூட்டுறவைப்பற்றிய பாடங்கள் இடம்பெறவேண்டும்.

4. கூட்டுறவுப் பயிற்சிபற்றிய கொள்கையை வகுக்க தேசீய அளவில் கூட்டுறவுப் பயிற்சிக் குழு அமைக்கப்படவேண்டும்.

5. மேல்நிலைப் படிப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றிற்குக் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்பெறவேண்டும்.

6. இடைநிலை அலுவலருக்குப் பயிற்சியளிக்கும் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களின் எண்ணிக்கை 15 ஆகவும், இளநிலைப் பயிற்சிக் கூடங்களின் எண்ணிக்கை 120 ஆகவும் உயர்த்தப்படவேண்டும்.

7. கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களிலுள்ள நூலக வசதிகள் மேலும் விரிவுபடுத்தப்படவேண்டும்.

மேற்கண்ட பரிந்துரைகள் மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் ஆராயப்பட்டன. கூட்டுறவுப் பயிற்சி, கல்வி பற்றிய ஏற்பாடுகள் பன்முகப்படுத்தப்பட்டு (decentralisation) அதிகார தோரணையற்ற (deofficialisation) தாகவும் வேண்டும். இந்திய தேசீயக் கூட்டுறவு ஒன்றியமும், மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களும் கூட்டுறவுப் பயிற்சியைக் குறித்த பொறுப்பை ஏற்கவேண்டும் என்று மாநாடு கருதியது. இதன் விளைவாக இந்திய அரசும், ரிசர்வு வங்கியும் கூடி நிறுவியிருந்த மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் குழு கலைக்கப்பட்டு, இந்திய தேசீயக் கூட்டுறவு ஒன்றியத்தின் (National Co-operative Union of India) உறுப்பான கூட்டுறவுப் பயிற்சிக் குழுவிற்குக் கூட்டுறவுப் பயிற்சியைப்பற்றிய பொறுப்பு மாற்றப்பட்டது.

நுகர்வோர் கூட்டுறவுகள்மீதான குழு (Committee on Consumers' Co-operatives)

தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி, பண்டக வாரியம் (National Co-operative Development and Warehousing Board), நுகர்வோர் கூட்டுறவுகள் நிறுவுதல், அமைப்பு ஆகியவற்றையொட்டிய பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றின் விரைவான திடமான வளர்ச்சிக்குத் தேவையான யோசனைகளை அளிக்க டாக்டர் பி. நடேசன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக் குழு தனது அறிக்கையை மே 1961இல் அளித்தது. இக் குழுவின் முக்கிய பரிந்துரைகளாவன:

1. நுகர்வோர் கூட்டுறவுகளை அமைக்குங்கால் அதன் அளவு பொருளாதாரத் தன்னிறைவு (Economic viability) முதலிய தன்மைகளைக் கவனிக்கவேண்டும்.

2. கீழ்க்காணும் வகைகளில் அரசு நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு உதவவேண்டும்; பங்கு முதலில் பங்கு எடுத்துக் கொள்ளல்; கிடங்குகள் கட்ட உதவி; துவக்க காலத்தில் சங்கங்களுக்கு நிருவாகச் செலவுக்கு உதவித் தொகை வழங்கல்; சங்கங்கள் கடன் வசதிபெற உதவி செய்தல்; வருமானவரி, இறக்குமதி உரிமம் போன்ற செய்திகளில் சலுகைகள்.

3. நுகர்வோர் கூட்டுறவுகளின் சொந்த நிதியைப் போன்று இருமடங்களவுக்குக் கூட்டுறவு வங்கிகள் ரொக்கக் கடன் வசதிகள் அளிக்கவேண்டும்.

4. நுகர்வோர் சங்கங்களைப் பற்றி ஆராய்ச்சிகளை நடத்தவும், அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறவும் கூட்டுறவுப் பண்டசாலை

களின் தேசீயக் கூட்டிணைப்பு (National Federation) அமைக்கப்பட வேண்டும்.

5. தக்க கொள்முதல், விலைக் கொள்கைகளை வகுப்பதில் நுகர்வோர் கூட்டுறவுகள் சிறப்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.

6. மேற்பார்வை, ஆய்வு, தணிக்கை ஆகிய மேற்கொள்ள மாநில அரசுகள் கூடுதல் ஊழியர்களை நியமிக்கவேண்டும்.

7. தற்போது இருந்துவரும் நுகர்வோர் கூட்டுறவுகளைச் சீரமைத்துத் திட்டமுள்ளவையாக்க மாநில அரசுகள் கடுமையான முயற்சி மேற்கொள்ளவேண்டும்.

பஞ்சாயத்து—கூட்டுறவுகள்பற்றிய செயற்குழு (Working Group on Panchayats and Co-operatives)

மக்களாட்சி முறையை அரசியல் கோட்பாடாக ஏற்றுக் கொண்ட நம் நாட்டில் அடித்தள அமைப்பாக விளங்குவது பஞ்சாயத்து. பொருளாதார மக்களாட்சியில் அடிப்படை அமைப்பென விளங்குவது கூட்டுறவு. இவ்விரு அடிப்படை அமைப்புகளும் ஒருங்கிணைந்து, ஒருமித்துச் செயல்பட்டால் மட்டுமே சமுதாய வளர்ச்சிக்காகத் தீட்டப்படும் திட்டங்கள் கை கூடும். கிராம அளவில் இவ்விரு அமைப்புகளும் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றனவா, ஆம் எனின் எந்த அளவுக்கு, இல்லையாயின் நிலைமையைச் சீர்படுத்த என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆராய திரு. எஸ். டி. மிஸ்ரா தலைமையில் ஒரு குழு 1961இல் இந்திய அரசால் அமைக்கப் பட்டது.

செயற்குழு, மக்களாட்சி அமைப்புகளான பஞ்சாயத்தும், கூட்டுறவும் ஒன்றுக்கொன்று கீழ்நிலைப்பட்டதாக இருக்கக் கூடாது. இரண்டும் தன்னாட்சி அமைப்புகளாக இருப்பது அவசியம். பஞ்சாயத்தின் பிரதிநிதிகள் கூட்டுறவிலும், கூட்டுறவின் பிரதிநிதிகள் பஞ்சாயத்திலும் இடம் பெறுவது விரும்பத் தக்கதல்ல. இருப்பினும் மாவட்ட மட்டத்தில், ஜில்லா பரிஷத் (Zilla Parished)தில் கூட்டுறவு பிரதிநிதித்துவம் பெறவேண்டும்; ஜில்லா பரிஷத்தின் பிரதிநிதிகள் மாவட்டக் கூட்டுறவு வங்கியின் நிருவாகக் குழுவிலும், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்திலும் இடம் பெறவேண்டும். பதிவாளரின் சட்டமுறை அதிகாரங்கள் ஜில்லா பரிஷத் அல்லது பஞ்சாயத்துச் சமிதி (Panchayat Samiti)க்கு மாற்றப்படத் தேவையில்லை என்று குழு கருதியது.

பதிவு செய்தல், நிருவாகக் குழுவை மேற்கடத்தல் (Super session of managing committee) துணைவிதிகள் திருத்தம்—ஒப்புதல், நடுவர் தீர்ப்பு, கலைப்பு, தணிக்கை ஆகிய பதிவாளரின் சட்டமுறையான, நீதிமுறை போல்வு (Quasi—judicial) அதிகாரங்களாகும். அவை தொடர்ந்து பதிவாளர் வசம் இருத்தல்வேண்டும். தீர்ப்பாய (Tribunal) த்திற்கு மேன்முறையீடு (Appeal) செய்யக் கூடிய, பதிவாளர் அதிகாரத்திற்குட்பட்ட நீதிமுறைபோல்வுச் செய்திகள், படிப்படியாகக் கூட்டுறவு அமைப்புகளுக்கு மாற்றித் தரப்படும்வரை பதிவாளர்வசம் இருத்தல்வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை செய்யும் சட்டமுறை அதிகாரம் பஞ்சாயத்து வகை அமைப்புகளுக்கு அளிக்கப்பட வேண்டுவதில்லை. கூட்டுறவுக் கல்வி, பயிற்சிபற்றிய நடவடிக்கைகள் ஜில்லா பரிஷத் அல்லது பஞ்சாயத்துச் சமிதிகள் பொறுப்பில் விடப்படலாகாது. கூட்டுறவுகளுக்கு அரசு வழங்கும் பங்கு முதல் பஞ்சாயத்து வகை அமைப்பு மூலம் அனுப்பப்பட வேண்டுவதில்லை. தமது ஆட்சி எல்லையிலுள்ள பரப்பில் சேவைக் கூட்டுறவுகள், கூட்டுறவு மீன்வளம், வீட்டுக் கூட்டுறவு, உழைப்புக் கூட்டுறவு, பால்பண்ணைக் கூட்டுறவு, கைவினைஞர் (Artisans) கூட்டுறவு போன்ற கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதிலும், வளர்ப்பதிலும் பஞ்சாயத்துகள் முக்கிய பங்கேற்கவேண்டும். கூட்டுறவுக் கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தக் கூட்டுறவு ஒன்றியத்து எல்லா உதவிகளையும் பஞ்சாயத்துச் செய்யவேண்டும். பஞ்சாயத்துகளின் மிகை நிதிகள் (Surplus funds) சேவைக் கூட்டுறவுகளிடம் வைத்திருக்கப்பட வேண்டும்.

பஞ்சாயத்துகள் கூட்டுறவுகளுடன் ஒன்றுகூடி கிராம உற்பத்தித் திட்டங்களைத் (Village Production Plans) தயாரிக்க வேண்டும். பஞ்சாயத்தும் கூட்டுறவின் நிருவாகக் குழுவும் காலாண்டுக்கு ஒருமுறையேனும் பொதுவாகக் கூட்டமொன்று ஏற்பாடு செய்து தமக்கிடையேயுள்ள பொதுப் பிரச்சினைகளைக் கலந்துரையாடி அதற்குத் தக்க முடிவுகளையும் காணலாம். கிராமத்திலுள்ள தரிசு நிலம் முழுதும் பஞ்சாயத்து வசமிருப்பின், கிடங்குகள் கட்ட சேவைக் கூட்டுறவுகளுக்கு நிலம் தருவதில் முதல் சலுகை தரப்படவேண்டும். தேவைப்படுமிடங்களில், கூட்டுறவு பதனப்படுத்தும் தொழில்களை நிறுவ அதற்குரிய அதிகாரிகளிடம் உரிமம்பெறப் பஞ்சாயத்துச் சமிதிகள் (Panchayat Samitis) விண்ணப்பங்களைப் பரிந்துரைத்து உதவியளிக்க வேண்டும். பால்பண்ணைச் சங்கங்கள் உள்ள இடங்களில் கால்நடைகள் மேய மேய்ச்சல் நிலத்தை ஒதுக்குவது பஞ்சாயத்தில் தலையாய கடமையாகும். சுருங்கக்கூறின் பஞ்சாயத்து—கூட்டுறவு ஆகிய

இரண்டும் முழுமையாக ஒருங்கிணைந்து ஒன்றுபட்டுச் செயல் படுதலின் இன்றியமையாமையினை இக் குழு பெரிதும் வற்புறுத்தியது.

தக்காவிக் கடன்-கூட்டுறவுக் கடன்மீதான குழு
(Committee on taccavi Loans and Co-operative Credit)

விவசாயிகளுக்குத் தக்காவிக் கடன் அளிக்க நடைமுறையிலிருந்து வரும் ஏற்பாடுகளை ஆராய்ந்து, அவற்றைக் கூட்டுறவுகள் மூலம் அளிப்பது என்ற கொள்கையைத் திறம்படச் செயல்படுத்த வழிவகைகளை யோசனை கூறுமாறு திரு. பி. பி. படேல் தலைமையில் 1962இல் ஒரு குழுவை இந்திய அரசு நியமித்தது. விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்குக் குறுகிய மத்தியகாலக் கடனுகை அமைப்பு வழி தேவைப்படும் தொகை ரூ. 1,600 கோடியென இக் குழு மதிப்பிட்டது. 1960-61இல் கூட்டுறவுகளால் அளிக்கப்பட்ட குறுகிய-மத்தியகாலக் கடன் ரூ. 202 கோடியாக இருந்தபோது அதே ஆண்டு அரசு வழங்கிய தக்காவிக் கடன் ரூ. 41 கோடியாக மட்டுமிருந்தது. தக்காவிக் கடன் வழங்குவதைப் பெருக்கிடும் வாய்ப்பு குறைவாகவே இருக்கின்றது; ஆனால், கூட்டுறவுக் கடன் வழங்கலை விரிவுபடுத்த மிகப்பெரும் வாய்ப்புள்ளது என்று குழு கருதியது. மூன்றும் திட்ட இறுதியில் கூட்டுறவுக் கடன் ரூ. 530 கோடியளவுக்கு உயருமென எதிர்பார்க்கப்பட்டது. உள்ளூர் மக்களின் சேமிப்பையும், சேவையையும் கூட்டுறவுகள் பயன்படுத்தி உறுப்பினர்களுக்கு நேரடியாகப் பங்கேற்றுப் பயன்பெறும் வாய்ப்புத் தரும் அமைப்புக் கூட்டுறவு. எனவே, கூட்டுறவுகளின் வழி தக்காவிக் கடன்களை வழங்கல் மிகவும் விரும்பத்தக்கது• என்று குழு பரிந்துரைத்தது. இது கூட்டுறவுகளையும் வலுப்படுத்தும். இடர்ப்பாட்டுக் கடன் (Distress Loan) மட்டுமே அரசினரால் மக்களுக்கு நேரடியாகத் தரப்பட வேண்டுமென்றும் குழு கூறியது. குறிப்பிட்ட வட்டாரத்தில் காணப்படும் கூட்டுறவு வளர்ச்சியையொட்டி கடன்மீதான வட்டி $7\frac{1}{2}$ முதல் 8%-க்கு உள்ளாக இருத்தல்வேண்டும். எந்த மாநிலங்களில் கூட்டுறவு அமைப்புப் போதிய வலுவற்றுள்ளதோ அங்கெல்லாம் வலுவற்ற நிலையிருக்கும் வரை கடன்கள் நேரடியாகத் தரப்பட்டு வரலாமென்று குழு பரிந்துரைத்தது. கூட்டுறவில் சேராத விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் அளிக்க இரண்டாம் கட்டத்தில் ஓர் ஏற்பாடு இருக்க வேண்டுவது அவசியமெனத் தோன்றவில்லை. கூட்டுறவுப் பொதுச் சமுதாயம் (Co-operative Commonwealth) என்ற குறிக்கோளை

யடைய அரசு முகமைகள் அனைத்தும் பெருமுயற்சியை மேற்கொள்ளவேண்டும். ஆகவே, இந்திய அரசு, தக்காவிக் கடன்கள் கூட்டுறவுகள் வழியே வழங்கப்படவேண்டு மென்ற பரிந்துரையை ஏற்றுக்கொண்டது. இப் பரிந்துரை எல்லா மாநிலங்களிலும் 3 முதல் 5 ஆண்டுகளில் செயற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ரயில்வே, அஞ்சல்—தந்தி இலாக்காக்களின் கூட்டுறவுகள் மீதான ஆய்வுக் குழு (Study Group on Co-operatives in the Railways, Post and Telegraph Departments):

இந்திய அரசு, ரயில்வே, அஞ்சல் தந்தி துறைகளிலுள்ள கூட்டுறவுகளின் செயற்பாட்டை ஆய்ந்து மூன்றும் திட்ட காலத்தில் மேலும் அவ்வகைக் கூட்டுறவுகளை அமைக்க யோசனைகளை அளிக்குமாறு வேண்டி 1963இல் ஒரு குழுவை நியமித்தது. அக் குழுவின் முக்கியப் பரிந்துரைகளாவன: இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரொக்கக் கடன் (Cash credit,) மேல் வரைப்பற்று (overdraft) வசதிகள் செய்து தருவதில் கூட்டுறவு வங்கிகள் ஊக்கம் காட்டவேண்டும். இவ் வசதிகள்பெற மேற்கூறிய கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு வங்கிகளில் சேர்ந்து அவற்றில் தமது வைப்புக் கணக்கை வைத்திருத்தல்வேண்டும். கடன் சங்கங்கள் ரிசர்வு வங்கி வகுத்தபடி எளிவரல் சொத்துகளை வைத்திருக்கவேண்டும். கடன் கூட்டுறவுகள் வீட்டு வசதி, சிற்றுண்டிச்சாலை நடத்தல்போன்ற பணிகளை மேற்கொள்ளக் கூடாது. எல்லாக் கடன் சங்கங்களிலும் கட்டாய வைப்புத் திட்டம் அமுல்படுத்தப்படவேண்டும். குழு ஆய்வு செய்தபோது 54% ரயில்வே ஊழியர்கள் 116 கடன் சங்கங்களில் உறுப்பினராக இருந்தனர். மூன்றும் திட்ட இறுதியில் இச் சங்கங்களில் 75% ஊழியர்களும், நான்காம் திட்ட இறுதியில் 100% ஊழியர்களும் உறுப்பினர்களாகிவிட வேண்டுமென்று குழு குறியீட்டை நிருணயித்தது.

நுகர்வோர் கூட்டுறவுகள் அமைக்க இரயில்வே இலாகாவில் நிரம்ப வாய்ப்புகளிருப்பதாகக் குழு கருதியது. இருபது கல் சுற்றளவில் உள்ள 600 குடும்பங்களுக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் என்ற அடிப்படையில் சங்கங்கள் நிறுவப்படவேண்டும். இரயில்வே நிருவாகம் இச் சங்கத்திற்கு உறுப்பினர் ஈடுசெய்த பங்கு முதலுக்கு ஈடாக ரூ. 2,000 பங்கு முதல் வழங்குவதுடன் ரூ. 10,000 வரை நடைமுறை முதலும் அளிக்கவேண்டும். ஓரளவுக்கு உறுப்பினர்களுக்குக் கடன் பேரிலும் சரக்கு விற்கப்படலாம். மூன்றும்

திட்டத்தில் சில்லறை வியாபாரி, உணவு விடுதியர் (Caterer) ஆகியோருக்கு 300 கூட்டுறவுகளும், தொழிலாளர் கூட்டுறவுகள் 150-ம் மூன்றும் திட்ட காலத்தில் அமைக்கப்படவேண்டுமெனக் குழு பரிந்துரைத்தது.

தொழிற் கூட்டுறவுகள்மீதான செயற்குழு

மூன்றும் திட்ட காலத்தில் தொழிற் கூட்டுறவுகள் (Industrial Co-operatives) எவ்வாறு விரிவுபடுத்தப்படலாம் என்று பரிந்துரைக்க ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. அதன் அறிக்கை 1963இல் வெளியிடப்பட்டது. மூன்றும் திட்ட இறுதியில் வீட்டுத்துறைத் தொழில் (Householed industries) களிலுள்ள தொழிலாளிகளில் 30%-த்தினர் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது. நான்கு வகையான தொழிற் கூட்டுறவு கூட்டிணைப்பு (Federation)கள் நிறுவப்பெற வேண்டுமெனக் குழு பரிந்துரைத்தது. ஒருவகை, உற்பத்தியில் ஈடுபட்ட சங்கங்கள்; மற்றொருவகை உறுப்பினர்களுக்குத் தொழிற்பட்டறை வசதியளிக்கும் சங்கங்கள்; உறுப்பினர்கள் தத்தம் வீட்டிலேயே உற்பத்தி செய்தாலும் தொழிலின் இலாப நட்டத்தையேற்கும் சங்கங்கள் மூன்றும் வகை; உறுப்பினர் களுக்குக் கச்சாப்பொருள், கருவிகள், கடன், சந்தையிடுகை போன்ற பல வசதிகளைச் செய்து தரும் சங்கங்கள் நான்காம் வகை. மூன்றும் திட்ட காலத்தில் 15 இலட்சம் உறுப்பினர்கள்கொண்ட 15,000 புதிய சங்கங்கள் நிறுவப்பெறுமென்று மதிப்பிடப்பட்டது. இவற்றின் நடைமுறை முதல் ரூ. 120 கோடியாகவும், உற்பத்திப் பொருளின் மதிப்பு ரூ. 360 கோடியாகவும் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. மாநிலத் திட்டங்களில் சிற்றளவு தொழில் களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 25% தொழிற் கூட்டுறவுகள் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று பரிந்துரைக்கப் பட்டது. சிறு தொழில் முனைவோருக்கு நகரக் கூட்டுறவு வங்கிகள் கடனளிக்கவேண்டும். இக் கூட்டுறவுகளுக்குத் தொழில் நுட்ப, நிதிய, இதர வசதிகள் அளிக்கும் அலுவலருக்கு இரண்டு அல்லது மூன்று வார பயிற்சி அளிக்கப்படவேண்டு மென்றும் பரிந்துரைக் கப்பட்டது.

கூட்டுறவு நிருவாகம்மீதான குழு
(Committee on Co-operative Administration)

மூன்றும் திட்ட காலத்தில் கூட்டுறவு வளர்ச்சிக்குப் பெரிய தொரு திட்டம் தீட்டப்பட்டது. இத் திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்ற நல்ல தரமான போதுமான அளவு ஊழியரும், திறம்

மிக்க, வலுவான, உரம்மிக்கக் கூட்டுறவு நிருவாகமும் தேவை யென்பதை உணர்ந்த இந்திய அரசு 1963இல் திரு. வி. எல். மேத்தா தலைமையில் ஒரு குழுவை அமைத்து மாநிலங்களில் கூட்டுறவு நிருவாகத்தை வலுப்படுத்த யோசனைகளைத் தருமாறு வேண்டியது. இக் குழு நிருவாகத் துறையின் அங்கங்களனைத்தை யும் செவ்வனே ஆராய்ந்து கூட்டுறவு இயங்கம் செம்மையாக வளர நல்ல பல பரிந்துரைகளைத் தந்தது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஐ. ஏ. எஸ். (I.A.S.) அதிகாரியாக இருத்தல்வேண்டும். இவரைப் பதிவாளர் என நியமனம் செய்யுமுன் இரண்டாண்டுகள் பயிற்சி தரவேண்டும். நியமனம் செய்யப்பட்டவர் தொடர்ந்து 3 அல்லது 5 ஆண்டுகள் பதிவியிலிருக்கவேண்டும். இவருக்கு உதவியாகக் கூட்டுப் பதிவாளர் கள் (Joint Registrars) செயலாற்றவேண்டும். தணிக்கை, கடன்-வங்கியத்துறை, சந்தையிடுகை-பக்குவப்படுத்தல், தொழிற் கூட்டுறவுகள், பண்ணைச் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுகள் ஆகியவற்றைக் கவனிக்கத் தனித்தனி கூட்டுப் பதிவாளர்கள் செயலாற்றவேண்டும். கோட்டம் (Division) ஒன்றுக்குத் துணைப் பதிவாளர் (Deputy Registrar) ஒருவர் இருக்கவேண்டும். இவர் அதிகாரப் பொறுப்பில் 5,000 சங்கங்கள் இருக்கவேண்டும். மாவட்ட அளவில் உதவிப் பதிவாளர் (Assistant Registrar) இருக்க வேண்டும். இவருக்கு உதவியாக இரண்டு வட்ட அலுவலர்கள் (Circle Officers) செயலாற்றவேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை பதிவாளரின் சட்டமுறை யான பொறுப்பாக இருத்தல்வேண்டும். மத்தியக் கூட்டுறவு வங்கிகளே பிரதம சங்கங்களை மேற்பார்வை செய்யவேண்டும். இந்த ஏற்பாடு அமுலுக்கு வரும்வரை பதிவாளர் பிரதம சங்கங்களை மேற்பார்வை செய்துவரவேண்டும்.

அரசு அலுவலர்களின் சேவையைக் கூட்டுறவு நிலையங்கள் கடன் பெற்றுவரும் பழக்கம் விரும்பத்தக்கதல்ல என்று குழு குறிப்பிட்டுள்ளது. அரசு அலுவலருக்கும் நிலைய அலுவலருக்கும் தக்க பயிற்சி தரப்படுதல்வேண்டும். ஐந்து முதல் ஏழு ஆண்டு களுக்கு ஒருமுறை புதுமுகப் பயிற்சி (Orientation Training) அலுவலர்களுக்குத் தரப்படவேண்டும். பயிற்சிக்கு முறையாக அலுவலர்களை அனுப்ப, பயிற்சி ஒதுக்கு (Training Reserve) என்ற ஏற்பாட்டின்படி கூடுதல் பணிநிலை (Post) உண்டாக்கவேண்டும்.

கூட்டுறவுகளின் கூட்டிணைப்புகளை (federations) நிறுவி இறுதியில் பதிவாளரின் சட்டமுறையான அதிகாரங்களில் சிலவற்றை அவற்றிற்கு அளிக்க மாநில அரசுகள் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

அரசியல் அல்லது பிற தொடர்பற்ற சக்திகள் தொழில் நிறுவனங்களாகிய கூட்டுறவுகளின் நடப்பினைப் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்வது அவசியம். தன்னலமற்ற, நேர்மையான, ஆர்வமிக்க அலுவல் பற்றற்றக் கூட்டுறவாளர்களைக் கண்டெடுத்து அவர்களை ஊக்குவித்து இயக்க வளர்ச்சிக்குப் பாடுபடச் செய்வது கூட்டுறவு இலாகாவின் பணியை எளிதாக வெற்றி தருவதாக ஆக்கும். இயக்கத்திற்குத் தலைமையேற்கும் பொறுப்பைத் திறனுடன் மேற்கொள்ளத்தக்க கூட்டுறவாளர்களை ஊக்குவித்துச் செயல்படச் செய்வதே கூட்டுறவின் வளமிக்க உரம் பெற்ற எதிர்காலத்திற்கு இன்று தேவைப்படுகின்றது என்று குழு குறிப்பிட்டது.

நகர்ப்புற கடன்மீதான ஆய்வுக் குழு
(Study Group on Urban Credit)

1963இல் நியமிக்கப்பட்ட இக் குழுவின் முக்கிய பரிந்துரைகளாவன:

நகர வங்கி (Urban bank) களுக்குக் குறைந்தது. ரூ. 25,000 செலுத்திய முதலாக இருப்பது அவசியம். நகரங்களிலும், நகர்ப் போன்ற இடங்களிலும் 1,500 உறுப்பினர்களாவது சேர்த்துக் கூட்டுறவு நகர வங்கியொன்று அமைக்கப்படலாம். உறுப்பினர் செலுத்தும் பங்கு முதலுக்கு ஈடாக அரசினரும் பத்தாண்டுக் காலத்திற்குப் பங்குமுதல் வழங்கலாம். உறுப்பினர்கள் மிகப் பெருமளவிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் பிரதிநிதித்துவப் பொதுப் பேரவை (Representative General Body) அமைக்கப் படலாம். நகர வங்கிகள் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப் பட்டு அவற்றிடம் கடன்பெற வழிவகை செய்யப்படவேண்டும். விவசாயம் சாராத கடன் நடவடிக்கைகளைக் கவனிக்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தனியொரு பிரிவு இருத்தல் வேண்டும். நகர வங்கிகள் அளிக்கும் கடன் ஐந்தாண்டுகளுக்கு மிகக்கூடாது. பொருளாதார வளர்ச்சிக்குதவும் நோக்கங்களுக்கு மட்டுமே கடன் வழங்கப்படல்வேண்டும். நகர வங்கிகள் சிற்றளவு தொழில்களுக்குக் கடன் வழங்கவேண்டும் சிற்றளவு தொழில்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் (Bank loan)

களை நகர வங்கிகள் பொறுப்புறுதி (guarantee) செய்யலாம். வீடுகளைப் பிணையாக ஏற்றுக்கொண்டு நகர வங்கிகள் நீண்ட காலக் கடன் வழங்கவேண்டும். இதற்கு வேண்டிய பணத்தை வைப்புகள் மூலமும் ஆயுள் காபீட்டுக் கூட்டுருவின் நீண்டகாலக் கடன்கள் மூலமும் திரட்டவேண்டும்.

மூன்ரும் திட்டகாலத் துவக்கத்தில் 4,000 ஊழியர் நாணயச் சங்கங்கள் (Employees Credit Societies) அல்லது சம்பளம் ஈட்டுவோர் சங்கங்கள் (Salery Earners' Societies) பன்னிரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வந்தன. ஐம்பது ஊழியர்களுக்குமேல் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் இதுபோன்ற நாணயச் சங்கங்கள் நான்காம் திட்ட முடிவிற்குள் நிறுவப்பட வேண்டுமென்று ஆய்வுக் குழு பரிந்துரைத்தது. ஊழியர் நாணயச் சங்கங்களின் உறுப்பினர் களின் கணக்கில் அவர்கள் ஒப்புக்கொண்ட ஒரு தொகையை அவர்கள் ஊதியத்திலிருந்து கழித்துக் கட்டாய வைப்புத் திட்ட (Compulsory deposit scheme) மொன்று உருவாக்கி அதில் கட்ட வேண்டும். உறுப்பினர் வேலையைவிட்டு விலகும்போது அல்லது இறந்துபோனுல் மட்டுமே கட்டாய வைப்புத் தொகை திருப்பி அளிக்கப்படலாம். ஊழியர் நாணயச் சங்கங்கள் சிக்கனம், கடன் போன்ற நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடவேண்டும். இடவசதி, விளக்கு-நீர்வசதி, எழுத்தர் பணிவசதி போன்றவற்றைப் பணியாண்மையர் (Employers) சங்கத்திற்கு இலவசமாக அளித்தல்வேண்டும். மற்றும் பத்து ஆண்டுகளில் திருப்பித்தரக் கூடிய நடைமுறை முதல் கடனுக ரூ. 15,000 சங்கத்திற்குப் பணியாண்மையரால் வழங்கப்படலாம். இச் சங்கங்கள் பொதுநல நிதி அமைத்துத் தமது உறுப்பினர்கள் பயனுக்காக விடுமுறை விடுதி (Holiday Home)கள் ஏற்படுத்தி நடத்திவரலாம். உறுப்பினர் களுக்கு மிகவும் நெருக்கடியானநிலை ஏற்படும்போது வட்டி யில்லாக் கடன் வழங்கி உதவலாம். உறுப்பினர் குடும்பத்தினருக்குக் கைவேலைகளில் (Crafts) பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யலாம்.

வீட்டுவசதிக் கூட்டுறவுகள்மீதான செயற்குழு (Working Group on Housing Co-operatives)

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு வீட்டுவசதி செய்துதர எந்த அளவுக்கு வாய்ப்பு இருக்கின்றது; அவற்றை எந்த முறை யில் அமைக்கலாம் என்று ஆய்ந்து அறிவுரைகூற இந்திய அரசு 1963இல் செயற்குழு வொன்றை நியமித்தது. இக் குழுவின் முக்கிய பரிந்துரைகளைக் காண்போம்:

வீட்டுவசதித் திட்டங்களுக்கு மாநில அரசு ஒதுக்கும் நிதிகளில் குறைந்தது. 20% வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

குறைந்த வருமானமுடையோர் வீட்டுவசதித் திட்டப்படி அளிக்கப்படும் கடன் உச்ச அளவு ரூ. 8,000–த்திலிருந்து ரூ. 10,000ஆக உயர்த்தப்படவேண்டும். கடன் வழங்கப்பட்ட நாளிலிருந்து 24 திங்களுக்குப் பின்னர் திருப்பிச் செலுத்தம் துவங்கவேண்டும்.

மனை ஒதுக்குவதிலும், மனைகட்ட தேவைப்படும் பொருள்கள் ஒதுக்குவதிலும் வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்கு முதலிடம் தரப்படவேண்டும். இச் சங்கங்களுக்கு மூன்று முதல் ஐந்தாண்டுகளுக்கு அரசு நிருவாக உதவித்தொகை வழங்கவேண்டும்.

நூற்றுக்கு மேற்பட்ட வீட்டுவசதிச் சங்கங்கள் உள்ள மாநிலங்களில் உச்சி அமைப்பு நிறுவப்பெறவேண்டும். நான்காம் திட்ட இறுதியில் வீட்டுவசதிக் கூட்டுறவுகளின் தேசீயக் கூட்டிணைப்பு (National Federation of Housing Co-operatives) அமைக்கப்பட வேண்டும். ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, நகர வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகிய வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்குப் பெருமளவு கடன் வசதிகள் அளிக்கவேணடும். வீட்டுவசதிச் சங்கங்களுக்குக் கடன் வழங்கக் கூட்டுறவு வீட்டு அடைமான வங்கிகள் (Co-operative House Mortgage Banks) அமைக்கப்பட வேண்டும். வீட்டுவசதிக் கூட்டுறவுகள்வழி கட்டிய வீடுகளுக்கு 30% வீட்டு வரி தள்ளுபடி செய்யப்படவேண்டும். கிராமிய வீட்டுவசதிப் பணியம் (Rural Housing Cell) இக் கூட்டுறவுகளுக்குத் தொழில்நுட்ப உதவி வழங்கவேண்டும்.

நடுத்தர வருமானமுள்ளோர் வீட்டுவசதித் திட்டத்தின்படி வீடுகட்ட ஆகும் செலவில் 80% கடனுகத் தரப்படுவது 70% ஆகக் குறைக்கப்படுதல்வேண்டும். உதவியளிக்கப்படும் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டத்தின் (Subsidised Industrial Housing Scheme) கீழ் நிருணயிக்கப்பட்ட உச்ச அளவு வீடுகட்டும் செலவு தக்க அளவுக்கு உயர்த்தப்படவேண்டும்.

போக்குவரத்துக் கூட்டுறவுகள்மீதான ஆய்வுக் குழு (Study Group On Transport Co-operatives)

இந்திய அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சகம் 1962ஆம் ஆண்டு திரு. எஸ். என். பில்கிராமி தலைமையில், போக்குவரத்துக் கூட்டுறவுகளுக்குள்ள வாய்ப்பினையும், அச் சங்கங்கள் எங்ஙனம் அமைக்கப்படலாமென்பதனையும், அவற்றிற்குத் தேவைப்படும் நிதிவசதிகளை மதிப்பிட்டு அந் நிதியுதவி எங்ஙனம்

அளிக்கப்படலாமென்பதனையும் ஆராய ஒரு குழுவினை நியமித்தது. இக் குழுவின் அறிக்கை 1964இல் அளிக்கப்பட்டது. 1963ஆம் ஆண்டுத் துவக்கத்தில் மொத்தம் 826 போக்குவரத்துச் சங்கங்களிருந்தன. அவற்றுள் 612 மக்களை ஏற்றிச் செல்வன; 172 சரக்கு ஏற்றிச் செல்வன; 24 இருவகைச் சுமைகளையும் ஏற்றிச் செல்வன. 18 வாடகைக் கார் (Taxi) சங்கங்கள் இயங்கிவந்தன. தொழிலாளிகளே உறுப்பினர்களாக இருந்த சங்கங்கள் தமிழ் நாட்டில் மட்டுமே மிகுதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. நாட்டுடைமைக் கொள்கை பரவிவரும் நிலையில் மக்களேற்றிப் போக்குவரத்துச் சங்கங்களுக்கு எதிர்காலத்தில் வாய்ப்புக் குறைவாகவே இருக்கும். ஆனால், சரக்கேற்றிப் போக்குவரத்துச் சங்கங்கள் நிறுவுவதற்கு வாய்ப்பு நிறைய உண்டு. நான்காம் திட்டகாலத்தில் 1,000 சங்கங்கள் நிறுவப்பட வேண்டுமென்று குழு பரிந்துரைத்தது. ஐந்து மக்களேற்றி ஊர்தி (Passenger vehicle)கள் அல்லது பத்துச் சரக்கேற்றி ஊர்திகள் கொண்ட சங்கமே இலாபகரமாக இயங்கும் வாய்ப்புள்ளது. உறுப்பினர் ஒவ்வொருவரும் தவணைகளில் ரூ. 1,000 சங்கத்திற்கு வழங்கவேண்டும். மொத்தப் பங்கு முதலில் 35% வரை அரசு ஏற்கலாமென்று குழு பரிந்துரைத்தது.

சரக்குப் பிடிக்கும் பணியினை ஏற்றல், சீர்க்காப்பு (Servicing), உதிரிக் கருவிகள் வாங்கி விற்றல், வாகன வரி கட்டுங் கணக்குத் தீர்த்தல், காப்பீடு கூட்டுறவுமுறையில் செய்தல், ஓட்டுநர் பயிற்சி, உறுப்பினர் வழக்குகளைக் கவனித்தல் போன்ற நடவடிக்கைகளை இக் கூட்டுறவுகள் மேற்கொள்ளும். கல்கத்தா, பம்பாய் நகரங்களில் இயங்கிவரும் வாடகைக் கார் கூட்டுறவுகளைப் போன்று, பெரிய 38 நகரங்களில் நகருக்கு ஒரு சங்கமாவது அமைக்கப்படவேண்டும். கூடிய விரைவில் சைக்கிள் ரிக்ஷாக்கள் தடை செய்யப்படவேண்டும்.

மாநில அரசுகள் அல்லது மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரில் இந்திய ஸ்டேட் வங்கி, கூட்டுறவு வங்கிகளின் மூலம் போக்குவரத்துக் கூட்டுறவுகளுக்குக் கடன் தரவேண்டும். நான்காம் திட்ட காலத்தில் 1,000 சங்கங்களின் பங்கு முதலுக்கு ரூ. 40 கோடி மாநில அரசுகள் நேரடியாக அல்லது மாநில நிதியக் கூட்டுருக்கள் மூலம் வழங்கவேண்டும். சங்கமொன்றுக்கு ரூ. 4,000 வீதம் நிருவாக உதவிப் பணம் அரசினரால் வழங்கப்படவேண்டும். மாநில அளவிலும், தேசீய அளவிலும் போக்குவரத்துக் கூட்டுறவுகளின் கூட்டிணைப்பு ஏற்படுத்தப்படலாம். இவற்றின் நடவடிக்கைகளைக் கவனித்துவர மத்திய அரசு ஓர் அலுவற்கூடம் அமைக்கவேண்டும்.

கூட்டுறவுபற்றிய மிர்தா குழு
(Mirdha Committee on Co-operation)

இந்திய அரசு போலிக் கூட்டுறவுச் சங்கங்களையும், ஊன்றிய நலமி (Vested interests)களையும் அகற்றிக் கூட்டுறவு இயக்கத்தைச் செம்மையாக வளர்ப்பதற்கேற்ற யோசனைகளைத் தருமாறு வேண்டி திரு. மிர்தா தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக் குழு தனது அறிக்கையை 1965இல் அளித்தது. பொதுவாக நோக்குமிடத்து, கூட்டுறவு இயக்கம் சரியான முறையிலேயே இயங்கி வருகின்றதென்றும், ஏதோ சில தவறுகள் மிகவும் பெரிதாக்கப்பட்டுப் பேசப்பட்டு வருவதால் கூட்டுறவில் போலிச் சங்கங்கள் மிகுதியாக இருக்கின்றன என்ற தவறான கருத்து நிலவி வருகின்றதென்றும் குழு கருதியது. தவறான போக்கு ஏற்படாமல் தடுக்க குழு சில யோசனைகளைத் தந்தது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்:

உறுப்பினர் நிலை

பொதுவாக எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தடையற்ற உறுப்பினர்நிலை இருக்கவேண்டும் என்பது கூட்டுறவுத் தத்துவமெனினும், சந்தையிடுகை, நுகர்வோர் கூட்டுறவுகளில் வியாபாரிகள் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது. உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படாது மறுக்கப்பட்டவரின் மேன்முறையீட்டைப் பதிவாளரும் கூட்டுறவுக் கூட்டிணைப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கேட்கவேண்டும். வட்டித் தொழிலர் விவசாய நாணயச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படலாகாது.

நிருவாகம்

ஒரு நபர் இத்தனைச் சங்கங்களில் இத்தனைக் காலம் தான் நிருவாகக் குழுவில் பதவி வகிக்கலாம் என்று சட்ட முறையான தடையேதும் விதிக்கப்படவேண்டுவதில்லை. ஆனால், இது குறித்து மரபுகள் (Conventions) கடைப்பிடிக்கப்படுவது விரும்பத்தக்கது. இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நிருவாகக் குழுவிற்குத் தேர்தல் நடத்தப்படவேண்டும். பொதுப் பேரவை (General body)தான் தேர்தலை நடத்தவேண்டும். தேர்தல் பதிவாளரால் நடத்தப்படக்கூடாது. நிருவாகக் குழுவிற்கு அரசாங்கம் நியமனம் செய்வது மிகக் குறைவாக இருத்தல் நல்லது. நியமனம் செய்யப்படுவது அரசு அலுவலராக மட்டுமே இருக்கவேண்டும்; அலுவல் சார்பற்றவர்களாயிருத்தல் கூடாது.

நிதி வசதிகள்

கூட்டுறவுகளுக்கு அரசு பேராதரவு அளிக்கவேண்டும். அரசு பங்கு முதல் எடுத்துக் கொள்வதுடன்கூட, தன்னாட்சி நிலையங்களை யும் சட்ட முறையான கூட்டுருக்களையும் கூட்டுறவு வங்கிகளைத் தம் வங்கியராக நியமிக்க அனுமதிக்கவேண்டும். வைப்புக் காப்புறுதி (Deposit insurance) ஏற்பாடு கூட்டுறவு வங்கிகளுக்கும் பொருந்துமாறு செய்தல்வேண்டும். பொதுமக்களின் நம்பிக் கையைப் பெற இது உதவும். தேசீயக் கூட்டுறவு வங்கி நிறுவப்பட வேண்டும்.

கூட்டுறவுக் கல்வி

கூட்டுறவு இயக்கம் தன்னம்பிக்கையுடன் வளரக் கூட்டுறவுக் கல்வியும், பயிற்சியும் தீவிரமாக மேற்கொள்ளப்படவேண்டும். மாவட்ட ஒன்றியங்கள் அமைக்கப்படவேண்டும். தேசீயக் கல்வியறிவு வளர்ச்சித் திட்டத்துடன் உறுப்பினர் கல்வித் திட்டமும் இணைக்கப்படவேண்டும். தேசீயக் கூட்டுறவு ஒன்றியமும் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களும் கூட்டுறவுக் கல்வி பயிற்சிபற்றி முழுப் பொறுப்பை ஏற்கவேண்டும்.

தணிக்கை

தணிக்கை காலந்தவறுது நடத்தப்படுவது அவசியம். பதிவாளரின் அதிகாரத்திற்கு உட்படாத அரசு முகமைக்குத் தணிக்கைப் பொறுப்புத் தரப்படவேண்டும். அங்ஙனம் செய்தால் தான் தணிக்கை எதிர்பார்க்கும் பயனை நல்கும்; மேலும் இயக்கத் தின் உண்மை நிலையைத் தெளிவாக உணர்த்தும்.

கூட்டுறவுச் சந்தையிடுகைபற்றிய குழு (Committee on Co-operative Marketing)

பேராசிரியர் எம். எல். டான்ட்வாலாவைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு 1964ஆம் ஆண்டு இந்திய அரசினரால், கூட்டுறவுச் சந்தையிடுகையின் தற்போதைய நிலையை ஆராயவும், கூட்டுறவு அடிப்படையில் விவசாய உற்பத்திப் பொருள்களின் சந்தையிடுகையைச் சீரானமுறையில் விரைவாக வளர்க்கப் பரிந்துரைகள் செய்யவும் அமைக்கப்பட்டது. இக் குழு 1966இல் தனது இடைக்கால அறிக்கையை அளித்தது. இக் குழுவின் முக்கிய பரிந்துரைகளாவன :

சந்தையிடுகைச் சங்கங்கள் இனி இரண்டு அடுக்கு அமைப்பாக விளங்கவேண்டும். மாநில அளவில் உச்சிச் சங்கமும் மண்டி.

அளவில் பிரதம சங்கமும் அமையவேண்டும். மாவட்ட அளவில் உச்சி சங்கம் கிளைகளைத் திறக்கலாம்.

சந்தையில் விற்பனை செய்யுமளவுக்கு மிகுதியாக உற்பத்தி செய்யும் நபர்கள் மட்டுமே சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். பிரதம சந்தையிடுகைச் சங்கம் ரூ. 2 இலட்சம் முதல் கொண்டிருக்கவேண்டும். அரசு ஒவ்வொரு சங்கத்திற்கும் ஓர் இலட்சம் ரூபாய் பங்கு முதல் வழங்க வேண்டும்.

அரசு தனக்குத் தேவைப்படும் விவசாய விளைபொருள்களை முடிந்தவரை சந்தையிடுகைச் சங்கங்கள்வழி வாங்கவேண்டும். இந்திய உணவுக் கூட்டுரு (Food Corporation of India) உச்சி சந்தையிடுகைச் சங்கங்களின் முகமை (agency) மூலம் உணவு தானியங்கள், பிற விவசாய விளைபொருள்களைக் கொள்முதல் செய்யவேண்டும். ஏற்றுமதி செய்யப்படும் விவசாய விளைபொருள் களை அரசாங்க வியாபாரக் கூட்டுரு (State Trading Corporation) கூட்டுறவு சந்தையிடுகைச் சங்கங்களிலிருந்து வாங்கவேண்டும்.

இரசாயன உரங்கள் (Chemical Fertilizers) திறமையாகச் செயல்பட்டுவரும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படல் வேண்டும். அனுப்பீடுமுறை (Consignment basis)யில் சங்கங் களுக்கு உரம் அனுப்பப்படவேண்டும்.

பங்கீட்டு முறைப்படி வழங்கப்படும் இரும்பு, எஃகு, சிமெண்ட் முதலிய விவசாயிகளுக்குக் கூட்டுறவு சந்தையிடுகை அல்லது சேவைச் சங்கங்கள் மூலம் அளிக்கப்படல்வேண்டும்.

இந்திய ஸ்டேட் வங்கி சந்தையிடுகைச் சங்கங்களின் தேவை களை நிறைவு செய்வதில் தனி அக்கறை காட்டவேண்டும்.

பிரதம சந்தையிடுகைச் சங்கங்களில் கிராமக் கடன் சங்கங் களும் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனிநபர்களும் உறுப் பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவது இன்றைய நிலையில் அவசியமெனத் தோன்றுகிறது. மாவட்டச் சந்தையிடுகைச் சங்கங்களில், பிரதம சந்தையிடுகைச் சங்கங்களும் பக்குவப் படுத்தும் சங்கங்களும் மட்டுமே உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். மாவட்ட அல்லது மண்டல சந்தையிடுகைச் சங்கங்களும், பிரதம சந்தையிடுகைச் சங்கங்களும் மாநிலத்திலுள்ள பக்குவப்படுத்தும் சங்கங்களும் உச்சி சந்தை யிடுகைச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேரவேண்டும். இச்

சங்கங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றல் உச்சிச் சங்கத்திற்கு எளிதாக அமைய இவ்வேற்பாடு உதவும்.

மூன்றும் திட்ட காலத்தில் வளர்ச்சி

மூன்றும் திட்டகால இறுதிக்குள் நாட்டிலுள்ள 5,63,629 கிராமங்களையும் உள்ளடக்கும் வகையில் பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்ட போதிலும் ஜூன் 1966 இறுதியில் 5,02,816 கிராமங்களை மட்டுமே உள்ளடக்கிச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. 60,618 கிராமங்கள் கூட்டுறவுக் குடையினுள் கொண்டுவரப்படவில்லை. மேலும் 45,352 கிராமங்களில் செயலாற்றி வந்த 23,680 சங்கங்கள் செயலற்றுப் (dormant) போயின. எனவே, மொத்தக் கிராமங்களில் 82% மட்டுமே கிராம நாணயச் சங்கங்களின் பணிகளைப் பெற்றிருந்தன.

திட்டகால இறுதிக்குள் 2,30,000 சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது; ஆனால், உண்மையில் 1,91,904 சங்கங்கள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன; இவற்றில் 23,680 செயலற்றிருந்தபடியால் நடைமுறையில் செயலாற்றி வந்தது 1,68,224 சங்கங்களே. திட்டகாலத்தில் மேலும் புதிய சங்கங்களை அமைப்பதிலும் மேலும் பலரை உள்ளடக்குவதிலும் அவ்வளவு முனைப்புக் காட்டாது வளம்பெற்ற பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் மூலம் மேலும் பெருவாரியாகக் கடன் வழங்கு வதில் தீவிரம் காட்டப்பட்டது.

விவசாயக் கடன் சங்கங்களைப் புத்துறுதிப் (revitalize) படுத்து வதில் மூன்றும் திட்டம் தீவிரமாக முனைந்தபோதிலும், பெரும் பான்மையான சங்கங்கள் நலிந்து, திறனற்றுக் கிடந்தன. ஏறத்தாழ 80% சங்கங்கள் தணிக்கைத் தரத்தில் 'C', 'D' அல்லது 'E' என்று பாகுபாடு செய்யப்பட்டிருந்தன.

விவசாயக் கடன் சங்கங்களில் 1966 ஜூன் இறுதியில் 26.1 மில்லியன் உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் செயலற்றிருந்த சங்கங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 1.5 மில்லியனாகும். ஆகவே, செயல்பட்டு வந்த சங்கங்களில் மொத்தம் 24.6 மில்லியன் உறுப்பினர்களிருந்து வந்தனர். மூன்றும் திட்டக் குறியீடான 37 மில்லியன் உறுப்பினர்களுக்கு இது மிகவும் குறைவானதே. செயல்பட்டுவரும் சங்கங்கள் ஏறத்தாழ 33% விவசாயிகளை உள்ளடக்கியிருந்தன. ஆனால், 60% விவசாயிகளுக்

காவது கூட்டுறவுச் சங்கப் பணிகள் கிட்ட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருந்தது.

கூட்டுறவுகள் விவசாயத் தேவைகளுக்கு வழங்கிய குறுகிய—மத்திய காலக் கடன், நீண்டகாலக் கடன் பற்றிய செய்திகளைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம். திட்டத்தின் குறியீடும், நிறைவெய்திய அளவும் மாநிலவாரியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அட்டவணை

கூட்டுறவுக் கடன்—இலக்குகளும் நிறைவெய்தியதும் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்

மாநிலம்	குறுகிய-மத்திய காலக் கடன்		நீண்டகாலக் கடன்	
	இலக்கு	நிறைவெய்தியது (1965-66)	இலக்கு	நிறைவெய்தியது (30-6-66இல் நிலுவைக் கடன்)
ஆந்திரப் பிரதேசம்	60·00	18·33	23·31	28·32
அஸ்ஸாம்	8·00	0·39	1·60	0·18
பீகார்	11·50	10·40	3·50	0·64
குஜராத்	50·00	46·79	20·00	31·71
ஜம்மு-காஷ்மீர்	5·00	0·59	——	0·16
கேரளம்	16·00	12·40	3·00	3·09
மத்தியப்பிரதேசம்	40·00	28·49	5·00	4·47
மகாராட்டிரம்	100·00	75·99	50·00	46·06
மைசூர்	37·50	21·01	10·00	12·84
ஒரிசா	18·00	7·70	2·00	2·72
பஞ்சாப்	30·00	27·49	2·90	4·40
ராஜஸ்தானம்	18·00	7·73	8·05	0·91
தமிழ்நாடு	47·00	30·02	14·48	17·85
உத்தரப் பிரதேசம்	70·00	44·48	5·00	8·13
மேற்கு வங்காளம்	15·00	8·43	1·50	1·44
யூனியன் பிரதேசங்கள்	3·17	1·41	0·20	0·36
மொத்தம்	5,29·17	3,41·65	1,50·54	1,63·26

அட்டவணையிலிருந்து நீண்டகாலக் கடன் இலக்கு எய்தப்பட்டது மட்டுமல்லாமல் அதற்குமேலும் வழங்கப்பட்டது என்று புலனாகிறது. குறுகிய-மத்திய காலக் கடன் இலக்குகளில் 64%

மட்டுமே அடையப்பட்டது. சில மாநிலங்களில் திட்டமிட்ட இலக்கிற்கும் நிறைவெய்திய அளவிற்குமிடையே வேறுபாடு மிகுதியாக இருந்தது.

மூன்றும் திட்டகாலத்தில் 680 பக்குவப்படுத்தும் (Processing) கூட்டுறவுகள் நிறுவத் திட்டமிடப்பட்டது. ஜூன் 1966 இறுதியில் 582 கூட்டுறவுகள் நிறுவப்பட்டிருந்தன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 78, பருத்தி விதைநீக்கிக் கட்டும் சங்கங்கள் 155, நெல் உமிநீக்கும் சங்கங்கள் 329, அரிசி ஆலைகள் 142, எண்ணெய் ஆட்டும் சங்கங்கள் 298, காய்கறி-பழங்கள் சங்கங்கள் 22 திட்டகால இறுதியில் இருந்தன. மூன்றும் திட்டகாலத்தில் அரிசி ஆலைகளை அமைக்கக் கூட்டுறவுகளுக்கு உதவி வழங்கப்பட்டது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றும் திட்ட காலத்தில், மத்திய அரசால் உருவாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் பெருமளவு அரசாங்க ஆதரவும் உதவியும் பெற்றுப் பெருவளர்ச்சி கண்டன. பண்டசாலைகளின் எண்ணிக்கை 1960-61இல் 7,058 ஆக இருந்தது. 1965-66இல் 13,077 ஆக உயர்ந்தது. உறுப்பினர்களின் எண்ணிக்கை 13.41 இலட்சத்திலிருந்து 29.30 இலட்சமாக மேற்கண்ட ஐந்தாண்டுகளில் பெருகிற்று. விற்பனையும் ரூ. 44 கோடியிலிருந்து ரூ. 198·35 கோடியாக வளர்ந்தது. இருப்பினும் பிரதம சங்கங்களில் மூன்றிலொருபங்கு செயலற்று இருந்தன; கால்பங்கு சங்கங்கள் நட்டத்தில் நடந்துவந்தன.

சந்தையிடுகைச் சங்கங்கள் (Marketing Societies) மூன்றும் திட்ட இறுதியாண்டில் ரூ. 360 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்களைக் கையாள வேண்டுமெனக் குறியீடு மேற்கொள்ளப்பட்டு நிறைவெய்தவும் பட்டது. உணவு தானியங்கள் மட்டும் ரூ. 200 கோடியளவுக்குக் கூட்டுறவுகளால் கையாளப்பட வேண்டும் என்று கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு பரிந்துரைத்தது. 1965-66இல் ரூ. 136·75 கோடியளவு உணவு தானியங்கள் சந்தையிடுகைச் சங்கங்களால் கையாளப்பட்டன.

நான்காம் திட்டகாலக் குறியீடுகள்

நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1969-74) கூட்டுறவு வளர்ச்சிக்கு ரூ. 178·57 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 119·21 கோடி மாநில அரசுகளும், ரூ. 4·61 கோடி யூனியன் பிரதேசங்களும், ரூ. 24·50 மத்திய அரசு உருவாக்கும் திட்டங்களுக்கும், ரூ.30.25 கோடி மத்தியத் துறையினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகைமட்டுமல்லாது நிலவள

வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்கள் வாங்க ரூ. 90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அனைத்திந்திய கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு (All-India Rural Credit Review Committee)

நான்காம் திட்ட காலத்தில் கிராமக் கடன் அளிப்பு நிலையைப் பொதுவாக மறு ஆய்வு செய்யவும், நாட்டில் மேற்கொள்ளப் பட்ட தீவிர சாகுபடித் திட்டங்களுக்குத் தேவைப்படும் கடன் வசதிகளை மறு ஆய்வு செய்யவும் இந்திய ரிசர்வு வங்கி திரு. பி. வெங்கடப்பையா தலைமையில் 1966இல் ஒரு குழுவை அமைத்தது. இக் குழு 1969இல் தன் அறிக்கையை அளித்தது. இந்த அறிக்கை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மிகவும் விரிவான முறையில் கிராமக் கடன் நிலையைப்பற்றி விசாரணை செய்த அனைத்திந்திய கிராமக் கடன் விசாரணைக் குழுவின் (All-India Rural Credit Survey) அறிக்கைக்குப் பின்னர் (1954-க்குப் பின்னர்) ஏற்பட்ட வளர்ச்சி, மாறுதல் முதலியவற்றை இக் குழு மறு ஆய்வு செய்தது. விசாரணைக் குழுவில் இடம்பெற்ற திரு. பி. வெங்கடப்பையா, பேராசிரியர் டி. ஆர். காட்கில் ஆகியோர் மறு ஆய்வுக் குழுவிலும் இடம்பெற்றனர். எனவே, விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டன, விரைவாக மாறிவரும் பொருளாதார நிலைக்கு எந்த அளவுக்குப் பொருத்தமாயுள்ளன என்பது போன்ற வினாக்களுக்கு விடை தேடும் பொறுப்பு இக் குழுவிற்குத் தரப்பட்டது.

ரிசர்வு வங்கியில் வேளாண்மைக் கடன் அவை (Agricultural Credit Board) அமைத்தல்; நாட்டில் பல மாவட்டங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை (Small Farmers Development Agency) நிறுவுதல் கிராமிய மின்னமைப்புக் கூட்டுரு (Rural Electrification Corporation) ஒன்றமைத்து அதன்வழி வேளாண்மை மேற்கொள்ளத்தக்க வாய்ப்புள்ள வளர்ச்சிக் குன்றிய இடங்களுக்கு உதவியளித்தல்; விவசாய மறுநிதிக் கூட்டுரு (Agricultural Refinance Corporation) இன்னும் பரவலான, பேரளவுத் திட்டங்களை மேற்கொள்ளல்; கூட்டுறவுகள்—வாணிக வங்கிகள்வழி விவசாயத்திற்குத் தேவையான கடன்களைக் காலா காலத்தில் தக்க அளவில் தருவதற்கு வழிமுறைகள்—என்பன போன்ற பலப்பல பரிந்துரைகளை இக் குழு அளித்தது.

கூட்டுறவு அமைப்பின் அடித்தளத்தில் இயங்கிவரும் பிரதம நாணயச் சங்கங்கள் வளம்பெற்றுத் திகழ வேண்டியதன்

அவசியத்தைக் குழு மீண்டும் வற்புறுத்தியது. கிராமங்களிலுள்ள பொருள் வளத்தைத் திரட்டும் திறன் கூட்டுறவு விவசாயச் சங்கங்களுக்கு உண்டாகவேண்டும். விரைவில், வளமார்ந்த அல்லது வளம்பெறு வாய்ப்புள்ள சங்கங்கள் மட்டுமே நடைமுறையிலிருக்கின்றன என்ற நிலை வரவேண்டும். வளமார்ந்த சங்கங்கள் மேலும் வலுவடைந்து வங்கியப் பணிகள் பலவற்றைச் செய்யுந் திறன் பெறவேண்டும்.

பயிர்க்கடன் திட்டம் முழுமையாக நாடெங்கும் அமுல் செய்யப்படவேண்டும். கூட்டுறவுக் கடன் கொள்கைகளும், நடைமுறைகளும் எளிதாக்கப்படவேண்டும். பல்வகைப் பயிர்கள் பயிரிடும் விவசாயிகட்கு ரொக்கக் கடன் (Cash Credit) வசதிகள் அளிக்க முயற்சிக்கலாம்.

கூட்டுறவுக் கடன் வழங்கல் பின்னேக்கிச் செல்லும் இடங்களில் மாநில வங்கிகள் பெரு முயற்சி செய்து நேரடி நிதிவழங்கலை மேற்கொள்ளவேண்டும். கிராமச் சங்கங்கள் செயலற்று விளங்குமிடங்களில் மத்திய வங்கி விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் வழங்கவேண்டும்.

சிறு விவசாயிகளின் மேம்பாட்டுக்குத் தனித் திட்டமொன்றைத் தயாரித்தளித்த சிறப்பு அனைத்திந்திய கிராமக் கடன் மறு ஆய்வுக் குழுவிற்கு உரித்தாகும். பல மாநிலங்களில் 30 மாவட்டங்கள் தேர்ந்தெடுத்து அங்குள்ள சிறு விவசாயிகள் புதிய விவசாய முறைகளைக் கையாண்டு ‘கையிற்கும் வாயிற்கும்’ என்ற நிலை போய் விவசாயத்தைத் தொழிலாக நடத்தும் நிலை உண்டாக இத் திட்டம் உதவும். நாளடைவில் வளம்பெற்ற விவசாயிகளாகத் திகழக்கூடிய சிறு விவசாயிகளின் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு வேண்டிய கடன், சேவை, உள்ளீடுகள் (inputs) முதலியவற்றை உரிய காலத்தில் நடைமுறையிலிருக்கும் நிலையங்கள்வழி அல்லது வேறுவழி அளித்து வருவதே இம் முகமை (agency)யின் முதற் பணியாம். சிறு விவசாயிகளுக்குக் கூட்டுறவு நிலையங்கள் பெருவாரியாகக் கடன் வழங்குவதனால் ஏற்படக்கூடிய நட்டத்தை ஈடுகட்டும் வகையிலும் அந் நிலையங்களின் நிருவாக—மேற்பார்வை அலுவலர்களைக் கூடுதலாக அமர்த்த உதவும் வகையிலும், முகமை மானியம் வழங்கும்.

நீண்டகாலக் கடன்கள் வழங்குவதில் திருப்பிச் செலுத்தும் திறன் (Repaying Capacity) முக்கிய தகுதியாகக் கவனிக்கப்படவேண்டும். கடன் சரியானபடி பயன்படுத்தப்படுகிறதா என்று

கவனித்து மேற்பார்வை செய்வது அவசியம். முடிந்தவரை கடன்கள் திட்ட அடிப்படையில் தரப்படவேண்டும். நீர், மின் சாரம், உரம் ஆகிய வழங்கும் மாநில அரசு அதிகாரிகளோடு ஒருங் கிணைந்து கடன் வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விவசாய மறுநிதிக் கூட்டுரு ரிசர்வு வங்கியின் விவசாயக் கடன் பிரிவுடன் ஒன்றிச் செயல்பட்டு நீண்டகால விவசாயக் கடன் துறைக்கு ஒருங்கிணைப்பாளர், அறிவுரையாளர், நிதியாளர் என்ற நிலைகளில் உதவவேண்டும். இக் கூட்டுருக்கு மேலும் நிதி வசதியளிக்கப்படவேண்டும். இக் கூட்டுரு மாநிலங்களிலுள்ள தனது அலுவலகங்களை மேலும் விரிவுபடுத்தி, தன்னிடம் நிதியுதவி பெறும் நிலையங்களின் வகைகளையும் பெருக்கிடவேண்டும்.

விவசாயத்திற்கு வேண்டும் கூடுதலான நீர்ப்பாசன வசதிகளை யளிக்க மேலும் பன்னிரண்டரை இலட்சம் நீரேற்றிப்பொறி (Pumpset)கள் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டது. 1973-74 இறுதிக்குள் இத்தனைப் பொறிகள் இயங்கக் கிராமப்புறங்கள் முழுதிலும் மின்வசதி கிடைக்கவேண்டும். இந்தப் பெரும்பணியை மேற்கொள்ள கிராம மின்னமைப்புக் கூட்டுரு (Rural Electrification Corporation) நிறுவப்பட வேண்டுமெனக் குழு பரிந்துரைத் தது. இக் கூட்டுரு கிராம மின்னமைப்புத் திட்டங்கள் முந்துமை யிடங்களில் (Priority areas) நிறுவப்படவும், மின்வாரியங் கள் வெளியிடும் கிராம மின்னமைப்புக் கடன் பத்திரங்களை வாங்க ஒப்பவும், கிராம மின்னமைப்புக் கூட்டுறவுகளுக்கு நீண்டகாலக் கடன்கள் வழங்கவும் உதவுமென எதிர்பார்க்கப்பட்டது.

வாணிக வங்கிகள் விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் வழங்கிடவேண்டும் என்று மறு ஆய்வுக் குழு பரிந்துரைத்தது. விவசாய விளைபொருள் சந்தையிடுகை, உரம் முதலான உள்ளீடுகள் (inputs) வழங்கல், அரசின் கொள்முதல் நடவடிக்கை களுக்கு நிதிவசதி செய்தல், பக்குவப்படுத்தல் சேமித்துவைத்தல் இடமாற்றல் போன்ற உள்ளிடையமைப்பு (infrastructure) நடவடிக்கைகளுக்கு உதவுதல் போன்ற பலப்பல பணிகளை வாணிக வங்கிகள் மேற்கொண்டு விவசாயத்திற்கு மறைமுகக் கடன்கள் வழங்கலாம்.

இந்திய ரிசர்வு வங்கி விவசாயக் கடன் துறையில் மிகவும் ஈடுபாடு காட்டி வருவது யாவரும் அறிந்ததே. ரிசர்வு வங்கி கிராமக் கடன் துறையில் வளர்ச்சி, மறுநிதியளிப்பு, ஒருங்கிணைப்பு ஆகிய பணிகளைச் செய்து வருவது அது நாட்டின் மையவங்கி

என்ற நிலைக்குப் பொருத்தமாக உள்ளது. ஆகவே, கிராமக் கடன் துறைக்கெனத் தனியாக ஓர் அனைத்திந்திய நிறுவனம் அமைக்கப் படுவது அவசியமன்று என மறு ஆய்வுக் குழு கருதியது. ஆழ்ந்த அனுபவமும் முதிர்ந்த தேர்ச்சியும் பலதுறைகளில் திறமையும் வாய்ந்த நபர்களைக் கொண்டு விவசாயக் கடன் அவை (Agricultural Credit Board) ஒன்றை ரிசர்வு வங்கியினுள் அமைத்துக் கிராமக் கடன்பற்றிய கொள்கைகளை வகுத்தல், மறு ஆய்வு செய்தல், மாற்றல் போன்ற உயர் அதிகாரங்களை அந்த அவையிடம் அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரைத்தது.

கூட்டுறவு இயக்கத்திற்கு இடப்பட்ட மகத்தான பணிகளைத் திறமையாகச் செய்து முடிக்கத் தகுதி வாய்ந்த அலுவலர் தேவை. இதற்கு, கூட்டுறவு நிறுவனங்கள் உயர் அலுவலர் நிலையில் பணிமுறைப் படிவம் (Cadre) அமைத்து நிருவாகத்தை மிகவும் தரமானதாக ஆக்கவேண்டும்.

மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு 1969

பெங்களூரில் 1969ஆம் ஆண்டு நடைபெற்ற மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அவற்றில் சில:

(i) 1968இல் சென்னையில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள், கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் ஊன்றிய நலமிகள் (vested interests) ஆதிக்கத்தை ஒடுக்கவேண்டும் எனத் தீர்மானித்ததை விரைவாகச் செயல்படுத்தவேண்டும்.

(ii) சிறு விவசாயிகள் கூட்டுறவுகளிலிருந்து தேவையான அளவு கடன்பெறத் தடையாயிருக்கும் பிணைபற்றிய விதிகள், தனி நபர் கடன் வரம்பு போன்றவற்றை மேலும் காலந்தாழ்த்தாது திருத்தவேண்டும்.

(iii) கடன் கொள்கைகள் உற்பத்திப் பெருக்க நோக்கம் நிறைவேறு வகையில் வகுக்கப்படவேண்டும்.

(iv) நலிந்து நிற்கும் மத்திய வங்கிகளுக்குப் புதுவாழ் வளிப்பது, பிரதம நாணயச் சங்கங்களை உரமூட்டுவது ஆகிய திட்டங்கள் விரைவாக முடிக்கப்படவேண்டும்.

(v) தவணைகடந்த கடன்கள் பெருகி வருகின்ற காரணத்தால், இந்தக் கேடான நிலையைச் சீர்ப்படுத்த அவசரகால அடிப்படை (emergency basis)யில் உடன் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்,

(vi) சிறு விவசாயிகளும் நிலத்தைப் பண்படுத்தித் தமது உழவு நிலத்தை ஆதாயந்தரும் வகையினதாகச் செய்துகொள்ள நிலவள வங்கிகள் நீண்டகாலக் கடன் கொள்கைகளை வகுக்க வேண்டும்.

(vii) கிராம மின்னமைப்புக் கூட்டுரு (Rural Electrification) அளிக்கும் வசதிகளைக் கூட்டுறவுத் துறை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

(viii) கூட்டுறவு இயக்கத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு உதவும் வகையில் தேசீய, மாநிலக் கூட்டிணைப்புகள் (federations) மேலும் இணைந்து செயல்படும் வழிகளை வகுக்கவேண்டும்.

(ix) விலைவாசியைக் கட்டுப்படுத்த பெருவகையில் உதவக் கூடிய நுகர்வோர் கூட்டுறவுகளைச் சார்ந்த திட்டத்திற்கு முதலிடம் தருவதுடன் நான்காம் திட்டகாலத்தில் அதற்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்யவும் வேண்டும்.

(x) சந்தையிடுகை, பக்குவப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு நான்காம் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி குறைவாக உள்ளது என்று கருதப்படுவதால் இந்திய அரசு, தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு (National Co-operative Development Corporation)வின் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து மாநில அரசுகளுக்கு நிதியுதவி வழங்கலாம்.

(xi) சிறு விவசாயிகளின் உற்பத்தித் திறனைப் பெருக்க உதவும் கூட்டுறவுப் பண்ணைத் திட்டத்தைச் சீரமைக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

(xii) கூட்டுறவுத் திட்டங்களைச் செவ்வையாக நிறைவேற்ற பயிற்சி பெற்றவர்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். செய்முறைப் பயிற்சி (Practical Training)க்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

நான்காம் திட்டகாலத்தில் விவசாய, நுகர்வோர் கூட்டுறவுகளுக்குப் பெருமளவு முக்கியத்துவம் தரப்படும். குறுகிய-மத்திய காலக் கடனளிப்புத் துறையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளாவன: (1) பிரதமக் கடன் சங்கங்களனைத்தையும் வளமார்ந்த நிலைக்குக்கொண்டு வருவது, (2) நலிந்து நிற்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளைச் சீரமைப்பது, திருத்தியமைப்பது, (3) தவணை கடந்த கடன்களைக் குறைப்பது, (4) விவசாயக் கடன் நிலைபேறுக்க நிதி (Agricultural Credit Stabilisation Fund)களை வலுப்படுத்துவது (5) தகுதிவாய்ந்த பயிற்சிபெற்ற ஊழியர்களைக்கொண்டு பிரதம சங்கங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பை மத்திய நிதி

யளிக்கும் முகமைகளுக்கு அளிப்பது, (6) வைப்புத்தொகை திரட்டுவது, (7) சேமிப்புகளைத் திரட்டுவது, (8) நான்காம் திட்டத்தின் இறுதியாண்டில் (1973-74 இல்) ரூ. 750 கோடியளவுக்குக் குறுகிய மத்தியகாலக் கடனளிப்பது.

நீண்டகாலக் கடன்துறையில் நிலமீட்பு (land reclamation), மண்வள பாதுகாப்பு (soil conservation), சிறுபாசனப் பணிகள் (minor irrigation works) போன்ற திட்டங்கள்வழி விவசாய வளர்ச்சிக்குதவ நிலவள வங்கிகள் தமது செயற்பாடுகளை விரிவு படுத்தவேண்டும். நான்காம் திட்டகாலத்தில் ரூ. 700 கோடியளவுக்குக் கடன்களை நிலவள வங்கிகள் வழங்கும். இதுவன்றி விவசாய மறுநிதிக் கூட்டுரு ரூ. 200 கோடி மறுநிதி வசதி வழங்கும். ஆக, நிலவள வங்கிகள்வழி ரூ. 900 கோடி கடன் நிலவள வங்கிகள் வழங்கும்.

சிறு விவசாயிகளுக்குச் சீரானமுறையில் கடன் வழங்கும் முயற்சிகள் நான்காம் திட்டகாலத்தில் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட சங்கத்திற்குத் தேவையான நிதிவசதிகளில்லாத நிலையிலும் சிறு விவசாயிகளுக்கு முந்துரிமை அடிப்படையில் கடன் அளிக்கப்படவேண்டும்; பெரிய விவசாயிகள் கூடுதல் பங்குமுதல் வழங்கும்படி வேண்டப்படுவர்; திருப்பிச் செலுத்தும் திறனையொட்டி சிறு விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படும் என்ற கருத்துகளையொட்டி கடனளிப்புக் கொள்கைகளும் செய்முறைகளும் வகுக்கப்படும்.

கூட்டுறவுச் சந்தையிடுகை அமைப்பு, பிரதம சங்கத்திலிருந்து தேசியமட்டம்வரை, வலுவூட்டப்பெறும். நான்காம் திட்ட இறுதியாண்டில் கூட்டுறவுச் சந்தையிடுகை, பக்குவப்படுத்தும் சங்கங்கள் ரூ. 900 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்களைக் கையாளும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏற்றுமதி வாணிகத்தில் ரூ. 10 கோடியும், மாநிலங்களுக்கிடை வாணிகத்தில் ரூ. 25 கோடியும் மதிப்புள்ள விவசாய விளைபொருள்களைக் கூட்டுறவுகள் கையாளும். 1973–74இல் கூட்டுறவுகள் 8 மில்லியன் டன் உணவுதானியங்கள், 36 மில்லியன் டன் கரும்பு, 0·6 மில்லியன் டன் வேர்க்கடலை, 1·8 மில்லியன் பேல் (Bale) பஞ்சு, 10,000 டன் பழம் காய்கறி கையாளுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

நான்காம் திட்டகால இறுதியில் 2,150 பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் செயல்பட்டு வரவேண்டுமென்ற இலக்கையொட்டி திட்டகாலத்தில் 550 விவசாயப் பக்குவப்படுத்தும் சங்கங்கள் அமைக்கப்படும். முன்னரே இருந்துவரும் சங்கங்கள் முழு

அளவுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதற்கான முயற்சியிலும் கருத்துச் செலுத்தப்படும்.

தீவிர சாகுபடித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகையில் இரசாயன உரங்கள், விதை, விவசாயக் கருவிகள், பயிர் பாதுகாப்பு மருந்து முதலிய மிகப்பெருமளவுக்குத் தேவைப்படும், ரூ. 650 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள், ரூ. 50 கோடி வீரிய விதைகள், ரூ. 50 கோடி பூச்சிக் கொல்லி மருந்துகள், ரூ. 15 கோடி விவசாயக் கருவிகள் கூட்டுறவுகள்வழி வழங்கப்படுமென நான்காம் திட்டக் குறியீடுகள் பேசுகின்றன. சரக்குகளைப் பாது காப்பாக வைக்க 2·0 மில்லியன் டன் அளவு கொள்ளும் கிடங்கு வசதிகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்படும்.

நுகர்வோர் கூட்டுறவுகளை வலுப்படுத்துவது நான்காம் திட்ட காலத்தில் மேலும் தீவிரமாக்கப்படும். தேசீய, மாநில நுகர்வோர் கூட்டிணைப்புகள் கொள்முதல் பணியினைத் தீவிரமாக மேற் கொண்டு செயல்படும் கிராமப்புறங்களில், சந்தையிடுகை, கிராமச் சங்கங்கள் மூலம் நுகர்ச்சிப் பண்டங்கள் வழங்க ஏற்பாடு கள் செய்யப்படும். நான்காம் திட்டகால இறுதியில் ரூ. 500 கோடி மதிப்புள்ள நுகர்ச்சிப் பண்டங்கள் கூட்டுறவுகள்வழி வழங்கப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிராம மின்னமைப்புத் துறையில் நான்காம் திட்ட காலத்தில் உருவாக்கத் திட்டமிடப்பட்ட கிராம மின்சாரக் கூட்டுறவுகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். ஐந்து மாநிலங்களில் கிராம மின்சாரக் கூட்டுறவுகள் முன்னோடி (Pilot) களாக ஆரம்பிக்கப் படும். விவசாயத்திற்கும், விவசாயம் சார்ந்த தொழில்களுக்கும் மின்வசதியளிக்கவும் மக்கள் மின்சார அளிப்பில் பங்கு ஏற்பதை ஊக்குவிக்கவும் கூட்டுறவு முறையில் மின்னமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டது.

கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும் இயக்கத்தின் தேவைகளுக் கேற்றவாறு தீவிரப்படுத்தப்படும். கூட்டுறவுப் படிப்பு, ஆராய்ச் சித் துறையில் வைகுந்த மேத்தா தேசீயக் கூட்டுறவு நிருவாகப் பயிற்சி நிலையம் ஓர் உச்சி நிலையமாக வளர்க்கப்படும். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளும், இளநிலைக் கூட்டுறவுப் பயிற்சிக்கூடங்களும் தேவையான தகுதிபெற்ற ஆசிரியர்கள் கொண்டு மேலும் செம்மையாக நடத்தப்பெறும். கூட்டுறவுகளின் உறுப்பினர்கள் தமது சங்கங்களைத் திறம்பட நடத்திவரக் கூட்டுறவுக் கல்வி அவசியமாகையால் மத்திய வங்கிகள், சந்தையிடுகைச் சங்கங்கள், மேலும் பிற கூட்டிணைப்புகளின் மேற்பார்வையிலும் ஆதரவின்

பேரிலும் கிராமக் கூட்டுறவின் உறுப்பினர் கல்வித் திட்டம் சீராக நடத்தப்பெறவேண்டும்.

நான்காம் திட்டத்தின் சில முக்கியக் குறியிலக்குகள் !

1.	பிரதம சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை (இலட்சத்தில்)	420
2.	உள்ளடங்கிய விவசாயக் குடும்பங்கள்	60%
3.	நான்காம் திட்ட இறுதியாண்டில் அளிக்கப்படவுள்ள குறுகிய-மத்தியாகாலக் கடன் (ரூ. கோடிகளில்)	750
4.	நான்காம் திட்டகாலத்தில் அளிக்கவிருக்கும் நீண்டகாலக் கடன் (ரூ. கோடிகளில்)	700
5.	புதிதாக நிறுவவேண்டிய பிரமத சந்தையிடுகைச் சங்கங்கள்	450
6.	கையாள வேண்டிய விவசாய விளைபொருள் மதிப்பு (ரூ. கோடிகளில்)	900*
7.	கூட்டுறவு விவசாயப் பக்குவப்படுத்தும் நிலையங்கள்	2,000
8.	கூட்டுறவுகள்வழி விற்பனையாகக் கூடிய உரங்கள் (ரூ. கோடிகளில்)	650
9.	பாதுகாப்பு வசதி (Storage) (மில்லியன் டன்களில்)	4·6
10.	கிராமப்புறங் களில் வழங்கவிருக்கும் நுகர்ச்சிப் பொருள்கள் (ரூ. கோடிகளில்)	500
11.	நகர்ப்புற நுகர்வோர் கூட்டுறவுகள்வழி விற்பனை (ரூ. கோடிகளில்)	400

நான்காம் திட்ட காலத்தில் மாநிலத் திட்டங்களுக்கு உத்தேசிக்கப்பட்ட ஒதுக்கீடு

திட்டத்தின் பெயர்	ஒதுக்கீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்
கடன்	2800·00
சந்தையிடுகை, பண்டப் பாதுகாப்பு	5050·00
சர்க்கரை ஆலைகள்	1000·00
சர்க்கரை ஆலைகளல்லாத பிற பக்குவப்படுத்தல் சங்கங்கள்	2500·00
கூட்டுறவுப் பண்ணை (மாநிலங்களின் பங்கு)	450·00
கல்வி, பயிற்சி	750·00
கூடுதல் இலாகா ஊழியர்	500·00
பிற திட்டங்கள்	600·00
	13650·00

* 1968-69 இல் உள்ள விலைவாசிப்படி

மத்தியத் திட்டங்களுக்கு உத்தேசிக்கப்பட்ட ஒதுக்கீடு :

திட்டத்தின் பெயர்	ஒதுக்கீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)
கூட்டுறவுப் பயிற்சி, கல்வி (மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் குழு, தேசீய இந்தியக் கூட்டுறவு ஒன்றியம் ஆகியவற்றிற்கு மானியம்)	300·00
கிராமப்புறங்களில் நுகர்ச்சிப் பண்டங்களை வழங்கல்	100·00
கூட்டுறவுப் பண்ணை	1,350·00

கூட்டுறவு வளர்ச்சி—ஒரு கண்ணோட்டம்

கூட்டுறவு இயக்கம் கடந்த 25 ஆண்டுகளில் 1947-72 அதாவது நாடு விடுதலை பெற்றதிலிருந்து வளர்ந்தவண்ணத்தைச் சற்று காண்போம். புள்ளிவிவரங்கள் 1971 ஜூன் இறுதியிலுள்ள நிலவரத்தைக் குறிக்கின்றன.

1947இல் நம் நாட்டில் 1,39,000 பல்வேறு வகைக் கூட்டுறவுகள் இயங்கிவந்தன. முதல் திட்டத் துவக்கத்தில் இவ்வெண்ணிக்கை, 1,80,000 ஆக வளர்ந்தது. இரண்டாம் திட்டகால ஆரம்பத்தில் இது மேலும் உயர்ந்து 2,40,000 ஆக நின்றது. மூன்றும் திட்டத் துவக்கத்தில் மொத்தம் 3,30,000 கூட்டுறவுகள் இயங்கிவந்தன. 1970-71ஆம் ஆண்டிலும் இதே எண்ணிக்கையளவு கூட்டுறவுகளிருந்து வருகின்றன. பிரதம விவசாயக் கூட்டுறவுகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வந்தபோதிலும் மேற்கண்ட மொத்த எண்ணிக்கை குறையாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயக் கடன் சங்கங்கள்

1960-61இல் 2,12,000 விவசாயக் கடன் சங்கங்களிருந்தன. ஒரு கிராமத்திற்கு ஒரு கூட்டுறவு என்ற கொள்கை மாறி வளமார்ந்த (vioble) தன்னிறைவு பெற்ற சங்கங்கள் அமைக்கப் படவேண்டுமென்ற கொள்கை ஏற்கப்பட்டது காரணமாக 1965-66இல் 1,92,000 கூட்டுறவு விவசாயச் சங்கங்களும் 1970-71இல் 1,62,000 சங்கங்களாகக் குறைந்தன. நலிந்த சங்கங்கள் மூடப்பட்டு, வளம்பெரு வாய்ப்பற்றச் சங்கங்கள் வேறு சங்கங்களுடன் இணைக்கப்பெற்றுக் கூட்டுறவின் அடித்தளம் வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

1960-61இல் 75%கிராமங்களில் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களின் பணி பரவியிருந்தது. 1970-71இல் கூட்டுறவுக் குடையின் கீழ் 95% கிராமங்கள் அடங்கியிருந்தன. கிராமச் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 1950-51இல் 44·08 இலட்சமாக இருந்தது 1970-71 இல் 325·5 இலட்சமாக உயர்ந்தது. கிராம மக்களில் 36% கூட்டுறவில் உறுப்பினராகச் சேர்ந்திருந்தனர்.

சங்கமொன்றின் பங்குமுதல் சராசரி ரூ. 727 ஆக 1950-51 லிருந்தது 1970-71இல் ரூ. 12,324 ஆக உயர்ந்தது. இதே காலத்தில் வைப்புத் தொகை ரூ. 408-லிருந்து ரூ. 4,251 ஆக உயர்ந்தது. இச் சங்கங்கள் அளித்த கடன்களும் ரூ. 1,900-த்திலிருந்து ரூ. 35,000 ஆக வளர்ந்து நின்றது. சங்கமொன்றின் சராசரி உறுப்பினர் எண்ணிக்கை 45லிருந்து 201 ஆக உயர்ந்தது. இக் காலத்தில் உறுப்பினரொருவரின் சராசரி பங்கு முதல் ரூ. 17-லிருந்து ரூ. 61 ஆக உயர்ந்தது; வைப்புத்தொகை ரூ. 9·7-லிருந்து ரூ. 21·00 ஆக உயர்ந்தது; வழங்கப்பட்ட கடன் ரூ. 44-லிருந்து ரூ. 173 ஆக உயர்ந்தது. குறுகிய-மத்திய காலக் கடன் ரூ. 24 கோடி படிப்படியாக உயர்ந்து ரூ. 564 கோடியாக விளங்கியது. தவணைகடந்த கடன் 1960-61இல் 20·3% ஆக இருந்தது 1970-71இல் 39%ஆக உயர்ந்துவிட்டது.

மேற்கண்டவாறு விவசாயக் கடன்களை வழங்கியதில் பெரும் பொறுப்பு மத்தியக் கூட்டுறவு வங்கிகளைச் சார்ந்திருந்தது. 1951-52இல் இயங்கிய 509 மத்திய வங்கிகள், வளமார்ந்த வங்கிகளாகச் சீரமைக்கப்பட்டபோது எண்ணிக்கையில் குறைந்து 1970-71இல் 341 வங்கிகளெனக் குறைந்து நின்றன. மத்திய வங்கிகள் 1951-52இல் 779 அலுவலகங்கள் மட்டுமே கொண்டிருந்தன; 1970-71இல் இந்த எண்ணிக்கை 3,775ஆக விரிவடைந்திருந்தது. இந்த வங்கிகள் 1970-71இல் ரூ. 438·55 கோடி வைப்புகளைப் பெற்றிருந்தன; ரூ. 866·39 கோடி கடன்களை வழங்கியிருந்தன.

விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்க நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1950-51இல் உச்சி நிலவள வங்கிகள் ஐந்து மட்டுமே இருந்தன; 1970-71இல் இவ்வெண்ணிக்கை 19 ஆக உயர்ந்தது. பிரதம நிலவள வங்கிகளின் எண்ணிக்கை 286லிருந்து 865 ஆக உயர்ந்தது. வழங்கப்பட்ட கடன் தொகையும் ரூ. 1·38 கோடியிலிருந்து ரூ. 168·28 கோடியாக மிகப் பெருமளவுக்குப் பெருகி நின்றது.

கூட்டுறவு விவசாயக் கடன் வழங்கல் உண்மையிலேயே பெருகி வளர்ந்த போதிலும் இதனால் பயனடைந்தவர்கள் பெரிய

விவசாயிகளும், சமுதாயத்தில் செல்வாக்கு மிக்கவர்களுமே. இந்த நிலைமாறி சிறு விவசாயிகளும், பின்தங்கிய சமுதாயத்தினரும் கூட்டுறவால் நலம்பெற பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஒருவர் தரக்கூடிய பிணையினைக் கருதி கடன் வழங்கலை விட்டு, கடன் கோரும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்கும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மேலும், குறிப்பிட்ட சில மாவட்டங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமும், கடைநிலை விவசாயிகள் (Marginal farmers) விவசாயப் பண்ணையாட்கள் (Agricultural Labourers) மேம்பாட்டுத் திட்டமும் செயல்பட்டு வருகின்றன.

ஆந்திரப் பிரதேசம், குஜராத், ஹரியானு, கேரளம், மகாராட்டிரம், மைசூர், பஞ்சாப், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலும் கிராமங்கள் முழுதும் கூட்டுறவு இயக்கத்தின் பரப்பில் அடங்கியுள்ளன. இந்தியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் கூட்டுறவு வளர்ச்சி குன்றிய மாநிலங்கள் பல உள்ளன.

சந்தையிடுகைச் சங்கங்கள்

இரண்டாம் திட்ட காலத்திலிருந்துதான் கூட்டுறவுச் சந்தையிடுகை சீரானமுறையில் வளர்ந்துவரத் துவங்கியது. தேசீய அளவில் தேசீய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்பு (National Agricultural Co-operative Marketing Federation) (சுருக்கமாக NAFED என அறியப்படுவது)ம், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சந்தையிடுகைச் சங்கங்களும் அடித்தளத்தில் பிரதம சந்தையிடுகைச் சங்கங்களும் செயல்படுகின்றன. 1970–71இல் 3, 261 பிரதம சங்கங்கள், 159 மாவட்டச் சங்கங்கள், 21 மாநிலக் கூட்டிணைப்புகள், ஒரு தேசீயக் கூட்டிணைப்பும் செயலாற்றி வந்தன. இவையன்றித் தனிவகைப் பண்டங்களுக்கு மூன்று மாநில கூட்டிணைப்புகளும், மைசூர் மாநிலத்தில் பாக்கு வியாபாரத்திற்கு மாநிலங்களுக்கிடையேயான கூட்டிணைப்பு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

1950–51இல் ரூ. 47 கோடியளவே விவசாய விளைபொருள்களைச் சந்தையிட்ட கூட்டுறவுகள் 1970–71இல் ரூ. 650 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்களைக் கையாண்டது. 1970-71இல் கூட்டுறவுகள் ரூ. 5·30 கோடி மதிப்புள்ள பருப்பு, வெங்காயம், மிளகாய், வாழைப்பழம், மிளகு, பிண்ணுக்கு, உருளைக் கிழங்கு, பருத்தி போன்ற பொருள்களை ஏற்றுமதி செய்தன. இதே ஆண்டில் சந்தையிடுகை—அளிப்பு (Marketing and supply) சங்கங்கள் ரூ. 250 கோடி மதிப்புள்ள உரங்களை வழங்கியது.

பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள்

பக்குவப்படுத்தும் கூட்டுறவுகளில் சிறப்பான இடம் பெறுவது கூட்டுறவு சர்க்கரை ஆலைகளாகும். 1971-72இல் மொத்தம் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறனில் 46% கூட்டுறவுத் துறையிலுள்ள 123 சர்க்கரை ஆலைகள் வசமிருந்தன. நாட்டில் 1970-71இல் உற்பத்தியான சர்க்கரையில் 34% கூட்டுறவு ஆலைகளின் பங்காகும்.

சர்க்கரை ஆலைகளைத் தவிர வேறு 1,606 பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் 1970-71இல் செயல்பட்டுவந்தன. அவற்றில் 1,200 சந்தையிடுகைச் சங்கங்களின் சார்பு நிறுவனங்கள்—அரிசி ஆலை, பருத்தி விதைநீக்கி ஆலை, எண்ணெய்ச் செக்குப் போன்றன; பிற 406 நூற்பாலை போன்ற தனி நிறுவனங்களாகும். பழம்—காய்கறி கெடாமல் பாதுகாத்தல், குளிர்சாதனப் பாதுகாப்பு, தேயிலை—காப்பி பதப்படுத்தல் போன்ற செயல்களை 94 கூட்டுறவுகள் 1971 ஆம் ஆண்டு இறுதியில் மேற்கொண்டிருந்தன.

நுகர்வோர் கூட்டுறவுகள்

நுகர்வோர் கூட்டுறவுகளைச் சீரானமுறையில் அமைக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1971ஆம் ஆண்டு இறுதியில் 400 மொத்த விற்பனைப் பண்டசாலைகளும் (Wholesale stores), 15,000 சில்லறைக்கடைகளும் செயல்பட்டுவந்தன. இக் கூட்டுறவுகள் மாதத்திற்கு ரூ. 30 கோடிக்கும் மிகுதியாக விற்பனை செய்வது குறிப்பிடத்தக்கது.

1960-61இல் 7,058 நுகர்வோர் கூட்டுறவுகள் 13,40,767 உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. இவை ரூ. 44·23 கோடி மதிப்புள்ள சரக்குகளை விற்றன. 1970-71 இறுதியில் 13,551 நுகர்வோர் சங்கங்கள் 43,25,558 உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. இச் சங்கங்கள் ரூ. 145·16 கோடி மதிப்புள்ள சரக்குகளை விற்றன.

தொழிற் கூட்டுறவுகள் (Industrial Co-operatives)

நாடு விடுதலையடைந்த பின்னரே தொழிற் கூட்டுறவுகள் பெருமளவுக்கு நிறுவப்படலாயின. 1950-51இல் 7,105 தொழிற் கூட்டுறவுகள் மட்டுமே இருந்தன. 1969-70இல் 46,936 பிரதம தொழிற் கூட்டுறவுகள் இயங்கிவந்தன.

நெசவாளர் கூட்டுறவுகள்

தேசீய நெசவாளர் கூட்டுறவு ஒன்று, 24 உச்சிக் கூட்டுறவுகள், 12,027 பிரதம நெசவாளர் கூட்டுறவுகள் 1971 ஜூன் இறுதியில்

இருந்தன. இவற்றில் 6,161 பிரதமச் சங்கங்கள் செயலற்றுக் கிடந்தன. பிரதமச் சங்கங்கள் அனைத்திலும் சேர்ந்து 12,12,369 உறுப்பினர்களிருந்தனர். இச் சங்கங்களின் நடைமுறை முதல் ரூ. 57 கோடியாகும். இவை ரூ. 60 கோடி மதிப்புள்ள துணி உற்பத்தி செய்து ரூ. 73 கோடி அளவுக்கு விற்பனை செய்தன. கூட்டுறவுத் துறையில் 10 இலட்சம் தறிகள் இருந்தாலும் 4 இலட்சம் தறிகளே பயன்படுத்தப்பட்டு வந்தன.

நெசவாளர் கூட்டுறவுகளன்றி ஜுன் 1971 இறுதியில் 19 மாநில, 123 மத்திய, 34,282 பிரதம தொழிற் கூட்டுறவுகளிருந்தன. இவற்றில் 15,072 மட்டுமே இயங்கிவந்தன. இவை உற்பத்தி செய்த பொருளின் மதிப்பு ரூ. 32 கோடி. இவற்றின் விற்பனை ரூ. 34 கோடி.

நூற்பு ஆலைகள்

கூட்டுறவுத் துறையில் 9 இலட்சம் கதிர்கள் கொண்ட 62 நூற்பு ஆலைகள் 1970-71இல் இயங்கிவந்தன. இவற்றின் உற்பத்தி ரூ. 35 கோடியென மதிப்பிடப்பட்டது.

கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள்

ஜுன் 1971 இறுதியில் 5·070 கூட்டுப் பண்ணைச் (Joint farming) சங்கங்கள் 1,22,334 உறுப்பினர்கள் கொண்டிருந்தன. இவர்களில் 86,601 உறுப்பினர்கள் மட்டுமே உழைத்து வந்தனர். இவை 5 இலட்சம் ஏக்கர்களில் ரூ. 7 கோடி மதிப்புள்ள பயிர்களை விளைவித்தனர்.

ஒருங்கு கூட்டுப் பண்ணைச் சங்கங்கள் (Collective farming Societies) 4,403 மொத்தம் 1,35,094 உறுப்பினர்களுடன் இரண்டரை இலட்சம் ஏக்கரை 1970-71இல் பயிரிட்டு ரூ. 2 கோடி மதிப்புள்ள விளைபொருளை உற்பத்தி செய்தனர்.

நீர்ப்பாசனச் சங்கங்கள்

நீர்ப்பாசனச் சங்கங்களின் எண்ணிக்கை 1971 ஜுன் இறுதியில் 3,421ஆக இருந்தது. இவை 64,000 ஹெக்டேர்களுக்குப் பாசன வசதியளித்தன.

பால் பண்ணைக் கூட்டுறவுகள்

ஜுன் 1971 இறுதியில் 11,909 பால் உற்பத்தி அளிப்புச் சங்கங்களும் 150 பால் அளிப்பு ஒன்றியங்களும் இருந்தன. ஒன்றியங்களில் 9,609 சங்கங்களும் 22,050 தனிநபர்களும் உறுப்பினராயிருந்தனர். உற்பத்தி-அளிப்புச் சங்கங்களில் 196 சங்கங்களும் 10,23,134 தனிநபர்களும் உறுப்பினரானயிருந்தனர். இச் சங்கங்கள் விற்ற பாலின் மதிப்பு ரூ. 59 கோடியாகவும்

பால் பொருள்களின் மதிப்பு ரூ. 49 கோடியாகவும் 1970-71இல் இருந்தது.

மீனவர் கூட்டுறவுகள்

1970-71இல் 4,327 மீனவர் கூட்டுறவுகள் இயங்கிவந்தன. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை 4,66,658 ஆக இருந்தது. இச் சங்கங்கள் விற்ற மீன், மீன் பிடிப்புக் கருவி முதலிய ரூ. 8 கோடி எனவும், பிடிக்கப்பட்ட மீன்கள் மதிப்பு ரூ; 4 கோடி எனவும் கணக்கிடப்பட்டது.

வீட்டுவசதிக் கூட்டுறவுகள்

ரூ. 103 கோடி நடைமுறை முதலுடன் 16 மாநிலச் சங்கங்கள் 1970-71இல் இயங்கிவந்தன. 1971 ஜூன் இறுதியில் 18,050 பிரதம வீட்டுவசதிக் கூட்டுறவுகளிருந்தன. 1970-71இல் இக் கூட்டுறவுகள் 4,134 தனி வீடுகளையும், 15,805 குடியிருப்புகளை யும் கட்டின. இக் கூட்டுறவுகளின் உறுப்பினர்கள் 23,050 வீடுகள் கட்டினர்.

கிராம மின்னமைப்புக் கூட்டுறவுகள்

கிராமப்புறங்களுக்கு மின் வசதி ஏற்பாடு செய்ய ஆந்திரப் பிரதேசம், குஜராத், மகாராட்டிரம், மைசூர், உத்தரப்பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களில் கிராம மின்னமைப்புக் கூட்டுறவுகள் நிறுவப்பெற்றுள்ளன. இக் கூட்டுறவுகள் 1970-71இல் செயலாற்றத் துவங்கி 27 கிராமங்களுக்கு மின்வசதி வழங்கின. இதன்வழி 561 விவசாய இணைப்புகளும் (agricultural Connections), 74 தொழில்துறை இணைப்புகளும் (industrial connections) தரப்பட்டன.

ஆறாவது இந்தியக் கூட்டுறவு மாநாடு (1971)

1970இல் துவங்கிய பத்தாண்டுகளைச் 'சமூக-பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு' என்ற ஐக்கிய நாடு களின் தீர்மானத்தை யொட்டி அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியம் (International Co-operative Alliance) கூட்டுறவு வளர்ச்சிப் பத்தாண்டு (Co-operative Development Decade) என அறிவித்துள்ளது. ஆறாவது இந்தியக் கூட்டுறவு மாநாடு இந்த அறிவிப்பைப் பெருமகிழ்வுடன் ஆதரித்து, முதற்படியாக, கிராமப் புற வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த திட்டமொன்றைத் தயாரித்து அமுல்படுத்த யோசனை கூறியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தி லும் ஒரு கிராமம் முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல நோக்குக் கூட்டுறவு அமைப் பொன்றின் வழி அக் கிராமத்தின்

பல்துறை வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் கூட்டுறவு வழியே ஏற்பாடு செய்யவேண்டும்.

சிறு விவசாயிகளுக்கும், சொந்த நிலமில்லாத பண்ணையாட்களுக்கும், பின் தங்கிய வகுப்பினருக்கும் தாராளமாகக் கடனுதவிகள் வழங்கும் பணியைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

இந்திய அரசு ஏற்றுமதி செய்ய விரும்பும் விவசாய விளை பொருள்களனைத்தும் தேசீய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்புவழி வெளிநாடுகளுக்கனுப்பவேண்டும். இதனால் உள்நாட்டில் விலை நிலவரம் பாதிக்கப்படாதிருப்பதுடன் ஏற்றுமதி விலையின் நன்மை விவசாயிகளுக்குக் கிட்டும். இது போன்று பல பரிந்துரைகளை மாநாடு அளித்திருக்கின்றது.

ஐந்தாம் திட்டமும் (1974-79) கூட்டுறவும்

1972ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்கள் மாநாட்டில் கூட்டுறவுத் துறை ஐந்தாம் திட்ட காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் பணிகளை ஆராய்ந்தது. 1973—74 இல் கூட்டுறவுகள் மூலம் ரூ. 680 கோடி குறுகிய—மத்திய காலக் கடன்கள் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஐந்தாம் திட்ட இறுதியாண்டில் இது ரூ. 1,200 கோடியாக உயரும் என மதிப்பிடப்பட்டது. நான்காம் திட்ட காலத்தில் ரூ. 700 கோடி அளவுக்கு விவசாய வளர்ச்சிக்காக நீண்ட காலக் கடன் வழங்கப்படும். இத்தொகை ஐந்தாம் திட்ட காலத்துக்கு ரூ. 1,100 கோடியாக வளருமென எதிர்பார்க்கப்படுகின்றது. நான்காம் திட்டகால இறுதியாண்டில் கூட்டுறவுகள் ரூ. 900 கோடியளவு விவசாய விளைபொருள்களைக் கையாண்டன; ஐந்தாம் திட்டகால இறுதியாண்டில் (1978—79) கூட்டுறவுகள் ரூ. 1,800 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்களைக் கையாளுமென மதிப்பிடப்படுகின்றது. 1973—74இல் கூட்டுறவுகள் ரூ. 450 கோடி மதிப்புள்ள உரங்களை வழங்குமென்றும், 1978—79 இல் ரூ. 1,200 கோடி மதிப்புள்ள உரங்களை வழங்குமென்றும் எதிர்நோக்கப்படுகின்றது.

நுகர்வோர் பண்டங்கள் மொத்தம் ரூ. 525 கோடியளவுக்கு 1973—74 நாட்டில் கூட்டுறவுகள் மூலம் அளிக்கப்படும். ஐந்தாம் திட்ட இறுதியில் ரூ. 1,200 கோடி மதிப்புள்ள நுகர்ச்சிப் பண்டங்களைக் கூட்டுறவுகள் விற்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இங்ஙனம் வளர்ந்துவரும் கூட்டுறவு இயக்கத்தை மேலும் வலுப் படுத்திச் செயல்முறையைச் சீராக்க மாநாடு பல பரிந்துரைகளைத் தந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு நல்ல பல பணிகளும், வசதிகளும் செய்துதர அவற்றின் அமைப்பில் சில மாற்றங்களை முயற்சி செய்யவேண்டும். விவசாயக் கூட்டுறவுகள் விவசாயிகளுக்குக் கடன், சந்தையிடுகை, அளிப்பு ஆகிய ஒருங் கிணைந்த சேவைகளனைத்தையும் தருவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். பொதுத் துறை நிறுவனங்களும் கூட்டுறவு நிறுவனங் களும் ஒரே தன்மையான பொருளாதார, சமுதாய நோக்கங்கள் கொண்டிருப்பதால் அவற்றிடையே நெருங்கிய ஒத்துழைப்பு எல்லோருக்கும் நன்மை பயக்கும். இவை கூட்டாகச் சேர்ந்து சில முயற்சிகளை மேற்கொள்ளவும் கூடும். கூட்டுறவுகளின் நிருவாகம் மக்களாட்சிமுறையில் மேலும் பரந்த அடிப்படையில் உருவாக, 1968 மாநில முதலமைச்சர்கள் மாநாடு செய்த பரிந் துரையையொட்டி, சட்டமுறையான ஏற்பாடுகளை நான்காம் திட்ட இறுதி ஆண்டுக்குள் செய்து முடிக்கவேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களை வகைப்படுத்தல்
(Classification of Co-operative Societies)

கூட்டுறவுச் சங்கங்கள் பொதுவாகத் தம் உறுப்பினர்களுடைய நலனைப் பாதுகாத்து வளர்க்கும் பணியில் ஈடுபடுகின்றன என்று கூறினாலும் அவையனைத்தும் ஒரே வகையினதாகமாட்டா. எடுத்துக்காட்டாக நுகர்வோர் கூட்டுறவுகள் தம் உறுப் பினருக்குக் குறைவான விலையில் தரமான பண்டங்களை அளிக்க முயலுகின்றன. உற்பத்தியாளர் கூட்டுறவுகள் தம் உறுப்பினருக்கு எவ்வளவு உயர்ந்த விலை பெற்றுத்தர முடியுமோ அவ்வளவு உயர்ந்த விலையைப்பெற முயலுகின்றன. ஆக, இவ்விருவகைச் சங்கங்களும் ஓரளவுக்கு முரண்பாடுள்ள நோக்கங்கள் கொண்டன வாகக் காணப்படுகின்றன. ஆனல், கூட்டுறவில் சுரண்டலுக்கோ முரண்பாடுகளுக்கோ இடம் கிடையாது. பல சாராரின் நலனும் பாதுகாக்கப்படும் வகையில் விதிகளும் சட்ட திட்டங்களும் அமை கின்றன. எவ்வகைச் சங்கத்திற்கு என்ன அடிப்படை நோக்கம் என்பதையுணர்ந்து அதற்கேற்ப விதிமுறைகள் வகுக்கப்படு கின்றன. இந்த ஏற்பாட்டிற்குச் சங்கங்களை வகைப்படுத்துவது அவசியமாகிறது.

நடைமுறையில் பல்வகைச் சங்கங்கள் பல்வேறு கொள்கை களின் அடிப்படையில் இயங்கி வருவதால் அவற்றிற்கேற்ற விதி முறைகள் செய்வது இன்றியமையாததாகிறது. சங்கங்களை

வகைப்படுத்தினால்தான் தேவைக்கேற்றவாறு விதிமுறைகளை உருவாக்கலாம்.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியை ஆராயும்போது எந்த எந்த துறைகளில் கூட்டுறவு வளர்ந்துள்ளது; வளர்ச்சியின் பாங்கும், போக்கும் எவ்வண்ணம் அமைந்துள்ளது என்றெல்லாம் பாகுபடுத்திக் காண கூட்டுறவுச் சங்கங்களை வகைப்படுத்த வேண்டியிருக்கிறது.

எல்லாவகைச் சங்கங்களுடைய உரிமைகளும் பொறுப்புகளும் சட்டத்தில் ஒரே முறையானதாகக் கூறப்படவில்லை. சிலவகைச் சங்கங்களுக்குச் சிறப்பான சலுகைகளும், சட்டமுறை சிறப்புரிமை களும் அரசினரால் வழங்கப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாகக் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களுக்குச் சில சிறப்புரிமைகள் வழங்கப் பட்டுள்ளன.

நம் நாட்டில் இயக்கம் துவங்கிய காலத்தில் கிராமப்புற, நகர்ப்புற சங்கங்கள் என்ற இருவகைச் சங்கங்களே இருந்தன. விவசாயக் கூட்டுறவு, விவசாயமல்லாக் கூட்டுறவு என்ற பாகு பாடும் துவக்கத்தில் இருந்துவந்தது. உறுப்பினர் குடியிருக்கும் இடத்தையொட்டியோ அல்லது அவரது தொழிலையொட்டியோ வகைப்படுத்தல் அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை யென்று கருதப்பட்டது.

பின்னர் நாணயச் சங்கம், உற்பத்திச் சங்கம், கொள்முதல்—விற்பனைச் சங்கம் என்ற பாகுபாடு பரவலாயிற்று. கூட்டுறவு இயக்கம் வளர்ந்து, பரவிப் படர ஆரம்பித்ததும் மேலும் பல பிரிவுகளும் பாகுபாடுகளும் உருவாயின. நம் நாட்டில் ரிசர்வு வங்கி ஆண்டுக்கு ஆண்டுக் கூட்டுறவுப் புள்ளிவிவரங்களைச் சேகரிக்கச் சங்கங்களை இருபெரும் கூறுகப் பிரித்தது. அவை கடன் சார் சங்கங்கள், கடன் சார்பற்ற சங்கங்கள் என்பன.


பொதுவாக, கடன் சங்கங்கள் அல்லது நாணயச் சங்கங்கள் என்பன குறுகிய கால, மத்திய கால நீண்ட காலக் கடன்களை வழங்கும் சங்கங்களாகும். இவற்றில் விவசாயச் சங்கங்களும், விவசாயமல்லாத சங்கங்களும் அடங்கும். அடித்தளத்தில் உள்ள கிராமப் பிரதம நாணயச் சங்கம், மத்திய கட்டத்திலுள்ள மத்திய வங்கி, உச்சநிலையிலுள்ள மாநில வங்கி ஆகியவை குறுகிய கால, மத்திய காலக் கடன்களை வழங்குகின்றன. நீண்ட காலக் கடன்களை வழங்கும் துறையில் அடித்தளத்தில் பிரதம நிலவள வங்கிகளும், உச்சியில் மத்திய நிலவள வங்கியும் காணப்படுகின்றன. நகர்ப்

புறங்களில் விவசாயமல்லா நோக்கங்களுக்குக் கடனளிக்கும் கூட்டுறவு நகர வங்கிகள் காணக்கிடக்கின்றன.

கடன்சார்பற்ற சங்கங்கள் பலதரப்பட்டவை. உற்பத்தியாளர், நுகர்வோர், தொழிலாளர், மனை வசதி, போக்குவரத்துப் போன்ற பலவகைச் சங்கங்கள் ஒருபுறமும், கல்வி, பிரசாரம் முதலியவற்றை மேற்கொண்டொழுகும் பயிற்சி நிலையங்கள்; மாவட்ட, மாநில, தேசீய ஒன்றியங்கள் ஒருபுறமும் இயங்கி வருகின்றன.

கடன்சார்பற்ற சங்கங்களில் விவசாயத் தொடர்புள்ள சந்தையிடுகைச் சங்கங்களைக் காணலாம்; பால்பண்ணைகளைக் காணலாம்; சர்க்கரை ஆலைகளைக் காணலாம். விவசாயமல்லாத கடன்சார்பற்ற சங்கங்களின் வரிசையில் நெசவாளர்ச் சங்கங்கள், தொழிற் கூட்டுறவுகள் காணப்படுகின்றன. நுகர்வோர் பண்டசாலைகளும், கூட்டுறவுச் சிறப்பங்காடிகளும் விவசாயமில்லாக் கடன் சார்பற்ற சங்கங்களே.

சங்கத்தின் வகைகளை ஆராய்ந்தால்மட்டும் போதாது. அவற்றின் ஒருங்கிணைப்பு எங்ஙனம் அமைந்துள்ளது என்றும் ஆங்காங்குக் காணவேண்டியுள்ளது. அமைப்பு எத்தனைக் கட்டங்கள் அல்லது அடுக்குகள் கொண்டுள்ளனவென்றும் எந்த வகைச் சங்கத்திற்கு எத்தனை அடுக்கு உள்ளது என்பதும் கூர்ந்து நோக்கற்குரியது. மாநிலத்துக்கு மாநிலம் பாங்கு வேறுபடுகிறது. பொதுவாக எல்லாவகைச் சங்கங்களுக்கும் ஒரு கோபுர அமைப்பு இருப்பது புலனாகும். அடித்தள சங்கங்களை ஒருங்கிணைக்க மாநில மட்டத்தில் கூட்டிணையங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. சில முக்கிய துறைகளில் மாவட்ட அமைப்பும் நன்கு வேரூன்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலில் பல்வேறுவகைக் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிப் பேசப்பட்டுள்ளது. அனைத்திந்திய மட்டத்தில் கூட்டுறவுகளின் வளர்ச்சியும், அமைப்பும் விளக்கப்பட்டுள்ளது.


கடன் சங்கங்கள்
குறுகிய கால, மத்திய காலம்
மாநில வங்கி
மத்திய வங்கிகள்
பிரதமச் சங்கங்கள்
கிராமம்
நகர்ப்புறம்
தொழிற்கூட்டுறவு வங்கி
நீண்ட காலம்
மாநில நிலவள வங்கி
பிரதம நிலவள வங்கி
கடன் சார்பற்ற சங்கங்கள்
உற்பத்தியாளர்
விவசாயம்
மாநிலச் சந்தை யிடுகை
மாவட்டச் சந்தையிடுகை
சந்தையிடுகை
பால் வழங்கல்
பிற உற்பத்தியாளர்கள்
விவசாயமல்லாதது
கைத்தறி நெசவாளர்
குடிசைத் தொழில்
நுகர்வோர்
மாநிலக் கூட்டிணைப்பு
மொத்த விற்பனை
பிரதம பண்டசாலை
பல்வகை
தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்கள்
வீட்டு வசதிச் சங்கங்கள்
நீரேற்றுப் பாசன சங்கங்கள்
பண்ணைச் சங்கங்கள்
தொழிற் கூட்டுறவுகள்
வேளாண்மை பொறியியல் சங்கங்கள்
பிற சங்கங்கள்
வளர்ச்சிப் பிரசாரம்
மாநில ஒன்றியம்
மாவட்ட ஒன்றியம்
தாலுக்கா ஒன்றியம்

5. கூட்டுறவு வங்கிய முறை

பொதுவாக வங்கியமுறை (banking) என்று பேசும்பொழுது, மக்கள் வாணிக வங்கிகளையே மனத்தில்கொண்டு பேசுகின்றனர். இதற்குக் காரணம் பொதுமக்கள் பெரும்பாலும் அன்றாடத் தொடர்புகொண்டு பயன்படுத்திவரும் வங்கிகள் வாணிக வங்கிகளே. வாணிக வங்கிகள் (Commercial banks) செம்மையான முறையில் அமைந்துள்ள தொழில்கள், நிறுவனங்கள், வாணிக நிலையங்கள், தொழிலமைப்புகள் முதலியவற்றின் தேவைகளை நிறைவு செய்கின்றன. தக்க பிணையின்பேரில் கடன்கள் கொடுப்பதுடன், கொடுக்கும் கடனைக் குறித்த நேரத்தில் எளிதாகத் திருப்பிப்பெறும் வாய்ப்பினையும் வாணிக வங்கிகள் முக்கியமாகக் கருதும். கூட்டுறவு வங்கிகள் ஒழுங்கானதோர் அமைப்பேதுமில்லாத விவசாயத்துறைக்குப் பெருமளவு கடன்வசதிகளை அளிக்கின்றன. இது காரணமாக இவற்றின் செயற்பாடு சிக்கல் மிகுந்ததாக உள்ளது. கூட்டுறவு வங்கிகள் சிக்கனம், ஒருவருக்கொருவர் உதவி என்ற தத்துவங்களின் துணைகொண்டு சேவை மனப்பான்மையுடன் செயலாற்றுகின்றன. இவ் வங்கிகள் இலாபம் ஈட்டுவதை முதன்மையான நோக்கமாகக் கொள்வதில்லை.

கூட்டுறவுக் கடனளிப்பின் முக்கிய நோக்கங்கள் : சிக்கனம் மேற்கொண்டு நிதிவசதிகளைப் பெருக்கிக் கொள்ளல்; தொடர்ந்து மேற்பார்வை செய்வதன்வழி கடன்கள் குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்வதுடன் நட்டமேற்படக்கூடிய வாய்ப்பைக் குறைத்தல்; சங்கத்திற்கு வெளியிலிருந்தும் நிதிவசதி பெற்றுக்கொள்ளல்; நல்ல கண்காணிப்பு, மேற்பார்வை மூலம் நட்டத்தைத் தவிர்ப்பதால் கடன்கள் உறுதியாகத் திரும்பும் வாய்ப்பு உருவாக்கல்; இதன் விளைவாகவும் குறைந்த நிருவாகச் செலவின் காரணமாகவும் கடன்மீதான செலவினை—வட்டி வீதத்தைக் குறைந்த அளவில்

வைத்திருத்தல்; சங்கங்கள் பிற கூட்டுறவு நடவடிக்கைகளுக்குக் கடன் வழங்கத் தேவைப்படும் நிதிவசதி பெற நாணயமான, நம்பத் தகும் நிலையங்கள் என்ற நிலையில் செயல்பட்டு வருதல் ஆகியன வாகும்.

கூட்டுறவுக் கடனளிப்பில் கடனளரின் (Creditor) வசதிக் கேற்ப கடன் அளிக்கப்படும் என்ற நிலை கிடையாது. கடனளியின் தேவைக்கேற்பக் கடன் கொடுக்கப்படும். கடனின் காலமும் கடன் நோக்கத்தையொட்டி நிருணயிக்கப்படுகிறது. உற்பத்தி நோக்கத்திற்கே கூட்டுறவுக் கடன் தரப்படுவதால் திருப்பிச் செலுத்து காலம் அறுவடையையொட்டி நிருணயிக்கப்படுகிறது. உறுப்பினரின் திருப்பிச் செலுத்துதிறன், ஒழுக்கம் ஆகியவற்றைப் பொருத்தே கடன் தரப்படுகிறது. விவசாயிகள் தமது சொந்த சொத்து, தமது நாணயம்-ஒழுக்கம், தமது அண்டையோரின் பிணையம் ஆகியவற்றைக் கடனுக்குப் பிணையாக அளிக்கின்றனர்.

கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு உற்ற நண்பனாய், ஞாஞசிரியனாய், வழிகாட்டியாய் (friend, philosopher and guide) விளங்கி வருகின்றன என்று கூறினால் மிகையாகாது. சிறிய மனிதனை, எளிய மனிதனை மதித்து அவன் தரும் பிணையை ஏற்றுப் பணக்காரனிடம் பாதுகாப்புக்கு அணுகாது உதவி வழங்குவது கூட்டுறவு வங்கி. பொதுநிதியிலிருந்து சிறிய மனிதருக்குச் சலுகையாகக் கடன் வழங்குவதோ அல்லது நன்கொடை வழங்கும் அறநிலையமோ அல்ல கூட்டுறவு வங்கி. சிக்கனம், சேமிப்பை வளர்ப்பது கூட்டுறவு வங்கி. கூட்டுறவு வங்கியை அதன் உறுப்பினர்களே நடத்திவருவது குறிப்பிடத்தக்க ஒரு செய்தி யாகும். மக்களாட்சி முறையில் கூட்டுறவுகள் நிருவாகம் செய்யப் படுவதால் மக்களுக்கு மக்களாட்சி முறையை அறிமுகம் செய்வித்து அதில் பயிற்சியும் தரும் அமைப்பாகக் கூட்டுறவு வங்கி அமைகிறது.

கூட்டுறவு வங்கியும் வாணிக வங்கியும்

கூட்டுறவு வங்கிக்கும் வாணிக வங்கிக்குமிடையேயுள்ள வேறு பாடுகள் யாவை என்று பலர் வினு எழுப்புவதுண்டு. இதுகாறும் கூட்டுறவு வங்கியைப்பற்றி கண்ட செய்திகளே இவ் வினுவிற்கு விடையாகும். சேவையை முதன்மையான நோக்கமாகக் கொண்டு செயல்படுவன கூட்டுறவு வங்கிகள்; இலாபத்தை முதன்மையான நோக்காகக்கொண்டு செயல்படுவன வாணிக வங்கிகள். மனிதர்கள் ஒன்றுகூடி அமைக்கும் சங்கம் கூட்டுறவு; பலரிடமுள்ள முதலைத் திரட்டி அமைக்கப்படுவது கூட்டுப் பங்கு

நிறுவனம். கூட்டுறவில் எல்லா உறுப்பினரும் ஒரேவகை உரிமையைப் பெற்றுள்ளனர்; வாணிக வங்கியில் ஒருவர் எடுத்துள்ள பங்குகளைப் பொருத்து உரிமைகள் வழங்கப்படுகின்றன. ஒருவருக்கு ஒரு வாக்கு என்பது கூட்டுறவின் தத்துவம்; கூட்டுறவு நிருவாகம் மக்களாட்சி முறையில் நடத்தப்படுகிறது. கூட்டுறவு வங்கிகள் பலவற்றில் அரசாங்கம் பங்கு முதல் வழங்கி நிதிவசதி செய்து தருவது ஒரு தனிச் சிறப்பாகும். வாணிக வங்கிகளில் சிறப்பான பயிற்சிபெற்ற பெரும் ஊதியம் அளிக்கப்படும் முழுநேர ஊழியர்கள் அன்றாட நடவடிக்கைகளைக் கவனித்து வருகின்றனர். வாணிக வங்கிகளின் நிருவாகம் வங்கியத் துறையில் தேர்ச்சியும், சார்ந்த துறைகளில் சிறப்பீடுபாடும் கொண்ட வல்லுநர் வசம் அமைந்துள்ளது. கூட்டுறவு வங்கிகளின் நிருவாகம் பெரும்பாலும் சாதாரண, ஊதியம் பெறா நபர்களிடம் அமைந்துள்ளது.

வாணிக வங்கிகள் குறுகிய காலக் கடன்கள் மட்டுமே வழங்குகின்றன. வியாபாரிகளும் வணிகரும் தொழில் நிலையங்களும் வாணிக வங்கியின் கடன் வசதிகளைப் பெறுகின்றனர். கூட்டுறவு வங்கிகள் குறுகிய மத்தியகாலக் கடன்களைப் பெரும்பாலும் விவசாய நோக்கத்திற்கு மட்டுமே அளிக்கின்றன. நிலவள கூட்டுறவுகள் நீண்டகாலக் கடன்களை விவசாயிகளுக்கு வழங்குகின்றன. வாணிக வங்கிகள் கடன் கோருவதன் நோக்கத்தில் அக்கறை காட்டாது தக்க பிணை தரப்படுமா, குறித்த காலத்தில் கடன் திருப்பிச் செலுத்தப்படுமா என்ற செய்திகளை மட்டுமே கவனிக்கின்றன. கூட்டுறவு வங்கிகள் உறுப்பினரின் ஒழுக்கம், திருப்பிச் செலுத்துதிறன் ஆகியவற்றை மதிப்பிட்டு அதன் பேரில் கடன்களை வழங்குகின்றன. கூட்டுறவு வங்கிகளில் வங்கிக்கும் அதில் வைப்பு (deposit) போட்டவர், கடன் வாங்கும் உறுப்பினர் ஆகியோருக்குமிடையே நெருங்கிய மனிதப் பண்புள்ள தொடர்பு இருந்து வருகிறது. வாணிக வங்கிகளில் நிறுவனத்துடன் தொடர்பு என்ற உணர்வு மட்டும் இருக்குமேயன்றி மனிதருடன் தொடர்பு என்ற நிலைக்கான வாய்ப்பில்லை.

கூட்டுறவு வங்கிகளில் கடன் விண்ணப்பத்தைப் பரிசீலித்துக் கடன் வழங்க அனுமதியளிப்பது வங்கியின் நிருவாகக் குழு. வாணிக வங்கிகளில் கடன் வழங்க அனுமதியளிப்பது வங்கியின் முகவர் (Agent) எனப்படும் முழுநேர ஊழியர். குறிப்பிட்ட விகித அளவுக்குப் பங்குமுதல் செலுத்தினால்தான் கூட்டுறவில் கடன்பெற முடியும். வாணிக வங்கிகளில் கடன் கோருவோர் பங்கு முதல் ஏதும் செலுத்தவேண்டுவதில்லை.

குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால் வாணிக வங்கிகள் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து கடனாளியிடமிருந்து தொகையை வசூலிக்க முற்படலாம். கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள எளிய முறையைக் கையாண்டு கூட்டுறவு இலாகாவின் துணைகொண்டு கடனை வசூலிப்பது வழக்கம்.


இலாப நோக்குடன் செயல்படும் வாணிக வங்கிகள் இயன்ற வரை உயர்ந்த அளவு ஆதாயப்பங்கு (dividend) வழங்க முயற்சிக்கின்றனர். கூட்டுறவு வங்கிகள் குறிப்பிட்ட ஒரு விகிதத்திற்கு பெரும்பாலும் 6%-க்கு—மேல் ஆதாயப் பங்கு வழங்குவது கூடாது என்று சட்டமோ அல்லது விதிகளோ இருப்பதுண்டு. கூட்டுறவு வங்கிகளைத் தணிக்கை செய்வது பதிவாளரின் சட்டமுறையான பொறுப்பாகும். வாணிக வங்கிகள் தணிக்கைக்குத் தாமே ஏற்பாடு செய்யவேண்டும். இவ் வங்கிகளின் தணிக்கை சாசனக் கணக்கரால் செய்யப்படுகிறது.

கூட்டுறவு வங்கிய அமைப்பு

கூட்டுறவு வங்கிய அமைப்பு இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். ஒன்று விவசாயக் கடன் வழங்கு நிறுவனங்கள்; மற்றது விவசாயச் சார்பற்ற (non-agricultural) கடன் வழங்கு நிறுவனங்கள். விவசாயக் கடன் வழங்கு வங்கிகள் மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். அவை குறுகிய-மத்தியகாலக் கடன் வழங்கும் வங்கிகள், நீண்ட காலக் கடன் வழங்கும் வங்கிகள் ஆகும்.

கூட்டுறவு வங்கிய அமைப்பு ஒரு கோபுரம் போன்று காணப்படுகிறது. அடித்தளத்தில் கிராம விவசாய நாணயச் சங்கங்கள் அமைந்துள்ளன. கிராம விவசாய நாணயச் சங்கங்களை விவசாயக் கடன் சங்கங்கள் என்றும் விவசாய வங்கிகள் என்றும் கூறுவதுமுண்டு. இச் சங்கங்கள் மாவட்ட அளவில் கூட்டிணைக்கப்பட்டு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அமைந்துள்ளன. மாவட்ட வங்கிகள் கூட்டிணைந்து உருவாகுவது உச்சி (Apex) வங்கிகள் என்னும் மாநில வங்கிகளாகும். இந்திய ரிசர்வு வங்கி மாநில வங்கிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டு கூட்டுறவுகளுக்குப் பல்வகை நிதிவசதிகளை யளித்து வருகிறது.

குறுகிய காலக் கடன்துறை அமைப்பு



எனவே விவசாயத்திற்குக் குறுகியகாலக் கடன் வழங்கக் கூட்டுறவுத் துறையில் மூன்றடுக்கு (Three tier) அமைப்பு இருப்பது புலனாகிறது.

விவசாய மேம்பாட்டிற்கு நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்க இரண்டடுக்கு அமைப்பு உள்ளது. அடித்தளத்தில் உள்ளது பிரதம நிலவள வங்கி (Primary Land Development Bank) கள்; மேல் மட்டத்தில் மத்திய நிலவள வங்கிகள் (Central Land Development Banks) செயல்பட்டு வருகின்றன. சில மாநிலங்களில் மாநில நிலவள வங்கிகள் தமது கிளைகள்வழி நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன.

விவசாயக் கடன் கூட்டுறவுகள்

- குறுகிய-மத்திய காலக் கடன்
  - மாநில உச்சி வங்கிகள்
  - மாவட்ட மத்திய வங்கிகள்
  - பிரதம கிராம விவசாயக் கடன் சங்கங்கள்
- நீண்ட காலக் கடன்
  - மத்திய நிலவள வங்கிகள்
  - பிரதம நிலவள வங்கிகள்

அடித்தளத்திலுள்ள கிராம நாணயச் சங்கங்களே விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன்களை வழங்குகின்றன. கிராம நாணயச் சங்கங்களின் கூட்டிணைப்பான மாவட்ட மத்திய வங்கிகள் கிராமச் சங்கங்களுக்கு நிதிவசதிகளைச் செய்து தருகின்றன. மத்திய வங்கிகளின் எண்ணிக்கை வளர வளர அவற்றைக் கண்காணிக்கவும், அவற்றிற்கு நிதி வழங்கவும், வளர்ச்சிக்கு உதவவும் ஓர் அமைப்புத் தேவைப்பட்டது. மத்திய வங்கிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், மாநிலக் கூட்டுறவு நிதிய ஏற்பாடுகளுக்கு மைய அமைப்பாக விளங்கவும், பணச் சந்தையுடன் கூட்டுறவுகளுக்குத் தொடர்பு ஏற்படுத்தவும் உச்சி வங்கி அவசியமாகத் தோன்றியது. ஆகவே, மாநிலக் கூட்டுறவு வங்கியொன்று ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்கப்பட்டது. இவ் வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டிணைப்பாகும்.

நீண்டகாலக் கடன் துறையில் இரண்டு அடுக்கு அமைப்புத் தாலுக்கா அல்லது வட்டார அளவில் பிரதம நிலவள வங்கிகளாகவும், மாநில அளவில் மத்திய நிலவள வங்கிகளாகவும் திகழ்கின்றன. பிரதம நிலவள வங்கிகள் மட்டுமே விவசாயிகளுக்கு நேரிடையாகக் கடன் வழங்குகின்றன. மத்திய நிலவள வங்கி பிரதம நிலவள வங்கிகளின் கூட்டிணைப்பாக அமைந்திருப்பது பெரும்பாலும் காணப்படும் நிலையாகும். சில மாநிலங்களில் மத்திய நிலவள வங்கியே தாலுக்காவில் தனது கிளைகளை நிறுவி அக் கிளைகள்வழி விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்கள் வழங்கி வருகின்றன.

விவசாயச் சார்பற்ற கூட்டுறவு வங்கிகள்

பொதுவாக, சந்தையிடுகைச் சங்கங்கள், நெசவாளர் சங்கங்கள், பால் வழங்கு சங்கங்கள் போன்ற விவசாயச் சார்பற்ற கூட்டுறவுகளுக்கு மாநிலக் கூட்டுறவு வங்கியும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் கடன்வசதிகள் அளித்து வந்தாலும் விவசாயச் சார்பற்ற கூட்டுறவு என்றதும் மனக்கண்முன் தோன்றுவது நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளாகும். இவ் வங்கிகள் சிறிய, பெரிய நகரங்களில் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ளன. இவை தனித்தியங்கும் பாங்குடையனவாகக் காணப்படுகின்றன. இவற்றிடையே ஒரு கூட்டிணைப்போ அல்லது உச்சி வங்கியோ இதுவரை ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


தொழிற் கூட்டுறவு (Industrial Co-operative)களுக்கு நிதிவசதி யளிக்க அண்மையில் தொழிற் கூட்டுறவு வங்கிகள் நிறுவப் பட்டுள்ளன. இவ் வங்கிகள் சில மாநிலங்களில் மட்டுமே காணப் படுகின்றன. இவ் வங்கிகளின் இணைப்பு வங்கிகளாக மாவட்டத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் சில மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றன.

அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் ஊழியர்கள் தேவைக் காலத்தில் எளிதாகக் கடன்பெற ஊழியர் கடன் சங்கங்கள் (Employees Credit Societies) அல்லது ஊழியர் கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வீடுகளின் அடைமானத்தின் பேரில் கடன் வழங்குவதற்கெனச் சில மாநிலங்களில் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அடித்தளத்தில் பிரதம வீட்டு அடைமான கூட்டுறவு வங்கிகளும் இவற்றின் கூட்டிணைப்பாக உச்சியில் மாநில வீட்டு அடைமான வங்கியும் அமைந்திருப்பது காணக்கிடக்கின்றது.

அண்மையில் அகதிகள் மறுவாழ்விற்கு வகை செய்யு முகத்தான் அகதிகள் கூட்டுறவு நிதிய வளர்ச்சி வங்கி (Repatriates Co-operative Finance and Development Bank Limited) ஒன்று சென்னையில் நிறுவப்பெற்றது. இது தனிச் சிறப்பு வாய்ந்த வங்கி யாகும்.

கூட்டுறவுக் கடன் துறையின் சிறப்புத் தன்மை பல நிலைகளி லுள்ள சங்கங்கள் ஒன்றுக்கொன்று இணைந்து ஒரு நெருங்கிய தொடர்புள்ள அமைப்பாகச் செயல்படுவதே. ஒவ்வொரு சங்கமும் தனித்த ஒரு சட்டமுறையான அமைப்பாக இருப்பினும் செயல் படும்போது ஒன்றோடு ஒன்று இணைந்து குறிப்பிட்ட செயற் பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. கூட்டுறவு இயக்கத் திற்குள் புழங்கும் நிதியினைச் சமன்படுத்தி மேலுந் தேவைப்படும் நிதிக்கு வெளியில் கடன் எழுப்ப ஏற்பாடு செய்ய இந்த அமைப்பு மிகவும் ஏற்றதாகக் காணப்படுகிறது. கடனளிப்பது, கடன் குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகிறதா என மேற் பார்வை செய்வது, குறித்த கெடுநாளில் கடனை வசூலிப்பது ஆகிய பணிகளை இந்த அமைப்புக் கவனித்துக்கொள்ளுகிறது.



கூட்டுறவு வங்கித்துறையின் தனிச் சிறப்பு அது கூட்டுறவு இயக்கத்தில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட அங்கமாகும். வறுமையின் பிடியிலும், கடன் துன்பத்திலும் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த சிறு விவசாயியின் துயரைத் துடைத்து வாழ்வை வளப்படுத்தவே நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் துவங்கப் பட்டது. முதன்முதலில் இயற்றப்பட்ட 1904ஆம் ஆண்டுச் சட்டம், கடன் சங்கங்கள் மட்டுமே துவங்கப்பட வகை செய் திருந்தது. துவக்கத்தில் கூட்டுறவு இயக்கமே கடன்சார்ந்த நடவடிக்கைகளையொட்டி அமைந்திருந்தது என்பதை உறுதிப் படுத்துகின்றது.

6. கிராம நாணயச் சங்கங்கள்

இன்று நாம்காணக்கிடக்கும் கூட்டுறவு அமைப்பின் அடிக்கல்லாக விளங்குவது கிராமப்புறங்களிலுள்ள விவசாயக் கடன் கூட்டுறவுகளாகும். இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்தில் நம் நாட்டில் விவசாயிகளின் நிலை மிகவும் வருந்தத் தக்கதாக இருந்தது. அறியாமையும் வறுமையும் ஒன்று சேர்ந்து அவர்கள் வாழ்வு இருள் சூழ்ந்திருந்தது. பெரும்பான்மை விவசாயிகள் தம் உடைமையான சிறிய நிலப்பரப்பில் புதிய முறைகளைக் கையாண்டுப் பயிர் செய்ய முடியாத நிலையிலிருந்தனர். வேளாண்மை ஆதாயந்தரும் தொழிலாக அமையவில்லை. ஆதாயம் இல்லாத நிலையில் சேமிப்பும் இல்லை. சிக்கனம் என்ற பண்பும் பரவ இயலாநிலை இருந்துவந்தது. இயற்கை யன்னையின் சீற்றங்களும் அவ்வப்போது நிலைமையை மேலும் கேடுறச் செய்தன. பருவ மழை தவறிப்போதல், கால்நடை இறப்பு, வெள்ளம் போன்ற நிகழ்ச்சிகள் ஒருபுறமிருக்க, குடும்பத்தில் திருமணம், பிறப்பு, இறப்பு போன்ற சடங்குகட்குச் செலவு செய்து விவசாயிகள் தமது நிதிநிலையை மோசமாக்கிக் கொண்டனர். சுருங்கக் கூறின், கிராம மக்கள் வட்டித் தொழிலரின் பிடியில் அகப்பட்டுக் கொண்டு திணறினர்.

கிராமப்புறத்தில் மக்கள் பட்டிருந்த கடன் அளவைப் பல வல்லுநர்கள் மதிப்பீடு செய்தனர். 1924இல் மொத்த கிராமப் புறக் கடன் ரூ. 600 கோடியாக இருந்தது என்று சர் மால்கம் டார்லிங் மதிப்பிட்டார். மைய வங்கிய விசாரணைக் குழு 1930ஆம் ஆண்டில் இத் தொகையை ரூ. 900 கோடி என மதிப்பிட்டனர். 1935இல் பொருளாதார வல்லுநர் திரு. பி. ஜே. தாமஸ் கிராமப் புறக் கடன் மொத்தம் ரூ. 1,200 கோடியளவாக உள்ளது என மதிப்பிட்டார். இந்திய ரிசர்வு வங்கி 1937இல் கடன் அளவு ரூ. 1,800 கோடியெனக் கண்டறிந்தது. இங்ஙனமாகப் பல

மதிப்பீடுகள் கிராமக் கடன் எந்த அளவுக்குப் பெரியதொரு பாடாக இருந்து வந்தது என்று காட்டின. இந்தக் கடன் சுமையி லிருந்து விவசாயியை மீட்டு, அவருடைய வாழ்வு வளம்பெற உதவுவதற்கே இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப் பட்டது. இது காரணமாகத்தான் போலும் இன்றும் கூட்டுறவு இயக்கத்தில் கடன் வழங்குதுறை மிகவும் முக்கியமான இடம் பெற்றுத் திகழ்கிறது.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சட்டம் 1904இல் இயற்றப் பட்டதையொட்டி நாடெங்கிலும் விவசாயக் கடன் சங்கங்கள் நிறுவப்பெற்றன. இச் சங்கங்கள் ரய்பீசன் (Raiffeisen) சங்க அமைப்பினைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. இவற்றின் சிறப்புக் கூறுகளாவன: சங்கத்தின் செயல் எல்லைச் சிறிய பரப்பாக இருந்தது. பங்குகளின் மதிப்பு மிகவும் சிறிய தொகையாக நிருணயிக்கப்பட்டது. உறுப்பினர் பொறுப்பு வரை யறுக்கப்படாததாக இருந்தது. பிரித்துப் பகிர்ந்துகொள்ளக் கூடாத நிலையான காப்பு நிதியொன்று ஒவ்வொரு சங்கமும் ஏற்படுத்த வேண்டுமென விதிக்கப்பட்டது. உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் அளிக்கப்பட்டது. நிருவாக அலுவலர்களின் சேவை ஊதியம் ஏதுமின்றிக் கிடைத்தது. இலாபம் ஈட்டுவது தவிர்க்கப்பட்டது. குறிப்பிட்ட சங்கம் எந்த அளவுக்கு உட் பட்டு வைப்புகள் திரட்டலாம், கடன்கள் வாங்கலாம், தனிநபர் பெறக் கூடிய உச்சக் கடன் அளவு முதலிய செய்திகள் நிருணயிக்கப் பட்டிருந்தன. உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத் திலும் நற்பண்பு வளர்ச்சியிலும் சங்கம் கருத்துச் செலுத்தியது.

சங்கம் அமைத்தலும் பதிவு செய்தலும்

விவசாயக் கடன் சங்கம் அமைக்க, குறைந்தது பத்து நபர்கள் சங்கத்தைப் பதிவு செய்யக் கோரி விண்ணப்பிக்க வேண்டும். சங்கத்தின் செயல் எல்லைக்குள் வசிக்கும் நல்லொழுக்க முடைய 18 வயது முடிவுற்ற அனைவருக்கும் உறுப்பினராகச் சேரும் உரிமையுண்டு. பதிவு செய்யக் கோரும் விண்ணப்பத் துடன் சங்கத்தின் துணை விதிகளைப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். துணை விதிகள் கூட்டுறவுச் சட்டம் விதிகளுக்குப் பொருந்தியுள்ளனவென்றும், சங்கம் வெற்றிகரமாகச் செயல்படும் வாய்ப்பு உள்ளதென்றும் பதிவாளர் அல்லது அவரது துணை அலுவலருக்குத் தோன்றினால் அவர் சங்கத்தைப் பதிவு செய்து பதிவுச் சான்றிதழ் (Certificate of registration) வழங்குவார்.

சங்கத்தின் செயல் எல்லை-அளவு

ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற ஒரு பொது விதியினை மாக்லகன் குழு பரிந்துரைத்தது. இந்த அடிப்படையிலே சிறிய சங்கங்கள் அமைக்கப்பட்டன. இந்தியாவிற்கு இதுவே உகந்தது என்று அந் நாளில் கருதப்பட்டது. நாளடைவில் இந்த வகை அமைப்பில் பல குறைபாடுகளிருந்தனவென்பது அனுபவவாயிலாகத் தெரிய வந்தது. சிறிய சங்கம் குறைந்த அளவு நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்ள முடிந்ததால் அதன் வருமானம் குறைவாக இருந்தது. பயிற்சி பெற்ற, திறன் மிக்க முழுநேர ஊழியர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவது இயலாத காரியமாகக் காணப்பட்டது. சிறிய சங்கங்கள் சிறிதளவு நிதியே திரட்ட முடிந்தது. மத்திய நிதிய முகமையிடமிருந்து கடன்பெற வாய்ப்பில்லாது சிறிய சங்கங்கள் தொல்லைப்பட்டன. சிறிய சங்கமாக அமைந்தால் உறுப்பினர் ஒருவரையொருவர் நன்கறிந்து கொண்டு பொதுவான பொறுப்பேற்றுச் சங்கத்தை நடத்துவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் இந்த நன்மைகள் கிட்டவில்லை. கிராம மக்களில் பெரும்பாலோர் கூட்டுறவுச் சங்கத்தில் சேரவில்லை. உறுப்பினர்களின் கடன் தேவைகளையும் சங்கம் முழுமையாக நிறைவு செய்ய இயலவில்லை. உற்பத்தித் திட்டங்களுக்கு மட்டும்தான் கடனளிப்பது என்றில்லாது பல்வேறு நோக்கங்களுக்குக் கடன் வழங்கப்பட்டது. மொத்தத்தில் சிறிய கடன் சங்கங்கள் மக்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவுவதாக அமையவில்லை.

கூட்டுறவுத் திட்டக் குழு (Co-operative Planning Committee) (1946) சிறிய அளவு சங்கம் பயன் தரக்கூடியதல்லவென்று கருதியது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக் குன்றியிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமெனக் குழு கருதியது. இதற்கிடையே பல நோக்குக் கூட்டுறவுகள் (Multi-Purpose Co-operatives) அமைத்துச் சீரிய வேளாண்மை, சீரிய தொழில், சீரிய வாழ்வுபெற சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களை வழங்கவும், உறுப்பினர் விளைபொருளைத் திரட்டிப் பதப்படுத்திச் சந்தையிடுகை செய்யவும் இக் கூட்டுறவுகள் பொறுப்பேற்கும். இக் கூட்டுறவுகள் சோதனையாகத் துவங்கிய அந் நாள் பரோடா மாநிலத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டதைக் கண்ணுற்ற ரிசர்வு வங்கி, 1947ஆம் ஆண்டு ஓர் அறிக்கை மூலம் நாடெங்கிலும் பல்நோக்குக் கூட்டுறவுகள் அமைக்கப்படவேண்டுமென்று பரிந்துரைத்தது. இதையொட்டி சிறிய அளவு சங்கங்கள் பல பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றி அமைக்கப்

பட்டன. 1946-47இல் 3·5 இலட்சம் உறுப்பினர்களும் ரூ 1·78 கோடி நடைமுறை முதலும் கொண்டிருந்த 9,650 பலநோக்குக் கூட்டுறவுகள் 1951-52இல் 21 இலட்சம் உறுப்பினர்களும் ரூ.13 கோடி நடைமுறை முதலும் கொண்டு 40,000 சங்கங்களாக வளர்ச்சி பெற்றிருந்தன. பலநோக்குக் கூட்டுறவுகள் நிறுவுவதன் வழி விவசாயிகள் வட்டித் தொழிலரோடு தொடர்புகளைத் துண்டித்துக்கொள்ள இயலும் என்று கருதப்பட்டது. விரிவாகத் தொழில் செய்வது காரணமாக மேற்செலவுகள் குறைந்து நிருவாகம் திறனடையுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

பலநோக்குக் கூட்டுறவு என்ற கருத்துச் சிறந்த, சீரிய, முற்போக்கான கருத்துத்தான் என்றாலும் கருத்தைப் பரப்பினால் சங்கங்கள் வெற்றிகரமாகச் செயல்படும் என்று கருதியது தவறு. சிறிய சங்கங்களை ஒரே நாளில் பலநோக்குக் கூட்டுறவுகளாக மாற்றியமைத்துவிட்டால் பிரச்சினைகளனைத்தும் தீர்ந்து போகாது. நிருவாகத்தைத் திறம்பட நடத்தத் திடுமென்று ஊழியர்களைத் தேடிப்பிடித்து நியமித்தல் எளிதன்று. பல ஆண்டுகளில் படிப்படியாக இந்த மாற்றம் நிகழ்ந்தால் நன்மை காண்பது திண்ணம். பொதுவாகப் பார்க்கும்போது பலநோக்குக் கூட்டுறவுகள் சரிவரச் செயல்படவில்லை என்று அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழு கண்டறிந்தது. எனவே, இக் குழு பெரிய அளவு பிரதமக் கடன் சங்கங்கள் (Large-sized Primary Credit Societies) அமைக்கப் படவேண்டுமென்று பரிந்துரை செய்தது. இதற்கிடையே சில மாநிலங்களில் கூட்டுறவு கிராமப்புற வங்கிகள் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கூட்டுறவு கிராமப்புற வங்கிகள்
(Co-operative Rural Banks)

பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் பல மிகச் சிறியதாய் இருந்த காரணத்தால் அவற்றின் நடவடிக்கைகள் குறைவாக இருந்தன. பெரும்பான்மையான சங்கங்கள் வளமார்ந்த சங்கங்களாகச் செயலாற்ற இயலவில்லை. ஆகவே, பெரிய சங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்று கருதப்பட்டது. 1950ஆம் ஆண்டில் தமது அறிக்கையையளித்த கிராம வங்கிய விசாரணைக் குழுவினரும் (Rural Banking Enquiry Committee) வலுவான பலநோக்குச் சங்கங்களை அமைக்குமாறு பரிந்துரைத்தனர். இதையொட்டி சில மாநிலங்களில் கிராமப்புற வங்கிகள் நிறுவப்பெறலாயின.

வரையறுத்த பொறுப்புடன் நிறுவப்பெற்ற இவ் வங்கிகள் விவசாயக் கடன் சங்கங்களுக்குத் துணையான நிலையங்களாகச் செயல்பட்டனவேயன்றி அவற்றிற்கு மாற்ருகவோ அல்லது போட்டியாகவோ அமையவில்லை. உள்ளூரில் வைப்புகளைத் திரட்டல், நில அடைமானத்தின் பேரில் விவசாயிகளுக்கு மத்திய காலக் கடன் வழங்கல், விளைபொருள்மீது கடன் வழங்கல், அனுமதித்த பிணையங்கள், நகைகள்மீது கடன் வழங்கல், கிராமப்புற மக்களிடையே வங்கியப் பழக்கம் ஏற்பட நடப்புக் கணக்கு, சேமிப்புக் கணக்கு வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளை இவ் வங்கிகள் மேற்கொண்டன. இவ் வங்கிகள் ஏறத்தாழ நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் போன்று செயல்பட்டு வந்தன.

கிராமக் கடன் விசாரணைக் குழு (1954) வின் பரிந்துரையின்படி பெரிய அளவு சங்கங்கள் நிறுவத் துவங்கிய காலந்தொட்டுக் கிராமப்புற வங்கிகள் அமைப்பது நிறுத்தப்பெற்றது. தமிழ் நாட்டில் இன்றும் ஒருசில இடங்களில் கிராமப்புற வங்கிகள் இருந்து வருகின்றன. இம் மாநிலத்தில் பெரிய அளவு சங்கங்கள் வரையறுத்த பொறுப்புடன் விவசாய வங்கிகள் என்ற பெயரில் செயல்பட்டு வருகின்றன.

அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழு பிரதம விவசாயக் கடன் சங்கங்களை குறித்து செய்தச் முக்கியப் பரிந்துரைகளாவன :

1. பெருமளவு உறுப்பினர்கள், போதிய பங்கு முதல், போதிய அளவு நடவடிக்கைகள் உள்ள சில கிராமங்கள் சேர்ந்த ஒரு பரப்பிற்கு ஒரு சங்கம் என்ற பாங்கில் பெரிய சங்கங்கள் அமைக்கப்படவேண்டும். இச் சங்கங்களின் அலுவலகம் வசதியான ஓரிடத்தில் அமையவேண்டும். அங்குச் சந்தையிடுகை ஏற்பாடு களும் அமைந்திருக்கவேண்டும்.

2. தேவைப்பட்ட இடங்களில் மட்டுமே முன்னரே இருந்து வரும் சங்கங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும். புதிதாகத் துவக்கப்படும் சங்கங்கள் பெரிய அளவு நிலையங்களாக இருத்தல் வேண்டும்.

3. சங்கத்தின் செயல் எல்லையில் வசிக்கும் எந்த நபரும் உறுப்பினராகச் சேரத் தடையேதும் இருக்கக்கூடாது. உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள மறுக்கப்பட்டவர் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு மேன்முறையீடு (appeal) செய்து கொள்ளலாம்.

4. உறுப்பினரின் பொறுப்பு வரையறுத்ததாக இருக்க வேண்டும்.

5. பெரிய அளவு சங்கங்கள் மிகவும் உகந்த அளவு பங்கு முதல் கொண்டனவாக இருக்கவேண்டும். பங்குமுதல் இந்த அளவுக்கு வரும்வரை உறுப்பினர்கள் கட்டாயமாக பங்குத் தொகை அளிக்குமாறு கோரப்படவேண்டும். இத் தொகைக்குச் சரியான விகிதத்தில் மாநில அரசு, மாநில வங்கி, மத்திய வங்கிகள் வழி மறைமுகமாகப் பங்கு முதல் வழங்கும். உகந்த அளவு அடைந்ததும் அரசு அளித்துவரும் தொகை நின்றுவிடும். ஆனல் உறுப்பினர்கள் தொடர்ந்து தொகை வழங்கி அரசினர் வழி பெற்ற தொகையைத் திருப்பிச் செலுத்திவிடவேண்டும்.

6. பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் தவணை வைப்பு (Fixed deposit)த் தொகைகளை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

7. பெரிய அளவு பிரதம விவசாயக் கடன் சங்கத்தின் கடன் வாங்கும் அளவின் உச்சம் அதன் செலுத்திய முதல், காப்பு நிதி ஆகியவற்றின் மடங்குத் தொகையாக நிருணயிக்கப்பட வேண்டும்.

8. கடன் நடவடிக்கைகள் உற்பத்தி நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டிருக்கவேண்டும். பயிர்க் கடன் (Crop loan) முறை கடைப்பிடிக்கப்படவேண்டும். பயிர்க் கடன் முறை வெற்றி பெறத்தக்க மேற்பார்வை, காலத்தில் கடனளித்துக் காலத் தில் திரும்ப வசூலிப்பது, தரமான சந்தையிடுகை ஆகிய அவசியமாகத் தேவைப்படுகின்றன. பிரதம சங்கம் உற்பத்தி நோக்கங்களுக்கு 15 திங்கள் முதல் 5 ஆண்டு காலத்திற்கு மிகாத மத்திய காலக் கடன் தரலாம்.

9. பிரதம விவசாயச் சங்கங்களுக்கும் சந்தையிடுகைச் சங்கங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். கடன் வழங்கும்போது விவசாயக் கடன் சங்கங்கள், கடன் பெறுபவர் தமது விளைபொருளைச் சந்தையிடுகைச் சங்கங்கள்வழி விற்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கவேண்டும்.

10. பெரிய அளவு பிரதம நாணயச் சங்கம் பயிற்சி பெற்ற முழுநேர ஊதியம்பெறும் செயலர் ஒருவரை அமர்த்திக்கொள்வது அவசியம்.

பெரிய அளவு பிரதமக் கடன் சங்கங்கள் கணிசமான அளவு வைப்புகளைத் திரட்டவேண்டும். சங்கம் வளம்பெற்றதாகத்

திகழ மேலும் உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும்; சங்கத்தின் நடவடிக்கைகளை விரிவு படுத்தவேண்டும். பெரிய அளவு சங்கத்தில் சராசரி 300 முதல் 500 உறுப்பினர்களிருக்க வேண்டும். ஒன்றரை இலட்சம் ரூபாயளவு கடன் வழங்கவேண்டும்.

பயிர்க் கடன் திட்டம் (Crop Loan System)

பெரிய அளவு கடன் சங்கங்கள் பயிர்க் கடன் திட்டத்தைக் கடைப்பிடிக்க மிகவும் உகந்தனவாயிருக்குமெனக் கருதப்பட்டது. பயிர்க் கடன் திட்டத்தின் முக்கிய கூறுகளாவன:

(i) கடன் தரப்படுவது உற்பத்தி நோக்குள்ள செயல்களுக்கு மட்டுமே; தக்க பிணை கிடைத்திருக்கின்றது என்ற காரணத்திற்காக மட்டும் கடன் அளிக்கப்படுவதில்லை.

(ii) கடனுக்குப் பிணையாக அமைவது விளைவிக்கவிருக்கும் பயிரேயாகும். நிலமோ அல்லது வேறு நிலையான சொத்தோ பிணையாகத் தரப்பட வேண்டுமென்பதில்லை.

(iii) பயிரிடத் திட்டமிட்டுள்ள பயிர்வகையையொட்டி கடன் அளவு நிருணயிக்கப்பெறும்.

(iv) அறுவடையான பயிரை விற்று அதன்வழி கிடைக்கும் தொகையைக் கொண்டு கடன் அடைக்கப்படவேண்டும்.

(v) முடிந்தவரை கடனைப் பொருளாக (Kind) அளிப்பது விரும்பத்தக்கது.

விவசாயி பிணையாகத்தர எவ்வளவு நிலம் வைத்திருக்கிறார், எவ்வளவு சொத்து வைத்திருக்கிறார் என்று கணக்கிடாமல், எவ்வளவு நிலத்தைப் பயிரிடப் போகிறார், அதற்கு அவருக்குத் தேவைப்படும் கடனளவு, அவர் விளைவிக்கும் பயிரைக்கொண்டு கடனை அடைக்கும் திறன் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு வழங்கப்படுவதே பயிர்க் கடன் திட்டத்தின் சிறப்பாகும்.

பருவத்தில் கடன் வழங்கிப் பருவத்தில் வசூலித்தல்:

பயிர்க் கடன் திட்டத்தில் குறிப்பிட்ட பயிரை விளைவிக்கக் கடன் அளிக்கப்படுவதால் பயிர் வேலைகளைத் துவங்கும் சிறிது நாட்களுக்கு முன் கடன் வழங்கப்படவேண்டும். விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து முதலிய வாங்கவும், களையெடுத்தல், அறுவடை செய்யல் போன்ற செயல்களுக்குக் கூலி வழங்கவும் தக்க நேரங்களில் கடன் தேவைப்படுகிறது. கடன்

திருப்பித் தரப்பட வேண்டிய தேதியை அறுவடையையொட்டி நிருணயிக்கவேண்டும். அறுவடை முடிந்த சிறிது காலத்திற்குள் கெடு நாள் (Due date) அல்லது தவணைத் தேதி நிருணயிக்கப் படுகிறபடியால் விவசாயி நல்ல விலைக்குத் தன் விளைபொருளை விற்க வாய்ப்பும், விற்றுக் கிடைத்த தொகையைக்கொண்டு கடனை அடைக்கவும் முடிகிறது.

கடன்-சந்தையிடுகை இணைப்பு

கூட்டுறவுக் கடன் சங்கம் வழங்கும் பயிர்க் கடனை அப் பயிரை விற்றுவரும் தொகையைக்கொண்டு அடைப்பது பயிர்க் கடன் முறையில் பிறிதோர் சிறப்பாகும். கடனை வழங்கும் சங்கத்துடன் தொடர்புற்ற ஒரு நிலையத்தின் வழி பயிரை விற்பனை செய்தால் கொடுத்த கடனை எளிதாக வசூல் செய்துவிடலாம். கடன் வாங்கும் உறுப்பினர் தமது விளைபொருளைச் சந்தையிடுகைச் சங்கத்தின்வழி விற்பனை செய்ய ஒப்பி ஓர் உடன்பாட்டில் கையொப்பமிடவேண்டும். மற்றும் விற்பனைத் தொகையி லிருந்து பிரதம சங்கத்திற்குத்தான் திருப்பியளிக்க வேண்டிய கடன் தொகையைக் கழித்துக் கொள்ளவும் சங்கத்திற்கு உறுப்பினர் அனுமதி வழங்கவேண்டும்.

கடனைப் பொருளாக அளிப்பது

பயிர்க் கடன் திட்டத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மிகுதியான அளவுக்குக் கடனைப் பொருளாக அளிக்கவேண்டும் என்று கருதப்பட்டது. வீரிய விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற பொருள்களைக் கடனுக வழங்குவதன்வழி விவசாயியை உற்பத்திப் பெருக்க முயற்சியில் இத் திட்டம் ஈடுபடுத்துகிறது. மற்றும், ரொக்கமாகக் கடனைப் பெற்றுக்கொண்டு அதனைப் பயிர்ச் செலவுக்குப் பயன்படுத்தாது வீணடிக்கக் கூடிய வாய்ப்பும் தவிர்க்கப்படுகிறது.

கடன் மூன்று பகுதிகளாகக் கொடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. முதல் பகுதி, பழைய முறைப்படி விவசாயம் செய்ய தேவைப்படும் ரொக்கப் பகுதி; இரண்டாவது இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விவசாயக் கருவிகள் முதலிய விவசாயத்தைச் செம்மையாக நடத்த உதவும் பொருள் பகுதி; மூன்றும் பகுதி; முன்கூறிய பொருள்களைக் கொண்டு பயிர்ச் செய்வதால் ஏற்படும் கூடுதல் செலவுகளைச் செய்ய மேலும் ஒரு ரொக்கப்பகுதி பயிர்க் கடன் திட்டம்பற்றிய பிற செய்திகளைப் பின்னர்க் காண்போம்.

பெரிய அளவு பிரதமச் சங்கங்கள் பயிர்க் கடன் திட்டத்தை அமுல்படுத்த உகந்த சாதனமாகத் திகழுமெனக் கருதி நாடு முழுதும் பெரிய அளவு சங்கங்கள் அமைக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி இரண்டாம் திட்டகால இறுதியில் 10·372 பெரிய அளவு சங்கங்கள் அமைக்கப்படும் என்றும் இவற்றின் பங்கு முதலுக்கு அரசு ரூ. 11 கோடி வழங்கும் என்றும் திட்டமிடப்பட்டது. உறுப்பினர்களின் விளைபொருள்களைப் பாது காப்பாக வைக்க 4,000 கிடங்குகள் கட்டப்பட்டன. இதற்கு அரசு ரூ. 3·6 கோடி பண உதவியளித்தது. சங்கங்கள் துவங்கிய முதல் சில ஆண்டுகளுக்கு நிருவாக உதவியும் அளிக்கப்பட்டது. தமிழ் நாட்டில் பெரிய அளவு சங்கங்களில் சில பிரதம விவசாய கூட்டுறவு வங்கிகள் என்ற பெயரில் வரையறுத்த பொறுப்புடன் இயங்கிவரலாயின.

பெரிய அளவு சங்கங்கள் நிறுவும் பணி அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரையினையொட்டி 1955இல் துவங்கப்பட்டது. இப் பணி தீவிரமாக மேற்கொள்ளப்படுமுன் 1958இல் தேசீய வளர்ச்சிக் குழு மேலும் பெரிய அளவு சங்கங்கள் ஏற்படுத்துவதை உடனடியாக நிறுத்தி வைக்கக் கோரியது. அந்த நேரத்தில் 700 பெரிய அளவு சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சர் மால்கம் டார்லிங் சில பெரிய சங்க்ங்கள் 20 முதல் 30 கிராமங்கள்வரை தமது செயல் எல்லையில் கொண்டிருந்ததைச் சுட்டிக்காட்டி, இந்நிலை விவ சாயிக்கு வசதியற்றதாகவும் பொருத்தமற்றதாகவுமிருந்தது என்று கருதினர். விவசாயி பல கல் தொலைவு கடும் வெயிலில் நடந்து சென்று சங்கத்துடன் தொடர்பு கொள்ளுவது எளிதான செயலல்ல என்றும், பொதுக்கூட்டம் கூட்டினுல் சிற்றெண் (quorum) அளவுக்குக்கூட உறுப்பினர்கள் கூடுவது அரிதாயிருக்கு மென்றும் சர் மால்கம் டார்லிங் கருதினர். ஆகவே, அவர் கூறிய யோசனை தலைமைக் கிராமத்திலிருந்து இரண்டு கல் தொலைவிற்குள் உள்ள கிராமங்களே சங்கத்தில் செயல் எல்லையில் சேர்க்கப்பட வேண்டும்; உறுப்பினர் எண்ணிக்கை 300 முதல் 500–க்கு மேல் போகக்கூடாது; மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் முழு இசைவினையும் தந்தாலன்றிச் சிறு சங்கங்கள் ஒன்றேடொன்று இணைக்கப்படலாகாது.

கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு (Rural Credit Review Committee) சிறிய அளவு சங்கங்களையும் பெரிய அளவு சங்கங்களை யும் ஒப்பு நோக்கி ஆய்ந்த போது பெரிய அளவு சங்கங்கள் பலவகைகளில் சிறந்திருந்தது புலப்பட்டது, 1962 ஜூன் இறுதியில்

இவ்விருவகைச் சங்கங்களில் செயற்பாடு இருந்த வண்ணத்தைக் கீழ்க்காணும் அட்டவணை தெளிவுபடுத்தும்:

விவரம்	பெரிய அளவு சங்கங்கள்	சிறிய அளவு சங்கங்கள்
சங்கமொன்றில் உறுப்பினர் எண்ணிக்கை	502	75
சங்கமொன்றில் நடைமுறை முதல்	1,18,628	11,220
சங்கமொன்றுக்குப் பங்கு முதல்	27,455	2,274
உறுப்பினரொருவருக்குப் பங்கு முதல்	55	30
சங்கமொன்றுக்கு வைப்புத் தொகை	7,042	585
உறுப்பினரொருவருக்கு வைப்புத் தொகை	14	8
கடன் பெற்ற உறுப்பினரொருவருக்கு வழங்கப்பட்டது	756	220

பெரிய சங்கங்கள் மேலும் அமைக்கப்படுவதைக் கைவிட்டது பிரதம நிலையில் கூட்டுறவுக் கடன் துறையில் ஏற்பட்டு வந்த முன்னேற்றத்தைத் தடைசெய்வதாகக் காணப்பட்டது. இந்தக் கொள்கைத் திருப்பம் மேற்கொள்ளப்படாது பெரிய சங்கங்கள் தொடர்ந்து அமைக்கப்பட்டிருப்பின் விவசாய வளர்ச்சிக்கான நல்ல கடன் திட்டங்களை அமுலாக்க இருபது முதல் இருபத்தையாயிரம் சங்கங்கள்வரை அமைக்கப்பட்டிருக்கும்.

சேவைக் கூட்டுறவுகள் (Service Co-operatives)

பெரிய அளவு பிரதமச் சங்கங்கள் அமைக்கப்படுவதை நிறுத்தி சேவைக் கூட்டுறவுகளை அமைப்பது என்ற முடிவை அரசு மேற்கொண்டதற்குப் பல காரணங்கள் உண்டு. விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டப்படும் பொருளாதாரத் தேவைகளனைத்தையும் அளிக்க வல்லது சேவைக் கூட்டுறவு. விவசாயியின் பயிர் உற்பத்தித் திட்டத்தை அவர் கோரும் குறுகிய காலக் கடனுக்கும், கடனை அவருடைய திருப்பிச் செலுத்துத் திறனுக்கும் தொடர்பு படுத்துவதே கருத்து. விவசாயிக்கு வேண்டிய சேவைகளைக் குறைந்த செலவில் அவருடைய வீட்டு வாயிலில் அளிக்கும் நோக்கமுள்ள நிலையமே சேவைக் கூட்டுறவு.

உயர்ந்த இரக விதை, இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்ற வேளாண்மைத் தேவைகளை அளிக்க ஏற்பாடு செய்வது சிறிய விவசாயக் கருவிகளை வாங்கி வைத்திருந்து விற்பது; விவசாயத் தேவைகளை வாங்கக் குறுகிய காலக் கடன் அளிப்பது; நிலமீட்பு, கிணறு தோண்டல், உழவு மாடு வாங்கல் போன்ற செலவுகட்கு மத்தியகாலக் கடன் அளிப்பது; சிறு விவசாயப் பொறிகளைத் தெளிப்பான், பொறிப்பான் (Sprayers, incubators) கரும்பு பிழிவான், சலிப்பான் (Winnowers) போன்றவைகளை வாடகைக்குவிட ஏற்பாடு செய்வது; சர்க்கரை, மண்ணெண்ணெய், உணவுப் பொருள் போன்ற இன்றியமையாப் பண்டங்களை வழங்குவது; உறுப்பினரிடையே சேமிப்பு, சிக்கனப் பழக்கங்களை வளர்த்து மேற்கூறப்பட்ட பல இனங்களுக்குத் தேவைப்படும் தொகையினைத் திரட்டுவது போன்ற பணிகளைச் சேவைக் கூட்டுறவுகள் மேற்கொள்ளும். சுருங்கக் கூறின் சேவைக் கூட்டுறவு களின் சிறப்பான பணி, கடன்—உற்பத்தி ஆகியவற்றை இணைத்து விவசாயி நல்ல மகசூல் பெற உதவுவதே.

பிரதமக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மிகவும் உகந்த செயல் எல்லை எவ்வளவு இருக்கவேண்டும்? உறுப்பினர்கள் எத்தனை பேர் இருப்பது சாலச் சிறந்தது? இந்த வினாக்களெல்லாம் ஆராயப்பட்டு விடையும் தரப்பட்டது. தேசிய வளர்ச்சிக் குழுவின் தீர்மானத் தின்படி பிரதமக் கடன் சங்கமொன்றின் செயல் எல்லை ஒரு கிராம மாக இருக்கவேண்டும்; என்றாலும் கிராமம் மிகச் சிறியதாக இருந்தால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்கள் ஒன்று சேர்க்கப்படலாம்; ஆனால், மொத்த மக்கள் தொகை ஆயிரத்துக்கு மேல் போகக்கூடாது. மேத்தா குழுவினரும் கிராமச் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தனர். கிராமங்கள் மிகச் சிறியதாக இருந்தால் தலைமையிடக் கிராமத்தி லிருந்து மூன்று அல்லது நான்கு கல் சுற்றளவிலுள்ள அத்தனைக் கிராமங்களையும் ஒன்று சேர்த்து ஒரு சேவைக் கூட்டுறவு அமைக்கப் படலாம். இக் கிராமங்களின் மக்கள் தொகை மூவாயிரத்திற்கு மேற் படக்கூடாது. 1964இல் கூடிய மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் இது மேலும் ஆராயப்பட்டு, திறமையாக நிருவகிக்கப் பட்டுப் போதுமான இலாபம் ஈட்டக்கூடிய அளவுக்கு லேவாதேவி யும், போதுமான எண்ணிக்கை உறுப்பினரும் கொண்டுள்ள சங்கமே வளம்பெற்று இயங்கக்கூடும் என்று முடிவு செய்யப் பட்டது. எனவே வளம்பெறு தன்மைக்கான கூறுகள் (1) அலுவலகம் வைத்திருக்க இயலும் நிலை; (2) முழுநேர ஊதியம் பெறும் ஊழியரை வைத்துக்கொள்ளும் நிலை; (3) தேவைப்பட்ட

அளவுக்குக் காப்புநிதிக்குத் தொகை வழங்கும் திறன்; (4) முதல் மீது நியாயமான ஓர் அளவு ஆதாய மளிக்கும் நிலை ஆகிய அமைந்துள்ள சங்கமே வளமார்ந்த சங்கமெனக் கருதப்படலாம். வளமார்ந்த அல்லது வளம்பெறு வாய்ப்புள்ள சங்கங்கள் தவிர பிற சங்கங்கள் வேறு சங்கங்களுடன் இணைத்துவிடப்பட வேண்டும். இந்தக் கொள்கை அமுலாக்கப்பட்டதன் விளைவாக 1960—61இல் இருந்த பிரதமச் சங்கங்களின் எண்ணிக்கை 2,12, 129, 1970-71இல் 1,60, 780 ஆகக் குறைந்து நின்றது. 1973-74 இறுதியில் இது மேலுங் குறைந்து 1·2 இலட்சத்தில் நிற்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. வளம்பெறும் வாய்ப்புள்ள சங்கங்களை நாளடைவில் வளமுள்ள சங்கங்களாக்க அரசாங்கம் நிருவாக மானியம் வழங்குகிறது. மூன்று முதல் ஐந்தாண்டுகளுக்குள் தனது உறுப்பினர் தொகை, பங்குமுதல், நடவடிக்கையின் அளவு முதலியவற்றை மிகுதியாக்கிச் சங்கம் வளநிலையையடையத் திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

செயலிழந்த சங்கங்கள் (Dormant Societies)

பெயரளவில் சங்கம் என்று பதிவேட்டில் காணப்படும், நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளாது நிற்கும் சங்கங்களைச் செயலிழந்த சங்கங்களென்பர். இச் சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு எவ்வகையான சேவையினையும் செய்ய இயலாத நிலையிலிருப்பன. 1970-71 ஜூன் இறுதியில் 20,234 சங்கங்கள் செயலிழந்து கிடந்தன. இச் சங்கங்கள் 49,245 கிராமங்களுக்குச் சேவை செய்ய வேண்டியன. இச் சங்கங்களில் 27,13,000 உறுப்பினர்களிருந்தனர்.

செயலிழந்த நிலைக்குக் காரணம்

சங்கங்கள் செயலற்ற நிலைக்கு வரப் பல காரணங்களுண்டு. அவற்றுள் மிக முக்கியமானது திறமையற்ற நிருவாகம். பெரும்பாலான சங்கங்களில் முழு நேர ஊதியம்பெறும் பயிற்சிபெற்ற ஊழியர் இருப்பதில்லை. ஊதியம் பெறு அலுவலர் நிருவாக நுணுக்கங்களை அறியாது தவறுகள் செய்வதுமுண்டு. கொடுத்த கடன் சரியான நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டதா என்று மேற்பார்வை செய்வது குறைவு. தவணைகடந்த கடன் மேலும் மேலும் உயர்ந்து கொண்டிருந்ததும் இந் நிலைக்கு ஒரு காரணமாகும். குறியீடுகளை நிறைவு செய்யவேண்டி, சங்கங்களை உண்மையான தேவையிருக்கிறதா என்று ஆராயாது துவக்கியதும் சில சங்கங்கள் செயலற்ற நிலையையடையக் காரணமாயிற்று. பதிவு செய்யப்பட்ட சில சங்கங்கள் செயல் எதையும் மேற்கொள்ளாமலே செயலற்றுப் போனதுமுண்டு.

உறுப்பினர் பொறுப்பு (Liability of Members)

இந்தியாவிலுள்ள விவசாயக் கடன் சங்கங்கள் வரையறுத்த பொறுப்புள்ளவை, வரையறுப் பொறுப்புள்ளவை என இருவகையாகப் பிரிக்கப்படலாம். வரையறுத்த பொறுப்பு என்பது உறுப்பினர் ஒருவரின் பொறுப்பு இந்த அளவுக்கு—அவர் எடுத்துக்கொண்ட பங்கு முதல் அளவு அல்லது வேறு குறிப்பிட்ட ஒரு தொகையளவுக்கு—மிகாது என்று அறுதியிட்டிருக்கும் நிலையைக் குறிக்கும். வரையறுப் பொறுப்புள்ள சங்கத்தில், சங்கத்தின் கடன்கள் அனைத்திற்கும் ஒவ்வோர் உறுப்பினரும் முழுப் பொறுப்பு ஏற்கின்றனர்.

ரய்பீசன் முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட பெரும்பான்மையான பிரதமச் சங்கங்கள் வரையறுப் பொறுப்பு கொண்டிருந்தன. இதற்குக் காரணம், வரையறுப் பொறுப்பு இருந்தால்தான் உறுப்பினர்களிடையே பொதுவான பொறுப்பும், விழிப்பும் இருக்கும் என்பதாகும். மற்றும் இவ்வகைச் சங்கங்களில் தக்க மேற்பார்வையும் கண்காணிப்பும் இருப்பதால் நிருவாகம் திறமையாக இருக்கும். வரையறுப் பொறுப்பின் அடிப்படையில் சங்கங்கள் தேவைப்பட்ட அளவுக்குக் கடன் எழுப்ப முடிகிறது. கலைப்பு ஏற்படும்போதுதான் பொறுப்புச் சாட்டுவிக்கப்படுமாகையினால் இது நிகழ்வடைவான (Contingent) தன்மையுடையது.

வரையறுப் பொறுப்பு அடிப்படையில் சங்கம் அமைக்கப்படுவதில் சில குறைபாடுகளுமிருந்தன. கிராமத்திலுள்ள செல்வந்தர்கள் சங்கக் கடன்களைத் தீர்க்க தம் சொத்துகள் பற்றுகையிடப்படுமென்று அஞ்சி சங்கத்தில் சேராதிருந்தனர். வரையறுப் பொறுப்பு என்பது ஏட்டளவில் காணப்படும் பொறுப்பாக அமையவும் கூடும். காரணம் உறுப்பினர் தம் சொத்தைப் பிறருக்கு மாற்றித்தரத் தடையேதுமில்லாத நிலையில் நெருக்கடி நேரம் வரும்போது சொத்தைப் பிறர் பெயருக்கு மாற்றிவிட்டுத் தனக்குச் சொத்தேதுமில்லை எனலாமல்லவா? மற்றும், நடைமுறையில் வரையறுப் பொறுப்பு இருந்தும்கூட உறுப்பினர்களுக்கிடையே பொதுவானதொரு பொறுப்புணர்ச்சியும், விழிப்புணர்ச்சியும் உருவாகவில்லை. வரையறுப் பொறுப்புக் காரணமாக உறுப்பினர்கள் சங்க நடவடிக்கைகளை விரிவுபடுத்த விரும்பவில்லை. நடவடிக்கைகளை விரிவுபடுத்தி அதனால் நட்ட மேற்பட்டால் தமக்கு அது காரணமாக நட்டம் விளையுமென அஞ்சினர். துவக்க காலத்தில் வரையறுப் பொறுப்பைப் பல குழுக்கள் ஆதரித்தன. ஆனால், வரையறுப் பொறுப்பு இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தடை

யாக அமைந்துள்ளது என்று கூட்டுறவு திட்டக் குழு கூறியது. 1946 முதல் வரையறுத்த பொறுப்புக்கு ஆதரவாகப் பல குழுக்கள் பரிந்துரைத்தன. கிராமக் கடன் விசாரணைக் குழுவும், கிராமக் கடன் மறு ஆய்வுக் குழுவும் வரையறுத்த பொறுப்புள்ள சங்கங்கள் அமைக்கப்படுவதையே ஆதரித்தன. 1971 ஜூன் இறுதியிலிருந்த 1,60,780 பிரதம விவசாயக் கடன் சங்கங்களில் 1,20,985 சங்கங்கள் வரையறுத்த பொறுப்புக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பங்கு முதல் (Share Capital)

கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை முதலுக்கு இன்றியமையாத ஓர் அங்கமாக விளங்குவது பங்கு முதலாகும். உறுப்பினர்கள் சங்கத்தில் எடுத்துக்கொள்ளும் பங்குத் தொகையே பங்கு முதல் எனப்படுகிறது. பங்கு முதல் வழி சங்கம் தன் உறுப்பினர்களிடமிருந்து நிதி திரட்டுவதை மேத்தா குழு (1960) மிகவும் இன்றியமையாததெனக் கருதியது. சங்கத்தின் திடமான நிதி நிலைக்கும், வலிமைக்கும் பங்கு முதல் ஆதாரமாக விளங்குகிறது. தம்முடைய பணத்தை முதலீடு செய்யும் உறுப்பினர்கள் சங்கத்தின்மீது அக்கறையும் பாசமும் காட்டுவது இயல்பு. மற்றும், சங்கம் மத்திய வங்கியில் பங்கு முதல் எடுத்துக் கூட்டிணைப்பு அமைப்பை வலுப்படுத்தவும் உறுப்பினர் செலுத்தும் பங்குமுதல் உதவுகிறது. மேலும், உறுப்பினர்களிடமிருந்து பங்குமுதல் வசூலிப்பது அவர்களிடையே சிக்கனத்தை வளர்க்கிறது. எனவே மேத்தா குழு, தாம் வாங்கும் கடன் தொகையில் ஒரு குறிப்பிட்ட விகித அளவுக்குப் பங்குமுதல் வழங்குவது அவசியமென்று குறிப்பிட்டது. தாம் வழங்கிய பங்கு முதல் போன்று எட்டு முதல் பத்து மடங்குவரை உறுப்பினர்கள் கடனைகப் பெறலாம் என்று குழு பரிந்துரைத்தது. ரூ. 200-க்குக் குறைவான கடன் தேவைப்படும் வலிமையற்ற வகுப்பினர் (Weaker Sections) தமது பங்கு முதலை எளிய தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்படுகின்றனர்.

அரசு பங்கு முதல் வழங்குதல்

கூட்டுறவு இயக்கத்தின் முதுகெலும்பாக விளங்குவது கூட்டுறவுக் கடன் துறை. கடன் துறைக்கு உயிர் நாடியாக விளங்குவது கிராமச் சங்கங்கள். இச் சங்கங்கள் வலுவாக அமைந்தாலன்றி இயக்கம் வளராது. சங்கங்களுக்குப் பங்கு முதல் போதிய அளவு இருந்தால்தான் அவை திறம்படச் செயலாற்ற முடியும். கிராமக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரையின்படி மாநில அரசினர் பெரிய அளவு சங்கங்களின் பங்கு முதலுக்குப் பணம் வழங்கலாயினர். ஆனால், சிறிய அளவு சங்கங்

கள் இந்த வசதியைப் பெறவில்லை. அரசிடமிருந்து கணிசமான அளவு உதவி பெறாது சிறிய நலிந்த கிராமச் சங்கங்கள், விவசாய உற்பத்தியைப் பெருக்க உதவுவது அல்லது கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுவது எளிதல்ல என்பதை யாவரும் அறிவர். அரசு பங்கு முதல் வழங்குவது சங்கத்திற்கு ஒரு பெருமை அளிப்பது போன்று கருதப்பட்டது. இதனுல் பொது மக்களுக்கும் கூட்டுறவுகள் மீது நம்பிக்கை உருவாகும். சங்கம் சேமிப்புத் தொகைகளைக் கிராம மக்களிடமிருந்து ஈர்க்கும் ஆற்றல் பெறும். சங்கத்தில் முதல் பெருகினுல் அதன் கடன் வாங்கும் திறனும் மிகுதியாகும். அதாவது, மேலும் அதிகமான தொகையினைக் கடனுகப் பெற சங்கம் தகுதிபெறும். கூட்டுறவுக் கடன்மீதான மேத்தா குழுவினரும் அரசாங்கம் பங்கு முதல் வழங்குதலை ஆதரித்து, சங்கத்தின் உறுப்பினர்களில் 60%னரும், சங்கம் இணைந்துள்ள மத்திய வங்கியும் விரும்பினுல், உறுப்பினர்கள் சங்கத்தில் போட்டுள்ள பங்கு முதலுக்கு மிகாத தொகையினை அரசாங்கம் வழங்கலாம் என்று கூறினர். இங்ஙனம் அரசாங்கம் வழங்கும் பங்குமுதல் ரூ. 5,000-க்கு மேல் போகக்கூடாது. மிகச் சில சங்கங்களில் உச்ச அளவு ரூ. 10,000 வரை போகலாம். அரசாங்கம் வழங்கும் பங்கு முதலைப் பொறுத்த வரையில் அதன் பொறுப்பு வரையறுத்ததாக அமையும்.

நான்காம் திட்ட காலத்தில் மாநில அரசுகள், வளம்பெற்ற அல்லது வளம்பெறும் வாய்ப்புள்ள சங்கங்களுக்கு, ஈடான தொகை சங்கம் வழங்க வேண்டுமென வற்புறுத்தாது, ரூ. 10,000 வரை பங்கு முதல் வழங்கலாமென ரிசர்வு வங்கி பரிந்துரைத்தது. இங்ஙனம் பங்கு முதல் பெற விரும்பும் சங்கத்தில் 30%-க்கு மேல் தவணை கடந்த கடன்கள் கொண்டிருத்தலாகாது; தணிக்கைப் பிரிவு A,B அல்லது C என்ற நிலையிலிருக்கவேண்டும்; சங்கத்தின் துணை விதிகள் பங்கு முதலுக்கும் கடன்களுக்கும் 1 : 5 என்ற விகிதம் இருக்கவேண்டும் என்று அமையவேண்டும்.

மேற்கண்ட பரிந்துரையையொட்டி 1970 இறுதியில் ரிசர்வு வங்கி மேலும் சில முடிவுகளையெடுத்தது. ஒரு சங்கத்தின் தவணை கடந்த கடன் 30%க்கு மிகாமலும், உற்பத்தி நோக்கற்ற கடன் 5%க்கு மிகாமலும், அரசாங்கப் பங்குகள் 60%க்கு மிகாமலும் இருந்தால், அதன் விவசாயக் கடன் நடவடிக்கைகளுக்கும், விவசாய உள்ளீடுகள் (inputs) அளிப்பதற்கும் தேவைப்பட்டால் ரூ. 10,000-க்கு மிகுதியாக அரசு பங்குகளை எடுத்துக் கொள்ளலாம். பங்கு முதலுக்கும் கடனுக்குமிடையே 1 : 10 என்ற விகிதம் இருந்தால் போதுமானது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் அல்லது கடைநிலை

(Marginal) விவசாயிகள்—உழவுத் தொழிலாளிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுமிடங்களிலுள்ள சங்கங்கள், வாணிக வங்கிகளுடன் இணைந்துள்ள சங்கங்கள், மறுவாழ்வுத் திட்டம் தீட்டப்பட்டுள்ள மத்திய வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்கள், தவணை கடந்த கடன் ரூ. 5,000-க்கு மிகாத சங்கங்கள் மத்திய வங்கிக்குத் தவணை தவறாத சங்கங்கள் ஆகியவற்றிற்கு அரசாங்கப் பங்கு முதல் வழங்குகையில் முன்னர்க் குறிப்பிட்ட உயர்ந்த அளவு தவணை கடந்த கடன் (30%) பற்றிய நிபந்தனை வற்புறுத்தப்படமாட்டாது. 1970–71ஆம் ஆண்டில் 29,159 பிரதம விவசாயக் கடன் சங்கங்களில் அரசு பங்கேற்றிருந்தது. அரசின் பங்கு முதல் ரூ. 16·94 கோடியாக இருந்தது.

காப்பு நிதி (Reserve Fund)

எதிர்பாராத நட்டங்களைச் சமாளிக்கவும், கடன் வாங்குவதற்குப் பிணையாகப் பயன்படுவதற்கும் காப்பு நிதி உதவுகிறது. எனவே இது சங்கத்தின் நடைமுறை முதலில் முக்கியமானதொரு அங்கமாக அமைகிறது. நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் துவங்கிய காலத்திலிருந்தே சங்கங்கள் காப்பு நிதி அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. 1950–51இல் காப்புநிதியும் பிற நிதிகளும் சேர்ந்து ரூ. 8·86 கோடியாக இருந்தது 1970-71இல் ரூ. 59·57 கோடியாக வளர்ந்து நின்றது கவனிக்கத் தக்கது. நடைமுறை முதலில் காப்புநிதி, பிற நிதிகள் 1950–51இல் 21·7% ஆக இருந்தது 1970–71இல் 5·1% ஆகக் குறைந்து வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. காப்பு நிதியும் பிற நிதிகளும் கணிசமான அளவுக்குச் சேர்க்கப்படாததற்குப் பல காரணங்களுண்டு. கிராம விவசாயக் கடன் சங்கங்கள் பெரும்பாலும் வளமற்ற நிலையிலுள்ளன. அவற்றில் உறுப்பினர்கள் சேர்ந்துள்ளது குறைவாக இருப்பது ஒருபுறமிருக்க, நடவடிக்கைகளின் அளவும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. சங்கங்கள் தாம் பெறும் கடனுக்கும் அளிக்கும் கடனுக்கும் இடையே மிகவும் குறைந்த விகிதமே இடைவெளியாகப் பெற்றிருந்தன. மற்றும் பல வளமார்ந்த சங்கங்கள் அண்மையில் அமைக்கப்பட்டன. இவை நிலைபெற்று, செயலாற்றி, ஆதாயம் பெற்றுக் காப்புநிதி அமைக்கச் சில காலம் ஆகும்.

வைப்புகள் (Deposits)

கூட்டுறவுச் சங்கங்கள் தமது நடைமுறை முதலுக்குத் தேவையான தொகையைப் பல வகைகளில் பெறுகின்றன. அவற்றுள் முக்கிய இடம் பெறுவது வைப்புகள் திரட்டலாகும். கிராம மக்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சேமித்த

தொகையைக் கிராம நாணயச் சங்கங்களில் வைப்புகளாகப் போட்டு வைப்பது அவர்களது சிக்கனப் பண்பைக் காட்டுவது மட்டுமல்லாமல் அவர்களுக்குச் சங்கத்திலுள்ள ஈடுபாடு, நம்பிக்கை முதலியவற்றையும் காட்டுவதாக அமைகிறது. சங்கங்கள் தன்னிறைவு பெற, தன்னுதவியைக்கொண்டு உரம்பெற்று வளர, வெளியிடத்து உதவியை எதிர்நோக்காதிருக்க வைப்புகள் பெரிதும் உதவுகின்றன. நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் துவங்கிய நாளிலிருந்து இன்று வரை பலப்பல கூட்டுறவு வல்லுநர்களும், குழுக்களும், ரிசர்வு வங்கியும் சங்கங்கள் கணிசமான அளவு வைப்புகளைத் திரட்டுவதன் அவசியத்தை வற்புறுத்தி வந்த போதிலும் பொதுவாக, குறைவான அளவு வைப்புகளையே சங்கங்கள் திரட்டி வந்துள்ளதைக் காண்கிறோம். நாட்டிலுள்ள பிரதம நாணயச் சங்கள் 1970-71இல் ரூ. 69·46 கோடியளவு வைப்புகளைத் திரட்டியிருந்தன. நடைமுறை முதலில் இது 6%மாக அமைந்திருந்தது. வைப்புகளைத் தம் வசம் ஈர்க்க சங்கங்கள் திறமையாக நிருவாகம் செய்யப்பட வேண்டும். திறமையான நிருவாகத்தின்வழி மக்களின் நன்னம்பிக்கையைப் பெறவேண்டும். தாம் வைப்பாகப் போடும் தொகை பத்திரமாக இருக்கும் என்ற மனநிலை மக்களுக்கு உண்டாகும் வகையில் சங்கங்கள் செயல்படவேண்டும்.

சங்கங்கள் கடன் வாங்கல்

இந்தியாவிலுள்ள பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் தமது நடைமுறை முதலில் மிகப்பெரும் பகுதியை மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாநில அரசினர், வாணிக வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெற்று வருகின்றன. நிதி நிலை நெருக்கடியாக இருக்கும் காலத்தில் இங்ஙனம் கடன் பெறலாமெனக் கருதப்பட்டது போக, சங்கங்கள் பெருமளவுக்கு இக் கடன்களையே நம்பியிருக்கும் நிலை இன்று காணப்படுகிறது. 1950-51இல் பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் .வாங்கியிருந்த கடன்கள் ரூ. 19 கோடி; 1960-61இல் இத்தொகை ரூ. 184 கோடியாக உயர்ந்து 1970-71இல் ரூ. 675 கோடியாக நின்றது. நடைமுறை முதலுக்கும் வெளியில் பெற்ற கடன்களுக்குமுள்ள விகிதம் 1950-51இல் 45% ஆகவும், 1960-61இல் 61% ஆகவும், 1970-71இல் 58·5% ஆகமிருந்தது.

சங்கங்கள் கடன் வழங்குதல்

கிராம மட்டத்தில் செயல்படும் பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் மட்டுமே விவசாயிகளுக்கு நேரடியாகக் குறுகிய, மத்திய காலக் கடன்களை வழங்குகின்றன என்று முன்னரே கூறப்பட்டது. பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள நாணயமான விவசாயிகளுக்கும்—

சொந்தமாக நிலமுள்ளவர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும்—பயிர் செலவுகளுக்கும், விவசாய உற்பத்தி தொடர்புள்ள செலவுகளுக்கும் பிரதமச் சங்கங்கள் கடன் வழங்குகின்றன. விளைவித்த பயிரை விற்றுக் கடன் அடைக்கப்படுகின்றது. குறித்த தவணைப்படி கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய உறுப்பினருக்கு மீண்டும் கடனளிக்கப்படாது. காலந் தாழ்த்திக் கடனையடைப்பவர்களுக்கு மறுபடியும் கடன் கோரும்பொழுது முழு அளவு கடன் தொகை தரப்படாமல் சிறிது குறைக்கப்படலாம்.

கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு அளித்துவரும் குறுகிய கால, மத்தியகாலக் கடன்கள் வளர்ந்துவந்த வண்ணமாகக் காணப்படுகிறது. 1950-51இல் ரூ. 23 கோடி மட்டுமே கடன்கள் வழங்கப்பட்டன; 1960-61இல் இத்தொகை ரூ. 202·75 கோடியாக வளர்ந்தது; 1970-71இல் இது மேலும் உயர்ந்து ரூ. 577·88 கோடியாக நின்றது. இரண்டாம் திட்டகால இறுதியில் (1960-61) ஒரு சங்கம் வழங்கிய சராசரி கடன் தொகை ரூ. 9,558; உறுப்பினர் ஒருவர் பெற்ற சராசரி கடன் ரூ. 226. மூன்றும் திட்டகால இறுதியில், அதாவது 1965-66இல் சங்கம் வழங்கிய சராசரி கடன் ரூ. 17,821ஆக இருந்தது; உறுப்பினர் பெற்ற கடன் சராசரி ரூ. 315. 1970-71 இறுதியில் சங்கமொன்று வழங்கிய சராசரி கடன் ரூ. 35,942 ஆகவும், கடன் வாங்கிய உறுப்பினர் பெற்ற சராசரி கடன் தொகை ரூ. 514 ஆகவுமிருந்தது. மேற்கண்ட விவரங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் கடன்வழங்குப் பணி இரண்டாம் திட்டகால துவக்கத்திலிருந்து படிப்படியாக வளர்ந்து வந்ததைக் காட்டுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களில் எவ்வளவு பேர் சங்கங்களில் கடன் பெற்றனர் என்று காணும்பொழுது, இன்னும் எத்துணை மக்களுக்குச் சங்கங்கள் கடன் வழங்கும் வாய்ப்பு இருக்கின்றது என்பது தெரியவரும்.

அட்டவணை

விவசாயக் கடன் சங்கங்கள் கடன்வாங்கும் உறுப்பினர்களின் விகிதம்

ஆண்டு	மொத்த உறுப்பினர் (ஆயிரக்கணக்கில்)	கடன் வாங்கிய உறுப்பினர் (ஆயிரக்கணக்கில்)	கடன் பெற்றவர்களின்%
1	2	3	4
1960-61	17,041	8,970	53
1965-66	26,135	10,871	42
1968-69	29,173	11,089	38
1969-70	29,766	11,736	39
1970-71	30,963	11,233	36

மேற்கண்ட அட்டவணையிலிருந்து உறுப்பினர்களின் எண்ணிக்கை படிப்படியாக வளர்ந்துவந்த போதிலும் கடன் வாங்கிய உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்து வருவது புலனாகின்றது. மற்றும் 1970-71இல் கடன் பெற்றவர்கள் எண்ணிக்கை மேலும் குறைந்தது வியப்பளிக்கலாம். முன் ஆண்டுகளில் பெற்ற கடனைத் திருப்பித் தராது தவணை கடந்த பாக்கியுள்ள உறுப்பினர்கள் மீண்டும் கடன் பெறத் தகுதியிழந்த காரணமாகக் கடன் பெற்றவர்கள் எண்ணிக்கை குறைந்து நின்றது. 1970-71இல், சங்கங்களின் மொத்த உறுப்பினர்களில் 36%த்தினர் மட்டுமே கடன் வாங்கியிருந்தனரென்பது பெரும்பான்மையான உறுப்பினர்கள் சங்கத்தில் கடன் வாங்கவில்லையென்ற நிலையைத் தெளிவுபடுத்துகின்றது. முன்கூறிய, உறுப்பினர்கள் தவணை தவறிய காரணம் தவிர வேறு பல காரணங்களாலும் இந்நிலை ஏற்பட்டது. அவையாவன: பல சங்கங்கள் வளமற்று வேண்டிய நடைமுறை முதல் திரட்ட முடியா நிலையிலிருப்பது; அரசியல் வேறுபாடுகள் காரணமாகச் சில உறுப்பினர்களுக்குக் கடன் வழங்காலநிலை சில மாநிலங்களில் இருந்தது; நிலத்தை அடைமானமாக வைத்துக் கடன் வாங்க வேண்டுமென்ற வற்புறுத்தல்; காலந்தாழ்த்துக் கடன்வழங்கல்; கடனில் ஒரு பகுதியைப் பொருளாக வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற வற்புறுத்தல்; போதிய அளவு கடன்தர இயலாமை; விளைபொருளைக் கூட்டுறவின்வழி விற்க விருப்பமின்மை; அலுப்பூட்டும் நடைமுறைகள், விதிகள்; குறிப்பிட்ட உரங்களை வாங்கும்படி வற்புறுத்தல்; திருப்பிச் செலுத்த தவணை வசதியற்ற காலத்தில் நிருணயிக்கப்படுதல்; நிருவாகம் மனநிறைவளிக்காதிருத்தல்; வட்டித் தொழிலரின் வளைந்து தரும் கடன் நிபந்தனைகள்; கடன் குறுகிய காலத்திற்கு மட்டுமே அளிக்கப்படுவது; குத்தகைதாரர்களுக்குச் சில சங்கங்கள் கடனளிக்க மறுப்பது. சில மாநிலங்களில் பல கடன் சங்கங்கள் செயலற்ற (dormant) நிலையிலிருந்தன. இச் சங்களில் உறுப்பினர்களாயிருந்த விவசாயிகள் கடன் பெற முடியாதிருந்தனர். இதன் காரணமாகவும் சங்கங்களில் உறுப்பினர்களாயிருந்தும் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்கள்வழி கடன் பெறக் கூடவில்லை. மாநிலவாரியாகச் சங்கங்களின் எண்ணிக்கை, அவை பணி செய்த கிராமங்களின் எண்ணிக்கை, சங்கங்களின்வழி கடன்கள் பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

ஹரியானா, இமாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஒரிசா, பஞ்சாப், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள கிராமங்கள் அனைத்தும் கூட்டுறவு விவசாயச் சங்கங்களைப்

பெற்றிருந்தன. மற்ற மாநிலங்களிலும் நிலைமை சீராக உள்ளது. இந்தியா முழுமையும் கணக்கெடுத்தால் 94% கிராமங்கள் கூட்டுறவுச் சங்கங்களால் உள்ளடக்கப் பெற்றிருந்தன.

அட்டவணை

பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் எண்ணிக்கை, உறுப்பினர்நிலை, உள்ளடக்குநிலை 1971 ஜூன் இறுதியில் இருந்தவாறு

மாநிலம்	மொத்தச் சங்கங்கள்	மாநிலத்தில் சங்கங்கள் உள்ளடக்கிய கிராமங்கள்	மொத்த உறுப்பினர் (ஆயிரத்தில்)	கடன் வாங்கும் உறுப்பினர் (ஆயிரத்தில்)
ஆந்திரப் பிரதேசம்	15,040	25,739	22,60	9,13
அஸ்ஸாம்	2,968	16,638	3,88	53
பீகார்	17,171	64,954	27,50	9,10
குஜராத்	8,438	17,311	13,30	6,99
ஹரியாஞ	6,166	6,670	5,98	3,70
இமாசலப் பிரதேசம்	2,547	13,060	4,38	2,16
ஜம்மு & காஷ்மீர்	1,104	5,604	2,80	1,05
கேரளம்	2,134	1,632	16,95	6,78
மத்தியப் பிரதேசம்	9,884	74,392	20,81	9,60
மகாராட்டிரம்	20,014	34,501	31,36	13,29
மைசூர்	8,675	25,572	17,87	7,35
நாகாலாந்து	16	29	*	*
ஒரிசா	3,759	46,466	14,10	3,12
பஞ்சாப்	10,274	11,947	14,38	10,79
ராஜஸ்தான்	7,808	30,052	12,71	5,53
தமிழ்நாடு	6,058	14,124	32,80	6,16
உத்தரப் பிரதேசம்	25,922	1,12,624	55,27	13,62
மேற்கு வங்காளம்	11,329	30,195	10,34	2,70

மொத்த உறுப்பினர் எண்ணிக்கையையும் கடன் வாங்கும் உறுப்பினரின் எண்ணிக்கையையும் உற்று நோக்கும்பொழுது, சில மாநிலங்களில், அதாவது, குஜராத், ஹரியாஞ, பஞ்சாப் தவிர பிற மாநிலங்களில் பெரும்பான்மை உறுப்பினர்கள் கடன் வாங்கவில்லையென்பது விளங்குகிறது.

* 500 க்குக் குறைவானது a புள்ளி விவரங்கள் 1969–70 ஆண்டுக்குரியன.

இனி என்ன நோக்கங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன என்று காண்போம். முன்னரே கூறியவாறு கடன்கள் காலத்தை அடிப்படையாகக் கொண்டு குறுகிய காலக் கடன்களென்றும் மத்திய காலக் கடன்களென்றும் பிரிக்கப்படுகின்றன. குறுகிய காலக் கடன்கள் பயிரின் காலத்தையொட்டி ஓராண்டுக்கு மிகாத காலமுள்ள கடன்களாக இருக்கின்றன. சிலவகைப் பயிர்களுக்கு அவற்றின் வளர்ச்சிக் காலத்தையொட்டி பதினைந்து மாதங்கள் வரை குறுகிய காலக் கடன்கள் தரப்படுவதுண்டு. உழவுமாடு, கறவைமாடு, நீரேற்றுப்பொறி (Motor Pumpset) முதலியவை வாங்க மத்திய காலக் கடன்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றன.

அட்டவணை

விவசாயக் கடன் சங்கங்கள்
கடன் வழங்கப்பட்டது—நோக்கங்கள் வாரியாக

விவரம்	1970—71 ரூ. கோடியில்
குறுகிய காலம்	
1. விவசாய நடவடிக்கைகள் (விதை, உரம் உட்பட)	4,69·68
2. விவசாயக் கருவிகள் வாங்க	5·43
3. விளைபொருள் சந்தையிடுகை	17·28
4. விவசாய விளைபொருள் பதனப்படுத்தல்	6·80
5. தொழில் நோக்கக் கடன்	0·30
6. நுகர்ச்சிக் கடன்	5·24
7. பிற நோக்கங்களுக்கு	14·58
மொத்தம்	519·31
மத்திய காலம்	
1. கிணறு தோண்ட, பழுது பார்க்க	7·96
2. பாசனத்திற்கு நீரேற்றுப் பொறி வாங்க	9·10
3. கால்நடை வாங்க	8·44
4. நிலத்தைச் சிறுவகையாகச் சீர்படுத்த	4·86
5. பிற விவசாய நோக்கங்கள்	20·61
6. பிற நோக்கங்கள்	7·57
மொத்தம்	58·54

குறுகிய காலக் கடன்களில் 90% அளவு பருவகாலப் பயிர் விளைச்சல் நடவடிக்கைகளுக்குத் தரப்பட்டது சங்கங்கள் உற்பத்தி நோக்குள்ள கடன்கள் அளிப்பதில் கண்ணும் கருத்துமாயுள்ளன வென்பதை தெளிவாக்குகிறது. நுகர்ச்சி நோக்க (Consumption Purpose)க் கடன் ஒரு விழுக்காட்டளவே அமைந்ததும் குறிப்பி டத்தக்கது. 1960-61இல் கொடுக்கப்பட்ட ரூ. 182·82 கோடி குறு கியகாலக் கடன், ரூ. 19·93 கோடி மத்தியகாலக் கடன் பத்து ஆண்டுகளில் மூன்று மடங்காகப் பெருகி வந்ததும் கூர்ந்து நோக்கற் பாலது. முன்பெல்லாம் மத்தியகாலக் கடன்களில் கணிசமான தொரு பகுதி கால்நடை வாங்கவே கொடுத்து வரப்பட்டது. நாளடைவில் இந்த நிலைமாறி, தற்காலத்தில் பாசன வசதியை விரிவு படுத்த கிணறு தோண்டுதல், நீரேற்றுப் பொறி வாங்குதல் ஆகியவற்றிற்கு 30% அளவு மத்தியகாலக் கடன் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கடன் பயன்படுத்தல்

குறிப்பிட்ட நோக்கங்களுக்குத் தரப்பட்ட கடன் அந் நோக் கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டனவா என்று ஆராய்ந்து பார்த் ததில், பெருமளவுக்குக் கடன்கள் அங்ஙனம் பயன்படுத்தப்பட வில்லையென்று புலப்பட்டது. முக்கியமாகச் சிறு விவசாயிகள் பலர் வேறு நோக்கங்களுக்குக் கூட்டுறவுக் கடன்களைப் பயன்படுத்தினர். இதற்குப் பல காரணங்களுண்டு. கூட்டுறவுக் கடன்கள் குறிப் பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றனவா என்று மேற்பார்வை செய்ய போதிய ஏற்பாடுகளில்லை. சங்கத்தின் நிருவாகக் குழுவினரும் ஆய்வு அலுவலர்களும் இச் செய்தியில் அக்கறை காட்டுவதில்லை. பல இடங்களில் குறிப்பிட்ட பயிருக்கு என்று கடன் வழங்காது சங்கங்கள் ஆண்டு முழுதும் கடன் வழங் கிய வண்ணமிருக்கின்றன. மற்றும் விவசாயிகள் கூட்டுறவுக் கல்வியின்மை காரணமாக விவசாயத்திற்குப் பெற்ற கடனைப் பிற உற்பத்தி நோக்கற்ற செலவுகளுக்குப் பயன்படுத்துகின்றனர். உற்பத்திக்காக வழங்கப்பட்ட கடன் உற்பத்தியல்லா நோக்கங் களுக்குப் பயன்படுத்தப்பட்டால் நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்து பணவீக்கம் வலுவடைந்து விலைவாசி மேலும் உயர்ந்து தாங்கவொண்ணா இன்னல்கள் ஏற்படக்கூடும். முக்கியமாக, உற்பத் திப் பெருக்கத்தை எதிர்நோக்கி ரிசர்வு வங்கி கூடுதல் பணத்தை உருவாக்கிக் கூட்டுறவு அமைப்பின்வழி குறைந்த வட்டிக்குக் கடனளிப்பது பொருளாதாரத் துறையில் குறிப்பாகக் கிராமப் பொருளாதார நிலை வலுவடைந்து நலம்பெற வேண்டுமென்னும் கருத்துடனேயாம். இக் கருத்துச் செயலாகாது பணம் வேறு

நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டாலும், விரயம் செய்யப் பட்டாலும் பொருளாதார நிலை பாதிக்கப்படுவது திண்ணம்.

பயிர்க் கடன் திட்டம் நடைமுறை
(Crop Loan System)

கூட்டுறவுக் கடன் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்பட வகை செய்யும் திட்டமே பயிர்க் கடன் திட்டமாகும். இத் திட்டத்தின் சிறப்புக் கூறுகளை முன்னரே கண்டோம். இது நடைமுறையில் செயல்படுத்தப்படும் விதத்தைக் காண்போம்.

விவசாயி ஒருவர் விளைவிக்கத் திட்டமிட்டுள்ள பல்வேறு பயிர்களுக்குத் தேவைப்படும் உற்பத்திக் கடன் எவ்வளவு என்று அவருடைய திருப்பிச் செலுத்துந் திறனைக் கணக்கிட்டு நிருணயித்து இதே அடிப்படையில் விவசாயிகள் அனைவருடைய மொத்தக் கடன் தேவைகளும் கணக்கிடப்படும். பழைய முறையில் பயிரிட்டுக் கிடைக்கக் கூடிய மொத்த விளைச்சலில் பாதி அளவை திருப்பிச் செலுத்துந் திறனாக எடுத்துக்கொள்ளலாம். மொத்தக் கடனை மூன்று பகுதிகளாகப் பிரித்து முதற் பகுதி ரொக்கமாகத் தரப்படும். பழைய முறையில் பயிரிட்டுப் பெறும் மொத்த விளைச்சலின் மதிப்பில் மூன்றிலொரு பகுதிக்கு மிகாது இத் தொகை இருத்தல்வேண்டும். இரண்டாம் பகுதி இரசாயன உரங்கள் பூச்சிக்கொல்லி மருந்து போன்ற உள்ளீடுகள் (Inputs) ஆகும். இரண்டாம் பகுதியில் குறிப்பிட்ட உள்ளீடுகள் வாங்க செலவாகும் தொகையில் 50% அளவுக்குக் கூடுதல் ரொக்கம் மூன்றும் பகுதியாகத் தரப்படும். கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடந்த ஆண்டில் விளைபொருளை விற்ற உறுப்பினர்களுக்கு ஊக்கமளிக்க மேலும் கூடுதலாக ரொக்கம் கடனாகத் தரப்படவும் வகை செய்யப் பட்டிருக்கிறது.

பழைமை முறையில் பயிர் செய்ய உறுப்பினர் அனைவருக்கும் முதல் பகுதி—அதாவது ரொக்கப் பகுதி தரப்படவேண்டும். ஆனால், மூன்றும் பகுதியில் தரப்படக் கூடிய ரொக்கம் இரசாயன உரங்கள், விதை, பூச்சிக்கொல்லி மருந்து முதலிய உள்ளீடுகளைச் சங்கத்திலிருந்து பெற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே உரித்தாகும். திருப்பிச் செலுத்துந் திறன் மொத்த விளைச்சலில் 50% எனக் கொள்ளப்படுவதில், மூன்றிலொரு பங்கு விளைச்சல் குறுகிய காலக் கடன் அளிப்பதற்கும் மீதம் மத்திய காலக் கடன் அளிப்பதற்கும் திருப்பிச் செலுத்துந் திறனாகக் கொள்ளப்படும்.

ஓர் ஏக்கர் நிலத்திற்குக் குறிப்பிட்ட ஒரு பயிருக்கு எவ்வளவு கடன் அளிக்கப்படலாம் என்பதை முன்னர்க் கூறிய செய்திகளைக்

கருத்தில் கொண்டு நிருணயிக்கவேண்டும். இந்தப் பொறுப்பு மத்திய கூட்டுறவு வங்கியைச் சார்ந்ததாகும். இதற்கு ஆண்டு தோறும் களப் பணியாளர்கள் (field workers) மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டும். இம் மாநாட்டில் உள்ளூர் விவசாயக் கூட்டுறவுத் துறை அலுவலர், சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் ஒன்றுகூடி பல்வகைப் பயிர்களுக்கு எந்த விகிதத்தில் கடன் அளவை நிருணயிக் கலாம் என்று ஆராய்வர். இம் மாநாட்டில் உருவாகும் கருத்தினை யொட்டி மத்திய வங்கி ஓர் ஏக்கருக்கு இன்ன பயிருக்கு இவ்வளவு கடன் ரொக்கமாகவும், உள்ளீடுகளாகவும் வழங்கப்படலாம் என்று நிருணயிக்கும். நடைமுறையில் இம் மாநாட்டைக் கூட்டி கடன் விகிதத்தை நிருணயிப்பதில் சில தொல்லைகள் காணப்பட்டதால் ரிசர்வு வங்கி தொழில் நுட்பக் குழு (Technical Committee) வொன்றின் உதவிகொண்டு இது நிருணயிக்கப் படலாமென்று பரிந்துரைத்துள்ளது. இக் குழுவில் விவசாய அலுவலர், கூட்டுறவு அலுவலர், சங்கங்களின் பிரதிநிதிகள் முதலியோர் இடம் பெறுவர்.

கடன் விகிதங்கள் (Scales of finance) நிருணயிக்கப்பட்டதும், மத்திய வங்கி அதன் மேற்பார்வையாளர்களுக்கு அவற்றை அறிவித்து அவர்கள் வழி சங்கங்களின் கடன் வரம்பு அறிக்கைகள் (Credit Limit Statements) தயாரிக்கச் செய்கின்றது. இதை ஆண்டுக் கடன் மனு என்றும் கூறுவதுண்டு. உறுப்பினர்கள் தனித் தனியே கடன் விண்ணப்பங்கள் அனுப்பவோ அல்லது சங்கம் தனியாக விண்ணப்பம் அனுப்பவோ தேவையில்லை. சங்கத்தின் பயன்படுத்தக் கூடிய நிதி வளத்தை (disposable resources)க் கண்ணுற்று மத்திய கூட்டுறவு வங்கி சங்கத்திற்குக் கடன் வரம்பை நிருணயிக்கும். இந்த வரம்புக்குள்ளாகச் சங்கம் தேவைப்பட்ட போது தொகையினைக் கடனகப் பெறலாம். கடன் வழங்குமுன், மத்திய கூட்டுறவு வங்கி, கடன் கோரும் சங்கம் கடன் பெறு தகுதி பெற்றுளதா என்ற செய்தியை ஆராயவேண்டும். நிலுவையாக உள்ள கடன்களில் குறிப்பிட்ட விகிதத்திற்குக் குறையாது பணம் செலுத்தப்பட்டு விட்டதா, கடன் கோருமளவுக் கேற்ற பங்கு முதல் கட்டப்பட்டதா என்பது போன்ற செய்திகளைக் கவனித்து எல்லாம் சரிவர இருப்பின் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள சங்கம் அனுமதிக்கப்படும். சங்கம் ஆண்டு முழுதும் மொத்தமாகப் பெறக்கூடிய கடன் தொகைக்கு ஒரு கடனுறுதிச் சீட்டு (Promissory note) எழுதி மத்திய வங்கிக்குக் கொடுத்துவிடும். கடன் பெறத் தகுதியுள்ள உறுப்பினர் சங்கத்திற்குத் தரவேண்டிய கடன் தவணை கடந்திருக்கக்கூடாது; தான் கோரும் கடனுக்கு ஏற்ற அளவு பங்கு முதல் எடுத்திருக்க

வேண்டும்; சங்கத்திற்குக் கடனுறுதிப் பத்திரம் எழுதித்தர வேண்டும்; கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்தின்வழி தன் விளை பொருளை விற்க உடன்பாடு ஒன்று எழுதித்தரவேண்டும்.

மத்திய காலக் கடன்

விவசாயத் தேவைகளுக்கு மேன்மேலும் மத்தியகாலக் கடனளிக்கப்பட வேண்டுமென மேத்தா குழு பரிந்துரைத்தது. இக் கடன் பெறும் தகுதி ஏக்கர், பயிர், கடன் திருப்பிச் செலுத்து தவணை, திருப்பிச் செலுத்தும் திறன் முதலியவற்றைக் கணக்கிட்டு நிருணயிக்கப்படவேண்டும். இக் கடன் அளவும் களப் பணியாளர்கள் மாநாட்டில் ஆராயப்படவேண்டும். துவக்கத்தில் ரூ. 500 வரை மத்திய காலக் கடன் இரண்டு பிணையாளரின் (Sureties) கையொப்பம் பெற்றுக்கொண்டு கொடுக்கப்படலாமென்றும், ரூ. 500 முதல் ரூ. 1,000வரை நிலத்தின்மீது பற்றுப் பொறுப்பு (Charge) ஏற்படுத்திக் கடன் தரலாமென்றும் ரூ. 1,000–க்கு மேல் நிலத்தை அடைமானமாக ஏற்றுக் கடன் வழங்கலாமென்றும் நிருணயிக்கப்பட்டது. பின்னர் மேற்கூறிய வரம்புகள் உயர்த்தப்பட்டு ரூ. 1,000வரை பிணையாள் கடனும், 1,500 வரை நிலத்தின்மீது பற்றுப்பொறுப்பு ஏற்படுத்திக் கடனும், ரூ. 1,500–க்கு மேல் நில அடைமானத்தின் பேரில் (மத்திய காலக்) கடனும் தரப்படலாமென்று நிருணயிக்கப்பட்டது. கிணறு, நீரேற்றுப் பொறி போன்ற தேவைகளுக்கு ரூ. 3,500 வரை பிணையாள் கையொப்பத்தின் பேரில் கடன் தரப்படலாம். வேறு விவசாயப் பொறி அல்லது கருவிகள் வாங்கக் கடன் கோருபவர் கடன் தொகையில் 10% பங்கு முதல் கட்டுவதுடன், பொறி அல்லது கருவிகளின் விலையில் 15% தொகையைத் தன் நிதிகளிலிருந்து செலுத்தவேண்டும். சங்கம், கடன் தொகையை விவசாயப் பொறி அல்லது கருவிகள் விற்கும் நிறுவனத்திற்கு நேரடியாக அனுப்பிவிடும். விவசாயி பொறி அல்லது கருவியைச் சங்கத்தினிடம் அடைமானமாக வைத்து அதனைக் காப்பீடு செய்ய வேண்டும். பால் பண்ணை, கோழிப் பண்ணை போன்ற நோக்கங்களுக்கும் ரூ. 2,000 வரை பிணையாட்கள் கையொப்பத்தின் பேரில் சிறு விவசாயிகளுக்குக் கடன் தரலாமென ரிசர்வு வங்கி அனுமதித்துள்ளது. பண்ணைப் பொருட்களைச் சந்தையிலிட வேண்டிய வசதிகள் வட்டாரத்திலிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இக் கடன் வழங்கப்படும்.

பயிர்க் கடன்முறை—நடைமுறைபற்றிய மதிப்பீடு

உற்பத்தி நோக்கத்திற்கு, குறித்த காலத்தில் ரொக்கமும் உள்ளீடுகளும் கடனாக அளித்து, கடனையும் சந்தையிடுகையையும்

பிணைத்துச் செயலாற்ற முனைவது பயிர்க் கடன் திட்டம். இத் திட்டம் எங்ஙனம் செயல்படுகிறது என்பதை ஆராயப் போந்த குழுவினர் நடைமுறையில் பல குறைபாடுகளைக் கண்டனர். பல இடங்களில் கடன் மூன்று பகுதிகளாக வழங்கப்படவில்லை. உள்ளீடுகள் மிகவும் குறைவான அளவே வழங்கப்பட்டன. பல சங்கங்கள் நிலத்தை அடைமானம் செய்து கொடுப்பவர்களுக்கு மட்டுமே கடன் வழங்கின. கடனளவு விகிதங்கள் (Scales of finance) சரியான முறையில் நிருணயிக்கப்படவில்லை. முதல் பகுதி ரொக்கம் மிகவும் உயர்ந்த அளவாக நிருணயிக்கப்பட்ட சில இடங்களில் மிகைக் கடன்கள் வழங்கப்பட்டு உற்பத்தியல்லா நோக்கங்களுக்குக் கடன் பயன்படுத்தப்பட்டது. உரிய நேரத்தில் தக்க அளவு உரங்களை வழங்க இயலாமல் சங்கங்கள் தவித்தன. சில இடங்களில் உறுப்பினர்கள் உரங்களை வாங்கிக்கொள்ள மறுத்தனர். காரணம் உரம் அவர் விரும்பிய வகையாக இல்லா திருக்கலாம்; அல்லது காலந்தாழ்த்துப் பயிருக்குத் தேவைப்படாத நேரத்தில் அது அளிக்கப்பட்டிருக்கலாம். பயிர்ப் பருவத்தை யொட்டிக் கடன் வழங்கலும், திருப்பி வசூலித்தலும் பெரும் பாலும் கடைப்பிடிக்கப்படவில்லை. இதற்குக் காரணம், பலப்பல ஆண்டுகளாக விவசாயி விரும்பிய நேரத்தில் கடன்பெற்று அதை ஓர் ஆண்டு கழிந்ததும் திருப்பிச் செலுத்துவது என்ற முறையில் பழகிவிட்டிருந்தார்.

கடனும் சந்தையிடுகையும் சரியாக இணைக்கப்படவில்லை. எனவே, கடனைத் திருப்பிப்பெற விளைபொருளைப் பெற்று விற்பது என்ற நிகழ்ச்சி காண்பது அரிதாக இருந்தது. கடனை வழங்கு வோரின் விருப்பு வெறுப்புகள்படி கடன் அளவு, வழங்கும் காலம், திரும்ப வசூலிக்கும் காலம் முதலிய நிருணயிக்கப்படாது, குறித்த காலத்தில் கடன் வழங்கப்பட வேண்டுமென்ற உயரிய குறிக்கோளுடன் உருவாக்கப்பட்டது பயிர்க் கடன் முறை. எனினும், பலதரப்பட்ட பல்வகை விவரங்களைத் திரட்டி, மனுவைத் தயாரித்து, அவற்றைப் பரிசீலித்து, மேலும் சரிபார்த்து, பின்னர் அனுமதித்து, இறுதியாகப் பணத்தைப் பட்டுவாடா செய்வதற்குள் காலம் கடந்து விவசாயிகள் தொல்லை தீராமல் நின்றது.

உற்பத்திப் பெருக்கத்திற்குத் தரப்படும் இப் பயிர்க் கடன் உண்மையிலேயே உற்பத்திக்குத்தான் பயன்படுத்தப்படுகிறதா என்று மேற்பார்வை செய்ய சரியான ஏற்பாடுகளில்லை என்று குறை கூறப்படுகிறது. மற்றும் நிலக்கிழாருக்கும் குத்தகை தாரருக்கும் ஒரே அளவு கடன் தரப்படுவதில்லை. குத்தகை

தாரருக்குக் குறைவான அளவு கடன் மட்டுமே சில இடங்களில் தாப்படுகிறது. வாய்மொழி குத்தகையின் பேரில் பயிர் செய்வோருக்குக் கடனளிக்க எவரும் துணிவதில்லை. சங்கத்தின் நிருவாகக் குழுவினரும் தம் சொந்த பொறுப்பில் இவர்களுக்குக் கடன்வழங்க விரும்புவதில்லை.

வட்டி விகிதம்

கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு அளிக்கும் கடன்மீது எவ்வளவு வட்டி வசூலிப்பது உகந்தது என்று அடிக்கடி வாதிடப்படுகிறது. வட்டித் தொழிலர் மிகவும் உயர்ந்த வட்டி வசூலிப்பதனுல் விவசாயிகள் பெருந்துன்பங்களுக்கு ஆளாகின்றனர் என்ற காரணத்திற்காகவே கூட்டுறவுக் கடன் சங்கங்கள் துவங்கப் பெற்றன. ஆகவே, சங்கங்கள் உயர்ந்த வட்டி வசூலிப்பது சிறிதும் பொருந்தாது. ஆனல், சங்கங்கள் மிகக் குறைவான வட்டிக்குக் கடன் வழங்கினலும் சில கோளாறுகள் ஏற்படலாம். கெட்ட மக்கள் கூட்டுறவில் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கி மிக உயர்ந்த வட்டிக்கு வட்டித் தொழிலர் போன்று கடன் கொடுத்து ஆதாயம் ஈட்டலாம். இரண்டு கோடிகளுக்குமிடையே, நியாயமான அளவு வட்டிக்குக் கடனளிப்பது சிறந்தது என்ற கருத்துப் பலரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.

தமக்குத் தேவைப்படும் நடைமுறை முதலைச் சங்கங்கள் வெளியிலிருந்து திரட்ட வேண்டியிருப்பது யாவரும் அறிந்ததே. தம்முடைய சொந்த நிதிவளங்கள் என்று கூறக் கூடியது மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. மாநில அரசினரும், ரிசர்வு வங்கியினரும் அளிக்கும் ஆதரவும் சலுகையும் கொண்டே சங்கங்கள் பெருமளவுக்கு நடைமுறை முதல் பெறுகின்றன. என்றேனும் ஒருநாள் இந்நிலை மாறி கூட்டுறவுச் சங்கங்கள் தாமே தம் கால்களில் நிற்கும் நிலை வரத்தான் போகிறது. அந் நிலையில் சங்கங்கள் வைப்புத் தொகையினை வெளியாரிடமிருந்து ஈர்க்க நல்ல வட்டி அளித்தாகவேண்டும். வாணிக வங்கிகள் அளிக்கும் வட்டி விகிதத்திற்குக் குறையாத வட்டியாவது வழங்கினல்தான் மக்கள் சங்கங்களில் வைப்புப் போடுவர். இந்த வட்டிவீதத்திற்கு மேல் சங்கம் தனது நிருவாகச் செலவுகளுக்கு ஆகும் தொகையைக் கணக்கிட்டு அதையும் அடக்கும் வகையில் தாம் கடன் வழங்கு வட்டி வீதத்தை நிருணயிக்கவேண்டும். நம் நாட்டில் பொதுவாக விவசாயக் கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி 9%க்கு அருகில் இருந்துவருகிறது. இது நியாயமான வட்டியெனக் கருதப்படுகிறது. விவசாயிகள் வேண்டுவது போதுமான அளவு கடன், குறித்த காலத்தில் கொடுக்கப்படுவதேயாகும். விவசாயிகள்

உயர்ந்த வட்டி கொடுக்க இயலா நிலையிலிருந்தாலும், மிகக் குறைவான வட்டிக்குக் கடன்பெற வேண்டுமென எதிர்பார்க்க வில்லை. பொதுவாக, பணச் சந்தையின் நிலையினையொட்டி வட்டி விகிதம் அமைவது இயல்பு. வைப்புகள்மீது சங்கம் வழங்கும் வட்டி விகிதம், நிருவாகச் செலவு, கடன் வாங்கும்—வழங்கும் விகிதங்களுக்கிடையே நியாயமான இடைவெளி, தம்மிடமுள்ள சொந்த நிதிவளம் ஆகிய செய்திகளையும் கருத்தில் கொண்டே கடன் வழங்கு வட்டிவிகிதம் நிருணயிக்கப்படுகிறது.

கடன்களைத் திருப்பிச் செலுத்தல்

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடனைக் குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தினால்தான் சங்கம் வெற்றிகரமாக இயங்க முடியும். திருப்பிச் செலுத்துவதற்கு மத்திய வங்கி நிருணயிக்கும் தேதி அறுவடை நாட்களையொட்டி அமையவேண்டும். அறுவடை காலத்துக்குப் பின் நீண்ட நாட்கள் கழித்து இத் தேதி குறிக்கப்பட்டால் விவசாயி பயிரை விற்றுப் பணத்தை விரயம் செய்துவிடலாம். அறுவடை முடிந்தவுடன் தவணை நாள் குறிக்கப்பட்டால் விவசாயி தன் பயிரை நல்ல விலைக்கு விற்க முடியாமற் போகும். எனவே, அறுவடை முடிந்து சில வாரங் களுக்குள் கடன் திருப்பித் தரவேண்டிய நாள் நிருணயிக்கப்பட வேண்டும்.

தவணைகடந்த பாக்கி (Overdues)

கூட்டுறவுக் கடன்துறையில் இன்று ஒரு பெரும் பிரச்சினை யாகக் காணப்படுவது தவணை கடந்த கடன்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வரும் தவணை கடந்த கடன்களின் விகிதம் கூட்டுறவாளர்கள் அனைவரையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. 1960—61இல் நிலுவை நின்ற கடன் களில் 20·3% தவணை கடந்த கடன்களாயிருந்தன. 1965-66இல் இவ் விகிதம் 29·4% ஆகவும், 1968-69இல் 34·6% ஆகவும். 1969-70இல் 37·7% ஆகவும், 1970-71இல் 41·1% ஆகவும் உயர்ந்த வண்ணமாக இருந்து வருகிறது. தவணை கடந்த கடன்கள் கூட்டுறவுக் கடன்துறையின் ஒரு கடுமையான நோயாகும். இந் நோய் காரணமாகச் சங்கங்கள் செயலற்றுப் போய் கூட்டுறவுக் கடன் நடவடிக்கைகள் அறவே மேற்கொள்ள முடியாத நிலைமை சில மாநிலங்களில் ஏற்பட்டிருக்கிறது.

உண்மையில் மேற்கூறிய புள்ளி விவரங்கள் பிரச்சினையை மேலோட்டமாகவே குறிக்கின்றன. நுட்பமாக ஆராய்ந்து

பார்த்தால் நிலைமை இன்னும் கடுமையாக இருப்பது புலனாகும். எடுத்துக்காட்டாக, சில மாநிலங்களில் தவணைத் தேதியைக் கூட்டுறவு ஆண்டு முடிந்த சில நாட்களுக்குப் பின் நிருணயித்துப் புள்ளி விவரங்கள் உண்மை நிலையைக் காட்டாதவாறு செய்து விடுவதுண்டு. பழைய கடன் திருப்பிச் செலுத்திய பிறகு பதினைந்து நாட்கள் கழித்தே புதிய கடன் தரப்படலாம் என்று நடைமுறை விதிகள் இருக்கின்றன. ஆனால், சில இடங்களில் ஒரே நாளில் பழங்கடன் தீர்க்கப்பட்டுப் புதிய கடன் வழங்கப்படும் பழக்கம் காணப்படுகிறது. இந்தப் பழக்கம் ஏட்டளவில் கணக்குச் சரிக்கட்டலை மேற்கொள்ள வகை செய்கிறது. உண்மையில் பணங் கொடுக்கல் வாங்கல் ஏதுமின்றி ஏடுகளில் பதிவுகளைச் செய்து பணந் திரும்பக் கட்டியது போன்றும் மீண்டும் கடன் வழங்கியது போன்றும் புனைதல் நிலைமையைத் திரித்துக்காட்டுகிறது. தவறான முறைகளைக் கையாண்டு உண்மை நிலையை மறைத்து வைத்திருத்தல் கூட்டுறவு இயக்கத்திற்கு நன்மை பயக்காது.

தவணை கடந்த பாக்கி ஏற்படக் காரணங்கள்

கடன்களைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தாது உற்பத்திக்கு உதவாச் செயல்களில் அவற்றை ஈடுபடுத்தினால், விவசாயியின் திருப்பிச் செலுத்துத் திறன் நலிந்து போகிறது. குறித்த காலத்தில் கடனைத் திருப்பித் தர இயலாது விவசாயி தொல்லைப்படுகிறார். உற்பத்தி நோக்கத்திற்குக் கடன் பயன் படுத்தப்படுகிறதா என்று மேற்பார்வை செய்யவேண்டிய அளவு மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்படுவதில்லை. பிற அலுவல்களுக்கிடையே மேற்பார்வை செய்யும் பொறுப்பையும் ஏற்றுச் செயல்படும் அலுவலர் எத்தகைய பணி செய்ய முடியும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

சில இடங்களில் பல முகமைகள் (agencies) விவசாயக் கடன்கள் வழங்குவதால், ஒரே விவசாயி பல இடங்களிலிருந்து கடன் பெற ஏதுவாகிறது. விவசாயத் துறையினர் உரமும் விதையும் வழங்குவது ஒருபுறம்; வருவாய்த்துறை தக்காவிக் கடன் (Taccavi Loan)கள் வழங்குவது ஒருபுறம்; வாணிக வங்கிகள் கடன் வழங்குவது ஒரு புறம்; வட்டார வளர்ச்சி அலுவலகம் கடனளிப்பது ஒரு புறம்; சந்தையிடுகைச் சங்கங்கள் ஈட்டுக் கடனளிப்பது ஒரு புறம் என்றவாறு பலப்பல முகமைகள் ஒன்றுக்கொன்று ஏதும் தொடர்பு கொள்ளாமல் ஒரே விவசாயிக்கு ஒரே நோக்கத்திற்குப் பல கடன்களை அளித்துவிடுவதும் உண்டு. இதனால் விவசாயி அளவுக்குமீறி கடன்களைப் பெற்று எந்தக் கடனையும் ஒழுங்காகத் திருப்பித் தராமல் போவதுமுண்டு.

சில சங்கங்கள் கடன் விதிகளுக்கும் கொள்கைகளுக்கும் புறம்பாகக் கடன்களையளித்துத் தவணை கடந்த பாக்கித் தொகையை மேலும் உயர்த்த வழி வகுத்தன. நிருவாகக் குழுவின் உறுப்பினர்களே சங்கத்தில் வாங்கிய கடனைத் தவணைக்குள் திருப்பித் தராத நிலையில் பிற உறுப்பினர்களைத் திருப்பிச் செலுத்தக் கோர முகமின்றி நிலைமை சீர்கெட்டதும் உண்டு. அரசியல் காரணமாகவும், உறுப்பினரிடையே பிளவுகள் காரண மாகவும் மிகவும் தாராளமாகக் கடன் வழங்கலும், முனைந்து திருப்பி வசூலிக்காத நிலையும் சில நேரங்களில் காணப்பட்டன.

கூட்டுறவுக் கடன்மீது குறைந்த வட்டி வசூலிப்பதும் தவணை கடந்த பாக்கிக்கு ஒரு காரணமாக அமைந்தது எனக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு கருதியது. விவசாயிகள் உயர்ந்த வட்டிக்கு வாங்கிய பிற கடன்களை முதலில் அடைத்துவிட்டு இறுதியில் கூட்டுறவுச் சங்கக் கடன்களை அடைக்கின்றனர். சில விவசாயிகள் குறைந்த வட்டிக்குப் பெற்ற கடனை உயர்ந்த வட்டிக்குக் கடனாக அளித்த நிகழ்ச்சியும் காணப்பட்டது.

கடனும் சந்தையிடுகையும் இணைக்கப்படாது உள்ள நிலையும் தவணை கடந்த கடன்களுக்கு ஒரு காரணமாகும். வழங்கப்பட்ட கடனை எளிதாகத் திருப்பிப்பெற, கடன் பெற்றவர் தமது விளைபொருளைச் சந்தையிடுகைச் சங்கத்தின்வழி விற்றுச் சங்கத் திற்குத் தரவேண்டிய கடனைக் கழித்துக்கொண்டு மீதி தொகையை மட்டுமே பெற்றுக் கொள்வது என்ற ஏற்பாடு உதவும். இந்த ஏற்பாடு சரிவர செய்யப்படாதது காரணமாகத் தவணை கடந்த கடன் தொகை உயர்ந்து வந்துள்ளது.

கூட்டுறவுக் கடன் சில இடங்களில் காலாகாலத்தில் வழங்கப் படுவதுமில்லை; வசூலிக்கப்படுவதுமில்லை. பயிரைப் பிணையாக ஏற்றுக் கடன் வழங்காது, அசையாச் சொத்துகளைப் பிணையாக ஏற்றே பல சங்கங்கள் கடன் வழங்குகின்றன. அறுவடைக் காலத்தையொட்டி தவணைத் தேதி நிருணயிக்கப்படாதது சில இடங்களில் கடன்கள் தவணைப்படி திருப்பிச் செலுத்தப்படாத தற்குக் காரணமாயமைந்தது.

தவணை கடந்தும் கடனைத் திருப்பிச் செலுத்தாத கடனாளிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். கடனைத் திருப்பிச் செலுத்த வகையில்லாது நிதிநிலை மிகவும் நலிந்த கடனாளிகள் ஒரு வகை. பண வசதியுள்ள ஆனால் திருப்பிச் செலுத்தத் தயங்கும் அல்லது விருப்பமில்லாத கடனாளிகள் பிறிதொரு வகை. இவர்

களைக் காணும் பிற கடனாளிகளும் தாமும் ஏன் நேரத்தில் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதில்லை. இவ்வகைக் கடனாளிகள் பெரும்பாலும் செல்வாக்குள்ளவர்களாயிருப்பதால் அதிகாரிகள் இவர்கள்மீது நடவடிக்கையெடுத்துக் கடனைத் திருப்பி வசூலிப்பது எளிதாக இருப்பதில்லை.

பல கூட்டுறவு குழுக்கள் தவணை கடந்த பாக்கியினால் கூட்டுறவு இயக்கத்திற்கு ஏற்படும் கேடுகளை எடுத்துரைத்து, இக் குறைபாட்டைப் போக்க சில வழிமுறைகளைக் கூறியுள்ளனர். அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு இது குறித்துக் கூறியுள்ள யோசனைகளைக் காண்போம்.

தவணை கடந்த பாக்கி என்ற பிரச்சினையைத் தீர்க்கக் கூட்டுறவுக் கல்வி தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அரசியல் தலைவர்கள், நிருவாகத்துறையினர், விரிவாக்க அலுவலர் கடன்வாங்குவோர் ஆகியோருக்குக் கூட்டுறவுக் கடன் முறையின் தத்துவம், நோக்கம், நடைமுறை பற்றிய கல்வி அளிக்கப்படுவது மிகமிக அவசியம். தவணை தவறிய விவசாயிகளின் கணக்கைத் தனித்தனியாக எடுத்து ஆராய்ந்து கடன் தொகையைப் பல தவணைகளிலாவது திருப்பிச் செலுத்தும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லா வகை முயற்சிகளும் மேற்கொண்ட பின்னரும் வசூலிக்க முடியாத கடனை, அரசாங்கத்திடம் உதவித்தொகை பெற்றுக் கணக்கிலிருந்து எடுத்துவிடலாம்.

கடனளிக்க கடைப்பிடிக்கப்படும் விதிகளையும் செயல்முறைகளையும் சீர்படுத்தி தவணைகடந்த கடன்களைக் குறைக்கலாம். கடனைத் திருப்பி வசூல் செய்யும் பணியினைக் கூட்டுறவு ஆண்டு முடியுந்தருவாயில் கடுமையாக மேற்கொள்ளுவதைவிட தவணை நாளுக்குப் பல நாட்களுக்கு முன்னரே நன்கு திட்டமிட்ட தீவிர முயற்சிகளை மத்திய வங்கிகள் மேற்கொள்ளவேண்டும். தவணை தவறியவர்கள்மீது சட்டமுறை நடவடிக்கை எடுப்பதில் மேலுஞ் சில திருத்தங்கள் செய்யப்படலாம். பிரதம சங்கம் நடவடிக்கையெடுக்கத் தயங்கும் நபர்கள் மீது மத்திய வங்கி நடவடிக்கையெடுக்கச் சட்டம் இடமளிக்கவேண்டும். பணத்தை வசூல் செய்யாது ஏட்டளவில் வசூலித்தது போல் கணக்குக் காட்டும் தீய பழக்கங்களை அறவே நீக்கவேண்டும். தவணை தவறியவர்களுக்கு மேலும் கடன் வழங்கல் தவிர்க்கப்படவேண்டும். அவர்கள் சங்க நிருவாகக் குழுவில் எத்தகைய பதவியையும் வகிக்கத் தகுதியற்றவர்களாக்கப்பட வேண்டும்.

நிருவாகம்

கூட்டுறவுச் சங்கமொன்றைப் பற்றிய அதிகாரங்களனைத்தும் அதன் உறுப்பினர்களடங்கிய பேரவையில் அடங்கியுள்ளன. உறுப்பினர் பேரவை பெரும்பாலும் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே கூடுகின்றது. சங்கத்தின் அலுவலர், நிருவாகக் குழுவினரைத் தேர்ந்தெடுத்தல்; ஆண்டுக் கணக்குகளை ஆராய்தல்; இலாபத்தைப் பிரித்து வழங்கல்; துணைவிதிகளை மாற்றல், திருத்தல், நீக்கல்; தணிக்கை அறிக்கையை ஆராய்தல்; புதிய உறுப்பினர்கள் சேர்ப்பை உறுதி செய்தல்; கடன், வைப்புமீது வட்டி விகிதத்தை நிருணயித்தல் ஆகிய செய்திகளை பேரவையே கவனிக்கவேண்டும். கூட்டுறவுக் கல்வியின்மை காரணமாக உறுப்பினர்கள் பேரவைக் கூட்டத்திற்கு வந்து பங்கு கொள்ளுவது மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. பெரும்பாலான உறுப் பினர்கள் சங்கத்தைத் தங்கள் சங்கம் என்றுகூட புரிந்து கொள்ளுவதில்லை. சிலர் சங்கத்தை அரசாங்கத்தின் ஒரு பகுதி யென்றும் கருதுகின்றனர். சங்கத்தின் நடைமுறை முதலில் மிகச் சிறிய அளவை மட்டுமே உறுப்பினர் வழங்குவதாலும் பெருமளவு பங்கு வெளியிடத்திலிருந்து பெறப்படுவதாலும், விவசாயியின் கடன் தேவைகளில் மிகச் சிறிய அளவே சங்கத்தால் நிறைவு செய்யப்படுவதாலும் உறுப்பினர் தனக்கும் சங்கத்திற்கும் இருக்கும் நெருங்கிய தொடர்பை உணருவதில்லை.

சங்கத்தின் அன்றாட நிருவாகத்தைக் கவனித்துவர நிருவாகக் குழு ஒன்றை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். சங்கம் சரிவர செயல்படுவது நிருவாகக் குழுவினரைப் பொருத்திருக்கிறது என்று கூறினால் மிகையாகாது. கடன் விண்ணப்பங்களைச் சரி பார்த்துப் பரிந்துரைப்பது, கடன் பணம் பயன்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்வது, தவணை தவறியோர்மீது நடவடிக்கை யெடுப்பது, கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாகச் சட்டமுறை நடவடிக் கைகளை மேற்கொள்ளுவது, சங்கத்தைப் பொருத்த வரவு செலவு கணக்குகளனைத்தையும் வைத்திருப்பது, மாதாந்திர கூட்டங்களில் கணக்குகளைச் சரிபார்த்துக் கையிருப்பு ரொக்கத்தை எண்ணிப் பார்ப்பது போன்ற அதிகாரங்கள் நிருவாகக் குழுவினருக்கு அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர், பொரு ளாளர், செயலாளர் என்ற அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தலைவர் சங்கத்தின் கூட்டங்களுக்கும், நிருவாகக் குழுவின் கூட்டங் களுக்கும் தலைமை தாங்குவார்.

சங்கத்தின் செயற்பாட்டைக் கவனித்துக் கொள்ளும் அலுவலர் செயலாளர் அல்லது செயலர் ஆவார். சங்கம் சீராகச்

செயல்பட, அதன் கணக்கு வழக்குகளை அவ்வப்போது எழுதி வைக்க, கூட்டங்களைக் கூட்டி கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்து வைக்கத் திறமையான செயலாளர் தேவை. கூட்டுறவுக் குழுக்களும், மாநாடுகளும் ஒவ்வொரு சங்கத்திற்கும் பயிற்சி பெற்ற முழுநேர ஊதியம் பெறும் ஊழியர் ஒருவர் செயலராக நியமிக்கப்படுதலின் இன்றியமையாமையை வற்புறுத்தியுள்ளன. இருந்தும் 1970-71இல் இருந்த 1,60,780 சங்கங்களில் 53,429 சங்கங்கள் மட்டுமே முழுநேர ஊதியம் பெறும் செயலர்களைக் கொண்டிருந்தன. 43,113 சங்கங்களில் பகுதி நேர (Part-time) செயலர்கள் பணி செய்து வந்தனர். 58,260 சங்கங்களில் ஊதியம் பெறாச் செயலர்களிருந்தனர்.

கூட்டுறவு இயக்கம் செம்மையாகச் செயல்பட கூட்டுறவுத் தணிக்கை காலக்கிரமப்படி செய்யப்படுவது மிகவும் இன்றியமையாதது. பதிவாளர் அல்லது அவர் அதிகாரம் பெற்ற அலுவலர் எவரும் தணிக்கையை மேற்கொள்ளலாம். சரியான தணிக்கை மூலம் கணக்குகள் ஒழுங்காக வைக்கப்பட்டுள்ளனவா என்றும், நிருவாகம் சரிவர நடந்து வருகிறதா என்றும், சங்கத்தின் நிதிநிலை எவ்வாறு உள்ளதென்றும் அறிந்து கொள்ளலாம்.

கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு சங்கங்களின் மேற்பார்வை நிதியவசதியளிக்கும் முகமையான மத்திய வங்கியின் பொறுப்பாக இருக்கவேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளது. மேற்பார்வையாளர்கள் தக்க பயிற்சியும், தகுதியும் பெற்றவர்களாக இருத்தல் மிகவும் அவசியம்.

சங்கத்தின் நடப்பு எங்ஙனம் அமைந்துள்ளது எனப் பலப்பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து அதன் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்ய அவ்வப்போது ஆய்வு (inspection) மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஆய்வு நடத்துவதற்கெனத் தனி அலுவலர்கள் எந்த மாநிலத்திலும் நியமிக்கப்படவில்லை. பதிவாளர் அல்லது அவர் அதிகாரம் பெற்ற அலுவலர் தாமாகவோ அல்லது கடனாளர்களின் வேண்டுகோளின் பேரிலோ ஆய்வு மேற்கொள்ளலாம். பிற அலுவல்களின் சுமை காரணமாகப் பெரும்பாலான சங்கங்கள் ஆய்வு செய்யப்படுவதில்லை என்பதை யாவரும் அறிவர்.

பொதுவாக விவசாயக் கடன் சங்கங்களின் செயற்பாட்டில் காணப்படும் குறைகள் பலவற்றை முன்னரே கண்டோம். வளமற்ற நலிந்த நிலையிலுள்ள சங்கங்கள், செயலிழந்து கிடக்கும் சங்கங்கள், குறைபாடு மிக்க கடன் கொள்கைகள், தக்க மேற்பார்வையின்மை, கடனும் சந்தையிடுகையும் இணையாது நிற்றல்,

திறன் குறைந்த நிருவாகம், சிக்கனம் சேமிப்புக் கடைப்பிடிக்கா நிலை, ஊன்றிய நலமிகளின் பிடி ஆகிய குறைகள் ஒருபுறமிருக்க, சிறு விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுவதில்லை என்ற பெருங்குறை அண்மைக் காலத்தில் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது. இந்த நிலை மாறவேண்டும்.

கிராம அளவில் செயல்படும் பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் எங்ஙனம் சீரமைத்து உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று பல அரிய பரிந்துரைகளை அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு தந்துள்ளது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

உச்சி வங்கியும், மத்திய கூட்டுறவு வங்கிகளும் முனைந்து செயல்பட்டு நாடு முழுதும் வளம்பெற்ற அல்லது வளம்பெறும் வாய்ப்புள்ள பிரதம சங்கங்கள் மட்டுமே இயங்கும் நிலை 1970-71 இறுதிக்குள் வரவேண்டும். வளமார்ந்த சங்கம் என்று ஏற்கப்பட என்ன கூறுகள் பொருந்தியிருக்க வேண்டும் என்பதுபற்றி கடுமையான நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுவதில்லை. சங்கங்கள் நாளடைவில் கிராம வங்கிகளாக (Rural Banks) வளரவேண்டும். இவ் வங்கிகள் கிராமப்புறங்களிலுள்ளோருக்கு வங்கியப் பணிகளனைத்தையும் செய்துதரவேண்டும்.

பிரதம சங்கங்கள் வைப்புத் திரட்டுவதில் பேரார்வம் காட்ட வேண்டும். தமது பங்கு முதலையும் படிப்படியாக உயர்த்தி தமது சொந்த நிதிவளத்தைப் பெருக்கவேண்டும். கடனையும் சந்தை யிடுகையையும் ஒன்றிணைத்து, மேற்பார்வை ஏற்பாடுகளைப் பலப்படுத்தி, தவணை தவறும் கடன்களைக் குறைக்கவேண்டும். பயிற்சி பெற்ற அலுவரை அமர்த்தி நிருவாகத்தைச் செம்மைப் படுத்தவேண்டும். ஊன்றிய நலமிகள் தமது நன்மை கருதி சங்கத்தைச் சுரண்டாது பார்த்துக் கொள்ளவேண்டும். மற்றும் சமுதாயத்தில் பின்தங்கியிருப்போருக்கும் சிறிய விவசாயிகளுக்கும் பேருதவியளிக்கும் வகையில் சங்கங்கள் செயல்படவேண்டும். முடிந்தவரை நடைமுறை சடங்குகளைக் குறைத்துக்கொண்டு எளிய முறையில் கடன் வழங்க வழிமுறைகளை வகுக்கவேண்டும். விவசாயிகளுக்குப் பதிவேடு (Pass Book) வழங்கி அதைக்காட்டி வேண்டும்போது அவரது பயிர்ச் செலவுக்குக் குறிப்பிட்ட வரம்பிற் குட்பட்டு வேண்டிய கடன்களைப் பெற ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்த அத்தியாயத்தை முடிக்கு முன்னர் பிரதம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் பற்றிய சில புள்ளி விவரங்களைக் காண்போம்.

அட்டவணை

பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் ரூ. இலட்சத்தில்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
எண்ணிக்கை (மொத்தம்)	212,129	191,904	167,760	162,700	160,780
செயலாற்றி வருவன	171,124	168,224	146,699	143,709	140,546
செயலற்றிருப்பன	41,005	23,680	21,061	18,991	20,234
செயலாற்றும் சங்கங்கள் உள்ளடக்கிய கிராமங்கள் %	66	82	86	85	86
செயலாற்றும் சங்கங்கள் உள்ளடக்கிய கிராம மக்கள் தொகை%	24	33	33	33	33
உறுப்பினர் (ஆயிரத்தில்)	1,70,41	2,61,35	2,91,73	2,97,66	3,09,63
கடன் வாங்கும் உறுப்பினர் (ஆயிரத்தில்)	89,70	1,08,71	1,10,89	1,17,36	1,12,33
மொத்த உறுப்பினரில் கடன் வாங்குவோர் %	53	42	38	39	36
செலுத்திய முதல்	57,75	1,15,32	1,67,31	1,86,52	2,05,74
இதில் அரசு வழங்கியது	5,71	10,48	13,03	14,80	16,94
காப்பு நிதிகள்	17,80	33,59	47,85	52,33	59,57
வைப்புத் தொகை	14,59	34,49	56,84	62,67	69,46
நடைமுறை முதலில் %	4·9	5·6	6	6	6
பிற கடன் வாங்கல்	1,83,78	3,63,15	5,40,22	6,17,94	6,75,19
நடைமுறை முதல்	3,00,13	6,17,48	9,18,90	10,45,67	11,53,40
வழங்கிய கடன்கள் கடன் வழங்கிய சங்கங்கள்	169,919	152,658	124,946	121,722	117,063
வழங்கிய கடன் (மொத்தம்)	2,02,75	3,41,98	5,03,87	5,40,11	5,77,88
குறுகிய காலம்	1,82,82	3,05,18	4,56,39	4,87,77	5,19,34
மத்திய காலம்	19,93	36,80	47,48	52,34	58,54
திருப்பி வசூலிக்கப்பட்ட கடன் (மொத்தம்)	1,62,64	2,83,54	4,20,97	4,55,24	5,04,65
இதில் உறுப்பினர் விளைபொருளை விற்று வசூலித்தது	...	...	44,80	40,60	47,83
தொடர்புற்ற சங்கங்களின் எண்ணிக்கை	...	...	13,305	21,163	16,843
நிலுவை நின்ற கடன் (மொத்தம்)	2,18,00	4,26,90	6,18,75	7,11,44	7,84,48
குறுகிய காலம்	...	3,56,53	5,21,93	5,95,68	6,47,20
மத்திய காலம்	...	70,37	96,82	1,15,76	1,37,28
தவணை பாக்கி கடன்	44,30	1,25,36	2,14,04	2,68,25	3,22,36
நிலுவையில் தவணை கடந்தது %	20·3	29·4	34·6	37·7	41·1

அட்டவணை

பிரதம விவசாயக் கடன் சங்கங்கள்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
இலாபத்தில் நடக்கும் சங்கங்கள் (எண்)	146,433	131,846	113,893	112,786	107,099
நட்டத்தில் நடப்பன	42,735	45,844	41,832	37,703	41,122
இலாப நட்டமின்றி நடப்பன	22,908	14,214	12,035	12,207	12,559
முழுநேர ஊதியம் பெறும் செயலருள்ள சங்கங்கள் (எண்)	...	30,254	43,157	50,726	53,429
பகுதிநேர ஊதியம் பெறும் செயலருள்ள சங்கங்கள் (எண்)	...	44,526	37,853	45,759	43,113
ஊதியம் பெறுச் செயலருள்ள சங்கங்கள் (எண்)	...	92,564	60,338	66,215	58,260
தணிக்கை செய்யப்படாத சங்கங்கள் (எண்)	31,806	24,391	20,091	25,676	16,431

அட்டவணை

அனைத்திந்திய சராசரி புள்ளி விவரங்கள்

பிரதம விவசாயக் கடன் சங்கங்கள்

சராசரி	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
ஒரு சங்கத்துக்கு உறுப்பினர்	80	136	174	183	193
பங்கு முதல் (ரூ.) சங்கமொன்றுக்கு	2,722	6,009	9,973	11,598	12,796
உறுப்பினரொருவருக்கு	34	44	57	63	66
வைப்புகள் (ரூ.) சங்கமொன்றுக்கு	688	1,797	3,388	3,852	4,320
உறுப்பினரொருவருக்கு	9	13	19	21	22
சங்கமொன்றுக்கு நடைமுறை முதல் (ரூ.)	14,149	32,177	54,775	64,270	71,738
கடன் வழங்கியது (ரூ.) சங்கமொன்றுக்கு	9,558	17,821	30,037	33,196	35,942
கடன் வாங்கிய உறுப்பினரொருவருக்கு	226	315	454	460	514

கூட்டுறவுக் கூல வங்கிகள்
(Co-operative Grain Banks)

ஆதிவாசிகளெனப்படும் பழங்குடி மக்களின் நலங்கருதி சில மாநிலங்களில் கூட்டுறவுக் கூல வங்கிகள் நிறுவப்பெற்றுள்ளன. இவ் வங்கிகள் ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம், கர்நாடகம், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இன்றும் குறிப்பிடத்தக்க அளவுக்குச் செயலாற்றி வருகின்றன. பழங்குடி மக்கள் பன்னெடுங்காலமாக வட்டித் தொழிலில் ஈடுபட்டிருந்த பெருநிலக்கிழார்களின் சுரண்டலுக்கு ஆளாகியிருந்தனர். மழைக் காலங்களில் தமக்குத் தேவைப்படும் அன்றாட உணவுக்குப் பெருநிலக்கிழார்களிடம் இவர்கள் விளைபொருளைக் கடனாகப் பெறுவது வழக்கம். இவ் விளைபொருளின் விலையைப் பெருமளவு உயர்த்திக் கணக்கிட்டு, அதன்மீது வட்டியும் சேர்த்துத் திருப்பிச் செலுத்தவேண்டிய மொத்தத் தொகை இவ்வளவு என்று நிருணயித்துப் பின்னர் இத் தொகைக்கு ஈடாக விளைபொருள் கோருவது பெருநிலக்கிழார்களின் கொடிய பழக்கமாக இருந்தது. இதன் விளைவாகப் பழங்குடி மக்கள் செலுத்தும் வட்டி 100%-த்தையும் தாண்டிச் செல்வதுண்டு.

விளைபொருளைக் கடனாகக் கொடுத்து விளைபொருள் தந்தே கடனை அடைப்பது என்ற வகை நடவடிக்கைகளில், ஒருபங்கு விளைபொருளைக் கடனாகத் தந்தால் ஒன்றரை அல்லது இரண்டு மடங்கு விளைபொருள் திருப்பித் தரவேண்டுமென்று நிபந்தனை விதிப்பதுமுண்டு. அறுவடை நேரத்தில் மிகக் குறைந்த விலைக்கு விளைபொருளை விற்று அல்லது திருப்பியளித்துப் பின்னர் அதே தானியத்தை மிக உயர்ந்த விலைக்கு வாங்கும் அவல நிலைக்கு இம் மக்கள் ஆளாயிருந்தனர். இந்த நிலையிலிருந்து அவர்களை மீட்டு, அவர்களுக்குச் சேவைபுரியவே கூல வங்கிகள் நிறுவப் பெற்றன.

கூல வங்கிகள் தமது உறுப்பினருக்குத் தரமான விதைகளையும், பிற உள்ளீடுகளையுங்கூட வழங்குகின்றன. உறுப்பினர்கள் அறுவடை முடிந்தவுடன் தம்மிடம் உபரியாயுள்ள தானியத்தைக் கூல வங்கியில் சேமித்து வைக்கின்றனர். தேவைப்படும்போது இச் சேமிப்பிலிருந்து தானியத்தை எடுத்துக்கொள்ளுவர். தம்

சார்பாகத் தானியத்தை நல்ல விலைக்கு விற்றுத் தருமாறு கூல வங்கியை உறுப்பினர்கள் கோருவதுமுண்டு. தேவைப்பட்டால் உறுப்பினர்கள் கூல வங்கியிலிருந்து தானியத்தைக் கடனாகப் பெறலாம். இங்ஙனம் பெற்ற கடனை அடுத்த அறுவடையின் போது தானியமாகவே திருப்பித் தரவேண்டும். வட்டி போன்ற இனங்களுக்கு ஈடுசெய்யக் கடன் பெற்ற அளவைவிடக் கூடுதலாக 25% அளவுவரை தானியம் தரப்படுதலுமுண்டு.

1971 ஜூன் இறுதியில் 1,316 கூல வங்கிகள் செயல்பட்டு வந்தன. இவற்றால் 7,858 கிராமங்கள் பயனடைந்தன. இவற்றில் 2,75,307 உறுப்பினர்கள் இருந்தனர். இவ் வங்கிகளின் நடைமுறை முதல் ரூ. 3·79 கோடியாக இருந்தது. இவை வழங்கிய கடனில் நிலுவையாக நின்ற தொகை ரூ. 1·66 கோடி மதிப்புள்ளதாக இருந்தது. இதில் தானியவகைக் கடன் ரூ. 1·23 கோடி. மொத்த நிலுவையில் ரூ. 1·03 தவணை கடந்து நின்றது கவலைக்கிடமான நிலையைக் குறிக்கின்றது. 1970-71இல் 891 கூல வங்கிகள் ஆதாயமாகச் செயல்பட்டன; 282 வங்கிகள் நட்டமடைந்திருந்தன; 143 வங்கிகள் இலாபமோ நட்டமோ இன்றியிருந்தன. இதே காலத்தில் 2,71,400 உறுப்பினர்களைக் கொண்டிருந்த 3,741 கூல வங்கிகள் செயலற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தானிய நடவடிக்கைகளையும் பணம் கடன் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளையும் ஒன்று சேர்ப்பதில் இருவகைத் தொழில்களும் பாதிக்கப்படும் வாய்ப்புகள் நிறைய உண்டு. ஒரு பிரிவில் ஏற்படும் நட்டம் மற்றப் பிரிவினையும் பாதிக்கும். வங்கியத் தத்துவப்படியுங்கூட வியாபாரமும் லேவாதேவியெனப்படும் பணம் கொடுக்கல் வாங்கலும் தனித்தனி அமைப்புகள்வழி நடத்தப்படவேண்டும். கூல வங்கிகள் ஓரளவுக்கு விவசாய வங்கிகள் போன்றும் பெருமளவுக்குச் சந்தையிடுகைச் சங்கங்கள் போன்றும் செயலாற்றி வருகின்றன. இந்த ஏற்பாடு விரும்பத்தக்கதல்ல.

அட்டவணை

1971 ஜூன் இறுதியில் கூல வங்கிகளின் நிலை (ரூ. ஆயிரத்தில்)

மாநிலம்	வங்கிகளின் எண்ணிக்கை	மொத்த உறுப்பினர்	கடன் வாங்கிய உறுப்பினர்	கடன் நிலுவை	தவணை கடந்த கடன்
செயல்பட்டு வந்தவை					
ஆந்திரப் பிரதேசம்	264	50,000	44,000	7,74	7,43
பீகார்	22	37,925	34,950	10,75	1,82
குஜராத்	2	495	449	16	4
மத்தியப் பிரதேம்	9	1,109	982	1,35	16
மகாராட்டிரம் ...	221	32,212	24,507	21,85	18,35
மைசூர் (கர்நாடகம்)	149	21,970	8,945	21,10	7,90
ஒரிசா	171	53,000	11,000	59,23	39,34
ராஜஸ்தான் ...	4	230	55	7,47	6,40
மேற்கு வாங்காளம்	474	78,366	34,140	36,81	21,97
மொத்தம் 1970–71	1,316	2,75,307	1,59,028	1,66,46	1,03,41
செயலற்றிருந்தவை					
ஆந்திரப்பிரதேசம்	2,622	1,82,000	97,000	38,84	38,39
மத்நியப் பிரதேசம்	20	2,775	—	2,73	2,53
மகாராட்டிரம்	165	15,049	7,013	5,65	5,75
மைசூர் (கர்நாடகம்)	702	41,012	417	8,39	8,34
ஒரிசா ...	130	23,000	—	18,50	18,50
மேற்கு வங்காளம்	102	7,564	1,517	3,16	3,13
மொத்தம் 1970–71	3,741	2,71,400	1,05,947	77,27	76,54

7. மத்திய கூட்டுறவு வங்கிகள்

கூட்டுறவுக் கடன் அமைப்பில் அச்சாணி போன்று திகழ்வது மத்திய கூட்டுறவு வங்கிகள் (Central Co-operative Banks) என்று கூறினால் அது மிகையாகாது. இவ் வங்கிகள் பிரதம சங்கங்களையும் உச்சி வங்கியினையும் பிணைக்கும் சங்கிலியாகச் செயல் படுகின்றன. கூட்டுறவுக் கடன் துறையின் வலிமை இவ் வங்கிகளின் வலிமையைப் பொருத்தே அமைகிறது. கிராமத்தில் வேரூன்றி வளர்ந்து விவசாயிகளால் நிருவகிக்கப்படும் விவசாயக் கடன் சங்கங்களை, நகரத்தில் அமைக்கப்பட்டு நகர்ப்புற மக்களால் நடத்தப்பெறும் மாநிலக் கூட்டுறவு வங்கியுடன் இணைத்துப் பணச்சந்தையுடன் தொடர்பொன்றை ஏற்படுத்த வகை செய்பவை மத்திய கூட்டுறவு வங்கிகளே.

1904ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் இயற்றப்பட்ட போது மத்திய சங்கங்கள் அல்லது மத்திய வங்கிகள் அமைக்கப்பெறுவதற்குச் சட்டம் வகை செய்யவில்லை. இதற்குக் காரணம் கூட்டுறவு இயக்கத்தைத் துவக்கியோர் கிராமக் கடன் சங்கங்கள் கணிசமான அளவு வைப்புகளைத் திரட்டி, அத் தொகையைக் கொண்டு தேவையுள்ள விவசாயிகளுக்குக் கடன் வழங்கலாம் என்று நம்பினர். வேண்டிய அளவு நிதி திரட்ட முடியாவிடில் அரசினரிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளலாமென்றும் கருதினர். இவர்கள் எதிர்பார்த்தபடி ஏதும் நடக்கவில்லை. கிராமச் சங்கங்கள் வசதியுள்ள விவசாயிகளிடமிருந்து வைப்புகளை ஈர்க்க இயலவில்லை. சங்கங்களின் நிருவாகம் திறமை குறைந்தநிலையொருபுறம், அங்கொன்று இங்கொன்று எனத் தனித்தனியே சங்கங்கள் இயங்கியது மற்றொருபுறம். தமது உறுப்பினர்களிடையே சிக்கனம், தன்னுதவி முதலியவற்றைப் பரப்பிச் சங்கத்தின் முதல் நிலையை வலுப்படுத்தவும் முடியவில்லை. ஆனால், பெருகிவந்த தேவைகளை நிறைவு செய்யுமளவுக்குப் பண

வசதி சங்கங்களிடத்தில்லை. இந்தச் சூழ்நிலையில் 1912ஆம் ஆண்டு மத்திய சங்கங்களை அமைக்க வகை செய்யுமுகத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் திருத்தப்பட்டது.

பிரதம சங்கங்களின் கூட்டிணைப்பாக வங்கிய ஒன்றியங்கள் (Banking Unions) 1912 சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டன. வங்கிய ஒன்றியங்களில் தனிநபர்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. வங்கிய ஒன்றியங்கள் செயல்முறையில் மத்திய வங்கிகளாகத் திகழ்ந்தன. நாட்டின் பல பகுதிகளில் 1906 முதல் 1918 வரை மத்திய வங்கிகள் முதன் முதலாக நிறுவப்படலாயின. 1919-20இல் 233 மத்திய வங்கிகள் ரூ.6·43 கோடி நடைமுறை முதலுடன் செயல்பட்டு வந்தன. 1929-30இல் 588 மத்திய வங்கிகள் ரூ.30·90 கோடி நடைமுறை முதலுடன் இயங்கி வந்தன. 1936-37இல் 611 மத்திய கூட்டுறவு வங்கிகள் நாட்டில் செயல்பட்டு வந்தன. இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற 1945-46ஆம் ஆண்டில் 601 மத்திய வங்கிகள் ரூ.45·07 கோடி நடைமுறை முதலுடன் செயலாற்றிவந்தன. இவற்றின் சொந்த நிதிகள் (பங்குமுதல், காப்பு நிதி போன்றன) ரூ. 8·45 கோடியாகவும், வைப்புகள் ரூ. 36·62 கோடியாகவும் இருந்தன.

ஐந்தாண்டுத் திட்ட துவக்க காலத்தில் நாட்டில் மத்திய வங்கிகள் நிரம்ப அமைக்கப் பெற்றிருந்தும் அவற்றில் பெரும்பாலானவை நலிந்து வலிவற்றுப் போதிய நடவடிக்கைகளின்றி காணப்பட்டன. மத்திய வங்கிகளின் செயற்பரப்பு ஒரு சீராக இல்லை. சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டத்திற்கு ஒரு மத்திய வங்கியும் மற்றும் சில இடங்களில் ஒரு மாவட்டத்தில் பல மத்திய வங்கிகளும் இயங்கி வந்தன. கிராமக் கடன் விசாரணைக் குழு அன்று மத்திய வங்கிகள் இருந்த நிலையை மன நிறைவுதருவதாக இல்லை என்று குறிப்பிட்டது. அன்றைய பம்பாய், சென்னை மாநிலங்கள் நீங்கலாக பிற மாநிலங்களில் மத்திய வங்கிகளின் பங்குமுதல் மிகவும் குறைந்த அளவினதாகவே இருந்தது.

மத்திய நிதிய முகமை (Central financing agency) வலுவற்றிருப்பது கூட்டுறவுக் கடன் இயக்க வளர்ச்சிக்குக் குந்தகமாக அமையும் என்பதையுணர்ந்து அவற்றைச் சீரமைத்து வலுப்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு மாவட்டத்துக்கு ஒரு மத்திய வங்கி என்ற கொள்கை எல்லா மாநிலங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்தின் படி 1950-51இல் இருந்த 505 மத்திய வங்கிகள் படிப்படியாகச் சீரமைப்பு, இணைப்பு நடவடிக்கைகள் காரணமாகக் குறைந்து

1970-71இல் 341 வங்கிகளாகக் குறைந்து நின்றன. இந்த நிலையிலும் சில மாவட்டங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மத்திய வங்கிகள் இருந்து வருகின்றன. எடுத்துக்காட்டாகத் தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் இரண்டு மத்திய வங்கிகள் செயலாற்றி வருகின்றன. கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு இது போன்ற நிலையில் எந்த வங்கிக்கும் ஒரு கோடி ரூபாய்க்கு மிகுதி யாகக் கடன் நிலுவையிருக்குமானல் மாவட்டத்தில் ஒன்றுக்கு மேல் வங்கியிருந்தாலுங்கூட, அவ் வங்கிகள் தொடர்ந்து செய லாற்ற அனுமதிக்கப் படலாம் என்று பரிந்துரைத்துள்ளது. கீழ்க்காணும் அட்டவணை மத்திய கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சியை விளக்குகிறது.

அட்டவணை

மத்திய கூட்டுறவு வங்கிகள் ரூ. இலட்சத்தில்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
எண்ணிக்கை	390*	346	341	340	341
அலுவலகங்களின் எண்ணிக்கை	1,445	2,475	3,124	3,438	3,775
உறுப்பினர் கூட்டுறவு நிலையங்கள்	235,166	258,166	237,426	234,902	235,200
தனி நபர், பிறர்	152,530	103,990	102,839	76,603	75,292
செலுத்திய முதல்	38,92	76,32	1,15,24	1,27,92	1,41,13
இதில் அரசு வழங்கியது	10,31	19,27	29,88	33,19	37,50
காப்பு நிதிகள்	11,94	25,62	39,63	46,23	57,92
வைப்புத் தொகை	1,12,02	2,36,59	3,50,84	3,81,71	4,38,55
பிறவழிகளில் பெற்ற கடன்	1,41,17	2‘44,99	3,24,75	3,71,94	3,93,14
நடைமுறை முதல்	3,18,32	6,15,71	8,81,24	9,79,72	10,81,41
வழங்கிய கடன் மொத்தம்	2,90,10	5,44,96	8,23,08	8,54,97	8,66,39
குறுகிய காலம்	2,69,92	5,04,67	7,70,18	7,95,68	8,02,08
மத்திய காலம்	20,19	40,29	52,90	59,29	64,31
நிலுவை நின்றது (மொத்தம்)	2,20,03	4,37,72	6,41,04	7,39,79	8,13,40
குறுகிய காலம்	...	3,64,34	5,33,49	6,14,14	6,67,58
மத்திய காலம்	...	73,39	1,07,55	1,25,65	1,45,82
தவணை கடந்தது	27,43	87,05	1,72,97	2,15,28	3,74,19
தவணை கடந்தது நிலுவையில் %	12·5	19.9	26.9	29.1	33·7

* பத்துத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் உட்பட

மேற்கண்ட புள்ளி விவரங்கள்வழி 1960-61 முதல் மத்திய கூட்டுறவு வங்கிகளின் நடவடிக்கை எவ்வளவு துரிதமாக முன்னடைந்து வந்துள்ளது என அறியக்கூடும். செலுத்திய முதலும், காப்பு நிதிகளும் கணிசமாக உயர்ந்தன. வைப்புத் தொகையும் குறிக்கப்பட்ட பத்தாண்டுகளில் ஏறத்தாழ நான்கு மடங்கு பெருகிற்று. வழங்கிய கடனளவு மூன்று மடங்கு

உயர்ந்தது இவையெல்லாம் வளர்ச்சியின் சின்னங்களாக அமைந்த போதிலும் தவணை கடந்த தொகை பெருமளவுக்கு உயர்ந்து போனது குறைபாட்டினைச் சுட்டிக் காட்டுகிறது.

மத்திய வங்கியின் வகைகள்

அமைப்பினையொட்டி மத்திய வங்கிகளை மூன்று வகையாகப் பிரிப்பதுண்டு.

முதல்வகை தனிநபர்களை உறுப்பினர்களாகக் கொண்ட வங்கிகளாகும். இந்த வங்கிகள் சங்கங்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டாலும் அவற்றைத் தனிநபர் உறுப்பினர் போலவே கருதி நிருவாகக் குழுவில் அவற்றிற்கெனக் கூடுதல் பிரதி நிதித்துவத்தை வழங்கவில்லை. இவ்வகைச் சங்கங்கள் நகர்ப்புற வங்கிகளாக மாற்றியமைக்கப் பட்டுவிட்டன. எனவே இவ்வகை மத்திய வங்கி தற்போது காணப்படுவதில்லை.

இரண்டாம் வகை பிரதம சங்கங்களை மட்டும் உறுப்பினர் களாகக் கொண்ட மத்திய வங்கிகளாகும். இவற்றை வங்கிய ஒன்றியங்கள் என்றும் கூறி வந்தனர். இவ்வகைக் கூட்டுறவில் பங்குநர் (Shareholder), கடன் வழங்குபவர், கடன் வாங்குபவர் ஆகிய அனைவரும் பிரதம சங்கங்களே. எனவே இவற்றிடையே ஒருமித்த கருத்து நிலவ முழுவாய்ப்புண்டு. வேறுபாடுகளும் மாறுபாடுகளும் ஏற்படக் காரணமே கிடையாது. இவ்வகை வங்கி யிலுள்ள ஒரே குறை, இதை நிருவகிக்க உறுப்பினரிடையே திறமை வாய்ந்த நபர்களைக்‧காண்பது அரிது; மற்றும் நகர்ப்புற மக்களை இவ் வங்கிகள் ஈர்த்தலும் அரிது.

மூன்றாம்வகை மத்திய வங்கிகளில் தனிநபர்களும் சங்கங் களும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சங்கங்களுக்கென்று பங்குகளில் குறிப்பிட்ட ஒரு விகிதமும், இயக்குநர் அவையில் தனியாகப் பிரதிநிதித்துவமும் ஒதுக்கப்படும் சிறப்பினை இவ்வகை வங்கியில் காணலாம். நம் நாட்டிலுள்ள மத்திய வங்கிகளில் மிகப்பெரும்பான்மையானவை இவ்வகையைச் சேர்ந்தன.

மத்திய வங்கியின் செயல் எல்லை

வசதி, திறமையான செயற்பாடு ஆகிய இரு நோக்கங்களுக்கு உகந்தவாறு மத்திய வங்கி தனது செயல் எல்லையை நிருணயித்துக் கொள்ளலாம். தேவையான அளவு ஊழியர்களை நியமித்து, மேற் செலவுகளை ஏற்று, வளமான காப்பு நிதியை நிறுவ தேவைப் படும் அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வாய்ப்புள்ள வங்கியே திறமையாகச் செயலாற்ற முடியும். பொதுவாக

மாவட்டத்திற்கொரு மத்திய வங்கி என்ற நிலை விரும்பத்தக்கது. தக்க காரணமிருந்தால், மாவட்டத்திற்கும் குறைவான பரப்பு உள்ள இடத்திற்குக் கூட மத்திய வங்கியொன்று இருக்கலாம். கிராமக் கடன் விசாரணைக் குழு மத்திய வங்கியொன்று குறைந்த அளவு செலுத்திய முதல், காப்பு ரூ. 3 இலட்சமும், நடைமுறை முதல் ரூ. 20 முதல் 25 இலட்சமும், கொண்டிருத்தல் வேண்டுமென விதித்தது. வளமார்ந்த மத்திய வங்கி தக்க அளவு இலாபம் ஈட்ட வேண்டும்; காப்பு நிதிக்கு நியாயமான தொகையை வழங்க வகை வேண்டும்; நியாயமான ஆதாயப் பங்கு (dividend) அளிக்கவேண்டும், மத்திய வங்கி வளம்பெற்று இருப்பதுடன் உரம்பெற்று இருப்பதும் மிகவும் இன்றியமையாதது.

மாவட்ட மட்டத்தில் மத்திய வங்கியில் செயல் எல்லை அமைய வேண்டும் என்று முடிவு செய்ததற்குப் பல காரணங்களுண்டு. பலப்பல ஆண்டுகளாக நிருவாகத் துறையில் மாவட்டம் ஓர் அடிப்படைப் பரப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது வளர்ச்சித் திட்டங்களுக்கும் மாவட்டம் ஓர் அடிப்படைப் பரப்பாகக் கருதப் படுகிறது. நகர்ப்புற வசதி குறைந்த நம் நாட்டில் வங்கிய வசதிகள் மாவட்டத் தலைமையிடங்களில் சிறப்பாக அமைந் துள்ளன. வைப்புத் தொகையினைப் பொதுமக்களிடமிருந்து ஈர்க்க மத்திய வங்கியால் எளிதில் முடியும். மாவட்டத்தில் அதன் தலைமை அலுவலகம் இருப்பதால் மக்களும், அம் மாவட்டத்தி லுள்ள கூட்டுறவுகளும் வங்கியின்மீது சிறப்பீடுபாடு கொள்ள வாய்ப்புண்டு. மற்றும், மாவட்ட முழுதும் ஒரே வகை விவசாய-பொருளாதார நிலையிருப்பது அரிது. ஒரு பகுதியில் நல்ல வளமான நிலையும் பிறிதொரு பகுதியில் பின் தங்கிய நிலையும் இருப்பினும், மொத்தத்தில் வங்கியின் நடவடிக்கைகளுக்கு ஊறு ஏற்படாதிருக்க மாவட்ட மட்ட அமைப்பு விரும்பத் தக்கதா யிருக்கிறது.

உறுப்பினர் நிலை

மத்திய வங்கிகளில் பிரதம சங்கங்களும் தனிநபர்களும் உறுப்பினர்களாக இருக்கின்றனர் என்று முன்னர்க் கண்டோம். பல காலமாகத் தனிநபர் உறுப்பினர்கள் மத்திய வங்கிகளில் இடம் பெற வேண்டுமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டு வருகிறது. மத்திய வங்கிகள் துவங்கிய காலத்தில் செல்வாக்குள்ள சில தனி நபர்களைச் சேர்த்து உறுப்பினராக்கி வங்கியின் நடப்பில் சிறப்பாக ஈடுபாடு கொள்ளச் செய்தது அவசியமாக இருந்திருக்கலாம். இன்றைய நிலையில் பிரதம சங்கங்கள் மட்டுமே மத்திய வங்கியில் உறுப்பினராயிருப்பது பொருந்தும் என்ற கருத்துப் பரவலாக இருந்து வருகிறது. எனவே பல மாநிலங்களில் தனிநபர்களை

மத்திய வங்கியில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுவதில்லை. படிப்படியாகத் தனிநபர் உறுப்பினர்களை நீக்கி விடுவது விரும்பத் தக்கது என்று சில குழுக்களும் பரிந்துரைத்துள்ளன. 1960-61இல் மத்திய வங்கிகளில் 1,52,530 தனிநபர்கள் உறுப்பினராயிருந்தனர்; ஆனால், 1970-71இல் இவ்வெண்ணிக்கை 75,292 ஆகக் குறைந்து போனது குறிப்பிடத்தக்கது. இதே காலத்தில் உறுப்பினராயிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணிக்கை 2,35,166 இலிருந்து 2,35,200 ஆக மட்டுமே உயர்ந்தது. அதாவது உறுப்பினர் சங்கங்களின் எண்ணிக்கை ஒரே நிலையிலிருந்தது.

கிளைகள் திறப்பு

மாவட்ட அளவில் செயல்படும் மத்திய வங்கிகளுக்கும் கிராம அளவில் செயல்படும் கடன் சங்கங்களுக்குமிடையே மத்திய வங்கியின் கிளைகள் இருந்தால் மேற்கண்ட இரு கூட்டுறவு நிலையங்களையும் நன்கு பிணைக்க அவை உதவும் எனக் கிராமக் கடன் விசாரணைக் குழு கருதியது. மேலும் கிராமக் கடன் சங்கங்களின் நடவடிக்கைகளும் விரைவாகப் பெருகி வந்தன. கடன் விண்ணப்பங்களை விரைவாகச் சரிபார்த்துக் கடன்களைக் குறித்த காலத்தில் வழங்க கிளைகள் உதவுமென்று கருதப்பட்டது. மற்றும் கிராமப்புறங்களில் வைப்புகளைத் திரட்டவும் கிராம மக்களுக்கு வங்கிய வசதிகளை அளிக்கவும் இக் கிளைகள் உதவும். பிரதம சங்க அலுவலர்கள் சங்கத்தைப் பற்றிய பணம் எடுத்தல்—கட்டுதல் நடவடிக்கைகளுக்கு மாவட்டத் தலைநகருக்குச் செல்ல வேண்டுவதில்லை. தமக்கு மிக அருகிலுள்ள மத்திய வங்கியின் கிளைக்குச் சென்றால் போதும். இவற்றையெல்லாம் கருதி மத்திய வங்கிகள் தமது செயல் எல்லையில் கிளைகளைத் திறக்க ஊக்குவிக்கப் பட வேண்டுமென முடிவு செய்தனர். இதன் பயனாக 1950-51இல் 759 கிளைகள் மட்டுமே இருந்த நிலை மாறி 1970-71இல் மத்திய வங்கிகளின் அலுவலகங்கள் 3,775 இடங்களில் திறக்கப்பட்டிருந்தன. இதை ஒரு சிறந்த சாதனையென்றே கூறவேண்டும். ஆனால், இந்தக் கிளைகள் நிறைய வைப்புகளை ஈர்த்தனவா; இலாபகரமாகச் செயல்படுமளவுக்கு நடவடிக்கைகள் கொண்டுள்ளனவா; ஆற்றலும் திறமையுமிக்க அலுவலர்களைக் கொண்டு இயங்குகின்றனவா; வாணிக வங்கிகள் போன்று வாடிக்கையாருக்குப் பணிபுரிகின்றனவா என்றெல்லாம் ஆராய்ந்தால், இன்னும் பல வகைகளில் கிளைகள் பணியின் தரத்தையும் பரப்பையும் செம்மையாக்க நிறைய வாய்ப்பு இருப்பது புலனாகிறது.

பணிகள்

மத்திய வங்கிகளின் முக்கிய பணிகள் யாவை எனக் காண்போம்.

தனது உறுப்பினர் சங்கங்களுக்குக் குறைவான வட்டியின் பேரில் கடனளிப்பது மத்திய வங்கியின் நோக்கங்களில் முக்கியமானதாகும். சங்கங்களிடம் பணம் மிகுந்திருக்கும்போது அதைத் தன்வசம் திரட்டி வைத்திருத்தல்; சங்கங்களுக்குப் பணம் தேவைப்படும்போது நிதிவசதியளித்தல் ஆகிய இரு பணிகளையும் மேற்கொண்டு ஒரு சமநிலைப்படுத்தும் அமைப்பாக மத்திய வங்கி பணியாற்றுகிறது. உறுப்பினர்களிடமிருந்தும் உறுப்பினரல்லாதாரிடமிருந்தும் வைப்புகளை ஏற்றுக்கொள்ளுகின்றன. தமது ஆட்சி எல்லையில் வங்கிய வசதிகளை விரிவுபடுத்திக் கிராமப்புறங்களில் வங்கியப் பழக்கத்தை வளர்க்க ஏற்பாடுகளைச் செய்கின்றன. மத்திய வங்கிகள் உறுப்பினர் சங்கங்களின் செயற்பாட்டைக் கண்காணித்து, மேற்பார்வை செய்து அவற்றிற்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றன.

நடைமுறை முதலைப் பெறும் வழிகள்

மத்திய வங்கிகள் தமது செயற்பாட்டிற்குத் தேவைப்படும் நடைமுறை முதலைக் கீழ்க்காணும் வழிகளில் பெறுகின்றன :

(i) பங்கு முதல்
(ii) காப்பு நிதி, பிற நிதிகள்
(iii) வைப்புகள் (Deposits)
(iv) கடன்கள் வாங்குதல்
(v) அரசினரிடம் உதவித் தொகை பெறுதல்

பங்கு முதல்

பிரதம சங்கங்களும் தனிநபர்களும் மத்திய வங்கியில் பங்கு முதல் எடுத்துக்கொள்ளுகின்றனர். பங்குகளின் மதிப்பு ரூ. 10 முதல் ரூ. 100வரை இருப்பதுண்டு. உறுப்பினர் பொறுப்பு வரையறுத்ததாகக் காணப்படுகிறது. வைப்பாளர்களுக்கும், கடனாளர்களுக்கும் நம்பிக்கையூட்டி அவர்களது பணத்திற்குப் பொறுப்புறுதி (guarantee) அளிக்கவும், வைப்புகளைத் தம்பால் ஈர்க்கவும் மத்திய வங்கிகள் கணிசமான அளவு தொகையைச் செலுத்திய முதலாகக் கொண்டிருப்பது அவசியமாகிறது. பங்கு முதல் நிலையை மேலும் வலுப்படுத்த கிராமக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரையினையொட்டி அரசினர் பங்கு முதல் வழங்குவதும் இன்று காணக்கிடக்கும் நிலையாகும். பிரதம சங்கங்கள் மத்திய வங்கியிடமிருந்து வாங்கும் கடன் தொகையில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தைப் பங்கு முதலாக வழங்குகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கது.

1950-51இல் ரூ. 4 கோடி மட்டுமே மத்திய வங்கிகளின் செலுத்திய முதலாக இருந்தது 1960-61இல் ரூ. 38 கோடியாக

வளர்ந்து 1970-71இல் ரூ. 141 கோடியாக உயர்ந்து நின்றது. வங்கியொன்றுக்குச் சராசரி முதல் 1950-51இல் ரூ. 0·80 இலட்சமாக இருந்தது 1970-71இல் ரூ. 41·4 இலட்ச மாக வளர்ந்தது. பங்கு முதல் நடைமுறை முதலின் 7% ஆக இருந்தது இக்கால இடைவெளியில் 13% ஆக உயர்ந்தது. பங்கு முதலில் அரசினர் வழங்கியது 1960-61இல் ரூ. 10 கோடியாக இருந்தது 1970-71இல் ரூ. 37·50 கோடியாக வளர்ந்தது. சில மாநில அரசுகள் கணிசமான தொகையினைப் பங்கு முதலுக்கு வழங்கியிருந்தன. மகாராட்டிரம் ரூ. 6·69 கோடி, பஞ்சாப் ரூ. 5.39 கோடி, மத்தியப் பிரதேசம் ரூ. 5·13 கோடி என்றவாறு பங்குமுதல் மத்திய வங்கிகளுக்கு அளித்திருந்தன. 1970-71 ஆண்டில் இயங்கி வந்த 341 மத்திய வங்கிகளின் மொத்தப் பங்கு முதலும் அதில் அரசு அளித்திருந்த பங்கு முதல் தொகையும் மாநில வாரியாக அமைந்திருந்த வண்ணத்தைக் காண்போம்.

அட்டவணை

மத்திய கூட்டுறவு வங்கிகள்—ஜூன் 1971 இறுதியில்

அலுவலகங்கள், மொத்த முதல், அரசினர் வழங்கிய முதல் மாநில வாரியாக

ரூ. கோடியில்

மாநிலம்	மத்திய வங்கிகள் எண்ணிக்கை (1)	அலுவலகங்கள் எண்ணிக்கை தலைமையலுவலகம் உட்பட (2)	மொத்த முதல் (3)	அரசினர் வழங்கிய முதல் (4)	கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய முதல் (5)
ஆந்திரப் பிரதேசம்	25	134	9·08	2·51	6·51
அஸ்ஸாம்	7	36	1·17	0·14	1·02
பீகார்	28	132	4·37	1·78	2·58
குஜராத்	18	413	15·40	1·93	13·31
ஹரியானா	9	78	4·01	1·25	2·75
இமாசலப் பிரதேசம்	2	27	0·20	0·05	0·14
ஜம்மு & காஷ்மீர்	3	30	0·37	0·17	0·19
கேரளம்	10	81	5·00	1·15	3·85
மத்தியப் பிரதேசம்	43	588	13·47	5·13	8·18
மகாராட்டிரம்	25	893	25·15	6·69	18.23
மைசூர்	19	315	10·49	3·56	6.86
ஒரிசா	17	92	3·27	0·84	2·43
பஞ்சாப்	17	183	12·75	5·39	7·33
இராஜஸ்தான்	25	143	5·37	1·37	4·00
தமிழ்நாடு	16	242	11·87	2.26	9·55
உத்தரப்பிரதேசம்	56	306	16·45	2·79	13·57
மேற்கு வங்காளம்	21	82	2·70	0·49	2·19

அஸ்ஸாம், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அரசினர் வழங்கிய முதல் குறைந்த அளவினதாக இருந்ததை அட்டவணை புலப்படுத்துகிறது.

காப்பு நிதிகள்

கூட்டுறவு மத்திய வங்கிகள் மூன்று வகையான காப்பு நிதிகளைக் கொண்டிருக்கும். ஒன்று சட்டமுறை காப்பு நிதி (Statutory Reserve Fund) எனப்படும். தமது இலாபத்திலிருந்து குறிப்பிட்ட விகிதப்படியான தொகையை மத்திய வங்கிகள் காப்பு நிதிக்கு எடுத்துச் செல்லவேண்டுமெனக் கூட்டுறவு சட்டங் களும் விதிகளும் விதிக்கின்றன. இத் தொகையே சட்டமுறை காப்பு நிதியாகும்.

இரண்டாவது வகை வரா, ஐயக்கடன் காப்பு (Bad and Doubtful Debts Reserve)நிதி என்று கூறப்படுகிறது. இந்தக் காப்பு நிதியிலிருந்து வராக் கடனை எடுத்துவிடுவது வழக்கம். அதாவது வராக் கடன் என்று கருதப்பட்ட தொகையை இந்த நிதியிலிருந்து சரிக்கட்டி விடுவர்.

மூன்றாவது வகை பிற இனங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட காப்பு நிதிகளாகும். எடுத்துக்காட்டாக முதலீட்டுத் தேய்மான நிதி, கட்டட நிதி, இலாப ஈவு சமன்படுத்து நிதி (Dividend Equalisation Fund)கடன் மீட்பு நிதி (Sinking Fund) போன்றன.

விவசாயக் கடன் நிலைபேறுக்க நிதி
(Agricultural Credit Stabilization Fund)

பஞ்சம், மழையின்மை போன்ற காரணங்களால் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றித்தர பல நிலைகளிலுள்ள கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விவசாயக் கடன் நிலைபேறுக்க நிதியொன்று நிறுவப்பட வேண்டுமென்று கிராமக் கடன் விசாரணைக் குழு பரிந்துரைத்தது. நாட்டளவில் இந் நிதியை ரிசர்வு வங்கி நிறுவியது. மத்திய வங்கிகள், உச்சி வங்கிகள் அளவில் இது நிறுவப்பெற கிராம, கூட்டுறவுக் கடன் மீதான ஆலோசனைக் குழு சில யோசனைகளைத் தந்தது. மத்திய வங்கி களும் உச்சி வங்கிகளும் தமது இலாபத்தில் 15%த்தை நிலைபேறுக்க நிதிக்கு ஒதுக்கவேண்டும். கூட்டுறவுக் கடன் நிலையங்களில் அரசு வழங்கியுள்ள பங்குமுதல் மீது கிடைக்கும் இலாப ஈவில் மூன்று சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொகையை மாநில அரசுகள் அந் நிலையங்களின் நிலைபேறுக்க நிதிக்கு அளித்து விடவேண்டும். மாநிலங்களிலுள்ள மத்திய வங்கிகள் அளித்துள்ள விவசாயக் கடன் நிலுவைத் தொகையில் 5 முதல் 10 சதவிகிதம் வரை

மொத்தத் தொகையாக உச்சி வங்கிக்கு அரசு வழங்க வேண்டும். இத் தொகையில் பாதி மானியமாகவும் பாதி வட்டியில்லாக் கடனாகவும் தரப்படவேண்டும்.

1970-71இல் மத்திய வங்கிகளின் சட்டமுறை காப்புநிதி ரூ. 20·67 கோடியாகவும், வராக் கடன் காப்பு ரூ. 14·50 கோடியாகவும், பிற காப்பு நிதிகள் ரூ. 15·84 கோடியாகவும் இருந்தது.

சொந்த நிதி (Owned Funds)

மத்திய வங்கியின் கடன் வாங்குந்திறன் (borrowing power) அதன் சொந்த நிதியின் அளவைப் பொருத்திருக்கிறது. பெரும்பாலும், வங்கியின் பங்கு முதலும், காப்பு நிதிகளும் சேர்ந்து சொந்த நிதிகள் எனக் கருதப்படுகின்றன. சொந்த நிதிகளைப் போன்று பத்துமுதல் பதினைந்து மடங்கு தொகைவரை மத்திய வங்கி கடன் வாங்கலாம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. இந்த விகிதத்தை நிருணயிப்பதற்குத் திட்டவட்டமான சட்டம் ஏதும் இல்லாத போதிலும் நடைமுறையில் மேற்கண்ட முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 1971 ஜூன் இறுதியில் மத்திய வங்கிகளின் சொந்த நிதிகள் ரூ. 199·05 கோடியாக இருந்தது. இவ் வங்கிகளின் நடைமுறை முதல் ரூ. 1,081·41 கோடியாக இருந்தது. நடைமுறை முதலில் சொந்த நிதிகள் 18·4%ஆக இருந்தது. வங்கியொன்றின் வலிமை அதன் சொந்த நிதியைப் பொருத்து அமைவதால், இதனை வலுப்படுத்திக்கொள்ளுவதன் இன்றியமையாமையைக் கூறவும் வேண்டுமோ?

வைப்புகள் (Deposits)

தமது சொந்த நிதிகள் தவிர வேறு பல வழிகளிலிருந்தும் மத்திய வங்கிகள் தமக்குத் தேவையான நடைமுறை முதலைப் பெறுகின்றன. அவற்றுள் வைப்புகள் முக்கிய இடம் பெறுகின்றன. மத்திய வங்கிகள் நகர்ப்புறங்களிலிருந்து சேமிப்புக்களைத் திரட்டி அவற்றை விவசாய வளர்ச்சிக்குக் கிராமப்புறங்களில் கடனாக வழங்கும் நிலையிலுள்ளன. முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்க காலத்தில், அதாவது 1950-51இல் வைப்புகள் ரூ. 38 கோடியாக இருந்தது 1955-56இல் ரூ. 50 கோடியாக உயர்ந்து, 1960-61இல் ரூ. 112 கோடியாக வளர்ந்து, 1970-71இல் ரூ. 439 கோடியாக மேலோங்கி நின்றது. 1970-71இல் இருந்த நிலைப்படி வைப்புகள் நடைமுறை முதலில் 41%ஆக அமைந்தது குறிப்பிடத்தக்கது. மத்திய வங்கியொன்றுக்குச் சராசரி வைப்புத்தொகை ரூ. 1·29 கோடியாக 1970-71இல் விளங்கியது. 1960-61இல் இத் தொகை ரூ. 28·72 இலட்சமாக மட்டும் இருந்தது. வைப்புகளின் வளர்ச்சியை எடுத்துரைக்

கின்றது. இருப்பினும் பெரும்பான்மையான மத்திய வங்கிகள் ரூ. 1 கோடிக்கும் குறைவான வைப்புக்களே கொண்டிருந்தன. 1960 முதல் 1971வரை மத்திய வங்கிகளின் வைப்புகள் வளர்ந்த வகையினைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

அட்டவணை

வைப்புத்தொகை அடிப்படையில் மத்திய வங்கிகளின் பாகுபாடு

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
ரூ. 50 இலட்சத்துக்குக் குறைவாக	327	216	189	168	154
ரூ. 50 இலட்சம் முதல் ரூ. 1 கோடி வரை	28	64	57	63	71
ரூ. 1 கோடி முதல் ரூ. 2 கோடி வரை	18	37	47	55	54
ரூ. 2 கோடி முதல் ரூ. 3 கோடி வரை	4	15	23	25	24
ரூ. 3 கோடி முதல் ரூ. 4 கோடி வரை	2	5	7	11	16
ரூ. 4 கோடி முதல் ரூ. 5 கோடி வரை	1	4	5	3	6
ரூ. 5 கோடிக்கு மேலாக	—	5	13	15	16
மொத்தம்	380	346	341	340	341

1970-71இல் மத்திய வங்கிகள் திரட்டியிருந்த வைப்புத் தொகை ரூ. 439 கோடியில் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 174 கோடியும், தன்னாட்சி ஆணையங்கள் (Local authorities) ரூ. 55 கோடியும் போக, தனி நபர்களின் வைப்பு ரூ. 210 கோடியளவாக மட்டுமே இருந்தது. இதே நேரத்தில் வாணிக வங்கிகள் பெற்றிருந்த வைப்புத்தொகை ரூ. 6,200 கோடியாக இருந்தது என்பதைக் கண்ணுறும்போது மத்திய வங்கிகள் கணிசமான அளவு வைப்புகளைத் திரட்ட இயலாதிருந்தன என்பது புலனாகிறது.

கூட்டுறவு மத்திய வங்கிகள் பெருமளவுக்கு வைப்புத் திரட்ட முடியாமைக்குப் பல காரணங்கள் உண்டு. பெரும்பாலான மாநிலங்களில் வைப்புக் காப்பிட்டு கூட்டுரு (Deposit Insurance Corporati-on) அளிக்கும் காப்பீடு, கூட்டுறவு வங்கிகளுக்குக் கிட்டவில்லை. இந்த வசதி கூட்டுறவு வங்கிகளுக்குக் கிடைக்க மாநில அரசுகள் தத்தம் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மத்திய நிலவரை (UnionTerritory) யான கோவா, டாமன், டையூ ஆகிய பரப்பில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மட்டுமே தேவையான சட்டத் திருத்தங்களைச் செய்து ஜூலை 1971 முதல் வைப்புக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்

இடம் பெற்றுள்ளன. மற்றும் வாடிக்கையருக்குப் பணி, திறமை மிக்க ஊழியர், தரமான நிருவாகம் முதலிய செய்திகளில் வாணிக வங்கிகள் கூட்டுறவு வங்கிகளைவிட ஒருபடி மேலோங்கி நின்ற காரணத்தால் மக்களின் நன்னம்பிக்கையைப் பெற்று அவை வைப்புகளை ஈர்த்த அளவுக்குக் கூட்டுறவு வங்கிகள் ஈர்க்க முடியவில்லை. வருங்காலத்தில் கூட்டுறவு வங்கிகளும் திறம்படச் செயலாற்றி, வாடிக்கையர்களுக்குத் தேவையான பல்வகைப் பணிகளை மேற்கொண்டு மக்களிடையே நன்மதிப்புப் பெற்று மேலும் மேலும் வைப்புகளை ஈர்ப்பது மிகவும் இன்றியமையாதது.

பொதுவாக வங்கிகள் ஏற்றுக்கொள்ளும் நடப்பு வைப்பு, தவணை வைப்பு, பருவகால (Seasonal) வைப்பு, சேமிப்பு வைப்பு, தொடர் (Recurring) வைப்புப் போன்ற வைப்புகளை மத்திய வங்கிகள் ஏற்றுக் கொள்ளுகின்றன, இவ் வைப்புகளில் பெரும்பாலும் நடப்பு வைப்புக் குறைந்த அளவினதாகவே இருக்கின்றது. சேமிப்பு வைப்பும், தவணை வைப்பும் பெருமளவினதாகக் காணப்படுகிறது. நடுத்தர வாழ்க்கை நிலையிலிருப்பவர்களும், தவணை வைப்பின்மீது தரப்படும் வட்டித் தொகையை வருவாயாகக் கொண்டிருக்கும் நபர்களும் மத்திய வங்கிகளில் தமது சேமிப்பைப் போட்டு வைப்பதே இந்த நிலைக்குக் காரணமாகும். கீழ்க்காணும் அட்டவணை பல்வகை வைப்புகளில் எவ்வளவு தொகையினை மத்திய வங்கிகள் திரட்டியிருந்தனவென்று காட்டுகிறது.

அட்டவணை

மத்திய கூட்டுறவு வங்கிகள் பெற்றிருந்த வைப்புகள் ரூ. இலட்சத்தில்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(2)	(4)	(5)
வைப்புகள் (மொத்தம்)	1,12,02	2,36,59	3,50,84	3,81,71	4,38,55
கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து	45,30	1,05,08	1,47,50	1,53,39	1,73,64
தனிநபர், பிறரிடமிருந்து	66,71	1,31,51	2,03,34	2,28,32	2,64,91
கணக்கு வகை :					
நடப்பு வைப்பு	31,88	62,63	84.31	81,82	94,60
சேமிப்பு வைப்பு	32,00	77,17	1,18,16	1,31,03	1,47,99
தவணை வைப்பு	37,38	75,31	1,21,90	1.33,11	1,56,33
காப்பு நிதி	...	11,12	13,86	18,39	20,73
பிற வகை	10,75	10,36	12,59	17,36	18,90

அட்டவணையில் காணும் விவரப்படி 1970-71இல் இருந்த வைப்புகளில் 40% கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்ற

தொகையாகும். மீதமுள்ள 60% தொகை தனிநபர்களிடமிருந்தும் பிறரிடமிருந்தும் பெற்றதாகும். இத் தொகையே மத்திய வங்கிகள் தம் முயற்சியால் திரட்டிய தொகை எனலாம். சேமிப்பு, தவணை வைப்புகளில் 1970-71இல் இருந்த தொகை ரூ. 304 கோடிக்கும் மிகுதியாக இருந்தது. அதே நேரத்தில் நடப்புக் கணக்கிலிருந்த தொகை ரூ. 95 கோடியளவில் இருந்தது. மத்திய வங்கிகளைப் பொருத்தவரையில் இது நன்மை பயப்பதேயாகும். நடப்புக் கணக்கில் தொகை மிகுதியாக இருந்தால் நடவடிக்கைகள் மிகுதியாக இருக்கும். நல்ல பயிற்சிபெற்ற திறமான ஊழியர்களைக்கொண்டு மட்டுமே நடப்புக் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். சேமிப்பு, தவணை வைப்புக் கணக்குகளில் பண எடுப்புச் சிறு அளவினதாகவே இருக்கும். தவணை வைப்பில் பணம் செலுத்தப்பட வேண்டிய காலமும் உறுதியாகத் தெரியும். எனவே, இந்தக் கணக்குகளில் நடவடிக்கை மேற்கொள்ளுவது எளிது. தவணை முடியும்வரை வங்கியர் வைப்புத் தொகையை விருப்பப்படி தேவையையொட்டிப் பயன்படுத்தலாம்.

கடன் வாங்குதல்

உச்சி வங்கி (Apex Bank) எனப்படும் மாநிலக் கூட்டுறவு வங்கி, அரசினர், ரிசர்வு வங்கி, வாணிக வங்கிகள் முதலானவற்றிடமிருந்து மத்திய கூட்டுறவு வங்கிகள் கடன் பெறுவதுண்டு. இதுவரை நாம் கண்ட நிதிகள் மத்திய வங்கிகளின் நடவடிக்கைகளுக்கு வேண்டிய நடைமுறை முதலில் பெரும்பான்மை பகுதியை அளிக்கின்றன வெனினும், வெளியாரிடமிருந்து கடன் பெற்றே தமது மொத்தத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டிய நிலையில் இவ் வங்கிகள் இருந்து வருகின்றன. 1970-71இல் நடைமுறை முதலில் 36·37% தொகை இங்ஙனம் வெளியிலிருந்து கடனாகப் பெறப்பட்டது. இந்தநிலை மாறி நாளடைவில் மத்திய வங்கிகள் தமது சொந்த நிதியினையே நம்பியிருக்கும் நிலை உருவாவது விரும்பத்தக்கது எனினும், தற்போது காணப்படும் போக்கு அதற்கு வழி வகுப்பதாக இல்லை. மத்திய வங்கிகள் வெளியிலிருந்து கடன் வாங்க வேண்டிய அவசியம் தொடர்ந்து இருந்து வருகிறது.

மத்திய வங்கிகள் வாங்கும் கடனில் மிகப்பெரும் பகுதி உச்சி வங்கியிடமிருந்து பெறப்படுகிறது. 1970-71இல் மத்திய வங்கிகள் வெளியில் வாங்கிய கடனில் 90% உச்சி வங்கியிடம் பெறப்பட்டது. குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன் என்ற வகைக் கடன்களைப் பல வட்டி விகிதங்களுக்குப் பலவகைப் பிணையங்களின் பேரில் உச்சி வங்கியிடமிருந்து மத்திய வங்கிகள் பெறுகின்றன,

உச்சி வங்கியிடமிருந்து ரொக்கக் கடன் (Cash Credit) வசதிகளையும் மத்திய வங்கிகள் பெறுகின்றன. பிரதம சங்கங்கள், சந்தையிடுகைச் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள், உரங்கள் வழங்கல், நெசவாளர் சங்கங்களுக்கு நடைமுறை முதல் ஆகியவற்றிற்கு மத்திய வங்கிகள் கடனளிக்கின்றன. தமது சொந்த நிதியினைப் போன்று 10 முதல் 15 மடங்கு தொகைவரை கடன்வாங்க மத்திய வங்கிகள் அனுமதிக்கப்படுகின்றன. தமது கடன் விண்ணப்பங்களை உச்சி வங்கிக்கு நேரடியாக அனுப்புகின்றன. சில மாநிலங்களில் இவ் விண்ணப்பங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் வழி அனுப்பப்படுகின்றன. இதனால் ஏற்படக்கூடிய தாமதத்தினால் வங்கிகள் தொல்லைப்படாது இருக்க, சுழலும் ரொக்கக் கடன் (Revolving Cash Credit) வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. கடன் அனுமதிக்கப்படுவதை எதிர்நோக்கி மத்திய வங்கிகள் குறிப்பிட்ட ஒருதொகை வரை தேவைக்கேற்றவாறு பணம் எடுத்துக்கொள்ளலாம்.

அட்டவணை

மத்திய கூட்டுறவு வங்கிகள் வெளியில் வாங்கிய கடன் பாகுபாடு

(ரூ. இலட்சத்தில்)

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
வெளியில் வாங்கிய கடன் (மொத்தம்)	1,41,17	2,44,99	3,24,75	3,71,94	3,93,14
மாநிலக் கூட்டுறவு வங்கியிடம்	1,34,89	2,29,67	2,91,22	3,31,09	3,53,35
அரசினரிடம்	4,84	14,61	9,42	7,64	9,43
பிறரிடம்	1,43	71	24,11	33,21	30,36

மத்திய வங்கிகள் அரசினரிடமிருந்து பெற்ற கடன் மிகவும் குறைந்த அளவாகவே காணப்படுகிறது. 1970-71 இறுதியில் ரூ. 9·43 கோடி மட்டுமே அரசினரிடமிருந்து வாங்கிய கடனாக இருந்தது. அவ்வாண்டிலிருந்த நடைமுறை முதல் ரூ. 1,081·41 கோடியில் இத் தொகை ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருந்தது. தொழில்களுக்கு அரசாங்க உதவிச் சட்டத்தின்கீழ் தொழிற் கூட்டுறவுகளுக்கு அரசு அளிக்கும் கடன், மத்திய வங்கிகள் மூலம் அளிக்கப்படுகையில் இந்த இனத்தையொட்டிய நடவடிக்கை எழுகிறது.

உச்சி வங்கி நலிந்த நிலையிலுள்ள மாநிலங்களிலும், புதிதாக உச்சி வங்கி துவங்கப்பெற்ற மாநிலங்களிலும் மத்திய வங்கி

களுக்குத் தேவையான கடன் வசதிகளை ரிசர்வு வங்கியே உச்சி வங்கிவழி அளித்து வருகின்றது.

உச்சி வங்கி அனுமதித்துள்ள கடன் வரம்புகட்டு உட்பட்டு மத்திய கூட்டுறவு வங்கிகள், அரசாங்கப் பிணைகள், கடனீட்டுப் பத்திரங்கள் முதலியவற்றின் அடைமானத்தின் பேரில், ஸ்டேட் வங்கியிடம் (State Bank Of India) சலுகை வட்டி விகிதத்தில் கடன் பெறலாம். தம்மிடம் அடைமானமாக வைக்கப்பட்டுள்ள சரக்குகளை மத்திய வங்கிகள் ஸ்டேட் வங்கியிடம் மீண்டும் அடைமானம் வைத்துக் கடன் எழுப்பவும் ஏற்பாடுகளுண்டு. பிற வாணிக வங்கிகளிடமும் மத்திய வங்கிகள் மேல்வரைப்பற்று (Over draft) ரொக்கக் கடன் (Cash Credit) போன்ற கடன் வசதிகளை அவசர காலங்களில் பெறுவதுண்டு. ஆனல், இங்ஙனம் பெறும் கடன் நடைமுறை முதலில் மிகமிகச் சிறிய விகிதமாகவே இருந்து வருகிறது.

கடன் வழங்கல் நடவடிக்கைகள்

தமது உறுப்பினர் சங்கங்களுக்குக் கடனளித்து நிதியுதவி வழங்கல் மத்திய வங்கிகளின் முக்கிய பணியாகும். உறுப்பினர் சங்கங்களில் மிகப் பெரும்பான்மையாக இருப்பது விவசாயக் கடன் சங்கங்கள். ஆகவே, மத்திய வங்கிகள் வழங்கும் கடன்கள் விவசாயக் கடன்களாக இருப்பதில் வியப்பில்லை. இக் கடன்கள் குறுகியகாலக் கடன்கள் என்றும் மத்திய காலக் கடன்கள் என்றும் பிரிக்கப்படும். பயிர் விளைச்சல் பருவத்தையொட்டி வேளாண்மை நடவடிக்கைகளுக்குத் தரப்படும் கடன் குறுகிய காலக் கடனாகும். பயிரின் காலத்தை யொட்டி வழங்கப்படும் இக் கடன் 12 திங்களுக்கு மிகாது இருக்கும். நிலத்தைச் சீர்திருத்த, நீரேற்றுப் பொறிவாங்க, கிணறு தோண்ட அல்லது ஆழப்படுத்த, கால்நடை வாங்க மத்திய காலக் கடன்கள் மூன்றுண்டு அளவுக்கு மிகாது வழங்கப்படுகிறது.

கடன் வாங்க விரும்பும் சங்கம், குறிப்பிட்ட விண்ணப்பத்தில் ஆண்டுக் கடன் வரம்பு இவ்வளவு வேண்டுமெனக் குறிப்பிட்டு நிருவாகக் முழுவின் அல்லது பேரவையின் தீர்மானத்துடன் அதை மத்திய வங்கிக்கு அனுப்பவேண்டும். ஒவ்வோர் உறுப்பினருக்கும் உள்ள சொத்து விவரம், சங்கத்தின் தற்போதைய நிதிநிலை, முதல் முறையாக விண்ணப்பம் அனுப்பும் போது சங்கத்தின் சான்றுரைக்கப்பட்ட பதிவுச் சான்றிதழ், துணைவிதிகள் நகல்கள்,

பயிர்க் கடனாக இருப்பின் உறுப்பினர் ஒவ்வொருவரும் பயிரிடத் திட்டமிட்டுள்ள பயிர், நில விவரம் ஆகியனவும் மத்திய வங்கிக்கு அனுப்பப்படவேண்டும். சில மாநிலங்களில் இவ் விண்ணப்பம் மேற்பார்வைக் கழகம் (Supervising union) அல்லது அரசு அலுவலர் வழி அனுப்பப்படுவதுண்டு. சில மாநிலங்களில் 'A'வகுப்பு 'B' வகுப்புச் சங்கங்கள் தமது விண்ணப்பத்தை மத்திய வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பலாம். 'C' அல்லது 'D' வகுப்புச் சங்கங்கள் கூட்டுறவு இலாகா வழி தமது விண்ணப்பத்தை அனுப்பும்படி கோரப்படுவதுண்டு. விண்ணப்பங்கள் மத்திய வங்கியின் நிருவாகக் குழுவினர் முன் வைக்கப்பட்டு, அவர்களால் பரிசீலனை செய்யப்படுகிறது. பெரும்பாலும் எல்லா மத்திய வங்கிகளிலும் செயற்குழு அல்லது கடன்குழு என்ற நிருவாகக் குழுவினரால் நியமிக்கப்பட்ட குழுவினர் கடன் மனுக்களைப் பரிசீலித்து அனுமதியளிக்கின்றனர். கடன் அனுமதிக்கப்பட்டதும் சங்க நிருவாகக் குழுவினர் தக்க பத்திரங்களை எழுதித் தந்து மத்திய வங்கியிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளுவர். சங்கத்தின் மேற்பார்வையாளர் அல்லது வங்கி ஆய்வாளர் முன்னிலையில் கடன்கள் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். ஆண்டுக் கடன் அளவு அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் தம் தேவைக் கேற்றவாறு வேண்டும் நேரங்களில் மத்திய வங்கியிலிருந்து பணம் எடுத்துக் கொள்ளும்.

கடந்த சில ஆண்டுகளாக மத்திய வங்கிகளின் கடன் நடவடிக்கைகள் விரிவடைந்து வந்த வண்ணமிருக்கின்றன. 1950-51இல் ரூ. 82 கோடி மட்டுமே கடன் வழங்கியது 1960-61இல் ரூ. 290 கோடியாக வளர்ந்து 1970-71இல் ரூ. 866 கோடியாக மேலோங்கி நின்றது. வங்கியொன்று சராசரி வழங்கிய கடன் ரூ. 2·62 கோடியாக 1970-71இல் இருந்தது. 1970-71இல் நிலுவை (Outstanding) நின்ற கடன் ரூ. 813 கோடியாகவும் வங்கியொன்றுக்குச் சராசரி நிலுவை ரூ. 2·38 கோடியாகவும் இருந்தது. மத்திய வங்கியொன்று வளமுள்ளதாக விளங்க ஒரு கோடி ரூபாய் கடனாவது நிலுவை நிற்க வேண்டுமென ரிசர்வு வங்கி கருதியது. இந்த அளவுகோலின்படி 1970-71இல் 113 மத்திய வங்கிகள் வளமற்ற நிலையிலிருந்தன என்று கூறவேண்டும். கீழ்க்காணும் அட்டவணை வழி நிலுவை நின்ற கடன்கள் அளவின் அடிப்படையில் வங்கிகளின் எண்ணிக்கையினைக் கண்டு கொள்ளலாம்.

அட்டவணை

நிலுவை நின்ற கடன்கள் அடிப்படையில் மத்திய வங்கிகள் பாகுபாடு

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
ரூ. 50 இலட்சத்துக்குக் குறைவாக	244	111	56	45	38
ரூ. 50 இலட்சம் முதல் ரூ. 1 கோடிக்குள்ளாக	85	96	91	76	75
ரூ. 1 கோடி முதல் ரூ. 2 கோடிக்குள்ளாக	28	81	94	97	97
ரூ. 2 கோடி முதல் ரூ. 3 கோடிக்குள்ளாக	14	24	38	49	56
ரூ. 3 கோடி முதல் ரூ. 4 கோடிக்குள்ளாக	6	9	23	22	19
ரூ. 4 கோடி முதல் ரூ. 5 கோடிக்குள்ளாக	1	16	14	18	15
ரூ. 5 கோடிக்கு மிகுதியாக	2	9	25	33	41
மொத்தம்	380	346	341	340	341

மகாராட்டிரம், குஜராத், தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியானா, மைசூர் மாநிலங்கள் தவிர பிற மாநிலங்களில் கடன் வழங்கலில் மத்திய வங்கிகள் பெருமளவு முன்னேற்றம் காட்டவில்லை. எல்லா மாநிலங்களிலும் ஒரு சீரான முன்னேற்றம் காணப்படாததன் காரணங்களை ரிசர்வு வங்கி ஆராய்ந்தது. ஆரம்பநிலையிலுள்ள சங்கங்கள் பல செயலற்றுக் கிடத்தலாலும், கிராம மக்கள் தொகையில் அனைவரையும் சங்கங்கள் உள்ளடங்காத நிலையினாலும், சங்கங்களை வளமார்ந்தவையாக வலுப்படுத்தும் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்படாததாலும், மத்திய வங்கிகள் அளவில் தவணைகடந்த கடன்கள் உயர்ந்து நின்றதாலும், (1970-71இல் மொத்த நிலுவையில் 33·7% கடன்கள் மத்திய வங்கி மட்டத்தில் தவணை கடந்து நின்றன) கடன் வழங்குதற்குரிய விதிமுறைகள் பல செயல்முறையில் முட்டுக்கட்டைகளாகக் காணப்பட்டதாலும் பொதுவாகக் கடன் வழங்கலில் சீரான முன்னேற்றம் காணப்படவில்லை.

இனி, மத்திய வங்கிகள் என்ன நோக்கங்களுக்காகக் கடன்கள் வழங்கின என்று காண்போம்.

அட்டவணை

மத்திய வங்கிகள் கடன் வழங்கியது—நோக்கங்கள் அடிப்படையில் (ரூ. கோடியில்)

விவரம்	1970–71
குறுகிய காலம் (மொத்தம்)	830·10
1. பருவகாலப் பயிர்விளைச்சல் நடவடிக்கைகள்	487·30
2. விவசாயக் கருவிகள்	2·98
3. பயிர் சந்தையிடுகை (கொள்முதல் உட்பட)	84·79
4. விவசாய விளைபொருள் பக்குவப்படுத்தல்	38·22
5. பிற விவசாய நோக்கங்கள் (உள்ளீடுகள் வழங்கலுட்பட)	11·92
6. தொழில் நோக்கங்களுக்கு	19·68
7. நுகர்ச்சிக் கடன்	25·72
8. பிற நோக்கங்கள்	155·21
மத்திய காலம் (மொத்தம்)	64·31
9. கிணறு தோண்ட, பழுது பார்க்க	6·32
10. பொறிகள் வாங்க	10·07
11. கால்நடை வாங்க	7·34
12. நிலத்தைச் சிறிய அளவில் சீர்திருத்தம் செய்வது	1·93
13. பிற விவசாய நோக்கங்கள்	19·77
14. தொழில் நோக்கங்களுக்கு	0·82
15. பிற	18·02

பெரும்பான்மைக் கடன் தொகை விவசாய நோக்கங்களுக்கு அளிக்கப்பட்டது என்பது அட்டவணைவழி புலனாகிறது. மத்திய காலக் கடன் மொத்தக் கடனளிப்பில் 7·46%ஆக மட்டுமே இருந்தது அந்தவகைக் கடன் மிகுதியாக வழங்கப்படுவதில்லை யென்பதைச் சுட்டுகிறது. இதற்குக் காரணம் மத்திய காலக் கடனளவு உச்சி வங்கிகள் தரக்கூடிய கடனளவைப் பொறுத் திருப்பதே. உச்சி வங்கிகள் ஆண்டுத் துவக்கத்திலேயே இன்ன அளவுக்கு மத்தியகாலக் கடன்கள் வழங்கப்படும் என மத்திய வங்கிகளுக்கு அறிவித்துவிட்டால் அதையொட்டி மத்திய வங்கிகள் தமது மத்திய காலக் கடன் வழங்குத் திட்டத்தைச் செயல்படுத்த லாம். ஆனால் நடைமுறையில், ரிசர்வு வங்கி உச்சி வங்கிகளின் மத்தியகாலக் கடன் அளவை நிருணயிக்கு முன்னர் உச்சி வங்கிகள் தாம் மத்திய வங்கிகளுக்குக் கடன் வரம்பைத் தெரிவிப்பதில்லை.

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஆண்டுத் துவக்கத்திலேயே ரிசர்வு வங்கியை அணுகி மத்தியகாலக் கடன்வரம்பை நிருணயித்துக் கொள்வதில்லை. சில மாநில அரசினர் ரிசர்வு வங்கிக்குப் பொறுப் புறுதி எழுதித் தருவதிலும் காலதாமதம் ஏற்படுவதுண்டு. மற்றும் குறிப்பிட்ட அடிப்படை அளவு (basic level) வரை வங்கிகள் தாமே நிதிகளைத் திரட்ட வேண்டுமென்றும், அந்த அளவுக்கு மேலாகத் தரப்படும் கடன்களில் 20% தமது சொந்த நிதிகளைக் கொண்டு தரப்பட வேண்டுமென்றும் மீதமுள்ள 80% அளவு மட்டுமே உச்சி வங்கியால் மீட்டுத்தரப்படும் என்றும் விதிகள் வகுக்கப்பட்டிருப்பது மத்திய காலக் கடன் பெருமளவில் வழங்கப் படுவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது. அடிப்படை அளவுக்கே நிதி திரட்ட முடியாத வங்கிகள், அடிப்படை அளவுக்கு மேல் கொடுக்கப்படும் கடன்களில் 20%தொகை எங்ஙனம் திரட்டும்?

தவணை தவறிய கடன்கள்

கூட்டுறவுக் கடன் இயக்கத்தில் பெரும் பிரச்சினையாக விளங்குவது தவணை தவறிய கடன்களாகும். 1970-71இல் மத்திய வங்கிகள் மட்டத்தில் மொத்தம் நிலுவை நின்ற கடனில் 33·7% தவணை தவறிய கடனாக இருந்தது கவலையளிப்பதாக இருந்தது. இந்தநிலை மாற மத்திய வங்கிகளின் மேற்பார்வை ஏற்பாடுகள் மேலும் தீவிரமாக்கப்படவேண்டும். வேண்டுமென்றே கடனைத் திருப்பித் தராது தொல்லை கொடுக்கும் நபர்கள்மீது காலத்தில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். நிலைமையைக் கவனிக்காது அலட்சியமாக இருந்தால் கூட்டுறவுக் கடன் துறையே சரிந்து வீழ்ந்துவிடும் என்பதை நினைவில் கொள்ளுதல் நன்று.

வட்டி விகிதம்

மத்திய வங்கிகள் தாம் வழங்கும் கடன்கள்மீது, கடன் காலம், நோக்கத்தையொட்டி, பல்வேறு விகிதவட்டி வசூலிக் கின்றன. தாம் உச்சி வங்கியிடமிருந்து கடன்பெறும் விகிதத்தை விட ஒன்று முதல் மூன்று விழுக்காடுவரை அதிகமான வட்டி விகிதத்திற்கு மத்திய வங்கிகள் பிரதம சங்கங்களுக்குக் கடன் வழங்குகின்றன. சில மத்திய வங்கிகள் குறுகிய காலக் கடனுக் கும் மத்திய காலக் கடனுக்கும் ஒரே வட்டி விகிதம் வசூலிக் கின்றன. பல வங்கிகள் குறுகிய காலக் கடன்மீது விதிக்கும் வட்டியைவிடச் சற்று உயர்ந்த வட்டியை மத்தியகாலக் கடன்மீது வசூலிக்கின்றன. மத்திய வங்கிகள் நியாயமான விகிதத்தைத் தம் இடைவெளி (margin) யாகக் கொள்ளலாமேயன்றி, மிக மிகுதி யான விகிதத்தைத் தாம் எடுத்துக்கொள்வது சரியாகாது. வலுவற்ற வங்கிகள், குறைந்த அளவு நடவடிக்கையுள்ள

வங்கிகள், மிதமிஞ்சிய நிருவாகச் செலவுள்ள வங்கிகள் மிகுதி யான விகிதத்தை இடைவெளியாக இருத்திக்கொள்ளுவதுண்டு. மத்திய வங்கிகள் தாம் கடன்பெறும் விகிதத்திற்கும், கடன் வழங்கும் விகிதத்திற்கும் இடையே நியாயமான இடைவெளி வைத்துக்கொள்ளுதல் அவசியமே.

பிணை (Security)

மத்திய வங்கிகள் சங்கங்கள் எழுதித்தரும் கடனுறுதிச் சீட்டினைப் பிணையாக ஏற்றுக்கொண்டு கடன்களை வழங்குகின்றன. சங்கங்கள் உறுப்பினர்களின் சொந்தப் பிணையின் பேரிலும், நில அடைமானத்தின் பேரிலும் கடன்களை உறுப்பினர்களுக்கு வழங்கு கின்றன. இப் பிணையங்கள் மத்திய வங்கிக்கும் பிணையாக அமை கின்றன. 1971 ஜூன் இறுதியில் நிலுவை நின்ற கடன்களில் மிகப் பெரும்பான்மையளவுக்குச் சங்கங்களின் கடனுறுதிச் சீட்டின்மீது வழங்கப்பட்டிருந்தது கீழ்க்காணும் அட்டவணைவழி புலனாகும்.

அட்டவணை

மத்திய கூட்டுறவு வங்கிகள்—நிலுவை நின்ற கடன்கள்—அளிக்கப்பட்டிருந்த பிணையங்கள்—ஜூன் 1971இல் இருந்த நிலை

ரூ. கோடியில்

பிணைய வகை			
கூட்டுறவுச் சங்க கடனுறுதிச் சீட்டு		...	703·77
விவசாய விளைபொருள்	...	...	28·77
நுகர்ச்சிப் பண்டங்கள்	...	...	25·39
அசையாச் சொத்து	...	...	14·30
பிணையமற்றது	...	...	7·23
தவணை வைப்புகள்	...	...	5·72
பொன், வெள்ளி	...	...	2·24
பிணையாள் (Surety)	...	...	2·15
அரசினர் பிணையங்கள்	...	...	0·85
பிறவகை	...	...	22·98
மொத்தம்	...		813 40

மத்திய வங்கிகளின் நிருவாகம்

மத்திய வங்கிகளின் நிருவாகம் இயக்குநர் அவை வசம் அடங்கியுள்ளது. இயக்குநர் அவையில் பெரும்பாலும் 10 முதல்

15 உறுப்பினர்களிருப்பர். இவர்களில் பெரும்பாலானோர் சங்கங்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுவது இயற்கையே. ஆனால், சில வங்கிகளில் தனிநபர் (individual) உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் மிகுதியாக இருந்து வருகிறது. இது விரும்பத்தக்கதல்ல. பெரும்பாலான வங்கிகளில் தனிநபர்களின் பிரதிநிதிகள் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே இருக்கிறது. புதிதாகத் துவக்கப்பட்ட சில வங்கிகளிலும், சில பழைய வங்கிகளிலும் அரசு அலுவலர்கள் நிருவாகக் குழுவின் தலைவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மற்றும் சில வங்கிகளில் அரசு நியமனம் செய்யக்கூடிய இயக்குநர் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தின் இயல்பான வளர்ச்சிக்கு இது அவ்வளவு உகந்ததல்ல என்று கூட்டுறவாளர்கள் கருதுகின்றனர். அண்மையில் சில மத்திய வங்கிகளின் நிருவாகம் அரசியல்வாதிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு வருவதாகக் குறை கூறப்படுகிறது.

வங்கி அலுவலர்

நிறுவனமொன்றின் வளர்ச்சியும் முன்னேற்றமும் அதன் அன்றாட நடப்பைக் கவனித்து வரும் அலுவலரின் திறனையும் ஈடுபாட்டையும் பொருத்திருக்கிறது என்று கூறுவது மிகை யாகாது. தகுதிமிக்க பயிற்சிபெற்ற அலுவலரை அமர்த்தியே வங்கிகள் தமது அலுவல்களைத் திறம்பட நடத்த முடியும். ஆனால், நடைமுறையில் மத்திய வங்கிகள் திறன்வாய்ந்த அலுவலர்களை ஈர்க்க முடியவில்லை. வங்கிகள் அளிக்கும் ஊழிய விதிகளும் அவ்வளவு கவர்ச்சித் தருவதாக அமையவில்லை. பணியாளர்கள் தம்முடைய அலுவல்நிலை பாதுகாப்பாக உள்ளது என்ற ஏற்பாடு இல்லாதவிடத்து வங்கியுடன் ஒன்றிச் செயல்படும் நிலையைக் காண்பது அரிதாக உள்ளது. மத்திய வங்கியின் அலுவலர்களில் பெரும்பாலோர் நகர நாகரிகத்தைச் சார்ந்திருப்பதால் அவர்கள் விவசாயிகளுடன் ஒன்றுபட்டு அவர்களுடைய பிரச்சினைகளை அறிந்து அவர்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்வது எளிதாக வில்லை.

மத்திய வங்கிகள் அலுவலர் பணிமுறைப் படிவம் (Cadre) ஏற்படுத்தி நல்ல பணி விதிகளை அலுவலருக்கு அளித்து முற்போக்குக் கொள்கைகளை நிருவாகத்தினர் கடைப்பிடித்து வந்தால் நாளடைவில் தரமான பணியரைக் கூட்டுறவு வங்கிகள் தம்பால் ஈர்க்க முடியும்.

இலாபம்

அஸ்ஸாம், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மூன்று மாநிலங்கள் தவிர பிற மாநிலங்களில் உள்ள மத்திய வங்கிகள்

1970-71இல் மொத்தத்தில் இலாபம் ஈட்டின. 1969-70 இல் மத்திய கூட்டுறவு வங்கிகள் ஈட்டிய இலாபம் ரூ. 9·12 கோடி. 1970-71இல் ரூ . 9·08 கோடியாகச் சிறிதே குறைந்து நின்றது.

மத்திய வங்கிகள் செயற்பாட்டில் காணப்படும் குறைபாடுகளும் அவற்றை நீக்கலும்:

மத்திய வங்கிகள் உள்ளபடியே மாவட்ட அளவில் கூட்டுறவுத் துறையின் தலைமையிடம் போன்ற பெருமையுடன் செயலாற்றும் உரமும், வலிமையும், திறனும், திண்மையும் பெற்றுத் திகழ வேண்டும் என்ற அடிப்படையில்தான் மாவட்டத்துக்கொரு மத்திய வங்கி என்ற கொள்கை ஏற்கப்பட்டது. ஏட்டளவில் இக் கொள்கை செயல்படுத்தப்பட்ட போதிலும், உண்மையில் மத்திய வங்கிகள் மாவட்டக் கூட்டுறவு இயக்கத்தின் தலைமைப்பீடமாகக் கருதப்படும் நிலை பல இடங்களில் உருவாகவில்லை.

பிரதம சங்கங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்புக் கூட்டுறவு மத்திய வங்கியைச் சார்ந்ததே. இதற்கு வேண்டிய மேற்பார்வை அலுவலர்களை மத்திய வங்கி தானே நியமித்து அவர்கள் வழி தன்னுடன் இணைந்த சங்கங்களை மேற்பார்வை செய்யவேண்டும்.

பல காலமாக மத்திய வங்கிகள் வைப்புகளைத் திரட்டுவதில் அக்கறை செலுத்தவில்லை. அண்மையில் ரிசர்வு வங்கி ஒவ்வொரு மத்திய வங்கியும் குறிப்பிட்ட ஓர் அளவு வைப்புகளைத் திரட்டிஞல் மட்டுமே சலுகை வட்டி விகிதத்தில் தரப்படும் கடன் வசதிகளைப் பெறும் தகுதிபெறும் என்று புதியதொரு விதியை உருவாக்கியதன் காரணமாக இவ் வங்கிகள் வைப்புகளைத் திரட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. பொதுமக்களை ஈர்த்து வைப்புகளை அவர்களிடமிருந்து திரட்ட வங்கிகள் வாடிக்கையருக்குப் பல்வகைப் பணிகளை அளிக்கவேண்டும். இதிலும் கூட்டுறவு மத்திய வங்கிகள் மிகுதியான ஈடுபாடு காட்டவில்லை.

எல்லோராலும் மிகவும் சிறந்தது ; விரும்பத்தக்கது என்று பாராட்டப்பட்டு ஏற்கப்பட்ட பயிர்க் கடன் திட்டத்தைச் சரியாகப் பல மத்திய வங்கிகள் செயல்படுத்தவில்லை. நேரத்தில் கடன் கொடுத்து நேரத்தில் வசூலிப்பது என்பது சில வங்கிகளில் மட்டுமே காணக்கிடக்கும் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. கடன் வழங்குவதிலுள்ள சுற்றி வளைக்கும் நடைமுறை காரணமாக எல்லா நிலைகளிலும் தாமதம் ஏற்படுகின்றது. காலங் கடந்து கிடைக்கும் கடனை விவசாயிகள் வேளாண்மயல்லாத பிற நோக்

கங்களுக்குப் பயன்படுத்திவிடுகின்றனர். இதனால் விவசாயியின் திருப்பிச் செலுத்துந் திறன் குறைந்து கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நேரத்தில் தவணை தவறிய கடனாளியாக நிற்கிறார். இதன் விளைவாக வங்கியின் தவணை தவறிய கடன் அளவு ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து செல்லுகின்றது. இந்த நிலை மாறவேண்டும். பல வங்கிகளில் குறித்த காலத்தில் பணம் வசூலிக்கப்பட்டது போலவும் சில நாட்கள் கழித்துப் புதிய கடன் வழங்கப்பட்டது போலவும் புனை பதிவுகளைக் கணக்கில் காட்டித் தவணை தவறி நிற்கும் உண்மை நிலையை மறைக்கின்றனர் என்று கூறப்படுகிறது. இது கூட்டுறவு இயக்கத்தின் மேம்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் ஊறு விளைவிக்கும் புற்று நோயாகும். இந்தத் தவறான முறைகளைக் கையாண்டுக் குறைகளை மறைத்து வைத்தால் நாளடைவில் நோய் முற்றித் தீராத பாடாகிவிடும்.

தமது நிதிகளை மத்திய வங்கிகள் சரியான முறையில் முதலீடு செய்வதில்லை என்ற குறையும் அடிக்கடிச் சுட்டிக்காட்டப் படுகிறது. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டப் (Banking Regulation Act) படிக் குறிப்பிட்ட விகித அளவு (கேட்பு, தவணைப் பொறுப்புகளில் இத்தனைச் சதவிகிதம் என்று) எளிவரல் சொத்துகள் (liquid assets) ரொக்கக் காப்பு (Cash reserve) முதலியவை வைத்திருப்பது போக மீதி தொகையை நல்ல வகையில் முதலீடு செய்வது அவசியம். கூட்டுறவு நிறுவனங்களின் நிதிகள் கூட்டுறவு இயக்கத்துக்குள்ளேயே முதலீடு செய்யப்பட வேண்டுமென்ற கொள்கையை எல்லோரும் ஏற்கின்றனர்; வற்புறுத்துகின்றனர். ஆனால், சில மத்திய வங்கிகள் கணிசமான தொகையை வாணிக வங்கிகளில் கேட்பு அல்லது அழைப்பு வைப்புகளில் வைத்திருக்கின்றனர். மற்றும் சில வங்கிகள் செல்வாக்குள்ள இயக்குநர்களின் வற்புறுத்தலின் பேரில் புதிய நிறுவனங்களில், அவற்றின் வெற்றிவாய்ப்பைக் கருதாது, முதலீடு செய்கின்றன. சில வங்கிகள் பெருமளவு தொகையினைக் கூட்டுறவு நூற்பு ஆலை, சர்க்கரை ஆலைபோன்ற நிறுவனங்களில் பங்குகள் எடுக்கப் பயன்படுத்தியுள்ளன.

பொதுவாக மத்திய வங்கிகளின் நிருவாகம் செய்திகளறிந்த வல்லுநர்கள் வசமுள்ளது என்று கூறுவது அரிது. நிருவாகக் குழுவில் பெரும்பாலோர் அரசியல் தொடர்புள்ளவர்களாயிருக்கின்றனர். இவர்களுக்கு வங்கியின் முன்னேற்றம் குறித்துச் சிந்தித்துச் செயல்பட வாய்ப்பு மிகுதி இருப்பதில்லை. ஊழியர் வேலை சேர்ப்பு, பதவி உயர்வு, பயிற்சி போன்ற செய்திகள் குறித்துத் திட்டவட்டமான கொள்கைகள் இருப்பதில்லை. இதனால் ஊழியர்களிடையே உற்சாகமும் ஊக்கமும் குறைந்து திறம்படச் செயலாற்றும் திற

னும் குறைந்து போகின்றது. நிலைமை மேலும் சீர்குலையாமலிருக்க ஒவ்வொரு மாநிலத்திலும் மத்திய வங்கிகள் ஊழியர் பணிமுறைப் படிவம் அமைத்து நிலையான கொள்கைகளைக் கடைப்பிடித்து ஊழியரிடையே நம்பிக்கையையும் வங்கியின்மீது ஒரு பற்றினை யும் வளர்க்க வழி செய்யவேண்டும்.

சிறு விவசாயிகளுக்கு வேளாண்மைக் கடனளிப்பதில் மத்திய வங்கிகள் இன்னும் முனைப்பாக இருக்கவேண்டும். இதற்கெனச் சில அலுவலர்களை நியமித்துச் செயல்படுதல் விரும்பத்தக்கது.

சங்கங்கள் செயலற்றுக் கிடக்கும் ஊர்களிலுள்ள தவணை தவறாத உறுப்பினர்களுக்கு அருகாமையிலுள்ள தமது கிளைகள் வழி மத்திய வங்கி நேரடியாகக் கடனளிக்கலாம். இங்ஙனம் நேரடி யாகக் கடன் வழங்குவது செயலற்றுக் கிடக்கும் சங்கங்கள் புனரமைக்கப்படும்வரை மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

நடைமுறை தாமதத்தைத் தவிர்க்கக் கடன் அனுமதி வழங்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். மத்திய வங்கிகளின் கிளைகளுக்குக் குறிப்பிட்ட அளவுக்குட்பட்ட கடன்களை அனு மதிக்கும் அதிகாரங்களைத் தரவேண்டும். கிளை ஒவ்வொன்றிற்கும் ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்படவேண்டும். இந்த ஆலோ சனைக் குழுவினர் குறிப்பிட்ட வரம்புக்குட்பட்ட கடன்களை அனு மதிக்கும் உரிமை தரப்பட வேண்டும். கிளை வட்டாரத்தில் வைப்புகளைத் திரட்ட இக் குழு பெரும் பொறுப்பு ஏற்கவேண்டும். கிராமப்புறத்திலுள்ள சேமிப்பினைத் திரட்ட மிகவும் உகந்த முகமை (agency) யாக விளங்குவது மத்திய வங்கிகளின் கிளை களாகையால் இச் செய்தி குறித்துக் கிளைகள் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

மகாராட்டிரம், பீகார், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் மத் திய வங்கிகள் கடன் சார்பற்ற (non-credit) நடவடிக்கைகளையும் பெருமளவில் மேற்கொண்டிருப்பது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. பொதுவாக வங்கிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளு வது வங்கியத் தத்துவங்களுக்கு முரணானதாகும். தமிழ்நாடு, ஆந்திரம், ஒரிசா, ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மத்திய வங்கிகள் கடன்சாரா நடவடிக்கையில் ஈடுபடாதிருப்பது மெச்சத்தக்கது.

8. உச்சி வங்கிகள்

(Apex Banks)

பிரதம விவசாயக் கடன் சங்கங்களின் கூட்டிணைப்பாக மத்திய வங்கிகள் உருவாகியது போன்று, மத்திய வங்கிகளின் கூட்டிணைப் பாக உச்சி வங்கிகள் உருவாயின. மத்திய வங்கிகளின் நட வடிக்கைகளை ஒருங்கிணைத்து அவற்றின் தேவைகளை நிறைவு செய்ய மாநில அளவில் ஒரு முகமை தேவைப்பட்டது. உச்சி வங்கி மாநிலக் கூட்டுறவு இயக்கத்தின் குருதி போன்றமைவ தாகும். மாக்லகன் குழுவினர் 1915இல் தாமளித்த அறிக்கையில் உச்சி வங்கி அமைக்கப்பட வேண்டுவதன் அவசியத்தை உணர்த் தினர்.

மத்திய வங்கிகள் அமைக்கப்பட்ட சிறிது காலத்திற்குள் அவற்றின் செயற்பாட்டில் பல பிரச்சினைகள் உண்டாயின. அவற்றிற்கு வேண்டிய நிதிவசதிகள் கிடைக்கவில்லை. ஒரு சில வங்கிகள் வசதியான நிதி நிலை பெற்றிருந்தன. பல வங்கிகளுக்கு நிதி வசதிகள் தேவைப்பட்டன. உபரி நிதியுள்ள மத்திய வங்கி களையும் பற்றாக்குறையால் பரிதவிக்கும் மத்திய வங்கிகளையும் ஒன்று கூட்டி அவற்றிடையே கடன் வழங்கல் வாங்கல் நடவடிக்கைகளைப் பதிவாளர் (Registrar) ஏற்பாடு செய்யவேண்டி யிருந்தது. மத்திய வங்கிகளின் நிதிகளை ஒன்று திரட்டி, மாநில அளவில் உபரியாக உள்ள இடங்களிலிருந்து தேவையான இடங் களுக்குப் பணத்தைத் திருப்பிவிடவும், மூலதனத்திற்கு ஓர் தீர்வகம் (Clearing house) போன்று செயல்படவும் மாநிலக் கூட்டுறவு வங்கி இன்றியமையாததென உணரப்பட்டது.

பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்று அவர்களிடமிருந்து வைப்புகளை ஈர்க்குமளவிற்கு மத்திய வங்கிகளின் செயற்பாடு செம்மையாக அமையவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் பல

மத்திய வங்கிகள் நிறுவப் பெற்று வந்தன. ஆனால், இவ் வங்கிகளின் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைக்க உச்சி வங்கி இல்லாதிருந்தது ஒரு குறையாக இருந்தது. நாட்டின் பணச் சந்தையினையும் கூட்டுறவு இயக்கத்தையும் பிணைக்க ஓர் அமைப்புத் தேவைப்பட்டது.

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் இன்று நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலும் இயங்கி வருகின்றன. இவற்றின் அமைப்பு இரு வகைப்பட்டதாகக் காணப்படுகிறது. முதல் வகையில், பிரதம சங்கங்களும் மத்திய வங்கிகளும் மட்டுமே உச்சி வங்கியின் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இரண்டாம் வகையில் கூட்டுறவு நிலையங்கள் மட்டுமல்லாது தனிநபர்களும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். கூட்டுறவுத் தத்துவப்படி உச்சி வங்கி கூட்டுறவுகளின் கூட்டிணைப்பாக அமைக்கப்படுவதே சரியான முறையாகும். எனினும் நம் நாட்டில் மாநில வங்கிகள் பெரும்பாலும் கூட்டுறவு நிலையங்களையும் தனிநபர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டிருக்கின்றன. தனிநபர்கள் உறுப்பினராயிருப்பது பொதுமக்களிடையே இயக்கத்தின் மீதும் வங்கியின்மீது ஒரு நம்பிக்கையை உண்டுபண்ணவும், வங்கி நிருவாகத்தில் தொழில் வல்லுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது. இது காரணமாகவோ என்னவோ சில மாநில வங்கிகளின் நிருவாகத்தில் தனிநபர் உறுப்பினர்கள் பெருஞ் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றனர். இருப்பினும் கூட்டுறவு நிலைய உறுப்பினர்களின் உரிமை, நலன்களைப் பாதுகாக்க வங்கியின் நிருவாகக் குழு அமைப்பு விதிகளில் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு அமைப்பில் குறுகிய காலக் கடன் துறையில் அச்சாணி போன்று திகழும் உச்சி வங்கி, கூட்டுறவு இயக்கத்தையும் பணச் சந்தையினையும் பிணைப்பதுடன், அவசர காலத்திலும் பருவ காலத்திலும் தேவைப்படும் நிதி வசதிகளை ரிசர்வு வங்கியிடம் பெற்றுத் தருவதற்கும் ஏற்பாடு செய்கிறது. உச்சி வங்கியின் முக்கிய பணிகளும் நோக்கங்களும் என்னவென்று காண்போம்:

(i) மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிலையங்களின் நிதிகளைச் சரிக்கட்டும் ஒரு மைய இடமாக உச்சி வங்கி திகழ்கிறது.

(ii) மாநிலத்திலுள்ள மத்திய வங்கிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துக் கட்டுப்படுத்துவது உச்சி வங்கியின் பணியாகும்.

(iii) கூட்டுறவு இயக்கத்திற்கே நிதி வழங்கும் ஒரு முகமையாக உச்சி வங்கி விளங்குகிறது.

(iv) நாட்டுப் பணச் சந்தையினையும் மாநிலக் கூட்டுறவு இயக்கத்தையும் பிணைக்கும் சங்கிலியாக உச்சி வங்கி விளங்கு கிறது.

(v) தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள மத்திய வங்கிகளுக்கு முதலீடு செய்யும் முகமை (agency)யாக உச்சி வங்கி திகழ்கிறது.

(vi) மாநில அளவில் கூட்டுறவுக் கொள்கைகளை வகுப்பதி லும், வகுக்கப்பட்ட கொள்கைகளைச் செயல்படுத்துவதிலும், உச்சி வங்கிகளுக்குப் பெரும் பங்கு உண்டு.

1950 ஜூன் இறுதியில் 14 கூட்டுறவு உச்சி வங்கிகளே இருந்தன. இவற்றில் 18,618 உறுப்பினரும், ரூ. 1·35 கோடி பங்கு முதலும், ரூ. 30·45 கோடி நடைமுறை முதலும் இருந்தன. 1971 ஜூன் இறுதியில் 25 உச்சி வங்கிகளும் அவற்றில் 18,595 உறுப்பினரும், ரூ. 42·63 கோடி செலுத்திய முதலும் ரூ. 685·21 கோடி. நடைமுறை முதலும் இருந்தது கடந்த 21 ஆண்டு களில் உச்சி வங்கிகள் வளர்ந்த பாங்கினை உணர்த்துகின்றது.

துவக்க காலத்தில் உச்சி வங்கிகளின் நடப்பில் பல குறை பாடுகள் காணப்பட்டன. சில உச்சி வங்கிகள் உறுப்பினரல்லாத வியாபாரிகள் போன்ற தனிநபர்களுக்குக் கடன் அளிப்பதில் அக்கறை காட்டின; ஆனால், தமது உறுப்பினர் சங்கங்களுக்குக் கடனளிப்பதில் ஊக்கம் காட்டவில்லை. சில தம்மிடமுள்ள குறுகியகால நிதியினைக் கொண்டு நீண்டகாலக் கடன்களை வழங்கின. மற்றும் சில வங்கியத் தொழிலுடன் வியாபாரத்தி லும் ஈடுபட்டு அதனால் இடர்களுக்குள்ளாகின. பல உச்சி வங்கி களில், தவணை தவறி நின்ற கடன்தொகை மிகப் பெருமளவில் காணப்பட்டது. சுருங்கக் கூறின் 1950-52 ஆண்டுகள் இறுதியில், சென்னை, பம்பாய் மாநில வங்கிகள் தவிர பிற மாநில வங்கிகள் மெலிந்த முதலுடன் வலுவற்றுத் தம்முடைய தலையாய பணியா கிய விவசாயக் கடன்களை மத்திய சங்கங்களுக்கு வழங்குதலைச் செவ்வனே செய்ய இயலாதிருந்தன. எனவே உச்சி வங்கிகளை நிதிய, நிருவாகக் கண்ணோட்டங்களில் சீரமைத்துச் செம்மைப் படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய ரிசர்வு வங்கிச் சட்டத்தில், கூட்டுறவு உச்சி வங்கிகளுக்குக் கடன் வசதிகள் செய்துதர வகை செய்யும் பொருட்டுப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. உண்மையான வியாபார அல்லது வாணிக நடவடிக்கைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட மாற்றுச் சீட்டு, கடனுறுதிச் சீட்டு ஆகியவற்றை வாங்க, விற்க, மறுதள்ளுபடி (rediscount) செய்ய பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கி

களுக்கு (Scheduled banks) அளிக்கப்பட்டுள்ள வசதிகளனைத்தும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பிரிவு 17 (2)(a)படி (ரிசர்வு வங்கிச் சட்டம்) அளிக்கப்பட்டன. பிரிவு 17 (2) இன் படி பருவ கால வேளாண்மை நடவடிக்கைகளுக்கு 9 திங்கள் முதல் 15 திங்கள்களுக்குட்பட்ட கடன் வசதிகளை மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கவும் சட்டம் வகை செய்தது. பின்னர், மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரில் ரிசர்வு வங்கி 15 திங்கள் முதல் 5 ஆண்டுகளுக்குட்பட்ட மத்திய காலக் கடன்களை அளிக்கவும் வகை செய்ய சட்டம் திருத்தப்பட்டது. மற்றும் விளைபொருள் சந்தையிடுகை, பக்குவப்படுத்தல், கால்நடை பராமரிப்புப் போன்ற நடவடிக்கைகளுக்கும், குறிப்பிட்ட குடிசைத் தொழில் சிற்றளவு தொழில்களுக்கு உற்பத்தி, சந்தையிடுகைப் பணிகளுக்கும் குறுகியகாலக் கடன்வசதி யளிக்க வகைசெய்து சட்டம் திருத்தப்பட்டது. மாநிலத்துக்கு ஓர் உச்சி வங்கி என்ற திட்டமும் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டுத் தற்போது (1971 ஜூன் இறுதியில்) 25 உச்சி வங்கிகள் செயலாற்றி வருகின்றன.

சில மாநிலங்களில் உச்சி வங்கிகள், மத்திய வங்கிகள் நிறுவப் பெறாத இடங்களில், தமது கிளைகளைத் திறந்திருக்கின்றன. சில மாநிலங்களில் வைப்புகளைத் திரட்டும் நோக்கத்துடன் உச்சி வங்கிகள் கிளைகளை நிறுவியுள்ளன. ஒரு சில மாநிலங்களில் மத்திய வங்கிகள் செயல்பட்டு வரும் இடங்களிலும்கூட மாநில வங்கிகள் தமது கிளைகளை நிறுவியுள்ளன. இது போன்ற இடங்களில் மாநில வங்கிகள் திட்டமிட்ட முறைப்படி கிளைகளை மூடிவிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டன. மத்திய வங்கிகள் செயலிழந்து கிடப்பதனால் பிரதம சங்கங்கள் கடன்பெற இயலாதிருக்கும் நிலையில், உச்சி வங்கி, மத்திய வங்கிச் செயல்படத் துவங்கும் வரை, தகுதிபெற்ற சங்கங்களுக்குக் கடன் வசதி யளிக்கத் தனது கிளையொன்றை நிறுவலாம் எனக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு பரிந்துரைத்தது.

உறுப்பினர் நிலை

மத்திய வங்கிகளின் கூட்டிணைப்பாக உச்சி வங்கிகள் விளங்குகின்றன என்பது பொதுப்படையான செய்தியேயெனினும் பெரும்பாலான உச்சி வங்கிகளில் மாநில அரசு, கூட்டுறவு நிலையங்கள் தவிர தனிநபர் (individual) களும் உறுப்பினராயுள்ளனர். பெரும்பாலான உச்சி வங்கிகளை அமைக்க ஏற்பாடு செய்தவர்கள் தனிநபர்களே. இவர்களுடைய முயற்சியால்தான் உச்சி வங்கிக்குப் பங்கு முதலும் வைப்புத் தொகையும் துவக்க

காலத்தில் திரட்டுவது எளிதாக இருந்தது. கூட்டுறவுக் கடன் நிலையங்களின் கூட்டிணைப்பாக உச்சி வங்கித் திகழவேண்டும் என்ற தத்துவப்படி அதில் தனிநபர்கள் சேர்க்கப்படுவது அண்மைக் காலத்தில் விலக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் அட்டவணை உறுப்பினர் நிலையைத் தெளிவுபடுத்துகிறது.

அட்டவணை

உச்சி வங்கிகளில் உறுப்பினர் நிலை

ஆண்டு	கூட்டுறவுச் சங்கங்கள்	தனிநபர்கள், பிறர்	மொத்தம்
1950-51	12,666	8,266	20,932
1955-56	24,651	11,743	36,394
1960-61	22,515	7,069	29,584
1965-66	12,918	8,092	21,010
1967-68	12,977	8,409	21,386
1968-69	12,711	8,558	21,269
1969-70	11,905	6,955	18,860
1970-71	11,756	6,839	18,595

அட்டவணைப்படி 1955-56இல் உறுப்பினர்நிலை மிக உயர்ந்து நின்றதும் பின்னர் சிறிது குறைந்து வந்ததும் தெரியவரும். மத்திய வங்கிகள் ஏற்படுத்தப்படாத இடங்களில் உச்சி வங்கியுடன் இணைந்திருந்த பல சங்கங்கள் நாளடைவில் மத்திய வங்கி நிறுவப் பெற்றதும் உச்சி வங்கியிலிருந்து விலகி மத்திய வங்கியில் சேர்ந்தனர். மத்திய வங்கிகளும் பிற பிராந்திய சங்கங்களும் மட்டுமே உச்சி வங்கியில் உறுப்பினராகலாம் என்ற கொள்கையும் இவ்வகையாக எண்ணிக்கை குறைவுற்றதற்குக் காரணமாகும்.

1971 ஜூன் இறுதியிலிருந்த நிலைப்படி மகாராட்டிரம், அஸ்ஸாம் மாநிலங்களில் உள்ள உச்சி வங்கிகளில் மட்டுமே மிகுதியான தனிநபர் உறுப்பினர்கள் இருந்தனர். இந்த இரு மாநில வங்கிகள் தவிர மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் கூட்டுறவு நிலையங்களைவிட மிகுதியான எண்ணிக்கை தனிநபர் உறுப்பினர்கள் இருந்தனர். தனிநபர் உறுப்பினரே இல்லாத மாநில வங்கிகள் ஆந்திரப் பிரதேசம், குஜராத், ஹரியானா, கேரளா, மைசூர், ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியன.

நடைமுறை முதல் (Working Capital)

பங்குமுதல், காப்புநிதி, வைப்புகள், கடன்கள் வாங்குதல் ஆகியவற்றின்வழி மாநிலக் கூட்டுறவு வங்கிகள் தமக்குத் தேவைப்

படும் நடைமுறை முதலைத் திரட்டுகின்றன. இவற்றில் வைப்பு கள்வழி மட்டுமே சற்றேறப்ப 40% அளவு நடைமுறை முதல் திரட்டப்படுகிறது. வைப்புகளில் 70% கூட்டுறவுச் சங்கங்களி லிருந்தும், 30% தனிநபர், பிறரிடமிருந்தும் திரட்டப்பட்டது என்பதை 1970-71 புள்ளி விவரங்கள் எடுத்துரைக்கின்றன.

உச்சி வங்கிகளுக்கு அடிப்படை நிதிய ஆதாரமாக விளங்கு வது பங்கு முதல். கடன் கோரும் உறுப்பினர் வங்கிகள், குறிப் பிட்ட விகித அளவுக்குப் பங்கு எடுத்தால்தான் குறிப்பிட்ட அளவு கடன் பெறலாம் என்ற நியதிப்படி உச்சி வங்கியில் பங்குமுதல் வழங்க வேண்டிய நிலையிலுள்ளன. இதனுல் ஆண்டுக்கு ஆண்டு உச்சி வங்கிகளின் பங்கு முதல் உயர்ந்த வண்ணமிருக் கிறது. 1960-61இல் ரு. 18·24 கோடியாக இருந்த பங்கு முதல் 1970-71இல் ரூ. 42·63 கோடியாக உயர்ந்தது. இத் தொகையில் அரசினர் வழங்கியது 1960-61இல் ரூ. 6·46 கோடியாகவும் 1970-71இல் ரூ. 13·37 கோடியாகவும் இருந்தது. நடைமுறை முதலில் பங்குமுதல் 6%ஆக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

காப்பு நிதிகள்

தமது இலாபத்திலிருந்து பல்வகைக் காப்பு நிதிகளுக்கு உச்சி வங்கிகள் பணத்தை ஒதுக்குகின்றன. சட்டமுறையாக ஒதுக்க வேண்டிய காப்பு நிதி தவிர வராக் கடன் காப்பு, விவசாயக் கடன் நிலைபேருக்க நிதி போன்ற நிதிகளுக்கும் உச்சி வங்கிகள் இலாபத்தி லிருந்து குறிப்பிட்ட விகிதத்தை ஒதுக்கி வைக்கின்றன. 1960-61இல் ரூ. 5·76 கோடியாக இருந்த காப்பு நிதிகள் 1970-71இல் ரூ. 50·05 கோடியாக வளர்ந்து இருந்தது. பஞ்சம் வறட்சி போன்ற காரணங்களால், வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்களைக் குறித்த காலத்தில் திருப்பித் தருவது இயலாது என்ற நிலை ஏற்பட்டால், அவற்றை மத்திய காலக் கடன்களாக மாற்றித் தருவதற்கு வகை செய்யவே விவசாயக் கடன் நிலைபேருக்க நிதி அமைக்கப்பட்டது. 1970-71இல் உச்சி வங்கிகளிடமிருந்த மொத்த காப்பு நிதிகளில் ரூ. 26·17 கோடி விவசாயக் கடன் நிலை பேருக்க நிதியாக இருந்தது.

மாநில வங்கிகளின் பங்கு முதலும், காப்பு நிதிகளும் வங்கி களின் சொந்த நிதிகள் ஆகும். இந்தச் சொந்த நிதிகளைப் போன்று இத்தனை மடங்கு கடன்களை வங்கி பெறலாமென அதன் துணை விதிகளில் கூறப்பட்டிருக்கும். மேலும், உச்சி வங்கி மத்திய காலக் கடன்களை வழங்க உதவியாயிருப்பது அதன் சொந்த நிதிகளே. மற்றும், அவ்வப்போது ஏற்படும் தவணைப்படி வசூல் செய்ய வேண்டிய தொகை வசூல் செய்ய முடியாது தவணை தவறிய

கடனுக ஆனுலும் இயல்பாகக் கடன் வழங்குவதில் சுணக்கம் ஏற்படாதிருக்கவும் வங்கியின் சொந்த நிதிகள் உதவுகின்றன.

வைப்புகள்

நகர்ப்புற மக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டி அவற்றைக் கிராமப்புறங்களில் விவசாய வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது உச்சி வங்கிகளின் பணிகளிலொன்ருகும். கூட்டுறவு நிதியத்தின் தலைமைப்பீடமாக விளங்கும் மாநில வங்கிக்கு மத்திய வங்கிகள், பிரதம சங்கங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான கடன் வசதிகளைச் செய்து தரும் பெரும் பொறுப்பு உண்டு.

மாநிலத் தலைநகரங்களில் கிளைகளைத் திறந்தும், வங்கிய வசதிகளைப் பொதுமக்களுக்கு அளித்தும், வாணிக வங்கிகளைக் காட்டிலும் சற்றுக் கூடுதலான வட்டியினை வைப்புகள் மீது அளித்தும் உச்சி வங்கிகள் வைப்புகளை ஈர்க்கின்றன. 1950-51 இல் உச்சி வங்கிகள் திரட்டியிருந்த வைப்பு ரூ. 22·0 கோடியாக இருந்தது. இத் தொகை 1960-61இல் ரூ. 72·33 கோடியாக உயர்ந்து 1970–71 இல் ரூ. 278·70 கோடியாக மேலும் வளர்ந்து நின்றது. கடைசியாகக் குறிப்பிட்டுள்ள தொகையில் ரூ. 196·04 கோடி கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்பட்டது. மொத்த வைப்புக்களில் இது 70% ஆகும். எஞ்சியிருந்த ரூ. 82·66 கோடி தனிநபர்களும் பிறரும் போட்டிருந்த வைப்புகளாகும். இந்த ரூ. 82·66 கோடியில், உள்ளாட்சி நிலையங்கள் (பஞ்சாயத்து ஒன்றியம், பஞ்சாயத்துப் போன்ற அமைப்புகள்) போட்டிருந்தது ரூ. 24·17கோடியாகும். சுருங்கக் கூறின், மொத்த வைப்புகளில் ரூ. 58·49 கோடி மட்டுமே—அதாவது 21% மட்டுமே தனிநபர்களின் வைப்புகளாக இருந்தது. உச்சி வங்கிகள் தமது தலைமை அலுவலகம் கிளைகள் உட்பட 185 அலுவலகங்கள் வழி மேற்கண்ட ரூ. 278·70 கோடி வைப்புகளை 1970-71இல் திரட்டியிருந்தன. வளர்ந்து வரும் விவசாயத் தேவைகளுக்குக் கூட்டுறவு வங்கிகள் பெருமளவு கடன் வழங்கக் கணிசமான அளவு வைப்புகளைத் திரட்ட வேண்டும். தவணை வைப்புகளும் சேமிப்பு வைப்புகளுமே உச்சி வங்கிகளின் நடவடிக்கைகளுக்கு உகந்தன. ஆகவே, உச்சி வங்கிகள் இவ்வகை வைப்புகளைத் திரட்டுவதில் அக்கறை காட்டவேண்டும்.

கடன் வாங்குதல்

உச்சி வங்கிகள் பங்குமுதல், காப்புநிதி, வைப்புகளைக் கொண்டு மட்டும் தமக்கு வேண்டிய நடைமுறை முதலைத் திரட்டிவிட முடிவதில்லை. ரிசர்வு வங்கியிடமிருந்தும், அரசினரிடமிருந்தும், பிற நிலையங்களிடமிருந்தும் மாநில வங்கிகள் கடன்கள் வாங்குகின்றன. 1950-51 இல் உச்சி வங்கிகள் வெளியில் பெற்ற

கடன்கள் மொத்த நடைமுறை முதலில் 25% ஆக இருந்தது. 1960-61 இல் இந்த விகிதம் 56 ஆக உயர்ந்தது. 1970-71 இல் இது 43% ஆக நின்றது. இக் கடன்களில் மிகப் பெருமளவு ரிசர்வு வங்கியிடமிருந்து பெற்றதாகும். கீழ்க்காணும் அட்டவணை இச் செய்தியை விளக்கும்.

அட்டவணை

மாநிலக் கூட்டுறவு வங்கிகள்-நடைமுறை முதல்

ரூ. இலட்சத்தில்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
செலுத்திய முதல்	18,24	28,33	37,69	39,60	42,63
இதில் அரசு வழங்கியது	6,46	9,86	11,60	11,77	13,37
காப்பு நிதிகள் (மொத்தம்)	5,76	16.13	37,78	43,22	50,05
சட்டமுறை காப்பு	2,56	5,63	8,39	9,39	10,57
வராக் கடன் காப்பு	1,07	2,35	3,40	3,56	3,69
கடன் நிலைபேருக்க நிதி	—	—	18,99	22,30	26,17
பிற காப்புகள்	2,13	8,15	7,00	7,97	9,62
வைப்புகள் (மொத்தம்)	72,33	1,46,51	2,15,63	2,34,31	2,78,70
வழி: கூட்டுறவுச் சங்கங்கள்	44,36	1,00,26	1,44,64	1,65,33	1,96,04
தனிநபர்கள், பிறர்	27,97	46,26	70,99	68,98	82,66
வகை: நடப்பு (current)	25,62	58,33	72,20	56,46	61,92
சேமிப்பு	6,61	12,10	18,50	21,55	25,44
தவணை	24,73	69,56	1,18,88	1,42,35	1,76,48
காப்பு நிதி	—	3,59	4,50	7,60	10,76
பிற	15,38	2,94	1,55	6,35	4,10
பிற கடன் வாங்கல் (மொத்தம்)	1,25,32	1,98,52	2,75,44	3,02,32	2,94,45
வழி: ரிசர்வு வங்கி	1,14,89	1,74,47	2,24,90	2,43,02	2,41,91
அரசினர்	6,00	20,30	17,22	16,32	19,66
பிற	4,42	3,74	33.32	42,98	32,88
நடைமுறை முதல்	2,27,06	4,10,54	5,87,80	6,38,24	6,85,21

விவசாய நோக்கங்களுக்காகக் குறுகியகால, மத்திய காலக் கடன்களை ரிசர்வு வங்கி உச்சி வங்கிகளுக்கு வழங்குகின்றன. சந்தையிடுகை, பக்குவப்படுத்தும் சங்கங்களுக்கு நிதி வழங்கும் பொருட்டும், நுகர்வோர் சங்கங்களுக்கு நடைமுறை முதல் வழங்கும் பொருட்டும், அரசினர் கொள்முதல் திட்டங்களின்படி கொள் முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டும் தேவைப் படும் நிதியை உச்சி வங்கிகள் பெரும்பாலும் ஸ்டேட் வங்கியிடமும் அவற்றின் துணை வங்கிகளிடமும் பெறுகின்றன.

தன்னுடைய சொந்த நிதிகளைப் போன்று 12 முதல் 20 மடங்கு நிதியினை உச்சி வங்கிகள் கடனாகப் பெறலாம். ரிசர்வு வங்கி, கூட்டுறவு உச்சி வங்கிகளுக்கு விவசாய நோக்கங்களுக்குக்

குறுகிய காலக் கடன் வங்கி வீதத்திற்கு (Bank Rate) 2% குறைந்த விகிதத்திற்கும், மத்திய காலக் கடன் வங்கி வீதத்திற்கு 1½% குறைந்த விகிதத்திற்கும் கடனளிக்கிறது. உச்சி வங்கிகள் தம் முடைய நடவடிக்கைகளுக்கு வேண்டிய நிதியைத் தாமே தேடிக் கொள்ளாது எப்பொழுதும் ரிசர்வு வங்கியினையே எதிர்பார்த்திருக் கும் நிலையை மாற்றவும், அவை வைப்புகளைத் திரட்ட நல்ல முயற்சியினை மேற்கொள்ள ஊக்கப்படுத்தவும் அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு சில பரிந்துரைகளைத் தந்தது. அதாவது, ஒவ்வோர் உச்சி வங்கியும் இவ்வளவு கூடுதல் வைப்பு களைத் திரட்ட வேண்டுமெனக் குறியீடு நிருணயிக்கப்படும். இக் குறி யீட்டை அடைந்து விடும் வங்கிகள் முன்போன்று சலுகை வட்டி விகிதப்படி கடன்பெறும் தகுதிபெறும். இக் குறியீட்டை அடைய முடியாத வங்கிகள் சலுகை வட்டி விகிதத்தைவிட ஒன்று அல்லது ஒன்றரை விழுக்காடு அதிக வட்டிக்கே கடன் பெற முடி யும். குறியீட்டில் பாதி அளவுக்குக் குறையாது வைப்புகளைத் திரட்டும் வங்கிகளுக்குச் சலுகை வட்டி விகிதத்திற்கு மேல் கூடுதல் ½% வட்டிக்குக் கடன்கள் வழங்கப்பெறும். இவ்வகையாக உச்சி வங்கிகளை வைப்புகளைத் திரட்டுவதில் ஊக்கஞ் செலுத்த நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தாம் திரட்டிய நிதிகளை உச்சி வங்கிகள் கீழ்க்காணும் வகை களில் பயன்படுத்துகின்றன.

(i) மத்திய வங்கிகளுக்குக் கடன் வழங்கல்.

(ii) பிரதம சங்கங்களுக்குக் கடன் வழங்கல்.

(iii) தனிநபர்களுக்குக் கடன் வழங்கல்.

(iv) பிறவகைக் கூட்டுறவு நிலையங்களுக்குக் கடன் வழங்கல்.

(v) அரசினர் பிணையங்களில் முதலீடு செய்தல்.

(vi) நிலவள வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்தல்.

(vii) ரிசர்வு வங்கியிடம் வைப்புகள் வைத்திருத்தல்.

உச்சி வங்கிகள் மத்திய வங்கிகளின் கூட்டிணைப்பு ஆனதால் பிரதம சங்கங்களுக்கும் தனிநபர்களுக்கும் அவை கடன் வழங்குவது சரியல்ல என்று கருதப்படுகிறது. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் உச்சி வங்கிகளுக்குப் பொருந்துமாதலால், அவை ரிசர்வு வங்கியின் கண்காணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டன. மேலும் உச்சி வங்கிகள் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் (Scheduled banks) என்று சட்டமுறையாகப் பாவிக்கப்படுவதால் அவை

ரிசர்வு வங்கியிடம் குறிப்பிட்ட அளவு தொகையை வைப்பாக வைத்திருக்க வேண்டிய நிலையிலுள்ளன. கடன் வழங்குவதிலும், முதலீடு செய்வதிலும் மாநில வங்கிகள் மத்திய வங்கிகள் கடை பிடிக்கும் நடைமுறையினைப் பின்பற்றுகின்றன.

கடன் வழங்கல்

தமது செயல் எல்லையிலுள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் பிற உச்சி சங்கங்களுக்கும் மாநில வங்கிகள் கடன் வழங்குகின்றன. பதிவாளரின் முன் அனுமதி பெற்றுத் தன்னுடன் இணைக்கப் பெற்ற பிற சங்கங்களுக்கும் மாநில வங்கி கடன் வழங்கலாம். வைப்பாளர்களுக்குத் தவணை வைப்பு ரசீதின் பேரில் கடன் வழங்குவது முண்டு. தவிர்க்க முடியாத நிலையில் விதிக்கு விலக்காகத் தனி நபர்களுக்குத் தக்க நிபந்தனைகளின் பேரில் வங்கி கடன் வழங்குவதுமுண்டு. கடன்கள், ரொக்கக் கடன், மேல்வரைப் பற்று, (over draft) ஆகிய வழிகளில் நிதிவசதி பெரும்பாலும் விவசாய நோக்கங்களுக்கு மாநில வங்கிகள் அளிக்கின்றன. கடன் கோரும் சங்கம் தான் கடன் கோருவதில் 5% தொகையை உச்சி வங்கியில் பங்காக எடுத்துக் கொள்ளவேண்டும். விதிகள், துணை விதிகள்படி கடன் கோரும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் உயர்ந்த அளவுக் கடன் வரம்பு என்ற தொகை நிருணயிக்கப் படும். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அல்லது ரிசர்வு வங்கி வகுத்துள்ள விதிமுறைகளின்படி கடன் விண்ணப்பமும் அதைச் சார்ந்த ஆவணங்களும் தயாரித்து அனுப்பப்படும். கடன் அனுமதிக்கப் பட்டவுடன், என்ன நிபந்தனைகட்கு உட்பட்டுக் கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி கடன் கோரியவருக்கு அனுப்பப்படும். இந்த நிபந்தனைகளை நிறைவேற்றி, தக்க ஆவணங்களை எழுதித் தந்து மத்திய வங்கிகள் கடன் பெற்றுக் கொள்ளும்.

மாநில வங்கிகள் மத்திய வங்கிகளுக்கு அளிக்கும் கடன்களில் மிகப் பெருமளவு 12 திங்களுக்கு மிகாத குறுகிய காலக் கடன்களாகும். கீழ்க்கண்ட நோக்கங்களுக்குக் குறுகிய காலக் கடன்கள் அளிக்கப்படுகின்றன.

(1) வேளாண்மைச் செலவுகள்.

(2) வீட்டுச் செலவுகள்.

(3) வாரம் (Rent) செலுத்துதல்.

(4) நல்ல விலையை எதிர்நோக்கி விளைபொருளை இருத்தி வைத்தல்.

(5) கால்நடைப் பராமரிப்புச் செலவு.

(6) கால்நடைப் பண்ணைப் பொருள்களை உற்பத்தி செய்தல், விற்றல்.

மத்திய காலக் கடன் பெரும்பாலும் மூன்று ஆண்டுகளுக்குக் கீழ்க்கண்ட நோக்கங்களுக்குத் தரப்படுகின்றது.

(1) மாடு, கால்நடை வாங்கல்.

(2) விவசாய நோக்கங்களுக்கு விவசாயக் கருவிகள், பொறிகள், மாட்டுவண்டி முதலிய வாங்கல்.

(3) நில மீட்பு (Land reclamation).

(4) கிணறுகள் தோண்டல், ஆழப்படுத்தல், பழுது பார்த்தல்.

(5) கால்நடைக் கொட்டில், பண்ணையகம் (form shed), கிடங்கு முதலிய கட்டல், அவற்றிற்கு வேலியமைத்தல்.

(6) தோட்டம், பழத் தோட்டம் (orchards), தோட்டக்கால் (Plantation) அமைத்தல்.

(7) பால் பண்ணை, கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றிற்குப் பொறிகள், இயந்திரச் சாதனங்கள் வாங்குதல்.

(8) பொறிகளைப் பழுது பார்த்தல், புதுப்பித்தல், பழையன கழித்து மாற்றாகப் புதியன வாங்கல்.

எந்த நோக்கத்திற்காகக் கடன் அளிக்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்கு மட்டுமே அது செலவிடப்படவேண்டும். அங்ஙனம் செய்யாதுபோனால் கொடுக்கப்பட்ட கடன் உடனே திருப்பிச் செலுத்தப்படுமாறு கோரப்படலாம்; மேற்கொண்டு கடன் வழங்குதல் நிறுத்தப்படலாம்; கடன்மீது தண்டவட்டி (Pena interest) விதிக்கவும் படலாம். குறுகிய காலக் கடன் உற்பத்திக் கடன் எனப்படுகின்றது. உற்பத்தியைச் சாராத நோக்கங்களுக்கு அது பயன்படுத்தப்பட்டால் இதனால் பணவீக்கம் மிகுந்து பொருளாதார நிலை பாதிக்கப்படும்.

மாநில வங்கிகள் ரொக்கக் கடன் (Cash credit) வசதிகளைக் கீழ்க்கண்ட பிணையங்களை ஏற்றுக்கொண்டு வழங்குகின்றன.

(i) விவசாய விளைபொருள்கள் அடைமானத்தின்மீது

(ii) முடிவுறப் பெற்ற சரக்கு (Finished goods), முடிவுறாச் சரக்கு, பண்டங்கள்.

(iii) அரசினர் கடனுறுதிச் சீட்டு, மத்திய நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்கள், கருவூலச் சீட்டுகள் (Treasury certificates), தேசீய சேமிப்புப் பத்திரங்கள் போன்ற பிணையங்கள் மீது சந்தை மதிப்பில் 90%.

(iv) சங்கங்கள் எழுதித் தந்துள்ள பத்திரங்கள், ரொக்கக் கடன் உடன்பாடுகள் மத்திய வங்கியால் மேலெழுதித் தரப்பட்டவையாக இருத்தல்வேண்டும்.

மிகவும் அவசரமான நெருக்கடி நேரத்தில் பிணைகள் ஏதுமின்றி மத்திய வங்கிக்கு மாநில வங்கி கடன் தருவதுமுண்டு.

கொடுத்த கடனை மத்திய வங்கிகள் சரிவரப் பயன்படுத்துகின்றனவா என்று மேற்பார்வை செய்யும் உரிமை மாநில வங்கிக்கு உண்டு. தவணை வைப்பு ரசீதின் பிணையின் மேல் வைப்புத் தொகையில் 90%க்கு மிகாது வைப்பாளருக்குக் கடன் தரப்படலாம். அவ் வைப்பின்மீது அளிக்கப்படும் வட்டிக்கு மேல் 1% அல்லது $1\frac{1}{2}$% கூடுதல் வட்டி இவ் வகைக் கடன்மீது வசூலிக்கப் படும். ரிசர்வு வங்கி, பதிவாளர் ஆகியோரைக் கலந்து வட்டி விகிதங்கள் நிருணயிக்கப்படுகின்றன. குறுகிய காலக் கடன்மீது வசூலிக்கும் வட்டியைவிட சிறிது மிகுதியான வட்டி மத்திய காலக் கடன்மீது விதிக்கப்படுகிறது. இவ் வட்டி விகிதங்கள் ரிசர்வு வங்கியின் வங்கி வீதத் (Bank Rate) தையும் பொறுத்துள்ளன என்பதைக் கூறவும் வேண்டுமோ?

அட்டவணை

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்கல் நடவடிக்கை

ரூ. இலட்சத்தில்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
கடன்கள்					
வழங்கியது (மொத்தம்)	1.95.07	4.07,89	6.63.60	7,22,86	7,47,59
குறுகிய காலம்	1,83,82	3,81.36	6,27,57	6,88,88	7,01,29
மத்திய காலம்	11,25	26,52	36,03	33,98	46,30
நிலுவை நின்றது (மொத்தம்)	1,66,69	3.07,93	4,58.95	5,09,76	5,34.27
குறுகிய காலம்	...	2,50.98	3,87.36	4,31,37	4.38.66
மத்திய காலம்	...	56.95	71,09	78,39	95,61
தவணை கடந்தது	6,97	9,34	23,11	27,55	35,36

அட்டவணை

மாநில வங்கிகள் 1970-71 இல் வழங்கிய கடன்

நோக்கங்கள் வாரியாக ரூ. இலட்சத்தில்

விவரம்	
குறுகிய காலக் கடன் (மொத்தம்)	702,74
பருவகால வேளாண்மை நடவடிக்கைகள்	411,72
விளைபொருள் சந்தையிடுகை (கொள்முதல் உட்பட)	51,72
விவசாய விளைபொருள் பக்குவப்படுத்தல்	69,67
பிற விவசாய நோக்கங்கள் உள்ளீடுகள் (inputs) வழங்கல் உட்பட	40,52
தொழில் நோக்கங்கள்	15,33
நுகர்ச்சிக் கடன்	1,71
நுகர்ச்சிப் பண்டங்கள் அளிப்பு உள்ளிட்ட பிறநோக்கங்கள்	112,07
மத்திய காலக் கடன் (மொத்தம்)	46,30
கிணறு தோண்ட, பழுது பார்க்க	3,55*
பொறிகள் வாங்க	3,60*
மாடுகள் வாங்க	53*
நிலத்தைச் சிறிய அளவில் சீர்படுத்த	1,37*
பிற விவசாய நோக்கங்கள்	13,66*
தொழில் நோக்கங்கள்	51*
பிற	14,71*

* பீகார், குஜராத், தமிழ்நாடு குறித்த விவரங்கள் நீங்கலாக.

நிருவாகம்

உச்சி வங்கிகளின் நிருவாகம் அவற்றின் பேரவையின்கண் அடங்கியுள்ளது. பேரவை பெரும்பாலும் ஆண்டுக்கொரு முறை கூடும். அக் கூட்டத்தில் ஆண்டறிக்கையைப் பரிசீலித்தல், இலாபப் பங்கீடு, இயக்குநர் தேர்ந்தெடுத்தல் ஆகிய செய்திகள் இடம்பெறும்.

மாநில வங்கியின் நிருவாகக் குழுவினரை இயக்குநர் அவை என்று குறிப்பிடுகின்றனர். பெரும்பாலும் மத்திய வங்கிகளின் பிரதிநிதிகளே மாநில வங்கியின் இயக்குநர் அவையில் இடம் பெறுகின்றனர். மாநில அரசு, இயக்குநர் அவைக்குத் தன் பிரதி நிதிகளாகத் தனிநபர்களையும் அரசு அலுவலரையும் நியமிப்ப துண்டு. இங்ஙனம் நியமிக்கப்படும் இயக்குநர் எண்ணிக்கை மொத்த இயக்குநர் எண்ணிக்கையில் ஒரு சிறு விகிதமாகவே இருக்கும். இயக்குநர் அவை அடிக்கடிக் கூடி செயற்பாடுகளைக் கவனிப்பது அவ்வளவு எளிதல்ல. ஆகவே, இயக்குநர்களில் ஒரு

சிலரைக் கொண்ட செயற்குழு (Executive Committee) ஒன்று இயக்குநர்களால் அமைக்கப்படுகிறது. இக் குழு இயக்குநர் அவை அளித்துள்ள அதிகாரங்களுக்கு உட்பட்டுச் செயலாற்றும்.

மாநில வங்கியின் அன்றாட அலுவல்களைக் கவனிக்க முழுநேர ஊழியர் நியமிக்கப்படுகின்றனர். இவர்களில் முதன்மை நிலையி லிருப்பவர் பொது மேலாளர் அல்லது செயலாளர் என அழைக்கப் படுகின்றனர். சில மாநிலங்களில் முதன்மை அலுவலர் நிருவாக இயக்குநர் (Managing Director) என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இயக்குநர் அவையிலும் இடம்பெறுகின்றனர்.

கூட்டுறவு நாணயத் துறையில் மாநில வங்கி முதன்மையிடம் பெற்றுத் திகழ்வதால் இவ் வங்கியின் முதன்மை அலுவலர் நல்ல தகுதி பெற்றவராக இருப்பது இன்றியமையாதது. வங்கியத் துறையில் இவர் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். கூட்டுறவுச் செயல் முறைகளையும் நன்கு அறிந்திருக்கவேண்டும். இயக்குநர் அவையினருடன் இணைந்து செயல்படும் ஆற்றல் இவருக்கு இருக்கவேண்டும். இயக்குநர்களில் பலர் வங்கிய நுட்பங்களை அறிந்திருப்பது அருமையாக இருக்கக் கூடுமாதலின், முதன்மை அலுவலரே அவர்களுக்குத் தக்க யோசனைகளைத் தந்து வங்கியைச் செம்மையாக நடத்தி வரவேண்டும்.

நிருவாகச் செலவு

நாட்டிலுள்ள உச்சிக் கூட்டுறவு வங்கிகளின் மொத்த நிருவாகச் செலவு 1960-61இல் ரூ. 88 இலட்சமாக இருந்தது 1970-71இல் ரூ. 366 இலட்சமாக உயர்ந்து நின்றது. இருப் பினும் மொத்த நடைமுறை முதலில் 0.53% ஆகவே நிருவாகச் செலவு அமைந்தது குறிப்பிடத்தக்கது. மாநில வங்கிகளனைத்தும் சேர்ந்து 1970-71இல் ஈட்டிய இலாபம் ரூ. 4·36 கோடியாக இருந்தது. மணிப்பூர் மாநிலக் கூட்டுறவு வங்கியைத் தவிர பிற மாநில வங்கிகளனைத்தும் 1970-71இல் ஆதாயத்தில் நடைபெற்று வந்தன.

மாநில வங்கிகளின் செயற்பாடு—ஒரு மதிப்பீடு

பொதுவாகக் கூறுமிடத்து நாட்டிலுள்ள மாநில வங்கிகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மத்திய வங்கி களுக்குக் கடன் வசதி அளிப்பதிலும், கூட்டுறவுக் கடன் துறையில் மாநில அளவில் தலைமையேற்றுக் கடமைகளைச் செய்வதிலும் மாநில வங்கிகள் சிறப்பாகச் செயலாற்றி வந்துள்ளன. இருப்பினும், இவை மேலுஞ் சிறப்பாகச் செயலாற்ற நிரம்ப

வாய்ப்பு உண்டு. எடுத்துக்காட்டாக, ரிசர்வு வங்கி இவற்றிற்கு அளித்த குறுகிய காலக் கடன் வரம்பு (Credit limit) முழு அளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை. மத்திய காலக் கடன் வரம்பு பாதியளவிற்கே பயன்படுத்தப்பட்டது. பொதுமக்களிட மிருந்து வைப்புத் திரட்டுவதில் இவ் வங்கிகள் மேலும் ஆர்வமும் அக்கறையும் காட்டவேண்டும். மாநில வங்கிகளின் செயற் பாட்டில் காணப்படும் சில முக்கிய குறைபாடுகளாவன.

மாநில வங்கிகள் சரியான முறையில் மத்திய வங்கிகளை மேற் பார்வை அல்லது ஆய்வு செய்வதில்லை. இதற்குக் காரணம் தம்மி டம் போதிய அலுவலர்களில்லை என்று மாநில வங்கிகள் கூறுகின் றன. காரணம் எதுவாயினும், மத்திய கூட்டுறவு வங்கிகள் சீரிய முறையில் செயல்பட்டு வந்தால்தான் மாநில வங்கிகள் சிறப்பாக இயங்க முடியும். மத்திய வங்கிகளிடமிருந்து கடன்களைத் திரும் பிப் பெறுமலேயே பணம் திரும்பப் பெற்றது போன்று காட்டும் ஏட்டுப் பதிவுகளைச் சில மாநில வங்கிகள் செய்து வந்துள்ளன. இது உண்மை நிலையை மறைத்து இயக்கத்திற்கு ஊறு விளைவிக் கும் செயலாகும்.

ரிசர்வு வங்கியின் அறிவுரைகளுக்கு மாறுகச் சில உச்சி வங்கி கள் தமது நிதிகளை மிகவும் உன்னிப்பாக முதலீடு செய்வதில்லை. சில வங்கிகள் தனிநபர்களுக்குப் பெருமளவு கடன்களை இன்னமும் வழங்கி வருவது ரிசர்வு வங்கியின் அறிவுரைகளுக்குப் புறம்பான தாகும்.

1970-71இல் மொத்தம் நிலுவை நின்ற கடன்களில் 6·7% அளவு தவணை கடந்தனவாக இருப்பது உண்மையிலேயே கவலை தரும் செய்தியாகும். கடந்த சில ஆண்டுகளாகத் தவணை கடந்த கடன் அளவு உயர்ந்த வண்ணமிருப்பது இயக்கத்திற்கு நல்ல தன்று எனக் கருதப்படுகின்றது. தக்க நடவடிக்கையெடுத்து மத் திய வங்கிகளிடமிருந்து கடன்களைக் குறித்த காலத்தில் வசூலிக்க மாநில வங்கிகள் முயற்சிக்கவேண்டும்.

சில மாநிலங்களில் மத்திய வங்கிகளுக்குத் தேவையான கடன் வரம்பு சரியான முறையில் நிருணயிக்கப்படவில்லை. இதன் கார ணமாகப் பல மத்திய வங்கிகள் தமது தேவைக்கு மேல் மாநில வங்கியிடம் கடன் பெற்று, உபரியாகக் காணப்பட்ட தொகையை வாணிக வங்கிகளிடம் செலுத்தி வைத்திருந்தன. சில மத்திய வங்கிகள் கடன் தொகைக்குரிய விகித அளவு பங்குமுதல் செலுத்

தாமலேயே மாநில வங்கிகளிடமிருந்து கடன் வாங்கியிருந்தன. பெருமளவு தவணை கடந்த கடன்கள் கொண்டிருந்த மத்திய வங்கிகள் சில மாநிலக் கூட்டுறவு வங்கிகளிடம் கடன் பெற்றிருந்தன. இவற்றைக் காணும்பொழுது சில மாநில வங்கிகள் சரியான தொரு விதிமுறையினைப் பின்பற்றி கடன் வழங்கலை மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

மக்களிடையே கூட்டுறவைப் பற்றி நல்லெண்ணம் பரப்பவும் நம்பிக்கையுண்டாக்கவும் கூட்டுறவு வங்கிகள் திடமான வங்கியக் கொள்கையினைக் கடைப்பிடிக்கவேண்டும். மத்திய வங்கிகள் திறமையுடன் செயலாற்ற வழிமுறைகளை வகுத்து அவற்றிற்கு வழிகாட்டியாகத் திகழவேண்டும். ரிசர்வு வங்கியின் அறிவுரைகளின்படி மாநிலக் கூட்டுறவு வங்கிச் செயலாற்றிக் கூட்டுறவு இயக்கத்திற்கு ஆக்கம் தரவேண்டும். மாநில வங்கிகளைச் சீரமைக்க அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு பல யோசனைகளைக் கூறியுள்ளது. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

பல்வேறு வழிகளில் மாநில அரசு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு உதவியளித்துள்ள இடங்களில், இயக்குநர் அவையில் மாநில அரசினரும், வேளாண்மை, கடனளிப்புத் துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றோரும்! இடம்பெறும் வகையில் இயக்குநரவை சீரமைக்கப்படவேண்டும்.

இயக்குநர் அவை கூட்டங்களில் ரிசர்வு வங்கியின் அலுவலர் கருத்தறிவிப்பாளர் (Observer) என்ற நிலையில் பங்கு கொண்டு கூட்டுறவுக் கடன்துறை மேம்பாடடைய நல்ல அறிவுரைகளைக்கூற ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

மிகவும் பொறுப்பு வாய்ந்த மாநில வங்கியின் முதன்மை அலுவலர் பதவிக்குத் திறமை மிக்க நபரையே நியமிக்கவேண்டும். தேவைப்பட்டால் ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி போன்ற வங்கிய நிலையங்களிலிருந்து அலுவலர்களைச் சில காலத்திற்குக் கடனாகப் பெறலாம்; அல்லது விளம்பரப்படுத்தி வெளியார் எவரையும் திறமையைக் கணக்கிட்டு நியமிக்கலாம்.

கூட்டுறவுக் கடன் துறை வளர்ச்சியடையா இடங்களில் மாநில அரசினர் மாநில வங்கியின் பங்கு முதலுக்கு மேலும் தொகை வழங்கி அவ் வங்கியின் சொந்த நிதியைப் பலப்படுத்தலாம். சொந்த நிதி கூடுதலானால் மேலும் கடன்கள் வாங்கவும் வழங்கவும் வாய்ப்பு ஏற்படுகின்றது,

மத்திய வங்கி மிகவும் நலிந்து விவசாயக் கடன் வழங்க வகை யற்றுக் கிடக்குமிடங்களில், அவ் வங்கி திருத்தியமைக்கப்படும் வரை, மாநில வங்கி தனது கிளையினை அமைத்துக் கடன்பெறு தகுதியுள்ள பிரதம சங்கங்களுக்குக் கடன் நேரடியாக வழங்கலாம்.

உச்சி வங்கிகளில் தேவையான அளவு அலுவலர்கள் நியமிக் கப்படவேண்டும். அலுவலர்கள் தக்க பயிற்சி பெற்றவர்களாக இருத்தல்வேண்டும். தக்க பயிற்சி பெற்ற அலுவலர்களை மாநில வங்கிகள் நியமித்துக்கொள்ள மாநில அரசு சிறப்பு மானியம் வழங்கவேண்டும். வராக் கடன்களை எடுத்துவிட மாநில அரசு தனிப்பட்ட மானியம் வழங்கவேண்டும்.

மத்திய காலக் கடன்கள் பெறுவதற்கு மாநில வங்கிகள் தக்க திட்டங்களை வகுக்கவேண்டும். இதன்வழி சிறு விவசாயிகள் பயன்பெறும் வாய்ப்பு இருத்தல்வேண்டும். மத்திய வங்கிகள் இக் கடன் குறித்து வேண்டிய செய்திகளை உரிய முறையில் மாநில வங்கிகளுக்கு வழங்கவேண்டும்.

அனைத்திந்தியக் கூட்டுறவு வங்கிகள் தம்மிடை ஏற்பாட்டுத் திட்டம்

(The All-India Mutual Arrangement Scheme for Co-operative Banks)

அனைத்திந்திய மாநிலக் கூட்டுறவு வங்கிகள் கூட்டிணைப்பு (All india state Co-operative Banks Federation) கூட்டுறவு வங்கிகளி டையே பணம் அனுப்புகை வசதிகளை வளர்க்க வேண்டி அனைத் திந்தியத் திட்டமொன்றைப் படைத்துத் தந்துளது. இத் திட்டம் மாநிலக் கூட்டுறவு வங்கிகள், இவற்றுடன் இணைந்துள்ள மத்திய கூட்டுறவு வங்கிகள், ஆகியவற்றிற்குப் பொருந்தும். இத் திட்டத் தின்கீழ் கேட்புப் பணவிடை (Demand Draft), அஞ்சல்வழி மாற்றம் (Mail Transfer), முதலிய வெளியிடலாம்; காசோலை, மாற்றுச்சீட்டு, இலாப ஈவுச் சீட்டு முதலியவற்றை வசூலிக்கலாம். ஒரு மாநில வங்கி பிறிதொரு மாநில வங்கிமீது எழுதும் பண விடையைப் பொறுத்தவரை தொகைமீது வரம்பேதும் கிடை யாது. எவ் வங்கிமீது பணவிடை தரப்படுகின்றதோ அதனிடம் வேண்டிய தொகையை எழுதும் வங்கி வைத்திருக்கவேண்டும். மாநில வங்கியின் கிளை, மாவட்ட மத்திய வங்கிகள் குறிப்பிட்ட சில வரம்புகளுக்கு உட்பட்டு ஒன்றன்மீது ஒன்று பண விடைகள் விடுக்கலாம்.

அனைத்திந்திய மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டிணைப்பு
(The All india State Co-operative Banks Federation)

கூட்டுறவுக் கடன் அமைப்பை வலுப்படுத்தவும், வளர்ச்சி யடையாத இடங்களின் விரைவான வளர்ச்சிக்கு வகை செய்யவும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஒரு கூட்டிணைப்பு இருத்தல் நலம். என்று பேராசிரியர் காட்கில் கருத்துத் தெரிவித்தார். மாநில வங்கி களின் பிரச்சினைகளை ஆராயவும் இது பேருதவியாக இருக்கு மென்றும் கருதப்பட்டது. 1964 மே 19ஆம் நாள் இக் கூட்டிணைப்புப் பதிவு செய்யப்பெற்றது. நாடு முழுமையும் செயல் எல்லை கொண்ட இக் கூட்டிணைப்பின் தலைமையலுவலகம் பம்பாயில் அமைந்துள்ளது.

மாநில வங்கிகளின் பெருந்தலைவர்கள் இக் கூட்டிணைப்பின் உறுப்பினராவர். உறுப்பினர் வங்கிகள் தமது நடைமுறை முதலைப் பொருத்து, ஆனால் குறிப்பிட்ட ஒரு தொகைக்குக் குறையாத ஆண்டுச் சந்தா கூட்டிணைப்பிற்குச் செலுத்துகின்றனர்.

உறுப்பினர்களின் பிரச்சினைகளையும் பிற வங்கிய, கூட்டுறவுப் பிரச்சினைகளையும் கலந்து உரையாடி தீர்வுகளைக் காண்பது இக் கூட்டிணைப்பின் முக்கிய நோக்கமாகும். மத்திய அரசு, மாநில அரசினர், ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி, தொழில் நிதியக் கூட்டுரு போன்ற நிதி நிலையங்களுடன் தொடர்பு கொள்ளல், உறுப்பினர் களிடையே புள்ளி விவரங்கள், செய்திகள் முதலியவற்றைத் திரட்டி பரிமாறிக்கொள்ளல், மாநாடுகள், கருத்தரங்குகள் செயற் குழுக்கள் அமைத்துத் தொடர்புள்ள செய்திகளை ஆராய்தல், அனைத்திந்தியப் பரஸ்பர திட்டத்தை நிருவகித்தல் போன்ற பிற நோக்கங்களும் இக் கூட்டிணைப்புக்கு உண்டு.

மாநில வங்கிகளின் கூட்டிணைப்புக் கீழ்க்காணும் பிரச்சினைகளை ஆராய்ந்து வருகிறது :

1. கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களுக்குக் கடன் வசதி யளித்தல்.
2. அரசினர் பங்கு முதலில் பங்கேற்றல்.
3. விவசாயக் கடன் நிலைபேறுக்க நிதியை வளர்த்தல்—அர சினர் உதவி, வங்கிகள் வழங்கிவரும் விகிதம்.

4. கூட்டுறவு வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்பின் படிவம்.
5. பணியருக்கு மேலூதியம் வழங்கல்.
6. தொழிற் கூட்டுறவுகளுக்குத் தவணைக் கடன் வழங்கல்.
7. மத்தியக் கால விவசாயக் கடன்.
8. ரிசர்வு வங்கியிடம் கடன் வரம்பு பெறுதலில் உச்சி வங்கிகள் காணும் இடர்ப்பாடுகள்.
9. வைப்புகளின் மீது வட்டி செலுத்துகையில் வருமான வரி பிடித்தம் செய்வது.
10. குறுகிய கால, மத்திய கால, நீண்டகாலக் கடன்களை ஒருங்கிணைத்தல்.
11. கூட்டுறவு வங்கிகளும் வாணிக வங்கிகளும் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
12. வைப்புத் திரட்டல், கிளைகள் திறத்தல்.
13. உச்சி வங்கியிலும், மத்திய வங்கியிலும் பொதுப் பணியர் முறை உருவாக்கல்.
14. பிரதம சங்கங்களை வலுப்படுத்தல்.
15. வைப்புக் காப்பீடு.
16. தனிநபர் உச்ச அளவு கடன்பெறும் திறன் நிருணயித்தல்.
17. மத்திய வங்கிகள் மேற்பார்வை — ஆய்வு ஏற்பாடுகள்.
18. கூட்டுறவு வங்கிகள் முதன்மை வங்கித் திட்டத்தில் பங்கேற்றல்.
19. சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை-சிறு விவசாயிகளின் பிரச்சினைகள்.
20. உச்சி வங்கியின் நிருவாகக் குழுவிற்கு அரசு நியமனம் செய்தல்.
21. வாணிக வங்கிகள் பிரதம சங்கங்களுக்குக் கடன் வழங்கல்.
22. உச்சி வங்கிகளில் பணியமைப்பு – கிளை முகவர்கள் பயிற்சித் திட்டம்.
23. கடனளிப்பு, திருப்பிச் செலுத்துதலில் பருவ முறையை நிலைநாட்டல்.

9. நிலவள வங்கிகள்

கூட்டுறவுத் துறையில் குறுகிய கால, மத்தியகாலக் கடன்களை யளிக்கும் அமைப்பினைக் கடந்த அத்தியாயங்களில் கண்டோம். குறுகிய காலக் கடன் பயிர்ச் செலவுக்குப் பயன்படுகிறது. விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து முதலியவை வாங்கவும் பிற வேளாண்மைச் செலவுகளுக்கும் இக் கடன் தேவைப்படுகிறது. உழவு மாடுகள், கறவை மாடுகள் வாங்க, விவசாயக் கருவிகள் வாங்க, கிணறு பழுது பார்க்க என்பன போன்ற தேவைகளுக்கு மத்திய காலக் கடன் தேவைப்படுகின்றது. நிலம் சீர்திருத்த, கிணறு தோண்ட, நீரேற்றுப் பொறி (Pump set), டிராக்டர் (Tractor) வாங்க என்பன போன்ற செலவுகளுக்கு நீண்டகாலக் கடன் தேவைப்படுகிறது. ஒரே கடன்வழங்கு நிறுவனம் எல்லா வகைக் கடன்களையும் அளித்தாலென்ன என்ற கேள்வி எழலாம்.

குறுகிய காலக் கடன் விரைவில் பயன் நல்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுச் சில திங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டியதாக அமைகிறது. நீண்டகாலக் கடன் அவ்வகை நோக்கம் கொண்டதல்ல. நீண்டகாலக் கடனைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சீர்திருத்தம் நாளடைவில் பலன் தரும். பலனைப்பெற சில ஆண்டுகளாகும். ஆகவே, இக் கடனைத் திருப்பிச் செலுத்த பல ஆண்டுகளாகும். கடனைத் திருப்பிச் செலுத்த கடன் வாங்குவோரின் திருப்பிச்செலுத்துத் திறனை ஆராய்ந்தறிய வேண்டும். நீண்டகாலக் கடனுக்குப் பிணையாக நிலத்தை அடைமானம் வைக்கும்படி கோர வேண்டியிருக்கிறது. நீண்டகால நோக்கில் கடன் கோருபவரின் நிதிநிலை எப்படியிருக்குமென்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. அவருடைய பிற அசையும் சொத்துகளை (Movables) நம்பியிருப்பதும் நன்மை பயக்கக் கூடியதல்ல. இவற்றின் மதிப்பு ஏற்றத்தாழ்வுக்கு ஆளாவது ஒருபுறமிருக்க இவற்றைப் பாதுகாத்துக் கெடாமல் வைத்திருப்பது

எளிதல்ல. நீண்டகாலக் கடனுக்குப் பிணையாக அளிக்கப்படும் சொத்து எளிதில் அழிக்கக்கூடாத, நெடுபயன் நல்கும், திடமான சொத்தாக இருக்கவேண்டும். கடன் நிலுவையாக நிற்கும் நேரத்திலும் சொத்துக் கடன் கோருபவரால் பயன்படுத்தக்கூடிய வகையில் அமையவேண்டும். குறுகியகால நிதிகளில் புழங்கும் வாணிக வங்கிகளோ, வட்டித் தொழிலர்களோ, கூட்டுறவு வங்கிகளோ நீண்டகாலக் கடன் வழங்கும் பணியை ஏற்க முடியாது. ஏனெனில், இவர்களிடம் நீண்டகாலத்திற்குப் பயன்படுத்தக்கூடிய நிதிவசதி கிடையாது. நீண்டகால நிதிய வசதிகள் கொண்ட நிறுவனங்கள் விவசாயத் துறைக்குக் கடன் வழங்க அஞ்சுகின்றன. இதற்குக் காரணம் விவசாயம் சிற்றளவில் நன்கு ஒழுங்குபடுத்தாத முறையில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருவதேயாகும். மற்றும் மழையின்மை, வெள்ளம், பூச்சிநோய் முதலான காரணங்களால் விளைச்சல் பாதிக்கப்படுவதுண்டு. மேற்கண்ட நிலையில் விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன் வசதிகளையளிக்கத் தனிப்பட்டவகை நிதி நிறுவனம் தேவையென்று உணரப்பட்டது.

நீண்டகாலக் கடனளிக்க நிலத்தை அடைமானம் கோருவது அவசியமாக இருப்பதைக் கண்டோம். நில அடைமானத்தின் பேரில் கடன் வழங்குவது சிக்கல்கள் மிகுந்த தொழிலாகும். நில உரிமை, நில உரிமை மாற்றம், மரபுமுறை இறங்குரிமை (inheritance) முதலிய குறித்த சட்டங்கள் நுணுக்கமாக அறிந்தவர்களே சொத்தின் உரிமையாளர்களை நிருணயித்து அவர்களுக்குக் கடன் வழங்கலாம். நீண்டகாலக் கடன் வழங்க நீண்டகால நிதி வேண்டும். நீண்டகால நிதியைத் திரட்ட கடனீட்டுப் பத்திரங்களை (Depentures) வெளியிடும் முறையே பெரும்பாலும் கையாளப்படுகின்றது. சிறு பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவது எளிதல்ல. அங்ஙனம் வெளியிட்டாலும் அவற்றைப் பொதுமக்கள் பெருமளவில் வாங்குவர் என்று கூற முடியாது. இவற்றையெல்லாம் கருதி நீண்டகாலக் கடன் வழங்க தனியொரு அமைப்புத் தேவைப்பட்டது.

தேவையான அளவுக்கு எளிய வட்டியில் விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன் தரும் பொருட்டு நில அடைமான வங்கிகள் நிறுவப்பட வேண்டுமெனக் கருதப்பட்டது. கூட்டுறவுத் தத்துவங்களின் அடிப்படையில் நில அடைமான வங்கிகள் நிறுவப்பட வேண்டுமென 1926ஆம் ஆண்டு கூடிய கூட்டுறவுப் பதிவாளர்கள் மாநாடு பரிந்துரைத்தது. பின்னர் விவசாயத்தின் மீதான அரசினர் குழு, மைய வங்கிய விசாரணைக் குழு, கிராம வங்கிய விசாரணைக் குழு போன்ற குழுவினரும் விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன் அளிக்க மிகவும் பொருத்தமான முகமை அடைமான வங்கிகளே என்று பரிந்துரைத்தன.

நில அடைமான வங்கி நிறுவப்பெறுதல்

பஞ்சாபில் ஜங் (Jhang) என்னுமிடத்தில் 1920ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு நில அடைமான வங்கி நிறுவப்பெற்றது. பின்னர் வங்காளத்திலுள்ள நௌகான் என்ற இடத்திலும் அஸ்ஸாமிலுள்ள கௌகாத்தி என்ற இடத்திலும் நில அடைமான வங்கிகள் துவக்கப் பெற்றன. 1927ஆம் ஆண்டில் அன்றைய சென்னை மாகாணத்தில் மட்டும் பத்துக் கூட்டுறவு நில அடைமான வங்கிகள் நிறுவப்பெற்றிருந்தன.

சென்னை மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் செம்மையாக வளரப் பரிந்துரைகள் செய்ய வேண்டி அமைக்கப்பட்ட டௌன் சென்டு குழுவினர் (Townsend Committee) (1927-28) மத்திய கூட்டுறவு நில அடைமான வங்கி (Central Co-operative Land Mortgage Bank) அமைக்கப்பட வேண்டுவதன் அவசியத்தைத் தன் அறிக்கையில் குறிப்பிட்டது. இதையொட்டி 1929ஆம் ஆண்டு சென்னையில் மத்திய நில அடைமான வங்கி நிறுவப்படலாயிற்று. இந்த நிகழ்ச்சியே கூட்டுறவு அடைமான வங்கிகளின் முறையான துவக்கத்தின் முதற்படியாகக் கருதப்படுகிறது. கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீட்டை மையப்படுத்தவும், மாகாணத்திலுள்ள பிரதம நில அடைமான வங்கிகளின் செயற்பாட்டை ஒருங்கிணைக்கவும் இவ் வங்கி நிறுவப்பெற்றது. இதையடுத்துப் பிரதம வங்கிகள் பல அமைக்கப்பெற்றன. 1940ஆம் ஆண்டுவரை 119 பிரதம நில அடைமான வங்கிகள் சென்னை மாகாணத்தில் மட்டும் நிறுவப் பெற்றிருந்தன. இதற்கிடையே பம்பாயில் 1935இல் மத்திய நில அடைமான வங்கியொன்று அமைக்கப் பட்டது. பின்னர் மைசூர், கொச்சி, ஒரிசா முதலிய இடங்களில் மத்திய நில அடைமான வங்கிகள் அமைக்கப்பெற்றன. மொத்தத்தில் நில அடைமான வங்கிகள் வளர்ந்து வந்த போதிலும், அவற்றின் வளர்ச்சி ஒரு சீராக இல்லை. பல மாநிலங்களில் முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் ஒரு நில அடைமான வங்கி கூட ஏற்படுத்தப்படவில்லை. இயங்கிவந்த வங்கிகளும் பழங் கடன்களை அடைக்கவே கடன்களை வழங்கிவந்தன. விவசாய மேம்பாட்டிற்குக் கடனளிப்பது என்ற கொள்கை பரவவில்லை. பெரிய நிலக்கிழார்களே நில அடைமான வங்கிகளால் பயனடைந்து வந்தனர். சிறு விவசாயிகளும் நடுத்தர அளவு விவசாயிகளும் இவ் வங்கியினால் பயன்பெறவில்லை என்ற கருத்துப் பரவலாக இருந்துவந்தது. 1950-51இல் 5 மத்திய நில அடைமான வங்கிகளும், 286 பிரதம நில அடைமான வங்கிகளும் செயல் பட்டு வந்தன. இவ் வங்கிகள் வேளாண்மையை வளப்படுத்தி விவசாயத்துறை செழிக்க உதவும் நோக்கங்களுக்குக் கடன்

அளிப்பதைத் தம் நோக்கமாகக் கொள்ளவேண்டும் என்று புதியதொரு உணர்வுடன் செயல்படத் துவங்கியது முதல் பல மாநிலங்களில் நிலவள வங்கிகள் ((Land Development Banks) எனப் பெயர் மாற்றம் பெற்றன. ஆனால், சில மாநிலங்களில இவ் வங்கிகள் இன்னமும் நில அடைமான வங்கிகளென்றே அழைக்கப் படுகின்றன. பெயர் எப்படி அமைந்திருப்பினும், நீண்ட காலக் கடன விவசாய வளர்ச்சிக்கு அளிககப்பட வேண்டுமென்ற புது நோக்கு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது.

நில அடைமான வங்கிகளின் செயற்பாடு முதல் ஐந்தாண்டுத் திட்டகால முதல் சுறுசுறுப்படைந்தது என்றாலும், கணிசமான வளர்ச்சி *1960-61* முதல் காணப்பட்டது எனபதைப் புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. *1950-51*இல் மத்திய நிலவள வங்கிகள் 5 மட்டுமே இருந்தன; *1960-61*இல் *18* வங்கிகள் நிறுவப் பெற்றிருந்தன. இக் காலத்தில் இவ் வங்கிகளின் செலுத் திய முதல் ரூ. *0·31* கோடியிலிருந்து ரூ. *4·33* கோடியாக வளர்ந் தது. இவை வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்கள் நிலுவை நின்றது ரூ. *6·75* கோடியிலிருந்து ரூ. *36·53* கோடியாக உயர்ந்து சென்றது. நடைமுறை முதலும் ரூ. *7·72* கோடியிலிருந்து ரூ. *47·60* கோடியாக வளர்ச்சியுற்றது. வழங்கிய கடன் தொகை யும் ரூ. *1·33* கோடியிலிருந்து ரூ. *11·62* கோடியாக உயர்ந்தது.

1960-61 இலிருந்து *1970-71* வரை மத்திய நிலவள வங்கிகள் கண்ட வளர்ச்சி மிகவும் பாராட்டத்தக்கது. கீழ்க்காணும் அட்டவணை இவ் வளர்ச்சியினைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

அட்டவணை

மத்திய நிலவள வங்கிகள் ரூ. இலட்சத்தில்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*
எண்ணிக்கை	18	18	19	19	19
செலுத்திய முதல்	4,33	15,39	30,94	38,86	48,88
இதில் அரசு வழங்கியது	2,09	5,48	7,28	8,06	10,68
காப்பு நிதி	1,11	2,65	5,49	6,69	9,10
கடனீட்டுப் பத்திரம் வெளியிட்டது	10,33	50,25	1,30,64	1,51,97	1,58,44
நிலுவை நின்றது	36,53	1,78,37	4,26,11	5,70,80	7,24,90
பிற கடன் பெற்றது (வைப்புகள் உட்பட)	5,65	10,18	25,66	21,97	24,59
நடைமுறை முதல்	49,74	2,16,13	5,12,38	3,68,74	3.41,22
கடன் தீர்நிதி முதலீடுகள்	6,91	38,07	84,99	1,18,05	1,57,54
கடன்கள் வழங்கியது	11,62	56,41	1,43,62	1,53,26	1,68,28
நிலுவை நின்றது	36,61	1,63,26	3,95,06	5,11,98	6,37,65
தவணை கடந்தது	1,22	3,05	3,81	5,41	11,06
கடன் நோக்கம் கடன் மீட்பு	3,08	3,37	1,83	1,16	84
நிலம் வாங்க	9	42	27	19	1,48
நிலச் சீர்திருத்தம்	4.65	14,39	35,47	9,49	8,96
கிணறு தோண்ட, பழுது பார்க்க	...	17,05	68,58	59,11	57,82
பொறிகள் வாங்க	3,45	16,13	29,13	57,28	74,10
பிற நோக்கங்கள்	36	5,05	8,34	26,08	25,58

1970-71இல் நாட்டில் 19 மத்திய நிலவள வங்கிகள் செயல்பட்டு வந்தன. இவ் வங்கிகளின் செலுத்திய முதல் ரூ.48.88 கோடியாகவும், இதில் அரசு வழங்கியது ரூ. 10·68 கோடியாகவும் வளர்ந்து நின்றது குறிப்பிடத்தக்கது. கடந்த சில ஆண்டுகளில் இவ் வங்கிகளின கடனீட்டுப் பத்திர வெளியீடு பெருமளவு வளர்ந்திருப்பது இவற்றின் தொழில் பெருகிய பாங்கினைக் காட்டுகிறது. பத்தாணடுக் காலத்தில் கடன்கள் வழங்கியது ரூ. 11·62 கோடியிலிருந்து ரூ. 168·28 கோடியாக வளர்ந்தது இவ் வங்கிகளின் வளர்ச்சிக்குச் சான்ருக அமைகிறது. பழங்கடனைத் தீர்க்கும் பொருட்டு அளிக்கப்பட்ட கடனளவு படிப்படியாகக் குறைந்து, நிலவளத்தை மேம்படுத்தும் பொருட்டுப் பாசன வசதிகளுக்காக கிணறு தோண்டுதல், பொறிகள் வாங்குதல் போன்ற நோக்கங்களுக்குப் பெருவாரியாகக் கடனளிக்கப்பட்டது வங்கிகள் உற்பத்திப் பெருக்கத்திற்குக் கடனளிப்பதை உறுதிப்படுத்துகிறது.

பிரதம நிலவள வங்கிகள்
(Primary Land Development Banks)

பிரதம நிலவள வங்கிகள் 1950-51இல் 286 மட்டுமே இருந்தன. பத்தாண்டுகள் கழித்து இவ்வெண்ணிக்கை 463 ஆக வளர்ச்சியுற்றது. இந்தப் பத்தாண்டுக் காலத்தில் உறுப்பினர் எண்ணிக்கை 2·15 இலட்சத்திலிருந்து 6·69 இலட்சமாகப் பெருகிற்று. பிரதம வங்கிகள அளித்த கடனகள் 1950-51இல் ரூ 1·29 கோடியாக இருந்தது 1960-61இல் ரூ. 7·17 கோடியாக மேலோங்கிற்று. இதே காலத்தில் நடைமுறை முதலும் ரூ. 6·6 கோடியிலிருந்து ரூ. 28·47 கோடியாகப் பெருகியது. நிலுவை நின்ற கடனகள ரூ. 6·28 கோடியிலிருந்து ரூ. 24·66 கோடியாக உயர்ந்தது.

மூன்ரும் திட்டகாலத் துவக்கத்திலிருந்து பிரதம நிலவள வங்கிகள் சுறுசுறுப்பாகச் செயலாற்றலாயின. கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் இதனைத் தெளிவுபடுத்தும்.

அட்டவணை

பிரதம நிலவள வங்கிகள் ரூ. இலட்சத்தில்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
எண்ணிக்கை	463	673	740	809	865
உறுப்பினர் நிலை	669,212	1,844,653	2,841,747	3,122,086	3,536,535
செலுத்திய முதல்	1,97	11,18	25,26	33,64	41,55
காப்பு நிதிகள்	49	1,55	2,98	3,94	6,13
கடன் வாங்கியது (வைப்பு உட்பட)	24,53	1,24,20	2,31,52	3,66,39	4,49,13
நடைமுறை முதல்	28,47	1,51,70	3,45,45	4,49,96	5,50,66
கடன்கள் வழங்கியது	7,17	41,23	1,03,76	1,13,22	1,18,94
நிலுவை நின்றது	24,66	1,24,33	2,85,56	3,66.87	4,48,27
தவணை கடந்தது	64	4,42	7,06	9,79	17·47

பிரதம நிலவள வங்கிகள் வழங்கியுள்ள கடன்களில் தவணை கடந்து நிற்கும் தொகை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருவது கவலை தரும் செய்தியாகும். இதன் காரணங்களையும், இதனாலேற் படும் விளைவுகளையும் பின்னர்க் காண்போம்.

நீண்ட காலக் கடன்துறை அமைப்பு

நம் நாட்டில் நீண்ட காலக் கடன்துறை ஒரே வகையினதாக அமையவில்லை. பல மாநிலங்களில் பல்வகை அமைப்பில் கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவற் றைக் காண்போம்.

(i) அடித்தளத்தில் பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள், உச்சியில் இவற்றின் கூட்டிணைப்பான மத்திய நிலவள வங்கி.

(ii) மத்திய நிலவள வங்கி தன் கிளைகள்வழி விவசாயி களுக்கு நேரடியாகக் கடன் வழங்குவது.

(iii) மத்திய நிலவள வங்கிகள் தமது கிளைகள் வழியாகவும், பிரதம நிலவள வங்கிகள் வழியாகவும் செயல்படுதல்.

கூட்டிணைப்பு அமைப்பு (Federal Structure) ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், ஹரியானா, கேரளா, மத்தியப்பிரதேசம், மகாராட்டிரம், மைசூர், ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ் நாடு, மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களில் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. பீகார், குஜராத், ஜம்மு-காஷ்மீர், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஒற்றையமைப்பு (Unitary Structure) கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அடித்தளத்திலுள்ள பிரதம வங்கிகளின் செயல் எல்லை மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றது. சில மாநிலங்களில் பிரதம வங்கிகளின் செயல் எல்லை மாவட்டம் முழுமைக்கும் அல்லது சில தாலுக்காகளுக்கும் பரவியுள்ளது. மற்றுஞ் சில மாநிலங்களில் பிரதம வங்கிகள் தாலுக்கா அளவில் செயல்பட்டு வருகின்றன. மைசூர், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் மத்திய நிலவள வங்கிகள், தமது அதிகாரங்களைப் பரவலாக்கிப் பணிகளை விரைவு படுத்தும் பொருட்டு, மாவட்ட அல்லது பிராந்திய அள வில் கிளைகளை நிறுவியுள்ளன. தமிழ் நாட்டிலுள்ள சில பிரதம வங்கிகள் வட்டார அளவில் செயல்பட்டு வருகின்றன. ஒற்றை யமைப்பு முறை கடைப்பிடிக்கப்பட்டு வரும் குஜராத், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் மத்திய நிலவள வங்கியின் கிளை கள் தாலுக்கா அளவிலும் அதற்கும் குறைந்த பரப்பிலும் செயல் படுகின்றன.

நீண்ட காலக் கடன் துறைக்கு எவ்வகை அமைப்புப் பொருத்த மானது என்ற கேள்வியைப் பல கூட்டுறவுக் குழுவினரும் ஆராய்ந்து, கூட்டிணைப்பு அமைப்பே சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தனர். இச் செய்தியை அண்மையில் ஆராய்ந்த அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு (1969) ஆரம்ப நிலையில் தனிக்த இப்பக்கமுள்ள பிரதம நிலவள வங்கிகள் பயிற்சி பெற்ற, தகுதி வாய்ந்த, திறமையுடைய அலுவலரால் நிருவகிக்கப் பட வேண்டுமென்றும், இந்த அலுவலர்கள் மத்திய நிலவள வங்கி யின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படவேண்டுமென்றும் பரிந்துரைத்தது. பிரதம நிலவள வங்கியின் செயல் எல்லையும் அளவும் சூழ்நிலையைப் பொருத்தும், கடன் கோரும் விவசாயி களின் வசதியை யொட்டியும், தன்னைக் கட்டிப் போகுமளவுக்குக் கொடுக்கல் வாங்கல் இருக்கும் வாய்ப்பினைப் பொருத்தும் நிருண யிக்கப்படவேண்டும்.

கூட்டிணைப்பு அமைப்பின் நன்மைகள்

மத்திய நிலவள வங்கி தனது கிளைகள் வழி நேரடியாகக் கடன் வழங்குவதைவிட, பிரதம நிலவள வங்கிகள்வழி விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் வழங்குவது பலவாற்றானும் சிறந்தது.

கடன் வாங்குவோர் தாமே கூடி அமைத்து நிருவகிக்கும் பிரதம நிலவள வங்கியின் உறுப்பினர்கள் கடன்பெறும் நபர்களே யாவர். எனவே அவ் வங்கியின் செயற்பாட்டில் இவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளுவர். உள்ளூர் வாசிகளைப் பற்றியும் அவர்கள் நடவடிக்கைகள் பற்றியும் உறுப்பினர்கள் அறியக் கூடு மாதலால், அவர்களது கடன் விண்ணப்பத்தைப் பரிசீலிப்பது, கடன் பணத்தைக் குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்துவது போன்ற பணிகளைச் செவ்வனே செய்வது எளிது. கடன்களைக் குறித்த காலத்தில் வசூலிப்பதிலும் பிரதம வங்கிகள் காட்டக் கூடிய அளவு அக்கறையை மத்திய வங்கியின் கிளைகளிடம் எதிர் பார்க்க முடியாது. காரணம், பிரதம வங்கி மேலும் கடன் வசதிகளைப் பெற குறித்த நேரத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதேயாகும். கிராமப்புறங்களிலுள்ள சேமிப்புகளைத் திரட்டி கிராமக் கடனீட்டுப் பத்திரங்களில் (Rural Debentures) அவற்றை முதலீடு செய்யுமாறு பிரதம நிலவள வங்கிகள் முயற்சி செய்யுமளவுக்கு மத்திய வங்கியின் கிளைகள் முயன்று வெற்றி காண்பது அரிது. பிரதம வங்கிகள் வசூலிக்கும் பங்குமுதல் இருவகைகளில் பயன் தருகின்றது. ஒன்று அவ் வங்கிக்கு ஓரளவு சொந்த நிதி கிடைக்கின்றது. மற்றது, உறுப்பினர்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை தவணை

கடந்துவிட்டால் பங்கு முதல் கணிசமாகவுள்ள பிரதம வங்கிகள் தமது சொந்த நிதியிலிருந்து பணத்தைக் கட்டி தவணை கடந்த பாக்கியைக் குறைக்கக் கூடும் என்பது.

நிதி திரட்டும் வழிகள்

பிரதம நிலவள வங்கிகள் விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடனளிக்க நிதியினை எங்கிருந்து பெறுகின்றனவென்று காண்போம். முதலாவதாகப் பங்கு முதல்; இரண்டாவதாக நுழைவுக் கட்டணம்; மூன்றாவதாக வைப்புகள்; நான்காவதாக மத்திய நிலவள வங்கியிடமிருந்து கடன்கள்; ஐந்தாவதாக அரசினரிடமிருந்து உதவித் தொகை, மானியம்; ஆறாவதாகப் பிற வழிகளில் கடன் பெறுதல்.

மத்திய நிலவள வங்கிகள் கீழ்க்காணும் வழிகளில் தமக்குத் தேவைப்படும் நிதியினைத் திரட்டுகின்றன:

(i) பங்கு முதல்

(ii) நுழைவுக் கட்டணம்

(iii) கடனீட்டுப் பத்திரம் (Debenture) வெளியீடு

(iv) மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரில் ஸ்டேட் வங்கியிடமிருந்து தற்காலிகக் கடன்.

(v) வைப்புகள்

(vi) மானியங்கள், உதவித்தொகை, கட்டணங்கள்

(vii) பிற நிதிகள்

(viii) அரசு, ரிசர்வு வங்கி போன்றவற்றிடம் கடன் நடைமுறையில் நீண்டகாலக் கடன் அளிக்கத் தேவைப்படும் நிதியைத் திரட்டுவன மத்திய நிலவள வங்கிகளே. மத்திய நிலவள வங்கி திரட்டக் கூடிய கடனளவு அதன் செலுத்திய முதல், காப்பு நிதி ஆகியவற்றைப் போன்று இத்தனை மடங்காக இருக்கலாம் என்று நிருணயிக்கப்படும்.

பங்குமுதல்

உறுப்பினர்கள் தாம் வாங்கும் கடன் தொகையில் ஒரு விகிதத்தைப் பங்கு முதலாகச் செலுத்தவேண்டும். பெரும்பாலான மாநிலங்களில் கடன் தொகையில் 5% பங்கு முதலாகச் செலுத்தப்படுகிறது. மகாராட்டிரத்தில் கடன் கோருவோர் கடன் தொகையில் 10% அளவுக்குப் பங்கு முதல் செலுத்தவேண்டும்

குஜராத் மாநிலத்தில் ஐயாயிரம் ரூபாய் வரை கடன் வாங்க 5% பங்கு முதலும், அதற்கு மேற்பட்ட தொகைக்கு 7½% பங்கு முதலும் செலுத்தப்பட்டு வருகிறது.

மத்திய நிலவள வங்கியிடமிருந்து பிரதம நிலவள வங்கிகள் கடன் வாங்கக் கடன் தொகையில் 4% பங்கு முதலாகச் செலுத்து கின்றன.

நிலவள வங்கிகள் தக்க நிதிநிலை பெற்று அதன்வழி தேவை யான அளவு கடன் வாங்கல், வழங்கல் பணிகளை மேற்கொள்ள வகைசெய்யும்பொருட்டு அவற்றிற்கு அரசு பங்கு முதல் வழங்குதல் இன்றியமையாதது எனக் கிராமக் கடன் விசாரணைக் குழு பரிந்துரைத்தது. இதையொட்டி ரிசர்வு வங்கி, தேசிய விவசாயக் கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதியொன்று நிறுவி, இந் நிதியிலிருந்து நீண்டகாலக் கடன் வசதியளிக்கும் நிலவள வங்கிகளின் பங்கு முதலுக்குத் தொகை வழங்க, மாநில அரசுகளுக்குக் கடன் அளிக்கிறது. கிராமக் கடன் விசாரணைக் குழுவினர் தமது பரிந்துரைகளில், நிலவள வங்கிகளின் பங்கு முதலில் 51%அளவினையேனும் அரசினர் வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டனர். மாநில அரசினர் மேற்கண்ட பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய நிலவள வங்கிகளின் பங்கு முதலுக்கு மட்டுமே தொகை வழங்கிவந்தனர். பிரதம நிலவள வங்கிகளுக்குப் பங்கு முதல் ஏதும் வழங்கவில்லை. இதன் காரணமாக, பிரதம வங்கிகள் தமது நிதி வசதிகளுக்கு மத்திய நிலவள வங்கியைப் பெரு மளவுக்கு நம்பியிருக்கும் நிலை இருந்து வந்தது. இதைக் கண்ணுற்ற கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு, ரிசர்வு வங்கி தனது தேசிய விவ சாயக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள்) நிதியிலிருந்து மாநில அரசுகளுக்குப் பிரதம நிலவள வங்கிகளின் பங்கு முதலுக்குத் தொகை வழங்கும்பொருட்டுக் கடன் வழங்க வேண்டுமெனப் பரிந் துரைத்தது. இதன் பயனாக, 1969-70 முதல் பிரதம நிலவள வங்கி களின் பங்கு முதலுக்குத் தொகை வழங்க மாநில அரசினருக்கு ரிசர்வு வங்கி கடனளிக்க முடிவு செய்தது. இங்ஙனம் ரிசர்வு வங்கி யிடம் பெற்ற கடனிலிருந்து மாநில அரசு ஒரு பிரதம வங்கி அல்லது மாவட்ட நிலவள வங்கியின் கிளைக்கு வழங்கும் பங்கு முதல் ரூ. 25,000க்கு மிகாமல் இருக்கவேண்டும். தகுதிமிக்க பிரதம நிலவள வங்கியாக இருப்பின் இவ்வரம்பு ரூ. 50,000 வரை இருக்கலாம். இந்தக் கடன் 12 ஆண்டுக் காலத்திற்கு வழங்கப்படும். மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னரே இக் கடன் திருப்பிச் செலுத்தல் துவங்கும். பன்னிரண்டு ஆண்டுகளில் சமமான தொகையாக அசல் தொகை திருப்பித்தரப்படவேண்டும். முதல்

இரண்டு ஆண்டுகளுக்கு வட்டி ஏதும் விதிக்கப்படுவதில்லை. அடுத்த மூன்று ஆண்டுகட்கு 2% வட்டியும், பின்னர் நான்கு ஆண்டுகட்கு 2½% வட்டியும், கடைசி மூன்று ஆண்டுகட்கு 3% வட்டியும் வசூலிக்கப்படும். எந்தப் பிரதம வங்கிக்கு மாநில அரசு பங்குமுதல் வழங்க விரும்புகிறதோ அவ் வங்கி கேட்புத் தொகையில் (Demand) 15%க்கு மேல் தவணைகடந்து இருத்தலாகாது. அவ் வங்கியின் துணைவிதிகள் மாநில அரசை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள இடந்தரவேண்டும். கடன் பெறும் உறுப்பினர்களிடம் கடன் தொகையில் 5% அளவுக்குப் பிரதம நிலவள வங்கி பங்கு முதல் வசூலிக்கவேண்டும். மற்றும் மாநில அரசு, ரிசர்வு வங்கிக்கு விண்ணப்பம் அனுப்புமுன், குறிப்பிட்ட பிரதம நிலவள வங்கிகள் ஒவ்வொன்றுடைய தேவைகளையும் சரிவரக் கணக்கிடவேண்டும்.

கடனீட்டுப் பத்திரம் (Debentures)

கடனீட்டுப் பத்திரம் என்பது கடன் வாங்கியுள்ள நிறுவனம் தான் கடன் பெற்றதற்குச் சான்றாக அளிக்கும் ஆவணமாகும். நிறுவனத்தின் முத்திரை இடப்பட்டுள்ள இந்த ஆவணத்தில் முதல், வட்டி, பிணையாகக் காட்டப்பட்டுள்ள சொத்து, கடனின் காலம் போன்ற பல செய்திகள் அடங்கியிருக்கும்.

மத்திய நிலவள வங்கிகள் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டுத் தமக்குத் தேவைப்படும் முதலைத் திரட்டுகின்றன. வங்கியின் சொத்துகள் கடனீட்டுப் பத்திரத்திற்குப் பிணையாக அமைகின்றன. கடனீட்டுப் பத்திரத்தின் தொகை பல்வேறு அளவில் இருப்பதுண்டு. ரூ. 100/-, ரூ. 500/-, ரூ. 1,000/-, ரூ. 10,000/-, போன்ற அளவில் பல கோடி ரூபாய் வரிசையாக வெளியிடப்படுவதுண்டு. கடனீட்டுப் பத்திரத்தை வாங்குபவர் வங்கியின் கடனாளர் (Creditor) என்ற நிலையிலுள்ளார். கடனீட்டுப் பத்திரங்கள் பல வரிசைகளாகப் பல்வேறு தொகைகளுக்கு வெளியிடப்பட்டாலும் அவற்றின் உரிமையாளர்களுக்கு ஒரே வகையான சம கோருரிமை கிடைக்கிறது. இப் பத்திரங்களை அரசு பொறுப்புறுதி (Guarantee) செய்வதால் இதில் முதலீடு செய்பவர்களுக்குத் தமது முதல் பாதுகாப்பாக உள்ளது என்ற உறுதியுண்டு. மற்றும் இப் பத்திரங்களை அரசு ‘பொறுப்புரிமையர் பிணையங்கள்’ (Trustee Securities) என்று அறிவிப்பது இவற்றின் மதிப்பை மேலும் உயர்த்துகிறது.

கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுகையில், நிலவள வங்கி, என்னென்ன சொத்துகளைப் பிணையாகக் காட்டுகின்றனவென்று ஆராய்ந்தால் பெரும்பாலும் கடன்கோரியுள்ள உறுப்பினர்களின்

அடைமானங்களே அச் சொத்துகளாக இருப்பது புலப்படும். இந்தச் சொத்துகளை நிலவள வங்கி பெறுவதற்கு இடைக்கால நிதி (interim finance) தேவைப்படுகிறது. இந் நிதி அரசு அல்லது பிற முகமையிடமிருந்து பெறப்படுகிறது. இந் நிதியைக் கொண்டு அடைமானம் தந்துள்ள நபர்களுக்குக் கடனளித்து வங்கி அடைமானம் பெற்றவர் (Mortgagee) என்ற உரிமையைப் பெறுகின்றது. இந்த உரிமையை அடிப்படையாகக் கொண்டு மத்திய நிலவள வங்கி கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு அதன்வழி கிடைக்கும் தொகையைக் கொண்டு இடைக்கால நிதியாகப் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும். இந்திய ஸ்டேட் வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி போன்ற நிறுவனங்கள் இடைக்கால நிதிவசதியை அளிக்கின்றன.

கடனீட்டுப் பத்திரதாரர்களின் நலனைக் கவனித்துக் கொள்ள மாநில அரசு பொறுப்புரிமையர் (Trustee) ஒருவரை நியமிக்கும். எல்லா மாநிலங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் பொறுப்புரிமையராக நியமிக்கப்படுகிறார். கடனுக்குப் பிணையாக அமைந்துள்ள அடைமானங்களும் வங்கியின் பிற சொத்துகளும் பொறுப்புரிமையரிடம் சட்டமுறையாக அமைவு (Vest) பெற்றுள்ளன.

நிலவள வங்கியின் இயக்குநர் அவை கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட தீர்மானம் இயற்றுவர். இத் தீர்மானம் பொறுப்புரிமையருக்கு அனுப்பப்படும். அவர் இவ் வெளியீட்டை அனுமதித்து அரசின் பொறுப்புறுதியைப் பெற்று என்ன நிபந்தனைகளின் பேரில் பத்திரம் வெளியிடப் படலாமென ரிசர்வு வங்கிக்குப் பரிந்துரைப்பார். ரிசர்வு வங்கி ஒப்புதல் அளித்த பின்னர் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடப்படும். நிலவள வங்கி கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுமுன் அவற்றை வாங்கக் கூடிய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation) இந்திய ஸ்டேட் வங்கி, பிற வாணிக வங்கிகள் முதலியவற்றையணுகி அவை எடுத்துக் கொள்ள ஒப்பியிருக்கும் அளவுக்கு உறுதியாகப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளுமெனப் பொறுப்புறுதி பெறும். இங்ஙனம் ஒப்புறுதி செய்யப்பட்ட தொகைக்கு மேல் பத்திரங்கள் வெளியிடப்பட்டால் பிற முகமைகளை நிலவள வங்கி அணுகி ஒப்புறுதி பெறும்.

செய்தித் தாள்களில் விளம்பரம் செய்து பொதுமக்களைத் தாம் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்க நிலவள வங்கிகள் அழைப்பு விடுக்கும். பத்திரங்கள் அனைத்தையும்

பொதுமக்கள் வாங்கிவிட்டால் இச் செய்தி செய்தித்தாள் வழி அறிவிக்கப்படும். ஓரளவு பத்திரங்களே பொதுமக்களால் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பின், மீதமுள்ள பத்திரங்களை ஒப்புறுதியளித்த நிலையங்கள் தாம் மொத்த ஒப்புறுதியில் எவ்வளவு எடுத்துக் கொள்ள ஒப்பினார்களோ அந்த விகிதத்தில் எடுத்துக் கொள்ள கடமைப்பட்டன. ஒப்புறுதியளித்த தொகைமீது ஒப்புறுதியாளர் (underwriter)களுக்குக் கழிவு (Commission) செலுத்தப்படும். சில நேரத்தில் நிலவள வங்கிகள் தரகர்களை நியமித்துப் பத்திரங்களைப் பொதுமக்களிடம் விற்க ஏற்பாடு செய்வதுண்டு.

கடனீட்டுப் பாத்திரங்கள் 7 முதல் 15 ஆண்டுக் கால அளவை உடையனவாயிருப்பது வழக்கம். இந்தக் கால முடிவில் கடனைத் திருப்பித்தர நிலவள வங்கி ஏற்பாடு செய்யவேண்டும். இதற்காக ஒவ்வோர் ஆண்டும் 'கடன்தீர் நிதி' (Sinking Fund) அமைத்துக் கடன் பத்திரத்தின் கால அளவையொட்டி கடன் தொகைக்கு ஈடான தொகையை (கடன் பத்திரங்களின் தொகையை அவை வெளியிடப்படும் ஆண்டுகளால் வகுத்துப் பெறப்படும் தொகையை) கீழ்க்கண்டவாறு முதலீடு செய்கின்றன :

(i) முதலீடு செய்யும் மொத்தத் தொகையில் 20%க்குக் குறையாமல் அரசாங்கப் பிணையங்கள் (Government Securities)

(ii) மொத்தத் தொகையில் 60%க்கு மிகாத அளவு பிற மாநில நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்குதல்.

(iii) மாநிலக் கூட்டுறவு வங்கியில் 20% தொகை தவணை வைப்புகளாகப் போட்டு வைக்கப்படலாம்.

கடனீட்டுப் பத்திரங்கள்மீது வட்டி அரையாண்டுக்கொரு முறை பத்திரதாரர்களுக்குச் செலுத்தப்படுகிறது, பத்திரத்தின் கால அளவு முடிவுற்றதும் பத்திரதாரர்களுக்குப் பணம் திரும்பிக் கொடுக்கப்படும்.

பத்திரங்களின் வகைகள்

நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படும். அவை சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்கள், கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள், சிறப்பு வளர்ச்சி கடனீட்டுப் பத்திரங்கள் என்பனவாகும்.

சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்கள் (Ordinary Debentures) சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்கள் பொதுமக்களும் பொது நிலையங்களும் வாங்கிக் கொள்ளுமாறு வெளியிடப்படுகிறது. இப் பத்திரங்கள்மீது அளிக்கப்படும் வட்டியும், வெளியீட்டு விலையும் பணச் சந்தை நிலவரத்தைப் பொருத்திருக்கும். நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, இந்திய ஸ்டேட் வங்கி, இந்திய ரிசர்வு வங்கி, மத்திய மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வாணிக வங்கிகள் உள்ளாட்சி ஆணையங்கள் பிற நிலவள வங்கிகள் வாங்கிக் கொள்ளுகின்றன. 1965 செப்டம்பர்வரை வெளியீட்டில் .60% அளவுக்கு முதலில் கூறிய மூன்று நிலையங்கள் எடுத்துக்கொண்டன. மீதமுள்ள 40% அளவு பத்திரங்களைப் பின்னர் கூறிய நிலையங்களும் ஆணையங் களும் வாங்கிக்கொண்டன.

நாட்டின் வளர்ச்சிக்குப் பல்வேறு துறைகளில் பணந்தேவைப் படுதலால் ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, இந்திய ஸ்டேட் வங்கி, இந்திய ரிசர்வு வங்கி ஆகிய நிலையங்கள் தொடர்ந்து முன்போன்று பெருமளவில் கடனீட்டுப் பத்திரங்களை வாங்க ஒப்புவது இயலாது என்ற நிலை உருவாயிற்று. குறிப்பிட்ட ஒரு தொகையளவுக்கு மட்டுமே இம் மூன்று நிலையங்களும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்க இயலும் என்று ஆண்டுத் துவக்கத்தில் முடிவு செய்து அறிவித்துவிடுகின்றன. இதற்கு மேலும் உள்ள கடனீட்டுப் பத்திரங்களை யார் வாங்குவர் என்ற பிரச்சினை எழுந்தபொழுது மத்திய அரசு கைகொடுத்து உதவ முன் வந்தது. 1966-67இல் துவங்கிய இவ்வுதவி ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து வரலாயிற்று. வளர்ச்சியுள்ள நிலவள வங்கிகள் செயல்பட்டு வரும் மாநிலங்களில் மத்திய அரசு கடனீட்டுப் பத்திரங்களை வாங்க ஒதுக்கிய தொகைக்கு ஈடாக மாநில அரசுகளும் தொகைகளை ஒதுக்க லாயின. பிற மாநிலங்களிலும் மாநில அரசுகள் மத்திய அரசு ஒதுக்கும் தொகையில் ஒரு குறிப்பிட்ட விகித அளவுக்குத் தாமும் நிதி ஒதுக்க முற்பட்டன. 1967-68 முதல் வாணிக வங்கி களும் கடனீட்டுப் பத்திரங்களை ஒப்பி எடுத்துக் கொள்ளுவதில் பெரும் ஈடுபாடு காட்டத் துவங்கின. 1963-64 முதல் நிலவள வங்கிகள் வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்கள் பற்பல முகமை களால் எந்த அளவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதை கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

அட்டவணை

1963-64 முதல் மத்திய நிலவள வங்கிகள் வெளியிட்ட சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்கள்

ரூ. கோடியில்

ஒப்பி எடுத்துக் கொண்ட முகமை	1963-64	1964-65	1965-66	1966-67	1967-68	1968-69	1969-70
ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு	5·11	7·11	10·50	10·87	10·43	10·87	13·14
இந்திய ஸ்டேட் வங்கி அதன் துணை வங்கிகள்	1·85	2·63	3·53	3·60	4·49	4·35	5·34
இந்திய ரிசர்வு வங்கி	3·19	4·55	4·60	4·37	4·76	4·35	4·19
மாநில அரசுகள்	2·00	0·38	7·84	12·36	12·40	17·50	19·24
மத்திய அரசு	—	—	—	7·96	14·90	14·58	14·13
கூட்டுறவு நிலையங்கள்	6·65	9·14	12·84	13·34	7·23	22·95	19·65
வாணிக வங்கிகள்	0·50	0·92	0·93	3·85	18·13	22·86	31·84
பிற	1·30	0·67	0·69	0·96	0·29	3·26	10·25
மொத்தம்	2060	25·39	40·93	57·30	72·63	100·63	118·29

மத்திய நிலவள வங்கிகள் 1970-71இல் ரூ. 127·02 கோடியளவுக்கும், 1971-72இல் ரூ. 128·48 கோடியளவுக்கும் சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டன. 1972-73இல் ரூ. 126 கோடி மதிப்புள்ள பத்திரங்கள் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. நான்காம் திட்டகாலத்தில் (1969-74) இவ் வங்கிகள் மொத்தம் ரூ. 635 கோடியளவுக்குச் சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுமெனத் திட்டமிடப்பட்டது. 1972-73 வரை ரூ. 500 கோடி மதிப்புள்ள பத்திரங்கள் வெளியிடப் படுமென்றும் 1973-74இல் ரூ. 135 கோடி மதிப்புள்ள பத்திரங்கள் வெளியிடப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இப் பத்திரங் களில் மத்திய அரசு முதலீடு செய்தது 1970-71இல் ரூ.17 கோடியாகவும், 1971-72இல் ரூ. 18 கோடியாகவும், 1972-73இல் ரூ.17 கோடியாகவும் இருந்தது.

தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், மாநில அரசுகளின் பெரும் ஆதரவின் காரணமாக நிலவள வங்கிகள் எதிர் நோக்கியதைவிட சிறப்பான அளவில் கடனீட்டுப் பத்திர வெளியீடு நடந்தேறியது. தமிழ்நாடும், மகாராட்டிரமும் திட்டமிட்ட ஆதரவின் பேரில் திரட்டியதற்கு மேலும் வாணிக வங்கிகளிடமிருந்து பத்திர வெளியீட்டிற்குப் பெரும் ஆதரவுபெற்றன.

கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள் (Rural Debentures): கிராமப் புறங்களிலுள்ள சேமிப்புகளைத் திரட்டும் நோக்கத்துடன் 1957இல் ரிசர்வு வங்கி கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள் திட்டம் ஒன்றைத் தயாரித்தது. கிராமக் கடன் விசாரணைக் குழு இத்திட்டத்தை முன்னர் பரிந்துரைத்திருந்தது. இத்திட்டத்தின்படி மத்திய நிலவள வங்கிகள் நில அடைமானத்தின் பேரில் விவசாயிகளுக்கு உற்பத்தி நோக்கங்களுக்கு ஆறு அல்லது ஏழு ஆண்டுக் கடன்களை யளித்து, இந்த அடைமானங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு தனிவரிசை கிராமக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுதல் வேண்டும். அறுவடை மாதத்திற்கு அடுத்து வரும் மாதத்தில் இக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டால் விவசாயிகள் இவற்றை வாங்கிக் கொள்ள ஏதுவாக இருக்கும். இக் கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள்மீது சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்கள்மீது வழங்கப்படும் வட்டியைவிடச் சற்று மிகுதியான வட்டி தரப்படும். இப் பத்திரங்களைத் தனிநபர்களும் பஞ்சாயத்துப் போன்ற கிராம நிலையங்களும் மட்டுமே வாங்கலாம். பொதுமக்கள் எடுத்துக் கொள்ளாது எஞ்சி நிற்கும் பத்திரங்களை ரிசர்வு வங்கி வாங்கிக் கொள்ளுமெனினும் இங்ஙனம் வாங்கிக் கொள்ளுவது மொத்த வெளியீட்டில் மூன்றில் இரண்டு பகுதிக்கு மேல் போகக் கூடாது. இத் திட்டம் 1958ஆம் ஆண்டுத் திருத்தியமைக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் விவசாயிகள் 10 அல்லது 15 ஆணடுக் காலக் கடன்களையே வேண்டினர். 7 ஆண்டுக் காலக் கடன் அவர்களுக்குப் பயனளிக்காது என்று கருதினர். திருத்தியமைக்கப்பட்ட திட்டப்படி மத்திய நிலவள வங்கி 10 முதல் 15 ஆண்டுகள் காலக் கடன்கள் வழங்கி அந்தக் கடன்களுக்குப் பிணையாகத் தரப்படும் அடைமானங்களின் பேரில் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடும். இதில் 7/15 பகுதி தனிநபர்களுக்கு விற்கப்படும். இதன் காலம் 7 ஆண்டுகளாகும். மீதமுள்ள 8/15 பகுதி 15 ஆண்டுக கால வரையறை கொண்டிருக்கும். இப் பகுதியை ரிசர்வு வங்கி எடுத்துக் கொள்ளும். இப் பத்திரங்களின் மீதான முதலும், வட்டியும் மாநில அரசினரால் பொறுப்புறுதியளிக்கப்படும்.

கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள் திட்டம் அவ்வளவாக முன்னேற்றம் காணவில்லை. எட்டு மத்திய நிலவள வங்கிகள் இத் திட்டத்தை மேற்கொள்ளவில்லை. 1967 வரை ரூ. 6·36 கோடி மதிப்புள்ள கடனீட்டுப் பத்திரங்களே வெளியிடப்பட்டிருந்தன. இத் திட்டத்தை ஆராய்ந்த கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு மத்திய நிலவள வங்கிகள் இதில் போதுமான முயற்சி மேற்கொள்ளவில்லையென்று கருதியது. நான்காம் திட்டகாலத்தில் கிராமக் கடனீட்டுப் பத்திர வெளியீடு ரூ. 30 கோடியளவுக்கு இருத்தல் வேண்டு

மென்று திட்டமிட்டது போதாது; ரூ. 40 முதல் ரூ. 50 கோடி வரை கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிட்டுக் கிராமப்புற சேமிப்புகளைத் திரட்ட வேண்டும். இங்ஙனம் திரட்டிய அளவினை அடிப்படையாகக்கொண்டே சாதாரண கடனீட்டுப் பத்திரங்களை வாங்கி ஆதரிக்கும் தொகை வரம்பை நிருணயிக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு வளர்ச்சித் திட்டத்துக்கெனக் குறிப்பிட்ட கடனீட்டுப் பத்திர வரிசை வெளியிடப்பட்டால் வாங்குவோரும் இதில் ஈடுபாடு காட்டுவர் என்று குழு பரிந்துரைத்தது.

கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள் பொதுமக்களிடையே ஆதரவு பெறாமைக்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் சிலவற்றைக் காண்போம். இப் பத்திரங்கள்மீது அளிக்கப்பட்ட வட்டி விகிதம் வாணிக வங்கிகள் ஏழு ஆண்டு வைப்புகள் மீது அளிக்கும் வட்டி விகிதத்தைவிட குறைவாக இருந்தது. இப் பத்திரங்கள்மீது அளிக்கப்படும் வட்டி வருமான வரி விலக்கு ஏதும் பெறவில்லை. மற்றும், கிராம மக்களிடம் வங்கியப் பழக்கம் வளராத நிலையில் இம்மாதிரியான கிராமக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் ? சில மாநிலங்களில் மாநில அரசினர், மின்சார வாரியம் போன்றவை கடன் திரட்டு கையில் வசதியான நிலையிலுள்ள விவசாயிகளை வற்புறுத்தி அவை வெளியிடும் கடன்பத்திரங்களை வாங்கும்படிச் செய்கின்றனர். எந்தக் காரணத்தினாலும் விளைச்சல் பாதிக்கப்பட்டால், கிராம மக்களின் வருமானம் குறைந்து முதலீடு செய்யும் திறனும் குறைந்து விடுகிறது. தேவைப்பட்ட நேரத்தில் கிராமக் கடனீட்டுப் பத்திரங்களை விற்றுவிட வாய்ப்பில்லை. இவற்றைப் பிணையாக வைத்துக் கடன் எழுப்பவும் வாய்ப்பில்லை. பன்னிரண்டு திங்களுக்குக் குறையாது புழக்கத்திலிருந்த பத்திரங்களை அவற்றை வெளியிட்ட நிலவள வங்கி, மொத்த வெளியீட்டில் 5%க்கு மிகாத அளவிற்குத் திரும்ப வாங்கிக்கொள்ள வகை செய்யப் பட்டிருக்கிறது. உண்மையாகச் சேமிப்புகளிலிருந்து அல்லாது அரசு அளிக்கும் உதவித் தொகை (Subsidy) யிலிருந்து கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்யுமாறு கோருதல், அல்லது கடன் வழங்கும்போது வசூலிக்கும் பங்குமுதல் தொகையோடு கிராமக் கடனீட்டுப் பத்திரங்களுக்குப் பணம் வசூலித்தல் போன்ற முறைகளை ரிசர்வு வங்கி ஏற்றுக் கொள்ள மறுத்தது.

விவசாய வளர்ச்சிக்குப் பெருமளவில் கூட்டுறவு நிலவள வங்கிகளும் பிற முகமைகளும் நிதி வசதிகளை வழங்கி, அதன்வழி விவசாயியின் நிதிநிலை மேம்பட உதவி வரும் இன்றைய நிலையில் வளம் பெற்று வரும் விவசாயிகள் தமது சேமிப்பில் ஒரு பகுதியைக்

கிராமக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வது அவ்வளவு கடினமானதன்று. இந்தப் பத்திரங்களை வாங்கிக்கொள்ளுமாறு விவசாயிகளை ஊக்குவிக்கும் பணியாளர்களுக்குத் தனிக் கழிவு ஏதும் தரவேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குச் சேமிப்பும் முதலீடும் மிகவும் இன்றியமையாதன என்பதையும், கிராம வளர்ச்சிக்குக் கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள் பெருவகையில் உதவும் என்பதையும் கிராம மக்கள் உணரும் வகையில் செய்திகளை விளக்கிஅவர்களை இப் பத்திரங்களில் முதலீடு செய்யுமாறு ஈர்த்தல் நிலவள வங்கியின கடமையாகும்.

சிறப்பு வளர்ச்சிக் கடனீட்டுப் பத்திரங்கள் (Special Development Defentures) நிலத்தைச் சீர்படுத்துவதற்கான அல்லது விவசாய வளர்சசிக்கான திட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயல் படுத்த சிறப்பு வளர்ச்சிக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புது முயற்சியாகும். இத் திட்டத்தின் கீழ் வெளியிடப்படும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரஙகளில் 90% விவசாய மறுநிதிக் கூட்டுருவால் வாங்கிக்கொளளப்படும். எஞ்சியுள்ள 10% பத்திரஙகளைப் பொதுமக்களோ அல்லது தொடர்புற்ற மாநில அரசோ வாங்கிகமகாள்ள வேண்டும. 1967-68இல் மத்திய நிலவள வங்கிகள் ரூ. 6·29 கோடி மதிப்புள்ள கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டிருந்தன. 1971 ஜூன் இறுதிவரை சிறப்பு வளர்ச்சிக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு மத்திய நிலவள வங்கிகள் திரட்டிய தொகை ரூ. 92·93 கோடியாக இருந்தது.

வைப்புகள் (Deposits)

நிலவள வங்கிகள் வைப்புகள்வழி நிதி திரட்டுவது மிகவும் குறைவு. அடைமானக் கடன் வழங்கும் இவ் வங்கிகள் குறுகிய கால வைப்புகளை ஏற்றுக்கொள்ளுவதில் பயனில்லை. நீண்டகாலக் கடன் வழங்க தவணை வைப்புகளைச் சில நிலவளவங்கிகள் ஏற்றுக்கொள்ளுகின்றன. ஆனுல் இங்ஙனம் திரட்டப்படும் தொகை நடைமுறை முதலில் மிகச்சிறு பகுதியாகவே இருக்கின்றது. 1971 ஜூன் இறுதியில் மத்திய நிலவள வங்கிகள் ரூ. 7·18 கோடி வைப்புகளைப் பெற்றிருந்தது. மொத்த நடைமுறை முதலான ரூ 841·22 கோடியில் இத் தொகை ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று பிரதம நிலவள வங்கிகளில் மொத்த நடைமுறை முதலான ரூ. 550·66 கோடியில் வைப்புகள் ரூ. 2·57 கோடியளவே இருந்தது, வைப்புகள் நிலவள வங்கிகளின் முதல் திரட்டும் வழிகளில் முக்கிய இடம்பெறவில்லை என்பதையுணர்த்தும்.

கடன் வழங்கப்படும் நோக்கங்கள்

பழங்கடன்களைத் தீர்க்கவே நில அடைமான வங்கிகள் கடன் தருகின்றன என்ற கருத்துப் பலகாலமாக நிலவி வந்துள்ளது. நில அடைமான வங்கிகள் என்று அந் நாளில் அறியப்பட்ட இன்றைய நிலவள வங்கிகள் துவக்கத்தில், விவசாயிகள் தமது நிலங்களையும் வீடுகளையும் மீட்டுக்கொள்ளவும், நிலத்தையும் வேளாண்மை முறையினையும் சீரமைக்கவும், பழங்கடன்களைத் தீர்க்கவும், சில நேரங்களில் நிலம் வாங்கவும் கடன் வழங்கின. அன்றிருந்த சூழ் நிலையில் விவசாயிகள் தமது நிலத்தையும் வீட்டையும் பிணையாக வைத்து வட்டித் தொழிலரிடம் பெருங்கடன் பட்டு மீளாத் துன் பத்தில் ஆழ்ந்திருந்தனர். அவர்களை வட்டித் தொழிலர் பிடியிலி ருந்து விடுவித்து அவர்கள் நிலம், வீடு முதலியவற்றை மீட்பதே முதல் வேலையாகக் கருதப்பட்டது. ஆனால், நிலைமை மாறி விவசாயி ஓரளவுக்குக் கடன் சுமைகளிலிருந்து விடுபட்ட பின்னருங்கூட இவ் வங்கிகள் தொடர்ந்து பழங்கடனை அடைக்கவே நீண்டகாலக் கடன் வழங்கிவந்தன.

உற்பத்தி நோக்குக் கடன் (Production Oriented Credit)

நிலச் சீரமைப்பு, மீட்பு, வளப்படுத்தல் போன்ற நோக்கங்களுக் கும், வேளாண்மைக்குத் தேவையான பொறிகள், கருவிகள் முத லிய வாங்கவும் நில அடைமான வங்கிகள் கடன் வழங்கவேண்டு மெனக் கிராமக் கடன் விசாரணைக் குழு (1954) பரிந்துரைத்தது. உற்பத்தி நோக்கற்ற கடன் வழங்குவதை ஊக்குவிக்கலாகாது. நாளடைவில் உற்பத்தி நோக்குள்ள திட்டங்களுக்கே கடன் வழங் கும் நிலை உருவாகவேண்டும் என்றும் குழு குறிப்பிட்டது. இருந்த போதிலும் 1961-62 வரை நிலவள வங்கிகள் பழங்கடனைத் தீர்க்கவே பெருமளவு கடன்களை வழங்கிவந்தன. ரிசர்வு வங்கி இந்தப் போக்குச் சரியானதல்ல என்று சுட்டிக்காட்டிக் கடன்களில் 80% உற்பத்தி நோக்கங்களுககு மட்டுமே வழங்கப்பட்டால்தான் நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு ஆகியவை வாங்கி ஆதரிக்கும் என்று அறிவித்தது. மற்றும் நில அடைமான வங்கி என்ற பெயரை நிலவள வங்கியென மாற்றிக்கொள்ளும் படியும் அறிவுரை தந்தது.

நிலவள வங்கிகள் கீழ்க்காணும் நோக்கங்களுக்கு நீண்டகாலக் கடன் வழங்கலாம் என்று கருதப்படுகிறது:

(i) கிணறு, குளம் தோண்டல், பழுது பார்த்தல்.

(ii) பாசன வசதிக்கு நிலத்தைத் தயாரித்தல்.

(iii) நிலமீட்பு, கரை கட்டுதல், நிலச் சீரமைப்பு.

(vi) கால்நடைக் கொட்டில், பொறிகள் வைக்கும் அறை, களத்தில் வீடு முதலிய கட்டுதல்.

(v) தோட்டம் அமைத்தல் (Horticulture).

(vi) எண்ணெய் எஞ்சின் (Oil Engine) வாங்கல்.

(vii) டிராக்டர் (Tractor), வேளாண்மைக்குரிய இயந்திரங்கள் வாங்கல்.

(viii) வெல்லம், பழுப்புச் சர்க்கரை தயாரிக்கத் தேவைப்படும் கரும்பு பிழியும் பொறிகள் வாங்க.

(ix) உள்ள நிலத்தையொட்டிய துண்டு நிலங்களை வாங்கல்.

(x) விவசாயத் தேவைகளையொட்டி வீடுகளைக் கட்டல், பழுதுபார்த்தல்.

(xi) குத்தகைதாரர் விவசாய நிலத்தை விலைகொடுத்து வாங்கல்.

(xii) கடன்களைத் தீர்த்தல்.

கடந்த சில ஆண்டுகளாக, நீண்டகாலக் கடன் உற்பத்தி நோக்கங்களுக்கே கொடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கையும், நன்கு ஆராய்ந்து திட்டப்பட்ட விவசாய வளர்ச்சித் திட்டங்களுக்கே கடன் வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திட்டவட்டமான கண்டறியக் கூடிய உற்பத்தி நோக்கங்களுக்கே கடன் வழங்கப்பட வேண்டுமென்றும், நான்காம் திட்ட காலத்தில் வழங்கப்படும் கடனில் 90% அளவாகிலும் கீழ்க்காணும் இனங்களுக்கு இருத்தல்வேண்டும் என ரிசர்வு வங்கி பணித்துள்ளது:

(அ) கிணறுகள் தோண்டல்.

(ஆ) நீரேற்றுப் பொறி (Pumpset) வாங்கிப் பொருத்துதல், அதை வைத்துப் பொருத்த அறை கட்டுதல், கால்வாய்கள் வெட்டுதல்.

(இ) டிராக்டர், விசை - ஏர் (power - tiller), தெளிப்புப் பொறி (mechanical sprinkler), போரடிப்பான் (thresher), அறுவடைப் பொறி (combine), கரும்பு

பிழிவான் (cane - crusher) போன்ற விவசாயச் சாதனங்கள் வாங்குதல்.

இன்றைக்கு நாட்டின் மிகப்பெரிய தேவை கூடுதலான விவசாய விளைபொருள் உற்பத்தியாகும். விவசாய உற்பத்திப் பெருக பண்பட்ட நிலம் தேவை. நிலத்தைப் பண்படுத்தி வளமார்ந்ததாக்க நிலவள வங்கிகள் நிதிவசதி யளிக்கவேண்டும். விரைவில் உற்பத்தியைக் கூடுதலாக்கக் கூடிய நோக்கங்களுக்கு மட்டுமே நிலவள வங்கிகள் கடன் வழங்கவேண்டும்.

கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு நிலத்தைப் பண்படுத்த நான்காம் திட்ட காலத்தில் (1969 – 74) தேவைப்படும் நீண்ட காலக் கடன் ரூ. 1,500 கோடியளவில் இருக்குமென மதிப்பிட்டது. இதில் சிறு நீர்ப்பாசன வசதிக்குப் பெரும்பகுதி கடன் வழங்கப் படும். துளைக் கிணறு 5 இலட்சம் தோண்டல், 3 இலட்சம் கிணறுகளை ஆழப்படுத்தல், 10 இலட்சம் கிணறுகள் தோண்டல், டீசல் நீரேற்றுப் பொறி 6 இலட்சம் வாங்கல், மின்சார நீரேற்றுப் பொறி 12·5 இலட்சம் வாங்கல், தனிப்பட்ட குழாய்க்கிணறு 3 இலட்சம் தோண்டல் ஆகிய சிறு நீர்ப்பாசனத் திட்டத்தில் இடம் பெறும். 1969 – 74 காலத்திற்குக் கடன் தேவைப்படும் இனங்கள் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டுள்ளன.

1.	சிறு நீர்ப்பாசனம்	ரூ.	725 கோடி
2.	நில மீட்பு (reclamation)	ரூ.	25 ,,
3.	மண்வளப் பாதுகாப்பு	ரூ.	150 ,,
4.	கனரக இயந்திரம்	ரூ.	300 ,,
5.	தோட்டங்கள், தோட்டக்கால்	ரூ.	75 ,,
6.	வட்டாரத் திட்டம்	ரூ.	125 ,,
7.	கிராம மின்வசதி	ரூ.	100 ,,
	மொத்தம்	ரூ.	1,500 கோடி

மத்திய நிலவள வங்கிகளைப் பற்றிய விவரங்களைக் கொண்ட அட்டவணையை உற்று நோக்கின் 1960 – 61இல் கடன் வழங்கப் பட்ட நோக்கங்களுக்கும் 1970-71இல் கடன் வழங்கப் பட்ட நோக்கங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடு புலனாகும். பழங்கடனைத் தீர்க்க 1960 - 61இல் அளித்த கடன் ரூ. 3 கோடிக்கும் மிகுதியாக இருந்தது. 1970 - 71இல் ரூ. 84 இலட்சமாகக் குறைந்து நின்றது. நிலத்தைப் பண்படுத்த வழங்கப்பட்ட கடன் ரூ. 4·65 கோடியிலிருந்து ரூ. 8·96 கோடி

யாக இக் காலத்தில் வளர்ந்தது. கிணறுகள் தோண்ட, ஆழப்படுத்த 1965 - 66இல் கொடுக்கப்பட்ட கடன் ரூ. 17·05 கோடி 1970 - 71இல் ரூ. 57·32 கோடியாக மேலோங்கி நின்றது. வேளாண்மைக்குத் தேவையான இயந்திரச் சாதனங்கள் வாங்க 1960 - 61இல் கொடுக்கப்பட்டது ரூ. 3·45 கோடி மட்டுமே. இத் தொகை 1970–71இல் ரூ. 74·10 கோடியாகப் பெருமளவில வளர்ந்தது குறிப்பிடத்தக்கது. உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவும் நோக்கங்களுக்கே மிகப் பெருமளவு கடன்கள் வழங்கப்பட்டு வருவதும் இதனால் தெளிவாகும்.

அட்டவணை

மத்திய நிலவள வங்கிகள் 1970 – 71இல் வழங்கிய கடன்கள் — நோக்க வாரியாக. ரூ. கோடியில்

நோக்கம்	தொகை
புதிய கிணறு தோண்டல், குளம் வெட்டல்	48·35
பழங்கிணறு, குளம் பழுது பார்த்தல் ஆழப் படுத்தல்	8·97
டீசல் என்ஜின் வாங்கிப் பொருத்தல்	39·25
மின்சார நீரேற்றுப் பொறி	15·92
பிற நீர்ப்பாசனக் கருவி	0·10
டிராக்டர்கள் (Tractors)	18·53
பிற இயந்திரச் சாதனங்கள்	0·30
கிடங்கு, களத்தில் வீடு முதலிய கட்டல்	0·74
நிலத்தைச் சமப்படுத்த, வரப்புக் கட்ட, மீட்க, வேலையிட	7·37
மண்வளப் பாதுகாப்பு (Soil Conservation)	0·18
பழத்தோட்டம், தோட்டக்கால் தயார் செய்தல்	1·42
பழங்கடன் தீர்த்தல்	0·84
நிலம் வாங்கி உரிமை பெற	1·48
பிற நோக்கங்கள்	24·84
மொத்தம் வழங்கிய கடன்	*168·28

* பின்னங்களை முழு எண்ணாக்கியதால் கூட்டல் தொகையில் மாறுபாடு காணப்படும்.

நிலவள வங்கிகள் பெரும்பாலும் 10 முதல் 15 ஆண்டுக் காலக் கடன் வழங்குகின்றன. சில நிலவள வங்கிகள் 7 ஆண்டுக் காலக் கடன்களையும் வழங்குகின்றன. கடனைக் கொண்டு வாங்கவிருக்கும் சொத்தின் ஆயுட்காலத்தைப் பொருத்துக் கடனின் கால அளவு நிருணயிக்கப்படும். குழாய்க்கிணறு தோண்டுதல் போன்ற பாசன வசதிக் கடன் 15 ஆண்டுக் காலத்திற்கு இருக்கலாம். டிராக்டர், விசை ஏர், மின்சார நீரேற்றி, எண்ணெய் எஞ்சின்

(oil engine) போன்ற சாதனங்கள் வாங்க வழங்கப்படும் கடன் 10 ஆண்டுக் காலத்துக்கு மிகக்கூடாது. கடன் காலம் குறைவாக இருப்பின் நிதியினை மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் வாய்ப்பு மிகுதியாகின்றது.

கடன் தொகை

உறுப்பினரொருவர் நிலவள வங்கியிடமிருந்து பெறக் கூடிய உச்சக் கடனளவு மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றது. பெரும்பாலும் இத் தொகை ரூ. 5,000 முதல் ரூ. 50,000 வரை இருப்பதாகக் காணப்படுகிறது. தமிழ் நாட்டில் டிராக்டர் அத்துடன் இணைந்த கருவிகள் வாங்க உயர்ந்த அளவு ரூ. 50,000 வரை கடன் தரப்படுகிறது. மகாராட்டிரத்தில் டிராக்டரும் இணைந்த கருவிகளும் வாங்க ரூ. 45,000 வரையும், கிணறு வெட்ட ரூ.20,000 வரையும், வேலி அமைக்க ரூ. 2,000 வரையும் உச்ச அளவாக நிருணயிக்கப்பட்டுள்ளது. மோட்டார் நீரேற்றி (Motor Pumpset) வாங்க வழங்கப்படும் கடனளவு அதன் குதிரை விசை (Horse Power)யைப் பொருத்துள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் வானம் பார்த்த நிலத்திற்கு ரூ. 3,000மும் கிணற்றுப் பாசனமுள்ள நிலத்திற்கு ரூ. 5,000மும் கால்வாய்ப் பாசனமுள்ள நிலத்திற்கு ரூ. 8,000மும் உச்சவரம்பாக நிருணயிக்கப்பட்டிருந்தது.

கடன் வழங்கு செயல்முறை

நிலவள வங்கிகள் நில அடைமானத்தின் பேரில் மட்டுமே கடன் வழங்குகின்றன. முன் காலத்தில் கடன் நோக்கம் முக்கியமாகக் கருதப்படாத நிலையில் நிலம் மிகுதியாக அடைமானம் வைக்கக் கூடியவர் அதற்கேற்ற அளவு மிகுதியாகக் கடன்பெற முடிந்தது. கடன் நோக்கத்திற்கேற்ப கடனளவை நிருணயிப்பது என்றமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. ஆனால், உற்பத்தி நோக்கங்களுக்குக் கடன் வழங்கும் கொள்கை மேற்கொள்ளப் பட்டதிலிருந்து கடனளவு நோக்கத்தை யொட்டி நிருணயிக்கப்படலாயிற்று.

கிணறு தோண்டுவதாக இருந்தால் அதன் ஆழம், விட்டம், மண்பாங்கு, நீர்மட்டம் முதலிய செய்திகள் ஆராயப்பட்டுக் கடன் தொகை நிருணயிக்கப்படும். மின்சார நீரேற்றி, எண்ணெய் எஞ்சின், டிராக்டர், விவசாயக் கருவிகள் வாங்கக் கடனளிக்கப்படுமேயாயின் இவற்றின் தரம், ஆற்றல் முதலியவற்றைப் பொருத்து விலையை விசாரித்துக் கடன் அளவு நிருணயிக்கப்படும். பாசன வசதி, நிலப் பண்பாடு, வேலியமைத்தல் போன்ற தேவைகளுக்குத் தொழில் வல்லுநர் மதிப்பீட்டின்படி கடன் தொகை நிருணயிக்கப் படும்.

கடன் அனுமதிக்கப்படுமுன், அதைப் பயன்படுத்தி விவசாயி பெறக்கூடிய கூடுதல் வருமானம் கடனைத் திருப்பிச் செலுத்தப் போதுமானதாக இருக்குமா என்று வங்கி ஆராயவேண்டும். விவசாயி எந்த ஒரு திட்டத்தை மேற்கொள்ள கடன் கோருகிறாரோ, அத் திட்டம் நிலவள வங்கி வழங்கும் கடனுதவி கொண்டு செயல்படுத்தப்பட்ட பின்னர் கடனைத் திருப்பிச் செலுத்த வகை செய்யுமா என்று கவனிக்கவேண்டும். கடன் வாங்குவோர் திருப்பிச் செலுத்துத் திறன் உள்ளவரா என்பது முக்கியமல்ல, எத் திட்டத்திற்காகக் கடன் வழங்கப்படுகிறதோ அத் திட்டம் கடனைத் திருப்பிச் செலுத்த வகை செய்யுமா என்பதுதான் கவனிக்கப் படவேண்டிய செய்தி.

அண்மையில் நிலவள வங்கிகள் வட்டார அடிப்படையில் கடன் வழங்கலை மேற்கொள்ளத் துவங்கியுள்ளன. குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பயன் தரும் நீர்ப்பாசன வசதி போன்ற ஒரு திட்டத்திற்கு வங்கி கடன் வழங்க முன் வரும். பயன்பெறக்கூடிய விவசாயிகளனைவரும் கடன் பெற்றுத் திட்டத்தைச் செயல்படுத்தலாம். எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்ட வட்டாரத்தில் கிணறுகள் தோண்டுவது அல்லது மண்வளப் பாதுகாப்புக்குக் கரை அமைப்பது போன்ற திட்டங்களைச் சொல்லலாம்.

நில மதிப்பீடு

நிலத்தை அடைமானமாகப் பெற்றுக் கடன் வழங்கும் நிலவள வங்கிகள் அடைமானச் சொத்தைச் சரியாக மதிப்பிடுவதன் அவசியத்தைக் கூறவேண்டுவதில்லை. பல மாநிலங்களில் பல முறைகளில் நில மதிப்பீடு செய்யப்படுகிறது.

ஆந்திரத்தில் கடந்த ஏழு ஆண்டுகளில் விற்பனைச் செய்யப்பட்ட அதே போன்ற நிலத்தின் விலை பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரித்து, அந்த மதிப்பில் 5%க்கு மிகாது கடன் வழங்குகின்றனர். தற்போது ஒவ்வொரு தாலுக்காவிலும் மதிப்பீட்டுக் குழுவொன்று அமைக்கப்பெற்று அக் குழுவினர் நில மதிப்பை நிருணயிக்கின்றனர். மகாராட்டிரத்தில், நிலவரியை அடிப்படையாக எடுத்துக்கொண்டு கடன் கோரப்படும் நோக்கத்திற்கேற்ப, நிலவரி போன்ற 300 மடங்கு, 500 மடங்கு என்று கணக்கிடுகின்றனர். பஞ்சாப் மாநிலத்தில் அடைமானம் செய்யப்படும் நிலத்தைப் போன்ற அதே கிராமத்தில் அல்லது அருகிலுள்ள கிராமத்தில் நில விற்பனை எந்தத் தொகைக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந்தது என்று கணக்கிட்டு அதில் 50% வரை கடன்

வழங்குகின்றனர். பயிர் விளையும் நிலம் மட்டுமன்றி வாடகை தரக்கூடிய வீடுகளையும் அடைமானத்திற்கு ஏற்றுக் கொள்ளு கின்றனர். வீடுகளின் மதிப்பில் 40% பிணைய மதிப்பாக ஏற்றுக் கொள்ளப்படும். ராஜஸ்தானில், அடைமான நிலம்போன்ற நிலத்தின் கடந்த 5 ஆண்டு விற்பனை புள்ளி விவரங்களின் சராசரி நில மதிப்பாக நிருணயிக்கப்படும். நிலவரியைப் போன்று 400 மடங்காக நில விலையை மதிப்பிடுவதுண்டு. இம் மதிப்பில் 50% அளவு தொகைக்குட்பட்டே கடன் வழங்கப்படும். தமிழ் நாட்டிலும் பலகாலமாக விற்பனை புள்ளிவிவர அடிப்படையில் நிலம் மதிப்பிடப்பட்டது. ஆனால், 1971 முதல் மதிப்பீட்டுமுறை மாறியது. பெற்ற கடனைக் கொண்டு நிலத்தை வளப்படுத்திய பின் அதன்வழி என்ன நிகர வருமானம் வருமோ அதைப் போன்று 8 அல்லது 10 மடங்கு தொகை நிலத்தின் மதிப்பாகும். வளப்படுத்தப்பட்ட நிலத்தில் முதலீட்டினால் கிடைக்கக் கூடிய பலன் 12½% அல்லது 10% ஆக இருக்குமென்று கணக்கிட்டு அதை யொட்டி மேற்கண்டவாறு 8 அல்லது 10 மடங்கு தொகை என்று நிருணயிக்கப்படும். மற்றும் உறுப்பினரின் திருப்பிச் செலுத்துத் திறன் (Repaying Capacity) நிருணயிக்க, வளப்படுத்துமுன் நிலத்தில் கிடைத்த வருமானம் வளப்படுத்தியபின் கிடைக்கக்கூடிய வருமானம் ஆகியவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டுத் தொகை யில் 90% என்று கணக்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

நிலத்தின் மதிப்பை மேற்கண்ட முறையில் மதிப்பீடு செய்வதுடன் நேரில் சென்று ஆய்வதும் அவசியம். பின்னர் ஆவணப் பதிவாளர் அலுவலகத்தில் கடன் கோரும் நபரின் சொத்துரிமை பற்றி சரிபார்க்க வேண்டும். வருவாய்த் துறையினரின் ஆவணங்களின் உதவி கொண்டு நிலத்தின் உண்மை உரிமையாளர் யார் என்று கண்டறிய வேண்டும். கடந்த 12 அல்லது 13 ஆண்டுகளில் சொத்துமீது ஏதும் அடைமானம் அல்லது பற்றுப் பொறுப்பு ஏற்படுத்தப் பட்டதா என்று பார்க்கவேண்டும். தமிழ் நாட்டிலும், வேறு சில மாநிலங்களிலும் நிலவள வங்கியின் அடைமான உரிமையைப் பாதுகாக்க, அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய நிலவரிக்காக வுள்ள கோருரிமை (Claim) நீங்கலாக, பிரதம நிலவள வங்கி யொன்றுக்குச் செய்து தரப்பட்ட அடைமானம் அச் சொத்தின் மீதுள்ள பிற கோருரிமைகளைவிட முன்னுரிமையுள்ளதாகக் கருதப்படும் என்று சட்டம் இயற்றப் பெற்றிருக்கிறது.

நிலவள வங்கியில் கடன்பெற விரும்பும் நபர் முதலில் அவ் வங்கியில் பங்கொன்று வாங்கி உறுப்பினராகச் சேரவேண்டும்.

பின்னர் அவருக்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகைக்குத் தக்க வாறு மேலும் பங்குமுதல் வாங்கவேண்டும். பங்கு முதலுக்கும் கடன் தொகைக்கும் 1 : 15 முதல் 1 : 20 வரை விகித நிலை வேறு படுவதுண்டு. கடன் கோரும் உறுப்பினர் குறிப்பிட்ட விண்ணப் பத்தை நிரப்பி, அத்துடன் பிணையாகத் தரப்படும் நிலத்தைப் பற்றிய பல ஆவணங்களின் நகல்களை இணைத்துக் கடன் தேவைப் படும் நோக்கம், கடன்தொகை, சீரமைப்பால் நிலம் தரக்கூடிய கூடுதல் வருமானம் முதலிய செய்திகளையும் குறிப்பிட்டு நிருண யிக்கப்பட்ட கட்டணத்துடன் அவற்றை நிலவள வங்கியின் மேலாளர்/செயலரிடம் சேர்ப்பிக்கவேண்டும். வங்கி அலுவலர் கடன்கோருபவர் பிணையாகத் தரப்படும் நிலத்தின் உரிமை யாளரா என்று ஆராய்ந்து, நிலத்தைச் சரிவர மதிப்பிட்டு, கடனைப் பெற்று என்ன சீர்திருத்தத்தை மேற்கொள்ளப் போகிறரோ அது பயன்தரவல்லதா என்று ஆராய்ந்து பின்னர் கடனை அனுமதிக்க வேண்டும். சில மாநிலங்களில் 'பொது விசாரணை' (Public) Enquiry) நடத்தி அடைமானம் செய்யப்படும் நிலத்தின்மீது வேறு எவருக்கும் கோருரிமை உண்டா என்று அறிகின்றனர். பல மாநிலங்களில் கடந்த 13 ஆண்டுகளில் சொத்தின்மீது ஏதும் வில்லங்கம் ஏற்படுத்தப்பட்டதா என்று ஆவணப் பதிவாளர் அலுவலகத்தில் சான்றிதழ் கோரி செய்திகளை அறிந்து கொள்ளுவர். பின்னர் நிலத்தை மதிப்பிட்டுக் கடனை அனுமதிக்கக் கோரி வங்கியின் இயக்குநர் அவை அல்லது கடன் குழுவின் முன் விண்ணப்பத்தை வைப்பர். கடன் அனுமதிக்கப்பட்டதும் அடை மானப் பத்திரத்தை விண்ணப்பதாரர் எழுதித் தருவார். சிறிய அளவு கடனாக இருப்பின் (பெரும்பாலும் ரூ. 2,000 முதல் ரூ.7,500 வரை) பிரதம வங்கியே கடன் தொகையைப் பட்டுவாடா செய்து விடும் பெருந்தொகைக் கடனாக இருப்பின், நிலவள வங்கியின் துணைப்பதிவாளர்வழி விண்ணப்பம் மத்திய நிலவள வங்கிக்கு அனுப்பப்பட்டு அவ் வங்கியின் செயற்குழு கடனை அனுமதித்தபின் விவசாயிக்குக் கடன் செலுத்தப்படும். பிரதம வங்கிகள் தாம் வழங்கும் கடன் தொகையை மத்திய நிலவள வங்கியிடமிருந்து பின்னர் மீட்டுக் கொள்ளும்.

சில நிலவள வங்கிகள் மொத்தக் கடன் தொகையையும் ஒரே தவணையில் வழங்கிவிடுகின்றன. சில வங்கிகள் கடன் நோக்கத் தைப் பொருத்து 2 அல்லது மூன்று தவணைகளில் வழங்குகின்றன. முன்னர் அளித்த தவணைத் தொகை குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது என்று சான்றிதழ் கிடைத்த பின்னரே எஞ்சிய தவணைகள் வழங்கப்படும். மின்சார நீரேற்றி, டிராக்டர் எண்ணெய் இயந்திரம் (oil Engine) போன்ற இயந்திரங்களை

வாங்கக் கடன் கோரியிருப்பின் வங்கி, இவற்றை விற்கும் விற்பனை யாளருக்கு நேரடியாகப் பணத்தைச் செலுத்திவிடும். பழங்கடன் தீர்க்கக் கடன் கோரப்பெற்றிருப்பின் பழங்கடனை அளித்தவரிடம் கடன் தொகை வங்கியால் நேரடியாக அளிக்கப்படும்.

நிலவள வங்கிகள் வழங்கும் நீண்ட காலக் கடன் ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். ஆண்டுத் தவணை என்று குறிக்கப்படும் தொகை முதல், வட்டி இரண்டும் சேர்ந்த தொகையாக இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் செலுத்தப் படும் தொகை ஒரே அளவினதாக இருக்கும். திருப்பிச் செலுத்து முறை பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

வட்டி விகிதம்

மத்திய நிலவள வங்கிகள் பிரதம வங்கிகளுக்குத் தாம் வழங்கும் கடன்கள்மீது 1970—71இல் 6% முதல் 7·75% வரை வட்டி வசூலித்தன. மத்திய வங்கிகள் நேரடியாகத் தனிநபர் களுக்குக் கடன் வழங்கிய மாநிலங்களில் 6% முதல் 10·5% வரை வட்டி வாங்கின. பிரதம நிலவள வங்கிகள் தாம் வழங்கிய கடன்கள்மீது 1970-71இல் 8·25% முதல் 10%வரை வட்டி வசூலித்தன. நிலவள வங்கிகள் மிகுதியான வட்டி வசூலிக் கின்றன என்ற கருத்துப் பரவலாக இருந்து வருகிறது. கடனீட்டுப் பத்திரங்கள்மீது இவ் வங்கிகள் வழங்கும் வட்டிப் பணச்சந்தை நிலைமையைப் பொருத்து அமைகிறது. இவை வசூலிக்கும் வட்டி, கடனீட்டுப் பத்திரங்கள்மீது கொடுக்கப்பட வேண்டிய தொகை யுடன் தம் செலவுகளையும் கட்டிக்கொண்டு போவதாக இருத்தல் வேண்டும். வட்டி விகிதம் மிகுதியாக இருப்பின் விவசாயியின் கடன் சுமை மிகுதியாகிறது. பருவ மழை தவறுதல் போன்ற இயற்கைக் காரணங்களால் விளைச்சல் சரியில்லாத ஆண்டுகளில் இச் சுமை விவசாயிகளைப் பெரிதும் வாட்டுகின்றது. நீண்டகாலக் கடனால் விவசாயிகள் உண்மையிலேயே பயன் அடையவேண்டு மானால் அக் கடன் குறைந்த வட்டிக்கு அளிக்கப்படல் வேண்டு மெனக் கருதப்படுகிறது.

தவணை கடந்த கடன்

நிலவள வங்கிகளின் செயற்பாட்டில் மிகவும் கவலையளிக்கும் செய்தி அவையளித்த கடன்களில் ஒரு பகுதி குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தப்படாது தவணைகடந்து நிற்பதேயாகும். 1970-71இல் மத்திய நிலவள வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தப் பட வேண்டிய கடன் ரூ. 48·80 கோடியாக இருந்தது. இதில் ரூ. 37·54 கோடியே வசூலாயிற்று. ரூ. 11·26 கோடி தவணை கடந்த பாக்கியாக நின்றது. அதாவது அந்த ஆண்டில் திருப்பிச்

செலுத்தப்பட வேண்டிய தொகையில் 23% அங்ஙனம் செலுத்தப் படாது தவணைகடந்து நின்றது. பிரதம நிலவள வங்கிகளின் மட்டத்தில் தவணைகடந்த பாக்கியிலே மேலும் கவலை தருவதாக இருந்தது. உறுப்பினர்கள் 1970-71இல் திருப்பித் தரவேண்டிய தொகை ரூ. 55·13 கோடியில் வசூலிக்கப்பட்டது ரூ. 37·66 கோடி மட்டுமே. தவணைகடந்து நின்ற தொகை ரூ. 17·47 கோடி யாக இருந்தது. ஆக, பிரதம நிலவள வங்கிகள் மட்டத்தில் தவணை கடந்த பாக்கி 31·7% ஆக இருந்தது.

கடன்கள் தவணை கடந்து நிற்பதற்குக் காரணமென்ன என்று ஆராய்ந்து பார்க்குங்கால் கீழ்க்காணும் செய்திகள் தெரியவரு கின்றன. நிலவள வங்கிகள் தொடர்ந்து நீண்டகாலக் கடன் வசதிகளை வழங்கிவர குறித்த காலத்தில் கொடுத்த கடன்களை வசூல் செய்ய வேண்டுமென்பதைத் தொடர்புற்ற அனைவரும் உணர்ந்து செயல்படவேண்டும். வழங்கப்பட்ட கடன் குறிப் பிட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டதா என்று ஆய்வு செய்வதில் மெத்தனம் கூடாது. திருப்பிச் செலுத்த நிருணயிக்கப் படும் கெடு நாள், விவசாயியின் பயிர் அறுவடைக் காலத்தை யொட்டி அமையவேண்டும். வசூலிக்கும் பணியைத் திட்டமிட்டுச் சீரான முறையில் செயல்படுத்தவேண்டும். நிலத்தைச் சரியான முறையில் மதிப்பிட்டுக் கடன் தொகையைத் தக்க அளவில் நிருணயிக்கவேண்டும். தவணைகடந்த விவசாயிகள்மீது வங்கி தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இங்ஙனம் செய்ய வேண்டிய பலவற்றைச் செய்யாத அல்லது அரைகுறையாகச் செய்துவருங் காரணத்தால் தவணைகடந்த பாக்கி ஏற்படுகின்றது.

நிலவள வங்கிகளின் நிருவாகம்

மத்திய நிலவள வங்கிகளின் நிருவாகம் அவற்றின் இயக்குநர் அவையிடம் அடங்கியுள்ளது. இயக்குநர் அவையில் பெரும்பாலும் பிரதம நிலவள வங்கிகளின் பிரதிநிதிகள் இடம் பெறுவர். சில மாநிலங்களில் அரசினர் 2 அல்லது 3 இயக்குநர்களை நியமிப்ப துண்டு. தமிழ் நாட்டின் மத்திய நிலவள வங்கியில் 56 இயக்கு நர்கள் இடம்பெறுகின்றனர்.

மாநிலக் கூட்டுறவு வங்கியும் மத்திய நிலவள வங்கியும் ஒருங் கிணைந்து செயல்படுமாகத்தான் மத்திய நிலவள வங்கியில் இயக்குநர் அவையில் மாநிலவங்கியின் பிரதிநிதிக்கு இடம் ஒதுக்கப்படுதுவண்டு.

மத்திய நிலவள வங்கி சிறப்பாகச் செயலாற்றத் திறமையான ஒருவர் அதன் தலைமை நிருவாக அலுவலராக நியமிக்கப்பட

வேண்டும். அவருக்கு நீண்டகாலக் கடன் துறையில் நல்ல அனுபவமும் ஈடுபாடும் இருக்கவேண்டும். அவருக்குத் துணையாகச் செயலாற்றும் அலுவலர்களும் தக்க தகுதி, பயிற்சியுடையவர்களாக இருத்தல் இன்றியமையாதது. அடைமானச் சொத்தாகத் தரப்படும் நிலத்தை மதிப்பிடுவதிலிருந்து, கடன் எந்தக் கிட்டத்திற்குத் தேவைப்படுகின்றதோ அதை ஆராய்ந்து முடிவு செய்வது, கடன் தொகையைப் பயன்படுத்துவதைக் கண்காணிப்பது ஈறாகப் பலப்பல கட்டங்களில் கடமைகளைச் சரிவர செய்ய பல துறைகளைப் பற்றிய நுண்ணறிவு தேவைப்படுகிறது. விவசாயத் துறை, பொறியியல் துறை, கணக்கியல் துறை போன்ற பல துறைகளில் சிறப்புத்தேர்ச்சிப் பெற்றவர்களின் உதவி இன்றைய நிலவள வங்கிகளின் நடப்புக்கு மிகவும் தேவைப்படுகிறது. ஆகவே, மாநில அளவிலுள்ள மத்திய நிலவள வங்கிகளில் தொழில் நுட்பப் பிரிவு ஒன்று அமைத்து மேற்கூறிய வல்லுநர்களை அவற்றில் நியமனம் செய்ய வேண்டும். கடன்களைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தினால்தான், குறித்தவாறு அவற்றைத் திருப்பிச் செலுத்த நிதி வசதியுண்டாகுமாதலால் இச் செய்தியைக் கருத்துடன் கண்காணிக்க முழுநேர ஆய்வாளர், மேற்பார்வையாளர்களை வங்கிகள் நியமிக்கவேண்டும். பிரதம நிலவள வங்கிகளின் செயலர் அல்லது மேலாளர் தக்க தகுதியும் பயிற்சியும் பெற்றவராக இருக்கவேண்டும். பிரதம நிலவள வங்கிகளை நடவடிக்கைகளின் அளவை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தி அவற்றின் மேலாளர்களை ஒரு பணிமுறை யமைப்பின்கீழ்க் கொண்டுவர வேண்டும். மத்திய நிலவள வங்கி இப் பணிமுறையமைப்பினை நிருவாகம் செய்யவேண்டும்.

பிரதம நிலவள வங்கிகள் தம் உறுப்பினர்களாகிய விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்குகின்றன. உறுப்பினர்களிடமிருந்து அவர்களுடைய நிலத்தை அடைமானமாகப் பெற்று இவ் வங்கிகள் அந்த அடைமானத்தின் பேரில் மத்திய நிலவள வங்கிகளிடமிருந்து கடன் பெறுகின்றன. கடன் கோருபவர்கள் 'A' வகுப்பு உறுப்பினராகச் சேருகின்றனர். அடைமானம் செய்யப்படும் நிலத்தின்மீது உரிமை, நலன் அல்லது சொத்துரிமை உள்ள 'A' வகுப்பு உறுப்பினரின் பங்காளி, கூட்டுரிமையாளர் 'B' வகுப்பு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 'B' வகுப்பு உறுப்பினர்களுக்கு உரிமைகளோ, பொறுப்புகளோ ஏதும் கிடையாது. நிலத்தைப் பற்றிய வழக்கு ஏதும் ஏற்பட்டால் அவர்களைப் பொறுப்பேற்கும்படி செய்வதற்கே 'B' வகுப்பு உறுப்பினர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

'A' வகுப்பு உறுப்பினர்கள், துணை விதிகளின்படி பிற கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பேரவையில் இடம்பெறுகின்றனர். வங்கியின் நிருவாகம், பேரவை தேர்ந்தெடுக்கும் குழுவினரிடம் (Committee) அமைந்துள்ளது. மத்திய நிலவள வங்கிகளின் இயக்குநர்களுக்குள்ள அதிகாரங்கள் போன்றே பிரதம வங்கியின் குழுவினர் அதிகாரங்களுண்டு.

நிலவள வங்கிகளின் பிரச்சினைகள்

நாடு முழுவதிலும் நிலவள வங்கிகள் ஒரு சீராக வளர்ச்சியடையவில்லை. பல பிரதம நிலவள வங்கிகள் வளமார்ந்த நிலையிலில்லை. குறைந்தது ரூ. 20 இலட்சம் கடன் நிலுவையுள்ள பிரதம வங்கிகளே ஓரளவுக்குத் தன்னைக் கட்டிக் கொள்ளும் நிலையை அடைய முடியும். சில மாநிலங்களில் பிரதம நிலவள வங்கிகள் இன்னமும் அமைக்கப்படவில்லை. கடன் பயன்படுத்தப்படுவதை முறையாக மேற்பார்வை செய்யத் தக்க ஏற்பாடுகள் இதுவரை செய்யப்படவில்லை. நிலத்தை மதிப்பிடல், திருப்பிச் செலுத்துத்திறன் நிருணயித்தல் ஆகிய செம்மையான, சீரான வகையில் மேற்கொள்ளும் பாங்கு பல மாநிலங்களில் காணப்படவில்லை. தவணை கடந்த கடனளவு மிகுந்து வருவது பெரும் பிரச்சினையாக உள்ளது. கடன் வழங்குவதில் ஏற்படும் கால தாமதம் நீண்டகாலக் கடன் துறையின் பெருங்குறையாக இருந்து வருகிறது. பல மாநிலங்களில் நீண்டகாலக் கடன் பெற 9 திங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. உற்பத்தி நோக்கத்திற்கே கடன் வழங்கப்பட வேண்டுமென்பதை நிலவள வங்கிகள் ஏற்றுக்கொண்ட போதிலும் பல மாநிலங்களில் எளிதில் கண்டுகொள்ள இயலாத நோக்கங்களுக்குப் பெரும்பகுதி கடன்கள் வழங்கப்படுகின்றன. தற்போது இருந்து வரும் கூட்டுறவுக் கடன் துறையில் நீண்ட காலக் கடன் வழங்க தனியொரு நிலையமும், குறுகிய கால மத்தியகாலக் கடன் வழங்க வேறொரு நிலையமும் செயல்பட்டு வருகின்றன. இவற்றிடையே தக்க ஒருங்கிணைப்பு இல்லாதது ஒரு பெருங்குறையே. நிலவள வங்கிகள் சிறு விவசாயிகளுக்கு உதவவில்லை என்பது ஒரு பெருங்குறை. இக் குறையைப் போக்க அண்மையில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு நிலவள வங்கிகள் செம்மையாகச் செயல்பட பல யோசனைகளைத் தந்துள்ளது. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

அடித்தளத்தில், பிரதம நிலவள வங்கிகள் மத்திய நிலவள வங்கி அமைத்துள்ள பணிமுறையமைப்பு (Cadre)த் திட்டத்தின்

கீழ் நியமிக்கப்பட்ட மேலாளர்களால் நிருவகிக்கப்படவேண்டும். இம் மேலாளர்கள் தகுதி, திறம், பயிற்சி பெற்றவர்களாயிருப்பது மிகவும் அவசியம். பிரதம வங்கிகள் தமது உறுப்பினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் வகையிலும், வளமார்ந்த தாக இருக்கும் அல்லது இருக்கக்கூடிய வாய்ப்புள்ள வகையிலும் அமையவேண்டும். மத்திய நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்க அனைத்துலக நிதிநிலையங்களிடமிருந்து நிதிவசதி பெற இந்திய அரசு முயலவேண்டும்.

வளர்ச்சியடைந்து வரும் கிராமப்புறங்களிலிருந்து கிராமக் கடனீட்டுப் பத்திரங்களுக்குப் பணந்திரட்டும் வகையில் ரூ. 20 முதல் 25 கோடிவரை கிராமப்புற சேமிப்புகளைத் திரட்ட நிலவள வங்கிகள் முயலவேண்டும். கிராமச் சேமிப்புச் சான்றிதழ் (Rural Savings Certificate)களை வெளியிட்டுக் கிராமப்புற சேமிப்பைத் திரட்டக் கூடுமென்று படும் இடங்களில் அவற்றை வெளியிடலாம். பெரிய தொகை கடன் கோருவோர் அதிக அளவு பங்குமுதல் வழங்குமாறு வேண்டப்படலாம். பிரதம நிலவள வங்கிகளில் மாநில அரசினர் பங்கு முதல் எடுத்துக்கொள்ள ரிசர்வு வங்கி தனது 'தேசீய விவசாயக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள்) நிதியிலிருந்து கடன் வழங்கலாம்.

கடன் விண்ணப்பத்தையும் தொடர்புள்ள ஆவணங்களையும் விரைவாகப் பரிசீலித்துக் கடனை விரைவாக வழங்கவேண்டும். தோண்டிய கிணற்றில் தண்ணீர்க் கிடைக்கத் தவறினால் அது காரணமாக ஏற்படும் திருப்பிச் செலுத்தாமை (default)யில் 50% அளவு மாநில அரசு வங்கிக்கு உதவித் தொகையாக அளிக்க வேண்டும். மாநிலம் ஒவ்வொன்றிலும் பொறுக்கான சில விவசாயக் கடன் சங்கங்களை நிலவள வங்கியின் முகவர்களாக நியமிக்கலாம். நீண்டகாலக் கடன் தக்கவாறு திட்டமிட்டபடி முதலீடு செய்யப்படுகிறதா, முதலீடு திட்டப்படி பலனளிக்க வல்லதா, கடனைத் திருப்பிச் செலுத்த இம் முதலீடு வகை செய்யுமா என்றெல்லாம் நன்கு ஆராய்வது வங்கியின் கடமையாகும். கடன் வழங்குமுறையை எளிதாக்கிக் காலந்தாழ்த்தலை அவசியம் தவிர்க்கவேண்டும். நில உரிமை பற்றிய விசாரணைகளை எளிதாக்க, மகாராட்டிரத்தில் உள்ளது போன்ற பொது விசாரணை முறையினைப் பிற மாநிலங்களிலும் மேற்கொள்ள சட்டமியற்றவேண்டும்.

அனைத்திந்திய மத்திய நில அடைமான வங்கிகள் கூட்டுறவு ஒன்றியம்
(The All-India Central Land Mortgage Banks Co-operative Union)

மத்திய நிலவள வங்கிகளின் கூட்டிணைப்பு (federation) அக்டோபர் 1960இல் அமைக்கப்பட்டது. மாநில அளவில் செயல்படும் நிலவள/நில அடைமான வங்கிகளும், நில அடைமான/நிலவள பிரிவு உள்ள மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் இந்த ஒன்றியத்தில் உறுப்பினராகச் சேர தகுதி பெற்றுள்ளன. உறுப்பினர்களிடையே நல்லெண்ணத்தை வளர்க்கவும், பொதுவான தொழில் நுட்ப, நடைமுறைப் பிரச்சினைகளை ஆராயவும், அவற்றிற்குத் தீர்வுகாண வழிமுறைகளை வகுக்கவும் மத்திய, மாநில அரசினர், ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு போன்ற நிலையங்களுடன் தொடர்புகொண்டு உறுப்பினர்களின் கருத்துகளைத் தெரிவிக்கவும், நீண்டகாலக் கடன் துறையைப் பற்றி ஆராய்ச்சி, சொற்பொழிவு, கருத்தரங்கு, மாநாடு முதலிய ஏற்பாடு செய்யவும், புள்ளி விவரங்களைச் சேகரித்து அதை வேண்டுவோருக்கு அளிக்கவும், உறுப்பினர்களின் வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொள்ளவும் இந்த ஒன்றியம் பாடுபடும்.

இந்த ஒன்றியத்தின் இடைவிடாத முயற்சியால் மகாராட்டிர அரசு, கடன் வழங்கு நடைமுறைகளைச சுருக்கி, கடனால் பயன் பெற்ற நிலத்தின் உரிமையாளர் எவராகவிருப்பினும் அவர் கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்புள்ளவராவார் என்ற நிலையை உறுதி செய்து சட்டமியற்றியுள்ளது. இந்தச் சட்டத்தை யொட்டி வேறு பல மாநிலங்களும் தத்தம் கூட்டுறவுச் சட்டத்தில் வேண்டிய திருத்தங்களைச் செய்துள்ளன. இதனால் விவசாயிகள் பயனடைவர். கடன் வழங்கு பணி விரைவாக நடைபெறுகிறது.

நாடு முழுவதிலும் உள்ள மத்திய நிலவள வங்கிகள் குறிப்பிட்ட நிதியாண்டுக்கு எவ்வளவு தொகை மதிப்புள்ள கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளன; இதில் ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு எவ்வளவு தொகை பத்திரங்களை வாங்கிக் கொள்ளும்; எஞ்சியுள்ள பத்திரங்களை வாங்கிக கொள்ளுமாறு யாரை அணுகுவது; வாணிக வங்கிகள், மாநில அரசுகள் எவ்வளவு பத்திரங்களை வாங்கிக் கொள்ளலாம் என்பன போன்ற பலப்பல

செய்திகளை உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்து தக்கவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தித் திட்டங்களை வெற்றிபெற வழிவகுக்க ஒன்றியம் பெரிதும் உதவுகிறது.

நீண்டகாலக் கடன் துறையின் அதிகாரப்பூர்வமான அமைப்பு என்ற முறையில் இந்த ஒன்றியம் பல பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தக்கவர்களுடன் பேசி முடிவு கண்டுள்ளனர். எடுத்துக்காட்டாகத் தக்காவிக் கடன் எனப்படும் மாநில அரசினர் வழங்கும் கடன் கூட்டுறவு நிலவள வங்கிகள் வழிதான் தரப் படவேண்டுமென ஒன்றியம் வாதிட்டு வெற்றி கண்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம், மைசூர், உத்தரப் பிரதேசம ஆகிய மாநிலங் களில் நீண்டகாலத் தக்காவிக் கடன் நிலவள வங்கிகள் வழியே வழங்கப்படுகின்றன.

நிலவள வங்கிகள் ஒன்றியம் காலாண்டு இதழ் ஒன்றை 1962–63இலிருந்து நடத்தி வருகிறது. ஆண்டுக்கொரு ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிடப் பரிசுத் திட்டம ஒன்றினை உருவாக்கியுள்ளது. சுருங்கக் கூறின் அனைத்திந்திய மட்டத்தில் நிலவள வங்கிகள் ஒன்றியம் தமது உறுப்பினர்களுக்குச் சிறந்த சேவை செய்து வருகிறது.

விவசாய மறுநிதிக் கூட்டுரு
(Agricultural Refinance Corporation)

விவசாயத்தில் நீண்டகால முதலீடு செய்ய நிதிவசதி வழங்கும் நிறுவனம் ஏதுமில்லாத நிலையினை அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழு (1954) சுட்டிக்காட்டி, அக் காலத்தில் செயல் பட்டு வந்த கூட்டுறவு நிலவள வங்கிகள் இத் துறையில் மேலும் விரிவுபடச் செயலாற்ற சில பரிந்துரைகளைத் தந்தது. தேசீய விவ சாயக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள்) நிதியினை ரிசர்வு வங்கி 1956இல் அமைத்தது இக் குழுவின் பரிந்துரையின் பேரில் தான். மத்திய நிலவள வங்கிகள் வெளியிடும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளுவதன் வழி ரிசர்வு வங்கி நீண்ட கால விவசாயத் திட்டங்களுக்கு ஓரளவுக்கு உதவ முடிந்தது. மாநில அரசுகள் கூட்டுறவுக் கடன் நிலையங்களுக்குப் பங்கு முதல் வழங்கவும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு மத்திய காலக் கடன்கள் வழங்கவும் ரிசர்வு வங்கி மேற்கூறிய தேசீய நிதியினைப் பயன்படுத்தியது. ஆனால், நீண்டகாலக் கடனமைப்பில் விவசாயத்திற்குப் பெருமளவில் முதலீடு செய்ய நிதியளிக்கும் நிறுவனம் இல்லையேயென்ற குறை இருக்கத்தான் செய்தது.

இக் குறையை நீக்கவே ரிசர்வு வங்கியும் மத்திய அரசும் கூடி யோசனை செய்து விவசாய மறுநிதிக் கூட்டுரு (Agricultural Refinance Corporation) என்னும் சட்டமுறையான நிறுவன மொன்றை அமைத்தன. விவசாய மறுநிதிக் கூட்டுரு சட்டம் 1963 மே முதல் நாள் அமுலுக்கு வந்தது. கூட்டுரு 1963 ஜூலை முதல் நாளிலிருந்து செயல்படத் துவங்கியது.

நோக்கங்கள்

விவசாயத் தேவைகளுக்கு வழங்கப்படும் மத்திய கால, நீண்ட கால நிதிவசதிகளைக் கூடுதலாக்க உதவுவதே விவசாய மறுநிதிக் கூட்டுருவின் முக்கிய குறிக்கோளாகும். மிகப் பெருமளவுக்கு முதலீடு செய்யப்படவேண்டிய நிலையில் அல்லது தற்பொழுது நடைமுறையிலிருக்கும் விதிமுறைகளின்படி இத் துறையிலுள்ள முகமைகள் (Agencies) கடன் வழங்க இயலாதிருக்கும் நிலையில் விவசாய வளர்ச்சித் திட்டங்களுக்கு நீண்டகாலக் கடன் வசதிகளை அளிக்கும் மறுநிதிய முகமையாக இக் கூட்டுரு செயல்படும். விவசாயத்திற்கு நிதிவசதியளிக்கும் மத்திய நிலவள வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வாணிக வங்கிகள் ஆகியவற்றிற்கு மாற்றாக இக் கூட்டுரு அமைக்கப்படவில்லை. விவசாய வளர்ச்சிக்கு மறுநிதி வழங்கும் இந் நிறுவனம், அரசினரும் கடன் வழங்கு முகமைகளும் விவசாய வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்களில் அக்கறை காட்டத் தூண்டும்; திட்டங்களைத் தீட்டவும், செயல்படுத்தவும் இவற்றிற்கு உதவி செய்யும்; புதுத் திட்டங்களை மாநில அரசினர், கடன் வழங்கு முகமைகளிடம் கலந்து பேசி உருவாக்கும்; பிராந்திய ஏற்றத் தாழ்வுகளை அகற்றும் வகையில் வளர்ச்சி குறைந்த பகுதிகளில் வளர்ச்சியைத் தூண்டும்.

மறுநிதி வழங்கும் துறைகள்

விவசாயம் மட்டுமல்லாது விவசாயத்தோடு தொடர்புற்ற கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை, மீன்வளம், கோழிப்பண்ணை ஆகிய துறைகளுக்கும் விவசாய மறுநிதிக் கூட்டுரு நிதியுதவி வழங்குகிறது. குறிப்பாகக் கீழ்க்காணும் நோக்கங்களுக்கு மறுநிதி வழங்கப்படுகிறது.

(i) சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள்.

(ii) நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் வரும் நிலப்பரப்பினை மீட்டுப் பாசன வசதிபெறத் தயார் செய்வது.

(iii) வனத்துறை (forestry) வளர்ச்சி.

(iv) பாசன வசதியற்ற பண்ணையமைக்க நிலத்தை மீட்பது.

(v) மண்வளப் பாதுகாப்பு வேளாண்மையைப் பொறிமய மாக்குதல்.

(vi) பயிர் நோய், பயிர்ப் பூச்சி பரவாதிருக்க விமானவழி மருந்து தெளித்தல்.

(vii) தேயிலை, காப்பி, ரப்பர், முந்திரி, தென்னை, ஏலக்காய் கொட்டைப்பாக்குத் தோட்டங்களையமைத்தல்.

(viii) விவசாய விளைபொருளைப் பாதுகாக்கக் கிடங்குகள் கட்டல்.

(ix) கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை, உள்நாட்டு-கடல் மீன்பிடிப்பு, கோழிப்பண்ணை முதலியவற்றின் வளர்ச்சி.

(x) பழத் தோட்டங்கள் நிறுவுதல்.

எவ்வகையில் உதவியளிக்கப்படுகிறது ?

விவசாய மறுநிதிக் கூட்டுரு அளிக்கும் நிதி வசதிகள் கீழ்க் காணும் வகையில் இருக்கின்றன.

1. மத்திய நிலவள வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வாணிக வங்கிகள் (Scheduled commercial banks) ஆகியவற்றிற்கு மறுநிதியளித்தல்வழி கடன் வசதி செய்து தருதல்.

2. முதல் தொகை, வட்டி ஆகியவற்றைச் செலுத்த நிபந் தனையின்றி முழுமையாக அரசு பொறுப்புறுதியளிக்கும் கடனீட் டுப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளுதல்.

3. மத்திய நிலவள வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவை நீங்கிய பிற குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு மறுநிதியமல்லாத வேறு வழிகளில் கடன் வழங்கல்.

உறுப்பினர் நிலை

விவசாய மறுநிதிக் கூட்டுருச் சட்டப்படி இந்திய ரிசர்வு வங்கி, மத்திய நிலவள வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வாணிக வங்கிகள் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, காப்பீட்டு-முதலீட்டுக் கம்பெனிகள்,

கூட்டுறவு காப்பீட்டுச் சங்கங்கள் முதலிய இக் கூட்டுருவில் உறுப்பினர்களாகும் தகுதி பெற்றுள்ளன. 1972 ஜூன் இறுதியில் உறுப்பினர்நிலை கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தது.

அட்டவணை

விவசாய மறுநிதிக் கூட்டுரு 30 ஜூன் 1972இல் இருந்த உறுப்பினர் நிலை

நிலையம்	பங்குதாரர் எண்ணிக்கை	பங்குகள் எண்ணிக்கை	பங்குகளின் மதிப்பு ரூ. இலட்சத்தில்
இந்திய ரிசர்வு வங்கி	1	5,551	555·10
மத்திய நிலவள வங்கிகள்	19	1,653	165·30
மாநிலக் கூட்டுறவு வங்கிகள்	24	1,092	109·20
வாணிக வங்கிகள்	61	1,497	149·70
ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு	1	193	19·30
பிறகாப்பீட்டு-முதலீட்டுக் கம்பெனிகள்	2	12	1·20
கூட்டுறவு காப்பீட்டுச் சங்கங்கள்	2	2	0·20
மொத்தம்	110	10,000	1,000·00

கூட்டுருவின் நிதிகள்

விவசாய மறுநிதிக் கூட்டுருவின் அனுமதித்த பங்கு முதல் ரூ. 25 கோடியாகும். இப் பங்குகளின் மீதான முதலையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த மத்திய அரசு பொறுப்புறுதியளித்துள்ளது. முதலில் வெளியிட்ட பங்கு முதல் ரூ. 5 கோடிமீது குறைந்தது $4\frac{1}{4}$% இலாப ஈவும், மறுமுறை வெளியிட்ட பங்கு முதல் ரூ. 5 கோடிமீது குறைந்தது $4\frac{1}{2}$% இலாப ஈவும் செலுத்தவும் மத்திய அரசு பொறுப்புறுதியளித்துள்ளது. மற்றும் இக் கூட்டுரு மத்திய அரசு பொறுப்புறுதியளிக்கும் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு நிதி திரட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இக் கூட்டுருவிற்கு வட்டியில்லா 15 ஆண்டுக் கடனுகை ரூ. 5 கோடியளித்துள்ளது. இந்திய அரசு அனுமதித்துள்ள பிற நிறுவனங்களிடமிருந்தும் நிலையங்களிடமிருந்தும் விவசாய மறுநிதிக் கூட்டுரு கடன் வாங்கலாம். 12 திங்களுக்கும் அதற்கு மேலும் மத்திய மாநில அரசுகளிடமிருந்தும், பிற நிலையம் அல்லது நபரிடமிருந்தும் வைப்புகளைப் பெறலாம். தம்முடைய செலுத்திய முதல், காப்பு நிதிகளைப் போன்று இருபது மடங்குக்கு மிகாத அளவு தொகைக்குள் மட்டுமே கூட்டுரு கடன் பெறலாம். 1971இல் சட்டத்தில் செய்த திருத்தத்தின் விளைவாக ரிசர்வு வங்கியின் தேசிய விவசாயக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள்) நிதியிலிருந்தும் கூட்டுரு கடன் பெறலாம். ஜூன் 1972 இறுதியில் கூட்டுரு கீழ்க்காணும் நிதி வசதிகளைப் பெற்றிருந்தது.

	ரூ. கோடியில்
வெளியிட்ட, செலுத்திய முதல்	10
மத்திய அரசிடம் கடன்	77
ரிசர்வு வங்கியிடமிருந்து கடன்	8
கடனீட்டுப் பத்திரங்கள் (மூன்று வெளியீடு)	28
மொத்தம்	123

நிருவாகம்

ரிசர்வு வங்கியின் உதவி ஆளுநர் (Deputy Governor) ஒருவரைத் தலைவராகக் கொண்ட விவசாய மறுநிதிக் கூட்டுறவின் இயக்குநர் அவையில் ஒன்பதின்மர் இடம் பெறுகின்றனர். நிருவாக இயக்குநரும், மற்றொரு இயக்குநரும் ரிசர்வு வங்கியால் நியமிக்கப்படுகின்றனர். மத்திய அரசு மூன்று இயக்குநர்களை நியமிக்கின்றது. மீதி மூன்று இயக்குநர்கள் முறையே மத்திய நிலவள வங்கிகளாலும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளாலும், ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு வாணிக வங்கிகள் காப்பீட்டு முதலீட்டுக் கம்பெனிகள் போன்ற பிற உறுப்பு நிறுவனங்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அன்றாட அலுவல்களைக் கவனிக்கச் செயற்குழுவொன்று இயக்குநர் அவையால் அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டுருவின் தலைமை அலுவலகம் பம்பாயில் உள்ளது. பிராந்திய அலுவலகங்கள் அகமதாபாத், பெங்களூர், போபால், புவனேசுவரம், கல்கத்தா, சண்டிகர், ஹைதராபாத், ஜெய்பூர், லக்நௌ, சென்னை, புதுடெல்லி, பாட்னு, திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலுள்ளன. மகாராட்டிரத்திற்கான மண்டல அலுவலகம் ஒன்று பம்பாயில் உள்ளது.

ஆலோசனைப் பணி (Consultancy Service)

விவசாய மறுநிதிக் கூட்டுருவின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிய மாநிலங்களுக்கு உதவும் பொருட்டுக் கூட்டுரு ஆலோசனைப் பணியினை மேற்கொண்டுள்ளது. 1971 ஆகஸ்டு 9ஆம் நாள் இப் பணி லக்நௌவில் மேற்கொள்ளப்பட்டது. திட்டங்களை ஆய்வு செய்து விவசாயிகளின் ஆதரவைப் பெற நிதிய முகமைகளுக்கு (financing agencies) உதவுவது; மாநில அரசினரின் தொழில் நுட்பப் பணிகள் நிதி வழங்கும் வங்கிகளுக்குக் கிடைக்கச் செய்வது; நிலநீர் ஆய்வுத்துறை இல்லாத மாநிலங்களில் தொழில்நுட்ப ஆய்விற்கு வசதி செய்து தருவது; கடன் வழங்கும் செயல் முறைகளை எளிதாக்கிக் காலந்தாழ்த்தலைத்

தவிர்த்துத் தக்கமேற்பார்வை கண்காணிப்பு ஏற்பாடுகளைச் செய்ய நிலவள வங்கிகளுக்கு உதவி செய்வது ஆகிய ஆலோசனைப் பணியின் முக்கிய நோக்கங்களாகும்.

வட்டி விகிதம்

1970 நவம்பர் 3ஆம் நாள் முதல் வழங்கப்பெறும் கடன்கள் மீது $6\frac{1}{2}$% வட்டி வசூலிக்கப்படுகிறது. துவக்கத்தில் $5\frac{1}{2}$% வட்டி வசூலித்த கூட்டுரு 1965 பெப்ரவரியில் இதை 6% ஆக உயர்த்திற்று.

கடன் தவணை

கூட்டுரு வழங்கும் மத்திய காலக் கடன் மூன்று முதல் ஐந்தாண்டுகள்வரை தவணை கொண்டிருக்கலாம். நீண்டகாலக் கடன்கள் 15 ஆண்டுத் தவணையுள்ளன. சட்டம் தவணை 25 ஆண்டு வரை இருக்க அனுமதிக்கிறது.

குறைந்தது நிதிவசதி கோர வேண்டிய அளவு மத்திய நிலவள வங்கிகளாயிருப்பின் ரூ. 5 இலட்சமாகவும், பிற நிலையங்களாயின் ரூ. 1 இலட்சமாகவும் நிருணயிக்கப்பட்டுள்ளது.

பிணையம்

நிலவள வங்கிகள் மறுநிதியம்பெற அனுமதிக்கப்பட்ட திட்டங்களைப் பொருத்தவரை, அவ் வங்கிகள் வெளியிடும் சிறப்பு வளர்ச்சிக் கடனீட்டுப் பத்திரங்கள் (Special Development Debentures) மாநில அரசினரால் முதலும் வட்டியும் திருப்பிச் செலுத்தப்படுதற்குப் பொறுப்புறுதியளிக்கப் பெற்றனவாக இருத்தல்வேண்டும். வாணிக வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட திட்டமாக இருப்பின் கடன்பெறும் விவசாயி நிதிவழங்கும் வங்கிக்கு அடைமானம் செய்து தரும் சொத்தின் மதிப்பில் 50% மறுநிதியமாக வழங்கப்படும்.

மறுநிதியம் வழங்கத் தேவைப்படும் தகுதிகள்.

1. மேற்கொள்ளவிருக்கும் திட்டத்தால் பயனடையக் கூடியவர்களில் அதில் அக்கறை காட்டவேண்டும்.

2. நியாயமான காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்த கடன்கோரும் விவசாயி கூடுதல் வருமானம் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பது அவசியம்.

3. கடன் வழங்கும் வங்கி திட்டத்தைக் கவனமாக மேற்பார்வை செய்ய வகையிருத்தல்வேண்டும்.

4. கடன் கொடுத்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்று மேற்பார்வை செய்ய வங்கிக்கு இயலவேண்டும்.

மாநில அரசின் விவசாயத்துறை, நிலநீர் இயக்கம் போன்ற இலாகாவினர் திட்டத்துக்கு வேண்டிய தொழில்நுட்ப உதவி தரவேண்டும். கடன் கோரும் விவசாயிகள் திட்டத்திற்கு வேண்டிய தொகையில் ஒரு பகுதியையேனும் தாம் முதலீடு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் திட்டம் தமது நன்மைக்குத் தீட்டப்பட்டுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து செயல்படுவர்.

மறுநிதியம் பெறும் வழிமுறை

விவசாய மறுநிதிக் கூட்டுருவிடமிருந்து மறுநிதிய வசதிபெற விரும்பும் நிலையங்கள் இதற்கென வகுக்கப்பட்டுள்ள படிவத்தில் விவரங்களனைத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவேண்டும். நிலையம் கடன் வழங்கிய 12 திங்களுக்கும் மறுநிதிய வசதிகோரி விண்ணப்பிக்கவேண்டும். கூட்டுறவு வங்கிகள் தமது மறுநிதிய விண்ணப்பங்களை மாநில அரசினர்வழி அனுப்பவேண்டும். இதன்வழி, மாநில அரசினர் கூட்டுரு மறுநிதியம் வழங்கும் வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபாடு கொள்ளும்படியான நிலை உண்டாக்கப்படுகிறது. திட்டங்களை அமுல்படுத்தும் ஒவ்வொரு கட்டத்திலும் மாநில அரசு தொடர்பு கொள்ளும்படி செய்யப்படுகிறது. மாநில அரசின் விவசாயத்துறை, நிலநீர் இயக்கம் முதலியவற்றின் தொழில் நுட்ப உதவி எல்லாக் கட்டங்களிலும் தேவைப்படும்.

மத்திய நிலவள வங்கிகள் சிறப்புறத் திட்டங்களைச் செயல்படுத்த நிதி தேவைப்படும்பொழுது சிறப்பு வளர்ச்சிக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுகின்றன. இக் கடனீட்டுப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளுமாறு மத்திய வங்கி விவசாய மறுநிதிக் கூட்டுருவுக்கு விண்ணப்பிக்கும். கூட்டுரு வெளியீட்டில் 75% பத்திரங்களையும், மாநில அரசு 25% பத்திரங்களையும் வாங்கிக் கொள்ளுவர். உணவு உற்பத்தியைப் பெருக்க உதவும் சிறுநீர்ப்பாசனத் திட்டங்களுக்குத் தாராளமாக உதவும் பொருட்டு 1967-68முதல் கூட்டுரு அத் திட்டங்களையொட்டிய கடனீட்டுப் பத்திரங்களில் 90% அளவினை வாங்கிக்கொண்டு வருகிறது. இச் சலுகை 1974ஜூன் இறுதிவரை நீடிக்கும்.

பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வாணிக வங்கிகள் மறுநிதியம் பெற இதற்கென வகுக்கப்பட்ட படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். ரூ. 5 இலட்சத்திற்குக் குறைவான திட்டங்களைப் பிராந்திய அலுவலகம் கவனித்துக் கொள்ளும். மறுநிதி வழங்கல் குறித்த நடைமுறைகள் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளன.

மறுநிதியம் பெற்ற முகமைகள்

விவசாய மறுநிதிக் கூட்டுறவின் மறுநிதிய வசதிகளை மிகப் பெருமளவுக்குப் பெற்றுள்ளது கூட்டுறவு நிலையங்களேயாகும். 1972 ஜூன் இறுதிவரை கூட்டுரு அனுமதித்திருந்த 711 திட்டங்களில் 485 நிலவள வங்கிகளும் 33 மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் கடன் வழங்கினவையாகும். மறுநிதியத் தொகை ரூ. 404·75 கோடியில் கூட்டுறவு நிலவள வங்கிகள் பெற்றது ரூ. 349·34கோடி; மாநிலக் கூட்டுறவு வங்கிகள் பெற்றது ரூ. 25·79 கோடி; வாணிக வங்கிகள் 193 திட்டங்கள் தொடர்பாக ரூ. 29·62 கோடி பெற்றன. ஆக நிலவள வங்கிகள் கூட்டுரு வழங்கிய மொத்தத்தில் 86·31% மறுநிதிய வசதிகளும், மாநில வங்கிகள் 6·37%உம், வாணிக வங்கிகள் 7·32%உம் பெற்றன.

அட்டவணை

விவசாய மறுநிதிக் கூட்டுரு 1972 ஜூன் 30 வரை அளித்த மறுநிதிய உதவிகளைப் பெற்ற முகமைகள்

நிதிய முகமையின் வகை	திட்டங்களின் எண்ணிக்கை	நிதிய உதவி: தொகை ரூ. கோடியில்	நிதிய உதவி: மொத்தத்தில்%	விவசாய மறுநிதிக் கூட்டுருவின் பொறுப்பு	மாநில அரசு/ வங்கியின் பொறுப்பு	விவசாய மறுநிதிக் கூட்டுரு வாங்கிய கடனீட்டுப் பத்திரம் வழங்கிய கடன்
மத்திய நிலவள வங்கி	485	349·34	86·31	304·08	45·26	109·64
மாநிலக் கூட்டுறவு வங்கி	33	25·79	6·37	23·01	2·78	7·37
பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வாணிக வங்கி	193	29·62	7·32	23·70	5·92	7·68
மொத்தம்	711	404·75		350·79	53·96	124·69

மேற்கண்ட அட்டவணைப்படி அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களில் சிறுநீர்ப்பாசனத் திட்டங்கள் 61%க்கும் மிகுதியாக இருப்பது குறிப்பிடத்தக்கது. அடுத்துத் தோட்டங்களும், தோட்டக்கால் (Plantation)களும் அமைக்க 25% மறுநிதிய வசதி தரப்பட்டது. மறுநிதியக் கடன் வசதிகள் பரவலாகப் பலதரப்பட்ட திட்டங்

களுக்கு அளிக்கப்படுவதும் கவனிக்கத்தக்கதாகும். சிறு விவசாயிகள் மேம்பாட்டில் கூட்டுரு பெருமளவு அக்கறை காட்டி வருகிறது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், கடைநிலை விவசாயிகள்—விவசாயப் பண்ணையாட்கள் திட்டத்தின் கீழும் (Small Farmers Development Agency and Agencies for Marginal Farmers and Agricultural Labourers SFDA&MFAL) திட்டப்பெறும் தொழில் நுட்ப நோக்கிலும் பொருளாதாரக் கண்ணோட்டத்திலும் செவ்வனே நடைபெறக்கூடிய திட்டங்களுக்கு 100% மறுநிதியுதவி அளிக்கிறது இக் கூட்டுரு. ஜூன் 1972 வரை விவசாய மறுநிதிக் கூட்டுரு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 15 திட்டங்களையும், கடைநிலை விவசாயி—விவசாயப் பண்ணையாட்கள் திட்டத்தின்கீழ் ஒரு திட்டத்தையும் அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அட்டவணை

விவசாய மறுநிதிக் கூட்டுரு—ஜூன் 30, 1972 வரை

அனுமதித்தத் திட்டங்கள்—நோக்கங்கள் வாரியாக ரூ. கோடியில்

நோக்கம்	திட்டங்களின் எண்ணிக்கை	மொத்த உதவி	கூட்டுருவின் பொறுப்பு
சிறு நீர்ப்பாசன வளர்ச்சி	484	278·00	249·81
நிலச்சீர்திருத்தம்	53	62·17	47·56
டிராக்டர், விசைஏர் முதலியவற்றுடன் விவசாயத்தைப் பொறிமயமாக்கல்	5	6·07	4·61
மண்வளப் பாதுகாப்பு	3	2·41	2·14
பழத்தோட்டம், தோட்டக்கால் வளர்ச்சி	176	31·83	25·29
கோழிப்பண்ணை	8	0·53	0·52
மீன்வளத் திட்டம்	13	6·35	4·53
பால்பண்ணை வளர்ச்சி	7	2·34	1·87
பாதுகாப்புக் கிடங்கு வசதி	11	14·54	14·08
ஆட்டு வளர்ப்பு	1	0·51	0·38
மொத்தம்	711	404·75	350·79

உலக வங்கி/I.D.A. திட்டங்கள்

விவசாய மறுநிதிக் கூட்டுரு உலக வங்கியுடனும், அதன் இணைப்பு நிறுவனமான I.D.A. எனப்படும் அனைத்து நாட்டு வளர்ச்சி மன்றத் (International Development Association)துடனும் நெருங்கி இணைந்து 1969 முதல் செயலாற்றி வருகிறது. 1972 ஜூன் இறுதிவரை அனைத்துலக வளர்ச்சி மன்றம் ரூ. 177 கோடி மதிப்புள்ள 9 திட்டங்களையும், உலக வங்கி ரூ. 10 கோடி

மதிப்புள்ள ஒரு திட்டத் (உத்தரப் பிரதேசத்திலுள்ள தாராய் விதைத் திட்டம்)தினையும் ஏற்றுள்ளன. இதில் ரூ.170 கோடி விவசாய மறுநிதிக் கூட்டுருவின்வழி வழங்கப்படும். இதில் விவசாயக் கடன் திட்டங்கள் ரூ. 151·04 கோடி; விவசாயச் சந்தை திட்டம் ரூ.9·36 கோடி; தாராய் விதைத் திட்டம் ரூ. 6·75கோடி; விவசாய-விமானத் திட்டம் ரூ. 2·48 கோடி. கீழ்க்காணும் அட்டவணை இத் திட்டங்களைப் பற்றிய விவரங்களைத் தருகிறது.

அட்டவணை

விவசாய மறுநிதிக் கூட்டுருவின்வழி நிதியுதவி வழங்கப்படவிருக்கும் உலக வங்கி/ I. D. A. அனுமதித்துள்ள திட்டங்கள்

ரூ. இலட்சத்தில்

திட்டத்தின் பெயர்	திட்டத்தின் செலவு	உலக வங்கி/ I. D. A. யிடமிருந்து உதவி	விவசாய மறுநிதிக் கூட்டுரு வழி வழங்கவிருக்கும் தொகை
1. தாராய் விதைத் திட்டம்	1,679·00	975·00	675·00
2. குஜராத் விவசாயக் கடன் திட்டம்	4,947·00	2,625·00	2,602·50
3. பஞ்சாப் விவசாயக் கடன் திட்டம்	2,682·00	2,062·50	2,062·50
4. ஆந்திரப் பிரதேச விவசாயக் கடன் திட்டம்	3,380·00	1,830·00	1,809·00
5. ஹரியானு விவசாயக் கடன் திட்டம்	3,339·00	1,875·00	2,235·00
6. தமிழ்நாடு விவசாயக் கடன் திட்டம்	4,676·00	2,625·00	2,235·00
7. விவசாய-விமானத் திட்டம்	658·10	450·00	248·00
8. மகாராட்டிர விவசாயக் கடன் திட்டம்	3,815·00	2,183·00	1,849·00
9. மைசூர் விவசாயக் கடன் திட்டம்	5,490·00	2,911·40	2,671·20
10. பீகார் விவசாயச் சந்தை திட்டம்	1,648·19	1,160·80	935·48
மொத்தம்	32,314·79	18,697·70	16,962·68

நாட்டின் வளர்ச்சிக் குன்றிய, பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்தில் விவசாய மறுநிதிக் கூட்டுரு பெரும் ஈடுபாடு காட்டி வருகிறது. நிலத்தின்கீழுள்ள நீரைப் பாசனத்திற்குப் பயன்படுமாறு வெளிக்கொணரும் திட்டங்களுக்குப் பெருவாரியான கடன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு மாநிலங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள விவசாய மறுநிதிக் கூட்டுருவின் திட்டங்களைக் கீழ்க்கண்ட அட்டவணைவழி அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

விவசாய மறுநிதிக் கூட்டுரு அனுமதித்த திட்டங்கள்

(1972 ஜூன் 30இல் உள்ளபடி) ரூ. கோடியில்

மாநிலம்/யூனியன் பகுதி	திட்டங்களின் எண்ணிக்கை	மொத்த நிதியுதவி	விவசாய மறுநிதிக் கூட்டுருவின் பொறுப்பு	மாநில அரசின் பொறுப்பு	விவசாய மறுநிதிக் கூட்டுரு ஏற்பிய கடனீட்டுப் பத்திரங்களிலிருந்து பெற்ற கடன்
ஆந்திரப்பிரதேசம்	120	45·32	38·08	7·24	20·43
அஸ்ஸாம்	11	1·60	1·40	0·20	1·05
பீகார்	9	17·24	14·44	2·80	2·60
டெல்லி	1	0·12	0·12	—	0·06
குஜராத்	52	34·32	30·32	4·00	7·90
ஹரியானா	42	31·35	28·49	2·86	12·54
இமாசலப்பிரதேசம்	1	0·39	0·29	0·10	—
ஜம்மு – காஷ்மீர்	3	1·80	1·35	0·45	0·71
கேரளம்	36	8·56	6·82	1·74	2·30
மத்தியப்பிரதேசம்	34	28·67	25·89	2·78	3·58
மகாராட்டிரம்	73	26·77	22·56	4·21	12·27
மைசூர்	105	40·59	33·44	7·15	10·27
நாகாலாந்து	1	0·30	0·30	—	—
ஒரிசா	10	3·02	2·34	0·68	0·36
பாண்டிச்சேரி	2	0·45	0·38	0·07	—
பஞ்சாப்	35	40·85	36·32	4·53	22·48
ராஜஸ்தான்	27	17·94	15·58	2·36	2·43
தமிழ்நாடு	75	44·07	38·22	5·85	12·77
உத்தரப்பிரதேசம்	65	60·57	53·75	6·82	12·76
மேற்கு வங்காளம்	9	0·82	0·70	0·12	0·18
மொத்தம்	711	404·75	350·79	53·96	124·69

விவசாய மறுநிதிக் கூட்டுரு அனுமதித்த மொத்த நிதி யுதவியை நோக்கும்போது, சில மாநிலங்களில் மட்டும் மிகக் குறைவான உதவி வழங்கியிருப்பது புலனாகும். இதற்குக் காரணம் அம் மாநிலங்களிலுள்ள கூட்டுறவு வங்கிகளும் பிற வங்கிகளும் மிகவும் குறைவான திட்டங்களை மட்டுமே மறுநிதி வசதிகோரி கூட்டுருவுக்கு அனுப்பியதாகும். விவசாய மறுநிதிக் கூட்டுரு மறு நிதியளிக்கத் தயாராகக் காத்திருக்கிறது. வாய்ப்பைப் பயன்படுத் திக்கொள்ள வேண்டிய பொறுப்பு மாநில அரசினருக்கும் நிதி வழங்கு முகமைகளுக்குமேயுண்டு.

கூட்டுருவின் சாதனைகள்

விவசாய மறுநிதிக் கூட்டுரு வழங்கியுள்ள நிதியுதவி பெரு மளவு நிலையான புலனாகும் சொத்துகளை உருவாக்க உதவி

யுள்ளது. 1972 ஜூன் இறுதிவரை கீழ்க்காணும் சாதனைகளைப் புரிந்துள்ளது.

சிறுநீர்ப்பாசனத் திட்டங்களின்கீழ் 914,000 ஏக்கர் மானாவாரி நிலம் கொண்டுவரப்பட்டது. மழையை நம்பி ஒரு போகம் பயிர் விளைவித்த இந் நிலத்தில் இனிப் பலபோகம் பயிரிட வாய்ப்பு உருவாகியுள்ளது.

குழாய்க்கிணறு 57,421, சாதாரணக் கிணறு 67,860 அமைக்கப்பட்டுள்ளது.

மின்சார, டீசல் நீரேற்றிகள் (Pumpsets) 131,778 பொருத்தப்பட்டன.

பெரிய கால்வாய் அமைப்பின்கீழ் 789,289 ஏக்கர் நிலம் ஒழுங்குபடுத்தப்பட்டது.

பழத் தோட்டங்கள், தோட்டக்கால் 60,800 ஏக்கர் புதிதாக அமைக்கப்பட்டது.

மீனவர் 411 விசைப்படகு பெற்றனர்.

விவசாயிகள் 1,645 டிராக்டர்கள் வாங்கினர்.

பஞ்சாபில் 206,000 டன் கொள்ளும் 129 கிடங்குகளும், குஜராத்தில் 2,000 டன் கொள்ளும் 4 கிடங்குகளும் கட்டப்பட்டுள்ளன. ஹரியானாவில் 30 கிடங்குகளும், மைசூரில் 11 கிடங்குகளும் கட்டப்பட்டு வருகின்றன.

பால் பண்ணைத் திட்டங்களின்கீழ் 1,800 கறவை மாடுகள் வாங்கப்பட்டன.

கோழி வளர்ப்புத் திட்டங்களின்கீழ் 23 பண்ணை வீடுகள் கட்டப்பட்டன; 34,200 கோழிக் குஞ்சுகள் வாங்கப்பட்டன.

எதிர்காலம்

விவசாயத்திற்கு நீண்டகாலக் கடனை இங்குமங்குமாக வழங்கி வந்த வங்கிகள் தமது கடன் வழங்கு கொள்கைகளை மாற்றி, தொழில் நுட்ப-பொருளாதார கண்ணோட்டத்தில் திட்டங்களை ஆராய்ந்து கடன் வழங்குவதை ஓர் ஒழுங்குக்குள் கொண்டு வந்துள்ளன என்றால் அதற்கு விவசாய மறுநிதிக் கூட்டுருவே

காரணமாகும். மறுநிதியம் கோரி வரும் திட்டங்களை ஆராய்ந்து, மதிப்பிட்டு, செயற்படக்கூடியதா என்று கண்டறிய தேவையான தொழில் நுட்பத் தேர்ச்சியை இக் கூட்டுரு உருவாக்கியுள்ளது. புதிய திட்டங்களை உருவாக்கி, விவசாயத்தில் நல்லமுறையில் முதலீடு செய்ய கடன் வழங்கல் எவ்வண்ணம் மேற்கொள்ளப் படல் வேண்டுமென்ற பாங்கினை விவசாய மறுநிதிக் கூட்டுரு வடித்துக் காட்டுகிறது. திட்டங்களைச் செயல்படுத்துவது நிதி வழங்கும் வங்கிகளேயாயினும் மறுநிதியளிப்பதும் பிற முயற்சிகளை மேற்கொள்ளுவதும் விவசாய மறுநிதிக் கூட்டுருவேயாகும்.

10. நகர கூட்டுறவு வங்கிகள்—பணியாளர் கடன் சங்கங்கள்

விவசாயிகளுக்குக் கடன் வசதிகளைச் செய்துதர கூட்டுறவு இயக்கம் துவக்கப்பெற்றது என்பது யாவரும் அறிந்த செய்தியே. இயக்கம் துவங்கிய சில ஆண்டுகளில், நகர்ப்புறங்களிலுள்ள மக்களுக்குக் கடன் வசதிகள் செய்துதரக் கூட்டுறவு பயன்படும் என்று உணரப்பெற்றது. கடன் வசதிகள் ஒருபுறமிருக்க, சிக்கனம், சேமிப்பு முதலிய நற்பண்புகளை நகர மக்களிடையே வளர்க்கவும், வங்கியப் பழக்கத்தை அவர்களிடையே பரப்பவும் நகர கூட்டுறவு வங்கிகள் பயன்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

நகர்ப்புறங்களில் கடன் சங்கங்கள் நிறுவப்பெறுவதற்கு மாக்லகன் குழு (1915) ஆதரவு தந்தது. நடுத்தர, உயர்நிலை வகுப்பினர் வங்கியத் தத்துவங்களைப் புரிந்துகொள்ள நகர்ப்புற கடன் சங்கங்கள் பெரிதும் உதவும் என்ற கருத்தை இக் குழு வெளியிட்டது. பின்னர் மைய வங்கிய விசாரணைக் குழு (1931) தனது அறிக்கையில், நகர மக்கள் நலனுக்காகத் தக்க வசதி, சூழ்நிலை அமைந்துள்ள இடங்களில் வரையறுத்த பொறுப்புள்ள கூட்டுறவுச் சங்கங்கள்–பொதுவாக நகர வங்கிகள் என அறியப் படுவன–நிறுவப்பெற வேண்டுமென்று பரிந்துரைத்தது. பெரு வணிகர், பெரிய வியாபாரி ஆகியோருக்கு வாணிக வங்கிகள் செய்யும் பணிகளை, சிறு வணிகர், சிறு வியாபாரி ஆகியோருக்கு நகர வங்கிகள் செய்யும் கடப்பாடு உடையன. தமது உறுப்பினர் களின் சேமிப்பைத் திரட்டி அவற்றைத் தக்கவாறு முதலீடு செய்யும்பொருட்டு ஊதியம் ஈட்டுநர் (Salary Earners) சங்கங்கள் அமைக்கப்படுவதில் தடையொன்றும் இருக்க இடமில்லையென்றும் விசாரணைக் குழு குறிப்பிட்டது.

நகர்ப்புற கூட்டுறவுக் கடன் இயக்கம் முதலில் ஜெர்மனியில் துவங்கியது. நகரில் வாழ்ந்து வந்த கைவினைஞர் (artisans)

களுக்குக் கடனளிக்க ஹெர்மன் ஷுல்ஸ் (Herman Schultze) என்பார் இந்த வகைக் கூட்டுறவுகளைத் துவங்கினார். இதே போன்ற சங்கங்களை இத்தாலியில் லுஜாட்டி (Luzzatti) என்பவர் நிறுவினார். இந்தியாவில் அன்றிருந்த கூட்டுப்பங்கு வாணிக வங்கிகள் சிறிய வணிகருக்கோ, சிறு வியாபாரிகளுக்கோ நிதி வசதிகள் வழங்குவதில் அக்கறை காட்டவில்லை. எளிய மனிதர் களும், நிலைத்த வருமானமுள்ள மக்களும் தங்களுக்கு அவசரமாகப் பணந் தேவைப்படுகையில் வட்டித் தொழிலர்களிடம் மிகவும் கடுமையான வட்டி வீதத்திற்குக் கடன் வாங்க வேண்டியநிலை இருந்து வந்தது. நடுத்தர வகுப்பினரை வட்டித் தொழிலரின் பிடியிலிருந்து மீட்கவும், அவர்களிடையே சிக்கனம் சேமிப்பு ஆகிய பண்புகளை வளர்க்கவும் நகர வங்கிகள் துவங்கப் பெற்றன. இந்தியாவில் முதன் முதலாகப் பரோடாவில் பரஸ்பர உதவிச் சங்கம் (Mutual Aid Society) என்ற பெயரில் 1889ஆம் ஆண்டு ஒரு நகர நாணயச் சங்கம் நிறுவப்பெற்றது. நகர கூட்டுறவு வங்கிகளின் நிருவாகம் பெரும்பாலும் நல்ல முறையிலேயே நடந்து வந்தது. இதற்குக் காரணம் நிருவாகத்தினர் கல்வி யறிவும் அனுபவமும் உள்ளவராக இருந்ததாகும். நகர வங்கிகளின் நடவடிக்கைகள் கணிசமான அளவினதாக இருந்த காரணத்தால், தகுதியுள்ள முழுநேர ஊழியர்களை அமர்த்தி அன்றாட செயற் பாடுகளைத் திறமையாகக் கவனித்துவர முடிந்தது. இந்தச் சிறப்பு இருந்தும் கூட்டுறவு நகர வங்கிகள் விரைவான வளர்ச்சி காணவில்லை. இவற்றை ஊக்குவிப்போர் கிடையாது. கிராம அளவில் பிரதம நாணயச் சங்கங்கள் எந்த இடத்தைப் பெற்றிருந் தனவோ அதே இடத்தை நகர அளவில் நகர வங்கிகள் பெற்றிருந்தன. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டமும் நகர வங்கிகளைப் பிரதம கூட்டுறவு வங்கிகளாகவே கருதுகின்றது. கடந்த சில ஆண்டுகளாக நகர வங்கிகளின் சிறப்பான பணியின் முக்கியத் துவம் உணரப்பட்டுப் பல மேடைகளில் அவற்றின் பிரச்சினைகள் பேசப்பட்டு வருவது, அவை சமுதாயத்திற்குச் செய்யும் அரிய சேவை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படுகிறது என்பதைச் சுட்டுகிறது. நாட்டின் பொருளாதாரம் சமதர்ம பாணியிலே உருவாக நகர வங்கிகள் உதவிவந்துள்ளன என்று கூறுவதில் உயர்வுநவிற்சியேதும் கிடையாது.

நகர வங்கிகள் பொதுவாகக் குறிப்பிட்ட நகர எல்லையிலுள்ள மக்களுடைய கடன் தேவைகளை நிறைவு செய்ய முயன்றன. அதே நேரத்தில் அரசு துறையிலும், நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும், ஆலைகளிலும் பணியாற்றும் ஊழியர்கள் தமது கடன் தேவைகளை நிறைவு செய்து கொள்ள பணியாளர்

கடன் சங்கங்களை நிறுவலாயினர். நகர வங்கிகள், பணியாளர் கடன் சங்கங்கள் போன்ற சங்கங்களை விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள் (Non-agricultural Credit societies) என்று பொதுவாகக் கூறுவர். கூட்டுறவு இயக்கம் துவங்கியபோது விவசாயத்துக்கு உதவுவதே பெருநோக்காக இருந்த காரணத்தால் கடன் துறையை விவசாயக் கடன், விவசாயச் சார்பற்ற கடன் என இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருந்தனர்.

கூட்டுப் பங்கு வங்கிகள் (Joint stock banks) சிறு நகரங்களில் காணப்பெறாத அந் நாளில் நகர வங்கிகளும், நகரக் கடன் சங்கங்களும் நகர மக்களுக்கு அரிய தொண்டாற்றி வந்தன. சிறு வணிகர், கைவினைஞர், ஊதியம் ஈட்டுவோர் முதலியோருக்குத் தனிநபர் பிணையின் பேரிலும், பொன், வெள்ளி, விளை பொருள் முதலியவற்றின் பிணையின் பேரிலும், வீட்டு அடைமானத்தின் பேரிலும் கடன்கள் வழங்கப்பட்டு வந்தன.

இரண்டாம் உலகப் போர் துவங்கிய காலத்திலிருந்து நகரக் கடன் இயக்கம் நல்ல வளர்ச்சி காணலாயிற்று. பண வீக்கமும், நகர்ப்புற வருமான உயர்வும் இவ் வளர்ச்சிக்கு உதவுவதாக அமைந்தது. போர்க்காலத்தில் நகரச் சங்கங்களின் எண்ணிக்கை சிறிதளவே உயர்ந்த போதிலும், இவற்றின் நடவடிக்கைகள் கணிசமாகப் பெருகி நின்றது குறிப்பிடத்தக்கது. கீழ்க்காணும் அட்டவணை இச் செய்தியைத் தெளிவுபடுத்தும்.

அட்டவணை

விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள்
(1938-39, 1945-46-இல் இருந்த நிலை)

ரூ. இலட்சத்தில்

ஆண்டு	எண்ணிக்கை	உறுப்பினர் (இலட்சத்தில்)	சொந்த முதல்	கடன்களும் வைப்புகளும்	நடைமுறை முதல்	வழங்கிய கடன்கள்
1938-39	6,731	13·14	828·52	1525·73	2366·37	1441·99
1945-46	7,185	16·39	1169·22	2662·80	3832·02	2051·32

இந்தியா விடுதலை பெற்ற பின்னர் காணப்பட்ட கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் விவசாயச் சார்பற்ற சங்கங்களுக்கும் முக்கிய இடமுண்டு. 1950-51இல் மொத்தம் 7,810 சங்கங்களிருந்தன. இவற்றில் 21·78 இலட்ச உறுப்பினர் இருந்தனர். ரூ. 35·05 கோடி வைப்புத் தொகையும், ரூ. 56·78 கோடி நடைமுறை

முதலும் கொண்டிருந்த இச் சங்கங்கள் ரூ. 47·39 கோடியளவு கடன்களை வழங்கியிருந்தன. இரண்டாம் திட்ட துவக்க ஆண்டான 1955-56இல் சங்கங்களின் எண்ணிக்கை 10,003 ஆக உயர்ந்தது. உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 30·73 இலட்சமாக வளர்ந்தது. வழங்கிய கடன்களும் ரூ. 72·06 கோடியாக உயர்ந்தது. 1960 முதல் 1971 வரை பிரதம விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள் நடந்து வந்த பாங்கினைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

அட்டவணை

பிரதம விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள்

(பிரதம வங்கிகள் உட்பட) ரூ. இலட்சத்தில்

	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71
	(1)	(2)	(3)	(4)	(5)
எண்ணிக்கை	11,995	13,449	14,435	14,816	15,346
இதில் பிரதம வங்கிகள்	—	—	954	923	920
உறுப்பினர் (ஆயிரத்தில்)	45,73	64,84	78,88	79,42	84,89
கடன் வாங்கும் உறுப்பினர் (ஆயிரத்தில்)	25,34	41,05	46,86	47,91	45,85
செலுத்திய முதல்	32,97	57,98	79,32	87,69	1,04,22
காப்பு நிதி	13,06	22,07	30,82	33,26	37,62
வைப்புகள் (மொத்தம்)	95,05	1,76,88	2,34,26	2,55,91	3,11,83
இதில் சங்கங்கள்	50	2,03	5,29	2,41	6,92
தனிநபர் உறுப்பினர்	59,02	1,15,96	1,59,85	1,77,19	2,33,62
உறுப்பினரல்லாதார்	35,53	58,89	69,12	76,31	71,29
பிறவழிக் கடன் வாங்கல்	9,02	17,78	23,75	27,68	31,49
நடைமுறை முதல்'	1,64,95	3,03,86	4,07,52	4,46,08	5,31,94
கடன்கள் வழங்கியது (மொத்தம்)	1,30,37	2,46,74	3,41,49	4,09,83	4,65,52
குறுகிய காலம்	92,91	1,77,78	2,42,82	2,97,92	3,27.49
மத்திய காலம்	37,46	68,96	98,67	1,11,91	1,38,03
நிலுவை (மொத்தம்)	1,55,55	2,13,50	2,70,81	2,93,76	3,44,37
குறுய காலம்	...	1,26,33	1,55,66	1,69,34	1,97,10
மத்திய காலம்	...	87,17	1,15,15	1,24,42	1,47,27
தவணை கடந்த கடன்	7,87	11,19	18,10	18,85	22,11

கடந்த பத்தாண்டுக் காலத்தில் (1960-61 முதல் 1970-71 வரை) விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள் சிறப்பாக வளர்ந்து வந்துள்ளதை மேற்கண்ட அட்டவணை தெளிவுபடுத்துகிறது. முதல் திரட்டுவதிலும், வைப்புகள் பெறுவதிலும், கடன் வழங்குவதிலும் 1960-61 ஆண்டிலிருந்ததைவிட 1970-71இல் மூன்று மடங்கு முன்னேற்றம் காணப்பட்டது. தவணை கடந்த கடனளவு மொத்த நிலுவைத் தொகையில் 6%ஆக 1970-71இல் இருந்தது.

1970-71இல் இருந்த பிரதம விவசாயச் சார்பற்ற சங்கங்கள் பல்வேறு மாநிலங்களில் எவ்வண்ணம் பரவியிருந்தன, அவற்றுள் நகர வங்கிகள், பணியாளர் கடன் சங்கங்கள் எத்தனையிருந்தன என்ற விவரங்களைக் கீழ்க்காணும் அட்டவணை தருகிறது.

அட்டவணை

1971 ஜூன் இறுதியில் பிரதம விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள்

மாநிலம்/யூனியன் பிரதேசம்	மொத்த எண்ணிக்கை	நகர வங்கிகள்	பணியாளர் கடன் சங்கங்கள்	பிற வகையின
ஆந்திரப் பிரதேசம் ...	1,168	132	979	57
அஸ்ஸாம் ...	367	8	283	76
பீகார் ...	242	—	242	—
குஜராத் ...	1,419	163	1,026	230
ஹரியானு ...	293	4	68	221
இமாசலப் பிரதேசம் ...	140	13	80	47
ஜம்மு & காஷ்மீர் ...	35	—	26	9
கேரளம் ...	398	48	242	108
மத்தியப் பிரதேசம் ...	601	14	378	209
மகாராட்டிரம் ...	2,964	250	2,220	494
மைசூர் ...	1,398	210	766	422
நாகாலாந்து ...	40	—	—	40
ஒரிசா ...	140	15	108	17
பஞ்சாப் ...	1,080	23	165	892
ராஜஸ்தான் ...	709	10	634	65
தமிழ்நாடு ...	1,174	136	924	114
உத்தரப் பிரதேசம் ...	1,240	—	1,055	185
மேற்கு வங்காளம் ...	1,077	125	952	—
அந்தமான் நிக்கோபார் தீவுகள்	9	—	8	1
சண்டிகர் ...	58	—	58	—
தாத்ரா & நகர் ஹவேலி ...	1	—	1	—
டெல்லி ...	689	14	404	271
கோவா, டாமன் & டையூ ...	21	2	19	—
மணிப்பூர் ...	58	4	54	—
பாண்டிச்சேரி ...	16	2	14	—
திரிபுரா ...	9	—	7	2
மொத்தம்	15,346	1,173	10,713	3,460

மாநிலங்களில் மகாராட்டிரத்தில் மிகப் பெருமளவு விவசாயச் சார்பற்ற பிரதம கடன் சங்கங்கள் இருந்து வருவது குறிப்பிடத் தக்கது. ஆந்திரப் பிரதேசம், குஜராத், மைசூர், பஞ்சாப், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஒவ்வொன்றிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இவ்வகைச் சங்கங்கள் இருந்தன. நகர வங்கிகள் மிகுந்திருந்த மாநிலம் மகாராட்டிரமாகும்.

நகர்ப்புற கடன் சங்கங்கள் பெரும்பாலும் வரையறுத்த பொறுப்புள்ளதாகவே அமைக்கப்படுகின்றன. விவசாயக் கடன்

சங்கங்கள் வரையறுப் பொறுப்புள்ளதாக அமைக்கப்பட்டது இத்தருணத்தில் நினைவு கொள்ளத்தக்கது. விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றில் முதல்வகை நகர வங்கி எனப்படுகின்றது. இவ் வங்கி பொதுமக்களிடமிருந்து வைப்புகளை ஏற்கின்றது; உறுப்பினர் களுக்குக் கடன் வழங்குகின்றது; பொதுவாக வங்கியத் தொழிலை நடத்திவருகின்றது. இரண்டாம் வகை பணியாளர் சங்கங்கள் அல்லது ஊதியம் ஈட்டுநர் (Salary Earners) சங்கங்கள் என அறியப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு வட்டாரத்திலோ அல்லது நிறுவனத்திலோ அல்லது அலுவலகத்திலோ பணி செய்யும் நபர்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் பொருட்டுத் தம்மிடமுள்ள உபரித்தொகையினை வைப்பாகச் செலுத்தல், கடன்பெறுதல் போன்ற செய்திகளுக்குச் சங்கம் கூட்டுறவு முறையில் அமைப்பதுண்டு. இச் சங்கமே பணியாளர் கடன் சங்கங்களெனப்படும். மூன்ரும் வகை சிக்கன, கடன் சங்கங்கள் எனப்படுகின்றன. கைவினைஞர்கள், சிறு வியாபாரிகள், ஆலைத் தொழிலாளிகள் போன்ற நகர்ப்புற, சிறுநகர்ப்புற வாசிகள் தமது நலனை மேம்படுத்தத் துவங்குவது சிக்கன, கடன் சங்கங்கள் எனப்படுவன. இனி இவ்வகைச் சங்கங்களை ஒவ்வொன்ருக ஆராய்வோம்.

நகர வங்கிகள்

விவசாயச் சார்பற்ற கூட்டுறவுச் சங்கங்களில் முதன்மையான இடம்பெறுவது நகர வங்கிகளாகும். இவ் வங்கிகள் வாணிக வங்கிகள் தம் வாடிக்கையருக்குச் செய்யும் பணிகள் பலவற்றைச் செய்து வருகின்றன. பல்வகை வைப்புகளைப் பொதுமக்களிட மிருந்து பெற்று, இவ் வங்கிகள் சிறு வியாபாரிகள், கைவினைஞர், நிலையான வருமானமுள்ள நடுத்தர வகுப்பினர் போன்ருேருக்குக் கடன்களை வழங்குகின்றன. வாடிக்கையர் செலுத்திய வைப்பு களைக் காசோலைகள் (Cheques) மூலம் திருப்பி எடுக்க வசதியுண்டு.

இவ் வங்கிகளின் முக்கிய நோக்கங்களாவன:

1. பொதுமக்களிடமிருந்து, அதாவது உறுப்பினர், உறுப்பினரல்லாதார் ஆகிய இருபாலாரிடமிருந்து, வைப்புகளைப் பெறுதல்.

2. உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குதல்.

3. உறுப்பினரின் விலைமதிப்புள்ள பொருள்களைப் பாதுகாப் பாக வைத்திருக்க ஏற்பாடுகளைச் செய்தல்.

4. உறுப்பினர் ஏற்ற அல்லது மேலெழுதிய மாற்றுச் சீட்டுகளை வசூலித்தல்.

5. உறுப்பினர் சார்பாக முகவர் பணி (Agency service) மேற்கொள்ளல்.

6. வாணிக வங்கிகள் தம் வாடிக்கையருக்கு அளிக்கும் முக்கிய வசதிகளைச் செய்து கொடுத்தல்.

கூட்டுறவு நகர வங்கிகள் தம் துணை விதிகளில் செயல் எல்லையைக் குறிப்பிடுவதுண்டு. பெரும்பாலும் குறிப்பிட்ட ஒரு நகரம் அல்லது நகராட்சி எல்லை அல்லது மாநகராட்சி எல்லையைத் தம் செயல் எல்லையாக இவ் வங்கிகள் கொண்டிருக்கும். இங்ஙனம் குறிக்கப்பட்ட எல்லைக்குள் வசித்துவரும் ஒப்பந்தம் செய்து கொள்ளும் தகுதி பெற்ற நபர்கள் வங்கியில் உறுப்பினராகச் சேரலாம்.

சராசரி ஒரு வங்கியில் எத்தனை உறுப்பினர்கள் இருந்து வருகின்றனர் என்று ஆராய்ந்தால் மாநிலத்துக்கு மாநிலம் நிலைமை வேறுபடுகின்றது. தமிழ் நாட்டில் 1971 ஜூன் இறுதியில் 136 நகர வங்கிகளில் 9,88,000 உறுப்பினர்களிருந்தனர். ஏறத்தாழ வங்கியொன்றில் சராசரி 7,000 உறுப்பினர் இருந்தனர். மகாராட்டிரத்தில் 250 வங்கிகளும் அவற்றில் 8,02,000 உறுப்பினர்களுமிருந்தது குறிப்பிடத்தக்கது. இம் மாநிலத்தில் சராசரி உறுப்பினர்நிலை 3,000 ஆக இருந்தது. குஜராத்தில் 163 வங்கிகளில் 3,78,000 உறுப்பினர்கள் இருந்தனர். எனவே, சராசரி 2,000-க்கும் சிறிது மிகுதியாக இருந்தது. மைசூரில் 210 வங்கிகள் 3,23,000 உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. சராசரி 1,500 உறுப்பினர்கள் ஒரு வங்கியில் இருந்தனர். ஆந்திரம் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் வங்கியொன்றில் சராசரி 1,000 உறுப்பினர் காணப்பட்டனர். பஞ்சாப், ஹரியானு, ராஜஸ்தான் முதலிய மாநிலங்களில் சராசரி உறுப்பினர்நிலை முறையே 175, 25,000, 900 ஆக இருந்தது. பற்பல கூட்டுறவு குழுக்கள் நகர வங்கியொன்றுக்கு மிகவும் உகந்த உறுப்பினர் எண்ணிக்கை எந்த அளவில் இருக்கலாம் என்று ஆராய்ந்தன. குறைந்தது 1,500 உறுப்பினர்கள் இருந்தால்தான் வங்கி வளம் பெற முடியும். ஆனால், மிகப்பெருமளவு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுவிட்டால் அவர்களுக்கிடையே நெருங்கிய தொடர்பும் கூட்டுறவுப் பண்பும் இல்லாமல் போகக்கூடும். பொதுவாகக் கூறுமிடத்து, போதுமான தொகையினைத் திரட்டி அதன்வழி கடன் தேவைகளை நிறைவு செய்ய நகர வங்கிகள் அவற்றின்

நிலைமைக்கேற்ப உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். முற்போக்குப் பாங்குள்ள நிருவாக முறைகளைக் கடைப்பிடித்து வைப்பாளர்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நகர வங்கிகள் நடந்துவரவேண்டும்.

பிற கூட்டுறவு நிலையங்களில் நிருவாகம் அமைவது போன்று, நகர வங்கியிலும் அதன் உறுப்பினர்கள் தம்முள் சிலரை இயக்குநர் அவைக்குத் தேர்ந்தெடுத்து, அவர்களிடம் நிருவாகப் பொறுப்பை ஒப்படைக்கின்றனர். இருப்பினும் வங்கியைப் பொருத்த எல்லா அதிகாரங்களும் பேரவையின்கண் அடங்கியுள்ளன. வங்கியின் அன்றாட நடவடிக்கைகளைக் கவனிக்கச் செயலர் நியமிக்கப் படுகின்றார். இயக்குநர்கள் தேர்தல் முறை மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றது. சில மாநிலங்களில் ஆண்டுதோறும் தேர்தலும், மற்றுஞ் சிலவற்றில் மூன்றாண்டுக்கு ஒருமுறை தேர்தலும் மேலுஞ் சிலவற்றில் சுழற்சிமுறைப் பதவி விலகல்படி ஆண்டுக் கொருமுறை மூன்றிலொரு பங்கு இயக்குநர் தேர்தலும் நடை பெறுகின்றது.

வங்கியத் துறை பற்றிய நுணுக்கமான அறிவு படைத்தவர் களே திறமையாக வங்கிகளை நிருவகிக்க முடியுமாதலால் இயக்கு நர் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இத் துறையைப்பற்றி அறிந்தவர்களாக இருக்கவேண்டும். மற்றும் அன்றாட நடவடிக்கைகளைக் கவனிக்கத் திறமை மிக்க, பயிற்சி பெற்ற அலுவலர்கள் நியமிக்கப்படவேண்டும். வாணிக வங்கிகள் தமது ஊழியருக்கு அளிக்கும் ஊதியம் போன்று உயர்ந்த ஊதியத்தை நகர வங்கிகள் அளிக்க முடியாத நிலையிலிருப்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

நகர வங்கிய அமைப்பு

கூட்டுறவு நகர வங்கிகள் பெரும்பாலும் ஒற்றையமைப்பு (unitary structure) முறையிலேயே நிறுவப்பெற்றிருக்கின்றன. இவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்பட்டு விடும். ஆகவே, இவற்றிற்குத் தனியாக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அமைப்புகள் நிறுவப்பெறவில்லை. ஆனால், நடைமுறை யில் இவ் வங்கிகள் தன்னிறைவுபெற்று விளங்கியமையால் மாவட்ட மத்திய வங்கிகளிடமிருந்து பெருமளவு கடன் வாங்குவதில்லை. நலிந்த நிலையிலிருந்த வங்கிகளே மத்திய வங்கிகளிடமிருந்து கடன் பெற்றன. சில நகர வங்கிகள் மத்திய கூட்டுறவு வங்கிகளைவிட வலுவுள்ளனவாக இருந்தன. இந்தியாவில் ஒரே ஒரு மாநிலத்தில் மட்டும் கூட்டுறவு நகர வங்கிகளுக்கு மத்திய வங்கியொன்று

நிறுவப்பட்டுள்ளது. அது மகாராட்டிர மாநிலத்திலுள்ள அகமத் நகர் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு நகர வங்கி (District Central Co-operative Urban Bank) யாகும். இவ் வங்கி வைப்புகள் மூலம் நிதியினைத் திரட்டித் தன்னுடன் இணைக்கப் பெற்றுள்ள நகர வங்கிகளுக்கும், தன் உறுப்பினர்களுக்கும் கடன் வழங்கு கின்றது. நகர வங்கிகளுக்கு நிதி வசதிகள் அளிக்க மாவட்ட, மாநில மட்டங்களில் தனிப்பட்ட அமைப்புகள் ஏன் உருவாக்கப்படவில்லை என்ற கேள்வி எழுப்பப்படலாம். முன்னரே இயங்கிவரும் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்குப் போட்டியாக மத்திய நகர வங்கிகள் செயல்பட ஆரம்பித்தால் கூட்டுறவு இயக்கத்துக்குக் கிடைக்கக் கூடிய நிதி சிதறுண்டுபோகும். மற்றும் நகர வங்கிகளிடம் இருக்கும் உபரி நிதியினை மத்திய நகர வங்கி பெற்றால் மத்திய கூட்டுறவு வங்கிகள் தாம் அந் நிதியினைப் பெறக்கூடிய வாய்ப்பினை இழக்கும். ஆனால், உண்மையில் இந்த வாதங்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாகக் காணப்படவில்லை. நகர வங்கிகள் தமக்கென ஒரு நிதிவழங்கு நிலையத்தைத் தேடி நிற்கின்றன. மாவட்ட மத்திய வங்கிகளும், மாநில வங்கிகளும் அவற்றிற்குத் தக்க உதவி செய்வதில்லை என்ற குறை இருந்து வருகிறது.

நிதி திரட்டும் வழி

நகர வங்கிகளுக்கு நிதி இரு வழிகளில் கிடைக்கின்றன. ஒன்று வங்கிகளின் சொந்த நிதியாகும். உறுப்பினர் தம் பங்கு முதலும், இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்ட காப்பு நிதிகளும் வங்கி களின் சொந்த நிதியெனப் பேசப்படுகின்றன. மற்றது வங்கிகள் வெளியிடங்களிலிருந்து திரட்டும் நிதியாகும். உறுப்பினரிட மிருந்தும், உறுப்பினரல்லாதோரிடமிருந்தும் பல்வகை வைப்பு களைப் பெறுவதோடு, பிற நிலையங்களிடமிருந்தும் இவ் வங்கிகள் கடன் பெறுகின்றன. 1971 ஜூன் இறுதியில் நகர வங்கிகளின் மொத்த நடைமுறை முதல் ரூ. 260·50 கோடியாக இருந்தது. இவ் வங்கிகளின் செலுத்திய முதல் ரூ. 25·95 கோடியாகவும், காப்பு நிதிகள் ரூ. 16·01 கோடியாகவும், வைப்புகள் ரூ. 187·38 கோடியாகவும் இருந்தன. வெளியிலிருந்து பெற்றிருந்த கடன் ரூ. 11·89 கோடியளவில் மட்டுமே இருந்தது. மொத்த நடை முறை முதலில், வெளியிலிருந்து பெற்றிருந்த கடன் 4·5% ஆக இருந்தது இவ் வங்கிகள் எந்த அளவுக்குத் தன்னிறைவு பெற் றுள்ளன என்பதையும் மிகச் சிறிய அளவுக்கே வெளியில் கடன் வாங்குகின்றன என்பதையும் உணர்த்துகிறது. மற்றும் நடை முறை முதலில் 80% வைப்புகள்வழி பெற்றது இவ் வங்கிகள் மிகப்

பெருமளவுக்குத் தாம் திரட்டும் வைப்புகளை நம்பி வங்கியத் தொழில் நடத்துவதை உணர்த்துகின்றது.

வைப்புகள்

பல்வகை வைப்புகளை ஏற்றுக் கொள்ளுவதன்வழி கூட்டுறவு நகர வங்கிகள் தம்முடைய தொழிலுக்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டுகின்றன. பொதுவாகக் கீழ்க்காணும் வைப்புகளை நகர வங்கிகள் ஏற்றுக்கொள்ளுகின்றன:

(i) நடப்பு வைப்பு
(ii) தவணை வைப்பு
(iii) சேமிப்பு வைப்பு
(iv) தொடர் வைப்பு
(v) அன்றாட வைப்பு (Day Deposit)
(vi) வீட்டுச் சேகரிப்பு வைப்பு (Home Safe Deposit)
(vii) சேமநிதி வைப்பு (Provident Fund Deposit)
(viii) சீட்டு நிதி (Chit Fund)

1971 ஜூன் இறுதியில் நகர வங்கிகள் திரட்டியிருந்த வைப்புத் தொகையில், அதாவது ரூ. 187·38 கோடியில் ஏறத்தாழ பாதி யளவு (ரூ. 91·58 கோடி) தவணை வைப்பாக இருந்தது. சேமிப்பு வைப்பு ரூ. 53·05 கோடியாகவும் நடப்பு வைப்பு ரூ. 21·46 கோடியாகவும், பிற வைப்புகள் ரூ. 21·29 கோடியாகவும் மேற்கூறிய காலத்தில் இருந்தது. வைப்புகளில் ரூ. 6·70 கோடி கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும், ரூ. 121·01 கோடி உறுப்பினர்களிடமிருந்தும், ரூ. 59·67 கோடி உறுப்பினரல்லா தாரிடமிருந்தும் பெறப்பட்டிருந்தது.

மிகச் சிறிய மனிதருக்கும் வங்கிய பழக்கத்தை அறிமுகம் செய்து வைக்க வீட்டிலேயே உண்டி அல்லது சிறு பெட்டி யொன்றில் அன்றாடம் சேமிக்கும் தொகையினைப் போட்டு வைத் திருந்து திங்களுக்கு ஒரு முறை அப் பெட்டியை வங்கிக்குக் கொணர்ந்து மொத்தத் தொகையினையும் வைப்பாளர் கணக்கில் வரவு வைப்பது; அன்றாடம் குறிப்பிட்ட ஒரு தொகையைத் தம் கணக்கில் கட்ட ஒப்பி சில திங்களுக்கு அங்ஙனம் தவறாது பணங் கட்டி வருவது போன்ற புதுவகைத் திட்டங்கள்வழி இவ் வங்கிகள் வைப்புகளைத் திரட்டுவது பாராட்டத்தக்கது. நகர வங்கிகள் ரிசர்வு வங்கியிடமிருந்து சலுகை வட்டி வீதத்திற்குக் கடன் ஏதும் பெறுவதில்லை. இதற்குக் காரணம் ரிசர்வு வங்கி விவசாய

வளர்ச்சிக்கு மட்டுமே சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கும் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகும். மற்றும் நகர வங்கிகள் அளிக்கும் கடன் பெரும்பாலும் நுகர்ச்சிக் கடனாக (Consumption Loan) இருக்கின்றது; உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவுவதாக இருப்பதில்லை என்று கருதப்படுவதால் இந்த அவசியமற்ற செலவு களுக்குக் கடன்தரும் நிலையத்திற்கு ரிசர்வு வங்கி கடன் வசதி யளிப்பதோ அல்லது சலுகை வட்டி வீதத்தில் கடனளிப்பதோ பொருந்தாது என்றும் கூறப்படுகிறது.

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் (Banking Regulation Act) 1966இல் அமுலுக்கு வந்தது முதல் பெரும்பான்மையான நகர வங்கிகள் ரிசர்வு வங்கியின் கட்டுப்பாடுகளுக்குள் இயங்க வேண்டிய நிலையிலிருக்கின்றன. இவ் வங்கிகள் தமது தவணை, கேட்புப் பொறுப்புகளில் (Time and Demand Liabilities) 3% அளவுக்குக் குறையாது ரொக்கக் காப்பு (Cash Reserve)ம், 25% அளவுக்குக் குறையாது எளிவரல் சொத்துகளும் (Liquid assets) வைத்திருக்கும்படி சட்டமுறையாகப் பணிக்கப்பட்டுள்ளன. ரொக்கம், பொன், வில்லங்கம் ஏதுமற்ற அனுமதிக்கப்பட்ட பிணையங்கள் (unencumbered approved securities) ஆகியவை எளிவரல் சொத்துகள் எனப்படுகின்றன. நகர கூட்டுறவு வங்கிகள் பெறுவது குறுகிய கால, மத்திய கால வைப்புகளாக இருப்பதால் இவை அளிக்கக் கூடிய கடனும் குறுகிய கால மத்திய காலக் கடனாக மட்டுமே இருக்கின்றது.

கடன் வழங்கல் நடவடிக்கைகள்

நகர வங்கிகள் வழங்கும் கடன் மூன்று ஆண்டுக்கு மிகாது இருக்கும். கீழ்க்காணும் பிணைகளின் பேரில் கடன்கள் வழங்கப் படுகின்றன : (i) தவணை வைப்புச் சீட்டின் பேரில் வைப்பாளருக்கு வைப்புத் தொகையில் 90% வரை கடன் அளிக்கப்படுவதுண்டு (ii) வில்லங்கமற்ற அசையாச் சொத்தின்மீது அச் சொத்தின் மதிப்பில் 40 முதல் 50% அளவுக்குக் கடன் வழங்கலாம்; (iii) வகையுள்ள உறுப்பினர்கள் தரும் பொறுப்புறுதி (guarantee)யின் பேரில் கடன் தரப்படுவதுண்டு; (iv) அரசினர் பிணையங்கள், ஆயுள் காப்பீட்டுப் பத்திரங்கள் மீதும், மத்திய நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்கள் மீதும், கடன் வழங்கப்படும்; (v) விவசாய விளை பொருள், முடிவுற்ற சரக்குகள் ஆகியவற்றின் பிணையின் பேரிலும் கடன் தரப்படுவதுண்டு; (vi) பொன், வெள்ளி, நகைகள் பாத்திரங் கள் ஈட்டின் பேரில் கடன் வழக்கப்படுகின்றது.

உறுப்பினர் ஒருவருக்குக் கொடுக்கப்படக் கூடிய உச்ச கடனளவு வங்கியின் துணை விதிகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

உறுப்பினர் வழங்கியுள்ள பங்கு முதலைப்போன்று பத்து மடங்கு தொகைவரை கடனாகப் பெறலாம். நகர வங்கிகள் தம் உறுப்பினருக்கு ரொக்கக் கடன் (Cash credit) வசதிகளை அளிக்கின்றன. இவ் வங்கிகளின் முக்கிய பணிகளில் மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்து தருவதும் ஒன்றாகும். இவ் வசதிபெறத் தகுதிபெற்ற உறுப்பினர் பட்டியலை வங்கியின் இயக்குநர் அவையினர் தயாரிப்பர். உறுப்பினர் ஒருவருக்கு உச்ச அளவு தள்ளுபடி செய்து தரக்கூடிய தொகை இயக்குநர் அவையால் நிருணயிக்கப் படும். இவ் வசதியைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் உறுப் பினர் ஓரிரண்டு பிணையாட்களுடன் வங்கிக்குப் பொறுப்புறுதிக் கடிதம் (Letter of Guarantee) ஒன்று எழுதித்தரவேண்டும்.

இனி, நகர வங்கிகள் எண்ண நோக்கங்களுக்குக் கடன் வழங்குகின்றவென்று காண்போம். இவ் வங்கிகள் வழங்கும் கடன் பெரும்பாலும் நுகர்ச்சிக் கடனாக இருக்கின்றது என முன்னரே கண்டோம். ஆனால், இக் கடன்கள் வீணான செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்று கூறுவது பொருந்தாது. கை வினைஞர்களுக்குக் கருவிகள், கச்சாப் பொருள் வாங்கவும், வியாபாரிகளுக்கு நடைமுறைச் செலவுகளுக்கும் முன் கடன் தீர்க்கவும், அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், சடங்குச் செலவுகளுக்கும், கல்வி, மருத்துவச் செலவுகளுக்கும், வரிகள், காப்பீட்டுக் கட்டணம் முதலிய கட்டவும், வீட்டைப் பழுது பார்க்க, மேலுங்கட்ட அல்லது வாங்கவும், சில வங்கிகளில் நிலம் வாங்க, நிலத்தைச் சீர்படுத்த, கால்நடை வாங்க, கட்டைவண்டி செய்ய அல்லது வாங்க, விதை, உரம், விவசாயக் கருவி முதலிய வாங்கவும் கடன்கள் வழங்கப் படுகின்றன.

வாடிக்கையருக்கு இவ் வங்கிகள் அளிக்கும் வசதிகளில் முக்கிய மானது காசோலை எழுதி வைப்புத் தொகை திரும்பிப் பெறுதல்; மாற்றுச் சீட்டுத் தள்ளுபடி (Discounting of bills), பணமனுப்புகை (Remittance of funds) முதலியனவாகும். சில வங்கிகள் தம் வாடிக்கையர் சார்பாக ஊதியம், ஓய்வூதியம் (pension) பெறு கின்றனர்; வரிகள், காப்பீட்டுக் கட்டணம், வாடகை முதலிய வாடிக்கையர் சார்பாகச் செலுத்துகின்றனர்.

1970–71இல் 992 நகர வங்கிகள் மொத்தம் ரூ. 192·61 கோடி கடன்களை வழங்கியிருந்தன. 454 வங்கிகள் ரூ. 84·41 கோடி யளவு ரொக்கக் கடன், மேல் வரைப்பற்று (overdraft) வசதிகளைத் தந்திருந்தன. மேலும் ரூ. 45·41 கோடி மதிப்புள்ள மாற்றுச் சீட்டு

(Bill of Exchange), உண்டியல் (Hundi)களைத் தள்ளுபடி செய்து கொடுத்திருந்தன. 908 நகர வங்கிகள் ஆதாய நிலையில் செயல் பட்டு 1970-71இல் ரூ. 3·58 கோடி இலாபம் ஈட்டியிருந்தன. 165 வங்கிகள் நட்டத்தில் நடைபெற்று வந்தன. நட்டத் தொகை ரூ. 26 இலட்சமாக இருந்தது. இலாப நட்டம் ஏதுமின்றிச் செயல்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது.

மொத்த நகர வங்கிகளில் 851இல் முழுநேர ஊதியம் பெற்ற செயலர்கள் பணியாற்றி வந்தனர். 51 வங்கிகளில் பகுதி நேர செயலர்களும் 269 வங்கிகளில் ஊதியம் பெறாச் செயலர்களும் பணி புரிந்து வந்தனர்.

1970-71இல் 587 நகர வங்கிகள் மட்டும் வெளியில் கடன் வாங்கியிருந்தன. இதனால் ஏறத்தாழ, பாதி நகர வங்கிகள் வெளியில் கடன் வாங்காமலேயே தமது நடவடிக்கைகளைச் செய்து வந்தன என்பது புலனாகும். இது கூட்டுறவு வங்கிகளின் சிறப்புக் கூறு என்றும் கூறலாம்.

சிறு தொழில்களுக்குக் கடனுதவி வழங்க மிகச் சிறந்த சாதனமாக நகர வங்கிகள் செயல்படலாம். ஆனால், பெரும் பாலான நகர வங்கிகள் இத் துறையில் இறங்க அச்சப்படுகின்றன. இதற்குக் காரணம், கடன் கோருவோரின் திட்டத்தை ஆராய்ந்து அவருக்குத் திருப்பிச் செலுத்துந்திறன் இருக்குமா என்று சொல்லக் கூடிய தொழில் நுட்பந் தெரிந்தவர்கள் உதவி இவ் வங்கிகளுக்கு இல்லாததேயாகும். அண்மைக் காலத்தில் ரிசர்வு வங்கியும், மாநில அரசினரும் நகர வங்கிகளைச் சிறு தொழில் களுக்குக் கடனளிக்குமாறு ஊக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

திங்கள் தோறும் ஊதியம் பெறும் நடுத்தர, குறைந்த வருமானமுடைய ஊழியர்களுக்குக் கடன் வசதிகள் அளிக்க இவ்வகைச் சங்கங்கள் நிறுவப்பெற்றன. வாரமொருமுறை கூலி பெறும் தொழிலாளிகள் வட்டித் தொழிலர்கள் (money lenders) (ஈட்டிக்காரர்கள் என்றும் கூறப்படுவதுண்டு) பிடியிலகப்பட்டு மீள வழியில்லாது வருந்தி நின்றபோது இவ்வகைச் சங்கங்கள் அவர்களுக்கு எளிய முறையில் நியாயமான வட்டிக்குக் கடனளிக்க அமைக்கப்பட்டன. பலப்பல நிலையிலுள்ள பணியாளர்களுக்குத் தனித்தனி சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதையும் காணலாம். ரயில்வே ஊழியர், அரசு ஊழியர், வங்கி ஊழியர், பெரும் நிறுவனங்களின் ஊழியர் தாம் தமக்கெனத் தனித்தனி சங்கங்கள்

நிறுவியுள்ளதும் காணக்கிடக்கும் நிகழ்ச்சியாகும். நகர்ப்புற கடன் பற்றிய ஆய்வுக்குழு, ஐம்பது அல்லது அதற்கு மேல் பணியாளர்கள் கொண்டுள்ள நிறுவனம், ஆலை, அலுவலகம் தமது ஊழியரிடையே சிக்கனத்தைப் பரப்பவும் அவர்களுக்குக் கடன்களை வழங்கவும் பணியாளர் கடன் சங்கங்களை அமைக்க வேண்டுமெனப் பரிந்துரைந்தது.

நம் நாட்டில் பத்தாயிரத்துக்கும் மிகுதியாகப் பணியாளர் கடன் சங்கங்கள் 1971 ஜூன் இறுதியில் இருந்தன. இவற்றில் ஏறத்தாழ இரண்டாயிரம் சங்கங்கள் செயலற்ற நிலையிலிருந்தன. பணியாளர் சங்கங்களில் 46·87 இலட்சம் உறுப்பினர்களிருந்தனர்; இவர்களில் 29·46 இலட்ச உறுப்பினர் கடன் வாங்கியிருந்தனர். இந்தச் சங்கங்களின் நடைமுறை முதல் ரூ. 250·73 கோடியாக இருந்தது. இச் சங்கங்களின் செலுத்திய முதல் ரூ. 73·88 கோடியாகவும், காப்பு நிதிகள் ரூ. 19·57 கோடியாகவும், வைப்புகள் ரூ. 119·82 கோடியாகவும், வெளியிருந்து பெற்ற கடன் ரூ. 14·60 கோடியாகவும் இருந்தது. 1971 ஜூன் இறுதியில் பணியாளர் கடன் சங்கங்கள் அளித்திருந்த கடன்களின் மொத்த நிலுவை ரூ. 182·31 கோடியாக இருந்தது. இத் தொகையில் ரூ. 6·90 கோடி மட்டுமே தவணை கடந்து நின்றது குறிப்பிடத்தக்கது.

இச் சங்கங்களின் முக்கிய நோக்கங்களும், பணிகளும்:

(i) உறுப்பினர்களிடையே சிக்கனம், தன்னுதவி, கூட்டுறவு ஆகிய பண்புகளை வளர்த்தல்.

(ii) உறுப்பினர், உறுப்பினரல்லாதார் ஆகியவர்களிடமிருந்து வைப்புகளை ஈர்த்தல்.

(iii) உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கல்.

(iv) சங்கத்தின் நிதியினை முதலீடு செய்தல்.

(v) உறுப்பினர்கள் பொருட்டுக் கடன் சார்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

பணியாளர் கடன் சங்கங்களின் உறுப்பினர்நிலை மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றது. சில மாநிலங்களில் சங்கமொன்றுக்குச் சராசரி 100 உறுப்பினர்கள்கூட இல்லை; சில மாநிலங்களில் சராசரி 1,000 உறுப்பினர் இருந்தனர். தமிழ் நாட்டில் 924 சங்கங்களில் 4,48,000 உறுப்பினர்களிருந்தனர். உறுப்பினர் எண்ணிக்கை நிறுவனத்தின் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கையைப் பொறுத்தது. பல சங்கங்களில் வேலை காயமாக்கப்பட்ட (உறுதி செய்யப்பட்ட) பணியர்களை மட்டுமே

உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுகின்றனர். மற்றும் சில சங்கங்களில் குறைந்த அளவு இத்தனை ஆண்டுப் பணி செய்தவர்கள்மட்டுமே சங்கத்தில் உறுப்பினராகலாம் என்று விதிகள் இருக்கின்றன.

பணியாளர் கடன் சங்கம் ஒவ்வொன்றும் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு நிலையமாகும். இச் சங்கங்களுக்குக் கூட்டிணைப்பு ஏதும் கிடையாது. ஒவ்வொரு சங்கமும் பிற சங்கங்களுடன் தொடர்பற்ற தனி அமைப்பாகும்.

நிருவாகம்

பிற கூட்டுறவு நிலையங்கள் போன்றே சங்கத்தின் அதிகார மனைத்தும் உறுப்பினரனைவரும் அடங்கிய பேரவையின்கண் உள்ளது. பேரவை தேர்ந்தெடுக்கும் இயக்குநர் அவை அன்றாட நிருவாகத்தைக் கவனித்து வருகிறது. இதற்கு முழுநேர ஊதியம் பெறும் அலுவர் நியமிக்கப்படுகின்றனர். பல சங்கங்களில் இயக்குநர் அவையின் தலைவர், சங்கம் செயல்பட்டு வரும் அலுவலகம் அல்லது நிறுவனத்தின் தலைவராக இருக்கவேண்டும் என்று துணை விதிகளில் கூறப்பட்டிருப்பதுண்டு. சங்கம் சரிவர நடந்துவர இது பேருதவியாக இருக்கிறதென்று பலர் கருதுகின்றனர். அளவுக்குமீறி கடன் வாங்குவதைத் தவிர்க்கவும், கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுபவரை நெருக்கவும் இந்த அலுவல்வழி (Ex-officol) தலைமைப் பயன்படுகிறது. ஆனால், அலுவலகத்தின் தலைமை அலுவலர், சங்கத்தின் தலைவராகப் பதவி வழி வந்தால் பிற பணியாளர்கள் அவர் எதிரில் சங்க நடப்புப் பற்றிய தமது கருத்துகளை வெளியிடத் தயங்கக்கூடும். மற்றும் பணியாளர்களிடையே நிருவாகத் திறமை வளரும் வாய்ப்பும் குறைந்து போகலாம்.

நிதி திரட்டல்

உறுப்பினர் எடுத்துக் கொள்ளும் பங்கு முதல் எந்தவகையான சங்கத்திற்கும் இன்றியமையாத நிதியாக விளங்கினும், பணியாளர் கடன் சங்கங்களில் இது மிகவும் முக்கியமானதொரு நிதியாக அமைகிறது. இதற்குக் காரணம் இச் சங்கங்கள் பெரும்பாலும் வெளியிலிருந்து கடன் வாங்காமலிருப்பதேயாகும். தமது உறுப்பினரிடமிருந்தும், உறுப்பினரல்லாத பிறரிடமிருந்தும் பல்வகை வைப்புகளை இச் சங்கங்கள் பெறுகின்றன. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின்படி சங்கங்கள் என்ற பெயரில் இயங்கும் கூட்டுறவுகள் உறுப்பினரல்லாதாரிடமிருந்து வைப்புகளைப் பெறலாகாது. ஆனால், சில பணியாளர் கூட்டுறவுகள், பணியாளர் கூட்டுறவு வங்கிகள் என்ற பெயருடன் செயல்பட்டு வருகின்றன.

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின்படி செயலாற்றும் இவ் வங்கிகள் உறுப்பினரல்லாதாரிடமிருந்தும் நகர வங்கிகள் போன்று வைப்புகளைப் பெற்றுக் கொள்ளுகின்றன. 1971 ஜூன் இறுதியில் இச் சங்கங்கள் பெற்றிருந்த வைப்புத் தொகையான ரூ. 119·82 கோடியில் உறுப்பினர்களிடமிருந்து திரட்டிய தொகை ரூ. 108·59 கோடியாக இருந்தது. உறுப்பினரல்லாதார், பிற சங்கங்கள் ஆகியவற்றிடமிருந்து பெற்றது ரூ. 11·23 கோடி மட்டுமேயாகும்.

கடன் நடவடிக்கைகள்

பணியாளர் கடன் சங்கங்களின் நடவடிக்கைகளில் மிகச் சிறப்பான அம்சம் உறுப்பினர்கள் திருப்பித்தர வேண்டிய கடன் பெரும்பாலும் தவணை தவறாது குறித்த நேரத்தில் வசூலிக்கப் படுவதேயாகும். பணியாளரின் ஊதியத்திலிருந்து கடன் தவணை பிடித்தம் செய்யப்பட்டுச் சங்கத்திற்கு உடனடியாக அனுப்பப் பெறுவதால் சங்கங்கள் செம்மையாகச் செயலாற்ற முடிகிறது.

உறுப்பினரொருவர் உச்ச அளவு எவ்வளவு கடன் பெறலா மென்பது சங்கத்துக்குச் சங்கம் வேறுபடும் செய்தியாகும். உறுப்பினரின் மாத ஊதியம் போன்று இத்தனை மடங்கு என்றும், அவர் செலுத்த வேண்டிய முதல் தொகை இவ்வளவு என்றும், மொத்தக் கடன் இன்ன தொகைக்கு மிகக்கூடாது என்றும் சங்கத்தின் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பணியாளர் கடன் சங்கங்கள் பணியாளரின் சொந்தப் பிணை யின் பேரில் கடன் வழங்குகின்றன. சில சங்கங்கள் மற்ற உறுப்பினர் பிணையாளாக இருக்க ஒப்பினால் கடன் வழங்கு கின்றன. கடன் தவணை சங்கத்துக்குச் சங்கம் வேறுபடுகின்றது. பெரும்பாலும் 24 திங்கள் தவணைக்குட்பட்டே கடன்கள் வழங்கப் படுகின்றன.

உறுப்பினரிடையே சிக்கனத்தை வளர்க்கத் துவக்கப்பெற்ற இச் சங்கங்கள், நாளடைவில் உறுப்பினர்கள் பெருஞ் செலவாளி களாகவும் கடனாளிகளாகவும் ஆகிவிடுமளவுக்கு எளிய கடன் வசதிகளைச் செய்து தருகின்றன என்று குறை கூறப்படுகின்றது. தமது வாழ்க்கை நிலைக்கு மேல் உறுப்பினர்கள் செலவு செய்யவும் ஊதாரித்தனமான பழக்க வழக்கங்களை மேற் கொள்ளவும் இச் சங்கங்கள் வாய்ப்பளிக்கின்றன. இந்தப் போக்கை மாற்றி மிகவும் நெருக்கடி ஏற்படும் தவிர்க்க முடியாத அவசர காரணங்களுக்கு மட்டுமே கடன் வழங்குவது என்று சங்கங்கள் தாமே ஓர் ஒழுங்கு ஏற்படுத்திக் கொள்ளாவிடில் பணவீக்கம் மேலும் வலுப்பெற்று உறுப்பினரின் பொருளாதார நிலை சீர்குலைந்து போகும்.

1970-71இல் மொத்தம் 10,713 பணியாளர் கடன் சங்கங்களில் 7,158 சங்கங்கள் இலாபத்தில் நடைபெற்று வந்தன; 1,483 சங்கங்கள் நட்டத்தில் நடைபெற்றன; 2,072 சங்கங்கள் இலாபமோ நட்டமோ இல்லாமலிருந்தன.

தம் உறுப்பினர் நலன் கருதி சில பணியாளர் கடன் சங்கங்கள் கடன் சார்பற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றன. வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களை உறுப்பினர்களுக்குப் பற்றாக்குறை காலங்களில் வழங்கும் பணியைப் பல சங்கங்கள் செய்து வந்தன. நகரக் கடன் கூட்டுறவுகள் பற்றிய விசாரணைக் குழு இந்த ஏற்பாட்டை நல்லதென்று கருதவில்லை. தனியாகக் கூட்டுறவுப் பண்டசாலைகள் அமைத்து அவற்றின்வழி நுகர்ச்சிப் பொருள்களை வழங்குவதுதான் சிறந்தது. கடன் சங்கங்கள் பண்டசாலைப் பணிகளையும் செய்து வருவது விரும்பத்தக்கதல்ல என்று கருதினர். 1970-71இல் 608 பணியாளர் கடன் சங்கங்கள் ரூ. 9·67 கோடி மதிப்புள்ள நுகர்ச்சிப் பண்டங்களைக் கொள்முதல் செய்திருந்தன. இதே ஆண்டில் இச் சங்கங்கள் ரூ. 6·12 கோடி மதிப்புள்ள உணவு தானியங்களையும் ரூ. 4·11 கோடி மதிப்புள்ள பிற பண்டங்களையும் விற்பனை செய்திருந்தன.

பொதுவாகப் பணியாளர் கடன் சங்கங்கள் நல்ல முறையில் செயலாற்றி நல்ல நிதிநிலைப் பெற்று விளங்குவதால், தம் உறுப்பினர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் நலனை மேம்படுத்த பல நலஞ்சார் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றன. தம் உறுப்பினர்களுக்கு அவர்கள் வழங்கியுள்ள பங்கு முதல் மீது எவ்வளவு இலாப ஈவு உச்ச அளவாகத் துணை விதிகளில் அனுமதிக்கப் பட்டுள்ளதோ அந்த அளவு வழங்குகின்றன. உறுப்பினர்கள் பெரும்பாலும் கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பதால் இச் சங்கங்களின் நிருவாகம் செம்மையாக நடைபெறுகிறது.

சிக்கன, கடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயருடன் சில ஊதியம் ஈட்டுநர் (Salary Earners) கூட்டுறவுகள் அமைக்கப் பட்டுள்ளன. உண்மையில் இவையும் கடன் சங்கங்களே.

பணியாண்மையர் (Employers) துவக்க நிலையிலிருக்கும் பணியாளர் கடன் சங்கங்களுக்குப் பலவகையிலும் உதவ வேண்டுமென விவசாயச் சார்பற்ற பிரிவிலுள்ள கடன் கூட்டுறவுகளைப்பற்றிய ஆய்வுக்குழு பரிந்துரைத்தது. பணியாளரின் நலனை யொட்டிய நடவடிக்கை என்று ஏற்றுக் கடன் சங்கங்களை அமைக்கப் பணியாண்மையர் முழு ஆதரவு காட்டவேண்டும். இச் சங்கங்கள் நடக்கத் தேவைப்படும் இடம், மின்வசதி, மேசை நாற்காலி

முதலியவற்றை இலவசமாக அல்லது பெயரளவு வாடகைக்குத் தந்து உதவவேண்டும். புதிய சங்கங்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கி சங்கங்களுக்கு நடைமுறை முதல் கிடைக்க வழிசெய்ய வேண்டும். ஊதியப் பட்டியலில் கடன் வாங்கியோர் செலுத்த வேண்டிய தொகையினைப் பிடித்து அத் தொகையை உடனே சங்கத்திற்கு அனுப்பிவிடவேண்டும். இந்த ஏற்பாட்டிற்குக் கட்டணம் எதனையும் வசூலிக்கக்கூடாது. அந்தந்த மாநிலங் களிலுள்ள கூட்டுறவு சட்டப்படி, பணியாண்மையரிடம் கடன் பட்டுள்ள உறுப்பினர் இவ்வளவு தொகை சங்கத்திற்குத் தர வேண்டுமெனச் சங்கம் கோரினால் பணியாண்மையர் அத் தொகையை ஊதியத்திலிருந்து பிடித்துச் சங்கத்திற்கு அனுப்பிவிட சட்டமுறையாகக் கடமைப்பட்டுள்ளார்.

நகர கூட்டுறவுக் கடன் இயக்கம் - மதிப்பீடு

நகர கூட்டுறவுக் கடன் இயக்கம் நம் நாட்டின் கூட்டுறவு இயக்கத்தில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. நகரக் கடன் இயக்கம் என்று நாம் குறிப்பிடுவது நகர வங்கிகள், பணியாளர் கடன் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவு வங்கிகள், ஊதியம் பெறுநர் சங்கங்கள் என்பன போன்ற விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்களைக் குறிக்கும். சராசரி உறுப்பினர் எண்ணிக்கையிலோ, சராசரி பங்கு முதல் அளவிலோ, சராசரி வைப்பின் அளவிலோ விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள் விவசாயச் சங்கங்களை விஞ்சி நின்றன. தவணை கடந்த கடன், விவசாயக் கடன் சங்கங்களில் மிகுந்து நிற்கின்ற இன்றைய நிலையில், விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள் மிகவும் குறைந்த அளவில் தவணை கடந்த கடன் கொண்டிருப்பது பாராட்டத்தக்க செய்தியாகும். நகரக் கடன் கூட்டுறவுகள் நல்ல முறையில் செயல் படக் காரணங்கள் பலவுண்டு. திறமையான நிருவாகம், முற்போக்கான தலைமை, கல்வியறிவுமிக்க உறுப்பினர், பயிற்சி பெற்ற ஊழியர், பணத்தை வசூலிக்க நிலையான ஏற்பாடு, தன்னிறைவுபெற்ற நிலை போன்ற சில காரணங்கள் இச் சங்கங்களின் வெற்றிக்கு வழிவகுத்தன. நகரக் கடன் துறை சிறப்பாக வளர்ந்துள்ள போதிலும் அவற்றின் செயற் பாட்டில் பல குறைகளும் சிக்கல்களும் காணப்படுகின்றன. அவையாவன:

1. விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்களுக்கு மாநில அளவிலும், அனைத்திந்திய அளவிலும் கூட்டிணைப்பு (federation) ஏதுமில்லை. இச் சங்கங்கள் பிரதம கூட்டுறவுகளாகக் கருதப்

படுவதால் உச்சி வங்கிகளில் நேரடியாக உறுப்பினராகிப் பயன் பெற வாய்ப்பில்லை. ஓரிரு இடங்கள் தவிர மாவட்ட அளவில்கூட இச் சங்கங்களுக்குக் கூட்டிணைப்பு ஏதுமில்லை. தாம் செயல்பட்டு வரும் எல்லையில் தொடர்புள்ள மாவட்ட மத்திய வங்கிகளில் இச் சங்கங்கள் உறுப்பினராகித் தேவைப்படும் நேரத்தில் அவற்றிடம் கடன் வசதிகளைப் பெறுகின்றன. இருப்பினும், விவசாயச் சார்பற்ற கடன் சங்கங்கள், மத்திய வங்கிகள் தம்மை மாற்றுந்தாய்க் குழந்தைகள் போன்று கருதி வருகின்றன என்று குறைபடுகின்றன. இச் சங்கங்களுக்கெனத் தனியான கூட்டிணைப்பு மாநில, அனைத்திந்திய மட்டத்தில் இல்லாத காரணத் தால் தமது நடைமுறைச் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் முனைப்பாக எடுத்துச் சொல்லி தீர்வுகாண வசதிகளில்லை என்று இவை கருதுகின்றன.

2. மொத்தம் பதிவாகியிருந்த 15,346 விவசாயக் கடன் சார்பற்ற சங்கங்களில் 1971 ஜூன் இறுதியில் 2,962 சங்கங்கள் செயலற்றுக் கிடந்தது ஒரு பெரிய குறையாகும். இதிலும், 10,713 பணியாளர் கடன் சங்கங்களில் 1,993 சங்கங்கள் செயலற் றிருந்தது இச் சங்கங்களின் பெருங்குறைபாட்டைச் சுட்டுகின்றது. உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், அஸ்ஸாம், ஆந்திரப் பிரதேசம், ஒரிசா, மைசூர் ஆகிய மாநிலங்களில் ஐந்திலொரு பகுதிக்கும் மிகுதியான பணியாளர் கடன் சங்கங்கள் செயலற்றிருந்தன.

3. விவசாயக் கடன் சார்பற்ற சங்கங்கள் நாடு முழுதும் ஒரு சீராக வளர்ச்சி பெறவில்லை. அஸ்ஸாம், பீகார், மத்தியப் பிரதேசம், ஒரிசா போன்ற மாநிலங்களில் இச் சங்கங்கள் வளர்ச்சி குன்றியிருந்தன.

4. மிகுதியாக உறுப்பினர்களுள்ள சங்கங்களில் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடத்துவது பெரும்பாடாக இருக்கிறது. சில சங்கங்களில் ஆண்டுப் பொதுக்கூட்டங்களுக்குப் பெரும்பான்மை உறுப்பினர்கள் வருவதில்லை. சில மாநிலங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி ஆண்டுதோறும் இயக்குநர்களைத் தேர்ந் தெடுப்பதும் தொல்லையாக இருக்கிறது.

5. நகர்ப்புற கடன் சங்கங்கள் வழங்கும் கடன்கள் பெரும்பாலும் உற்பத்தி நோக்கற்றவையாக இருக்கின்றன. சிறு தொழில்களுக்குக் கடனுதவி வழங்க இச் சங்கங்கள் இன்னமும் முன்வரத் தயங்குகின்றன. இந்த நிலை மாறவேண்டும்.

6. நகர கூட்டுறவு வங்கிகள் பெரும்பாலும் தம் சொந்த நிதியினையும் திரட்டிய வைப்புகளையும் கொண்டே கடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், மேலும் நிதிவசதி கிடைத்தால் இன்னும் சிறப்பாகச் செயல்பட நிரம்ப வாய்ப்புண்டு. இதனால்தான் விசாரணைக் குழு நகர கூட்டுறவு வங்கியொன்றின் பங்கு முதல் குறைந்தது ரூ. 50,000 ஆக இருத்தல்வேண்டும்; இதில் 50% அளவுக்கு மாநில அரசு வழங்கி உதவலாம் என்று பரிந்துரைத்தது.

7. சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கும், வலிவற்ற பிரிவினருக்கும் உதவியளித்து அவர்களுக்கு வங்கியப் பழக்கத்தை அறிமுகம் செய்ய நகர வங்கிகள் சிறந்த கருவியாக விளங்குகின்றன. அரசு இவற்றின் சிறப்பை உணர்ந்து இவற்றிற்கு ஊக்கமளிக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். கூட்டுறவுத் துறையில் தலைமைப் பண்பை வளர்க்கவும் இவை பெருவகையில் பயன்படும்.

11. கூட்டுறவுச் சந்தையிடுகை
(Co-operative Marketing)

சந்தையிடுகை என்னுஞ் சொல் மிகவும் பரவலானது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள் அல்லது பண்டம் இறுதியாக அதை நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கப்படும்வரை மேற் கொள்ளப்படும் அத்தனைப் பணிகளும் அதனுள் அடங்கும். கூட்டுறவு இயக்கத்தில் சந்தையிடுகைச் சங்கங்களை 'விற்பனைச் சங்கங்கள்' என்று பொதுவாகப் பேசுவதுண்டு. ஆனுல், இச் சங்கங்கள் வெறும் விற்பனையில் மட்டும் ஈடுபட்டிருப்பனவல்ல. இச் சங்கங்கள் தமது உறுப்பினருக்குப் புரியும் பல பணிகளில் விற்பனையும் ஒன்ருகும். எனவே, இச் சங்கங்களைச் சந்தையிடுகைச் சங்கங்கள் என்று கூறுவதே பொருந்தும். விவசாயத் துறையில் சந்தையிடுகை பலவகைப்பட்ட பணிகளை உள்ளடக்கும். விவசாயிகளிடமிருந்து விளைபொருளை வாங்குதல்; அவற்றைக் குறித்த இடத்தில் கொண்டு சேர்த்தல்; தரம் பிரித்தல்; தரப்படி ஒன்று குவித்தல்; பக்குவப்படுத்தல்; கிடங்கிலிடல்; கட்டுதல்; விற்பனையிடங்களுக்குக் கொண்டு சேர்த்தல்; விளைபொருள் விற்பனையாகித் தொகை கிடைக்கும்வரை விவசாயிக்கு நிதிவசதி வழங்கல்; சரக்கினை இடர்களால் நட்டம் விளையாதிருக்கும் பொருட்டுக் காப்புறுதி செய்தல்; வாங்குவோர்-விற்போரை இணைத்தல்; நுகர்வோருக்கு விற்பனைச் செய்தல் ஆகிய பலப்பல பணிகள் சந்தையிடுகை என்ற சொல்லில் அடங்கியுள்ளன. ஆகவே, இந் நூலில் மார்க்கெட்டிங் (Marketing) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேராகச் சந்தையிடுகையென்ற சொல்லைக் கையாளு வோம்.

உழைத்து விளைவித்த விளைபொருளை விவசாயி நல்ல முறை யிலே விற்பனைச் செய்தால்தான் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக் கும். சந்தை நிலவரத்தையறிந்து ஒழுங்கான முறையில் விற்பனை

செய்தால்தான் விவசாயி விளைச்சலின் முழுப்பலனைப் பெறலாம். நம் நாடு போன்று வளர்ந்து வரும் நாடுகளில் விவசாய விளை பொருள்களைச் சந்தையிடுவது சிக்கல்கள் மிகுந்த பிரச்சினையாக உள்ளது. சிற்றளவு நிலம், மிகவும் குறைவான போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பாக வைக்க ஏற்பாடுகளில்லாமை, எழுத்தறி வற்ற மக்கள் போன்ற பல குறைபாடுகள் இருக்கின்ற காரணத் தால் இவற்றை நீக்கி விவசாயிகளுக்குச் சீரிய முறையில் சேவை செய்யும் பெருவாய்ப்புக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங் களுக்கு உண்டு.

விவசாய விளைபொருள்களைச் சந்தையிடுதலில் சில தனிவகைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. பல உற்பத்திப் பண்டங்களை நோக்க, விளைபொருள்களின் மதிப்பைவிட அவற்றின் பருமன் பெரிதாக உள்ளது. ஆகவே, அவற்றைப் பாதுகாப்பாக வைத் திருப்பதற்கும், ஏற்றி அனுப்புவதற்கும் செலவு நிரம்ப ஆகிறது. வேளாண்மை குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே மேற்கொள்ளப் படுகிறது. பயிர்க் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே அறுவடையா கின்றது. ஆனால், மக்களுக்கு விளைபொருள் அன்றாட நுகர்ச்சிக்கு ஆண்டு முழுதும் தேவைப்படுகிறது. குறிப்பிட்ட சில காலங்களில் அறுவடை செய்யப்படும் விளைபொருள்களை ஆண்டு முழுதும் தொடர்ந்து தேவைப்படும் நுகர்வோருக்கு வழங்கல் எளிய செய்தி யல்ல. இப் பணியினை ஏற்க நல்லதொரு சந்தைமுறை அமைய வேண்டும். சந்தைக்குக் கொண்டுவரப்படக் கூடிய விளைபொருள் மிகப்பல விவசாயிகளிடம் சிறுசிறு அளவில் அமைந்திருப்பதால் அவற்றைத் திரட்டி நுகர்வோர் குவிந்துள்ள நகர்ப்புறங்களுக்கு எடுத்துச் செல்வது எளிதல்ல. விளைபொருள்களைக் காப்பாக வைத்திருப்பதிலும், எடுத்துச் செல்வதிலும் தரம் கெட்டுப் போவதுண்டு; நட்டமேற்படுவதுமுண்டு. சிறிய, நடுத்தர விவசாயிகள் மேற்கண்ட பணிகளைத் தனிப்பட்ட முறையில் மேற் கொள்ளுவது எளிதல்ல. ஆகவே, இவர்கள் தரகர்கள் போன்ற இடைநிலையர்கள் (intermediaries) பலர் மூலம் தம் விளைபொருள் களைச் சந்தையிடுகின்றனர்.

கிராமப்புறங்களில் வாரமொருமுறை அல்லது குறிப்பிட்ட நாட்களில் சந்தைகள் கூடுவது வழக்கம். சந்தை நடக்கும் ஊரிலிருந்து 10 அல்லது 15 மைல் தொலைவு வரையுள்ள மக்கள் இச் சந்தைகளில் பங்கு கொள்ளுகின்றனர். நம் நாட்டில் 22,000 சந்தைகள் இருக்கின்றன. முக்கிய வியாபார நகரங்கள், தாலுக்கா தலைமையிடம் (Headquarters), இரயில் நிலையம் போன்ற இடங் களில் மண்டிகள் ((Mandis) எனப்படும் மொத்த வியாபாரச்

சந்தைகள் நம் நாட்டில் 3,400 இருக்கின்றன. இவையன்றி, ஏற்றுமதி செய்யப்படும் பொருட்டு அல்லது பக்குவப்படுத்தப்படும் பொருட்டு அல்லது நுகர்வோரிடம் சேர்ப்பிக்கப்படும் பொருட்டுக் குறிப்பிட்ட இடங்களுக்குப் பொருள் இறுதியாக எடுத்துச் செல்லப்படும் சந்தைகளும் உண்டு.

சந்தைகளில் காணப்படும் இடைநிலையர் பலர். கிராமத்திற்கு வந்து விளைபொருள்களை வாங்கிச் செல்பவர் கிராம வியாபாரி. சில நேரங்களில் விளைபொருளைப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு இவர் முன்பணம் கொடுப்பதுமுண்டு. கிராமத்தில் வாங்கிய விளைபொருளை ஒன்று சேர்த்துப் பாதுகாப்பாக வைத்திருப்பது இவரது முக்கிய பணியாகும். கிராம வியாபாரிக்கும் மண்டி வியாபாரிக்கும் இடையே கழிவு முகவர்கள் (Commission Agents) செயல்படுகின்றனர். தம்வழி மட்டுமே விளைபொருள் விற்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் இம் முகவர்கள் கிராம வியாபாரிக்கும் உற்பத்தி செய்யும் விவசாயிக்கும் பணவசதி செய்து தருகின்றனர். அடுத்த நிலையில் மொத்த வியாபாரிகள் காணப்படுகின்றனர். பணவசதி படைத்த இவ் வியாபாரிகள் விளைபொருளைச் சுத்தப்படுத்தி, பக்குவஞ் செய்து, நிறைபார்த்து, கட்டி விற்பனை செய்கின்றனர். விளைபொருளை வாங்கும் வியாபாரிகளையும் விற்கும் வியாபாரிகளையும் இணைக்கும் தரகர்கள் விற்பனைக்கு ஏற்பாடு செய்கின்றனர். இதற்கிடையே வேறு சில இடைநிலையர்களும் ஆங்காங்கு காணப்படுவதுண்டு. மாநிலத்துக்கு மாநிலம் அவர்கள் செயற்பாடு வேறுபடுகின்றது.

இடைநிலையர் பலர்வழி சந்தையிடுகை நடைபெறுவதனால் ஏற்படும் விளைவு பொருளுக்காக நுகர்வோர் கொடுக்கும் விலை மிகுந்து போகிறது. ஆனால், உழைத்துப் பொருளை விளைவித்த விவசாயி நல்ல பலன் அடைவதில்லை. அரசினர் இடைநிலையரின் சுரண்டலைத் தவிர்க்கப் பலப்பல நடவடிக்கைகள் எடுத்தும், ஏற்பாடுகள் செய்தும்கூட விவசாயிகள் இவர்கள் பிடியினின்று விடுபட்டார்களில்லை. இதற்குக் காரணம் கிராம மட்டத்திலுள்ள வியாபாரி விவசாயிகளுக்கு நிதியுதவியினை யளித்து வாடிக்கையாகச் சரக்கை அவர்களிடம் வாங்கி வருகின்றார். மற்றும் கிராமத்தில் நடக்கும் விற்பனையைக் கூர்ந்து கண்காணிக்க ஏற்பாடு ஏதுமில்லை.

கூட்டுறவுச் சந்தையிடுகை

தாம் தம் பண்ணையில் விளைவித்த பொருள்களைத் தமக்கு ஆதாயம் கிடைக்கும் வகையில், கூட்டுறவுச் சங்கமொன்று

அமைத்து, அதன்வழி சந்தையிடுகைப் பணிகளை மேற்கொள்ளலே கூட்டுறவுச் சந்தையிடுகை என்பதாகும். விளைவித்த பொருளை நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கும்வரை தேவைப்படும் சில அல்லது எல்லாப் பணிகளையும் அவற்றை உற்பத்தி செய்த விவசாயிகளே மேற்கொள்ளுவதைக் கூட்டுறவுச் சந்தையிடுகை என்பர். தனியார் வியாபாரிகள்வழி விற்பதைவிட ஆதாயமாக விற்க விவசாயிகளுக்கு உதவி செய்யும்பொருட்டுக் கூட்டுறவு முறையில் விவசாயிகளால் அமைக்கப்படுவன கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களாகும். விவசாயத்தின் மீதான அரசினர் குழு (Royal Commission on Agriculture) 1928இல் கூட்டுறவுச் சந்தையிடுகையின் இன்றியமையாமை குறித்துக் கூறியது கூர்ந்து நோக்கத்தக்கது: 'தனிப்பட்ட உற்பத்தியாளர் மிகச் சிறிய அளவினராக இருக்கும் இந்தியா போன்ற நாடுகளில் தனிநபர் சந்தையிடுதலைவிட பலர் சேர்ந்து ஒரு குழுவாகச் சந்தையிடுதல் திறமையுள்ளதாக அமையவேண்டும். தனது விளைபொருளைத் திறம்பட உற்பத்தி செய்து அதனைச் சந்தையிலிட ஏற்பாடு செய்யவும், திறம்பட தரம்பிரிக்க வேண்டிய அளவு விளைபொருள் கிடைக்கவும், இந்திய உற்பத்தியாளர் நேரடியாக ஏற்றுமதிச் சந்தையுடனும் பெரும் நுகர்வோருடனும் தொடர்பு கொள்ளவும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை அமைப்பது மிகவும் விரும்பத் தக்கதாகும்.'

உற்பத்தி செய்பவருக்கு நன்மையுண்டாகுமாறு சந்தையிடுகை அமைப்பு விளங்க வேண்டுமென்பதே கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களின் குறிக்கோளாகும். தேவையற்ற இடைநிலையரை நீக்கவும், தேவையான நிதியுதவி வழங்கிடவும், விவசாயிக்கு அவரது விளைபொருளை நல்ல விலைக்கு விற்கவும், தரமான பொருளை விளைவிக்க அவரை ஊக்குவிக்கவும், சந்தையில் பொருள்களை ஒழுங்காக, சீராக அளித்து அதன்வழி விலையினை நிலைபேறுக்கம் பெறச் செய்ய கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் உதவும் நோக்குகொண்டுள்ளன. தமக்கு மிகவும் ஆதாயமான முறையில் தமது விலைபொருள்களை விற்கவே உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களை ஏற்படுத்துகின்றனர். சுருங்கக் கூறின், கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களாவன:

(i) விவசாயி நல்ல விலை கோர அவருக்கு வலுவளிப்பது.

(ii) விளைபொருளுக்கு நல்ல விலையை உறுப்பினருக்குத் தேடித் தருவது.

(iii) தேவையற்ற இடைநிலையரை அகற்றுவது.

(iv) உறுப்பினருக்குத் தேவையான நிதியம் வழங்குவது.

(v) தரமான பொருளை உற்பத்தி செய்யுமாறு விவசாயியை ஊக்குவிப்பது.

(vi) விலையை நிலைபெருக்கம் செய்வது.

(vii) நியாயமான வியாபார முறைகளைக் கடைப்பிடிப்பது.

(viii) தரம் பிரிப்பது, போக்குவரத்து ஏற்பாடு செய்வது.

(ix) கடனைச் சந்தையிடுகையுடன் இணைத்துக் கூட்டுறவுக் கடன் இயக்கத்திற்கு உறுதுணையாக நிற்பது.

(x) விவசாயத் தேவைகளான விதை, கருவிகள் போன்றவற்றை வழங்குவது.

(xi) அரசின் முகவராகக் கொள்முதல் (Procurement) போன்ற பணிகளை மேற்கொண்டு விலை ஆதரவுக் கொள்கை (Price support policy)யினைச் செயல்படுத்துவது.

(xii) உறுப்பினர்களிடையே தன்னுதவி, சிக்கனம், சீரிய வேளாண்மை முறை ஆகியவற்றைப் பரப்புவது.

உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது நுகர்வோருக்கும், உற்பத்தியாளருக்கும், சமுதாயத்திற்கும் கூட்டுறவுச் சந்தையிடுகை நன்மை பயக்கின்றது. சந்தையிடுகைச் சங்கம் பேரளவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பிருப்பதால் அவற்றின் பணிகள் சிக்கனமாக அமையும். தேவையற்ற இடைநிலையரை அகற்றிப் பிற இடைநிலையர் செய்துவரும் பணிகளை மிகக் குறைந்த செலவில் பெறலாம். விளைபொருளுக்குச் சந்தையில் நல்ல விலை வரும்வரை காத்திருந்து பின்னர் தக்க நேரத்தில் விற்பனை செய்ய சங்கம் வசதியளிக்கின்றது. இதற்கிடையில் உறுப்பினருக்கு முன்பண உதவி வழங்கச் சங்கம் உதவுகின்றது. கூட்டுறவுக் கடன் நிலையங்கள்வழி சந்தையிடுகைச் சங்கம் கடன் வசதிகள் பெறக் கூடுமாதலால் நியாயமான நிபந்தனைகளின் பேரில் விவசாயிகள் கடன்பெற வாய்ப்புண்டு. நுகர்வோர் கலப்படமற்றத் தரமான பொருள்களைப் பெற முடியும். விலையும் நியாயமானதாக இருக்கும். விளைச்சலைப் பெருக்கத் தேவையான உரம், விதை, பூச்சிக் கொல்லி மருந்து முதலியவற்றைச் சங்கம் உறுப்பினர்களுக்கு வழங்கலாம். சங்க நடவடிக்கைகளில் ஏற்படும் இலாபம் மீண்டும் உறுப்பினர்களிடையே அவர்கள் சங்கத்திற்கு விளைபொருளை விற்ற விகிதப்படி பகிர்ந்தளிக்கப்படும். உற்பத்தியும் சந்தையிடுகையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நிற்கும் பிரச்சினைகள் என்பதை விவசாயிகள் உணர்ந்து செயல்பட சந்தையிடுகைச்

சங்கம் ஒரு கல்விக்கூடமாகவும் திகழ்கிறது என்று கூறினல் அது மிகையாகாது. விவசாயிகளுக்குப் பொருளாதார உண்மைகளை உணர்த்தவும் இச் சங்கம் பயன்படுகிறது.

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் அயல்நாடுகளில் வளர்ந்துள்ள வண்ணம் குறிப்பிடத்தக்கதாயுள்ளது. அமெரிக்க நாட்டில் உற்பத்தியாகும் பழம், காய்கறியில் 90%, உலர்ந்த பழங்களில் (Dry fruits) 95%, அரிசியில் 40% கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள்வழி விற்கப்படுகின்றன. டென்மார்க்கில் பால்பண்ணைகளுக்கு அனுப்பப்படும் பாலில் 85%, வெண்ணெய் உற்பத்தியில் 84%, பாலேட்டு உற்பத்தியில் 88%, பால் மாவு (Milk Powder) உற்பத்தியில் 79% கூட்டுறவுப் பால்பண்ணைகள்வழி நிகழ்ந்தன. ஜப்பான் நாட்டில் அரசினருக்குச் சேர்ப்பிக்கப்படும் அரிசியில் 96% கூட்டுறவுகள் அளித்தன. மற்றும் சந்தையில் புழங்கிய கோதுமையில் 80% உருளைக் கிழங்கில் 50% கூட்டுறவுகள்வழி கையாளப்பட்டது. இஸ்ரேலில் விவசாய விளைபொருள்களில் 70% அளவு கூட்டுறவுகளால் கையாளப்பட்டது. கனடாவில் விவசாயிகளில் 59% சந்தையிடுகைச் சங்கங்களில் உறுப்பினராக இருக்கின்றனர். பண்ணைகள்வழி கிடைக்கும் வருமானத்தில் 35% கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் மூலம் பெறப்பட்டது. பிரான்சு நாட்டிலுள்ள சந்தையிடுகைச் சங்கங்கள் உபரியாகவுள்ள கோதுமையில் 80% பால் பண்ணைப் பொருள் 52%, மது உற்பத்தியில் 33% கையாண்டன. யுகோஸ்லாவியாவில் காய்கறி 90% தானிய வகைகள் 68% கால் நடை 70% கூட்டுறவுகளால் கையாளப்பட்டன. பொதுவாகக் கூறினல் மேலை நாடுகளில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் விவசாயிகளுக்குச் சீரிய முறையில் தொண்டு செய்து வருகின்றன.

இந்தியாவில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் அயல் நாடுகளைக் காட்டிலும் அவசியம் தேவைப்படுகின்றன. இந்திய விவசாயிகள் கிராம மட்டத்திலுள்ள வியாபாரியின் தயவை நாடி நிற்கின்றனர். இவ் வியாபாரிகளில் பலர் வட்டித் தொழிலர் களாகவும் செயல்படுகின்றனர். இவர்களிடம் கடன்பட்டுள்ள விவசாயி அறுவடை செய்தவுடன் தன் விளைபொருளை மிகவும் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிருர். பின்னர் விலையேற்றம் ஏதும் ஏற்பட்டால் அதனுல் பயனடைபவர் இடைநிலையரேயன்றி உழைத்து விளைவித்த விவசாயியல்ல. மற்றும் கூட்டுறவுக் கடன் இயக்கம் சிறப்பாகச் செயல்பட கடனும் சந்தையிடுதலும் செவ்வனே இணைக்கப்படவேண்டும். அதாவது கூட்டுறவுச் சங்கம் வழங்கிய கடனை அடைக்க விவசாயி

தனது விளைபொருளைக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கவழி விற்பனை செய்து விற்பனைவழி கிடைத்த தொகையிலிருந்து சங்கத்திற்குச் சேர வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் ஏற்பாடு இருத்தல்வேண்டும். நம் நாட்டில் விவசாயம் சிறப்பாக ஓங்கி வளர சந்தையிடுகை மிக இன்றியமையாதது என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். கூட்டுறவுத் துறையின் எதிர்கால வளர்ச்சி பிற பிரிவுகளைவிட சந்தையிடுகைப் பிரிவினையே பொருத்திருக்கிறது என்று கூறுவது மிகையாகாது.

இந்தியாவில் சந்தையிடுகைக் கூட்டுறவுகள்

புதுரக பருத்தி விளைவிக்கவும், விளைவித்த பொருளை ஒன்று சேர்த்து விற்கவும் 1915, 1917ஆம் ஆண்டுகளில் அன்றைய பம்பாய் மாகாணத்தில் ஹுப்லி, கடக் ஆகிய இடங்களில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் துவக்கப் பெற்றன. 1920-21இல் 31 சந்தையிடுகைச் சங்கங்களே பம்பாய் மாகாணத்தில் இருந்தன. இந்த எண்ணிக்கை 1942-43இல் 142 ஆக உயர்ந்தது. அன்றைய சென்னை மாகாணத்தில் 1920-21இல் இரண்டு சந்தையிடுகைக் கூட்டுறவுகள் மட்டுமே இருந்தன 1943-44இல் 181 ஆக வளர்ந்தன. அதே ஆண்டில் உத்தரப் பிரதேசத்தில் 116 சந்தையிடுகை ஒன்றியங்கள் இருந்து வந்தன. பொதுவாகக் கூறுமிடத்து, இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற போது சில மாகாணங்களில் மட்டுமே கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் ஓரளவுக்குச் செயல்பட்டு வந்தன.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற சில திங்களில் கூட்டுறவுத் திட்டக் குழுவினர் தமது அறிக்கையை வெளியிட்டனர். அடுத்த பத்து ஆண்டுகளில் கூட்டுறவுச் சந்தையிடுகை என்னவென்ன முறைகளில் முனைப்பாகச் செயல்பட்டு வளர வேண்டுமெனச் சில பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன. இருநூறு கிராமங்களுக்கு ஒரு சந்தையிடுகைச் சங்கம் என்ற கணக்கில், நாட்டில் அன்றிருந்த 2,000 மண்டிகளில் மண்டிக்கொரு சந்தையிடுகைச் சங்கம் அமைத்து அதன்வழி உபரி விளைபொருள்களில் 25% அளவுக்குக் குறையாது கையாளப்பட வேண்டும். விளைபொருளை உற்பத்தி செய்யும் விவசாயிகள் நலனை முன்னிட்டுத் தரம் பிரித்தல், பக்குவப் படுத்தல் போன்ற பணிகளை இச் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும். கூட்டுறவுக் கடனும் சந்தையிடுகையும் சரியான முறையில் பிணைக்கப்படவேண்டும். அரசு சந்தையிடுகைச் சங்கங்களின் நிருவாகச் செலவுகளைச் சமாளிக்க முதல் ஐந்தாண்டுகளுக்கு மானியம் வழங்கவேண்டும். இப் பரிந்துரைகள்மீது திட்டமிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை.

இந்தியக் கூட்டுறவு இயக்கத்தில் சந்தையிடுகை சிறியதொரு பங்கைப் பெற்றிருப்பது கண்டு எலினர் ஹ்யூ என்னும் பெருங் கூட்டுறவாளர் தமது வருத்தத்தைத் தெரிவித்தார். அனைத்திந் தியக் கிராமக் கடன் விசாரணைக் குழுவினரும் கூட்டுறவுச் சந்தை யிடுகையின் பின் தங்கிய நிலையைக் கண்டு கவலை தெரிவித்தனர். ஏதோ இங்கும் அங்குமாக ஓரொரு சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருவது இச் சங்கங்களுக்குள்ள நல்ல வாய்ப்பையும் அவை விவசாயிகளுக்கு ஆற்றக்கூடிய பணிகளையும் எடுத்துக் காட்டுவது போன்று அமைந்தாலும், மொத்தத்தில் சந்தை யிடுகையில் சங்கங்களின் பங்கு மிகக் குறைவாக இருந்தது.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலமான 1950-51லிருந்து 1955-56 வரை சந்தையிடுகைத் துறையில் முன்னேற்றமேதும் காணப்படவில்லை. திட்டம் துவங்கியபோது ரூ. 47 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள் சந்தையிலிடப்பட்டது திட்ட கால இறுதியாண்டில் ரூ. 53 கோடியாக மட்டும் உயர்ந்திருந்தது. இரண்டாம் திட்ட காலத்தில் 1,800 பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள் துவக்கப்பட வேண்டுமெனவும், மாநிலத்துக்கு ஓர் உச்சி சந்தையிடுகைச் சங்கம் அமைக்கப்பட வேண்டுமெனவும் திட்டமிடப்பட்டது. இதன்படி 1,869 பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள் புதிதாக அல்லது திருத்தி அமைக்கப் பட்டன. பிரதம சங்கங்களின் கூட்டிணைப்பாக மாநில அளவில் உச்சி சந்தையிடுகைச் சங்கங்கள், ஜம்மு - காஷ்மீர் நீங்கலாக எல்லா மாநிலங்களிலும் நிறுவப்பெற்றன. உச்சி சங்கங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், மாநிலங்களிடை வியாபா ரத்தை வளர்க்கவும், நாட்டு அளவில் தேசீய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்பு (National Agricultural Co-operative Marketing Federation) ஒன்றும் அமைக்கப்பட்டது. இரண்டாம் திட்ட இறுதியில் பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள் 3,108, மத்திய சந்தையிடுகைச் சங்கங்கள் 171, உச்சி சந்தை யிடுகைச் சங்கங்கள் 24 செயல்பட்டு வந்தன ரூ. 174 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்களைச் சந்தை யிடுகைக் கூட்டுறவுகள் திட்ட இறுதியாண்டில் கையாண்டன. இது ஓரளவுக்கு முன்னேற்றத்தைக் காட்டிய போதிலும் நாட்டின் மொத்த விளைபொருள் விற்பனையில் மிகச் சிறிய அளவாகும்.

மூன்றும் திட்ட காலத்தில் சந்தையிடுகை அமைப்பை மேலும் வலுப்படுத்த 544 புதிய சங்கங்களை உருவாக்கத் திட்டமிடப் பட்டது. மூன்றும் திட்டகால இறுதி ஆண்டான 1965-66இல்

கூட்டுறவுகள் ரூ. 360 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்களைக் கையாள வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது. திட்டப்படி குறியீடும் நிறைவேற்றப்பட்டது. இதில் ரூ. 147·12 கோடி மதிப்புள்ள கரும்பும், ரூ. 26·00 கோடி மதிப்புள்ள பருத்தியும், ரூ. 136·75 கோடி மதிப்புள்ள உணவுதானியங்களும், ரூ. 50·54 கோடி மதிப்புள்ள பிற பயிர்களும் அடங்கும். புதிய சங்கங்கள் 452 அமைக்கப்பட்டன. 1965-66 இறுதியில் 3,198 சந்தையிடுகைச் சங்கங்களிருந்தன.

நான்காம் திட்ட காலத்தில் சந்தையிடுகை மேலும் வளர்ச்சி பெற திட்டங்கள் வகுக்கப்பட்டன. அடித்தளத்தில் செயல்படும் பிரதம சந்தையிடுகைச் சங்கங்களை வலுப்படுத்தல், மாநில, நாட்டளவு கூட்டிணைப்புச் சங்கங்களை வலுப்படுத்தல், தரம் பிரித்தல், சரக்குத் திரட்டல் போன்ற பணிகளை மேலும் பல கூட்டுறவுகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்தல், நேரடியாகக் கொள்முதல் செய்ய சங்கங்களுக்கு உதவும் வகையில் விலை ஏற்றத் தாழ்வு நிதியினைத் தொடர்ந்து வைத்திருத்தல் போன்றன இத் திட்டத்தில் இடம்பெற்றன. நான்காம் திட்ட கால இறுதி ஆண்டான 1973-74இல் ரூ. 900 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருளைக் கூட்டுறவுகள் கையாளும் என எதிர்பார்க்கப் பட்டது. மாநிலங்களிடை வியாபாரத்தில் ரூ. 25 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்களும், ஏற்றுமதி வியாபாரத்தில் ரூ. 10 கோடி மதிப்புள்ள பொருள்களும் கூட்டுறவுகளால் கையாளப்படுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

சந்தையிடுகைச் சங்கங்களின் அமைப்பு

சந்தையிடுகைச் சங்கங்களின் அமைப்பு நாடு முழுதும் ஒரு சீராக இல்லை. சில மாநிலங்களில் மூன்றடுக்கு அமைப்பும் சில மாநிலங்களில் இரண்டு அடுக்கு அமைப்பும் காணப்படுகின்றன. அஸ்ஸாம், பீகார், கேரளம், மத்தியப் பிரதேசம், கர்நாடகம் (மைசூர்), ஒரிசா, ராஜஸ்தான் முதலிய மாநிலங்களில் இரட்டை அடுக்கு (two - tier) அமைப்புக் காணப்படுகின்றன. பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள் அடித்தளத்திலும், மாநில அளவில் உச்சி சந்தையிடுகைச் சங்கமும் இம் மாநிலங்களில் காணப்படுகின்றன. ஆந்திரம், குஜராத், தமிழ்நாடு, மகாராட்டிரம், உத்தரப் பிரதேசம், ஹரியானு, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் அடித்தளத்தில் பிரதம சங்கங்களும், மாவட்ட அளவில் மத்திய சந்தையிடுகைச் சங்கங்களும், மாநில அளவில் உச்சி சங்கமும் செயல்படுகின்றன.

மூன்றடுக்கு அமைப்பு அவசியம்தானா, அது பயனுள்ளதா என்ற பிரச்சினை பல காலமாக வாதிடப்பட்டு வருகிறது. உச்சி சங்கங்கள் மாவட்ட அளவில் கிளைகள் அமைத்து மத்திய சங்கங்கள் செய்யக்கூடிய பணிகளைச் செய்யலாம் என்ற கருத்தும் நிலவி வருகிறது. கூட்டுறவுச் சந்தையிடுகை மீதானக் குழு இப் பிரச் சினையை ஆராய்ந்து வருங்காலத்தில் கூட்டுறவு சந்தையிடுகைச் சங்கங்கள் இரட்டை அடுக்கு முறையில்—மாநில அளவில் உச்சி சங்கமும், மாவட்ட அளவில் அல்லது பிராந்திய அளவில் உச்சி சங்கத்தின் கிளைகளும், மண்டி அளவில் பிரதம சங்கங்களும் அமைக் கப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்தது. மூன்றடுக்கு அமைப்பு முன்னரே இருந்துவரும் மாநிலங்களில், இருந்துவரும் ஏற் பாட்டை மாற்ற வேண்டுவதில்லை. பிரதம சங்கங்கள் மேற்கொள் ளக் கூடிய பணிகளை மாவட்டச் சங்கம் செய்து வருவதைப் படிப் படியாக விட்டுவிடவேண்டும்.

தேசீய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்பு (National Agricultural Co-operative Marketing Federation-NAFED)

உச்சி சந்தையிடுகைச் சங்கங்களின் கூட்டிணைப்பாக நாட்டளவில் செயல்பட்டு வரும் அமைப்புத் தேசீய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கமாகும். இதன் தலைமை அலுவலகம் புது டெல்லியில் உள்ளது. 1958இல் நிறுவப்பெற்ற இந்தச் சங்கத்தில் 22 உச்சி சங்கங்கள் 1970-71இல் உறுப்பினராக இருந்தன. 1971 ஜூன் இறுதியில் இக் கூட்டிணைப்பின் செலுத்திய முதல் ரூ. 39·25 இலட்சமாக இருந்தது. இதன் நடைமுறை முதல் ரூ. 429·58 இலட்சமாக இருந்தது. 1970-71இல் இக் கூட்டிணைப்பு ரூ. 5·26 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்களை ஏற்றுமதி செய்திருந்தது. பருப்பு, மிளகாய், இஞ்சி, பூண்டு, ஏலக்காய், வேர்க்கடலை ஆகிய பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதே ஆண்டில் மாநிலங் களுக்கிடையேயான வியாபாரம் ரூ. 122·21 இலட்சத்திற்கும் 1971-72இல் ரூ. 225·93 இலட்சத்திற்கும் இக் கூட்டிணைப்பால் மேற்கொள்ளப்பட்டது.

மாநிலச் சந்தையிடுகைச் சங்கங்கள்

மாநில அளவில் செயல்படும் சந்தையிடுகைச் சங்கங்கள் சில மாநிலங்களில் கூட்டிணைப்புகள் (federations) என்று அழைக்கப் படுகின்றன. இவை தமது உறுப்பினர் சங்கங்கள் சார்பில், முக்கியமாக மாநிலங்களுக்கிடையேயான வியாபார நடவடிக்கை களை மேற்கொள்ளுகின்றன. விவசாயிகளுக்கு வேண்டிய

உரங்கள் போன்ற உள்ளீடுகளை (inputs) கூட்டுறவுச் சங்கங்கள் வழி வழங்கலையும் மாநிலச் சங்கங்கள் மேற்கொள்ளுகின்றன. பெருமளவு தொகை முதலீடு தேவைப்படும் பக்குவப்படுத்தும் நடவடிக்கைகளையும் உச்சி சந்தையிடுகைச் சங்கங்கள் மேற்கொள்ளுவதுண்டு. நவீன அரிசி ஆலை (Modern Rice Mill) நிறுவுதல் உரமணி (granulated fertiliser) தயாரிப்பு, விவசாயக் கருவிகள் தயாரிப்புப் போன்ற பணிகளிலும் இச் சங்கங்கள் ஈடுபடுகின்றன. மாநிலச் சங்கங்கள் அரசு இலாகாக்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு செயலாற்ற வேண்டியுள்ளன. பொதுமக்களுக்கு இன்றியமையாப் பண்டங்களை வழங்கச் சில மாநில அரசினர் மாநிலச் சந்தையிடுகைச் சங்கங்களை வேண்டிக் கொண்டுள்ளனர். தன்னுடன் இணைந்துள்ள பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள்வழி இவ் வழங்கற்பணி செய்து வரப்படுகிறது. மற்றும் பிரதம சங்கங்கள் கிட்டங்கிகள் கட்ட, பக்குவப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள மாநிலச் சங்கத்தின் உதவியை நாடுவதுண்டு. இப் பணிகளைச் சீராகச் செய்ய மாநிலச் சங்கம் இணைந்துள்ள சங்கங்களை மேற்பார்வை செய்து கண்காணித்து, வழிகாட்ட வேண்டியிருக்கிறது.

1971 ஜூன் இறுதியில் 28 மாநிலச் சந்தையிடுகைச் சங்கங்கள் செயல்பட்டு வந்தன. இதில் 25 சங்கங்களில் அரசு கூட்டுச் சேர்ந்திருந்தது. மாநிலச் சங்கங்களின் நடைமுறை முதல் ரூ. 270·16 கோடியாக இருந்தது. இவற்றின் செலுத்திய முதல் ரூ. 14·33 கோடியில் அரசு வழங்கியது ரூ. 12·52 கோடியாக இருந்தது. இவற்றிடம் இருப்பாக இருந்த விவசாய விளை பொருள் ரூ. 60·88 கோடி, விவசாயத் தேவைப் பொருள் (requisites) ரூ. 50·70 கோடி. நுகர்ச்சிப் பண்டங்கள் ரூ. 13·86 கோடி என மதிப்பிடப்பட்டது. 1970–71இல் இச் சங்கங்கள் கொள்முதல் செய்த விவசாய விளைபொருள் மதிப்பு ரூ. 34·81 கோடி; விவசாயத் தேவைப் பொருட்கள் மதிப்பு ரூ. 104·80 கோடி; நுகர்ச்சிப் பொருள் மதிப்பு ரூ. 24·81 கோடி. இவை தம் கணக்கில் விற்ற பொருள்களின் மதிப்பு. விவசாய விளைபொருள் ரூ. 119·48 கோடி; விவசாயத் தேவைப் பொருட்கள் ரூ. 125·47; நுகர்ச்சிப் பண்டங்கள் ரூ. 19·71 கோடி. முகவர்களாக விற்ற பொருளின் மதிப்பு விவசாய விளைபொருள் ரூ. 20·61 கோடி; விவசாயத் தேவைப் பொருட்கள் ரூ. 16·81 கோடி நுகர்ச்சிப் பொருள் ரூ. 0·78 கோடி. விவசாயத் தேவைப் பொருட்கள் என்பது உரங்கள், விதை, விவசாயக் கருவிகள், பூச்சிக் கொல்லி மருந்து முதலியவற்றைக் குறிக்கும்.

மாநிலச் சங்கங்களில் 1971 ஜூன் இறுதியில் 8,933 உறுப்பினர் இருந்தனர். இதில் விவசாயக் கடன் சங்கங்கள் 1,580; சந்தையிடுகைச் சங்கங்கள் 2,583; பிற கூட்டுறவுச் சங்கங்கள் 3,522; தனிநபர், பிறர் 1,248. அஸ்ஸாம், பீகார், ஹரியானா, கேரளம், மைசூர், ஒரிசா, பஞ்சாப், தமிழ்நாடு, மேற்கு வங்காளம் முதலிய மாநிலங்களில் விவசாயச் சங்கங்கள் மாநிலச் சங்கத்தில் உறுப்பினராகவில்லை.

மத்திய சந்தையிடுகைச் சங்கங்கள்

சில மாநிலங்களில் மட்டும் மாவட்ட மட்டத்தில் மத்திய சந்தையிடுகைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச் சங்கங்கள் தமது செயல் எல்லையிலுள்ள பிரதம சங்கங்களின் செயற்பாட்டை ஒருங்கிணைத்து விவசாய விளைபொருள்களைச் சந்தையிலிடுவதிலும், பக்குவப்படுத்தலிலும், விவசாயத் தேவைப் பொருட்கள் நுகர்ச்சிப் பண்டங்கள் வழங்குவதிலும் ஓர் ஒழுங்கை ஏற்படுத்துகின்றன. 1971 ஜூன் இறுதியில் நம் நாட்டில் மொத்தம் 363 மத்திய சந்தையிடுகைச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் பெரும்பாலானவை ஆந்திரம், பீகார், குஜராத், மகாராட்டிரம், உத்தரப் பிரதேசம் முதலிய மாநிலங்களில் காணப்பட்டன. 1971 ஜூன் இறுதியில் இச் சங்கங்களின் நடைமுறை முதல் ரூ. 120·78 கோடியாக இருந்தது. இதில் 314 சங்கங்கள் 1,143 கிட்டங்கிகளைக் கொண்டிருந்தன. மத்தியச் சங்கங்கள் கொள் முதல் செய்திருந்த விவசாய விளைபொருள் மதிப்பு ரூ. 16·42 கோடியாகவும், விவசாயத் தேவைப் பொருட்களின் மதிப்பு ரூ. 37·71 கோடியாகவும், நுகர்ச்சிப் பொருளின் மதிப்பு ரூ. 28·28 கோடியாகவும் இருந்தது. இவை தம் கணக்கில் விற்ற விவசாய விளைபொருளின் மதிப்பு ரூ. 17·11 கோடி; விவசாயத் தேவைப் பொருட்களின் மதிப்பு ரூ. 50·60 கோடி; நுகர்ச்சிப் பொருளின் மதிப்பு ரூ. 30·32 கோடி; முகவராக விற்ற விவசாய விளை பொருளின் மதிப்பு ரூ. 120·46 கோடி, விவசாயத் தேவைப் பொருட்களின் மதிப்பு ரூ. 43·79 கோடி; நுகர்ச்சிப் பொருளின் மதிப்பு ரூ.5·20 கோடி.

இனிமேல் மாவட்ட அளவில் மத்தியச் சந்தையிடுகைச் சங்கங்கள் துவக்கப்பட வேண்டாம் என்று கூட்டுறவுச் சந்தையிடுகை மீதான குழு பரிந்துரைத்தது. தேவைப்படும் இடங்களில் உச்சி சங்கங்கள் மாவட்ட கிளைகளைத் திறக்கலாம். மாநிலச் சங்கமும், பிரதம சங்கங்களும் சீரிய முறையில் செயலாற்றும் வட்டாரங்களில் அவை நேரடி தொடர்புகொண்டு நடுவிலுள்ள மத்திய சங்கத்தை அகற்றிவிடுவது நன்மை பயக்கக்கூடும். மாவட்ட

அளவில் சங்கங்கள் தொடர்ந்து இருந்துவரும் நிலையில், இச் சங்கங்கள் பிரதம சந்தையிடுகைச் சங்கங்களை மட்டுமே உறுப்பின ராகச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். பிரதம சங்கங்களின் வளர்ச்சிக்கு மாவட்டச் சங்கங்கள் எவ்வகையிலும் குந்தகம் விளைவிக்கலாகாது.

1971-72 துவக்கத்தில் கரும்பு அளிப்புச் சங்கங்கள் நீங்கலாக, 161 மாவட்ட மத்திய சந்தையிடுகைச் சங்கங்கள் செயல்பட்டு வந்தன. மாவட்டங்களுக்கிடையேயான வியாபாரத்தை இச் சங்கங்களில் சில மேற்கொண்டிருந்தன.

பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள்

சந்தையிடுகை அமைப்பில் அடித்தளத்தில் இயங்கி வருவன பிரதம சந்தையிடுகைச் சங்கங்களாகும். சில மாநிலங்களில் இவை தாலுக்கா மட்டத்திலும், சில மாநிலங்களில் வட்டார (Block) மட்டத்திலும், பல மாநிலங்களில் மண்டிகள் (Mandis) உள்ள இடத்திலும் அமைந்துள்ளன. பொதுவாக வியாபாரத் துறையில் முக்கிய சந்தையிடம் (Marketing Centre) என்று கருதப்படும் இடங்களில் பிரதம சங்கங்கள் அமைவது சாலச் சிறந்தது. வியாபாரக் கண்ணோட்டத்தில் மிகவும் பொருத்தமாகக் கருதப்படும் அளவு பரப்பினைப் பிரதம சங்கங்கள் செயல் எல்லை யாகக் கொள்ளலாம். பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள் ஆற்றும் முக்கிய பணிகளாவன :

(i) தமது உறுப்பினர்களின் விவசாய விளைபொருளை விற்றல் —இப் பணியைச் செய்ய விளைபொருளைப் பிரித்து, தரப் படுத்தி, கட்டுமானம் செய்தல் ; விளைபொருளை உறுப் பினர் பண்ணையிலிருந்து சந்தைக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்தல்.

(ii) விளைபொருளைப் பிணையாக ஏற்றுக்கொண்டு உறுப்பினர் களுக்கு முன் பணம் வழங்குதல்.

(iii) சங்கம் வாங்கிய அல்லது உறுப்பினர்களுடைய கச்சாப் பொருளைப் பக்குவப் படுத்தல்.

(iv) விவசாயத் தேவைப் பொருட்களான ரசாயன உரம், தழை உரம், விதை, கருவிகள் முதலிய தருவித்து வழங்கல்; இன்றியமையாது வீட்டுக்குத் தேவைப்படும் பண்டங்களையும் தருவித்து வழங்கல்.

(v) உறுப்பினர்களின் விளைபொருளைப் பாதுகாவலாக வைத் திருத்தல்.

(vi) அரசினரின் முகவராக விவசாய விளைபொருள்களைக் கொள்முதல் செய்தல்.

(vii) தரமான பயிர் ரகங்களை உற்பத்தி செய்யுமாறு உறுப்பினர்களை ஊக்குதல்.

(viii) விளைபொருள்களை ஒன்று திரட்டி (Pooling) அதன்வழி நல்ல விலைக்கு விற்க ஏற்பாடு செய்தல்; ஆதாயத்தை உறுப்பினரனைவருக்கும் சமமாகக் கிடைக்கச் செய்தல்.

(ix) விளைபொருளை ஏற்றுமதி செய்து விவசாயிக்கு நல்ல விலை தேடித்தருதல்.

(x) கடனைச் சந்தையிடுகையுடன் இணைக்கும் பொருட்டுக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள், மத்திய வங்கிகள் முதலியவற்றுடன் இணைந்து செயல்படுதல்.

(xi) உறுப்பினர்களிடையே சிக்கனம், தன்னுதவி, கூட்டுறவு ஆகிய பண்புகளை வளர்த்தல்.

(xii) வைப்புகளை ஏற்றுக்கொள்ளல் இணைந்துள்ள மத்திய வங்கிகளிடமிருந்து கடன் வாங்கல்.

பிரதம சந்தையிடுகைச் சங்கங்களில் விவசாயக் கடன் சங்கங்களும், பிறவகைச் சங்கங்களும், பயிர் விளைவிக்கும் விவசாயிகளும் உறுப்பினராகச் சேரலாம். 1970–71இல் மொத்தம் 3,222 பிரதம சந்தையிடுகைச் சங்கங்களிருந்தன. பருத்திச் சங்கங்கள் 88, பழ, காய்கறிச் சங்கங்கள் 222, பாக்குச் சங்கங்கள் 19, புகையிலைச் சங்கங்கள் 19, தேங்காய்ச் சங்கங்கள் 65, கரும்பு அளிப்புச் சங்கங்கள் 23, பிற தனிவகைப் பொருள் சங்கங்கள் 111, பொது நோக்குச் சங்கங்கள் 2,675 என்ற வகையாக இச் சங்கங்கள் அமைந்திருந்தன. மொத்தச் சங்கங்களில் 2,675இல் அரசு கூட்டாளியாக (பங்கு முதல் வழங்கி) இருந்தது. மொத்தமிருந்த சங்கங்களில் 28,14,138 உறுப்பினர்கள் இருந்தனர். இதில் விவசாயக் கடன் சங்கங்கள் 1,34,680, சந்தையிடுகைச் சங்கங்கள் 301, பிற கூட்டுறவுகள் 7,888, தனிநபர் உற்பத்தியாளர் 23,35,716, பிறர் 1,87,228 பெயரளவு உறுப்பினர் 1,4,8,325.

1971 ஜூன் இறுதியில் பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள் ரூ. 179·45 கோடி நடைமுறை முதல் கொண்டிருந்தன. இவற்றின் செலுத்திய முதல் ரூ. 28·49 கோடியாக இருந்தது. இதில் அரசின் பங்கு ரூ. 18·95 கோடியாக இருந்தது. மொத்தமிருந்த 3,222 பிரதம சங்கங்களில் 1,072 சங்கங்கள் சந்தையிடுகை நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. 1970-71 இல் பிரதம சங்கங்கள் ரூ. 59,02

கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்கள், ரூ. 97 கோடி மதிப்புள்ள விவசாயத் தேவைப் பொருட்கள், ரூ. 68·51 கோடி மதிப்புள்ள நுகர்ச்சிப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்திருந்தன. இச் சங்கங்கள் தம் சொந்த முறையில் ரூ. 67·95 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருளையும், ரூ. 94. 18 கோடி மதிப்புள்ள விவசாயத் தேவைப் பொருட்களையும், ரூ. 73·55 கோடி மதிப்புள்ள நுகர்ச்சிப் பொருட்களையும் விற்றன. முகவர் என்ற முறையில் விற்ற விவசாய விளைபொருள் மதிப்பு ரூ. 202·98 கோடி, விவசாயத் தேவைப் பொருள் மதிப்பு ரூ. 55·92 கோடி, நுகர்ச்சிப் பொருள் மதிப்பு ரூ. 12·18 கோடியாக இருந்தது.

பிரதம சந்தையிடுகைச் சங்கங்களில் விவசாயக் கடன் சங்கங்கள் மட்டுமே உறுப்பினர்களாகச் சேர்க்கப்படலாம்; தனி நபர்கள் சேர்க்கப்பட வேண்டியதில்லை என்ற யோசனை வரவேற்கப்படவில்லை. இந்த நிலையை அடைவது ஒரு குறிக்கோளாகக் கருதப்படலாம். ஆனால், இன்றுள்ள கிராம விவசாயச் சங்கங்கள் விளைபொருளை ஒன்று திரட்டல், தரம்பிரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் நிலையில் இல்லை. எனவே, இன்னும் பலப்பல ஆண்டுகளுக்குப் பிரதம சங்கங்கள் தனிநபர் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிலை தொடர்ந்து இருந்து வரும். பிரதம சங்கங்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக இருக்கிறது.

வியாபார நடைமுறை

பெரும்பாலான சந்தையிடுகைச் சங்கங்கள் கழிவு முகவர் (Commission Agent) பணியினைத் தம் உறுப்பினர்களுக்குச் செய்து வருகின்றன. உறுப்பினர் தமது விவசாயச் சங்கத்தின் வழியோ அல்லது நேரடியாகவோ விளைபொருளைச் சந்தையிடுகைச் சங்கத்திற்கு அனுப்புவர். இங்ஙனம் அனுப்பப் பெற்ற விளைபொருளைச் சங்கம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யும். விற்பனை முறை இடத்துக்கு இடம் வேறுபடுவதுண்டு. பெரும்பாலும் பகிரங்க ஏலமுறை கையாளப்படுகிறது. சில இடங்களில் இரகசிய ஏல முறையும், சில இடங்களில் நேரடி பேரம் பேசி விலை நிருணயம் செய்யும் முறையும், மற்றும் சில இடங்களில் பொதுவாக விலையொன்றை நிருணயம் செய்யும் முறையும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இச் சேவைக்குச் சங்கம் மூட்டை ஒன்றுக்கு இவ்வளவு காசு என்று கழிவு வசூலிக்கிறது. ஏலம் முடிந்தவுடன் விவசாயிக்கு உரிய தொகை தரப்படுகிறது.

கழிவு முகவராகச் செயலாற்றுவது சந்தையிடுகைச் சங்கத்திற்கு நன்மை பயக்கிறது. இந் நடவடிக்கையால் சங்கம் நட்டத்திற்கு ஆளாகும் வாய்ப்பு ஏதும் கிடையாது. புதிதாகத் துவக்கப்

பட்ட சங்கங்கள் வியாபாரத்தில் அனுபவம் பெற இந்த வகைப் பணி பெரிதும் உதவுகிறது. ஆனால், சிறு விவசாயிகளுக்கு இப் பணியை மேற்கொள்ளுவதன்வழி சங்கம் நன்மை செய்ய முடிவ தில்லை. இதற்குக் காரணம் சிறிய அளவு விளைபொருளை விற் பனைக்கு அளிக்கும் நிலையிலுள்ள சிறு விவசாயிகள் தமது கிராமத் திலேயே உள்ள வியாபாரிக்கு நேரடியாக விளைபொருளை விற்று விடுகின்றனர். சில விளைபொருள்களை நேரடியாக வாங்குவதே (Out right purchase) வியாபார வழக்கமாக இருந்து வருகிறது. வியாபாரிகள் விளைபொருளை விவசாயியிடமிருந்து நேரடியாக வாங்கினால், கூட்டுறவுச் சங்கங்கள் அளித்த கடனை வசூலிப்பதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மற்றும் சில இடங்களில் வியாபாரி கள் ஒன்று சேர்ந்து கொண்டு விலையை இறக்கிவைத்து விவசாயி யைக் குறைந்த விலைக்கு விற்கும் நிலைக்குக் கொண்டுவருகின்றனர். இந்தச் சூழ்நிலையில் சந்தையிடுகைச் சங்கம் விவசாயியிடமிருந்து விளைபொருளை நேரடியாக விலைகொடுத்து வாங்க முற்பட வேண்டும்.

நேரடியாக வாங்கல்

சந்தையிடுகைச் சங்கங்கள் கிராமத்திற்குத் தம் முகவரிகளை யனுப்பி அல்லது கிராம நாணயச் சங்கங்களைத் தம் முகவராக நியமித்து விவசாயிகளிடமிருந்து விவசாய விளைபொருளை நேரடி யாக விலைகொடுத்து வாங்குவதை நேரடி வாங்கல் (Out right Purchase) என்று கூறுவர். சில நேரங்களில் விவசாயி விற்க விரும்பும் விளைபொருளை நேரே மண்டிக்குக் கொண்டு வருவது முண்டு. அங்ஙனம் கொண்டுவரப்பட்ட விளைபொருளையும் சங்கம் நேரடியாக வாங்கலாம். சந்தையிடுகைச் சங்கங்கள் நேரடி வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தயங்கு கின்றன. விலை ஏற்றத் தாழ்வினால் நட்டம் நேரலாம் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். இந்த அச்ச நிலையைத் தவிர்க்க 1964 செப்டம்பர் முதல் விலை ஏற்றத் தாழ்வு நிதி (Prise Fluctution Fund) ஒன்று நிறுவப் பெற்றது. இத் திட்டப்படி நேரடி வாங்கலில் ஈடுபட்டுள்ள பொறுக்கியெடுத்த சில சந்தை யிடுகைச் சங்கங்கள் மேற்கூறிய நிதிக்குத் தம் இலாபத்திலிருந்து 10% வழங்குகின்றன. அரசினர் நேரடியாக வாங்கப்பட்ட விளை பொருளின் விலையில் 2% தமது பங்காக விலை ஏற்றத் தாழ்வு நிதிக்குப் பணம் வழங்குகிறது. நேரடி வாங்கல் நடவடிக்கைகளில் நட்டமேதும் ஏற்பட்டால் இந் நிதியிலிருந்து அந் நட்டம் ஈடு செய்யப்படும். ஜூன் 1971 இறுதியில் பிரதம சந்தையிடுகைச் சங்கங்கள் ரூ. 1·00 கோடி தமது விலை ஏற்றத் தாழ்வு நிதியில் கொண்டிருந்தன.

சந்தையில் நிலவி வரும் விலை குறைவாக இருக்கும்போது விவசாயி விளைபொருளை விற்க விரும்பார். ஆனால், அந் நேரம் அவருடைய அவசரத் தேவைகளுக்குப் பணந்தேவைப்படக் கூடும். அதற்கு வகை செய்வது ஈட்டுக் கடன் (Pledge Loan) எனப்படும் விளைபொருள்மீது கடனளிக்கும் ஏற்பாடாகும். ஈடாகத் தரப் படும் விளைபொருளின் மதிப்பில் 75% அளவுக்கு முன் பணம் அளிக்கப்படும். விளைபொருளின் விலை நியாயமான அளவுக்கு உயர்ந்த பின்னர் விற்பனை செய்யப்படும் அறுவடை முடிந்தவுடன் சந்தையில் விளைபொருளின் விலை குறைந்து நிற்குமாதலால் அந் நேரத்தில் விற்பனை செய்வது விவசாயிக்கு நட்டத்தை விளைவிக்கும். சிறிது காலம் பொருளை வைத்திருந்து விற்றால் நல்ல விலை கிடைக்கும். 1970-71இல் ரூ. 18·21 கோடி தொகை பிரதம சங்கங்களால் ஈட்டுக் கடனாக வழங்கப்பெற்றது. ஈட்டுக் கடன் நடவடிக்கை பெருமளவில் நடைபெறாமைக்குப் பல காரணங்களுண்டு. சங்கங்கள் தமது தலைமையிடத்திலும் அதைச் சுற்றியுள்ள சில கிராமங்களிலுள்ள உறுப்பினர்கள் மட்டுமே இவ் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்று விதிக்கின்றன. ஈட்டுக் கடன் கோருபவர் ஈடாகக் காட்டும் விளைபொருள் அவருடையது தானா என்று சங்கங்கள் உறுதி செய்து கொள்ளுவ தில்லை. ஈட்டுக் கடனல்லாது வேறுபல கடன்களையும் சந்தை யிடுகைச் சங்கங்கள் வழங்குகின்றன. சில விவசாயக் கடன் சங்கங்களும் ஈட்டுக் கடன்களை வழங்குகின்றன. ஈட்டுக் கடன்கள் பற்றிய நடைமுறை விதிகள் ஒரு சீராக இல்லை. வட்டி வீதமும் ஒரே அளவினதாக இல்லை. உறுப்பினர் ஒருவர் உச்சமாக எவ்வளவு கடன் பெறலாம் என்பது குறித்தும் ஒரு நிலையான விதி காணப்படவில்லை. ஈட்டுக் கடன் அளிப்பது சந்தையில் பற்றாக் குறை நிலையை உண்டாக்கி ஊக வணிகருக்கு இலாபந் தருவதாக அமையக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், தக்க பாதுகாப்பு விதிமுறைகளுக்குட்பட்டு ஈட்டுக் கடன் வழங்கப் படலாம் என்று அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு கருதியது.

மொத்த வியாபாரிகள் சந்தையிடுகைச் சங்கங்களிடமிருந்து விளைபொருளை வாங்கிக் கொள்ளும் வழக்கம் நம் நாட்டில் பரவலாகக் காணப்படுகிறது. இவ் வியாபாரிகளுக்கு இரண்டு முதல் 15 நாட்கள்வரை பணம் செலுத்த காலம் அளிக்கப் படுவதுண்டு. சில வியாபாரிகள் இந்த வியாபாரக் கடன் (Trade Credit) வசதியைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். குறித்த காலத்தில் பணத்தைச் செலுத்தாது இந்த வட்டியில்லாக் கடன் வசதியைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ள

முனைந்தனர் பல வியாபாரிகள். இந்தச் செய்தியை ஆராய்ந்த அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு நல்ல நிதி நிலைமையும் நாணயமும் உள்ள ஒரு சில வியாபாரிகளுக்கு மட்டுமே வியாபாரக் கடன் வசதி அளிக்கப்பட வேண்டுமென்றும் நாளடைவில் இஃதும் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளது.

கடன்—சந்தையிடுகை இணைப்பு

இந்திய விவசாயப் பொருளாதாரம் மேம்பாடு அடைய கடன் வசதி சந்தையிடுகையுடன் இணைக்கப்படவேண்டும். கூட்டுறவுக் கடன் இயக்கம் வெற்றிபெறக் கூட்டுறவுக் கடனையும் சந்தையிடுகையினையும் பிணைப்பது மிக இன்றியமையாதது. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடன் வழங்கும்போது உறுப்பினர் தம் உபரி விளைபொருளைச் சந்தையிடுகைச் சங்கத்தின்வழி விற்றல் வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்கவேண்டும். பயிர்க் கடன் முறை வெற்றிபெற இந்த இணைப்பு மிகவும் அவசியமாகிறது. பிரதம சந்தையிடுகைச் சங்கத்தின் முகவராகக் கிராம நாணயச் சங்கம் தன் உறுப்பினர்களின் விளைபொருளை ஒன்று சேர்த்துச் சந்தையிடுகைச் சங்கத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

கடன்—சந்தையிடுகை இணைப்புத் திட்டம் நல்லமுறையில் செயல்பட விவசாயக் கடன் சங்கங்கள் சந்தையிடுகைச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேரவேண்டும். 1970-71இல் நாட்டிலிருந்த 1,60,780 பிரதம விவசாயக் கடன் சங்கங்களில் 1,34,680 சங்கங்கள் பிரதம சந்தையிடுகைச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ந்திருந்தன. அதாவது மொத்தக் கடன் சங்கங்களில் 84% சந்தையிடுகைச் சங்கங்களில் உறுப்பினராகியிருந்தன. அதே ஆண்டிலிருந்த மொத்தம் 3,222 சந்தையிடுகைச் சங்கங்களில் 627 சங்கங்கள் மட்டுமே கடன் வசூல் செய்து தரும் பணியில் ஈடுபட்டிருந்தன. இச் சங்கங்கள்வழி வசூலிக்கப்பட்ட கடன் தொகை ரூ. 26·41 கோடியாகும். இந்தக் கடன் வசூலிப்பினால் பயனடைந்த விவசாயக் கடன் சங்கங்கள், 12,983; கடனைத் திருப்ப விளைபொருள் விற்பனையைச் சந்தையிடுகைச் சங்கங்கள்வழி செய்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 3,36,733 மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மைசூர் ஆகிய நான்கு மாநிலங்களிலிருந்து மட்டும் வசூலிக்கப்பட்ட கடன் தொகையில் 93% பெறப்பட்டது. ஆந்திரம், ஹரியானா, பஞ்சாப், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஒரு சந்தையிடுகைச் சங்கம்கூட இணைப்புத் திட்டத்தின்கீழ் 1970-71இல் செயல்படவில்லை. கடன்—சந்தையிடுகை இணைப்புத்

திட்டம் சீராகச் செயல்படாததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. எழுத்தளவில், பெரும்பாலான மாநிலங்களில், கிராம நாணயச் சங்கங்கள் கடன் வழங்கும்போது உறுப்பினர்களிடம் விளைபொருளைச் சந்தையிடுகைச் சங்கங்களின்வழி விற்க ஒப்பும் உறுதி பெறுகின்றனர். ஆனால், இந்த உறுதி நிறைவேற்றப் பெறுவதில் சிக்கல்கள் பலவுண்டு. கிராம நாணயச் சங்கங்கள் தமக்குத் திருப்பித்தரப்பட வேண்டிய கடனை ரொக்கமாகப் பெறுவதே போதுமென்று கருதி விளைபொருளாக வசூலிப்பதில் அக்கறை காட்டுவதில்லை. மத்திய வங்கிகளும் குறித்த நேரத்தில் கடன் வசூலிக்கப்பட்டால் போதும் என்ற நோக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு செயலாற்றி வருவதால் கடன்-சந்தையிடுகை இணைப்பில் ஈடுபாடு காட்டுவதில்லை. பயிர்க் கடன் உரியகாலத்தில் வழங்கப்படுவதில்லையென்றும் போதிய அளவு அளிக்கப்படுவதில்லையென்றும் குறை இருந்து வருகிறது. சந்தையிடுகைச் சங்கத்தின்வழி விற்பனை செய்யத் தவறிய உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து கடன் வசதி அளிக்கப்படமாட்டாது என்று கடன் சங்கங்கள் உறுதியாக நிற்பதில்லை. வியாபாரிகள் கிராமத்திற்குச் சென்று விவசாயிகளிடம் விளைபொருளைக் கொள்முதல் செய்வது போன்று உறுப்பினர்களிடம் விளைபொருளை வாங்கிச் சேர்க்க வேறு முறையான ஏற்பாடு ஏதுமில்லை. சந்தையிடுகைச் சங்கம் தமக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்யக்கூடிய நிலையிலுள்ளது என்று உறுப்பினர்கள் முழுமையாக நம்புமளவுக்குப் பல சங்கங்களின் செயற்பாடு அமையவில்லை. இந்த நிலைமாற, கடன் சங்கங்கள் உரிய காலத்தில் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கல் வேண்டும். உறுப்பினர் தாம் எழுதிக் கொடுத்துள்ள ஒப்பந்தத்தை மீறி, சந்தையிடுகைச் சங்கத்தின்வழி விளைபொருளை விற்கத் தவறினால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கூட்டுறவுக் கடன் இயக்கம் சீராகச் செயல்பட கடன்-சந்தையிடுகை இணைப்பு முழுமையாக அமைய வேண்டுமென்பதை எல்லோரும் ஒப்புகின்றனர். இத் திட்டத்தில் கடன் சங்கங்களும், உறுப்பினர்களும் ஈடுபாடு கொள்ள சில ஊக்குவிப்புகள் (incentives) தரப்படலாம் என்று யோசனை கூறப்படுகிறது. கடன்களையடைக்க விளைபொருளை அளிக்கும் உறுப்பினர்களுக்கு வட்டி விகிதத்தில் தள்ளுபடி கொடுக்கப்படலாம். கூட்டுறவுகள் வழி விளைபொருளை விற்ற உறுப்பினர்களுக்கு, சிற்றளவு நுகர்ச்சிக் கடன் வழங்கும் விவசாயக் கடன் சங்கங்கள் முன்னுரிமை காட்டி அக் கடன்களை அளிக்கலாம். விவசாயக் கடன் சங்கம் தான் பெற்ற கடனைச் சந்தையிடுகைச் சங்கத்தின்வழி திருப்பிச் செலுத்தினால் மத்தியக் கூட்டுறவு வங்கி வட்டி விகிதத்தில் தள்ளுபடி

அளிக்கலாம். சந்தையிடுகையை இணைத்துச் செயல்படும் சங்கங்களுக்குத் தணிக்கைப் பிரிவு, மத்திய வங்கியிடமிருந்து பெறக்கூடிய கடன் வரம்பு ஆகிய நிருணயிப்பதில் சிறப்பான சலுகை காட்டலாம். எல்லா விவசாயக் கடன் சங்கங்களும் சந்தையிடுகைச் சங்கங்களில் உறுப்பினராகவேண்டும். மற்றும் கடன் சங்கங்கள், தாம் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 2% சந்தையிடுகைச் சங்கங்களில் பங்கு முதலாக வழங்கவேண்டும். கடன்பெறும் உறுப்பினர், ஒரு பகுதி கடனையேனும் விளை பொருளைச் சந்தையிடுகைச் சங்கத்தின்வழி அல்லது சங்கத்திற்கு விற்கவேண்டும் என்ற நிபந்தனைக்குக் கட்டுப்படவேண்டும். நிபந்தனையை மீறுவோர்க்குத் தக்க தண்டனை அளிக்கவேண்டும். விளைபொருளைச் சங்கத்தின்வழி விற்கும் உறுப்பினருக்கு ஊக்கமளிக்க விற்பனைத் தொகைக்கு மேல் கூடுதலாக 5 முதல் 10%வரை மறு ஆண்டுக் கடன் வழங்கலாம்.

கூட்டுறவுச் சந்தையிடுகையின் நிதி தேவைகள்

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களின் பற்பல நடவடிக்கைகளுக்குக் குறுகிய கால, நீண்டகால நிதிவசதிகள் தேவைப்படுகின்றன. குறுகிய காலநிதி தேவைப்படுவது கீழ்க்காணும் நடவடிக்கைகளின் பொருட்டாகும்:

(1) உறுப்பினர்களுக்கு அவர்களுடைய விவசாய விளை பொருள்மீது ஈட்டுக் கடன் அளித்தல்.

(2) விளைபொருளை வாங்கும் வியாபாரிகளுக்கு வழக்கமான வியாபாரக் கடன் வழங்குதல்.

(3) தமது உறுப்பினர்களிடமிருந்து விளைபொருளை நேரடியாக வாங்கிடுதல்.

(4) அரசினரின் கொள்முதல் முகவராக அல்லது விலை ஆதரவுத் திட்டத்தின்படி விளைபொருள் வாங்கிடுதல்.

(5) விவசாயத் தேவைப் பொருள்களான உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து, கருவிகள் முதலியவற்றைக் கடன் பேரில் கிடைக்காத நிலையில் விலைகொடுத்து வாங்கிச் சேர்த்து வைத்தல்.

(6) கிராமப்புறங்களில் தேவைப்படும் இன்றியமையாத நுகர்ச்சிப் பொருள்களைக் கிராமச் சங்கங்கள்வழி வழங்கிட வாங்கிச் சேர்த்து வைத்தல்.

(7) அன்றாட நிருவாக, நடைமுறைச் செலவுகள், கிட்டங்கி, அலுவலக வாடகை முதலிய செலவுகள்.

நீண்டகால நிதி தேவைப்படும் நடவடிக்கைகள் :

(1) துவக்கத்தில் தேவைப்படும் பொறிகள், மனை அணியங்கள் (furniture) முதலிய வாங்குதல்.

(2) கூட்டுறவு மத்திய வங்கிகள், மாநில, மாவட்ட சந்தையிடுகைச் சங்கங்கள், பக்குவப்படுத்தும் சங்கங்கள், மொத்த விற்பனை நுகர்வோர் பண்டசாலை போன்ற கூட்டுறவுகளின் பங்கு முதலில் முதலீடு செய்தல்.

(3) அரசினருக்கும், பிற பொருள்களை அளிக்கும் நிறுவனங்களுக்கும் பிணையாக வைப்புத் தொகை செலுத்துதல்.

(4) போக்குவரத்து வாகனங்கள் வாங்குதல்.

(5) பக்குவப்படுத்தும் இயந்திரங்கள் வாங்குதல்.

(6) விவசாய விளைபொருள், விவசாயத் தேவைப் பொருள்கள், நுகர்ச்சிப் பண்டங்கள் முதலியவற்றைப் பாதுகாவலாக வைத்திருக்கக் கிட்டங்கிகள் கட்டுதல்.

இனி, சந்தையிடுகைச் சங்கங்கள் தமக்குத் தேவையான முதலை எவ்விதம் திரட்டுகின்றனவென்று காண்போம்:

(i) உறுப்பினர்களிடமிருந்தும், மாநில அரசினரிடமிருந்தும் பங்குத் தொகை பெறுதல்.

(ii) உறுப்பினரிடமிருந்து வைப்புத்தொகை பெறுதல்.

(iii) இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதிகள்.

(iv) கூட்டுறவு நிதிய முகமைகளிடமிருந்தும் (Co-operative financing agencies) அல்லது ஸ்டேட் வங்கியிடமிருந்தும் கடன் பெறுதல்.

(v) மாநில அரசினர் அளிக்கும் கடன், உதவித் தொகை.

அட்டவணை

சந்தையிடுகைச் சங்கங்கள்—நடைமுறை முதல்

1971 ஜூன் இறுதியில் அமைந்திருந்த பாங்கு (ரூ. கோடியில்)

	பங்கு முதல்	காப்பு நிதி, பிற நிதிகள்	வைப்புகள்	பெற்ற கடன்கள்	*மொத்த நடைமுறை முதல்
மாநிலக் கூட்டிணைப்புகள்	14·33	13·11	2·37	133·59	270·16
மாவட்டச் சங்கங்கள்	7·15	12·99	3·24	20·68	120·78
பிரதம சங்கங்கள்	23·49	19·34	10·80	44·66	179·45

* மொத்த நடைமுறை முதல், முதல் நான்கு பத்திகளின் மொத்தமாக அமையாது, வேறு பல வழிகளில் பெறப்பட்ட தொகை அட்டவணையில் இடம் பெறவில்லை.

சந்தையிடுகைச் சங்கங்களின் பங்கு முதல் அவற்றின் நடைமுறை முதலில் சிறியதொரு பகுதியாகவே இருப்பது கவனிக்கத் தக்கது. இந்த நிலை அவசியம் மாறவேண்டும். அரசினரிடம் பங்குமுதல் பெற்றும் உறுப்பினர்களிடம் கூடுதல் முதல் பெற்றும் தமது சொந்த நிதியைச் சங்கங்கள் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். 1970-71இல் பிரதம சங்கங்களின் மொத்தம் செலுத்திய முதலில் 66% அளவு அரசாங்கம் வழங்கியதாக இருந்தது. செலுத்திய முதல் ரூ. 28·49 கோடியில் அரசின் பங்கு ரூ. 18·95 கோடி ஆக இருந்தது. இதே ஆண்டில் மாவட்டச் சந்தையிடுகைச் சங்கங்களின் செலுத்திய முதலில் அரசின் பங்கு 32% ஆகவும், மாநிலச் சங்கங்களின் செலுத்திய முதலில் அரசின் பங்கு 88% ஆகவும் இருந்தது. சந்தையிடுகைச் சங்கங்கள் அரசினரிடமிருந்தும், மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும், இந்திய ரிசர்வு வங்கியிடமிருந்தும், இந்திய ஸ்டேட் வங்கியிடமிருந்தும் கடன்களைப் பெறுகின்றன.

ரிசர்வு வங்கி கூட்டுறவுச் சந்தையிடுகை பெருமளவு வளர்ச்சியடையாததற்குக் காரணங்களைக் கண்டறிய ஓர் ஆராய்ச்சி மேற்கொண்டது. அதன்வழி புலப்பட்ட செய்திகளாவன: பெரும்பாலான சந்தையிடுகைச் சங்கங்கள் சந்தையிடுகை நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. சந்தையில் விற்பனைக்கு வந்த விளைபொருளில் மிகச் சிறிய பின்னமே சந்தையிடுகைச் சங்கங்கள் வழி வந்தன. தாம் சிறந்த முறையில் உறுப்பினர்களுக்குச் சந்தையிடுகைப் பணியினைச் செய்து தரமுடியும் என்ற ஒரு நம்பிக்கையை அவர்களிடையே ஏற்படுத்த இச் சங்கங்களால் முடியவில்லை. உரம் வழங்குவதிலும், நுகர்ச்சிப் பண்டங்கள் வழங்குவதிலும் சந்தையிடுகைச் சங்கங்களுக்கு அரசு முற்றுரிமை (monopoly) அளித்திருந்த இடங்களில் மட்டுமே இச் சங்கங்கள் நன்கு இயங்கி வந்தன. தரம் பிரித்தலும், ஒன்று திரட்டலும் சந்தையிடுகைச் சங்கங்களின் முக்கிய பணியாயினும் பெரும்பான்மையான சங்கங்கள் இப் பணிகளை மேற்கொள்ளவில்லை. மாநிலச் சந்தையிடுகைச் சங்கங்கள் விவசாயத் தேவைப் பொருட்களைப் பகிர்ந்து வழங்குவதில் ஈடுபாடு கொண்ட அளவுக்கு மாநிலங்களிடையேயான வியாபாரத்திலும், மாவட்டங்களிடையேயான வியாபாரத்திலும் பெரும் பங்கு ஏற்கவில்லை. சில இடங்களில் உறுப்பினர்களுக்கு அத்தனை வசதி செய்து தந்த போதிலும் அவர்கள் தமது விளைபொருளைச் சந்தையிடுகைச் சங்கங்கள்வழி விற்க விரும்பவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். போக்குவரத்து வசதிகள் போதுமான அளவு இல்லாதது ஒரு குறை. சந்தையிடுகைச் சங்கம் என்று ஒரு கூட்டுறவு நிலையமிருப்பதே

சிலருக்குத் தெரியாது. சங்கங்கள்மீதும் அவற்றின் ஊழியர்மீதும் நம்பிக்கையில்லாததும் ஒரு காரணம். சங்கங்களின் மேலாளர்களுக்கும் உறுப்பினர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இல்லாமலிருந்தது. வெளிச் சந்தையில் அளிக்கப்படும் விலை சங்கம் அளிக்கும் விலையைவிட உயர்ந்திருந்ததும் ஓர் காரணம். நடவடிக்கைகளில் பெருமளவு தாமதம் ஏற்படுகின்றது என்ற குறையும் சந்தையிடுகைச் சங்கங்களைப் பற்றி, பலகாலமாக இருந்து வருகிறது.

பொதுவாக நோக்குமிடத்துச் சந்தையிடுகைச் சங்கங்கள் சிறப்பான முறையில் செயலாற்ருமைக்குப் பல காரணங்களுண்டு. அவற்றைக் காண்போம்:

(1) சந்தையிடுகைச் சங்கங்களில் பல குறியீட்டை அடைய வேண்டி துவக்கப்படவேண்டும் என்ற நிலையில் துவக்கப்பட்ட காரணத்தால் விவசாயிகள் அதன் அருமையை உணரக்கூடவில்லை. அரசு இச் சங்கங்களுக்கு அளிக்கும் வசதிகளையும் சலுகைகளையும் பெற்றுப் பயனடையும் நோக்குடன் பல நகர்ப்புற வணிகர்கள் இவற்றில் உறுப்பினராகச் சேர்ந்துவிடுகின்றனர்.

(2) இன்ன தகுதிகள், இவ்வளவு நடவடிக்கைகள் இருந்தால் தான் சங்கம் ஆதாயத்துடன் செயல்பட வாய்ப்பிருக்கும் என்று ஆராய்ந்து அந்த அடிப்படையில் சங்கம் நிறுவப்படவேண்டும்.

(3) பிரதம சங்கங்களுக்கும் மாவட்டச் சங்கங்களுக்கும் அல்லது மாநிலச் சங்கங்களுக்குமிடையே இணைந்து செயலாற்றும் பாங்கு பல மாநிலங்களில் காணப்படவில்லை. இதனுல் இவ்வமைப்புகள் ஒருங்கிணைந்து செயலாற்ற முடியவில்லை. மற்றுஞ் சில சங்கங்களில் மத்திய வங்கிக்குப் பிரதிநிதித்துவம் இல்லாதிருந்தது.

(4) சில விவசாயக் கடன் சங்கங்கள் சந்தையிடுகைச் சங்கங்களோடு ஒருங்கிணைந்து பணியாற்றுவதுபோக போட்டியாகச் செயலாற்றலாயின.

(5) சந்தையிடுகைச் சங்கங்கள் விவசாயக் கடன் சங்கங்களைத் தம் உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டு அவற்றுடன் இணைந்து செயல்படுவதை விடுத்துத் தனிநபர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளுகின்றன.

(6) பல சங்கங்களில் நிருவாகக் குழு சரிவர அமைக்கப்படவில்லை. பல சங்கங்களில் பயிற்சி பெற்ற மேலாளர்கள் காணப்படவில்லை. பல சங்கங்கள் முறைகேடான செயல்களில் ஈடுபட்டு ஊர் மக்களின் நம்பிக்கையை இழந்திருந்தன.

(7) ஒழுங்குமுறைச் சந்தை (Regulated Market) களும் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களும் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. முக்கிய சந்தைகளில் பெரும்பாலானவை ஒழுங்கு படுத்தப்படவில்லை. ஒழுங்குமுறைச் சந்தை சில இடங்களில் தவிர செம்மையாகச் செயல்படவில்லை.

(8) சந்தையிடுகை நடவடிக்கைகளை விட எளிய, நட்ட மேதும் ஏற்படும் வாய்ப்பில்லாத வழங்கல் (Distribution) நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ளுவதில் சந்தையிடுகைச் சங்கங்கள் ஆர்வங் காட்டுகின்றன.

(9) சந்தையிடுகைச் சங்கங்களை மேற்பார்வை செய்து தக்க அறிவுரைகள் வழங்க ஏற்பாடுகளிருந்தும் பெரும்பாலும் இவை செய்யப்படுவதில்லை. இதனுல் தவறுகள் தொடர்ந்து நிகழ்கின்றன.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு
(National Co-operative Development Corporation)

அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக்குழு அளித்த பரிந்துரையொன்றின் பயனுக 1956 ஆம் ஆண்டில் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி, பண்டக வாரியம் (National Co-operative Development and warehousing Board) ஏற்படுத்தப்பட்டது. இவ் வாரியமே 1962 இல் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு சட்டத்தின்படி தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுருவாக மலர்ந்தது. இது 1963 மார்ச்சு 14 ஆம் நாள் மத்திய அரசால் அமைக்கப்பெற்றது.

கூட்டுருவின் பணிகள்

விவசாய விளைபொருள்கள், குறிப்பிட்ட சில பண்டங்கள் ஆகியவற்றைக் கூட்டுறவுச் சங்கங்கள்வழி உற்பத்தி செய்ய, பக்குவப்படுத்த, சந்தையிலிட, பாதுகாத்து வைக்க, ஏற்றுமதி-இறக்குமதி செய்ய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த உதவுவதே தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு (தே. கூ. வ. கூ.) வின் முக்கிய பணிகளாகும். இப் பணிகளைக் கூட்டுரு திறம்படச் செய்ய கீழ்க்காணும் அதிகாரங்கள் இதற்குத் தரப்பட்டுள்ளன :

(அ) கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த கூடுதலான ஊழியர்களை வேலையில் அமர்த்திக் கொள்ளவும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கவும் மாநில அரசுகளுக்குக் கடன் வழங்கல் அல்லது உதவித் தொகையளித்தல்.

(ஆ) மத்திய அரசின் சார்பாகக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய விளைபொருளையும் குறிப்பிட்ட சில பண்டங்களையும் வாங்க நிதியுதவி செய்ய மாநில அரசுகளுக்கு நிதி வழங்குதல்.

(இ) விவசாய விளைபொருள் உற்பத்தி வளர்ச்சியடைய கூட்டுறவுச் சங்கங்கள்வழி, விதை, ரசாயன உரம், தழையுரம். விவசாயக் கருவிகள், இதர பொருள்கள் வழங்கத் திட்டமிட்டுத் திட்டங்களுக்கு உருக் கொடுத்தல்.

தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுருவிற்கு மத்திய அரசு கடன்களையும், மானியங்களையும் வழங்குகின்றது. இக் கூட்டுருவின் செயற்பாடுகளுக்குத் தேவையான நிதி தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி நிதி (National Co-operative Development Fund)யிலிருந்தும், மத்திய அரசு ஆண்டுதோறும் அளித்து வரும் மானியங்கள், உதவித் தொகைகளிலிருந்தும், மத்திய அரசு ஆண்டு தோறும் அளித்துவரும் கடன் தொகைகளிலிருந்தும், கடன் திருப்பிச் செலுத்தல், கடன்மீது வட்டி, முதலீடுகள்மீது வட்டி அல்லது இலாபஈவு ஆகிய இனங்களிலிருந்தும் பெறப்படுகின்றது. விவசாய விளைபொருளைக் கூட்டுறவு முறையில் சந்தையிடுகை, பக்குவப்படுத்தல், பாதுகாப்பு, அளிப்பு ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இக் கூட்டுரு உதவுகிறது. 1971–72 நிதியாண்டில் இக் கூட்டுரு ரு. 21·57 கோடி மாநில அரசினருக்கும், தேசீய மட்டத்திலுள்ள கூட்டுறவு நிலையங்களுக்கும் நிதியுதவவும், தான் பெற்றிருந்த கடன்களை அடைக்கவும் மத்திய அரசுக்கு வட்டி செலுத்தவும் செலவிட்டது. இதே ஆண்டில், மத்திய ஆதரவு கொண்ட திட்ட (Centrally Sponsored Scheme) மொன்றின்படி ரசாயன உரங்கள், பிற விவசாய உள்ளீடுகள்(Agricultural inputs) வழங்கக் கூட்டுறவு நிலையங்களுக்கு இடைவெளிப்பணம் (margin money) அளிக்க மாநில அரசுகளுக்கு ரூ. 3·00 கோடி கடனைகத் தரப்பட்டது.

கூட்டுறவு விவசாயச் சந்தையிடுகையில் இக் கூட்டுரு பெருமளவு அக்கறை காட்டி வருகிறது. கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களின் பங்கு முதல் •பலப்படுத்தப்படுவதன் அவசியத்தை இது வற்புறுத்திவந்ததன் பயனைகப் பல மாநிலங்களில் செயலிழந்த சங்கங்களைக் கலைத்து, நன்கு இயங்கும் வாய்ப்புள்ள சங்கங்களை வலுப்படுத்தி வருகின்றனர். சங்கங்களில் ஊன்றிய நலமி (vested interests)களின் ஆதிக்கத்தை ஒடுக்க, பல மாநிலங்களில் கூட்டுறவுச் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன.

மாநில அளவில் செயல்படும் சந்தையிடுகைக் கூட்டிணைப்புகளில் தொழில்நுட்ப, வளர்ச்சிக் கூடு (Technical and Promotional cell) கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுகள்வழி சந்தையிடப்பட்ட விவசாய விளைபொருள் மதிப்பினைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்குகிறது.

அட்டவணை

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள்வழி சந்தையிடப்பட்ட பல்வகை விவசாய விளைபொருள்களின் மதிப்பு (ரூ. கோடியில்)

விளைபொருள்	1960-61	1965-66	1969-70	1970-71	1971-72
உணவு தனியங்கள்	24	187	202	261	330
கரும்பு	91	147	260	224	210
பிற பயிர்கள்	64	76	138	164	200
மொத்தம்	179	360	600	649	740

அரசாங்கத்தின் கொள்முதல் கொள்கையைச் செயலாற்றப் பல மாநிலங்களில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் அரசாங்க முகவராகப் பணி செய்தன. அஸ்ஸாம், ஒரிசா, மகாராட்டிரம், பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் கொள்முதலில் ஒரு பகுதி அல்லது முழுதும் கூட்டுறவுகள்வழி செய்யப்பட்டன. பிற மாநிலங்களில் இந்திய உணவுக் கூட்டுரு (Food Corporation of India) கொள்முதல் செய்து வந்தது. இக் கூட்டுரு கூட்டுறவுகளைத் தம் முகவர்களாக நியமித்து அல்லது அவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டு தனது கொள்முதல் பணியினைச் செய்து வந்தது. ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களிலும் கோதுமை கொள்முதல் செய்வதில் கூட்டுறவுகள் கணிசமான பங்கேற்றன. 1972 ரபி பருவத்தில் (Rabi Season) கொள்முதல் செய்யப்பட்ட மொத்தக் கோதுமையில் 76% கூட்டுறவுகள்வழி பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தேசீய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்பு 1970-71இல் ரூ. 1·22 கோடி மதிப்புள்ள மாநிலங்களுக்கிடையே யான வியாபாரம் நடத்தியது. பருப்பு வகைகள், வெங்காயம், மிளகாய் முதலிய பண்டங்களை ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், ஜப்பான், பெல்ஜியம், பிஜித்தீவு, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, மரீஷஸ், அரபுக் குடியரசு, சூடான், இரான், ஈராக், கென்யா, சவூதி அரேபியா, எதியோப்பியா, ஏடன், பிரிட்டன் முதலிய நாடுகளுக்கு ரூ. 5·26 கோடி மதிப்புக்கு ஏற்றுமதி செய்தது.

மத்தியத் துறைத் திட்டம் (Central sector scheme) ஒன்று உருவாக்கப் பெற்று 1972-74இல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 400 சந்தையிடுகைச் சங்கங்கள் பங்கு முதலுக்குப் பணம் வழங்கப்படும். இதனால் இச் சங்கங்களின் நிதிநிலை வலுப்பெற்று அவை தமது வியாபார நடவடிக்கைகளை மேலும் பெருக்கிக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு சந்தையிடுகைக் கூட்டுறவுகளுக்குப் புதிய திட்டங்களை உருவாக்கவும், உறுப்பினர்களுக்குச் சிரிய முறையில் சேவை செய்யவும் நிதிவசதியளித்து வருகின்றது. பக்குவப்படுத்தும் கூட்டுறவுகளுக்கும் பலவகை நிதி வசதிகளையளித்து வருகின்றது. இதனைப் பின்னர் காண்போம். பிரதம சந்தையிடுகைச் சங்கங்களைத் திறம்பட நடத்திவர தக்க ஊழியர்களைத் தயார் செய்ய மாநில அரசுகளையும், மாநிலக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்புகளையும் ஊழியர் பணியமைப்பு ஒன்று உருவாக்கி அந்த அமைப்பி லிருந்து தேவைப்படும் பிரதம சங்கங்களுக்கு ஊழியர்களைக் கடனுக அளிக்கவேண்டும் என்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு யோசனை கூறியது.

அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு சந்தையிடுகைக் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்குப் பல அரிய யோசனைகளைத் தந்துள்ளது. அவற்றில் சில:

(1) உணவு தானியங்களைக் கொள்முதல் செய்ய முகவர்களாகச் சந்தையிடுகைச் சங்கங்கள் நியமிக்கப்பட்டால் அப் பணிக்குத் தேவையான பணவசதிகள் அவற்றிற்கு அளிக்கப்பட வேண்டும். இதற்கு ரிசர்வு வங்கி தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(2) இதுவரை நடைமுறைக்குக் கொண்டுவரா இடங்களில், உச்சி சந்தையிடுகைக் கூட்டுறவுகள் கொள்முதல் நடவடிக்கைகளுக்கு வேண்டிய பணவசதியை ரிசர்வு வங்கி யோசனை கூறியுள்ள உண்டியல் (Hundi) முறைவழி பெறலாம்.

(3) சந்தையிடுகைச் சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து ஈட்டுக் கடன்கள் அளித்து வரலாம்.

(4) சந்தையிடுகைச் சங்கங்கள் தமது உறுப்பினர்களின் விளைபொருளைத் திறம்பெற நல்ல விலைக்கு விற்கும் தகுதி பெற்றிருந்தாலன்றி, ஈட்டுக் கடன் பெறுவோர் தமது விளைபொருளைச் சந்தையிடுகைச் சங்கம்வழி மட்டுமே விற்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கலாகாது.

(5) நல்ல நிதிநிலையும் நாணயமும் உள்ள வியாபாரிகளுக்கு மட்டுமே வியாபாரக் கடன் வசதிகள் தரப்பட வேண்டும். இதற்கு வேண்டிய நிதிவசதிகளை ஸ்டேட் வங்கி, கூட்டுறவு வங்கிகள், பிற வாணிக வங்கிகளிடமிருந்து எளிதாகப் பெறக்கூடுமாதலால், ரிசர்வு வங்கி இது குறித்து மறுநிதிய (Refinance) வசதிகள் செய்ய வேண்டுவதில்லை.

(6) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமும், கூட்டுறவு நிதிய முகமையிடமும் ஒப்புதல் பெற்ற பின்னரே கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் ஸ்டேட் வங்கியிடம் கடன் பெறலாம் என்ற நிபந்தனை மாற்றப்பட்டு மாநில அரசினரின் பொது ஒப்புதல் இருந்தால் போதும் என்ற நிலை வரவேண்டும்.

(7) கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களுக்கு அரசினரின் பொறுப்புறுதியின் பேரில் சங்கங்களின் சொந்த நிதியைப் போன்று இரண்டு மடங்குப் பணம் பிணையில்லாக் கடன் வரம்பாக மேற் கொள்ளப்படலாம் என்ற ரிசர்வு வங்கியின் வரையறை மூன்று மடங்கு அளவுக்கு உயர்த்தப்படலாம். இது குறித்துக் கீழ்க் காணும் நிபந்தனைகளும் விதிக்கப்படலாம்: (i) சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறதென்று பதிவாளர் சிறப்பான பரிசீலனை யொன்றின்வழி உளநிறைவு பெறவேண்டும்.

(ii) அடகு, ஈட்டுக் கடன்களுக்கு இடைவெளிப் (margin) பணமான இந்தப் பிணையில்லாக் கடன் பயன்படுத்தப்பட வேண்டும்.

(iii) சங்கத்தின் அவசர நிதித்தேவைகள் மேற்கண்ட வரம்பு தளர்த்தலை அவசியமாக்கவேண்டும்.

(8) பம்பாயில் 1965இல் நடந்த மாநிலக் கூட்டுறவு அமைச் சர்கள் மாநாடு கூறிய யோசனைகளின்படி சந்தையிடுகைச் சங்கங்களின் பங்குமுதலை வலுப்படுத்தும் முயற்சியைத் தீவிர மாக மேற்கொள்ளவேண்டும்.

(9) சந்தையிடுகைக் கூட்டுறவுகளை நிருவகிக்க அரசு அலுவலர்களின் பணியைக் கடனாகப் பெறும் பழக்கம் படிப்படி யாகக் கைவிடப்படவேண்டும். தகுதி நிறைந்த பயிற்சி பெற்ற பணியர் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு தொடர்ந்து உச்சி சந்தையிடுகைச் சங்கங்களுக்கு முக்கிய பணியர் திரட்டு (Poop of key Personnel) அமைக்க உதவி செய்து வரவேண்டும்.

(10) கடனையும் சந்தையிடுகையினையும் இணைக்கும் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

(11) சந்தையிடுகைக் கூட்டுறவுகள் உற்பத்திக் கடன்களை வழங்கும் பணியை விவசாயக் கடன் சங்கங்களிடம் விட்டுவிட்டுச் சந்தையிடுகைப் பணிகள் மேற்கொள்வதில் முனைப்பாக இருக்க வேண்டும்.

கூட்டுறவுச் சந்தையிடுகையில் அண்மைக்கால வளர்ச்சிநிலை

இரசாயன உரங்கள் வழங்கல்

நாட்டிலுள்ள மாநிலங்கள் அனைத்திலும் (அஸ்ஸாம் நீங்கலாக) மாநிலச் சந்தையிடுகைச் சங்கங்கள் இரசாயன உரங்கள் வழங்கும் கூட்டுறவு மொத்த விற்பனையராகச் செயல்பட்டு வருகின்றன. மாநில அரசினர் வழியாக இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன உரமும், உள்நாட்டு உற்பத்தியாளரிடமிருந்து பிற இரசாயன உரமும் வாங்கி நாட்டிலுள்ள 36,437 சில்லறைக் கடைகள்வழி 1970-71இல் ரூ. 250 கோடி மதிப்புள்ள உரங்களை மாநிலச் சங்கங்கள் விற்றன. 1971-72இல் விற்பனை ரூ. 300 கோடியளவில் இருந்தது. உரம் வழங்கும் இப் பணிக்குப் பெருமளவு நிதிவசதி தேவைப்படுகிறது. தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு இடைவெளிப் பணத் (margin money)தின் உதவி கொண்டு கூட்டுறவுகள் தமக்குத் தேவையான கடன் வசதிகளை ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வாணிக வங்கிகள் ஆகியவற்றிடம் பெறுகின்றன.

இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு
(Indian Farmers' Fertilizer Co-operative)

இந்திய அரசும் பத்து மாநிலங்களிலுள்ள கூட்டுறவுகளும் சேர்ந்து கூட்டுறவுத் துறையில் கலோலே என்னுமிடத்தில் அம்மோனியா, யூரியா உற்பத்தி தொழிற்சாலைகளையும் கண்ட்லா என்னுமிடத்தில் நைட்ரஜன் பாஸ்பரஸ் பொட்டாஷ் (NPK) தொழிற்சாலையினையும் ரூ. 91·6 கோடி செலவில் உருவாக்கி வருகின்றன. குஜராத் மாநிலத்திலுள்ள இந்தத் தொழிற்சாலைகள் ஆண்டுக்கு 300,300 டன் அம்மோனியா, 306,000 டன் யூரியா, 375,500 டன் (NPK) நைட்ரஜன் பாஸ்பரஸ் பொட்டாஷ் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்சாலைகள் விரைவாகக் கட்டப்பட்டு வருகின்றன. 1974இல் உற்பத்தி துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இஃப்கோ (IFFCO) என்று அழைக்கப்படும் இக் கூட்டுறவு முயற்சி ஆசியக்

கண்டத்திலேயே கூட்டுறவு நிலையங்கள் மேற்கொண்டுள்ள மிகப் பெரும் முயற்சியெனக் கூறப்படுகிறது. அரசினர் தமது பங்கான ரூ. 18 கோடியினையும், கூட்டுறவுகள் தம் பங்கான ரூ. 9 கோடியினையும், அளித்துவிட்டனர்.

உரமணி தயாரிப்புக் கூட்டுறவுகள்

தக்க அளவில் கலப்பு உரங்கள் தயாரிக்க உதவும் வகையில் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு (NCDC) பதினைந்து உரமணி (granular fertilizer) தயாரிப்பு ஆலைகள் நிறுவப்பெற உதவியுள்ளது. இவற்றில் 10 ஆலைகள் நிறுவப்பட்டுவிட்டன. தமிழ் நாட்டில் மன்னார்குடிக்கு அருகில் பாமணி என்ற ஊரில் ஓர் உரமணி ஆலையும், மகாராட்டிரத்தில் 7 ஆலைகளும், மைசூரில் 3 ஆலைகளும், பீகார், ஒரிசா, ஹரியானா, பஞ்சாப் மாநிலங்களில் ஒவ்வோர் ஆலையும் இத் திட்டத்தின்கீழ் உருவாகியுள்ளன.

விதை வழங்கல் பணியில் கூட்டுறவு

1970-71இல் கூட்டுறவுகள் ரூ. 39·49 கோடி மதிப்புள்ள விதைகளை வழங்கியது. 1971-72இல் ரூ. 45 கோடி மதிப்புள்ள விதைகள் வழங்கியிருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

விவசாயக் கருவிகள், பொறிகள் வழங்குவதிலும் கூட்டுறவுகள் பணி வளர்ந்த வண்ணமிருக்கிறது. 1969-70இல் ரூ. 5·72 கோடி அளவுக்கு மட்டும் விவசாயப்பொறி, கருவிகள் வழங்கியிருந்த கூட்டுறவுகள் 1970-71இல் ரூ. 10·41 கோடி மதிப்புள்ள இச் சாதனங்களை விவசாயிகளுக்கு வழங்கின.

விவசாயச் சேவைக் கூட்டுறவுக் கூடங்கள்
(Co-operative Agro-Service Centres)

டிராக்டர்கள், பிற விவசாயக் கருவிகள், பொறிகள் வாடகைக்கு விடவும், பழுது பார்க்கவும் கூட்டுறவு விவசாயச் சேவைக் கூடங்கள் அமைக்கும் திட்டப்படி, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு 43 கூடங்களுக்கு 1971-72 வரை உதவி வழங்கியது. 1972இல் மேலும் 14 கூடங்கள் அமைக்க உதவி வழங்கியதன் பயனாக 1973 துவக்கத்தில் 57 கூடங்கள் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. பஞ்சாப், ஹரியானா மாநிலக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்புகள் விமானவழி பூச்சிக் கொல்லி மருந்து தூவவும், அறுவடை இயந்திரங்களை வாடகைக்கு விடவும் ஏற்படுத்தியுள்ள வாடிக்கை சேவைக் கூடம் விவசாயிகளுக்குப் பெரியதொரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பூச்சிக் கொல்லி மருந்து வழங்கல்

விவசாயத் தேவைப் பொருளாக விளங்கும் பூச்சிக் கொல்லி மருந்தினைச் சந்தையிடுகைச் சங்கங்கள் 1970-71இல் ரூ. 17·72 கோடியளவுக்கு வழங்கியிருந்தன. 1971-72இல் இது ரூ. 20 கோடியளவுக்கு உயர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

கிட்டங்கி, குளிர்சாதன வசதிகள்

நான்காம் திட்டகாலத் துவக்கத்தில் கூட்டுறவுத் துறையில் 26 இலட்சம் டன் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கக் கிட்டங்கி வசதிகளிருந்தன. 1969-72 காலத்தில் மேலும் 3 இலட்சம் டன் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி கிடைத்தது. விவசாய மறுநிதிக் கூட்டுருவின் திட்டங்கள்படி மேற்கண்ட மூன்றாண்டுக் காலத்தில் மேலும் 3 இலட்சம் டன் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்கக் கூட்டுறவுகளுக்கு வசதி ஏற்பட்டது. ஆக 1971-72 இறுதியில் 32 இலட்சம் டன் பொருள்களைச் சேர்த்துப் பாதுகாவலாக வைக்கக் கூட்டுறவுத் துறையில் வசதிகளிருந்தன.

1971-72இல் மாநில அரசுகள் உதவியுடன் 67 சந்தையிடுகைக் கிட்டங்கிகளும் 200 கிராமக் கிட்டங்கிகளும் கட்டப்பட்டு வந்தன. மத்திய உதவித் திட்டத்தின்கீழ் 1971-72 வரை 15,551 கிட்டங்கிகள் (3,060 சந்தையிடுகை 12,491 கிராம) கட்டி முடிக்கப்பட்டிருந்தன; 4,097 கிட்டங்கிகள் (610 சந்தையிடுகை 3,487 கிராம) கட்டப்பட்டு வந்தன. ஒரு கிட்டங்கி கட்டி முடிக்க இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. 1971-72 முடிய மத்திய உதவித் திட்டத்தின்கீழ் உதவிபெற்ற கிட்டங்கிகள் 19,402.

நான்காம் திட்டகாலக் கடைசி இரு ஆண்டுகளில் (1972-74) மேலும் 10 இலட்சம் டன் பாதுகாப்பு வசதிகளை ரூ. 15 கோடி செலவில் அமைக்க மத்தியத் துறைத் திட்டம் உருவாக்கப்பட்டது. இத் திட்டப்படி கட்டடச் செலவில் 62½% தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு கடனாக வழங்கும். 37½% மானியமாக மாநில அரசு வழங்கும்.

மாநில மட்டத்தில் குளிர்சாதனப் பாதுகாப்பு ஏற்பாடுகள் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. 1972 மார்ச்சு இறுதிவரை நாட்டில் 111 குளிர்சாதனப் பண்டகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் கொள்அளவு 1,75,150 டன்கள் ஆகும். இப் பண்டகங்களில் 74 ஜூன் 1972 இறுதியில் செயல்பட்டுவந்தன. இந்த 74 பண்டகங்களின் கொள்அளவு

1,06,400 ஆகும். உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ஒரிசா, பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஒவ்வொன்றிலும் 10,000 டன்னுக்கும் கூடுதலான கொள்ளளவுள்ள குளிர்சாதன பண்டகங்கள் நிறுவப்பட்டிருந்தன. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்பு உருவாக்கி வரும் 1250 டன் கொள்ளளவுள்ள குளிர்சாதனப் பண்டகம் நிறுவி முடிக்குந் தருவாயிலுள்ளது. ஆந்திரத்திலும், மகாராட்டிரத்திலும் இவ் வகைப் பண்டகம் அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு நிறை வேற்று நிலையிலுள்ளன.

ஒழுங்குமுறைச் சந்தை (Regulated Market)

விவசாய விளைபொருள்களை உழைத்து விளைவிக்கும் விவசாயி தனது உழைப்பின் முழுப் பயனைப்பெறத் தன்னிடமுள்ள உபரி விளைபொருளை நல்ல விலைக்கு விற்கவேண்டும். ஆனால், சந்தையில் நடமாடும் இடைநிலையர் தமது விரும்பத்தகா நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் விவசாயி நல்ல விலை பெறாமல் செய்து விடுகின்றனர். தவறான எடை, தேவையற்ற பிடித்தங்கள், கலப்படம் செய்தல் போன்ற தீய நடவடிக்கைகள் விளைபொருளை உற்பத்தி செய்தவரின் நலனைப் பாதிக்கின்றன. மேற்கூறிய தீமைகளை அகற்றி விவசாயிக்கு நன்மை புரிய நாட்டில் பல்வேறு இடங்களில் ஒழுங்குமுறைச் சந்தைகள் சட்ட முறையாக அமைக்கப்பட்டுள்ளன. 'அறிவிக்கப்பட்ட பகுதி' (Notified Area) என்று அரசாங்கம் சட்டமுறையாகக் குறிப்பிட்டுள்ள பரப்பில் விளையும் குறிப்பிட்ட விளைபொருள் வாங்கல் விற்றல் ஒழுங்குமுறைச் சந்தையின் மேற்பார்வையில் மட்டுமே நடக்க லாம். இந்த மேற்பார்வைப் பணியை மேற்கொள்ள ஒழுங்கு முறைச் சந்தைக் குழுவினை அரசு அமைக்கும். தனிநபர்கள் அறிவிக்கப்பட்ட பகுதியில் குறிப்பிட்ட விளைபொருளை வாங்கவோ விற்கவோ கூடாது. குழுவின் அனுமதி பெற்றே கூட்டுறவுச் சங்கங்களும் கூட சந்தைப் பகுதியில் வாங்கல் விற்றலில் ஈடு படலாம். பெரும்பாலும் மாநில அரசின் வேளாண்மைத் துறையினரிடம் ஒழுங்குமுறைச் சந்தையை நடத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. பயிர் விளைச்சல் பற்றிய பல புள்ளி விவரங்களையும், விவசாயிகளுக்குப் பயன் தரும் செய்திகளையும் ஒழுங்குமுறைச் சந்தைக் குழுவினர் வெளியிட்டு உதவுகின்றனர். சரியாக எடை போடுவது, சரியானதொரு விற்பனை முறையைக் கடைப்பிடிப்பது, உடனுக்குடன் விற்பனைத் தொகையினை விற்பனைச் செய்யும் விவசாயிக்கு அளிப்பது முதலிய சந்தைக் குழுவின் பொறுப்பாகும்.

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கம் செயல்படும் இடங்களில் அரசு விரும்பினுல் அச் சங்கத்தை ஒழுங்குமுறைச் சந்தையை அமைத்து நடத்தி வரும்படிப் பணிக்கலாம். சந்தையிடுகைச் சங்கம் மேற்கொள்ளும் கடன் அளிப்பு, போக்கு வரத்து ஏற்பாடு நேரடி வாங்குதல், பக்குவப் படுத்தல், விவசாயத் தேவைப் பொருள் வழங்கல் போன்ற பணிகளை ஒழுங்குமுறைச் சந்தைகள் செய்வதில்லை. இருந்தாலும் கடன்–சந்தையிடுகை இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற இச் சந்தைகள் உதவக்கூடும். கடன் பட்ட விவசாயியின் விளைபொருளை வாங்கும் வணிகர், விவசாயக் கடன் சங்கத்துக்குச் சேரவேண்டிய கடன் தொகையை விற்பனைத் தொகையிலிருந்து பிடித்துக் கொண்டு அத் தொகையை உடனடியாகச் சங்கத்தில் கட்டிவிடவேண்டும். இங்ஙனமாக ஒழுங்குமுறைச் சந்தையும் கூட்டுறவுச் சங்கங்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இருபாலாரும் பயனடையலாம்.

12. பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள்
(Processing Co-operatives)

விவசாய விளைபொருள்கள் பலவற்றை விளைந்த நிலையில் நுகர முடியாது. நெல்லைக் குத்தி உமி நீக்கியே அரிசி பெறலாம். கரும்பைப் பிழிந்து சாறு எடுத்த பின்னரே அது வெல்லமாக, பழுப்புச் சர்க்கரையாக அல்லது சர்க்கரையாக மாற்றப்படுகிறது. வேர்க்கடலையை அல்லது எள்ளைச் செக்கில் ஆட்டியே எண்ணெய் பெறுகின்றோம். பருத்தியை விதைநீக்கிப் பேல்களாகக் கட்டியே ஆலைகளுக்கு அனுப்பவேண்டியிருக்கிறது. இதுபோன்று, விளைபொருள்களை நுகர்ச்சிக்கு உகந்ததாகத் தயார் செய்யும் பணியைப் பக்குவப்படுத்தல் என்று கூறுவர்.

பக்குவப்படுத்தல் பணியை நம் நாட்டின் பொருளாதாரத் துறையில் இன்றியமையாததாகக் கருதவேண்டும். பக்குவப் படுத்திய விளைபொருளுக்கு நுகர்வோர் கொடுக்கும் விலையில் கணிசமானதொரு பகுதி பக்குவப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள இடைநிலையருக்குச் செல்லுகின்றது. பாடுபட்டுப் பயிரை விளைவித்த விவசாயி பயனடைவதில்லை. இந்நிலை மாறப் பயிரை விளைவிக்கும் விவசாயிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் பக்குவப்படுத்தலை மேற்கொண்டால், தம் பயிர்கள்மீது நல்ல ஆதாயம் பெறலாம். இடைநிலையரின் ஆதிக்கத்தையும் ஒடுக்கலாம்.

கூட்டுறவுத் துறையில் பக்குவப்படுத்தலை மேற்கொள்ளுவது இன்றியமையாததெனக் கருதுவதற்குப் பல காரணங்களுண்டு.

(i) வாணிகப் பயிர் (Cash Crops or Commercial Crops)களைக் கூட்டுறவுத் துறையில் பக்குவப்படுத்தினால்தான் உற்பத்தியாளரான விவசாயி தமது விளைபொருளுக்கு நல்ல விலைபெற முடியும். கூட்டுறவுச் சந்தையிடுகைக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் பணி பக்குவப்படுத்தலாகும்.

(ii) கூட்டுறவுகள் விவசாயிகளுக்கு அளிக்கும் கடன்களை உறுதியாகத் திருப்பிப்பெறக் கூட்டுறவுப் பக்குவப்படுத்தும் நிலையங்கள் பெரிதும் உதவும் நிலையிலுள்ளன. குறிப்பாக மகாராட்டிர மாநிலத்தில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கரும்பு பயிரிட அளித்த கடன்களை உறுப்பினர்களிடமிருந்து வசூலித்துத் தருவதில் சிறந்த பணியாற்றி வருகின்றன. எனவே, கடன்—பக்குவப்படுத்தல் ஆகிய இருவகைக் கூட்டுறவுகளும் இணைந்து செயல்பட்டால் கூட்டுறவுக் கடன் துறை மேலும் விரிவடைய வாய்ப்புண்டு.

(iii) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பண்டங்கள் வழங்கிவரும் பணியைச் செய்து வருவது யாவரும் அறிந்ததே. பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் தயாரிக்கும் பண்டங்களை நுகர்வோர் கூட்டுறவுகள்வழி வழங்குவது எளிதாக அமையும். நுகர்வோர் கூட்டுறவுகள் பெரு மளவில் செயல்பட வேண்டுமென முயற்சிகள் நடந்துவரும் இந் நாளில் பக்குவப்படுத்தும் கூட்டுறவுகளும் தமது நடவடிக்கை களைப் பெருக்குவது அவசியமாகிறது.

(iv) கிராமப்புறங்களில் விவசாய விளைபொருள்களைப் பக்குவப்படுத்தும் தொழில்களை நிறுவுவது கிராமப் பொருளா தாரம் வலுவடைந்து வளரப் பெரிதும் உதவுகின்றது. விவசாயக் கடன், சந்தையிடுகை முறைகளும் சிறப்பாக நடைபெறப் பக்குவப் படுத்தல் உதவுகின்றது. விவசாயத்திலும், தொழில்துறையிலும் தொழில்நுட்ப, பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் முதலீடுகளைப் பெற உபரி உற்பத்தி உதவுகின்றது. கிராமப்புறங் களில் வருமானம் உயரவும், கூட்டுறவுக் கிராமப் பொருளாதாரம் வளரவும் கூட்டுறவுப் பக்குவப்படுத்தலை வளர்ப்பது அவசியமா கிறது. மற்றும் இதைச் சார்ந்துள்ள துறைகளும் வளர இது ஒரு கருவி போன்று அமைந்துள்ளது.

விவசாய விளைபொருளைப் பக்குவப்படுத்தும் தொழில், நம் நாட்டில் முன்னாள் மைசூர் மாநிலத்தில் 1917ஆம் ஆண்டுக் கூட்டுறவு பருத்தி விதைநீக்கி ஆலை நிறுவியபோது துவங்கியது. நான்கு ஆண்டுகள் கழித்துக் குஜராத்திலும் இதுபோன்ற ஆலைத் துவங்கப்பெற்றது. 1933ஆம் ஆண்டு நம் நாட்டில் சில சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்பட்டன. 1951ஆம் ஆண்டுவரை கூட்டுறவுப் பக்குவப்படுத்தல் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் காணவில்லை. மகாராட்டிரத்தில் நிறுவப் பெற்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மிகச் சிறப்பாகச் செய

லாற்றி வந்ததைக் கண்ட பிற மாநில அரசுகள், தத்தம் மாநிலங் களில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அமைக்க முயற்சிகளை மேற்கொண்டன. 1972-73 இறுதியில் 134 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நிறுவ உரிமங்கள் வழங்கப்பட்டிருந்தன.

நெல்லிலிருந்து உமி நீக்குதல், வேர்க்கடலைத் தோலை நீக்கிப் பருப்பு எடுத்தல், அரிசி ஆலைகள் நிறுவுதல் போன்ற நடவடிக்கைகள் இங்கும் அங்கும் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத் துவக்க காலத்திலிருந்து விவசாய விளைபொருளைக் கூட்டுறவு முறையில் பக்குவப்படுத்தும் நிலையங்கள் விரைவாக நிறுவப்பெற்றன. 1961இல் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி, பண்டக வாரியம் திரு. ஆர். ஜி. சரய்யா தலைமையில் கூட்டுறவுப் பக்குவப்படுத்தல் மீதான குழுவொன்றை அமைத்தது. இக் குழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், பிற பக்குவப்படுத்தும் சங்கங்கள் ஆகியவற்றை உருவாக்கல், அமைத்தல் குறித்த பிரச்சினைகளையும், திட்டகாலத்தில் விரைவாக இவை வளர மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பரிந்துரைகள் செய்தது. மூன்றும் திட்டகால இறுதியில் 2,130 பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் நிறுவப்பெற் றிருந்தன. இவற்றில் 78 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், 155 பருத்தி விதைநீக்கிக் கட்டும் சங்கங்கள், 329 நெல் உமி நீக்கிச் சங்கங்கள், 122 அரிசி ஆலைகள், 298 எண்ணெய் ஆட்டும் சங்கங்கள், 22 பழ-காய்கறி பக்குவப்படுத்துவன ஆகவும் பிற சங்கங்கள் 1,106உம் ஆகவுமிருந்தன. ஆந்திரத்தில் 940, மகாராட்டிரத்தில் 259, மேற்கு வங்காளத்தில் 202, பீகாரில் 160 பக்குவப்படுத்தும் சங்கங்கள் இருந்தது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

கூட்டுறவு இயக்கத்திற்கே சிறப்புத் தரும் வகையில் செயலாற்றிவரும் ஒரு சில நிறுவனங்களில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இடம்பெறுகின்றன. முன்னர்க் கூறியது போன்று, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பெரும்பாலும் சீராக வெற்றி கரமாக நடந்து வருவதால் மேன்மேலும் இத் துறையில் ஆலைகள் நிறுவப்பெற்று வருகின்றன. 1972 மார்ச்சு இறுதியில் 124 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது. 1973 மார்ச்சு இறுதியில் இவ்வெண்ணிக்கை 134 ஆக உயர்ந்தது. இத்துடன் சர்க்கரைத் தொழிலில் உரிமம் வழங்கப்பட்டிருந்த

மொத்தத் திறன் 53·17 இலட்சம் டன்களில் கூட்டுறவு ஆலைகள் மட்டும் 26·05 இலட்சம் டன் திறன் (Capacity)—அதாவது மொத்தத்தில் 49% திறன் கொண்டிருந்தன.

ஜூன் 1972 வரை உரிமம் வழங்கப்பட்டிருந்த 127 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 5·95 இலட்சம் உறுப்பினர்களிருந்தனர். இவர்களில் 5·39 இலட்சம்பேர் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளே. மொத்த உறுப்பினரின் 91% கரும்பு உற்பத்தியாளர்களாக இருந்தனர். மொத்தம் செலுத்திய முதல் ரூ. 74·06 கோடியாக இருந்தது. இதில் ரூ. 46·18 கோடி உறுப்பினர்கள் வழங்கியிருந்தனர். மாநில அரசுகள் ரூ. 27·88 வழங்கியிருந்தன. மொத்தப் பங்குமுதலில் உற்பத்தியாளர் உறுப்பினர் 57% வழங்கியிருந்தனர்.

இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு (Industrial Finance Corporation of India)வும், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவும் (Life Insurance Corporation of India) 2:1 என்ற விகிதத்தில் புதிதாக நிறுவப்படும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு முடக்கு முதல் (Block Capital) கடன்களை வழங்கி வருகின்றன. 1972 ஜூன் இறுதியில் தொழில் நிதியக் கூட்டுரு 79 சர்க்கரை ஆலைகளுக்கு ரூ. 73·32 கோடி கடன் அனுமதித்திருந்தது. இதில் ரூ. 63·05 கோடி கடன் வழங்கப்பட்டிருந்தது. இத் தொகையில் ரூ. 26·54 கோடி திருப்பிச் செலுத்தப்பட்டு மீதி ரூ. 36·51 கோடி மட்டுமே நிலுவை நின்றது. 26 சர்க்கரைக் கூட்டுறவுகள் கடன்கள் அனைத்தையும் தொழில் நிதிக் கூட்டுருவுக்குத் திருப்பிச் செலுத்தி விட்டிருந்தன.

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு ஜூன் 1972 இறுதி முடிய 21 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு ரூ. 8·75 கோடி கடன் அளித்திருந்தது. மகாராட்டிரத்தில் மாநிலக் கூட்டுறவு வங்கி ரூ. 300 இலட்சம் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிட்டு அத் தொகையை இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் துவங்கக் கடனாக உதவியளித்தது.

பொதுவாக, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தேவையான அளவு முதல் திரட்டியிருந்தன. ஜூன் 1971 இறுதியில் உற்பத்தி துவங்கியிருந்த 74 ஆலைகள் ரூ. 141·64 கோடி தமக்குள்ளாகவே எழுப்பியிருந்தன. இதில் பங்கு முதல் ரூ. 49·08 கோடி; ரூ. 22·24 கோடி திருப்பித் தரவேண்டப்படாத வைப்புகள்; ரூ. 70·32 கோடி காப்பு நிதியும் பிற நிதிகளுமாகும். பங்கு முதல் மட்டும் மொத்த உள்நிதிவள (internal resources) த்தில் 34·64% ஆக இருந்தது.

1972 ஜூன் இறுதிவரை உரிமம் வழங்கப்பட்டிருந்த 127 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 1971-72 பருவத்தில் 80 ஆலைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. இவ்வாலைகள் 119·58 இலட்சம் டன் கரும்பைப் பிழிந்து 12·95 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்தன. நாட்டின் மொத்தச் சர்க்கரை உற்பத்தியான 31·10 இலட்சம் டன்னில் இது 41·5% ஆகும். 1972-73 இல் மேலும் ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உற்பத்தி துவங்கியுள்ளதால் மார்ச்சு 1973 இறுதியில் 86 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன.

அட்டவணை

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்—உறுப்பினர் நிலை

விவரம்	1961-62	1965-66	1969-70	1970-71
சங்கங்கள்	10,809	11,170	12,770	13,306
உற்பத்தியாளர்கள்	1,78,236	2,73,297	4,50,504	4,77,701
பிறர்	11,771	11,498	16,108	19,338

அட்டவணை

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நிதி திரட்டிய பாங்கு ரூ. கோடியில்

விவரம்	1966-67	1967-68	1969-70	1970-71
செலுத்திய முதல்				
(i) அரசினர்	12·87	14·25	19·49	23·89
(ii) சங்கங்கள்	1·95	1.88	2·01	2·21
(iii) உற்பத்தியாளர்கள்	17·74	20·75	31·83	38·09
(iv) பிறர்	0·81	0·82	1·20	2·36
காப்பு நிதி, பிற நிதிகள்	29·40	34·97	55·96	67·43
கடன் வாங்கல்				
(i) அரசினர்	2·63	4·20	5·57	6·27
(ii) மத்திய நிதிய முகமை	22·17	22·57	69·37	60·36
(iii) இந்திய ஸ்டேட் வங்கி	3·95	7·02	18·64	13·86
(iv) இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு	25·37	27·35	29·50	34·60
(v) பிற	7·30	9·83	10·53	21·48
(vi) இந்தியக் காப்பீட்டுக் கூட்டுரு	...	...	3·72	7·72
(vii) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி	...	...	0·25	0·37
(viii) வாணிக வங்கிகள்	...	...	5·49	7·77
நடைமுறை முதல் (மொத்தம்)*	124·22	143·64	253·57	351·03

* பின்னங்கள் முழு எண்ணுக்கப்பட்டதால் கூட்டல் தொகையும், மொத்தமும் வேறுபடலாம்.

அட்டவணை

மொத்தச் சர்க்கரை உற்பத்தியில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்கு

பருவம்	உற்பத்தியில் ஈடுபட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்	உற்பத்தியான சர்க்கரை (இலட்சம் டன்)	தேசிய உற்பத்தியில் கூட்டுறவுத் துறையின் பங்கு சதவிகிதம்
1955-56	3	0·3	1·4
1960-61	30	4·5	14·8
1965-66	52	9·31	26·2
1966-67	55	6.63	30·9
1967-68	58	7·07	31·4
1968-69	63	12·06	33·8
1969-70	70	13·87	32·4
1970-71	74	12·63	33·8
1971-72	80	12·95	41·8

1966–67இல் சர்க்கரை உற்பத்தி, திடீரெனக் குறைந்ததற்குக் காரணம், கரும்பு வெல்லம் காய்ச்சுவதற்குத் திருப்பிவிடப் பட்டதேயாகும். பின்னர், நாட்டில் நிலவிய வறட்சி நிலைமை காரணமாகவும் கரும்பு உற்பத்தி குறைந்து நின்றது. ஆனால், 1968–69இலிருந்து நிலைமை சீர்பட்டுக் காணப்பட்டது. 1969–70 சர்க்கரை உற்பத்திப் பருவத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 1·44 இலட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கெனத் தயாரித்தன. நாட்டில் ஏற்றுமதிக்கென உற்பத்தி செய்யப்பட்ட 1·96 இலட்சம் டன் சர்க்கரையில் இது 73% ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சர்க்கரை உற்பத்தி செய்யும்போது துணைப்பொருளாகக் கிடைக்கும் கழிவுச் சாறு (Molasses) சக்கை (Bagasse), அழுத்த மண் (Press mud) ஆகியவற்றைப் பல வழிகளில் பயன் படுத்துகின்றனர். அழுத்த மண் நல்ல உரமாகப் பயன்படுகிறது. சக்கை சர்க்கரை ஆலையிலேயே எரிபொருளாக (fuel)ப் பயன் படுத்தப்படுகிறது. சக்கையைக் கொண்டு காகிதம் செய்யலா மெனினும், இது மிகவும் செலவு பிடிக்கும் முறையாக இருப்பதால் பெரும்பாலும் சக்கையை எரிபொருளாகவே பயன்படுத்து கின்றனர்.

கழிவுச் சாறு மிகவும் பயனுள்ள ஒரு துணைப்பொருளாகும். இதிலிருந்து எரி சாராயம், தொழில் சாராயம் (Power alcohol, Industrial Alcohol), ஸ்பிரிட் (Spirit) முதலிய தயாரிக்கலாம். சர்க்கரை ஆலைகள் இவற்றைத் தயாரிக்க ஊக்குவிக்கப்பட்டதன்

காரணமாக 1972 டிசம்பர் இறுதியில் 13 சர்க்கரை ஆலைகளும், ஒரு தனிக் கூட்டுறவுச் சங்கமும் சர்க்கரைத் துணைப்பொருள்களைப் பயன்படுத்தும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. இவற்றில் 9 திட்டங்கள் செயலாக்கப்பட்டு உற்பத்தி துவங்கப்பட்டுவிட்டது. மற்றும் 25 தொழிலகங்கள் நிறுவப்பெற்று வருகின்றன. இந்த எரி சாராய ஆலைகளை நிறுவ தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குக் கடனுதவி அளித்து வருகின்றது. 1972-73 நிதியாண்டில் இது தொடர்பாக நான்கு தொழிலகங்களுக்கு ரூ. 77·37 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

தேசீயக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் கூட்டிணைப்பு (National Federation of Co-operative Sugar Factories)

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் கூட்டிணைப்பு ஒன்று தேசீய மட்டத்தில் 1960ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகள், மாநிலக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் கூட்டிணைப்புகள் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படவும், புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை உருவாக்கவும் அமைக்கவும் தேசீயக் கூட்டிணைப்பு உதவுகிறது. தேசீயக் கூட்டிணைப்புத் தொழில் நுட்பக் கூடு (Technical cell) ஒன்றையமைத்து உறுப்பினர்களுக்கு அறிவுரைகளை வழங்கி வருகின்றது. 'கூட்டுறவுச் சர்க்கரை' (Co-operative Sugar) என்ற திங்கள் இதழ்வழி சர்க்கரைத் தொழில் தொடர்பான செய்திகள், புள்ளி விவரங்கள், சந்தைநிலை போன்ற பல்வகைச் செய்திகளைத் தேசீயக் கூட்டிணைப்பு அளிக்கிறது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் நிருவாகம்

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உறுப்பினர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றனர். ஆகவே, உறுப்பினர்களுக்கும் நிருவாகத்தினருக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பது கடினம். இயக்குநர் அவை உறுப்பினர்களை வட்டார அடிப்படையில் தேர்ந்தெடுப்பது ஓரளவுக்கு ஒவ்வொரு பகுதியிலுமுள்ள உறுப்பினர்களின் கருத்துக்கு இடந்தர வாய்ப்புத் தரும். பெரும்பாலான மாநிலங்களில் புதிதாக நிறுவப்பெறும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் இயக்குநர் அவையை மாநில அரசினரே நியமிக்கின்றனர். குஜராத், மகாராட்டிர மாநிலங்களில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் இயக்குநர் அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

கிராமச் சமுதாயத்தில் தொழில் முயல்வோரை உருவாக்கிக் கிராமப் பொருளாதாரம் முன்னேற கூட்டுறவுச் சர்க்கரை

ஆலைகள் பெரிதும் உதவிவருகின்றன என்று கூறுவது மிகை யாகாது. சிறு விவசாயிகள் தாம் விளைவிக்கும் கரும்பை நல்ல விலைக்கு விற்றுப் பயன்பெறக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உதவு கின்றன. கரும்பு விளைவிக்கும் சிறு விவசாயி சர்க்கரை ஆலையில் பங்கு எடுத்துக்கொள்ளுவதன்வழிதான் அதன் உரிமையாளர் களில் ஒருவர் என்ற பெருமிதம் அடைகிருர். நியாயமான விலைக்குத் தன் கரும்பை ஆலைக்கு விற்கும் உறுதியும் அவருக்குண்டு. ஆலை ஈட்டும் இலாபமும் உறுப்பினருக்கே இலாப ஈவாக வழங்கப் படுவதால் இவ்வகையிலும் விவசாயி பயனடைகிருர். ஆலைகளும் தமது உற்பத்தியாளர் உறுப்பினருக்குத் தொழில் நுட்ப அறி வுரைகள் வழங்கி உதவுகின்றன.

சர்க்கரைக் கூட்டுறவுகளின் பிரச்சினைகள்

நம் நாட்டில் சர்க்கரை உற்பத்தி தேவையைவிடக் குறைவாக இருந்து வருவதால் உற்பத்தியான பொருளை விற்பதில் ஏதும் பிரச்சினைகளில்லை. ஆனுல், உற்பத்தித் துறையில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. பல ஆலைகள் தம்முடைய முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளன. இதற்குப் பல காரணங்களுண்டு. சில ஆலைகளுக்குப் போதுமான அளவு கரும்பு கிடைப்பதில்லை. சில இடங்களில் கரும்பை வெல்லம் காய்ச்சவும் பழுப்புச் சர்க்கரை செய்யவும் விற்றுவிடுகின்றனர். வெல்லம், பழுப்புச் சர்க்கரை விலை ஏறியிருக்கும் காலங்களில் ஆலைக்குக் கரும்பையளித்துப் பெறக்கூடிய விலையை விட மிகுநியான விலைக்கு, விவசாயிகள் கரும்பை வெல்ல வியாபாரிகளுக்கு விற்றுவிடுகின் றனர். சில இடங்களில் ஆலைக்கு அண்மையில் நல்ல கரும்பு விளைச்சல் இல்லாததும் ஒரு பிரச்சினையாகும். கரும்பு வெட்டிய 24 மணி நேரத்துக்குள் பிழியப்பட்டால்தான் முழு அளவு சாறு கிடைக்குமாதலால் விவசாயிகளுக்குத் தக்க போக்குவரத்து வசதிகள் அவசியம் தேவைப்படுகின்றன. தொலைவிலுள்ள ஊர் களிலிருந்து கொண்டுவர வண்டிச் சத்தம் அதிகமாகும். ஆகவே, தொலைவிலுள்ள உற்பத்தியாளருக்கு இது ஒரு பிரச்சினையாகும்.

ஒரு நாளுக்குக் குறைந்தது 1,250 டன் கரும்பைப் பிழியும் திறனுள்ள ஆலைகள்தாம் ஆதாயமாகச் செயல்படக் கூடும் என்று கணக்கிடப்பட்டுள்ளதால் தற்போது நிறுவப் பெற்று வரும் ஆலை களனைத்தும் குறைந்தது இந்த அளவு திறனுள்ளனவாயுள்ளன. மற்றும், ஆலையின் ஆதாயமான செயற்பாடு கரும்புச் சாறு எடுப்பு விகிதத்தைப் (Percentage of recovery) பொருத்திருக்கிறது. இத்தனை டன் கரும்பைப் பிழிந்தால் இவ்வளவு டன் சர்க்கரைக் கிடைக்கும் என்ற கணக்கைச் சாறு விகிதம் என்று சுருக்கமாகக்

கூறுவர். அனைத்திந்தியச் சராசரி 9·87% மகாராட்டிர மாநிலத்தில் 12·27% வரை சாறு விகிதம் இருந்தது (1971-72 இல்) நாட்டிற்கே உயர்ந்த விகிதமென அமைந்தது. தமிழ்நாட்டில் சாறு விகிதம் 8 முதல் 9%வரை இருந்தது. சாறு விகிதத்தை அதிகப்படுத்த கரும்பு ஆராய்ச்சி நிலையங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. உயர்ந்த ரக விதைகள், பொருத்தமான இரசாயன உரங்கள், புதுமுறை வேளாண்மை, தக்க பூச்சிக்கொல்லி மருந்து முதலியவற்றை நன்கு பயன்படுத்தி உற்பத்தியின் தரத்தையும் அளவையும் உயர்த்தலாம்.

பிற பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள்

சர்க்கரை ஆலைகள் தவிர 1,631 பல்வகைக் கூட்டுறவு விவசாயப் பக்குவப்படுத்தும் தொழிலகங்கள் 1972 மார்ச்சு இறுதியில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் 1,335 தொழிலகங்கள் மார்ச்சு 1972 இறுதியில் செயல்பட்டு வந்தன. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு தனது தொழில்நுட்பக் கூட்டின்வழி மாநில அரசுகளுக்குப் புதிய பக்குவப்படுத்தும் தொழிலகங்களைத் துவக்க தொழில்நுட்ப ஆலோசனை வழங்குகிறது. ரொட்டி செய்யும் தொழிலகம் சணல் கயிறு ஆலை, குளிர்படுத்தும் கூடம், புளி பக்குவப்படுத்தும் தொழிலகம், தேங்காய் பக்குவப்படுத்தும் தொழிலகம், முதலிய உருவாக்க மாதிரித் திட்டங்களைக் கூட்டுரு அளித்துள்ளது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் கூட்டிணைப்பிற்கும், கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டிணைப்பிற்கும் கூட்டுரு பல உதவிகளை வழங்கி வருகின்றது. மாநில அரசுகள் தொழில் நுட்ப-பொருளாதார வாய்ப்பாய்வு (Feasibility) மேற்கொள்ள தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு உதவித்தொகை வழங்கி வருகிறது. புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாகி வந்துள்ள வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஏற்பட உதவும் திட்டங்களுக்கு இக் கூட்டுரு முதலிடம் அளிக்கிறது.

சிறு, நடுத்தரப் பக்குவப்படுத்தும் தொழிலகங்கள் துவக்க காலத்தில் நிதிநெருக்கடியால் பெரிதும் அவதியுறுவதைக் கண்ட கூட்டுரு, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கடனில் 25% அளவைக் கூட்டுறவுகளுக்கு முதல் தவணையாக அளித்து உதவியது. ரூ. 15 இலட்சத்திற்குக் குறைந்த முதலீடு தேவைப்படும் தொழிலகம் சிறியது என்றும், ரூ. 15 முதல் 60 இலட்சம் முதலீடு தேவைப்படும் தொழிலகம் நடுத்தர அளவானது என்றும் அறுதியிடப்பட்டது. ஜனவரி 1973 வரை கூட்டுரு (NCDC) 96 திட்டங்களுக்கு ரூ. 958·74 இலட்சம் முடக்குக் கடன் (Block Loan)

களாக அனுமதித்திருந்தது. இத் தொகையில் ரூ. 251 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டிருந்தது.

பக்குவப்படுத்தும் தொழிலகங்களுக்குத் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு 'இடைவெளிப் பணம்' (Margin Money) அளித்து வருவது மிகவும் பயனுள்ளதாகக் காணப்பட்டது. தம் முடைய முழுத்திறனைப் பயன்படுத்தத் தொழிலகங்கள் கச்சாப் பொருள்களை வாங்கவும், வங்கிகளில் கடன் பெறவும் இப் பணம் தொழிலகங்களுக்குப் பெரிதும் உதவியது. 1971-72இல் கூட்டுரு 143 தொழிலகங்களுக்கு ரூ. 195·28 இலட்சம் இடைவெளிப் பணமாக அனுமதித்தது. இதில் ரூ. 132·65 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டிருந்தது.

உணவு தானியங்கள் பக்குவப்படுத்தல்

கூட்டுறவுத் துறையில் 790 அரிசி ஆலைகள் ஏற்படுத்த மாநில அரசுகளுக்கு 1972 டிசம்பர் வரை நிதியுதவி வழங்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் 45 ஆலைகளை அமைக்கமுடியாது போனதால் 745 ஆலைகள் மட்டுமே நிதிவசதி பெற்றன. இவற்றில் ஆறு முன்னோடி நவீன ஆலைகள் தீவிர விவசாயச் சாகுபடித் திட்டம் அமுலிலிருக்கும் மாவட்டங்களில் நிறுவப் பெற்றுள்ளன. 1972 டிசம்பர் இறுதியில் 685 ஆலைகள் கட்டி முடிக்கப் பெற்றிருந்தன. மற்றவை பல்வேறு கட்டங்களில் கட்டிவரப்பெற்றன. பழைய கூட்டுறவு அரிசி ஆலைகளை நவீன மயமாக்கும் திட்டத்தின்கீழ் 43 ஆலைகளுக்கு 1971-72இல் நிதியுதவி வழங்கப்பட்டது. 1972 டிசம்பர்வரை 40 பருப்பு ஆலைகளுக்குக் கடனுதவியளிக்கப்பட்டது. இவற்றில் 27 உற்பத்தி துவங்கிய நிலையிலிருந்தன.

கூட்டுறவு அரிசி ஆலைகளின் முக்கிய பிரச்சினை, பல மாநிலங் களிலுள்ள சட்டங்களின்படி ஆலைகள் தமக்கு வரும் நெல்லில் 70% முதல் 90% வரை அரசினருக்கு அவர்கள் விதித்த விலைக்குக் கட்டாயமாக விற்க வேண்டிய நிலையேயாகும். தனியார் துறை யிலுள்ள அரிசி ஆலையர் (Private Rice Millers) பல வழிகளில் இவ்வகைக் கட்டாய விற்பனையிலிருந்து தப்பித்துக் கொள்ளு கின்றனர். கூட்டுறவு ஆலைகள் அங்ஙனம் செய்ய முடியாத காரணத்தால் நட்டத்தில், தமது திறனை முழுமையாகப் பயன் படுத்த முடியாநிலையில் நடந்து வருகின்றன. இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காணும் பொருட்டு மத்திய உணவுத் துறை யினர் ஆய்வுக் குழுவொன்று அமைத்து அதன் பரிந்துரைகளை மாநில அரசுகளுக்கும், இந்திய உணவுக் கூட்டுருவுக்கும் அனுப்பி அவற்றை அமுல்படுத்துமாறு கோரியுள்ளனர்.

அறுவடை காலத்தில் பெருமளவு நெல் கொள்முதல் செய்து உலர்த்திப் பக்குவப்படுத்தும் நோக்கத்துடன் நவீன அரிசி ஆலைகள் அமைக்கப்பட்டன. நெல்லை உலர்த்தவும் அவிக்கவும், அரைக்கவும், தவிட்டு எண்ணெய் (Bran oil) தயாரிக்கவும் சில நவீன அரிசி ஆலைகள் திட்டமிட்டுள்ளன. உலர்த்துவதற்குத் தனி ஆலைகள் நிறுவப்பட்டன. தவிடு நீக்கம் 5% மிகாமலிருக்கவும், நொய்யாக உடைபடுவதைக் குறைக்கவும், மிகுதியான அரிசியைப் பெறவும் நவீன அரிசி ஆலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தவிட்டு எண்ணெய் உற்பத்தி ஆலைகள்

ஆந்திரம், மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், மைசூர், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில், மாநிலத்துக்கு ஒன்றாக மொத்தம் ஐந்து தவிட்டு எண்ணெய் ஆலைகள் கூட்டுறவுத் துறையில் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1971-72இல் நான்கு ஆலைகள் செயல்பட்டு வந்தன. மகாராட்டிரத்திலுள்ள ஆலை துவக்க நிலையிலிருந்தது. அஸ்ஸாமிலும், ஒரிசாவிலும் இரு ஆலைகள் துவக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருத்தி பக்குவப்படுத்தல்

1972 ஜூன் இறுதியில் 225 பருத்தி விதை நீக்கிக் கட்டும் தொழிலகங்களிருந்தன. இவற்றில் 204 நிறுவப்பெற்றிருந்தன. மற்றவை நிறுவப்பெற்று வந்தன. 1970-71இல் இவை 23·42 இலட்சம் குவின்டால் எடையுள்ள பருத்தியை விதை நீக்கி, 7·07 இலட்சம் பேல் பஞ்சைக் கட்டின இக் கூட்டுறவுகள். மகாராட்டிர மாநிலத்தில் 1971ஆம் ஆண்டுக் கச்சாப் பருத்தி (கொள்முதல்) பக்குவப்படுத்தல்-சந்தையிடுகை சட்டப்படிப் பருத்தி உற்பத்தியாளரனைவரும் தமது கச்சாப் பருத்தியைக் கூட்டுறவுகள்வழி மட்டுமே விற்கவேண்டும் என்றநிலை ஏற்பட்டுள்ளதால் அம் மாநிலத்திலுள்ள அத்தனைப் பருத்தி விதை நீக்கி ஆலைகளும் முழுமையாகச் செயல்பட வாய்ப்பு உண்டாகியிருக்கிறது. கூடுதல் ஆலைகள் ஏற்படுத்தும் வாய்ப்பும் உருவாகக்கூடும்.

இந்தியப் பருத்திக் கூட்டுரு (The Cotton Corporation of India) டிசம்பர் 1971 முதல் உள் நாட்டில் பருத்தி வாங்க முற்பட்டது. ஆகஸ்டு 1972 வரை இக் கூட்டுரு 5·10 இலட்சம் பேல் பருத்தி வாங்கியிருந்தது. இதன் மதிப்பு ரூ. 50 கோடிக்கு மேலாகும்.

பருத்தி உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வழி வகுப்பதுடன், இந்த விதை நீக்கி ஆலைகள் கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தரமான பஞ்சினை அளிக்கவும் உதவுகின்றன. குஜராத் மாநிலத்திலும், மகாராட்டிரத்திலும் மிகப் பெரும்

பான்மையான பருத்தி பக்குவப்படுத்தல் ஆலைகள் நிறுவப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மொத்தம் 1971-72இல் நிருமாணிக்கப்பட்டிருந்த 204 ஆலைகளில் குஜராத்தில் 80, தமிழ் நாட்டில் 15, மகாராட்டிரத்தில் 74, மைசூரில் 12 அமைந்திருந்தன. சில மாநிலங்களில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களே பருத்தி விதை நீக்கல் பணியையும் தமது நடவடிக்கைகளில் ஒன்றாக மேற்கொண்டுள்ளன.

கூட்டுறவு நூற்பு ஆலைகள் (Co-operative Spinning Mills)

பருத்தி உற்பத்தியாளர்கள் தமது விளைபொருளை நல்ல விலைக்கு விற்றுப் பயனடையக் கூட்டுறவு நூற்பாலைகளை ஏற்படுத்தியுள்ளனர். 1971 ஜூன் இறுதியில் குஜராத்தில் 4, மகாராட்டிரத்தில் 13, மைசூரில் 1, உத்தரப் பிரதேசத்தில் 1 ஆக மொத்தம் 19 ஆலைகள் நிறுவப்பட்டிருந்தன. இவற்றில் 1970-71இல் 13 ஆலைகள் செயல்பட்டுவந்தன.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவசியம் தேவைப்படும் கச்சாப் பொருள் நூல் பல்வேறு வகை இழை நூல் (Counts of yarn)களை இச் சங்கங்களுக்குத் தயாரித்து வழங்க நெசவாளர் சங்கங்கள் பல ஒன்று சேர்ந்து கூட்டுறவு நூற்பாலைகளை உருவாக்கியுள்ளன. 1970-71இல் நூல் நுகர்வோர் (Consumers of yarn) ஒன்று சேர்ந்து அமைத்திருந்த கூட்டுறவு நூற்பாலைகள் 28. தமிழ் நாட்டில் 12 ஆலைகள், ஆந்திரம், மகாராட்டிரத்தில் முறையே ஐந்தைந்து ஆலைகள், பஞ்சாபில் 2, பீகார், குஜராத், ஒரிசா, உத்தரப் பிரதேசத்தில் முறையே ஒவ்வொரு ஆலையும் இருந்தன. இவற்றில் 1970-71இல் 25 ஆலைகளில் உற்பத்தி நடந்துவந்தது.

பருத்தி உற்பத்தியாளர்களும், நூல் நுகர்வோர்களுமாகச் சேர்ந்து அமைத்துள்ள கூட்டுறவு நூற்பாலைகளும் நம் நாட்டிலுள்ளன. குஜராத், கேரளம், மகாராட்டிரம், இராஜஸ்தான், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் ஒவ்வொன்றும், மேற்கு வங்காளத்தில் இரண்டும், மத்தியப் பிரதேசம், மைசூரில் முறையே நான்கு நான்கும் 1970-71இல் இருந்தன. இந்த 15 ஆலைகளில் 6 ஆலைகள் மட்டுமே 1970-71இல் இயங்கின.

1970-71 இறுதியில் மொத்தம் நிறுவப்பட்டிருந்த 62 நூற்பாலைகளில் 16,368 கூட்டுறவுச் சங்கங்களும் 1,34,332 தனிநபர்களும் உறுப்பினராக இருந்தனர். இவற்றில் 9,13,038 கதிர்கள் (Spindles) இருந்தன. இவற்றின் செலுத்திய முதல் ரூ. 23·05

கோடியாகவும், நடைமுறை முதல் ரூ. 71·47 கோடியாகவும் இருந்தது. செலுத்திய முதலில் அரசின் பங்கு ரூ. 14·60 கோடியாக இருந்தது. இந்த ஆலைகளுக்கு இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு ரூ. 7·87 கோடி கடன் வழங்கியிருந்தது. இவ்வாலைகள் 20,900 நபர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வந்தன. 14 ஆலைகள் இலாபத்தில் நடந்து வந்தன; 42 ஆலைகள் நட்டத்தில் நடைபெற்று வந்தன; 5 ஆலைகள் இலாபமோ நட்டமோ இல்லாத நிலையிருந்தன; ஓர் ஆலையைப்பற்றித் தகவல் கிடைக்கவில்லை.

1972 மார்ச்சு இறுதியில் பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு நூற்பாலைகள் இருந்த நிலைபற்றிய விவரங்களைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்:

அட்டவணை

பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு நூற்பாலைகள் 1971-1972 நிதியாண்டிலிருந்த நிலை

மாநிலம்	ஆலை எண்ணிக்கை	உறுப்பினர் நிலை			செலுத்திய முதல் (ரூ. இலட்சத்தில்)			
		தனி நபர்	கூட்டுறவுகள்	மொத்தம்	உறுப்பினர்	கூட்டுறவுகள்	மாநில அரசு	மொத்தம்
மகாராட்டிரம்	14	82,211	5,178	87,389	192·67	72·88	435·72	701·27
குஜராத்	3	18,249	4,118	22,367	19·57	37·38	118·77	175·72
மைசூர்	4	4,385	1,215	5,600	15·70	21·47	70·00	107·17
உத்தரப்பிரதேசம்	1	6,897	593	7,490	8·75	16·88	51·04	76·67
ராஜஸ்தான்	1	5,615	1,133	6,748	2·18	4·02	33·30	39·50
மொத்தம்	23	1,17,357	12,237	1,29,594	238·87	152·63	708·83	1100·33

அட்டவணை

பருத்தி உற்பத்தியாளர் நிறுவிய நூற்பாலைகளின் விவரம் 1971-1972 நிதியாண்டிலிருந்த நிலை

மாநிலம்	நிறுவப்பட்ட ஆலைகள்	உரிமம் தரப்பட்ட திறன்	நிறுவி முடித்த ஆலைகள்	
			எண்ணிக்கை	(திறன் கதிர்கள்)
மகாராட்டிரம்	14	2,41,000	10	1,35,608
குஜராத்	3	62,500	3	55,223
மைசூர்	4	48,000	2	18,000
உத்தரப் பிரதேசம்	1	25,000	1	9,840
ராஜஸ்தான்	1	25,000	—	—
மொத்தம்	23	4,01,500	16	2,18,676

1971-72இல் இயங்கிவந்த பருத்தி உற்பத்தி உற்பத்தியாளர் அமைத்த 16 கூட்டுறவு நூற்பாலைகளில் 13 முழு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன; 3 சோதனை ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தன. இந்த 13 ஆலைகள் 110·10 இலட்சம் கிலோகிராம் எடையுள்ள ரூ. 6·84 கோடி மதிப்புள்ள பஞ்சைப் பயன்படுத்தி 90·00 இலட்சம் கிலோகிராம் எடையுள்ள ரூ 9·16 கோடி மதிப்புள்ள நூலை உற்பத்தி செய்தன. மொத்தக் கதிர்களில் 78·5% அளவினை இந்த ஆலைகள் பயன்படுத்தின.

நூற்பாலை ஆதாயமாகச் செயல்பட குறைந்தது 25,000 கதிர்கள் கொண்டிருத்தல் வேண்டும். பருத்தி உற்பத்தியாளர் ஆலைகள் 23இல் 15 ஆலைகள் ஒவ்வொன்றும் 12,000 கதிர்கள் திறன் மட்டுமே கொண்டிருந்தன. இதனால் மேற்செலவுகள் மிகுந்திருந்தன. இந்த ஆலைகளின் திறனை 25,000 கதிர்களாக்க தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு முயன்று வருகின்றது.

1964ஆம் ஆண்டில் கூட்டுறவு நூற்பு ஆலைகளின் கூட்டிணைப்பு (All India Federation of Co-operative Spinning Mills) ஒன்று அனைத்திந்திய மட்டத்தில் உருவாகியது. 1972 மார்ச்சு இறுதியில் இக் கூட்டிணைப்பில் 52 நூற்பாலைகள் (23 பருத்தி உற்பத்தியாளர் ஆலைகள் 29 நெசவாளர் கூட்டுறவுகளின் ஆலைகள்) உறுப்பினராகச் சேர்ந்திருந்தன. உறுப்பு ஆலைகளின் நடவடிக்கைகளைத் திட்டமிடவும், சீர்படுத்தவும், ஒருங்கிணைக் கவும் மேம்படுத்தவும் இக் கூட்டிணைப்புப் பாடுபடுகிறது.

சணல் (Jute) பக்குவப்படுத்தல்

நம் நாட்டில் 1971-72இல் 44 கூட்டுறவுச் சணல் கட்டும் ஆலைகளிருந்தன. இவற்றில் 40 நிறுவப்பெற்று உற்பத்தி தொடங்கியிருந்தன. கூட்டுறவுத்துறையில் முதன் முதலாக அஸ்ஸாமிலுள்ள நௌகாங் என்னும் இடத்தில் கூட்டுறவுச் சணல் ஆலையொன்று நிறுவப்பெற்று அந்த ஆலை 1971 ஜனவரியிலிருந்து உற்பத்தி துவங்கியுள்ளது. 1971-72இல் ரூ. 19·39 இலட்சம் மதிப்புள்ள கோணிப்பை (gunny bags)களை இந்த ஆலை தயாரித்தது.

இந்திய அரசு 1971இல் அமைத்த ஒரு குழு, நாட்டில் 6 புதிய சணல் ஆலைகளை அமைக்கப் பரிந்துரை செய்தது. இதன்படி ஒரிசா, ஆந்திர மாநிலங்களில் ஒவ்வொரு கூட்டுறவுச் சணல் ஆலை அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

அண்மையில் இந்தியச் சணல் கூட்டுரு (Jute Corporation of India) அமைக்கப்பட்டது சணல் சந்தையில் ஏற்பட்டுள்ள முக்கிய

மானதொரு நிகழ்ச்சியாகும். தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுருவின் முயற்சிகளால் சணல் கூட்டுரு, தனக்கு வேண்டிய சணலைக் கூட்டுறவுகள்வழி கொள்முதல் செய்ய ஒப்பி பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் அங்ஙனமே செய்யவும் துவங்கியது.

தமிழ்நாட்டில், நாளொன்றுக்கு 100 டன் காகிதம் தயாரிக்கக் கூடிய கூட்டுறவுக் காகித ஆலையொன்று நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மெஸ்தா (புளித்த கீரை) என்னும் ஒருவகைக் கீரையே இந்த ஆலைக்குக் கச்சாப் பொருளாக அமையும். இதை நிறுவுவதற்கான தொழில் நுட்ப அறிக்கையொன்றைத் தயாரிக்கத் தமிழ்நாடு அரசுக்கு ரூ. 1 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்களைப் பக்குவப்படுத்தல்

1971-72 முடிவில் 173 கூட்டுறவு எண்ணெய் ஆலைகளிருந்தன. இவற்றில் 136 நிறுவப்பெற்றிருந்தன. பருத்திக் கொட்டை எண்ணெய் தயாரிக்க, மகாராட்டிரத்தில் நாளொன்று 30 டன் கொட்டையைப் பிழியக்கூடிய ஆலை நிறுவப் பெற்றது. வேர்க்கடலை ஓட்டைப் பிரித்தெடுக்க 58 பொறிகள் இருந்தன. இவற்றில் 57 இயங்கி வந்தன. 1970-71இல் இந்த ஆலைகள் 4·50 இலட்சம் குவிண்டால் எண்ணெய் விதைகளைக் கையாண்டன.

பிழிவெண்ணெய் தயாரிப்பு (Solvent Extraction) ஆலைகள்

1971-72 இறுதியில் 7 பிழிவு எண்ணெய் தயாரிப்பு ஆலைகளும் ஒரு பருத்திக்கொட்டை நசுக்கு ஆலையும் அமைக்கப்பெற்றிருந்தன. இவற்றில் 4 ஆலைகள் 1971-72இல் 30,000 டன் பிண்ணாக்குத் தயாரித்தன. எண்ணெய்ப் பசையற்ற பிண்ணாக்கு 3,727 டன் அளவு 1971-72இல் பஞ்சாபிலுள்ள ஆலையால் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 27·10 இலட்சமாகும்.

மூன்று வனஸ்பதி ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப் பெற்றுள்ளன. இவற்றில் இரண்டு உற்பத்தி துவங்கிவிட்டன. 1970-71இல் ஓர் ஆலைமட்டும் ரூ. 2 கோடி பெறுமான 3,000 டன் வனஸ்பதி தயாரித்தது. இரண்டாம் ஆலை 1972 இறுதியில் உற்பத்தி துவங்கியது.

கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யக் கூட்டுறவு ஆலைகள் 8 நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 1,80,000 டன்களாகும். இவற்றில் 5 ஆலைகள் உற்பத்தி துவங்கிவிட்டன.

தோட்டக்கால் விளைபொருள்களை (Plantation Crops)ப் பக்குவப்படுத்தல்

தேங்காய் எண்ணெய் ஆலைகள் 32, தேயிலைத் தொழிற்சாலைகள் 15; காப்பி பதனிடும் ஆலைகள் 5, முந்திரி பதனிடும் ஆலைகள் 4, ரப்பர் பதனிடும் ஆலைகள் 2, ஏலக்காய் எண்ணெய் தயாரிக்கும் ஆலை 1 ஆக 59 ஆலைகள் 1971-72இல் இருந்து வந்தன. காப்பி பதனிடும் கூட்டுறவுகள் காப்பி வாரியத்திற்கு ரூ. 478 இலட்சம் மதிப்புள்ள காப்பிக் கொட்டையினை 1970-71இல் விற்றன. கூட்டுறவுகளால் பதனிடப்பட்ட தேயிலையின் மதிப்பு ரூ. 140·77 இலட்சமாக 1970-71இல் இருந்தது. தேங்காய்ப் பிண்ணாக்கு, தேங்காய் எண்ணெய், தேங்காய் மட்டை, தேங்காய் ஓடு, தென்னை நார் முதலியவற்றை 1970-71இல் ரூ. 99·78 இலட்ச மளவுக்குக் கூட்டுறவுகள் விற்பனை செய்தன.

காய்கறி பழம் பக்குவப்படுத்தல்

மார்ச்சு 1972 இறுதியில் 36 பழங்கள் காய்கறிகள் பக்குவப் படுத்தும் தொழிலகங்கள் இருந்தன. இவற்றில் 29 தொழிலகங்கள் உற்பத்தி நடைபெற்று வந்தது. வாழைப்பழத்தை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் இக் கூட்டுறவுகள் பங்கேற்றன. தேசீயக் கூட்டிணைப்பு வெங்காயம், மிளகாய் முதலியவற்றை ஏற்றுமதி செய்தன.

கூட்டுறவுப் பழப் பக்குவப்படுத்தும் சங்கங்கள் 5, 1971-72இல் ரூ. 14·96 இலட்சம் மதிப்புள்ள 1695·39 டன் பழங்களைப் பக்குவப் படுத்தின. இதே காலத்தில் 6 கூட்டுறவுகள் ரூ. 16·78 லட்சம் மதிப்புள்ள 991·55 டன் பழப் பொருள்களை விற்றன. தமிழ் நாட்டில் வேலூரிலுள்ள கூட்டுறவுப் பழப் பதனிடும் ஆலை சோவித் யூனியனுக்கு 80 டன் மாம்பழ ரசம் ஏற்றுமதி செய்தது.

பால்பொருள் பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள்

கூட்டுறவுப் பால்பொருள் பக்குவப்படுத்தும் சங்கங்களுக்குத் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு 1971-72 முதல் கடன் வசதிகளை அளிக்கத் துவங்கியுள்ளது. 1972 மார்ச்சு வரை நான்கு கூட்டுறவுகள் இத் திட்டத்தின்கீழ்க் கூட்டுருவின் உதவியைப் பெற்றன.

கூட்டுறவுப் பக்குவப்படுத்தும் தொழில் நிலையங்களின் பொதுப் பிரச்சினைகள்:

பக்குவப்படுத்தும் தொழிலகம் துவங்கு முன்னர் அதற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதைத் தொழில் நுட்ப கண்ணோட்டத்தில் ஆராயவேண்டும். கச்சாப் பொருளின் விலை, பக்குவப் படுத்தல் செலவு, முடிவுப் பொருளை விற்கும் விலை முதலியவற்றைத் தீர ஆராய்ந்து பொருளாதாரக் கண்ணோட்டப்படி இத்தொழில் ஆதாயமாக நடைபெறுமா என்று காணவேண்டும். பின்னர் தொழிலின் அளவு, இட அமைப்பு முதலியவற்றை முடிவு செய்து, நிதியத் தேவைகளை முறையாகக் கணக்கிட வேண்டும். நடைமுறையில் இக் கூட்டுறவுகள் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

சில பக்குவப்படுத்தும் ஆலைகளுக்கு வேண்டிய அளவு கச்சாப் பொருள் கிடைக்கவில்லை. எடுத்துக்காட்டாக அரிசி ஆலைகளைக் கூறலாம். அரசினரின் கொள்முதல் கொள்கை இந்தப் பிரச்சினைக்குக் காரணமாகச் சிலவிடங்களில் அமைகின்றது. ஆலையின் திறன் முழுதும் பயன்படுத்த முடியாதநிலை பல விடங்களில் காணப்படுகிறது. இதற்குக் கச்சாப் பொருள்களின் விலைகளின் ஏற்றத் தாழ்வும் காரணமாக அமைவதுண்டு. வேர்க் கடலை எண்ணெய் தயாரித்தலில் இப் பிரச்சினை காணப்படுகிறது.

வேண்டிய அளவு நிதிவசதிகள் கிடைக்காமல் திணறித் தவிக்கும் பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் பலப்பல. தக்கவாறு நிதியத் தேவைகளைக் கணக்கிடாத காரணத்தால் பல கூட்டுறவு நூற்பாலைகள் நடைமுறை முதலை விரைவில் எழுப்ப முடியாமல் அவற்றின் உற்பத்தித் துவக்கம் காலந்தாழ்த்துப் போயிற்று. பல தொழிற்சாலைகளை நிருவகிக்கப் பயிற்சிபெற்ற மேலாண்மையர் கிடைக்கவில்லை. உறுப்பினர்களிடமிருந்து பங்கு முதல் வசூலிப்பதற்கும் ஆலைத் தொழில் துவங்குவதற்குமிடையே கால இடைவெளி மிகுதியாக ஆக, உறுப்பினரின் உற்சாகமும் நம்பிக்கையும் குறைய ஆரம்பித்துவிடுகிறது. மற்றும் பணவீக்கம் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய நிலையில் இயந்திரச் சாதனங்களின் விலையும் உயர்ந்து மொத்தத் திட்டத்தின் செலவு பெருமளவு கூடிவிடுகிறது. பெரும்பாலான பக்குவப்படுத்து ஆலைகளில் அடக்கச் செலவு பற்றிய நினைப்பு, செலவைக் கண்காணித்துக் கட்டுப்படுத்த வேண்டுவதின் இன்றியமையாமை முதலியவற்றில் கருத்துச் செலுத்தும் நபர்கள் மிகக் குறைவாக இருந்தனர். சில இடங்களில் தொழில் நுட்ப அறிவு போதுமான அளவுக்குக் கிடைக்க

வில்லை, தேவைப்பட்ட கடன்கள் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதும் ஒரு பிரச்சினையே.

பல பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் தக்க பாதுகாப்புப் பண்டக வசதிகளில்லாததால் உறுப்பினர்களின் விளைபொருளைச் சேகரித்து வைக்க இயலாத நிலையிலிருந்தன. மாநில அரசினரும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுருவும் பலவகைகளில் பக்குவப் படுத்தும் கூட்டுறவுகளுக்கு நிதியுதவி தொழில் நுட்ப உதவி முதலிய அளித்து வருகின்றன. இருப்பினும் இக் கூட்டுறவுகள் தமது சொந்த நிதிநிலையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டுவது மிக அவசியம்.

விவசாய விளைபொருள்களைப் பக்குவப்படுத்தும் தொழிலில் கூட்டுறவு ஆலைகளுக்கு உரிமம் (Licence) வழங்குவதில் முதலிடம் தரப்படவேண்டும். கூட்டுறவு ஆலைகளின் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படும்படியாகக் கொள்கைகளை அரசு வகுக்கக்கூடாது. வேர்க்கடலை, பருத்தி போன்ற பொருள்களின் விலை, விலை ஏற்றத் தாழ்வால் பாதிக்கப்படாமலிருக்கும் பொருட்டு அரசு விலை ஆதரவுத் திட்டம் (Price Support Scheme) ஒன்றை உருவாக்க லாம். பக்குவப்படுத்தும் கூட்டுறவுகளுக்குக் கூட்டுறவுத்துறை வழி கடன் வழங்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். சர்க்கரை ஆலைகள் போன்ற பக்குவப்படுத்தும் கூட்டுறவுகளில் விவசாயிகள் பேரளவு ஈடுபாடு கொள்ள அவர்களது பங்கின் அளவு அவர்கள் பயிரிடும் நில அளவோடு பிணைக்கப்பட வேண்டும். பங்கெடுப்புக்கு ஏற்ற அளவில் விளைபொருளை, உறுப்பினர், ஆலைக்குக் கட்டாயமாக வழங்கவேண்டுமென்ற பிணைப்பு இருத்தல்வேண்டும். உறுப்பினர் விளைபொருள் தரத் திலும் அளவிலும் வளர்ந்துயர பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் பல்வகை வேளாண்மை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நிதிநிலையைத் திடப்படுத்தி முதலாக்கத்தைச் செம்மைப்படுத்த பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் தமது உறுப் பினரிடமிருந்து திருப்பித்தரவேண்டா வளர்ச்சி வைப்பு (Non-refundable development deposits)களை வசூலிக்கவேண்டும். தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுருவின் உதவியுடனும், நாட்டு டைமையாக்கப்பட்டுள்ள பெரும் வாணிக வங்கிகளின் நிதியுதவி யுடனும், மாநில அரசினரின் தீவிரமான ஈடுபாட்டுடனும் பக்குவப்படுத்தும் கூட்டுறவும் மேலும் சிறந்து வளரும் வாய்ப்பு கொண்டுள்ளது.

13. நுகர்வோர் கூட்டுறவு
(Consumers Co-operatives)

அன்றாட வாழ்க்கையில் மக்களுக்குத் தேவைப்படும் பண்டங்களை வழங்க நுகர்வோர் கூட்டுறவுகள் அமைக்கப்படுகின்றன. நயமான விலைக்குத் தரமான பண்டங்களைப்பெற நுகர்வோர் ஒன்று சேர்ந்து அமைக்கும் கூட்டுறவுச் சங்கமே கூட்டுறவுப் பண்டசாலையென்றும் நுகர்வோர் கூட்டுறவென்றும் அழைக்கப்படுகிறது. நுகர்வோர் கூட்டுறவுகள் மொத்த விற்பனை, சில்லறை விற்பனை மேற்கொள்ளுவது மட்டுமல்லாது சிலநேரம் நுகர்வுப் பண்டங்களைத் தயாரித்து, பக்குவப்படுத்துவதுமுண்டு. நுகர்வோர் நலனைப் பாதுகாத்து, வியாபாரிகள் நுகர்வோரைச் சுரண்டுதலைத் தவிர்த்து, விலைவாசியை நிலைபேறுக்கம் பெறச் செய்ய இக் கூட்டுறவுகள் முயலுகின்றன.

நுகர்வோர் பண்டங்களை வழங்கும் வாணிகத்தில் மிகப்பெரும் பங்கு தனி வியாபாரிகளிடம் இன்றும் இருந்து வருகின்றது. இவ் வியாபாரிகள் பல முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. சரக்குகளை முடக்கி, சந்தையில் போலியான பற்றுக் குறை நிலையை ஏற்படுத்தி விலையை மிகப் பெருமளவுக்கு உயர்த்தி விற்பது இவர்களுக்குக் கைவந்த கலை. கலப்படம் செய்தல், பதுக்கல், கள்ளச் சந்தையில் விற்றல், குறைவாக எடைபோடுதல் போன்ற சமூகத் துரோகச் செயல்களிலும் பலர் ஈடுபடுகின்றனர். இத் தீமைகளை அகற்றி நுகர்வோருக்கு நல்ல சேவை செய்வதே கூட்டுறவுப் பண்டசாலைகளின் நோக்கமாகும்.

நுகர்வோர் கூட்டுறவைப்பற்றிப் பேசுகையில் அது துவங்கிய வரலாற்றைக் கூறுவது அவசியமாகிறது. 1844ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள ராக்டேல் (Rochdale) என்னும் கிராமத்தில் 28 கம்பளி நெசவாளர்கள் துவங்கிய சங்கமே நுகர்வோர்

கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னோடியாக அமைந்தது. இச் சங்கத்தை அமைத்த முன்னோடிகள் ஒரு புதிய சமுதாய அமைப்பையே உருவாக்கினர் என்று கூறினால் அது மிகையாகாது. தம்நலனைக் காக்கும் பொருட்டுப் பலர் ஒன்று சேர்ந்து தம்முடைய உழைப்பு, திறமை ஆகியவற்றைப் பொதுநலனுக்காக ஒன்று படுத்திப் பாடுபடுவதே ராக்டேல் சங்கத்தின் குறிக்கோளாக இருந்தது. அச் சங்கத்தினர் கீழ்க்காணும் விதிகளைக் கடைப் பிடித்துத் தம் தொழிலை நடத்தி வந்தனர்.

(i) முதல் தம்முடையதாக இருத்தல்வேண்டும்; அதன்மீது வரையறுக்கப்பட்ட வட்டி தரப்படவேண்டும்.

(ii) உறுப்பினர்களுக்கு மிகவும் தூய்மையான பண்டங்களை வாங்கி வழங்கவேண்டும்.

(iii) முழுமையான எடை, அளவு அளிக்கப்படவேண்டும்.

(iv) கடன் கேட்பது, அளிப்பது கூடாது; சந்தை விலைக்குப் பண்டங்களை விற்கவேண்டும்.

(v) உறுப்பினர் ஒவ்வொருவரும் பண்டங்கள் வாங்கியதைப் பொருத்து இலாப ஈவு பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

(vi) உறுப்பினர்களில் ஆண் பெண் சமமாக மதிக்கப்பட வேண்டும்; நிருவாகத்தில் ஒருவருக்கு ஒருவாக்கு என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படவேண்டும்.

(vii) கால முறைப்படித் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர் களிடம் நிருவாகம் ஒப்படைக்கப்படவேண்டும்.

(viii) இலாபத்தில் அறுதியிட்ட ஒரு விழுக்காடு கல்விக்கு ஒதுக்கப்படவேண்டும்.

(ix) உறுப்பினர்களுக்கு அடிக்கடி அறிக்கைகளும், இருப்பு நிலைக் குறிப்புகளும் வழங்கப்படுதல்வேண்டும்.

ராக்டேல் சங்கம் மிகவும் சிறப்பாகச் செயலாற்றி பிற நாடு களுக்கு ஓர் முன்னோடிச் சங்கமாக விளங்கியது.

இந்தியாவில் நுகர்வோர் கூட்டுறவு

இந்தியாவில் முதன் முதலாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்த பெருமை தமிழ் நாட்டின் தலைநகரான சென்னைக்கே உரித்தாகும். 1904ஆம் ஆண்டுத் திருவல்லிக்கேணி

யில், திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் பெற்றது. இச் சங்கம் ஆசியக் கண்டத்திலேயே முக்கியமான தொரு கூட்டுறவாக இன்றும் செயலாற்றி வருகின்றது. உறுப்பினர்களுக்கு வாழ்க்கைக்கு இன்றியமையாப் பண்டங்களை வழங்குவது இச் சங்கத்தின் நோக்கமாக அமைந்தது. முதலாம் உலகப் போர் துவங்கியதும் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் விரைவாக வளரலாயிற்று. 1914இல் இருந்த 11 கூட்டுறவுப் பண்டசாலைகள் 1920-21இல் 103ஆக வளர்ந்தன. போர்க் காலம் முடிந்து வழக்கமான நிலைமை ஏற்பட்டதும் வளர்ச்சியில் தளர்ச்சி உண்டாகி 1938-39இல் நாடு முழுதுமாக 396 நுகர்வோர் கூட்டுறவுகள் மட்டுமே இருந்தன.

இரண்டாம் உலகப் போர் 1939இல் துவங்கியதும் மீண்டும் நுகர்வோர் கூட்டுறவுகள் பெருகத் துவங்கின. வாழ்க்கைக்குத் தேவையான அன்றாடப் பண்டங்களின் விலை மிகவும் உயர்ந்து சென்றது. பதுக்கலும் கள்ளச் சந்தையும் தலை தூக்கித் தாண்டவமாடின. வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களைச் சீரான முறையில் பங்கிட்டு வழங்கக் கூட்டுறவுகளின் சேவை தேவைப்பட்டது. பல மாநிலங்களில் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பண்டங்களனைத்தும் கூட்டுறவுப் பண்டசாலைகள்வழி மட்டுமே வழங்கப்படுமாறு அரசினர் ஏற்பாடு செய்தனர். இரண்டாம் உலகப் போர் முடிவுறும் நேரம் நாட்டில் 3,539 நுகர்வோர் கூட்டுறவுகள் இருந்தன. போருக்குப் பின்னும் பற்றாக்குறையும், கட்டுப்பாடும் இருந்த நிலையில் மேலும் கூட்டுறவுகள் துவக்கப்பெற்று 1950-51இல் நாட்டில் 9,745 நுகர்வோர் கூட்டுறவுகள் இருந்தன.

கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு வழக்கமான நிலை ஏற்பட ஆரம்பித்ததும் மீண்டும் நுகர்வோர் கூட்டுறவுகள் நலியத் துவங்கின. வெளிச்சந்தையில் நிலவிய போட்டியைக் கூட்டுறவுப் பண்டசாலைகள் சமாளிக்க முடியவில்லை. கட்டுப்பாட்டையும். பங்கீட்டு முறையையும் நம்பி வளர்ந்த 'போர்க் குழந்தைகள்' (War babies) என்றழைக்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவுகள் தேய்ந்து 1960-61இல் 7,058 சங்கங்கள் மட்டுமே காணப் பட்டன. இவற்றில் பெரும்பான்மையானவை செயலற்றுக் கிடந்தன. புள்ளிவிவரங்கள்படி 2,722 சங்கங்களே ஏதோ ஓரளவு இலாபத்தில் செயல்பட்டு வந்தன.

அட்டவணை

பிரதம நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலைகள் 1938-39 முதல் 1958-59 வரை வளர்ச்சி

	1938-39	1949-50	1951-52	1955-56	1958-59
சங்கங்களின் எண்ணிக்கை	396	3,949	9,757	7,359	6,857
உறுப்பினர் (ரூ. இலட்சத்தில்)	0·43	21·55	15·46	14·14	13·76
சொந்த நிதி (ரூ. இலட்சத்தில்)	2·47	449·46	552·70	490·00	504·67
விற்பனை (ரூ. இலட்சத்தில்)	57·15	7,045·41	8,215·69	1,448·00	2,708·65
இலாபம் (ரூ. இலட்சத்தில்)	...	101·00	80·87	29·00	49·84
நட்டம் (ரூ. இலட்சத்தில்)	...	20·70	87·64	40·00	40·78

பொதுவாக, நுகர்வோர் கூட்டுறவுகள் சீராக வளராததற்குக் கீழ்க்கண்ட காரணங்களைக் கூறலாம் :

(1) அமைப்பு நலிவுற்றதாக இருந்தது.

(2) தன்னைக் கட்டி வராத சிறு அளவு.

(3) கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பண்டங்களை நம்பியே தொழில் நடத்துதல்.

(4) மிகுதியான மேஞ்செலவும், நிதி பற்றாக்குறையும்.

(5) நிருவாகக் குழுவினருக்குத் தொழில் பற்றிய நுண்ணறிவும் நுட்பமும் தெரியாத நிலை.

(6) உறுப்பினர் தமது பண்டசாலையைத் தொடர்ந்து ஆதரிக்காத நிலை.

(7) பயிற்சியும் அனுபவமும் இல்லாத ஊழியர்.

(8) கணக்கு வைத்தலில் முறைகேடுகள்.

(9) தக்க மேற்பார்வை இல்லாமை; தலைவர்கள் கிடைப்பருமை.

(10) தனியார் வியாபாரிகளிடமிருந்து கடும் போட்டி.

(11) இலாப இடைவெளி மிகச் சிறியதாக அமைவது.

(12) பெருமளவு கொள்முதல் செய்ய மைய முகமை ஒன்று இல்லாத நிலை.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் நகர்ப்புறங்களில் நுகர்வோர் கூட்டுறவுகளுக்குச் சிறப்பான முக்கியத்துவம் தரப்பட வேண்டுமென ஏற்றுக்கொண்டது. இரண்டாம் திட்டத்தில் இக் கொள்கை மேலும் வலியுறுத்தப்பட்டு, உற்பத்தியாளர் கூட்டுறவுகளுக்கும் நுகர்வோர் கூட்டுறவுகளுக்கும் நெருங்கிய பிணைப்பு இருக்க வேண்டுவதும் குறிப்பிடப்பட்டது. நகர்ப்புறங்களில் சீரான முறையில் நுகர்வோர் கூட்டுறவுகள் பரவியிருப்பது கிராமப்புற நுகர்வோர் கூட்டுறவுகளுக்கும் ஒரு வலுவளிக்கும் ஆதாரமாக இருக்குமென்று கருதப்பட்டது.

1960ஆம் ஆண்டில் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி, பண்டக வாரியம் டாக்டர் பி. நடேசன் அவர்கள் தலைமையில் நுகர்வோர் கூட்டுறவின் அன்றைய நிலையை ஆராய்ந்து அவற்றின் விரைவான வளர்ச்சிக்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்குமாறு வேண்டிக் குழுவொன்றினை அமைத்தது. இக் குழு மே 1961இல் தமது அறிக்கையை அளித்தது. இதன் முக்கிய பரிந்துரைகளில் சிலவற்றைக் காண்போம்:

(i) தற்போது இருந்து வரும், இனி துவக்கப்பெறும் பிரதம பண்டசாலைச் சங்கங்கள் தன்னிறைவு பெற்ற வளமார்ந்த சங்கங்களாக இருக்கவேண்டும். ஒரு சங்கத்துக்குக் குறைந்தது ரூ. 5,000 பங்கு முதல், 250 உறுப்பினர்கள், ரூ. ஓர் இலட்சம் விற்பனை அவசியம் இருத்தல்வேண்டும். மாவட்ட அல்லது மண்டல மட்டத்திலுள்ள மொத்த விற்பனைச் சங்கம் குறைந்தது ரூ. 50,000 பங்கு முதல், ரூ. 2 இலட்சம் நடைமுறை முதல், உறுப்பினர்களாக 100 பிரதம சங்கங்கள், ஆண்டொன்றுக்கு ரூ. 12 இலட்சம் விற்பனை கொண்டிருக்க வேண்டும்.

(ii) மேற்கூறிய பாங்கில் அமைந்த பண்டசாலைக்கு அரசு பிரதம பண்டசாலையாயின் ரூ. 2,500, மொத்த விற்பனைப் பண்டசாலையாயின் ரூ. 50,000 வரை பங்கு முதல் வழங்கலாம். மொத்த விற்பனைச் சங்கத்திற்கு ரூ 50,000 வரை கிட்டங்கி கட்டிக் கொள்ளக் கடன் வழங்கலாம். பிரதமச் சங்கங்களுக்கு 3 முதல் 5 ஆண்டுகளுக்கு நிருவாகச் செலவுகளைச் சமாளிக்க ரூ. 1,800 உதவித்தொகை வழங்கலாம்.

(iii) கூட்டுறவு வங்கிகள் பண்டசாலைச் சங்கங்களுக்கு அவற்றின் சொந்தநிதியைப் போன்று இருமடங்குவரை ரொக்கக் கடன் அளிக்கலாம். இதனால் ஏற்படக்கூடிய நட்டத்தை மத்திய அரசு, மாநில அரசு, மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியன முறையே 50:40:10 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளலாம்.

(iv) இச் சங்கங்களுக்கு வருமான வரிச்சலுகைகள் அளிக்கப் படலாம்.

(v) நலிவுற்றிருக்கும் பண்டசாலைகளை வலிவானவற்றுடன் இணைத்து அவற்றை வளமார்ந்த சங்கங்களாக ஆக்கவேண்டும்.

(vi) தேசிய அளவில் கூட்டுறவுப் பண்டசாலைகளின் கூட்டிணைப்பு ஏற்படுத்தப்படவேண்டும். இக் கூட்டிணைப்பு நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிய திட்டங்கள் வகுப் பதில் அரசினருக்கு ஆலோசனை கூறலாம்; இயக்கத்திலுள்ள பிரச்சினைகளைக் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளலாம்.

(vii) நிதிவசதி இடங்கொடுத்தால் நுகர்வோர் கூட்டுறவுகள் எளிய பக்குவப்படுத்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

மத்திய அரசு மேற்கண்ட பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது. இத்தருணத்தில் சீனப் படையெடுப்பு நாட்டில் பெரியதொரு நெருக்கடியை உண்டாக்கிற்று. இதையொட்டி விலைவாசிகளின் ஏற்றத்தைத் தடுக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. நுகர்வோர் சங்கங்களை அமைத்து இன்றியமை யாப் பண்டங்களை அவற்றின்வழி வழங்குவது என்று அரசு முடிவு செய்தது. இந்த முடிவைச் செயல்படுத்த பல திட்டங்கள் வகுக் கப்பட்டன. அரசு வரைந்த இத் திட்டத்தில் (i) மாநகரங்களி லும் நகரங்களிலுமுள்ள பொதுமக்கள் (ii) தொழிலாளிகள், பொதுத் துறை தனியார் துறை நிறுவன ஊழியர்கள் (iii) அரசு ஊழியர்கள் (iv) கிராம மக்கள் ஆகியோருக்கு இன்றியமையாப் பொருள்களை வழங்கக் கூட்டுறவுப் பண்டசாலைகள் அமைக்கப்பட வழி செய்யப்பட்டது.

நகர்ப்புறங்களிலுள்ள பொதுமக்களுக்கான திட்டப்படி, 50,000 மக்கள் தொகைக்கு மேலுள்ள 200 நகரங்களில் மொத்த விற்பனைப் பண்டசாலை அமைக்கப்படும். ஒவ்வொரு மொத்த விற்பனைப் பண்டசாலைக்கும் சராசரி 20 பிரதம பண்டசாலைகள் இணைக்கப்படும். தமது ஆட்சி எல்லையில் 10 முதல் 20 கிளைகள் வரை மொத்த விற்பனைச் சங்கங்கள் விரும்பினால் திறக்கலாம். பிரதம சங்கமோ கிளையோ துவங்க குறைந்தது 100 உறுப்பினர்கள் தேவை. தற்போது செயல்பட்டு வரும் அத்தனைப் பிரதம சங்கங் களும் மொத்த விற்பனைச் சங்கங்களின் ஆட்சி எல்லைக்குள் கொண்டுவரப்படும். மொத்த விற்பனைச் சங்கம் ஒவ்வொன்றிற் கும் கீழ்க்காணும் நிதிவசதிகள் அளிக்கப்படும் :

(i) பங்கு முதல் ரூ. 1 இலட்சம்வரை எதிர்நோக்கு அடிப்படையில் (matching basis);

(ii) மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ரூ. 2 இலட்சம்வரை பிணையில்லாக் கடன்;

(iii) கிட்டங்கி கட்ட, டிரக் (Truck), பிற தளவாடங்கள் வாங்கக் கடன், மானியம் ரூ. 1 இலட்சம்வரை;

(iv) மூன்று முதல் ஐந்தாண்டுகளுக்கு நிருவாகச் செலவு, வாடகை உதவித்தொகை ரூ 10,000 வரை.

பிரதம சங்கங்களுக்கு எதிர்நோக்கு அடிப்படையில் ரூ. 2,500 வரை பங்கு முதலும், மூன்று முதல் ஐந்தாண்டுகளுக்கு நிருவாகச் செலவு, வாடகைக்கு ரூ. 2,000 வரை உதவித்தொகையும் வழங்கப்படும். இத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு மாநில அரசுகளுக்கு நிதியளிக்கும். நிருவாகத்தைக் கவனிக்க ஒரு கூட்டுப்பதிவாளர் அவருக்கு வேண்டிய பணியாளர்களை நியமிக்க இத் திட்டத்தின்படி மத்திய அரசு பண உதவி வழங்கியது.

தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் குறைந்தது 250 தொழிலாளிகள் பணியாற்றிவந்த நிறுவனங்களில் கூட்டுறவு நுகர்வோர் பண்டசாலை அமைக்க மத்திய அரசின் தொழிலாளர்-வேலைவாய்ப்பு அமைச்சகம் ஒரு திட்டத்தை உருவாக்கியது. இப் பண்டசாலைகளுக்கு, பங்கு முதல் ரூ. 2,500, நடைமுறை முதலுக்காகக் கடன் ரூ. 10,000, மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கு நிருவாக உதவித்தொகை ரூ. 1,800 ஆகியவற்றைப் பணியாண்மையர் (Employer) அளித்து உதவும்படிக் கேட்டுக்கொள்ளப் பட்டனர்.

அரசு ஊழியருக்கென..டெல்லியில் ஒரு மொத்த விற்பனை கூட்டுறவுப் பண்டசாலை மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டது. இப் பண்டசாலையின் கிளைகளும், இதனுடன் இணைந்த பிரதம பண்டசாலைகளும் டெல்லியின் அரசு ஊழியர் குடியிருப்பு அமைந்துள்ள இடங்களில் செயல்பட்டு வந்தன.

கிராமப்புறங்களில் நுகர்வோர் கூட்டுறவு

கிராமப்புறங்களில் நுகர்வுப் பண்டங்களை வழங்கும் பணி கிராமக் கூட்டுறவுக் சங்கங்களுக்கும் சந்தையிடுகைச் சங்கங்களுக்கும் இடப்பட்டது. சர்க்கரை, உப்பு, மண்ணெண்ணெய், தேயிலை, வனஸ்பதி, தீப்பெட்டி, மோட்டாரகத் துணி (Coarse

varieties of cloth) முதலிய இன்றியமையாப் பண்டங்களை கிராமச் சங்கங்கள் வழங்கின. கிராமச் சங்கங்களுக்கு இப் பண்டங்களைக் கொள்முதல் செய்து அளிக்கவும் மேலும் பல பண்டங்களைத் தமது விற்பனை நிலையங்கள்வழி வழங்கவும் சந்தையிடுகைச் சங்கங்கள் பொறுப்பேற்றன. மத்திய அரசு கொண்டுவந்த இத் திட்டம் தற்போது மாநிலத் திட்டமாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு (National Co-operative Development Corporation) மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்று வதில் முக்கியமானதொரு பங்கு ஏற்றுள்ளது. 1968-69-க்கு முன் இக் கூட்டுரு, மத்திய அரசு கொண்டுவந்த திட்டப்படி, நுகர்வோர் பண்டங்களை வழங்கும் பிரதமச் சந்தையிடுகைச் சங்கங்களுக்கு நிருவாக உதவித்தொகை படிப்படியாகக் குறைந்து போகும் முறைப்படி (tapering basis) ரூ. 5,000 வரை தருவதற்கு மாநில அரசுகளுக்கு நிதியுதவி அளித்து வந்தது. 1968-69இல் இத் திட்டம் விரிவாக்கப்பட்டதன் பயனாக, நுகர்வுப் பண்டங்களை வழங்கும் பொறுக்கியெடுத்த சில சந்தையிடுகைச் சங்கங்கள் மேலும் மிகுதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ. 10,000 கூடுதல் பங்குமுதல் அளிக்கப்பட்டது. 1969-70இல் இத் திட்டம் மாநிலத்துறைக்கு மாற்றப்பட்டதிலிருந்து கூட்டுரு மொத்தக் கடன், மானியங்களுடன் சேர்த்து இதற்கும் உதவி யளித்து வருகிறது.

கிராமப்புறங்களில் விவசாயக் கடன் சங்கங்களும், சந்தை யிடுகைச் சங்கங்களும் எந்த அளவுக்கு நுகர்வுப் பண்டங்களை விற்றன என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்கும்.

அட்டவணை

கிராமப்புறங்களில் நுகர்வோர் பண்டங்கள் வழங்கல் ரூ. கோடியில்

ஆண்டு	விற்பனை செய்த நுகர்வுப் பண்டங்கள் மதிப்பு	விற்பனையில் ஈடுபட்டிருந்த சங்கங்களின் எண்ணிக்கை	
		சந்தையிடுகைச் சங்கங்கள்	கிராமச் சங்கங்கள்
1962—63	28·41	689	14,709
1963—64	77·81	1189	27,187
1964—65	103·31	1233	32,135
1965—66	198·07	1715	34,485
1966—67	245·33	1835	35,625
1967—68	262·52	1891	41,454
1968—69	242·75	1681	34,303
1969—70	225·69	1599	32,888

1970-71இல் 34,000 கிராமச் சங்கங்களும், 1,600 சந்தை யிடுகைச் சங்கங்களும் சேர்ந்து ரூ. 154·42 கோடி மதிப்புள்ள நுகர்வுப் பண்டங்களை வழங்கின. இங்ஙனம் விற்பனை செய்த பண்டங்கள் அளவு சரிந்துவிடக் காரணம் உணவு தானியங்கள், சர்க்கரை முதலியவைமீதிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டதும், பொதுவாக நுகர்வுப் பண்டங்கள் கிராமப்புறங்களில் எளிதாகக் கிடைத்ததும்தான்.

நாட்டிலுள்ள பல மாநிலங்களில் அரசினர் நியாய விலைக்கடை (Fair Price Shop)கள் நிறுவியுள்ளனர். ஏறத்தாழ ஓர் இலட்சம் நியாயவிலைக் கடைகளில் 41,000 கடைகள் கிராமப்புறங்களில் கிராமச் சங்கங்களாலும் சந்தை யிடுகைச் சங்கங்களாலும் நடத்தப்பட்டு வந்தன. ஹரியாஞ மாநிலத்தில் நியாயவிலைக் கடைகள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வந்தன. மைசூரில் 80%, ஒரிசா, குஜராத், கேரளம், மகாராட்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங் களில் 50% நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுகளுக்கு ஒதுக்கப் பட்டன.

நுகர்வோர் சங்கங்களின் அமைப்பு

நுகர்வோர் சங்கங்களின் அமைப்பு நாடெங்கிலும் ஒரே வகையினதாகக் காணப்படவில்லை. சில மாநிலங்களில் ஒற்றை யமைப்பு (Unitary) முறையும் மற்றும் சிலவற்றில் கூட்டிணைப்பு முறையும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. ஒற்றையமைப்பு முறை யில் மத்தியச் சங்கம் தனது கிளைகள்வழி செயலாற்றும். தனி நபர்கள் மத்தியச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தமது தேவைகளை அதன் கிளைகள்வழி பெறுவர். பேரளவு நடவடிக்கை களில் ஏற்படும் சிக்கனங்களனைத்தும் ஒற்றையமைப்பு முறையில் பெறப்படுகின்றன. ஒரே வகையான வாங்கல், விற்றல் கொள்கை, விலையிடல், ஊழியர் ஏற்பாடு முதலிய இவ்வமைப்பில் காணலாம். இந்த அமைப்பு முறையே மிகவும் உகந்தது என மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு (1969) கருதியது.

கூட்டிணைப்பு முறை கடைப்பிடிக்கப்படும் மாநிலங்களில், அடித்தளத்தில் பிரதம பண்டசாலைகளும் இரண்டாம் நிலையில் மொத்த விற்பனை பண்டசாலைகளும் காணப்படுகின்றன. உச்சியில் மாநில அமைப்புகளும் நிறுவப்பட்டுள்ளன. நடை முறையில் இரண்டாம் நிலையிலுள்ள கூட்டுறவுகளும், உச்சியில் உள்ள கூட்டுறவுகளும் பிரதம சங்கங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவை வளரப் பாடுபடுவதைக் காண்பது மிக அரிது.

தமிழ்நாடு, மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் ஒற்றை யமைப்பு முறையும், கூட்டிணைப்பு முறையுங்கலந்த ஒருமுறை காணப்படுகிறது. ஆந்திரம், ஹரியானு, பஞ்சாப் மாநிலங்களில் ஒற்றையமைப்பு முறையும், குஜராத், மத்தியப் பிரதேசம், மைசூர், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், ஒரிசா, பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் கூட்டிணைப்பு முறையும் காணப் படுகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் வெற்றிகரமாகச் செயல் பட அவற்றின் அளவு மிகவும் உகந்ததாக இருப்பது அவசியம். இந்தியாவில் நுகர்வோர் கூட்டுறவுகள் சிறப்பாக வளராமைக்கு ஒரு காரணம் அவற்றின் சிறிய அளவாகும்.

நுகர்வோர் கூட்டுறவு அமைப்பில் இருந்துவந்த மற்ருேர் குறைபாடு மொத்த விற்பனை, கொள்முதல் செய்ய இயக்கத்தி னுள் தக்க ஏற்பாடு இல்லாதிருந்ததாகும். மத்திய அரசு அளித்த திட்டத்தில், சில்லறை விற்பனைக் கூட்டுறவுகளை மாநில அளவில் இணைக்க மாநிலக் கூட்டிணைப்பும், மாநிலக் கூட்டிணைப்புகளின் கூட்டிணைப்பாகத் தேசியக் கூட்டிணைப்பும் நிறுவப்பெற ஏற்பா டிருந்தது. நுகர்வோர் பண்டங்களைக் கொள்முதல் செய்து சில்லறை விற்பனைக் கூட்டுறவுகளுக்கு வழங்கும் பணியினை இக் கூட்டிணைப்புகள் மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்பட்டது. இந்திய அரசு மாநிலக் கூட்டிணைப்புகளுக்கும், தேசியக் கூட்டிணைப் புக்கும் பங்கு முதல் வழங்கியும், நிருவாகச் செலவுகளுக்கு உதவித் தொகை வழங்கியும் உதவியளித்தது.

சீனப் படையெடுப்பிற்குப்பின், இந்தியாவில் 1965இல் பாகிஸ்தானின் எல்லை ஆக்கிரமிப்பும் அதைத் தொடர்ந்து நெருக்கடி நிலையும் ஏற்பட்டது. 1966இல் ரூபா நாணயத்தின் வெளிமதிப்புக் குறைக்கப்பட்டது. முன்னரே இருந்துவந்த பற்ருக் குறை நிலையும், விலைவாசி உயர்வும் மேலும் தீவிரமடைந்தன. இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு நுகர்வோர் கூட்டுறவுத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முடிவு செய்தது. சற்றுமுன் கண்ட திட்டங்களுடன்கூட, பெரிய நகரங்களில் பல பிரிவுப் பண்டசாலை (Department Store) என்று அறியப்படும் சிறப்பங்காடி (Super market)களை நிறுவ பெரியதொரு திட்டம் தீட்டினர்.

சிறப்பங்காடி (Super market)

கூட்டுறவுச் சிறப்பங்காடிப் பல மாநிலங்களில் சூப்பர் பஜார் (Super bazar) என்று அழைக்கப்படுகின்றன. உண்மையில் இவை பலபிரிவுப் பண்டசாலைகளாகும். டெல்லியில் 1966 ஜூலை 15ஆம்

நாள் மாபெரும் சிறப்பங்காடித் துவக்கப்பெற்றது. இரண்டு இலட்சமும் அதற்கு மேலுமுள்ள மக்கள் தொகையுள்ள எல்லாப் பெரு நகரங்களிலும் மொத்தம் 50 பலபிரிவுப் பண்டசாலைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டது. மத்திய அரசு இப் பண்ட சாலைகளை அமைக்கத் தாராளமாக நிதியுதவி வழங்கியது. இத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த ரூ. 10 கோடி ஒதுக்கப் பட்டது.

மிகக் குறுகிய காலத்தில், நெருக்கடி நிலையைச் சமாளிக்க, கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் நிறுவப்பெற வேண்டியிருந்ததால் நன்கு திட்டமிட்டு அவற்றை அமைக்க நேரமில்லாது போயிற்று. இருப்பினும், பல சிறப்பங்காடிகள் நன்கு செயலாற்றி, தாம் அமைந்துள்ள ஊர்களில் நுகர்வுப் பண்டங்களின் விலை கட்டுப் பாட்டுக்குள் இருக்கும்படிச் செய்தன.

1963 முதல் 1968வரை இந்தியாவில் அமைக்கப்பட்டது போன்று மிகப் பெருமளவுக்கு நுகர்வோர் கூட்டுறவுகள் உலகில் எந்த நாட்டிலும், எந்தச் சூழ்நிலையிலும் அமைக்கப்பட்டதாக வரலாறு இல்லை. 1962-63 முதல் 1968-69 இந்திய அரசு நுகர்வோர் கூட்டுறவுகள் வளர்ச்சிக்கென மாநில அரசுகளுக்கு அளித்த நிதியுதவி ரூ. 23 கோடியாகும்.

அண்மைக்கால வளர்ச்சி

1962ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பயனாக நாடெங்கிலும் நல்லதொரு நுகர்வோர் கூட்டுறவு அமைப்பு உருவாகியுள்ளது. மக்கள் தொகை 50,000-க்கு மேலுள்ள எல்லா மாவட்டங்களிலும் மத்திய/மொத்த விற்பனை நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலை அமைக்கப்பட்டுள்ளது. ஜூன் 1972 இறுதியில் 12,924 பிரதம நுகர்வோர் கூட்டுறவுகளும், 389 மத்திய/மொத்த விற்பனை நுகர்வோர் கூட்டுறவுகளும், 14 மாநிலக் கூட்டிணைப்புகளும், ஒரு தேசீயக் கூட்டுறவு நுகர்வோர் கூட் டிணைப்பும் இருந்தன. மத்திய/மொத்த விற்பனை பண்டசாலை களுடன் 7,000 பிரதம நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும், 11,000 பிற கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்திருந்தன. மத்திய/ மொத்த விற்பனைச் சங்கங்கள் 2,000 கிளைகளை நிறுவியிருந்தன; 106 பலபிரிவுப் பண்டசாலை (சிறப்பங்காடி)களை நடத்தி வந்தன. நுகர்வோர் கூட்டுறவுகளனைத்தும் சேர்ந்து 1971-72இல் ரூ. 250 கோடி அளவுக்கு விற்பனை செய்திருந்தன.

தொழிலாளர், வேலைவாய்ப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்த திட்டத்தின்படி 300 ஆட்களுக்குமேல் வேலை செய்யும் தொழில்,

சுரங்க நிறுவனங்கள், 1972 ஜூன் முடியும்வரை 4,441 பிரதம நுகர்வோர் கூட்டுறவுகளை அமைத்திருந்தன. இவற்றில் 19·65 இலட்சம் உறுப்பினர்களிருந்தனர். இவற்றின் செலுத்திய பங்கு முதல் ரூ. 218·36 இலட்சமாகவும், 1971-72 ஆண்டு விற்பனை ரூ. 79·54 கோடியாகவும் இருந்தது. இரயில்வே ஊழியர்களுக்காக 436 நுகர்வோர் கூட்டுறவுகள் அமைக்கப்பெற்றிருந்தன. இவற்றில் 2·04 இலட்சம் உறுப்பினர் இருந்தனர். இவற்றின் செலுத்திய பங்கு முதல் ரூ. 35 இலட்சமாகவும், 1971-72இல் மொத்த விற்பனை ரூ. 8 கோடியாகவுமிருந்தது.

பிரதம சங்கங்களின் வளர்ச்சி

நுகர்வோருக்குப் பண்டங்களை நேரடியாக விற்கும் பணியில் ஈடுபடுவன பிரதம நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலைகள். சில சங்கங்கள் சிறு பக்குவப்படுத்தும் பணிகளையும் மேற்கொண்டுள்ளன. வாழ்க்கைக்கு இன்றியமையா அன்றாடப் பொருள்களை மட்டுமே சில சங்கங்கள் விற்கின்றன. பிரதம சங்கங்கள் நுகர்வோர் பொருள்களைத் தனியார்துறை மொத்த விற்பனையரிடம் வாங்கித் தம் உறுப்பினர்களுக்கும், உறுப்பினரல்லாதாருக்கும் விற்கின்றனர். அண்மையில் அரசு, நுகர்வோர் பண்டங்கள் சிலவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்களை, அவற்றின் உற்பத்தியில் ஒரு விகிதத்தை நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு விற்க ஒதுக்குமாறு ஆணையிட்டுள்ளது. பல மாநிலங்களில் பிரதம சங்கங்கள் நியாயவிலைக் கடைகளாக ஏற்கப்பட்டுள்ளன. பற்றாக் குறைப் பண்டங்கள், பங்கீட்டின்படி வழங்கப்படும் பண்டங்கள் ஆகியவற்றை மாநில நுகர்வோர் கூட்டிணைப்புகள் பிரதம கூட்டுறவுகள்வழி வழங்குகின்றன. பங்கீட்டுப் பண்டங்கள்மீது இக் கூட்டுறவுகளுக்குக் கிடைக்கும் இலாப இடைவெளி மிகக் குறைவே. பெரும்பாலும் ரொக்கத்திற்கே விற்பனை செய்யும் இக் கூட்டுறவுகள், சில நேரம் துணைவிதிகளில் கண்டுள்ளவாறு கடன் பேரில் விற்பனை செய்வதுமுண்டு. 1970-71இல் பிரதம கூட்டுறவு நுகர்வோர் பண்டசாலைகள் இருந்த நிலையைக் கீழே காணலாம்.

(i)	பிரதம சங்கங்களின் எண்ணிக்கை	13,156
(ii)	செயலற்றிருந்த சங்கங்கள்	4,098
(iii)	பிரதம சங்கங்களின் கிளைகள்-எண்ணிக்கை	2,104
(iv)	தனிநபர் உறுப்பினர்கள்-எண்ணிக்கை	34,06,728
(v)	உறுப்பினர் சங்கங்கள்-எண்ணிக்கை	6,889

(vi)	நடைமுறை முதல் (ரூ. கோடியில்)	37.62
(vii)	செலுத்திய முதல் (ரூ. கோடியில்)	1·64
	(அ) அரசினர்	6·88
	(ஆ) தனிநபர்கள்	0·31
	(இ) பிற	
(viii)	காப்புநிதி, பிற நிதிகள் (ரூ. கோடியில்)	6·80
(ix)	வைப்புகள் (ரூ. கோடியில்)	2·12
(x)	மொத்த விற்பனை (ரூ. கோடியில்)	145·16
(xi)	இலாபத்தில் நடந்த சங்கங்கள்—எண்ணிக்கை	4,695
(xii)	இலாப நட்டமின்றி நடந்தவை—எண்ணிக்கை	4,360
(xiii)	நட்டத்தில் நடந்து வந்தவை—எண்ணிக்கை	4,101

செயலற்ற, நலிந்து கிடந்த சங்கங்களைக் கலைத்துவிட்டதன் பயனாக 1971-72இல் பிரதம சங்கங்களின் எண்ணிக்கை 12,924 ஆகக் குறைந்தது. இவற்றின் மொத்த விற்பனை ரூ. 150 கோடியாக மதிப்பிடப்பட்டது. கட்டுப்பாட்டுக்குட்பட்ட துணி, கொள்முதல் சர்க்கரை, உணவு தானியங்கள் முதலியன கூட்டுறவுகள்வழி விற்கத் திட்டமிட்டுள்ளபடியால் 1972-73இல் விற்பனையளவு மேலும் உயரும்.

சிறப்பங்காடிகள் வளர்ச்சி

ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள பெரும்பான்மையான நகரங்களில் சிறப்பங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன. 1972 ஜூன் இறுதியில் 106 சிறப்பங்காடிகள் இயங்கி வந்தன. இவ்வகை அங்காடிகளைத் திறக்கத் தக்க இடம் கிடைப்பது அரிதாயுள்ளது. சில இடங்களில் மத்திய/மொத்த விற்பனை பண்டசாலையின் நிதிநிலை நலிந்துள்ளது.

மளிகைச்சாமான்கள், அழகு சாதனங்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்கள், மருந்து, துணி, மின்சாதனங்கள், காய்கறி, தோல் பொருள்கள் போன்ற பலப்பல பிரிவுகள் சிறப்பங்காடிகளில் காணப்படுகின்றன. சில சிறப்பங்காடிகளில் சலவை, தையல், பழுதுபார்த்தல் வசதிகளுமுண்டு. இரவும் பகலும் திறந்திருக்கும் மருந்து பிரிவு சில சிறப்பங்காடிகளில் இயங்கி வருகின்றன. சிறப்பங்காடிகள் துவங்கப்பெற்றது முதல் 1971-72 வரை வளர்ந்து வந்த வண்ணத்தைக் கீழே காணலாம்.

அட்டவணை

சிறப்பங்காடிகளின் முன்னேற்றம்

ஆண்டு	எண்ணிக்கை	மொத்த விற்பனை (ரூ. இலட்சத்தில்)	ஓர் அங்காடியில் சராசரி விற்பனை (ரூ. இலட்சத்தில்)
1966—67	38	1172	31
1967—68	60	2255	37
1968—69	80	2600	32
1969—70	101	3100	31
1970—71	107	3300	30·8
1971—72	106	3,500	33·02

கவர்ச்சியான அமைப்பு, கண்ணைக் கவரும் வகையில் பொருள்களை அடுக்கி வைத்திருக்கும் பாங்கு, கஞ்சர் விலை போன்ற விற்பனை நுட்பங்களைக் கையாண்டு இச் சிறப்பங்காடிகள் சில்லறை விற்பனைத் துறையில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியிருக்கின்றன. வியாபாரத் துறையில் காணப்படும் கலப்படம், எடைகுறை, போலிச் சரக்கு, வரி ஏய்ப்பு, பதுக்கல் போன்ற தீமைகளை அகற்றி நேர்மையானதொரு நெறியினைக் கடைப்பிடிப்பதில் சிறப்பங்காடிகள் வழிகாட்டிகளாகச் சந்தையில் விளங்குவது குறிப்பிடத்தக்கது. சில கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மிக்க சிறப்புடன் செயல்பட்டுவருகின்றன. எடுத்துக்காட்டாக, கோயம்புத்தூரில் உள்ள 'சிந்தாமணி' சிறப்பங்காடி பாரதத்தில் மிகச் சிறப்பான சிறப்பங்காடியென விளங்கி வருகிறது. பல புதிய விற்பனை முறைகளைக் கையாண்டு, மக்களின் ஆதரவைப் பெருமளவில் பெற்றுச் சிறப்பங்காடிகளின் வரலாற்றில் சிந்தாமணி புதியதொரு சகாப்தத்தைத் துவங்கியிருக்கிறதென்றால் அது மிகையாது. 1972 ஜூன் இறுதியில் இச் சிறப்பங்காடி 30,716 உறுப்பினர்களையும் ரூ. 3,16,230 பங்கு முதலையும் கொண்டிருந்தது. இச் சிறப்பங்காடியில் பத்தொன்பது பிரிவுகள் இருந்தன. 1971-72இல் ரூ. 5·60 கோடி அளவுக்கு இச் சிறப்பங்காடி மொத்த விற்பனை செய்தது. வாடிக்கையருக்கு வசதி செய்யும்பொருட்டுச் 'சிந்தாமணி' பேருந்து ஒன்று ஏற்பாடு செய்து கோயம்புத்தூரிலிருந்து 20 கல் தொலைவிலுள்ள ஊர்களிலிருந்து இலவசமாக அவர்களைச் சிறப்பங்காடிக்கு அழைத்து வந்து பின்னர் மீண்டும் கொண்டு சேர்த்துவிடுகிறது. விற்பனையில் உறுப்பினர்களுக்கு 2% தள்ளுபடி தரப்படுகிறது; மாத இறுதியில் 20 முதல் 28ஆம் தேதிவரை பொருள் வாங்குவோருக்கு 3% தள்ளுபடி தரப்படுகிறது. விற்பனையாகும் பொருள்கள் நன்கு கட்டப்பட்டு, தூய்மையாக இருப்பதாலும், எடை சரியாக

வும் விலை நயமாகவும் இருப்பதாலும் மக்கள் தொடர்ந்து தமது பேராதரவை நல்கிய வண்ணமுள்ளனர். சந்தை விலையைவிடச் சிறிது குறைவான விலைக்கே பண்டங்கள் விற்கப்படுகின்றன. இதன் காரணமாகத் தனி வியாபாரிகளும் சுத்தப்படுத்தி, நன்கு கட்டிய பண்டங்களைச் சீரான எடையுடன் விலையையும் அதன்மீது குறித்து விற்கத் துவங்கியுள்ளனர். 1972 ஜூலையில் திருச்சிராப் பள்ளியிலுள்ள சிறப்பங்காடி, சிந்தாமணியின் நிருவாகத்தினரால் எடுத்துக்கொள்ளப்பட்டுச் சிந்தாமணி என்ற பெயருடன் நடத்தப் பட்டு வருகிறது. கோவை நகரிலேயே நான்கு கிளைகளும், கோவை மாவட்டத்தில் வேறு சில நகரங்களில் மூன்று கிளைகளும் சிந்தாமணி கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தனைச் சிறப்புடன் சிந்தாமணி செயல்பட்டு வந்தாலும், நாட்டில் பொதுவாகக் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் இலாபகரமாகச் செயல் படவில்லை. இதற்குப் பல காரணங்களுண்டு:

(i) நிருவாகச் செலவுகளும், மேற் செலவுகளும் மிகுதியாக இருக்கின்றன.

(ii) பணியாளர்கள் சிறப்பங்காடிகளிலிருந்து பண்டங்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்வதுமுண்டு.

(iii) பல சிறப்பங்காடிகள் மிகவும் உயர்ந்த வாடகை கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளன.

(iv) பண்டங்களைக் கொள்முதல் செய்வதில் முறையான கொள்கை கடைப்பிடிக்கப்படுவதில்லை.

(v) விலையிடல் கொள்கை (Pricing Policy) சரியான முறையில் வகுக்கப்படவேண்டும்.

(vi) சரக்கு இருப்புச் சரியான முறையில் கட்டுப்படுத்தப் படுவதில்லை.

(vii) விற்பனையாளர்களுக்கு நல்ல விற்பனைத் திறம் இருப்ப தில்லை.

மொத்த விற்பனை/மத்திய பண்டசாலைகள்

மக்கள் தொகை 50,000-க்கு மேலுள்ள மாவட்டங்கள் பெரும் பாலானவற்றில் மொத்த விற்பனை/மத்தியக் கூட்டுறவு நுகர்வோர் பண்டசாலைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இவற்றிற்குக் கிளைகளும் உள்ளன. இக் கூட்டுறவுகள் மத்திய அரசு அளித்த திட்டங்களின்படி அமைக்கப்பட்டன. 1967-68 முதல் 1971-72 வரை இவை வளர்ந்த பாங்கினைக் காண்போம்.

அட்டவணை

மொத்த விற்பனை/மத்திய நுகர்வோர் கூட்டுறவுகளின் வளர்ச்சி

ஆண்டு இறுதியி விருந்த நிலை	1967-68	1968-69	1969-70	1970-71 திருத்தப் பட்டது	1971-72 திருத்தற் குரியது
பண்டசாலைகள் எண்ணிக்கை	385	387	400	383	389
உறுப்பினர் நிலை					
(அ) தனிநபர் (இலட்சத்தில்)	7·71	8·31	8·72	9·93	10·12
(ஆ) சங்கங்கள் (எண்.)	18,321	25,050	19,410	18,190	கிடைக்க வில்லை
கிளைகளின் எண்ணிக்கை	2,425	2,647	2,374	2,361	1,905
பங்கு முதல்					
(அ) மொத்தம் (ரூ. கோடியில்)	10.23	11·46	11·96	11·27	12·66
(ஆ) அரசு வழங்கியது	6·44	7·49	7·77	7·49	7·61
நடைமுறை முதல் (ரூ. கோடியில்)	38·96	36·93	38·34	50·58	39·38
ஆண்டில் செய்த மொத்த விற்பனையின் மதிப்பு (ரூ. கோடியில்)	208·76	163·02	166·11	142·44	151·32

மொத்த விற்பனை/மத்தியக் கூட்டுறவுகளின் நடவடிக்கைகள் சர்க்கரை, உணவு தானியக் கட்டுப்பாடு எடுக்கப்பட்டதும் குறைந்து போகலாயின. ஆதாயமில்லாத கிளைகள் மூடப்பட்டு வருகின்றன. சில மத்திய/மொத்த விற்பனை பண்டசாலைகள் நட்டமடைந்த காரணத்தால் நடைமுறை நிதி குறைந்து போயிற்று. இச் சங்கங்கள் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்திய தன் காரணமாக மொத்த விற்பனை வியாபாரத்தில் சரிவு ஏற்பட்ட போதிலும், சில்லறை விற்பனை வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1971-72இல் இக் கூட்டுறவுகள் செய்த மொத்த விற்பனையில் 50% கட்டுப்பாட்டுக்கு உட்படாத பண்டங்கள் (non-controlled commodities) என மதிப்பிடப்பட்டது.

நட்டத்தில் நடந்துவரும் மொத்த விற்பனை/மத்தியக் கூட்டுறவுப் பண்டசாலைகளின் நடவடிக்கைகளை ஆராய்ந்து அவற்றைச் சரிப்படுத்த பல ஏற்பாடுகளை மாநில அரசுகள் மேற் கொண்டன. திறமையாகத் தொழில் நடத்தும் வழிமுறைகளை மேற்கொள்ளுதுவடன்கூட, வளரும் வாய்ப்புள்ள கூட்டுறவுகளுக்கு மேலும் நிதியுதவியும் அளிக்கப்படுகின்றது. பொதுவாக,

வலுவிழந்து நிற்கும் நிறுவனங்களைக் கடைத்தேறவைக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மொத்த விற்பனை/மத்தியப் பண்டசாலைகள் பல, நட்டத்தில் நடந்துவரக் காரணமாயிருந்தது விவசாய விளைபொருள்களின் விலை ஏற்றத் தாழ்வு என்று பொதுவாகக் கூறினாலும் கீழ்க்காணும் காரணங்களாலும் நட்டம் விளைந்தன:

(அ) மொத்த விற்பனையளவு குறைந்து போனபோதிலும் நிருவாகச் செலவுகளும் பிற செலவுகளும் அதற்கேற்ப குறையவில்லை.

(ஆ) பிரதம சங்கங்களுக்குக் கடன் பேரில் செய்த விற்பனைக்குப் பணம் உடனுக்குடன் செலுத்தப் படாமல் நிலுவை நின்றது.

(இ) போதிய அனுபவமில்லாத காரணத்தாலும், தீய நோக்கங்களுடனும் சரக்கு கொள்முதல் செய்யப் பட்டுப் பெருமளவு தேங்கிக் கிடந்தது.

(ஈ) களவாடலும், குறையளவுகளும் பல சங்கங்களில் பெரும் பிரச்சினையாகியிருந்தன.

இக் கூட்டுறவுகளின் நடவடிக்கை, மொத்த விற்பனையிலுஞ் சரி, சில்லறை விற்பனையிலுஞ்சரி குறைந்த அளவினதாக இருப்பதால், பிரதம சங்கங்களுக்கு ஒரு மொத்த விற்பனை நிலையமாகவோ அல்லது நுகர்வோருக்குத் திறமையாக விற்பனை செய்யும் ஒரு சில்லறை விற்பனை நிலையமாகவோ செயல்பட முடியவில்லை. மொத்த விற்பனைச் சங்கங்கள் கிளைகளைத் திறப்பதைப் பிரதம சங்கங்கள் விரும்பவில்லை. பிரதம சங்கங்கள் பங்கீட்டு அல்லது கட்டுப்பாட்டுக்குட்பட்ட பண்டங்களை மட்டுமே விற்கின்றனவென்றும் அச் சங்கங்களின் அளவு மிகச் சிறியதாக உள்ளது என்றும் மொத்த விற்பனைச் சங்கங்கள் குறை கூறுகின்றன. வெளிச்சந்தையில் கிடைக்காத பற்றுக்குறைப் பண்டங்களைப் பெறுவதில் மட்டுமே பிரதம சங்கங்கள் மொத்த விற்பனைச் சங்கங்களின் உதவியை நாடுகின்றன. மற்றப் பண்டங் களில் சில மொத்த விற்பனைச் சங்கங்களிடம் இருந்தாலும்கூட அவற்றிடமிருந்து வாங்காமல் தனியார் வியாபாரிகளிடமிருந்து பிரதம சங்கங்கள் வாங்குகின்றன. இந்தச் சூழ்நிலையில் மொத்த விற்பனைச் சங்கங்கள் அளவான தமது நிதிவளத்தைக் கொண்டு பிரதம சங்கங்களுக்குப் பண்டங்களை வாங்கியளிப்பதில் முனைந்து

ஈடுபடுவதா அல்லது மேலும் மேலும் கிளைகளைத் திறந்து தம் உறுப்பினர் சங்கங்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சில்லறை விற்பனையில் தீவிரமாக இறங்குவதா என்று புரியாமல் மயங்கி நிற்கின்றன. பல மாநிலங்களில் சிறப்பங்காடிகள் நிறுவும் பணி மொத்த விற்பனைச் சங்கங்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் மட்டுமே சிறப்பங்காடிகள் துவங்குவதற்கெனத் தனி நுகர்வோர் சங்கங்கள் அமைக்கப் பட்டன.

மாநிலக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டிணைப்பு

மாநிலத்திலுள்ள நுகர்வோர் கூட்டுறவுகளை அமைப்பதிலும், உருவாக்குவதிலும், வளர்ப்பதிலும் உதவி புரியவும், மொத்த விற்பனைச் சங்கங்கள் சீராகச் செயல்பட அவற்றின் நடவடிக்கை களை ஒருங்கிணைக்கவும் ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலக் கூட்டிணைப்பு ஒன்று உருவாக்கப்பெற்றது. இக் கூட்டிணைப்பின் முக்கிய பணிகளாவன:

(i) இணைக்கப்பட்டுள்ள சங்கங்களுக்கு விற்பனை செய்யவும் அளிக்கவும் நுகர்ச்சிப் பண்டங்களை மாநிலத்திற் குள்ளிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் கொள்முதல் செய்தல்.

(ii) கொள்முதல் செய்த பண்டங்களைத் தரம்பிரித்து, கட்டுமானம் செய்து, பாதுகாப்பாக வைத்திருந்து போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தல்.

(iii) தாமாகவோ, பிற கூட்டுறவுகளுடன் கூடியோ தயாரிப்பு, பக்குவப்படுத்துத் தொழிலகங்களை ஏற் படுத்தி நுகர்ச்சிப் பண்டங்களை உற்பத்தி செய்தல்.

(iv) தரம் பிரித்தல், கட்டுமானம் செய்தல், தரப்படுத்தல், பெருமளவு கொள்முதல் செய்தல், சேர்த்துப் பாதுகாத்தல், விலையிடல், சோடனை செய்தல் போன்ற தொழில் நுணுக்கங்களையும் தொழில் நுட்பங்களையும் வழங்கி மொத்த விற்பனை பண்டசாலைகளுக்கு உதவி செய்தல்.

(v) மொத்த விற்பனைக் கூட்டுறவுகளின் நிருவாக நடை முறைகளையும், நடவடிக்கைத் திறனையும் மேம்படுத்தல்

(vi) தரப்படுத்தல், கணக்கு வைத்தல், இருப்புச் சரக்குக் கட்டுப்பாட்டு முறை போன்ற செய்திகளைக் குறித்து மொத்த விற்பனைப் பண்டசாலைகளுக்கு அறிவுரை வழங்கி உதவுதல்.

(vii) தம்மோடு இணைந்துள்ள மொத்த விற்பனைப் பண்ட சாலையின் செயற்பாட்டை மேற்பார்வை செய்தல்.

(viii) தமது ஆட்சி எல்லைக்குள் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைய கருத்தரங்கு, மாநாடு, கூட்டம் முதலிய நடத்தல்; விளம்பரம், பிரசாரம், கல்வி போன்ற பணிகளை மேற்கொள்ளல்.

(ix) இணைந்துள்ள மொத்த விற்பனைப் பண்டசாலைகளின் பணியாளர்களிடையே பொதுப் பணிமுறையமைப்பு (Common Cadre) உருவாக்குதல்.

(x) தொடர்புற்ற பிற முகமைகளின் உதவிகொண்டு நுகர்வோர் கூட்டுறவுகளின் பணியாளர்களுக்குப் பயிற்சி ஏற்பாடு செய்தல்.

மாநிலத்தில் மொத்த விற்பனைப் பண்டசாலை என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நுகர்வுக் கூட்டுறவுகளும், மத்திய ஏற்பாட்டுத் திட்டப்படி அமைக்கப்பட்ட மொத்த விற்பனைப் பண்டசாலைகளும் மாநிலக் கூட்டிணைப்பில் உறுப்பினராகும் தகுதி பெற்றுள்ளன. ஜூன் 1967 இல் 14 மாநிலங்களில் மாநில நுகர்வோர் கூட்டிணைப் புகள் அமைக்கப்பட்டிருந்தன.

1972 ஜூன் இறுதியில் 14 மாநில நுகர்வோர் கூட்டுறவுக் கூட்டிணைப்புகள் செயல்பட்டு வந்தன. இவற்றில் 394 உறுப் பினர் சங்கங்களும், ரூ. 124·26 இலட்சம் செலுத்திய முதலும் இருந்தன. இக் கூட்டிணைப்புகள் ரூ. 972·54 இலட்சம் மதிப் புள்ள பண்டங்களை விற்பனை செய்திருந்தன. துணி, மளிகை சாமான் முதலியவற்றைக் கொள்முதல் செய்து வழங்குவது, இறக்குமதி செய்யப்பட்ட பறிமுதல் செய்யப்பட்ட நுகர்வுப் பண்டங்களை வாங்கி அளிப்பது, பற்றுக்குறைப் பண்டங்கள் பாலுணவு, டயர், டியூப், சவரக்கத்தி, சோடா ஆஷ் போன்ற வற்றைப் பகிர்ந்து வழங்குவது போன்ற பணிகளில் இக் கூட்டுறவுகள் ஈடுபட்டிருந்தன. கட்டுப்பாட்டுக்குட்பட்ட துணி யினைப் பகிர்வு செய்ய சட்டமுறைத் திட்டத்தின்படி, உத்தரப் பிரதேசம் நீங்கலாக, எல்லா மாநிலக் கூட்டுறவுக் கூட்டிணைப்பு களும் நாட்டளவில் செயல்படும் தேசீயக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டிணைப்புடன் கூடி, மாநிலத்துக்குள்ள ஒதுக்கீடு (quota)களைக்

கொள்முதல் செய்தன. இந் நடவடிக்கைக்குத் தேவைப்படும் நிதிவசதிகளை மாநில அரசினர் பங்கு முதல் வழங்கியும், மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரில் கூட்டுறவு அல்லது வாணிக வங்கிகள் கடன் வழங்க ஏற்பாடு செய்தும் உதவியுள்ளனர்.

விவசாயப் பொருள்களை நெருக்கடி நேரங்களுக்கு உதவச் சேகரித்து வைத்திருப்பதில் எதிர்பாராத விலை ஏற்றத்தாழ்வு களால் நட்டமேற்படக்கூடும். இவ்வகை நட்டத்தை ஈடுகட்ட ஐந்து மாநில நுகர்வோர் கூட்டிணைப்புகள், மாநில அரசினர் அளித்த உதவியுடன் விவசாயப் பொருள்கள் சேகரிப்பு நட்டநிதி அல்லது விலை ஏற்றத்தாழ்வு நிதி ஏற்படுத்தியுள்ளன. நுகர்வோர் கூட்டிணைப்புகள் சில கொள்முதல் நடவடிக்கைகளைச் சீராக்கி ஒருங்கிணைந்த ஒரு திட்டம் வகுக்க, நடவடிக்கை ஒருங்கிணைப்புக் குழுக்களை அமைத்துள்ளன. இக் குழுவில் உறுப்புச் சங்கங்களும் இடம்பெறுகின்றன.

மாநில நுகர்வோர் கூட்டிணைப்புகளின் நடப்பு—ஒரு மதிப்பீடு

பெரும்பாலான மாநில நுகர்வோர் கூட்டிணைப்புகளில் பெரு மளவு நடவடிக்கைகள் இல்லாதிருந்தன. சில மாநிலக் கூட்டிணைப் புகள் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களையும், பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களையும் வழங்குவதை மட்டுமே தம் பணி யாகக் கொண்டிருந்தன. பெரும்பாலான கூட்டிணைப்புகள் தம் மாநிலத்திலுள்ள நுகர்வோர் சங்கங்களுடன் உயிருள்ள ஒரு தொடர்பு இல்லாதிருக்கின்றன. நுகர்வோர் இயக்கத்தில் சில்லறை விற்பனைச் சங்கங்களுக்கும் மொத்த விற்பனைச் சங்கங் களுக்குமிடையே நெருங்கிய வியாபாரத் தொடர்பு இருக்க வேண்டும். இன்றைய நிலையில் இது காணப்படவில்லை. தமது வியாபாரக் கொள்கைகளை மாநிலக் கூட்டிணைப்புகள் திருத்தி யமைத்துச் சில்லறை விற்பனைச் சங்கங்களின் நம்பிக்கையைப் பெற்று, தாம் சில்லறை விற்பனைச் சங்கங்களுக்கு உதவி புரியும் ஒரே நோக்கத்துடன் இயங்கி வருகின்றன என்று அவற்றை நம்ப வைக்கவேண்டும்.

தேசீயக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டிணைப்பு
(National Co-operative Consumers Federation)

நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு நாட்டளவில் உச்சி அமைப்பாக இருந்து வருவது தேசீயக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டிணைப்பாகும். அக்டோபர் 1965இல் பதிவு செய்யப்பட்ட இக் கூட்டிணைப்புச் செப்டம்பர் 1966 முதல் செயல்படத் துவங்கியது.

நாட்டிலுள்ள 14 மாநிலக் கூட்டிணைப்புகளும், இந்திய அரசும் தேசியக் கூட்டுறவு ஒன்றியமும் (National Co-operative Union of India) இந்தத் தேசியக் கூட்டிணைப்பின் உறுப்பினர்களாவர். தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டிணைப்பின் முக்கிய பணிகளாவன:

(i) நுகர்வோர் சங்கங்களின் செயற்பாட்டினை மேம்படுத்த வசதிகளைச் செய்து கொடுத்து உதவுதல்.

(ii) தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள், அளிப்போர் (Suppliers) முதலானோருடன் வியாபாரத் தொடர்பு கொண்டு நுகர்வுப் பண்டங்களைக் கூட்டுறவுப் பண்டசாலைகளுக்குக் கொள்முதல் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தல்.

(iii) நுகர்வுப் பண்டங்களை ஏற்றுமதி இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்தல்.

(iv) நுகர்வுப் பண்டங்களைத் தயாரிக்கும்-பக்குவப்படுத்தும் தொழிலகங்களை அமைத்தல்—நடத்தி வருதல்.

(v) நுகர்வோர் இயக்க வளர்ச்சிக்கு விளம்பரம், பிரசாரம் மேற்கொள்ளல்.

(vi) நுகர்வோர் கூட்டுறவுகளின் திட்டங்கள் பிரச்சினைகளை ஆராயும்பொருட்டுக் கருத்தரங்கு, மாநாடு, கூட்டம் நடத்துதல்.

தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டிணைப்பின் தலைமை அலுவலகம் புதுடெல்லியில் உள்ளது. பம்பாய், சென்னை, கல்கத்தா, கௌகாத்தி, நாக்பூர், கொச்சி முதலிய இடங்களில் இதன் கிளை அலுவலகங்கள் உள்ளன. சென்னை, பம்பாய், கல்கத்தாவிலுள்ள கிளைகள் தத்தம் வட்டாரத்திலுள்ள துணி ஆலைகளிடமிருந்து துணி கொள்முதல் செய்து நாடெங்கிலுமுள்ள நுகர்வோர் கூட்டுறவுகளுக்கும் மாநிலக் கூட்டிணைப்புகளுக்கும் அளித்து உதவுகிறது. இந்தக் கிளை அலுவலகங்கள் மாநிலக் கூட்டிணைப்புகளுடன் தொடர்பு கொண்டு அவற்றின்வழி பருப்பு வகைகள், உணவு தானியங்களை நுகர்வோர் பண்டசாலைகளுக்கு வழங்குகின்றன. பெப்ரவரி 1968 முதல் சுங்கக் கலால் துறையினர், பறிமுதல் செய்யும் கள்ளக்கடத்தல் நுகர்வுப் பண்டங்களைத் தேசியக் கூட்டிணைப்பின்வழி நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு வழங்குகின்றன. பேரீச்சம் பழம்,

உலர்ந்த பழங்கள் (Dry fruits), புகைப்பட பிலிம் (Photo film) போன்றவற்றை இறக்குமதி செய்ய தேசியக் கூட்டிணைப்புக்கு அரசு உரிமம் வழங்கியுள்ளது.

ஜூன் 1972இல் முடிவுற்ற ஆண்டில் தேசியக் கூட்டிணைப்பின் நடவடிக்கைகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. 1971-72இல் மொத்த விற்பனை ரூ. 604·52 இலட்சமாக உயர்ந்திருந்தது. 1970-71இல் இத் தொகை ரூ. 479·07 இலட்சமாகவும் 1969-70 ரூ. 385·49 இலட்சமாகவும் இருந்தது. துணி, மளிகை, பறிமுதல் பண்டங்கள் விற்பனைப் பெருமளவு வளர்ந்து வருகின்றது. நுகர்வோர் கூட்டுறவுகளுக்குப் பருப்பு வகைகளைப் பக்குவப்படுத்தி வழங்க நாக்பூர், ஹிஸ்ஸார் (ஹரியானா மாநிலத்திலுள்ளது), சென்னை ஆகிய மூன்று இடங்களில் தேசியக் கூட்டிணைப்பு ஆலைகளைக் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறது. கட்டுப்படுத்தப்பட்ட துணியினை நாட்டளவில் கொள்முதல் செய்து உரிய வழிகளில் விற்பனை செய்யும் பொறுப்புத் தேசியக் கூட்டிணைப்புக்குத் தரப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ. 72·00 கோடி மதிப்புள்ள கட்டுப்பாட்டுக்குட்பட்ட துணிகளைத் தேசியக் கூட்டிணைப்பும் பிற கூட்டுறவுச் சங்கங்களும் கையாளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தேசியக் கூட்டிணைப்பு, ஆலோசனை உருவாக்கக் கூடு (Consult-ancy and Promotional Cell) ஒன்றை அமைத்து நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு நிருவாகத்தைத் திறம்பட நடத்தவும், கணக்கு வழக்குகளைச் சீரான முறையில் வைக்கவும் அரிய அறிவுரைகளை அளித்து வருகிறது. மாத இதழ் ஒன்றை வெளியிட்டு வருகிறது.

வேலை வாய்ப்பு, வளர்ச்சி பெருக்கக்கூடிய நுகர்வோர் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கான மத்தியத் துறைத் திட்டம்

கல்வியறிவுள்ள, வேலையின்மையால் வாடுகின்ற மக்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகளை உண்டாக்கித்தர, தேர்ந்தெடுத்த சில நுகர்வோர் கூட்டுறவுகளை விரிவுபடுத்தி வளர்க்கும் திட்டமொன்று 1971 டிசம்பரில் உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ்த் தற்போதுள்ள வளரும் வாய்ப்புள்ள மொத்த விற்பனை/மத்திய/சிறப்பங்காடி கூட்டுறவுகள் 40உம் புதிய சில்லறை விற்பனைக் கூட்டுறவுகள் 40உம் ரூ. 1·25 கோடி செலவில் விரிவாக்கப்படும். 1971-72இல், 5 மாநிலங்களில் 6 திட்டங்கள் ரூ. 16·33 இலட்சம்

செலவில் துவக்கப்பெற்றுக் கல்வியறிவுள்ள 164 நபர்களுக்கும் பிற 66 நபர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. 1972-73இல் மேலும் 25 திட்டங்களுக்கு ரூ. 57·80 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. இதன் பயனாக 17 பல பிரிவுப் பண்டசாலைகள், 4 பெரிய அளவு சில்லறை விற்பனை நிலையங்கள், ஒரு பனியன் ஆலை புதிதாக நிறுவப்படும். இரண்டு பல பிரிவுப் பண்டசாலைகளும் ஒரு பெரிய அளவு சில்லறை விற்பனைக் கூட்டுறவும் விரிவுபடுத்தப் படும். இதனால் கல்வியறிவு பெற்ற 575 நபர்களுக்கும் பிற 119 நபர்களுக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

நுகர்வோர் கூட்டுறவுத் துறையிலுள்ள ஊழியர்களுக்கும், நிருவாகக் குழுவினருக்கும் கருத்தரங்குகளும், பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பூனாவிலுள்ள வைகுந்த மேத்தா தேசீயக் கூட்டுறவு நிருவாக நிலையம் இத் துறையில் சீரிய பணியினைச் செய்து வருகின்றது.

கூட்டுறவுத் துறையில் நுகர்வுப் பண்டங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நாடெங்கிலும் உருவாகி வருகின்றன. 1972-73இல் மாவரைத்தல், காப்பிக் கொட்டை அரைத்தல், ரொட்டி தயாரித்தல், எழுதுபொருள் தயாரித்தல் தையல், நெய் தூய்மைப்படுத்தல், எண்ணெய் தயாரித்தல், சலவை சோப்புத் தயாரித்தல் போன்ற பல்வகை தொழில்களில் 36 கூட்டுறவுகள் ஈடுபட்டிருந்தன. மேலும் 60 தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் கூட்டுறவுகளின் பிரச்சினைகள்

இந்தியாவில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் கணிசமான வளர்ச்சி காணவில்லை என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் கூற்றாகும். கட்டுப்பாடுகளும் பங்கீட்டு முறையும் அமுலில் இருக்கும் காலங்களில் நுகர்வோர் கூட்டுறவுகள் செயல்பட முடிகிறது. இவை நீங்கிய நிலையில் இக் கூட்டுறவுகள் உய்ய வழியின்றி நலிந்து போகின்றன. இதற்குப் பல காரணங்களுண்டு அவற்றைக் காண்போம் :

1. பெரும்பான்மையான பிரதம பண்டசாலைகள் சிறியனவாக வளமற்ற நிலையிலுள்ளன. தமது நிருவாகச் செலவுகளைச் சமாளிக்கும் அளவுக்குக்கூட இவை நடவடிக்கைகள் இல்லாதிருக் கின்றன.

2. போதுமான நிதிவசதிகள் இல்லாமல் பண்டசாலைகள் சிரமப்படுகின்றன. தேவைப்படுமளவுக்குப் பங்குமுதல் வசூல் செய்ய இச் சங்கங்களால் இயலவில்லை. நிதி நிலையங்களும் இவற்றின் திறமையில் நம்பிக்கைக் குறைவாக இருப்பதன் காரண மாகக் கடன்களைத் தாராளமாக வழங்குவதில்லை.

3. பல பண்டசாலைகள் திறமைக் குறைவான நிருவாகத்தால் பாதிக்கப்பட்டு நலிவடைந்தன. பணியாளர்கள் பயிற்சிக்கு நிலையான ஏற்பாடு செய்யப்படவில்லை. நிருவாகத் திறமையில்லாத கூட்டுறவுகள், நிருவாகத்தில் கைதேர்ந்த தனியார் வியாபாரத் துடன் போட்டியிடும்போது வெற்றி பெறுவது எளிதல்ல.

4. சில பண்டங்கள் மட்டுமே இக் கூட்டுறவுகளில் விற்கப் படுவதால் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களில் பெரும் பாலானவை கூட்டுறவுப் பண்டசாலைகளில் கிடைக்காது என்று எண்ணிவிடுகின்றனர். இதனால் கூட்டுறவுப் பண்டசாலைகளை ஆதரிக்கும் நபர்கள் எண்ணிக்கை குறைந்து போகின்றது.

5. உறுப்பினர் ஆதரவு இருந்தால்தான் எந்த ஒரு கூட்டுறவுப் பண்டசாலையும் வெற்றிகரமாக இயங்க முடியும். சந்தை விலையைவிட பண்டசாலையில் விலை குறைவாக இருக்கும் வரை ஆதரவு நல்கும் உறுப்பினர்கள் சந்தை விலைக்குப் பண்ட சாலையும் விற்கும்போது ஆதரவு நல்குவது அருமையாயுள்ளது.

6. பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர் கள், மக்களின் மதிப்பைப் பெற்ற நல்லோர் நிறுவி நடத்தும் பண்டசாலை வெற்றிகரமாக நடக்கும் வாய்ப்புண்டு. ஆனால், வேறு சூழ்நிலைகளில் நிறுவப்பெற்ற நல்ல தலைமையில்லாத கூட்டுறவுப் பண்டசாலைகள் ஆதாயமாக நடைபெறுவது கடினம்.

7. கூட்டுறவுப் பண்டசாலைகளின் நிருவாகச் செலவுகளும் மேற்செலவுகளும் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. தனி வியாபாரியை நோக்கக், கூட்டுறவுப் பண்டசாலையில் நிருவாக, மேற் செலவுகள் எட்டு மடங்குவரை மிகுதியாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

8. உற்பத்திக் கூட்டுறவுகள், சந்தையிடுகைக் கூட்டுறவு களுடன் நுகர்வோர் கூட்டுறவுகள் தொடர்பேதும் ஏற்படுத்திக் கொள்ளுவதில்லை. இவற்றிடமிருந்து பண்டங்களைக் கொள்முதல் செய்வதுமில்லை. மொத்த விற்பனைக் கூட்டுறவுகளும் சில்லறை விற்பனைக் கூட்டுறவுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதில்லை.

மாவட்ட அளவில் செயல்படும் மத்திய/மொத்த விற்பனைக் கூட்டுறவுகள் கிளைகளைத் திறக்கத் துவங்கியதிலிருந்து பிரதம கூட்டுறவுகள் இக்கிளைகளைத் தமக்குப் போட்டியாக ஏற்படுத்தப் பட்ட நிலையங்கள் என்று கருதிவருகின்றன.

9. சில இடங்களில் நிருவாகத்தினர் முறைகேடான வகையில் வேண்டாத பொருள்களை, தரக்குறைவான பண்டங்களைத் தேவையற்ற அளவுக்குக் கொள்முதல் செய்தமையால் சங்கம் நட்டமுற்றது. மற்றும் சில இடங்களில் பணியாளர்கள் நாணயமில்லாது பண்டங்களைக் கள்ளத்தனமாகக் கடத்திச் செல்வதாலும் நட்டங்கள் ஏற்பட்டன.

10. காலக்கிரமப்படிச் சரக்கு இருப்புச் சோதனை செய்தல், கணக்கெடுத்தல் போன்ற ஒழுங்குமுறை பல நுகர்வோர் கூட்டுறவுகளில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதன் காரணமாகக் குறிப்பிட்ட எந்த நேரத்திலும் நிறுவனம் என்ன நிதிநிலையிலுள்ளது என்பதை அறிய முடிவதில்லை.

11. சில மாநிலங்களில் மாநில அரசினர் பெயரளவில் கூட்டுறவுகளுக்குச் சலுகைகளும் முதன்மையிடமும் அளித்து வருகின்றனரேயன்றி உண்மையில் நடைமுறையில் பல காரணங்களால் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவ முடியாத நிலையிலுள்ளனர்.

12. தக்க மேற்பார்வையின்மை, ஆய்வு ஏற்பாடுகளின்மை, குறித்த காலத்தில் தணிக்கை செய்யாமை ஆகிய குறைபாடுகளும் நுகர்வோர் கூட்டுறவுகளின் செயற்பாட்டைப் பல மாநிலங்களில் பாதித்து வந்தன.

ஆறுவது இந்தியக் கூட்டுறவு மாநாட்டிற்கு(1971)நுகர்வோர் கூட்டுறவுகளைப்பற்றிய செய்திகளைக் குறித்துத் தயாரித்த பின்னணிக் கட்டுரையில் சில பிரச்சினைகள் எழுப்பப்பட்டுள்ளன. நுகர்வோர் கூட்டுறவின் நோக்கங்களுக்குப் புதியதொரு கண்ணோட்டம் தேவை; நுகர்வோர் கூட்டுறவை அமைத்து விட்டால் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கலாம் என்று கூறுவதோ எதிர்நோக்குவதோ சரியல்ல; பலப்பல காரணங்களால் நுகர்வுப் பண்டங்களின் விலைவாசி ஏறிக்கொண்டு போகின்றது. நுகர்வோர் அனைவரும் கூட்டுறவு அமைப்பின்கீழ் ஒன்று சேர்ந்து, தமது நலனைப் பாதுகாத்துக் கொள்ள உற்பத்தி, வழங்கு ஏற்பாட்டினைத் தம் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தால்தான் உண்மையில் நுகர்வோர் கூட்டுறவுகள் அமைப்பதன் நோக்கம்

நிறைவேறும். நுகர்வோர் கூட்டுறவுகள் கட்டுப்பாட்டுக்குட்பட்ட, பற்றாக்குறைப் பண்டங்களை மட்டும் வழங்கும் முகமையாகக் கருதப்படும் நிலை மாறவேண்டும். நுகர்வோருக்குக் கூட்டுறவு முறையினைப் பற்றியும் அதன் சிறப்பான தன்மைகள் பற்றியும், அதில் உறுப்பினர் பொறுப்பு, கடமை பற்றியும் அறிவைப் பரப்ப பெரும் முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். மக்கள் நுகர்வோர் கூட்டுறவின் நன்மையினையுணர்ந்து தாமே அதனை விரும்பி ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையைக் கூட்டுறவுக் கல்வியின்வழி உருவாக்கவேண்டும். மாநில அரசுகளும் நுகர்வோர் கூட்டுறவுத் திட்டங்களில் மேலும் ஈடுபாடு காட்ட வேண்டும். இங்ஙனம் ஈடுபாடு காட்ட மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு இத் திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.

தற்பொழுது நுகர்வோர் கூட்டுறவுகளின் அமைப்பு நான்கு அடுக்குகள் (Four tier structure)கொண்டுள்ளது. உச்சியில் உள்ள தேசியக் கூட்டிணைப்பில் 14 மாநிலச் சங்கங்களே இடம் பெறுகின்றன. இந்த நிலையில் கீழிருபடிகளிலுள்ள கூட்டுறவுகளுக்கும் தேசியக் கூட்டிணைப்புக்கும் நேரடி தொடர்பில்லாது இவை ஒருங்கிணைந்து செயல்படாமலுள்ளன. மொத்த விற்பனையர் சில்லறை விற்பனையோடு உயிர்த் தொடர்பு கொண்டிருந்தாலன்றி வியாபாரம் செம்மையாக நடைபெறுவது அரிது. ஆகவே, உச்சிக் கூட்டிணைப்பில் பெரிய நுகர்வோர் கூட்டுறவுகளை (அவற்றின் மொத்த விற்பனையின் அடிப்படையில்)ச் சேர்த்துக் கொண்டு உறுப்பினர் நிலையை விரிவுபடுத்துவது நன்மை பயக்கும்.

கூட்டுறவு நுகர்வுச் சங்கங்கள் அனைத்துக்கும் மையமான ஒரு கொள்முதல் ஏற்பாடு இருந்தால், கொள்முதல் விலையில் பல சலுகைகள் பெறலாம். மொத்த விற்பனைப் பிரிவும் சில்லறை விற்பனைச் சங்கங்களும் நெருங்கி ஒருங்கிணைந்து செயல்பட்டால் தான் கூட்டுறவு நுகர்வோர் இயக்கம் வலுவடையும். விற்பனைப் பணியாளர்கள் தொடர்ந்து பயிற்சியளிக்கப்படவேண்டும். வேறெந்த துறையையும் விட நுகர்வோர் துறையில்தான் பொது மக்களும் கூட்டுறவு நிலையங்களும் நேரடித் தொடர்பு கொண்டுள்ளனர். கூட்டுறவின்மீது மக்களுக்கு உருவாகும் எண்ணம் இந் நிலையங்களின் செயற்பாட்டைப் பொருத்து அமையுமென்றால் அது மிகையாகாது. நல்ல ஒரு விற்பாண்மையர் (Salesman) கூட்டுறவுத் துறைக்கு விளம்பரம் தரும் நல்ல ஒரு சாதனமாகக் கருதப்படவேண்டும். அத்தனை விற்பாண்மையருக்கும் தக்க பயிற்சி அளிக்கப்படுவது மிக அவசியம்.

திறமையுள்ள நிருவாக அலுவலர்களை ஈர்க்கக் கூட்டுறவு நுகர்வு நிலையங்கள் ஒரு நிலையான பணியமைப்பு முறை நிறுவ வேண்டும். வியாபாரத்தை எல்லோரும் திறமையாக நடத்துவது இயலாது. இதற்கெனப் பயிற்சியும், அனுபவமும், திறனும், பண்புகளும் தேவை. தக்க ஊதியங் கொடுத்து தகுதி, திறமைமிக்க அலுவலரைப் பணியமைப்பு முறையில் (Cadre) உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் அன்றாட நடவடிக்கைகளை விட்டு விடவேண்டும்.

தனியார் வியாபாரத்தில் பெருமளவில் விற்பனைவரி ஏய்ப்பு நிகழ்வது நாடறிந்த இரகசியமாகும். இந்த நிகழ்ச்சியினால் கூட்டுறவுகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் ஒவ்வொரு சிறு நடவடிக்கைக்கும் கணக்கு எழுதி வரிகட்ட வேண்டியிருக்கிறது. இதனால் ஏற்படும் விளைவு தனியார் வியாபாரிகள் கூட்டுறவுகளைவிடக் குறைந்த விலைக்குப் பண்டங்களை விற்க முடிகின்றது. கூட்டுறவுகள் தமது விற்பனை மூலம் ஈட்டும் மொத்த இடைவெளி (gross margin)த் தொகையைவிட அதிகமான தொகையை அரசினருக்கு வரியாக வசூல் செய்து செலுத்துகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு அரசினர் 1963 முதல் அளித்துள்ள மொத்த உதவித் தொகையை விடப் பெருமளவுக்கு மிகுதியான தொகையை நுகர்வோர் கூட்டுறவுகள் விற்பனை வரியாகச் செலுத்தியுள்ளன என்று கணக்கிடப் பட்டுள்ளது. மற்றும், தற்போது நடைமுறையிலிருக்கும் விற்பனை வரி விதிகளின்படி பல்வேறு வகைப் பண்டங்கள்மீது பல்வேறு விகிதவரி வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்குப் பல பதிவேடுகளும், ரசீதுகளும் தயாரிக்க வேண்டியிருப்பதால் கணக்கெழுதும் செலவு பெரிதும் மிகுந்து போகின்றது. இச் செலவுகளைக் குறைத்து வரி வசூலிப்பதில் ஏய்ப்புக்கு இடமில்லாமல் செய்ய உற்பத்தி நிலையிலேயே மாநில அரசினர் கலால் வரி (Excise duty) விதித்து எளிதாக வசூலிக்கலாம் என்று யோசனை கூறப் பட்டுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவுகள் சமுதாயச் சேவை நிலையங்களாக அரசினர் கொள்கைப்படி பற்றாக்குறை பண்டங்களை நியாயமானதொரு முறையில் பகிர்ந்து வழங்கவும், தொடர்ந்து உயர்ந்து வரும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் பாடுபடவே உருவாக்கப் பட்டுள்ளபடியால் அவற்றை வெறும் வியாபார நிலையங்களாகக் கருதக்கூடாது. இந் நிலையங்கள் அரசின் நிதி உதவியோ அல்லது பங்குமுதலோ இன்றித் தாமே வலுவடைந்து வளரும்வரை வருமான வரிச் சலுகைகள் தாராளமாக அளிக்கப்படவேண்டும்.

14. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்

மனித வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படுவன உணவு, உடை, இருப்பிடம் ஆகும். கூட்டுறவு அமைப்புகள் இவை யத்தனையும் நல்கும் வளம்பெற்றன. மேலும் பலவற்றையும் ஆக்கித் தரும் சிறப்பும் பெற்றுள்ளன. இந்த அத்தியாயத்தில் இருப்பிட வசதிகள் செய்துதர கூட்டுறவுகள் என்ன ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன என்று காண்போம்.

சிறு நகரங்களிலும் பெரு நகரங்களிலும் வீட்டுவசதிகள் மிகவும் குறைவாகவும், மனிதப் பண்பிற்கே கேடு விளைவிக்கும் பாங்கிலும் இருந்து வருவது குறித்துப் பல நாடுகளில் கவலை தெரிவிக்கின்றனர். நம் நாட்டிலும் நிலைமை கவலைக்கிடமளிப்ப தாகவே காணப்படுகிறது. நாட்டின் மக்கள் தொகை பெருகப் பெருக இந்நிலை மேலும் மோசமடைந்து செல்வது எதிர்நோக்கக் கூடியதே. மூன்ரும் திட்ட காலத் துவக்கத்தில் நகர்ப்புறங்களில் மட்டும் 60 இலட்சம் வீடுகள் மேலுந் தேவைப்பட்டன. மூன்ரும் திட்ட கால இறுதியில் (1966–67) இந்தப் பற்ருக்குறை மேலும் வளர்ந்து நகர்ப்புறங்களில் கூடுதலாக 114 இலட்சம் வீடுகளும் கிராமப்புறங்களில் கூடுதலாக 627 இலட்சம் வீடுகளும் தேவைப் பட்டன. மக்கள் தொகை 1000-க்கு 10 வீடுகள் என்ற விகிதப்படி நிலையான கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் ஒரு விகிதத்தைப் பரிந்துரைத்துள்ளது. ஆனல், நம் நாட்டில் 1950–60 காலத்தில் 1,000 மக்களுக்கு 0·95 என்ற விகிதப்படியே நிலையான கட்டடங்களே கட்டப்பட்டன என்பதைக் காணும் போது நமது வீட்டுவசதி பற்ருக்குறைநிலை நன்கு விளங்கும். 1976ஆம் ஆண்டில் நகரங்களில் வாழும் மக்கள் தொகை 1,250 இலட்சமாக இருக்குமென்றும் இவர்களுக்குக் குடியிருக்க 180 இலட்சம் வீடுகள் தேவைப்படுமென்றும் வீட்டுவசதிக் கூட்டுறவு களைப் பற்றிய ஆய்வுக் குழு (1964) மதிப்பீடு செய்தது. கிராமப்

புறங்களிலுள்ள மக்கள் தொகையும் 47 கோடியளவிற்கு உயருமென எதிர்நோக்கப்பட்டது. இதற்கேற்ப மொத்தம் 870 இலட்சம் வீடுகள் கிராமப்புறங்களில் தேவைப்படும். 1976இல் வீட்டுவசதிப் பற்றுக்குறையை முழுமையாகத் தீர்த்துக்கட்ட 1966-76 ஆண்டுக் காலத்தில் ரூ. 15,500 கோடி வீடு கட்டுவதில் முதலீடு செய்யப்பட வேண்டுமென மதிப்பிட்டது.

வீட்டுவசதிப் பற்றுக்குறை இவ்வளவு மகத்தான அளவில் இருக்கும்போது இதைத் தனிப்பட்ட முறையில் எவரும் தீர்த்து வைப்பது முடியாத செயலாகும். வீட்டு வசதி வாரியம், வீட்டு வசதி கூட்டுறவுகள், பணியாண்மையர் (employers), தனியார் துறையினர் ஆகியோர் வீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தரும் முயற்சியில் பெரும்பங்கு ஏற்கின்றனர். அண்மையில் குடிசை மாற்று வாரியம் (Slum Clearance Board), வீட்டுவசதி–நகர வளர்ச்சிக் கூட்டுரு (Housing and Urban Development Corporation—HUDCO) முதலிய முகமைகளும் வீட்டு வசதிகள் ஏற்படுத்தித்தரும் துறையில் சீரிய பணியாற்றுகின்றன.

வீடு கட்டும் திட்டங்களுக்குத் தேவைப்படுவது நியாயமான வட்டிக்கு நீண்டகாலக் கடன்களாகும். மற்றும் கட்டடம் கட்ட பல பொருள்கள் நியாயமான விலைக்குக் கிடைக்கும்படியான ஏற்பாடும் தேவைப்படுகிறது. வீட்டு மனை வாங்குவதிலும் கூட்டுறவு முறையைக் கடைப்பிடித்தால் மனையை நியாயமான விலைக்கு வாங்கலாம்.

கூட்டுறவு வீட்டுவசதியின் நன்மைகள்

தனியாக ஒருவர் வீடு கட்டுவதில் அல்லது தனியார் துறையினர்வழி வீடு கட்டுவதில் அடையக்கூடிய நன்மைகளைவிட கூட்டுறவு முறையின்வழி வீடு கட்டுவதால் பலப்பல நன்மைகளையடையலாம். வீட்டுவசதிச் சங்கம் தனது உறுப்பினர்களின் நலனில் மிகுந்த அக்கறை செலுத்தும். நியாயமான வட்டியில் நீண்டகாலக் கடன்களை வழங்க சங்கம் ஏற்பாடு செய்கிறது. வீடு கட்டித்தரும் சங்கங்கள் தமது உறுப்பினர்களின் தேவைக்கேற்ற அமைப்புள்ள வீடுகளைக்கட்டித் தருகின்றன. இச் சங்கங்கள் இலாப நோக்கின்றிச் செயல்படுவது மட்டுமல்லாது, பலவகைகளில் கட்டடச் செலவைச் சிக்கனப்படுத்துகின்றன. வீட்டு உரிமையாளரின் வீணான நச்சரவுகளுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாகாமல் உறுப்பினர்கள் தமது சங்கத்துடன் பொறுப்புகளைப் பகிர்ந்து மகிழ்ச்சியுடன் வாழ வகைசெய்கின்றன இச் சங்கங்கள்.

உறுப்பினர் அனைவரும் உரிமையாளராக இருக்கும் சூழ்நிலையில் வீடுகளைச் சரிவர பராமரிக்கவும், நல்ல நிலையில் பாதுகாத்து வரவும் அவர்களிடையே ஊக்கமிருக்கும்.

கட்டடச் சாமான்கள் பெருமளவில் வாங்கும்போது நயமான விலைக்கு வாங்கும் வாய்ப்புண்டு. வீட்டமைப்புத் திட்டத்தைப் பெருமளவில் மேற்கொள்ளலாம். சாதனங்களையும் ஆள் பலத்தையும் முழுமையாகப் பயன்படுத்தும் வாய்ப்பும் மிகவுண்டு. இடைநிலையரின் தலையீட்டால் ஏற்படும் கூடுதல் செலவு தவிர்க்கப் படுகிறது. ஒப்புக்கொள்ளப்பட்ட தரத்தின்படி உறுப்பினரனை வருக்கும் வீடுகளைத் திட்டமிட்டுக் கட்டினால் சுற்றுப்புறம் சிறந்த முறையில் அமைவதுடன் மக்களுக்குக் கூட்டுறவுவழி வாழ்க்கைக் குப் பயிற்சியும் கிடைக்கும்.

வீட்டுவசதிக் கூட்டுறவுகளின் வகைகள்

நாட்டில் பலவகை வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானவற்றைக் கீழே காண்போம் :

(i) கட்டடச் சங்கங்கள்

இச் சங்கங்கள் தம் உறுப்பினர்களுக்குத் தாம் முன்னரே வாங்கி யுள்ள மனையிலோ அல்லது சங்கத்தின்வழி பெற்ற மனையிலோ வீடு கட்டிக்கொள்ள நீண்டகாலக் கடன் அளிக்கின்றன. உறுப் பினர்கள் தாமே தம் விருப்பப்படி வீடுகளைக் கட்டிக்கொள்ள லாம். உறுப்பினர்களே அவர்கள் கட்டும் வீடுகளின் உரிமை யாளர்களாக இருக்கின்றனர். இக் கடன்கள் இருபது ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தவேண்டுவனவாக இருக்கின்றன.

(ii) வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் (Co-operative House Building Societies)

உறுப்பினர்களின் முகவர்களாகச் சங்கங்களே வீடுகட்டும் பணியை மேற்கொள்ளுவதும் உண்டு. கட்டடச் சாமான்களின் பற்றுக்குறை கடுமையாக இருந்த காலங்களில் இவ்வகைச் சங்கங் களின் சேவையைப் பெரிதும் பயன்படுத்தினர். கட்டடச் சாமான் களைப் பெருமளவில் வாங்கி தொழில் நுட்பம் தெரிந்த பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டு மிகக் குறுகிய காலத்தில் உறுப்பினர்களுக்கு வீடுகளைக் கட்டித்தந்து சிறப்பான பணியாற்றுவன இச் சங்கங்கள்.

(iii) கூட்டுறவுக் கட்டடம் கட்டும் சங்கங்கள்
(Co-operative House Construction Societies)

சங்கமே மனையை வாங்கி, கட்டடத்தைக் கட்டி அதை உறுப்பினர்களுக்கு வாடகைக் கொள்முறை (Hire purchase system)த் திட்டப்படி வாடகைக்கு விடுவதுண்டு. குறிப்பிட்ட ஆண்டுகள் தவறாது வாடகை செலுத்திவரும் உறுப்பினர்கள் அக் கட்டடத்திற்கு உரிமையாளர்களாகிவிடுவர்.

(iv) கூட்டுறவு நகரியம் (Co-operative township)

கட்டடங்களைக் கட்டி அவற்றை உறுப்பினர்களுக்கு வாடகைக் கொள்முறைத் திட்டப்படி வாடகைக்கு விடுவது அல்லது வீடுகட்டிக்கொள்ள விரும்பும் உறுப்பினர்களுக்குக் கடனுதவி வழங்குவது ஆகிய பணிகளைச் செய்யும் சங்கம் கூட்டுறவு நகரியம் என்ற பெயரில் செயல்படுவதுமுண்டு. இக் கூட்டுறவுச் சங்கங்கள் நகரமன்றங்கள் (Municipalities) செய்யும் பணிகளையும் மேற்கொண்டு நிலத்தை வாங்குவது மட்டுமல்லாமல் அதனை வீட்டு மனைகளாகப் பிரித்துப் புதுக் குடியிருப்புகளை உருவாக்கி வீடுகட்ட உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கி சாலை, பூங்கா, வடிநீர், குடிநீர், கழிவுநீர், பள்ளிகள், மருத்துவமனைகள், விளையாட்டிடங்கள் போன்ற பலப்பல ஏற்பாடுகளையும் தாமே செய்கின்றன.

(v) கூட்டுறவு வாடகை வீட்டுவசதிச் சங்கங்கள்
(Co-operative Tenancy Housing Societies)

தாம் கட்டிய வீடுகளைத் தமது உறுப்பினர்களுக்கு வாடகைக்கு விடுவதே இச் சங்கங்களின் பணியாகும். சங்கங்கள் வீடுகளின் உரிமையாளர்களாக இருந்துவரும். நியாயமான வாடகைக்கு இவ் வீடுகள் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும்.

(vi) கிராம வீட்டுவசதிச் சங்கங்கள் (Rural Housing Societies)

கிராமப்புறங்களில் வீட்டுவசதிகளை ஏற்படுத்தித்தர அரசினர் கடன்வசதிகள் அளித்துக் கிராமப்புற வீட்டுவசதித் திட்டங்களை உருவாக்கினர். இத் திட்டங்களைச் செயல்படுத்த ஆரம்பிக்கப் பட்ட கட்டடச் சங்கங்களே கிராம வீட்டுவசதிச் சங்கங்கள் எனப் பெயர்பெற்றன.

(vii) கட்டடத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

கட்டடத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து கட்டடங்களைக் கட்டி அவற்றை விற்பனை செய்து விடுவது இச் சங்கங்களின் நோக்கமாகும். சிறு நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் வீட்டு

வசதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க இச் சங்கங்கள் ஓரளவுக்கு உதவுகின்றன.

(viii) வாடகையர்—உரிமை வீட்டுவசதிச் சங்கங்கள் (Tenant Ownership Housing Societies)

இச் சங்கங்கள் தமது உறுப்பினர்கள் வீடுகட்டிக்கொள்ள மனையினை வாங்கித் தயார் செய்து கொடுக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுகின்றன. மனைச் சங்கத்திற்குச் சொந்தமாக இருக்கும். மனையின்மீது கட்டப்படும் வீடு உறுப்பினர்களுடைய உரிமைச் சொத்தாக இருக்கும்.

(xi) வீட்டுப்பகுதி உரிமைக் கூட்டுறவுகள் (Flat Ownership Co-operatives)

நிலம் கிடைப்பது மிகவும் அருமையாகவுள்ள பம்பாய் போன்ற நகரங்களில் பல அடுக்கு மாடிகள் கொண்ட கட்டடங்கள் கட்டப்படுகின்றன. ஒரு நபர் பல மாடிகள் கொண்ட கட்டட மொன்றைக் கட்டி அவற்றை ஒரு நிபந்தனையின் பேரில் பலருக்கு விற்றுவிடுகிறார். நிபந்தனையாதெனின் அக் கட்டடத்தின் பல்வேறு பகுதிகளை வாங்கும் நபர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கமொன்று அமைத்தல்வேண்டும். அச் சங்கத்திற்கு இக் கட்டடம் மாற்றித்தரப்படும். பகுதி உரிமையாளர்—உறுப் பினரனைவருக்கும் தேவையான பொதுப்பணிகளை அச் சங்கம் செய்வதுடன் கட்டடத்தையும் நல்ல நிலையில் பராமரித்துவரும்.

வீட்டுவசதிக் கூட்டுறவுகளின் அமைப்பு

அடித்தளத்தில் வீட்டுவசதிச் சங்கங்களும் உச்சியில் மாநில மட்டக் கூட்டிணைப்புச் சங்கங்களும் பெரும்பாலான மாநிலங்களில் காணப்படுகின்றன. பிரதம சங்கங்கள் நூற்றுக்குக் குறையா திருக்கும் மாநிலங்கள் சிலவற்றில் இதுகாறும் உச்சிச் சங்கங்கள் அமைக்கப்படாதிருந்தால் விரைவில் அவை அமைக்கப்பெற வேண்டுமென வீட்டுவசதிக் கூட்டுறவுகள்பற்றிய ஆய்வுக்குழு பரிந்துரைத்தது.

உச்சிச் சங்கங்கள் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்:

(i) நிருவாக, தொழில் நுட்ப, நிதிய, சட்ட செய்திகள் குறித்து இணைந்துள்ள சங்கங்களுக்கு ஆலோசனையும் அறிவுரையும் வழங்கல்.

(ii) இணைந்துள்ள சங்கங்களுக்கு மனை, கட்டடச் சாமான் கள் வாங்க உதவுதல்.

(iii) சங்கங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(iv) தவறுகள் ஏதும் இணைந்துள்ள சங்கங்களில் நிகழ்ந்து விடாதிருக்கத் திறமையான கிரமமான மேற்பார்வை மேற்கொள்ளல்.

(v) வீட்டுவசதிச் சங்கங்களுக்கு நிதிவசதி வழங்குதல்.

(vi) புதிய வீட்டுவசதிச் சங்கங்களை உருவாக்கல்.

வீட்டுவசதிக் கூட்டுறவுகளின் வளர்ச்சி

முதல் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கம் 1914இல் சென்னையில் நிறுவப்பட்டது. மாநில அரசு 1923ஆம் ஆண்டு இச் சங்கத்திற்கு நிதியுதவி வழங்கத் துவங்கியதிலிருந்து இது செயல்பட ஆரம்பித்தது. பம்பாயில் 1915இல் வீட்டுவசதிக் கூட்டுறவு ஆரம்பிக்கப்பட்டது. 1930இல் துவங்கிய பொருளாதார மந்த நிலையும் பின்னர் மூண்ட இரண்டாம் உலகப் போரும் வீட்டுவசதி இயக்கத்திற்குப் பேரிடியாக அமைந்தன. கட்டடம் கட்டும் செலவு மிகவும் உயர்ந்து போயிற்று. கட்டடச் சாமான்கள் விலையேற்றம் ஒருபுறமிருக்க, கிடைப்பதும் அருமையாயிற்று. அரசினரும் வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்குத் தாராளமாக நிதிவசதிகள் செய்து தரவில்லை. உலகப்போர் முடிந்து மக்கள் பெருமளவில் பட்டணங்களில் சென்று குடியேறத் துவங்கியதிலிருந்து வீட்டுவசதிப் பிரச்சினை உணரப்பட்டது. இதற்கிடையில் நாடு விடுதலைப் பெற்று ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. வீட்டுவசதிக் கூட்டுறவுகளின் உண்மையான வளர்ச்சிக்காலம் 1950இலிருந்து துவங்கியது என்று கூறுவதே சரி.

அட்டவணை

பிரதம வீட்டுவசதிக் கூட்டுறவுகளின் வளர்ச்சி

ஆண்டு	எண்ணிக்கை	உறுப்பினர் நிலை (இலட்சத்தில்)	நடை முறை முதல் (ரூ. கோடியில்)
1950-51	1482	0·91	13·93
1955-56	2963	1·82	28·18
1960-61	6451	3·79	57·83
1965-66	11765	7·57	113·85
1966-67	12723	8·16	153·78
1967-68	13817	8·94	154·71
1668-69	15029	10·00	190·77
1969-70	16308	11·11	329·58
1970-71	18050	11·82	373·52

மேற்கண்ட அட்டவணையின்வழி வீட்டுவசதிக் கூட்டுறவுகள் 1950 முதல் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்துள்ளமை புலப்படும். இருபது ஆண்டுகளில் இச் சங்கங்களின் எண்ணிக்கை பதின்மூன்று மடங்கு பெருகியது; உறுப்பினர் எண்ணிக்கையும் பதின்மூன்று மடங்கு பெருகியது; நடைமுறை முதல் இருபத்தேழு மடங்கு பெருகியது. இங்ஙனம் வீட்டுவசதிக் கூட்டுறவுகள் வளர்ந் திருந்தாலும், எல்லா மாநிலங்களிலும் ஒரே சீரான வளர்ச்சி காணப்படவில்லை. மகாராட்டிரம், குஜராத், தமிழ்நாடு, மைசூர் நீங்கலாகப் பிற மாநிலங்களில் வளர்ச்சி மிகவும் குன்றிய நிலையில் இருந்தது.

வீட்டுவசதிக் கூட்டுறவுகள் எந்த அளவுக்கு வெற்றிகரமாக இயங்கி வந்தன என்பது அவை எத்தனைக் கட்டடங்களைக் கட்டின என்பதைப் பொருத்திருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தாலும் குஜராத், மகாராட்டிரம், மைசூர் ஆகிய மாநிலங் களில் வீட்டுவசதி இயக்கம் செவ்வனே நடந்து வருவது புலனாகிறது. அஸ்ஸாம், ஹரியானா, கேரளம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முன்னேற்றம் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

அட்டவணை

வீட்டுவசதிக் கூட்டுறவுகள்-கட்டிய கட்டடங்கள்

ஆண்டு	தனி வீடுகள் கட்டப்பட்டது சங்கங்களால்	தனி வீடுகள் கட்டப்பட்டது உறுப்பினர் களால்	சங்கங்கள் கட்டிய குடியிருப்பு (Tenements)	மொத்தம்
1958—59	4,166	18,056	22,504	44,721
1959—60	5,457	14,692	25,526	45,675
1960—61	2,954	11,536	18,257	32,677
1961—62	4,849	12,575	10,754	28,188
1962—63	9,382	12,167	9,108	30,657
1963—64	10,211	13,890	18,952	43,053
1964—65	13,414	14,450	6,395	34,229
1965—66	6,666	10,421	15,218	32,305
1966—67	6,439	9,102	15,571	31,112
1967—68	8,320	11,672	13,563	33,555
1968—69	3,208	20,019	20,900	44,127
1969—70	3,392	15,872	25,470	44,734
1970—71	4,134	13,434	15,805	33,373

1970-71 இறுதியில் 16 மாநில வீட்டுவசதிக் கூட்டிணைப்புகள் ரூ. 103·33 கோடி நடைமுறை முதலுடன் செயல்பட்டுவந்தன. இவற்றின் செலுத்திய முதல் ரூ. 10·08 கோடியாகவும், காப்பு

நிதியும் பிற நிதிகளும் ரூ. 2·19 கோடியாகவும் இருந்தன. இக் கூட்டுறவுகள் மொத்தம் ரூ. 88·69 கோடியளவு கடன்கள் வாங்கி யிருந்தன. இவை வழங்கியிருந்த கடன்கள் ரூ. 96·11 கோடி நிலுவை நின்றது. இவற்றின் உறுப்பினர்கள் கட்டிய தனி வீடுகளின் எண்ணிக்கை 9,616; சங்கங்கள் கட்டிய தனி வீடுகளின் எண்ணிக்கை 343. இவற்றில் 13 கூட்டிணைப்புகள் இலாபத்திலும் 3 நட்டத்திலும் 1970-71இல் செயல்பட்டுவந்தன.

பிரதம வீட்டுவசதிக் கூட்டுறவுகள் 1970-71இல் இருந்த நிலையைக் காண்போம். மொத்தம் 18,050 சங்கங்கள் ரூ. 373·52 கோடி நடைமுறை முதல் கொண்டிருந்தன. இவற்றின் செலுத் திய முதல் ரூ. 31·45 கோடியாகவும், காப்பு நிதியும் பிற நிதி களும் ரூ. 9·70 கோடியாகவும் இருந்தது. பிரதம கூட்டுறவுகள் அரசினரிடமிருந்தும், மத்திய நிதிய முகமைகளிடமிருந்தும், பிற நிலையங்களிடமிருந்தும் ரூ. 217·40 கோடி கடன் வாங்கி யிருந்தன. இச் சங்கங்களின் சொந்தச் சொத்துகளாக இருந்த நிலம், கட்டடங்களின் மதிப்பு ரூ. 218·12 கோடியாகவும், இவை வழங்கிய கடனில் நிலுவை நின்றது ரூ. 67·59 கோடியாகவும் இருந்தது. இச் சங்கங்கள் கட்டிய தனி வீடுகள் 4,134; இவற்றின் உறுப்பினர் கட்டிய தனி வீடுகள் 13,434; சங்கங்கள் கட்டிய குடியிருப்புகள் 15,805 பிரதம சங்கங்களில் 6,617 இலாபகர மாகவும், 6,853 நட்டத்திலும், 4,580 இலாபநட்டமின்றியும் 1970-71இல் இயங்கிவந்தன.

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation of India) வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்கு அவற்றின் மாநில உச்சி நிதிய முகமைவழி 1971-72 வரை ரூ. 117·5 கோடி கடன் வழங்கியிருந்தது.

மைசூர் அரசு 1966ஆம் ஆண்டு மைசூர் மாநில அட்டவணை வகுப்பினர், அட்டவணை பழங்குடியினர் கூட்டுறவு வீட்டுவசதிக் கூட்டுரு (Mysore state scheduled Castes and Scheduled Tribes Co-operative Housing Corporation) என்ற நிலையத்தை உருவாக்கி அதற்குப் பங்கு முதல் ரூ. 10·00 இலட்சமும், கடன் ரூ. 3·40 கோடி யும் வழங்கியது. 1971-72இல் இக்கூட்டுருவிற்கு ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு ரூ. 40 இலட்சம் கூடுதல் கடன் வழங்கியது. கூட்டுருவின் கடன் பெறுதிறனை மிகுதிப்படுத்தும் பொருட்டு மாநில அரசு மேலும் ரூ. 50·00 இலட்சம் பங்கு முதல் வழங்கியது. 1972 டிசம்பர் இறுதியில் இக் கூட்டுருவில் 187 சங்கங்கள் உறுப்பினர் களாகச் சேர்ந்திருந்தன. இவற்றின் செலுத்திய முதல் ரூ. 86·22

இலட்சமாக இருந்தது. இக் கூட்டுரு 176 சங்கங்களிலுள்ள 22,792 உறுப்பினர்களுக்கு ரூ. 4·88 கோடி கடன்கள் அனுமதித்திருந்தது.

மிக எளிய நிலையிலுள்ளோர் வீட்டுவசதிக் கூட்டுறவுகள்வழி குடியிருக்க வீடுகள் கட்டிக் கொள்ள நீண்ட காலக் கடன் வழங்கும் பொருட்டு டிசம்பர் 1970இல் ராஜஸ்தான் மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதி நிதிச்சங்கம் (The Rajasthan state Co-operative Housing Finance Society) நிறுவப்பெற்றது. இச் சங்கத்தின் செயற்பாடு பெரும்பாலும் கிராமப்புறங்களில் அமைந்துள்ளது. இச் சங்கத்தின் விதிகளின்படிக் கூட்டுறவு ஆண்டொன்றில் வழங்கப்படும் கடன்களில் குறைந்தது 50% அட்டவணை வகுப்பினர்/பழங்குடியினர் (Scheduled Castes/Tribes) களுக்காக இயங்கி வரும் வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்கென இருத்தல்வேண்டும். அக்டோபர் 1972 வரை 1,330 வீடுகள் கட்ட 40 அட்டவணை வகுப்பினர்/பழங்குடியினர் சங்கங்களுக்கு ரூ. 73·67 இலட்சம் கடன் இச் சங்கம் வழங்கியிருந்தது.

ஐந்தாம் இந்தியக் கூட்டுறவு மாநாட்டின் பரிந்துரையின் பேரில் இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியம் (National Co-operative Union of India), தேசியக் கூட்டுறவு வீட்டுவசதிக் கூட்டிணைப்பு (National Co-operative Housing Federation) ஒன்றினை உருவாக்கியுள்ளது. மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதிக் கூட்டிணைப்புகள்/நிதியச் சங்கங்கள் இதன் உறுப்பினர்களாகச் சேரலாம். 1970-71இல் ஏழு மாநிலக் கூட்டுறவுகள் இதில் உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தன. வீட்டு வசதிக் கூட்டுறவு களின் தொழில் நுட்ப, நிதிய, நடைமுறைச் சிக்கல்களை ஆராய்ந்து அவற்றிற்குத் தீர்வுகாண ஒரு பொது மேடையாகத் தேசியக் கூட்டிணைப்புத் திகழ்கிறது. பலப்பல மாநிலங்களில் வீட்டு வசதிக் கூட்டுறவுகள் எங்ஙனம் அமைக்கப்பட்டு எவ்வண்ணம் செயலாற்றுகின்றன என்பதையும், வீட்டுவசதிக் கூட்டுறவுகள் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள சட்ட இடர்ப்பாடுகள் என்ன என்பதையும் தேசியக் கூட்டிணைப்பு ஆராய்ந்து வந்தது. பிற நாடுகளின் ஒத்துழைப்புடன் வீட்டுவசதிக் கூட்டுறவுகளை எங்ஙனம் மேம்படுத்தலாம் என்றும் ஆராய்ந்தது.

நிதி ஆதாரங்கள்

வீட்டுவசதிக் கூட்டுறவுகள் தம் நடவடிக்கைகளுக்கு வேண்டிய நிதியை எங்கிருந்து பெறுகின்றனவென்று காண்போம்:

1971 ஜூன் இறுதியில் மாநில வீட்டுவசதிக் கூட்டுறவுகளும், பிரதம வீட்டுவசதிக் கூட்டுறவுகளும் தம்முடைய நடைமுறை முதலைக் கீழ்க்கண்ட வழிகளில் பெற்றிருந்தன:

	மாநிலாக் கூட்டுறவுகள்	(ரு. கோடியில்) பிரதமக் கூட்டுறவுகள்
செலுத்திய முதல்	10·01	31.45
காப்பு நிதி, பிற நிதிகள்	2·19	9·70
வாங்கிய கடன்கள்:		
(i) அரசினரிடம்	5·01	30·32
(ii) மத்திய நிதி முகமைகளிடம்	7·97	70·11
(iii) பிறரிடம்	75·71	116·97

மாநில வீட்டுவசதிக் கூட்டுறவுகள் வைப்புகளை ஏற்றும் வேறுவழிகளில் கடன் பெற்றும் பிரதம சங்கங்களுக்குக் கடனளித்து வந்தன. ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு மிகப் பெருமளவில் வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்குக் கடனுதவி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களுக்கு அரசினர் நிதியுதவி வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. இவற்றில் முக்கியமான திட்டங்களைக் காண்போம்:

(i) உதவித் தொகை வழங்கப்படும் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டம் (Subsidised Industrial Housing Scheme)

இத் திட்டத்தின்கீழ்த் தொழிலாளர்களுக்கு என ஏற்படுத்தப் பட்ட கூட்டுறவுகளுக்கு அளிக்கப்படும் கடன் வசதி அளவு 50%இலிருந்து 65% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்துடன் 25% உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

தொழிலாளர் வீட்டுவசதிக் கூட்டுறவுகள் கடன் தொகையை மூன்று சமமான தவணையில்—நிபந்தனைகளை ஏற்றதும் முதல் தவணை; அஸ்திவாரம் முடிந்தவுடன் இரண்டாம் தவணை; கூரை மட்டம் வந்தவுடன் மூன்றும் தவணை என்று கடன்பெற வகை செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர் தமது சேம நிதியிலிருந்து (provident Fund) 10% அளவு தொகையை வீடு கட்டும் செலவுக்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இத் தொகையைச் சேம நிதியில் திருப்பிச் செலுத்த வேண்டுவதில்லை.

தொழிலாளர் கூட்டுறவுகளுக்குள்ள எல்லா நிதியுதவிகளும் ஆலை நிருவாக ஊழியர் கூட்டுறவுகளுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

(ii) குறைந்த வருமான வகுப்பினர் வீட்டுவசதித் திட்டம்
(Low Income Group Housing Scheme)

ஆண்டொன்றுக்கு ரூ. 6,000-க்கு மிகாத வருமானமுள்ள நபர்களுக்கு வீடு கட்ட ஆகும் மொத்தச் செலவில் 80% அளவுக்கு அல்லது ரூ. 8,000 இவற்றில் குறைவானது ஏதோ அந்தத் தொகை கடனாக அளிக்கப்படும். 1954இல் கொண்டுவரப்பட்ட இத் திட்டப்படி இந்திய அரசு மாநில அரசுகளுக்கு 30 ஆண்டுக் கடன்கள் வழங்கும். மாநில அரசுகள் தனி நபர்களுக்கும், தன்னாட்சி நிலையங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வீடு கட்டக் கடனுதவி வழங்கும். (தமிழ்நாட்டில் இத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உச்சக் கடன் அளவு ரூ. 10,000 ஆக இருந்தது.)

(iii) நடுத்தர வருமான வகுப்பினர் வீட்டுவசதித் திட்டம்
(Middle Income Group Housing Scheme)

ஆண்டொன்றுக்கு ரூ. 6,000 முதல் ரூ. 15,000 வரை வருமானமுள்ள நபர்களுக்கு, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு அளித்த நிதியினைக் கொண்டு வீடுகட்டக் கடன் வழங்க 1959இல் திட்டமொன்று உருவாக்கப்பட்டது. வீடு கட்ட ஆகும் செலவில் 80% அல்லது ரூ. 16,000 ஆகியவற்றில் எது குறைந்த தொகையோ அத் தொகை (முன்னரே வீடுகட்டும் மனை இல்லாதோருக்கு ரூ. 20,000 உச்ச அளவுத் தொகை) கடனாக வழங்கப்பட்டது.

(iv) ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவின் சொந்த வீடு கட்டிக் கொள்ளுக' (Own your Home) திட்டம்

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவின் திட்டத்தின்கீழ்ச் சொந்த வீடு கட்டிக்கொள்ள விரும்பும் பாலிசிதாரர் (Policyholder) உயர்ந்த அளவு ரூ. 1,00,000 வரை ஆனால், சொத்தின் மதிப்பில் 66·6% முதல் 85%க்கு மிகாது கடன் பெறலாம். இத் திட்டம் குறிப்பிட்ட சில நகரங்களில் மட்டுமே அமுலாயிருந்தது. இத் திட்டத்தின்கீழ்க் கடன் கோருபவருக்குச் சொந்தமாக மனையிருக்கவேண்டும்; மேலும் அவர் தனது வீட்டை ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவுக்கு அடைமானம் செய்து தரவேண்டும். கடன் தொகைக்குப் போதுமான அளவுக்கு ஆயுள் காப்பீட்டுப் பாலிசிகளைக் கடன் கோருபவர் பிணையாகத் தரவேண்டும். காப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையில் 9/10 பங்குக்குள்ளான தொகையே கடனாக அளிக்கப்படும்.

(v) **அரசினர் பணியாளர்கள் வீட்டுவசதித் திட்டம்**

மத்திய அரசு, தனது ஊழியர்கள் வீடு கட்டிக்கொள்ள 1956இல் ஒரு கடனுதவித் திட்டத்தைக் கொண்டுவந்தது. மற்றொரு திட்டத்தின்படி ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, வீடுகள் கட்டி மாநில அரசினரின் பணியாளர்களுக்கு வாடகைக்குவிடும் பொருட்டு மாநில அரசுகளுக்கே கடனுதவியளித்தது.

(vi) **குடிசை மாற்றுத் திட்டம்**

நடைபாதையில் குடியிருக்கும் ஏழை எளிய மக்களுக்குக் குடியிருப்புக் கட்டித்தர 1956இல் இத் திட்டம் கொண்டுவரப் பட்டது. பல மாநிலங்களில் சேரிகளை அகற்றி நல்ல குடியிருப்புகளை உருவாக்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(vii) **கிராம வீட்டுவசதித் திட்டம்**

கிராமங்களில் வீட்டுவசதியைப் பெருக்க 1957இல் இத் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஐயாயிரம் கிராமங்களில் அமுல் நடத்தப்படவிருக்கும் இத் திட்டத்தின்கீழ் வீடொன்றுக்கு ரூ. 3,000 அல்லது வீடுகட்டும் செலவில் 80% இதில் எது குறை வான தொகையோ அத் தொகை கடனாக வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பற்பல திட்டங்களின்கீழ் வீட்டுவசதிக் கூட்டுறவுகள் அமைக்கப்பட வசதிகள் செய்து தரப்படுகின்றன. வீட்டுவசதி வாரியங்கள் பல மாநிலங்களில் அமைக்கப்பட்டு அவற்றின்வழி வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்கு நிதியுதவி அளிக்கப் படுகின்றது. இவ்வளவு திட்டங்களும் வசதிகளும் இருந்தும் வீட்டு வசதி பற்றாக்குறை இருந்து வருகிறது.

வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சிக் கூட்டுரு (Housing and Urban Development Corporation)

ஆகஸ்டு 1971இல் இந்திய அரசு வீட்டுவசதித் திட்டங்களுக்கு ஓர் ஊக்கம்தரப் பொதுத்துறை நிறுவனமாக (Public Sector undertaking) வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சிக் கூட்டுரு (HUDCO)வை அமைத்தது. வீடுகள் கட்டுவதை ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்து, வேகமாகச் செயல்படுத்தவும் மேற்கூறியவாறு நகர்ப்புற வளர்ச்சியினை மேம்படுத்தவும் இக் கூட்டுரு அமைக்கப்பெற்றது. இதனுடைய அனுமதித்த முதல் ரூ. 10 கோடியாகும்.

வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கூட்டுருவின் முக்கிய பணிகளாவன;

(i) வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை மேற் கொள்ளுவது அல்லது திட்டங்களுக்கு நிதிவசதியளிப்பது.

(ii) முழுமையாக அல்லது பகுதி புதிய அல்லது புறநகர்த் திட்டங்களை மேற்கொள்ளுவது அல்லது திட்டங்களுக்கு நிதிவசதி யளிப்பது.

(iii) வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சிக்காக வீட்டுவசதி வாரியம், வளர்ச்சி ஆணையம் (Development Authority), நகர்ப்புற வளர்ச்சி வாரியம் போன்ற முகமைகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்குதல்.

(iv) கட்டடச் சாமான்கள் தயாரிப்புத் தொழில்களை மேற் கொள்ளல் அல்லது தயாரிப்புக்கு நிதிவசதியளித்தல்.

பொருளாதாரத்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள வலிவற்றோர் (Weaker Sections) களுக்கும், குறைந்த வருமான முடைய வகுப்பினருக்கும் உதவி செய்யும் பொருட்டே இந்தக் கூட்டுறு அமைக்கப்பட்டது.

1972 டிசம்பர் இறுதிவரை 12 மாநிலங்களில் 37 வீட்டுவசதித் திட்டங்களுக்கு இக் கூட்டுறு ரூ. 50 கோடி கடன் அனுமதித் திருந்தது. இத் தொகையில் ரூ. 10 கோடி பட்டுவாடா செய்யப் பட்டிருந்தது. துவக்கத்தில் இக் கூட்டுறு அளிக்கும் கடன்கள் 12 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருந்தது; அண்மையில் (1973இல்) கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலம் பொருளாதார வலிவற்றோருக்கு 20 ஆண்டு களாகவும், குறைந்த வருமான வகுப்பினருக்கு 15 ஆண்டு களாகவும் நீட்டிக்கப்பட்டது. ரூ. 325 கோடி கடன் வழங்கி 3,25,000 வீடுகள் கட்ட ஐந்தாண்டுத் திட்டமொன்றை வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கூட்டுறு தயாரித்துள்ளது. மார்ச்சு 1972 முடிய இக் கூட்டுறு அனுமதித்திருந்த 19 திட்டங்களின்கீழ் 29,500 வீடுகளும், 18,900 மனைகள் சீரமைப்பும் மேற்கொள்ளப் படவிருந்தன. பொருளாதார வலிவற்றோருக்கு அளிக்கப்படும் கடன்கள்மீது 6·75%வட்டி வசூலிக்கப்படும். காலத்தில் திருப்பிச் செலுத்தினால் 0·25% தள்ளுபடியுண்டு. ஆகவே, நிகர வட்டி 6·50%ஆக உள்ளது. பிறக் கடன்கள்மீது 8%வட்டி விதிக்கப்படு கிறது. காலப்படித் திருப்பிச் செலுத்தினால் ½% தள்ளுபடியுண்டு. எனவே, நிகரவட்டி 7·50%ஆக உள்ளது.

வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சிக் கூட்டுருவும் வீட்டுவசதிக் கூட்டுறவுகளும்

மாநில அரசுகள், மாநில வீட்டுவசதி வாரியம், நகர வளர்ச்சி ஆணையம், பல்கலைக்கழகங்கள், பொதுத்துறை கம்பெனிகள், கூட்டுருக்கள் சட்டமுறை அமைப்புகள், தேர்ந்தெடுக்கப்பட்ட வீட்டுவசதிக் கூட்டுறவுகள் போன்ற நிறுவனங்களுக்குத் தொழில் நுட்பக் கண்ணோட்டத்திலும் நிதிவளக் கண்ணோட்டத்திலும் செவ்வனே செய்து முடிக்கக் கூடிய கீழ்க்காணும் திட்டங்களுக்குக் கூட்டுரு கடன் வழங்கலாம்:

(i) வீடுகள் கட்டுதல்.

(ii) வீடுகட்டுதற்கு மனைகளைத் தயாரிக்க நிலத்தைச் சீர்படுத்தல்.

(iii) வாணிக மையமாகவுள்ள ஊர்களையும் பொருளாதார வலிவற்ற வகுப்பினர் வீட்டுவசதியினையும் மேம்படுத்த ஒன்று சேர்ந்த (Composite) திட்டங்கள்.

(iv) செங்கல் சூளை அல்லது கட்டடச் சாமான் தயாரிக்கும் திட்டம்.

(v) நகர்ப்புற வளர்ச்சிக்கான குறிப்பிட்ட திட்டங்கள்.

பொருளாதார வலிவற்ற வகுப்பினருக்கும், குறைந்த வருமான வகுப்பினருக்கும் எவ்வளவு மிகுதியாக முடியுமோ அவ்வளவுக்குக் கடன் வசதிகள் இக் கூட்டுருவால் அளிக்கப்படும்.

வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்குக் கடன்வசதிகளையளிக்க இக் கூட்டுரு கீழ்க்கண்ட விதிகளை வகுத்துள்ளது:

1. கூடியவரை வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கமொன்றின் உறுப்பினர்கள் ஒரு நிறுவனம் அல்லது தொழிலமைப்பின் ஊழியர்களாக இருத்தல் நன்று.

2. கூட்டுறவுச் சங்கம் கூட்டுருவிடமிருந்து கடன்வாங்கும் தகுதிபெறக் குறைந்தது 25 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் நபர் பொருளாதார வலிவற்ற வகுப்பினர், குறைந்த வருமான வகுப்பினர், அல்லது நடுத்தர வருமான வகுப்பினர் என்ற

நிலையிலிருக்க வேண்டும். உறுப்பினரொருவரின் குடும்ப வருமானம் உச்ச அளவு திங்களொன்றுக்கு ரூ. 1,500-க்கு மிகக் கூடாது.

4. கூட்டுறவுச் சங்கம் தன்னுடைய சேமிப்போ அல்லது வசூல் தொகையோ கொண்டு மனையை வாங்கித் தன் உடைமையில் வைத்திருக்கவேண்டும்.

5. மொத்தக் கட்டடச் செலவுகளைக் கூட்டுரு குறிப்பிட்ட கட்டங்களில் முடிவுற்ற கட்டட வேலையை மேற்பார்வை செய்து பின்னர் வழங்கும்.

6. கடன் குறிப்பிட்ட காலத்துக்குள் திருப்பிச் செலுத்தப் படவேண்டும். கூடியவரை, திங்கள் தோறும் ஊதியத்திலிருந்து உறுப்பினரின் பணியாண்மையரோ அல்லது கூட்டுறவுச் சங்கமோ தவணைத் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டும். கடனுக்குப் பிணையாகப் பணியாண்மையர் (Employer) அல்லது வங்கியின் பொறுப்புறுதி, அல்லது தக்க மதிப்புள்ள சொத்துகளின் மீது அடைமானம் தரப்படல்வேண்டும்.

7. அமைப்புத் திட்டம் (Layout Plans), பாங்கு (Design) முதலிய கூட்டுருவால் அனுமதிக்கப்படவேண்டும்.

8. பத்தாண்டுகள் அல்லது கடன் முழுமையாகத் திருப்பிச் செலுத்தப்படும் காலம்—இவற்றில் எது நீண்டகாலமாக உள்ளதோ அக் காலம் முடியும்வரை வீடு அல்லது வீட்டுப் பகுதி (Flat) விற்க அல்லது மாற்றித் தரப்படலாகாது.

9. கூட்டுருவின் பிற விதிகளனைத்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் கடன்களுக்கும் பொருந்தும்.

தற்போது இருந்துவரும் இரண்டடுக்கு வீட்டுவசதிக் கூட்டுறவு அமைப்பைப் பாதிக்காத வகையில் கூட்டுரு செயல்பட வேண்டும். வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்கு நிதிவசதிகள் அளித்து வரும் தற்போதுள்ள முகமைகளுடன் இக் கூட்டுரு கூடிச் செயல் பட்டு வருவது மிகவும் இன்றியமையாதது—ஏன் விரும்பத் தக்கதுங்கூட.

வீட்டுவசதிக் கூட்டுறவுகள் மீதான ஆய்வுக்குழு கீழ்க்காணும் பரிந்துரைகளைச் செய்துள்ளது:

அமைப்பு : நூறு பிரதம வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும், மாநில உச்சி வீட்டுவசதிச் சங்கம் நிறுவப்படவேண்டும்.

நிதிவசதி : உச்சிச் சங்கம் நிதிவசதியளிக்கும் சங்கமாகவும் செயலாற்றவேண்டும். உச்சிச் சங்கத்துக்கு அரசினர், காப்பீட்டுக் கம்பெனிகள் பிரதம சங்கங்கள் பங்குமுதல் வழங்கவேண்டும். மற்றும் மாநில அரசின் பொறுப்புறுதியுடன் கூடிய கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டும், அரசினர், ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, வாணிக வங்கிகள், கூட்டுரு வங்கிகள், வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கூட்டுரு முதலியவற்றிடம் கடன் பெற்றும் உச்சிச் சங்கம் நிதி திரட்டவேண்டும்.

உச்சிச் சங்கங்களின் 3 முதல் 5 ஆண்டுகளுக்கான நிருவாகச் செலவைச் சமாளிக்க அரசு உதவி வழங்கவேண்டும்.

வீட்டுவசதித் திட்டங்களுக்கென மாநில அரசுகள் ஒதுக்கும் நிதியில் 20 முதல் 25 விழுக்காடு கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கப் படவேண்டும். வளர்ச்சியுற்ற மாநிலங்களில் இவ்விழுக்காடு 40 ஆக உயர்த்தப்படவேண்டும்.

நிலம் ஒதுக்கீடு : நியாயமான விலைக்கு வீட்டுவசதிக் கூட்டுறவு களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்படத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். மாநில அரசினரின் நிலமாக இருப் பின் வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்கு ஒதுக்கீடு செய்வதில் முதலுரிமை வழங்கப்படவேண்டும்.

கட்டடச் சாமான்கள் : மாநில அரசுகள் சிமெண்ட், இரும்பு போன்ற கட்டடச் சாமான்களை வீட்டுவசதிக் கூட்டுறவு களுக்கெனத் தனியாக ஒதுக்கீடு செய்யவேண்டும்.

நிருவாக, பிற ஏற்பாடுகள் : வீட்டுவசதிக் கூட்டுறவின் வளர்ச் சிக்காக ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுப்பதிவாளர் ஒருவரும் அவருக்கு உதவியாகப் பிற பணியாளர்களும் நியமிக்கப்பட வேண்டும். வீட்டுவசதிக் கூட்டுறவுகளின் நடப்பில் இடர்ப் பாடுகள், சிக்கல்கள், பிரச்சினைகள் ஏற்பட்டால் அவற்றிற்குத் தீர்வுகாண தொடர்புற்ற மாநில அரசின் துறைகள் (Departments), உச்சி வீட்டுவசதிச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படவேண்டும். வீட்டுவசதிக் கூட்டுறவுகள் கட்டும் வீடுகளுக்கு நகர மன்றங்கள் வரிவிதிப்பில் தனிச் சலுகை காட்டவேண்டும்.

வீட்டுவசதிச் சங்கங்களின் நடப்பில் சில முறைகேடான நடவடிக்கைகள் ஆங்காங்கே காணப்படுவதுண்டு. இவற்றை

நீக்கக் கூட்டுறவின்மீதான குழு (1965) நல்ல பல யோசனைகளைத் தந்துள்ளது. அவற்றைக் காண்போம்:

(i) எளிய நிலையிலுள்ள சிறிய மனிதர்களின் நன்மைக்குத் தான் வீட்டுவசதிச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, குறிப்பிட்ட தொகைக்கு மிகாத அளவு வருமானமுள்ளவர்களே இச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படலாம். கட்டப் படும் பரப்பு, கட்டடச் செலவு ஆகியவை குறித்து உச்ச அளவுகள் நிருணயிக்கப்படவேண்டும்.

(ii) மேற்கண்டவாறு வருமான அளவுக்குச் சங்கத்தின் உறுப் பினரனைவரும் உட்பட்டிருந்தால்தான் கட்டடச் சாமான்கள் அரசாங்க ஒதுக்கீட்டிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

(iii) மாநில வீட்டுவசதி வாரியம் மேற்கூறிய தன்மையுள்ள சங்கங்களுக்கு மட்டுமே கடன் வசதியளிக்கவேண்டும்.

(iv) ஒரே ஊர், வட்டாரம் அல்லது நகரில் வீடு வைத்திருக் கும் ஒரு நபருக்குச் சங்கம் குடியிருக்கும் வீடொன்றை ஒதுக்க லாகாது.

(v) சங்கத்தின்வழி பெற்ற வீட்டைக் குடிக்கூலிக்கு விடுவது தடைசெய்யப்படவேண்டும். தவிர்க்கமுடியாத காரணங்களால் வாடகைக்கு விட நேர்ந்தால், நிருவாகக் குழுவினரின் அனுமதி பெற்று மட்டுமே அங்ஙனம் செய்யலாம். அந்நிலையிலும் நிருவாகக் குழுவினர் குடிக்கூலித் தொகையை நிருணயித்து அத் தொகைக்கே வீடு வாடகைக்கு விடப்படலாம்.

(vi) வீட்டுவசதிக் கூட்டுறவின்வழி பெற்ற வீட்டை மற் றொருவருக்கு விற்பது தடைசெய்யப்படவேண்டும். மிகவும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நிருவாகக் குழுவினரின் முன் அனுமதி பெற்றுச் சில நிபந்தனைகளின் பேரில் விற்பனை அனுமதிக் கப்படலாம். விற்பனைவழி கிடைக்கும் கூடுதல் தொகையில் சங்கத்திற்கு ஒரு பங்கு தரப்படவேண்டும்.

(vii) ஒப்பந்தப்படி சங்கத்திற்கு உறுப்பினர் தவணை செலுத் தத் தவறினல், வீட்டைச் சங்கம் திருப்பி எடுத்துக்கொண்டு காத்திருக்கும் பட்டியலில் உள்ள உறுப்பினருக்கு அதை ஒதுக்க வேண்டும். இங்ஙனம் ஒதுக்கல் பெறக் காத்திருக்கும் உறுப்பினர் பட்டியலைச் சங்கம் தயார் செய்து அவ்வப்போது அதைச் சங்க

அலுவலகத்தில் அனைவரும் அறியும்வண்ணம் பார்வைக்கு வைக்க வேண்டும்.

(viii) உச்சி வீட்டுவசதிச் சங்கம் தனது உறுப்பினர் சங்கங்களை மேற்பார்வை செய்ய அதிகாரங்கள் பெற்றிருக்கவேண்டும்.

(ix) உச்சிச் சங்கம் படிப்படியாகக் கட்டுதல் பணியினை மேற்கொண்டு பெருமளவில் செயல்படுவதால் ஏற்படும் சிக்கனங்களைப் பெற ஏற்பாடு செய்யவேண்டும்.

மேற்கண்ட விதிகளை விழிப்பாகக் கடைப்பிடித்தால், வசதியும் வளமுமுள்ள செல்வர்கள் கூட்டுறவுகளில் உறுப்பினர்களாகி மிகவும் ஆடம்பரமான முறையில் பெரும் மாளிகைகளைக் கட்டிக் கொள்ளும் வாய்ப்புப் பெறுகிறார்கள் என்று கூற இடமிராது. ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவும், மாநில அரசினரும் தாராளமாகக் கடன்வசதிகளையளித்துக் கூட்டுறவுகளை ஊக்குவிக்கவேண்டும். கூடியவரை அரசினர் திட்டமிடும், குறைந்த வருமான வகுப்பினர் வீட்டுவசதி ஏற்பாடுகள் கூட்டுறவு அமைப்பில் உருவாக்கப்படவேண்டும். உண்மையிலேயே கூட்டுறவுப் பண்புகளான தன்னம்பிக்கை, சிக்கனம் முதலியவற்றைக் கற்கும் கல்விக்கூடமாக வீட்டுவசதிக் கூட்டுறவுகள் திகழவேண்டும். வருங்காலத்தில் வீட்டுவசதிக் கூட்டுறவுகள் மேலும் வளர்ந்து சமுதாய நலத்திற்கும் மேம்பாட்டிற்கும் உறுதுணையாக நிற்குமென்பது உறுதி.

15. தொழிற் கூட்டுறவுகள்

தொன்று தொட்டு நம் நாட்டில் கைவினைஞர்கள் மிகவும் சிறந்த வேலைப்பாடுடைய பலப்பல பொருள்களை உற்பத்தி செய்வதில் வல்லவர்களாக இருந்து வந்துள்ளனர். நம் நாட்டு மக்களில் கணிசமானதொரு பகுதியினருக்கு இக் கைத் தொழில்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வேலை வாய்ப்பைத் தந்தன. சிலருக்கு இத் தொழில்கள் முழுநேர வேலை யாகவும் சிலருக்குப் பகுதிநேர வேலையாகவும் அமைந்திருந்தன. கைத்தறி, மண்பாண்ட வேலை, வளையல் கண்ணாடிச் சாமான்கள், சாயம் பூசுதல், கையால் காகிதம் தயாரிப்பு, காலணி தயாரிப்பு, உலோகங்கள்மீது செதுக்கல் போன்ற பலப்பல துறைகளில் மிகச் சிறந்த திறன் பெற்றிருந்தனர். நம் நாட்டின் பொருளாதாரத்தில் குடிசைத் தொழில்களும் சிற்றளவு தொழில்களும் மிகவும் முக்கிய மானதோர் இடத்தைப் பெற்றுள்ளன. கூடுதல் வருமானத்தை யும் வேலை வாய்ப்பையும் தருவது மட்டுமன்றி, இத் தொழில்கள் சமுதாயத்தில் வலிவற்ற வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்த உதவுகின்றன. இத் தொழில்கள்மீது தேவைப்படும் முதலீடும் மிகக் குறைவே.

உலகிலுள்ள வளர்ச்சிக் குன்றிய நாடுகளில் தொழிற் கூட்டுறவுகள் அமைக்கப்படுவதற்கு இரு முக்கிய காரணங்கள் காணப்படுகின்றன. ஒன்று பொருளாதாரம் பற்றியது, மற்றது சமுதாய நோக்குப் பற்றியது. பொருளாதாரக் கண்ணோட்டத் தோடு நோக்கின் தொழிற் கூட்டுறவுகள் நாட்டின் உற்பத்தியை உயரச் செய்கின்றன; எளிய மக்கள் வளம்பெற வாய்ப்புகளையும் தமது உற்பத்திப் பொருளைப் பேரம் பேசி நல்ல விலைக்கு விற்கும் வாய்ப்பினையும் அளிக்கின்றன; நாட்டில் முதலாக்கம் (Capital formation) விரைவாகக் கூடவும் உதவுகின்றன; கூடுதல் வருமானம், வேலை வாய்ப்பு ஆகியவற்றிற்கு வாய்ப்பளிக்கின்றன.

குடிசைத் தொழில்களையும், கிராமத் தொழில்களையும் கூட்டுறவு முறையில் அமைத்து அவற்றை வளர்க்க வேண்டுமென இந்திய அரசின் 1948 ஆம் ஆண்டு தொழிற் கொள்கை தீர்மானம் (Industrial Policy Resolution of the Government of India) வற்புறுத்தியது. இதற்கு முன்னர் விவசாயத்தின்மீதான அரசுகுழுக் கடன், கச்சாப் பொருள், சந்தையிடுகை வசதிகளைப் பெற, கிராமக் கைவினைஞர்கள் கூட்டுறவுகள் அமைக்கப்பட வேண்டுமென யோசனை கூறியது. சிறு தொழில்கள் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட வேண்டுவதன் அவசியத்தை இந்திய அரசியலமைப்புச் சட்டமும் உணர்த்தும் வகையில் பிரிவு 43 அமைந்துள்ளது. 'கிராமப் புறங்களில் தனிநபர் அல்லது கூட்டுறவு அடிப்படையில் குடிசைத் தொழில்களை மேம்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளக் கடவது' 1956 ஆம் ஆண்டுத் தொழிற் கொள்கை தீர்மானத்திலும், தனியார் துறை நடவடிக்கைகள் மேலும் மேலும் கூட்டுறவு முறையில் அமைக்கப் படுதல்வேண்டும் என்ற கருத்து வற்புறுத்தப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டங்களிலும் கிராம, சிற்றளவு தொழில்களைக் கூட்டுறவு முறையில் அமைக்க, பெருவகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொழிற் கூட்டுறவின் நோக்கங்கள்

பொதுவாகக் கூறுமிடத்துத் தொழிற் கூட்டுறவுகள் கீழ்க் காணும் நோக்கங்களுக்காக அமைக்கப்படுகின்றன:

(i) தொழிலாளிகளுக்குக் கச்சாப் பொருள், கருவிகள் பிற சாதனங்கள் அளித்தல்.

(ii) உறுப்பினர் உற்பத்தி செய்த பொருள்களைச் சந்தையில் விற்றல்.

(iii) உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகை ஏற்பதன் வழி அவர்களிடையே சிக்கனம், சேமிப்பு ஆகிய பண்புகளை வளர்த்தல்.

(iv) உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கல்.

(v) அரசினரிடமிருந்தும், பிற பொது நிலையங்களிடமிருந்தும் ஒப்பந்தங்கள் பெற்று அவற்றைத் தம் உறுப்பினர்களின் உதவி கொண்டு நிறை வேற்றுதல்.

(vi) உறுப்பினர்களுக்கு வாடகைக்கு விடும் பொருட்டு இயந்திரங்களை வாங்குதல்.

(vii) உற்பத்தி நுணுக்கங்களையும், தொழில் முறைகளையும் உறுப்பினர்களுக்குக் கற்றுத்தர பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

(viii) உறுப்பினர்களுக்குச் சொந்தமான கச்சாப் பொருள்கள், முடிவுற்ற பொருள்கள்மீது கடன் வழங்கி உதவுதல்.

(ix) மேற்கண்ட நோக்கங்களை அடைய தேவைப்படும் பிற சார்ந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்.

குடிசைத் தொழில், கிராமக் கைத் தொழில், சிறு தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோர் வசதிக் குறைவான நிலையிலுள்ள சிறு மனிதர்களே. இவர்கள் கைவினைஞர்களாகவும், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாகவும் இருந்தும் தமது திறமையினால் முன்னுக்கு வர வாய்ப்பில்லாத சூழ் நிலையிலுள்ளனர். பெரிய வியாபாரிகளும் வணிகர்களும் கச்சாப் பொருள் வாங்கல், உற்பத்தியான பொருள்களை விற்றல் போன்ற நடவடிக்கைகளில் இந்த எளிய மக்களை ஏய்த்துச் சுரண்டுகின்றனர். தொழிற் கூட்டுறவுகளின்வழி இம் மக்கள் பலப்பல நன்மைகள் பெறுகின்றனர். அவற்றில் சிலவற்றைக் காண்போம்:

(அ) கச்சாப் பொருள், தொழிற் கருவிகள், இயந்திரச் சாதனங்கள் முதலியவற்றை நயமான விலைக்கு வாங்க வாய்ப்பு ஏற்படுகிறது.

(ஆ) தாம் உற்பத்தி செய்த பொருளை நல்ல விலைக்கு விற்க முடிகிறது.

(இ) சிறு தொழில்களுக்கிடையே போட்டித் தவிர்க்கப் படுகிறது.

(ஈ) உறுப்பினர்களுடைய பொதுநலன் பாதுகாக்கப் படுகிறது.

(உ) உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் தரம் சீராக அமைய ஏற்பாடு செய்யப்படுகிறது.

(ஊ) கூலிக்கு உழைக்கும் நபர்கள் என்ற நிலைபோய் கூட்டாளிகள் என்ற நிலையைத் தொழிலாளிகள் அடைகின்றனர்.

(எ) உறுப்பினர்களின் வருமானம் உயருகிறது; பொருளாதார நிலை மேம்படுகிறது; பொதுவாகச் சமுதாய நலன் வளர்கிறது.

தொழிற் கூட்டுறவுகளின் வகைகள்

தொழிற் கூட்டுறவுகள் பெரும்பாலும் இருவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒன்று பொருள்களை உற்பத்தி செய்யும் கூட்டுறவுகள்; மற்றது உறுப்பினர்களுக்கு உற்பத்திக்குத் தேவையான பொருள்களை வாங்கியளிப்பதும் அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களைச் சந்தையிலிட ஏற்பாடு செய்வதுமான கூட்டுறவுகள்.

இந்திய ரிசர்வு வங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைக் கீழ்க் கண்டவாறு வகைப் படுத்தியுள்ளனர்:

(அ) நெசவாளர் சங்கங்கள்.

(ஆ) நூற்பாலைகள்.

(இ) தொழிற் பேட்டைகள் (Industrial Estates)

(ஈ) தொழிற் கூட்டுறவு வங்கிகள்.

(உ) பிற தொழிற் கூட்டுறவுகள்.

பொருள்களை உற்பத்தி செய்யும் கூட்டுறவுகளில் உறுப்பினர் வீட்டில் அல்லது பொதுத் தொழிற்பட்டறையில் அல்லது ஆலையில் உற்பத்திப் பணி மேற்கொள்ளப்படுகிறது. கூட்டுறவுச் சங்கம் உறுப்பினர்களுக்குக் கச்சாப்பொருள், உற்பத்தி செய்யவிருக்கும் பொருளின் வடிவம், தரம் பற்றிய நுணுக்கங்கள், உற்பத்திக்கு வேண்டிய வசதி, கடைதல், அரைத்தல் போன்ற தொழிற் பட்டறை வசதி முதலியவற்றை அளிக்கின்றன. உறுப்பினர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்றுத்தரும் பொறுப்பையும் இச் சங்கங்கள் ஏற்கின்றன. உறுப்பினர்கள் திங்கள்தோறும் கூலி வழங்கப் பெறுகின்றனர்; சில இடங்களில் வேலை வீத (piece rate)க் கூலி வழங்கப் பெறுகின்றனர்.

உறுப்பினர்களுக்குப் பலவித வசதிகளைச் செய்துதர தொழிற் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் (Industrial Service Co-operative Societies) அமைக்கப்படுகின்றன. உறுப்பினர்களுக்குத் தொழில் நுட்ப உதவி, மேற்பார்வை, கச்சாப்பொருள், கருவிகள் முதலிய வாங்கித்தருதல் போன்ற உதவிகளை இக் கூட்டுறவுகள் செய்கின்றன. முடிவுற்ற பொருள்களை விற்கவும் உதவி செய்கின்றன. ஆனால், சங்கம் உற்பத்தியைத் தானே மேற் கொள்ளுவதில்லை. உற்பத்தியில் ஏற்படும் இலாப நட்டங்கள் உறுப்பினர்களையே சாரும்.

தொழிற் கூட்டுறவுகளின் அமைப்பு

நம் நாட்டில் தொழிற் கூட்டுறவுகள் கூட்டிணைப்பு முறையில் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய அளவில் 1966 ஆம் ஆண்டு தொழிற் கூட்டுறவுகளின் தேசியக் கூட்டிணைப்பு (National Federation of Industrial Co-operatives) அமைக்கப்பட்டது. தொழிற் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உதவும் பொருட்டு இக் கூட்டிணைப்பு உருவாக்கப்பட்டது. உறுப்பினர் சங்கங்களுக்காக இறக்குமதி, கொள்முதல், கச்சாப் பொருள் வழங்கல், விற்பனை செய்தல் போன்ற பணிகளையும் முடிவுற்ற உற்பத்திப் பொருள்களை உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் விற்கும் பணியினையும் இக் கூட்டிணைப்பு மேற் கொள்ளுகிறது. குறிப்பிட்ட சில தொழில்களுக்கு நாட்டளவில் தனிக் கூட்டிணைப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்திந்தியக் கைத்தறித் துணி சந்தையிடுகைச் சங்கம், அனைத்திந்தியப் பனைவெல்லக் கூட்டுறவுகளின் கூட்டிணைப்பு (All—India Federation of Palm Gur Co-operatives) போன்றன குறிப்பிடத்தக்கவை.

நெசவாளர் கூட்டுறவுகள்
(Weavers, Co-operatives)

1971 ஜுன் இறுதியில் 12,027 நெசவாளர் பிரதம சங்கங் களிருந்தன. இவற்றில் 6,161 சங்கங்கள் செயலற்றிருந்தன. செயல்பட்டு வந்த சங்கங்களில் 8 இலட்சத்துக்கும் கூடுதலான உறுப்பினர்கள் இருந்து வந்தனர். செயலற்ற சங்கங்களில் 4 இலட்சத்துக்கும் கூடுதலான உறுப்பினர்களிருந்தனர். பிரதம நெசவாளர் சங்கங்களின் மொத்த நடைமுறை முதல் ரூ. 56·90 கோடியாக இருந்தது. இச் சங்கங்களில் 3·32 இலட்சம் நபர்கள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். 27,744 நபர்கள் நிருவாகப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். 1970–71 ஆண்டில் 4,548 சங்கங்கள் இலாபத்தில் நடந்து வந்தன; 3,635 சங்கங்கள் நட்டமடைந் திருந்தன; 3,844 சங்கங்கள் இலாப நட்டமின்றியிருந்தன.

சில மாநிலங்களில் மட்டும் மத்திய நெசவாளர் சங்கங் களிருந்தன. 1971 ஜுன் இறுதியில் இருந்த 102 மத்திய சங்கங்களில் 72 செயலற்றிருந்தன. இச் சங்கங்களில் 18 சங்கங்களே 1970-71இல் உற்பத்தி, விற்பனையை மேற் கொண்டிருந்தன. 13 சங்கங்கள் கச்சாப் பொருள் வழங்கல்,

உறுப்பினரின் உற்பத்திப் பொருள்களை விற்றல் போன்ற பணிகளைச் செய்து வந்தன.

மாநில அளவில் 1971 ஜூன் இறுதியில் 24 மாநில நெசவாளர் கூட்டுறவுகளிருந்தன. அவற்றின் ஒன்று செயலற்றிருந்தது. செயல்பட்டு வந்த 23 சங்கங்களில் 6,618 சங்கங்களும், 1,197 தனி நபர்களும் பிறரும் உறுப்பினர்களாயிருந்தனர். மாநிலச் சங்கங்களின் நடைமுறைமுதல் ரூ. 14·28 கோடியாக இருந்தது. இவற்றின் செலுத்திய முதல் ரூ. 2·02 கோடியில் ரூ. 1·22 கோடி அரசினரின் பங்காக இருந்தது. 1970–71இல் 8 மாநிலச் சங்கங்கள் மட்டுமே இலாபத்தில் நடந்து வந்தன; 15 சங்கங்கள் நட்டத்தில் நடைபெற்று வந்தன.

தேசீய அளவில் செயல்பட்ட ஒரு நெசவாளர் கூட்டுறவுக் கொள்முதல், விற்பனையில் மட்டுமே 1970-71 இல் ஈடுபட்டிருந்தது. அவ்வாண்டில் ரூ. 3·92 கோடி மதிப்புள்ள துணி கொள்முதல் செய்து ரூ. 4·73 கோடி மதிப்புள்ள விற்பனை செய்திருந்தது. ரூ. 7·65 இலட்சம் இலாபம் ஈட்டியிருந்தது.

மொத்தமாக நோக்கும் போது 1970–71இல் 12,027 நெசவாளர் கூட்டுறவுகள் 12·12 இலட்சம் உறுப்பினர் கொண்டிருந்தன. இச் சங்கங்கள் கொள்முதல் செய்த நூல், உற்பத்தி செய்ய துணி ஆகியவற்றின் மொத்த மதிப்பு ரூ. 104·29 கோடி. 1970-71இல் நெசவாளர் சங்கங்களின் மொத்த விற்பனை ரூ. 72·72 கோடியை எட்டியது. 1960-61இல் மொத்த விற்பனை ரூ. 36·89 கோடியாக மட்டுமே இருந்தது நினைவுகூறத்தக்கது.

நெசவாளர் கூட்டுறவுகள் 1970-71இல் 10·36 இலட்சம் தறிகள் கொண்டிருந்தன. ஆனால் இவற்றில் 3·93 இலட்சம் தறிகளே இயங்கி வந்தன. சொந்தமாக 800க்கு மேற்பட்ட கிடங்குகளும் வாடகையில் எடுத்து 1,400க்கும் கூடுதலான கிடங்குகளும் கூட்டுறவுகள் வைத்திருந்தன. விற்பனை நிலையங்கள் (Sale Depots) 2,500க்கும் அதிகமாக இருந்தன. சாயம் துவைக்க 600க்கு மேற்பட்ட கூடங்களிருந்தன.

1970–71இல் காணப்பட்ட நிலையில் ஆந்திரப் பிரதேசம், பீகார், தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்களில் மட்டும் பிரதம சங்க மொத்த உறுப்பினர்களில் 50% இருந்தனர். மொத்தத் துணி உற்பத்தியில் மகாராட்டிரம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்கள் மட்டும் 56% உற்பத்தி செய்திருந்தன. இந்த இரு மாநிலங்களும் மட்டும் மொத்த விற்பனையில் 52%க்கு மேல் செய்திருந்தன.

நெசவாளர்களின் பெரும் பிரச்சினைகள் நான்காகும்:

(i) **நூல் கிடைப்பு:** நெசவுத் தொழிலுக்கு வேண்டிய கச்சாப்பொருள் நூல். இது நூற்பு ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆலையிலிருந்து நூல் நெசவாளர் கையில் வந்து சேர்வதற்குள் பல இடைநிலையர்களிடம் கைமாறுகிறது. இதனால் விலையேறி விடுகிறது. ஆலையிலிருந்து நூல் நெசவாளருக்கு நேரடியாக அனுப்பப்பட்டால் நயமான விலையில் அது அவருக்குக் கிடைக்கும்.

(ii) **நிதி வசதி:** நெசவாளர்கள் பெரும்பாலும் ஏழைகளாயிருப்பதால் துணி நெய்வதற்கு வேண்டிய பொருள்களை வாங்க அவர்களிடம் பணம் இருப்பதில்லை. இடைநிலையர் நூல் முதலிய சாதனங்களை இவர்களுக்கு அளித்துக் கூலிக்குத் துணி நெய்து வாங்கிக் கொள்ளுகின்றனர். இடைநிலையரே பின்னர் இங்ஙனம் நெய்யப்பட்ட துணியை நல்ல விலைக்கு விற்றுப் பெருத்த இலாபமடைகின்றனர்.

(iii) **சந்தையிடுகை:** நெய்யப்பட்ட துணியைத் தம்மிடம் வைத்திருந்து பேரம்பேசி நல்ல விலைக்கு விற்க நெசவாளரின் பொருளாதார நிலை இடம் கொடுக்காத காரணத்தால் மிகக் குறைந்த விலைக்கு இடைநிலையரிடம் தாம் உற்பத்தி செய்த பொருளை விற்றுவிடுகின்றனர். சில நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணி குறிப்பிட்ட தரம் என்றில்லாது அழகிய பாணியிலும் அமையாது விற்பனை செய்வது பெரும் பாடாகப் போவதுமுண்டு.

(iv) **ஆலைகளின் போட்டி:** துணி ஆலைகள் பேரளவு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதால் நெசவாளர்கள் தமது பழைய பாணியில் உற்பத்தி செய்யும் பொருள்களைப் போட்டிப் போட்டுக்கொண்டு விற்பது அவ்வளவு எளிதல்ல. மற்றும் துணி ஆலைகள் புதுப்புது ரகத் துணிகளை உற்பத்தி செய்து நல்ல விளம்பரம் செய்து விற்பது போன்று கூட்டுறவு நெசவாளர்கள் செய்ய முடியவில்லை.

மேற்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் நெசவாளர்களுக்கு நிதியுதவி, தொழில் நுட்ப உதவி வழங்கவும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தக்க அமைப்பாகக் கருதப்பட்டன. இச் சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்குக் கச்சாப்பொருளை அளிக்கும் பொருட்டுப் பெருமளவு நூலினைக் கொள்முதல் செய்கின்றன. தொழில் நடத்துவதற்கு வேண்டிய செலவுகளை உறுப்பினருக்குக் கடனாகத் தர நிதிவசதிகளை ஏற்படுத்தித் தருகின்றன. புதுப்

பாணியில் துணி வகைகளை உற்பத்தி செய்ய உறுப்பினர்களுக்குத் தொழில் நுட்ப உதவியை வழங்குகின்றன. துணிகள் மீதான அச்சு வேலை, நூலுக்குச் சாயம் துவைத்தல், வெளுத்தல் போன்ற பொது வசதிகளை உறுப்பினர்களுக்குச் செய்து தருகின்றன. உறுப்பினர் உற்பத்தி செய்த துணியை ஒன்று திரட்டி விற்பனை செய்ய ஏற்பாடு செய்கின்றன. நெசவுத் தொழில் வளம்பெறத் தேவைப்படும் பிற நடவடிக்கைகளையும் இச் சங்கங்கள் மேற்கொள்ளுகின்றன.

நெசவாளர் சங்கங்களில் இரு வகையுண்டு. உறுப்பினர் தம் தொழிலைத் தனிப்பட்ட முறையில் தம் வீடுகளில் நடத்திவர உதவும் சங்கங்கள் ஒருவகை. உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து பொதுவான ஓரிடத்தில் உற்பத்தியில் ஈடுபடுவது மற்ரோர் வகை. முதல் வகைச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கச்சாப்பொருளான நூலை நயமான விலைக்கு வாங்கியளிப்பதுடன், அவர்களுக்குத் தறி வாங்கவும் நூல் வாங்கவும் கடனளிக்கின்றன. உறுப்பினர் நெய்த துணியைச் சங்கத்தின் வழி விற்பனை செய்கின்றனர். இரண்டாம் வகைச் சங்கம் தனக்குச் சொந்தமாகத் தொழிற்கூடமொன்று கொண்டிருக்கும். இக்கூடத்தில் தறிகளும் பிற கருவிகளும் வைக்கப்பட்டிருக்கும். சங்கம் தன் செலவிலேயே நூல் வாங்கி உறுப்பினர்களுக்கு அளிக்கும். உறுப்பினர் தொழிற்கூடத்தில் கூலிக்கு நெசவு வேலை செய்வர். நெசவு செய்யப்பட்ட பொருளை விற்கும் பொறுப்புச் சங்கத்தைச் சாரும். விற்பனையில் கிடைக்கும் இலாபம் உறுப்பினர்களிடையே அவர்கள் ஈட்டிய கூலியின் விகிதத்தில் பகிர்ந்து வழங்கப்படும். இவ்வகைச் சங்கத்தில் நெசவாளர்களுக்குத் தொழில் நுட்பங்களைக் கற்றுத் தருவது எளிது. உற்பத்தி செய்யப்படும் துணியின் தரமும் ஒருசீராக இருக்கும்படிச் செய்வது எளிது.

அடித்தளத்தில் நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட பிரதம சங்கங்கள் செயல்படுகின்றன. இவற்றிற்குத் தேவையான நிதிவளம் இருப்பதில்லை. சந்தையில் நிலவி வரும் புதிய பாணியினையும், மாறிவரும் மக்கள் விருப்பங்களையும் ஆராய்ந்தறிய பிரதம சங்கங்களுக்கு வாய்ப்பும் வசதியும் மிகக் குறைவே. ஆலையிலிருந்து நேரடியாக நூலை நெசவாளர்களுக்கு அளிக்க ஏற்பாடும், மிகப்பெருமளவில் விற்பனை ஏற்பாடும் செய்துதர, தக்க ஓர் அமைப்புத் தேவைப்பட்டது. இந்தத் தேவையை நிறைவு செய்யவே ஒவ்வொரு மாநிலத்திலும் உச்சி நெசவாளர் சங்கங்கள் நிறுவப் பெற்றுள்ளன. உச்சிச் சங்கங்களில் பிரதம அல்லது மண்டல சங்கங்கள் மட்டுமே உறுப்பினர்களாகச் சேரலாம்,

உறுப்பினர் சங்கங்கள் செம்மையாகச் செயல்பட உச்சிச் சங்கங்கள் உதவுகின்றன. குறிப்பாக உறுப்பினர்சங்கங்களுக்குக் கச்சாப் பொருள் அளிக்கும் பணியினையும், அச்சங்கங்கள் உற்பத்தி செய்த துணியினை விற்கும் பணியினையும் உச்சிச் சங்கங்கள் மேற் கொள்ளுகின்றன.

நெசவாளர் சங்கங்களுக்கு அரசினரும், கூட்டுறவு மத்திய வங்கிகளும் பெருமளவுக்கு நிதிவசதிகளை அளிக்கின்றன. இந்திய ரிசர்வு வங்கிச் சட்டம் பிரிவு 17 (2) (bb) யின் கீழ் நெசவாளர் சங்கங்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கியின்வழி ரிசர்வு வங்கி கடன் வசதிகளையளிக்கிறது. மத்திய வங்கிகள் அளிக்கும் கடன் வசதி ரொக்கக் கடனாகவும் மேல்வரைப் பற்றாகவும் அமைவது வழக்கம். அரசினர், பங்கு முதல் வாங்க கடன், நடைமுறை முதல் கடன், கிட்டங்கி கட்ட கடன், குடியிருப்புகள் கட்ட கடன் என்று பல்வகைக் கடன்களையும், நிருவாகச் செலவுகள், நுகர்வோருக்குத் தள்ளுபடி (Rebate to consumers), குடியிருப்பு கட்டுதல், கிட்டங்கி கட்டுதல் ஆகியவற்றிற்கு உதவித் தொகை (Subsidy)களையும் வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது.

கைத்தறித் தொழில் கூட்டுறவு முறையில் வளரும் பொருட்டு அனைத்திந்தியக் கைத்தறி வாரியம் அக்டோபர் 1952இல் அமைக் கப்பட்டது. இந்திய அரசினருக்குக் கைத்தறித் தொழிலின் பிரச்சினைகள் குறித்து அறிவுரை வழங்கவும், அத்தொழிலைச் சீரிய முறையில் அமைத்து வளர்க்கவும் வாரியம் உதவும் என எதிர் பார்க்கப்பட்டது. கைத்தறிச் சங்கங்களுக்குப் பங்கு முதல் கடன் வழங்கல், உற்பத்திக்கும் விற்பனைக்கும் நடைமுறை முதல் கடன் வழங்கல், கைத்தறித் துணி விற்பனைக்கு உதவி வழங்கல், தொழில் நுட்ப வளர்ச்சி-பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல் போன்ற பணிகளை வாரியம் மேற் கொண்டுள்ளது.

கைத்தறித் தொழில் மட்டுமே உற்பத்தி செய்யலாம் என சிலவகை ரக துணிகளை அரசு ஒதுக்கித் தந்துள்ளது. ஆலைகள் இந்த ரக துணிகளை உற்பத்தி செய்யக் கூடாது. வண்ணச் சேலை களையும், கரை கட்டிய வேட்டிகளையும் கைத்தறித் துறை மட்டுமே உற்பத்தி செய்யலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. கைத்தறித் துணிகளை வாங்குவோருக்கு ஐந்து விழுக்காடு தள்ளுபடி தரப்படுகிறது. கைத்தறி வாரம் கொண்டாடப் படும்போதும் பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களின் போதும் 10% தள்ளுபடி தரப்படுகிறது. விற்பனை நிலையங்கள் திறக்கவும், விற்பனை மோட்டார் வண்டிகள் வாங்கவும், விளம்பரச் சாதனங்

கள் சில அமைக்கவும் வாரியம் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பண உதவி வழங்குகிறது. மாநிலங்களுக்கிடையே வியாபாரத்தை வளர்க்கவும் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்யவும் 1956 ஆம் ஆண்டு அனைத்திந்தியக் கைத்தறித் துணி கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கம் (All-India Handloom Fabrics Co-operative Marketing Society) நிறுவப் பெற்றது. இச் சங்கம் கைத்தறியகம் (Handloom House) என்ற பெயர் கொண்ட விற்பனை நிலையங்களைப் பம்பாய், சென்னை, கல்கத்தா, பெங்களூர், புதுடெல்லி, அகமதாபாத் ஆகியநகரங்களில் நிறுவியுள்ளது.

கைத்தறி வாரியம் புதிய பாணிகளையும், நவீன அமைப்புகளையும், கவர்ச்சியான வண்ணங்களையும் நெசவாளர்களிடையே பரப்பும் பொருட்டுப் பம்பாய், சென்னை, காசி, காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் நெசவாளர் சேவைக் கூடங்களை (Weavers Service Centres) ஏற்படுத்தியுள்ளது.

விசைத்தறி (Powerlooms)

விரைவான முறையில், நயமான செலவில், எளிய வகையில், மேலுஞ் சிறந்த நெசவு செய்யவும், கைத்தறித் துறையின் உற்பத்தித் திறனை மிகுதிப்படுத்தவும் விசைத் தறிகள் பயன்படுத்தப்படலாம் என்று 1956 இல் அரசு முடிவு செய்து படிப்படியாகக் கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றத் திட்டமொன்றை வகுத்தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டகால இறுதிக்குள் 35,000 விசைத்தறிகள் நிறுவப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. ஆனால், இத்திட்டம் சரிவர செயல்படவில்லை. இரண்டாம் திட்ட காலத்தில் 12,000 தறிகளே நிறுவப்பட்டன. 1961 ஆம் ஆண்டு விசைத்தறி நிறுவும் திட்டம் கைவிடப்பட்டது. திரு. அசோக் மேத்தா தலைமையில் அமைக்கப்பட்ட விசைத்தறி விசாரணைக் குழு (Power-loom Enquiry Committee) விசைத்தறி நிறுவும் திட்டத்திற்கு மீண்டும் உயிரளித்தது. இத் திட்டத்தின்படி நான்காம் திட்டகாலத்தில் பஞ்சுநூல் துறையில் 60,000 விசைத் தறிகளும் செயற்கை நூல் துறையில் 40,000 விசைத்தறிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுகள் விசைத்தறிகளை அமைக்க முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. விசைத் தறிகள் ஆதாயத்துடன் இயங்க குறைந்தது நான்கு விசைத் தறிகள் ஒரு கட்டாக இருத்தல் வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

1970-71 வரை செயல்பட்டு வந்த 283 விசைத்தறிச் சங்கங்களில் 41,718 உறுப்பினர்களிருந்தனர். இச் சங்கங்களின்

நடைமுறை முதல் ரூ. 9·37 கோடியாக இருந்தது. இதில் செலுத்திய முதல் ரூ. 1·00 கோடியாகவும், காப்புநிதி, பிற நிதிகள், வைப்புகள் ரூ. 1·19 கோடியாகவும், கடன்கள் ரூ. 5·05 கோடியாகவும் இருந்தது. கடன்களில் ரூ. 1·52 கோடி அரசினரும், ரூ. 2·06 கோடி மத்திய நிதிய முகமைகளும் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. 1970-71இல் 255 சங்கங்கள் ரூ. 8·43 கோடி மதிப்புள்ள நூல் வாங்கி ரூ. 9·73 கோடி மதிப்புள்ள துணி உற்பத்தி செய்து ரூ. 11·16 கோடி விற்பனை செய்திருந்தன. கூலி மட்டும் ரூ. 1·83 கோடி வழங்கியிருந்தன. 47 சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு ரூ. 3·65 கோடி மதிப்புள்ள நூல் வழங்கி உதவின. 1970-71 ஆம் ஆண்டில் 167 விசைத்தறிச் சங்கங்கள் இலாபத்தில் நடந்து வந்தன. 152 சங்கங்கள் நட்டத்தில் நடந்து வந்தன. 85 சங்கங்கள் இலாப நட்டமின்றிச் செயல்பட்டு வந்தன. மொத்தம் 39,252 விசைத்தறிகள் ஏற்படுத்தப் பட்டிருந்த போதிலும் 17,231 தறிகளே செயல்பட்டு வந்தன.

1970-71இல் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய சில புள்ளி விவரங்களைக் காண்போம்:

அட்டவணை

பிரதம நெசவாளர் சங்கங்கள்—1970-71 இல் நடப்பு ரூ. கோடியில்

சங்கத்தின் வகை	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை	வாங்கிய நூலின் மதிப்பு	உற்பத்தி செய்யப்பட்ட துணியின் மதிப்பு	விற்பனை	செலுத்தப் பட்ட கூலி
கைத்தறி-பஞ்சு நூல்	4,601	6,34,007	33·49	46·72	57·27	16.01
கைத்தறி-கம்பளி	251	28,006	0·47	0·60	0·83	0·19
கைத்தறி-பட்டு	230	49,581	1·74	2·08	2·71	0·53
கதர்-பஞ்சு நூல்	60	6,532	0·30	0·17	0·41	0·05
கதர்-கம்பளி	25	2,534	0·26	0·31	0·34	0·02
விசைத்தறி	255	34,542	8·43	11·16	11·16	1·81

கதர், கிராமத் தொழில்கள் குழு
Khadi and Village Industries Commission

கதர், கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்குத் திட்டமிட்டுப் பாடுபட 1953 ஜனவரியில் அனைத்திந்தியக் கதர், கிராமத்

தொழில்கள் வாரியம் (All India Khadi And Village Industries Board) நிறுவப்பட்டது. பின்னர் நாடாளுமன்றச் சட்டமொன் றின்படி 1957 ஆம் ஆண்டு கதர், கிராமத் தொழில்கள் குழு நிறுவப் பெறலாயிற்று. கதர் உள்ளிட்ட 22கிராமத் தொழில்கள் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்துச் செயலாற்றும் பொறுப்பு இக் குழுவிற்கு அளிக்கப்பட்டது. பம்பாயில் தலைமை அலுவல கத்தைக் கொண்டுள்ள இக் குழு மாநில வாரியங்கள்வழி தனது திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் வழியும் பலதிட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. தோல் உரித்தல்–பதனிடல், மண்பாண்டங்கள் செய்தல், நெல்-தானியங் கள் கைக்குத்தல், எண்ணெய் ஆடுதல், பனைவெல்லம் தயாரித்தல் வெல்லம் பழுப்புசர்க்கரை தயாரித்தல், பழம்-காய்கறி குவளையி லடைத்தல் (Canning of Fruits And Vegetables), கைவினைத் தொழில்கள் (Handicraft Industries) போன்ற பல்வகைச் சங்கங் கள் நம்நாட்டில் நடைபெற்று வருகின்றன. 1970–71 இறுதியில் இவ்வகைச் சங்கங்கள் ஏறத்தாழ 34,400 இருந்தன. இவற்றில் 19,270 சங்கங்கள் செயலற்றிருந்தன. செயல்பட்டு வந்த பிரதம சங்கங்களில் 10,32,113 உறுப்பினர்களிருந்தனர். இச்சங்கங் களின் நடைமுறை முதல் ரூ. 56·24 கோடியாக இருந்தது. இவற்றால் வேலைவாய்ப்புப் பெற்றோர் 4,25,339 நபர்கள் உற்பத்தித் துறையிலும், நிருவாகத் துறையில் 16,459 நபர்களுமாவர். உற்பத்தியும் விற்பனையும் மட்டும் மேற்கொண்டிருந்த 13,552 பிரதம சங்கங்கள் 1970-71இல் 8,50,565 உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. இவை ரூ. 26·37 கோடி மதிப்புள்ள கச்சாப் பொருள்களை வாங்கி ரூ. 31·64 கோடி மதிப்புள்ள பண்டங்களை உற்பத்தி செய்து ரூ. 34·09 கோடி மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்தன. கச்சாப் பொருள்கள் வாங்கி வழங்கல், விற்பனை செய்தல் போன்ற பலபணிகளைச் செய்த 2,165 பிரதம சங்கங்களில் 1,14,992 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களுக்கு ரூ. 2·19 கோடி மதிப்புள்ள கச்சாப்பொருள் வழங்கப் பெற்றது. இவர்கள் உற்பத்தி செய்த ரூ. 3·20 கோடி மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. மொத்தச் சங்கங்களில் 1970–71இல் 9,509 சங்கங்கள் இலாபகரமாகச் செயல்பட்டன; 11,540 சங்கங்கள் நட்டமடைந்திருந்தன; 13,225 சங்கங்கள் இலாப நட்டமின்றியிருந்தன. பிரதம சங்கங்களுக்கு 2,781 விற்பனை நிலையங்களிருந்தன.

அனைத்திந்தியக் கைத்திறன் பொருள்கள் வாரியம் (All-India Handicrafts Board)

கவின்மிகு கைத்திறன் பொருள்களைக் கண்டோர் கவர்ந்திழுக்கப்படும் வண்ணம் சமைத்துத் தரும் கைவினைஞர்களின் கலை நம் நாட்டின் பழம்பெரும் செல்வக்களஞ்சியமாகும். துணிகள் மீது வேலைப்பாடு, தந்தம், கொம்பு, எலும்பு, மூங்கில், நெட்டி முதலியவற்றின்மீது வேலைப்பாடு எனப் பலப்பல வகைக் கலைகளில் கைதேர்ந்த கைவினைஞர்களுக்கு அவர்கள் தொழிலைத் தொடர்ந்து நடத்தி வரவும், அத்தொழில்களை வளர்க்கவும் இவ் வாரியம் உருவாக்கப்பட்டது. பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள், தரைக்கம்பளம், மரத்தில் கைவேலை, நகைவேலை, சங்கு, தந்தம், கொம்பு ஆகியவற்றின்மீது கைவேலை போன்ற தொழில்கள் கூட்டுறவுச் சங்க அமைப்பில் செயல்பட்டு வருகின்றன. இத்தொழில்களுக்கு நடைமுறை முதல், நிருவாகச்செலவு மானியம் முதலிய வழங்கப்படுகின்றன. ஏற்றுமதிச் சந்தையில் இவற்றிற்கு நல்ல மதிப்பு இருந்து வருகிறது.

தென்னை, பனைநார் கொண்டு பலப்பல பொருள்கள் தயாரிக்கப்படுவதை நாம் அறிவோம். இத்தொழிலின் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு 1954இல் நார்வாரியம் (Coir Board) அமைக்கப் பெற்றது. நார் கூட்டுறவுகளுக்குப் பலவகைகளில் இவ்வாரியம் உதவி செய்கின்றது.

சிற்றளவு தொழில்களை வளர்க்கக் கூட்டுறவு முறையே சாலச் சிறந்தது என்பதனை அனைவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். இத் துறையில் கூட்டுறவுகளை அமைக்கவும், வளர்க்கவும் அவற்றிற்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவுரைகளை வழங்கவும், அவற்றின் ஊழியர்களுக்குத் தொழில் நுட்ப, பொருளாதார, நிருவாகத் துறைகளில் பயிற்சி தரவும் 1954இல் சிற்றளவு தொழில்கள் வாரியம் (Small Scale Industries Board) நிறுவப்பட்டது. இவ் வாரியம் கூட்டுறவுகளுக்குப் பல்வகை நிதிபுதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தொழிற்கூட்டுறவுகளை அமைப்பதில் மாநில அரசுகளின் தொழில் துறையினர் ஈடுபாடு கொண்டுள்ளனர். இக் கூட்டுறவுகள் கச்சாப்பொருள்கள் வழங்கல், கடன்வசதியளித்தல் விற்பனை போன்ற பல பணிகளை மேற்கொள்ளுகின்றன. பொறியியல் கூட்டுறவுகள் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருள்களைச் சார்ந்த நடவடிக்

கைகளை மேற்கொள்ளுகின்றன. கச்சாப்பொருள்கள் பற்றாக் குறையினாலும், காலந்தாழ்த்து அளிக்கப்படுவதாலும் இக் கூட்டுறவுகளில் பல சரிவர செயல்பட இயலவில்லை. சில கூட்டுறவுகள் தொழிற்பட்டறைகளை அமைத்துள்ளன. தொழிலாளிகள் சிலர் ஒன்று சேர்ந்து அல்லது தொழில் நுட்ப பயிற்சி பெற்றோர் ஒன்று சேர்ந்து கூட்டுறவுத் தொழிற்பட்டறைகளை அமைப்பதுமுண்டு. 1970-71 இறுதியில் பொது பொறியியல் சங்கங்கள் 2,125, ரசாயன பொறியியல் சங்கங்கள் 577 இருந்தன. ஆனால் இவற்றில் 896 பொது பொறியியல் சங்கங்களும் 425 ரசாயன பொறியியல் சங்கங்களும் செயலற்றிருந்தன. கூட்டுறவு நூற்பாலைகளும் தொழிற் கூட்டுறவுகளே. பக்குவப்படுத்தும் கூட்டுறவுகளைப் பற்றிய அத்தியாயத்தில் கூட்டுறவு நூற்பாலைகளைப் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள்
(Co-operative Industrial Estates)

கூட்டுறவுத் துறையில் தொழிற்பேட்டைகள் நிறுவப்படுவது அண்மைக்கால நிகழ்ச்சியாகும். சிறிய தொழில் நிறுவனங்கள் இவற்றை நிறுவுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நிலம் வாங்கி சாலைகள் அமைத்து, மின்வசதி, நீர், கழிவுநீர் அகற்றல் போன்ற பல ஏற்பாடுகளைச் செய்கின்றன. சில சங்கங்கள் சீராக்கப்பட்ட மனைகளை (Developed plots) உறுப்பினர்களுக்கு ஒதுக்குகின்றன. உறுப்பினர்கள் தம் சொந்த நிதியினைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட திட்டப்படி தொழிற்பட்டறை கட்டிக் கொள்வர். சில சங்கங்கள் தொழிற் கூடங்களைத் தாமே கட்டி உறுப்பினர்களுக்கு விற்று விடுவதுமுண்டு. மிகச்சில சங்கங்களே கச்சாப் பொருள்கள் வழங்கல், பொதுவசதி தொழிற்பட்டறை, போக்குவரத்து வசதி போன்ற பல பணிகளையும் உறுப்பினர்களுக்குச் செய்து தருகின்றன.

1971ஜூன் இறுதிவரை 151 கூட்டுறவு தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டிருந்தன. இவற்றில் 228 சங்கங்களும், 11,708 தனி நபர்களும் பிறரும் உறுப்பினர்களாக இருந்தனர். இவற்றின் நடைமுறை முதல் ரூ. 14·77 கோடியாக இருந்தது. செலுத்திய முதல் ரூ.4·30 கோடியாகவும், இதில் அரசினரின் பங்கு ரூ. 1·12 கோடியாகவும் இருந்தது. அரசினர், மத்திய நிதி முகமைகள், இந்திய ஸ்டேட் வங்கி, இந்தியத் தொழில் நிதியக்கூட்டுரு, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, பிறவழிகளில் பெற்றது ஆகப் பலரிடம் பெற்றிருந்த கடன் ரூ. 4·03 கோடியாக இருந்தது. தொழிற்

பேட்டையின் உறுப்பினர்கள் வழி உற்பத்தித்துறையில் வேலை வாய்ப்புப் பெற்றோர் 19,782 நிருவாகத்துறையில் வேலைவாய்ப்பு பெற்றோர் 2,887, 19,70-71 ஆண்டில் 103 தொழிற்பேட்டைகள் மட்டுமே செயல்பட்டு வந்தன. இவை 1,077 தொழிற்கூடங்களைக் கட்டி முடித்திருந்தன. இவற்றில் 992 பயன்படுத்தப்பட்டன. மொத்த கூட்டுறவு தொழிற் பேட்டைகளில் 80 இலாபகரமாகச் செயல்பட்டன; 53 நட்டத்தில் நடைபெற்றன; 18 இலாப நட்டமின்றி செயல்பட்டன.

தொழிற் கூட்டுறவு வங்கிகள்
(Industrial Co-operative Banks)

தொழிற் கூட்டுறவுகளுக்கும், கைவினைஞர்களுக்கும் நயமான வட்டிக்குக் கடனுதவி அளிக்க தொழிற் கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்வசதிகள் வழங்க பற்பல முகமைகளிருந்தும் பொதுவாக அவற்றின் நிதியத் தேவைகளை நிறைவு செய்ய தனியொரு நிறுவனமிருப்பது நல்லது என்று கருதப்பட்டது. மத்திய நிதிய முகமைகள் தொழிற் கூட்டுறவுகளுக்கு நிதியுதவியளிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லையென்ற குறை பலகாலமாக இருந்து வந்தது. கைவினைஞர்களும், தொழிற் கூட்டுறவுகளும் மத்திய கூட்டுறவு வங்கிகளிடம் கடனுக்கு முயன்று வெற்றிபெறாத நிலையில் சலிப்படைந்து தொழிற் கூட்டுறவு வங்கியினை நிறுவலாயினர் என்றும் கூறப்படுகிறது. மைசூர், ராஜஸ்தான், தமிழ்நாடு, குஜராத், மகாராட்டிரம், பஞ்சாப் மாநிலங்களில் மட்டுமே தொழிற் கூட்டுறவு வங்கிகள் காணப்படுகின்றன.

நோக்கங்கள்

தொழிற் கூட்டுறவு வங்கிகளின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

(i) தொழிற் கூட்டுறவுகளும், கைவினைஞர்களும் தாமே தொழிலை அமைத்து நடத்த நிதியுதவி வழங்கல்.

(ii) குடிசைத் தொழில், சிற்றளவு தொழில்களை உருவாக்கி நடத்த விரும்புவோருக்கு நிதிவசதியளித்தல்.

(iii) தொழிலாளிகள், கைவினைஞர்களிடையே சிக்கனம், தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி என்ற பண்புகளை வளர்த்தல்.

மேற்கண்ட நோக்கங்களையடைய தொழிற் கூட்டுறவு வங்கிகள் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளுகின்றன:

(i) வைப்புகளை ஏற்றுக்கொள்ளல்.

(ii) அரசினர், தொழில் நிதியக் கூட்டுரு, மாநிலத் தொழில் நிதியக் கூட்டுருக்கள், தொழில் மறுநிதிக் கூட்டுரு, இந்திய ஸ்டேட் வங்கி, பிறகூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து கடன் பெறுதல்.

(iii) கூட்டுறவுத்துறை ஒப்புதலளித்தால் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடல்.

(iv) தொழிற் கூட்டுறவுகளுக்கும், கைவினைஞர்களுக்கும் துணை விதிகளின்படி கடன் வழங்கல்.

(v) உறுப்பினர் சார்பாக முகவர் (Agent) என்ற நிலையில் கருவிகள், இயந்திரங்கள், கச்சாப்பொருள்களைக் கொள்முதல் செய்து வழங்கல்; உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சேமித்துப் பாதுகாத்துச் சந்தையிலிடல்;

(vi) தன்னுடன் இணைந்துள்ள தொழிற் கூட்டுறவுகளை மேற்பார்வை செய்தல்.

(vii) தன்னுடைய துணைவிதிகளுக்குட்பட்டுக் காசோலைகள், உண்டியல்களைத் தள்ளுபடி செய்துகொடுத்தல்; பிறவங்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(viii) தனது வசதிக்குத் தேவைப்பட்டால் கட்டடம், கிட்டங்கி முதலிய கட்டுதல், வாங்குதல், திருத்திக் கட்டுதல் அல்லது வாடகைக்கு எடுத்தல்.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், கைவினைஞர்களின் கூட்டுறவுச் சங்கங்கள், தனிநபர் கைவினைஞர்கள் தொழிற் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேரலாம். பெரும் பாலான தொழிற் கூட்டுறவு வங்கிகள் மாவட்ட அளவில் செயல் பட்டு வருகின்றன. இவற்றின் உறுப்பினர்கள் பிரதம தொழிற் கூட்டுறவுகளாகும். தொழிற் கூட்டுறவுகளின் சங்கமும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதுண்டு. கர்நாடகம், ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. ராஜஸ்தானிலும், தமிழ்நாட்டிலும் மாநில மட்டத்தில் மட்டுமே இவ்வகை வங்கிகள் காணப்படுகின்றன. கர்நாடகம் மகாராட்டிரம், குஜராத், பஞ்சாப் மாநிலங்களில் மாவட்ட அளவில் தொழிற் கூட்டுறவு வங்கிகள் செயல்படும் நிலையினைக் காணலாம். எனவே, கர்நாடகத்தில் மட்டும் மாநில அளவில் ஒரு வங்கியும் மாவட்ட அளவில் பல வங்கிகளும் இருப்பது புலனாகும்.

தொழிற் கூட்டுறவு வங்கிகள் பங்குகள் வழியும், வைப்புகள் வழியும், கடன்கள் எழுப்பியும் தமக்குத் தேவையான நிதியினைத் திரட்டுகின்றன. அரசினரும், வாணிக வங்கிகளும் இவ்வங்கிகளுக்குக் கடனளித்து உதவுகின்றன. தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கும் தனிநபர் உறுப்பினர்களுக்கும் ரொக்கக் கடன், மேல் வரைப்பற்று (Overdarft) வசதிகள் தரப்படுகின்றன. பங்குமுதலைப் போன்று பத்துமடங்கு கடன் தரப்படுகின்றது. கடன் உச்ச அளவு துணை விதிகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

குறுகிய கால, மத்திய காலக்கடன்கள் இவ்வங்கிகளால் வழங்கப்படுகின்றன. நடைமுறை முதலுக்கு வேண்டிய தொகை பெரும்பாலும் ஆறு திங்களுக்குக் கடனாக அளிக்கப்படுகிறது. மத்திய காலக்கடன் நிலையான சொத்துகளை வாங்க அளிக்கப்படுகிறது. இதன் காலவரம்பு 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையிலும் கூட இருப்பதுண்டு.

(i) உறுப்பினரைப் பிணையாளாக ஏற்றுக்கொள்ளல்.

(ii) அசையாச் சொத்தை அடைமானமாகப் பெறல்.

(iii) சரக்கிருப்பை அடைமானமாகப் பெறல்.

(iv) உறுப்பினரின் பொறுப்புறுதி.

(v) ஆயுள் காப்பீட்டுப் பாலிசி

(vi) கடனுறுதிப்பத்திரம், கடன்பத்திரம் ஆகிய பிணையங்கள் மீது கடன் வழங்கப்படுகிறது. கடன் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். தவணை தவறினல் தண்டவட்டி (Penal interest) வசூலிக்கப்படும்.

1971 ஜூன் முடிவில் மூன்று மாநிலங்களில் மாநில வங்கிகளின் அலுவலகங்கள் 4 இருந்தன. இவ்வங்கிகளில் 824 கூட்டுறவுச் சங்கங்களும் 265 தனி நபர்களும் உறுப்பினராக இருந்தனர். இவற்றின் முதல் ரூ. 1·60 கோடியாக இருந்தது. இதில் ரூ. 65·92 இலட்சம் அரசினரும், ரூ. 93·25 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்களும், ரூ. 1·06 இலட்சம் தனி நபர்களும் பிறரும் அளித்திருந்தனர். இந்தத் தொழில் வங்கிகள் திரட்டியிருந்த வைப்புகள் ரூ. 1·24 கோடியாகும். இதில் ரூ. 62·84 இலட்சம் தவணை வைப்புகள். இவ்வங்கிகளின் மொத்த நடைமுறை முதல் ரூ. 5·52 கோடியாக இருந்தது. இவை அளித்திருந்த குறுகிய காலக் கடன் ரூ. 2·21 கோடி; மத்தியகாலக் கடன் ரூ. 2·25 கோடி நிலுவை நின்றது. இத்தொகையில் ரூ. 1·26 கோடி தவணை கடந்த பாக்கியாக இருந்தது.

மத்தியத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் (Central Industrial Co-operative Banks) 1971 ஜூன் இறுதியில் 45 இருந்தன. குஜராத்தில் 15, மகாராட்டிரத்தில் 4, மைசூரில் 25, பஞ்சாபில் 1 ஆக இவை பரவியிருந்தன. இந்த 45 வங்கிகளில் 3,103 கூட்டுறவுச் சங்கங்களும் 21,120 தனிநபர்களும் பிறரும் உறுப்பினர்களாயிருந்தனர். இவ் வங்கிகள் ரூ. 1·87 கோடி முதல் திரட்டியிருந்தன. இத் தொகையில் அரசினரின் பங்கு ரூ. 89·14 இலட்சம், கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு ரூ. 59·35 இலட்சம்; தனிநபர், பிறர் பங்கு ரூ. 38·22 இலட்சம். இவை திரட்டியிருந்த வைப்புத் தொகை ரூ. 5·35 கோடியாகும். இதில் கூட்டுறவுச் சங்கங்கள் அளித்தது ரூ. 1·60 கோடி; தனிநபர், பிறர் அளித்தது ரூ. 3·75 கோடி. மத்திய வங்கிகளின் மொத்த நடைமுறை முதல் ரூ. 13·06 கோடியாக இருந்தது. இவ் வங்கிகள் அளித்திருந்த குறுகிய காலக் கடனளவு ரூ. 7·30 கோடி; மத்திய காலக் கடனளவு ரூ. 1·96 கோடி. இதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியிருந்தது ரூ. 5·60 கோடி; தனிநபர், பிறருக்கு வழங்கி யிருந்தது ரூ. 3·65 கோடி. தவணை கடந்து நின்ற மொத்தக் கடன் ரூ. 1·70 கோடியாக 1971 ஜூன் முடிவில் இருந்தது.

தொழிற் கூட்டுறவு வங்கிகள் அவசியமா?

பலப்பல மேடைகளிலும், மாநாடுகளிலும், கருத்தரங்கு களிலும் காரசாரமாக விவாதிக்கப்பட்டு வரும் கொள்கைப் பிரச்சினை இன்றைய தொழிற் கூட்டுறவுகளுள்ள வளர்ச்சி நிலையில் அவற்றிற்குத் தனியொரு வங்கி அவசியமா என்பதாகும். குறைந்த அளவு நடவடிக்கைகள் கொண்டுள்ள இவ் வங்கிகள் ஆதாயத்துடன் செயல்படுவது அரிது; கணிசமான அளவு வைப்புகளை ஈர்க்க இவற்றால் எளிதில் முடியாது; வங்கியொன்று குறிப்பிட்ட ஒருவகை நடவடிக்கைகளுக்கு மட்டுமே கடனளிப்பது விரும்பத் தக்கதல்ல; மாவட்ட அளவில் ஒரே ஒரு நிதிய முகமை யுடன் தனது நடவடிக்கைகளை வைத்துக் கொள்வதையே உயர் மட்ட நிதிய நிலையங்கள் விரும்பும் என்றெல்லாம் பேசப்பட்டு வருகிறது. தொழிற் கூட்டுறவுகளுக்குத் தனி வங்கி தேவையில்லை என்பவர்களின் வாதம் இது. ஆனால், சிலர் கீழ்க்கண்ட காரணங்கள் தொட்டுத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் தனியாக அமைக்கப்பட வேண்டுமென வாதிடுகின்றனர். மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் குறுகிய கால விவசாயக் கடன்கள் அளிப்பதில் மட்டுமே சிறப்பீடுபாடு கொண்டுள்ளனர். அவற்றிற்குத் தொழிற் கூட்டுறவுகளைக் கவனிக்க நேரமில்லை. மற்றும் தொழிற் கூட்டுறவுகளைப் பொருத்த தொழில் நுட்ப அறிவும் அனுபவமும் வங்கி ஊழியருக்கு இருப்பது அரிது. தொழிற் கூட்டுறவுகளை

உருவாக்கி, வளர்த்து, ஒருங்கிணைத்துச் செயல்பட வைக்க தொழிற் கூட்டுறவுகள் அவசியம் தேவைப்படுகின்றன. தொழிற் கூட்டுறவுகள்மீதான ஆய்வுக் குழுவும் வாய்ப்புள்ள இடங்களில் தொழிற் கூட்டுறவு வங்கிகள் நிறுவப்படலாமெனப் பரிந்துரைத் துள்ளது. பிற கூட்டுறவு முகமைகளுக்குத் தரப்படும் எல்லா வசதிகளும் சலுகைகளும் தொழிற் கூட்டுறவு வங்கிகளுக்கும் தரப்படுதல் வேண்டுமென்றும் குழு பரிந்துரைத்தது. இருப்பினும் ரிசர்வு வங்கி தனியாகத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் அமைக் கப்படவேண்டுவதில்லை யென்று கருதி வருகிறது. இதற்குக் காரணங்கள் பின்வருமாறு:

(i) தனித் தொழிற் கூட்டுறவு வங்கிகளை அமைப்பது மாவட்டத்திற்கொரு வலுவான, உறுதி படைத்த நிதிய முகமை இருக்கவேண்டும் என்ற நோக்கத்திற்கு ஒவ்வியதாக அமையாது.

(ii) கைத்தறிக் கூட்டுறவுகள் போன்ற தொழிற் கூட்டுறவு கள் தற்போது மாவட்ட மத்திய வங்கியிடம் கடன் வசதி பெற்று வருவது போன்று பிற தொழிற் கூட்டுறவுகளும் கடன் பெற்றுக் கொள்ளலாம்.

(iii) முன்னரே இருந்துவரும் நிதிய முகமைகளுடன் போட்டியில் ஈடுபடும் வகையில் புதியதொரு வங்கியை நிறுவுவது நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்வழியே அரசு அளிக்கும் உதவிகளைத் தொழிற் கூட்டுறவு களுக்கு எளிதில் வழங்கலாம்.

(iv) வங்கியொன்றுக்கு மாவட்ட அளவில் தொழில் வளத்தைத் தருமளவுக்குத் தொழிற் கூட்டுறவுகள் வளர்ச்சியடைய வில்லை. பிற மத்திய நிதி முகமைகளின் வளர்ச்சிக்கு, வளரும் வாய்ப்பற்ற தொழிற் கூட்டுறவு வங்கி, ஒரு தொல்லையாக நிற்கக் கூடும்.

(v) மிகவும் பெரிய பரப்புள்ள ஆட்சி எல்லை கொண்ட தொழிற் கூட்டுறவு வங்கி தனது செயல் எல்லையிலுள்ள எல்லாத் தொழிற் கூட்டுறவுகளையும் திறம்பட மேற்பார்வை செய்து கண் காணிப்பது எளிதல்ல.

(vi) பெருமளவு நடவடிக்கைகளும், நிதி வளமும் பெற்றுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொழில் வங்கிகளைவிட திறமை யாகச் செயல்பட வாய்ப்புண்டு; தொழிற் கூட்டுறவுகளுக்குத் தேவைப்படும் கடன் வசதிகளைச் செய்து தரும் வளமான நிலையுமுண்டு.

மேற்கண்ட கருத்துகளை ஆமோதிப்பது போன்றே மத்திய அரசு நியமித்தத் தொழிற் கூட்டுறவுகள்மீதான இரு ஆய்வுக் குழுக்களும் பரிந்துரைகள் செய்தன. கூட்டுறவு வங்கிகள்வழி தொழில் நிதியம் வழங்கல்மீதான ஆய்வுக் குழுவினரும், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொழிற் கூட்டுறவுகளுக்குக் கடன் வசதிகளை யளிப்பதில் முக்கிய பங்கு ஏற்கலாம் என்று கருதினர்.

தொழிற் கூட்டுறவுகளுக்கு நிதிவசதிகள்

தொழில் துறையில் ஈடுபட்டிருக்கும் எல்லா நிறுவனங் களுக்கும் நிதிவசதி தேவைப்படுவது இயல்பு. தொழிற் கூட்டுறவு களுக்குப் பல்வகைக் கடன்களும் நிதிவசதிகளும் தேவைப் படுகின்றன. எளிய நிலையிலுள்ள நபர்களே தொழிற் கூட்டுறவு களில் உறுப்பினராக இருப்பதால் இக் கூட்டுறவுகளுக்கு நிதி மிகவும் முக்கியமான தேவையாக அமைகிறது.

கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு நிதி தேவைப்படுகிறது:

(1) தொழிற்கூடம் கட்ட, இயந்திரங்கள் வாங்க, தொழிற் கருவிகள் வாங்க நீண்டகால, மத்திய காலக் கடன்கள் தேவைப் படுகின்றன.

(2) கச்சாப் பொருள் (raw material) வாங்க, தொழிலாளி களுக்குக் கூலி தர, அலுவலக நிருவாகச் செலவுகள் செய்ய குறுகிய காலக் கடன்கள் தேவைப்படுகின்றன.

நிதி ஆதாரங்கள்

பல்வகைத் தொழில் கூட்டுறவுகளுக்கு நிதியுதவியினை வழங்குவது அரசினரும், பல்வேறு அரசினர் தொழிற் கூட்டுறவு களுக்கு அளிக்கும் நிதிவசதிகளாவன:

(1) கூட்டுறவுச் சங்கங்களில் பங்குகள் வாங்குவதற்கு உறுப் பினர்களுக்குக் கடன்.

(2) பிரதம தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற் கூட்டுறவு வங்கிகள், சேவைக் கூட்டிணைப்புகள் (Service Federations) ஆகியவற்றில் பங்குகளை வாங்குவது.

(3) வாடகைக் கொள்முதல் (Hire purchase) திட்டம்.

(4) சாதனங்கள் வாங்கக் கடன்கள், மானியங்கள்.

(5) கட்டடம், கிட்டங்கி கட்ட கடன்கள், மானியங்கள்.

(6) நடைமுறை முதல் கடன்கள்.

(7) நிருவாக மானியங்கள்.

(8) உற்பத்திக்கு உதவித்தொகை.

(9) விற்பனை தள்ளுபடி (Sales Rebate).

நிதி வழங்கும் நிலையங்கள்

தொழிற் கூட்டுறவுகளுக்கு நிதி வழங்கும் நிலையங்கள் வருமாறு:

(i) உச்சிக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள்.

(ii) தொழிற் கூட்டுறவு வங்கிகள்.

(iii) இந்திய ஸ்டேட் வங்கி.

(iv) இந்திய ரிசர்வு வங்கி.

(v) மாநில நிதியக் கூட்டுருக்கள்.

(vi) ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு.

(vii) வாணிக வங்கிகள்.

எந்தெந்த நிலையங்கள் எந்தெந்த **வகைக் கடன்களை** வழங்குகின்றனவென்பதைக் காண்போம்:

நீண்டகால, மத்திய கால நிதியுதவி

(அ) தொழில்களுக்கு அரசினர் உதவிச் சட்ட (State Aid to Industries Act)த்தின்கீழ் மாநிலத் தொழில்கள் இயக்கம் (State Directorate of Industries).

(ஆ) மாநில நிதிக் கூட்டுரு.

(இ) தேசீயச் சிற்றளவு தொழில்கள் கூட்டுரு (National Small Scale Industries Corporation).

(ஈ) கதர், கிராமத் தொழில்கள் குழு, பிற வாரியங்கள்.

குறுகிய காலக் கடனுதவி

(அ) தொழில்களுக்கு அரசினர் உதவிச் சட்டத்தின்கீழ் மாநிலத் தொழில்கள் இயக்ககம்.

(ஆ) இந்திய ஸ்டேட் வங்கி.

(இ) கதர், கிராமத் தொழில்கள் குழு, பிற வாரியங்கள்.

(ஈ) கூட்டுறவு வங்கிகள்.

(உ) வாணிக வங்கிகள்.

நிதியுதவி வழங்கப்படும் பாங்கு

பங்குமுதல் கடன்கள் (Share Capital Loans) தொழிற் கூட்டுறவுகளின் உறுப்பினர்களாகவுள்ள கைவினைஞர்கள் வறுமை நிலையிலிருப்பதால் அவர்களுக்குப் பங்குமுதல் எடுக்கக்கூட பண வசதியிருப்பதில்லை. பங்குமுதல் மிகக் குறைவாயுள்ள காரணத்தால் சங்கங்கள் கடன் வாங்கும் திறனும் குறைந்து நிற்கின்றது. கதர், கிராமத் தொழில்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் பங்குமுதல் கடனுக, நூறு ரூபாய் மதிப்புள்ள பங்கொன்றுக்கு ரூ. 87·50 வரை அளிக்கப்படுகிறது. கைத்தறி, சிற்றளவு தொழில்களாயிருப்பின் பங்கு மதிப்பில் 75% வரை பங்குமுதல் கடன் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. இதனுல் சங்கங்கள் தமக்குத் தேவைப்படும் நிதியைக் கடன்பெற ஏதுவாகிறது. மற்றும் பங்குமுதலுக்குப் பணஞ்செலுத்த இயலாத எளிய நிலையிலுள்ள கைவினைஞர்களும் சங்கத்தில் உறுப்பினராகச் சேரும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதன் விளைவாகச் சங்கத்தில் உறுப்பினர் எண்ணிக்கை உயருகின்றது.

பங்குமுதலில் பங்கேற்பு: மாநில அரசுகள் உச்சி, கூட்டிணைப்புச் சங்கங்களின் பங்கு முதலுக்குப் பணம் வழங்குகின்றன. சங்கங்கள் திரட்டிய பங்குமுதலுக்கு ஈடான தொகையினை அரசினர் பங்கு முதலாக வழங்குகின்றனர். மொத்தப் பங்கு முதலில் 50% அல்லது ஓர் இலட்சம் ரூபா—இத் தொகையில் எது குறைவானதோ அத் தொகைக்குட்பட்டு அரசினர் பங்கு முதல் அமைகின்றது. ஒரிசா, மகாராட்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களில் அரசினர் பிரதம சங்கங்களின் பங்குமுதலிலும் பங்கேற்கின்றனர்.

இயந்திரச் சாதனங்கள் வாங்கக் கடன், மானியம்

கைத்தறி, விசைத்தறிச் சங்கங்களுக்கு வேண்டிய சாதனங்களை வாங்க 50% முதல் 75% வரை கடன், மானியம் அளிக்கப்படுகின்றது. கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சாதனங்கள் வாங்க 50% மானியமாகவும் 50% கடனுகவும் அளிக்கப்படுகின்றது.

தவணைமுறையில் இயந்திரங்கள் வாங்குதல்

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாடகைக் கொள்முதல் (Hire Purchase) முறையில் இயந்திரங்களைத் தேசீயச் சிறு தொழில்கள் கூட்டுரு (National Small Industries Corporation)

அளிக்கின்றது. இயந்திரங்களின் மதிப்பில் 5% தொகை ரொக்கமாகச் செலுத்தப்படவேண்டும். மீதி தொகை குறித்தவாறு செலுத்தப்படுமென வங்கி அல்லது அரசு பொறுப்புறுதி தரவேண்டும்.

கட்டடம், கிட்டங்கி கட்ட கடன்கள், மானியங்கள்

கைத்தறித் துறையில் தொழிற்கூடங்கள், கிட்டங்கிகள் கட்ட 25% மானியம், 75% கடன் வழங்கப்படுகிறது. கதர், கிராமத் தொழில் சங்கங்களுக்கு இதுபோன்ற கட்டட வேலைகளுக்கு 50% கடன், 50% மானியம் வழங்கப்படுகின்றது. கதர், கிராமத் தொழில்கள் குழு அளிக்கும் வட்டியில்லாக் கடன், உறுதியான கட்டடங்கள் கட்டுவதற்கென இருந்தால் 10 ஆண்டுகளுக்கும், தற்காலிகக் கட்டடங்கள் கட்டுவதற்கென இருந்தால் 5 ஆண்டுகளுக்கும் ஆக அமைகிறது. தொழிற்பேட்டைகளில் பட்டறைகள் கட்ட ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவும், மாநில நிதியக் கூட்டுருக்களும் 15 அல்லது 20 ஆண்டுக் கடன்கள் வழங்குகின்றன.

நடைமுறை முதல் கடன்கள்
(Working Capital Loans)

கைத்தறிக் கூட்டுறவுகளுக்கு இந்திய ரிசர்வு வங்கியினர் அளிக்கும் வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு, கூட்டுறவு வங்கிகள் அல்லது அரசினர், நடைமுறை முதல் கடன் வழங்குகின்றனர். கதர், கிராமத் தொழில் சங்கங்களுக்குக் கதர், கிராமத் தொழில் குழுவினர் நடைமுறை முதல் கடன் வழங்குகின்றனர். விசைத்தறிச் சங்கங்களுக்கு 100% நடைமுறை முதல் கடனுகை வழங்கப்படுகிறது. சிற்றளவு தொழிற் கூட்டுறவுகள், கைவேலைப்பாடு, பட்டுநூல் தயாரிப்பு, கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் தாங்கள் தரும் பிணையத்தின் மதிப்பில் 75% அளவு நடைமுறை முதல் கடனுகைப் பெறலாம்.

நிருவாக மானியம்

கைத்தறிச் சாயக் கூடங்கள் (dye-houses), விற்பனை நிலையங்கள், நடமாடும் விற்பனை வண்டிகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவுகளையும், கதர், கிராமத் தொழில்கள் துறையிலுள்ள விற்பனை நிலையங்களுக்கு ஆகும் செலவுகளையும் 100% மானியமாக அரசினர்

வழங்கி வருகின்றனர். நிருவாகச் செலவுகளைப் பற்றிய நிதியுதவி குறைந்துசெல் பாங்கில் அமைந்துள்ளது. முதல் ஆண்டில் நிருவாகச் செலவுகள் 100%, இரண்டாம் ஆண்டில் 75%, மூன்றும் ஆண்டில் 50%, கடைசியாக நான்காம் ஆண்டில் 25% மானியமாக வழங்கப்படுகிறது. சில மாநில அரசுகள் வேறு விகிதப்படியான நிருவாக மானியங்களை வழங்குகின்றன.

விற்பனை தள்ளுபடி

கைத்தறித் துணி, கதர் துணி விற்பனைமீது தள்ளுபடி அளிக்கப் படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் சந்தையில் போட்டிப் போட்டுக் கொண்டு விற்கவும், கையிருப்புச் சரக்கினை விற்றுவிடவும் உதவும் நோக்கத்துடன் விற்பனை தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

அரசு தொழிற் கூட்டுறவுகளுக்கு வழங்கும் கடன்கள்மீது மிகவும் குறைந்த வட்டியே வசூலிக்கிறது. கதர், கிராமத் தொழில்களுக்குத் தரப்படும் பல கடன்கள்மீது வட்டி வசூலிக்கப் படுவதில்லை.

பல்வகை நிலையங்கள் அளிக்கும் நிதிவசதி

ரிசர்வு வங்கிச் சட்டப் பிரிவு 17 (2) (bb) படி ரிசர்வு வங்கி, கைத்தறி நெசவாளர்ச் சங்கங்களுக்கு உதவும்பொருட்டு மத்திய நிதி முகமைகளுக்குத் தனி வசதிகள் செய்து தந்துள்ளது. மேற் கூறிய சட்டப் பிரிவின்கீழ் நிதிவசதிகளைப் பெறக்கூடிய 22 வகைத் தொழில்களை ரிசர்வு வங்கி நிருணயித்துள்ளது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொழிற் கூட்டுறவுகளுக்குக் கடன் வழங்குவதில் அக்கறை காட்டவில்லை. தொழிற் கூட்டுறவு வங்கிகள் செயற்பாட்டைப்பற்றி முன்னர் கண்டோம்.

இந்திய ஸ்டேட் வங்கி அளிக்கும் உதவி தொழிற் கூட்டுறவு களுக்கு இந்திய ஸ்டேட் வங்கி அளிக்கும் உதவிகளாவன:

(i) **ஒருங்கிணைத்த கடன் திட்டம்:** தொழிற் கூட்டுறவுகள் தமக்குத் தேவையான நிதியினைக்கோரி கூட்டுறவு வங்கிக்கு விண்ணப்பிக்கும். இவ் வங்கியுடன் ஸ்டேட் வங்கி ஒருங்கிணைந்து செயல்பட்டு மாநில நிதிக் கூட்டுருவின் முகவராகக் கடன் தகுதி பற்றிய அறிக்கை தயாரித்தல், கடன் பட்டுவாடா செய்தல், தவணை வசூலித்தல் முதலிய பணிகளை மேற்கொள்ளும்.

(ii) **தளர்த்தப்பட்ட கடன் திட்டம்:** இயந்திரங்கள் வாங்கவும், நடைமுறை முதலுக்காகவும் ஸ்டேட் வங்கி தொழிற் கூட்டுறவு

களுக்குக் கடன்களை வழங்குகிறது. இரண்டாமவர் கையொப்பத்தின்மீது பிணையில்லாக் கடன், பூட்டுச் சாவி கடன் (Lock and key loan), கச்சாப்பொருளை, முடிவுற்ற பொருள் அடைமானத்தின் மீது அல்லது அடகின்மீது கடன் போன்ற பலவகைக் கடன்கள் வழங்கப்படுகின்றது.

(iii) கடனில் பங்கேற்கும் திட்டம்: தொழிற் கூட்டுறவு வங்கிகளுடன் சேர்ந்து ஸ்டேட் வங்கியும் தொழிற் கூட்டுறவுகளுக்குக் கடன் வழங்கும் திட்டம் உருவாகியுள்ளது.

(iv) மறுநிதி வழங்கும் திட்டம்: சில மாநிலங்களில் கூட்டுறவு வங்கிகள் தொழிற் கூட்டுறவுகளுக்குக் கடனளிப்பதில் அக்கறை காட்டுகின்றன. ஆனால், அவை மறுநிதி வசதி கிடைத்தால் மட்டுமே இங்ஙனம் கடனளிக்க இயலும் நிலையிலுள்ளன. இந் நிலையில் ஸ்டேட் வங்கி தக்க கூட்டுறவு வங்கிகளுக்கு மறுநிதி வசதியளிக்கின்றது.

(v) ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுகளுக்கு ஸ்டேட் வங்கி தனியாகக் கடன் வசதிகளைச் செய்து தருகிறது.

கூட்டுறவு நகர வங்கிகள்

பல காலமாகப் பரம்பரைக் கைவினைஞர்களுக்குக் கடன்வசதிகளையளிக்கும் பெருமை கூட்டுறவு நகர வங்கிகளுக்குண்டு. நகர வங்கிகளில் கைவினைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து தமக்குத் தேவையான கடனைப் பெறுவதுண்டு.

கடன் பொறுப்புறுதித் திட்டம் (Credit Guarantee Scheme)

சிறு தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட வங்கிகள் அளிக்கும் கடனைப் பொறுப்புறுதி செய்யும் திட்டமொன்றை இந்திய அரசு ரிசர்வு வங்கியின்வழி செயல்படுத்தி வருகின்றது. சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற் கூட்டுறவுகளுக்குத் தரப்படும் கடன்களும் இத் திட்டத்தின்வழி நன்மை பெறும் தகுதி பெற்றுள்ளன. உச்சிக் கூட்டுறவு வங்கிகள் அனுமதிக்கப்பட்ட வங்கிகளின் பட்டியலில் இடம்பெறுகின்றன. அனுமதிக்கப்பட்ட வங்கிகளோ அல்லது உச்சிக் கூட்டுறவு வங்கியோ பிற கூட்டுறவு வங்கிகளுடன் சேர்ந்து 25% அளவு கடன் அல்லது பொறுப்புறுதி வழங்கி

யிருப்பின், பிற கூட்டுறவு வங்கிகளும் இத் திட்டத்தின்கீழ்க் கிடைக்கும் நன்மைகளைப் பெறலாம். கடன் திருப்பிச் செலுத்தலில் தவறல் ஏற்பட்டது என்று மொழியப்பட்டதும் பொறுப்புறுதித் தொகை செலுத்தப்படவேண்டும்.

மத்திய நிதி முகமைகள் தொழிற் கூட்டுறவுகளுக்கு அளிக்கும் கடன்களுக்குப் பொறுப்புறுதியளிக்க மேலுமொரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத் திட்டம் மாநில அரசின்வழி செயல் படுத்தப்படுகின்றது. இதன்படி, நட்டமேற்படின், மாநில அரசு அதில் 40% பங்கினையேற்றால் மத்திய அரசு 50% பங்கினை ஏற்கும். பல மாநிலங்களில் இத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாநில நிதிக் கூட்டுருக்கள் தொழிற் கூட்டுறவுகளுக்குச் சில நோக்கங்களுக்கு மத்திய கால, நீண்ட காலக் கடன்களை வழங்கு கின்றன. பெரும்பாலான தொழிற் கூட்டுறவுகள் பிணையாக அளிக்க நிலையான சொத்துகள் இல்லாத காரணத்தால் இக் கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள இயலாத நிலையிலுள்ளன.

கச்சாப் பொருள் அளிப்பு

தொழிற் கூட்டுறவுகளுக்கு வேண்டிய கச்சாப்பொருள் உள் நாட்டில் கிடைக்காவிடில், இறக்குமதி செய்துகொள்ள உரிமம் (Licence) வழங்கப்படுகிறது. மாநிலத் தொழில்துறை இயக்குநர் இந்த உரிமம் வழங்குமாறு பரிந்துரைக்கவேண்டும். இரும்பு, எஃகு, சிமெண்ட் போன்ற கட்டுப்பாடுகட்குட்பட்ட கச்சாப் பொருள்கள் தேவைப்படும் தொழிற் கூட்டுறவுகளுக்குத் தொழில் இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில் இயக்ககம் (Industries Directorate) தொழிற் கூட்டுறவுகளுக்குத் தொழில் நுட்ப உதவி வழங்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மற்றும் அனைத் திந்திய வாரியங்களும், சிற்றளவு தொழில்கள் வளர்ச்சி ஆணையரும், கதர், கிராமத் தொழில் குழுவினரும் தக்க சிறப்புத் தேர்ச்சிபெற்ற வல்லுநர்களைக் கொண்டு தொழிற் கூட்டுறவு களுக்கு வேண்டிய உதவிகளை அளிக்கின்றனர்.

தொழிற் கூட்டுறவுகளின் பிரச்சினைகள்

அமைப்பினையொட்டிய பிரச்சினைகள்

பெரும்பான்மையான தொழிற் கூட்டுறவுகள் நட்டத்தில் நடந்து வருகின்றன. மொத்தத்தில் இலாபகரமாக நடந்து வருவன 30%-க்கும் குறைவாக உள்ளன. இதற்குக் காரணங்கள்

பலவுண்டு. தேவைப்படும் எண்ணிக்கையில் கைவினைஞர்கள் கிடைப்பார்களா, கச்சாப்பொருள்கள் எளிதில் கிடைக்குமா, சங்க உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து உழைக்கும் பண்புள்ளவர் களா என்றெல்லாம் தீர ஆராய்ந்து தொழிற் கூட்டுறவுகள் அமைக்கப்படுவதில்லை. உறுப்பினர்களை ஊக்குவித்துக் குறிப்பிட்ட குறிக்கோளை அடைய, அவர்களை உழைக்கும்படித் தூண்ட நல்ல தலைமைப் பண்புள்ளவர்கள் சங்கங்களில் தலைமைப் பதவியில் இருப்பது அவசியம். துவக்க காலத்தில் தொழிலாளர்களிடையே தலைமைப் பண்புள்ளவர்களைத் தேடிப் பிடிப்பது அருமையாக இருக்கக்கூடுமாதலால், இத் துறையில் ஈடுபாடுள்ளவர்கள் தலைவர்களாகப் பணியாற்றி வரலாம். இச் செய்திகளைக் கருத்தில் கொண்டே தொழிற் கூட்டுறவுகள் மீதான முதல் செயற்குழு (First Working Group on Industrial Co-operatives) கீழ்க்காணும் அடிப்படையில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியது:

1. அச் சங்கத்தால் பயனடையக்கூடிய நபர்களே அதன் உரிமையாளர்களாகவும், அதைக் கட்டுப்படுத்தும் உரிமையுள்ளவர்களாகவும் அமைதல்வேண்டும்.
2. சங்கத்தின் நிருவாகத்தில் எல்லா உறுப்பினர்களுக்கும் சமமான உரிமையிருத்தல்வேண்டும்.
3. ஒவ்வோர் உறுப்பினருக்கும் அவரது திறமை, தகைமையைப் பொருத்து ஊதியம் வழங்கப்பட வேண்டு மெனினும், இலாபத்தில் அவருக்கு வழங்கப்படும் பங்கு அவர் சங்கத்திற்கு வழங்கிய உழைப்பின் அளவுக்கு மிகுதியாக இருத்தலாகாது.

நிதிப் பிரச்சினைகள்

நேரத்தில் கடனளிப்பது என்ற கோட்பாட்டை அரசினரும் பிற நிதிய முகமைகளும் கடைப்பிடித்தால் தொழிற் கூட்டுறவுகள் வளம்பெற வாய்ப்புண்டு. இதற்கான செயல்முறைகள் எளி தாக்கப்படவேண்டும். தேவையான அளவு கடன் அனுமதிக்கப் பட்டால்தான் திட்டப்படி வளர்ச்சி காண முடியும். அரசு சங்கங்களின் பங்கு முதலை வலுப்படுத்த நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும். பங்குமுதலும், காப்பு நிதிகளும் கணிச மான அளவில் அமைந்தால் சங்கத்தின் கடன் வாங்கும் திறனும் உயர்ந்து நிற்கும்.

சங்கங்களுக்கு நிலையான சொத்துகள் வாங்க நிதியும், நடைமுறை முதலுக்கு நிதியும் தேவைப்படுகின்றன. இவ்விரண்டு

தேவைகளுக்கும் ஒருங்கிணைந்த நிதியுதவி வழங்கப்படாவிடில் சங்கத்தின் செயற்பாடு நிலைதடுமாறிப்போகும். துவக்க காலத்தில் சங்கங்கள் நட்டப்பட்டால் அவற்றிற்கு மேலும் நிதிவசதி கிடைப்பதரிது. ஆனால், கூடுதல் கடன் வசதிகளைப் பெற்றுச் சங்கம் சீரடைந்து இலாபம் ஈட்டக்கூடிய வாய்ப்பு இருப்பின் எப்படியாவது கடன் வசதிகள் செய்து தரப்படவேண்டும்.

கச்சாப்பொருள் அளிப்புப் பிரச்சினை

உள்நாட்டில் கிடைக்கும் கச்சாப்பொருள்களை மலிவான காலத்தில் வாங்கிச் சேகரித்து வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இதற்கு நடைமுறை முதலும், கிட்டங்கி வசதிகளும் தேவை. மாநில அரசினர் தொழிற் கூட்டுறவுகளுக்குக் கச்சாப் பொருள் வழங்க பல ஏற்பாடுகளைச் செய்திருந்தும் பல கூட்டுறவுகள் குறித்த நேரத்தில் தேவையான அளவு கச்சாப் பொருள் கிடைக்காது தொல்லைப்படுகின்றன.

சந்தையிடுகைப் பிரச்சினை

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகளில் பெரும் சிக்கல் நிறைந்த பிரச்சினையாகத் திகழ்வது சந்தையிடுகை (Marketing)யாகும். தரப்படுத்தல் ஏற்பாடின்மை, கவர்ச்சியான முடிவு அமைப்பின்மை, புதுபாணி, ரகங்கள் இல்லாமை, சீரான முறையில் கட்டுமானம் செய்யாமை தேவையான ரகப் பொருள்களை உற்பத்தி செய்யாமை போன்ற பலப்பல குறை பாடுகள் இச் சங்கங்களின் உற்பத்தி பொருள்களை விற்பதில் பல இடர்ப்பாடுகளை யுண்டாக்குகின்றன.

மேற்கண்ட குறைபாடுகளை நீக்க, பல நடவடிக்கைகளை உடனடியாகத் தொழிற் கூட்டுறவுகள் மேற்கொள்ளவேண்டும். நவீன உற்பத்தி உத்திகளைக் கையாளவேண்டும். புதுவகைத் தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றவேண்டும். சந்தையில் தேவைப்படும் பொருள்களைப்பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரித்து விற்பனை பெருக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக அவசியம். மாவட்ட, மாநில, தேசீயக் கூட்டிணைப்புகள் சந்தையிடுகைத் துறையில் தொழிற் கூட்டுறவுகளுக்குப் பேருதவி புரியலாம். தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்களில் பலவற்றை நுகர்வோர் கூட்டுறவுகள்வழி விற்பனை செய்யலாம். இவ்விருவகைக் கூட்டுறவுகளும் ஒருங்கிணைந்து செயல்படுதல் இன்றியமையாதது. பொதுத் துறையிலும், தனியார் துறையிலுமுள்ள பல தொழில்களுக்குத் தேவைப்படும் துணைப்பொருள்களைத் தொழிற் கூட்டுறவுகள் உற்பத்தி செய்து

அளிக்கலாம். பல மாநில அரசினர் அரசாங்கத் தேவைகளுக்குத் தொழிற் கூட்டுறவுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களேயே வாங்க வேண்டுமென்று விதித்துள்ளனர். தொழிற் கூட்டுறவுகளின் உறுப்பினர்களும், நிருவாகக் குழுவினரும் கூட்டுறவுக் கல்வி பெற்றிருப்பது மிகவும் அவசியம். இந்தியத் தேசீயக் கூட்டுறவு ஒன்றியம் இதற்கென உறுப்பினர் கல்வித் திட்டமொன்றைச் செயல்படுத்தி வருகின்றது. இத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

தொழிலில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நுணுக்கங்கள் தெரிந்த நபர்களே அதைச் சிறப்பாக நடத்திவர முடியும். ஆனல், தொழிற் கூட்டுறவுகளின் உறுப்பினர் பலர் முழுத் தகுதி பெற்றவர்களா யிருப்பது அரிது. எனவே, வல்லுநர்களே வேலேக்கு அமர்த்திக் கொள்ளுவது அவசியமாகிறது. உயர்ந்த ஊதியம் கொடுக்கும் திறன் பல தொழிற் கூட்டுறவுகளுக்குக் கிடையாது. ஆகவே, ஒரு சில தொழிற் கூட்டுறவுகள் ஒன்றுசேர்ந்து தமக்கு உதவ தொழில் வல்லுநர், கணக்கு நிபுணர்களே அமர்த்திப் பயன்பெறலாம்.

தொழிற் கூட்டுறவுகளின் நடவடிக்கைகளே மேற்பார்வை செய்ய தற்போதுள்ள ஏற்பாடுகள் போதுமானதாகத் தோன்ற வில்லே. ஓர் அலுவலருக்குப் பதினேந்து சங்கங்களே மேற்பார்வை செய்யும் பொறுப்பு அளிக்கப்படலாம் என்று தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மீதான செயற்குழு பரிந்துரைத்தது.

தொழிற் கூட்டுறவுகளின் மேம்பாட்டிற்குச் சில யோசனைகள்

பிரதம சங்கங்கள் வலுப்படுத்தப்படவேண்டும். ஆதாயத்துடன் செயல்படும் வாய்ப்பில்லாத சங்கங்களேக் கலேத்து விடலாம். முன்னேறும் வாய்ப்புள்ளவற்றைப் பிற சங்கங்களுடன் இணேக்கவும் செய்யலாம். புதிய சங்கங்கள் வட்டார வாரியாகவோ அல்லது தொழில் வாரியாகவோ அமைக்க திட்டமொன்று தீட்டப்படவேண்டும். புதிய சங்கங்கள் துவங்குவதில், பொது வசதி தொழிற்கூடங்கள் அமைக்கவும், பிற சேவைகளே அளிக்கவும் என ஏற்படுத்தப்படும் சிறு தொழில் முயல்வோர், முதுநிலே கைவினேஞர் (Master Craftsmen) களடங்கிய தொழிற் கூட்டுறவுகளுக்கு முதலிடம் தரப்பட வேண்டும்.

அனேத்திந்திய வாரியங்கள் மேற்கொண்டுள்ள பலவகைத் தொழில்கள், ரிசர்வு வங்கிச் சட்டத்தின் பிரிவு 17(2) (bb) கீழ்

அளிக்கப்படும் கடன் வசதிகளைப் பெறும் வாய்ப்புத் தரப்பட வேண்டும். கடன் வழங்கு நடைமுறைகள் எளிதாக்கப்பட வேண்டும். தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் கடன் வசதிகளனைத்தும் மத்திய நிதி முகமைகள் வழியே தரப்பட வேண்டும். நிருவாக மானியங்கள் வலுப்படுத்தப்பட வேண்டிய சங்கங்களுக்கு மேலும் தாராளமாக வழங்கப்படலாம்.

தொழிற் கூட்டுறவுகளின் தேசீயக் கூட்டிணைப்புவழி மட்டுமே தொழிற் கூட்டுறவுகளுக்கு வேண்டிய கச்சாப்பொருள்களும் சாதனங்களும் இறக்குமதி செய்யப்படவேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப்பொருள்களையும் பற்றாக்குறை நிலையி லிருக்கும் கச்சாப்பொருள்களையம் தனியுரிமையாளராகத் தொழிற் கூட்டுறவுகளின் தேசீயக் கூட்டிணைப்பு மாநிலக் கூட்டிணைப்பு களுடன் தொடர்பு கொண்டு வழங்கவேண்டும். பொதுத் துறையில் கிடைக்கும் சேதாரப் பொருள் (Scrap material) கூட்டுறவுகளின் தேவையை முதலில் நிறைவு செய்ய அளிக்கப் படுதல்வேண்டும். தொழிற் கூட்டுறவுகளின் தேசீயக் கூட்டிணைப் புக்குச் சேதாரப் பொருள்களைப் பகிர்ந்து வழங்கும் பொறுப்பு அளிக்கப்படவேண்டும். தேசீயக் கூட்டிணைப்பு வசதியான இடங்களில் கச்சாப்பொருள் கிடங்குகள் அமைத்துத் தொழிற் கூட்டுறவுகளுக்கு உதவவேண்டும்.

சந்தையிடுகைப் பணியில் தொழிற் கூட்டுறவுகளின் தேசீயக் கூட்டிணைப்பு மிகப்பெரும் பொறுப்பேற்கவேண்டும். சந்தை ஆராய்ச்சி மேற்கொள்ளல், நாடெங்கிலும் விற்பனை நிலையங்களை அமைத்தல், ஏற்றுமதி ஏற்பாடுகளை ஒருவழிப்படுத்தல், நுகர்வோர் கூட்டிணைப்புடன் தொடர்பு ஏற்படுதல் போன்ற பலப்பல சேவைகளைத் தேசீயக் கூட்டிணைப்புச் செய்யவேண்டும்.

நிருவாகத் துறையில் தொழிற் கூட்டுறவின் ஊழியர்களுக்கும், நிருவாகக் குழுவினருக்கும் பயிற்சியளிப்பது மிகமிக அவசியம். திறமையும் தகுதியும் வாய்ந்த அலுவலர்களைத் தொழிற் கூட்டுறவு களில் நியமிக்கவேண்டும். அவசிய மேற்பட்டால், துவக்க ஆண்டுகளில் இதனல் ஆகும் செலவினை ஈடுகட்ட அரசினர் மானியம் வழங்கலாம்.

1972–73இல் தொழிற் கூட்டுறவுகளின் வளர்ச்சி

சிற்றளவு தொழில்கள், கிராமத் தொழில்கள், கைவேலைப் பாட்டுத் தொழில்கள் ஆகிய துறைகளில் கூட்டுறவுகள் முக்கிய இடம் பெறுகின்றன. பேரளவு நுகர்ச்சிப் பண்டங்களை உற்பத்தி

செய்யவும், வழங்கிடவும் மிகப் பொருத்தமான முகமையாக விளங்குவது கூட்டுறவுத் துறையேயென மத்திய அரசின் தொழிற் கொள்கைக் கூற்று வற்புறுத்திப் பேசுகிறது. 1972-73இல் நம் நாட்டில் 34 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 48,000 தொழிற் கூட்டுறவுகள் இருந்தன. இவை ரூ. 163 கோடி மதிப்புள்ள பொருள்களை 1969-70இல் விற்றிருந்தன.

மத்திய அளவு, பேரளவுத் தொழில் துறைகளிலும் தொழிற் கூட்டுறவுகள் நிறுவப்பட்டு வந்தன. கூட்டுறவு நூற்பாலைகள் இந்த வகைத் தொழில்களைச் சேர்ந்தன. கேரளத்தில் ஸ்கூட்டர்கள் (Scooters) தயாரிக்கப் பொறியியல் கூட்டுறவுச் சங்கமொன்றுக்கு உரிமம் (Licence) வழங்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் டிராக்டர் நீரேற்றுக் கருவி, எண்ணெய்ப் பொறி துளைக்கும் உருளை (Drilling Rigs), மின்சாதனங்கள் போன்றவற்றைப் பழுது பார்க்கவும், நீர்ப்பாசனம், நிலவளப்படுத்தல், நீர் நிருவாகம், மண்வள ஆய்வு, வேளாண்மைபற்றித் தொழில் நுட்பம் முதலிய பணிகளைச் செய்யவும் வேளாண்–பொறியியல் சேவைக் கூட்டுறவுகள் (Agro-engineering and Service Co-operatives) வட்டார மட்டத்தில் அமைக்கப்பெற்று வருகின்றன. இக் கூட்டுறவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க மாநில அளவில் கூட்டிணைப்பு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. 1972-73இல் 27 வேளாண்-பொறியியல் சேவைக் கூட்டுறவுகள் ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள நீரேற்றுப் பாசனப் பணிகளை (Lift irrigation works) மேற்கொண்டுள்ளன.

தொழிற் கூட்டுறவுகளின் தேசியக் கூட்டிணைப்பு, தொழிற் கூட்டுறவுகள் உற்பத்தி செய்த பொருள்களை உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் விற்பனை செய்ய பல ஏற்பாடுகளைச் செய்தது. மூங்கிலில் செய்த புல்லாங்குழல், கம்பளி-நைலான் ஆகியவற்றைக் கொண்டு கையால் பின்னிய துணிகள், தோல் காலணிகள் போன்ற பல பொருள்களை ரூ. 51·10 இலட்சத்திற்கு 1971-72இல் ஏற்றுமதி செய்தது. உள் நாட்டில் கம்பளம், தையற் பொறி, காலுறை முதலியவற்றை ரூ. 21·54 இலட்சமளவிற்கு விற்பனை செய்தது.

வருங்காலத்தில் தொழில் கூட்டுறவுகளுக்கு நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கியமானதொரு பங்கு இருந்துவரும். முக்கியமாகப் பேரளவு நுகர்ச்சிக்குத் தேவைப்படும் பொருள்கள் உற்பத்தியில் தொழிற் கூட்டுறவுகள் தீவிரமாக இறங்கும் நல்வாய்ப்பு உண்டாகும்.

16. கூட்டுறவுப் பண்ணை

வேளாண்மைத் துறையில் நம்நாட்டு விவசாயிகள் பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு நடவடிக்கைகளைக் கூட்டுறவு முறையில் மேற்கொண்டு வந்துள்ளனரெனினும், அரசினர் கொள்கை என்ற முறையில் கூட்டுறவு வேளாண்மை அண்மையில் துவங்கப்பெற்றது. நம்நாடு ஒரு விவசாய நாடு. நாட்டு வருமானத்தில் ஏறத்தாழ 55% விவசாயத்தின்வழி பெறப்படுகின்றது. மக்கள் தொகையில் நூற்றுக்கு எழுபதின்மர் விவசாயத் தொழிலை வாழ்க்கை வழியாகக் கொண்டுள்ளனர். இவ்வளவு பெருவாரியான மக்கள் பயிர்த் தொழிலை நம்பியிருப்பதற்கேற்ப பயிரிடத்தக்க நிலப்பரப்பு மிகப் பெரிதாக அமையவில்லை. புள்ளிவிவரங்களின்படி இந்தியாவில் பயிரிடப்படும் நிலத்தை மக்களிடையே பகிர்ந்தளித்தால் தலைக்குச் சராசரி 0·84 ஏக்கர் மட்டுமே கிடைக்கும். வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்கள் தொகையில் 82 விழுக்காட்டினர் சிறு விவசாயிகளாக இருக்கின்றனர். 40 விழுக்காட்டினர் 2·5 ஏக்கர் பரப்பிற்கும் குறைவான நிலத்தில் வேளாண்மை செய்கின்றனர். இங்ஙனமாகப் பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பாலும் சிறு விவசாயிகளாக உள்ளனர். மற்றும் பலர் விவசாயத் தொழிலாளிகளாக மட்டுமே இருக்கின்றனர். இவர்கள், வேளாண்மையைச் சிறந்த முறையில் புதிய முன்னேற்றங்களைக் கடைப்பிடித்து நடத்திவர கூட்டுறவுப் பண்ணை வகை செய்கிறது.

கூட்டுறவு வேளாண்மை என்றால் என்ன?

நிலத்தைப் பயிரிடுவதில் கூட்டுறவுத் தத்துவங்களைக் கடைப்பிடிப்பதே கூட்டுறவு வேளாண்மை என்று அறிஞர் ஒட்டோ ஷில்லர் (Dr. Otto Schiller) கூறுகிறார். நிலத்தை ஒன்று திரட்டிக் கூட்டாக நிருவாகம் செய்வது கூட்டுறவு வேளாண்மையின்

உட்கருத்து என்று கூறுவருமுண்டு. பேராசிரியர் கார்வே கூறுவதாவது: 'கூட்டுறவு வேளாண்மையில் தனி நில உரிமையாளர்கள் தமது தனித்தன்மையை இழந்து தனி நிறுவனமென்ற நிலையை விட்டுவிடுகின்றனர். பொது நிறுவனமொன்று உருவாகி அந் நிறுவனம் அனுமதிக்கும் அளவுக்கு மட்டுமே உறுப்பினர் தமக்கென்ற தனிநிலை பெற முடியும்.' முக்கிய செய்திகளைப்பற்றிய முடிவுகளைச் செய்யும் அதிகாரம், தனிநபரிடமிருந்து எல்லா விவசாயிகளும் சேர்ந்த பொதுச் சங்கமொன்றுக்கு மாற்றப்படுவதே கூட்டுறவு வேளாண்மையின் உட்பொருளாகுமெனப் பேராசிரியர் டான்ட்வாலா (Professor Dantwala) கருதுகிறார். கூட்டுறவு வேளாண்மை பற்றிய ஆராய்ச்சிக் குழு கூட்டுறவு வேளாண்மைச் சங்கத்திற்கு வகுத்த இலக்கணமாவது: விவசாய உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டும், ஒன்று திரட்டிய நிலம், ஆள்வலிமை (Manpower) ஆகிய வளங்களை மேலும் சிறப்பாகப் பயன்படுத்தும் பொருட்டும், பெரும்பான்மை உறுப்பினர்கள் பண்ணை நடவடிக்கைகளில் பங்கேற்கும், விவசாயிகள் தாமே விரும்பி அமைக்கும் சங்கமே கூட்டுறவு வேளாண்மைச் சங்கமாகும். ஆதாயவகையற்ற நிலத்துண்டு (Uneconomic holding)களையுடைய சிறு விவசாயிகளும், சொந்த நிலமில்லாத உழவர்களும், தாமே விரும்பி, நவீன சாகுபடிமுறைகளை மேற்கொள்ளவும், வளங்களைச் சீராகப் பயன்படுத்தி பேரளவு உற்பத்தியின் நன்மைகளை அடையவும், தமது வளங்களனைத்தையும் ஒன்றுதிரட்டி உருவாக்கும் அமைப்பே கூட்டுறவு வேளாண்மையாகும். தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி என்ற தத்துவங்களின் அடிப்படையில் அமையும் இக் கூட்டுறவு சிறு விவசாயிகளுக்கும், நிலமில்லாத பண்ணையாட்களுக்கும நன்மையளிக்கவே ஏற்படுத்தப்படுகிறது. சுருங்கக் கூறின், தமது நிலம், ஆள்வலிமை, பிற வளங்களைக் கூட்டாக விவசாயம் செய்து நிருவாகம் செய்யும் பொருட்டு, ஒன்றுதிரட்டி, விவசாயிகள் தாமே விரும்பி அமைக்கும் மக்களாட்சி அமைப்பே கூட்டுறவு வேளாண்மை எனப்படும்.

மேற்கண்ட விளக்கத்திலிருந்து கூட்டுறவு வேளாண்மையின் முக்கிய கூறுகள் புலப்படும். அவை யாவன:

(i) உறுப்பினர்கள் தமது நிலத்தை ஒன்ருகத் திரட்டுகின்றனர்;

(ii) தமது ஆள்வலிமையையும் பிற வளங்களையும் கூட ஒன்று சேர்க்கின்றனர்;

(iii) நில உரிமை உறுப்பினர்வசமே இருந்து வருகிறது;

(iv) உறுப்பினர்கள் தாமே விரும்பிச் சங்கத்தை உருவாக்கி அதைக் கூட்டுறவு முறையில் நடத்தி வருகின்றனர்;

(v) கூட்டாகப் பயிர்த் தொழில் செய்யத் தாம் வழங்கியுள்ள நில அளவைப் பொருத்தும், தம் உழைப்பைப் பொருத்தும் உறுப்பினர்கள் ஊதியம் பெறுகின்றனர்;

(vi) நிருவாகம் கூட்டாக நடைபெறுகின்றது;

(vii) பண்ணை வேலைகள் திட்டம் சங்கத்தால் வகுக்கப்படுகின்றது; அத் திட்டப்படி உறுப்பினரொவ்வொருவரும் தமக்கிடப்பட்ட வேலைகளைச் செய்கின்றனர்.

கூட்டுறவு வேளாண்மைச் சங்கத்தின் நிகர இலாபம் உறுப்பினர்களுக்கு மேலூதியமாக (bonus) வழங்கப்படுகிறது. விருப்பப்பட்டால் உறுப்பினர்கள் சங்கத்திலிருந்து விலகிக்கொள்ள கூட்டுறவு வேளாண்மை நிருவாக அமைப்பில் உற்பத்தி கூட்டுறவுகளைப் போன்றதாகும். இதில் நில உரிமை எவ்வகையில் அமைந்துள்ளது என்பது முக்கியமல்ல; ஆனால், நிலம் எம்முறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதே முக்கியமானது. நிலத்தை ஒன்று திரட்டல், கூட்டாக வேளாண்மை மேற்கொள்ளல், ஒரு நிறுவனம் என்ற முறையில் நிருவாகம் ஆகிய சிறப்புக் கூறுகள் கூட்டுறவு வேளாண்மையில் காணப்படுகின்றன. உற்பத்தியையும், வேலை வாய்ப்பினையும் பெருக்கும் பொருட்டுக் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம் மேற்கொள்ளும் முக்கிய பணிகள் பின்வருமாறு:

(அ) நிலத்தைப் பண்படுத்துதலிலும், நீர்ப்பாசன ஏற்பாடுகளிலும் தீவிர திட்டங்களைச் செயல்படுத்தல்,

(ஆ) விவசாயத்திலும், விவசாயம் சார்ந்த தொழில்களிலும் புது உத்திகளைக் கையாளுதல்,

(இ) மேலும் சீரான முறையில் பயிரிடல், பயிர்த் திட்டம் வகுத்தல், பயிர்மாற்ற முறையினைக் கடைப்பிடித்தல்.

குறைந்த செலவில், நிறைய உற்பத்தி செய்து, வேலையை அனைவருக்கும் பகிர்ந்தளித்து, வருவாயை நியாயமாகப் பகிரும் வாய்ப்புக் கூட்டுறவு வேளாண்மையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களின் வகைகள்

பேரளவு வேளாண்மை நான்கு வகைகளாக அமையலாம். அவை பொதுப் பண்ணை முறை (Collective Farming), அரசினர் பண்ணைமுறை (State Farming), கூட்டுரு பண்ணைமுறை

(Corporate Farming) கூட்டுறவுப் பண்ணைமுறை (Co-operative Farming) எனப்படும்.

சோவியத் ருஷியாவில் பொதுப் பண்ணைமுறை மிகுதியும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. விவசாயக் குடும்பங்கள் தமது வளங்களனைத்தையும் ஒன்று திரட்டித் தாமே தேர்ந்தெடுக்கும் நிருவாகக் குழுவின் பொறுப்பில் அவற்றை ஒப்படைத்து அனைவரும் கூட்டாக உழைக்க முற்படுகின்றனர். உழைக்கும் உறுப்பினர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுக் குழுக்களுக்கு வேலை ஒதுக்கப்படுகிறது. உழவர் ஒருவர் சராசரி ஒரு நாளில் எவ்வளவு வேலை செய்ய முடியுமோ அதை அடிப்படையாகக் கொண்டு 'வேலை நாள்' (Work day) அளவு நிருணயிக்கப்பட்டு ஊதியம் வழங்கப்படுகிறது. பொதுப் பண்ணையின் உற்பத்தித் திட்டத்தை அரசு தயாரிக்கிறது. உற்பத்தியான விளைபொருளில் குறிப்பிட்ட அளவினை அரசினருக்குக் குறிப்பிட்ட விலைக்கு விற்கவேண்டும். பொதுப் பண்ணைகள் பெருவாரியாகப் பெரும் பண்ணைகளோடு இணைந்ததன் காரணமாக ருஷியாவில் இன்று காணப்படும் பொதுப் பண்ணைகள் மிகப்பெருமளவினதாக உள்ளன. பயிரிடல் நடவடிக்கைகள் பெரும்பாலும் பொறிமயமாக்கப்பட்டதால் உற்பத்தி கணிசமாக உயர்ந்துள்ளது.

அரசினர் பண்ணை முறையும் ருஷிய நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இப் பண்ணைகள் மிகவும் புதிய இயந்திரங்களைக் கொண்டு, நவீன விவசாயச் செயல் முறைகளின்படி கூலிக்கு வேலை செய்யும் உழைப்பாளிகளைக் கொண்டு நடத்தப்படுகின்றன.

முதலாளித்துவ அடிப்படையில் இலாப நோக்குடன் கூட்டுரு (Croproate) முறையில் அமெரிக்கா போன்ற நாடுகளில் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. பேரளவுத் தொழிலுக்குரிய நன்மைகள் இப் பண்ணைகளுக்குக் கிடைக்கின்றன.

கூட்டுறவுப் பண்ணை முறைகள்

பேரளவில் வேளாண்மை மேற்கொள்ள கூட்டுறவுப் பண்ணை முறையும் வகை செய்கிறது. இந்தியாவிலுள்ள சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமான பேரளவு வேளாண்மை முறை கூட்டுறவு வேளாண்மை முறைதான் என்று அனைத்திந்தியக் கூட்டுறவுத் திட்டக்குழு (1945) (All India Co-operative Planning Committee) திட்டவட்டமாகக் கூறியது. விவசாயிகளின் நில உரிமையைப் பறிக்காது, பயிர் செய்யக் கூடிய நிலப் பகுதிகளின் பரப்பை மிகுதிப்படுத்த கூட்டுறவு வேளாண்மை முறை மட்டுமே வகை

செய்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்கள் நான்கு வகையினவாகப் பிரிக்கப் படலாம் அவையாவன:

(i) கூட்டுறவு நன்முறை வேளாண்மைச் சங்கம் (Co-operative Better Farming Society).

(ii) கூட்டுறவு கூட்டு வேளாண்மைச் சங்கம் (Co-operative Joint Farming Society).

(iii) கூட்டுறவு வேளாண்மைக் குத்தகைச் சங்கம் (Co-operative Tenant Farming Society).

(iv) கூட்டுறவுப் பொது வேளாண்மைச் சங்கம் (Co-operative Collective Farming Society).

நன்முறை வேளாண்மைச் சங்கம்

கூட்டுறவு நன்முறை வேளாண்மைச் சங்கத்தில் உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது நிலத்தில் தாமே பயிர் செய்து அதன் பயனை அடைகின்றனர். இச் சங்கத்தில் கூட்டு விவசாயம் கிடையாது. புதிய திருத்தமான முறைகளில் விவசாயம் செய்யப் படவேண்டுமென்பதே இச் சங்கத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைய சங்கம் கீழ்க்காணும் பணிகளை மேற் கொள்ளுவதுண்டு: விதை, உரம் முதலியவற்றைக் கூட்டாக வாங்குதல்; விளைபொருளைத் திரட்டி, தூய்மைப் படுத்தி, தரம் பிரித்து விற்றல்; கூட்டாக உழுதல் அல்லது அறுவடை செய்தல்; இயந்திரங்களைக் கூட்டாகப் பயன்படுத்தல்; காவல், கண் காணிப்புக் கூட்டு ஏற்பாடுகள். தாம் பெறும் சேவைக்கு ஒவ்வோர். உறுப்பினரும் உரிய தொகையைச் செலுத்தவேண்டும். நடைமுறையில் நன்முறை வேளாண்மைச் சங்கங்கள் பலநோக்குச் சங்கங்கள் அல்லது சேவைக் கூட்டுறவுகள் போன்று செயல் படுகின்றன.

கூட்டு வேளாண்மைச் சங்கம்

ஆதாயமற்ற சிற்றளவு நிலங்களை வைத்திருக்கும் சிறு நில உரிமையாளர்கள் அவற்றை ஒன்று திரட்டி, ஒப்புக்கொள்ளப் பட்ட ஒரு திட்டப்படி பயிர்த் தொழிலை நடத்திவருவது கூட்டு வேளாண்மைச் சங்கத்தின் சிறப்பாகும். தாம் செய்யும் வேலைக்கு உறுப்பினர் கூலி பெறுவர். உறுப்பினர் ஒவ்வொருவரும் தொடர்ந்து தம் நிலத்தின்மீது உரிமையுள்ளவராவார். நிலத்தின் மதிப்புக் கேற்றவாறு அவர்களுக்கு ஒரு பகிர்வுத்தொகை வழங்கப்

படும். கூட்டாக் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள் கூட்டாகவே விற்பனை செய்யப்படுகிறது. விற்பனைத் தொகையி லிருந்து பயிர்ச் செலவுகள், நிலத்திற்கான பகிர்வுத் தொகை, காப்பு நிதி போன்ற இனங்களுக்கான தொகையினைக் கழித்த பிறகு எஞ்சி நிற்கும் தொகை உறுப்பினர்களிடையே அவர்கள் ஈட்டிய கூலியளவின் விகிதப்படி பிரித்து வழங்கப்படும். உறுப்பின ரொருவரின் நிலத்தின்மீது செய்யப்பட்ட சீர்திருத்தத்திற்கு அவர் தான் பணஞ் செலுத்தவேண்டும். பொதுவாக இச் சங்கங்கள் மேற்கொள்ளும் பணிகளாவன: (அ) பயிரிடும் திட்டம் வகுத்தல் (ஆ) பண்ணைக்குத் தேவையானவற்றைக் கூட்டாகக் கொள்முதல் செய்தல்; பண்ணையில் உற்பத்தியான பொருள்களைக் கூட்டாக விற்றல்; (இ) நிலச் சீர்திருத்தத்திற்குத் தேவையான நிதியினைச் சங்கச் சொத்துகளைப் பிணையாகக் கொடுத்துத் திரட்டுதல்; (ஈ) நிலத்தைச் சீர்திருத்துதல்; (உ) இயந்திரங்கள் வாங்குதல் (ஊ) பயிர்ச் செலவுகளை மேற்கொள்ளல்; (எ) விவசாய வளர்ச் சிக்கான பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

வேளாண்மைக் குத்தகைச் சங்கம்

கூட்டுறவு வேளாண்மைக் குத்தகைச் சங்கம் தனக்கெனச் சொந்தமாக அல்லது குத்தகையில் நிலம் வைத்திருக்கும். இந்நிலத்தைச் சிறு பகுதிகளாக்கி சங்க உறுப்பினர் ஒவ்வொரு வருக்கும் ஒரு பகுதி குத்தகைக்கு விடப்படுகிறது. சங்கம் வகுக்கும் திட்டப்படி மொத்த நிலமும் சாகுபடி செய்யப்படவேண்டும். தனிக் குத்தகைக்காரர் இத் திட்டத்துக்குட்பட்டுத் தன் விருப்பப் படி சாகுபடி செய்யலாம். தனக்கு அளிக்கப்பட்ட குத்தகை நிலத்திற்குக் குத்தகைதாரர் ஒவ்வொருவரும் வாரம் (rent) செலுத்தவேண்டும். அவர் விளைவித்த பொருள் அவருடையதே யாகும். சங்கம் உறுப்பினர்களுக்குக் கடன், விதை, உரம் போன்ற விவசாயத் தேவைகளை வழங்குகிறது; விளைபொருளை விற்கவும் ஏற்பாடு செய்கிறது. விருப்பமுள்ள உறுப்பினர்கள் இவ் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கோயில்கள், மடங்கள், சத்திரங்கள் போன்ற நிலையங்களின் நிலங்கள் தனியாரால் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பின்னர் அவர்களால் சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களுக்குக் கீழ்க் குத்தகை (Sublease)க்கு விடப்பட்டு வந்தது. இதனால் சாகுபடி செய்யும் உழைப்பாளிகளுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காத நிலையிருந்தது. இந்த நிலைமாறி இடைநிலையரை அகற்ற வேளாண்மைக் குத்தகைச் சங்கங்கள் வகை செய்கின்றன. உழைப்பின் முழுப் பயன் குத்தகைதாரருக்கே போய்ச் சேரு கின்றது. எச் செலவும் போக மீதியுள்ள இலாபத் தொகை

உறுப்பினர்களிடையே அவர்கள் செலுத்தும் வாரத்தின் அடிப் படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

பொது வேளாண்மைச் சங்கம்

பொது வேளாண்மைச் சங்கம் சொந்தத்தில் அல்லது குத்தகையில் நிலம் வைத்திருக்கும். சங்கத்திற்காக உறுப்பினர்கள் இந் நிலத்தில் சாகுபடி மேற்கொள்ளுகின்றனர். உறுப்பினர்கள் நல்கும் உழைப்பிற்குக் கூலியளிக்கப்படுகின்றது. நிலத்தில் உற்பத்தியாகும் விளைபொருள் சங்கத்தைச் சேரும். செலவுகள் போக, பிற ஒதுக்கீடுகள் போக எஞ்சியுள்ள இலாபம் உறுப்பினர் களிடையே அவர்கள் ஈட்டிய கூலியின் விகிதத்தில் பகிர்ந்தளிக்கப் படும். இவ்வகைச் சங்கத்தின் முக்கிய சிறப்பு இயந்திரங்களைக் கொண்டு பேரளவு விவசாய உற்பத்தியை மேற்கொள்ளுவதாகும்.

மேற்கூறிய நான்குவகை வேளாண்மைச் சங்கங்கள் தவிர, மேலும் இரண்டு வகைச் சங்கங்கள் சில மாநிலங்களில் காணப் படுகின்றன. கிராம தான இயக்கம் நாட்டில் பரவி வந்த நேரத்தில் கிராம தான சர்வோதயக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படலாயின. தங்கள் நிலங்களைக் கிராம தான இயக்கத் திற்கு நன்கொடையாக வழங்கிய கிராம மக்கள், சாகுபடிக்கும் பிற நிலம் தொடர்புற்ற நடவடிக்கைகளுக்கும் கடன் வாங்க வழி தேடினர். இந் நேரத்தில் கிராம தான சங்கங்கள் துவக்கப் பெற்றன. நன்கொடையளிக்கும் கிராமவாசிகள் தனித்தனியாகச் சங்கத்தின் பெயருக்கு நன்கொடைப் பத்திரம் எழுதிக்கொடுத்த இடங்களில் இச் சங்கங்கள் துவக்கப்பெற்றன. ஓரளவுக்கு இச் சங்கம் பொது வேளாண்மைச் சங்கம் போன்று காணப்படுகிறது. நன்கொடை நிலத்தை நிருவகிப்பதுடன் இச் சங்கம் கிராம மக்கள் அனைவருடைய முன்னேற்றத்திற்கும் உகந்த சமூக, பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது.

பூதான கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களும் (Bhoodhan Co-operative Farming Societies) சில மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றன. நிலமில்லாத நபர்களுக்கு இச்சங்கம் நன்கொடையாக வழங்கப்பட்ட நிலத்தைப் பகிர்ந்தளிக்கின்றது. நன்கொடை பெற்றவர்களும், ஆதரவாளர்களாக நன்கொடையளித்தவர்கள் சிலரும் இச் சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேருகின்றனர். தனி நபர்கள் தமக்கு அளிக்கப்பட்ட பகுதி நிலத்தைத் தாமே தனித் தனியாகச் சாகுபடி செய்கின்றனர். சங்கம் தனக்கென இருத்தி வைத்துள்ள நிலத்தைப் பொதுச் சாகுபடி முறையில் பயிரிடு கின்றனர். ஆக, இச் சங்கத்தில் தனி நபர் சாகுபடியும் பொதுச் சாகுபடியும் ஒருங்கே நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

நிலக் குடியேற்ற சங்கங்கள்
(Land Colonisation Societies)

விவசாயத்தில் ஈடுபாடுள்ள சொந்த நிலமில்லாத நபர்களையும், முன்னாள் இராணுவத்தினர்களையும் அரசினரின் நிலத்தில் குடியேற்ற அமைக்கப்பட்ட சங்கங்கள் நிலக் குடியேற்ற சங்கங்கள் எனப் பெயர் பெற்றன. வேலையில்லாது தவிக்கும் இளைஞர்களை வேளாண்மைத் துறைக்குத் திருப்ப இச் சங்கங்கள் பயன்படுத்தப் பட்டன. மதுவிலக்குக் கொண்டுவரப்பட்ட நேரத்தில், வேலையிழந்த கள் இறக்குவோர் விவசாயத் தொழிலில் ஈடுபடுமாறு ஊக்குவிக்க இச் சங்கம் சிலகாலம் உதவியது. மேற்கூறிய வகையினரின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவந்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் இச் சங்கங்களின் நோக்கமாகத் திகழ்ந்தன. அரசினர் பயனில்லாதிருக்கும் தம் நிலங்களைச் சங்கங்களுக்கு ஒதுக்கினர். சங்கம் ஒரு குடியானவர் போன்று அரசுக்கு வரிகள், தீர்வைகளைச் செலுத்தவேண்டும். சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலம் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு பகுதி ஒதுக்கப்படும். ஒதுக்கப்பட்ட நிலத்தில் உறுப்பினர் சாகுபடி மேற்கொண்டு அதன்வழி கிடைக்கும் விளைபொருளைத் தனக்கே எடுத்துக்கொள்வர். நிலக் குடியேற்ற சங்கங்கள் தமிழ் நாட்டில் 1935-36 முதல் செயல்பட்டு வருகின்றன.

வேளாண்மைக் கூட்டுறவுகள் ஐம்பதாண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகின்றன என்று பொதுவாகக் கூறினாலும் நாடு விடுதலையடைந்த பின்னர்தான் இத் துறையில் முயற்சிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டன. 1949-50இல் அந் நாள் பம்பாய் அரசு கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு அடிகோலியது. வேளாண்மைக் கூட்டுறவுகளுக்குப் பலவித சலுகைகளை அளித்தது. இதன் பயனாக 1947-48இல் 22 சங்கங்கள் மட்டுமே இருந்தது. 1951-52இல் 224 சங்கங்களாக வளர்ந்தது. உத்தரப் பிரதேசத்திலும் சோதனை அடிப்படையில் ஜான்சி மாவட்டத்தில் கூட்டுறவுப் பண்ணை நிறுவப்படலாயிற்று. 1950-51இல் மொத்தம் 45 வேளாண்மைச் சங்கங்கள் உத்தரப் பிரதேசத்தில் செயல்பட்டு வந்தன. அந் நாள் சென்னை மாகாணத்தில் துவக்கப்பெற்ற நிலக் குடியேற்ற சங்கங்கள் வேளாண்மைக் குத்தகைச் சங்கங்களாகக் கருதப்பட்டன. பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக நம் நாட்டிற்கு வந்த மக்களுக்குப் புதுவாழ்வளிக்க ராஜஸ்தான், ஒரிசா, பஞ்சாப் மாநிலங்களில்

வேளாண்மைக் கூட்டுறவுகள் துவங்கப்பெற்றன. அரசினர் 'உணவு உற்பத்திப் பெருக்கு' (Grow more food)த் திட்டத்தின்கீழ் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க முன்வந்தோருக்கு நிலம் ஒதுக்குவதில் அரசு முன்னுரிமை தந்ததால் சில இடங்களில் வேளாண்மைச் சங்கங்கள் அமைக்கப்பெற்றன. இங்ஙனம் பலப்பல சூழ்நிலைகளில் வேளாண்மைக் கூட்டுறவுகள் துவக்கப் பெற்ற போதிலும் அவை சிறப்பாக நடைபெற்று வரவில்லை. இதற்குப் பல காரணங்களுண்டு. இவற்றுள் முக்கியமானவை:

(i) ஒதுக்கப்பட்ட நிலம் தரம் குறைந்ததாகச் சில இடங்களில் காணப்பட்டது.

(ii) நீண்டகால நிதிவசதிகளுக்கு ஏற்பாடுகள் போதுமான அளவுக்கு இல்லை.

(iii) நீர்ப்பாசன வசதிகள் சரிவர அமையவில்லை.

(iv) உறுப்பினர்களிடையே ஒருமைப்பாடு இல்லாமை.

(v) முறைகேடான நிருவாகம்.

(vi) கல்வியறிவில்லாத, முற்போக்கு மனப்பான்மையற்ற உறுப்பினர்கள்.

திட்டகாலத்தில் வேளாண்மைக் கூட்டுறவுகள்

கிராமப்புற பொருளாதாரத்தைச் சீரமைக்கக் கூட்டுறவு வேளாண்மை முறை மேற்கொள்ளப்பட வேண்டுமென முதல் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை கூறியது. சிறு விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் தாமே விரும்பி ஒன்றுகூடி வேளாண்மைக் கூட்டுறவுகளை அமைக்க ஊக்குவிக்கப்பட வேண்டும்; இது குறித்து அவர்களுக்கு உதவியும் அளிக்கப்படவேண்டும். குறைந்தது இத்தனைப் பரப்பு நிலமிருந்தால்தான் சங்கம் அமைக்கப்படலா மென்ற நியதி இருத்தல்வேண்டும். நிதி, தொழில் நுட்பம், சந்தையிடுகை முதலிய வசதிகள் அளிப்பதில் வேளாண்மைச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். அரசினருக்குச் சொந்தமான சாகுபடி செய்யக்கூடிய நிலங்களைக் குத்தகைக்கு விடுவதில் கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். தரிசு நிலமாக இருப்பின் அதைச் சாகுபடிக்குக் கொண்டுவர, தக்க உதவி வழங்கப்பட வேண்டும். சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கும்வரை, நேரடி யாகச் சாகுபடி மேற்கொள்ளாத உறுப்பினர்கள் நலனுக்குப் புறம்பான நில உரிமைகள் உருவாகலாகாது. இந்தக் குறிப்புகளை

அடிப்படையாகக் கொண்டு, மாநில அரசுகள் கூட்டுறவுப் பண்ணை முறையை வளர்க்கத் திட்டங்களை வகுக்குமாறு திட்டக்குழு கோரியது. முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நாட்டில் சற்றேறப்ப ஓராயிரம் கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்கள் செயல் பட்டு வந்தன. பஞ்சாப், மகாராட்டிரம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்கள் ஓரளவுக்கு வளர்ச்சி கண்டன. பல சங்கங்கள் அரசினரின் நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளை ஏய்க்கும் பொருட்டு அமைக்கப்பட்டதாகவும், சில சங்கங்கள் அரசினர் அளிக்கும் சலுகைகளைப் பெற நிறுவப்பட்டதாகவும் காணப்பட்டன. பொதுவாகக் கூறினல் கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்கள் வேரூன்றி வளரவில்லை.

இரண்டாம் திட்டகாலத்தில் கூட்டுறவு வேளாண்மையின் முக்கியத்துவம் மேலும் வலியுறுத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னேடித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். நில உச்ச வரம்புச் சட்டங்களின் காரணமாக உபரி யாகக் காணப்படும் விவசாய நிலங்களைக் கூட்டுறவு முறையில் வேளாண்மை செய்யவேண்டும். சரிவர இயங்காத வேளாண் மைச் சங்கங்களைச் சீராக இயங்கும்படி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆதிவாசிகள் எனப்படும் பழங்குடி மக்கள் தங்களுடைய பொது உரிமைப் பழக்கப்படி வேளாண்மை செய்துவருமிடங்களில் வேளாண்மைக் கூட்டுறவு முறையில் அமைக்கப்பெற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். கூட்டுறவு வேளாண்மையினைப்பற்றி விரிவான பயிற்சித் திட்டம் கொண்டு வரப்பட வேண்டும். தனிநபர்கள் கொண்ட குழுக்கள், கூட்டுறவு முறையில் வேளாண்மைச் சங்கங்கள் அமைக்க எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும்.

கூட்டுறவு வேளாண்மை மீதான செயற்குழு (Working group on Co-operative Farming)

இந்திய அரசு கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களின் நடப்பை ஆராய்ந்து, அவை செம்மையாகச் செயல்பட யோசனை களைக் கூற திரு. நிஜலிங்கப்பா தலைமையில் ஜூன் 1959 இல் ஒரு குழுவினை அமைத்தது. சிறு, நடுத்தர விவசாயிகளின் பொரு ளாதார, சமூக நிலையினை மேம்படுத்தக் கூட்டு வேளாண்மைச் சங்கங்கள் ஒரு சிறந்த முறையும் முகமையுமாகுமென நிஜலிங் கப்பா குழு கருதியது. வேளாண்மைக் கூட்டுறவுகள் விவசாயி களின் விருப்பப்படி மட்டுமே துவங்கப்படவேண்டும். எவ்வித

வற்புறுத்தலும் இருத்தலாகாது. கூட்டுறவுத் துறையில் வளர்ச்சி கண்டுள்ள 320 சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்படவேண்டும். முன்னோடித் திட்டங்களின் வெற்றியையும் அவை நல்கும் நன்மைகளையுங்கண்டு விவசாயிகள் கூட்டுறவுப் பண்ணைகளின்பால் ஈர்க்கப்பட வேண்டுமெனக் குழு பரிந்துரைத்தது.

பொதுவாக, ஐந்தாண்டுக் காலத்திற்கு நிலம் ஒன்று திரட்டப் படவேண்டும். உறுப்பினரின் நில உரிமை மதிக்கப்படவேண்டும்; கைம்மாறும் அளிக்கப்படவேண்டும். உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் குழுவினரிடம் நிருவாகம் ஒப்படைக்கப்பட வேண்டும், வேளாண்மைக் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்குத் திட்டமிட மத்திய அரசும், மாநில அரசுகளும் ஆலோசனைக் குழுக்களை அமைக்க வேண்டும். கூட்டுறவு வேளாண்மையின் நுணுக்கங்கள், பிரச்சினைகள் பற்றி உறுப்பினர்களுக்கும் உறுப்பினராகக் கூடிய வாய்ப்புள்ளோருக்கும் கல்வியும் பயிற்சியும் அளிப்பது மிக அவசியமெனக் குழு வற்புறுத்தியது. அரசினர் சங்கமொன்றுக்கு அதன் உற்பத்தித் திட்டத்தையொட்டி ரூ. 4,000-க்கு மிகாத நீண்டகால, மத்தியகாலக் கடன்களை அளிக்கவேண்டும். சங்கத்தின் கடன் வாங்கு திறனை உயர்த்த அரசு ரூ. 2,000 வரை சங்கமொன்றில் பங்கு எடுக்கலாமென்று குழு பரிந்துரைத்தது. மூன்றாண்டுகளுக்கு நிருவாக உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமென்றும், கிட்டங்கி, மாட்டுக் கொட்டில் கட்ட கடன்களும் உதவித் தொகையும் வழங்கப்பட வேண்டுமென்றும் குழு யோசனை கூறியது.

நிஜலிங்கப்பா குழுவின் பரிந்துரைகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக வேளாண்மைச் சங்கங்களின் எண்ணிக்கை 1955-56இல் ஆயிரமாக இருந்தது 1960-61இல் 6,325 ஆக உயர்ந்தது. 1957-58இல் உறுப்பினர் எண்ணிக்கை 1·90 இலட்சமாக இருந்தது 1960-61இல் 3·05 இலட்சமாக உயர்ந்தது. வேளாண்மைச் சங்கங்கள் 1960-61இல் சாகுபடி செய்த நிலத்தின் பரப்பு 8.90 இலட்சம் ஏக்கர்களாக இருந்தன. மொத்தச் சங்கங்களில் 1961 ஜூன் இறுதியில் 1,097 நன்முறை வேளாண்மைச் சங்கங்களாகவும், 2,080 கூட்டு வேளாண்மைச் சங்கங்களாகவும், 1,104 பொது வேளாண்மைச் சங்கங்களாகவும், 2044 வேளாண்மைக் குத்தகைச் சங்கங்களாகவும் இருந்தன.

மூன்றாம் திட்டகாலத்தில் முன்னரே தொடங்கப்பெற்ற சங்கங்களின் நடைமுறையைச் சீர்ப்படுத்தி, வேளாண்மைக்

கூட்டுறவுகளுக்குத் திடமான அடிக்கல் நாட்ட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. கூட்டுறவு வேளாண்மைக்கு ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டது. இந்திய அரசு தேசியக் கூட்டுறவு வேளாண்மை ஆலோசனைக் குழுவொன்றை அமைத்தது. வேளாண்மைச் சங்கங்களின் அண்மைக்கால வளர்ச்சியைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

அட்டவணை

கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களின் வளர்ச்சி

விவரம்	1960-61	1965-66	1966-67	1967-68	1968-69	1969-70	1970-71
எண்ணிக்கை	6325	7294	7866	8048	8143	8819	9473
உறுப்பினர் (இலட்சத்தில்)	3·04	1·88	2·08	2·13	2·19	2·41	2·57
உள்ளடங்கிய பரப்பு (ஹெக்டேர் இலட்சத்தில்)	1·73	3·93	4·15	4·21	4·18	4·75	4·88
உற்பத்தியின் மதிப்பு (ரூ. கோடியில்)	5·24	4·83	6·71	8·64	8·43	7·84	9·17
விற்பனையின் மதிப்பு (ரூ. கோடியில்)	3·51	4·29	6·45	8·03	7·64	7.77	8·53
இலாபகரமாக நடந்த சங்கங்களின் எண்.	2521	2928	3072	2877	2843	2933	3039
நட்டத்தில் நடந்த சங்கங்களின் எண்.	2332	2790	2700	2830	2788	3017	3042
இலாப நட்டமின்றி நடந்த சங்கங்களின் எண்.	1470	1587	2092	2341	2512	2869	3392

கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்கள் நடந்து வந்த பாங்கினை மதிப்பீடு செய்ய இந்திய அரசு 1963ஆம் ஆண்டுப் பேராசிரியர் காட்கில் தலைமையில் ஒரு குழுவினை அமைத்தது. இக் குழு 1965 செப்டம்பரில் தனது அறிக்கையை அளித்தது. முழுமையாக நாட்டை எடுத்துக்கொண்டால், கூட்டுறவு வேளாண்மை ஆழமாக வேரூன்றவில்லை என்று குழு கருதியது. இருப்பினும் வருங்காலத்தில் வளர்ச்சியடைந்து உற்பத்திப் பெருக்கத்தில் சீரிய பணியாற்றும் வாய்ப்பு இருக்கிறது என்பது புலனாயிற்று. குழு மேற்கொண்ட கள ஆராய்ச்சி பல செய்திகளைப் புலப்படுத்தியது. சங்கங்கள் பெரும்பாலும் அரசியல் கட்சிகளாலும், சமூக–மதத் தொண்டர்களாலும், கூட்டுறவாளர்களாலும், அறிஞர்களாலும்

உருவாக்கப் பெற்றன. அலுவல் வழியல்லாத தலைவர்கள் உறுப்பினர்களோடு நெருங்கிப் பழகி ஒன்றுபட்டு உழைத்த சங்கங்களில் செயற்பாடு சீராக அமைந்தது. சிறு விவசாயிகள், குறிப்பாக ஒரே வகுப்பைச் சேர்ந்த அல்லது உறவுமுறை அமைந்த உறுப்பினர்கள், அடங்கிய சங்கங்கள் பொருளாதார அவசியத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இச் சங்கங்களில் உறுப்பினர்களின் நிலம், கால்நடை, உழவுக் கருவிகள் எல்லாம் முழுமையாக ஒன்று திரட்டப்பட்டிருந்தன. உறுப்பினர்களில் மிகப்பெரும்பான்மையினர் உழைப்பை நல்கினர். தமக்குள் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டுச் செயலாற்றி வந்தனர். நடுத்தர, பெரும் விவசாயிகள் உறுப்பினர்களாயிருந்த சங்கங்களில் ஒரு சில குடும்பங்கள் மட்டுமே சங்கத்தில் உள்ளடங்கியிருந்தன. உறுப்பினர்கள் உழைப்பதில்லை; உறுப்பினர் கிராமத்தில் வசிப்பதுமில்லை.

விவசாய உற்பத்தியில் கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்கள் மிகவும் செம்மையாகச் செயல்பட்டனவென்று கள ஆராய்ச்சி புலப்படுத்தியது. நீர்ப்பாசன வசதிகள் செய்வது, நிலத்தைப் பண்படுத்தி வளப்படுத்துவது, உரங்களைப் பெருமளவில் பயன் படுத்துவது, புதிய சாகுபடி முறைகளைக் கையாளுவது போன்ற பல ஏற்பாடுகளை இச் சங்கங்கள் மேற்கொண்டது குறிப்பிடத் தக்கது. பல சங்கங்களில் சாகுபடி முறையை மாற்றியதோடன்றிப் புதுவகைக் கருவிகளையும் பயன்படுத்தலாயினர். சாகுபடி நடவடிக்கைகளில் சிலவற்றை இயந்திரங்களைக் கொண்டு செய்தனர். சில குறைபாடுகளையும் இவ்வாராய்ச்சி புலப் படுத்தியது. சில சங்கங்களுக்குச் சரியான தலைவர்கள் அமைய வில்லை. சில சங்கங்களில் பெரும் விவசாயிகளின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. தொழில் நுட்ப, நிதி உதவிகள் வேண்டிய அளவுக்குத் தக்க காலத்தில் கிடைக்காமல் சில சங்கங்கள் தொல்லைப்பட்டன. சில சங்கங்களில் உறுப்பினர்கள் தமது நிலத்தில் ஒரு பகுதியை மட்டுமே ஒன்று திரட்டியிருந்தனர். சில இடங்களில் வளம்பெறும் வாய்ப்பற்ற சங்கங்கள் உருவாகி யிருந்தன.

வேளாண்மைக் கூட்டுறவுகள் சீரான வளர்ச்சிபெற காட்கில் குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளை மொழிந்தது.

(அ) ஆதாயமற்ற சிறுநிலப் பகுதிகளையுடையோர் அடங்கிய சங்கங்களுக்குத் தனிப்பட்ட சலுகைகளும் உதவி களும் அளிக்கப்படவேண்டும்; சிறுநிலக் கிழார்கள்

வேளாண்மைச் சங்கங்களை அமைக்கும்படி ஊக்குவிக்கப்படுதல்வேண்டும்.

(ஆ) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் கூட்டுறவுப் பண்ணையொன்றில் உறுப்பினர்களாவதற்குத் தடை விதிக்கவேண்டுவதில்லை. ஆனால், இளவர் (minor)களும், உழைக்காத நபர்களும் பதிவு செய்வதற்குத் தேவையான குறைந்த அளவு எண்ணிக்கையை யடையும் பொருட்டு உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப் படக்கூடாது; சங்கம் பதிவு செய்யத் தேவைப்படும் குறைந்த அளவு எண்ணிக்கையளவிற்கேனும் தனியாக நிலம் வைத்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை இருத்தல்வேண்டும்; பண்ணையைச் சார்ந்த நிலமற்ற தொழிலாளிகள் சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

(இ) 250 அல்லது அதற்கும் மிகுதியாக வேளாண்மைச் சங்கங்களுள்ள மாநிலங்களில், மாநில மட்ட வேளாண்மைச் சங்கங்களின் கூட்டிணைப்பு அமைக்கப்படவேண்டும்.

(ஈ) உறுப்பினர்கள் தம் நிலங்களனைத்தையும் வேளாண்மைச் சங்கங்களுக்குத் திரட்டியளிக்கவேண்டும். நிலப் பண்பாடு, தீவிர சாகுபடி, பால்பண்ணை, ஆட்டுப் பண்ணை போன்ற சார்பு நடவடிக்கைகள் முதலியவற்றைச் சங்கங்களே மேற்கொள்ளவேண்டும்.

(உ) மாநிலங்களிலுள்ள நிலச் சட்டங்கள் விதித்துள்ள உச்ச அளவுக்கு மிகாது உரிமைப் பகிர்வுத் தொகை (Owner ship dividend) வழங்கப்படலாம். உறுப்பினர் சங்கத்தில் செய்த வேலையின் அடிப்படையில் மேலூதியம் (Bonus) வழங்க ஒவ்வொரு பண்ணையிலும் ஏற்பாடு இருக்கவேண்டும்.

அரசினர் வேளாண்மைக் கூட்டுறவுகளுக்கு அளிக்கும் நிதி வசதிகளிலும் சில மாற்றங்களைக் காட்கில் குழுப் பரிந்துரைத்தது. இவற்றை அரசினர் ஏற்றுக்கொண்டனர். இதன் விளைவாகக் கூட்டு வேளாண்மைச் சங்கம் பெறக்கூடிய மொத்த உதவி ரூ. 28,200-க்கு மிகாதிருக்கும்; பொது வேளாண்மைச் சங்கம் ஒன்று பெறக்கூடிய உச்ச அளவு உதவி ரூ. 39,100. இதில் பங்கு முதல் பொருட்டு ரூ. 2,000, கிட்டங்கி-கால்நடைக் கொட்டில் கடன்-உதவித் தொகை ரூ. 5,000, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் ரூ. 20,000 உச்ச அளவுக்குட்பட்ட நிலப் பண்பாட்டுக்

கடன், உச்ச அளவு ரூ. 1,200-க்கு உட்பட்ட நிருவாக உதவித் தொகை கூட்டு வேளாண்மைச் சங்கம் பெறலாம். இரு மாற்றங்கள் தவிர பொது வேளாண்மைச் சங்கமும் மேற்கூறிய உதவிகளைப் பெறலாம். இவ்வகைச் சங்கம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் உச்ச அளவு ரூ. 30,000-க்கு உட்பட்டு நிலப் பண்பாட்டுக் கடன், சங்கமொன்றுக்கு ரூ. 2,100 வீதம் நிருவாக உதவித் தொகை பெறலாம்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை செயலிழந்த நலிவுற்ற வேளாண்மைக் கூட்டுறவுகள் வலுப்படுத்தப்படுவதற்கு முதலிடம் தந்துள்ளது. வளரும் வாய்ப்புள்ள அடக்கமான பரப்புள்ள இடங்களில் மட்டுமே புதிய சங்கங்கள் அமைக்கப் படுமென்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டு களில் (1970, 1971, 1972) நடைபெற்ற மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் மாநில அரசினர் முன்னரே மேற் கொள்ளப்பட்டுள்ள கூட்டுறவு வேளாண்மைத் திட்டங்கள் சரிவர செயல்பட போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டு மென்றும், நிலச் சீர்திருத்தச் சட்டங்களை அமுல் செய்யும்போது கிடைக்கும் உபரி நிலங்களைப் பொது வேளாண்மைச் சங்கங்களை உருவாக்கப் பயன்படுத்த வேண்டுமென்றும் பரிந்துரைக்கப் பட்டது. ஆனால், மிகச் சில மாநிலங்களே இத் திட்டத்தில் அக்கறை காட்டியுள்ளன. மத்தியப் பிரதேசத்தில் பழங்குடிகள், அரிசனங்கள், நிலமற்றத் தொழிலாளிகள் ஆகியோருக்குக் கூட்டுறவு முறையில் கூட்டுச் சாகுபடி மேற்கொள்ள அரசின் பயன்படா நிலம் (Waste land) ஒதுக்கப்படுகிறது. 1971-72இல் 700 பொது வேளாண்மைச் சங்கங்கள் நிறுவப்பெற்றன. குஜராத் மாநிலமும், அரசினரின் பயன்படா நிலத்தைக் கூட்டுறவு பொது வேளாண்மைச் சங்கங்கள் அமைக்கப்படும் பொருட்டு வழங்க முடிவு செய்துள்ளது. ஆந்திரப் பிரதேசத்திலும், செய லிழந்த சங்கங்களை வலுப்படுத்தும் திட்டம் ஒரு புறமும், புதிய வேளாண்மைக் கூட்டுறவுகளை அமைக்கும் திட்டம் மற்றொரு புறமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிருஷ்ணா, கிழக்குக் கோதாவரி மாவட்டங்களில் மட்டும் 700 புதிய சங்கங்கள் துவக்கப்படவிருக்கின்றன. இவற்றில் 1973 மார்ச்சு வரை 357 பொது வேளாண்மைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

கூட்டுறவு வேளாண்மையின் நன்மைகள்

இந்தியக் குடியரசின் தலைவர் திரு. வி. வி. கிரி நம் நாட்டின் விவசாயத்துறை மேம்பட ஒரே வழி கூட்டுறவு வேளாண்மை

முறையை மேற்கொள்வதுதான் என்று பலமுறை பல அரங்குகளில் திட்ட வட்டமாக எடுத்துக் கூறியுள்ளார். மற்றும் தலை சிறந்த அரசியல் அறிஞர்களும், பொருளாதார வல்லுநர்களும் கூட்டுறவு வேளாண்மை முறை மிகச் சிறந்த கிராம சமுதாயத்தை உருவாக்கும் திறன் பெற்ற அமைப்பு என்று பேசுகின்றனர். இந்த அமைப்பினால் ஏற்படக் கூடிய நன்மைகளைக் காண்போம்:

1. விவசாய உற்பத்தியைப் பெருக்க வேளாண்மைக் கூட்டுறவுகள் பெரிதும் உதவும். நம் நாட்டில் மிகப் பெரும்பான்மையான விவசாயிகள் மிகச் சிறிய அளவு நிலமே கொண்டுள்ளனர். இந்தச் சிற்றளவு நிலத்தை ஆதாயமாகப் பயிர் செய்வது அரிது. இச் சிறிய அளவு நிலமும் நம் உரிமை இறக்கச் சட்டப்படி மேலும் பல துண்டுகளாகப் பிரிக்கப்படும் வாய்ப்புண்டு. கூட்டுறவு வேளாண்மையில் ஆதாயமற்ற சிறிய நிலப் பகுதிகளை ஒன்று சேர்த்துப் பெரியதொரு பரப்பை உருவாக்கிச் சாகுபடியை இலாபகரமாக நடத்தும் சிறப்பு உண்டு.

பெரிய பரப்பில் சாகுபடி செய்வதில் பல நன்மைகளுண்டு:

(i) நிலத்தை நன்கு திட்டமிட்டுப் பயன்படுத்த முடியும்.

(ii) மண்வளப் பாதுகாப்பு, நிலப் பண்பாடு போன்ற நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்ளலாம்.

(iii) நீர்ப்பாசன வசதிகளுக்கு எளிதாக ஏற்பாடு செய்யலாம்.

(iv) புதிய சாகுபடி முறைகளைக் கையாளலாம்.

(v) உறுப்பினர் பலருடைய அனுபவமும் திறனும் தொழில் பற்றிய அறிவும் பயன்படுத்தப்படும் வாய்ப்புண்டு.

2. உற்பத்திச் செலவு குறைய கூட்டுறவு வேளாண்மை உதவுகிறது. ஆள் உழைப்பினையும், கால்நடை உழைப்பினையும் சீரான முறையில் பயன்படுத்தும் வாய்ப்புக் கூட்டுறவு வேளாண்மையிலுண்டு. சிறு நிலப்பகுதிகளைச் சாகுபடி செய்ய இயந்திரங்களைப் பயன்படுத்துவது அரிது. மற்றும் புதிய சாகுபடி முறைகளைக் கையாளுவதும் அரிது. பெரிய பரப்பில் புதிய முறைகளையும் இயந்திரங்களையும் எளிதில் கையாளும் வாய்ப்புண்டு.

3. விவசாயத்திற்குத் தேவைப்படும் பல வசதிகளைக் கூட்டுறவு வேளாண்மை முறை எளிதில் அளிக்கின்றது. தனி நபர் விவசாயிகள் கடன், நீர்ப்பாசனம், சந்தையிடுகை வசதிகளைப் பெற பல இன்னல்களுக்கு ஆளாக நேருகிறது. ஆனால், கூட்டுறவுச்

சங்கம் என்ற அமைப்பின்வழி இவ் வசதிகளைப் பெறுவது எளிது. நேரத்தில் தேவைகள் கிடைத்தால் சாகுபடியினைச் செம்மையாகச் செய்ய முடிகிறது. இதனால் உற்பத்தியும் பெருகுகிறது.

4. உற்பத்திப் பொருள் கூட்டாகச் சந்தையிலிடப்படுவதால் இடைநிலையரின் சுரண்டல் தவிர்க்கப்படுகிறது.

5. கிராமப்புறங்களில் காணப்படும் வேலைக் குறைவு (under-employment), வேலையின்மை (unemployment) நிலைக்கு ஒரு தீர்வு காண கூட்டுறவு வேளாண்மை முறை பயன்படுகிறது. கிராமங்களில் சாலைகளமைப்பது, சமுதாய வசதிகளை அமைத்துத் தருவது, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது போன்ற வேலைகளுக்கு உழைப்புத் தேவைப்படுகிறது. இதனால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கின்றது. கிராமங்களிலிருந்து மக்கள் பெயர்ந்து பட்டினம் செல்வது தவிர்க்கப்படுகிறது.

6. நிலங்கள் மேலும் துண்டு போடப்படுவதையும் பிரிக்கப் படுவதையும் தடுத்து நிறுத்தும் வலிமை மிக்கதோர் அமைப்பாகக் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம் திகழ்கிறது. சிறு நிலப் பகுதிகளைச் சேர்த்து முழுமையான ஒரு பரப்பைப் பெற பலப்பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இப் பிரச்சினைக்கு முடிவான ஒரு தீர்வு கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களை யமைப்பதேயாகும்.

7. விவசாய உற்பத்திப் பெருகி, உற்பத்திச் செலவு குறைந் தால் விவசாயியின், பொருளாதார நிலைமை வலுவடையும். வாழ்க்கைத் தரம் உயரும். வாழ்க்கை வசதிகளும் பெருகும்.

8. கிராம மட்டத்தில் கிராமத் தொழில்களையும், பக்குவப் படுத்தும் தொழில்களையும் அமைக்கக் கூட்டுறவு வேளாண்மை வழி வகுக்கின்றது.

9. கிராமத்தில் கூட்டுறவு வாழ்க்கை அமையவும் மக்க ளிடையே தலைவர்கள் உருவாகவும், தலைமைப் பண்பு வளரவும் பெரிதும் உதவுகிறது. வேளாண்மைச் சங்க அலுவலர்களுக்கு நிருவாக அனுபவமும் ஏற்படுகிறது.

10. புதிய குடியேற்றங்கள் கூட்டுறவுப் பண்ணை முறையில் அமைக்கப்பட்டால் பிற அமைப்புகள்வழி ஏற்படும் நலன்களை விடச் சிறப்பான நலனும் செம்மை நிலையும் உண்டாகும் என்பது அனுபவ வாயிலாக அறியப்பட்டுள்ளது.

கூட்டுறவு வேளாண்மையின் குறைபாடுகள்

1. சிலர் கூட்டுறவு வேளாண்மை முறையில் உற்பத்தி பெருக்கத்திற்கு வாய்ப்பில்லை என்று வாதிடுகின்றனர். இதுகாறும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் பெரிய பண்ணைகள் சிறிய பண்ணைகளைவிட மிகுதியான உற்பத்தித் திறனுள்ளதாகக் காட்ட வில்லை. இன்னும கூறப்போனல், உணவுதானியங்களைப் பொறுத்த வரையாவது பெரும பண்ணைகளைவிட சிறிய பண்ணையில்தான் ஏக்கர் ஒன்றுக்கு உற்பத்தி அதிகமாக உள்ளது.

2. தாமே விரும்பி விவசாயிகள் கூட்டுறவு வேளாண்மையை மேற்கொளவது எங்குமே வெற்றி கண்டதில்லை என்று சிலர் கூறுகின்றனர். அறிஞர் ஒட்டோ ஷில்லர் எனபார் கூறியதாவது: 'பழைய கிராமமொன்றில் விவசாயிகள், தாமே விரும்பித் தம் நிலத்தைத் தாமே பயன்படுத்துவதை விட்டுக்கொடுத்து, கூட்டுச் சாகுபடிக்காக அவர்கள் நிலத்தை ஒன்று திரட்டியதாக எடுத்துக் காட்டு ஒன்றைக்கூட காட்டுவது மிகமிக அரிது. இந்தியாவைப் பொறுத்தவரையிலும்கூட இதுதான் உண்மையான நிலைபோன்று காணப்படுகிறது. இப்படியிருககும்போது, இந் நாட்டில் கூட்டுறவு வேளாண்மை ஏற்படுத்துவதன்வழி மாபெரும் விளைவுகள் உண்டாகுமென எதிர்பார்ப்பது வியப்பளிக்கிறது!

3. பேரளவு பண்ணை முறை பொறியாட்சிக்கு வழி வகுக்கும். நாளடைவில் இதனுல் வேலையின்மை பெருகும் என்று சிலர் கருதுகின்றனர். உண்மையில் தற்போதுள்ள நிலையில் பொறிகளைப் பயன்படுத்தும் வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. திட்டக் குழு கூறியுள்ளது போன்று இன்றைய நிலையில் இயந்திரமயமாக்கலால் ஏற்படும் நன்மைகளைவிட சமுதாயத்தில் வேலையின்மையென்ற தீமையே மிகுந்து நிற்கும்.

4. இந்திய விவசாயி நிலத்தைத் தன் உயிரினும் மேலாகக் கருதுகிறுர். எக்காரணத்தைக் கொண்டும் அவர் நிலத்தைப் பிரிந்து நிற்க ஒப்பமாட்டார். இந்த மனப்பான்மையுள்ளவர்கள் எங்ஙனம் கூட்டுறவு வேளாண்மையை மேற்கொள்ள முடியும் என்ற வினவைச் சிலர் எழுப்புகின்றனர்.

5. பயிற்சி பெற்ற திறமைமிக்க ஊழியர் கூட்டுறவு வேளாண்மைத் திட்டங்களை அமுல் நடத்தினுல் திட்டம் சரிவர நடைபெறும். ஆனுல், பயிற்சிபெற்ற ஊழியரின் பற்றுக்குறை பலகாலமாக நாமெடங்கிலும் இருந்து வருகிறது.

6. குறிப்பிட்ட உழைக்கும் உறுப்பினர் எவ்வளவு உழைப்பைச் சங்கத்திற்கு அளித்துள்ளார் என்று கணக்கிடுவது கடினமாக இருக்கிறது. சிலர் கடுமையாக உழைக்கலாம்; சிலர் மேலோட்டமாக வேலை செய்யலாம். இருவகையினருக்கு ஒரே அளவு கூலி கொடுக்கப்படும்போது உறுப்பினர்களிடையே கசப்பு ஏற்படுகிறது.

மேற்கண்ட குறைகளில் சில தவிர்க்கக் கூடியன. சில, நாளடைவில் மக்கள் பொதுநலனைத் தம் நலனினும் பெரிதாகக் கருதும் காலம் வந்ததும் மறைந்து போகும். கூட்டுறவு வேளாண்மை வெற்றிபெற மிகவும் இன்றியமையாது தேவைப் படுவது நாணயம், ஈடுபாடு, திறமையுள்ள கூட்டுறவாளர்களே. அலுவல் பற்றற்றத் தலைவர்கள் இத் துறையில் அக்கறை எடுத்துக் கொண்டு செயல்படுதல் விரும்பத்தக்கது. வேளாண்மைச் சங்கங் களால் பயன்பெறக் கூடியவர்களுக்கு இவற்றின் நன்மைகள், நுணுக்கங்கள், பயன்கள் எடுத்துக் கூறப்படவேண்டும். கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நிலவள வங்கிகளும் தேவைப்படும் கடன் வசதிகளையளிக்க வேண்டும். அரசு அலுவலர்கள் சங்கத்திற்கு வழிகாட்டியாகச் செயல்படவேண்டும். சங்கங்கள் துவக்கப்படுமுன்னரே உறுப் பினர்களாகச் சேர இருப்போருக்குச் சங்கத்தின் தத்துவத்தையும், நோக்கத்தையும் தெளிவாக விளக்கவேண்டும். பெருமளவு நம்பிக்கையைத் தூண்டிவிட்டுப் பின்னர் எதிர்நோக்கிய அளவு பயன் கிட்டாவிட்டால் உறுப்பினர் வெறுப்பும், சீற்றமும் அடைவர். பல பிரச்சினைகளையும், இடர்ப்பாடுகளையும் கடந்து சென்றே வெற்றி காண முடியும். பொறுமையும், உழைப்பும் தேவை என்பதை வலியுறுத்தவேண்டும். எல்லாவற்றையும்விட இச் சங்கங்களின் வெற்றிக்கு மாநில அரசின் முழு ஆதரவு தேவை. கொள்கையளவில் மாநில அரசுகள் அனைத்தும் கூட்டுறவுப் பண்ணை முறையை ஒப்புக் கொண்டுள்ளனர். இதைச் செயல்படுத்துவதில் வேகம் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடு கின்றது. உணவு உற்பத்தியைப் பெருக்கி நாடு தன்னிறைவு அடைய முழு மூச்சுடன் பாடுபடும் இந்நாளில், கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களும் தமது பணியினைச் சீராகச் செய்து வளர்ந்திட அருமையான வாய்ப்பு இருந்து வருகிறது. இவ் வாய்ப்பை வேளாண்மைக் கூட்டுறவுகள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

17. பல்வகைக் கூட்டுறவுகள்

இந்த அத்தியாயத்தில் இதுகாறும் பேசப்படாத பலவகைக் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றி காண்போம்.

பால் வழங்கு கூட்டுறவுகள்

பால் சத்துமிக்க ஓர் உணவு. பச்சிளம் குழந்தை முதல் வயது மிக முதிர்ந்தவர்வரை அனைவருக்கும் ஏற்ற உணவு பால். வாழ்க்கையில் பல நிலைகளிலுள்ள மக்களும் பாலைப் பல்வேறுவகைகளில் பயன்படுத்துகின்றனர். உலகிலுள்ள கால்நடைச் செல்வத்தில் மூன்றிலொரு பங்கு நம் நாட்டில் இருந்துவந்த போதிலும், கால்நடையொன்றின் பால் உற்பத்தி உலகிலேயே மிகக் குறைவாக உள்ள நாடுகளில் நம்நாடும் ஒன்றாகும். மக்களின் தேவையினை நோக்க நாட்டின் பால் உற்பத்திக் குறைவாகவே இருந்து வருகிறது. எனவே, பால் உற்பத்தியை மிகுதியாக்குவதன் இன்றியமையாமை நன்கு உணரப்படும்.

நகர்ப்புறங்களில் பால் வழங்கல் ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. வேண்டிய அளவு பால் கிடைக்காத நிலையில் பால் வியாபாரிகள் கலப்படம் செய்தல் போன்ற தீய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் மக்களின் உடல்நலம் கெடுவதுடன் வளர்ச்சியும் குன்றிவிடும் வாய்ப்பும் மிகுதியாகிறது. நகர்ப்புறங்களில் வழங்கப்படும் பாலில் 60% மட்டுமே அங்கேயே உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் 40% கிராமப்புறங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறதென்றும் கணக்கிடப்பட்டுள்ளது. நகரங்களில் கறவை மாடுகள் வைத்திருக்கும் நபர்களில் பெரும்பாலோர் எளிய, வசதி குறைவான மக்களே. இவர்கள் உற்பத்தியாளர், வழங்குநர் ஆகியோரின் பணிகளை ஒருங்கே செய்து வருகின்றனர். தமது வாடிக்கையர் வசிக்குமிடங்களுக்கு அருகில் வாழ்ந்துவர வேண்டிய நிலையிலுள்ளனர். நகரங்களில் நெரிசல் மிகுதி.

வாடகையும் மிகுதி. இடவசதியும் குறைவு. இதன் காரணமாகப் பால்காரர்கள் தமது கால்நடைகளைத் துப்புரவான, தூய்மையான சூழ்நிலையில் வைத்திருக்க முடியவில்லை. நகர்களுக்கு அருகிலுள்ள புறநகர்ப் பகுதிகளில் ஓரளவு இடவசதியும், துப்புரவான சூழ்ப்புறமும், தீவனங்கள் ஓரளவுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும் வசதியும் உண்டு. ஆகவே, கறவை மாடுகளை நகர்ப் புறங்களுக்கு வெளிப்பகுதிகளில் வைத்துச் சுகாதாரமான சூழ் நிலையில் பால் கறந்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் பெரிதும் தேவைப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள கறவை மாடுகளில் 95% கிராமப்புறங்களிலுள்ளன. கிராமப்புறங்களில் பால் உற்பத்தி சிறு அளவிலும், சிதறிக்கிடக்கும் பல மாட்டுத் தொழுவங்களிலும் நடைபெறுகின்றது. கிராமங்களில் உபரியாகவுள்ள பாலை நகரங்களுக்குக் கொண்டுவர விரைவான போக்குவரத்து வசதிகள் தேவை. பால் விரைவில் கெட்டுப்போகக் கூடிய பண்டமாதலால் அதைக் கறந்த சிலமணி நேரங்களுக்குள் பயன்படுத்தியே ஆகவேண்டும். மற்றும் மக்கள் கறந்த பாலையே பெரிதும் விரும்புவதால், இறுக்கப்பட்ட பால் (Condensed milk) அல்லது பால் மாவு (Milk Powder) போன்ற உருவங்களில் பாலை வழங்குவது மக்கள் தேவையை நிறைவு செய்யாது. எனவே, நீர்வடிவில் பாலை மக்களுக்கு அளிக்க ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன.

நம் நாட்டின் பால் உற்பத்தித் துறையில் ஏறத்தாழ இரண்டரை கோடி மக்கள் ஈடுபட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பால் உற்பத்தியாளர்களைத் தக்க குழுக்களாக ஒன்று சேர்க்க மிகவும் உகந்த அமைப்புக் கூட்டுறவு என ஒப்புக்கொள்ளப்படுகிறது. உற்பத்தியாளர்களின் உபரி பாலை விற்பதற்கும் அவர்களது வருமானத்தைப் பெருக்குவதற்கும் கூட்டுறவு உதவுகிறது. மற்றும், உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையிலுள்ள இடைநிலையர் (intermediaries) கூட்டுறவுச் சங்க அமைப்பினல் நீக்கப்படுவதால், உற்பத்தியாளருக்கு நல்ல ஆதாயமும், நுகர்வோருக்கு நியாயமான விலைக்குப் பாலும் கிடைக்கிறது. சங்கத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய சங்க அலுவலர்களும் அரசு அலுவலர்களும் இருப்பதால் நுகர்வோருக்குத் தரமான பால் கிடைக்குமென்று உறுதியாக நம்பலாம்.

நம் நாட்டு மக்கள் தொகையில் மிகப் பெரும் பகுதியினர் விவசாயிகளாகவும், அவர்களில் பெரும்பாலோர் சிறு விவசாயிகளாகவும் இருப்பதை முன்னரே கண்டோம். சிறு விவசாயிகள்

ஆதாயமற்ற முறையில் சாகுபடி நடத்திவருகின்றனர். இவர்களுக்குக் கடன்பெறும் திறன் குறைவாகவே இருக்கின்றது. இவர்கள் குடும்பத்தில் பல நபர்கள் இருப்பர். இவர்களுக்கு ஊதியம் பெறும் வாய்ப்புள்ள வேலை மிகக் குறைவாகவே இருக்கின்றது. சிறு விவசாயிகள் வாழ்வை வளப்படுத்திக்கொள்ள துணைத் தொழில்களை மேற்கொள்ளலாம். இந்த வகையில் பால்பண்ணை சிறு விவசாயிகளுக்கும், நிலமற்ற பண்ணையாட்களுக்கும் ஒரு நல்ல துணைத் தொழிலாக அமைகிறது.

பால் கூட்டுறவுகளின் அமைப்பு

பால் உற்பத்தி செய்யும் நபர்கள் சேர்ந்து அமைப்பது பிரதம பால் சங்கங்கள் அல்லது பால் அளிப்புச் சங்கங்கள் எனப்படும். பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தம் உறுப்பினர்களின் பொருளாதார நலனை மேம்படுத்துவதே பால் வழங்கும் சங்கங்களின் நோக்கமாகும். உபரியாக உற்பத்தி செய்யப்படும் பாலை விற்பதற்கும், பொதுவாகப் பால் உற்பத்தியை மிகுதிப்படுத்துவதற்கும் உறுப்பினர்களுக்கு இச் சங்கங்கள் உதவி செய்கின்றன. பெரிய ஊர்களிலும், நகரங்களிலும் பால் வழங்கு ஒன்றியங்கள் (Milk Supply Unions) செயல்பட்டு வருகின்றன. பிரதம பால் வழங்கு சங்கங்கள் இவற்றோடு இணைக்கப்பட்டிருக்கும். பல பிரதம பால் வழங்கு சங்கங்கள் ஒன்றியங்களோடு இணையாமலும் இருக்கின்றன. ஒன்றியங்கள் தம்முடன் இணைந்துள்ள சங்கங்களின் உற்பத்தியைச் சந்தையிலிடும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்றன. மற்றும் இணைந்துள்ள சங்கங்களின் நடப்பை மேற்பார்வை செய்கின்றன. ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கும் நிதியுதவி, பிற உதவிகளைச் சங்கங்களின்வழி வழங்குகின்றன. ஒன்றியங்களோடு இணையாத சங்கங்கள் பால் உற்பத்தியை மேற்கொள்ளுவது மட்டுமன்றி வழங்கும் பணியினையும் செய்து வருகின்றன.

பால் வழங்கு ஒன்றியங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்களும் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மிகாத தனிநபர்களும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பால் சங்கங்களில் நுகர்வோர் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. பால் சங்கங்கள் உற்பத்தியாளர்களுக்கென ஏற்பட்ட அமைப்பு என்பது நினைவிற் கொள்ளத்தக்கது. ஒன்றியத்துக்குத் தம் உறுப்பினர் உற்பத்தி செய்யும் பால், பால் பொருள்களை வழங்க ஒப்புக் கொள்ளும் சங்கங்களே உறுப்பினராகச் சேரத் தகுதி பெறுகின்றன.

பிரதம சங்கங்கள், தமது உறுப்பினர்களுக்கு உதவும் பொருட்டு இனவிருத்திக் காளைகள் (Breeding Bulls) வாங்கல், பராமரித்தல்; உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடனளித்தல்; பால்

பண்ணைச் சாதனங்கள் வாங்கல்; பால் பொருள்கள், பால் ஆகிய வற்றை உறுப்பினர் சார்பாக விற்றல் போன்ற பணிகளை மேற் கொள்ளுகின்றன.

பால் வழங்கு ஒன்றியங்கள் உறுப்பினர்களின் பால், பால் பொருள்களை விற்க ஏற்பாடுகள் செய்கின்றன. பால் பக்குவப் படுத்தல், பால் பொருள் தயாரித்தல் ஆகியவற்றிற்குத் தேவை யான இயந்திரங்களை நிறுவுதல்; உறுப்பினர்களுக்கு மாட்டுத் தீவனம் வாங்கி வழங்கல்; புதுப் பால் வழங்கு சங்கங்களை அமைத் தல் போன்ற பணிகளையும் ஒன்றியங்கள் செய்து வருகின்றன.

அண்மைக் காலம்வரை பால் கூட்டுறவுகள் அமைப்பதில் பெருமளவு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. 1949-50ஆம் ஆண்டில் நாட்டில் 535 பால் சங்கங்களும் 36 பால் ஒன்றியங் களும் முறையே 50,000 உறுப்பினர்களுடனும் 3,529 உறுப்பினர் களுடனும் இருந்தன. இவை ரூ. 66·19 இலட்சம் மதிப்புள்ள பாலை விற்பனை செய்தன.

பால் பண்ணை வளர்ச்சிக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பாக ஒதுக்குதல் ஏதும் செய்யப்படவில்லை. இரண்டாம் திட்ட காலத்தில் பால் பண்ணை வளர்ச்சிக்கு ரூ. 10 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்ட காலத்தில் கிராமப் புறங்களில் பால் உற்பத்தியைப் பெருக்கி, உபரி பாலை நகரங்களில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில் பால் கூட்டுறவுகளின் வளர்ச்சியைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்:

அட்டவணை

பால் கூட்டுறவுகளின் வளர்ச்சி (ரூ. இலட்சத்தில்)

விவரங்கள்	1957-58	1960-61	1967-68	1969-70	1970-71
பிரதம சங்கங்கள் :					
(i) எண்ணிக்கை	1914	3200	9175	10831	11909
(ii) உறுப்பினர்கள்	168342	238097	666541	918889	1023330
(iii) பங்குமுதல்	28·6	49·05	185	268·90	316·32
(iv) நடைமுறை முதல்	103·2	158·43	736	1693·26	1981·19
(v) பால், பால் பொருள்கள் விற்றது	350·4	543·90	3400	4051	4937
பால் ஒன்றியங்கள் :					
(i) எண்ணிக்கை	73	94	126	144	148
(ii) உறுப்பினர்கள் :					
சங்கங்கள்	1384	2314	7183	8751	9385
தனிநபர்கள்	7859	13214	23277	20420	22048
(iii) நடைமுறை முதல்	135	282	1170	2514	2658
(iv) பால், பால்பொருள்கள் விற்றது	315	472	2947	4613	5720

1970-71ஆம் ஆண்டில் இரண்டு மாநில பால் வழங்கு ஒன்றியங்கள் நிறுவப்பெற்றன. இவை மகாராட்டிரத்திலும், உத்தரப் பிரதேசத்திலும் அமைந்துள்ளன. இவ்விரு மாநில ஒன்றியங்களில் 224 சங்கங்கள் உறுப்பினர்களாயிருந்தன. இவற்றின் நடைமுறை முதல் ரூ. 191·61 இலட்சமாக இருந்தது.

பால் கூட்டுறவுகளில் மிகவும் வெற்றிகரமாக, நாட்டுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்கி வருவது குஜராத் மாநிலத்திலுள்ள கெய்ரா மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியமாகும். இந்தக் கூட்டுறவு தன்னிடம் உபரியாகவுள்ள பாலைக்கொண்டு தயாரிக்கும் அமுல் (Amul) குழந்தையுணவு, அமுல் வெண்ணெய் முதலியன நாடெங்கிலும் நற்பெயருடன் விளங்கி வருகின்றன. 70,000-க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு 400-க்கு மேற்பட்ட கிராமங்களிலுள்ள பிரதம சங்கங்கள்வழி இந்த ஒன்றியம் காலையும் மாலையும் பால் பெற்று அதைப் பக்குவப்படுத்திப் பம்பாய் நகருக்குங்கூட அனுப்பி வைக்கிறது. நவீன பால்பண்ணை இயந்திரங்களைக் கொண்டு இயங்கும் இக் கூட்டுறவு உறுப்பினர்களுக்குச் செய்யும் பல்வகைப் பணிகள் பெரிதும் பாராட்டற்குரியன.

அரசினர் நடத்திவரும் பால்வளத் திட்டங்கள்கூட கூட்டுறவுகள் வசம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டு வருகிறது.

1972 மார்ச்சு இறுதியில் இயங்கிவந்த 132 பால் பண்ணைத் தொழிற்சாலைகளில் 35 கூட்டுறவுத் துறையிலிருந்தன.

இந்திய அரசினர் உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து உருவாக்கிய 'வெள்ள முயற்சி' (Operation Flood) என்னும் பால் வளர்ச்சி, பால் சந்தையிடுகைத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருவதைப் பலர் அறிந்திருக்கலாம். கூட்டுறவுப் பால் சங்கங்கள் கிராமப்புறங்களில் வளர்ச்சிபெற இத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பால் உற்பத்திப் பெருக்கத் திட்டங்கள் செவ்வனே நடைபெற்று வந்தால் விரைவில் நாட்டில் 'வெண்மைப் புரட்சி' (White Revolution) வெற்றி பெறுமென எதிர்பார்க்கலாம்.

1970-71ஆம் ஆண்டில் 5,523 பால் வழங்கு சங்கங்கள் ஆதாயத்தில் இயங்கி வந்தன; 3,934 நட்டமடைந்திருந்தன; 2,452 இலாப நட்டமின்றிச் செயல்பட்டு வந்தன. இதே ஆண்டில் 67 ஒன்றியங்கள் இலாபத்தில் நடந்து வந்தன; 64 நட்டத்திலிருந்தன; 17 இலாப நட்டமின்றி நடந்துவந்தன. பிரதம

சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் குறுகியகாலக் கடன் ரூ. 2·75 கோடியும், மத்தியகாலக் கடன் ரூ. 1·26 கோடியும் வழங்கியிருந்தன. அரசினர் பால் கூட்டுறவுகளுக்குக் கணிசமான அளவு கடனுதவி வழங்கியிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. பால் வழங்கு ஒன்றியங்கள் பெற்றிருந்த மொத்தக் கடன் ரூ. 8·20 கோடியில், அரசு வழங்கியது ரூ. 5·47 கோடியாகும். சங்கங்கள் பெற்றிருந்த மொத்தக் கடன் ரூ. 5·03 கோடியில், அரசு வழங்கியிருந்தது ரூ. 1·92 கோடியாகும். மாநில ஒன்றியங்கள் வாங்கியிருந்த கடன் ரூ. 1·18 கோடியில், அரசு வழங்கியது ரூ. 0·91 கோடியாகும்.

விவசாய மறுநிதிக் கூட்டுரு (Agricultural Refinance Corporation) பால் பண்ணைக் கூட்டுறவுகள்வழி பால்வளம் பெருக்க மறுநிதி வசதிகளை அளிக்க முன்வந்துள்ளது. கறவை மாடுகள் வாங்க உறுப்பினர்களுக்குச் சங்கம் கடன்தர வேண்டும். இந்த வகையிலும், பால் பக்குவப்படுத்துத் தொழிற்சாலைகள், குளிர்ப் படுத்த நிலையங்கள் (Chilling Plants), காய்ச்சிப் பதனப்படுத்து இயந்திரங்கள் முதலியன அமைக்க மறுநிதி வசதிகள் அளிக்கப்படுகின்றன.

பால் கூட்டுறவுகளின் பெரும் பிரச்சினை போதிய அளவு பால் கிடைக்காமல் பண்ணையிலுள்ள இயந்திரங்கள் பல முழுத்திறனில் மிகச் சிறிய அளவுக்கே செயல்படுவதாம். ரிசர்வு வங்கி அளிக்கும் கடன் வசதிகள் விவசாயிகளாக இருந்து அதே நேரத்தில் பால் உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு மட்டுமே கிட்டுகிறது. விவசாயிகளல்லாத பிற நபர்களுக்குப் பால்பண்ணை நடவடிக்கைகளை மேற்கொள்ள ரிசர்வு வங்கி உதவி செய்வதில்லை. இந்தக் குறையைப் போக்க சில மாநிலங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப் அண்மையில் தமிழ் நாட்டில் பால் வழங்கும் சங்கங்களுக்கு மாநில அளவில் ஒரு கூட்டிணைப்பு நிறுவப்பெற்றது. இக் கூட்டிணைப்பின் வழி கறவை மாடுகள் வாங்க கடனுதவியைச் சங்க உறுப்பினர்களுக்கு வாணிக வங்கிகளும் பிற நிதி நிறுவனங்களும் அளிக்கும். செயலற்று நிற்கும் பால் வழங்கு 'கூட்டுறவுகளைச் சீர்ப்படுத்தி இயங்க வைக்கவும் இவ்வகை மாநிலக் கூட்டிணைப்பு உதவும்.

கூட்டுறவுக் கோழிப் பண்ணைகள்

சமூகத்தில் வலிவற்ற வகுப்பினர் தமது வருமானத்தை வளர்த்துக்கொள்ள கூட்டுறவு முறையில் முட்டை உற்பத்தி—விற்பனைச் சங்கங்கள் நிறுவப்படலாயின. முட்டை மிகவும்

சத்துள்ள உணவுப்பொருளாகக் கருதப்படுகிறது. நகர்ப்புறங்களில் முட்டை தேவைப்படுமளவுக்குக் கிடைப்பதில்லை. கிராமங்களில் உற்பத்தியாகும் உபரி முட்டைகளை நகரங்களுக்குக் கொண்டுவந்து சந்தையிலிட தக்க ஏற்பாடுகள் தற்போது இல்லை. இதன் காரணமாகத் தனியார் வியாபாரிகள் இத்துறையில் ஈடுபட்டு முட்டை உற்பத்தியாளர்களையும், முட்டை நுகர்வோரையும் சுரண்டுகின்றனர். இந்நிலையை மாற்ற மத்தியக் கோழிப் பண்ணை வளர்ச்சி ஆலோசனைக் குழு தேசீயக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்பு ஒன்று கோழிப்பண்ணை பொருள்களைச் சந்தையிலிட அமைக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்தது.

1970-71ஆம் ஆண்டில் 5 கோழிப்பண்ணை ஒன்றியங்களும், 811 கோழிப்பண்ணைச் சங்கங்களும் ஏறத்தாழ 38,000 உறுப்பினர்களைக் கொண்டிருந்தன, இவற்றின் நடைமுறை முதல் ரூ. 2·14 கோடியாக இருந்தது. இக் கூட்டுறவுகள் ரூ. 1·76 கோடி மதிப்புள்ள கோழிப்பண்ணை பொருள்களை விற்பனை செய்தன. 1970-71இல் 135 சங்கங்கள் ஆதாயத்துடன் செயல்பட்டுவந்தன; 196 சங்கங்கள் நட்டத்தில் நடைபெற்றன; 480 சங்கங்கள் இலாப நட்டமின்றி நடந்து வந்தன.

கடைநிலை விவசாயிகள்—விவசாயத் தொழிலாளிகள் மேம்பாட்டுத் திட்டங்களில் கூட்டுறவு முறையில் கோழிப்பண்ணை அமைக்கப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாட்டுடைமையாக்கப்பட்ட வாணிக வங்கிகள் இத்துறையில் ஆர்வமும் அக்கறையும் காட்டி வருகின்றன. இவ்வங்கிகள் கோழிப்பண்ணை கூட்டுறவுகள்வழி சங்க உறுப்பினருக்கு நிதிவசதிகளை வழங்குகின்றன.

மீனவர் கூட்டுறவுகள்
(Fishermen's Co-operatives)

இயற்கையன்னை வழங்கியுள்ள உணவு வளங்களில் மீன் வளமும் ஒன்றாகும். சத்துள்ள உணவு என்ற வகையில் மீன் உணவு நம் நாட்டு மக்களுக்கு மிகவும் தேவைப்படும் வகை உணவாகும். மீனவர்களுக்கு மீன்பிடிக்கும் படகு, வலை போன்ற சாதனங்கள் வாங்கப் பணவசதியளிக்கப்பட வேண்டும். மற்றும் அவர்கள் பிடித்த மீனை விற்பனை செய்ய சீரான ஏற்பாடுகள் தேவை. மீன் வளர்ச்சிக்கு அளிக்கப்படும் அரசாங்க உதவி கூட்டுறவுச் சங்கங்கள்வழி வழங்கப்படுதல் வேண்டுமெனக் கூட்டுறவுத் திட்டக்குழு பரிந்துரைத்தது.

மீன்வளக் கூட்டுறவுகள் பலவகைப்படும். அவற்றுள் முக்கியமானவை: (1) மீன்வளக் கடன் சங்கங்கள் (2) உற்பத்தியாளர்

கூட்டுறவுச் சங்கங்கள் (3) வரால் உலர்த்துச் சங்கங்கள் (Prawn-Curers' Sociaties) (4) சந்தையிடுகைக் கூட்டிணைப்புகள் (5) உச்சிச் சங்கங்கள். இவையன்றி மீன் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் சில இடங்களில் காணப்படுகின்றன.

மீன்வளச் சங்கங்கள் மீன்பிடிப்புச் சாதனங்களைத் தம் உறுப்பினர்களுக்கு நியாயமான விலைக்கு விற்கவேண்டும். மற்றும் இச் சாதனங்களைத் தேவைப்படுமளவுக்கு வாங்கிச் சேகரித்து வைத்திருக்கவும் வேண்டும். மீனைக் கரைக்குக் கொண்டுவந்து ஒன்று சேர்த்துக் குறித்த சந்தைகளுக்கு ஏற்றி அனுப்பும் ஏற்பாடுகளையும் மீன் சங்கங்கள் செய்யவேண்டும். மீன் விரைவில் அழுகிவிடக் கூடிய பண்டமாதலால் அதனைக் கெடாமல் பக்குவப்படுத்தி வைக்கும் பணிகளையும் சங்கங்களே மேற்கொள்ளவேண்டும். சந்தைகளில் நல்ல விலைக்கு விற்கும் ஏற்பாடுகளையும் சங்கங்கள் செய்யவேண்டும். மீன்வளச் சங்கங்கள் வட்டார அடிப்படையில் இணைந்து மத்தியச் சங்கங்களின் ஆதரவில் செயல்படவேண்டும்.

இந்தியா விடுதலையடைந்த மறு ஆண்டில் நாட்டில் 1·71 இலட்சம் உறுப்பினர்களும் ரூ. 50 இலட்சம் முதலும் கொண்ட 1,599 சங்கங்கள் செயல்பட்டுவந்தன. 1960–61இல் 2·40 இலட்சம் உறுப்பினர்கள் கொண்ட 2,355 மீன்வளச் சங்கங்கள் ரூ. 106·75 இலட்சம் மதிப்புள்ள மீன் பொருள்களை விற்பனை செய்திருந்தன. 1965–66இல் சங்கங்களின் எண்ணிக்கை 3,338 ஆக உயர்ந்தது. விற்பனையும் ரூ. 400·68 இலட்சமாக வளர்ந்தது. 1970-71இல் 4,270 பிரதம மீன்வளச் சங்கங்கள் 4·50 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. இவையன்றி 49 மத்திய மீன்வளச் சங்கங்களும், 8 மாநில மீன்வளச் சங்கங்களும் செயல்பட்டு வந்தன. 1970–71இல் எல்லா மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து இருந்த நிலை வருமாறு:

சங்கங்களின் எண்ணிக்கை	......	......	4,317
உறுப்பினர் எண்ணிக்கை	......	......	4,66,658
நடைமுறை முதல் (ரூ. இலட்சத்தில்)	......	......	1611·92
செலுத்திய முதல் (ரூ. இலட்சத்தில்)	......	......	214·77
சங்கங்கள் பெற்றிருந்த கடன்கள் :			ரூ. (இலட்சத்தில்)
அரசினரிடம்	......	......	255·21
மத்திய நிதி முகமைகள்	......	......	279·49
பிற	......	......	197·39

மீன்வளச் சங்கங்கள் 1970-71இல் தமது உறுப்பினர்களுக்கு ரூ. 1·13 கோடி கடன் வழங்கின. இச் சங்கங்கள் பிடித்த மீனின் மதிப்பு ரூ. 3·71 கோடியாகும். இவை விற்ற மீன்,

மீன் பொருள் மீன் பிடிப்புச் சாதனங்களின் மதிப்பு ரூ. 8·20 கோடியாகும். மொத்த மீன் சங்கங்களில் 1,175 ஆதாயமாகச் செயல்பட்டன; 2,233 சங்கங்கள் நட்டமடைந்திருந்தன; 919 சங்கங்கள் இலாப நட்டமின்றி நடந்தன.

விவசாய மறுநிதிக் கூட்டுரு அளிக்கும் நிதியுதவியுடன் பல மாநிலங்களில் மீன்வளச் சங்கங்கள் புதிய மீன் வளம் பெருக்கும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. 1972-73இல் பெப்ரவரி 1973 முடிய ரூ. 6·32 கோடி மதிப்புள்ள திட்டங்கள் கூட்டுருவினால் ஒப்புக்கொள்ளப்பட்டன.

கேரளத்தில் 985, ஆந்திரத்தில் 597, மேற்கு வங்காளத்தில் 556, தமிழ் நாட்டில் 448, மகாராட்டிரத்தில் 381, அஸ்ஸாமில் 343, பீகாரில் 248 பிரதம மீன்வளச் சங்கங்கள் 1970-71இல் இருந்தன. உறுப்பினர் எண்ணிக்கையில் முதலிடம் கேரளத்திற்கும் (1,13,507), இரண்டாம் இடம் தமிழ் நாட்டிற்கும் (64,861), மூன்றும் இடம் ஆந்திரப் பிரதேசத்திற்கும் (58,578), நான்காம் இடம் மகாராட்டிரத்திற்கும் (57,173), ஐந்தாம் இடம் மேற்கு வங்காளத்திற்கும் (32,841) கிடைத்தது. பிரதம சங்கங்கள் செய்த விற்பனையில் முதலிடம் தட்டிச் சென்ற மாநிலம் மகாராட்டிரம் (ரூ. 2·82 கோடி); அடுத்து நின்றது தமிழ்நாடு (ரூ. 63·69 இலட்சம்); மூன்றுமிடத்தில் நின்றது கேரளம் (ரூ.62·45 இலட்சம்); நான்காமிடம் பெற்றது குஜராத் (ரூ. 58·12 இலட்சம்).

மீன்வளக் கூட்டுறவுகளின் பிரச்சினைகள்

நாட்டில் பிடிக்கப்படும் மொத்த மீன்களில் 5%தை மட்டுமே கூட்டுறவுச் சங்கங்கள் கையாளுகின்றன. ஆனால், மீனவர்களில் மூன்றிலொரு பங்கினர் கூட்டுறவில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். மீன்வளக் கூட்டுறவுகள் செம்மையாகச் செயல்படாததன் காரணங்களை 1962இல் இந்திய அரசு அமைத்த ஆராய்ச்சிக் குழு ஆய்ந்தது. இக் . கூட்டுறவுகள் அமைப்பில் வலிவற்றதாக இருந்தன; நிதிவசதி, தொழில் நுட்ப வசதிகள் போதுமான அளவு இல்லாதிருந்தன; உற்பத்தி, பாதுகாப்பு, சந்தையிடுகை ஆகிய பணிகள் ஒருங்கிணைந்து கவனிக்கப்படவில்லை. சில இடங்களில் மீனவரல்லாதார் உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தனர். நிதிவசதியளிக்கும் இடைநிலையர் பக்குவப் படுத்தும், சந்தையிடுகைத் துறைகளில் பேராதிக்கம் செலுத்தி வந்தனர்.

விசைப் படகு, நைலான் வலை, படகு செலுத்துச் சாதனங்கள் வாங்கமட்டுமன்றிக் குளிர்பதனப் பெட்டி, குளிர்சாதனங்

கொண்ட மோட்டார் வாகனங்கள், தகர டப்பாக்களில் அடைத்தல், உறைய வைத்தல் போன்ற ஏற்பாடுகளுக்கும் நிதி வசதிகள் தேவைப்பட்டன. அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு கூறியதாவது: மீன்வளக் கூட்டுறவுகள் நடப்பில் பெரும் சிக்கலாகக் காணப்படுவது, மீனவர்கள் இடைநிலையரிடம் கடன்பட்டிருப்பதால் அவர்கள் வழியே, அவர்கள் நிருணயிக்கும் விலைக்குத் தாம் பிடித்த மீனை விற்கவேண்டிய நிலையேயாகும்.

பழங்குடியினர் வளர்ச்சிக் கூட்டுறவுகள் (Tribal Development Co-operatives)

பழங்குடி மக்கள் (ஆதிவாசியினர்) வாழும் பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், அவற்றிற்கு நிதிவசதியளிக்கவும், அவற்றிற்கு ஓர் உச்சி அமைப்பாக விளங்கவும் மத்தியப் பிரதேசம், பீகார், ஒரிசா, ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் பழங்குடியினர் வளர்ச்சிக் கூட்டுருக்கள் (Tribal Development Corporations) ஏற்படுத்தப்பட்டுள்ளன. அஸ்ஸாமில் 'மலைக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு' (Hill Co-operative Development Corporation) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்தியப் பிரதேசத்தில் பழங்குடியினர் சங்கங்களின் கூட்டிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரிசா மாநிலத்தில், வனவிளை பொருள் சந்தையிடுகைக் கூட்டுறவுச் சங்கம், ஆந்திர கிரிஜன் கூட்டுறவுக் கூட்டுரு (Girijan Co-operative Corporation) பாணியில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஒரிசா மாநிலப் பழங்குடியினர் வளர்ச்சிக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயர் பெற்ற இச் சங்கத்திற்கு மாநில அரசு ரூ. 25·50 இலட்சம் பங்கு முதலும், ரூ. 6·02 இலட்சம் நடைமுறை முதல் கடனும் வழங்கியுள்ளது. குஜராத், மகாராட்டிர மாநிலங்களில் வனத் தொழிலாளர் கூட்டுறவுகள் பழங்குடியினருக்குச் சீரிய சேவை செய்து வருகின்றன. இந்திய அரசு 6 பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்களை ஆந்திரம் (1), பீகார் (1), மத்தியப் பிரதேசம் (2), ஒரிசா (2) ஆகிய மாநிலங்களில் அமைக்க முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூ. 1·5 கோடி செலவாகுமென மதிப்பிட்டுள்ளனர். பழங்குடியினர் உறுப்பினராகவுள்ள இச் சங்கங்கள்வழி அவர்களுக்குக் கடன் வசதி, வன விவசாயப் பொருள்களைச் சந்தையிலிடும் வசதி, விவசாய உள்ளீடுகளை வழங்கும் வசதி, நுகர்வுப் பண்டங்களை வழங்கும் வசதி ஆகியவற்றை ஒருங்கிணைத்துத் தர ஏற்பாடுகள் உருவாகி வருகின்றன. பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்தலே இக் கூட்டுறவுகளின் நோக்கமாகும்.

நாட்டிலுள்ள பழங்குடியினர் கூட்டுறவுகளின் உச்சி அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட மத்திய அரசு ஒருங்கிணைப்புக் குழுவொன்றினை அமைத்துள்ளது. இக் குழு, உறுப்பினர் கூட்டுறவுகளின் எதிர்பாராச் செலவினங்களைச் சமாளிக்கத் தாற்காலிகக் கடனளிக்கும் பொருட்டு ரூ. 5 கோடி தொகையுடன் ஒரு மத்தியக் காப்பு நிதி (Central Reserve Fund) துவக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது. மற்றும் பழங்குடியினர் கூட்டுறவுகள் சேர்க்கும் வன விளைபொருள்களை விற்பனை செய்ய தேசீய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணை உதவி செய்ய வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

தொழிலாளர் கூட்டுறவுகள்
(Labour Co-operatives)

தொழிலாளர் சிலர் ஒன்று சேர்ந்து கூட்டாக உழைத்து அதன் பயனை முழுதுமாகத் தாங்களே துய்க்க வேண்டி அமைப்பது தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் எனப்படும். தொழிலாளர்கள் தாமே தம்முடன் கூடி உழைக்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து, ஒரு தலைவரையும் தேர்ந்தெடுத்து, உழைப்பின்வழி கிடைக்கும் ஊதியத்தைத் தம் விருப்பப்படி பகிர்கின்றனர். தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அளிக்கப்படும் குறிப்பிட்ட ஒரு வேலையைச் செய்து முடிக்கும் பொறுப்புத் தொழிலாளர்களையே சாரும். அவர்களே வேலையைச் செய்யும் முறையைத் திட்டமிட வேண்டும். பணியாண்மையர் (employer) வேலை செய்முறையை மேற்பார்வை செய்யமாட்டார். குறிப்பிட்ட வேலையைச் செய்து முடித்தற்கு இவ்வளவு கூலி என்று கூலி நிருணயிக்கப்படுகிறது. சுருங்கக் கூறின், தொழிலாளர் கட்டுப்பாட்டுக்கு உட்படாது சுதந்திரமான முறையில் ஆனால் பொறுப்பேற்றுச் செயல்படுகிறார்; அவரது பணியாண்மையர் வேலையேயாகும்.

தொழிலாளர் கூட்டுறவுகள் பெருவாரியான மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரவல்லன. வேலைக் குறைவால் இடர்ப்படும் கிராமப்புற மக்களுக்கும், வேலையின்மையால் அல்லலுறும் மக்களுக்கும் வளர்ந்து வரும் பொதுத்துறையில் கட்டட வேலைகளுக்கு நிறைய வாய்ப்புக் காணப்படுகிறது. ஒப்பந்ததாரர்கள் (contractors) இடைநிலையராக இருந்து பெறும் ஆதாயத்தைத் தொழிலாளர்களே பெற தொழிலாளர் கூட்டுறவுகள் உதவுகின்றன. மற்றும் செய்யப்படும் வேலைக்குத் தொழிலாளர் முழுப் பொறுப்பு ஏற்கவேண்டியுள்ளதால் அவர்களிடையே பொறுப்புணர்வு வளர்கிறது.

இந்தியாவில் சில மாநிலங்களில் மட்டுமே தொழிலாளர் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக மூன்று வகையான சங்கங்களை இத் துறையில் காணலாம். அவை தொழிலாளர் ஒப்பந்த சங்கங்கள் (Labour Contract Societies), வனத் தொழிலாளர் (Forest Labour) சங்கங்கள், கூட்டுறவுப் போக்குவரத்துச் சங்கங்கள் என்பன.

தொழிலாளர் ஒப்பந்த சங்கங்கள்
(Labour Contract Societies)

சாலைகள் அமைப்பது, பாலங்கள், கால்வாய் கட்டுவது, கல் உடைத்தெடுப்பது போன்ற வேலைகளை ஒப்பந்தத்தின் பேரில் பெற்று இச் சங்கங்கள் தமது உறுப்பினர்களைக் கொண்டு அவற்றைச் செய்து முடிக்கின்றன. சொந்த நிலமில்லாத தொழிலாளிகளே இச் சங்கங்களில் பெரும்பாலும் உறுப்பினர்களாகச் சேருகின்றனர். இச் சங்கங்கள் தம் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது மட்டுமின்றி நல்ல கூலி கிடைக்கவும் வகை செய்கின்றன.

1971 ஜூன் இறுதியில் தொழிலாளர் ஒப்பந்த-கட்டடப் பணிச் சங்கங்கள் இருந்த நிலை வருமாறு:

அட்டவணை

தொழிலாளர் ஒப்பந்த-கட்டடப்பணிச் சங்கங்கள்
1971 ஜூன் இறுதியிலிருந்த நிலையும் 1970-71இல் நடப்பும்

(ரூ. இலட்சத்தில்)

விவரம்	மொத்தச் சங்கங்கள்	செயல்பட்டு வந்தவற்றின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	வேலை முடித்த ஒப்பந்தங்கள் மதிப்பு	வேலை பெற்ற தொழிலாளிகள் எண்ணிக்கை	வழங்கப்பட்ட கூலி
மாநிலச் சங்கங்கள்	2	2	34	2·64	202	1·14
மாவட்டச் சங்கங்கள்	38	23	1439	8·25	318	0·90
பிரதம சங்கங்கள் : பழங்குடியினர் (Tribal)	708	370	39935	102·81	13428	40·90
பழங்குடியினரல்லாத (Non - tribal)	4452	2565	281516	1435·27	442225	678·28

1970-71இல் செயல்பட்டு வந்த மொத்தச் சங்கங்களில் 1,302 பிரதம பழங்குடியினரல்லாத (Non-tribal) சங்கங்களும், 272 பிரதம பழங்குடியினர் சங்கங்களும், 18 மாவட்ட சங்கங்களும், 1 மாநிலச் சங்கமும் ஆதாயத்துடன் நடந்து வந்தன.

மாநில அரசினர் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்களுக்குப் பலவித சலுகைகளைத் தொடர்ந்து அளித்து வருகின்றனர். சிறப்புத் தேர்ச்சி தேவையற்ற வேலைகளனைத்தையும் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்களுக்கு ஒதுக்குகின்றனர். அதிதீவிர கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்ட (Crash Programme of Rural Employment)த்தின்கீழ் மேற்கொள்ளவிருக்கும் வேலைகளில் சிலவற்றை இச் சங்கங்களுக்கு ஒதுக்குவதன்வழி இவற்றின் உறுப்பினர்களுக்கு ஆதாயமான வேலை வாய்ப்புக் கிடைக்க வழி செய்யலாம் என மத்திய அரசின் சமுதாய வளர்ச்சித் துறை மாநில அரசினருக்கு யோசனை கூறிற்று. தொழிலாளர் கூட்டுறவுகள் ஏற்கும் ஒப்பந்தங்களுக்குப் பிணை வைப்புத்தொகை (Security Deposit) மிகவும் குறைந்த அளவாகவே நிருணயிக்கப்படுகிறது.

பொதுப்பணி வேலைகளைத் தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கும் முறையைப் படிப்படியாக மாற்றி நாளடைவில் அவற்றைத் தொழிலாளர் கூட்டுறவுகளுக்கே அளிக்க வேண்டுமென நான்காம் திட்டத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம், ஹரியாணு, மகாராட்டிரம், ராஜஸ்தான், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் தொழிலாளர் கூட்டுறவுகள் ஓரளவுக்கு நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன.

வனத் தொழிலாளர் கூட்டுறவுகள்
(Forest Labour Co-operatives)

ஆதிவாசிகள் எனப்படும் பழங்குடி மக்கள், பிற பின்தங்கிய மலை வகுப்பினர் போன்ற வனப் பகுதியில் வாழ்ந்து அங்கேயே தொழில் புரிந்து வரும் மக்களின் பொருளாதார, சமுதாய நிலையை மேம்படுத்தவே வனத் தொழிலாளர் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன, மகாராட்டிர, குஜராத்திய மாநிலங்களில் இவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

1971 ஜூன் இறுதியில் வனத் தொழிலாளர் சங்கங்கள் இருந்த நிலையினைக் காண்போம்:

மாநில அளவில் மகாராட்டிரம், ராஜஸ்தான் ஆகிய இரு மாநிலங்களில் மட்டுமே ஒவ்வொரு சங்கம் இருந்தது. பிரதம சங்கங்கள் 1,557 இருந்தன. இவற்றில் 535 செயலிழந்த நிலையில் நின்றன. இச் சங்கங்களில் மொத்தம் 1,55,127 உறுப்பினர்கள் இருந்தனர். இவற்றின் நடைமுறைமுதல் ரூ. 4·01 கோடியாக இருந்தது. செலுத்திய முதல் ரூ. 41·37 இலட்சமாக இருந்தது. இச் சங்கங்கள் மேற்கொண்டிருந்த வன ஒப்பந்தங்களின் மதிப்பு ரூ. 6·25 கோடியாக இருந்தது. இவை சேர்த்த வனப் பொருள்கள் மதிப்பு ரூ. 8·44 கோடியாகும். விற்ற பொருள்கள் மதிப்பு ரூ. 6·67 கோடியாக இருந்தது. மொத்தத்தில் 477 சங்கங்கள் ஆதாயத்துடன் செயல்பட்டன. மகாராட்டிரத்திலும், குஜராத்திலும் இச் சங்கங்கள் மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருவதால் அம் மாநிலங்களில் இவை செயல்பட்ட பாங்கினை மொத்தச் சங்கங்களும் நடைபெற்ற பாங்குடன் ஒப்பிட்டுக் கீழ்க்காணும் அட்டவணையின் வழி காண்போம்:

அட்டவணை

குறிப்பிட்ட மாநிலங்களில் வனத் தொழிலாளர் கூட்டுறவுகள் 1970-71 இல் இருந்த நிலை

விவரம்	மொத்தம்	மகாராட்டிரம்	குஜராத்
பிரதம சங்கங்கள்	1557	453	142
உறுப்பினர் எண்ணிக்கை	155127	51459	50251
நடைமுறை முதல் (ரூ. கோடியில்)	4·01	1·56	1·43
வன ஒப்பந்தங்கள் மேற்கொண்டது (மதிப்பு ரூ. கோடியில்)	6·25	2.06	3·90
வனப் பொருள்கள் சேகரித்தது (மதிப்பு ரூ. கோடியில்)	8·44	3·22	4·85
விற்பனையின் மதிப்பு (ரூ. கோடியில்)	6·67	2·79	3·50
கொடுத்த கூலி (ரூ. கோடியில்)	2·23	1·18	0·92
ஆதாயத்தில் நடைபெற்று வந்த சங்கங்களின் எண்ணிக்கை	477	239	118

போக்குவரத்துக் கூட்டுறவுகள்
(Transport Co-operatives)

போக்குவரத்துத் துறையில் பலவகையான கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன. முன்னாள் இராணுவ வீரர்கள் பல இடங்களில் பேருந்து போக்கு வரத்துச் சங்கங்களை அமைத்துள்ளனர். மற்றும் ரிக்ஷா இழுப்போர், வாடகைக்கார் ஓட்டுநர்

(Taxi drivers), ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் முதலானோர் தமக்கெனத் தனித்தனி கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துள்ளனர்.

ரிக்ஷா இழுப்போர் கூட்டுறவுகள்

1970-71 இறுதியில் மொத்தம் 241 ரிக்ஷா இழுப்போர் கூட்டுறவுகளிருந்தன. இவற்றில் 10,667 உறுப்பினர்களிருந்தனர். இவர்களில் நேரடியாகத் தொழிலில் ஈடுபட்டிருந்தது 8,336 நபர்களே. இச் சங்கங்களின் பங்குமுதல் ரூ. 9·38 இலட்சமாகவும் நடைமுறை முதல் ரூ. 46·75 இலட்சமாகவும் இருந்தது. இச் சங்கங்கள் 1970-71இல் ஈட்டிய மொத்த வருமானம் ரூ. 5·69 இலட்சமாக இருந்தது.

ரிக்ஷா இழுப்போர் கூட்டுறவுகள் நீங்கலாக 1970-71இல் 1016 போக்குவரத்துக் கூட்டுறவுகளிருந்தன. இவற்றில் 577 சங்கங்கள் மட்டுமே செயல்பட்டு வந்தன. இச் சங்கங்களில் இருந்த 54,706 உறுப்பினர்களில் 29,861 பேர் தொழிலாளிகளாக இருந்தனர். இவற்றின் மொத்தப் பங்குமுதல் ரூ. 223·83 இலட்சங்களாகும். இவற்றிற்குச் சொந்தமாக 1758 வண்டிகள் இருந்தன. 559 வண்டிகளை வாடகைக்கு எடுத்திருந்தன. இவை ஈட்டிய மொத்த வருமானம் 1970-71இல் ரூ. 651·98 இலட்சமாக இருந்தது.

மோட்டார் போக்குவரத்துச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்படத் தடையாகக் காணப்படும் காரணங்களாவன: (அ) மக்கள் வசதிப் போக்குவரத்து நாட்டுடைமையாக்கல் கொள்கை; (ஆ) மோட்டார் வாகனங்கள் சட்டத்தின்கீழ் தனிநபர்களுக்கு உரிமம் (Licence) வழங்கலில் முன்னுரிமை தரப்படுவது; (இ) எளிய வட்டிக்குக் கடன் கிடைக்காத நிலை. மக்கள் போக்குவரத்துக் கூட்டுறவுகளுக்கு வாய்ப்புக் குறைந்து வந்தாலும் சரக்குப் போக்குவரத்துக்கு நல்லதொரு வாய்ப்பிருப்பதாகக் காணப்படுகிறது. போக்குவரத்துக் கூட்டுறவுகள் நல்ல முறையில் செயல்பட போக்குவரத்துக் கூட்டுறவுகளின் மீதான ஆய்வுக் குழு (1964) பல பரிந்துரைகளைச் செய்தது. ஆதாயத்துடன் இயங்க, குறைந்தது மக்கள் பேருந்து வண்டிகளாக இருப்பின் 5 வண்டிகள், சரக்குப் போக்குவரத்து வண்டிகளாக இருப்பின் குறைந்தது 10 வண்டிகள் கொண்ட சங்கங்கள் மட்டுமே அமைக்கப்படவேண்டும். உறுப்பினர் ஒவ்வொருவரும் சங்கத்திற்கு ரூ. 1,000 வழங்கவேண்டும். இத் தொகை தவணைகளில் வழங்கப்படலாம். பங்குமுதலில் 50% அரசினர் வழங்கலாம்.

பல மாநகரங்களில் வாடகைக்கார், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாடகைக் கொள் முதல் முறையில் மோட்டார் கார் அல்லது ஆட்டோ ரிக்ஷா வண்டியை உறுப்பினர் சங்கத்திடம் பெற்று நாளொன்றுக்குக் குறிப்பிட்ட ஒரு தொகையைத் தவறாது ஐந்து ஆண்டுகளுக்குக் கட்டி வந்தால் வண்டி அவருக்கே உரியதாகிவிடும். அரசினர் இவ்வகைச் சங்கங்களுக்குப் பலவகையில் உதவி புரிகின்றனர். புதிய மோட்டார் வண்டிகள் பற்றாக்குறையிருக்கும் இந் நாளில், அரசு, இச் சங்கங்களுக்கெனப் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட வண்டிகளில் ஒரு சிலவற்றை ஒதுக்கி உதவுகின்றது. இச் சங்கங்களில் சில பெட்ரோல் நிலையங்கள், பழுது-பணி நிலையங்கள் (Repair-Service Stations) முதலியவற்றையும் நடத்தி வருகின்றன.

சலவைத் தொழிலாளர் கூட்டுறவுகள்
(Washermen's Co-operatives)

தமிழ் நாடு போன்ற சில மாநிலங்களில் சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுகள் நிறுவப்பெற்றுள்ளன. சலவைத் தொழிலுக்கு வேண்டிய பொருள்களின் விலை பெருமளவுக்கு உயர்ந்துவரும் இந் நாளில் நியாயமான விலைக்குத் தமக்குத் தேவைப்படும் பொருள்களைப்பெற சலவைத் தொழிலாளர் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து வருகின்றனர். இவர்களிடையே தொழில் துறையில் போட்டி மிகுதியாக இருப்பதால், சில நேரத்தில் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. இக் குறையையும் கூட்டுறவுகள் ஓரளவுக்கு நிறைவு செய்கின்றன. சலவைத் தொழிலாளர் சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்குச் சலவைச் சோடா, கஞ்சி (Starch), கரி முதலியன வழங்குகின்றன; பல இராணுவ நிலையங்கள், கல்லூரி விடுதிகள், காவல் நிலையங்கள் முதலானவற்றிடமிருந்து மொத்தமாகச் சலவை ஒப்பந்தங்களை ஏற்றுத் தம் உறுப்பினர்களிடையே அவற்றைப் பகிர்ந்து வழங்குகின்றன. துவைக்கும் துறைகள், சலவைப் பொறிகள், நீராவி—அழுத்துப் பொறிகள் போன்ற சாதனங்கள் அமைக்க ஏற்பாடுகள், போன்ற வசதிகளைச் செய்து தருவதுமுண்டு. உறுப்பினர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்க்க இக் கூட்டுறவுகள் சேமிப்பு வைப்புத் திட்டங்களை அளிக்கின்றன.

1971 ஜுன் இறுதியில் 9692 உறுப்பினர்களைக் கொண்டு 59 சங்கங்கள் இருந்தன. இச் சங்கங்களின் நடைமுறை முதல் ரூ. 7·11 இலட்சமாக இருந்தது. இவை ஈட்டியிருந்த மொத்த வருமானம் ரூ. 3·49 இலட்சமாக இருந்தது.

கிராமப்புற மின்னமைப்புக் கூட்டுறவுகள்
(Rural Electric Co-operatives)

அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு (1969)வினர் செய்த முக்கியமான பரிந்துரையொன்றின் பேரில் கிராமப்புற மின்னமைப்புக் கூட்டுரு (Rural Electrification Corporation) நிறுவப்பெற்றது. இந்திய விவசாயம் முன்னேற்றப் பாதையில் நவீன பாணியில் விரைந்து வளர மின்னமைப்பு வசதியால் இயங்கும் நீர்ப்பாசன வசதி மிகவும் இன்றியமையாது தேவைப் படுகின்றது. கிராமப்புறங்களில் மின்னமைப்பு வசதி மிகப் பெருமளவுக்கு ஏற்படுத்தப் பெருந் திட்டமொன்று தேவை. இந்தத் தேவைகளை நிறைவு செய்ய 1969 ஜூலையில் மேற்கண்ட கூட்டுரு அமைக்கப்பெற்றது. இக் கூட்டுருவின் முக்கிய பணிகளுள் கிராம மின்னமைப்புக் கூட்டுறவுகளை உருவாக்கி நிதி வழங்குவதும் ஒன்றாகும்.

கூட்டுறவு முறையில் கிராம மின்னமைப்புத் திட்டத்தை மேற் கொள்ள முதலில் ஐந்து முன்னோடித் திட்டங்கள் (Pilot Projects) மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு திட்டத்திலும் சராசரி 160 கிராமங்கள் உள்ளடங்கியிருந்தன. மாநில மின் வசதி வாரியங்கள் தாம் செய்யும் முதலீட்டுக்குத் தக்க ஆதாயம் கிடைக்குமா என்பதையும் குறைந்தது இத்தனை வகையான இவ்வளவு நபர்கள் வசதியைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதையும் அறிந்த பின்னர்தான் திட்டத்தை வகுத்துச் செயலாற்றுவர். ஆனால், கிராமப்புற மின்னமைப்புக் கூட்டுறவுத் திட்டம் குறிப்பிட்ட ஒரு பரப்பை உள்ளடக்கி நிற்கிறது. மின்வசதி வழங்கும் உரிமம் (Licence) ஒன்றைப் பெறும் மின்னமைப்புக் கூட்டுறவு தன் பரப்பிலுள்ள வசதிகோரும் நுகர்வோர் எவருக்கும் இணைப்புக் கொடுக்க கடமைப்பட்டது. கூட்டுறவுத் திட்டங்களில் சில நகர அல்லது நகர்போல்வு (Semi-urban) பகுதிகளையும் உள்ளடக்கி யுள்ளன. மாநில வாரியங்களிடமிருந்து திட்டப் பரப்பிலுள்ள சாதனங்கள், சொத்துகள் அனைத்தையும் கூட்டுறவு எடுத்துக் கொண்டு கூடுதல் வழங்கல் வழிகளை அமைக்கவும் வேண்டும். சொத்துகளை மாநில வாரியங்களிலிருந்து எடுத்துக் கொள்ளவும், புதிய வழிகளை அமைக்கவும், புதிய இணைப்புகளைத் தரவும் ஐந்தாண்டுக்கு மிகாத கடன்களைக் கூட்டுறவுகளுக்குக் கூட்டுரு வழங்குகிறது. கடன தருமுன், மின் கூடடுறவுச் சங்கங்கள் ஐந்தாண்டின் இறுதியில் நிகர உபரி ஈட்டுமெனறும் அவற்றின் பத்தாவது, பதினைந்தாவது ஆண்டுகளின் இறுதியில் ஆதாயநிலை வளர்ந்து செல்லுமென்றும் உறுதியாகத் தெரிந்த பின்னரே

கிராமப்புற மின்னமைப்புக் கூட்டுக் கடன்களை வழங்கு கின்றது. மின்வசதிக் கூட்டுறவுகள் நுகர்வோர் ஏற்படுத்தும் அமைப்பு ஆதலின் அவர்களது தேவையை நிறைவு செய்வ தோடன்றி மின்விசை திருட்டுப் போன்ற தீய செயல்களை நடக்க வொட்டாமல் கவனித்துக் கொள்ளுமென்றும் எதிர்நோக்கப் படுகிறது. முன்னோடிக் கூட்டுறவுத் திட்டங்களுக்குச் சலுகைகள் பல தரப்பட்டது; வட்டியும் குறைந்த விகிதத்தில் விதிக்கப் பட்டது. கர்நாடகம் (மைசூர்), ஆந்திரப் பிரதேசம், குஜராத், மகாராட்டிரம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முன்னோடித் திட்டங்கள் துவங்கப் பெற்றன. நீர்ப்பாசனத்திற்கு நீரேற்றுக்குழாய் மின்வசதியுடன் அமைக்க இக் கூட்டுறவுகள் முக்கியமாக ஏற்படுத்தப்பட்டன. அக்டோபர் 1970 முதல் மார்ச்சு 1971-க்குள்ளாகச் செயல்படத் துவங்கிய இவ்வைந்து கூட்டுறவுகளுக்கு நிலையான சொத்துகள் வாங்க ரூ. 12·80 கோடி ஐந்தாண்டுகளில் வழங்கப்படும்.

அக்டோபர் 1972 முடிய இக் கூட்டுறவுகளின் செலுத்திய பங்கு முதல் ரூ. 17·16 இலட்சமாக இருந்தது. மொத்த உறுப் பினர்களின் எண்ணிக்கை 27,555ஆக இருந்தது. இக் கூட்டுறவுச் சங்கங்கள் 171 புதுக் கிராமங்களுக்கு மின் வசதியளித்தன. 5696 நீரேற்றுக் கருவிகளுக்கு மின் இணைப்புத் தந்தன; தொழில் தொடர் பாக 456 இணைப்புகளையும், வீடு வியாபாரத் தொடர்பாக 8651 இணைப்புகளையும் தந்தன.

மேற்கண்ட ஐந்து முன்னோடிக் கிராமப்புற மின்வசதிக் கூட்டுறவுகளன்றி, குஜராத், மகாராட்டிரம் மாநிலங்களில் நகரப் பகுதிகளில் 10 கூட்டுறவு மின்வசதிச் சங்கங்கள் செயல்பட்டு வந்தன. கிராம மின்வசதிக் கூட்டுரு, கூட்டுறவு மின்வசதித் திட்டங்கள் எவ்வண்ணம் செயல்பட்டு வருகின்றன என்று மதிப்பீடு செய்ய குழுவொன்றையமைத்துள்ளது. இக் குழு மின் வசதிக் கூட்டுறவுகள் மேலும் சிறப்பாகச் செயலாற்ற யோசனை களையும் தரும்.

கூட்டுறவு நீர்ப்பாசன சங்கங்கள்
(Co-operative Irrigation Societies)

தொன்று தொட்டு நம் நாட்டில் நடந்து வரும் விவசாயம் பெரும்பாலும் பருவ மழையையே நம்பியிருக்கிறது என்று கூறினுல் மிகையாகாது. அரசினர் இந்த உறுதியற்ற நிலையை மாற்றப் பல முயற்சிகளை மேற்கொண்டனர். கால்வாய், குளம், கிணறு முதலிய

வெட்டியும், நிலத்திற்கு அடியிலுள்ள நீரை நீரேற்றுக் கருவிகள் வழி வெளியே இழுத்துப் பாசனவசதி ஏற்பாடு செய்தும் பருவ மழையை மட்டுமே நம்பி நிற்கும் நிலையை மாற்ற முயற்சி செய்தனர். மாபெரும் அணைகள் கட்டி நீர்த்தேக்க ஏற்பாடுகள் செய்தும், சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொண்டும் சீரான பாசன வசதிகளை ஆண்டு முழுதும் கிடைக்க வகை செய்தனர். அரசினர் முயற்சிகள் ஒருபுறமிருக்க விவசாயிகளும் தம் சொந்த முறையில் பல முயற்சிகளை மேற்கொண்டனர். பெரு விவசாயிகளுக்கு வேண்டிய நிதி வசதிகள் இருக்கலாம். ஆனல், நடுத்தர சிறு விவசாயிகள் என் செய்வது? இவர்களுக்குக் கை கொடுத்துதவ கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நிலப்பரப்பையொட்டி அமைந்துள்ள சிறு விவசாயிகள் ஒன்று சேர்ந்து நீர்ப்பாசனக் கூட்டுறவுகளை அமைத்துப் பாசன வசதி பெறுகின்றனர். நில உரிமையாளர்களும், சாகுபடியாளர்களும் இக் கூட்டுறவுகளில் உறுப்பினர்களாகலாம்.

கூட்டுறவு நீர்ப்பாசன சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்குக் கடன்களை வழங்குவதுமுண்டு. நீர்ப்பாசன வசதிகளை அமைத்துத் தருவது, பராமரிப்பது, நீர்ப்பாசனக் கட்டணங்களை வசூலிப்பது போன்ற பணிகளை இச் சங்கங்கள் மேற்கொள்ளுகின்றன. பஞ்சாப் மாநிலத்தில் குழாய்க் கிணறு சங்கங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. மகாராட்டிரத்திலும் தமிழ் நாட்டிலும் நீரேற்றுப் பாசன சங்கங்கள் (Lift Irrigation Societies) பல நிறுவப்பெற்றுள்ளன.

1971 ஜூன் இறுதியில் நம் நாட்டில் 4,000-க்கு மேற்பட்ட பாசன சங்கங்கள் நிறுவப் பெற்றிருந்தன. இச் சங்கங்கள் பாசனம் செய்யக்கூடிய நிலப்பரப்பு ஓர் இலட்சம் ஹெக்டேருக்கும் மிகுதியாகக் கணக்கிடப்பட்டது. 1971-72இல் தமிழ் நாட்டில் கூட்டுறவு நீரேற்றுப் பாசனச் சங்கங்கள் அமைப்பதில் பெரியதொரு திட்டம் உருவாக்கப்பெற்று 2,000-க்கு மேற்பட்ட சங்கங்கள் நிறுவப்பெற்றன. இவற்றில் 8,000 ஹெக்டேர்கள் பரப்பையடக்கும் ரூ. 4·84 கோடித் திட்டம் 185 சங்கங்கள்வழி நிறைவேற்றப்பட ஏற்பாடுகள நடந்தன. இத் திட்டங்களை நிறைவேற்ற வட்டார அளவில் வேளாண்மை-பொறியியல் பணிக கூட்டுறவு சங்கங்கள் (Agro-engineering and Service Co-operative Societies) தமிழ் நாட்டில அமைக்கப்பட்டன. இச் சங்கங்களின் அண்மை வளர்ச்சி கீழே விளக்கப்பட்டுளளது.

சிறு விவசாயிகள் சிறு பாசனத் திட்டங்களின் நன்மைகளைப் பெற இயலும் பொருட்டும், கிணறுகள் வெட்டுவதற்கும்,

நீரேற்றுப்பொறிகள் (pumpsets) நிறுவுவதற்கும் தேவைப்படும் முதலீட்டைக் கடனாகப்பெற தமிழ்நாட்டில் 1973 ஜனவரி வரை 2,062 கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் அமைக்கப் பட்டன. இவற்றில் 358 சங்கங்கள் தங்கள் நிருவாகத்தின்கீழ் 37,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் அளிக்க ரூ. 12 கோடி மதிப்புள்ள திட்டங்களை வகுத்துள்ளன.

கூட்டுறவு வேளாண்மைப் பணி நிலையங்கள்
(Co-operative Agro-service Centres)

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு (National Co-operative Development Corporation) உருவாக்கியுள்ள திட்டமொன்றின்படி கூட்டுறவு வேளாண்மைப் பணி நிலையங்கள் பல இடங்களில் நிறுவப்பெற்று வருகின்றன. டிராக்டர், பிற விவசாயப் பொறிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு அளித்தல், அவற்றைப் பழுது பார்த்தல் போன்ற பணிகளை இக் கூட்டுறவுகள் மேற்கொள்ளு கின்றன. 1971-72 முடிய 43 நிலையங்களை அமைக்கக் கூட்டுரு உதவி யுள்ளது. இவற்றில், கர்நாடகத்தில் (மைசூரில்) 7 நிலையங்களும், மகாராட்டிரத்தில் 2 நிலையங்களும் வாடகைக்கு விடும் பணி, பழுதுபார்த்துச் சீர்ப்படுத்தும் பணி ஆகிய இரு சேவைகளையும் செய்து வருகின்றன. மேலும் 8 நிலையங்கள் வாடகைக்கு விடும் பணியினை மட்டும் செய்து வருகின்றன. 1973 ஜனவரி இறுதிவரை மொத்தம் 57 நிலையங்கள் உருப்பெற தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு உதவியளித்துள்ளது. தமிழ் நாட்டில் மாவட்ட அளவில் 16 வேளாண்மைப் பணி நிலையங்கள் அமைக்கப்பட் டுள்ளன. மேலும் 140 வேளாண்மைப் பொறியியல் பணி நிலையங்கள் வட்டார அளவில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்துக்கும் இத்தகைய சங்கங்களை அமைக்கத் தமிழ் நாட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இச் சங்கங்கள் பொறி யாளர்களிடையே நிலவும் வேலையின்மைப் பிரச்சினையையும் ஓரளவுக்கு மட்டுப்படுத்தும்.

கூட்டுறவு அச்சுக் கூடங்கள்
(Co-operative Printing Presses)

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய அச்சு வேலையைச் செய்துகொடுக்கவும், அவற்றிற்குத் தேவையான எழுதுபொருள், கணக்கு ஏடுகள் முதலியவற்றை அளிக்கவும் கூட்டுறவு அச்சகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. தனிநபர்களும், கூட்டுறவுச்

சங்கங்களும் கூட்டுறவு அச்சுக் கூடங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1971 ஜூன் இறுதியில் நம் நாட்டில் 268 கூட்டுறவு அச்சகங்கள் இருந்தன. இவற்றில் 25,598 உறுப்பினர்களிருந்தனர். இச் சங்கங்கள் ரூ. 52·64 இலட்சம் பங்கு முதலும், ரூ. 137·91 இலட்சம் நடைமுறை முதலும் கொண்டிருந்தன. இக் கூட்டுறவுகள் 1970-71இல் செய்து முடித்த வேலையின் மதிப்பு ரூ. 93·17 இலட்சமாகும்.

மாதர் கூட்டுறவுச் சங்கங்கள்
(Women's Co-operative Societies)

மகளிர் அலுவலகங்களிலும் ஆலைகளிலும் வேலைபார்ப்பது இன்றைய இந்தியாவில் காணப்படும் சாதாரண நிகழ்ச்சியாக இருப்பினும், அண்மைக்காலம் வரையில் மகளிர் தத்தம் வீட்டு வேலைகளில் மட்டுமே பெரும்பாலும் ஈடுபட்டிருந்தனர். கிராமப் புறங்களில் ஆண் மக்களுக்கு உதவியாக மகளிர் விவசாயத்திலும், கிராம, குடிசைத் தொழில்களிலும் பலகாலமாகப் பணிசெய்து வருவது யாவருமறிந்ததே. கடுமையான உடலுழைப்புத் தேவைப் படும் தொழில்கள் மகளிருக்கு உகந்ததல்ல. நுகர்வோர் கூட்டுறவுகள் இங்கிலாந்தில் வெற்றிகரமாக நடந்துவரக் காரணம் அதில் மகளிர் கொண்ட ஈடுபாடேயாகும். இந்தியாவில் அந்த அளவுக்கு மகளிர் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் பங்கேற்கவில்லை. முதலாவதாக, சந்தை நடப்பில் உள்ள நுணுக்கங்களையும், விலைவாசி ஏற்றத்தாழ்வு நிலவரங்களையும் புரிந்து செயல்படுமளவுக்கு நம்நாட்டு மாதர்கள் கல்வியறிவு பெற்றிருக்கவில்லை; இரண்டாவதாகக் கூட்டுறவுத் தத்துவங்களைப் பற்றி பெரும்பாலான மகளிர் ஏதுமறியார்; மூன்றாவதாக மகளிர் இயற்கையாகவே அமைதியான பழைய முறைகளையே விரும்பு கின்றனர்; நான்காவதாகப் பண்டசாலை இயக்கம் அண்மையில் தான் வளரத் துவங்கியது. இப்படியிருந்தும் குடிசைத் தொழில்கள் துறையில் மகளிர் கூட்டுறவுகள் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சில மாநிலங்களில் மகளிர்க்கு மட்டுமெனச் சிக்கன, சேமிப்புச் சங்கங்களும், பின்னல்வேலை (Knitting), துணியில் அச்சுப் பதித்தல் (Cloth-printing), சாயம் தோய்த்தல், தையல் வேலை, பொம்மை செய்தல் போன்ற தொழில்களை நடத்தும் சங்கங்களும் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ் நாட்டில் மகளிர் நுகர்வோர் கூட்டுறவுகள் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மகளிரால் அமைக்கப் பட்ட சில தொழிற் கூட்டுறவுகளும், பால் சங்கங்களும் தமிழ்

நாட்டில் நன்கு செயல்பட்டு வருகின்றன. 1960–61இல் 1,810 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களிருந்தன. 1967–68இல் இந்த எண்ணிக்கை 3,617 ஆகப் பெருகியது. இச் சங்கங்களில் 1,58,943 உறுப்பினர்களிருந்தனர். இவை உற்பத்தி செய்த பொருள்களின் மதிப்பு ரூ. 57 இலட்சமாக இருந்தது. இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியம் ஏற்பாடு செய்த 'மகளிரும் கூட்டுறவும்' என்ற பொருள் குறித்த அனைத்திந்தியக் கருத்தரங்கு (1965) நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய நடவடிக்கைகளில் மகளிரை ஈடுபடுத்துவதன் இன்றியமையாமையை வற்புறுத்தியது. நுகர்வோர் கூட்டுறவுகளில் மகளிருக்கென நிருவாகத்தில் இடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்று கருத்தரங்கு பரிந்துரைத்தது. மகளிர் கூட்டுறவுத் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்த ஒவ்வொரு மாநிலத்திலும் முன்னோடித் திட்டங்கள் துவங்கப்பட வேண்டுமென்றும் கருத்தரங்கு பரிந்துரைத்தது.

கிராமக் கூட்டுறவு மருத்துவமனைகள்
(Rural Co-operative Dispensaries)

கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தவும், வேலையின்றியுள்ள மருத்துவர்களுக்கும் மருத்துவஞ்சார் ஊழியர்களுக்கும் வேலைவாய்ப்பு உண்டாக்கவும் கேரளத்தில் மாவட்டத்திற்கு ஒன்றாகப் பதினொரு கிராமக் கூட்டுறவு மருத்துவமனைகள் நிறுவப்படும் திட்டத்தைத் திட்டக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது. இம் மனைகளில் எல்லா வசதிகளும் கொண்ட 8 படுக்கைகள் இருக்கும். இரவும் பகலும் கிராம மக்களுக்குப் பணி புரியும் வகையில் மருத்துவமனையில் ஏற்பாடுகள் இருக்கும். ஒவ்வொரு மருத்துவமனையின் செயல் எல்லையும் பஞ்சாயத்தின் செயல் எல்லையோடு இணைந்து நிற்கும். மருத்துவமனை ஊழியர்கள் 'A' வகுப்பு உறுப்பினர்கள் என்றும், பயன் பெறக்கூடிய நபர்கள் 'B' வகுப்பு உறுப்பினர்கள் என்றும் சேர்த்துக்கொள்ளப்படுவர். சங்கமொன்றின் அனுமதித்த முதல் ரூ. 1·00 இலட்சமாக இருக்கும். துவக்கத்தில் முதல் ரூ. 20,000 ஆக இருக்கும். இதில் மாநில அரசு ரூ. 15,000 வழங்கும். இஃதன்றி மாநில அரசு ஒவ்வொரு சங்கத்திற்கும் மருத்துவமனைச் சாதனங்கள் வாங்க ரூ. 20,000 கடனுதவி அளிக்கும். நிருவாக உதவித் தொகையாக ரூ. 6,000 ஐந்தாண்டுகளுக்கு வழங்கப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த முயற்சி வெற்றி பெற்றால், மருத்துவ வசதித் துறையில் கூட்டுறவு அமைப்பு நிலையானதோர் இடம்பெறும் என்பதில் ஐயமேதுமில்லை.

18. கூட்டுறவுக் கல்விப் பயிற்சி

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது கூட்டுறவுக் கல்வியாகும். அடித்தளத்தை அமைக்காது கட்டடத்தை எழுப்புவது எவ்வளவு கேலிக்குரிய செய்தியோ அதே போன்றதுதான் கூட்டுறவுக் கல்விக்கு அடிகோலாது கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கும் முயற்சியாகும். கூட்டுறவின் தத்துவத்தையும் கொள்கைகளையும் உணராத மக்களிடையே கூட்டுறவை வளர்க்க முயல்வது பேதமை என்றே கூறவேண்டும்.

இந் நூற்றுண்டின் துவக்கத்தில் வெளியான (1915) மாக்லகன் குழுவினரின் அறிக்கையில் கூட்டுறவுக் கல்வியின் இன்றியமையாமை தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சங்கங்களைப் பதிவு செய்யு முன்னரும் பதிவு செய்த பின்னரும் கூட்டுறவுக் கல்வி அளிக்கப்பட வேண்டுமெனக் குழுவினர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளனர். சங்கங்களின் நடப்பில் காணப்பட்ட பல குறைகளும் முறைகேடான செயல்களும் குழுவினரின் கல்வியில்லாக் குறையினுல் ஏற்பட்டவையேயென மாக்லகன் குழு கருதியது. 1928இல் வெளியான விவசாயத்தின்மீதான அரசினர் குழுவினரும், சங்கங்களில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்க்க உண்டான ஒரேவழி பிரதம சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுத் தத்துவங்கள், பொருள் பற்றிய கல்வியைத் தொடர்ந்து பொறுமையாக அளிப்பதே என்றுரைத்தது.

கூட்டுறவுத் திட்டக் குழு (1945)வினர், 'கூட்டுறவு இயக்கம் திடமான அடிப்படையில் பலப்பல துறைகளில் வளரவேண்டுமானுல் அதன் பெருவாரியான உறுப்பினர்கள் கூட்டுறவுத் தத்துவங்களையும் நடைமுறையினையும் நன்கு அறிந்திருத்தல் மிகவும் இன்றியமையாதது. அப்பொழுதுதான் அவர்களும் அவர்களது பிரதிநிதிகளும் அதன் நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் நடத்திவர முடியும்' என்று குறிப்பிட்டனர்.

அனைத்துலகக் கூட்டுறவு ஒன்றியத்தால் அமைக்கப்பட்ட கூட்டுறவுத் தத்துவங்கள் மீதான குழு (1966), பொருளாதார, மக்களாட்சிக் கண்ணேட்டத்தில் கூட்டுறவுத் தத்துவங்களையும், செயல்முறைகளையும்பற்றித் தமது உறுப்பினர்கள், அலுவலர்கள், ஊழியர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்குக் கல்வியளிக்க எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று பரிந்துரைத்தது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் கல்வி மிகவும் அவசியமானது என்று பேராசிரியர் கார்வே வலியுறுத்தினர்.

கூட்டுறவுக் கல்வியின் நோக்கங்கள்

உறுப்பினர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவும், தன்னுதவியை மேற்கொள்ளத் தூண்டவும், கூட்டுறவுக் கொள்கையின்மீது ஒரு பற்றும் பிடிப்பும் உண்டாக்கவும் கூட்டுறவுக் கல்வித் தேவைப்படுகிறது. சரியான வகை தலைமைப் பண்புகளை வளர்த்துப் பெருவாரியான மக்களைச் சரியான வழியில் நடத்திச் செல்லும் திறனை உருவாக்குவதே கூட்டுறவுக் கல்வியின் நீண்டகால நோக்கமாகும். கூட்டுறவு இயக்கம் ஒரு வாணிக அமைப்பு மட்டுமே என்று கருதப்படாது அது கருத்து வளங் கொண்ட, புதிய நோக்கங் கொண்ட மனிதப் பண்பினை அடிப் படையாகக் கொண்ட ஓர் உறவினை ஏற்படுத்தித் தரும் அமைப்பு என்று கருதப்படல் வேண்டும். கூட்டுறவுச் சங்கமொன்றில் சேருபவருக்குத் தாம் ஒரு சங்கத்தில் மட்டும் சேருகின்றோம் என்பதைவிட ஓர் இயக்கத்தில் பங்கு கொள்கிறோம் என்ற எண்ணம் தலைதூக்கக் கூட்டுறவுக் கல்வி அவசியமாகத் தேவைப் படுகிறது.

கூட்டுறவுக் கல்வியின் நோக்கம் சங்கத்தின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதைவிட மனிதரின் முழுமையான வளர்ச்சிக்குப் பாடுபடுவதேயாகும். மனிதரிடை உறவு, பொறுப்புணர்ச்சி ஆகிய பண்பு நலன்களைக் கற்பிப்பது கூட்டுறவுக் கல்வி என்று கூறுதல் சாலப் பொருந்தும்.

விவரமறிந்த உறுப்பினர்களே கூட்டுறவு இயக்கத்தின் அடித்தளமாக அமைகின்றனர். இங்ஙனம் கூறுவதற்குப் பல காரணங்களுண்டு. கூட்டுறவுச் சங்கங்கள் மக்களாட்சி அமைப்பாக ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற முறையில் நடை பெற்று வருகின்றன. உறுப்பினர் தமது பொறுப்புகளையும் உரிமைகளையும் நன்கு அறிந்திருந்தால் மட்டுமே தமது சங்கத்தைச்

சீரான முறையில் நடத்திவர இயலும். மேலும், கூட்டுறவின் உறுப்பினர்கள் அக்கறையும் ஊக்கமுமின்றிச் செயல்திறனற்று இருந்தால், அவ்வமைப்பின்வழி மக்களாட்சி முறையில் பொறுப் பேற்றல், தொழில் செய்முறைகளைப் புரிந்துகொள்ளல் ஆகிய குறித்த பயிற்சிபெறும் வாய்ப்பை அவர்கள் இழந்துவிடுகின்றனர். உறுப்பினரின் உண்மையான ஈடுபாடும் ஆதரவும் இல்லாது போனல் கூட்டுறவுகளின் தொடர்ந்த வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படும். கூட்டுறவுத் தத்துவங்களின் சிறப்பை முற்றும் உணர்ந்த உறுப்பினர்களே கூட்டுறவின்பால் சிறப்பீடுபாடு கொண்டு முழுமனத்துடன் அதை ஆதரித்து வருவர். ஆகவே, நம் நாட்டில், கூட்டுறவு இயக்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும்பணி கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதைக் காட்டிலும் கூட்டுறவாளர்களை உருவாக்குவதேயாகும்.

கூட்டுறவுக் கல்வியின் இன்றியமையாமையைப் பெரிதும் உணர்ந்து அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ள நிலையைப் பல அயல்நாட்டுக் கூட்டுறவு இயக்கங்களில் காணலாம். ராக்டேல் கூட்டுறவுச் சங்கம் தனது உபரித்தொகையில் இரண்டரைச் சதவீதத்தைக் கல்விக்கு அந் நாளிலேயே ஒதுக்கி வந்தது குறிப்பிடத்தக்கது. பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, டென்மார்க் முதலிய நாடுகளில் கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும் சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஜப்பானில் நலிந்த நிலையிலுள்ள ஒரு சங்கத்தைக் கலைத்துவிடாது, கூட்டுறவுக் கல்வியாளர் ஒருவரை அனுப்பி அச் சங்க உறுப்பினர்களின் மனப்போக்கைச் சீராக்கிச் சங்கத்துக்குப் புத்துயிரளிப்பது அந் நாட்டில் கூட்டுறவுக் கல்விக்கு எவ்வளவு முக்கியமான இடமளித் துள்ளார்கள் என்பதை விளக்குகிறது.

இந்தியாவில் கூட்டுறவுக் கல்விக்கு முறையான ஏற்பாடு செய்த பெருமை அன்றைய சென்னை மாகாணக் கூட்டுறவு ஒன்றியத்தை (Madras Provincial Co-operative Union)ச் சாரும். 1914ஆம் ஆண்டில் துவங்கப் பெற்ற இந்த ஒன்றியம் 1915ஆம் ஆண்டிலிருந்து 'சென்னைக் கூட்டுறவுப் புல்லெட்டின்' என்னும் மலரை வெளியிட்டு வருகின்றது. இன்றைய தமிழ்நாடு ஜர்னல் ஆஃப் கோவாப்பரேஷன்' இம் மலரின் தற்போதைய உருவாகும். தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 1958 முதல் 'கூட்டுறவு' என்னும் மாத இதழையும் நடத்திவருகின்றது. விவசாயத்தின் மீதான அரசினர் குழுவின் பரிந்துரைகளையொட்டி பல மாகாணங் களில் கூட்டுறவுக் கல்வி புகட்ட பல ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன.

கூட்டுறவுக் கல்வி, பயிற்சி ஆகிய துறைகளில் 1935ஆம் ஆண்டில் முக்கியமானதொரு திருப்பம் நிகழ்ந்தது. இதற்குக் காரணமாக அமைந்தது திரு. டார்லிங் தீட்டிய ஒரு திட்டமாகும். கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், அலுவலர், அலுவலரல் லாத ஊழியர் ஆகியோருக்குப் பயிற்சி வசதிகள் அளிக்கும் பொருட்டு மாகாண அரசாங்கங்களுக்கு இந்திய அரசு உதவி யளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். முதல் கட்டத்தில் பயிற்சி முடிந்த பின்னர் ஆசிரியர்களாகவும், போதகர்களாகவும் பணியாற்றக் கூடிய நபர்களுக்குப் பயிற்சி தரப்படும். அடுத்த கட்டத்தில் அரசுத்துறை கூட்டுறவு அலுவலர், தணிக்கையர், எழுத்தர்களுக்குப் பயிற்சி தரப்படும். மூன்றும் கட்டத்தில் விவசாயக் கடன் சங்கங்கள், பிற சங்கங்கள் ஆகியவற்றின் செயலர்கள், நிருவாகக் குழுவினர் முதலியோருக்குப் பயிற்சியளிக் கப்படும். மேற்கூறிய திட்டத்தைச் செயல்படுத்துமாறு மாகாண அரசாங்கங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இதையொட்டி ஆங்காங்குக் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1945இல் கூட்டுறவுத் திட்டக்குழு, கூட்டுறவுப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆராய்ந்து கூறியதாவது: கூட்டுறவுக் கல்வி புகட்ட இந்தியாவின் பல பகுதிகளில் முறையான ஏற்பாடுகள் ஏதுமிருப்பதாகக் காணோம். கூட்டுறவுப் பயிற்சி, ஆராய்ச்சிக்குப் பலப்பல மாகாணங்களில் ஏற்பாடுகளிருந்த போதிலும் ஒரேவகையான முறையில் அவை அமையவில்லை.

கிராமப்புற மக்களிடையே கூட்டுறவு அறிவை வளர்க்க நாடகம், கூத்து, திரைப்படம், இன்னிசையுடன் கூடிய விரிவுரை போன்ற முறைகளைக் கையாள வேண்டுமெனக் குழு பரிந் துரைத்தது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கூட்டுறவைப் பற்றிய பாடங்கள் இடம்பெறவேண்டும். மாணவர்கள் கூட்டுறவுப் பண்டசாலை, சிற்றுண்டி விடுதி முதலியவற்றை அமைப்பதன்வழி கூட்டுறவுகளை நடத்துவதில் செய்முறைப் பயிற்சி பெற ஏற்பாடு செய்யலாம். பல்கலைக் கழக மட்டத்தில் கூட்டுறவு தனிப்பட்ட ஒரு பாடமாக அமையவேண்டுமென்றும் குழு பரிந்துரைத்தது. கீழ்க்காணும் வகையினருக்குக் கூட்டுறவு நடைமுறைப் பயிற்சியளிக்கப்படுவது அவசியமெனக் கூட்டுறவுத் திட்டக் குழு கருதியது:

(அ) கிராமப்புற கூட்டுறவுகளின் நிருவாகக் குழு உறுப் பினர்கள்.

(ஆ) கிராமப்புற கூட்டுறவுகளின் செயலர்கள்.

(இ) **கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள்.**

(ஈ) கூட்டுறவுத் துறை ஊழியர்கள்.

(உ) ஆராய்ச்சியாளர்கள்.

நிருவாகக் குழுவினருக்கு இரண்டு வாரக் குறுகிய கால வகுப்பும், செயலர்களுக்கு ஆறு வார வகுப்பும் நடத்தப்பட வேண்டுமெனக் குழு பரிந்துரைத்தது. கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒவ்வொரு மாகாணத்திலும் தனிக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படவேண்டுமெனக் குழு பரிந்துரைத்தது. அலுவலர்களுக்கும், அலுவலரல்லாத கூட்டுறவாளர்களுக்கும் கல்லூரிகளில் ஒருங்கே கூட்டுறவுப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். ஆராய்ச்சி, மேல்நிலைப் படிப்பு ஆகியவற்றிற்குக் கூட்டுறவுக் கூடம் ஒன்றினை அரசினர் நிறுவவேண்டுமெனக் குழு பரிந்துரைத்தது.

அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழுவினரும் கூட்டுறவுப் பயிற்சியின் இன்றியமையாமையை எடுத்துரைத்து இளநிலை, மத்தியநிலை, உயர்நிலைக் கூட்டுறவு அலுவலர்களுக்கும், கூட்டுறவு நிலையங்களின் ஊழியர்களுக்கும் பயிற்சி தரப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்தனர். கூட்டுறவுக் கல்வியும், பிரசாரமும் பொதுமக்களுக்கும், அலுவல் பொறுப்புள்ளோருக்கும் (Office-bearers), அலுவல் பற்றற்ற தொண்டர்களுக்கும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். அனைத்திந்தியப் பண்டகக் கூட்டுரு, அதன் துணை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியருக்கும், பாதுகாப்பு—பண்டகக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியருக்கும் பயிற்சி ஏற்பாடுகள் அவசியம் தேவை. இவை குறித்தும் குழு விரிவான பல பரிந்துரைகளைச் செய்திருந்தது. இவற்றின் பயனாகக் கூட்டுறவுப் பயிற்சிக்கும் கல்விக்கும் முறையானதோர் ஏற்பாடு உருவாயிற்று.

மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் குழு
(Central Committee for Co-operative Training)

வளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்திய ரிசர்வு வங்கியும் மத்திய அரசும் கூடி 1953ஆம் ஆண்டு மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் குழுவொன்றை அமைத்தனர். எல்லா நிலைகளிலும் பணியாற்றும் கூட்டுறவு ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டங்களை வகுக்குமாறு இக் குழு கோரப்பட்டது. கூட்டுறவு நிலையங்களின் ஊழியர்

களுக்கும், கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கும் ஒருங்கிணைந்த ஒரு பயிற்சித் திட்டம் இக் குழுவினரால் உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன:

(i) பயிற்சியாளர்கள் இளநிலை, மத்திய நிலை, உயர்நிலை என்று பாகுபடுத்தப்பட்டனர்.

(ii) பூனுவில் இயங்கிவரும் பயிற்சி நிலையத்தை விரிவுபடுத்தி அதனை உயர்நிலை அலுவலர்க்குப் பயிற்சியளிக்கும் அனைத் திந்தியக் கூடமாக உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

(iii) மத்தியநிலை ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்க ஐந்து பிராந் தியக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களை (Regional Co-operative Training Centres) அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

(iv) இளநிலை ஊழியருக்கு மாநில வாரியாகப் பயிற்சித் திட்டங் கள் நடத்தப்படும்.

மேற்கண்ட திட்டத்தின்படி ஜூன் 1954 முதல் பூனுவில் உயர்நிலை அலுவலர்களுக்கான விரிவுபடுத்தப்பெற்ற பயிற்சி துவங்கப்பெற்றது.

மத்தியநிலை ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கப் பிராந்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்கள் நிறுவப்பெற்றன. முதன்முதலாகச் சென்னையில் ஜூலை 1954இல் ஒரு பயிற்சிக்கூடமும் பின்னர் ராஞ்சி, மீரட், இந்தூர் ஆகிய இடங்களில் முறையே ஒரொரு கூடமும் நிறுவப்பெற்றன. முன்னரே நடைபெற்று வந்த பூனு பயிற்சிக் கூடத்தையும் சேர்த்து ஐந்து பயிற்சிக் கூடங்கள் செயல் படத் துவங்கின.

கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்குப் பாடுபடும் விரிவாக்க ஊழியர் (Extension Workers) மக்களுடைய மனப்பான்மை யையும், எண்ணத்தையும் சீரான முறையில் உருவாக்குவதையே தமது பெரும்பணியாகக் கொள்ளவேண்டும். உயிரற்ற அமைப்புப் பாங்கினை (Organisational Structure) வைத்துக்கொண்டு விரிவாக்க அலுவலர்கள் கூட்டுறவை வளர்க்க முடியும் என்று கருதுவது பிழையாகும். விரிவாக்க ஊழியர்கள் தம்மை மக்களுடன் கூடி உழைக்கும் கல்வியாளர்களாகக் கருதவேண்டும். கல்வி யின்வழி இவர்கள் மக்களைக் கூட்டுறவாளர்களாக ஆக்க வேண்டும்; கூட்டுறவாளர்கள் சேர்ந்து கூட்டுறவுகளாக அமைவது இயல்பே. எனவே, விரிவாக்க ஊழியர்களுக்குத் தக்க பயிற்சி யளிக்க எட்டு வட்டார மட்டக் கூட்டுறவு அலுவலர் பயிற்சிக் கூடங்கள் (Block Level Co-operative Officers Training Centres)

1955–56இல் ஹைதராபாத், திருப்பதி, கோட்டா, பவநகர், துரி, பைசாபாத், கல்யாணி, கோபால்பூர் ஆகிய இடங்களில் நிறுவப் பெற்றன.

இளநிலை அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க மாநில அரசினர் அந்தந்த மாநிலங்களில் ஏற்பாடுகள் செய்து வந்தனர். மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிக்குழு இளநிலைப் பயிற்சிக் கூடங்கள் கடைப் பிடிக்க வேண்டிய திட்டத்தை வகுத்தளித்துப் பொதுவான மேற் பார்வையினையும் மேற்கொண்டது. பெரும்பான்மை மாநிலங் களிலுள்ள இளநிலைப் பயிற்சி நிலையங்கள் இத் திட்டத்தை ஏற்று இதன்படி இயங்கி வந்தன. சில பயிற்சி நிலையங்களில் நில அடை மான வங்கியியல், சந்தையிடுகை போன்ற துறைகளில் குறுகிய காலச் சிறப்புப் பயிற்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

கூட்டுறவுப் பயிற்சியின் அமைப்பையும் நடைமுறையினையும் தீர ஆராய்ந்து இவை இன்னும் செம்மையாகச் செயல்பட யோசனைகளைத் தருமாறு பேராசிரியர் லேய்டுலா (Professor Laidlow) என்னும் வல்லுநரும், சர் மால்கம் டார்லிங் என்னும் கூட்டுறவாளரும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். 1956 இலிருந்து 1958 வரை இவர்கள் கூட்டுறவுப் பயிற்சி அமைப்பினைத் தீர ஆராய்ந்து பல பரிந்துரைகளைச் செய்தனர். பேராசிரியர் லேய்டுலா தமது அறிக்கையில் செய்முறைப் பயிற்சிக்குக் கூட்டுறவுப் பயிற்சித் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தினார். கல்வி புகட்டுச் சாதனங்கள், நூலக வசதிகள், நிருவாகத் துறை பயிற்சி முதலிய மேலுஞ் சிறப்பாக அமைய வேண்டும். பயிற்சியாளர்களை மதிப்பீடு செய்வதில் தேர்வுக்கு அவ்வளவு முக்கிய இடம் தராத ஒரு புதுவகை மதிப்பீட்டு முறை உருவாக்கப்பட்டது. கூட்டுறவு முறைப்படி தொழில் நடத்து வதில் பட்டறிவு உள்ளவர்களைப் பயிற்சித் திட்டத்தில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுதல் இன்றியமையாதது. அரசு அலுவலரும் அரசு சார்பற்ற அலுவலரும் பயிற்சியைப் பொருத்தவரை ஓர் ஆணையத்தின்கீழ் கொண்டுவரப்பட வேண்டும். கூட்டுறவுப் பயிற்சித் துறையில் அரசினரும், அரசைச் சார்ந்த முகமைகளும் படிப்படியாக நீக்கப்படவேண்டும். பயிற்சியைப் பொருத்த மொத்தப்பொறுப்பும் இயக்கத்தின் கடமையாக அமையவேண்டும்.

கூட்டுறவுப் பயிற்சி மீதான ஆய்வுக்குழு

இந்திய அரசு 1960 நவம்பரில் திரு. எஸ். டி. மிஸ்ரா தலைமை யில் குழுவொன்றினையமைத்துக் கூட்டுறவு வளர்ச்சிக்குத் தேவை யான கூட்டுறவுக் கல்வி, பயிற்சி ஏற்பாடுகள் தற்போது அமைந்

துள்ளனவாவென ஆராய்ந்து அவை மேலும் சீரான முறையில் அமைய யோசனைகளைத் தருமாறு வேண்டிக் கொண்டது. இக் குழுவின் பரிந்துரைகள் 1961 இல் நடைபெற்ற மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் ஆராயப்பட்டு அரசினரால் சில முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் சில வற்றைக் காண்போம்:

1. கூட்டுறவுப் பயிற்சி, கல்வி பற்றிய பொறுப்பு நாட்டளவிலும், மாநில அளவிலும் கூட்டுறவு இயக்கத்தையே சார்ந்ததாக இருத்தல்வேண்டும்.

2. மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்கள், மாநில அரசின் ஒப்புதலுடன் சிறப்புக் குழுக்கள் அமைத்து அவற்றின்வழி இளநிலைக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களை நிருவாகம் செய்யவேண்டும். இளநிலைப் பயிற்சிக் கூடங்களனைத்தும் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களின் நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். இளநிலைக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களுக்கு ஆகும் செலவுகளை மத்திய, மாநில அரசுகள் தற்போது பகிர்ந்து வரும் முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

3. மத்திய நிலைக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களும் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு மாற்றித் தரப்படவேண்டும். இவற்றை நிருவாகம் செய்ய, மாநில அரசினரின் ஒப்புதல் பெற்ற சிறப்புக் குழுக்களை ஒன்றியங்கள் நியமிக்கவேண்டும்.

4. மத்திய அமைப்புக் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்:

(i) கூட்டுறவுத் துறை, கூட்டுறவு நிலையங்களின் முதுநிலை அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க அனைத்திந்திய மட்டத்தில் மத்தியப் பயிற்சி நிலையமொன்று நடத்தல்.

(ii) பல மாநிலங்களுக்குகிடையேயான அடிப்படையில் மத்திய நிலைப் பயிற்சிக் கூடங்களில் பல்வேறு பாடங்களில் சிறப்புப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல்.

(iii) மத்தியப் பயிற்சி நிலையம், மத்திய நிலைப் பயிற்சி நிலையங்கள் பிற கூட்டுறவு நிலையங்கள், பல்கலைக் கழகங்கள் முதலியவற்றில் கூட்டுறவு பற்றிய ஆராய்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்யவும், ஆராய்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(iv) மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு மாற்றிக் கொடுக்கப்படாத மத்திய நிலைப் பயிற்சிக் கூடங்களை நடத்தி வருதல்.

(v) உறுப்பினர் கல்வியுட்பட அனைத்துக் கூட்டுறவுக் கல்வி, பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்துப் பொறுப்பேற்பது.

5. மத்திய அமைப்பின் நடவடிக்கைகள் இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும். இந்த அமைப்பினை நிருவாகம் செய்ய தேசீய ஒன்றியம் இந்திய அரசினரின் ஒப்புதல் பெற்ற ஒரு சிறப்புக் குழுவை அமைக்க வேண்டும்.

6. இலாபத்தில் நடைபெற்று வரும் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களின் கூட்டுறவுக் கல்வி நிதிக்குத் தொகை வழங்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டங்களில் சட்ட முறையாக வழிவகுக்கப்பட வேண்டும்.

7. ஆரம்பப் பள்ளி முதல் முதுகலைப் பட்டப் படிப்புவரை பாடத் திட்டங்களில் கூட்டுறவு பற்றிய பாடங்கள் இடம்பெற வேண்டும்.

உறுப்பினர்க் கல்வித் திட்டம்

நாட்டளவில் உறுப்பினர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியத்தைச் சார்ந்துள்ளது. உறுப்பினர் கல்வித் திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன:

(i) ஊதியம் பெறாது பிரதம சங்கங்களில் பதவி வகிக்கும் உறுப்பினர்கள்—தலைவர், செயலாளர் போன்றவர்கட்குக் கூட்டுறவுத் தத்துவங்கள், கொள்கை, செய்முறை, சட்டம், கணக்கு வைப்புமுறை முதலிய குறித்துக் கல்வி புகட்டல்.

(ii) நிருவாகக் குழுவின் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய கடமைகள், பொறுப்புகள் இன்னவென்றும், உறுப்பினர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்கள் சங்கத்தை நடத்திவர வேண்டிய பாங்கு இன்னவென்றும் கற்பித்தல்.

(iii) கூட்டுறவின் பொதுச் சிறப்பு, பொருளாதார நன்மைகள் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோள் ஆகிய செய்திகள் குறித்து உறுப்பினர்களுக்கும் உறுப்பினராகக் கூடிய பிறருக்கும் கல்வி புகட்டல்.

மாநிலஅளவில் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்கள் கூட்டுறவுக் கல்வித் திட்டத்தை நடத்தும் பொறுப்புக் கொண்டுள்ளன. சில மாநிலங்களில், மாவட்ட, தாலுகா கூட்டுறவு ஒன்றியங்களுங்கூட செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவுக் கல்வித் திட்டம் 1956ஆம் ஆண்டில் ஆறு நடமாடும் கல்வியகங்களாக நான்கு மாநிலங்களில் துவக்கப் பெற்றது. இம் முன்னோடித் திட்டம் படிப்படியாக விரிவு பெற்று 1959–60 இறுதியில் நாட்டிலுள்ள மாவட்டங்களில் மிகப்பெரும் பான்மையானவற்றில் நடைபெற்று வந்தது. மூன்றும் ஐந் தாண்டுத் திட்ட இறுதியில் 1,200 புகட்டுநர் (Instructors)களுடன் இத் திட்டம் செயல்பட்டு வருமென எதிர்நோக்கப்பட்டது. ஆனால், மாநில அரசுகளுக்கு 'மொத்த மானியம்' (Block-Grant) என்ற முறைப்படி மத்திய அரசு வழங்கத் துவங்கியது முதல் இத் திட்டத்திற்கான நிதியை வேறு கூட்டுறவுத் திட்டங்களுக்கு அரசுகள் திருப்பலாயின. இது காரணமாகக் கல்வியக எண்ணிக்கை 1961 இல் 561 ஆக இருந்தது 1966இல் 717 ஆக உயர்ந்து 1968 நடுவில் 616 ஆகக் குறைந்தது. இது மேலும் குறைந்து, 1970 இறுதியில் 553 ஆக நின்றது. தமிழ் நாட்டில்1967 ஆம் ஆண்டிலும், ஜம்மு—காஷ்மீரில் 1968ஆம் ஆண்டிலும், டெல்லி, ராஜஸ்தானில் 1970ஆம் ஆண்டிலும் இத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது.

இனி கூட்டுறவுக் கல்வி, பயிற்சிக்கான தற்போதைய ஏற்பாடுகள் எங்ஙனம் அமைந்துள்ளனவென்பதைக் காண்போம்.

இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியம் (National Co-operative Union of India) கூட்டுறவுக் கல்வி, பயிற்சி ஆகியவற்றின் ஏற்பாட்டிற்கு உச்சி அமைப்பாக விளங்குகின்றது. அடுத்த கட்டத்தில் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்கள் (state Co-operative Unions) இந்த ஏற்பாடுகளை மாநில அளவில் செயல்படுத்து கின்றன. மாவட்ட அளவில் அமைந்துள்ள ஒன்றியங்கள் தமது எல்லைக்குள் கல்விப் பணிகளை மேற் கொள்ளுகின்றன.

தேசியக் கூட்டுறவு ஒன்றியத்தின் முக்கிய நோக்கங்களாவன:

(i) இந்தியக் கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்தல், வளர்த்தல்.

(ii) கூட்டுறவுத் துறையை வளர்த்து விரிவுபடுத்த மக்களுக்கு உதவுதல், வழிகாட்டுதல், கல்வி புகட்டல்,

(iii) கூட்டுறவு பற்றிய செய்திகளை விளக்கி, கூட்டுறவாளர்களின் கருத்தினை வெளியிடல்.

மேற்கண்ட நோக்கங்களையடையும் பொருட்டுக் கூட்டுறவுக் கல்வி, பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்; கூட்டுறவு அமைப்பில் காணப்படும் பல்வேறு பிரிவுகளிடையே ஒற்றுமையையும் தொடர்பையும் வளர்த்தல்; கூட்டுறவுப் பிரச்சினைகளை ஆராய்ந்து புள்ளி விவரங்கள் சேகரித்துத் தீர்வு காண முயலல்; கூட்டுறவு பற்றிய புத்தகங்கள், இதழ்கள், குறிப்புகள், திரைப் படங்களை, பேச்சுகள் முதலியவற்றை வெளியிடல்; கூட்டுறவு மாநாடு, கருத்தரங்கு, கூட்டம், கண்காட்சி முதலிய நடத்துதல், கூட்டுறவுக் கொள்கைகள்மீது அதிகார பூர்வமான கருத்தினை வெளியிடல்; மாநில, நாட்டளவு, அனைத்து நாட்டளவு மாநாடுகளில் பங்கு கொள்ள கூட்டுறவாளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புதல் போன்ற பலப்பல நடவடிக்கைகளைத் தேசீய ஒன்றியம் மேற்கொள்ளுகிறது.

உறுப்பினர் கல்வியை மேற்பார்வை செய்து அறிவுரை வழங்கவும், புகட்டுநர்களுக்கு அடிப்படைப் பயிற்சியும் புத்தொளிப் பயிற்சியும் வழங்க ஏற்பாடு செய்யவும் தேசீய ஒன்றியம் உறுப்பினர் கல்விமீதான குழுவொன்றை அமைத்துள்ளது. தேசீயக் கூட்டுறவு ஒன்றியத்தின் நேரடியான மேற்பார்வையின்கீழ் 1957 இல் அனைத்திந்தியக் கூட்டுறவுக் கல்வி புகட்டுநர் பயிற்சிக் கூடம் (All India Co-operative Educational Instructor's Training Centre) கல்வி புகட்டுநருக்குப் பயிற்சியளிக்க நிறுவப்பெற்றது. மே 1964 இலிருந்து இப் பயிற்சிக் கூடம் புதுடெல்லியில் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுக் கல்வி புகட்டுநர்களுக்கு மட்டுமல்லாது சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்ட முகமை, மிகச் சிறு விவசாயிகள் விவசாயத் தொழிலாளிகள் மேம்பாட்டு முகமை ஆகிய செயல்பட்டு வரும் இடங்களிலுள்ள விரிவாக்க அலுவலர்களுக்கும், தலைவர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் இங்கு நடத்தப் பெறுகிறது.

1972–73 இல் 18 மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களில் 530 புகட்டுநர் செயலாற்றி வந்தனர். டெல்லியில் உறுப்பினர் கல்வித் திட்டம் 1972 செப்டம்பர் முதல் மீண்டும் செயல்பட்டு வருகிறது. 1972 நவம்பர் முடிய 2,75,707 நபர்கள் இதுவரை பயிற்சியளிக்கப் பட்டுள்ளனர். குஜராத்தில் புத்தறிவு வகுப்புகளின்வழி 111 செயலர், மேலாளர்களும், இமாசலப் பிரதேச இளைஞர் முகாமில் 8,212 இளைஞர்களும் பயிற்சி பெற்றனர். மாதர்களுக்குக்

கூட்டுறவுக் கல்வி புகட்ட 12 மாநிலங்களில் 38 மாதர் கல்வி புகட்டுநர்களும் 4 பெண் அலுவலர்களும் செயலாற்றி வந்தனர். 1972-73 இல் 10,135 மாதர்களும் 4,252 இளைஞரும் பயிற்சி பெற்றனர். பெண்களுக்கான வகுப்புப் பெரும்பாலும் 10 நாட்களுக்கு நடந்தன. பெண் செயலர், மேலாளர்களுக்கான வகுப்பு 28 நாட்களுக்கு நடந்தன.

மிஸ்ரா குழுவின் அறிக்கைக்குப்பின் கூட்டுறவுப் பயிற்சி

1962 ஆம் ஆண்டு இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கமான கூட்டுறவுப் பயிற்சிக்கான குழு (Committee for Co-oper -ative Traning)விற்குக் கூட்டுறவுப் பயிற்சித் திட்டம் முழுதும் ஒப்படைக்கப்பட்டது. இக் குழுவின் முக்கிய நோக்கங்களாவன: நாடெங்கிலும் கூட்டுறவுத் துறையிலும், நிலையங்களிலும் பணி புரியும் அலுவலருக்குத் தக்க பயிறசித் திட்டங்களை வகுத்து, நிறைவேற்றல்; கூட்டுறவுக் கல்வி, பயிற்சித் திட்டங்கள் ஒருங்கிணைத்து பாடத் திட்டம், தேர்வுமுறை ஆகியவற்றை நிருணயத்துப் பயிற்சியின் தரத்தைப் பாதுகாத்தல்; தேசியப் பயிற்சி நிலையம், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகள், கூடங்கள், பல்கலைக் கழகங்கள் முதலான இடங்களில் கூட்டுறவு ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்து ஆராய்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்; கூட்டுறவுப் பயிற்சியிலுள்ள பல்வகைப் பயிற்சித் துறைகளை மதிப்பீடு செய்து அவற்றை மேம்படுத்த யோசனைகளை வழங்கல்; இந்திய அரசினருக்குக் கூட்டுறவுப் பயிற்சி, ஆராய்ச்சி முதலியவற்றை வளர்க்க ஆலோசனை கூறுதல்.

முன்னர் கண்டது போன்று கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களின் அமைப்பு மூன்று அடுக்குகளாக உள்ளது. உச்சியில் தேசியப் பயிற்சி நிலையமாக விளங்குவது பூனாவிலுள்ள வைகுந்த மேத்தா தேசியக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையமாகும். 1962ஆம் ஆண்டுவரை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியெனப் பூனா நகரில் பெயர் கொண்டு செயல்பட்டு வந்த இந் நிலையம், மிஸ்ரா குழுவினரின் பரிந்துரையின் பேரில் உயர்நிலைப்படிப்பு ஆராய்ச்சிக்கான அனைத்திந்தியப் பயிற்சி நிலையமாகத் தேசியக் கூட்டுறவுக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம் (National Co-operative College and Research Institute) என 1963இல் புதிய உருப்பெற்றது. சில மாதங்கள் கழித்துப் பம்பாயில் நுகர்வோர் தொழிலை நுருவகிக்க மத்தியப் பயிற்சி நிலையமொன்றைத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு 1964இல் நிறுவியது. இது நுகர்வோர் தொழில் மேலாண்மை மத்திய நிலையம் (Central Institute of Management for Consumers Business) எனப்பெயர் பெற்றது. 1964 ஆகஸ்டில் பேராசிரியர் காட்கில் தலைமையில் நிறுவப்பட்ட உயர்மட்டசெயற்

குழு வொன்று கூட்டுறவுத் தொழில் மேலாண்மைப் பயிற்சியளிக்க தேசீயக் கூட்டுறவு நிலையமொன்று நிறுவப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்தது. இதன் விளைவாகத் தேசீயக் கூட்டுறவுக்கல்லூரி—ஆராய்ச்சி நிலையத்தையும் நுகர்வோர் தொழில் மேலாண்மை மத்திய நிலையத்தையும் ஒன்றாக இணைந்து பூனாவில் வைகுந்த மேத்தா தேசியக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்தைத் தோற்றுவித்தனர். இது 1967இல் நிறுவப் பெற்றது. இந் நிலையம் கூட்டுறவுப் பயிற்சிக் குழுவின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. இதற்கான செலவு முழுவதையும் கூட்டுறவுப் பயிற்சிக் குழு (மத்திய அரசு அளிக்கும் மானியத்தைக் கொண்டு) ஏற்கிறது.

வைகுந்த மேத்தா தேசீயப் பயிற்சி நிலையத்தில் முதுநிலை அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. மேலும் கூட்டுறவு இயக்கத் தலைவர்களுக்குக் கருத்தரங்குகள் அவ்வப்போது நடத்தப் பெறுகின்றன. இப் பயிற்சி நிலையம் நடத்தும் முக்கிய பயிற்சிகளாவன:

(i) கூட்டுறவுத் தொழில் மேலாண்மை உயர்சான்றிதழ் பயிற்சி (Diploma Course in Co-operative Business Management). இப் பயிற்சி ஒரு கல்வியாண்டுக் காலத்திற்கு நடத்தப்படுகிறது.

(ii) முதுநிலை அலுவலர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி (Orientation Course For Senior officers). இது பதினான்கு வார காலத்திற்கு அளிக்கப்படுகிறது.

(iii) கூட்டுறவுத் துறையிலுள்ள பக்குவப்படுத்தும் தொழில் நிறுவனங்கள் நிருவாகம் பற்றிய குறுகிய காலப் பயிற்சி.

(iv) தொழிற் கூட்டுறவுகளை நிருவாகம் செய்யும் உயர்நிலை அலுவலருக்குக் குறுகிய காலப் பயிற்சி

(v) மொத்த விற்பனை, பலபிரிவுப் பண்டசாலைகளின் பொது மேலாளர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி.

(vi) பொருள்கள் மேலாண்மை குறித்த பணிமுறைப் பயிற்சி (Functional Course in Material Management).

(vii) உயர்நிலைத் தணிக்கை அலுவலர் பயிற்சி.

மேற்கண்ட வகைப் பயிற்சிகளல்லாது பல்வகை குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களையும் தேசீயப் பயிற்சி நிலையம் நடத்தி வருகிறது. இங்ஙனம் நடத்தப்படும் சில பயிற்சித் திட்டங்களைக் காண்போம்.

(அ) கூட்டுறவு குளிர்சாதன பாதுகாப்பு நிலைய அலுவலர் பயிற்சி

(ஆ) விற்பனை மேலாண்மை

(இ) கூட்டுறவு மேலாண்மை, நிருவாகத்தில் செய்தித் தொடர்பு

(ஈ) தற்கால மேலாண்மை உத்திகள் (Modern Management Techniques)

இவையன்றிப் பல கருத்தரங்குகளும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சரக்கு இருப்பு மேலாண்மை; கூட்டுறவு வளர்ச்சிக்குத் திட்டமிடுதல்; தொழிற் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்குத் திட்டமிடுதல்; கூட்டுறவுத் துறையில் தொழிலாளர் உறவு; மொத்த விற்பனை பண்டசாலை தலைவர்-தலைமை அலுவலர் கருத்தரங்கு முதலிய 1971-72இல் நடத்தப் பெற்றன. 1971-72 இறுதிவரை இப்பயிற்சி நிலையம் 4,108 முதுநிலை மட்டத்திலுள்ளோருக்குப் பயிற்சியளித்திருந்தது.

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகள்

ஜூலை 1962 முதல், அந்நாளில் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்கள் (Co-operative Training Centres) என்று அழைக்கப்பட்ட மத்தியநிலை அலுவலர் பயிற்சி நிலையங்கள் பதின்மூன்று தேசீயக் கூட்டுறவு ஒன்றியத்தின் நிருவாகத்திற்கு மாற்றப்பட்டன. இவற்றில் நான்கு பயிற்சிக் கூடங்களைத் தேசீயக் கூட்டுறவு ஒன்றியம் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களின் உடனடியான நிருவாகத்திற்கு மாற்றித் தந்தது. இங்ஙனம் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு மாற்றித் தரப்பட்ட கல்லூரிகள் சென்னை, கடலோரம் அமைந்த கோபால்பூர் (ஒரிசா), பூனா, வல்லப வித்யாநகர் (குஜராத்) ஆகிய இடங்களில் அமைந்திருந்தன. பிற ஒன்பது பயிற்சிக் கூடங்கள் கூட்டுறவுப் பயிற்சிக்குழு (தேசீயக் கூட்டுறவு ஒன்றியத்தின் ஓர் அங்கம்)வினரால் நேரடியாக நிருவாகம் செய்யப்பட்டு வந்தன. மாற்றித் தரப்பட்ட பயிற்சிக் கூடங்களின் உடனடியான நிருவாகத்தை மேற்கொள்ள மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்கள் சிறப்புக் குழுக்களை (Special Committees) அமைத்தன. நேரடியாகக் கூட்டுறவுப் பயிற்சிக் குழுவினரால் நிருவாகம் செய்யப்படும் 9 கல்லூரிகளுக்கு அறிவுரையளித்து உதவ உள்ளூர் குழுக்கள் (Local Committees) அமைக்கப்பட்டன.

பயிற்சி நிலையங்களின் பெயர்கள் பலவிதமாக அமைந்திருப்பதால் அவற்றுடன் தொடர்பு கொள்ளுவோருக்குக் குழப்பம்

ஏற்படாதிருக்கும் பொருட்டு 1968ஆம் ஆண்டு, கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்கள் என்ற பெயரைக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகள் என்று மாற்றினர். 1972ஆம் ஆண்டில் புதியதொரு கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மகாராட்டிர மாநிலத்திலுள்ள நாகபுரியில் துவக்கப்பட்டது. காலஞ் சென்ற பேராசிரியர் டி. ஆர். காட்கில் நினைவாக இக்கல்லூரிக்கு அவர் பெயர் சூட்டப் பட்டது.

படிப்படியாகக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளை மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களின் உடனடியான நிருவாகத்திற்கு மாற்றித் தரும் ஏற்பாட்டின்படி மேலும் இரண்டு கல்லூரிகள்—பெங்களூர், நாகபுரி கல்லூரிகள் முறையே மைசூர், (கர்நாடக) மகாராட்டிர மாநில ஒன்றியங்களுக்கு 1972இல் மாற்றித் தரப்பட்டன. கேரள மாநிலத்தில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட வேண்டு மென்ற கோரிக்கையைக் கூட்டுறவுப் பயிற்சிக் குழு கொள்கை யளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் பல உயர்சான்றிதழ் ((Diploma) பயிற்சி வகுப்புகளும் பலப்பல குறுகியகால, புத்தறிவு, புத்தொளி, பணிமுறை (Functional)ப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப் பெறுகின்றன. அவற்றுள் முக்கியமான சிலவற்றைக் காண்போம்:

(i) உயர்நிலைக் கூட்டுறவு உயர்சான்றிதழ் பயிற்சி (Higher Diplome Course in Co-operation) இப் பயிற்சி பல கால மாகப் பொது அடிப்படைப் பயிற்சி (General Basic Course) என்று அறியப்பட்டு வந்தது. இப் பயிற்சியின் காலம் 36 வாரங்களாகும். மத்திய நிலையிலுள்ள அரசு அலுவலரும், கூட்டுறவு நிலைய ஊழியர்களும் இவ் வகுப்புகளில் பயிற்சி பெறுகின்றனர். பதினுன்கு கல்லூரிகளிலும் இப் பயிற்சியளிக்கப்படுகிறது.

(ii) கூட்டுறவுச் சந்தையிடுகை உயர்சான்றிதழ் பயிற்சி (Diploma Course in Co-operative Marketing): பிராந் திய அடிப்படையில் நடைபெற்றுவரும் இப் பயிற்சி 1971-72இல் பெங்களூர், பாட்னு, டெராடூன், இந்தூர் ஆகிய நான்கு கல்லூரிகளில் அளிக்கப்பட்டது.

(iii) நிலவள வங்கியியல் (Land Development Banking) உயர்சான்றிதழ் பயிற்சி: இந்தப் பயிற்சியும் பிராந்திய அடிப்படையில் 1971-72இல் ஹைதராபாத், கல்யாணி

(மேற்கு வங்காளம்), லக்னோ, வல்லப வித்யாநகர் (குஜராத்) கல்லூரிகளில் நடைபெற்று வந்தது.

(iv) கூட்டுறவுத் தணிக்கை உயர்சான்றிதழ் பயிற்சி: சென்னை, பாட்னா, பூனா கல்லூரிகளில் 1971-72இல் நடைபெற்றுவந்த இப் பயிற்சி முதன் முதலாகச் சென்னையில் 1964இல் துவங்கப் பெற்றது.

(v) கூட்டுறவு வங்கியியல் உயர்சான்றிதழ் பயிற்சி சென்னை கல்லூரியில் மட்டுமே நடந்துவரும் இப் பயிற்சி அனைத்திந்திய மட்டத்தில் அளிக்கப்படுகிறது.

(vi) தொழிற் கூட்டுறவு உயர்சான்றிதழ் பயிற்சி: (Diploma Course in Industrial Co-operation): இந்திய அரசின் தொழில் வளர்ச்சி அமைச்சின் பண உதவியுடன் லக்னோ, பெங்களூர், புவனேசுவரம், பூனா, பாட்டியாலா கோட்டா (ராஜஸ்தான்) கல்லூரிகளில் 1971-72இல் தொழிற் கூட்டுறவுகளில் பணியாற்றும் மத்தியநிலை அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வந்தது. 1973 பெப்ரவரியிலிருந்து சென்னைக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும் இப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட உயர்சான்றிதழ் பயிற்சி வகுப்புகளில் (ii) முதல் (vi) வரை குறிப்பிட்டுள்ளவற்றின் பயிற்சிக்காலம் 10 முதல் 18 வாரங்களாக இருக்கின்றது. இவையன்றி, மூன்று நாட்கள் முதல் மூன்றுவார காலம் வரையான பல குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் அளிக்கப்படுகின்றன. அவற்றுள் சில: கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களின் விரிவுரையாளர்—முதல்வர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி; மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளை மேலாளர்களுக்குப் பயிற்சி; வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி; கூட்டுறவு விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி; கூட்டுறவு நகர வங்கிகளின் ஊழியர்களுக்குப் பயிற்சி; மீன் கூட்டுறவுகள், பால் கூட்டுறவுகள், கால்நடை கூட்டுறவுகள் முதலியவற்றின் ஊழியர்களுக்குப் பயிற்சி; உரம் வழங்கும் ஊழியருக்குப் பணிமுறைப் பயிற்சி; பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள், பண்டகத்திலிடல்—தரப்படுத்தல், பாதுகாத்துவைத்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுகள் முதலியவற்றின் ஊழியர்களுக்குப் பயிற்சி நெசவாளர் கூட்டுறவுகளின் ஊழியர்களுக்குப் பயிற்சி என்பனவாகும். இக் கல்லூரிகள் 1971-72வரை பயிற்சியளித்த விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர் எண்ணிக்கை—1972 ஜூன் இறுதியிலிருந்தபடி

1. உயர்நிலைக் கூட்டுறவு உயர்சான்றிதழ் பயிற்சி (பொது அடிப்படைப் பயிற்சி)	13,587
2. கூட்டுறவுச் சந்தையிடுகை	2,819
3. நிலவள வங்கியியல்	2,572
4. கூட்டுறவு வங்கியியல்	891
5. கூட்டுறவுத் தணிக்கை	823
6. பணிமுறைப் பயிற்சி	472
7. குறுகியகால, புத்தறிவுப் பயிற்சி	4,165
மொத்தம்	25,329

அட்டவணை

தொழிற் கூட்டுறவுத் துறையில் பயிற்சி—30-6-1972 வரை பயிற்சி பெற்றவர் எண்ணிக்கை

1. உயர்நிலை அலுவலர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி	51
2. தொழிற் கூட்டுறவில் உயர் சான்றிதழ் பயிற்சி	1,357
3. தொழிற் கூட்டுறவில் முன்னோடிப் பயிற்சி (கைவிடப்பட்டது)	536
4. கருத்தரங்கு, குறுகியகாலப் பயிற்சி முதலிய	78
மொத்தம்	2,022

இளநிலை ஊழியர் பயிற்சி

கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள இளநிலை ஊழியர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களில் பயிற்சியளிக்கப்படுகின்றன. 1971-72 இறுதியில் 66 கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றின் நிருவாகம் மாநில அரசினரிடமும் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களிடமும் அமைந்துள்ளது. பீகார், உத்தரப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் மாநில அரசினர் இளநிலை

பயிற்சிக் கூடங்களை நடத்தி வந்தனர். பிற இடங்களில் மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களின் மேற்பார்வையில் இக் கூடங்கள் செயல்பட்டு வந்தன. மகாராட்டிரத்தில் 13, தமிழ் நாட்டில் 8, மைசூரில் 6, ஆந்திரத்தில் 5, குஜராத்தில் 4, மத்தியப் பிரதேசத்தில் 4, மேற்கு வங்காளத்தில் 4, பீகார் கேரளம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசத்தில் மும்மூன்று, ஜம்மு, காஷ்மீர், ஒரிசாவில் இரண்டிரண்டு, அஸ்ஸாம், ஹரியாணு, இமாசலப் பிரதேசம், பஞ்சாப், நாகாலாந்து, மணிப்பூரில் ஒவ்வொன்று ஆக மொத்தம் 66 பயிற்சிக் கூடங்கள் இருந்தன.

இளநிலைப் பயிற்சிக் கூடங்களில் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சி வகுப்புச் சில மாநிலங்களில் 24 வார காலத்திற்கும், மேலுஞ் சிலவற்றில் 30 வாரங்கள், 7½ மாதங்கள், 9 மாதங்கள், 10 மாதங்கள் காலத்திற்கும் நடத்தப்படுகின்றன.

சில மாநிலங்களில் இளநிலைக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்கள் சில சிறப்புப் பயிற்சித் திட்டங்களை நடத்தின. அவற்றுள் சில; கூட்டுறவு வேளாண்மையில் உயர்நிலைச் சான்றிதழ் பயிற்சி; விரிவாக்க அலுவலருக்குக் கூட்டுறவு வேளாண்மையில் பயிற்சி; கூட்டுறவுச் சந்தையிடுகை; கூட்டுறவு வங்கியல்; கூட்டுறவு வீட்டு வசதி; பால் பண்ணைக் கூட்டுறவுகள்; கணக்கியல்-தணிக்கை பயிற்சி; நுகர்வோர் கூட்டுறவு; தொழிற் கூட்டுறவு ஊழியர் பயிற்சி என்பனவாகும்.

1971-72வரை பல்வேறு இளநிலைப் பயிற்சி வகுப்புகளில் 1,07,13 நபர்கள் பயிற்சி பெற்றிருந்தனர். நுகர்வோர் கூட்டுறவு களில் பணியாற்றி வந்த ஊழியர், நகர கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றி வந்த மாலை நேர வகுப்பில் பயிற்சி பெற்ற ஊழியர் ஆகியோரைக் கணக்கில் சேர்த்துக் கொண்டால் 1972 ஜூன் வரை பயிற்சி பெற்றவர் எண்ணிக்கை 1,11,125 ஆக உயரும்.

கூட்டுறவுப் பேரங்காடிகளில் பணியாற்றி வந்த மேலாளர், மேற்பார்வையாளர்களுக்குப் பயிற்சி 1971-72இல் நடத்தப் பட்டது. இதன்வழி 87 ஊழியர்கள் பயிற்சி பெற்றனர்.

1965ஆம் ஆண்டு முதல் கூட்டுறவுப் பயிற்சிக் குழு புதிதாக நியமனமான கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கூட்டுப் பதிவாளர், இணைப்பதிவாளர்களுக்குப் புத்தொளிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்து வந்துள்ளது. இப் பயிற்சித் திட்டத்தின்படி மேற்கூறிய அலுவலர்கள் இந்திய ரிசர்வு வங்கி, பம்பாய், வைகுந்த

மேத்தா தேசியக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம், பூனா வேளாண்மை அமைச்சகம், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு, தேசியக் கூட்டிணைப்புகள் ஆகியவற்றில் பயிற்சி பெறுகின்றனர்.

மாணவர்களைக் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபடுத்திப் பங்கு கொள்ளுமாறு செய்ய கூட்டுறவுப் பயிற்சிக் குழு கட்டுரை, சொற்போர் போட்டிகளை நாடு முழுதுமுள்ள பல்கலைக் கழகங்களிலும் அவற்றின் வழி கல்லூரிகளிலும் நடத்தி வருகின்றனர். இக் குழு கூட்டுறவுச் சட்ட இதழ் (Co-operative Law Journal) என்ற காலாண்டு மலரை வெளியிடுகின்றனர்.

1971-72வரை கூட்டுறவுப் பயிற்சிக் குழுவின் பயிற்சி வசதிகளை 23 ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் 200 பயிற்சியாளர்களை அனுப்பிப் பயன்படுத்திக் கொண்டன.

பயிற்சி-கல்வி பற்றிய மதிப்பீடு

கூட்டுறவு நிலையங்களில் பணிபுரிவோரில் பெரும்பான்மையோர் பயிற்சி பெறாதவர்களாயிருப்பது எங்கும் காணக்கிடக்கும் பொதுவான நிலையாகும். இந்த நிலைக்கு விலக்காகத் திகழ்வது ஒரு சில மாநிலங்களே. தமிழ்நாடு போன்ற ஒரு சில மாநிலங்களில் மட்டுமே கூட்டுறவுப் பயிற்சி பெறாத நபர் எவரும் கூட்டுறவு நிலையங்களில் வேலைக்கு அமர்த்தப்படலாகாது என்ற விதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சி பெறாத ஊழியர்கள் பெருமளவில் இருந்த போதிலும், பயிற்சி நிலையங்களிலுள்ள வசதிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படாத நிலையை இன்றும் காணலாம். இதற்குப் பல காரணங்களுண்டு. பயிற்சி பெற்றவர்களுக்கு ஊக்கம் தருவதாக பதவி உயர்வு, சம்பள உயர்வு ஏதும் தரப்படுவதில்லை பயிற்சிக் காலத்தில் வழங்கப்படும் உதவித் தொகை மிகச் சிறிய அளவினதாக இருப்பதால் அதை ஓர் ஊக்குவிப்பாகக் கொள்வதற்கில்லை. சில இடங்களில் பயிற்சி பெற்றவர்களுக்குத் தக்க பதவி கிடைக்கவில்லை. இதில் காணக்கிடக்கும் முரணான நிலை பயிற்சியற்றவர்கள் பெருமளவில் வேலையிலிருப்பது; பயிற்சி பெற்றவர்கள் வேலை கிடைக்காது வருந்துவது; பயிற்சி நிலையங்களில் உள்ள வசதிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படாதிருப்பது ஆகியன.

பல பயிற்சி நிலையங்களுக்கு இட வசதி, விடுதி வசதி, நூலக வசதி முதலிய வேண்டுமளவுக்கு இல்லாதிருப்பதும் ஒரு குறை

யாகும். சில இடங்களில் தக்க தகுதிபெற்ற விரிவுரையாளர்கள் கிடைப்பது அரிதாகவுள்ளது. பயிற்சி நிலையங்களின் ஊழியர்களின் பணிமுறை நிலை (Service conditions) இடத்துக்கு இடம் மாறுபடுகின்றது. தகுதி வாய்ந்தவர்களை ஈர்க்கும் வகையில் பணிமுறை நிலை அமையவேண்டும்.

கூட்டுறவு நிறுவனங்கள் பல, பயிற்சித் திட்டம் ஏட்டுப்படிப்பாக அமைகிறது; செய்முறைப் பயிற்சிக்குக் கூடுதல் முக்கியத்துவம் தரப்பட வேண்டுமெனக் கூறுவதுண்டு. கூட்டுறவு நிறுவனங்களில் தேவையைக் கருத்தில் கொண்டு அவற்றைக் கலந்தாலோசித்துப் பயிற்சித் திட்டத்தை அவ்வப்போது திருத்தியமைக்கக் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மாநாடுகள் அவ்வப்போது கூட்டப்படுகின்றன. பல்வகைக் கூட்டுறவுத் தொழில் நிலையங்களின் தலைவர்கள், தலைமை அலுவலர்கள் ஆகியோர் இவற்றில் கலந்து கொண்டு தமது கருத்துகளை வழங்குகின்றனர்.

இன்றுள்ள நிலையில் மத்திய நிலை, முது நிலைக் கூட்டுறவு அலுவலர் பயிற்சிக்கான செலவனைத்தையும் இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. கூட்டுறவுப் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்புக் கூட்டுறவு இயக்கத்திற்கு உண்டு. ஆகவே இந்த ஏற்பாடு நிலையான ஏற்பாடாக அமையாது. படிப்படியாக கூட்டுறவு இயக்கமே பயிற்சித் திட்டங்களுக்கான நிதிவசதிகளைச் செய்து தரும்நிலை விரைவில் உருவாகவேண்டும். வளர்ந்து வரும் இயக்கத்திற்கு இது ஒரு பொருட்டல்ல. பயிற்சிதர செலவு ஆகத்தான் செய்யும்; ஆனால் பயிற்சி தராதிருப்பின், திறமையற்ற செயற்பாட்டின் காரணமாக, இச் செலவுக்கும் மிகுதியாகச் செலவு ஏற்படும் என்பதை உணரவேண்டும். இந்த அடிப்படை உண்மையைக் கூட்டுறவு நிலையங்கள் உணர்ந்து செயல்பட்டால் பயிற்சியின் எதிர்காலம் சிறப்பாக அமையும்.

19. கூட்டுறவு இயக்கமும் ரிசர்வு வங்கியும்

நம் நாட்டின் மைய வங்கியாக இந்திய ரிசர்வு வங்கி செயலாற்றி வருவது யாவரும் அறிந்த செய்தியே. இந்தியாவின் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதன் காரணமாக, அத் துறைக்குத் தேவையான கடன் வசதிகளை விரிவாக்கி ஒருங்கிணைக்கும் பொறுப்பினை ரிசர்வு வங்கி மேற்கொள்ள வேண்டுவதாயிற்று. இப் பணியினை ரிசர்வு வங்கி சீரான முறையில் மேற்கொள்ள வகைசெய்யும் பொருட்டு, இந்திய ரிசர்வு வங்கிச் சட்டம் பிரிவு 54இல் இவ் வங்கி விவசாயக் கடன்துறை (Agricultural Credit Department) ஒன்றை அமைத்தல் வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது. இத் துறையின் முக்கிய பணிகளாவன:

(அ) விவசாயக் கடன் குறித்த பிரச்சினைகள் அனைத்தையும் ஆராயவும், மத்திய அரசு, மாநில அரசுகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பிற வங்கிகள் ஆகியவற்றிற்கு ஆலோசனை கூறவும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அலுவலரைக் கொண்டிருத்தல்.

(ஆ) விவசாயக் கடன் தொடர்புற்ற இவ் வங்கியின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து விவசாயக் கடன் வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பிற வங்கிகள் அல்லது அமைப்புகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.

பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும், விளைபொருளைச் சந்தையிலிடுவதற்கும் தேவையான விவசாயக் கடனை மாநிலக் கூட்டுறவு வங்கிகள் வழியோ அல்லது பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் வழியோ ரிசர்வு வங்கி வழங்க, சட்டத்தின் பிரிவு 17 வகை செய்துள்ளது.

இந்திய ரிசர்வு வங்கி நிறுவப்பெற்ற போதே (ஏப்ரல் 1935) விவசாயக் கடன் பிரிவும் அமைக்கப் பெற்றது. நாட்டில் நிலவி வந்த விவசாயக் கடன் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கை யொன்று வழங்குவதே இப் பிரிவின் முதற்பணியாக அமைந்தது. இவ்வறிக்கை, விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகள் ஏறத்தாழ முழுவதையுமே வட்டித் தொழிலர்கள் வழங்கிவரு கின்றனரென்பதையும் இத் துறையில் கூட்டுறவு, பிற முகமை களின் பணி மிகமிகச் சிறிய அளவினதாக இருக்கிறதென்பதையும் தெளிவுபடுத்தியது. எதிர்பார்த்த அளவுக்குக் கூட்டுறவுகள் வளராதபோதிலும், சீரமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டு விட்டால் விவசாயக் கடன் வழங்க மிகவும் உகந்த முகமையாக விளங்கக் கூடியது கூட்டுறவு ஒன்றேதான் என்று அறிக்கை கூறியது. இந்த அடிப்படையில்தான் ரிசர்வு வங்கி கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டிவருகின்றது. நாட்டின் மைய வங்கி (Central Bank) என்ற நிலையில் இந்திய ரிசர்வு வங்கி பொதுவாக மைய வங்கிகளால் மேற்கொள்ளப்படும் பணிகளைச் செய்துவருவதுடன், விவசாயக் கடன் வசதிகளைச் செய்து தருவதிலும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளக் காரணம் நாட்டின் பொருளாதார வளர்ச்சித்துறையில் இவ்வங்கி கடைப் பிடித்துவரும் கொள்கைகளும் ஒழுங்குமுறைகளும் வெற்றிபெற விவசாயக் கடன் அமைப்புச் சீரான முறையில் அமைந்திருக்க வேண்டுவதன் இன்றியமையாமையேயாகும். கிராமக் கடன் தேவைகள் நிறைவு பெறாது நின்ற நிலையில், இடைவெளிகளை நிரப்பி, தக்க அமைப்புள்ள நிறுவனங்களை உருவாக்கி, சீரான கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுத்துத்தரும் பொறுப்பை ரிசர்வு வங்கி மேற்கொண்டதில் வியப்பேதுமில்லை. இது பொருட்டே மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி பெரு மளவு நிதிவசதிகளை வழங்கிவரலாயிற்று. நாளடைவில் கூட்டுறவு வங்கிகள் தன்னிறைவு பெற இந்த ஏற்பாடு வழிவகுக்குமென்றும் கருதப்பட்டது.

இந்திய ரிசர்வு வங்கி கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு வருவதை நான்கு கட்டங்களில் ஆராயலாம். முதல் கட்டம் வங்கி நிறுவப்பெற்றது முதல் நாடு விடுதலைபெற்ற ஆண்டுவரையான காலத்தைக் குறிக்கும்.

கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்பு கொண்டு அது எங்ஙனம் திருத்தியமைக்கப்பட்டால் விவசாயக் கடன் தக்கமுறையில் வழங்கப்படுமென ஆராய்வதில் துவக்க காலத்தில் ரிசர்வு வங்கி தனது கருத்தைச் செலுத்தியது. அந் நேரத்தில் பல மாகாணங்

களில் கூட்டுறவுக் கடன் அமைப்பு மிகவும் நலிந்த நிலையிலிருந்த படியால், அது ரிசர்வு வங்கி அளிக்கக் கூடிய வசதிகளைப் பயன் படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இல்லாதிருந்தது. மற்றும், துவக்கத் தில், கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் தற்காலிக நிதிப்பற்றுக் குறையினைச் சமாளிக்க மட்டுமே ரிசர்வு வங்கி கடன் வசதிகளை யளித்தது. 1942இல் தான் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சலுகை வட்டியின் பேரில் ரிசர்வு வங்கி கடன் வழங்கத் துவங் கியது. சலுகைவட்டி வசதியிருந்தும், கூட்டுறவு வங்கிகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு ரிசர்வு வங்கியிடமிருந்து கடன் பெற வில்லையென்பதை, 1946-47இல் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ரூ. 1·50 இலட்சம் மட்டுமே கடன் வாங்கியிருந்த நிலை தெளிவு படுத்தும். கூட்டுறவு வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் கடன் கோராமைக்கு முக்கிய காரணம் இரண்டாம் உலகப் போர் முடிந்த நேரம் வங்கிகளிடம் கணிசமான அளவு உபரிப் பணம் இருந்தமையுமாகும்.

இரண்டாம் கட்டம் விடுதலைக்குப் பின்னர் துவங்கி அனைத் திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழுவின் அறிக்கை வெளிவரும் வரையான காலம் (1947—1954) ஆகும். இரண்டாம் கட்ட காலத்தில் ரிசர்வு வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டது. இக் காலத்தில்தான் கிராம வங்கிய விசாரணைக்குழு (1949-50) இந்திய அரசினரால் நியமிக்கப்பட்டது. இக் குழுவினர் செய்த பரிந்துரைகளில் சில:

(i) கூட்டுறவு வங்கிகள் நகர்ப்புறங்களிலிருந்து தம் நடவடிக் கைகளைக் கிராமப்புறங்களுக்கு எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

(ii) கூட்டுறவு வங்கிகள் உட்பட எல்லா வங்கிகளுக்கும் சிக்கன மான பணமனுப்புகை வசதிகள் (Remittance Facilities) ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

(iii) அந் நாளைய இம்பீரியல் வங்கி வங்கியக் கருவூலங்கள் (Banking Treasuries) உள்ள இடங்களிலிருந்து இவையில்லா இடங்களுக்கும் தனது கிளைகளை விரிவு படுத்தவேண்டும்.

ரிசர்வு வங்கி, 1951ஆம் ஆண்டு அலுவல் பற்றற்ற கூட்டுற வாளர்களையும், கூட்டுறவுத்துறை அலுவலர்களையும் கொண்ட அதிகாரமுறையில்லா மாநாடு (Informal Conference) ஒன்றைக் கூட்டி தான் கிராமக் கடன் துறையில் ஏற்கவேண்டிய பங்கு எப்படி அமைய வேண்டுமெனக் கலந்துரையாடிற்று. இதன் பயனாக, கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி கடனளிப்பதின்

செயல் முறைகளை எளிதாக்கிக் கடன் வசதிகளையும் விரிவு படுத்திற்று. ரிசர்வு வங்கி அனுமதிக்கும் கடன் வரம்பு (Credit Limit) அளவுக்குட்பட்டு எத்தனைமுறை வேண்டுமானாலும் கூட்டுறவு வங்கிகள் கடன் வாங்கலாம் என்ற வகையில் விதிகள் தளர்த்தப் பட்டன. கூட்டுறவு வங்கிய அமைப்பு நலிந்து நின்ற இடங்களிலும், இரண்டு நல்ல கையொப்பம் பெறமுடியாத இடங்களிலும், மாநில அரசின பொறுப்புறுதியின் பேரில் ரிசர்வு வங்கி விவசாயப் பருவ நடவடிக்கைகளுக்கும், விளைபொருள் சந்தையிடுகைக்கும் கடன்களை மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்க ஒப்பியது.

விவசாய நோக்கங்களுக்கும், விவசாயமற்ற நோக்கங்களுக்கும் கூட்டுறவு நிலையங்களுக்குக் கடன் வசதிகளையளிக்க வகை செய்யும் பொருட்டு, இந்திய ரிசர்வு வங்கிச் சட்டத்திற்கு 1951 முதல் 1953வரை சில திருத்தங்கள் செய்யப்பட்டன.

உண்மையான வாணிக அல்லது வியாபார நடவடிக்கைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட மாற்றுச்சீட்டு (Bill of Exchange) அல்லது கடனுறுதிச சீட்டு (Promissory Note) வாங்க, விற்க, மறுதள்ளுபடி செய்துதர ரிசர்வு வங்கி பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளுககுத் தந்துள்ள சலுகைகளனைத்தும் கூட்டுறவு வங்கிகளுககுப் பொருந்த பிரிவு 17 (2) (a)இன் திருத்தம் வகை செய்தது.

பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும், விளைபொருள் சந்தையிடுகைக்கும் தரப்படும் கடன் காலம் 9 திங்களிலிருந்து 15 திங்களுக்கு உயர்த்தப்பெற்றது. விவசாய நடவடிக்கைகள என்ற சொற்றொடருக்கு விரிவானதொரு பொருள் கொடுக்கப்பட்டதன் காரணமாக வேளாண்மையுடன் சேர்ந்த சில பக்குவப்படுத்தல் நடவடிக்கைகளுக்கும் கடன் வசதி கிட்டலாயிற்று. ரிசர்வு வங்கிச் சட்டப் பிரிவு 17 (2) (b)க்குச் செய்யப்பட்ட திருத்தம் இவ்வசதிகளைத் தந்தது.

மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரில் குடிசைத் தொழில்கள், சிற்றளவுத் தொழில்கள் ஆகியவற்றின் உற்பத்தி அல்லது சந்தையிடுகை நடவடிக்கைகளுக்கு 12 திங்களுக்கு மிகாத கடன் வசதியளிக்கும் பொருட்டு மாநிலக் கூட்டுறவு வங்கிகள் எழுதியளிக்கும் மாற்றுச்சீட்டு, கடனுறுதிச் சீட்டுக்களை வாங்க, விற்க, மறு தள்ளுபடி செய்துதர ரிசாவு வங்கி புதிதாகச் சேர்க்கப்பட்ட பிரிவு 17 (2) (bb)இன் படி அனுமதிக்கப்பட்டது.

மாநில அரசின் ஒப்புறுதியின் பேரில், 15 திங்களுக்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு மிகாத மத்திய காலக் கடன்களை, மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு விவசாய நோக்கங்களுக்கு ரிசர்வு வங்கி வழங்க பிரிவு 17 (4) (A) சேர்க்கப்பட்டது. இங்ஙனம் பெறும் கடன் குறிப்பிட்ட வங்கியின் சொந்த நிதியளவுக்கு மிகாமலும் எந்த நேரத்திலும் ரூ. 5 கோடிக்கு மிகாமலும் இருக்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

மேற்கண்ட நடவடிக்கைகளின் பயனாகக் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் கடனாகப் பெற்ற தொகை மிகப் பெருமளவுக்கு உயரலாயிற்று. 1947-48இல் மாநில வங்கிகள் பெற்ற கடன் ரூ. 17 இலட்சம் 1950-51இல் ரூ.538 இலட்சமாக வளர்ந்து 1955-56இல் ரூ. 2,561 இலட்சமாக உயர்ந்து 1958-59இல் ரூ. 7,902 இலட்சமாக மேலோங்கி நின்றது.

கூட்டுறவுக் கடன் நிலையங்களின் நடவடிக்கைகளையும், ரிசர்வு வங்கியின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் பொருட்டு 1951ஆம் ஆண்டில் ரிசர்வு வங்கி விவசாயக் கடன் ஆலோசனைக்குழு (Standing Advisory Committee on Agricultural Credit) ஒன்றை அமைத்தது. 1965இல் இக் குழு கிராமக் கூட்டுறவுக் கடன் ஆலோசனைக் குழு (Standing Advisory Committee on Rural and Co-operative Credit) என்ற புதுப் பெயர் பெற்றது. பெப்ரவரி 1970 முதல் இக் குழுவிற்குப் பதிலாக விவசாயக் கடன் அவை (Agricultural Credit Board) நிறுவப்பெற்றது.

ரிசர்வு வங்கி கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்பு கொண்டு செயலாற்றுவதில் மூன்றாவது கட்டமாக விளங்கிய காலம் 1954 முதல் 1969 வரையாகும். 1954இல் வெளியிடப்பட்ட அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழுவின் அறிக்கை இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் ஒரு மைல்கல் என அமைந்தது. வரலாற்றுச் சிறப்புபெற்ற இந்த அறிக்கை 'கூட்டுறவு தோல்வியடைந்தது; ஆனால், கூட்டுறவு வெற்றி பெறவேண்டும்' என்று முழங்கியது. விவசாயக் கடன் நிலையைப்பற்றி குழு குறிப்பிட்டது—'விவசாயக் கடன் தேவையான அளவுக்குக் கிட்டவில்லை; சரியான வகையில் அமையவில்லை. கடன் நோக்கம் நிறைவேறவில்லை; பல நேரம் சரியான மக்களுக்கும் போய்ச் சேரவில்லை' விவசாயி வாங்கியிருந்த கடனில் 3% அளவுக்கு மட்டுமே அரசினரும், கூட்டுறவு நிலையங்களும் வழங்கியிருந்தன. 70%க்கு மேலாக வட்டித் தொழிலரும் வியாபாரியும் வழங்கிய கடன்கள் காணப்பட்டன.

விசாரணைக் குழுவின் பரிந்துரைகளில் ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டமும் (Integrated Scheme of Rural Credit) ஒன்றாகும். இத் திட்டத்தின் முக்கிய கூறுகள்: (i) கூட்டுறவுக் கடன் நிலையங்களுக்குப் பங்கு முதல் வழங்குவதன்வழி அரசு கூட்டாளியாவது; (ii) கடனுடன் சந்தையிடுகை, பக்குவப்படுத்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளை முழுமையாக ஒருங்கிணைத்தல்; (iii) கிராம மக்களின் தேவைகளையுணர்ந்து செயல்பட பயிற்சி பெற்ற ஊழியர் வழியான நிருவாகம்.

மத்திய அரசினருடனும், மாநில அரசினருடனும் கூடிக் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களை வரைவதில் தீவிரமாகப் பங்கேற்று உதவும் பொறுப்பை விசாரணைக் குழு ரிசர்வு வங்கிக்கு அளித்தது. பல்வேறு நிலைகளிலுள்ள கூட்டுறவுக் கடன் நிலையங்களுக்குப் பங்கு முதல் வழங்க மாநில அரசுகளுக்கு ரிசர்வு வங்கி கடனளிக்க வேண்டுமென்றும், குறுகிய கால, மத்திய கால, நீண்ட காலக் கடன்களைக் கூட்டுறவுக் கடன் அமைப்பிற்கும் வழங்க வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இப் பணியினை மேற்கொள்ள இரண்டு நிதிகளை ரிசர்வு வங்கி சட்டமுறையாக ஏற்படுத்தியது.

தேசிய விவசாயக் கடன் (நீண்ட கால நடவடிக்கை நிதி) [National Agricultural Credit (Long-term operations) Fund]

மேற்காணும் நிதி, மாநில அரசுகளுக்கு, அவை கூட்டுறவுக் கடன் நிலையங்களில் பங்கு முதல் எடுக்கும் பொருட்டு, நீண்ட காலக் கடன் அளிக்க நிறுவப்பெற்றது. இக் கடன்களின் காலம் 20 ஆண்டுகளுக்கு மிகாது இருத்தல்வேண்டும். மற்றும் விவசாயத்திற்கும், அதைச் சார்ந்த நோக்கங்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு மிகாத மத்திய காலக் கடன் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கவும், மத்திய நிலவள வங்கிகளுக்கு இருபது ஆண்டுகளுக்கு மிகாத கடன்கள் அளிக்கவும், அவ் வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்களை வாங்கவும் இந்நிதி பயன்படுத்தப்படலாம். 1956இல் ரூ. 10 கோடியுடன் துவங்கப்பெற்ற இந்நிதி 1973 ஜூன் இறுதியில் ரூ. 239 கோடியாக வளர்ந்தது. இத் தொகையில் 1973 ஜூன் இறுதியில் ரூ. 66·41 கோடி மாநில அரசுகளுக்குக் கடனுக வழங்கப்பட்ட தொகையாக நிலுவை நின்றது; ரூ. 17·97 கோடி மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும், ரூ. 34·50 கோடி விவசாய மறுநிதிக் கூட்டுருவுக்கும் கடனுக வழங்கப்

பட்டிருந்த தொகையாக நிலுவை நின்றது. மத்திய நிலவள வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்களில் ரூ. 11·25 கோடி முதலீடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய விவசாயக் கடன் (நிலைபேருக்க) நிதி [National Agricultural Credit (Stabilisation) Fund]

வறட்சி, வெள்ளம், பஞ்சம் போன்ற இயற்கைக் கொடுமைகளால், பிரிவு 17(4)இன்கீழ் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்கள், பிரிவு 17(2)இன்படி மாநிலக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து வாங்கப்பெற்ற அல்லது மறு தள்ளுபடி செய்து தரப்பெற்ற மாற்றுச் சீட்டு, கடனுறுதிச் சீட்டுகளின் மீதான நிலுவைத் தொகை ஆகியவற்றைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் இக் கடன்களை ஐந்தாண்டுக்கு மிகாத மத்திய காலக் கடன்களாக மாற்றித்தர வகை செய்யும் பொருட்டு 1956இல் தேசிய விவசாயக் கடன் (நிலைபேருக்க) நிதி நிறுவப் பெற்றது. துவக்கத்தில் ரூ. 1 கோடியுடன் நிறுவப்பெற்ற இந்நிதி 1973 ஜூன் இறுதியில் ரூ. 85 கோடியாக வளர்ந்து நின்றது. 1973 ஜூன் இறுதியில் இந்நிதியிலிருந்து மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த கடனில் ரூ. 41·06 கோடி நிலுவையாக இருந்தது. 1971 - 72 இல் ரூ. 45 கோடி மட்டுமே கொண்டிருந்த இந் நிதிக்கு 1972–73 இல் ரூ. 40 கோடி கூடுதலாகச் சேர்க்கப்பட்டது. இதற்குக் காரணம் நாட்டின் பலப்பல பகுதிகளில் வறட்சிநிலை ஏற்பட்டுக் குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்படலானதேயாகும்.

தீவிர சாகுபடி மாவட்டத் திட்டங்களும், தீவிர சாகுபடி வட்டாரத் திட்டங்களும், உயர் ரக விளைச்சல் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு விவசாய உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் நாடு ஈடுபட்டுள்ள இன்றைய நிலையில் விவசாயக் கடன் பெருமளவுக்குத் தேவைப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவது ரிசர்வு வங்கியே.

நீண்ட காலக் கடன் துறையில் ரிசர்வு வங்கி, நிலவள வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்களைக் குறிப்பிட்ட ஓரளவுக்கே வாங்கியுதவிவந்தது. 1963 இல் ரிசர்வு வங்கி, விவசாய மறு நிதிக் கூட்டுரு என்னும் துணை நிறுவனத்தை நிறுவி நீண்ட காலக் கடன் வசதிகளை விரிவுபடுத்தியது. இதுபற்றி முன் அத்தியாயமொன்றில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

1956ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிசர்வு வங்கிச் சட்டம் பிரிவு 17(2) (bb) இன்கீழ் நிதி வசதிகளையளிக்க ரிசர்வு வங்கி ஒப்புக்கொண்டது. 1968–69இல் இந்நிதி வசதி மேலும் 22 வகை குடிசைத் தொழில், சிற்றளவுத் தொழில்களுக்கு அளிக்கப்படலாமென ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூட்டுறவுத் துறையில் ரிசர்வு வங்கி ஏற்றுள்ள பங்கினை ஆராய்வதில் நான்காவது கட்டமாகக் கருதப்பட வேண்டிய காலம் 1969இல் துவங்குகிறது. இந்த ஆண்டில்தான் அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு (All-India Rural Credit Review Committee) தனது அறிக்கையை வெளியிட்டது. திரு. வெங்கடப்பையா தலைமையில் இயங்கிய, ரிசர்வு வங்கியால் 1966இல் நியமிக்கப்பட்ட இக் குழு, கிராமக் கடன் துறையில் 1954 முதல், அதாவது அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழு தனது பரிந்துரைகளை யளித்ததிலிருந்து ஏற்பட்ட வளர்ச்சியின் அளவையும் போக்கையும் மறு மதிப்பீடு செய்யுமாறு பணிக்கப்பட்டது.

மறு ஆய்வுக் குழு, கூட்டுறவுக் கடன்துறை சீரமைப்புத் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்றும், இணைப்புத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் கூறிய அதே நேரத்தில், முயற்சிகளனைத்தையும் கூட்டுறவுத் துறையில் மட்டும் ஒருமுனைப்படுத்தாமல், பரந்து கிடக்கும் பிரச்சினையான விவசாயக் கடனைச் சமாளிக்க வாணிக வங்கிகள், அதிலும் சிறப்பாக நாட்டுடைமையாக்கப்பட்ட வாணிக வங்கிகள் விவசாயக் கடன் அளிப்பதில் தீவிரமாக ஈடுபடவேண்டுமென்றும் பரிந்துரைத்தது. இரு புதிய அமைப்புகளை உருவாக்கவும் மறு ஆய்வுக் குழு பரிந்துரைத்தது. ஒன்று, கிராம மின்னமைப்புக் கூட்டுரு (Rural Electrification Corporation) என்னுமோர் அமைப்பை உருவாக்கி அதன்வழி கிராம மின்னமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிதி வசதியை மின்சார வாரியங்களுக்கும், கிராம மின்சாரக் கூட்டுறவுகளுக்கும் அளிப்பது. மற்றொன்று சிறு விவசாயிகளின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான விவசாய உள்ளீடுகள், சேவைகள், கடன் வசதிகளை வழங்கச் சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை (Small Farmers Development Agency)யினை நிறுவுவது.

கூட்டுறவுக் கடன் அமைப்பு உறுதியாகவும் சீராகவும் அமைய ரிசர்வு வங்கி பல நடவடிக்கைகளை 1951முதல் மேற்கொண்டது. மாநில வங்கிகள் நிறுவப்பெற அல்லது வலுப்பெற மாநில

அரசினரின் உதவியை ரிசர்வு வங்கி நாடியது. மாவட்டத்திற்கொரு மத்திய வங்கி என்ற அடிப்படையில் மத்திய வங்கிகள் அமையுமாறு, தேவைப்படும் இடங்களில் மத்திய வங்கிகளை இணைக்கும்படி மாநில அரசினரை ரிசர்வு வங்கி வற்புறுத்தி வந்தது. தவணை கடந்த கடன்கள் நெடுங்காலமாகக் குவிந்து அதனால் செயலற்றுக்கிடந்த மத்திய வங்கிகளுக்குப் புது வாழ்வளிக்க ரிசர்வு வங்கி திட்டமொன்று தீட்டித் தவணை கடந்த கடன்களை வசூல் செய்யவும், வராக் கடன் காப்புத் தொகையைக் கூடுதலாக்கி, நிருவாக, மேற்பார்வை ஏற்பாடுகளைச் செம்மைப் படுத்தி மறுவாழ்வளிக்கும் திட்டம் சரிவரச் செயல்பட்டு வருகின்றதாவெனக் கவனிக்கவும் ரிசர்வு வங்கி பொறுப்பேற்றது.

பிரதம சங்கங்கள் வலுப்பெற்றுத் தன்னிறைவு நிலையடைந்து வளம்பெற ரிசர்வு வங்கி நல்ல பல யோசனைகளைத் தந்து உதவியது.

சொத்தின் அடிப்படையில் கடன் வழங்கிய காலம் மாறி உற்பத்தி நோக்கத்தையொட்டிக் கூட்டுறவுகள் கடன் வழங்கும் கொள்கையைப் பயிர்க் கடன் திட்டத் (Crop Loan System)தின் வழி ரிசர்வு வங்கி பரப்பியது. பயிரிடப்படும் பரப்பு, பயிருக்கேற்ற கடனளவு நிருணயிக்கப்பட்டு, இயன்றவரை கடனைப் பொருள் பகுதியாக வழங்கல்; பருவத்தே கடன் வழங்கிப் பருவத்தே சந்தை விடுகைச் சங்கங்கள்வழி கடனை வசூலித்தல் ஆகிய இத் திட்டத்தின் சிறப்புக் கூறுகள் என்பதை முன்னரே கண்டோம். மத்திய காலக் கடன் வழங்கலிலும் திருப்பிச் செலுத்துதிறனை மதிப்பிடல், கடன்களுக்குப் பிணைகள், கடன் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் முதலிய செய்திகள் குறித்து ரிசர்வு வங்கி வழிமுறைகளை நிருணயித்தது.

ஆந்திரப் பிரதேசம், ஹரியானா, மத்தியப் பிரதேசம், மைசூர் (கர்நாடகம்), உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மிகவும் நலிந்த நிலையிலிருந்தபடியால் ரிசர்வு வங்கியளிக்கும் தாராள நிதிவசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலைமையிலிருந்தன. இவ் வங்கிகளின் செயல் எல்லையிலுள்ள நல்ல முறையில் நடைபெற்றுவரும் பிரதம சங்கங்கள், உயர்நிதிய முகமைகளிலிருந்து விவசாயத் தேவைகளுக்குத் தொடர்ந்து கடன்பெறுவது நின்றுவிடாமலிருக்க, வாணிக வங்கிகளிடமிருந்தும் இவை கடன்பெறும் திட்டமொன்றை ரிசர்வு வங்கி வரைந்தது. தற்காலிக ஏற்பாடாக அமைந்துள்ள இத் திட்டம் 1970 முதல் சில மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது.

கூட்டுறவு ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் ரிசர்வு வங்கி பல ஏற்பாடுகளைச் செய்துள்ளது. 1954இல் இந்திய அரசுடன்கூடி மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் குழு வொன்றை அமைத்து அதன்வழி பிராந்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடங்களை நடத்திவந்தது. 1962இல் இப் பயிற்சிக் கூடங்கள் தேசியக் கூட்டுறவு ஒன்றியத்தின் நிருவாகத்திற்கு மாற்றப்பட்டன. கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை அலுவலருக்குப் பயிற்சிதர ரிசர்வு வங்கி பூனாவில் கூட்டுறவு வங்கியர் பயிற்சிக் கல்லூரி (Co-operative Bankers Training College) ஒன்றை நடத்தி வருகிறது. இக் கல்லூரியில் மாநில, மத்திய, நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை அலுவலர் பயிற்சிக்கு ஏற்பாடுகள் உள்ளன.

ரிசர்வு வங்கி அளிக்கும் நிதிவசதிகள்

ரிசர்வு வங்கி விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன்கள் வழங்குவதில்லை. குறுகியகால, மத்திய காலக் கடன்கள் கூட்டுறவுக் கட்டமைப்பின் உச்சி நிலையிலுள்ள மாநில வங்கிகளுக்கு வழங்கப்படுகின்றன. நீண்டகாலக் கடன்கள், மத்திய நிலவள வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்களை ரிசர்வு வங்கி வாங்குவதன்வழி, அளிக்கப்படுகின்றன.

விவசாயக் கடன்கள்

அ. பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும், விளைபொருளைச் சந்தையிலிடுதற்கும் குறுகிய காலக் கடன் வசதி:

இக் கடன் வசதி 15 திங்களுக்கு மிகாத காலத்திற்கு அளிக்கப்படுகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கி அல்லது பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கியொன்றின் கையொப்பமும் மற்றொரு நல்ல நபர் கையொப்பமுமுள்ள கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச் சீட்டை ரிசர்வு வங்கி வாங்கிக்கொண்டு அல்லது தள்ளுபடி செய்து கொடுத்துக் கடன் வசதியளிக்கும். மேற்கண்டவாறு விவசாய நோக்கத்திற்கே இவ் வசதியளிக்கப்படும். இக் கடன் ரிசர்வு வங்கிச் சட்டப் பிரிவு 17 (2) (b) இன்படி வழங்கப்படுகிறது. இச் சட்டப் பிரிவின்படி தகுதியுள்ள மாற்றுச் சீட்டு, கடனுறுதிச் சீட்டின் பிணையில் பேரில் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன் தர ரிசர்வு வங்கி பிரிவு 17 (4) (c)இன்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாநிலக் கூட்டுறவு வங்கி முதல் கையொப்பமும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இரண்டாம் கையொப்பமும் மேற்கண்ட ஆவணங்கள்மீது இடுவது வழக்கம். தணிக்கைப் பிரிவின்படி நிலேயம் 'A' அல்லது 'B' பிரிவில் வைக்கப்பட்டிருந்தால் கையொப்பம் நல்லது என ரிசர்வு வங்கியால் கருதப்படும். 'C' வகுப்பில் வைக்கப்பட்ட வங்கியாக இருப்பின், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் பரிந்துரைத்தால் மட்டுமே அதன் கையொப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். நல்ல கையொப்பமளிக்கும் வலிமையற்ற மத்திய வங்கிக்கு, மாநில அரசு பொறுப்புறுதியளித்தால், ரிசர்வு வங்கி, அவ்வகை மத்திய வங்கியின் சார்பாக மாநிலக் கூட்டுறவு வங்கிக்குப் பிரிவு 17 (4) (c)யின்கீழ் கடன் வழங்கும். மற்றும் அரசினர் பிணையங்கள், பொறுப்புரிமையர் பிணையங்களின் ஈட்டின் பேரில் ரிசர்வு வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும், விளைபொருள் சந்தையிடுகைக்கும் கடன் வரம்புகளை நிருணயிக்கும்போது, வழங்கக் கூடிய கடன் வசதியைக் கணக்கில் கொள்கிறது.

மத்தியக் கூட்டுறவு வங்கி ஒவ்வொன்றின் சார்பாகவும் குறுகிய காலக் கடன் வரம்பை ரிசர்வு வங்கி நிருணயிக்கின்றது. மத்திய வங்கியின் நிதி நிலேமை. அதன் தணிக்கைப் பிரிவு, அதன் சொந்த நிதி, கோரப்படும் கடனளவுக்குத் தவணை கடவாத கடன்களை ஈடாகக் காட்டும் திறன், கடன் வாங்கியோரிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை, அதன் கடன் வழங்கு திட்டம் ஆகிய செய்திகளை ஆராய்ந்தே கடன் வரம்பு நிருணயிக்கப் படுகிறது. தீவிரச் சாகுபடித் திட்டம், உயர்ரக வகைப் பயிர்த் திட்டம் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள மாவட்டங்களில் மத்திய வங்கிகளுக்குச் சில நிபந்தனைகளின் பேரில் கூடுதல் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. குறுகிய காலக் கடன் வசதிகள் சட்டமுறையாக 15 திங்கள்வரை அளிக்கப் படலாமெனினும் நடைமுறையில் எந்தப் பயிருக்கும் 12 திங்களுக்கு மேற்பட்ட கடன் தேவையில்லேயென்று காணப்பட்டது.

அண்மைக் காலத்தில் ரிசர்வு வங்கி விவசாய நோக்கங்களுக்கு அளிக்கும் குறுகிய கால நிதிவசதிகள் இரு முக்கிய நிபந்தனைகட்கு உட்பட்டுள்ளனவென்பது குறிப்பிடத் தக்கது. விவசாயக் கடன் வசதியளிக்கும் பொருட்டு ரிசர்வு வங்கி விரிவு படுத்தும் நாணயப் புழக்கம் சரியான முறையில் செயல்படவும், கடனைத் திரும்ப வசூலிப்பது எளிதாக அமையவும் இந் நிபந்தனைகள் உதவுகின்றன.

முதல் நிபந்தனை, 'தவணை கடவா ஈடு' (Non-overdue cover) காட்டுதல் என்றும், இரண்டாம் நிபந்தனை 'குறைந்த அளவு ஈடுபாடு' (Minimum Involvement) கொண்டிருத்தல் என்றும் குறிப்பிடப்படுகின்றது. முதல் நிபந்தனையின் சாரமாவது: மத்திய வங்கிக்கு ரிசர்வு வங்கி நிருணயித்துள்ள கடன்வரம்புக்குட்பட்டு அவ் வங்கி பெற்றுள்ள கடன் நிலுவைத் தொகைக்கு ஈடாக வேணும் சங்கங்கள் அந்த மத்திய வங்கிக்குத் தரவேண்டிய தவணை கடவா கடன் தொகை இருத்தல்வேண்டும். இவ்வகையான தவணை கடவாக் கடன் தொகையில் குறைவு ஏற்பட்டால் மத்தியக் கூட்டுறவு வங்கி தனக்கு அளிக்கப்பட்டுள்ள கடன் வரம்பின்மீது பணம் எடுக்க அனுமதிக்கப்படமாட்டாது. கடன் நிலுவையை உரியகாலத்தில் வசூலிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு இந் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தமது சொந்த நிதியினையும் விவசாயக் கடன் அளிப்பதற்குப் பயன்படுத்துதல் வேண்டுமென்று வற்புறுத்தும் வகையில் அமைவது 'குறைந்த அளவு ஈடுபாடு' என்னும் நிபந்தனையாகும். ரிசர்வு வங்கியிலிருந்து பெறும் கடன் நீங்கலாக, ஒவ்வொரு மத்திய வங்கியும் குறிப்பிட்ட ஓரளவு சொந்த நிதியினைக் குறுகிய காலக் கடன்கள் அளிக்கப் பயன்படுத்த வேண்டுமென ரிசர்வு வங்கி நிருணயம் செய்கின்றது. இத் தொகைக்குக் குறையாத அளவுக்கு மத்திய வங்கி தன் சொந்த நிதியிலிருந்து கடன்கள் வழங்கியிருந்தால்தான் ரிசர்வு வங்கியிலிருந்து கடன் கோர இயலும். மத்திய வங்கி, தனது சொந்த நிதியினைக் குறுகியகாலக் கடன்கள் வழங்கப் பயன்படுத்துமாறு தூண்டப்படுவது ஒருபுறமிருக்க, மற்றோர்புறம் தனது சொந்த நிதியைக் கடனளிக்கப் பயன்படுத்திவிடுவதால் தவணை கடவா ஈட்டுத் தொகை போதுமான அளவுக்கு வைத்திருக்கவும் (மத்திய வங்கி) இந் நிபந்தனையின்வழி தூண்டப்படுகிறது.

ரிசர்வு வங்கி மேற்கண்ட கடன் வசதிகளைச் சலுகையான வட்டிக்கு, அதாவது வங்கி வீதத்திற்கு 2% குறைவான வட்டிக்கு அளிக்கிறது. விவசாயிக்கு நியாயமான வட்டிக்குக் கடனளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடனே இக்குறைவான வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. அடுத்துக்காணும் அட்டவணை (பக். 472) ரிசர்வு வங்கி 1960-61 முதல் 1972-73வரை வழங்கிய குறுகிய காலக் கடன் பற்றிய விவரத்தைக் காட்டுகிறது.

அட்டவணை

பருவகால வேளாண்மை நடவடிக்கைகளுக்கும், விளைபொருள் சந்தையிடுகைக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சலுகை வட்டியின் பேரில் ரிசர்வு வங்கி வழங்கிய குறுகிய காலக் கடன் 1960 - 61 முதல் 1972 - 73 வரை

(ரூ. கோடியில்)

ஆண்டு	அனுமதித்த வரம்பு	பெற்ற கடன்	நிலுவை
1960 - 61 ...	111·79	142·91	100·88
1961 - 62 ...	138·18	154·22	115·20
1962 - 63 ...	163·94	199·72	124·28
1963 - 64 ...	186·21	238·18	146·54
1964 - 65 ...	199·86	253·33	150·51
1965 - 66 ...	212·66	260·36	143·67
1966 - 67 ...	257·50	292·20	185·38
1967 - 68 ...	314·15	364·89	137·17
1968 - 69 ...	337·52	411·15	183·09
1969 - 70 ...	370·16	425·09	214·11
1970 - 71 ...	390·11	424·49	188·84
1971 - 72 ...	394·04	468·51	152·08
1972 - 73 ...	415·38	596·67	144·91

ஆ. விவசாய நோக்கங்களுக்கு மத்திய காலக் கடன்:

ரிசர்வு வங்கிச் சட்டத்தின் பிரிவு 17 (4AA), பிரிவு 46A (2) (b) ஆகியவற்றின்படி மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு, 15 திங்களுக்குக் குறையாத 5 ஆண்டுகளுக்கு மிகாத, மத்திய காலக் கடன்களை ரிசர்வு வங்கி அளிக்கலாம். இக் கடன்களை அசலும் வட்டியுமாகச் சேர்த்துத் திருப்பிச் செலுத்த மாநில அரசினர் முழுமையாகப் பொறுப்புறுதியளிக்கின்றனர். துவக்கத்தில் ரிசர்வு வங்கி தனது பொது நிதியிலிருந்து இக் கடன்களை வழங்கி வந்தது. 1956 முதல் இக் கடன்கள் தேசிய விவசாயக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள்) நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கியின் சொந்த நிதிக்கு ஈடான தொகைக்கு மிகாது மத்திய காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. மத்திய வங்கியின் மத்திய கால நிதிவளம் கூடுதலாக இருப்பதைப் பொறுத்துச் சொந்த நிதி போன்று இரண்டு மடங்கு தொகை வரை கடன் கூடுதலாக அளிக்கப்படுவதுமுண்டு. குறுகிய காலக் கடன் அளிப்பதில் உள்ள தவணை கடவா ஈடு; 'குறைந்த அளவு ஈடுபாடு'

நிபந்தனைகள் மத்திய காலக் கடன்கள் அளிப்பதிலுமுண்டு. நிபந்தனைகளில் சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும், விளைபயிர் சந்தை யிடுகைக்கும், ரிசர்வு வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கும் மத்திய காலக் கடன்மீது வங்கி வீதத்திற்கும் 1½% குறைந்த வட்டியே விதிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், பக்குவப்படுத்தும் கூட்டுறவுகள் ஆகியவற்றில் விவ சாயிகள் பங்குகளை வாங்கும் பொருட்டு மாநிலக் கூட்டுறவு வங்கி களுக்கு அளிக்கப்படும் கடன்மீது வங்கி வீதம் (Bank rate) விதிக்கப்படுகிறது.

அட்டவணை

விவசாய நோக்கங்களுக்குச் சலுகை வட்டியில் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி அளித்த மத்திய காலக் கடன் 1960 - 61 முதல் 1972 - 73 வரை

(ரூ. கோடியில்)

ஆண்டு		அனுமதித்த வரம்பு	பெற்ற கடன்	நிலுவை நின்றது
1960 - 61	...	4·68	5·69	8·81
1961 - 62	...	9·56	7·39	11·67
1962 - 63	...	9·31	4·18	10·56
1963 - 64	...	14·01	7·45	13·00
1964 - 65	...	14·39	7·91	14·32
1965 - 66	...	14·11	7·45	14·96
1966 - 67	...	15·49	8·37	15·41
1967 - 68	...	16·57	9·12	16·47
1968 - 69	...	19·00	8·98	17·60
1969 - 70	...	18·30	11·48	20·45
1970 - 71	...	18·76	14·20	24·31
1971 - 72*	...	18·14	13·09	24·30
1972 - 73**	...	8·72	—	16·88

* 1971—72 புள்ளிவிவரம் டிசம்பர் 1972 வரையிருந்த நிலையைக் காட்டுகிறது.

** 1972—73 புள்ளிவிவரம் 1973 நாட்காட்டி ஆண்டு ஜூன் 1973 முடிய உள்ள நிலை.

விவசாய நோக்கங்களுக்காகச் சலுகை வட்டி வீதத்தில் ரிசர்வு வங்கி அளிக்கும் கடன்களை மாநிலக் கூட்டுறவு வங்கிகள் முழுமை யாகப் பயன்படுத்தும் பொருட்டு 1973 முதல் ரிசர்வு வங்கி, கடன் வரம்பை நாட்காட்டி ஆண்டு (Calender year) அடிப்படையில்

அனுமதிக்கலாயிற்று. 1971–72 ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட வரம்பு டிசம்பர் 1972 வரை பயன்படுத்தப்பட அனுமதிக்கப் பட்டது.

இ. மத்திய கால மாற்றல் கடன்கள் (Medium-term Conversion Loans)

வறட்சி, வெள்ளம், பஞ்சம் போன்ற இயற்கைக் காரணங் களால் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கப்பட்ட குறுகிய கால விவசாயக் கடன்களை மத்திய காலக் கடனாக மாற்றித் தருவதற்கு ரிசர்வு வங்கி ஏற்பாடுகளைச் செய்துள்ளது. தேசிய விவசாயக் கடன் (நிலைபேறுக்கம்) நிதியிலிருந்து வழங்கப்படும் இக் கடன்களை மாநில அரசினர் பொறுப்புறுதி செய்யவேண்டும். பயிர் விளைச்சல் இயல்பான அளவிற்குப் பாதிக்கும் குறைந்து சென்றாலும், அனாவாரி இயற்கைக் கொடுமைகள் காரணமாக 37 பைசாவிற்கும் குறைந்து சென்றாலும் இங்ஙனம் மாற்றல் நடவடிக்கை அனுமதிக்கப்படும். குறுகிய காலக் கடன்கள் திருப்பிச் செலுத்தல் விளைச்சலின்மையால் பாதிக்கப்பட்டால், அதில் 85% அளவுக்கு மட்டுமே உச்சி வங்கிகளும் ரிசர்வு வங்கியும் வைத்துள்ள நிலைபேறுக்க நிதிகளிலிருந்து உதவியாகக் கோரப் படலாம். மீதமுள்ள 15% மத்திய வங்கிகள் வைத்திருக்கும் நிலைபேறுக்க நிதிகளைக் கொண்டும், பிற நிதிகளைக் கொண்டும் சமாளிக்கப்படவேண்டும்.

1969ஆம் ஆண்டு முதல் மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வைத்திருக்கும் நிலைபேறுக்க நிதிகளை, இயற்கையின் சீற்றம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மத்திய கால விவசாயக் கடன் களுக்கு நிவாரணமளிக்கவும் பயன்படுத்தலாம் என்று ரிசர்வு வங்கி அனுமதித்துள்ளது.

1965–66இல் முதன்முதலாக ரூ. 4·82 கோடி மாற்றல் கடன்கள் (Conversion Loans) தேசிய விவசாயக் கடன் (நிலைபேறுக்க) நிதியிலிருந்து அளிக்கப்பட்டன. வங்கி வீதத்தை விட $1\frac{1}{2}$% குறைவான வட்டிக்கு அளிக்கப்படும் இம் மாற்றல் கடன்கள் தொகை 1971–72இல் ரூ. 31·39 கோடியாகவும் 1972–73 இல் ரூ. 48·85 கோடியாகவும் இருந்தது.

ஈ. விவசாயத்திற்கு நீண்ட காலக் கடன்

மத்திய நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங் களை வாங்கிக் கொள்ளுவதன்வழி ரிசர்வு வங்கி விவசாயத்திற்கு நீண்ட காலக் கடன் வசதிகளையளிக்கின்றது. நிலவள வங்கிகள்

வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் சாதாரண கடனீட்டுப் பத்திரங்களென்றும், கிராமியக் கடனீட்டுப் பத்திரங்கள் (Rural Debentures) என்றும் இருவகைப்படும்.

ரிசர்வு வங்கியும், அனைத்திந்திய நிலவள வங்கிகளின் ஒன்றியமும் சேர்ந்து ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படவிருக்கும் கடனீட்டுப் பத்திரத் திட்டத்தை முடிவு செய்து அதனை ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, இந்திய ஸ்டேட் வங்கி, வாணிக வங்கிகள், மாநில, மத்திய அரசுகள் ஆகியோரடங்கிய குழுவினர் முன்வைத்து அவரவர் எந்த அளவுக்கு இப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளுவர் என்று பேசி முடிக்கின்றனர். கடனீட்டுப் பத்திரங்களை விற்றுப் பெறும் தொகையில் 90% விவசாய உற்பத்தி நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுமாறு கடன் அளிக்கப்படவேண்டும்; இதிலும் 70%-க்குக் குறையாத தொகை எளிதில் கண்டறியக்கூடிய புதுக் கிணறு தோண்டல், நீரேற்றுக் கருவி அமைத்தல், டிராக்டர் வாங்கல் போன்ற இனங்களுக்கு நீண்ட காலக் கடனுக அளிக்கப்படவேண்டும் என்பது போன்ற நிபந்தனைகளிருப்பதால் இப் பத்திரங்கள் எளிதில் வாங்கிக் கொள்ளப்படுகின்றன. 1972-73இல் நிலவள வங்கிகள் ரூ. 96·48 கோடி மதிப்புள்ள கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டன.

1957 இல் ரிசர்வு வங்கி கிராமியக் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடும் திட்டமொன்றை உருவாக்கியது. ஒவ்வொரு வெளியீட்டிலும் இரு பகுதிகள் உண்டு. ஒரு பகுதி 15 ஆண்டுக் கடனீட்டுப் பத்திரங்களாகும்; இவையனைத்தையும் ரிசர்வு வங்கி வாங்கிக் கொள்ளுகிறது. மற்றப் பகுதி 7 ஆண்டுக் கடனீட்டுப் பத்திரங்களாகும். இப் பகுதிப் பத்திரங்களில் 8/15 அளவினை ரிசர்வு வங்கி வாங்கிக் கொள்ளுகிறது. மீதம் கிராம மக்கள் வாங்கிக் கொள்ளுவர் என எதிர்பார்க்கப்பட்டது. 1971 ஜூன் இறுதிவரை ரிசர்வு வங்கி ரூ. 8·59 கோடி மதிப்புள்ள கிராமியக் கடனீட்டுப் பத்திரங்களை வாங்கியிருந்தது.

உ. மாநில அரசுகளுக்கு நீண்ட காலக் கடன்கள்

கூட்டுறவுக் கடன் நிலையங்களின் பங்கு முதலுக்குப் பணம் வழங்க மாநில அரசுகளுக்கு உதவும்பொருட்டு ரிசர்வு வங்கி தேசீய விவசாயக் கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதியிலிருந்து நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகிறது. 1969-70 இலிருந்து மாவட்ட, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், பிரதம விவசாயக் கடன் சங்கங்கள், மத்திய நிலவள வங்கிகள் ஆகியவற்றின் பங்கு முதலுக்கு மட்டுமல்லாது பிரதம நிலவள வங்கிகள், நகரக்

கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் பங்கு முதலுக்கும் மாநில அரசுகள் தொகை வழங்க, கடன்கள் அளிக்கப்படுகின்றன. மாநில அரசினருக்கு வழங்கப்படும் இக் கடன்கள் பொதுவாகப் பன்னிரண்டு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். 1972-73 நிதியாண்டுவரை மாநில அரசுகளுக்கு இந்த இனத்தில் வழங்கப்பெற்று நிலுவை நின்ற கடன் ரூ. 65·55 கோடியாக இருந்தது.

விவசாயம் சாராத கடன் வசதிகள்

I. குடிசைத் தொழில், சிற்றளவுத் தொழில்கள் ஆகியவற்றின் உற்பத்தி, சந்தையிடுகை நடவடிக்கைகளுக்குக் குறுகிய காலக் கடன்கள்

நெசவாளர் கூட்டுறவுகளுக்குக் கடன் வசதி அளிக்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும், உச்சி நெசவாளர் சங்கத்திற்குக் கடன் வசதியளிக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் ரிசர்வு வங்கி பிரிவு 17(2) (bb)யின் கீழ் கடன் வழங்குகிறது. மத்திய வங்கியின் சொந்த முதலுக்கு ஈடான தொகையும், உச்சி சங்கத்தின் செலுத்திய முதல், சட்டமுறை காப்புநிதி ஆகியவற்றைப் போன்று மூன்று மடங்களவுக்கு ஈடான தொகையும் ரிசர்வு வங்கி கடனாக அளிக்கக் கூடிய உச்ச வரம்பு தொகையாகும். 1965-66இல் சங்கமொன்று உற்பத்தி, விற்பனை செய்த தொகையையொட்டிக் கடன் வரம்பு நிருணயிக்கப்படுகிறது. இக் கடன் வங்கி வீதத்திற்கு $1\frac{1}{2}$% குறைவான வட்டிக்கு அளிக்கப்படுகிறது.

1968-69 முதல், குறிப்பிட்ட 22 குடிசை சிற்றளவுத் தொழில்களுக்குப் பிரிவு 17(2) (bb) பிரிவு 17(4) (c)இன்கீழ் வங்கி வீதத்திற்குக் கடன் வசதிகளைக் கூட்டுறவு வங்கிகள்வழி ரிசர்வு வங்கி வழங்குகிறது. மேற்கூறிய தொழிற் கடன்களையளிக்கும் நகர கூட்டுறவு வங்கிகள் மாநிலக் கூட்டுறவு வங்கிகள்வழி ரிசர்வு வங்கியிடமிருந்து மறுநிதிய (Refinance) வசதிகள் பெறலாம்.

கைத்தறித் துணிகள் உற்பத்தி, சந்தையிடுகைக்கு 1971-72இல் அனுமதிக்கப்பட்ட கடனளவு ரூ. 12·76 கோடியாகவும், 1972-73இல் ரூ. 13·99 கோடியாகவும் இருந்தது. பிறவகை குடிசை, சிற்றளவுத் தொழில்களுக்கு 1971-72இல் அனுமதிக்கப்பட்ட கடனளவு ரூ. 86 இலட்சமாகவும் 1972-73இல் ரூ. 56 இலட்சமாகவும் இருந்தது.

II. வியாபாரத் தேவைகளுக்குக் குறுகிய காலக் கடன்

உச்சி நெசவாளர் சங்கங்கள் நூல் வியாபாரத்தில் ஈடுபடப் பிரிவு 17(2) (a)இன்கீழ் ரிசர்வு வங்கியிடம் கடன் பெறுகின்றன. 90 நாட்களுக்கு மிகாத மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்து மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் கடன் பெற்று உச்சி நெசவாளர் கூட்டுறவுகளுக்கு அதை வழங்குகிறது. 1971-72இல் ரிசர்வு வங்கி இந்த வகையில் அனுமதித்த கடனளவு ரூ. 97 இலட்சமாக இருந்தது; 1972-73இல் ரூ. 92 இலட்சமாக இருந்தது. ஆனால், இந்த அனுமதிக்கப்பட்ட அளவில் முறையே ரூ. 14 இலட்சம், ரூ. 9 இலட்சம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

III. கூட்டுறவுகளுக்கு வழங்கற் கடன் (Distribution Credit for Co-operatives)

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் உர வியாபாரத்தைப் பெருமளவில் மேற்கொண்டுள்ள இந் நாளில் பெருமளவு கடன் வசதிகள் அவற்றிற்குத் தேவைப்படுகின்றன. மாநிலச் சந்தையிடுகைச் சங்கங்கள் இவ் வியாபாரத்தை மேற்கொண்டுள்ள இடங்களில் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி பிரிவு 17 (4) (c) இன்கீழ் உதவியளிக்கிறது. பிரதம சந்தையிடுகைச் சங்கங்களுக்கு இந்த வகையில் தேவைப்படும் உதவி மத்தியக் கூட்டுறவு வங்கிகள்வழி பெறப்படலாம். உர இருப்பின் ஈட்டின் பேரில் 10% இடைவெளி வைத்துக்கொண்டு மாநிலக் கூட்டுறவு வங்கி கடன் வசதிகளையளிக்கிறது. கடன் பெற்ற நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் திருப்பியளிக்கப்பட வேண்டும். 1971ஆம் ஆண்டு இந்த இனத்திற்கு ரூ. 24·75 கோடி கடன் அனுமதிக்கப்பட்டது. வங்கி வீத அளவிற்கே வட்டி விதிக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு முதல் வங்கி வீதத்துடன் கூடுதலாக 2% வட்டி விதிக்கப்படலாயிற்று. 1972இல் அனுமதிக்கப்பட்ட கடனளவு ரூ. 14·75 கோடியாக இருந்தது.

கூட்டுறவு வங்கிகளை ஆய்வு செய்தல்—சட்டமுறையாகக் கட்டுப்படுத்தல்

மாநிலக் கூட்டுறவு வங்கிகளையும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மத்திய நிலவள வங்கிகளையும் அவற்றின் ஒப்புதல் பெற்று 1952 முதல் ரிசர்வு வங்கி காலமுறைப்படி ஆய்வு செய்து வந்தது. தேவைப்பட்டபோது உச்சிச் சந்தையிடுகைக் கூட்டிணைப்புகளையும், மாநிலக் கைத்தறி நெசவாளர் சங்கங்களையும் ஆய்வு செய்து வந்தது. ஆய்வின்போது காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்

காட்டி அவற்றைக் காலத்தில் திருத்த ரிசர்வு வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதுண்டு. மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்வழி ஆய்வு அறிக்கைகள் அனுப்பப்பெற்று அவர்வழி சில திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுமுண்டு.

1965ஆம் ஆண்டு முதல் வங்கியச் சட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருந்துவனவாகச் சட்டமியற்றப்பட்டதால், ரிசர்வு வங்கி மேற்கொள்ளும் ஆய்வு சட்டமுறையான ஆய்வாக அமைந்துள்ளது. இதுமுதல் ஆய்வறிக்கை தொடர்புற்ற மத்திய வங்கிக்கு நேரடியாக அனுப்பப்படுகிறது; மாநில வங்கிக்கும் பதிவாளருக்கும் நகல் அனுப்பப்படுகிறது.

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின்படி வாணிக வங்கிகளை ரிசர்வு வங்கி எங்ஙனம் கட்டுப்படுத்தி வந்ததோ அதே வகையான கட்டுப்பாட்டுக்குள் கூட்டுறவு வங்கிகளும் 1966 மார்ச்சு முதல் வந்துள்ளன. மாநிலக் கூட்டுறவு வங்கிகள் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் என்ற தகுதியைப் பெறலாயின. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் (1949) பிரிவுகள் சிலவும், இந்திய ரிசர்வு வங்கிச் சட்டத்தின் (1934) பிரிவுகள் சிலவும் மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், செலுத்திய முதலும் காப்பு நிதிகளும் சேர்ந்த ரூபா ஓர் இலட்சத்திற்கு மேலுள்ள வங்கியத் தொழிலில் ஈடுபட்டுள்ள (விவசாயத் தொடர்பற்ற கடன் சங்கங்கள் எனப்படும்) பிரதம கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிற்குப் பொருந்துவதாயிற்று.

கூட்டுறவு வங்கிகள் மேற்கூறிய சட்டங்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது காரணமாகச் சில முக்கிய விதிமுறைகளை அவை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. எல்லாக் கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வு வங்கியிடம் உரிமம் (Iicence) கோரி விண்ணப்பிக்க வேண்டும். மாநிலக் கூட்டுறவு வங்கிகள் தமது கேட்பு தவணைப் பொறுப்புகளில் குறைந்தது 3% தொகையை ரிசர்வு வங்கியிடம் வைத்திருக்கவேண்டும். பிற கூட்டுறவு வங்கிகள் தத்தம் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் குறைந்தது 3% தொகையைத் தம்மிடமோ அல்லது நடப்புக் கணக்கில் உயர் நிதிய முகமைகளிடமோ வைத்திருக்கவேண்டும். எல்லாக் கூட்டுறவு வங்கிகளும் தமது கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 25% அளவு தொகைக்கு எளிவரல் சொத்துகள் (Liquid assets) வைத்திருக்கவேண்டும். மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தமது செயல் எல்லைக்குள் கிளைகள் திறக்க ரிசர்வு வங்கியின் அனுமதியைப் பெற வேண்டுவதில்லை. பிற கூட்டுறவு வங்கிகள் ரிசர்வு வங்கியின் அனுமதி பெற்றே கிளைகளைத் திறக்கலாம்.

வைப்புக் காப்பீட்டுக் கூட்டுருச் சட்டத் (Deposit Insurance Corporation Act)தின்கீழ் அளிக்கப்படும் நன்மைகள் கூட்டுறவு வங்கிகளுக்கும்கி ட்டுமாறு அச் சட்டம் 1968இல் திருத்தப்பட்டது. மாநில அரசினர் தத்தம் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தைத் திருத்தினுல் வைப்புக் காப்பீடு கூட்டுறவு வங்கிகளுக்குக் கிட்டும். மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், ஆந்திரப் பிரதேசம், கோவா, டாமன், டையூ யூனியன் பரப்பு ஆகிய பகுதிகளில் கூட்டுறவுச் சட்டங்கள் திருத்தப்பட்டதன்வழி அங்குள்ள கூட்டுறவு வங்கிகள் வைப்புக் காப்பீட்டின் பயனையடைய வகை செய்யப் பட்டுள்ளது.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியில் ரிசர்வு வங்கியின் பங்கு மிகப் பெரியது என்பதை எவரும் மறுக்க இயலாது. குறிப்பாக, நாடு விடுதலையடைந்த பின்னர் கிராமக் கடன் வசதிகளைப் பெருக்கி விவசாய வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு தரும் தூண் போன்று விளங்கி வருவது பாராட்டத் தக்கது. கூட்டுறவுக் கடன் நிலையங்கள் வலுப்பெற்று தம் கால்களின்மீது தாம் நிற்கும் நிலையையடைய வேண்டுமென ரிசர்வு வங்கி பல முயற்சிகளை மேற் கொண்டு வருவதும் உண்மையே. ஆனுல், கூட்டுறவுக் கடன் நிலையங்கள் ரிசர்வு வங்கியைப் பெரிதும் நம்பியிருக்கும் நிலை இன்ன மும் மாருதிருப்பது வேதனையளிக்கும் செய்தியே. கூட்டுறவுக் கடன் நிலையங்கள் வைப்புகளை ஈர்த்துத் தம் முயற்சிவழி நிதிவசதிகளைத் திரட்டுவதை விடுத்து ரிசர்வு வங்கியிடமிருந்து கடன் வாங்கி அத் தொகையை விவசாயிகளுக்குக் கடனுக அளிப்பதோடு நின்று விடுவது நல்லதல்ல. அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழுவினரும், கூட்டுறவு வங்கிகள் வைப்புகள் திரட்டுவதை ஊக்கத்துடன் மேற்கொள்ளும் வகையில், ரிசர்வு வங்கி சலுகை வட்டி விகிதத்தில் கடனளிக்கும் திட்டத்தைப் படிப்படியாக மாற்றியமைக்கும்படி பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையுடன் வேருெரு ரிசர்வு வங்கியின் ஆய்வுக் குழுவின் பரிந்துரையினையும் கருத்தில் கொண்டு விவசாயக் கடன் அவை (Agricultural Credit Board) 1973 ஜூலை முதல் ரிசர்வு வங்கியின் கடனளிப்பில் புதிய தொரு கொள்கையை உருவாக்கியுள்ளது.

ஜூலை 1973இல் செயல்படுத்தப்பட்டுள்ள கடனளிப்புக் கொள்கையைப் பற்றிய சில முக்கிய செய்திகளைக் காண்போம்:

(i) பருவ கால விவசாய நடவடிக்கைகளுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சார்பாக மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி, வங்கி வீதத்திற்கு $\frac{1}{2}$% குறை வான வட்டிக்குக் கடன் வசதியளிக்கும்.

(ii) ஜூன் 1973இல் முடிவுற்ற மூன்று ஆண்டுகளுக்குள் ரிசர்வு வங்கியிடம் வாங்கியிருந்த உச்ச அளவு கடன் அடிமட்ட (base level)க் கடன் எனக் கொள்ளப்பட்டு அந்த அளவுவரை வாங்கும் கடன்கள்மீது $1\frac{1}{2}$% வட்டி தள்ளுபடி செய்து தரப்படும்.

(iii) அடிமட்ட ஆண்டில் இருந்ததற்கு மேலாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தம் நிதியைக்கொண்டு கூடுதலாகக் கொடுத்த குறுகிய கால விவசாயக் கடன்களைப் போன்று இருமடங்கு கூடுதல் கடன்மீதும் அல்லது சிறு விவசாயிகளுக்குக் கொடுக்கும் கூடுதல் கடன் முழு அளவுக்கும் வட்டிமீது $1\frac{1}{2}$% தள்ளுபடி தரப்படும்.

(iv) வைப்புகள் திரட்டியதன் காரணமாக ரிசர்வு வங்கியிடம் வாங்கும் கடனளவு குறைந்தால் மத்திய வங்கி சொந்த முயற்சியால் ஈடுபடுத்திய தொகையைப் போன்று நான்கு மடங்கு தொகைக்குச் சிறப்புச் சலுகை தள்ளுபடியாக $1\frac{1}{2}$%அளிக்கப்படும்.

(v) ஒரு கோடி ரூபா நடவடிக்கைக்கும் குறைவாகவுள்ள நலிந்த வளமற்ற மத்திய வங்கிகள் மேற்கண்ட திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பெறும்.

மேற்கண்ட முறையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வைப்புகளைத் திரட்டுமாறும், ரிசர்வு வங்கியிடமிருந்து சலுகை விகித வட்டியில் கடன்பெற பல நிபந்தனைகளை நிறைவு செய்யுமாறும் வேண்டப்படுவதன்வழி ரிசர்வு வங்கி கூட்டுறவு கடனளிப்பில் புதியதொரு திருப்பத்தை உண்டாக்கியிருக்கிறது.

சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை (Small Farmers Development Agency) கடைநிலை விவசாயிகள்—விவசாயத் தொழிலாளிகள் முகமை (Marginal Farmers and Agricultural Labourers Agency)

அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு செய்த பரிந்துரைகளின் பேரில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமும், கடைநிலை விவசாயிகள்—விவசாயக் கூலிகள் மேம்பாட்டுத் திட்டமும் மத்தியத்துறைத் திட்டங்களாக 1970–71இல் மேற்கொள்ளப்பட்டன. நான்காம் திட்ட காலத்தில் இத் திட்டங்களுக்கு ரூ. 115 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சமுதாயத்தில் வலிவற்ற வகுப்பினராக விளங்குவோருக்கு உதவும்

பொருட்டு இத் திட்டங்கள் வரையப்பெற்றன. நாட்டில் செயல் படுத்தப்பட்ட பல வளர்ச்சித் திட்டங்கள் பல காரணங்களால் சிறு விவசாயிகளுக்குப் பெருமளவு பயனேதும் அளிக்காது போனமையால் இவர்களுக்கெனச் சிறப்பான திட்டங்கள் தீட்டப் பெற்றன. மாபெரும் விவசாய வளர்ச்சித் திட்டங்களை வகுக்கும் போது விவசாயத்தின் முதுகெலும்பாக உள்ள சிறு விவசாயியின் நலத்தைக் கருத்தில் கொள்ளாதுவிட்டால் பின்னர் விளைவுகள் விபரீதமாக முடியக்கூடும். இதனால் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மேலும் வளரும். இந்தநிலை ஏற்படாமலிருக்கவே அரசு மேற்கூறிய திட்டங்களை வகுத்தது.

சிறு விவசாயி யார்?

கடன்வசதி உட்பட தேவையான விவசாய உள்ளீடுகளை (inputs) அளித்து, தற்கால தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த உதவினால், உபரியாக உற்பத்தி செய்து வளம் பெறக்கூடிய நிலையிலுள்ள விவசாயியே சிறு விவசாயியாவார். தக்க பாசன வசதி, விவசாய உள்ளீடுகள் அளிப்பு, டிராக்டர் உழுதல், தொழில்நுட்ப உதவி போன்ற சேவைகள் முதலிய அளிக்கப் பட்டால் கால்நடை பராமரிப்புப் போன்ற துணை நடவடிக்கை களிலும் ஈடுபட்டு வளம்பெறும் வாய்ப்புள்ள விவசாயியைத்தான் சிறு விவசாயி என்று கருதுகின்றனர். சிறு விவசாயியைப்பற்றி இதுவரை பல ஆராய்ச்சிகள்வழி சேகரிக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

(1) நம் நாட்டில் மிகப் பெருமளவு சிறு விவசாயிகள் உள்ளனர்.

(2) இவர்களில் 70% ஐந்து ஏக்கர் நிலத்துக்கும் குறைவாக வும் 40% இரண்டு ஏக்கர் நிலத்திற்கும் குறைவாகவும் கொண்டுள்ளனர்.

(3) குத்தகைதாரர்களில் பெரும்பகுதி சிறு விவசாயிகளே.

(4) புதிய விவசாயமுறைகளைக் கடைப்பிடிப்பதில் பெரு விவசாயிகள் காட்டும் ஈடுபாட்டைச் சிறு விவசாயிகளும் காட்டுகின்றனர்.

(5) சிறு விவசாயிகள் கூலியாட்களை அமர்த்திக்கொள்ளுவது குறைவாகக் காணப்படுகிறது.

(6) நிலப் பகிர்வு சமமாக அமையவில்லை.

(7) இவர்களிடம் சொந்தமாகக் கால்நடை, விவசாயக் கருவிகள் அதிகம் இருப்பதில்லை.

(8) இவர்கள் கூட்டுறவுக் கடன் வசதிகளை எளிதில்பெற முடிவதில்லை.

(9) தம் விளைபொருளை இவர்கள் கூட்டுறவுகள்வழி விற்பது குறைவு.

(10) பயிர்வழி கிடைக்கும் வருவாய் அல்லாது கூலிக்கு உழைப்பதன் வழியே இவர்கள் மேலும் வருமானம் ஈட்டுகின்றனர்.

(11) நிலத்தின்மீது மூலதனச் செலவு செய்ய வகையற்ற நிலையில் இவர்களில் பெரும்பாலோருள்ளனர்.

சிறு விவசாயிகள் தேவைப்படுமளவுக்கு நிலத்தைப் பிணையாகக் காட்ட முடியாத நிலையிலுள்ளனர். குத்தகைதாரர்களுக்குக் கடனளிப்பதில் பெரும் தயக்கம் இன்றும் காணப்படுகிறது. பிணைக்கடன் (ஜாமீன் கடன்) உச்ச அளவு மிகவும் குறைவானதாக உள்ளது. இவர்களுக்கு நிலத்தின்மீது உள்ள உரிமையைத் தெளிவுபடக் காட்ட ஆவணங்கள் எளிதில் கிடைப்பதில்லை. இது போன்ற பலப்பல காரணங்களால் இவர்களுக்குக் கடன்வசதிகள் சரிவர கிட்டுவதில்லை. மற்றும் விவசாயத் தேவைகளான உரம், விதை, நீர்ப்பாசனம் முதலிய இவர்களுக்குச் சரிவர கிடைப்பதில்லை. அரசு அலுவலர்களையணுகி பல்வேறு சான்றிதழ்களையும் ஆவணங்களையும் எளிதின்பெற முடிவதில்லை. விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்பதிலும் பல இன்னல்களுண்டு. இந்த நிலையை மாற்றவே இந்திய அரசு 46 சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமைகளையும் 41 கடைநிலை விவசாயிகள்—விவசாயத் தொழிலாளிகள் முகமைகளையும் நிறுவியது.

இம் முகமைகள் சிறு விவசாயிகளின் தேவைகளை ஆராய்ந்தறிந்து அவர்கள் மேம்பாட்டுக்கான திட்டங்களைத் தாமே அல்லது பிற நிலையங்கள்வழி மேற்கொள்ளும். விவசாய உள்ளீடுகள் அனைத்தையும் தேவையான நேரத்தில் தேவையான அளவுக்கு வழங்க முகமைகள் ஏற்பாடு செய்யும். டிராக்டர் வாடகைக்கு எடுத்தல், மருந்து தெளித்தல், நிலத்தைச் சமப்படுத்தல் போன்ற சேவைகளையும் முகமைகள் ஏற்பாடு செய்யும். பால்பண்ணை, கோழிப்பண்ணை, ஆட்டுப்பண்ணை முதலிய நடவடிக்கைகளைச் சிறு விவசாயிகள் மேற்கொள்ளவும் இம் முகமைகள் உதவும். குறுகிய கால, மத்திய கால, நீண்ட காலக் கடன்களைச் சிறு விவசாயிகளுக்குக் கூட்டுறவுகள்வழி யளிக்க முகமை ஏற்பாடு செய்யும். இதனால் கூட்டுறவுகள் நட்டம் வருமோ என்று தயங்காதிருக்க நட்ட நிதியொன்று பிரதமக்

கடன் சங்க அளவிலும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியளவிலும், நிலவள வங்கி அளவிலும் ஏற்படுத்த மானியங்களை முகமை வழங்கும். மற்றும் இத் திட்டத்தைச் செயல்படுத்த நியமிக்கப்படும் தொழில் நுட்ப, மேற்பார்வை அலுவலர்களுக்கான செலவுக்கு முகமை மானியங்களை வழங்கும் இத் திட்டங்களின் செயற்பாட்டில் ரிசர்வு வங்கி பெரும் ஈடுபாடு காட்டி வருகிறது.

கூட்டுறவு ஆண்டு 1971 - 72 முதல் 46 சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமைகளும், 41 கடைநிலை விவசாயிகள் - விவசாயத் தொழிலாளிகள் முகமைகளும் குறிப்பிடத்தக்க முறையில் செயலாற்றி வருகின்றன. 1973 மார்ச்சு இறுதியில் சிறு விவசாயிகள் 23·66 இலட்சம் பேரும், கடைநிலை விவசாயிகள் - விவசாயத் தொழிலாளிகள் 11·27 இலட்சம் பேரும் இத் திட்டங்களின்படி பயன்பெறத் தகுதியுள்ளவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் கூட்டுறவுகளில் உறுப்பினர்களானவர்களின் எண்ணிக்கை முறையே 11·40 இலட்சம், 3·55 இலட்சமாக இருந்தது.

சிறு விவசாயிகள் திட்டத்தின்கீழ் கூட்டுறவுகளும், வாணிக வங்கிகளும் சேர்ந்து ரூ. 49·43 கோடி கடன்களும், கடைநிலை விவசாயிகள் திட்டத்தின்கீழ் ரூ. 9·36 கோடி கடன்களும் அளித்திருந்தன. இத் திட்டங்களில் நீர்ப்பாசன வசதிகள் முக்கிய இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 1973 மார்ச்சு முடிய 74,220 குழாய்க் கிணறுகள்/தோண்டு கிணறுகள் அமைக்கப்பட்டன. நீரேற்றுப் பொறிகள் (Pumpsets) 19,517 அமைக்கப்பட்டன. கறவை மாடுகள் 41,358 இத் திட்டங்களின்கீழ் வாங்கப்பட்டன. 1,08,661 கிராம மராமத்துப் பணிகள் இத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ரிசர்வு வங்கி, கூட்டுறவு வங்கிகள் சிறு விவசாயிகளுக்குக் கடனளிப்பதை உறுதிப்படுத்த சில நடைமுறை விதிகளை வகுத்துள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உச்ச வங்கியிடமிருந்து பெற்றுச் சங்கங்களுக்கு அளித்த வகையில் நிலுவை நிற்கும் கடன் அளவில் 20%க்குக் குறையாத தொகை, சிறு விவசாயிகளுக்கும், பொருளாதார நோக்கில் நலிவுற்ற விவசாயிகளுக்கும் அளிக்கப்பட்டிருத்தல்வேண்டும். நிலவள வங்கிகள் 1973 – 74இல் அளிக்கும் கடன்களில் குறைந்தது 20% சிறு விவசாயிகளுக்குச் சேரவேண்டுமென்றும் ரிசர்வு வங்கி அறிவுரை வழங்கியுள்ளது.

ரிசர்வு வங்கியும் கூட்டுறவு வங்கியமும்

இவ்வத்தியாயத்தை முடிக்குமுன் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வு வங்கியின் கண்காணிப்பில் 1972 - 73இல் இருந்த நிலையைக் காண்போம். 1973 மார்ச்சு இறுதியில் 5,841 கூட்டுறவு வங்கிகளின் அலுவலகங்களிருந்தன. இவற்றில் 208 மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் அலுவலகங்களாகவும், 4,516 மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் அலுவலகங்களாகவும், 1,117 பிரதம கூட்டுறவு வங்கிகளின் அலுவலகங்களாகவுமிருந்தன.

1973 ஜூன் இறுதியில் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்துக்கு உட்பட்டு 1,383 கூட்டுறவு வங்கிகள் - 28 மாநில, 367 மத்திய, 988 பிரதம வங்கிகள் செயலாற்றி வந்தன.

வைப்புக் காப்பீட்டுக் கூட்டுருவின் திட்டத்தின் பயனையடைய ஜம்மு—காஷ்மீர் மாநிலமும், டெல்லி யூனியன் பரப்பும் தத்தம் கூட்டுறவுச் சட்டங்களைத் திருத்தின. இத் திருத்தம் அந்த மாநிலம், யூனியன் பரப்பிலுள்ள கூட்டுறவு வங்கிகள் தமது வைப்புகளைக் காப்பீடு செய்ய வழி வகுக்கின்றது.

1969–70 முதல் 1971-72 வரை கூட்டுறவுக் கடன் இயக்கம் வளர்ந்துள்ள பாங்கினைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

அட்டவணை

கூட்டுறவுக் கடன் இயக்க வளர்ச்சி (ரூ. கோடியில்)

நிலையத்தின் வகை	1969-70	1970-71	1971-72*
(அ) மாநிலக் கூட்டுறவு வங்கிகள் :			
(i) எண்ணிக்கை	25	25	26
(ii) சொந்த நிதிகள்	83	92	101
(iii) வைப்புகள்	234	279	329
(iv) ரிசர்வு வங்கியிடமிருந்து பெற்ற கடன்	249	242	229
இதில் குறுகிய கால விவசாயக் கடன்*	216	190	153
(v) நடைமுறை முதல் ...	619	685	788
(vi) வழங்கிய கடன்கள் ...	707	749	928
(vii) நிலுவைக் கடன்கள் ...	510	534	552
இதில் குறுகிய கால விவசாயக் கடன்*	276	288	348
(viii) (vii)*க்கும் (iv)*க்குமிடையே%	78	66	44

(ரூ. கோடியில்)

நிலையத்தின் வகை	1969-70	1970-71	1971-72*
(ஆ) மத்தியக் கூட்டுறவு வங்கிகள்:			
(i) எண்ணிக்கை	340	341	341
(ii) சொந்த நிதிகள்	174	199	223
(iii) வைப்புகள்	382	439	507
(iv) ரிசர்வு வங்கி/உச்சி வங்கியிடமிருந்து வாங்கிய கடன்	331	353	348(a)
(v) நடைமுறை முதல்	928	1081	1174
(vi) வழங்கிய கடன்	873	894	907
(vii) நிலுவை நின்ற கடன்	740	813	852
(இ) மாநில நிலவள வங்கிகள்:			
(i) எண்ணிக்கை	19	19	19
(ii) சொந்த நிதிகள்	46	58	66
(iii) நிலுவை நின்ற கடனீட்டுப் பத்திரங்கள்	571	725	882
(iv) நடைமுறை முதல்	638	841	1008
(v) வழங்கிய கடன்	153	168	148
(vi) நிலுவை நின்ற கடன்	510	638	731
(ஈ) பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் £			
(i) எண்ணிக்கை (ஆயிரத்தில்)	163	161	144
(ii) உறுப்பினர் (ஆயிரத்தில்)	29766	30963	29754
(iii) சொந்த நிதி	242	265	250
(iv) வைப்புகள்	63	69	71
(v) வாங்கிய கடன்	618	675	601
(vi) வழங்கிய கடன்	540	578	584
(vii) நிலுவை நின்ற கடன்	711	784	789

* தற்பொழுதைக்கான (provisional)

(a) மகாராட்டிரம் நீங்கலாக

£ ஆந்திரப் பிரதேசம், ஜம்மு – காஷ்மீர் நீங்கலாக

பல்வேறு வகைக் கூட்டுறவுகளுக்கு ரிசர்வு வங்கி 1971-72, 1972-1973 ஆண்டுகளில் வழங்கியிருந்த கடன்களைப் பின்வரும் அட்டவணையில் காணலாம் :

அட்டவணை

கூட்டுறவுகளுக்கு 1971 - 72, 1972 - 73இல் ரிசர்வு வங்கி வழங்கிய கடன் (ரூ. கோடியில்)

கடன் நோக்கம்	1971 - 72 (ஜூலை - ஜூன்) அனுமதித்த வரம்பு	எடுப்பு (Drawal)	திருப்பிச் செலுத்தியது	நிலுவை	1972 - 73 (ஜூலை - ஜூன்) ** அனுமதித்த வரம்பு	எடுப்பு (Drawal)	திருப்பிச் செலுத்தியது	நிலுவை
I குறுகிய காலம்:								
(i) பருவகால விவசாய நடவடிக்கை (வங்கி வீதத்திற்கு 2% குறைவாக)	394·04	468·51	505·27	152·08	415·38	596.67	603·84	144·91
(ii) விளைபொருள் சந்தையிடுகை (பஞ்சு, காபா நீங்கலாக) ...	3·18	3.59	2·96	0·66	}	9·33	9·41	0·56
(iii) பஞ்சு, காபா சந்தையிடுகை (பஞ்சு முற்றுரிமைக் கொள்முதல் உட்பட) ...	11·70	10·25	10·10	1·19	51·20	113·61	111·88	2·92
(iv) உரம் வாங்கல், வழங்கல் (வங்கி வீதத்திற்கு 2% மிகுதியாக)*	24·75	23·04	18·49	8·76	14·75	7·50	13·51	2·75
(v) கைத்தறிப் பொருள் உற்பத்தி, சந்தையிடுகை (வங்கி வீதத்திற்கு 1½% குறைவாக)	12·76	14·92	13·24	9·51	13·99	9·13	10·91	7·73
(vi) பிற குடிசை, சிற்றளவு தொழில்கள் ...	0·86	0·59	0·20	0·03	0·56	0·30	0·22	0·11
(vii) நூல் வாங்கல், விற்றல் (வங்கி வீதத்திற்கு)	0·97	0·14	0·17	இல்லை	0·92	0·09	0·06	0·03
(viii) விவசாய மறுநிதிக் கூட்டுருவுக்குக் கடன் (வங்கி வீதத்திற்கு)	8·00	1·86	88·8	இல்லை	15.00	4·89	1·19	3·70

குறிப்பு : ரிசர்வு வங்கிச் சட்டம் பிரிவு 18 (1) (ப)இன்படி அனுமதிக்கப்பட்டு எடுக்கப்பெற்ற கடன் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளது. இது 1-7-1973-க்குப் பின் மத்தியகாலக் கடன் (மாற்றல்) எனச் சரிக்கட்டப்பட வேண்டியது.

* 1972-க்கு முன் உரம் வாங்கல், வழங்கல் நடவடிக்கைகளுக்கு வங்கி வீதத்திற்குக் கடன் அளிக்கப்பட்டது ஆனால் ஜனவரி 1972 முதல், வாணிக வங்கிகளின் கடனளிப்பு விகிதத்துடன் இணைந்திருக்குமாறு வட்டி விகிதம் வங்கி வீதத்திற்கு 2% மிகுதியாக உயர்த்தப்பட்டது. 1971, 1972-க்கான விவரங்கள் நாட்காட்டி ஆண்டுக்குப் பொருந்தியன.

(ரூ. கோடியில்)

கடன் நோக்கம்	1971 – 72 (ஜூலை – ஜூன்)				1972 – 73 (ஜூலை – ஜூன்) * *			
	அனுமதித்த வரம்பு	எடுப்பு (Drawal)	திருப்பிச் செலுத்தியது	நிலுவை	அனுமதித்த வரம்பு	எடுப்பு (Drawal)	திருப்பிச் செலுத்தியது	நிலுவை
II மத்திய காலம்								
(i) விவசாய நோக்கம் (வங்கி வீதத்திற்கு $1\frac{1}{2}$% குறைவாக)£	18·14	13·09	12·59	24·30	8·72	—	7·42	16·88
(ii) பற்றுக்குறையால் பாதிக்கப்பட்ட இடங்களில் குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றியது (வங்கி வீதத்திற்கு $1\frac{1}{2}$% குறைவாக)	31·39	24·08	12·04‡	25·70‡	24·45‡ (48·85)	39·22‡ (28·87)	23·86‡ (0·26)	41·06‡ (27·60)
(iii) கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் / பக்குவப்படுத்தும் சங்கங்களில் பங்கு வாங்க (வங்கி வீதத்திற்கு) ...	3·43	0·25	0·14	0·62	1.85	0·80	0·33	1·09
III நீண்ட காலம் :								
(i) கூட்டுறவுக் கடன் நிலையங்களுக்குப் பங்கு முதல் வழங்க மாநில அரசுகளுக்குக் கடன் (அ)	16·38	14·14	4·72	51·34	16·29	18·69	4·48	65·55
(ii) விவசாய மறுநிதிக் கூட்டுருவிற்கு நீண்ட காலக் கடன்கள் ($4\frac{1}{4}$%/$4\frac{3}{4}$% வட்டிக்கு)	5·00	5·00	—	5·00	25·00	30·00	0·50	34·50

‡ காலம் மாற்றியமைக்கப்பட்ட கடன்களுட்பட.
(அ) விவரங்கள் நிதியாண்டு அடிப்படையில் தரப்பட்டுள்ளன.
£ 1971–72-க்கான விவரம் 1972 டிசம்பர் முடிய, 1972–73-க்கான விவரம் 1973 நாட்காட்டி ஆண்டுக்கு 1973 ஜூன் முடிய.
* * தற்பொழுதைக்கான.

20. கூட்டுறவு இயக்கமும் இந்திய ஸ்டேட் வங்கியும்

அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழு (கோர்வாலா குழுவினர்) 1954இல் அளித்த தமது அறிக்கையில் 'கூட்டுறவு வங்கிகளுக்கும், பிற வங்கிகளுக்கும் பெருமளவு விரிவான பணமனுப்புகை (remittance) வசதிகளைத் தனது பரவலாகப் படர்ந்துள்ள கிளைகள்வழி செய்து தரவும், ரிசர்வு வங்கி, மத்திய அரசினர்வழி தெரிவிக்கப்படும் கிராமக் கடன் தொடர்பற்ற கொள்கைகளை நல்ல தொழில் முறைகளிலிருந்து வழுவாது கடைப்பிடிக்கவும், உறுதியான, ஒருங்கிணைந்த, அரசு உருவாக்கிய அரசு கூட்டாண்மை கொண்ட ஒரு வாணிக வங்கியை அமைக்க வேண்டும்' என்று பரிந்துரை செய்திருந்தனர். இந்தப் பரிந்துரையின் பேரில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (State Bank of India) எனப்படும் இந்திய ஸ்டேட் வங்கி 1955இல் நிறுவப்படலாயிற்று. இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா (Imperial Bank of India) என்று மிகவும் செல்வாக்குடன் செயல்பட்டு வந்த, அந்நாளைய வங்கியத் துறையில் மிகப்பெரும் வங்கியென நாட்டில் விளங்கிவந்த, தனியார் துறையில் இயங்கி வந்த இம்பீரியல் வங்கியே இந்திய ஸ்டேட் வங்கியாக மாற்றியமைக்கப்பட்டது.

கூட்டுறவுத் துறையிலுள்ள சந்தையிடுகை (marketing), பக்குவப்படுத்தும் (processing) சங்கங்களின் கடன் தேவைகளைக் கவனித்து வழங்குவதில் இந்திய ஸ்டேட் வங்கி முக்கிய பொறுப்பேற்க வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டது. கூட்டுறவுக் கடன்துறையின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஸ்டேட் வங்கியின் கிளைப் பெருக்கக் கொள்கை அமைவதுடன், சிக்கனமான பணமனுப்புகை வசதிகளுக்கும் வழிவகுத்தல் இவ்வங்கியின் கடமையெனக் கருதப்பட்டது.

இந்திய ஸ்டேட் வங்கிக்குச் செயல் திட்டமொன்றை உருவாக்கக் கோரி 1957இல் ரிசர்வு வங்கி ஒரு தனிக்குழுவை நியமித்தது. கிராமக் கடன் துறையில், அதிலும் சிறப்பாகக் கூட்டுறவு வங்கிகள் நலிந்து நிற்கும் மாநிலங்களில், சந்தையிடுகை, பக்குவப்படுத்தும் கூட்டுறவுகளுக்குப் பெருமளவு கடன் வழங்குவதன்வழி ஸ்டேட் வங்கி கணிசமான அளவுக்கு உதவக்கூடுமென இக்குழு கருதியது. விவசாயக் கடன் துறையில் ரிசர்வு வங்கி மேற்கொண்டுள்ள பணிகளை ஸ்டேட் வங்கிக்கு மாற்றுவதைக் குழு ஒப்பவில்லை. மாநிலக் கூட்டுறவு வங்கி அல்லது மத்தியக் கூட்டுறவு வங்கி, அல்லது இருவகை வங்கிகளுக்கும் பதிலாக ஸ்டேட் வங்கி செயற்படலாம் என்ற கருத்தையும் இக்குழு ஏற்கவில்லை.

கூட்டுறவுக் கடன்மீதான வி. எல். மேத்தா குழு (1960), ஸ்டேட் வங்கி கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதில் சில விதிமுறைகளைச் சீர்ப்படுத்தும்படி யோசனை வழங்கியது.

விவசாயத்துடன் தொடர்புற்ற கடன் சார்பற்ற கூட்டுறவு நடவடிக்கைகளுக்கு ஸ்டேட் வங்கி அளித்து வரும் உதவி நல்ல முறையில் அமைந்துள்ளது என்று ரிசர்வு வங்கி 1964இல் அமைத்த விவசாயத்திற்கு நிலையங்கள்வழி கடன் ஏற்பாடுகள்மீதான தனி முறையான குழு (Informal Group on Institutional Arrangements for Agricultural Credit) கண்டது. இக் குழு ஸ்டேட் வங்கி இன்ன பின்ன துறைகளில் மேலும் விரிவாகச் செயல்படலாம் என்றும் யோசனைகளை வழங்கியது. உணவு தானியக் கொள்முதல் நடவடிக்கைகளுக்கு வேண்டும் நடைமுறை முதல் அளித்தும் பல்வகை கடன் சார்பற்ற கூட்டுறவுகளுக்கு (Non-Credit Co-operatives)க் கடன் வசதிகளை அளித்தும் ஸ்டேட் வங்கி கிராமிய, கூட்டுறவுத் துறைகளுக்கு நிதிவசதி வழங்கல் வேண்டும். கூட்டுறவுத் துறைக்கு வழங்கப்படும் கடன்கள் செவ்வையான வங்கியக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு அமைய ஸ்டேட் வங்கியின் கிராமியக் கடன் பிரிவு ரிசர்வு வங்கியின் விவசாயக் கடன்பிரிவுடன் நெருங்கி இணைந்து செயல்படவேண்டும். விவசாய உற்பத்தி, வளர்ச்சிக்குக் கடன் வழங்கும் பெரும்பொறுப்புக் கூட்டுறவுக் கடன் அமைப்பினைச் சார்ந்திருந்ததால், ஸ்டேட் வங்கி நிதியுதவி வழங்கு வதில் ஒரு துணை முகமையாக—முதன்மை முகமையான ரிசர்வு வங்கிக்குத் துணை முகமையாகச் செயல்பட வேண்டுமென்றும் குழு ஒப்புக்கொண்டது.

கூட்டுறவுத் துறையில் தேவைப்படும் நிதிவசதிகளையளிக்க மூன்றடுக்குக் கூட்டுறவு கடன் அமைப்பு இருந்து வருகிறது; இயன்றவரை கூட்டுறவுகளுக்குத் தேவையான நிதிவசதிகளை இந்தக் கடனமைப்பே செய்து தரும்; தன்னிறைவு பெற இயலா நிலையில் வெளியாரிடம் கடனுதவி கோரும்போது மட்டும்தான் ஸ்டேட் வங்கி கூட்டுறவுகளுக்குக் கடனளிப்பது என்ற கோட்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்து வருகின்றது. கூட்டுறவு நிதிய முகமைகளுடன் எந்த நிலையிலும் ஸ்டேட் வங்கி போட்டிப் போடக்கூடிய வாய்ப்பு ஏற்படக்கூடாது என்பதே ஸ்டேட் வங்கியின் குறிக்கோளாகும். கூட்டுறவு இயக்கத்திற்குக் கூடுதலாகத் தேவைப்படும் நிதியினை வழங்குவதே ஸ்டேட் வங்கியின் நோக்கமாகும்.

விவசாய உற்பத்திக்காக ரிசர்வு வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கிக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் வழி மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் நிதிவசதிகளையளித்து வருவதை முன் அத்தியாயத்தில் கண்டோம். ஸ்டேட் வங்கி கூட்டுறவு வங்கிகளுக்கு அளிப்பது பெரும்பாலும் குறுகிய காலக் கடனுகவே அமைகிறது. அரசினர் பிணையங்களின் ஈட்டின் பேரிலோ அல்லது மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரிலோ, இயல்பான வங்கிய நடவடிக்கைகளுக்கு ஸ்டேட் வங்கி கூட்டுறவு வங்கிகளுக்குக் குறுகிய காலக் கடன் அளித்து வருகிறது. சந்தையிடுகை, பக்குவப்படுத்தல் கூட்டுறவுகளுக்குக் கூட்டுறவு வங்கிகள் அளிக்கும் நிதிய உதவிக்குத் துணையாக மேலும் நிதியுதவி வழங்குவதில் ஸ்டேட் வங்கி முக்கிய பங்கேற்றுள்ளது, சில சூழ்நிலைகளில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாகவும் இந் நோக்கங்களுக்கு ஸ்டேட் வங்கி கடனளிக்கின்றது. மாநில அரசினர் சார்பாகச் சந்தையிடுகைச் சங்கங்கள் மேற்கொண்டுள்ள கொள்முதல் நடவடிக்கைகளுக்கு ஸ்டேட் வங்கி பெருமளவில் நிதியுதவியளித்து வருகின்றது. கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களுக்கும் ஸ்டேட் வங்கி கடன் வழங்குகின்றது. கூட்டுறவு நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்குவதன் வழியும், அரசினரின் பொறுப்புறுதியின் பேரில் தற்காலிகக் கடன் அளிப்பதன் வழியும் கூட்டுறவு நிலவள வங்கிகளுக்கு ஸ்டேட் வங்கி உதவிவருகின்றன. கூட்டுறவுத் துறையிலுள்ள கிராமத் தொழில்களுக்கும் ஸ்டேட் வங்கி ஓரளவுக்கு நிதிவசதிகளையளிக்கின்றது.

கீழ்க்காணும் அட்டவணை ஜூன் 1961 முதல் ஜூன் 1969 வரை கூட்டுறவு நிலையங்களுக்கு ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும் அளித்த கடன் வசதிகளைக் காட்டுகின்றது:—

அட்டவணை

ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும் கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கிய கடனுதவி (ரூ. கோடியில்)

ஆண்டு ஜூன் இறுதியில்	ஸ்டேட் வங்கி		துணை வங்கிகள்		மொத்தம்	
	அனுமதித்த வரம்பு	நிலுவை	அனுமதித்த வரம்பு	நிலுவை	அனுமதித்த வரம்பு	நிலுவை
1961	23·90	6·80	3·56	0·87	27·46	7·67
1962	30·92	8·48	4·16	1·93	35·08	10·41
1963	43·26	7·71	3·94	2·18	47·20	9·89
1964	43·91	8·93	4·49	2·69	48·40	11·62
1965	62·39	26·06	5·46	2·00	67·85	28·06
1966	61·70	19·69	7·71	3·03	69·01	22·72
1967	71·74	34·26	28·05	6·10	99·79	40·36
1968	92·56	40·82	40·76	19·60	133·26	60·42
1969	168·29	115·38	38·95	14·90	207·23	130·29

உச்சி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

உச்சி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலும் கடனளிக்கவும், அன்றாட நடவடிக்கைகளை வசதியுடன் மேற்கொள்ளவும் உதவும் பொருட்டு அவற்றின் எளிவரல் வளங்களை (liquid resources) வலுப்படுத்த ஸ்டேட் வங்கி அவற்றிற்கு அனுமதிக்கப்பட்ட அரசினர் பிணையங்கள் மீதும், மத்திய நிலவள வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்கள் மீதும் கடன் வழங்குகின்றன. கூட்டுறவு வங்கிகள் விளைபொருளின் ஈட்டின் பேரில் தம்முடன் இணைந்துள்ள சங்கங்களுக்குக் கடன் வழங்கியிருப்பின் அவ் விளைபொருளை ஸ்டேட் வங்கியிடம் மறு அடகு (Repledge) வைத்துக் கடன் பெறலாம். அரசினர் பொறுப்புறுதியின் பேரில் கொள்முதல் நடவடிக்கைகளுக்கு நிதியுதவியும், இணைந்துள்ள சங்கங்களின் விளைபொருளைச் சந்தையிலிடல், உரம், விவசாயக் கருவிகள் வழங்கல் போன்ற நடவடிக்கைகளுக்கு மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. மேற்கூறிய நோக்கங்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் ஸ்டேட் வங்கி கடன் வழங்குவதுண்டு. அங்ஙனம் வழங்க, நல்ல நிதிநிலைமையுள்ள மாநில வங்கி மத்திய வங்கிக்கு அளிக்கப்படக் கூடிய கடனுக்குப் பொறுப்புறுதி வழங்கவேண்டும்.

சந்தையிடுகை, பக்குவப்படுத்தும் சங்கங்கள்

கூட்டுறவுச் சந்தையிடுகை, பக்குவப்படுத்தும் சங்கங்கள் கூட்டுறவு நிதி நிலையங்களிடமிருந்து தமக்குத் தேவையான கடன் வசதிகளைப்பெற இயலாத நிலையில், தமது சங்க துணை விதிகள் பிறரிடம் கடன் வாங்க அனுமதித்தால் ஸ்டேட் வங்கியிடமிருந்து கடன் பெறலாம். சங்கங்களுக்குச் சொந்தமான விளைபொருளையோ அல்லது உறுப்பினர்கள் சங்கத்திடம் விட்டு வைத்திருக்கும் விளைபொருளையோ பிணையாக ஏற்றுக்கொண்டு ஸ்டேட் வங்கி கடன் வழங்குகிறது. விளைபொருளின் தன்மையைப் பொருத்து 25 முதல் 40% வரை இடைவெளி வைத்துக்கொள்ளப்படுவதுண்டு. எந்தக் காரணத்தினாலும் இருப்புச் சரக்குப் பிணையாகத் தரப்பட இயலாத நிலையில், சங்கத்திற்கு, அதனுடைய சொந்த நிதிக்கு மிகாத தொகையளவிற்கு உச்சி அல்லது மத்தியக் கூட்டுறவு வங்கி அல்லது உச்சி சந்தையிடுகைச் சங்கம் அளிக்கும் பொறுப்புறுதியின் பேரில், பிணையில்லாக் கடனை ஸ்டேட் வங்கி வழங்கும். சங்கத்தின் சொந்த நிதிக்கும் மிகுதியான தொகை, மாநில அரசினரின் பொறுப்புறுதியின் பேரில் பிணையில்லாக் கடனாக வழங்கப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

சந்தையிடுகைச் சங்கங்களுக்குக் கடனளிப்பது போன்றே சர்க்கரை ஆலைகள், பஞ்சு பிரித்தெடுத்துக் கட்டும் சங்கங்கள், சணல் கட்டும் கூட்டுறவுகள் போன்ற பக்குவப்படுத்தும் கூட்டுறவு களுக்கும் ஸ்டேட் வங்கி கடன் வசதியளித்து வருகிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு அளிக்கப்படும் நிதிவசதிகளாவன:

(i) தொழில் நிதிக் கூட்டுறவு அல்லது பிற நிதி நிலையம் அனுமதித்த கடன் வழங்கப்படுமுன் மாநில அரசினரின் பொறுப்புறுதியின் பேரில் தற்காலிகக் கடன் வசதிகள்.

(ii) சரக்கு இருப்பின் அடகின் பேரில் கடன்.

(iii) சர்க்கரை இருப்பு ஏற்படுவதை எதிர் நோக்கி, மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரில் நடைமுறை முதலுக் காகப் பிணையில்லா ரொக்கக் கடன் (Clean Cash Credit)

(iv) ஆலையின் பொதுச் சொத்துகள் பேரில் அல்லது மாநில அரசின் பொறுப்புறுதியின் அல்லது இவ்விருவகைப் பிணையின் பேரில் வாணிக உறுதிக் கடிதம் (Letters of Credit) ஏற்படுத்தித் தருதல்; தேவைப்பட்டால் இயந்திரங்கள், முதற் பொருள்கள் (Capital Goods)

இறக்குமதி செய்ய பின்னர் செலுத்தும் பொறுப்புறுதி (Daferred Payment Guarantee) அளித்தல்.

(v) சர்க்கரை ஆலைகளுள்ள இடங்களில் கரும்பு உற்பத்தியாளர்களின் விவசாய நடவடிக்கைகளுக் கடன் வசதியளிக்கும் பொருட்டு நிதிவசதியளித்தல்.

கூட்டுறவு நிலவள வங்கிகள்

மாநில அரசினரின் பொறுப்புறுதியின் பேரில் ஸ்டேட் வங்கி நிலவள வங்கிகளுக்குக் கடன் வழங்குகின்றன. இக் கடனைக் கொண்டு மத்திய நிலவள வங்கிகள் பிரதம நிலவள வங்கிகளுக்குக் கடனளிக்கின்றன. பிரதம நிலவள வங்கிகள் தமது உறுப்பினரின் நிலங்களை அடைமானமாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு நீண்ட காலக் கடன்களை வழங்குவதை நாம் முன்னரே கண்டோம். இந்த அடைமானங்களைப் பிரதம வங்கிகள் மத்திய நிலவள வங்கிகளுக்கு மாற்றித் தருகின்றன. இதை அடிப்படையாகக் கொணடே மத்திய நிலவள வங்கிகள் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டுப் பணந்திரட்டி அத் தொகையைக் கொண்டு ஸ்டேட் வங்கியிடம் பெற்ற கடனை அடைக்கின்றன.

மேற்கண்ட வகை தற்காலிகக் கடனளிப்பதுடன், ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும் மத்திய நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்குகின்றன. மற்றும் நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் கிராமக் கடனீட்டுப் பத்திரங்கள்மீது அவற்றின் உரிமையாளர்களுக்குக் கடனும் வழங்குகின்றன.

தொழிற் கூட்டுறவுகள்

கூட்டுறவு நிதிய முகமைகள் கடன் அளிக்க இயலாத நிலையில் அவற்றின் இசைவுடன் ஸ்டேட் வங்கி தொழிற் கூட்டுறவுகளுக்கு அவற்றின் நடைமுறை முதல் தேவைகளுக்குக் கடன் வழங்கி வருகிறது. தொழிற் கூட்டுறவுகள் மீதான முதல் செயற் குழுவின் பரிந்துரைகளின் பேரில் ஸ்டேட் வங்கி இம் முடிவை மேற் கொண்டது. வங்கி ஏற்றுக் கொள்ளக் கூடிய கச்சாப் பொருள்கள், முடிவுற்ற பொருள்கள், உற்பத்தி வழியிலுள்ள பொருள்கள், வரவுக்குரிய மாற்றுச் சீட்டுப் போன்றவற்றின் பிணையின் பேரில் ஸ்டேட் வங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனளிக்கிறது. மாநில அரசு, உச்சி வங்கி மத்திய வங்கி அல்லது தொழிற் கூட்டுறவு வங்கி தக்க பொறுப்புறுதியளித்தால் பிணையில்லாக்

கடனும் அளிக்கப்படுவதுண்டு. இயந்திரங்கள், பிற சாதனங்கள், முதல் சொத்துகள் வாங்க மத்திய காலக் கடன்களும் அளிக்கப் படுவதுண்டு. ஓடுகள், சர்க்கரை, இரும்புக் கருவிகள், தச்சுச் சாமான்கள், விசைத்தறி துணி, உலோக வேலைப்பாட்டுப் பொருள், அளவு பார்க்கும் நாடா போன்றவை தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுகளுக்கு ஸ்டேட் வங்கி நிதிவசதியளித்துள்ளது.

நுகர்வோர் கூட்டுறவுகள்

மத்தியத் துறையில் உருவாக்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவுத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த அரசு முடிவு செய்ததன் விளைவாக ஸ்டேட் வங்கி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டசாலைகள், மாநில, தேசீய நுகர்வோர் பண்ட சாலைகளின், கூட்டிணைப்பு ஆகியவற்றிற்கு நடைமுறை முதல் வழங்க திட்டமொன்றை வகுத்துள்ளது. பொருள்கள் அடகு, ஈட்டின் பேரிலும், கடன் விற்பனையின் பேரிலும் கடன் வசதி அளிக்கப்படுகிறது. மாநில அரசு, உச்சி அல்லது மத்திய வங்கியின் பொறுப்புறுதியின் பேரில் பிணையில்லாக் கடன் அளிக்கப் படுவதுண்டு.

பணமனுப்புகை வசதிகள்

ரிசர்வு வங்கியின் திட்டப்படியும், தன்னுடைய திட்டப்படியும் ஸ்டேட் வங்கி, கூட்டுறவு வங்கிகளுக்குச் சில இலவச பணமனுப் புகை வசதிகளைச் செய்து தந்துள்ளது. கூட்டுறவு நிலவள வங்கி களுக்கும் இவ் வசதிகள் அளிக்கப்படுகின்றன.

வாரத்திற்கு ஒருமுறை மாநிலக் கூட்டுறவு வங்கியிலிருந்து அதன் கிளை ஒவ்வொன்றிற்கும் அல்லது இணைந்துள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து அவற்றின் கிளை ஒவ்வொன்றிற்கும் இலவசமாகப் பணமனுப்புகை வசதியை ஸ்டேட் வங்கி அளிக்கிறது. மாநிலக் கூட்டுறவு வங்கி நேரடியாக மத்தியக் கூட்டுறவு வங்கியொன்றின் கிளைக்குக்கூட இவ்வகையாகப் பணமனுப்பலாம். ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளும் இவ்வசதிகளைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக் கின்றன. கூட்டுறவு நிலவள வங்கிகள் தம் கிளைகள் அல்லது இணைந்துள்ள பிரதம வங்கிகளுக்கும், பிரதம வங்கிகள் அல்லது கிளைகள் மத்திய நிலவள வங்கியின் தலைமை அலுவலகமுள்ள இடத்தில் உள்ள ஸ்டேட் வங்கியில் அந்த மத்திய நிலவள வங்கிக்கும் வாரம் ஒரு முறை இலவசமாகப் பணமனுப்பலாம்.

1969ஆம் ஆண்டு ரூ. 800 கோடி மதிப்புள்ள பணம் இவ்வகை பணமனுப்புகை வசதிகள்வழி அனுப்பப்பட்டது.

அனைத்திந்தியக் கிராமக் கடன் மறுஆய்வுக்குழு, ஸ்டேட் வங்கி துவங்கப்பட்டபோது என்னவெல்லாம் அதனிடம் எதிர்பார்க்கப் பட்டதோ அதில் மிகப் பெருமளவு நிறைவேறியுள்ளது என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. கூட்டுறவுகளுக்குக் கடன் வசதி தடையும் தயக்கமுமின்றி கிடைக்க ஸ்டேட் வங்கி தனி வழி வகைகளை வகுத்துப் பழைய நடைமுறைகளை மாற்றியமைத்தது குறிப்பிடத்தக்க செயலாகும்.

1955 இல் ஸ்டேட் வங்கி நிறுவப் பெற்றபோது கூட்டுறவு களுக்கு அளிக்கப்பட்டிருந்த கடன்வசதி மிகமிகக் குறைவாக இருந்த நிலை மாறி 1969இல் ரூ. 168·29 கோடி கடன் அனு மதிக்கப்பட்டிருந்தது; ரூ. 115 38 கோடி நிலுவை நின்றது. ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளும் 1969இல் ரூ. 38·94 கோடி கடனுக அனுமதித்திருந்தன; ரூ. 14·91 கோடி நிலுவை நின்றது.

இன்றைய நிலையிலும் நாட்டில் மிகப்பெரிய வங்கியாக விளங்குவது ஸ்டேட் வங்கியே. 1973 ஜூன் இறுதியில் இவ்வங்கி 2,867 அலுவலகங்களைக் கொண்டிருந்தன. இதன் துணை வங்கிகள் 1,563 அலுவலகங்களைக் கொண்டிருந்தன. ஆக, நாட்டிலுள்ள வாணிக வங்கிகளின் மொத்த அலுவலகங்கள் 15,362இல் ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும், மட்டும் 4,430 அலுவலகங் களைக் கொண்டிருந்தனவெனின் இவற்றின் சிறப்பை மேலும் கூறவேண்டுவதில்லை. இத்துணை விரிந்த பரப்பும் மிகுந்த செல்வாக்குமுள்ள வங்கி கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பலவகைகளில் உதவுவது கூட்டுறவு இயக்கம் மேலும் உறுதியாக வளர்ச்சிபெற உதவுகின்றது.

21. அரசினரும் கூட்டுறவு இயக்கமும்

இந்தியாவில் இன்று காணக்கிடக்கும் கூட்டுறவு இயக்கம் அரசினரின் முயற்சியால் துவங்கப் பெற்றது என்பதை யாவரு மறிவர். 1904ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் இயற்றப்பெற்றது முதல், கூட்டுறவு இயக்கத்திற்கு அரசு பலப்பல வழிகளில் ஆதரவும் உதவியும் அளித்து வருகின்றது. இது காரண மாகவே சில கூட்டுறவாளர்கள் இந்தியாவில் கூட்டுறவு ஓர் இயக்க மாகக் காணப்படவில்லை; ஆனால் அரசினரின் தீர்மானங்களினால் உருவாகிய ஒரு கொள்கையாகக் காணப்படுகிறது என்று எள்ளி நகையாடவும் செய்கின்றனர்.

கூட்டுறவு என்பது தன்னுதவியின் அடிப்படையில் எழும் ஒரு முயற்சி. இம் முயற்சி உருவாகச் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியொன்று ஆங்காங்கு இருந்து வந்ததைக் கூட்டுறவின் வரலாறு புலப்படுத்தும். கூட்டுறவிற்கு ஆதாரமாக விளங்கியது தன்னுதவியே. தன்னுதவி வலிமை வாய்ந்த மாபெரும் சக்தி என்பதை நடைமுறையில் கண்டுணர்ந்த கூட்டுறவாளர்கள் அதைக் கூட்டுறவின் தத்துவமாகவே கடைப்பிடிக்கலாயினர். அரசு உதவிக்கு எல்லையுண்டு; ஆனால், தன்னுதவிக்கு எல்லையேது மில்லை. வெளியுதவி எங்கிருந்து எவரிடமிருந்து பெற்றாலும் உதவி பெறுவோரின் முயற்சி குன்றிவிடுகிறது; உதவியளிப்பவரை அண்டியிருக்கும் நிலை, நம்பி வாழும் நிலை உருவாகிவிடுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் வெளியுதவி தன்னுதவித் தத்துவத்திற்கு ஓரளவு முரணாகக் கூட காணப்படுகிறது. அரசின் உதவி நிறுத்தப் பட்டால் கூட்டுறவு இயக்கம் தானே தலைதூக்கி வளரமுடியுமா என்றும் ஆராய வேண்டியிருக்கிறது.

பொதுவாகக் கூறுமிடத்து அரசினர் கூட்டுறவு இயக்கத் திற்குக் கீழ்க்கண்ட வழிகளில் உதவியளித்து வருகின்றனர்:

1. கூட்டுறவு நிலையங்களை அமைக்கவும், நடத்தி வரவும் தேவைப்படும் சட்டங்களை இயற்றுகின்றனர்.

2. வட்டித் தொழிலர் சட்டம், பல்வேறு கடன் நிவாரணச் சட்டங்களின் தடைப்படுத்தும் விதிகள் கூட்டுறவுச் சங்கங்களைப் பாதிக்காது பாதுகாக்கப்படுகின்றன.

3. இயக்கத்தின் குறைபாடுகளை அவ்வப்போது ஆராய்ந்து வல்லுநர்களின் யோசனைகளைப்பெற வல்லுநர் குழுக்களை நியமித்தல்.

4. கூட்டுறவுத் துறையினை அமைத்துப் பல நிலைகளில் ஊழியர்களை நியமித்துப் பெருஞ்செலவில் நிருவாகம் மேற்கொள்ளல்.

5. கடன்கள், மானியங்கள், உதவித்தொகை போன்ற நிதியுதவிகளை வழங்கல்.

6. பிற முகமைகள் தரும் கடன்களுக்கு அரசினர் பொறுப்புறுதியளித்தல்.

7. கூட்டுறவு நிலையங்களின் பங்கு முதலுக்குப் பணம் வழங்கல்.

8. அரசினர் அலுவலரின் பணிகளை முழுதும் இலவசமாக அல்லது பகுதியினை இலவசமாகக் கூட்டுறவு நிலையங்களுக்கு அளித்தல்.

9. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியிலும், கிராமச் சீர்திருத்தத்திலும் கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கிய பங்களித்து ஆதரவளிப்பது.

10. வருமானவரி, முத்திரைவரி, பதிவுக்கட்டணம், பண மனுப்புகை ஏற்பாடுகள் போன்ற செய்திகளில் பல்வகைச் சலுகைகளும், சிறப்புரிமைகளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படுகின்றன.

துவக்க காலத்தில், அரசினர், கூட்டுறவு இயக்கத்திற்கு எவ்வகையான நிதியுதவியும் அளிப்பது உண்மையான தன்னிறைவு பெற்று தானே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் கூட்டுறவுப் பண்பிற்கு முரணாக அமையும் என்று கருதினர். இயன்றவரை, இயக்கத்தில் அரசினரின் ஆட்சி மிகக் குறைவாக இருத்தல் நன்று என்றும் கருதினர். இக் கொள்கையை நீண்டகாலத்திற்கு அரசு கடைப்பிடிக்க இயலவில்லை. முதல்படியாக கிராமச் சங்கங்களைத் துவங்க ரூ. 2,000 வரை கடனளிக்க மாகாண அரசினர் அனுமதிக்

கப்பட்டனர். முதல் இல்லாத காரணத்தால் சங்கங்கள் துவங்கக் கூடிய வாய்ப்பே இல்லாத இடங்களில்கூட புதிய சங்கங்களை நிறுவ இது உதவியது. இரண்டாம் கட்டத்தில் அரசு கூட்டுறவுகள் வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்கள்மீது வட்டி செலுத்தப்படுவதற்குப் பொறுப்புறுதியளித்தன. இந்த உதவி கிடைத்ததனுல்தான் கூட்டுறவு வங்கிகள் குறைந்த வட்டிக்கு நீண்டகாலக் கடன்களை எழுப்ப முடிந்தது. மூன்றும் கட்டத்தில் அரசினர் கூட்டுறவுகளுக்கு நேரடியாகக் கடன் வழங்கத் துவங்கினர். முதல் உலகப் போர் துவங்கிய நேரத்தில் (1914) கூட்டுறவு நிலையங்கள் வைப்புகளைத் திரட்ட முடியவில்லை; முன்னர் அளித்திருந்த கடன்களைக் குறித்த காலத்தில் திருப்பிப் பெறவும் இயலவில்லை. இந்தச் சூழ்நிலையில் அரசினர் கூட்டுறவுகளுக்கு நேரடியாகக் கடன் வழங்கலாயினர். 1919 வரை கூட்டுறவு இயக்கத்திற்காக மத்திய அரசு மேற்கொண்ட செலவுகள்: பதிவாளர், அவரது அலுவலர்களுக்கு ஆகும் செலவுகள், கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடன், உதவி மானியம் (grants-in-aid), உதவித் தொகை முதலிய வழங்குதல்.

கூட்டுறவு நிருவாகம் 1919இல் மாகாண அரசாங்கங்களுக்கு மாற்றப்பட்டது முதல் இயக்கத்திற்கு அளிக்கப்பட்ட நிதியுதவி பெருகியது. சில மாகாண அரசினர் மத்திய நில அடைமான வங்கிகள் வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களின் அசல், வட்டி ஆகிய இரண்டும் திருப்பிச் செலுத்தப்படுவதற்குப் பொறுப்புறுதி யளிக்கலாயின. மிக அதிகமான அரசு உதவியின்றி, அதே நேரத்தில் அரசின் தலையீடற்ற முழுச் சுதந்திரமுமின்றி, கூட்டுறவு இயக்கம் வளர்ந்திருந்தது என்று ரிசர்வு வங்கி 1946இல் கருத்துத் தெரிவித்தது. அரசினர் அளித்த நிதியுதவி சிறு அளவினதாகவே இருந்தது. அரசின் உதவியும் நல்லாதரவும் ஓரளவுக்கு இருந்த போதிலும், கூட்டுறவுத் திட்டக் குழு (1946), இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி குன்றியிருக்கக் காரணம் அரசினரின் 'தலையிடாக் கொள்கை' (Laissez-faire policy)யே என்று கருதியது.

கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றில் புதியதொரு திருப்பத்தை உருவாக்கிய பெருமை அனைத்திந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழு (1954)வினரின் பரிந்துரைகளுக்கு உண்டு. செல்வாக்குள்ள ஒரு சில நபர்கள் கூட்டுறவு இயக்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு அதன் பயனைப் பொதுமக்கள், குறிப்பாக வலிவற்ற வகுப்பினர் நுகரக்கூடாத வண்ணம் செயல்படுத்தி வருகின்றனர் என்று குழு கருதியது. இந்த நிலையை மாற்ற

புதியதொரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும். வலிவற்றோரும், நசுக்கப்பட்டோரும் சேர்ந்து இச் சூழ்நிலையை உருவாக்குவது எளிதல்ல. எதிர்க்கும் ஆற்றல், எதிர்க்கப்படும் ஆற்றலைவிட வலிமையுள்ளதாக இருந்தால் மட்டுமே புதிய சூழ்நிலையை உருவாக்கும் வாய்ப்பு உண்டாகும். இங்ஙனம் தேவைப்படும் வலிமைவாய்ந்த ஆற்றலைக் கூட்டுறவு தனித்து நின்று பெறுவது இயலாது; கூட்டுறவு அரசினருடன் கூடிச் செயல்பட்டால் மட்டுமே பேராற்றல் பெற்றுச் செயலாற்ற இயலும் என்று விசாரணைக் குழு கருதியது. இந்த அடிப்படையில்தான் அரசு எல்லா நிலைகளிலுமுள்ள கூட்டுறவு நிறுவனங்களில்—கடன், பக்குவப்படுத்தல், சந்தையிடுகைச் சங்கங்களில் பங்கேற்பது இன்றியமையாதது எனக் குழு பரிந்துரைத்தது. குழுவின் பரிந்துரைகள் பல ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக, அரசினருக்கும் கூட்டுறவு இயக்கத்திற்குமிடையே புதியதோர் உறவு உருவாகலாயிற்று. இந்தக் கட்டத்திலிருந்து கூட்டுறவு நிலையங்களுக்கு மிகப் பெருமளவில் அரசு நிதியுதவி வழங்கத் துவங்கியது. இந் நூலில் பல்வகைக் கூட்டுறவுகளுக்கு அரசு அளித்துவரும் உதவிகள்பற்றி ஆங்காங்கே விளக்கம் தரப் பட்டுள்ளது. எனவே, கூட்டுறவு இயக்கத்திற்கு அரசு வழங்கி வரும் நிதியுதவி, பிற உதவிகளைச் சுருக்கமாகக் கீழே காண்போம்:

ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவுச் சங்கங்களை மேற் பார்வை, ஆய்வு, தணிக்கை செய்ய கூட்டுறவுத் துறையொன்று அரசினரால் நடத்தப்பெற்று வருகிறது. இத் துறைக்காகும் செலவு முழுதும் அரசினரின் பொறுப்பேயாகும். ஆண்டுக் காண்டு மாநில அரசினர் தமது கூட்டுறவுத் துறை பராமரிப்புக்குச் செய்யும் செலவு உயர்ந்து செல்வது அரசினர் இத் துறையின் வளர்ச்சியில் எவ்வளவு ஈடுகாட்டுகின்றனர் என்பதைத் தெளி வாகக் காட்டுகிறது.

கூட்டுறவு நிலையங்களின் பங்குமுதலில் அரசின் பங்கேற்பு, முதலில் விசாரணைக் குழுவின் பரிந்துரையின்படி பெரிய அளவு கடன் சங்கங்களை உருவாக்க வேண்டி மேற்கொள்ளப்பட்டது. பின்னர் வளம் பெறும் வாய்ப்புள்ள சிற்றளவுக் கடன் சங்கங்கள் பங்கு முதலிலும் அரசினர் பங்கேற்கலாமெனக் கொள்கை விரிவு படுத்தப்பட்டது. அதே நேரத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளி லும், உச்சிக் கூட்டுறவு வங்கிகளிலும் அரசு பங்குமுதல் வழங்கி பங்கேற்கலாமென்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்குத் தேவைப்படும் நிதியினை ரிசர்வு வங்கி மாநில அரசினருக் குக் கடனாக அளிப்பதை முன்னரே கண்டோம்.

சந்தையிடுகை, பக்குவப்படுத்தல் கூட்டுறவுகளிலும் அரசு பங்குமுதல் வழங்கி பங்கேற்கிறது. மத்திய அரசு இது தொடர்பாக அளிக்கும் உதவி தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுருவின் வழி மாநில அரசுகளுக்கு வழங்கப்படுகிறது. அரசினர் கூட்டுறவு நிலையங்களின் பங்கு முதலுக்கு நிதியளிக்கும் கொள்கை மேலும் விரிவு படுத்தப்பட்டுக் கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்கள், தொழிலாளர் ஒப்பந்த சங்கங்கள், பால்பண்ணைக் கூட்டுறவுகள், மீன்பிடிப்புக் கூட்டுறவுகள், போக்குவரத்துக் கூட்டுறவுகள் போன்ற பல கடன்சார்பற்ற கூட்டுறவுகளுக்கும் நீட்டிக்கப் பட்டது.

1971 ஜூன் இறுதியில் பலவகைக் கடன் கூட்டுறவுகளுக்கு அரசு வழங்கியிருந்த பங்கு முதல் தொகை ரூ. 80·3 கோடியாக இருந்தது. கடன் சார்பற்ற கூட்டுறவுகளுக்கு அரசினர் வழங்கி யிருந்த பங்குத்தொகை ரூ. 75 கோடியளவில் இருந்தது. இத் தொகையில் சந்தையிடுகைச் சங்கங்கள் ஏறத்தாழ ரூ. 15 கோடியும், சர்க்கரை ஆலைகள் ரூ. 23·89 கோடியும், நூற்பு ஆலைகள் ரூ. 14·60 கோடியும் பங்கு முதலாக அரசினரிடமிருந்து பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

அரசினர் கூட்டுறவுகளின் பங்கு முதலுக்கு வழங்கும் தொகை கூட்டுறவுகளின் முதல்நிலையை வலுப்படுத்துவதோடு, அவற்றின் கடன் வாங்கும் திறனையும் மிகுதிப்படுத்துகின்றது. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களின் நீண்டகால நோக்கம் தமது உறுப்பினர்களிடம் திரட்டும் பங்குத் தொகையே தேவைப் படுமளவுக்குச் சேர்ந்துவிட்டதும் அரசினர் வழங்கிய பங்குமுதலைத் திருப்பியளித்துவிடுவதாக அமையவேண்டும். இங்ஙனம் திருப்பி யளித்தல் பல ஆண்டுகளில் பரவலாகச் செய்யப்படலாம். அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு இது குறித்துக் கூறியதாவது: உகந்த அளவுக்குமேல் சொந்த நிதிகள் உள்ள கூட்டுறவுகள், குறிப்பிட்ட சில ஆண்டுகளில் அரசினரிடமிருந்து பெற்றுள்ள பங்கு முதலைத் திருப்பியளிக்கும்படிக் கோரப்படலாம். இங்ஙனம் செய்வது கூட்டுறவுகளிடையே தன்னம்பிக்கையை வளர்க்க உதவுவது மட்டுமன்றி மாநில அரசினருக்கு வேறு இன்றியமையாத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியைப் பெறவும் உதவும்.

அரசினர், கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாகக் கடன் வழங்குவது அருமையெனினும், சில வளர்ச்சித் திட்டங்களுக்கு இங்ஙனம் செய்துள்ளது. சந்தையிடுகைச் சங்கங்களுக்கும், பெரிய கடன் சங்கங்களுக்கும் கிட்டங்கிகள் கட்ட கடன்களை

வழங்கியது. வேறு எந்த முகமையிடமிருந்து கடன்வசதிபெற இயலாநிலையில் நடைமுறை முதல் தேவைகளுக்கு அரசு கடன் வழங்குவதுண்டு. முன்பு அரசினர் விவசாயிகளுக்கு நேரடியாக அளித்துவந்த தக்காவி (Taccavi) கடன்களை இப்பொழுது பல மாநிலங்களில் கூட்டுறவு நிலவளவங்கிகள்வழி வழங்குகின்றனர். நிலமீட்பு, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்குக் கடனளிப் பதைச் சில மாநில அரசினர் நிறுத்திவிட்டனர். மத்திய நிலவள வங்கிகள் இத் திட்டங்களை நிறைவேற்றி வருவதால், மாநில அரசினர் இதற்கென ஒதுக்கீடு செய்யும் தொகையை மத்திய நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்கப் பயன்படுத்துகின்றனர். மேலுஞ் சில மாநிலங்களில் தக்காவிக் கடன்கள்வழி மேற்கொள்ளப்படும் சில விவசாய நடவடிக்கை களைக் கூட்டுறவு வங்கிகள் மேற்கொள்ளும் பொருட்டு அரசினர் இவ்வங்கிகளுக்குக் குறுகியகால, மத்தியகாலக் கடன்களை அளிக் கின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் திறமையாகச் செயல்பட திறமைமிக்க நிருவாகம் தேவைப்படுகிறது. சில சங்கங்கள் போதிய வியாபாரம் இல்லாத காரணத்தால் தக்க தகுதியுள்ள அலுவலரை நியமித்து ஊதியம் தர இயலாத நிலையிலிருப்பதுண்டு. மற்றும், குறிப்பிட்ட சில வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற கூடுதல் அலுவலரை நியமிக்க வேண்டியிருக்கிறது. இவ்வகைச் செலவுகளை ஈடுகட்ட அரசினர் நிருவாக உதவித் தொகை (Managerial Subsidy) வழங்கு கின்றனர். இத் தொகை குறிப்பிட்ட அளவு, அல்லது குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு என நிருணயிக்கப்படும். பெரும்பாலும் இது மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளில் படிப்படியாகக் குறைந்து செல்வதாக அமைந்திருக்கும். இக் காலத்திற்குள் சங்கம் வலுவடைந்து தொழிலை வளர்த்து நிருவாகச் செலவு முழுவதையும் தானே ஏற்கும் திறன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிட்டங்கி கட்டவும், கருவிகளும் சாதனங்களும் வாங்கவும், வேறு சில நடவடிக்கைகளுக்கும் அரசு உதவித் தொகை வழங்குகின்றது.

அரசினர், கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடன் களுக்குப் பொறுப்புறுதியளிப்பதன் வழியும் கூட்டுறவு இயக்கத் திற்கு உதவுகின்றனர். மத்திய நிலவள வங்கிகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் மீதான அசலும், வட்டியும் குறித்தபடி செலுத்தப்படுமென்று மாநில அரசினர் பொறுப்புறுதியளிக்கின் றனர். மாநிலச் சந்தையிடுகைச் சங்கங்கள் குறிப்பிட்ட வரம்புக்கு மேல் ஸ்டேட் வங்கியிலிருந்து கடன்பெற விரும்பினால் தொடர் புற்ற மாநில அரசின் பொறுப்புறுதி தேவைப்படுகிறது. தணிக் கைப்பிரிவில் 'A' அல்லாத பிறநிலையைப் பெற்ற மத்தியக் கூட்டுறவு

வங்கிகளுக்குக் குறுகிய காலக் கடன் வரம்பை அனுமதிக்க ரிசர்வு வங்கி மாநில வங்கியின் பொறுப்புறுதி வேண்டுமென வற்புறுத்து கிறது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் திரட்டும் மூன்றாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட வைப்பு களை மாநிலஅரசு பொறுப்புறுதி செய்கிறது. இங்ஙனம் அரசு பலப் பல நிலைகளில் பொறுப்புறுதியளிப்பது மக்களுக்கும், கடன் வழங்கும் நிலையங்கட்கும் கூட்டுறவுகளின்மீது நம்பிக்கையுண்டாக்க உதவு கிறது. எந்த நோக்கத்துக்குக் கடன் அளிக்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்கு அது பயன்படுத்தப்படும் என்றும், பொறுப்புறுதி செய்யும் அரசு கடன்பெறும் கூட்டுறவைச் சரிவர கண்காணிக்கு மென்றும் கடனளிக்கும் வெளிநிறுவனங்கள் உறுதிபெறுகின்றன. கடன் கோரும் கூட்டுறவுகளும், தமக்கு நெருக்கடி ஏற்படும்போது அரசின் உதவியும், ஆலோசனையும் பெற்று நிலையைச் சமாளித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை பெறுகின்றன. அரசு கூட்டுறவு களுக்கு அளவான தொகையை மட்டுமே கடனாக அளிக்க முடியு மாதலால், தனது செல்வாக்கையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி கூட்டுறவு நிலையங்களுக்கு ஆதரவளிக்கின்றன.

சமுதாயத்தில் வலிவற்ற வகுப்பினர் நல்லதொரு வாழ்க்கைத் தரத்தைப்பெற அரசு பலப்பல திட்டங்களை வகுத்துள்ளது. இத் திட்டங்களைச் செயல்படுத்த கூட்டுறவுக் கடன் வழங்கு நிலையங்கள் வலிவற்ற வகுப்பினருக்குக் கடன் வழங்க தயங்காது முன்வரவேண்டும். இந்தக் குறிக்கோளை அடைய, மூன்றாம் திட்ட காலத்தில், கூட்டுறவுக் கடன் நிலையங்களில் வராக்கடன் காப்பு சிறப்பு நிதி (Special Bad Debt Reserve Fund)யொன்றை நிறுவ அரசு நிதி வழங்கலாயிற்று. சிறு விவசாயிகள், கடைநிலை விவசாயிகள் போன்றோருடைய உற்பத்தித் தேவைகளுக்குக் கடன் வழங்க, கூட்டுறவுக் கடன் நிலையங்களை ஊக்குவிக்கும் பொருட்டு இந்நிதி வழங்கப்படுகிறது.

மத்திய அரசும், மாநில அரசுகளும் கூட்டுறவு நிலையங்களுக்கு வருமான வரி, கலால் வரி, முத்திரை வரி, பதிவுக் கட்டணம் போன்ற பல இனங்களில் சலுகைகளையும், விலக்கல்களையும் அளித்து வருகின்றனர். பொது மக்களின் நலனுக்குப் பாடுபடும் கூட்டுறவுகளுக்குத் தனிச் சலுகைகள் தரப்பட வேண்டுமென்ற அரசின் கொள்கை இவற்றால் புலப்படுகிறது.

கூட்டுறவுப் பதிவாளர்

கூட்டுறவுத் துறையின் நடுநாயகமாக விளங்கும் அலுவலர் கூட்டுறவுப் பதிவாளர் ஆவார். இவர் அரசு அலுவலரேயாயினும் இவரே கூட்டுறவு இயக்கத்தின் அடித்தளமாக அமைகிறார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரைச் சங்கங்களின் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று குறிப்பிடுவதுண்டு. இதற்குக் காரணம், பதிவாளர் தோற்றுவிக்கப்படும். சங்கங்களைப் பதிவு செய்வதுடன் நின்றுவிடுவதில்லை; அவற்றைக் கண்காணித்து, மேற்பார்வை செய்து காத்து வளர்க்கிறார்; சங்கங்கள் முறை தவறி நடந்து கேடுற்றால் அவற்றைக் கலைத்துவிடும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார். எனவே, கூட்டுறவுச் சங்கங்களைப் பொருத்தவரை படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்ய வல்லவர் பதிவாளர். கூட்டுறவு இயக்கத்தின் வெற்றியும், தோல்வியும், வளர்ச்சியும், தேய்வும், வாழ்வும், தாழ்வும் பதிவாளராகச் செயல்படுபவரைப் பொருத்தே பெரும்பாலும் அமைகிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி கூட்டுறவுப் பதிவாளர் சங்கங்களைப் பதிவு செய்வது; துணைவிதிகளையும் திருத்தங்களையும் பதிவு செய்வது; தணிக்கை, விசாரணை, ஆய்வு செய்வது; மிகு தண்டம் விதிப்பது; மேற் கடப்பு செய்வது; கலைப்பு, பதிவுரத்து செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார். மேற்கண்ட சட்ட முறையான பணிகளல்லாது பதிவாளர் கூட்டுறவு வளர்ச்சிக்கான பல பணிகளையும் செய்து வருகிறார். சங்கமொன்றைப் பதிவு செய்யுமுன், அது வெற்றியுடன் நடைபெறும் வாய்ப்புள்ளதா, அதன் தொழில் நோக்கங்கள் கூட்டுறவு முறையில் வெற்றி பெறத் தக்கனவா என்றெல்லாம் தீர ஆராய்ந்து மன நிறைவு பெற்ற பின்னரே பதிவு செய்வது பதிவாளரின் கடமையாகக் கருதப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்குத் தேவையான நிதி, கடன், கச்சாப் பொருள், தொழில் நுட்பம், சந்தையிடுகை போன்ற வசதிகளைத் தேவைப்பட்டால் பிற அரசுத் துறைகளுடன் தொடர்புகொண்டு செய்து தரும் பொறுப்புக் கூட்டுறவுப் பதிவாளருடையதாகும்.

பதிவாளர் கூட்டுறவு இயக்கத்தின் நண்பனாய், வழிகாட்டியாய், நல்லாசிரியனாய் விளங்கவேண்டும். மிகத் திறமை வாய்ந்த அலுவலராக இருப்பதுடன் மக்கள் இயக்கத்தைச் செவ்வையாக நடத்திச் செல்லும் உளப்பாங்குள்ளவராகவும் பதிவாளர் விளங்க வேண்டும். அனுபவமிக்க நிருவாகராக, கூட்டுறவில் பற்றுமிக்கவராக, கணக்கு வழக்குகளை எளிதில் புரிந்து கொள்ளும் நிதியராக, தொழிலை நன்கு புரிந்துகொண்டு செயல்படும் மேலாளராக, மக்களின் தொண்டர்களுடைய எண்ணங்கள், குறிக்கோள்களைப் புரிந்து கொண்டு அவர்களுடன் நல்ல முறையில் தொடர்பு கொண்டு செயல்படும் திறனுள்ளவராகப் பதிவாளர் இருத்தல்

வேண்டும் என்று கூட்டுறவு நிருவாகத்தின் மீதான மேத்தா குழு கூறியது. கூட்டுறவுத் துறையில் இரண்டு ஆண்டுகளாவது கூட்டுப் பதிவாளர் அல்லது இணைப் பதிவாளராக அனுபவம் பெற்றவரையே பதிவாளராக நியமித்தல் நன்று. பதிவாளராக நியமான அலுவலர் குறைந்தது மூன்று முதல் ஐந்தாண்டுகள் வரை பதவியிலிருந்து மாற்றப்படக் கூடாது என்று மேத்தா குழு மேலும் கூறிற்று.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவுத் துறையில் முன்னர் பணியாற்றி அனுபவர் பெருதவராக இருப்பின் அவருக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்று பல கூட்டுறவுக் குழுக்களும், கூட்டுறவுப் பேரறிஞர்களும் வற்புறுத்தி வருவதைக் காண்கிறோம். பல மாநிலங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்கள் அடிக்கடி மாற்றப்பெருவதைக் குறித்து ரிசர்வு வங்கியின் ஆலோசனைக் குழு கவலை தெரிவித்தது. கடந்த சில ஆண்டுகளாகக் (1965 முதல்) கூட்டுறவுப் பயிற்சிக் குழு, புதிதாக நியமனமான பதிவாளர்கள், கூட்டுப் பதிவாளர்கள், இணைப்பதிவாளர்கள் ஆகியோருக்குப் புத்தறிவளிக்க திட்டமொன்றை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது.

கூட்டுறவுத் துறையின் அமைப்பு

பல மாநிலங்களில் கூட்டுறவுத் துறை அமைச்சர் என்ற பதவிப் பெயர் கொண்ட அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படுவதே அம் மாநிலங்களில் கூட்டுறவுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை உணர்த்தும். அமைச்சர் கூட்டுறவின் வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுப்பதிலும் சட்டதிட்டங்களை வகுப்பதிலும், தமது துறையின் செயலர், மாநிலக் கூட்டுறவு வளர்ச்சிக் குழு போன்றவர்களுடன் கலந்து ஆலோசனை செய்கிறார். கூட்டுறவுத் துறையின் தலைமை அலுவலராகச் செயலாற்றுவது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராவார்.

பல்வேறு துறைகளில் கூட்டுறவு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுப் பலவகைக் கூட்டுறவுகள் செயல்பட்டு வரும் இந் நாளில் அனைத்துக் கூட்டுறவுகளுக்கும் ஒரே பதிவாளர் என்ற நிலை பல மாநிலங்களில் மாறி வருகின்றது. தொழிற் கூட்டுறவுகளுக்குத் தொழில்துறை இயக்குநர் பதிவாளராகவும், வீட்டுவசதிக் கூட்டுறவுகளுக்கு வீட்டுவசதி வாரியப் பெருந்தலைவர் பதிவாளராகவும், மீன் கூட்டுறவுகளுக்கு மீன் துறை இயக்குநர் பதிவாளராகவும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குச் சர்க்கரை இயக்குநர் பதிவாளராகவும், நெசவாளர் கூட்டுறவுகளுக்குக் கைத்தறி

இயக்குநர் பதிவாளராகவும், பால் கூட்டுறவுகளுக்குப் பால் ஆணையர் பதிவாளராகவும், கால்நடை, கோழிப்பண்ணைக் கூட்டுறவுகளுக்குக் கால்நடை பராமரிப்பு இயக்குநர் பதிவாள ராகவும், கதர், கிராமத் தொழில் கூட்டுறவுகளுக்குக் கதர், கிராமத் தொழில் இயக்குநர் பதிவாளராகவும் இருந்து வரும் நிலையைப் பல மாநிலங்களில் காணலாம்.

கூட்டுறவுத் துறையில் பதிவாளருக்கு உதவியாக இணைப் பதிவாளர், கூட்டுப் பதிவாளர், துணைப் பதிவாளர், உதவிப் பதிவாளர் போன்ற அரசிதழ் அலுவலர்களும் அவர்களுக்கு உதவி யாக ஊழியர் பலரும் செயலாற்றுகின்றனர். கூட்டுறவுச் சங்கங் களைத் தணிக்கை செய்யும் பொறுப்புப் பதிவாளரைச் சாருகின்ற படியால், பதிவாளருக்கு உதவியாகத் தணிக்கைப் பணிகளை மேற் கொள்ள தலைமைத் தணிக்கை அலுவலர் அல்லது கூட்டுப் பதிவாளர் ஒருவரும், மேலும் பல நிலை தணிக்கை அலுவலர்களும் இருக்கின்றனர்.

மாநிலம் பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு மண்டலங் களில் கூட்டுப் பதிவாளர்களும், இவர்களின் மேற்பார்வையின்கீழ் மாவட்ட, வட்ட நிலையில் கூட்டுறவு துணைப் பதிவாளர்கள் அல்லது உதவிப் பதிவாளர்களும் செயலாற்றி வருகின்றனர். இவ்வலுவலர்களுக்கு உதவியாகக் கூட்டுறவு சார் பதிவாளர்கள், சார் உதவிப் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள் முதலானோர் பணியாற்றி வருகின்றனர். வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கூட்டுறவு சார் பதிவாளர்கள் அல்லது முதுநிலை ஆய்வாளர்கள் விரிவாக்க அலுவலர்களாகச் செயலாற்றி வருகின்றனர்.

பதிவாளரின் அதிகாரங்கள் பல நிலைகளிலுள்ள அலுவலர் களுக்கு அவர்களது பதவிப் பொறுப்புக்கேற்றவாறு அளிப்படைவு (delegate) செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு இயக்கம் தனக்கு வேண்டிய பல்வகை அலுவலர்களை நியமித்து, சீரான பணிமுறையினை அமைத்து நிருவாகத்தை நடத்தவேண்டும். கூட்டுறவு நிலையங்களை நிருவாகம் செய்ய அந்நிலைய ஊழியர்களே உருவாக்கப்படுவது இயக்க வளர்ச்சிக்கு இன்றியமையாதது. ஆனால், நாடெங்கிலும் பொதுவாகக் காணப் படும் நிலை, கூட்டுறவு நிலையங்கள்-தேசீய இணையங்கள் முதல், உச்சி நிலையங்கள்முதல் பிரதமச் சங்கங்கள் வரை, தம்முடைய அலுவலர்களை முதன்மை நிருவாக அலுவலர்களாகத் தயார் செய்யாது அரசு அலுவலர்களின் பணியைக் கடனாகப் பெறுகின்ற

தாகும். துவக்க காலத்தில், கிராமங்களில் கூட்டுறவுகளை அமைத்து, கணக்கு வழக்குகளை எழுதி, சங்கத்தைச் சட்ட விதிகளின்படி நடத்திவர பெரும்பாலும் எழுத்தறிவற்ற மக்களால் இயலவில்லை. அந் நிலையில் அரசு தனது அலுவலர்களின் சேவையைக் கடனாக அளித்து வந்தது. நாளடைவில் நிலைமைமாறி கூட்டுறவு நிலையங்களே தமக்குத் தேவையான பலநிலை அலுவலர் களை அமர்த்தி நிருவாகப் பொறுப்பை முழுதும் தாமே ஏற்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த நோக்கம் முழுமையான அளவுக்கு நிறைவேறவில்லை. இந் நாளிலும் பல பிரதம மாவட்ட, உச்சிக் கூட்டுறவுகளில் அரசு அலுவலர்களே தலைமை நிருவாகர் களாக இருந்து வருகின்றனர். கூட்டுறவு நிலையங்கள் அரசினரை வேண்டிக் கொள்வதன்பேரில் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. இவ்வகையில் அரசு அனுபவமும், பயிற்சியும் பெற்ற தன் அலுவலரைத் தந்து உதவி கூட்டுறவுச் சங்கங்களின் சீரான நடப்புக்கு வழி செய்தாலும், கூட்டுறவு நிலையங்கள் என்றென்றும், உயர்நிலை அலுவலருக்கு அரசினை எதிர்நோக்கி நிற்கும் நிலையைத் தாமே உருவாக்கிக் கொண்டுள்ளன. இந்நிலை மாறவேண்டும்.

கூட்டுறவுகளில் அரசின் தலையீடு

கூட்டுறவுகளைப் பொருத்தவரை அரசினர் கொள்கை எத்தன்மையதாக அமையவேண்டும் என்பது குறித்துப் பலகால மாகக் காரசாரமான விவாதம் நடந்து வருகிறது. கூட்டுறவு அலுவலர்கள், அரசு கூட்டுறவுகளுக்கு அளிக்கும் உதவிகளைச் சுட்டிக்காட்டி, இவ்வுதவிகளின்றி இயக்கம் இன்று காணப்படும் அளவுக்கு வளர்ந்திருக்கவே முடியாது என்று வாதிடுகின்றனர். அரசு அளித்து வரும் சலுகைகளும், உதவிகளும் நிறுத்தப்பட்டு விட்டால் கூட்டுறவு இயக்கம் நீண்ட நாட்களுக்குப் பிழைத் திருக்காது என்று கருதுவோரும் உளர். அலுவல் பற்றற்ற கூட்டுறவாளர்கள் (Non-official Co-operators) கண்ணோட்டத்தில் நிலைமை வேறுவிதமாகக் காணப்படுகிறது. அளவுக்கு மீறிய அரசாங்கக் கட்டுப்பாடுகள் காரணமாகக் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி பெரிதும் தடைப்பட்டுள்ளது என்று இவர்களில் சிலர் கருதுகின்றனர். அரசு அலுவலர்களின் தலையீடும், முட்டுக் கட்டைக் கொள்கைகளும் கூட்டுறவு இயக்கத்தின் உயிரை வதைத்து வருகின்றது என்று வாதிடுவோரும் உளர். ஆக, இரு சாராருடைய கூற்றும் இரு தீவிர வாதங்களைப் புலப்படுத்து கின்றன; முரணான கருத்துகளை அறிவிக்கின்றன. உண்மை நிலையைக் கண்டறிவதும், விருப்பு வெறுப்பின்றி இவ்வாதங்களை ஆராய்வதும் மிக அவசியமாகிறது.

தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி என்ற அடிப்படையில் உருவானது கூட்டுறவு இயக்கம். இது ஒரு மக்கள் இயக்கமாகும். மக்கள் இயக்கத்தை மக்களே நடத்தி வருவது இன்றியமையாதது மட்டுமல்ல; மிகப் பொருத்தமானதுங்கூட. இவ்வியக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதை யார் தடுப்பார்? உண்மை நிலையாதெனில், இயக்கம் தன் முயற்சி கொண்டே வளர இயலாது தவித்த நிலையில் அரசினரும் அரசு அலுவலரும் இயக்கத்திற்குப் பலவகை உதவிகளை அளிக்கலாயினர். சட்டங்களை இயற்றிக் கூட்டுறவு நிலையங்களுக்குச் சட்டமுறையான ஓர் உரு அளித்தது முதல், அரசு, கூட்டுறவுகளுக்கு நிதியுதவிகளையும் பல்வேறு வகை ஆதரவினையும் நல்கி வந்துள்ளதை யாவருமறிவர். அளவுக்கு மீறிய அரசு கட்டுப்பாடு நல்லதல்ல; ஆனால், அரசுக் கட்டுப்பட்டால் இயக்கம் வளராது நின்றது என்ற குற்றச்சாட்டு உண்மை நிலையைக் காட்டுவதாகாது.

அரசினர் தாராளமாக நிதியுதவியும் பிற உதவிகளும் வழங்க வேண்டும்; ஆனால், இயக்க நடப்பில் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்பு பெறக்கூடாது என்பது சரியான வாதமாகாது. அரசினர் கூட்டுறவுகளுக்கு வழங்கும் நிதியுதவி பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து அளிக்கப்படுவதாகும். இவ்வுதவி சரியான முறையில் பயன்படுத்தப் படுகிறதா என்று கண்காணிப்பது அரசினரின் பொறுப்புமட்டுமல்ல; கடமையுங்கூட. மற்றும் அரசினர் அளிக்கும் பொறுப்புறுதியின் பேரில் ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி போன்ற நிதிய முகமைகள் கூட்டுறவுகளுக்குக் கடன் வழங்குகின்றன. பொறுப்புறுதியளித்தவர் என்ற நிலையில் அரசு, இக் கூட்டுறவுகள் சரிவர நிருவாகம் செய்யப்பட்டு வருகின்றனவா என்று தொடர்ந்து கவனித்துவர வேண்டியிருக்கிறது. இவையன்றிக் கூட்டுறவுகள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களையும், திரட்டும் வைப்புகளையும் அரசு பொறுப்புறுதி செய்வதன் வழி பொதுமக்களுக்குக் கூட்டுறவுகளின்பால் ஒரு நம்பிக்கையை உண்டாக்குகிறது. இந்த நம்பிக்கையின் அடிப்படை, அரசினர், பொறுப்புறுதி வழங்குமுன் தீர ஆராய்ந்து நிதி நிலை, நிருவாகம் முதலிய சீராக அமைந்த நிலையங்களுக்கு மட்டுமே இவ்வசதிகளை அளிப்பர் என்ற எண்ணமே. அரசினர் நிதிவசதிகளை வழங்குமுன் மட்டுமின்றி, வழங்கிய பின்னருங்கூட கூட்டுறவுகளின் நடப்பும் நிருவாகமும் சீராக இருப்பதில் அக்கறை செலுத்த வேண்டுவது அவசியமாக இருக்கிறது. சுருங்கக் கூறின், கூட்டுறவுகள் செம்மையாகச் செயல்படுவதில் அரசினருக்குப் பெரும் பொறுப்பு உண்டு. இப் பொறுப்பினை நிறைவேற்ற அரசு கூட்டுறவுகளுடன் பல

வகையில் தொடர்புகொண்டு, அவை குறிப்பிட்ட சில விதிமுறைகளுக்கு உட்பட்டுச் செயல்படுதல் வேண்டுமென்று கோருகிறது. இதனைத் தலையீடு என்று கூறுவது பொருந்தாது.

வளர்ந்து வரும் நாடுகளில் கூட்டுறவு இயக்கம் தலைதூக்கிச் செழிக்க அரசினரின் ஆதரவும் உதவியும் மிகவும் இன்றியமையாதது என்பது அனுபவ வாயிலாகக் கண்டறியப்பட்ட உண்மை. இந்த உதவி 'கிடைக்காவிடில் கூட்டுறவு வளராது போகவும் கூடும். பச்சிளங்குழவியினைப் பாதுகாத்து வளர்த்துப்பல இடர்ப்பாடுகளிலிருந்து அதனைக் காப்பது போன்று, புதிதாக அமைக்கப்பெறும் கூட்டுறவுகளையும் நலிவுற்ற கூட்டுறவுகளையும் வலிமைமிக்க தனியார் துறையின் போட்டியினின்று காக்க வேண்டியிருக்கிறது. அரசு, கூட்டுறவு இயக்கம் செம்மையாக வளருவதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும்.

அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் டாக்டர் மாரிட்ஸ் போநௌ (Dr. Mauritz Bonow) கூட்டுறவுகளுக்கு அரசு உதவியளிப்பது குறித்துக் கூறியுள்ளதைக் காண்போம்; கூட்டுறவுத் திட்டமிடுதல், வளர்ச்சி முதலியவற்றில் அரசினரின் பங்கு ஒரு தற்காலிக நிகழ்ச்சி என்பது ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அரசு அளிக்கும் எவ்வகை உதவியும்—நிதியுதவி, தொழில்நுட்ப உதவி அல்லது நிருவாக உதவி—எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு காலத்தில் அவசியமற்றதாகிவிடும் நோக்கத்துடன் வழங்கப்பட வேண்டும். கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்கு முழு சுதந்திரத்துடன் செயல்படுகிறதோ அந்த அளவுக்கு அது சமுதாய நலனுக்குப் பெருந்தொண்டாற்றும் என்பது கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ந்து நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் பெரும்பங்கு ஏற்றுவரும் நாடுகளில் கண்ட அனுபவமாகும். வளர்ந்து வரும் நாடுகளில், கூட்டுறவு இயக்கம் திடமான நிருவாகமும் நிதிவளமும் அடையாத நிலையில், அரசு கூட்டுறவுகளோடுள்ள தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளலாகாது. இன்றைய பிரச்சினை அரசு கூட்டுறவு வளர்ச்சியில் பங்கு ஏற்கவேண்டுமா என்பதல்ல; ஆனால், அரசு எவ்வகைகளில் பங்குபெற வேண்டுமென்பதே.

அரசினர் அளிக்கும் ஆதரவைப் பயன்படுத்தி இயன்ற அளவில் விரைவாக, முழுமையாகக் கூட்டுறவுகளை வலுப்படுத்துவதே இன்றைய முக்கிய 'பிரச்சினையேயன்றி அரசினரின் அளவுக்கு மீறிய தலையீடு பிரச்சினையல்லவென்று பேராசிரியர் டி. ஜி. கார்வே குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுறவு இயக்கம் மக்களுக்காக உருவாகிய மக்களின் இயக்கம்; மேலும் மேலும் மக்களால் நடத்தப்பட வேண்டியதும் ஆகும்; அரசு இந்த இயக்கத்தை ஆதரிப்பது உதவியளித்து, வழிகாட்டி, ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டேயன்றி இயக்கத்தின்மீது நிரந்தரமான ஆதிக்கம் செலுத்துவதற்காக வல்ல என்று கூட்டுறவுத் திட்டக்குழு கூறியுள்ளது. சுருங்கக் கூறின், கூட்டுறவு இயக்கத்திற்கு அரசு உதவுவதன் நோக்கமே இயக்கம் வளரவேண்டுமென்பதேயன்றி தலையீடு, கட்டுப்பாடு களின்வழி திணற அடிக்க வேண்டுமென்பதல்ல.

கடந்த பல ஆண்டுகளாக அரசினர் கூட்டுறவுகளுக்குப் பெருமளவில் உதவி வருகின்றனர். எனினும், இந்தியக் கூட்டுறவு இயக்கம் எதிர்பார்த்த அளவுக்கு உரம் பெற்றுத் தன்னைத்தானே தாங்கிக்கொள்ளும் நிலையையடையவில்லை. இதற்குக் காரணங்களை ஆராய வேண்டிய நிலையிலுள்ளோம்.

பெரும்பாலான மக்கள் வறுமைச் சூழ்நிலையில் வாழ்ந்துவரும் நம் நாட்டில், கூட்டுறவு நிலையங்களில் உறுப்பினராக இருப்பவர் களும் குறைவான நிதிவசதியுள்ளவர்களே. இவர்களுக்குக் குறைந்த ஓர் அளவுக்கேனும் நிதிவசதிகள் அளிக்கப்பட்டால்தான் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கிப் பின்னர் நாளடைவில் தம்மைத் தாமே தாங்கிக்கொள்ளும் நிலையடைவர். எனவே, அரசு கூட்டுறவுகளில் முதல் வழங்கி பங்கேற்று கடன்கள், மானியங்கள், உதவித்தொகை முதலியவற்றைப் பெருவாரியாக வழங்கலா யிற்று. இவ்வகையான தாராளமான உதவிகளை ஏராளமாகப் பெற்றும் இயக்கம் தன்னைத்தானே தாங்கிக்கொள்ளும் நிலையைப் பொதுவாக அடையாதது கூட்டுறவு இயக்கவளர்ச்சிக்குத் தேவைப்படுவது நிதிமட்டுமல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறது. நிதியுதவிகள், சலுகைகள் தாரளாமாக வழங்கப்படுவதிலுள்ள சில விபரீதப் போக்குகளும் புலப்படலாயின. அரசு அளிக்கும் சலுகைகளையும் உதவிகளையும் பெறுவதற்கெனக் கூட்டுறவுகள் உருவாக்கப்பட்டு உண்மையில் மக்களுக்குப் பயன் கிட்டாத நிலையும் சில இடங்களில் ஏற்பட்டது. தன்னுதவி, ஒருவருக் கொருவர் உதவி, கூடிச் செயல்பட்டு நன்மைபெறல் என்ற எண்ணங்கள் போய் கடன், மானியம், உதவித்தொகை, தள்ளுபடி என்று அரசு அளிக்கும் பல்வகை உதவிகளைப்

பெறுவதில் நாட்டம் மிகுந்தது. இதன் விளைவு உண்மையான கூட்டுறவுப் பாங்கு மறையலாகி ஒரு சிலரின் தனிப்பட்ட நலன் களுக்குப் பயன்படும் சங்கமாக சிலச் கூட்டுறவுகள் செயல்படலாயின. இந்நிலை மாறவேண்டும். அரசு அளிக்கும் சலுகைகளும் உதவிகளும் தக்க கூட்டுறவுகளுக்கு மட்டுமே கிடைக்க வழி வகுக்கப்படவேண்டும். போலிக் கூட்டுறவுகளை இயக்கத்தி லிருந்து களைந்தெடுக்கவேண்டும். நாளடைவில், கூட்டுறவுகள் அரசின் உதவியின்றி தாமே தமது கால்களில் நிற்கும் வலிமை பெற ஊக்குவிக்கப்படும் வகையில் அரசின் உதவி அமைய வேண்டும். எளிதாக அரசின் உதவி கிடைப்பதால் கூட்டுறவு களின் சொந்த முயற்சியும் தன்னுதவி மனப்பான்மையும் குறையக் கூடும். இது நிகழாத வகையில் உதவித் திட்டம் அமையவேண்டும். எதற்கெடுத்தாலும் தாம் முயல்வதைவிட்டு, கூட்டுறவுகள் அரசின் உதவியை எதிர்நோக்கி நிற்கும் நிலையேற்படாமல் இயக்கத்தை நடத்திவரும் பொறுப்புக் கூட்டுறவாளர்களையே சாரும்.

22. கூட்டுறவின் பிரச்சினைகள்—சாதனைகள்—எதிர்காலம்

கடந்த எழுபதாண்டுகளில் கூட்டுறவு இயக்கம் நம் நாட்டில் ஓரளவுக்கு வளர்ந்து வந்துள்ள போதிலும், அது மேலுஞ் சிறப்பாக உறுதிபெற்று வளர வேண்டிய நிலையிலுள்ளது. இயக்கத்தின் சில பிரிவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படினும் பல பிரிவுகளில் வளர்ச்சி குன்றி நிற்கின்றது. ஐந்தாண்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படத் துவங்கியதிலிருந்து விவசாயக் கடன் வழங்குதுறையிலும், பக்குவப்படுத்தல் அதிலும் குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் துறையிலும், ஊழியர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் துறையிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டது. இருப்பினும் முன்னேற்றம் நாடு முழுவதிலும் ஒரு சீராக அமையவில்லை. எடுத்துக்காட்டாக நாட்டின் கிழக்குப் பிராந்தியத்தில் கூட்டுறவு இயக்கம் சரிவர வளரவில்லை. சில மாநிலங்களில் மட்டும் இயக்கம் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றது. பொதுவாக, இயக்கம் பல இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்குமிடையே, சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கு மிடையே வளர வேண்டிய சூழ்நிலையிலுள்ளது. இவற்றுள் சிலவற்றை இந்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

கூட்டுறவுகளின் நிருவாக அமைப்பு

கூட்டுறவு நிலையங்கள் சேவை மனப்பான்மையை முதன்மையாகக் கொண்டு செயல்பட வேண்டுமென்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். அதே நேரத்தில் கூட்டுறவுகள் நல்ல தொழிலமைப்புகளாகவும் இருத்தல் வேண்டுமென்பதை எவரும் மறுக்க முடியாது. நல்ல தொழிலமைப்பு ஒன்றின் முக்கியமான குறிக்கோள்களில் வாடிக்கையாளருக்கு நல்ல சேவை செய்வதும் ஒன்றாகும். ஆகவே,

கூட்டுறவுகள் நல்ல தொழிலமைப்புகளாகச் செயல்பட்டால் அதே நேரத்தில் உறுப்பினர்களுக்கும் சிறந்த சேவை கிடைக்கும் வாய்ப்பு மிகுதியுண்டு. எந்த ஒரு தொழிலமைப்பிலும் ஆள் வலிமை, பொருள்கள், இயந்திரம், பணம், சந்தையிடுகை, மேலாண்மை ஆகிய இன்றியமையாது தேவைப்படுகின்றன. இந்தக் காரணிகளை மிகவும் உகந்த அளவுக்கு ஒன்று சேர்த்துத் திறமையாகத் தொழில் நடத்தினல்தான் வெற்றி காண முடியும். கூட்டுறவு நிலையங்களில் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்வது இயக்குநர் அவை அல்லது செயற்குழு அல்லது நிருவாகக் குழுவாகும். மேலாண்மையின் மூன்று அடிப்படைச் செயற்பாடுகள் குறிப்பிட்ட நோக்கத்தையடைய முடிவுகளைச் செய்தல், கொள்கைகளை வகுத்தல், அவற்றைச் செயல்படுத்துதலாகும். முதலிரண்டு பணிகளும் உறுப்பினர் பேரவை அல்லது நிருவாகக் குழுவினரால் மேற்கொள்ளப்படுகிறது. கொள்கைகளைச் செயல் படுத்தல் தலைமை நிருவாக அலுவலருடைய பொறுப்பாகும்.

கூட்டுறவுத் துறையில் பொதுவாகக் காணப்படும் குறைபாடு நிருவாகக் குழுவில் இடம் பெறுவோர் பெரும்பாலும் தொழில் நுட்பம் அறியாதவர்களாயிருப்பதேயாகும். நிருவாகக் குழுவில் இடம் பெறுவதில் பேரார்வம் காட்டும் கூட்டுறவாளர்கள், இடம் பெற்றபின் அப்பதவிவழி வசதிகள் துய்ப்பதில் கருத்தாயுள்ளனரே யன்றி அதற்குரிய சீரிய தகுதிகளையுணர்ந்து செயல்படுவதில்லை என்ற கருத்துப் பரவலாக இருந்து வருகிறது. மற்றும் அரசு பங்கு முதல் வழங்கிய கூட்டுறவுகளிலும், புதிதாக நிறுவப்பெறும் கூட்டுறவுகளிலும் இயக்குநர்களை அரசினரே அமர்த்தும் வழக்கம் பல இடங்களில் காணப்படுகிறது. இங்ஙனம் அமர்த்தப் பெறுபவர்களில் பலர் தமது உரிமைகளை அனுபவித்துக் கடமைகளையும் பொறுப்புகளையும் ஏற்க வேண்டா நிலையிலுள்ளனர். இந்நிலை கூட்டுறவு நிலையங்களின் தன்னொழுங்குப் (self - regulation) பாங்கிற்குப் பாதகமாக அமைகிறது. தொழில் நுட்பங்களறிந்தவர்கள் கூட்டுறவுகளின் நிருவாகக் குழுக்களில் இடம் பெறுதல் வேண்டும். இவர்கள்தான் தொழில் மேம்பாட்டிற்கு உகந்த பொருத்தமான முடிவுகளை எடுக்கும் திறம் பெற்றிருப்பர்.

நிருவாகக் குழுவினர் எடுக்கும் முடிவுகளைச் செயல்படுத்தும் பொறுப்புச் செயலர், மேலாளர் அல்லது நிருவாக அலுவலரைச் சாரும். தொழில் நுணுக்கந் தெரிந்தவர்களும், மேலாண்மை வல்லுநரும் கூட்டுறவுகளின்பால் அவ்வளவாக ஈர்க்கப்படுவதில்லை. பெரும்பான்மையான கூட்டுறவுகளில் நல்ல பணியமைப்பு முறை இருப்பதில்லை; தக்க ஊக்குவிப்புத் திட்டங்களுமிருப்பதில்லை,

இதன் காரணமாகக் கூட்டுறவு நிலையங்களின் முதன்மை அலுவலர் பலர் மேலாண்மைத் துறையில் பயிற்சியோ, அனுபவமோ இல்லாதவர்களாக உள்ளனர். இவர்களின் நிருவாகத் திறன் குறைவால் நட்டம் ஏதும் ஏற்படும் நிலை உருவானால் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது அலுவலர்களை இச் சங்கங்களின் முதன்மை அலுவலர்களாகப் பணி செய்ய அனுப்புவார். இங்ஙனம் அரசு அலுவலர்கள் முதன்மை அலுவலர்களாகப் பணியாற்றும் ஏற்பாட்டில் சில நன்மைகள் இருந்தன; பல குறைபாடுகளும் இருந்தன. திறமை மிக்க அலுவலர் சிலர் தாம் நிருவகிக்கும் நிலையங்களை மிகச் செம்மையாக நடத்தி இயக்கத்திற்கு நன்மை பல செய்தனர். விருப்பு வெறுப்பின்றி, கடமையே கண்ணாகக் கொண்டு அலுவலில் ஈடுபாடு காட்டித் தொழில் நுணுக்கங்களை விரைவில் அறிந்து புரிந்துகொண்டு செயல்பட்டு நிலையங்களின் வெற்றிக்குக் காரணமாகவும் சிலர் இருந்தனர். ஆனால், பலர் அரசுத்துறை நிருவாகத்தில் மட்டும் பயிற்சி பெற்றிருந்த காரணத்தாலும், கூட்டுறவு நிலைய நிருவாகத்தில் தனிப்பட்ட ஈடுபாடில்லாத காரணத்தாலும் தாம் தலைமை அலுவலராகச் செயலாற்றி வந்த நிலையங்களின் சிறப்பான முறை நடப்பில் அக்கறையேதும் காட்டவில்லை. நீண்டகாலத்துக்கு ஓர் அரசு அலுவலர் ஒரே நிலையத்தில் தொடர்ந்து பணிபுரியும் வாய்ப்பும் இருப்பதில்லையாகையால் நெடுங்கால நோக்குடன் பார்க்குங்கால் நிலையத்தின் நலம் பாதிக்கப்படுகிறது. இக் குறைபாட்டைப் போக்கக் கூட்டுறவுகளில் சீரான பணிமுறையமைப்பு உருவாகவேண்டும். நிலையங்களின் தேவைக்கேற்ற தகுதி, பயிற்சி பெற்ற நபர்களே அலுவலுக்கு நியமிக்கப்படவேண்டும். உச்சி நிலையங்கள் அலுவலர் திரட்டு (Officers Pool) ஒன்றை உருவாக்க வேண்டும். கூட்டுறவு நிலையங்கள் தமக்குத் தேவையான அலுவலரை இத் திரட்டிலிருந்து பெறவேண்டும். சுருங்கக்கூறின், கூட்டுறவு நிலையங்கள் நிருவாகத் துறையில் தன்னிறைவு பெற வேண்டும்.

கூட்டுறவுகளின் அமைப்பு

உலகெங்கிலும் கூட்டுறவுகள் ஒற்றையமைப்பு (Unitary) பாங்கிலோ அல்லது கூட்டிணைப்பு (Federal)ப் பாங்கிலோ அமைந்துள்ளன. பேரளவு நடவடிக்கைகளின் நன்மைகளைப் பெறவும், தொழிலைத் திறம்பட நடத்தவும் ஒற்றையமைப்பு முறையே மிகவும் உகந்தது என்ற கருத்துப் பரவலாக இருந்து வருகிறது. அதிலும் கூட்டுறவு நுகர்வோர் துறை, சந்தையிடுகைத் துறை, வங்கியத் துறைகளில் ஒற்றையமைப்பு முறை பெரும் நன்மை

யளிக்கவல்லது என்று கருதப்படுகிறது. கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ந்துள்ள பிரிட்டன் ஐரோப்பிய, ஸ்காண்டிநேவிய நாடுகள் போன்ற இடங்களில் ஒற்றையமைப்பு முறை மேலும் மேலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அந் நாடுகளில் கூட்டுறவுகளின் இணைப்புத் தீவிரமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இந்தியாவில் கூட்டுறவுகள் பெரும்பாலும் கூட்டிணைப்பு முறையில் அமைந்துள்ளன. ஆனால், கூட்டிணைப்புக்குத் தனது உறுப்பினர் சங்கங்களின கொள்கைகள் அல்லது நடப்பினைக் கட்டுப்படுத்தும் உரிமையில்லை. இதற்குக் காரணம் கூட்டிணைப்பில் சேர்ந்துள்ள சங்கங்கள் அனைத்தும் தன்னாட்சி உரிமை பெற்று இயங்கும் கூட்டுறவுகளாகும். கூட்டிணைப்பு யோசனையளிக்கும் உயர்மட்ட நிலையமாக மட்டுமே செயல்படுகின்றது. தன்னாட்சி நிலையங்களாயினும் கீழ்மட்டத்திலுள்ள சங்கங்கள் தமது உரிமைகளில் சிலவற்றை உயர்மட்டத்திலுள்ள கூட்டிணைப்புகளுக்கு விட்டுக் கொடுத்தால்தான் அவை மேலும் செம்மையாகச் செயல்பட வாய்ப்பு ஏற்படும். எடுத்துக்காட்டாக, மொத்த விற்பனைப் பண்டசாலைகள் தமது தேவைகளை மாநிலக் கூட்டிணைப்புகளிடமிருந்து வாங்காது வெளியிடங்களில் வாங்கிக்கொள்ள முற்படலாம். இதே போன்று மாநிலக் கூட்டிணைப்புகள் தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டிணைப்பிடமிருந்து தமது தேவைகளை வாங்கிக்கொள்ளாது பிற இடங்களில் வாங்கிக் கொள்ள முற்படலாம். இந்தியக் கூட்டுறவு இயக்கத்தில் இது ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது.

கூட்டுறவு அமைப்பையொட்டிய மற்றொரு பிரச்சினை இயக்கத்தின் சில துறைகளில் காணப்படும் அடுக்குகளின் எண்ணிக்கையாகும். எடுத்துக்காட்டாகக் கடன் துறையில் பொதுவாக மூன்றடுக்கு அமைப்புக் காணப்படுகிறது. அடித்தளத்தில் பிரதம சங்கங்கள், மாவட்ட அளவில் மத்திய வங்கிகள் மாநில அளவில் உச்சி வங்கிகள் என்ற மூன்றடுக்கு அமைப்பு அவசியம் தேவைதானா? ரிசர்வு வங்கி, வங்கி வீதத்திற்கும் குறைவான வட்டிக்கு அளிக்கும் கடனை, விவசாயிகளுக்குப் பிரதம சங்கங்கள் கடனாகத் தரும்போது 4% கூடுதல் வட்டி வசூலிக்கப் படுகின்றதே; இந்த அடுக்கில் ஒரு கட்டம் குறைந்தால் விவசாயி மேலும் குறைந்த வட்டிக்குக் கடன் பெறும் வாய்ப்பு ஏற்படக் கூடுமே என்று சிலர் வாதிடுகின்றனர். அங்ஙனம் ஓர் அடுக்கைக் குறைத்துவிட்டால் மேற்பார்வை ஏற்பாடுகள் சரிவர இல்லாது போய்விடும்; ஒருங்கிணைப்புப் பணியை மேற்கொள்ள ஒரு நிலையம்

இல்லாது போய்விடும் எனச் சிலர் மறுவாதம் செய்கின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எளிதன்று.

கூட்டுறவு அமைப்பில் இணைப்பு இருவகைகளில் நிகழலாம். ஒன்று செங்குத்து இணைப்பு—பிரதம சங்கங்கள் ஒன்று சேர்ந்து மத்திய அமைப்பினை உருவாக்குவது. மற்றது படுகிடை இணைப்பு (Horizontal integration)—ஒரேவகைத் தொழிலை மேற்கொண்டுள்ள சங்கங்களை இணைவது அல்லது ஒரு சங்கம் பல தொழில்களை மேற்கொள்வது.

செங்குத்து இணைப்பில் உருவாகும் மத்திய அமைப்புகள் கூட்டிணைப்பு அல்லது இணையம் (Federation) என்று பெயர் பெறுகின்றன. கூட்டிணைப்பின்வழி ஏற்படும் இணைப்பின் பாங்கு இடத்துக்கு இடம் மாறுபடுவதுண்டு. சில பிரதம சங்கங்கள் மேல் நிலையிலுள்ள அமைப்புகளை முழுதும் நம்பியிருப்பதுமுண்டு. இச் சங்கங்கள், மேல் அமைப்புகளின் ஒன்று சேர்த்தளிக்கும் அல்லது வழங்கும் முகவர்களாகச் செயலாற்றுகின்றன. தமக்கென்று பெரும் பொறுப்புகளை இச் சங்கங்கள் ஏற்பதில்லை. ஏறத்தாழ கிளைகள் போல மட்டுமே இவை செயல்படுகின்றன. சில இடங்களில் மேல் நிலையிலுள்ள சங்கங்கள் பிரதம சங்கங்களின் தொழிற் கூட்டாளிகள் என்ற நிலையிலுள்ளன. கூட்டுறவுச் சங்கமொன்றுக்கும் அதன் கூட்டிணைப்புக்கும் எவ்வளவு நெருக்கமான இணைப்பு அல்லது தொடர்பு இருக்கிறதென்பது பல காரணிகளைப் பொருத்துள்ளது. பிரதம சங்கம் வளம்பெற்றுள்ள நிலை; மேல்நிலையிலுள்ள சங்கத்தில் பிரதம சங்கம் ஈடுபடுத்தியிருக்கும் நிதி; இரு நிலையங்களுக்குமிடையேயான போக்குவரத்துத் தொடர்பு; மேல் நிலையிலுள்ள சங்கம் பிரதம சங்கத்திற்கு அளிக்கும் சேவைகள், வசதிகள்; மேல்நிலையிலுள்ள அமைப்புப் பிரதம சங்கங்களின்மீது அதிகாரம் செலுத்தும் பாங்கு; இருநிலைச் சங்கங்களிடையே சட்டமுறை விதிகளின்படியான தொடர்பு ஆகிய இக் காரணிகளாகும். பிரதம சங்கங்களுக்கும் மேல்நிலை அமைப்புகளுக்குமிடையேயுள்ள உகந்த இணைப்பு நிலையில், பிரதம சங்கங்கள் பெருமளவு தன்னாட்சி உரிமை கொண்டாடாமலும், மேல்நிலை அமைப்புகள் பிரதம சங்கங்களைத் தமக்குக் கீழ்ப்பட்ட நிலையங்களென நடத்தாமலும் இருக்க வேண்டும்.

படுகிடை இணைப்பு முறையில் சிறு சங்கங்கள் ஒன்றோடொன்றிணைந்து வளமார்ந்த சங்கமாக உருவாகுவது பொதுவாகக் காணப்படும் நிலையாகும். இங்ஙனம் இணையும் சங்கங்கள்

பிரதம நிலையில் செயல்படும் ஒரேவகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனவாகக் காணப்படுகின்றன. இணையும் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட அவற்றின் உறுப்பினர்கள் இணைப்பின் நன்மையை முழுதும் உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும். பேரளவுத் தொழிலின் நன்மைகளைப் பெறவேண்டி உலகெங்கும் இவ்வகை இணைப்பு மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ள பிரதம சங்கங்கள் தமது தனித்தன்மையை இழக்காது ஒன்றோடொன்று ஒருவகை இணைப்பை மேற்கொண்டு செயல்படுவது படுகிடை இணைப்பு முறையின் ஒருவகை என்று கூறப்படலாம். எடுத்துக்காட்டாகக் கடன சங்கங்களும் சந்தையிடுகைச் சங்கங்களும் இணைந்து செயல்படுவதுண்டு. சந்தையிடுகைச் சங்கங்கள், உறுப்பினர் அளிக்கும் விளைபொருளை விற்று அதன்வழி கிடைக்கும் தொகையைக் கொண்டு அவ்வுறுப்பினர் கடன் சங்கத்திற்குத் திருப்பியளிக்க வேண்டிய கடனை அடைக்க ஏற்பாடு செய்வதுண்டு. இவ்வகை இணைப்புக் கூட்டுறவு இயக்கத்திற்கு வலுவளிப்பதாயுள்ளதெனினும் நடைமுறையில் இதைச் செயல்படுத்துவதில் பல இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன.

ஒரு நோக்குச் சங்கமா? பலநோக்குச் சங்கமா?

குறிப்பிட்ட ஒரு பணி அல்லது நடவடிக்கையை மட்டும் மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கம் ஒரு நோக்குச் சங்கம் (Single purpose society) என்று கூறப்படுகிறது. கூட்டுறவு இயக்கம் துவங்கிய காலத்தில் சங்கங்களனைத்தும் ஒரு நோக்கு சங்கங்களாகவே இருந்தன. நாளடைவில், குறிப்பாக 1930-க்குப் பின்னர் ஏற்பட்ட உலகமந்தத்தின் காரணமாகப் பலநோக்குச் சங்கங்கள் உருவாகலாயின. முக்கியமாகக் கிராமப்புறங்களில் விவசாயிகளின் வேளாண்மைத் தேவைகளை நிறைவு செய்ய பல நோக்குச் சங்கங்கள் உகந்தனவெனக் கருதப்பட்டன.

பல நாடுகளிலுள்ள விவசாயக் கூட்டுறவுகள் பெரும்பாலும் பல நோக்குச் சங்கங்களாகவே காணப்படுகின்றன. பல நோக்குக் கூட்டுறவுகளின் நன்மைகளாவன: (i) பல நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுப்பினர்கள் சிறிதளவே பங்கு முதல் வழங்குகின்றனர். (ii) உறுப்பினர்களிடையேயான தொடர்பு நெருக்கமடைந்து வலுப்பெறுகிறது. (iii) கிராம மக்களனைவரும் ஒரு சங்கத்தில் உறுப்பினராகும்நிலை ஏற்படுகிறது. (iv) நிருவாகச் செலவு

மொத்தத்தில் குறைவாக இருக்கிறது. (v) சங்கம் வளமார்ந்த நிலையையடையும் வாய்ப்பு மிகுதியாக இருக்கிறது. (vi) சிறப்புத் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற நபர்களை அமர்த்த இயலும். (vii) சங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் திடம் பெறு கிறது. (viii) ஒரு நடவடிக்கையைச் சார்ந்த பல நடவடிக்கைகள் ஒன்று சேர்ந்து மேற்கொள்ளப்படுவதால் நடவடிக்கைகளனைத்தும் ஊக்குவிக்கப் பெறுகின்றன. (ix) பல நோக்கு விவசாயக் கூட்டுறவு, விவசாயிகளின் வாழ்வில் முக்கியதோர் இடத்தைப் பெற்றிருக் கிறது. (x) கடன் பயன்பாட்டை மேற்பார்வை செய்வதும், கடனைத் திருப்பி வசூலிப்பதும் எளிதாகின்றன. (xi) ஒருங்கிணைந்த வேளாண்மைத் திட்டங்கள் எளிதாக மேற்கொள்ளப்படலாம். (xii) கடனளிப்பு, உள்ளீடுகள் வழங்கல் (Supply of inputs), சந்தையிடுகை போன்ற பல பணிகளை ஒரே சங்கம் செய்து வருவ தால் சங்கத்தில் ரொக்க நடவடிக்கைகள் குறைவாகவேயுள்ளன.

பலநோக்குச் சங்கங்களில் பல குறைபாடுகளும் காணப்படு கின்றன. அவற்றுள் சில : (அ) நிருவாகத்தினர் ஏற்கவேண்டிய பொறுப்புப் பெரிதாக அமைகிறது. (ஆ) சங்கம் மேற்கொள்ளும் பல தொழில்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஒரு மேலாளரைக் கண்டு பிடிப்பது அரிது. (இ) பல தொழில்களில் கவனம் செலுத்தப்படும் போது சில வேண்டிய அளவு கவனம் பெறாது போக இடமிருக் கிறது. (ஈ) பற்பலவகை நடவடிக்கைகளுக்குக் கணக்கு வைப்பதில் பல சிக்கல்கள் எழுவதுண்டு. (உ) சிலவகை நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவைத் துல்லியமாகக் கணக்கிடுவது கடினமாகிறது. (ஊ) வியாபார நடவடிக்கைகளையும், வங்கிய நடவடிக்கைகளையும் சேர்த்து நடத்துவதில் ஆபத்து இருக்கிறதென்பதை யாவரு முணர்வர். (எ) உறுப்பினர்களுக்கிடையே ஒருவர் நலன் பிறி தொருவரின் நலனுக்கு முரணாக இருக்கும் நிலையும் ஏற்படலாம்.

மேற்கண்ட நன்மை குறைபாடுகளைக் கருத்திலிருத்தி நாட்டின் மரபினையொட்டியும், உறுப்பினரின் தேவைகளையொட்டியும், சங்கத்தின் அளவையொட்டியும் ஒரு நோக்குச் சங்கமோ அல்லது பலநோக்குச் சங்கமோ துவங்க முடிவு எடுக்கவேண்டும். குறிப் பிட்ட ஓர் அளவுக்குமேல் பெரிதாக உள்ள சங்கமாயின் ஒரு நோக்குச் சங்கமே உகந்தது. சங்கம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை தொழில் நுட்பம் மிகுந்ததாக விருப்பின் சிறப்புத் தேர்ச்சிபெற்ற அலுவலர் நியமிக்கப்பட வேண்டியிருக்கும். இந் நிலையிலும் ஒருநோக்குச் சங்கமே பொருத்தமானதாக இருக்கும். வளர்ச்சியடையா நாடுகளில் சிறப்புத் தேர்ச்சிக் குன்றிய நிலையில் பலநோக்குச் சங்கங்கள் அமைக்கும் வாய்ப்பு நிரம்ப உள்ளது.

பலநோக்குச் சங்கங்களில் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளு முன், முன்னரே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நிலை பேறுக்கம் பெற்றுச் சரிவர நடந்து வருகின்றனவா என்று உறுதி செய்து கொள்ளவேண்டும். பலநோக்குச் சங்கங்களை நிருவாகம் செய்ய பயிற்சி பெற்ற பெரும் ஈடுபாடுள்ள நிருவாகர்கள் அவசியம் தேவை.

வரையறுத்த பொறுப்பா? வரையறுப் பொறுப்பா?

பலகாலமாகக் கூட்டுறவு இயக்கத்தில் வாதிடப்பட்டு வரும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று கூட்டுறவுச் சங்கங்கள் வரையறுத்த பொறுப்புடன் அமைக்கப்படுவது உகந்ததா அல்லது வரையறுப் பொறுப்பு உகந்ததா என்பதாகும். கூட்டுறவுச் சங்கங்கள் தமது உறுப்பினர் பொறுப்பை வரையறுப் பொறுப்பாகவோ அல்லது வரையறுத்த பொறுப்பாகவோ நிருணயிக்கலாம். பொறுப்பு என்று குறிப்பிடப்படுவது கூட்டுறவுச் சங்கத்தின் கடன், நட்டம் அல்லது சொத்தில் ஏற்பட்ட குறைபாட்டினை அச் சங்கம் கலைக்கப்படுகையில் சரிக்கட்டும் பற்றுப் பிணைப்பே (Obligation) ஆகும். வரையறுப் பொறுப்புள்ள சங்கம் கலைக்கப் படுகையில், அச் சங்கத்தின் சொத்துகளில் காணப்படும் குறை அளவினை வழங்கி நிறைவு செய்யும் பொறுப்பு உறுப்பினர்களைச் சாரும். வரையறுத்த பொறுப்பு மூன்றுவகையில் அமைவதுண்டு. பங்குகளின் மதிப்பளவுக்குப் பொறுப்பு வரையறுக்கப்படுவது ஒருவகை. பங்குகளின் மதிப்புப் போன்று இத்தனைமடங்கு அளவுக்கு என்று பொறுப்பு வரையறுக்கப்படுவது இரண்டாம் வகை. பொறுப்புறுதியளித்த அளவைப் பொருத்துப் பொறுப்பு வரையறுக்கப்படுவது மூன்றும் வகை.

கடனாளர் (Creditor)களுக்கு நம்பிக்கையூட்டி வைப்புகளை ஈர்க்கவும், உறுப்பினரிடையே விழிப்புணர்ச்சியும் மொத்தப் பொறுப்பு மனப்பான்மையும் உண்டாக்கவும், சங்கம் நட்டமடைந் தால் பொறுப்புத் தம்மைச் சாரும் என்ற அச்சத்தின் காரணமாகத் திறனுடன் நிருவாகம் செய்யவும் வரையறுப் பொறுப்புப் பயன்படு கிறது. ஆனால், வகையுள்ள மக்கள் வரையறுப் பொறுப்பை வரவேற்பதில்லை. ஒரு பாவமும் அறியாத தாம், தமது சொந்த சொத்துகளனைத்தையும் இழக்கவும் நேருமென வசதியுள்ள உறுப்பினர் அஞ்சுகின்றனர். செயல் எல்லை மிகப் பெரும் பரப்பாக வுள்ள இடத்தும், உறுப்பினர் மிகுதியாகவுள்ள இடத்தும் உறுப் பினரிடையே கண்காணிப்பும் ஒருவரைப்பற்றி யொருவர் அறிந் திருத்தலும் எதிர்பார்க்க முடியாது. இந் நிலையில் வரையறுப்

பொறுப்பை மேற்கொள்வது இயலாது. தற்காலத்தில் நம் நாட்டில் காணப்படும் போக்குச் சங்கங்கள் வரையறுத்த பொறுப் புள்ளதாக நிறுவப்படுவதேயாகும். சட்டம் இரண்டுவகை பொறுப்புமுள்ள கூட்டுறவுகள் நிறுவப்பெற வகை செய்துள்ளது.

உற்பத்தியாளர் சங்கங்கள்—நுகர்வோர் சங்கங்கள்

நுகர்வோர் கூட்டுறவுகள் நன்கு வளர்ச்சியுற்ற சில நாடுகளில் உற்பத்தியாளர் சங்கங்களும், நுகர்வோர் சங்கங்களும் பண்டங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இது நல்லதுதானா? இருவகைக் கூட்டுறவுகளும் ஒரே துறை உற்பத்தியில் ஈடுபட வேண்டுமா என்று விவாதிக்கப்பட்டு வருகிறது. நுகர்வோர் கூட்டுறவுகள் பண்டங்களை உற்பத்தி செய்யத் தலைப்பட்டது. தம் பயன் கருதியேயன்றி இலாபம் ஈட்டுவதற்கல்ல. எல்லா வகையான மக்களும் நுகர்வோர் என்ற நிலையிலிருப்பதால் நுகர்வோர் சங்கங்களில் எவரும் உறுப்பினராகச் சேர்ந்து பயன்பெறலாம். பேரளவு உற்பத்தியின் நன்மைகளைப்பெற பெரிய தொழிற் சாலைகளை நுகர்வோர் சங்கங்கள் நிறுவலாம்.

உற்பத்தியாளர் சங்கங்களில் தொழிலாளர்கள்—குறிப்பிட்ட பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மட்டுமே உறுப்பினராகலாம். இச் சங்கங்களின் நோக்கம் உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாத்து இலாபத்துடன் உற்பத்தியை மேற்கொண்டு வருவதேயாகும்.

உற்பத்தியாளர் சங்கங்கள் தாம் உற்பத்தி செய்யும் பண்டங்களை உயர்ந்த விலைக்கு விற்றால் நுகர்வோர் நலன் பாதிக்கப்படுகிறது. எனவே, நுகர்வோர் நலனைப் பாதுகாக்க நுகர்வோர் சங்கங்கள் உற்பத்தித் துறையில் ஈடுபடுகின்றன. உற்பத்தியாளர் சங்கங்கள் இதை வன்மையாகக் கண்டிக்கின்றன. பண்ட உற்பத்தி உற்பத்தியாளர் சங்கங்கள் மட்டுமே மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கை என்றும் நுகர்வோர் சங்கங்கள் இதில் ஈடுபடுவது பொருத்தமாகாது என்றும் வாதிடப்படுகிறது. இங்கிலாந்து கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கத்திற்கும், அயர் லாந்திய விவசாய அமைப்புச் சங்கத்திற்குமிடையே இது ஒரு பெரும் பிரச்சினையாக வளர்ந்து கடைசியில் ஒரு போராட்டமே நிகழ்ந்தது. இந்தப் போராட்டத்திற்குக் காரணம் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு மலிவான விலையில் வெண்ணெய் உற்பத்தி செய்யத் துவங்கியதாகும். வெண்ணெய் உற்பத்தி, விவசாய அமைப்புச் சங்கத்தின் உரிமை

யென்றும் இத் துறையில் நுகர்வோர் அமைப்பான மொத்த விற்பனைச் சங்கம் ஈடுபடுவது தவறென்றும் விவசாய அமைப்புச் சங்கம் வாதிட்டது. இவ்வாதமே இறுதியில் வெற்றி பெற்றது. டென்மார்க் போன்ற நாடுகளில் இரு துறைகளிலுமுள்ள சங்கங்களும் உற்பத்தியில் ஈடுபட்டுச் சுமுகமாகவே செயல்பட்டு வருகின்றனவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இது போன்ற பிரச்சினை இன்னும் எழவில்லையென்றே கூறலாம். இதற்குக் காரணம் நுகர்வோர் கூட்டுறவுகளுக்கும், உற்பத்தியாளர் கூட்டுறவுகளுக்கும் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகள் துவங்க ஏராளமான வாய்ப்புகள் இருந்து வருவதேதான். விவசாய விளைபொருளைப் பக்குவப்படுத்த சந்தையிடுகைச் சங்கங்களும், பக்குவப் படுத்தல் சங்கங்களும் பல தொழிற்சாலைகளை நம் நாட்டில் நிறுவி வருவதைக் காணலாம். நுகர்வோர் சங்கங்கள் தமது தொழிலில் பயன்படுத்தத் தரமான, தூய்மையான பண்டங்களைத் தயாரிக்க தொழிற்சாலைகள் நிறுவுவதில்தவறில்லையென்றே கருதப்படுகிறது. எண்ணெய் ஆட்டுதல், காப்பித்தூள் தயாரித்தல், பருப்பத் தோலகற்றல், மசாலா தூள் தயாரித்தல் போன்ற தொழில்களை நுகர்வோர் கூட்டுறவுகள் மேற்கொள்வது பொருத்தமே. அருகில் முன்னரே ஒரு கூட்டுறவுச் சங்கம் இதே தொழிலை நிறுவி நடத்தி வந்தால் நுகர்வோர் கூட்டுறவு புதியதொரு தொழிற்சாலை நிறுவி போட்டியில் ஈடுபடுவது தவிர்க்கப்படவேண்டும். கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு இருத்தல் மிகவும் இன்றியமையாதது ஒருவரையொருவர் நசுக்கும் போட்டியில் ஈடுபடுவது நல்லதல்ல.

கூட்டுறவு வியாபாரமும் அரசினர் வியாபாரமும்

அண்மையில் வியாபாரத் துறையில் அரசினர் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்ததே. தனியார் வியாபாரிகள் நாட்டின் நலனையும் சமுதாய நலனையும் கருத்தில் கொள்ளாது தம் இலாபத்தைப் பெருக்குவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருப்பர். பற்றாக்குறைப் பண்டங்களை மக்களுக்கு நியாயமான முறையில் பகிர்ந்து வழங்க அரசினரே வியாபாரத்தை மேற்கொள்ளுவதே அரசினர் இத் துறையிலிறங்கக் காரணமாகும். மக்களுக்குச் சேவை செய்வதே இந் நடவடிக்கையின் நோக்கமாகும். உற்பத்தி முனைகளுக்குச் சென்று பண்டங்களை மிகவும் ஆதாயமான விலைக்கு வாங்கி, இடை நிலையர் தரகுகளை நீக்கி, நயமான விலைக்கு நுகர்வோருக்குத் தரமான பண்டங்களை வழங்க அரசு ஏற்பாடு செய்கின்றது. இந்த ஏற்பாடுகளை மேற்கொள்ள தனிக்

கூட்டுரு அமைப்பதுமுண்டு. உற்பத்தியாளர் கூட்டுறவுகளும், நுகர்வோர் கூட்டுறவுகளும் அரசுடன் கூடிச் செயல்பட்டு இத் துறையில் நல்ல சேவை செய்ய வாய்ப்புண்டு. அரசு உற்பத்தி யாளர் கூட்டுறவுகளிடமிருந்து தமக்கு வேண்டிய பண்டங்களை வாங்குதல் வழியும், நுகர்வோர் கூட்டுறவுகள்வழி வழங்கலையும் மேற்கொள்ளலாம். அயல் நாட்டு வியாபாரத்திலும் அரசு கூட்டுறவுகளுக்கு முக்கிய இடமளிக்கலாம். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும் பண்டங்களைக் கூட்டுறவுகளிலிருந்து பெறலாம். இறக்குமதியான பண்டங்களைக் கூட்டுறவு நுகர் வோர் சங்கங்கள்வழி வழங்கலாம்.

சில மாநிலங்களில் அரசினர் பற்றுக்குறைப் பண்டங்களையும் இன்றியமையாப் பொருள்களையும் மக்களுக்குப் பகிர்ந்து வழங்க நுகர்வோர் கூட்டுறவுகளைப் பயன்படுத்தாது தாமே நியாயவிலைக் கடைகளைத் திறந்துள்ளனர். அரசினரே நேரடி வியாபாரம் மேற்கொள்வதற்கு முன் கூட்டுறவுகள்வழி இப் பண்டங்கள் வழங்கப்பட்டு வந்த இடங்களில், அரசினர் நேரடியாக நியாய விலைக் கடைகளைத் திறந்தது அங்குள்ள கூட்டுறவுகளின் தொழிலை ஓரளவுக்குப் பாதிக்கலாயிற்று.

அரசு வியாபாரத்தைவிட கூட்டுறவு முறை வியாபாரம் பல நன்மைகளைப் பயக்கக் கூடியதாகும். நுகர்வோரின் விருப்புக்கேற்ப பொருள்களை வாங்கி விற்கும் பாங்கு கூட்டுறவில் அமையும். அரசு வியாபாரத்தில் வழங்கப்படும் பொருளை வாங்கிக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. நுகர்வோர் கூட்டுறவுகளின் நிருவாகம் அதன் உறுப்பினரிடம் அடங்குவதால் நிருவாகத்தினர் ஆங்காங்கு காணப்படும் குறைபாடுகளை அவ்வப்போது திருத்திவிட வழி யுண்டு. அரசு நிருவாகத்தில் இதில் தாமதமேற்பட இடமுண்டு. கூட்டுறவு வியாபாரத்தில் வியாபாரத்துக்கு வேண்டிய முதலில் ஓரளவு தொகை உறுப்பினர்களிடமிருந்தும், காப்பு நிதி யிலிருந்தும் கிடைக்கிறது. அரசினர் வியாபாரத்தில், மொத்த முதலும் அரசின் நிதிகளிலிருந்து பெற வேண்டியுள்ளது. கூட்டுறவுகள் நுகர்வோருக்குத் தேவையான பண்டங்களனைத் தையும் வழங்குகின்றன. போட்டி உலகில் காணப்படும் இலாபத் தையும் வீண் செலவையும் நீக்கிக் கூட்டுறவு முறையில் பண்டங்களை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்கின்றன. அரசு வியாபாரம் சமுதாயத் தேவையினை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. கூட்டுறவு வியாபாரத்தில் நடைமுறைச் செலவுகளில் சிக்கனம் ஏற்பட நிரம்ப வாய்ப்புகள் உண்டு. இவ் வாய்ப்பு அரசு வியாபாரத்தில் கிட்டுவதில்லை.

கூட்டுறவின் சாதனைகள்

கூட்டுறவு இயக்கம் நம் நாட்டு மக்களுக்குப் பல நன்மைகளை யளித்துள்ளது; பல சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளது. இவற்றை முதலில் காண்போம்:

பொருளாதாரத்துறையில் நன்மைகள்

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் துவங்குவதற்குக் காரணமாக அமைந்ததே கிராம மக்களின் பெருங்கடன் சுமைதான். கிராமப்புற மக்கள், வட்டித் தொழிலரின் பிடியில் சிக்கி மீள முடியாது தவித்து, தமது சொந்த நிலத்தையும் பறிகொடுத்து, கூலியாட்களாக அதே நிலத்தில் வேலை செய்யும் அவல நிலையைப் போக்க ஏற்பட்டது நம் கூட்டுறவு இயக்கம். இக் குறிக்கோள் ஓரளவுக்கு நிறைவேறியுள்ளது என உறுதியாகக் கூறலாம். வேளாண்மைத் தொழிலுக்கு இன்று பெருமளவில் கடன் வசதிகளை யளித்து உழவரின் மேம்பாட்டுக்கு முழு மூச்சுடன் பாடுபடுவது கூட்டுறவு என்ருல் அது மிகையாகாது. கிராமக் கடன் தேவை களில் 40%-க்கும் மிகுதியான அளவு கூட்டுறவுகளால் நிறைவு செய்யப்படுகிறதென்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எளிய வட்டிக்குக் கிராமப்புற மக்களுக்குக் கடன் வழங்கி யுதவுவது கூட்டுறவு. கூட்டுறவுகள் கடனளிக்கத் துவங்கியது முதல் கிராமப்புறங்களில் வட்டித் தொழிலர் வாங்கிவந்த மிகக் கடுமையான வட்டிவீதம்கூட குறைந்து வரலாயிற்று என்று அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழுவும் கூட குறிப் பிட்டுள்ளது.

கடனில் பிறந்து, கடனிடையே வளர்ந்து, கடன் வைத்து விட்டு இறப்பவர் இந்திய உழவர் என்ற முற்கால நிலைமை மாறி விட்டது. இன்றைய உழவர் வட்டித் தொழிலரின் தயவை நம்பி வாழவில்லை. வட்டித் தொழிலர்-வியாபாரிகள் பிடியினின்று நடுத்தர விவசாயிகளை விடுவித்துள்ள பெருமை கூட்டுறவுகளைச் சாரும். இது மட்டுமல்ல. விவசாயிக்கு உற்பத்தி நோக்கமும் வளர்ச்சி நோக்கமும் கற்பித்தது கூட்டுறவே.

உற்பத்தி நோக்கற்ற வீண் செலவுகளுக்குக் கடனளிப்பது கூட்டுறவுத் துறையில் பெரும்பாலும் நிறுத்தப்பட்டு விட்டது என்றே கூறவேண்டும். இதனால் விவசாயிகள் தாம் வாங்கும் கடனை உற்பத்தி நோக்கங்களுக்கு மட்டுமே பயன் படுத்தித் தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

விவசாயத் துறையில் காணப்படும் 'பசுமைப் புரட்சி' (Green Revolution)த் திட்டங்களின் வெற்றிக்குக் கூட்டுறவு அடிப்படையாக விளங்கி வருகிறது. விவசாயிகளிடையே புதிய பண்ணை முறைகளை அறிமுகப்படுத்தி அவர்களுக்குப் பொறுக்கான விதைகள், பொருத்தமான உரங்கள், உறுதியான கருவிகள், பூச்சிக் கொல்லி மருந்துகள் முதலிய அளித்து விவசாய முறையைச் செம்மைப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி வருவதில் கூட்டுறவுக்குப் பெரும்பங்கு உண்டு.

உழைத்து உற்பத்தி செய்த விவசாய விளைபொருளை நல்ல முறையில் சந்தையிலிட்டு விவசாயிகளுக்கு நல்ல விலை பெற்றுத் தரும் சீரிய பணியினைக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் செய்து வருகின்றன.

கிராமப்புறத்தில் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாகக் கூட்டுறவுப் பக்குவப்படுத்துச் சங்கங்கள் விளங்கி வருகின்றன வென்று கூறினால் அது மிகையாகாது. கூட்டுறவுப் பக்குவப் படுத்துச் சங்கங்கள் நிறுவப்பெற்றுள்ள இடங்களில் பொருளாதாரமே மாற்றமடைந்து வலுப்பெற்று வருவது கண்கூடாகக் கண்ட உண்மையாகும். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நிறுவப் பெற்ற இடங்களில் வேளாண்மையைச் சார்ந்த பல தொழில்கள், தொழிற்சாலைகள் உருவாகி, அந்த இடங்களைச் சுற்றி புதியதோர் உயிரோட்டம் உருவாகிவருவதை நாடெங்கிலும் காணலாம். இதன்வழி கிராமப் புறங்களில் புதியதொரு தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் சமுதாயத்தினர் உருவாகியுள்ளனர். சர்க்கரைத் தொழிலில் கிடைக்கும் துணைப் பொருள்களைப் பயன்படுத்திச் சாராயம், மருந்துவகை, காகிதம்முதலிய தயாரிக்கும் தொழில்கள் ஆங்காங்கு நிறுவப்படலாயின. மற்றும் கோழிப்பண்ணை, பன்றிப் பண்ணை, நீரேற்றுப்பாசனத் திட்டம் போன்ற பலப்பல முயற்சிகளும் மேற்கொள்ளப்படலாயின.

நுகர்வோர் கூட்டுறவுகள் நெருக்கடி காலத்திலும் பற்றாக் குறை காலத்திலும் இன்றியமையாப் பொருள்களை நியாயமான விலைக்கு வழங்கி நுகர்வோரை தனிப்பட்ட வியாபாரிகளின் சுரண்டலிலிருந்து பாதுகாத்து வந்துள்ளது. கூட்டுறவுச் சிறப்பங்காடிகளும் பண்டசாலைகளும் தனியார் கடைகளில் விலைகளைக் குறைக்குமளவுக்குச் சந்தையில் முக்கியத்துவம் பெற்று மேலும் வளர்ந்த வண்ணமிருக்கின்றன. தற்காலத்தில் கூட்டுறவுப் பண்டசாலைகள் பெரும்பாலும் சந்தை விலையைவிடச் சற்றுக் குறைந்த விலைக்கே பண்டங்களை விற்பதால் விலைவாசிகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றன.

பால்பண்ணைத் துறையிலும் கூட்டுறவுகள் விரைவாக முன்னேறி வருகின்றன. குஜராத் மாநிலத்திலுள்ள அமுல் பால் பண்ணை ஆசியாக் கண்டத்திலேயே மிகச் சிறந்ததெனக் கருதப் பட்டு வருகிறது. அமுல் வெண்ணெய், அமுல் குழந்தையுணவு என்பன இந்தியா முழுவதும் ஒவ்வோர் இல்லத்திலும் கேட்கப் படும் பண்டங்களாக விளங்கி வருகின்றன.

குடிசைத் தொழிலிலும், சிற்றளவுத் தொழிலிலும் ஈடு பட்டுள்ள கைவினைஞர், திறமை படைத்த—திறமை பெறாத் தொழி லாளிகள், நெசவாளர்கள், மட்பாண்டத் தொழிலர், தோல் பத னிடுந் தொழிலர், காலணி செய்யுந் தொழிலர் ஆகிய பலப்பல சமுதாயத்தில் வலிவற்ற பின்தங்கிய மக்களுக்கு வேலைவாய்ப் பளித்து அவர்களுக்கு உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்தித் திறனை வளர்க்கவும், போட்டியைச் சமாளித்து உற்பத்தியான பொருளை நல்ல விலைக்குச் சந்தையிலிடவும் தொழிற் கூட்டுறவுகள் பேருதவி புரிந்துள்ளன.

நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளும், ஊழியர் நாணயச் சங்கங் களும் சிக்கனம், சேமிப்பு ஆகிய பண்புகளை வளர்த்து வருகின்றன. நகர்ப்புற மக்களின் சேமிப்புகளைத் திரட்டுவதில் இவை முக்கிய பங்கேற்று வருகின்றன.

பட்டித் தொட்டிகளிலும் பாமரர் வாழ் குக்கிராமங்களிலும் வங்கியப் பழக்கம் ஏற்படுவதற்கு அடிப்படைச் சேவையைச் செய்வது கூட்டுறவுகளே.

மேற்கண்ட பொருளாதார நன்மைகள் ஒருபுறமிருக்க கூட்டுறவுகள் வேறுபல சமுதாய நன்மைகளையும் நல்லொழுக்கங் களையும் மக்களுக்கு அளித்துள்ளது. அமைதியாக ஒன்றுகூடி ஒற்றுமையாக வாழ மக்களுக்குக் கூட்டுறவு கற்பிக்கிறது. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு', 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற ஆன்றோர் வாக்கினைச் செயல்படுத்திக் காட்டுகிறது கூட்டுறவு. தன்னம்பிக்கை, தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி ஆகிய பண்புகளை வளர்த்து மக்களுக்கு நேர்மை, நாணயம், சுறு சுறுப்பு, விழிப்புணர்ச்சி, பொறுப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவ மளிக்கிறது. வன்முறையை ஒதுக்கி இன்முறையைக் கையாண்டு, தகாத செயல் முறைகளைக் கைக்கொள்ளாது நேர்மையைக் கடைப்பிடித்து மக்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக்கொள்ள வழிவகுப்பது கூட்டுறவு.

கல்வி பரப்புது கூட்டுறவு

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அதன் உறுப்பினர்களுக்கு ஒரு கல்விக்கூடமாகத் திகழ்கின்றது. தொழிலை நடத்துவதற்குப் பயிற்சியும், கணக்கு வழக்குகளை வைத்திருக்கப் பயிற்சியும் கூட்டுறவு அளிக்கிறது. கூட்டுறவுத் தத்துவங்களையும் நடைமுறைகளையும் அறிந்து கொள்ள வேட்கையினைக் கிளறிவிடுகின்றது. சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற நிருவாகம் எங்ஙனம் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும் கற்பிக்கிறது கூட்டுறவு. நல்லதொரு கூட்டுறவுச் சங்கம் அதன் உறுப்பினரனைவருக்கும் தொடர்ந்து கல்வி புகட்டும் சாதனமாகத் திகழ்கின்றது. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பொதுவாகச் செய்திகள் நிரம்ப அறிந்தவர்களாகவும், பரந்த மனப்பான்மையுள்ளவர்களாகவும் திகழ்கின்றனர்.

கூட்டுறவு நிலையங்கள் மக்களாட்சி முறையில் நிருவகிக்கப் படுவதால் அவற்றின் நிருவாகத்துடன் தொடர்பு கொண்டவர்கள் ஒரு தன்னாட்சி நிறுவனத்தை எங்ஙனம் நடத்துவது என்பதில் பயிற்சி பெறுகின்றனர். இதன்வழி நாட்டில் புதிய தலைவர்கள் உருவாகின்றனர். மக்களிடையே பொறுப்புணர்ச்சி வளர்கிறது. பொருளாதாரத் திட்டங்கள் வகுத்தலையும் நிறைவேற்றலையும் மக்களாட்சி வயப்படுத்த மிகச் சிறந்த சாதனமாக விளங்குவது கூட்டுறவு. கூட்டுறவு நிலையங்கள் மக்களைச் சிறந்த குடிமகன்களாக்குகின்றது என்று கூறுதல் சாலவும் பொருந்தும்.

இவ்வளவு நன்மைகளைச் சமுதாயத்துக்கு அளித்துவரும் இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாட்டில் பல குறைகளும் காணப்படுகின்றன. இந்தக் குறைகள் எவ்வளவு விரைவாக நீக்கப் படுகின்றனவென்பதைப் பொருத்தே கூட்டுறவின் எதிர்காலம் அமையும் என்று கூறினால் அது மிகையாகாது.

குறைபாடுகளும் அவற்றைக் களைய யோசனைகளும்:

கூட்டுறவு ஒரு மிகச் சிறந்த இலட்சியமே; ஆனால் அதை அடைவது பெரும்பாடாக இருக்கிறது. கூட்டுறவு வளர்ச்சி எல்லா இடங்களிலும் ஒரே அளவினதாக அமையாதது இயக்கத்தின் ஒரு குறை பாடாகும். சிறு விவசாயிகளுக்கு இயக்கம் எதிர்பார்த்த அளவுக்குப் பயனளிக்கவில்லை என்பது மற்றொரு குறை. பெரும்பான்மை விவசாயிகள் இன்னும் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து அதன் பயனைப்பெற முனவராதிருக்கின்றனர். கிராமத்திலுள்ள சில செல்வாக்குள்ள குடும்பங்கள் மட்டுமே கூட்டுறவு

இயக்கத்தின் பயனை அனுபவித்து வருகின்றன. இந் நிலை மாற வேண்டுமெனப் பல ஆராய்ச்சிக் குழுக்கள் பரிந்துரைத்துள்ளன. இதையொட்டியே சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமும், கடைநிலை விவசாயிகள்-விவசாயத் தொழிலாளிகள் முகமையும் 1967-70இல் நிறுவப்பெற்றன.

விவசாயத்தின்மீதான தேசீயக் குழு (National Commission on Agriculture) தமது இடைக்கால அறிக்கையில் சிறிய, கடைநிலை விவசாயிகளின் கடன் தேவைகளை நிறைவு செய்ய விவசாயிகள் சேவைச் சங்கங்கள் (Farmers Service Societies) நிறுவப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தது. இவ் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த சேவைகளையளிப்பதே இச் சங்கங்களின் நோக்கமாகும். விவசாயிகள் சேவைக் கூட்டுறவுகள் தமது உறுப்பினர்களுக்குக் குறுகிய கால, மத்திய கால, நீண்டகாலக் கடன்களை வழங்கும். இச் சங்கங்கள் விவசாய உள்ளீடுகளை வழங்குவதுடன் சந்தைபிடுகைப் பணிகளையும் மேற்கொள்ளும் கூட்டுறவு வங்கிகள் அல்லது வாணிக வங்கிகளுடன் இச் சங்கங்கள் இணைக்கப்படும். 1973 ஜூன் திங்களில் இந்திய ரிசர்வு வங்கி விவசாயிகள் சேவைச் சங்கம் அமைப்பது பற்றி பொதுத்துறை வங்கிகளின் விவசாய நிதியப் பிரிவு தலைவர்களுடன் கலந்தாலோசித்தது. பெரிய மாநிலங்களில் முன்னோடியாக இச் சங்கங்களை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இச் சங்கங்களின் பங்கு முதலுக்குப் பெயரளவுக்கு ஒரு தொகையை வங்கிகள் வழங்கும் சங்கத்தின் நிருவாக இயக்குநரின் ஊதியத்தை மூன்று ஆண்டு காலம்வரை வங்கிகளே ஏற்கும். மாநில அரசு சங்கமொன்றுக்கு ரூ. 50,000 மாவது பங்கு முதலாக வழங்குமெனவும், தொழில் நுட்ப ஊழியரின் மீதாகும் உதவித்தொகையாக வழங்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. இச் சங்கங்களுக்கு நிதியுதவியளிக்கும் வாணிக வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி 5% வட்டி வீதத்தில் மறுநிதி வழங்க ஒப்பியுள்ளது. இந்த ஏற்பாடு கூட்டுறவுகள்தான் சிறு விவசாயிகளுக்குச் சரியான வகையில் உதவியளிக்க முடியும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறது. சிறு விவசாயி உய்ய கூட்டுறவே சிறந்த சாதனம் என்பதில் சிறிதும் ஐயத்திற்கிடமில்லை.

இந்தியக் கூட்டுறவு இயக்கம் எதிர்பார்த்த அளவுக்கு வளராதமைக்குப் பல காரணங்களுண்டு.

இயக்கத்தில் வலிவற்ற வளமற்றச் சங்கங்கள் (Non-viable Societies) பலப்பல இன்னும் இருந்து வருவது ஒரு பெரிய குறைபாடாகும். வளமற்றச் சங்கங்களைப் பெரிய சங்கங்களுடன்

இணைப்பதையும், மிகவும் நலிந்து கிடக்கும் சங்கங்களைக் கலைத்து விடுவதையும் எல்லோரும் எல்லா நிலையிலும் ஒப்புக்கொண்ட போதிலும் இத் திட்டம் முழு மனதுடன் நிறைவேற்றப் படவில்லை. இதன் காரணமாகப் பல மாநிலங்களில் கூட்டுறவு இயக்கம் மிகவும் நலிந்த நிலையிலுள்ளது. இங்ஙனம் நலிந்து நிற்கும் நிலையில் இவை கிராமப் பொருளாதாரத்தைச் சீரமைத்து விவசாய உற்பத்தியை எங்ஙனம் பெருக்கும்?

மற்றொரு கவலைதரும் செய்தி இயக்கத்தில் செயலற்றுக் கிடக்கும் சங்கங்களின் எண்ணிகையாகும். நாட்டிலுள்ள கூட்டுறவு களில் சற்றேறப்ப 25% சங்கங்கள் செயலற்றுக் கிடக்கின்றன. ஏட்டளவில் இவை சங்கமென இருந்து வருகின்றனவேயன்றி நடைமுறையில் இவை எதற்கும் பயனில்லாத நிலையிலுள்ளன. இவற்றில் சற்றும் உயிர்பெற்று இயங்கத் துவங்கும் வாய்ப் பில்லாதவற்றைக் கலைக்கவும், சீரமைக்கப்பட்டால் இயங்கும் தகைமையுள்ளவற்றைச் சீரமைக்கவும் தீவிர முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வளவு சங்கங்கள் செயல்படா நிலையிலிருப்பது கூட்டுறவுகளில் போலிச் சங்கங்கள் இருப்பதைக் காட்டுகிறது என்று மிர்தா குழு குறிப்பிட்டது. இயக்கம் தனது உறுப்பினர்களுக்குத் தேவையான சேவையைத் தரும் ஆற்றல் பெற்றிருத்தல் அவசியம். தன்னுதவியின் அடிப்படையில் உண்மை யான கூட்டுறவு இயக்கம் வளர, இந்தச் செயலற்றுக் கிடக்கும் சங்கங்களைப் பற்றிய பிரச்சினையை ஏதேனும் ஒருவழியில் தீர்ப்பது மிக அவசியம்.

மகாராட்டிரம், தமிழ் நாடு, குஜராத், பஞ்சாப் போன்ற மிகச் சில மாநிலங்களில் மட்டுமே கூட்டுறவு இயக்கம் ஓரளவுக்கு வளர்ந்துள்ளது. பிற மாநிலங்களில், குறிப்பாகக் கிழக்கு மாநிலங் களில் கூட்டுறவு வளர்ச்சி மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. சில மாநிலங்களில் வளர்ச்சி, பகுதிக்குப் பகுதி மாறுபட்டுக் காணப்படுகிறது.

சிக்கனமும் சேமிப்பும் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய பண்பு களாகக் கருதப்பட்ட போதிலும் இந்தியக் கூட்டுறவுகள் மக்களிடையே இச் செய்தியைப் பரப்பி கணிசமான அளவு நிதி யினைத் திரட்ட முயலவில்லை. பொதுமக்களிடமிருந்து கூட்டுறவு வங்கிகள் இதுவரை பெற்றுள்ள வைப்புத் தொகை திட்டமிட்ட முயற்சிகளின் பலனாக வந்ததெனக் கூற இயலாது. ஆனால், இந்த நிலை நீடிக்க முடியாது. ரிசர்வு வங்கியும் சலுகை வட்டியில் கூட்டுறவுகளுக்குக் கடன்தர, அக் கூட்டுறவுகள் வைப்புத்

தொகையைக் குறிப்பிட்ட ஓர் அளவுக்கேனும் திரட்ட வேண்டும் என்று ஜூலை 1973 முதல் புதிய கடனளிப்புக் கொள்கை யொன்றை உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரசு உதவியை மிகவும் பெரிய அளவுக்குக் கூட்டுறவு இயக்கம் நாடி நிற்பது நம் நாட்டில் காணக்கிடக்கும் நிலையாகும். இயக்கம் துவங்கி ஏறத்தாழ எழுபதாண்டுகள் ஆயினும் நாளுக்கு நாள் கூட்டுறவுகள் மேலும் மேலும் பல வகைகளில் அரசின் உதவியை எதிர்நோக்கி நிற்பது ஒரு குறைபாடாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. துவக்க நிலையில் அரசினர் உதவி தேவை யென்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால், தொடர்ந்து உதவி கோரி நிற்பது இயக்கத்தின் வலிவற்ற நிலையைக் காட்டுகிறது. இதனால் பல கூட்டுறவாளர்கள் இந்தியக் கூட்டுறவு இயக்கத்தை அரசு துறையின் நடவடிக்கைகளில் ஒரு பகுதியெனவும் நகை யாடுகின்றனர், இந்நிலை மாறவேண்டும். ஜப்பானில் உள்ள நிலைபோன்று கூட்டுறவுகள் அரசினருக்குப் பல வகைகளில் உதவி செய்யும் நிலை வரவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தையே கலக்கி வரும் பெரும் பிரச்சினை தவணை கடந்த கடன்கள் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருவது தான். இது பெரும்பாலும் எல்லா மாநிலங்களிலும் பரவியுள்ள ஒரு கொடிய நோயாகக் காணப்படுகிறது. இந்த நோயை விரைவில் தீர்க்காவிடில் கூட்டுறவு இயக்கத்திற்கே இது கேடாக வளரக்கூடும். விவசாய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும் இன்றைய நிலையில், அரசு விவசாயிகளுக்குப் பல சலுகைகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்கி வரும் இன்றைய நிலையில் தவணை கடந்த கடன்கள் வளர்ந்து கொண்டு வருவது சிக்கனம், தன்னுதவி, முன்னுணர்வு போன்ற பண்புகளற்ற விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடனளிப்பதன் தீமைகளை எடுத்துக்காட்டுகிறது. கடனளிக்குமுன் அது எங்ஙனம் பயன் படுத்தப்படவேண்டும் என்பது குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டுவதன் அவசியத்தையும் இது உணர்த்து கிறது.

இயக்கத்தில் உண்மையான நம்பிக்கையும், பற்றும் இல்லாத பல்வகைப்பட்ட செல்வாக்குள்ள நபர்கள் கூட்டுறவுகளில் முக்கிய பங்கேற்று வருவதும் இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது. கூட்டுறவு இயக்கம் அரசியலில் நுழைய விழைவோருக்கு அடிப்படையாக விளங்குகிறது என்று கருதுவர் சிலர். இங்ஙனம் கூட்டுறவில் ஈடுபாடில்லாத தலைவர்கள்

கூட்டுறவைத் தம் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர் என்று குற்றஞ்சாட்டுவோரும் உளர். கூட்டுறவு இயக்கம் உயர்ந்த குறிக்கோள்களையுடைய மக்கள் இயக்கம். இந்த இயக்கத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் இதில் ஈடுபட்டுள்ளோரின் நாணயத்தையும், நேர்மையான உழைப்பையும் திறமையையும் பொருத்திருக்கிறது. ஆகவே, அரசினர் விருப்பு வெறுப்பின்றி ஊன்றிய நலமிகளின் (vested interests) ஆதிக்கத்தை ஒடுக்க வேண்டும்.

தகுதி வாய்ந்த, திறமை மிகுந்த, பயிற்சி பெற்ற நபர்களே கூட்டுறவு நிருவாகத்தைச் செம்மையாக நடத்திவர முடியும். இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் கண்டது போன்று கூட்டுறவுகளின் நிருவாகக் குழுவினர் பலர், அக்கூட்டுறவு மேற்கொண்டுள்ள தொழிலைப்பற்றிய அறிவும் அனுபவமுமில்லாதிருக்கக் கூடும். இவர்களுக்கெல்லாம் தக்க யோசனைகளையும், அறிவுரைகளையும் கூறி வழிகாட்டியாக விளங்கும் பொறுப்பு நிருவாக அலுவலர்களுக்கு மிகுதியுண்டு. ஆனால், பல மாநிலங்களில், பயிற்சியும் தகுதியும் இல்லாத பலர் வேறு காரணங்களுக்காகக் கூட்டுறவுகளில் ஊழியராக நியமிக்கப் பெறுகின்றனர். இவர்களின் திறமையற்ற செயற்பாட்டாலும், நிருவாகக் குழுவினரின் முறைகேடான செயல்களாலும் கூட்டுறவுகளில் கையாடல், மோசடி, களவு போன்ற தீய நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடக்கின்றன. 1970-71இல் மட்டும் 4,522 கையாடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கையாடல்களில் தொடர்புற்ற தொகை ரூ. 3·38 கோடியாகும். முறைகேடான நிருவாகம் காரணமாக 1970-71இல் 1,668 சங்கங்களின் நிருவாகக் குழுக்கள் மேற்கடப்பு (Supersession of Managing Committee) செய்யப்பட்டன. இக்குறைகள் அறவே களையப்படவேண்டும். இல்லையெனில் இவை இயக்கத்தையே அழித்துவிடும். கூட்டுறவு இயக்கத்திற்கு எதிரி யாரும் வெளியில் இருப்பதாக நினைக்க வேண்டாம்; வெளியில் இருக்கக்கூடிய எதிரியைவிட கூட்டுறவுகளுக்குள் இருந்துகொண்டே நச்சாக விளங்கும் மக்களே கூட்டுறவின் எதிரிகளாவர் என்று பேராசிரியர் மாத்தூர் கூறியுள்ளார்.

மக்கள் மனப்பாங்கைத் தயார் செய்து, கூட்டுறவு நிலையங்களை அவர்களது தேவைக்கேற்றவாறு நிறுவினால் இயக்கம் வளரும். மக்களின் ஈடுபாடும் மிகுதியாக இருக்கும். ஆனால், சில குறியீடுகளை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு சங்கங்களை நிறுவினால், பெயரளவில் அவை சங்கமாக இருக்குமேயன்றி

உண்மையில் இயங்கும் சங்கங்களாக வளரமாட்டா. இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் குறைபாடுகளுள் ஒன்று இயக்கம் தரத்தில் வளருவதைவிடப் பன்மடங்கு விரைவாக எண்ணிக்கையில் வளர்ந்ததாகும். அரசினர் ஊழியர்களை அக்கறையெடுத்துப் பணியாற்றும்படி தூண்ட குறியீடுகளை நிருணயித்து இத்தனை நபர்கள் சேர்க்கப்படவேண்டும்; இத்தனைச் சங்கங்கள் துவக்கப் பெறவேண்டுமெனக் குறிப்பிடுவதுண்டு. ஆனால், இதனால் ஏற்படும் விளைவு அவசரத்தில் சங்கங்கள் தக்க அடிப்படையின்றித் துவக்கப் பெற்றன. இங்ஙனம் குறியீடுகளை எட்டுவதற்கெனத் துவக்கப் பெற்ற சங்கங்கள் சில ஏட்டில் பதிவு பெற்றும் இயங்கத் துவங்கவில்லை; சில துவங்கிய சில காலத்தில் மூடப்பெற்றன; சில சரிவர நடைபெறாது போயின. பொறுமையாக மக்களையணுகி, அவர்கள் மனதில் கூட்டுறவு வித்திட்டு; அது வளரும்வரை பொறுத்திருந்து பின்னர் நல்லதொரு சூழ்நிலையில் சங்கம் துவக்கப்பெற்றால் வெற்றியுடன் நடைபெறும் வாய்ப்பு மிகுதியிருக்கும். மற்றும் மக்களுக்குக் கூட்டுறவின்வழி கிடைக்கக் கூடிய கடனுதவி, சலுகை, உதவித்தொகை, மானியங்கள் முதலியபற்றிப் பெரும் நம்பிக்கையளித்துவிட்டு, சங்கம் துவங்கிய பின்னர் அவற்றை விரைவில் அளிக்க இயலாது போனால் அவர்களுக்குக் கூட்டுறவின் மீது வெறுப்பும் அவநம்பிக்கையுமேற்பட்டுச் சங்கம் கடைத்தேறாமல் போக வாய்ப்புண்டு. இது குறித்தும் அலுவலர்களும் முன்னின்று முயல்வோரும் உன்னிப்பாக இருத்தல் நன்று.

கூட்டுறவு இயக்கத்தில் காணப்படும் விரைவான வளர்ச்சிக்கேற்ப, கூட்டுறவுத் தலைவர்கள் உருவாகாதது கூட்டுறவு இயக்கத்தின் பெருங்குறையாகக் கருதப்படுகிறது. சில இடங்களில் தவிர, இயக்கத்தில் முழு மூச்சுடன் பணிபுரியும் தலைவர்களைத் தேடிப் பிடிப்பதும் மிக அரிதாகிவிட்டது. இவ்வியக்கம் உயர் நெறியும், நாணயமும், நேர்மையும் மிக்கோரைத் தன்பால் ஈர்க்கத் தவறிவிட்டது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிலையாகும்.

கூட்டுறவு போன்ற ஒரு பொருளாதார—சமுதாய இயக்கம் வளர, மலர தக்க ஒரு பொருளாதார-சமுதாயச் சூழ்நிலை தேவைப்படுகிறது. இவ்வகையான சூழ்நிலை நம்நாட்டில் இன்னும் உருவாகவில்லையென்றே கூறவேண்டியிருக்கிறது. கிராமப்புறத்திலுள்ள கூட்டுறவுச் சங்க உறுப்பினரான விவசாயி பல போட்டிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. தனியார்துறை வணிகர் ஒருபுறம், ஊரிலுள்ள பெருநிலக்கிழார் ஒருபுறம், ஊரில் செயல்படும் வட்டித்தொழிலர், வியாபாரி ஒருபுறம் எனப் பலப்பல கோணங்களிலிருந்து பல சக்திகள் விவசாயியைத் தாக்குகின்றன.

இவற்றிற்கெல்லாம் ஈடுகொடுத்துச் சிறிய அல்லது நடுத்தர விவசாயி கூட்டுறவைப் பற்றுக்கோடாகக் கொண்டிருப்பது எளிதல்ல. கிராமத்திலுள்ள செல்வாக்குப் பெற்றவர்களின் ஆதிக்கம் குறைந்து, அரசு எளிய மக்களின் கருவியாகத் திகழ்ந் தால் இச்சூழ்நிலை ஓரளவுக்கு மாறலாம்.

சில மாநிலங்கள் தவிர, பெரும்பாலான மாநிலங்களில் மேற் பார்வை, ஆய்வு, தணிக்கை ஏற்பாடுகள் போதுமான அளவுக்கு இல்லை. மேற்பார்வைச் சரியாக அமையாத இடங்களில் கடன் சரியான நோக்கங்களுக்குப் பயன் படுத்தப்படாது போயின. ஆய்வு, காலக்கிரமப்படி மேற்கொள்ள ஆள்பலம் இல்லாததால் தவறுகளையும், குற்றங்களையும் அவ்வப்போது கண்டுபிடித்து நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாத நிலையும் காணப்படுகிறது. தணிக்கை காலமுறைப்படி நடந்தால் குறைபாடுகளை உடனுக் குடன் களைந்து மீண்டும் அதேகுறை நிகழாது பார்த்துக் கொள்ள லாம். ஆனால், பல காரணங்களால் தணிக்கை காலந்தாழ்த்து நடைபெறுவதால் அதன் முக்கியத்துவமே குறைந்து போகிறது. குறைகள் தீர்க்கப்பட்டனவா என்று தொடர்ந்து கண்காணிப் பதும் அரிதாகிறது. இதனால் சங்க நிருவாகத்தின் தரம் குறைகிறது.

அரசினரின் ஆதிக்கம் மிகுதியாக இருப்பது கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு இடைஞ்சலாக உள்ளது என்று கூறுவாரும் உளர். முன் அத்தியாயத்தில் இது குறித்து விளக்கமாகப் பேசியுள்ளோம்.

பல கூட்டுறவு நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புற்றனவென்பதை உணராது ஒவ்வொரு வகைச் சங்கமும் தன்பணி மட்டுமே சிறப்பானது என்று கருதி பிற சங்கங்களோடு தொடர்பு கொள்ளாது ஒதுங்கியிருப்பின் திட்டங்கள் எதிர் பார்க்கும் பலனையளிக்கமாட்டா. கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவும் நெருங்கிய தொடர்பும் இருப்பது மிகமிக அவசியம்.

நம்நாட்டு அரசியலமைப்புச் சட்டப்படி கூட்டுறவு மாநில அரசினரின் பொறுப்பாக உள்ளது. பல மாநிலங்கள் பலவகைக் கொள்கைகளை வகுத்துக் கூட்டுறவு இயக்கத்தை வளர்த்து வரு கின்றன. மத்திய அரசு மாநில அரசினருடன் கலந்து அவற்றின் ஒப்புதலின் பேரில் எல்லா மாநிலங்களும் கடைப்பிடிக்க வேண்டிய முடிவுகளை எடுக்கின்றது. இவற்றைச் செயல்படுத்தும் பாங்கு மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றது. சில நேரங்களில் கொள்கைகள் உறுதியாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. முன்னுக் குப்பின் முரணான கொள்கைகள் முடிவு செய்யப்படுவதுமுண்டு இவற்றின் விளைவு கொள்கைகளைச் செயல்படுத்துவதில் தாமதமே.

இயக்க வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தது கூட்டுறவு நிலையங்கள் கடைப்பிடிக்கும் நடைமுறை விதிகளும் கொள்கைகளும் கூட என்று கூறுவதில் தவறில்லை. எடுத்துக்காட்டாக, பயிர்க் கடன் திட்டம் சரிவர அமுல் செய்யப்படவில்லை. காலத்தில் கடனளிப்பதில்லை; போதுமான உள்ளீடுகளை வழங்குவதில்லை; திருப்பிச் செலுத்துக் காலம் சரிவர நிருணயிக்கப்படுவதில்லை; கடனுக்குப் பிணையாக விளையவிருக்கும் பயிரை ஏற்றுக் கொள்ளாது நிலத்தை அடைமானம் கோருவதுண்டு. எல்லாவற்றையும் விட கூட்டுறவுக் கல்வி பெரும்பாலோருக்கு அளிக்கப்படாதது மாபெருங் குறையாகும்.

இயக்கம் வளமாக வளர யோசனைகள்

இன்றைய தேவை இயக்கத்தை மேலும் விரிவு படுத்துவதல்ல; ஆனால், முன்னரே இருந்து வரும் இயக்கத்தை வலுப்படுத்தி உறுதிப்படுத்துவதாகும். மக்களின் தேவையையொட்டி இயக்கம் வளரவேண்டும். இயக்கத்தின் வளர்ச்சி அதன் தரத்தைப் பொருத்துள்ளதேயன்றி எண்ணிக்கையைப் பொருத்திருக்கவில்லை என்பதை உணர்ந்து செயல்படுதல் இன்றியமையாதது.

நலிந்த, வளமற்ற சங்கங்களை உடனடியாக வளமார்ந்த சங்கங்களாக மாற்றியமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் உயிர்ப்பிக்க இயலாத செயலற்ற சங்கங்களைக் கலைத்து விட வேண்டும். பிரதம சங்கங்கள் உரம்பெற்று வளமடைந்தால் தான் இயக்கமே வலுவடையும்.

நன்முறையில் இயக்கம் வளர அதில் ஊன்றிய நலமி (Vested interests) களின் ஆதிக்கத்தை ஒடுக்கவேண்டும். இந்தக் குறிக்கோளையடைய 1968 இல் சென்னையில் நடந்த முதலமைச்சர்கள், மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டில் பல பரிந்துரைகள் செய்யப்பட்டன. அவற்றுள் சில :

(1) வட்டித் தொழிலர்கள், வியாபாரிகள், பிற இடைநிலையர் கூட்டுறவுகளில் சேர்த்துக் கொள்ளப்படலாகாது என்று சட்டமுறையாகத் தடையிருக்க வேண்டும்.

(2) மேற்கூறிய தடைக்குட்பட்டுப் பிரதம சங்கங்களில் எவரும் உறுப்பினராகச் சேர வாய்ப்பிருக்கவேண்டும்.

(3) சிறு விவசாயிகளுக்கும், பின் தங்கிய வகுப்பினருக்கும் நிருவாக அவையில் இடம் ஒதுக்கப்படவேண்டும்.

(4) ஒரு கூட்டுறவு நிலையத்தில் தொடர்ந்து இரண்டுமுறை மட்டுமே ஒருவர் பதவி வகிக்கலாம்; ஒரே நேரத்தில் இரண்டு நிலையங்களில் மட்டுமே பதவி வகித்திருக்கலாம்.

(5) சங்கத்தில் பதவி வகிப்போருக்குக் கடன் வழங்குவதில் சில விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

(6) காலமுறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலை நடத்த, சுதந்திரமான ஓர் ஏற்பாடு இருக்கவேண்டும்.

(7) தணிக்கைக்குத் தேவையான ஏற்பாடுகள் இருக்க வேண்டும்.

(8) ஊழியர் பணிமுறை, தேர்ந்தெடுப்பு, பயிற்சி முதலிய குறித்து நல்ல ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

பல மாநில அரசுகள் இப் பரிந்துரைகளையொட்டி நடவடிக்கைகள் எடுத்துள்ளன. சில நடவடிக்கைகளுக்குக் கடும் எதிர்ப்பு இருந்து வருவதால் இதில் வேகமான முன்னேற்றம் காணப் படவில்லை. ஒரு நிலையத்தில் தொடர்ந்து இருபதவிக் காலத்திற்கு மேல் ஒருவர் பதவி வகிக்கலாகாது என்ற பரிந்துரை பெருங் கண்டனத்திற்கு ஆளாகியது.

பொதுநலத் தொண்டில் ஈடுபாடுமிக்க ஊழியர், தன் னலத்தை ஒதுக்கி மக்கள் நலத்தைப் பெரிதாகக் கருதும் மனப் பாங்குப் படைத்தோர், அப்பழுக்கற்ற நேர்மை, நாணயம், ஒழுக்கம் உள்ளோர், தன்னம்பிக்கையைக் கைத்துணையாகக் கொண்ட துணிவாளர் கூட்டுறவு இயக்கத்தில் தலைமைப் பதவி களை ஏற்று நடத்தவேண்டும்.

நிருவாகம் சீராக நடைபெற்றால்தான் கூட்டுறவு சிறந்து வளரும். ஆகவே, இயக்குநர் அவை, தலைமை அலுவலர், பிற அதிகாரிகள் ஆகியோரின் அதிகாரங்கள் இன்னவின்ன என்பதைத் தெளிவாக வரையறுத்தல் இன்றியமையாதது. இயக்குநர் அவை கொள்கைகளை வகுத்து அவைச் சரிவர செயல் படுத்தப் படுகின்றனவாவென்று மட்டும் கவனித்துவர வேண்டும். தலைமை அலுவலர் கொள்கைகளைச் செயல்படுத்தும் பொறுப்பினை மேற் கொள்ளவேண்டும். நிருவாகக் குழுவினர் தலைமை அலுவலரின் அன்றாட நடவடிக்கைகளில் தலையிடக் கூடாது.

தவணை கடந்த கடன்கள் இயக்கத்தின் புற்றுநோயாகக் கருதப்படுகிறது. உறுதியான நடவடிக்கையெடுத்து, வேண்டு மென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாது ஏய்த்து வரும் நபர்களைச்

சாடாவ்டின் ஒழுங்கான பேர்வழிகளும் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் அக்கறை காட்டமாட்டார்கள். கடனையும் சந்தையிடுகையினையும் இணைத்துத் தவணை கடந்த கடன்கள் உருவாகாதவாறு கவனித்துக் கொள்வது அவசியம். பயிர்க் கடன் திட்டத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் பிறழாது கடைப்பிடித்தால் தவணை கடந்த கடன் ஏற்பட இடமே கிடையாது என்பது குறிப்பிடத் தக்கது.

கூட்டுறவு நிலையங்களிடையே நெருங்கிய தொடர்பும் கூட்டுறவும் அவசியம் தேவை. பலப்பல நடவடிக்கைகளையும் தொழில்களையும் மேற்கொண்டுள்ள கூட்டுறவுகள் அனைத்தும் சேர்ந்தே கூட்டுறவு இயக்கம் எனப்பெயர் பெறுகிறது. கூட்டுறவுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் வழிதான் கூட்டுறவு இயக்கம் முழுமை பெற்றுச் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்யமுடியும். உற்பத்தி முதலாக, கடன், விற்பனை, பக்குவப்படுத்தல், பாதுகாத்து வைத்தல்வழி நுகர்வோருக்கு வழங்குதல் ஈறுகவுள்ள நடவடிக்கைகளனைத்தும் கூட்டுறவுத் துறையில் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் கூட்டுறவு இயக்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதாரப் பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என்று நான்காம் திட்ட ஏடு குறிப்பிடுகிறது.

பொருளாதார வலிவற்ற விவசாயிகளுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கும் உதவி செய்யும் பொருட்டுக் கூட்டுறவு இயக்கம் துவங்கப்பெற்றது. ஆகவே, வாழ்க்கையில் வளமற்ற இம் மக்களுக்குப் பேருதவி புரியும் வகையில் கடன் கொள்கைகளும், விதிமுறைகளும் வகுக்கப்படவேண்டும். அளவான நிதிவசதிகள் உள்ள சங்கங்கள் சிறு விவசாயிகளுக்குக் கடனளிப்பதில் முன்னுரிமை தரவேண்டும். பெரிய விவசாயிகளைவிடச் சிறிது அதிக விகித அளவில் சிறிய விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படலாம். திருப்பிச் செலுத்தும் தவணை குறித்தும் சிறு விவசாயிகளுக்குத் தனி விதிமுறைகள் வகுக்கப்படலாம். மேற்கண்ட பரிந்துரைகளை அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு அளித்துள்ளது. சிறு விவசாயி சொந்த நிலமில்லாத விவசாயி என்றால் கடன் கொடுக்கத் தயங்கும் நிலைமாறி அவர்களுக்கும் கூட்டுறவுகள் கணிசமான அளவு கடன் வழங்கும் நிலை விரைவில் உருவாக வேண்டும்.

வைப்புத் திரட்டுவதில் கூட்டுறவுகள் பெருமுயற்சி மேற்கொள்ளவேண்டும். சிக்கனத்துக்கும் சேமிப்புக்கும் முக்கிய

இடமளிக்கும் கூட்டுறவுகள், இவற்றை மறந்து உயர்நிதிய முகமைகளிடமிருந்து கிடைக்கும் நிதிவசதியைக் கொண்டே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது பழங்கதையாக மாற வேண்டும். கிராமப்புறங்களில் காணப்படும் வளர்ச்சிக்குக் கூட்டுறவுகள் பெரிதும் காரணமாகும். கூட்டுறவுக் கடன் வசதிகளைப் பெற்று வளம் பெற்றுவரும் விவசாயிகள் தமது உபரி வருவாயைக் கூட்டுறவுகளில் வைப்புகளாக வைத்திருக்கும் கடப்பாடு உடையவர்கள். எனினும், இந் நிகழ்ச்சி நம் நாட்டில் காண அரிதாகவுள்ளது. கூட்டுறவு வங்கிகள் மக்களின் நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் பெற்றால்தான் வைப்புகள் மிகுதியாகத் திரட்ட முடியும். போட்டி மிகுந்த இன்றைய வங்கிய உலகில் மக்களுக்குப் பல்வகைச் சேவைகளையளித்தே வங்கிகள் வைப்புகளை ஈர்க்கின்றன. வாடிக்கையருக்கு நல்ல பல சேவைகளையளிப்பதன் வழியாகக் கூட்டுறவுகள் பெருமளவுக்கு வைப்புகளைத் திரட்டும் வாய்ப்புப் பெற்றுள்ளன. வாணிக வங்கிகள் புதுப்புது திட்டங்களைத் தீட்டி மக்களைக் கவர்வது போன்று கூட்டுறவுகளும் வைப்புகளைத் திரட்டத் திட்டமிட்டுச் செயல்படுவது மிகவும் அவசியம்.

கூட்டுறவு இயக்கத்தைச் செம்மையான பாதையில் நடத்திச் செல்லச் சிறந்த கொள்கைகள் அவ்வப்போது வகுக்கப் பெறுகின்றன. ஆனால், பலநேரம் வகுக்கப்பெற்ற கொள்கைகள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு அதன் விளைவுகள் தீர ஆராயப்படுவதில்லை. இதுமட்டுமல்லாமல், ஒரு கொள்கை செயல்படுத்தப் பட்டுவரும்பொழுதே அதில் மாற்றமேற்பட்டு இறுதியில் குழப்ப நிலையேற்படுவதுமுண்டு. அடிக்கடி கொள்கைகளை மாற்றுவது இயக்கத்தின் வளர்ச்சிக்கு உகந்ததன்று.

கொள்கைகளைச் செயல்படுத்தும் அலுவலருக்கு அக் கொள்கையின் பொருளும் உட்கிடக்கையும் புரிந்திருப்பது மட்டும் போதாது. அவர்களுக்கு அதில் உண்மையான நம்பிக்கையும், தம்மை அதில் முழுதும் ஈடுபடுத்திக்கொள்ளும் மனப்பாங்கும் இருத்தல்வேண்டும்.

கூட்டுறவுக் கல்விக்கும் பயிற்சிக்கும் மிகப்பெரும் முக்கியத்துவமளித்தால்தான் கூட்டுறவு இயக்கம் சீரான முறையில் செம்மையாக வளரும். கூட்டுறவுச் சங்கங்கள் சரிவரச் செயல்பட மிகவும் தேவைப்படுவது முறையான கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும் ஆகும். சங்கங்களைத் தொடங்குமுன் உறுப்பினர் கல்வி அளிக்கப்பட்டால் போலிச் சங்கங்கள் நிறுவப்பெறுவது ஓரளவுக்குத்

தடுக்கப்படும் என்று கூட்டுறவின் மீதான குழு (1965) கருதியது. கூட்டுறவுக் கல்வியின் அடிப்படையில்தான் கூட்டுறவு இயக்கம் வளர இயலும் என்பதை மேலும் வற்புறுத்த வேண்டுவதில்லை.

மக்கள் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி என்ன நினைக்கின்றனர்? 1971-ல் நடைபெற்ற ஆறும் இந்தியக் கூட்டுறவு மாநாட்டிற்குத் தயாரிக்கப்பட்ட பின்னணிக் கட்டுரையொன்றில் இந்தியத் தேசீயக் கூட்டுறவு ஒன்றியம் இது குறித்துக் கூறியுள்ளது கூர்ந்து நோக்கத்தக்கது:

இன்று கூட்டுறவைப்பற்றி மக்கள் எவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கின்றனர்; அஃது எவ்வாறு நினைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கேள்வியைக் குறித்து இயக்கம் தீவிரமாகச் சிந்தனை செய்யவேண்டும். கூட்டுறவு இயக்கத்துக்கு எதிரிகள் எனக் கருதப்படாத பல இடங்களிலும், பல மக்கள் பிரிவுகளிலும் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி இருந்துவரும் எண்ணம், இருந்து வரக்கூடாத எண்ணமாக இருப்பதைக் கூட்டுறவாளர்கள், தம் மனநிறைவு அல்லது தற்புகழ்ச்சி காரணமாகக் காண மறுக்கலாகாது. கூட்டுறவு இயக்கம் (1) நலிந்து, திறமையற்று முறைகேடான நிருவாகத்தால் பாதிக்கப்பட்டுள்ளது; (2) அரசியலின் கைப்பாவையாக உள்ளபடியால், பொருளாதார நலனையும் தொழில் கண்ணோட்டத்தையும்விட அரசியல் கண்ணோட்டத்திற்கே கூட்டுறவுகள் முதலிடம் அளிக்கின்றன; (3) இயக்கத்தின் செயற்பாட்டில் ஈடுபாடும் அதைச் சீராகப் புரிந்துகொள்ளும் தன்மையுமில்லாத, அலுவல்பற்றற்ற பிரிவின் வளர்ச்சியைக் காணப்பொறுக்காத பண்புள்ள அரசு அலுவலர்களையே நம்பியிருக்கிறது; (4) ஊன்றிய நலமிகளின் ஆதிக்கத்தில் அகப்பட்டு உள்ளது என்றெல்லாம் சிலநேரம் கருதப்படுகிறது. நாட்டில் இருந்துவரும் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிய நினைப்பு, பல கோணங்களில் நோக்கும்போது மாற்றியமைக்கப்படுவதற்குப் பல்வகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மேற்கண்ட கூற்று, கூட்டுறவின் எதிர்காலம் சிறப்பாக அமைய, கூட்டுறவைப்பற்றி மக்களிடம் பொதுவாகப் பரவியுள்ள எண்ணம் மாற்றப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது. இதை யார் செய்வது என்ற கேள்வி எழுகிறது. இது கூட்டுறவாளர்களின் தலையாய கடமையாகும். கூட்டுறவுத் தத்துவங்கள் மிகச் சிறந்தன; மக்கள் நல்வாழ்வுக்கு ஆணிவேராக அமைவன; உலக சமுதாயம் அமைய அடிகோலும் தன்மையன என்றெல்லாம்

எங்கும் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இத் தத்துவங்களை உண்மையாக, முழுமையாகக் கடைப்பிடிப்பதில் மட்டுமே குறைபாடுகள் எழுகின்றன. பொருளாதார வலிமையற்ற மக்களை மிகப் பெரும்பான்மையினராகக் கொண்ட நம்நாட்டில் கூட்டுறவு இயக்கத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலமுண்டு. நம்நாட்டின் பல பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்கக் கூடிய திறமை கூட்டுறவு இயக்கத்திற்கு மட்டுமே உண்டு. மக்களாட்சி முறையில் சமதர்ம சமுதாயத்தை அடையும் குறிக்கோளுடன் பொருளாதாரப் பயணத்தை மேற்கொண்டுள்ள நமக்குக் கூட்டுறவு இயக்கம் நம்பிக்கையான ஓர் ஊர்தி போன்று செயல்படுகிறது. ஊர்தியின் ஓட்டுநர், நடத்துநராகக் கூட்டுறவுத் தலைவர்களும், பயணிகளாகக் கூட்டுறவு உறுப்பினர்களும், உந்து விசையாக அரசின் ஆதரவும், இயக்க நடவடிக்கைகள் எரிபொருளாகவும் அமைய வேண்டும். நேர்மைக்கும், நாணயத்திற்கும் இருப்பிடமாகக் கூட்டுறவுகள் திகழவேண்டுவது மிகவும் இன்றியமையாதது.

விளம்பர யுகத்தில் வாழும் இந்நாள் மக்களுக்குக் கூட்டுறவின் சாதனைகள் பலப்பல சாதனங்கள்வழி எடுத்துரைக்கப்பட வேண்டும். 'கூட்டுறவுச் சங்கத்தில் கையாடல்,' 'கூட்டுறவில் மோசடி,' 'கூட்டுறவுச் சங்கத் தலைவர் கைது,' என்பன போன்ற தலைப்புச் செய்திகளை மட்டுமே இதுகாறும் மக்கள் பத்திரிகைகளில் படித்து வந்துள்ளனர். 'கூட்டுறவின் அரிய சாதனை,' 'அமுல் பால்பண்ணையின் அரும்பணி' 'சிந்தாமணியின் வியத்தகு வளர்ச்சி' என்பன போன்ற செய்திகளுக்குப் போதுமான முக்கியத்துவமோ இடமோ தரப்படவில்லை. இது இயக்கத்தின் சாபக்கேடு என்றுகூடக் கூறலாம். கூட்டுறவுத் துறையில் தொடர்புள்ளவர்கள் மட்டுமே கூட்டுறவுச் செய்திகளை, திட்டங்களை அறிந்துகொள்ளும் வகையில் விளம்பரங்களும் செய்தி அறிவிப்புகளும் இன்றைய நிலையில் அமைந்துள்ளன. இதில் ஒரு பெரும் மாற்றம் தேவை. கூட்டுறவைப்பற்றிச் சரியானதோர் எண்ணத்தை, நினைப்பை, கருத்தை மக்களிடையே உருவாக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இளைஞர் சமுதாயத்திற்குக் கூட்டுறவு இயக்கத்தில் மிகவும் முக்கிய இடம் தரப்படுதல் வேண்டும். மகளிரும் இளைஞரும் கூட்டுறவு இயக்கத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பங்கேற்கவில்லை என்ற நிலைமாறி அவர்களுக்கு உரிய இடம் அளிக்கப்படுதல் வேண்டும். இயக்கம் தொடர்ந்து வளர இளைஞரின் ஈடுபாடு மிகவும் இன்றியமையாதது.

கூட்டுறவு வளர்ச்சிப் பத்தாண்டு (Co-operative Development Decade)

ஐக்கிய நாடுகளின் பொதுப் பேரவை (United Nations General Assembly) டிசம்பர் 1968-ல் 'பொருளாதார, சமுதாய வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு' என்ற ஒரு தீர்மானத்தை இயற்றிற்று. ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்களைச் செயல்படுத்துவதில் கூட்டுறவு இயக்கம் பங்கேற்கவல்லது என்பதைப் பொதுப் பேரவை ஏற்றது. அனைத்துநாட்டுக் கூட்டுறவு ஒன்றியம் (International Co-operative Alliance) 1970 முதலான பத்தாண்டுகளைக் கூட்டுறவு வளர்ச்சிப் பத்தாண்டு என அறிவித்துள்ளது. இப் பத்தாண்டுகளில் முதல் இரண்டு ஆண்டுகள் வளர்ச்சித் திட்டங்கள் வரையவும், 1973 முதல் 1980 வரையான எட்டு ஆண்டுகள் வரையப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தவும் செலவிடப்படுமென்றும் ஒன்றியம் அறிவித்தது.

ஐக்கிய நாடுகள் அவையிலும், அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியத்திலும் உறுப்பு நாடாக விளங்கும் நம் பாரத நாடும் கூட்டுறவு வளர்ச்சிப் பத்தாண்டையொட்டித் திட்டங்களை வரைந்து செயல்படுத்துவது சாலச் சிறந்தது. அனைத்துலக அளவில் கூட்டுறவுக்கு இவ்வளவு சிறந்த எதிர்காலம் இருக்கும் போது இந்தியாவில் இவ் இயக்கத்திற்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்குமென்பது திண்ணம்.

கூட்டுறவே நாட்டுயர்வு!
வாழ்க கூட்டுறவு!!
வளர்க கூட்டுறவு!!!

மேற்கோள் நூற்பட்டியல்
(Bibliography)

1. Calvert, H., The Law and Principles of Co-operation
2. Fay, C. R., Co-operation at Home and Abroad
3. Hough, E. M., The Co-operative Movement in India
4. Lambert, P., The Social Philosophy of Co-operation
5. Karve, D. G., Co-operative Principles and Substance
6. Laud, G. M., Co-operative Banking in India
7. Kulkarni, K. R., Theory and Practice of Co-operation in India and Abroad
8. Bedi, R. D., Theory, History and Practice of Co-operation
9. Bedi, R. D., Co-operative Land Development Banking in India
10. Bhatnagar, K. P. and Others, Co-operation in India and Abroad
11. Mathur, B. S., Co-operation in India
12. Hajela, T. N., Principles, Problems and Practices of Co-operation
13. Tyagi, R. B., Recent Trends in the Co-operative Movement in India

Publications of the Reserve Bank of India

14. Reserve Bank of India—Functions and Working
15. Agricultural Refinance Corporation—Functions and Working
16. Manual on Production-Oriented System of Lending for Agriculture
17. Issues of Co-operative News Digest
18. Role of the Reserve Bank of India in Rural Credit

19. Report of the All India Rural Credit Survey Committee
20. Report of the All India Rural Credit Review Committee
21. Review of the Co-operative Movement in India
22. Reserve Bank of India Bulletin
23. Selected Statistics Relating to Co-operative Credit in India 1960-61, 1965-66 and 1968-69 to 1970-71
24. Statistical Statements Relating to the Co-operative Movement in India 1969-70 and 1970-71
25. Annual Report and Trend and Progress of Banking in India 1970-71 to 1972-73
26. Report on Currency and Finance 1971-72 Publications of the National Co-operative Union of India.
27. Prime Minister's Address to the Sixth Indian Co-operation Congress (1971)
28. Background Papers submitted to the 5th and 6th Indian Co-operative Congress
29. Constitution of India
30 Jawaharlal Nehru on Co-operation
31. Issues of the Co-operator

Publications of the International Co-operative Alliance

32. Speeches on Co-operation—Series
33. Report of the ICA Commission on Co-operative Principles Reports and Publications of Government
34. Annual Reports 1970-71 to 1972-73 Government of India, Ministry of Agriculture (Department of Co-operation)
35. Facts about Co-operation in India
36. Five year Plan Documents
37. Report of the Co-opertive Planning Committee
38. Report of the Committee on Co-operation
39. Report of the Committe on Co-operative Credit
40. Report of the Committee on Co-operative Marketing
41. Report of the Committee on Co-operative Administration
42. Reports of various Working Groups
43. The Tamil Nadu Co-operative Manual

Other Publications

44. Financing of Co-operatives by the State Bank of India and its Subsidiary Banks

45. Co-operation—Rural Credit and the State Bank of India
46. Co-operation-A Worker's Education Manual-International Labour Organisation
47. Otto Schiller—Co-operation and Integration in Agricultural Production
48. 'About Ourselves'—Pamphlet Published by The Chinthamani Co-operative supermarket
49. Annual Souvenirs of the Co-operative Training College, Madras
50. Tenth Annual Report of the Committee for Co-operative Training, New Delhi.
51. Issues of the Tamil Nadu Journal of Co-operation, Madras
52. Issues of 'The Housing Times'—Monthly Published by the Greater Bombay and Thana District Co-operative Housing Federation, Bombay
53. Souvenir of the Rural Electrification Corporation Dec. 1971, New Delhi
54. NCCF News Bulletin—Monthly Published by The National Co-operative Consumers Federation
55. கூட்டுறவு—திங்கள் இதழ்—தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் சென்னை-9.

கலைச்சொற்கள்

A

Agricultural Credit Board — விவசாயக் கடன் அவை
Agricultural Credit Department — விவசாயக் கடன் பிரிவு
Agricultural inputs — விவசாய உள்ளீடுகள்
Agricultural Refinance Corporation — விவசாய மறுநிதிக் கூட்டுரு
Agro–Engineering and Service Co-operatives — வேளாண் - பொறியியல் சேவைக் கூட்டுறவுகள்
All-India Federation of Palmgur Co-operatives — அனைத்திந்தியப் பனைவெல்லக் கூட்டுறவுகளின் கூட்டிணைப்பு
All–India Handloom Fabrics Co-operative Marketing Society — அனைத்திந்தியக் கைத்தறித் துணிச் சந்தையிடுகைக் கூட்டுறவுச் சங்கம்
Apex institution — உச்சி நிலையம்
Appeal — மேன் முறையீடு
Artisan — கைவினைஞர்
Attachment — பற்றுகை
Autonomy — தன்னாட்சி உரிமை

B

Bank rate — வங்கி வீதம்
Banking Regulation Act — வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்
Better Farming Society — நன்முறை வேளாண்மைச் சங்கம்
Block loan — முடக்குக் கடன்
Bonus — மேலூதியம்

Borrowing power	— கடன் பெறுந் திறன்
Bran oil	— தவிட்டு எண்ணெய்

C

Cadre	— பணிமுறைப் படிவம்
Cash credit	— ரொக்கக் கடன்
Cash reserve	— ரொக்கக் காப்பு
Central Bank	— மைய வங்கி
Central Co-operative Bank	— மத்தியக் கூட்டுறவு வங்கி
Central Financing Agency	— மத்திய நிதிவழங்கு முகமை
Central Sector Scheme	— மத்திய துறைத் திட்டம்
Certificate of Registration	— பதிவுச் சான்றிதழ்
Charge	— பற்றுப் பொறுப்பு
Charitable Organisation	— அறநிலையம்
Clearing House	— தீர்வகம்
Collective farming	— பொதுப் பண்ணை முறை
Committee on Co-operative Administration	— கூட்டுறவு நிருவாகத்தின் மீதான குழு
Committee on Co-operative Credit	— கூட்டுறவுக் கடன்மீதான குழு
Committee on Co-operative Law	— கூட்டுறவுச் சட்டக் குழு
Committee for Co-operative Training	— கூட்டுறவுப் பயிற்சிக் குழு
Communism	— பொதுவுடைமைத் தத்துவம்
Consultancy Service	— ஆலோசனைப் பணி
Consumers Co-operative	— நுகர்வோர் கூட்டுறவு
Convention	— மரபு
Conversion loans	— மாற்றல் கடன்கள்
Co-operatives	— கூட்டுறவுகள்; கூட்டுறவு நிலையங்கள்; கூட்டுறவுச் சங்கங்கள்
Co-operative Agro Service Centre	— விவசாயச் சேவைக் கூட்டுறவுக் கூடம்
Co-operative Commonwealth	— கூட்டுறவுப் பொதுச் சமுதாயம்
Co-operative Planning Committee	— கூட்டுறவுத் திட்டக் குழு
Craft	— கைவேலை
Credit	— கடன்; நாணயம்

Credit limit	—	கடன் வரம்பு
Creditor	—	கடனுளர்
Crop loan	—	பயிர்க் கடன்

D

Debenture	—	கடனீட்டுப் பத்திரம்
Debenture, Rural	—	கிராமியக் கடனீட்டுப் பத்திரம்
Demand draft	—	கேட்புப் பண விடை
Democracy	—	மக்களாட்சி
Deposit	—	வைப்பு
Deposit Insurance Corporation	—	வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு
Diploma course	—	உயர்சான்றிதழ் வகுப்பு
Distress loan	—	இடர்ப்பாட்டுக் கடன்
Dividend	—	ஆதாயப்பங்கு; இலாபஈவு
Dormant	—	செயலற்ற; செயலிழந்த
Due date	—	கெடுநாள்

E

Employees Credit Society	—	பணியாளர் கடன் சங்கம்; ஊழியர் கடன் சங்கம்
Employer	—	பணியாண்மையர்
Equality	—	சமத்துவம்; சமநிலை
Equity	—	நேர்மைநெறி; நியாயம்
Executive committee	—	செயற்குழு
Extension workers	—	விரிவாக்க ஊழியர்

F

Fair price shop	—	நியாய விலைக் கடை
Farmers Service Co-operatives	—	விவசாயிகள் சேவைக் கூட்டுறவுகள்
Federal structure	—	கூட்டிணைப்பு அமைப்பு
Federation	—	கூட்டிணைப்பு; இணையம்
Field workers	—	களப் பணியாளர்கள்
Fishermen's Co-operatives	—	மீனவர் கூட்டுறவுகள்
Forest Labour Co-operatives	—	வனத் தொழிலாளர் கூட்டுறவுகள்

G

Grain Bank	—	கூல வங்கி
Guarantee	—	பொறுப்புறுதி

H

Handicraft industries — கைவினைத் தொழில்்கள்
Honesty — நேர்மைநெறி; வாய்மை
Housing and Urban Development Corporation — வீட்டு வசதி - நகர வளர்ச்சிக் கூட்டுரு

I

Industrial Estate — தொழிற்பேட்டை
Inputs — உள்ளீடுகள்
Inspection — ஆய்வு
Instructor — புகட்டுநர்
Integrated credit — ஒருங்கிணைந்த கடன்
Intermediaries — இடைநிலையர்
International Co-operative Alliance (ICA) — அனைத்து நாட்டுக் கூட்டுறவு ஒன்றியம்
International Development Association (IDA) — அனைத்து நாட்டு வளர்ச்சி மன்றம்

J

Joint sector — கூட்டுத்துறை
Joint farming — கூட்டு வேளாண்மை
Junior training — இளநிலைப் பயிற்சி

K

Khadi and Village Industries Commission — கதர், கிராமத் தொழில்கள் குழு
Khadi and Village Industries Board — கதர், கிராமத் தொழில்கள் வாரியம்

L

Labour Contract Societies — தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுகள்
Labour Co-operatives — தொழிலாளர் கூட்டுறவுகள்
Laissez faire policy — தலையிடாக் கொள்கை
Land Development Bank — நிலவள வங்கி
Land reclamation — நில மீட்பு
Liberty — தன் செயலுரிமை
Licence — உரிமம்
Lift irrigation Societies — நீரேற்றுப் பாசன சங்கங்கள்
Liquid asset — எளிவரல் சொத்துகள்

M

Mail Transfer	—	அஞ்சல்வழி மாற்றம்
Management techniques	—	மேலாண்மை உத்திகள்
Managerial subsidy	—	நிருவாக உதவித்தொகை
Manpower	—	ஆள்பலம்; ஆள்வலிமை
Margin money	—	இடைவெளிப் பணம்
Marginal farmers	—	கடைநிலை விவசாயிகள்; மிகச் சிறு விவசாயிகள்
Marketing	—	சந்தையிடுகை
Membership	—	உறுப்பினர் நிலை
Middlemen	—	இடைநிலையர்
Mini supermarket	—	சிற்றங்காடி
Money lending	—	வட்டித் தொழில்
Monopoly	—	முற்றுரிமை
Multi-national	—	பல நாட்டு
Multi-purpose	—	பல நோக்கு
Mutual help	—	ஒருவருக்கொருவர் உதவி

N

National Agricultural Co-operative Marketing Federation (NAFED)	—	தேசிய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைக் கூட்டிணைப்பு
National Agricultural Credit (Long Term Operation) Fund	—	தேசிய விவசாயக் கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதி
National Agricultural Credit (Relief and Guarantee) Fund	—	தேசிய விவசாயக் கடன் (சுமைத் தணிவு, பொறுப்புறுதி) நிதி
National Agricultural Credit (Stabilisation) Fund	—	தேசிய விவசாயக் கடன் (நிலை பேருக்கம்) நிதி
National Co-operative Consumers Federation	—	தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டிணைப்பு
National Co-operative Development Corporation (NCDC)	—	தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு
National Co-operative Development Fund	—	தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிதி
National Co-operative Housing Federation	—	தேசியக் கூட்டுறவு வீட்டு வசதிக் கூட்டிணைப்பு

Naitonal Co-operative Union of India — இந்தியத் தேசியக் கூட்டுறவு ஒன்றியம்
National Small Scale Industries Co-operation — தேசியச் சிற்றளவுத் தொழில்கள் கூட்டுரு
National Federation of Co-operative Sugar Factories — கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் தேசியக் கூட்டிணைப்பு
National Federation of Industrial Co-operatives — தொழிற் கூட்டுறவுகளின் தேசியக் கூட்டிணைப்பு
National Warehousing Development Fund — தேசியக் கூட்டுறவுப் பண்டக வளர்ச்சிநிதி
Non-credit — கடன் சார்பற்ற
Non-Overdue cover — தவணை.கடவா ஈடு
Non-viable — வளமற்ற; தன்னிறைவு பெறாத

O

Open membership — தடையற்ற உறுப்பினர் நிலை
Orientation training — புதுமுகப் பயிற்சி
Overdraft — மேல்வரைப் பற்று
Overdue — தவணை கடந்த

P

Patronage — வாடிக்கையாதரவு
Philanthropic — கொடையாண்மை
Pioneers — முன்னோடிகள்
Powerloom — விசைத்தறி
Preamble — சட்ட முகப்புரை
Principles — தத்துவங்கள்
Prior claim — முதன்மையான கோருரிமை
Processing — பக்குவப்படுத்தல்; பதப்படுத்தல்
Promissory note — கடனுறுதிச் சீட்டு
Public Sector — பொதுத் துறை; அரசுதுறை
Pumpset — நீரேற்றுப் பொறி

R

Recurring Deposit — தொடர் வைப்பு
Registrar — பதிவாளர்

Regulated Market	—	ஒழுங்குமுறைச் சந்தை
Regional Co-operative Training Centre	—	பிராந்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் கூடம்
Refund	—	மீட்டடை
Remittance	—	பணமனுப்புகை
Repaying Capacity		திருப்பிச் செலுத்துந்திறன்
Representative General Body	—	பிரதிநிதித்துவப் பேரவை
Repatriates Co-operative Finance and Development Bank	—	அகதிகள் கூட்டுறவு நிதிய வளர்ச்சி வங்கி
Revitalise	—	புத்துறுதியளி
Rural Co-operative Dispensaries	—	கிராமக் கூட்டுறவு மருத்துவ மனைகள்
Rural Electric Co-operatives	—	கிராம மின்னமைப்புக் கூட்டுறவு
Rural Electrification Corporation	—	கிராம மின்னமைப்புக் கூட்டுரு

S

Salesmanship	—	விற்பாண்மை
Scales of finance	—	கடன் விகிதங்கள்
Security	—	பிணை
Selective Membership	—	தெரிந்தெடுப்புப் பண்புடைய உறுப்பினர் நிலை
Self-help	—	தன்னுதவி
Self-reliance	—	தன்னைச் சார்ந்திருத்தல்
Service Co-operatives	—	சேவைக் கூட்டுறவுகள்
Servicing	—	சீர்க் காப்பு
Shareholder	—	பங்குநர்
Slum Clearance Board	—	குடிசைப் பகுதி மாற்று வாரியம்
Small Farmers Development Agency	—	சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை
Socialism	—	சமதர்மக் கோட்பாடு
Soil conservation	—	மண்வளப் பாதுகாப்பு
Solidarity	—	கட்டொருமைப்பாடு
Solvent extraction	—	பிழிவெண்ணெய் தயாரிப்பு
Speculators	—	ஊக வணிகர்
Spindles	—	கதிர்கள்
Status	—	சமுதாயப் படிநிலை

Subsidy — உதவித் தொகை
Supermarket — சிறப்பங்காடி
Supersession — மேற்கடப்பு
Supply — அளிப்பு
Surety — பிணையாள்
Surplus — மிகைத் தொகை

T

Technical Committee — தொழில்நுட்பக் குழு
Tenant Farming Society — வேளாண்மைக் குத்தகைச் சங்கம்
Three tier — மூன்றடுக்கு
Thrift — சிக்கனம்
Treasury Certificate — கருவூலச் சான்றிதழ்; கருவூலச் சீட்டு
Tribal Development Co-operatives — பழங்குடியினர் வளர்ச்சிக் கூட்டுறவுகள்
Tribunal — தீர்ப்பாயம்

U

Undertaking — செயற் பொறுப்பு
Underwriter — ஒப்புறுதியாளர்
Unitary structure — ஒற்றையமைப்பு
Unlimited Liability — வரையறுப் பொறுப்பு

V

Vested interests — ஊன்றிய நலமிகள்
Viable Society — வளமார்ந்த சங்கம்; தன்னிறைவு பெற்ற சங்கம்
Voluntary — தன்னியலான; தன் விருப்ப

W

Washermen's Co-operatives — சலவைத் தொழிலாளர் கூட்டுறவுகள்
Weavers Co-operatives — நெசவாளர் கூட்டுறவுகள்
Wholesale Stores — மொத்த விற்பனைப் பண்டசாலை
Working Capital — நடைமுறை முதல்